ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

(உலகம் உய்ய வந்த இராமாநுச வள்ளல் – திருவரங்கம் பெரியகோயில்)

திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்த
ப்ரபந்ந காயத்ரி என்னும்
இராமானுச நூற்றந்தாதி

(ஸ்வாமி பிள்ளைலோகம் ஜீயர் வ்யாக்யானம் எளியநடை)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்
ஸ்ரீ அஹோபிலதாஸன் க. ஸ்ரீதரன்
Email: sridharan_book@yahoo.com

வேதப்பிரான் பட்டர் அருளிச்செய்த தனியன்கள்

1. முன்னை வினையகல மூங்கில் குடியமுதன்
பொன்னங் கழற்கமலப் போதிரண்டும் என்னுடைய
சென்னிக் கணியாகச் சேர்த்தினேன் தென்புலத்தார்க்கு
என்னுக் கடவுடையேன் யான்.

பொருள் – மூங்கிற்குடி என்னும் குலத்தில் அவதரித்தவராகிய திருவரங்கத்தமுதனாரின் அழகான திருவடித் தாமரைகள் இரண்டையும் என்னுடைய தலைக்கு அலங்காரமாகச் சேர்த்துக் கொண்டேன். இதனால் எனது பாவகர்மங்கள் அனைத்தும் அகன்று போகும்படி ஆனது. இவ்விதம் பாவங்கள் நீங்கிய பின்னர், யமபுரியில் உள்ள யமதூதர்களிடம், எனது கர்ம அனுபவம் காரணமாக நான் அகப்படுவேனா? (மாட்டேன்)

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த தனியன் வ்யாக்யானம்

அவதாரிகை - ப்ராக்தநகர்ம நிவ்ருத்யர்த்தமாக, அபிஜாதரான அமுதனார் திருவடிகளைச் சிரோ பூஷணமாகத் தரித்தேன்; ஆகையால் கர்மபலாநுபவம் பண்ணுவிக்கும் யமாதிகளுக்கு என்னோடு என்ன ப்ராப்தி யுண்டு என்கிறது.

விளக்கம் – பூர்வ கர்மவினைகள் அனைத்தும் நீங்கும்விதமாக மிகவும் உயர்ந்த குலத்தில் அவதரித்தவரான ஸ்வாமி திருவரங்கத்தமுதனார் திருவடிகளை எனது தலைக்கு ஆபரணமாக ஏற்றுக்கொண்டேன்; இதன் காரணமாக கர்மபலன்களை அனுபவிக்கும்படி செய்யும் யமன் போன்றவர்களுக்கு என்னுடன் எந்தவிதத்தில் தொடர்பு ஏற்படும் (அல்லது என்ன அடைய விதி ஏது) என்கிறார்.

வ்யாக்யானம் - (முன்னை வினையகல) "முன்னருளு மாரியனால்" என்றாரிறே வாதிகேஸரி அழகிய மணவாளச்சீயரும்; அப்படியே அநாதிகாலார்ஜித கர்மங்கள் அகன்று போக, பாவமெல்லாம் அகன்று என்னை விட்டுப்போக அது எத்தாலேயென்ன, அமுதன் கால் தலைப்பட்டாதாலே யென்கிறது. மூங்கில்குடியமுத னித்யாதியாலே. மூங்கில் குடியாவது, "வேயர் தங்கள் குலம்" என்னுமாபோலே இவர்க்கு மூங்கில் குடியாயிற்று. அக்குடியிலே அவதரித்த அமுதனாருடைய, (பொன்னம் கழல் கமலப்

போதிரண்டும்) ஸ்ப்ருஹணீயமாய் அழகியதாயிருக்கிற திருவடித் தாமரைப் பூவிரண்டையும் (என்னுடைய சென்னிக் கணியாகச் சேர்த்தினேன்) அவருடைய சென்னிக்கணி இராமாநுசனடிப்பூ; என்னுடைய சென்னிக்கணி இவையாயிற்று. (சென்னிக் கணியாகச் சேர்த்தினேன்) தலைக்கலங்காரமாகச் சேர்த்தேன். "செம்மாபாத பற்புத்தலை சேர்த்து" என்னுமாபோலே. அங்கு ப்ரார்த்தனை; இங்கு க்ருதார்த்ததை. அத்தால், (தென்புலத்தார்க்கு) யமபுரவாஸிகளான யமகிங்கரர்களுக்கு. (என்னுக் கடவுடையேன்) இனி யேதுக்காகக் கர்மபலாநுபவத்துக்குக் கடவேன்? கர்மக்ஷயம் பிறந்தவாறே பலாநுவமில்லையிறே. ஆகையாலே கர்மபலாநுபவம் பண்ணுவிப்பார்க்குக் கர்த்தவ்யமில்லை. "பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து என் சென்னித் திடரில் பாதவிலச்சினை வைக்கையாலே", "தென்புலக்கோன் பொறியொற்றி வைத்த விலச்சினை மாற்றித் தூதுவரோடி யொளித்தார்"; அத்தாலே "என்னுக் கடவுடையேன் யான்" என்கிறது. "என் பெய்வினை தென்புலத்தில் பொறித்த அப்புத்தகச் சும்மை பொறுக்கியபின்" என்னக் கடவதிறே. (யான்) பொன்னங் கழற்கமலப் போதிரண்டும் என்னுடைய சென்னிக்கணியாகச் சேர்த்த யானென்றபடி.

விளக்கம் - (முன்னை வினையகல) - எல்லையற்ற காலமாகச் சேர்த்து வைத்துள்ள கர்மங்கள் அனைத்தும் விலகியது, அனைத்து பாவங்களும் என்னை விட்டு அகன்று போனது - இது எப்படி என்றால், திருவரங்கத்தமுதனார் திருவடிகளில் சேர்ந்ததால் ஆகும் என்கிறார். மூங்கில்குடி என்றால் என்ன? பெரியாழ்வார் திருமொழி (5-4-15) - வேயர் தங்கள் குலம் - என்று ஆழ்வார் கொண்டாடுவது போன்று இவருக்கு மூங்கில்குடி ஆனது. இந்தக் குலத்தில் அவதரித்த திருவரங்கத்தமுதனாருடைய, (பொன்னம் கழல் கமலப் போதிரண்டும்) – பொன் போன்ற அழகான திருவடித்தாமரை மலர் இரண்டையும். (என்னுடைய சென்னிக் கணியாகச் சேர்த்தினேன்) - திருவரங்கத்தமுதனாரின் தலைக்கு அழகு இராமாநுசருடைய திருவடித்தாமரைகள், எனது தலைக்கு அழகு திருவரங்கத்தமுதனாரின் திருவடித்தாமரைகள். (சென்னிக் கணியாகச் சேர்த்தினேன்) – அவற்றை எனது தலைக்கு அலங்காரமாகச் சேர்த்துக்கொண்டேன். திருவாய்மொழி (2-6-1) – செம்மாபாத பற்புத்தலை சேர்த்து – என்பது போன்று ஆகும். திருவாய்மொழியில் ஆழ்வார் பிரார்த்தனை செய்கிறார், இங்கு இவர் நிறைவேற்றுகிறார். இதன் காரணமாக, (தென்புலத்தார்க்கு) – தெற்குத்திசையில் உள்ள யமபுரத்தில் வசிக்கும் யமகிங்கரர்களுக்கு.

(என்னுக் கடவுடையேன்) – இனி நான் கர்மபலனை அனுபவிப்பதற்காக ஆளாவேனோ? கர்மங்கள் தேயத் தொடங்கிய பின்னர் பலன் அனுபவிக்க வேண்டிய அவசியம் இல்லை அல்லவோ? ஆகவே கர்மபலனை அனுபவிக்கும்படிச்செய்யும் செயல்பாடு அவர்களுக்கு இல்லை. கீழே உள்ள வரிகளில் கூறப்பட்ட காரணங்களாலும் ஆகும்.

- பெரியாழ்வார் திருமொழி (5-2-8) – பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகி வந்து என் சென்னித் திடரில் பாதவிலச்சினை வைக்கையாலே
- பெரியாழ்வார் திருமொழி (5-2-8) - தென்புலக்கோன் பொறியொற்றி வைத்த விலச்சினை மாற்றித் தூதுவரோடி யொளித்தார்

(யான்) – பொன் போன்ற திருவடித் தாமரைமலர்கள் இரண்டையும் தனது தலைக்கு ஆபரணமாகச் சூட்டிக் கொண்ட நான்.

வ்யாக்யானம் - (என்னுக் கடவுடையேன்) என்னுக்கு என்கிற குகரம் கடைக்குறைத்தலாயிருக்கிறது. (கடவுடையேன்) – ஏதுக்காக ப்ராப்தியுடையே னென்றபடி. அமிர்தத்துக்கும் விஷத்துக்கும் சேர்த்தியில்லாதாப்போலே திருவரங்கத் தமுதனார் திருவடிகளில் ஸம்பந்தமுடையார்க்கும் தென்புலக்கோடியார்க்கும் என்ன சேர்த்தியுண்டு. “அரங்கமாநகருளானே - நின்னாமங்கற்ற வாவலிப் புடைமை கண்டாய் – நமன்றமர் தலைகள் மீதே – நாவலிட்டுழி தருகின்றோம்” என்றும், “அரங்கமென் றழைப்பாராகில் பொறியில் வாழ் நரகமெல்லாம் புல்லெழுந் தொழியுமன்றே” என்றும், “ந ச ஜ்ஞாநஸ்ய ஸங்கோசம் ந சைவயமகோசரம், தஸ்மாத் ரங்க மஹாபுண்யம் கோநஸேவேத புத்திமாந்” என்றும், “ந கலு பாகவதா யமவிஷயம் கச்சந்தி” என்றும் சொல்லக் கடவதிறே.

விளக்கம் - (என்னுக் கடவுடையேன்) - “என்னுக்கு” என்பது “என்னுக்” என்று குறைந்துள்ளது. (கடவுடையேன்) - அந்த யமதூதர்களுக்கு நான் எதற்காக அடையும் இடமாக இருப்பேன்? இருக்கமாட்டேன் என்று கருத்து. அமிர்தம் மற்றும் விஷம் ஆகிய இரண்டிற்கும் ஸம்பந்தம் இல்லாதது போன்று, திருவரங்கத்தமுதனார் திருவடிகளில் ஸம்பந்தம் உள்ளவர்களுக்கும் தெற்குத் திசையில் வசிக்கும் யமகிங்கரர்களுக்கும் சேர்க்கை இல்லை. கீழே உள்ள பல வரிகளை இங்கு ஒப்பு நோக்குக:

- திருமாலை - அரங்கமாநகருளானே - நின்னாமங்கற்ற வாவலிப் புடைமை கண்டாய் – நமன்றமர் தலைகள் மீதே – நாவலிட்டுழி தருகின்றோம்

- திருமாலை - அரங்கமென் றழைப்பாராகில் பொறியில் வாழ் நரகமெல்லாம் புல்லெழுந் தொழியுமன்றே

- ந ச ஜ்ஞாநஸ்ய ஸங்கோசம் ந சைவயமகோசரம், தஸ்மாத் ரங்க மஹாபுண்யம் கோநஸேவேத புத்திமாந் - ஸ்ரீரங்கத்தில் வசிக்கும் ஞானிகளுக்கு ஞானத்தில் சுருக்கம் ஏற்படுதல் என்பது கிடையாது. அவர்கள் யமனுக்கு வசப்படுவதும் இல்லை. எனவே மிகவும் புண்யக்ஷேத்ரமான ஸ்ரீரங்கத்தை ஞானம் உள்ள யார்தான் அடைய விரும்பாமல் இருப்பர்.

- ந கலு பாகவதா யமவிஷயம் கச்சந்தி - பாகவதர்களுக்கு யமனுக்கும் எந்தவிதமான பொதுவான விஷயமும் இல்லை (தொடர்பு இல்லை).

2. நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதென்று நண்ணினர்பால்
சயந்தரு கீர்த்தி யிராமாநுசமுனி தாளிணைமேல்
உயர்ந்த குணத்துத் திருவரங்கதமுதோங்குமன்பால்
இயம்புங் கலித்துறை யந்தாதி யோத விசை நெஞ்சமே.

பொருள் – உலகவிஷயங்களின் மூலம் கிட்டும் இன்பம் அனைத்தும் அற்பமானவையே என்று அறிந்துகொண்டு எம்பெருமானாரின் திருவடிகளை அண்டியவர்களுக்கு, அவர்கள் அந்த விஷயங்களை வெல்ல வைக்கும் புகழ் கொண்டவர் இராமாநுசர் ஆவார். அப்படிப்பட்ட எம்பெருமானாரின் பொருந்திய திருவடிகள் மீது உயர்ந்த நற்குணங்கள் நிறைந்தவரான திருவரங்கத்தமுதனார் மிகுந்த பக்தியுடன் அருளிச்செய்த கலித்துறை விருத்தத்தில் உள்ள இந்தப் பிரபந்தத்தை – எனது மனமே! நீ விருப்பத்துடன் கற்பாயாக.

அவதாரிகை - ப்ராப்யாபாஸங்களை ஹேயமென்று புத்தி பண்ணி தம் திருவடிகளை ஆச்ரயித்தவர்கள் விஷயமாக ஸம்ஸார ஜயத்தைப் பண்ணித் தருமத்தாலே வந்த

யசஸ்ஸையுடைய எம்பெருமானார் திருவடிகளிலே உத்துங்க குணத்தையுடைய திருவரங்கத்தமுதனார், தம்முடைய நிரவதிக பக்தியாலே பணிக்கும் நூற்றந்தாதியை ஓத ஸம்மதி என்று மநஸ்ஸை அர்த்திக்கிறது.

விளக்கம் - இந்த உலகவிஷயங்கள் அனைத்தும் தாழ்ந்தவை என்று அறிந்துகொண்டு தனது திருவடிகளை அண்டி நிற்கும் அடியார்கள் ஸம்ஸாரத்தை வெல்லும்படியாகச் செய்பவர் இராமாநுசர் ஆவார். இந்தச் செயலால் வந்த புகழ் நிறைந்த இராமாநுசருடைய திருவடிகளில் இந்த நூற்றந்தாதியை உயர்ந்த குணம் நிறைந்த திருவரங்கத்தமுதனார் சமர்ப்பித்தார். இத்தகைய நூற்றந்தாதியை இப்போது ஓதியபடி இருக்கவேண்டும் என்று தனது மனதை விண்ணப்பிக்கிறார்.

வ்யாக்யானம் - (நயந்தரு பேரின்பமெல்லாம்) விஷயங்களாலே வரும் நிரவதிக ஸுகங்களை யெல்லாம். நயம் - விஷயம். "நாணாமை நள்ளேனயம்" என்கிறவிடத்துக்கு - விஷயங்களை என்றிறே வ்யாக்யாநம் பண்ணியருளிற்று. அஜ்ஞாபிப்ராயத்தாலே சிற்றின்பத்தைப் பேரின்பமென்கிறது. (பழுதென்று) அவற்றை ஹேயமென்று விசாரித்துவிட்டு. (நண்ணினர்பால்) ஆச்ரயித்தவர்கள் விஷயத்திலே. (சயந்தரு கீர்த்தி யிராமாநுசன்) அவர்களுக்கு ஸம்ஸார ஜயத்தைப் பண்ணித் தருகிற எம்பெருமானார். இப்படி ஆபாஸ ஸுகங்களை விட்டு ஆச்ரயித்தவர்கள் ஆழ்வானும் அமுதனாருமாய்த்து. "ராமாநுஜார்ய விஷயீக்ருதம்" என்றும், "அக்காதலளற்றழுந்தி மாயு மென் னாவியை வந்தெடுத்தான்" என்றாரிறே. "காமாதி தோஷ ஹரமாத்ம பதாச்ரிதாநாம் ராமாநுஜம் யதிபதிம்" என்றும், "மதநகதநைர்நக்லிச்யந்தே யதீச்வர ஸம்ச்ரயா" என்னக் கடவதிறே. இதுவாய்த்துச் சயந்தரு கீர்த்தி. "சயப் புகழார்" என்னுமாப்போலே.

விளக்கம் - (நயந்தரு பேரின்பமெல்லாம்) - உலகவிஷயங்கள் என்பதன் மூலம் வரும் எல்லையற்ற சுகம் அனைத்தையும். நயம் - உலகவிஷயம். முதல்திருவந்தாதி (63) – நாணாமை நள்ளேனயம் – என்ற பாசுரத்தில் "நயம்" என்ற பதத்திற்கு "விஷயம்" என்றே வ்யாக்யானம் செய்யப்பட்டது. அறியாமை காரணமாக இந்தச் சிற்றின்பங்களைப் பேரின்பமாகக் கொள்கிறார்கள். (பழுதென்று) - அவற்றை மிகவும் தாழ்ந்தது என்று அறிந்த பின்னர். (நண்ணினர்பால்) – தன்னை அண்டியவர்கள் குறித்து. (சயந்தரு கீர்த்தி

யிராமாநுசன்) – அவர்கள் ஸம்ஸாரத்தை வெல்லும்படிச் செய்யும் எம்பெருமானார். இவ்விதம் செய்தவர்கள் யார் என்றால் கூரத்தாழ்வானும், திருவரங்கத்தமுதனாரும் ஆவர். கூரத்தாழ்வான் ஸ்ரீவைகுண்டஸ்தவத்தில் (90) - ராமாநுஜார்ய விஷயீக்ருதம் – எம்பெருமானாரால் ஆட்படுத்திக்கொள்ளப்பட்ட என்னை - என்றும், அமுதனார் இராமாநுச நூற்றந்தாதியில் (42) - அக்காதலளற்றழுந்தி மாயு மென் னாவியை வந்தெடுத்தான் – உலகவிஷயங்களில் உள்ள பற்றுதல் என்னும் கடலில் அழுந்தும் எனது ஆத்மாவை கரையேற்றும்படி எடுத்தான் - என்றும் உரைத்தவர்கள் அல்லவோ? கீழே உள்ள வரிகளும் காண்க:

- யதிராஜ விம்சதி (1) - காமாதி தோஷ ஹரமாத்ம பதாச்ரிதாநாம் ராமாநுஜம் யதிபதிம் மதந - தனது திருவடிகளில் பணிந்தவர்களுடைய காமம், தோஷம், க்ரோதம் போன்ற அனைத்தையும் நீக்கவல்லவர் இராமாநுசர் ஆவார்.

- யதிராஜ ஸப்ததி (45) - மதநகதநைர்நக்லிச்யந்தே யதீச்வர ஸம்ச்ரயா - யதிராஜரை அடைந்தவர்கள் இவ்விதம் ஏற்படும் காமத் துன்பங்களில் சிக்கிக் கொள்வதில்லை.

வெற்றி மூலம் உண்டாகவல்ல கீர்த்தி இதுவே ஆகும். திருவாய்மொழி (3-1-11) – சயப் புகழார் – என்றது காண்க.

வ்யாக்யானம் - (இராமாநுசமுனி தாளிணைமேல்) இப்படி ஆச்ரித ஜந ஜய ப்ரதரான எதித்தலைநாத னிராமாநுசமுநி சரண த்வய விஷயங்களிலே வாசிக கைங்கர்யமாகச் செய்த ப்ரபந்தத்தை அப்யஸிக்க ஸம்மதி என்று ஸௌமநஸ்யமுண்டாம்படி மநஸ்ஸை யர்த்திக்கிறது. "ராமாநுசன் சரணாரவிந்தம்" என்றும், "ராமாநுசன் றனிணையடி" என்றும், "இராமாநுசனடிப் பூமன்னவே" என்றுமிறே ஆதிமத்யாவஸாநம் அங்க்ரி த்வய விஷயமாக யிருப்பதாய்த்து – இப் ப்ரபந்தந்தான்.

விளக்கம் – (இராமாநுசமுனி தாளிணைமேல்) - இப்படியாகத் தன்னை அண்டியவர்களுடைய வெற்றி என்பதையே முதன்மையாகக் கருதும் யதிகளின் தலைவரான உடையவருடைய இரண்டு திருவடிகளில் வாக்கு மூலமாகச் செய்யப்பட்ட கைங்கர்யமான "இராமாநுச நூற்றந்தாதி" என்ற இந்தத் திவ்யப்ரபந்தத்தை எப்போதும்

கூறியபடி இருக்கச் சம்மதிக்கவேண்டும் என்று தனது மனதிடம் விண்ணப்பிக்கிறார். இதன் மூலம் நன்கு தெளிந்த மனம் உண்டாகும் என்பதால் இவ்விதம் கூறுகிறார். தொடக்கத்தில் இராமானுச நூற்றந்தாதி (1) – ராமானுசன் சரணாரவிந்தம் – என்றும், நடுவில் (50) – ராமானுசன் றனிணையடி – என்றும், இறுதியில் (100) - இராமானுசனடிப் பூமன்னவே - என்றும் இருப்பது இந்த ப்ரபந்தம் மட்டுமே ஆகும்.

வ்யாக்யானம் - அன்றிக்கே, "நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணி நம்பால் சயந்தரு கீர்த்தி யிராமாநுசமுனி" என்று இத்தனிய னருளிச்செய்தவ ரபிப்ராயமாகவுமாம். அதாவது, நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணி நம்பால் – நன்மையைப் பண்ணுமதாய் நிரதிசய ஸுகங்களெல்லாம், பழுதின்றி - ஸங்கோசமின்றிக்கே, நண்ணி நன்பால் - "தந்தை நல்தாய் தாரம் தநயர் பெருஞ்செல்வம் என்றனக்கு நீயே யெதிராசா" என்கிறபடியே ஸர்வஸுகங்களும் அவரேயென்று ஆச்ரயித்த நம்முடைய விஷயமாக என்று இங்ஙனேயும் யோஜிக்கவுமாம் மேல் பூர்வவத்.

விளக்கம் – அல்லது "நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணி நம்பால் சயந்தரு கீர்த்தி யிராமாநுசமுனி" என்று வரிசைப்படுத்தி, இதுவே இந்தத் தனியன் அருளிச் செய்தவருடைய கருத்து என்றும் கொள்ளலாம். அதாவது, நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணி நம்பால் - நன்மையை ஏற்படுத்துவதாக உள்ள எல்லையற்ற சுகங்கள் அனைத்தும், பழுதின்றி - எந்தவிதமான சுருக்கமும் இல்லாமல், நண்ணி நன்பால் - தந்தை நல்தாய் தாரம் தநயர் பெருஞ்செல்வம் என்றனக்கு நீயே யெதிராசா – என்பதற்கு ஏற்ப அனைத்து சுகங்களும் இராமானுசரே ஆவார் என்று அண்டி நிற்கும் நம்முடைய விஷயத்தில், ஸம்ஸார வெற்றியை ஏற்படுத்தித் தரவல்ல எம்பெருமானார்.

வ்யாக்யானம் - அன்றிக்கே, நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதென்று - ததிதரங்களை த்ர்ணவத்கரித்து, நண்ணி – நாராயணனை நண்ணினவருமாய் என்று எம்பெருமானார்க்கு விசேஷணமாகவுமாம். நன்பால் – நல்ல ஸ்வபாவத்தாலே. பரஸம்ர்த்தியே பேறான ஸ்வபாவத்தாலே. (சயந்தரு கீர்த்தி யிராமாநுசன்) தாம் நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதின்றி நண்ணின மாத்ரமன்றிக்கே, நம்மை யாச்ரயித்தவர்களுக்கும், "நரகத்தை நகு நெஞ்சே" என்கிறபடியே ஸம்ஸாரத்தை வெல்ல வல்லாராம்படி பண்ணி அத்தாலே வந்த

யசஸ்ஸை யுடையவ ரென்றாகவுமாம். "த்ர்ணீக்ர்த விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" என்னக்கடவதிறே.

விளக்கம் – அல்லது, நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதென்று – மற்ற விஷயங்களை ஒதுக்கி, நண்ணி – நாராயணனை அண்டி நின்ற இராமாநுசர் என்று கூறுவதாகவும் கொள்ளலாம். நன்பால் – சிறந்த பண்புகளால். (சயந்தரு கீர்த்தி யிராமாநுசன்) - தான் மட்டும் எல்லையற்ற பேரின்பத்தை எந்தவிதமான தடையும் இல்லாமல் அடைவது மட்டும் அல்லாமல், தன்னை அடைந்தவர்களும், திருவாய்மொழி – நரகத்தை நகு நெஞ்சே - என்று கூறுவதற்கு ஏற்ப ஸம்ஸாரத்தை வெல்லும்படியாகச் செய்து, அதனால் ஏற்பட்ட கீர்த்தி உள்ள உடையவர்.

3. சொல்லின் தொகைகொண் டுனதடிப்போதுக்குத் தொண்டு
செய்யும் நல்லன்பரேத்து முன்னாமமெல்லா மென்றன்நா
வினுள்ளே அல்லும் பகலுமமரும்படி நல்கறுசமய வெல்
லும் பரமவிராமாநுசா விதென் விண்ணப்பமே

பொருள் – வேதங்களுக்கு முரண்பட்ட உபதேசங்களைக் கூறும் ஆறு சமயங்களையும் மிகவும் எளிதாக வென்ற யதிராஜனே! உனது திருவடித் தாமரைகளுக்கு எப்போதும் தொண்டு புரிந்தபடி உள்ளவரும், உம்மிடம் மிகுந்த அன்பு பூண்டவரும் ஆகிய திருவரங்கத்தமுதனார், தனது விரிவான சொற்கள் கொண்டு உனது பெருமைகள் மற்றும் திருநாமங்களை விரிவாக உரைத்தார். அந்தச் சொற்கள் இரவும் பகலும் எனது நாவில் நிலைத்து நிற்கும்படி நீரே அருளவேண்டும். இதுவே எனது விண்ணப்பம் ஆகும்.

அவதாரிகை – இது அமுதனாரருளிச் செய்ததாதல்; அவரபிப்ராயத்தாலே அபிநிவேசமுடைய ஆஸ்திகரருளிச் செய்த காதலாயிருக்கும்.

விளக்கம் - இந்தத் தனியன் திருவரங்கத்தமுதனார் அருளிச்செய்ததாகும். அவருடைய எண்ணத்தை நன்றாக நாம் அறிந்தபின்னர், இந்தத் தனியனை ஆராயும்போது ஆஸ்திகர் ஒருவருடைய தூய்மையான மனதில் உள்ள காதல் வெளிப்படுவதாக உள்ளது.

வ்யாக்யானம் – (சொல்லின் தொகை கொண்டு) இவ்வளவாகச் சொல்லக் கடவோமென்று ஸங்க்யா நிர்த்தேசம் பண்ணி. அன்றிக்கே, சப்த ஸமூஹங்களைக் கொண்டென்னவுமாம். (உனதடிப்போதுக்கு) தேவரீருடைய திருவடித்தாமரைகளுக்கு. (தொண்டு செய்யும்) வாசிக கைங்கர்யமாக இருங்கவிகளைப் புனையும். (நல்லன்பர்) ஏத்தும். "நல்லார்பரவும்" என்கிறபடியே அநந்யப்ரயோஜந பக்தியுக்தர் ஏத்தும். (உன் நாமமெல்லாம்) – அந்த பக்திபாரவச்யத்தாலே ஸ்தோத்ரம் பண்ணும் தேவரீருடைய திருநாமமெல்லாம். (என்றன் நாவினுள்ளே) அந்தத் திருநாமங்களை அநுஸந்திக்க வேணுமென்றிருக்கிற என்றன் நாவினுள்ளே.

விளக்கம் - (சொல்லின் தொகை கொண்டு) – "இப்படியாகக் கூறுவோம்" என்று எந்தவிதமான சந்தேகமும் இன்றி உரைத்து. அல்லது சிறந்த சொற்களைக் கொண்டது என்றும் கொள்ளலாம். (உனதடிப்போதுக்கு) – உன்னுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளுக்கு. (தொண்டு செய்யும்) – வாக்கினால் செய்யப்படும் கைங்கர்யமாக இருங்கவிகள் இயற்றும். (நல்லன்பர்) – புகழ்தல். "நல்லார் பரவும்" என்று கூறுவதற்கு ஏற்ப எந்தவிதமான பலனையும் எதிர்பாராமல் உம்மை அண்டி நிற்பவர்கள் புகழும். (உன் நாமமெல்லாம்) - அப்படிப்பட்ட பக்திப் பரவசம் காரணமாக அவர் போற்றுகின்ற உம்முடைய திருநாமங்கள் அனைத்தும். (என்றன் நாவினுள்ளே) - அந்தத் திருநாமங்களை எப்போதும் எண்ணியபடி இருத்தல் வேண்டும் என்றுள்ள எனது நாக்கில்.

வ்யாக்யானம் - (அல்லும்பகலுமமரும்படி நல்கு) "நள்ளிருளளவும் பகலும் நானழைப்பன்" என்னும்படி திவாராத்ர விபாகமறப் பொருந்தியிருக்கும்படி உபகரித்தருளவேணும் (அறுசமயம் வெல்லும் பரம) "கூறுஞ்சமயங்களாறுங்குலையும்" படியிறே வெல்லுவது; இப்படி (வெல்லும் பரம) வெல்லுகிற மேலானவரே! ச்ரேஷ்டரானவரே! (இராமாநுச) நாலெழுத்தாய் நாராயண நாமத்திலும் அதிகமான திருநாமத்தை உடையவரே! உன் நாமமெல்லாம் என்றன் நாவினுள்ளே அல்லும் பகலு மமரும்படி நல்கு, இதென் விண்ணப்பம் - இது என் விஜ்ஞாபநம். தேவரீர் நாலெழுத்துடைய திருநாமம் என் நாவிலே அமரும்படி நல்கியருளவேண்டும். "ராமாநுசன்" என்றிறே முடியவருளிச் செய்தது.

விளக்கம் - (அல்லும்பகலுமமரும்படி நல்கு) – பெரியதிருமொழி (1-1-5) – நள்ளிருளளவும் பகலும் நானழைப்பன் - என்று கூறுவது போன்று சூரியன் உள்ள பகற்காலம், சந்த்ரன் உள்ள இரவுப்பொழுது என்று வேறுபாடு இல்லாமல் எப்போதும் பொருந்தி இருக்கும்படி நீ உதவி செய்யவேண்டும். (அறுசமயம் வெல்லும் பரம) – இராமாநுசநூற்றந்தாதி (46) – கூறும் சமயங்கள் ஆறுங்குலையும் - என்பதற்கு ஏற்றபடி உள்ள பௌத்தம் முதலான ஆறு மதங்களும் தோற்கும்படி வென்ற. (வெல்லும் பரம) – வெற்றி கொள்ளும் மேலானரே! உயர்ந்தவரே! (இராமாநுச) - நான்கு எழுத்து கொண்ட "நாராயண" என்ற திருநாமத்தை காட்டிலும் அதிகமான திருநாமம் கொண்டவரே! (உன் நாமமெல்லாம் என்றன் நாவினுள்ளே அல்லும் பகலு மமரும்படி நல்கு, இதென் விண்ணப்பம்) - இது என்னுடைய விண்ணப்பம்; அதாவது நான்கு எழுத்து கொண்டதான நாராயண என்னும் திருநாமம் எனது நாக்கில் எப்போதும் இருக்கும்படியாக அருளவேண்டும்.

வ்யாக்யானம் - (சொல்லின் தொகைகொண்டு) நூற்றெட்டுப் பாட்டாகச் சொல்ல வேணும்மென்று, சொல்லின் தொகையை – ஸங்க்யா நிர்த்தேசத்தைத் திருவுள்ளத்திலே கொண்டு. (உனதடிப்போதுக்கு) "ராமாநுசன் சரணாரவிந்தம் நாம் மன்னிவாழ", "ராமாநுசனடிப் பூமன்னவே" என்றிறே இவர் ராமாநுசனடிப்போதுக்கு வாசிகமாகத் தொண்டு செய்தது. இப்படி தொண்டு செய்யும் நல்லன்பர் அமுதனாரிறே. (ஏத்துமுன்னாமம்) அவர்களாலே ஸ்த்தோத்ரம் பண்ணப்பட்ட தேவரீர் திருநாமமான நூற்றெட்டுப் பாட்டும். (என்றன் நாவினுள்ளே அல்லும் பகலு மமரும்படி நல்கு) இத்தை நிரந்தர மநுஸந்திக்க வேணுமென்கிற என்னாவினுள்ளே திவாராத்ரம் திருநாம மமரும்படி அநுக்ரஹிக்கவேணும். (இதென் விண்ணப்பம்) "இதம் மம விஜ்ஞாபநம்". (அடியேன் செய்யும் விண்ணப்பமே) இது அமுதனார் நிர்வாஹத்தை அநுவதித்துச் சொன்னபடி.

விளக்கம் - (சொல்லின் தொகைகொண்டு) - நூற்றெட்டு பாசுரத்தில் அருளிச்செய்ய வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி. (உனதடிப்போதுக்கு) – "ராமாநுசன் சரணாரவிந்தம் நாம் மன்னிவாழ" என்றும், "ராமாநுசனடிப் பூமன்னவே" என்றும் இவர் இராமாநுசருடைய திருவடிகளுக்கு அல்லவோ வாக்கினால் செய்யப்படும் கைங்கர்யத்தை செய்தார்? இவ்விதம் தொண்டு செய்யும் உயர்ந்த அன்புள்ளவர் திருவரங்கத்தமுதனார். (ஏத்துமுன்னாமம்) – அவர்களால் துதிக்கப்பட்ட உனது திருநாமங்கள் உள்ளடக்கிய

நூற்று எட்டு பாட்டு. (என்றன் நாவினுள்ளே அல்லும் பகலு மமரும்படி நல்கு) - இதனை எப்போதும் எண்ணியபடி இருத்தல் வேண்டும் என்று எண்ணும் எனது நாக்கில் இரவு மற்றும் பகல் என்று பாராமல் எப்போதும் இருக்கும்படி அருளவேண்டும். (இதென் விண்ணப்பம்) – ஸ்தோத்ரரத்நம் (57) – இதம் மம விஜ்ஞாபநம் – என்பதற்கு ஏற்ப எனது விண்ணப்பம். (அடியேன் செய்யும் விண்ணப்பமே) – இது அமுதனார் சொற்களை அடியொட்டி கூறப்பட்டது.

4. இனியென் குறைநமக் கெம்பெருமானார் திருநாமத்தால்
முனிதந்த நூற்றெட்டுச் சாவித்திரி யென்னு நுண்பொருளை
கனி தந்த செஞ்சொல் கலித்துறை யந்தாதி பாடித் தந்தானை
புனிதன் திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே.

பொருள் – “எம்பெருமானார்” என்னும் திருநாமம் ஒவ்வொரு பாசுரத்திலும் உள்ளவிதத்தில், கலித்துறையில் “இராமானுச நூற்றந்தாதி” என்னும் தொகுப்பை திருவரங்கத்தமுதனார் நமக்கு அருளிச்செய்தார். ஆகவே இனி நமக்குக் குறை ஏதும் இல்லை.

அவதாரிகை – (இனியென் குறை நமக்கு எம்பெருமானார் திருநாமத்தினால்) ஸகலவேத ஸாரமான ஸாவித்ரியின் ஸாரமாய் ப்ரபந்ந காயத்ரியாம்படி நூற்றெட்டுப் பாட்டிலும் “ராமாநுசன்” என்னும் திருநாமத்தை யருளிச்செய்து உபகரிக்கையாலே த்ர்ஷ்டாத்ர்ஷ்டங்க ளிரண்டிலும் ஒரு குறைகளு மில்லையென்று பெற்ற லாபத்தைப் பேசுகிறது.

விளக்கம் – அனைத்து வேதங்களின் சாரமாக உள்ள ஸாவித்ரியின் ஸாரமாகவும், ப்ரபந்நர்களுடைய காயத்ரி என்று கூறும்படியாகவும் உள்ள நூற்று எட்டு பாசுரங்களில், ஒவ்வொரு பாசுரத்திலும் “இராமாநுசன்” என்னும் திருநாமத்தை அருளிச்செய்தார். இதன் மூலம் கண்களால் காணக்கூடிய பலன்கள், காண இயலாத பலன்கள் என்றுள்ள இரண்டிலும் எந்தவிதமான குறைகளும் இல்லை என்று தான் பெற்ற பலனை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் – (இனியென் குறை நமக்கு) ஒன்றும் குறையில்லை. த்ர்ஷ்டத்தில் சொல்லப்புகில். "வாயமுதம் பரக்கும் – ராமாநுசனென்று சொல்லுமின்" – அமுதன் வாயிலேயிறே அமுதமுண்டாவது. "ஹ்ர்த்யாந்யமர்தகல்பாநிமந: ப்ரஹ்லாதநாநிச, தாமேவேக்ஷ்வாகு நாதஸ்ய பரதஸ்ய கதாம் குரு:" இவரும் ராமாநுசனிறே; ஆகையாலே த்ர்ஷ்ட ஸுகமுமுண்டு; மோக்ஷைக ஹேதுவாகையாலே அத்ர்ஷ்ட ஸுகமுமுண்டு; அத்தாலே இனியென் குறை யென்கிறது. (எம்பெருமானார் திருநாமத்தால்) "ராமநுசன் திருநாமம்" என்றிறே யருளிச்செய்தது, அந்தத் திருநாமத்திலே. நம்பெருமானான நாராயணன் நாமத்துக்கு ஒரு குறையுண்டு பந்தத்துக்கு ஹேதுவாகை; எம்பெருமானார் ராமாநுசனென்னுந் திருநாமம் மோக்ஷத்துக்கே ஹேதுவாகையாலே அக்குறையுமில்லை. ஏவம்வித வைலக்ஷண்யத்தையுடைய திருநாமத்தினாலே பாடித்தந்தா னென்கிறது.

விளக்கம் - (இனியென் குறை நமக்கு) - ஒன்றும் குறையில்லை. காணக்கூடிய பலன்களில் கூறவேண்டும் என்றால் "இராமநுசன்" என்று கூறுங்கள், அப்போது வாயில் அமிர்தம் சுரந்தபடி இருக்கும். அமுதனார் வாயில் இருந்த பிறந்த அமிர்தம் அல்லவோ? இராமாயணம் ஆரண்யகாண்டம் (16-36) – தாமேவேக்ஷ்வாகு நாதஸ்ய பரதஸ்ய கதாம் குரு: - லக்ஷ்மணனிடம் இராமன், "இக்ஷ்வாகு பரம்பரையின் திலகம் போன்ற பரதனைப் பற்றி உரைப்பாயாக", என்றான் - என்பதற்கு ஏற்ப இவரும் இராமநுசன் அல்லவோ? இதனால் கண்களால் காணும்விதத்தில் இன்பங்கள் அளிக்கவல்லவர் ஆகிறார். மோக்ஷத்திற்கு ஒரே காரணமாக விளங்குவதால் இவரிடம் கண்களால் காண இயலாத பலன் பெறவும் வாய்ப்புகள் உண்டு. ஆகவே இனி எந்தவிதத்திலும் நமக்குக் குறை ஏதும் இல்லை. (எம்பெருமானார் திருநாமத்தால்) - இராமாநுசன் என்றுள்ள திருநாமத்தால் குறை இல்லை. ஸர்வேச்வரனாகிய நாராயணனுடைய திருநாமத்தில் பந்தங்களுக்குக் காரணமாகி விடக்கூடும் என்ற குறை உள்ளது. ஆனால் எம்பெருமானாராகிய இராமாநுசனின் திருநாமமானது மோக்ஷத்துக்குக் காரணமாக உள்ளதால் அந்தக் குறையும் இல்லை. இப்படியாக உள்ள மேன்மை பொருந்திய திருநாமம் கொண்டு பாசுரம் இயற்றினார் என்கிறார்.

வ்யாக்யானம் - (முனிதந்த) "தஸ்யத்யாநந்தஸ்த் தஸ்ய" என்றும், "முனிமாப்பிரம முதல்வித்தாய்" என்றும், "முனியே" என்றுமிறே ஸ்ர்ஷ்ட்யுந்முகனான ஸர்வேச்வரனைச்

சொல்லுவது. அப்படிப்பட்ட ஸர்வேச்வரன் ப்ரஹ்மாவை ஸ்ர்ஷ்டித்து, "வேத: ப்ரதாநத: பூர்வம் காயத்தீம் வேத மாதரம்" என்னும்படியான காயத்ரியையும் ப்ரணவ பூர்வகமாக உபதேசித்தான்; அது அஷ்டோத்தர சதமாயிறே உச்சரித்துப் போருவது. அப்படியே அநுஸந்திக்கும்படி, அதின் நுண்பொருளை - ஸூக்ஷ்மார்த்தத்தை. அந்த காயத்ரிக்கும் மாதாவாயிறே ப்ரணவமிருப்பது.

விளக்கம் - (முனிதந்த) - மஹா உபநிஷத் – ஏகாகீ ந ரமதே தஸ்யத்யாநந்தஸ்த் தஸ்ய – தனியாக இருந்த நாராயணன் மகிழ்ச்சியுடன் இல்லை, ஆகவே அனைத்தையும் படைப்பதற்காக த்யானம் செய்யத் தொடங்கினான் - என்றும், திருவாய்மொழி (8-10-7) முனிமாப்பிரம முதல்வித்தாய் - என்றும், திருவாய்மொழி (10-10-1) – முனியே - என்றும் கூறுவதற்கு ஏற்ப அல்லவோ அனைத்தையும் படைத்த ஸர்வேச்வரன் கூறப்படுகிறான்? அப்படிப்பட்ட ஸர்வேச்வரன் நான்முகனைப் படைத்தான். தொடர்ந்து - வேத: ப்ரதாநத: பூர்வம் காயத்தீம் வேத மாதரம் - அனைத்து வேதங்களுக்குச் சாரமாகவும் முதன்மையாகவும் உள்ள வேதமாதாவாகிய காயத்ரியை ப்ரவணத்தின் தொடக்கத்தில் உபதேசித்தான். அதனை நூற்றெட்டு முறை உச்சரித்தலே விதியாகும். அதன் ஆழ்பொருளை அவ்விதமே எண்ணியிருத்தல் வேண்டும். அப்படிப்பட்ட காயத்ரிக்கு தாயாக உள்ளது ப்ரணவம் ஆகும்.

வ்யாக்யானம் - அதில் அகாரத்தாலே எம்பெருமானையும், உகாரத்தாலே பிராட்டியையும், மகாரத்தாலே தச்சேஷபூதனான சேதநனையுமிறே சொல்லுவது. "மகார ஸ்துதயோர்த் தாஸ:", "அக்ரத:" இத்யாதியாலே அகார உகார மகாரார்த்தங்கள் சப்த்தார்த்த ஸ்வாரஸ்யங்களோடே கூடியிறே யிருக்கிறது; இவரும் ராமாநுசனிறே. "ஓமித்யாத்மாநம் யுஞ்சீத" என்று சப்தஸ்வாரஸ்யத்தாலே சேதந ப்ராதாந்யத்வத்வ முண்டிறே ப்ரணவத்துக்கு; அதிறே நுண்பொருளாவது. "ராமாநுசன்" என்றிறே பாட்டுத்தோறும் பதஸ்த்தமாயிருப்பது. உவ்வானவரிறே - உடையவர். தன் நாமத்திலும் ததீயநாமமிறே அவன்றனக்கும் இஷ்டமாயிருப்பது.

விளக்கம் - அந்த ப்ரணவத்தில் மூன்று எழுத்துக்கள் உண்டு. அவையாவன அ, உ, ம என்பதாகும். இவற்றில் "அ" என்பது ஸர்வேச்வரனையும், "உ" என்பது

பெரியபிராட்டியாரையும், “ம” என்பது அவர்களுக்கு அடிமையான ஜீவாத்மாவையும் குறிக்கும். இதற்கான ப்ரமாணத்தை உரைக்கிறார்; பாஞ்சராத்ரத்தில் - மகார ஸ்துதயோர்த் தாஸ: - ஸ்ரீ மற்றும் நாராயணன் ஆகிய இருவருக்கும் அடிமையாக உள்ள ஜீவனுக்கு, மகாரம் வாசகமாக உள்ளது என்று வேதம் கூறுகிறது - என்றது காண்க. இப்படியாக அ, உ, ம என்ற எழுத்துக்களில் உள்ள ஆழ்பொருளோடு கூடியதாக ப்ரணவம் உள்ளது. நாராயணவல்லீ (5-1) - ஓமித்யாத்மாநம் யுஞ்சீத - ஓம் என்ற ப்ரணவத்தை எப்போதும் உச்சரித்து – என்று கூறுவதற்கு ஏற்ப ப்ரணவம் உள்ளது. இது போன்றே ஒவ்வொரு பாசுரத்திலும் இவர் “இராமாநுசன்” என்று அமைத்துள்ளார். “உ” என்பது உடையவர் அல்லவோ? ஸர்வேச்வரனுக்குத் தனது திருநாமத்தை காட்டிலும், தனது அடியார்களுடைய திருநாமம் இஷ்டமாக உள்ளது.

வ்யாக்யானம் - இனித்தான், “தத்ஸவிதுர்வரேண்யம்” என்று – ஆதித்யமண்டலாந்தர் வர்த்தியான நாராயணனையிறே அங்கு ப்ரதிபாதிக்கிறது; “ய ஏஷாந்த ராதித்யோ ஹிரண்மய: புருஷோத்ர்ச்யதே”, “ஸயச்சாயம் புருஷே யச்சாஸாவாதித்யே ஸ ஏக:” என்கிறபடியே, அவை தன்னோடும் வந்திருப்பிடம் மாயனிராமாநுசன் மனமிறே; அத்தாலே சிவந்தாய்த்து இவர் வடிவருப்பது. இவரும் ராமாநுஜ திவாகரிறே. கடலளவாய சுடரொளியாலேயிறே அவ்விருளைத் துரந்தது. இப்படியாய்த்து சாவித்திரியென்னும் நுண்பொருளைப் பாடித்தந்தது. ஸகலவேத ஸங்க்ரஹமான திருமந்த்ரத்தின் தாத்பர்யமிறே ததீய சேஷத்வம். “நின் திருவெட்டெழுத்துங் கற்று நானுற்றது முன்னடியார்க்கடிமை”.

விளக்கம் - காயத்ரியில் - தத்ஸவிதுர்வரேண்யம் - என்று ஆதித்யமண்டலத்தில் உள்ளவனாக நாராயணனை வெளிப்படுத்துகிறது. சாந்தோக்ய உபநிஷத்தை (1-6-6) - ய ஏஷாந்த ராதித்யோ ஹிரண்மய: புருஷோத்ர்ச்யதே – ஆதித்ய மண்டலத்தில் காணப்படும் பொன்மயமான புருஷன் – என்றும், தைத்திரீய உபநிஷத்தில் – ஸயச்சாயம் புருஷே யச்சாஸாவாதித்யே ஸ ஏக: - ஆதித்ய மண்டலத்தில் உள்ள அதே புருஷன் கண்களிலும் உள்ளான் – என்றும் கூறப்பட்டது. ஆனால் இராமாநுச நூறந்தாதி (106) – அவை தன்னோடும் வந்திருப்பிடம் மாயன் இராமாநுசன் மனத்து – என்பதில் உள்ளது போன்று,

ஸர்வேச்வரன் அங்கு உள்ளதைக் காட்டிலும் மகிழ்வுடன் இருப்பது இராமாநுசரின் மனதில் அல்லவோ? அதனால் இவருடைய திருமேனி தேஜஸ் நிறைந்துள்ளது. இவர் – புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்த க்ஷயாயச: ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர: - சூரியனைப் பார்த்த தாமரை மலர்வது போன்று இராமாநுசன் என்னும் சூரியனைக் கண்டு புண்ணியம் மலர்ந்து, பாவங்கள் அழிகின்றன – என்று கூறுவதற்கு ஏற்ப, சூரியன் போன்றவர் அல்லவோ? கடல் போன்ற தனது தேஜஸ்ஸால் அல்லவோ அறியாமை மற்றும் பாவங்கள் என்னும் இருளை விரட்டுகிறார்? அனைத்து வேதங்களுடைய சுருக்கமாக உள்ளது அஷ்டாக்ஷரம் ஆகும். அது உணர்த்துவது ஸர்வேச்வரனுக்கு ஜீவன் அடிமை என்பதை அல்லவோ? பெரியதிருமொழி (8-10-3) - நின் திருவெட்டெழுத்துங் கற்று நானுற்றது முன்னடியார்க்கடிமை – என்றது காண்க.

வ்யாக்யானம் – நுண்பொருளைப் பாடித் தந்த ப்ரகாரஞ் சொல்லுகிறது (கலி தந்த செஞ்சொலித்யாதியாலே). கலிதருகையாவது – மிடுக்கைத் தருகை. அன்றிக்கே ஆரவாரமாதல், அபூர்வமாதல். இப்படி, கலியைத் தந்த - சப்த்த சக்தியைத் தந்த. (செஞ்சொல்) செவ்வியசொல். “செவிக்கினிய செஞ்சொல்” என்னக்கடவதிறே. (கலித்துறை யந்தாதி பாடித்தந்தான்) “கலித்துறை” என்கிற பாவிலே யாய்த்துப் பாடித் தந்தது. (செஞ்சொல் கலித்துறை) ச்ராவ்யமான கலித்துறையிலே யாய்த்து அந்தாதி பாடித் தந்தது. அந்தாதிப்பாட்டு அடியெடுத்து ஸுலபமாயிறே யிருப்பது. (பாடித் தந்தான்) அநுபவ பரீவாஹமாகப் பாடி பின்புள்ளார்க்கு முபகரித்தார். (புனிதன்) பரிசுத்தன். பாடித்தந்த சுத்தி. அசுத்தரையும் சுத்தராக்கவல்ல சுத்தி. போற்றும் புனிதனைப் போற்றுமவரிறே.

விளக்கம் – ஆழ்ந்தபொருள்களை எளிதாக உணரும்படி பாசுரங்களை அமைத்ததை உரைக்கிறார். கலி தருகை என்றால் மிடுக்கு அளித்தல் அல்லது ஆரவாரமாக இருத்தல். இவ்விதம் ஒலிரூபமாக சக்தி அளித்த. (செஞ்சொல்) அழகான சொல். திருவாய்மொழி (10-6-11) – செவிக்கினிய செஞ்சொல் - என்றது காண்க. (கலித்துறை யந்தாதி பாடித்தந்தான்) - நான்கு நெடிலடிகள் எதுகையுடன் உள்ளதே கலித்துறை ஆகும். அதில் அமைக்கப்பட்ட பாசுரங்கள். (செஞ்சொல் கலித்துறை) - ச்ராவ்யம் என்றால் படித்தல் மற்றும் கேட்டல் மூலம் இன்பம்; இப்படியாக உள்ள கலித்துறையில் அமைத்தார். அந்தாதி என்பதால் ஒரு

பாசுரம் முடிந்து அடுத்த பாசுரத்தை மனனம் செய்வது எளிதாகிறது. (பாடித் தந்தான்) - தான் நன்றாக அனுபவித்து, அந்த அனுபவத்தை மற்றவரும் எளிதாக உணரும்படியாக பின்பு வந்தவர்களுக்கு உதவினார். (புனிதன்) - பரிசுத்தன். பாடியதன் மூலம் ஏற்பட்ட தூய்மை. அசுத்தமாக உள்ளவர்களையும் தூய்மையாக்கவல்லது. அனைவரும் போற்றும் தூய்மையான இராமானுசனையே போற்றும் திருவரங்கத்தமுதனார் என்பதால் மேலும் தூய்மை உள்ளவர்.

வ்யாக்யானம் - (திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே) திருவரங்கத்தமுதனாராகிய தார்மிகன். "ராமானுசன் மிக்க புண்ணியன்" என்னுமாப்போலே மிக்க புண்ணியனடியாக வந்த புண்ணியம். திருவரங்கத்தமுதாகிய புண்ணியன் – எம்பெருமானார் திருநாமத்தால் – கலித்துறையந்தாதி பாடித்தந்தான்; இனியென் குறை நமக்கு என்று க்ரியை. "அஷ்டோத்தர ஸஹஸ்ரம்வா சதமஷ்டஸமாஹித: லக்ஷ்மணஸ்யமநுர்ஜப்ய: முமுக்ஷுரபிதந்த்ரிதை:" என்றும், "யோஜபே லக்ஷ்மணமநும் நித்யமேகாந்த ஸம்ஸ்த்தித: முச்யதே ஸர்வபாபேப்யோ விஷ்ணுலோகம் ஸ கச்சதி" என்றுமிறே அகஸ்த்ய ஸம்ஹிதையில் ப்ரமாண ப்ராசஸ்த்யமிருப்பது. இவரும் "லக்ஷ்மணமுனி" என்று சொல்லப்படும் ராமானுசனிறே.

விளக்கம் - (திருவரங்கத்தமுதாகிய புண்ணியனே) - திருவரங்கத்தமுதனார் என்ற தர்மசீலர். இராமானுஜ நூற்றந்தாதி (91) – ராமானுசன் மிக்க புண்ணியன் – என்பது போன்று மிகுந்த புண்ணியம் செய்தவர் மூலம் வந்த புண்ணியம். திருவரங்கத்தமுதனார் என்ற புண்ணியம் செய்தவர். எம்பெருமானாரின் திருநாமம் கொண்டு கலித்துறையில் பாசுரம் அமைத்துக் கொடுத்தார் . அதனால் நமக்கு இனி என்ன குறை உள்ளது என்று கருத்து.

வ்யாக்யான அவதாரிகை

மூலம் - ஸ்ரீய:பதியாய் பரமகாருணிகனான ஸர்வேச்வரன், "வைகுண்டேது பரேலோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந: உபாப்யாம் பூமி நீளாப்யாம் ஸேவித: பரமேச்வர:", "வைகுண்டேது பரேலோகே ஸ்ரீயாஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணு ரசிந்த்யாத்மா

பக்தைர்ப் பாகவதைஸ் ஸஹ” என்கிறபடியே நித்யவிபூதியிலே போகோபகரணனா யிருந்து லீலாவிபூதியில் த்ரிகுண ப்ரக்ர்தி ஸம்ஸர்க்கத்தாலே ஜீவவர்க்கங்களுக்கு நித்யஸூரிகளைப்போலே இந்த ஆநந்த ரஸத்தை யநுபவித்து வருகைக்கு யோக்யதை யுண்டா யிருக்கச் செய்தேயும், ஒழிக்க வொழியாத நம்மோ டுறவறியாதே ஸம்ஸார ஸாகரத்தின் பெருக்குச் சுழியிலே அகப்பட்டு கரைமரஞ் சேரப் பெறாதே யிருந்ததுக்கு போர நொந்து இவர்களுக்கும் அந்தவுறவை யறிவித்து ஸம்ஸார ஸாகரத்தினின்றும் உத்தரிப்பிக்கக் கடவோமென்று நினைப்பிட்டு கலியுகாதியிலே நம்மாழ்வாரை யவதரிப்பித்து அவருக்கு மயர்வறமதிநலமருள,

விளக்கம் - பெரியபிராட்டியாரின் நாயகனும், எல்லையற்ற கருணை உள்ளவனும் ஆகிய ஸர்வேச்வரன், வைகுண்டேது பரேலோகே ஸ்ரீஸஹாயோ ஜநார்த்தந: உபாப்யாம் பூமி நீளாப்யாம் ஸேவித: பரமேச்வர: - ஸ்ரீவைகுண்டம் என்னும் பரமபதத்தில் மஹாலக்ஷ்மி, பூமாதேவி, நீளாதேவி உள்ளிட்ட பலருடனும் ஜநார்த்தனன் பரமேச்வரனாக அனைவரும் வணங்கும்படி உள்ளான் – என்றும், வைகுண்டேது பரேலோகே ஸ்ரீயாஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணு ரசிந்த்யாத்மா பக்தைர்ப் பாகவதைஸ் ஸஹ – ஸ்ரீவைகுண்டத்தில் மஹாவிஷ்ணு மஹாலக்ஷ்மியுடனும் பக்தபாகவதர்களுடனும் கூடி உள்ளான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, நித்யவிபூதி என்று போற்றப்படும் பரமபதத்தில் அனைத்து இன்பங்களுடன் ஸர்வேச்வரன் உள்ளான். இப்படியாக அவன் உள்ளபோதிலும், அவன் திருவுள்ளத்தில் வருத்தம் உள்ளது என்று அருளிச்செய்கிறார். என்ன வருத்தம்? ஜீவாத்மாக்களும் நித்யஸூரிகள் போன்று அத்தகைய எல்லையற்ற ஆனந்தத்தை அனுபவிப்பதற்கு அனைத்துவிதமான தகுதிகளும் கூடியவர்களாக உள்ளபோதிலும், இந்த லீலாவிபூதியில் உள்ள மூன்று குணங்களுடன் கூடிய ஸம்பந்தம் காரணமாக, திருப்பாவை (28) – ஒழிக்க ஒழியாது – என்று கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனாகிய நம்முடன் இவர்களுக்கு உள்ள உறவு இத்தகையது என்று அறியாமல், ஸம்ஸாரம் என்ற பெருங்கடலின் அலைகளில் அகப்பட்டு, கரை சேர இயலாமல் உள்ளனரே என்று மனவருத்தம் கொண்டான். “இவர்களுக்கு நம்முடனான உறவை உணர்த்தி, அந்த ஸம்ஸாரக்கடலில் இருந்து கரையேற்றுவோம்”, என்று தனது திருவுள்ளத்தில் எண்ணியவனாக, கலிகாலத்தில் நம்மாழ்வாரை அவதரிக்கச் செய்து, அவருக்குத் திருவாய்மொழி (1-11-1) – மயர்வற மதிநலம் – என்று கூறுவதற்கு ஏற்ப குறையாத ஞானத்தை அருளிச்செய்தான்.

மூலம் - அவரும் அந்த ஸம்யஜ்ஞாநத்தாலே ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளைத் தாமநுபவித்து அது உள்ளடங்காமே, எதிர்பொங்கி மீதளிப்ப, அதுக்குப் போக்குவீடாக திவ்யப்ரபந்தங்களை நிர்மித்து மதுரகவியாழ்வார் தொடக்கமான வர்களுக்கு உபதேசித்து, அதுக்கு ஸாரமாய் தத்வஹித புருஷார்த்த யாதாத்ம்யாவ போதகமாய் ஸகலவேத ஸங்ரஹமான திருமந்த்ரத்திலே குஹ்யதமமாக ப்ரதிபாதிக்கப்பட்ட சரமோபாயத்தை மதுரகவியாழ்வா ரொருவர்க்கு முபதேசிக்க, "மிக்க வேதியர் வேதத்தினுட் பொருள் நிற்கப் பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினான்" என்றும், "தேவு மற்றறியேன்" என்றும், உக்த்யநுஷ்டாநங்களாலே பூதரான பின்பு அந்த அர்த்த விசேஷங்களையெல்லாம் தமக்கு ப்ரஸாதிக்க வேணுமென்று ஸ்ரீமந் நாதமுநிகள் ப்ரார்த்திக்க, அவருக்கு அர்ச்சா வ்யவஸ்த்தையை யதிக்ரமித்து திருவாய் திறந்து உபதேசிக்க, அவரடியாக வாய்த்து இந்த ஸம்ப்ரதாயம் வந்தது;

விளக்கம் - நம்மாழ்வாரும் அது போன்று அவதரித்து, அவன் அளித்த உயர்ந்த ஞானம் மூலம் அவனுடைய ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதிகள் போன்ற அனைத்தையும் அனுபவித்தார். அவ்வனுபவத்தைத் தனது உள்ளத்தில் அடக்கி வைக்க இயலாமல், அதனை அனைவருக்கும் உணர்த்தவேண்டும் என்று எண்ணினார். திருப்பாவை (21) – எதிர்பொங்கி மீதளிப்ப - ஆயர்பாடியில் உள்ள பசுக்கள் எவ்விதம் கறக்கப்படும் பாத்திரங்கள் முழுவதும் நிரம்பும்படி பால் தருகின்றனவோ அது போன்று இவருக்கு உள்ளம் ததும்பியபடி இருந்தது. அதனை வெளிப்படுத்தும் விதமாக திருவாய்மொழி உள்ளிட்ட திவ்யப்ரபந்தங்களை அருளிச்செய்தார். அவற்றை மதுரகவியாழ்வார் உள்ளிட்ட பலருக்கும் உபதேசித்தார், அவை அனைத்திற்கும் ஸாரமாக உள்ளதும், உண்மை மற்றும் நன்மை ஆகியவற்றுடன் கூடியதும், அனைத்து வேதங்களின் சுருக்கமாக உள்ளதும் ஆகிய திருமந்திரத்தில் மிகவும் இரகசியமாக உணர்த்தப்பட்டதான மோக்ஷ உபாயம் குறித்து மதுரகவியாழ்வார் ஒருவருக்கு மட்டும் உபதேசம் செய்தார். கண்ணிநுண் சிறுத்தாம்பு (9) – மிக்க வேதியர் வேதத்தினுட் பொருள் நிற்கப் பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினான் - என்றும், (2) – தேவு மற்றறியேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து உபாயங்களும் அறிந்தவராக நின்ற பின்னர், அந்த அர்த்தங்கள் அனைத்தையும் தனக்கு உபதேசிக்கவேண்டும் என்று ஸ்ரீமந் நாதமுனிகள் விண்ணப்பம் செய்தார். அதனை ஏற்று, அர்ச்சாவதாரத்தில் வாய் பேசுவதில்லை என்ற விதியை மீறி,

தனது திருவாய் மலர்ந்து அவருக்கு உபதேசம் செய்தார். இப்படியாகவே இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் வந்தது.

மூலம் – இவ்வர்த்தவிசேஷங்களையெல்லாம், இருள் தருமாஞாலமான பூலோகத்திலே ஜநங்களுக் குபதேசித்து ஸர்வர்க்கும் மோக்ஷத்தை கரதலாமலக மாக்கவேணுமென்று, "பத்ய: கமலவாஸிந்யா: ப்ரேரணாத் ப்ர்திவீதலே, அஹீநாமீச்வரஸ்ஸோய மாஸீத் ராமாநுஜோ முநி:" என்கிறபடியே ஸர்வேச்வரன் திருவநந்தாழ்வானை யேவ, அவர் வந்து ஸ்ரீபெரும்பூதூரிலே யவதரித்து ஸகலசாஸ்த்ர ப்ரவீணராய் திருக்கச்சிநம்பி முகமாக தேவப்பெருமா ளறிவித்த அறிவாலே தத்வஹிதங்களை யெல்லாம் விசதமாகத் தெரிந்தும், பெரியபெருமாள் க்ருபையாலே உபயவிபூதி ஸாம்ராஜ்யத்தை நிர்வஹியும் என்று செங்கோலைக் கொடுக்கப் பெற்றும், நாத யாமுநாதி ஸம்ப்ரதாய பரம்பரா ப்ராப்தமான தத்வஹித புருஷார்த்த தத் யாதாத்ம்ய ஜ்ஞாநமாகிற அர்த்தவிசேஷத்தை லபித்தும், தமக்கு அந்தரங்கரான ஆழ்வான் முதலான முதலிகளுக்கு அவ்வர்த்த விசேஷத்தை உபதேசித்துக் கொண்டும் வாழுகிற காலத்திலே,

விளக்கம் - இப்படியாக உள்ள ஆழ்பொருள்கள் அனைத்தையும், திருவாய்மொழி (10-6-1) – இருள்தரு மா ஞாலம் - என்று கூறுவதற்கு ஏற்ப அறியாமை நிறைந்த இந்த உலகில் உள்ள மக்கள் அனைவருக்கும் உபதேசித்து, அவர்கள் அனைவருக்கும் மோக்ஷத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று அளிக்கவேண்டும் என்று ஸர்வேச்வரன் எண்ணினான். அதனால் – பத்ய: கமலவாஸிந்யா: ப்ரேரணாத் ப்ர்திவீதலே, அஹீநாமீச்வரஸ்ஸோய மாஸீத் ராமாநுஜோ முநி: - தாமரையில் வீற்றுள்ள மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய ஸர்வேச்வரனுடைய விருப்பம் காரணமாக ஸர்ப்பங்களின் அரசனாகிய ஆதிசேஷன் இந்தப் பூமியில் இராமாநுசமுனியாக அவதரித்தார் - என்று கூறுவதற்கு ஏற்ப ஆதிசேஷனை ஸர்வேச்வரன் பணித்தான். அவரும் ஸ்ரீபெரும்பதூரில் இராமநுசராக அவதரித்தார். அனைத்து சாஸ்த்ரங்களையும் நன்றாக அறிந்தவரான ஸ்வாமி திருக்கச்சிநம்பிகள் மூலம் காஞ்சியில் எழுந்தருளியுள்ள தேவராஜன் அறிவித்த ஞானம் மூலமாக அனைத்து தத்வஹிதங்களையும் எந்தவிதமான சந்தேகமும் இன்றி இராமாநுசர் அறிந்து கொண்டார். பெரியபெருமாளாகிய ஸ்ரீரங்கநாதன் தனது கருணை காரணமாக, "நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டையும் இனி நீவீர் ஆட்சி செய்யும்", என்று தனது செங்கோலை அவருக்கு அளித்தான். ஸ்ரீமந் நாதமுனிகள், யாமுனாச்சார்யார் என்ற ஆளவந்தார் உள்ளிட்டவர்கள்

வளர்த்த ஸம்ப்ரதாயத்தில் வந்ததன் காரணமாக உண்டான தத்வஹிதங்களாகிற புருஷார்த்தங்கள் குறித்து அனைத்தையும் அறிந்தார். அப்படிப்பட்ட ஆழ்பொருள்கள் அனைத்தையும் தன்னுடைய அந்தரங்க சிஷ்யரான கூரத்தாழ்வான் போன்றவர்களுக்கு உபதேசம் செய்தபடி வாழ்ந்து வந்தார். அப்படிப்பட்ட காலகட்டத்தில்.

மூலம் - திருவரங்கத்தமுதனார் ஸகல சாஸ்த்ர பரிபூர்ணராயிருந்தும் ஸத்ஸம்ப்ரதாயம் தெரியாதேயிருக்க, எம்பெருமானார் தம்முடைய நிர்ஹேதுக க்ர்பையாலே ஆழ்வானை யிட்டு அவரைத் திருத்துவிக்க, அவரும் ஆழ்வானை யாச்ரயித்து அவர் காட்டிக் கொடுக்க, எம்பெருமானார் திருவடிகளைக் கண்டு அதிலே அத்யந்தாபிநிவிஷ்ட சித்தராய் ஸர்வதா அநுபவம் பண்ணிக்கொண்டு போந்து அவ்வநுபவம் உள்ளடங்காதே பரீவாஹ ரூபேண, "கலித்துறை" என்கிற சந்தஸ்ஸிலே அந்தாதியாக நூற்றெட்டுப் பாட்டாய், பாட்டுத்தோறும் எம்பெருமானார் திருநாமத்தைச் சேர்த்து ப்ரபந்தீகரித்துப் போந்தா ராகையாலே இது ப்ரபந்நகாயத்ரி யென்று அத்யவஸிக்கப்பட்டு, நம்முதலிக ளெல்லார்க்கும் "குரோர் நாம ஸதா ஜபேத்" என்கிறபடியே நித்யாபி ஜப்யமா யிருக்கிற தாய்த்து.

விளக்கம் - அப்படிப்பட்ட காலகட்டத்தில், திருவரங்கத்தமுதனார் அனைத்துவிதமான சாஸ்த்ரங்களை நன்றாக அறிந்தவராக உள்ளபோதிலும் தனது ஸம்ப்ரதாயத்தைக் குறித்த ஞானம் இல்லாதவராக இருந்தார். இதனை உணர்ந்த எம்பெருமானார், எந்தவிதமான காரணமும் இன்றி வெளிப்படும் தனது கருணை காரணமாக, கூரத்தாழ்வான் மூலம் திருவரங்கத்தமுதனாரைத் திருத்தினார். அவரும் கூரத்தாழ்வானை அண்டி நின்று, அவர் உணர்த்திய எம்பெருமானாருடைய திருவடிகளைப் பற்றினார். அந்தத் திருவடிகளைக் குறித்து எல்லையில்லாத விருப்பம் கொண்டார். அதனை எப்போதும் எண்ணியபடி இருந்தார். அந்த அனுபவம் என்பதை உள்ளத்தில் பூட்டி வைக்க இயலாமல், காட்டுவெள்ளம் போன்று "கலித்துறை" என்ற இலக்கணத்தில், அந்தாதி வடிவில், நூற்றெட்டு பாசுரங்கள் அருளிச்செய்தார். ஒவ்வொரு பாசுரத்திலும் எம்பெருமானாராகிய இராமாநுசரின் திருநாமம் வரும்படி அமைத்தார். இப்படியாகச் செய்த இந்த ப்ரபந்தத்தை அனைவரும் "ப்ரபந்ந காயத்ரீ" என்று கொண்டாடினர். இதனால் நம்முடைய முன்னோர்கள் அனைவருக்கும், குரோர் நாம ஸதா ஜபேத் - எப்போதும் ஆசார்யனின்

திருநாமத்தை உச்சரித்தபடி இருத்தல் வேண்டும் - என்பதற்கு ஏற்ப, அன்றாடம் ஜபிக்கும்படி இந்த ப்ரபந்தம் இருந்து வருகிறது.

1. பூ மன்னு மாது பொருந்திய மார்பன் புகழ் மலிந்த
பா மன்னு மாறன் அடி பணிந்து உய்ந்தவன் பல்கலையோர்
தாம் மன்ன வந்த இராமானுசன் சரணாரவிந்தம்
நாம் மன்னி வாழ நெஞ்சே! சொல்லுவோம் அவன் நாமங்களே.

பொருள் – மலர்மேல் மங்கை என்றும், பத்மே ஸ்திதாம் என்றும் கூறுவதற்கு ஏற்றபடி தாமரைமலரைத் தனது இருப்பிடமாகக் கொண்டவள் பெரியபிராட்டி ஆவாள். அப்படிப்பட்ட அவள் – அகலகில்லேன் இறையும் – என்று நித்யவாசம் செய்யும் திருமார்பை உடையவன் பெரியபெருமாள் ஆவான். இந்தப் பெரியபெருமாளின் திருக்கல்யாண குணங்களின் மூலம் ஏற்பட்ட அனுபவத்தினால் திருவாய்மொழியை அருளிச்செய்வதில் மட்டுமே நிலைநின்றவர் நம்மாழ்வார் ஆவார். அத்தகைய நம்மாழ்வாரின் திருவடிகளை அண்டி நின்று, அவற்றின் மூலம் மட்டுமே வாழ்ந்து வருபவர்; பலவகையான சாஸ்த்ரங்கள் கற்றுச் சிறந்து விளங்கும் கூரத்தாழ்வான், கோவிந்தர், தாசரதி போன்றோரும் சாஸ்த்ரங்களை நன்றாகப் பயின்றும் அவற்றை விரோதித்து நின்ற யாதவப்ரகாசர், யஜ்ஞமூர்த்தி போன்றோரும் தன்னிடம் வந்து நிலையாக இருக்கும்படி உள்ளவர் – இப்படிப்பட்ட எம்பெருமானாரின் திருவடிகளை, அவை மட்டுமே நமக்கு உபாயம் என்று அறிந்த நாம், அவற்றை நிலையாகப் பற்றி வாழ வேண்டும். இதற்கு என்ன வழி என்றால் – எனது நெஞ்சமே! அந்த உடையவரின் திருநாமங்களை எப்போதும் இடைவிடாமல் கூறியபடி இருப்பதே ஆகும்.

அவதாரிகை - பிள்ளையமுதனார் தமக்கு ஆசார்ய ப்ரஸாத்தாலே லப்த்தமாய் மந்த்ர ரத்ந கண்டத்வயார்த்த யாதாத்ம்ய ஜ்ஞாநரூபமாய் பரம ரஹஸ்யமாயிருந்துள்ள அர்த்த விஷேஷங்களை, "ஏகஸ்ஸ்வாது ந புஞ்ஜீத" என்கிறபடியே கிண்ணகத்திலிழிவார்க்கு துணைத் தோட்டமாமாப்போலே எம்பெருமானாருடைய கல்யாணகுண ஸாகரத்திலே யிழிவதுக்குத் துணைத்தேட்டமாய், உபயவிபூதியிலும் ஆராய்ந்தால் நித்யவிபூதியிலே யிருந்துள்ள நித்யஸூரிகளும் முக்தரும், "ஸதா பச்யந்தி" என்கிறபடியே பரத்வத்தை

முற்றூட்டாக வநுபவித்து ஸாமகாநம் பண்ணிக் கொண்டு களித்து, "நோபஜநம் ஸ்மரந்திதம் சரீரம்" என்கிறபடியே – லீலாவிபூதியிலே கண்வையாதே யிருந்தார்க ளாகையாலும், லீலாவிபூதியிலுள்ள ஸம்ஸாரி ஜநங்கள் ப்ராக்ர்த்தவேந அஜ்ஞ ராகையாலே, "நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ" என்றும், "உண்டியே யுடையே யுகந்தோடு மிம்மண்டலம்" என்றும் சொல்லுகிறபடியே உண்டுடுத்து, "புறமே புறமே யாடி" என்கிறபடியே லீலாவிபூதியிலே சௌரிசிந்தா விமுகராய் விஷயாந்தரங்களிலே மண்டியிருக்கையாலும், எம்பெருமானார் ஸம்பந்தமுடைய ஜ்ஞாநாதிக ரெல்லாரும், "பாலேபோல் சீர்" என்கிறபடியே பரமபோக்யமான வவருடைய கல்யாண குணங்களை யநுபவித்து, "காலாழும் நெஞ்சழியும்" இத்யாதிப்படியே அவ்வநுபவத்திலே ஆழங்கால்பட்டு குமிழ்நீருண்டு நின்றார்களாகையாலும், இந் நால்வரும் துணை யல்லா தொழிகையாலே, தம்முடைய ஸுகதுக்கங்களுக்கு எப்போதும் பொதுவாயிருக்கிற தம் மநஸ்ஸே துணையாக வேணுமென்று திருவுள்ளம் பற்றி அது தன்னையே ஸம்போதித்துச் சொல்லுகிறார்.

விளக்கம் - திருவரங்கத்தமுதனார் தன்னுடைய ஆசார்யனுடைய கருணை காரணமாக ஏற்பட்டதும், மந்த்ரரத்னம் என்ற போற்றத்தக்கதும் ஆகிய த்வய மந்த்ரத்தை அதினுடைய உண்மையான ஆழ்பொருளுடன் உள்ளது உள்ளபடி அறிந்து, ஞானரூபமாகவும் பரம ரகசியமாகவும் உள்ள அந்த ஆழ்பொருள்களை உணர்த்து நின்றார். அந்த ஆழ்பொருளானது, ஓடுகின்ற வெள்ளத்தில் சிக்கித் தவிப்பவர்களுக்குக் கரை சேர உதவும் தோணி போன்று, எம்பெருமானார் என்னும் திருக்கல்யாண குணக் கடலில் இறங்குவதற்கு உதவும் தோணி போன்று உள்ளதாகும். நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டிலும் உள்ளவர்கள் குறித்து ஆராயும்போது, நித்யவிபூதியில் உள்ள நித்யஸூரிகள் மற்றும் முக்தர்கள் ஆகிய இரு பிரிவினரும் உபநிஷத் - ஸதா பச்யந்தி - அவனை எப்போதும் நோக்கியபடி உள்ளனர் – என்று கூறுவதற்கு ஏற்ப, பரத்வமான அவனை எப்போதும் முற்றிலுமாக அனுபவித்தபடி, ஸாம வேதங்கள் ஓதி மகிழ்ந்து, சாந்தோக்ய உபநிஷத் (8-12-3) - நோபஜநம் ஸ்மரந்திதம் சரீரம் – முதலில் தாங்கள் சரீரம் எடுத்து இந்தப் பூமியில் வாழ்ந்து அதன் பின்னர் அங்கு சென்றதை மறக்கின்றனர் - என்று கூறுவதற்கு ஏற்ப இந்த லீலாவிபூதி குறித்து சிறிதும் சிந்திக்காமல் உள்ளனர். இந்தப் பூமியில் உள்ளவர்கள், ப்ரக்ருதியின் பிடியில் உள்ள காரணத்தால் அறியாமை

நிறைந்தவர்களாக, இராமாயணம் அயோத்யாகாண்டம் (105-24) – நந்தந்த்யுதித ஆதித்யே நந்தந்த்யஸ்தமிதே ரவௌ – சூரியன் மறைந்தால் தங்களுக்கு இன்பம் உண்டாகும் காலம் வந்தது என்று மகிழ்கிறார்கள் - என்றும், பெருமாள் திருமொழி (2) - உண்டியே யுடையே யுகந்தோடு மிம்மண்டலம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, உணவு உண்டு ஆடைகள் உடுத்தி, திருவாய்மொழி (5-1-1) - புறமே புறமே யாடி – என்று கூறுவதற்கு ஏற்ப இந்த உலகவிஷயங்களை விரும்பியபடி அதிலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள். ஸ்வாமி எம்பெருமானாருடைய ஸம்பந்தம் குறித்த ஞானம் கொண்டவர்கள், பெரியதிருவந்தாதி (58) – பாலேபோல் சீர் - என்று கூறுவதற்கு ஏற்ப மிகவும் உயர்ந்த இன்பம் அளிக்கவல்லவராகிய எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களை எப்போதும் அனுபவித்தபடி, அந்த அனுபவத்தில் – பெரியதிருவந்தாதி (34) – காலாழும் நெஞ்சழியும் - என்று கூறுவதற்கு ஏற்ப ஆழங்கால்பட்டு மயங்கி நிற்கிறார்கள். ஆக இந்த நான்கு விதமானவர்களும் (ஸர்ஏச்வரனிடம் ஈடுபட்டுள்ள நித்யஸூரிகள் மற்றும் முக்தர்கள், உலகவிஷயங்களில் ஈடுபட்டுள்ள ஸம்ஸாரிகள், எம்பெருமானாரிடம் ஈடுபாடு கொண்டு மயங்கி நிற்பவர்கள்) தனக்குத் துணையாக நிற்கமாட்டார்கள் என்று அறிந்து, தனது இன்பதுன்பங்களில் எப்போதும் துணையாக நிற்கும் தனது மனமானது தனக்குத் துணையாக நிற்கவேண்டும் என்று எண்ணி, அதனைக் குறித்து உரைக்கிறார்.

வ்யாக்யானம் - (பூமன்னு மாது பொருந்திய மார்பன்) “பத்மே ஸ்த்திதாம்” என்றும், “மலர்மேல் மங்கை” என்றும், “அரவிந்த வாஸிந” என்றும் சொல்லுகிறபடியே ஸௌகந்த்ய ஸௌகுமார்யங்களால் அத்யந்த போக்யமான தாமரைப்பூவின் பரிமளந்தானே ஒரு வடிவு கொண்டாப்போலே அதிலே யவதரித்த பெரியபிராட்டியார் ஸ்வயம் “பத்மிநி” என்கிற பேரையுடையளாய், அவ்வீட்டின் போக்யதையாலே அத்தை விடமாட்டாதே இருப்பிடமாக அதிலேயிருந்து அதுவே நிரூபகமாகச் சொல்லப்பட்ட பின்பு, “ஸாக்ஷாந் மந்மத மந்மத” னான நாராயணன், தன்னை தனக்கு பத்நியாக பரிணயித்து பரிஷ்வங்கம் பண்ணவே அவன்றிருமார்வை யநுபவித்து அந்த போக்யதையிலே யீடுபட்டு நின்ற பின்பு தாமரைப்பூவின் போக்யதையும் அருவருத்து ஒருக்காலும் அத்தை ஸ்மரியாதே, “இறையும் – அகலகில்லேன்” என்று நித்யவாஸம் பண்ணப்படுகிற திருமார்வை யுடையனான ஸர்வேச்வரனுடைய. (பூமன்னு மாது பொருந்திய மார்பன்) என்று விசேஷ்ய பூதனான ஸர்வேச்வரனுடைய நாமநிர்த்தேசம் பண்ணாதே, அமுதனார் விசேஷண பூதையான பெரியபிராட்டியரை மாத்ரமே யருளிச்செய்தது, “அகஸ்த்ய ப்ராதா” என்றாப்போலே

யிருக்கிறது காணும்; அப்படியேயிறே ச்ருதி ஸ்ம்ர்திகளிலும், "ச்ரத்தயா தேவோ தேவத்வ மச்நுதே" என்றும், "அப்ரமேயம் ஹிதத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா" என்றும் இவளையிட்டு அவனுடைய அதிசயம் சொல்லப்படுகிறது. "பிதுச் சத குணம் மாதா கௌரவேணாதிரிச்யதே" என்று பர்த்தாவுக்கு இப்படியே, ப்ரதிபத்தியுண்டாக வேண்டிருக்குமிறே.

விளக்கம் – (பூமன்னு மாது பொருந்திய மார்பன்) - ஸ்ரீஸூக்தம் – பத்மே ஸ்த்திதாம் – தாமரையில் எப்போதும் இருப்பவள் – என்றும், மூன்றாம் திருவந்தாதி (96) - மலர் மேல் மங்கை - என்றும், அரவிந்தவாஸிநீ - தாமரையில் எப்போதும் வாஸம் செய்பவள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, மிகுந்த நறுமணம் மற்றும் மென்மை ஆகியவை காரணமாக எல்லையற்ற இன்பம் அளிக்கவல்லதான தாமரைமலருடைய பரிமளம் என்பதே ஒரு வடிவம் கொண்டது போன்று, அந்தத் தாமரையில் அவதரித்த பெரியபிராட்டியார் பத்மினி என்ற திருநாமம் கொண்டவள் ஆகிறாள். அந்தத் தாமரையாகிய வீட்டினுடைய இன்பம் காரணமாக அதனை விட்டு அகலாமல் தனது இருப்பிடமாக அதனையே கொண்டதால், அந்தத் தாமரையை கொண்டே தன்னைக் கூறவேண்டும் என்னும்படி இருந்தாள். பின்னர் ஸ்ரீமத்பாகவதம் – ஸாஷாந் மந்மத மந்மத – மிகுந்த அழகுள்ள மன்மதனுக்கும் மன்மதன் போன்றவன் - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள ஸ்ரீமந்நாராயணன், மஹாலக்ஷ்மியாகிய தன்னைத் அவனுடைய பத்னியாக ஏற்றுக்கொண்டபோது, அவனுடைய திருமார்பை அடைந்து, அதனை எப்போதும் அனுபவித்தபடி அதன் இன்பத்தில் நிலைநின்றதால் தான் அவதரித்த தாமரைமலரின் இன்பத்தைக் கூட அருவறுத்து, அதனை அதன் பின்னர் எண்ணாமல் உள்ளவள்; அதாவது திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் இறையும் - ஏன்பதற்கு ஏற்ப "ஒரு க்ஷணம் கூட அகலமாட்டேன்" என்று மஹாலக்ஷ்மி நித்யவாஸம் செய்யும் திருமார்புள்ள ஸர்வேச்வரனுடைய. (பூமன்னு மாது பொருந்திய மார்பன்) - இப்படியாக உள்ள ஸர்வேச்வரனின் திருநாமத்தை உரைக்காமல் திருவரங்கத்தமுதனார் பெரியபிராட்டியை மட்டும் ஏன் உரைத்தார்? அகஸ்த்ய ப்ராதா - அகஸ்த்யரின் சகோதரன் – என்று அகஸ்த்யரின் பெயரைக் கொண்டு அவருடைய சகோதரரை உரைப்பது போன்று, பெரியபிராட்டியாரைக் கொண்டு "அவளுடைய நாயகன்" என்று உரைக்கிறார். இதே போன்று ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளில் காணப்படும் கீழே உள்ள வரிகளில் மஹாலக்ஷ்மி மூலம் அவன் உரைக்கப்படுகிறான்:

- ச்ரத்தயா தேவோ தேவத்வ மச்நுதே – மஹாலக்ஷ்மியுடனான தொடர்பு காரணமாக ஸ்ரீமந்நாராயணன் மேன்மை அடைகிறான்.

- இராமாயணம் ஆரண்யகாண்டம் (37-18) - அப்ரமேயம் ஹிதத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா - எந்த ஒரு இராமனின் பத்னியாகிய சீதை ஜனகருடைய புத்ரியோ, அந்தச் சீதையால் இராமன் தேஜஸ் அடைகிறான்.

மேலும் – பிதுச் சத குணம் மாதா கௌரவேணாதிரிச்யதே – தந்தையைக் காட்டிலும் தாய் பத்து மடங்கு குணம் நிறைந்தவள் - என்று கூறுவதற்கு ஏற்ப, தாயின் மூலமே தந்தைக்கு மேன்மை ஏற்படுகிறது அல்லவோ?

வ்யாக்யானம் - (புகழ் மலிந்த) “உயர்வற வுயர்நல முடையவன் – அயர்வறு மமரர்க ளதிபதி”, “திடவிசும்பெரிவளி நீர் நிலமிவைமிசை படர்பொருள் முழுவது மாயவையவை தொறும் உடல் மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் சுடர்மிகு சுருதி யுளிவை யுண்ட சுரன்”, “நீர்தொறும் பரந்துளன் பரந்தவண்ட மிதென”, “ஒன்றுந்தேவு முலகு முயிரும் மற்றும் யாது மில்லாவன்று நான்முகன் றன்னொடு தேவருலகோ ருயிர் படைத்தான்”, “உலகமுண்ட பெருவாயா வுலப்பில் கீர்த்தி யம்மானே”, “புணரா நின்ற மரவே முன்றெய்த வொருவில்வலவாவோ புணரேய் நின்ற மரமிரண்டின் நடுவே போன முதல்வாவோ”, “நோலாதாற்றே னுனபாதம் காணவென்று நுண்ணுணர்வில் நீலார் கண்டத்தம்மானும் நிறை நான்முகனு மிந்திரனும்”, “செந்தாமரைக்கட் செங்கனிவாய் நாற்றோ ளெந்தா யெனதுயிரே”, “முனியே நான்முகனே முக்கண்ணப்பா”, “சூழ்ந்தகன்றாழ்ந் துயர்ந்த முடிவில் பெரும்பாழேயோ சூழ்ந்ததனில் பெரிய பரநன்மலர்ச் சோதியோ! சூழ்ந்ததனில் பெரிய சுடர் ஞாநவின்பமேயோ” என்று தலைக்கட்டுகையாலே, “உயர்வற” என்று தொடங்கி, “உயர்ந்தே” என்னுமளவும் – ஆதிமத்யாவஸாநங்களிலே ஒருபடிப்பட்ட கல்யாணகுணங்களால் ஏற்பட்ட.

விளக்கம் - கீழே உள்ள பல திருவாய்மொழி வரிகள் காண்க. திருவாய்மொழியின் தொடக்கம், நடுப்பகுதி மற்றும் இறுதிப்பகுதி என்ற பல இடங்களிலும் ஸர்வேச்வரனுடைய திருக்கல்யாண குணங்களில் ஈடுபட்ட நின்ற:

- திருவாய்மொழி (1-1-1) - உயர்வற வுயர்நல முடையவன் – அயர்வறு மமரர்க ளதிபதி
- திருவாய்மொழி (1-1-7) - திடவிசும்பெரிவளி நீர் நிலமிவைமிசை படர்பொருள் முழுவது மாயவையவை தொறும் உடல் மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் சுடர்மிகு சுருதி யுளிவை யுண்ட சுரன்
- திருவாய்மொழி (1-1-10) - நீர்தொறும் பரந்துளன் பரந்தவண்ட மிதென
- திருவாய்மொழி (4-10-1) – ஒன்றுந்தேவு முலகு முயிரும் மற்றும் யாது மில்லாவன்று நான்முகன் றன்னொடு தேவருலகோ ருயிர் படைத்தான்
- திருவாய்மொழி (6-10-1) - உலகமுண்ட பெருவாயா வுலப்பில் கீர்த்தி யம்மானே
- திருவாய்மொழி (6-10-5) – புணரா நின்ற மரவே முன்றெய்த வொருவில்வலவாவோ புணரேய் நின்ற மரமிரண்டின் நடுவே போன முதல்வாவோ
- திருவாய்மொழி (6-10-8) – நோலாதாற்றே னுனபாதம் காணவென்று நுண்ணுணர்வில் நீலார் கண்டத்தம்மானும் நிறை நான்முகனு மிந்திரனும்
- திருவாய்மொழி (6-10-9) – செந்தாமரைக்கட் செங்கனிவாய் நாற்றோ ளெந்தா யெனதுயிரே
- திருவாய்மொழி (10-10-1) – முனியே நான்முகனே முக்கண்ணப்பா
- திருவாய்மொழி (10-10-10) – சூழ்ந்தகன்றாழ்ந் துயர்ந்த முடிவில் பெரும்பாழேயோ சூழ்ந்ததனில் பெரிய பரநன்மலர்ச் சோதியோ! சூழ்ந்ததனில் பெரிய சுடர் ஞாநவின்பமேயோ

அதாவது “உயர்வற” என்று தொடங்கி, “உயர்ந்தே” என்பது முடிய உள்ள திருவாய்மொழியில் ஸர்வேச்வரனுடைய திருக்கல்யாண குணங்களில் ஈடுபட்டதால் உண்டான.

வ்யாக்யானம் - (பா) பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை உள்ளபடி விசததமமா வநுபவிக்க வநுபவிக்க அது உள்ளடங்காமே, பக்தி பலாத்காரத்தாலே வந்ததானாலும், “பாதபத்தோஷர ஸமஸ்தந்த்ரீலய ஸமந்வித:” என்னுமாப்போலே நிர்ஹேதுக பகவத்

விஷயீகாரத்தாலே ஸர்வலக்ஷணோ பேதமாய், "கவியமுதம்" என்றும், "தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்றும் தாமே ச்லாகிக்கும்படியான திருவாய்மொழியிலே; (மன்னு) ஸர்வதா நிச்சலராயிருந்துள்ள. (மாறன்) "அரங்கர் வண்புகழ்மேலான்ற தமிழ்மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன்", "குழல் மலியச் சொன்ன" வோராயிரமிறே.

விளக்கம் - பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை உள்ளது உள்ளபடி அனுபவிக்க அனுபவிக்க, அந்த உணர்ச்சிகளை உள்ளே வைக்க இயலாமல், பக்தி காரணமாக வெளிப்பட்டபடி இருந்தது. ஆனாலும் இராமாயணம் பாலகாண்டம் (1-2-18) – பாதபத்தோஷர ஸமஸ்தந்த்ரீலய ஸமந்வித: – வருத்தம் காரணமாகத் தவித்த என்னிடமிருந்து வந்த இந்தச் சொற்கள் கவிதை இலக்கணத்தில் அமைந்து – என்பதற்கு ஏற்ப, எந்தவிதமான காரணமும் இல்லாமல் எடுத்துக்கொண்ட பகவானின் கருணையால் அனைத்தைக் காட்டிலும் வேறுபட்டதாய் இருந்தது. மேலும் திருவாய்மொழி (8-10-5) – கவியமுதம் – என்றும், திருவாய்மொழி (9-4-9) – தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தானே புகழ்ந்து கொள்ளும்படி உள்ள திருவாய்மொழி. (மன்னு) - எதற்காகவும் அசையாமல் இருந்த. (மாறன்) – அரங்கர் வண்புகழ்மேலான்ற தமிழ்மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் - என்பதற்கு ஏற்றபடி உள்ள நம்மாழ்வார், திருவாய்மொழி (5-8-11) - குழல் மலியச் சொன்ன - என்பதற்கு ஏற்ப அருளிச்செய்த ஆயிரம் பாசுரங்கள் அல்லவோ?

வ்யாக்யானம் - (மாறன்) இதுவாய்த்து ப்ரதமோபாதாநமான திருநாமம். "விநாசாய சதுஷ்க்ர்தாம்" என்னுமாப்போலே பாஹ்யகுத்ர்ஷ்டிகளை சிக்ஷித்து அவர்களுடைய ஸம்ஸார நாசகரரானவர். (மாறன்) அஜ்ஞாநத்துக்கு மாரகர். அன்றிக்கே, "ஸாக்ஷாந் மந்மத மந்மத:" என்கிறவனும் பிச்சேறி ஊமத்தங்காய் தின்றவனைப்போலே "மின்னிடை மடவாரில்" வ்யாமுக்தனாம்படி பண்ணவல்லதாய் பெண்பிள்ளைத்தனத்தையும், "ஊனில் வாழுயிரிலே" ஒரு நீராகக் கலந்து வ்யாமுக்தனாம்படி பண்ணவல்ல ஜ்ஞாநாதிக்யத்தையு முடையவராகையாலே (மாறன்) என்னவுமாம். இப்படிப்பட்ட ஆழ்வாருடைய. (அடி) ஆழ்வார் பர்யந்தமல்ல இவர் தம்முடைய ஸ்வாமித்வாத்யவஸயம். ஆக நமக்கு நிருபாதிக ஸ்வாமியானவ னென்னுதல். தம்மை வசீகரிக்கைக்கு மூலமானவ னென்னுதல்.

இப்படிப்பட்ட திருவடிகளை. (பணிந்து) ஆச்ரயித்து. "ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணாமாமி மூர்த்ந்நா" என்று ஆளவந்தாரருளிச் செய்தது. அடியிலே யிப்படி யருளிச்செய்கையாலே இப்ப்ரபந்தம் சரமபர்வநிஷ்டர் விஷயமென்று தோற்றுகிறது.

விளக்கம் - (மாறன்) - இது முதன்மையான திருநாமமாக உள்ளது. ஒரு பானை உண்டாக மண் உபாதான காரணம் ஆவது போன்று, ஸ்ரீவைஷ்ணவத்தின் உபாதான காரணமாக உள்ள நம்மாழ்வாருடைய திருநாமம். ஸ்ரீமத் பகவத் கீதையில் (4-8) – விநாசாய சதுஷ்க்ருதாம் - பாவம் செய்பவர்களை அழிப்பதற்காகவும் - என்று கூறுவது போன்று வேதங்களுக்கு விரோதமாகப் பொருள் உரைக்கும் பல மதங்களையும் தண்டித்து, அவர்களுடைய ஸம்ஸாரத்தை நீக்கி அழித்தவர். (மாறன்) அறியாமைக்கு அழிவை உண்டாக்கும் கோள் போன்றவர். அல்லது ஸ்ரீமத்பாகவதம் (10-32-2) - ஸாக்ஷாந் மந்மத மந்மத: - மன்மதனும் மயங்கும்படி உள்ள மன்மதன் - என்றுளள ஸர்வேச்வரன் கூட பைத்தியம் பிடித்தவன் ஊமத்தங்காய் உண்பது போன்று, திருவாய்மொழி (6-2-1) - மின்னிடை மடவாரில் – என்பதில் கூறுவதற்கு ஏற்ப தன்னிடம் மயங்கி நிற்பது போன்ற நாயகி பாவத்தை உரைத்தும், திருவாய்மொழி (2-3-1) – ஊனில் வாழுயிரே – என்பதற்கு ஏற்ப இவருடன் அவன், இரண்டு நீர்கள் ஒன்றாகக் கலந்தால் பிரிக்க முடியாமல் ஆவது போன்று கலக்கும் விதத்தில் செய்தும் என்றுள்ள ஞானம் கொண்டவர் என்பதால் மாறன் எனப்பட்டார். இப்படிப்பட்ட நம்மாழ்வாருடைய. (அடி) - தனக்கு எந்தவிதமான காரணமும் இல்லாதவிதத்தில் க்ருபை செய்த நம்மாழ்வாருடைய. தம்மை வசீகரம் செய்தவருடைய, எல்லையற்ற வாத்ஸல்யம் உள்ள நம்மாழ்வாருடைய திருவடிகள். (பணிந்து) - அண்டி நின்று. ஸ்தோத்ரரத்னம் (5) - ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணாமாமி மூர்த்ந்நா - அப்படிப்பட்ட நம்மாழ்வாருடைய தாமரை போன்ற திருவடிகளில் பணிந்து - என்றல்லவோ ஸ்வாமி ஆளவந்தார் அருளிச்செய்தார். இப்படி அருளிசெய்த காரணத்தால் இந்த இராமாநுஜ நூற்றந்தாதி என்ற ப்ரபந்தம் சரணாகதியின் எல்லை நிலையில் நிற்பவர்களுக்காக என்றாகிறது.

வ்யாக்யானம் - (உய்ந்தவன்) உஜ்ஜீவித்தவன். இவருக்கு உஜ்ஜீவநம் அந்த பாநாதிகளாலேயன்று காணும், ஆழ்வார் தம்முடைய திருவடிகளை இவருக்குப்படியாக விட்டுப்போந்தாரிறே. அவ்வாழ்வார் திருவடிகளைப் பணிந்த பின்பு இவர் அவை

தன்னையே யநுபவித்துப் போந்தார். ஆழ்வார்க்கும் இவர்க்கும் கால விப்ரக்ர்ஷ்டமானாலும், முதலிலே ஆழ்வார் நாதமுனிகளுக்கு உபதேசம் பண்ணும்போது இவரை த்யாநம் பண்ணி, "யஸ்வாபகாலே கருணாகரஸ்ஸந் பவிஷ்ய தாசார்ய வரஸ்ய ரூபம் - ஸந்தர்சயாமாஸ மஹாநுபாவம் தம்காரிஸூநும் சரணம் ப்ரபத்யே" என்கிறபடியே இவருடைய பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை ஸ்வப்நமுகேந நாதமுநிகளுக்குக் கொடுத்திட்டபடியை யபிமாநித்து, பரகத ஸ்வீகாரத்தாலே அவருக்கு ஆசார்ய ராகையாலே இவரும் அவ்வாழ்வார் திருவடிகளைப் பற்றி, அவர், "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணனெம்பெருமான்" என்று அத்யவஸித்த பகவத் ப்ரபாவத்தை ஸ்ரீபாஷ்யமுகேந ப்ரகாசிப்பித்து வேங்கடாசல யாதவாசல ஸ்த்தலங்களை, "குத்ர்ஷ்டிகுஹநாமுகேநி பதத: பரப்ரஹ்மண: கரக்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மணோயம்முநி:" என்கிறபடியே நிர்வஹித்து ஸகல திவ்யதேசங்களையும் திருத்தி இதுவே உஜ்ஜீவநமாக விருக்கிறவ ரென்றபடி.

விளக்கம் - (உய்ந்தவன்) - தனது ஆத்மாவைக் கரையேற்றியவர். இவர் வாழ்வது சோறு மற்றும் தண்ணீரால் அல்ல. ஆழ்வார் தனது திருவடிகளை இவர் சேருமிடமாக விட்டுச் சென்றார். அவ்வாழ்வாரின் திருவடிகளை அண்டிய பின்னர் அவற்றை மட்டுமே அனுபவித்தபடி வாழ்ந்தார். ஆழ்வாருக்கும் இவருக்கும் காலத்தில் வேறுபாடு இருந்தாலும், ஆழ்வார் நாதமுனிகளுக்கு உபதேசம் செய்தபோது பின்னர் அவதரிக்க உள்ள எம்பெருமானாரைச் சிந்தித்தபடி – "யஸ்வாபகாலே கருணாகரஸ்ஸந் பவிஷ்ய தாசார்ய வரஸ்ய ரூபம் - ஸந்தர்சயாமாஸ மஹாநுபாவம் தம்காரிஸூநும் சரணம் ப்ரபத்யே - பின்னால் அவதரிக்க உள்ளவருடைய திவ்யமான விக்ரஹம், அனைவரும் சரணம் புகத்தக்கவர் – என்று உடையவருடைய விக்ரஹத்தை நாதமுனிகளுக்கு அளித்தார் [இந்த விக்ரஹம் ஆழ்வார் திருநகரியில் உள்ளது]. ஆசார்ய அபிமானமே உபாயம் என்பதற்கு ஏற்ப உள்ள நாதமுனிகளுக்கு ஆசார்யன் என்பதால், தானும் அந்த ஆழ்வார் திருவடிகளையே பணிந்து நின்றார். திருவாய்மொழியில் (6-7-1) – உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணனெம்பெருமான் – என்று நம்மாழ்வார் அருளிச்செய்த ஸர்வேச்வரனுடைய பிரபாவங்களை ஸ்ரீபாஷ்யம் மூலம் வெளிப்படுத்தி, திருவேங்கடமலை மற்றும் திருநாராயணபுரம் போன்ற இடங்களை, யதிராஜ ஸப்ததி (38) - குத்ர்ஷ்டிகுஹநாமுகேநி பதத: பரப்ரஹ்மண: கரக்ரஹ

விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மணோயம்முநி: - பரப்ரஹ்மமானது வேதங்களை மறுப்பவர்கள் கைகளில் சிக்குண்டது, அவர்களை விலக்கி ப்ரஹ்மத்தை உயர்த்தவல்லவரான – என்பதற்கு ஏற்ப நிர்வாகம் செய்து, அனைத்து திவ்யதேசங்களையும் சீர்ப்படுத்தி, அதுவே தனது வாழ்க்கை என்றுள்ளவர்.

வ்யாக்யானம் - (பல்கலையோர்) ஸகலசாஸ்த்ரபாரீணரான கூரேச குருகேச கோவிந்த தாசரதி முதலான முதலிகளும் ப்ரத்யவஸ்த்தாநம் பண்ணி ப்ரஸங்கித்த பின்பு எம்பெருமானார் தம்முடைய விஷயீகாரத்தாலே தத்வஹிதபுருஷார்த்த யாதாத்ம்ய ஜ்ஞாநத்தைப் பெற யாதவப்ரகாச யஜ்ஞமூர்த்யாதிகளும். (தாம் மன்ன) யதாவஸ்த்தித ஜ்ஞாநத்தாலே ஸுப்ரதிஷ்டிதராம்படி. மன்னுதல் - பொருத்தமும், நிலைப்பாடும். (வந்த) பரமபதத்தினின்றும் ஸர்வேச்வரனுடைய நியமநத்தாலே யெழுந்தருளின. (இராமாநுசன்) இவர் சக்ரவர்த்தித்திருமகனை அநுஸரித்து ஜநித்தார் காணும்; அவன், "அபயம் ஸர்வபூதேப்யோததாம் யேதத் வ்ரதம் மம" என்று ஸர்வருக்கும் அபயப்ரதாநம் பண்ணினாப்போலே இவரும் மோக்ஷோபாயமான மந்த்ரத்தை பூரிதாநம் பண்ணினாரிறே. இப்படிப்பட்ட வெம்பெருமானாருடைய. (சரணாரவிந்தம்) அரவிந்தமென்கிற, மந்மதபாணம் போலே தம்மை மோஷிப்பித்தவையாகையாலே சரணங்களுக்கு அரவிந்தத்தைப் போலியாகச் சொல்லுகிறார். ஆச்ரிதருக்கு பாவநத்வ போக்யதைகளாலே ஏகரூபமாயிருக்கையாலே ஏகவசந ப்ரயோகம் பண்ணுகிறார். (மன்னி) ஆச்ரயித்து. நிச்சலமாக த்ர்டாத்யவஸாயத்தைப் பண்ணி.

விளக்கம் - (பல்கலையோர்) - அனைத்து சாஸ்த்ரங்களையும் நன்கு உணர்ந்த சான்றோர்களாகிய கூரத்தாழ்வார், கோவிந்தர், தாசரதி போன்ற பலரும் எம்பெருமானாரிடம் வணங்கி நின்று அவருடைய கீர்த்தியைப் புகழ்ந்தபடி இருந்தனர். அவர்கள் மட்டும் அல்லாமல், தனது ஸம்பந்தம் மூலம் தத்வம், ஹிதம் மற்றும் புருஷார்த்தம் ஆகிய பலவற்றைக் குறித்து உள்ளது உள்ளபடி அறிந்த அத்வைதிகளான யாதவப்ரகாசர், யஜ்ஞமூர்த்தி போன்ற பலரும் தன்னிடம் உள்ள ஞானம் காரணமாக தன்னைப் பணிந்து நிற்கும்படிச் செய்தவர். மன்னுதல் - ஈடுபாடு அடைதல், பொருந்துதல். (வந்த) – ஸர்வேச்வரனுடைய ஆணை காரணமாகப் பரமபதத்திலிருந்து இங்கு வந்தார். (இராமாநுசன்) – சக்ரவர்த்தித்திருமகனாகிய இராமனின் செயலைக் கடைப்பிடிக்கும் விதத்தில் இவர் அவதரித்தார். இராமாயணம் யுத்தகாண்டம் – அபயம்

ஸர்வபூதேப்யோததாம் யேதத் வ்ரதம் மம – என்னைச் சரணம் புகுந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய ஏற்றத்தாழ்வு ஆராயாமல் காப்பது எனது விரதம் – என்று அனைவருக்கும் இராமன் சரணாகதி அளித்தான்; இது போன்றே எம்பெருமானாரும் மோக்ஷ உபாயமாக உள்ள மந்திரத்தை அனைவருக்கும் அளித்தார். இப்படிப்பட்ட எம்பெருமானாருடைய. (சரணாரவிந்தம்) - மன்மதபாணம் போன்று தன்னை மயக்கியதால் திருவடிகளுக்கு உவமையாகத் தாமரையைக் கூறுகிறார். அண்டி நிற்பவர்களைத் தூய்மைப்படுத்தவல்ல தகுதி கொண்ட ஒரே இடம் என்பதால் இவ்விதம் ஒன்றை மட்டும் உரைக்கிறார். (மன்னி) - அண்டி நின்று. அசையாமல் உறுதியுடன் பிடித்து.

வ்யாக்யானம் - (நாம் வாழ) நானொருத்தனுமே ஆச்ரயிக்க என்னுடைய ஸம்பந்திஸம்பந்திகளெல்லாம், உஜ்ஜீவிக்கும்படியாக. (வாழ) "ஸ்ரீமதே ராமாநுஜாய ந:" என்றபடி. (நெஞ்சே) ஒரு மஹாநிதி லாபத்தாலே அந்தரங்கராயிருப்பார்க்குச் சொல்லுவர் லௌகிகர், அப்படியே தமக்கு அந்தரங்கமான மநஸ்ஸை ஸேவித்துத் தாம் பெற்ற பேற்றைச் சொல்லுவதாக ஸம்போதிக்கிறார்.

விளக்கம் – (நாம் வாழ) - நான் ஒருவன் அவருடைய திருவடிகளைப் பிடித்தால் போதுமானது, அதன் காரணமாக எனது பரம்பரை முழுவதும் கரையேறும்படியாக. (வாழ) "ஸ்ரீமதே ராமாநுஜாய நம:" என்று கூறியபடி. (நெஞ்சே) – இந்த உலகில் செல்வங்களை தான் அடைந்தது எப்படி என்பது குறித்து தனக்கு நெருக்கமானவர்களிடம் சிலர் உரைப்பர்; அதே போன்று இவர் தனது நெருக்கமான மனதிடம், தான் பெற்ற பேற்றை உரைப்பதாகக் கூறுகிறார்.

வ்யாக்யானம் - (சொல்லுவோமவன் நாமங்களே) நாமிருவருங்கூடி அவர் திருநாமங்களைச் சொல்லுவோம். "வாசாதர்மவாப்நுஹி" என்கிறார். ஒருக்தி மாத்ரத்தாலே ப்ராப்ய ப்ராபகங்க ளிரண்டும் தர்மபூதமான சரணாரவிந்தத்திலே அத்திருநாமந்தானே நம்மைச் சேர்க்கும். ரஸ்யமன பதார்த்தம் லபித்தால் அந்யோந்யம் ரஸித்துக் கொண்டு அநுபவிக்கக் கடவோமென்றபடி. (அவன் நாமங்களே) – "தேவுமற்றறியேன்" என்று அநந்யபரராகக் கொண்டு அவருடைய திருநாமங்களைச் சொல்லுவோம். த்ரிவித

காரணங்களால் இல்லையாகிலும் நாமஸங்கீர்த்தநாம்ர்தமே யமையும். "குரோர்நாம ஸதா ஜபேத்" என்னக்கடவதிறே. (நெஞ்சே சொல்லுவோம்) என்றது, தமக்கு உபகரித்த உபாகாரத்தை யநுஸந்தித்து சேதந ஸமதியாகச் சொல்லுகிறார். "ந சேத் ராமாநுஜேத் யேஷா சதுரா சதுரக்ஷரீ; காமவஸ்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச:" என்றானிறே ஆழ்வான். "வேதமொரு நான்கி னுட்பொதிந்த மெய்ப்பொருளும் கோதில் மநு முதல் கூறுவதும், தீதில், சரணாகதி தந்த தன்னிறைவன்றாளே, அரணாகு மென்னுமது" என்று அருளாளப்பெருமாளெம்பெருமானார் அருளிச்செய்தாரிறே. "பூமகள் கோன் தென்னரங்கன் பூங்கழற்குப் பாதுகமாயத் தாமகிழுஞ் செல்வச்சடகோபர், தேமலர்த்தாட்கு, ஏய்ந்தினிய பாதுகமாமெந்தை யிராமாநுசனை, வாய்ந்தெனது நெஞ்சமே வாழ்" என்று ஜீயருமருளிச்செய்தது.

விளக்கம் - (சொல்லுவோமவன் நாமங்களே) - நானும், எனது நெஞ்சமாகிய நீயும் சேர்ந்து எம்பெருமானாருடைய திருநாமங்களை உரைப்போமாக. இராமாயணம் ஸுந்தர காண்டம் (39-10) – வாசாதர்மவாப்நுஹி - வாக்கினால் தர்மம் செய்த புண்ணியம் அடைவாய் - என்பது போன்று உரைக்கிறார். அடையப்படும் இலக்கு, அதற்கான உபாயம் என்ற இரண்டும் ஒன்றாக உள்ளதான உடையவரின் தாமரை போன்ற திருவடிகளை அவருடைய திருநாமம் என்பது உக்தி போன்று செயலாற்றி நம்மைக் கொண்டு சேர்க்கும். அதன் பின்னர் அந்தத் திருவடிகளும் நாமுமாகச் சேர்ந்து பரஸ்பரம் அனுபவிப்போமாக. (அவன் நாமங்களே) – கண்ணிநுண்சிறுத்தாம்பு – தேவுமற்றறியேன் - என்று கூறுவதற்கு ஏற்ப மற்ற எதனையும் நாடாமல் அவருடைய திருநாமங்களை மட்டுமே உரைப்போமாக. (நெஞ்சே சொல்லுவோம்) - தனக்கு உதவி செய்த உதவியை எண்ணியபடி உரைக்கிறார். கூரத்தாழ்வான் – ந சேத் ராமாநுஜேத் யேஷா சதுரா சதுரக்ஷரீ; காமவஸ்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச: - "ராமாநுஜா" என்னும் நான்கு எழுத்துள்ள உடையவர் இல்லை என்றால், "நாராயணா" என்னும் நான்கு எழுத்துள்ளவனை நம்மால் அடைய இயலாது போயிருக்கும் - என்று கூறினார் அல்லவோ? ஞானஸாரத்தில் (31) – வேதமொரு நான்கி னுட்பொதிந்த மெய்ப்பொருளும் கோதில் மநு முதல் கூறுவதும், தீதில், சரணாகதி தந்த தன்னிறைவன்றாளே, அரணாகு மென்னுமது – தோஷம் இல்லாத சரணாகதியைத் தனக்கு உபதேசித்த தனது ஆசார்யனுடைய திருவடிகளே தஞ்சமாகும் என்றுள்ள விஷயம் நான்கு வேதங்களில் பொதிந்து கிட்டும் உண்மையான பொருளாகும் - என்று அருளாளப்பெருமாள்

எம்பெருமானார் அருளிச்செய்தது காண்க. ஆர்த்திப்ரபந்தத்தில் (10) - பூமகள் கோன் தென்னரங்கன் பூங்கழற்குப் பாதுகமாயத் தாமகிழுஞ் செல்வச்சடகோபர், தேமலர்த்தாட்கு, ஏய்ந்தினிய பாதுகமாமெந்தை யிராமாநுசனை, வாய்ந்தெனது நெஞ்சமே வாழ் - தாமரை மலரின் இனிமை என்பதே ஒரு வடிவு கொண்டாற்போல் உள்ள ஸ்ரீரங்கநாச்சியாரின் நாயகனாக உள்ள பெரியபெருமாளின் திருவடிகளுக்குப் பாதுகைகளாக நம்மாழ்வார் உள்ளார். இப்படியாக உள்ளதை நம்மாழ்வார் பெரும்பேறு என்று கருதி, அவ்விதம் இருந்து, ஆனந்தம் கொள்கிறார். இத்தகைய நம்மாழ்வாரின் மகரந்தம் பொருந்திய அழகான மலர் போன்ற திருவடிகளின் நிலைகளாக எனது தந்தையான எம்பெருமானார் உள்ளார். இப்படிப்பட்ட எம்பெருமானாருடன் தொடர்பு ஏற்படுத்தியபடி, எனது நெஞ்சமே! நீ வாழ்வாயாக - என்று ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச்செய்தது காண்க.

2. கள்ளார் பொழில் தென் அரங்கன் கமலப் பதங்கள் நெஞ்சில்
கொள்ளா மனிசரை நீங்கிக் குறையல் பிரான் அடிக்கீழ்
விள்ளாத அன்பன் இராமானுசன் மிக்க சீலம் அல்லால்
உள்ளாது என் நெஞ்சு ஒன்றறியேன் எனக்கு உற்ற பேரியல்வே.

பொருள் – தேன் வழியும் சோலைகளால் சூழப்பட்ட அழகான திருவரங்கத்தில், அந்த உயர்ந்த திவ்யதேசம் மூலம் மட்டுமே தனது பெருமைகள் அனைத்தும் வெளிப்படும்படியாக அழகியமணவாளன் சயனித்துள்ளான். தாமரைமலர் போன்ற அழகும் செம்மையும் கொண்ட அவனது திருவடிகளைத் தங்கள் மனதில் நிலை நிறுத்தாமல் உள்ளவர்களும் இந்த உலகில் உண்டு. கிடைத்தற்கரிய மனிதப் பிறவி கிட்டியும், அதற்கு ஏற்ற பாக்கியம் பெறாத இந்த மனிதர்களை (பெரியபெருமாளின் திருவடிகளைத் தங்கள் நெஞ்சத்தில் எண்ணாதவர்களை), நான் விலக்க வேண்டும். திருக்குறையலூர் என்னும் திவ்யதேசத்தில் அவதரித்த திருமங்கையாழ்வாரின் திருவடிகளின் கீழே, எப்போதும் அகலாதபடி பக்தியுடன் இருப்பவர் எம்பெருமானார் ஆவார். அவருடைய மிகவும் உயர்ந்த குணங்கள் தவிர வேறு எதனையும் என் மனம் சிந்திப்பதில்லை. மிகவும் தாழ்ந்தவனாகிய என் போன்றவனுக்கு இத்தகைய உயர்ந்த நிலை ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்று அறியமுடியவில்லை.

அவதாரிகை - கீழிற்பாட்டில், "நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே" என்று தம்முடைய மநஸ்ஸோடே கூடி உபதேசித்தவாறே மநஸ்ஸானது அவருடைய

சீலகுணத்திலே ஆழங்கால்பட்டு, "அநந்யாஸ்சிந்தயந் தோமாம்" என்கிறபடியே அவர் திருவடிகளை அநுபவித்துக்கொண்டு தத்வ்யதிரிக்தமானவறை விரும்பாதே யிருந்தது, இதென்ன ஆச்சர்யமென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே" என்று தனது மனதிடம் உபதேசித்தவுடன், அந்த மனம் இராமாநுசரின் சீல குணத்தில் ஈடுபட்டு நின்றது; கீதையில் (9-22) – அநந்யாஸ்சிந்தயந் தோமாம் - வேறு எதனிலும் நாட்டம் இல்லாமல் – என்று கூறுவதற்கு ஏற்ப அவருடைய திருவடிகளை அனுபவித்தபடி, அதனைத் தவிர உள்ள மற்ற எதனையும் விரும்பாமல் இருந்தது; இது என்ன வியப்பு என்கிறார்.

வ்யாக்யானம் - (கள்ளார்பொழில்) "மதுவிருந்தொழுகின மாமலரெல்லாம் – கொழுங்கொடி முல்லையின் கொழுமலரணவிக் கூர்ந்தது, குணதிசை மாருதமிதுவோ, எழுந்தன மலரணைப் பள்ளிகொண்டன்னமீர்பனி நனைந்த தமிருஞ் சிறகுதறி - பைம்பொழில் கமுகின் மடலிடைக் கீறி வண்பாளைகள் நாற வைகறை கூர்ந்தது மாருதமிதுவோ" என்றும், "வான்றிகழுஞ்சோலை மதிளரங்கர்" என்றும், "பூகீ கண்டத்வயஸ ஸரஸ ஸ்நிக்த நீரோபகண்டாம் ஆவிர்மோத ஸ்திமித ஸகுநாநூதித ப்ரஹ்மகோஷாம்" என்றும் சொல்லுகிறபடியே மதுஸ்யந்தியான புஷ்பவிசேஷங்களாலே வ்யாப்த்தங்களான உத்யாநங்களாலே சூழப்பட்ட.

விளக்கம் - (கள்ளார்பொழில்) - திருப்பள்ளியெழுச்சி (1) - மதுவிருந்தொழுகின மாமலரெல்லாம் – கொழுங்கொடி முல்லையின் கொழுமலணவிக் கூர்ந்தது, குணதிசை மாருதமிதுவோ, எழுந்தன மலரணைப் பள்ளிகொண்டன்னம் ஈர்பனி நனைந்த தம் இருஞ் சிறகு உதறி பைம்பொழில் கமுகின் மடலிடைக் கீறி வண்பாளைகள் நாற வைகறை கூர்ந்தது மாருதமிதுவோ- என்றும், ஸ்வாமி பராசரபட்டர் தான் அருளிச்செய்த தனியனில் – வான்றிகழுஞ்சோலை மதிளரங்கர் - என்றும், ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரத்தில் (5) – பூகீ கண்டத்வயஸ ஸரஸ ஸ்நிக்த நீரோபகண்டாம் ஆவிர்மோத ஸ்திமித ஸகுநாநூதித ப்ரஹ்மகோஷாம் - திருவரங்கம் நீர் நிறைந்த காவேரியுடன் கூடியதாகவும், மனதைக் கவரும்விதம் மரங்கள் நிறைந்தும் உள்ளது. அங்குள்ள பறவைகள் அனைத்தும்

வேதகோஷத்தை ஒத்த சப்தத்தை எழுப்பியபடி உள்ளன - என்றும் கூறுவதற்கு ஏற்ப மது நிறைந்த மலர்களால் வியாபிக்கப்பட்டதான நந்தவனங்களால் சூழப்பட்ட.

வ்யாக்யானம் - (தென்னரங்கன்) அத்தாலே தர்சநீயமான திருவரங்கமே தனக்கு நிரூபகமாம்படி நித்யவாஸம் பண்ணுகிற ஸ்வாமியுடைய திருப்பதியென்றபடி. இவ்விடத்துக்கு இது முக்யமான திருநாமங்காணும். (கமலப்பதங்கள்) கமலப்பதம் தீர்த்தவாசகமாய் – பாவநமான வென்னுதல்; ஸம்ஸாரதாப தப்தனுடைய ச்ரமஹரமான வென்னுதல். பாதக்கமலம் என்னாதே முந்துற முன்னம் "கமலம்" என்றது - ஸர்வேச்வரன் திருவடிகளை ஸேவிக்கும்போது பாவநத்வாதிகளுக்கு முன்னே போக்யதையைக் கண்டு முற்றூட்டாக வநுபவித்தவராகையாலே. (நெஞ்சில் கொள்ளா மனிசரை) "விசித்ரா தேஹ ஸம்பத்தி ரீச்வராய நிவேதிதும் பூர்வமேவ க்ர்தாப்ரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா" என்கிறபடியே அலப்யலாபமாக பகவச்சரண கமலபரிசரணத்துக்கு இட்டுப்பிறந்த மநுஷ்ய தேஹத்தைப் பெற்றும் திருவடிகளை நெஞ்சிலே கொள்ளாதே யிருக்கிற கர்ப்ப நிர்ப்பாக்யர் கோஷ்டியில் நின்றும், (நீங்கி) அகன்று. "காதா தாதாகதாநாம் களதி கமநிகா காபிலீ க்வாபி லீநா க்ஷீணா காணாத வாணீ த்ருஹிண ஹர கிர: ஸௌரபம் நாரபந்தே க்ஷாமா கௌமாரில உக்தி: ஜகதி குருமதம் கௌரவாத் தூரவாந்தம் கா சங்கா சங்கர ஆதே: பஜதி யதி பதௌ பத்ர வேதீம் த்ரிவேதீம்" என்று ஸர்வரும் ச்லாகிக்கும்படி பாஹ்யகுத்ர்ஷ்டிகளை பராஜிதமாகப் பண்ணுவித்து.

விளக்கம் – (தென்னரங்கன்) - அதன் காரணமாகக் காண்பவர்களுடைய களைப்பை நீக்குவதான திருவரங்கம் என்பதே தன்னை அடையாளம் காட்டும்படி எப்போதும் கண்வளர்கின்ற ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யதேசம். இங்கு இது முக்கியமான திருநாமம். (கமலப்பதங்கள்) கமலப்பதம் என்பது நீரைக் குறிப்பதாக உள்ளது; அதாவது தூய்மையான என்று கருத்து. ஸம்ஸார துன்பத்தில் சிக்கித் தவிப்பவர்களுடைய சிரமங்களைத் தீர்க்கும் இடம் என்று கருத்து. "பாதக்கமலம்" என்று கூறாமல் "கமலம்" என்ற பதத்தை ஏன் முதலில் கூறினார்? ஸர்வேச்வரனுடைய திருவடிகளை வணங்கி நிற்கும்போது அதனுடைய தூய்மையான தன்மை முதலானவற்றை அனுபவிப்பதற்கு முன்பாக அதன் இனிமையை அனுபவிப்பததால் இவ்விதம் உரைக்கிறார். (நெஞ்சில் கொள்ளா மனிசரை) – ஸ்ரீவிஷ்ணுதத்வம் – விசித்ரா தேஹ ஸம்பத்தி ரீச்வராய நிவேதிதும் பூர்வமேவ க்ர்தாப்ரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா - கைகால் போன்ற அவயவங்களுடன் கூடிய விசித்ரமான இந்தச் சரீரம் ஸர்வேச்வரனை ஆராதித்தபடி இருப்பதற்காகவே முன்பு

படைக்கப்பட்டு தொடர்ந்து இருந்து வருகிறது - என்பதற்கு ஏற்ப, கிட்டுவதற்கு மிகவும் எளியதாக உள்ள ஸர்வேச்வரனுடைய திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்வதற்காகவே கிட்டப்பெற்ற மனித உடலை அடைந்த பின்னரும், அந்தத் திருவடிகளை மனதில் நிலைநிறுத்தாமல் உள்ளவர்களான கர்ப்பத்திலேயே பாக்கியம் இழந்தவர்களுடைய கூட்டத்தில் இருந்து விலகி. (நீங்கி) – அகன்று சென்று. யதிராஜ ஸப்ததி (70) - காதா தாதாகதாநாம் களதி கமநிகா காபிலீ க்வாபி லீநா க்ஷீணா காணாத வாணீ த்ருஹிண ஹர கிர: ஸௌரபம் நாரபந்தே க்ஷாமா கௌமாரில உக்தி: ஜகதி குருமதம் கௌரவாத் தூரவாந்தம் கா சங்கா சங்கர ஆதே: பஜதி யதி பதௌ பத்ர வேதீம் த்ரிவேதீம் - மூன்று வேதங்கள் மூலம் அமைக்கப்பட்ட ஸிம்ஹாஸனத்தை அடைந்து அதில் யதிராஜர் எழுந்தருளினார். உடனே நிகழ்ந்தது என்ன? பௌத்தர்களின் வாதம் உடனே நழுவியது. கபிலர் உபதேசித்த மார்க்கம் எங்கோ சென்று பதுங்கியது. காணாதரின் உபதேசம் மறைந்தது. நான்முகன், சிவன் ஆகியோரின் மதங்கள் நறுமணம் இழந்தன. குமாரிலபட்டரின் வாதம் தோற்றது. பிரபாகரரின் மதம் கற்பனை அதிகமாக உள்ளதென்று விலக்கப்பட்டது. சங்கரர் போன்றோர் வாதமும் கண்டிக்கப்பட்டதைக் கூற வேண்டுமா? – என்று கூறுவதற்கு ஏற்ப, வேதங்களுக்கு முரணாக பொருள் உரைக்கின்றவர்களை அனைவரும் போற்றும்படியாக வென்று.

வ்யாக்யானம் - (குறையல்பிரான்) திருக்குறையலூரிலே யவதரித்து, திவ்ய ப்ரபந்த நிர்மாணத்தாலும் திருவத்யயநத்துக்கு ஏகாதசியிலே திருநாள் நடப்பித்தபடியாலும், அவ்விடத்தில் பெருமாளுக்கரணாகத் திருமதிளை நிர்மாணம் பண்ணி வைத்தபடியாலும், ருத்ர பக்ஷபாதிகளான குத்ர்ஷ்டிகளோடே தர்க்கித்து அவர்களை ஜயித்து அவர்களாலே பழிக்கப்பட்ட திவ்யதேசங்களை நிர்வஹித்தபடியாலும், இப்படிகளாலே உபகாரகரான திருமங்கையாழ்வாருடைய. இவ்விடத்திலே இன்னமொரு யோஜனையுண்டு - (குறையல்பிரான்) “குறைவொன்றுமில்லாத கோவிந்தா” என்கிறபடியே ஹேய ப்ரத்யநீகனான கோவிந்தன். கோவர்த்தநோத்தரணம் பண்ணினபோது இந்த்ரன் கோவிந்தாபிஷேகம் பண்ணினவாறே கோகோபீஜநங்களை ரக்ஷித்த உபகாரகன். அந்த அவதாரத்திலே, பூதநா சகர யமளார்ஜுநாரிஷ்ட ப்ரலம்ப தேநுக காளிய கேசீ குவலயாபீட சாணூர கௌஸல கம்ஸாதிகளை நிரஸித்து ஸ்வாச்ரிதர்களான பாண்டவர்களுக்கு தௌத்ய ஸாரத்யங்ளைப் பண்ணி, “ந த்வேவாஹம்” என்று தொடங்கி, “மா சுச:” என்னுமளவும் தத்வோபதேசம்பண்ணியும், இப்படி நிகிலமநுஜமநோநயநஹாரி திவ்ய சேஷ்டிதங்களைப் பண்ணின உபாகாரகன். இதில் சரமச்லோகத்தை உபதேசிக்கை உபகாரத்திலே ப்ரதாநம். இப்படி ஒரு அர்த்த விசேஷம் தோன்றினாலும், நம்மாசார்யர்கள்

திருமங்கைமன்னன் விஷயமாக அருளிச்செய்கையாலே பேசிற்றே பேசுகையே அவர்களுக் கேற்றமென்று முதல் சொன்ன பொருளே ஸங்கதமாகக்கடவது. (அடிக்கீழ்) திருமங்கையாழ்வாருடைய திருவடிகளின் கீழே.

விளக்கம் – (குறையல்பிரான்) - திருக்குறையலூரில் அவதரித்து, ஆறுவிதமான திவ்ய ப்ரபந்தங்களை நிலைநாட்டியதாலும், ஸ்ரீவைகுண்ட ஏகாதசித் திருநாளை ஸ்ரீரங்கத்தில் நடத்தி வைத்ததாலும், இங்குள்ள திருவரங்கனுக்கு அரணாக மதில்களைக் கட்டியதாலும், ருத்ரன் போன்ற பல மதங்களைச் சார்ந்தவர்களுடன் வாதம் செய்து அவர்களை வென்று அவர்கள் தரக்குறைவாகப் பேசிய திவ்யதேசங்களை நிர்வஹித்ததாலும் என்று இப்படிப் பல உபகாரங்கள் செய்த திருமங்கையாழ்வாருடைய. இங்கு வேறு ஒரு பொருளும் உரைக்கலாம். (குறையல்பிரான்) - திருப்பாவை (28) - குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா – என்று கூறுவதற்கு ஏற்ப தாழ்வுகளுக்கு எதிர்தட்டாக உள்ள கோவிந்தன். கோவர்த்தன பர்வதத்தை எடுத்து நின்றபோது இந்திரனால் கோவிந்தன் என்று கொண்டாடப்பட்டு பசுக்களையும் ஆயர்களையும் காப்பாற்றி உதவியவன். அந்த க்ருஷ்ணாவதாரத்தில் பூதனை, சகடாஸுரன், யமளார்ஜுனர்கள், அரிஷ்டன், ப்ரலம்பன், தேனுகன், காளியன், கேசி, குவலாபீடம், சாணுரன், கௌஸலன், கம்சன் போன்ற பலரையும் வதைத்தான்; தன்னை அண்டி நின்ற பாண்டவர்களுக்காகத் தூது செல்லுதல், தேர் ஓட்டுதல் போன்றவற்றைச் செய்தான். கீதையில் (2-12) – ந த்வேவாஹம் – என்று தொடங்கி, (18-66) – மாசுச: - என்பது முடிய உள்ள உபதேசங்கள் செய்தான்; இப்படியாக அனைத்து உலகங்களும் எப்போதும் சிந்தித்தபடி அவர்களுடைய மனம் கவரும் விதம் திவ்யமான லீலைகள் செய்து உதவியவன். இந்த ஒரு பொருளும் உரைக்கலாம் என்றுள்ளபோதிலும், நம்முடைய பூர்வாசர்யார்கள் இந்தப் பதத்தை திருமங்கையாழ்வார் குறித்தே அருளிச் செய்த காரணத்தால், அவர்கள் உரைத்தபடி உரைப்பதே அவர்களுக்குப் பெருமை என்று கருதி முதலில் கூறப்பட்ட பொருளே உசிதமானது என்று கொள்க. (அடிக்கீழ்) – இப்படிபட்ட திருமங்கையாழ்வாருடைய திருவடிகளின் கீழ்.

வ்யாக்யானம் – (விள்ளாதவன்பன்) இவ்வாழ்வார் ப்ரதமபர்வ நிஷ்டராகையாலே, “அணிபொழில் திருவரங்கத்தம்மானை” ப்ரார்த்தித்துக் கொண்டிறே யிருப்பர்; இவ்வெம்பெருமானார் சரம பர்வத்திலே ஊற்றமுடையவராகையாலே அவ்வாழ்வாருடைய திருவடிகளின் கீழ் ஒருக்காலும் விடாதே ஸக்தமான பக்தியை யுடையராயிருப்பர். விள்ளுதல் – நீங்குதல், அன்பு – பக்தி. (இராமாநுசன்)

பூர்வாவதாரத்திலே ராமாநுவர்த்தநம் பண்ணின வாஸனை இப்போதும் அநுவர்த்திகையாலே அதுக்கு சரமபர்வமானவிதிலே ஈடுபட்டார்காணும். (மிக்க சீலமல்லால்) தாம் மஹாநுபாவராயிருந்து வைத்தும் என்போலாம் மந்தமதிகளோடே புரையறக் கலந்து பரிமாறின சீலகுணம் ஒன்றிலுமே ஈடுபட்டு. அதொழிய வேறொன்றிலும் போகமாட்டாது. உள்ளுதல் – சிந்தித்தல். (என்னெஞ்சு) என் மநஸ்ஸு. என்னாலே உபதேசிக்கப்பட்ட நெஞ்சு என்னும்படியாய்த்து.

விளக்கம் - (விள்ளாதவன்பன்) - இந்தத் திருமங்கையாழ்வார் பக்தி மற்றும் ப்ரபத்தியின் தொடக்கநிலையில் எப்போதும் உள்ளதால் பெரியதிருமொழி (5-8-1) – அணிபொழில் திருவரங்கத்தம்மான் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனை மட்டுமே எப்போதும் தொழுதபடி இருப்பார். ஆனால் எம்பெருமானார் இறுதி நிலையில் உள்ளதால், ஸர்வேச்வரனுடைய அடியார்கள் விஷயத்தில் நிலை நின்று, ஆழ்வாருடைய திருவடிகளை எப்போதும் விடாமல், உறுதியான பக்தி கொண்டவராக இருப்பார். விள்ளுதல் என்றால் விலகுதல், அன்பு என்றால் பக்தி. (இராமாநுசன்) – முன்பு லக்ஷ்மணனாக அவதரித்தபோது எப்போதும் இராமனை மட்டுமே கொண்டாடியபடி இருந்தார்; அந்த வாஸனை இப்போதும் தொடர்வதால் அந்த பக்தியின் இறுதி நிலையான அடியார்களைக் கொண்டாடுவதால் ஆழ்வாரை அண்டி நின்றார். (மிக்க சீலமல்லால்) - எம்பெருமானார் அனைத்தும் அறிந்தவராக பலவிதத்திலும் உயர்ந்தவராக உள்ளபோதிலும் என்னைப் போன்ற தாழ்ந்த புத்தி கொண்டவர்களுடன் நீருடன் நீர் பிரிக்க முடியாதது போன்று கலந்து நின்று காண்பித்த சீல குணம் என்பதில் மட்டுமே ஈடுபட்டு, அதனை அல்லாமல் வேறு எதிலும் நாட்டம் இல்லாதபடி நின்று. உள்ளுதல் என்றால் சிந்தித்தல். (என்னெஞ்சு) – எனது மனம். என்னால் உபதேசம் செய்யப்பட்ட எனது மனம்.

வ்யாக்யானம் - (ஒன்றறியேனெனக்குற்ற பேரியல்லவே) என்னவாச்சர்யம், இப்படி ப்ரவணமாகைக்கு விரகொன்று மறிகிலேன். (எனக்கு) “ஜன்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோத்யாந ஸமாதிபிர் நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ண பக்தி ப்ரஜாயதே ” என்றாப்போலே பஹுஜந்மங்கள் தன்னில் தபோஜ்ஞாந ஸமாதிகளைப் பண்ணவேண்டியிருக்க, அங்ஙனன்றியே, (சொல்லுவோ மவன் நாமங்களே) என்று அத்யவஸாய மாத்ரம் பண்ணினபடி எனக்கு, உற்ற - ஸித்தித்த (பேரியல்வே) “நார்வாந்தி

ஸாரநஸ்தஸ்ய கவாம்கோடி தமீமபி" ஸமஸ்தோபாயங்களைக் காட்டிலும் பெரியதாய் விலக்ஷணமான உபாய விசேஷம்.

விளக்கம் - (ஒன்றறியேனெனக்குற்ற பேரியல்லவே) - என்ன ஒரு வியப்பு. இவ்விதம் அவரிடம் வசப்பட்டு நிற்பதற்கான காரணம் ஏதும் நான் அறியமாட்டேன். (எனக்கு) – ஜன்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோத்யாந ஸமாதிபிர் நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ண பக்தி ப்ரஜாயதே - ஆயிரக்கணக்கான வருடங்களில் செய்த தவம், த்யானம் போன்ற காரணத்தால் மட்டுமே ஒருவனுக்கு க்ருஷ்ணனிடம் ஈடுபாடு ஏற்படும் – என்பதற்கு ஏற்ப, பல பிறவிகள் தவம், த்யானம் போன்றவற்றைச் செய்தால் மட்டுமே பக்தி ஏற்படும் என்றுள்ளபோது, எனக்கு அவ்விதம் அல்லாமல், (சொல்லுவோ மவன் நாமங்களே) - அவருடைய திருநாமங்கள் மட்டுமே எப்போதும் உரைக்கும்படியாக எனக்குக் கிட்டிய. (பேரியல்வே) – நார்வாந்தி ஸாரநஸ்தஸ்ய கவாம்கோடி தமீமபி - ப்ரபத்தி செய்தவனுடைய மேன்மையில் கோடியில் ஒரு பங்கு கூட மற்ற உபாயங்களைக் கைக்கொண்டவர்கள் பெறுவதற்குத் தகுதி அற்றவர்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப, மற்ற அனைத்து உபாயங்களைக் காட்டிலும் மிகவும் பெரிய மேன்மையான உபாயம்.

3. பேரியல் நெஞ்சே அடி பணிந்தேன் உன்னைப் பேய்ப்பிறவி
பூரியரோடுள்ள சுற்றம் புலர்த்திப் பொருவரும் சீர்
ஆரியன் செம்மை இராமானுச முனிக்கு அன்பு செய்யும்
சீரிய பேறு உடையார் அடிக்கீழ் என்னைச் சேர்த்ததற்கே.

பொருள் – இந்த உலகில் உள்ள மனிதர்களாக இருந்தாலும் ஒரு சிலர் – அசுர வம்ஸத்தில் பிறவி எடுத்து அறிவற்றுப் போனவர்களுடன் தொடர்பு கொண்டும், அஹங்காரம் போன்றவை நிரம்பியும் உள்ளனர். அவர்களது தொடர்பை, எனது நெஞ்சமே! நீ நீக்கிக் கொண்டாய். மேலும் நீ (நெஞ்சத்தை நீ என்றார்) செய்த உபகாரம் என்ன? "இதுதான் இவரது குணம்" என்று எல்லைப்படுத்திச் சொல்ல இயலாத அளவிற்குத் திருக்கல்யாண குணங்கள் கொண்டவரும்; அனைத்துச் சாஸ்த்ரங்களையும் அறிந்தவரும்; இந்த உலகினருக்கு மட்டும் அல்லாது திருவேங்கடமுடையானுக்கே சங்கு-சக்கரம் அளித்ததால் அவனுக்கும் ஆசார்யனாக உள்ளவரும்; தன்னை அண்டியவர்களின் குற்றத்தைப் பார்த்து அவர்களைக் கைவிடாமல், அவர்கள் நிலைக்குத் தான் இறங்கிவந்து அருளும் தன்மை

கொண்டவரும் ஆகிய எம்பெருமானாரிடம் மிகுந்த அன்பும் பக்தியும் வைக்கும் உயர்ந்த பேறு பெற்றவர்கள் பலர் உண்டு. அவர்களது திருவடிகளின் கீழ் என்னை நீ (நெஞ்சம்) சேர்த்து வைத்தாய். எனது நெஞ்சமே! இத்தகைய உயர்ந்த ஸ்வபாவம் உள்ள உன்னை நான் வணங்குவதே உனக்கு நான் செய்யும் கைம்மாறாகும்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டில் தம்முடைய நெஞ்சானது எம்பெருமானாருடைய சீலகுணத்திலே ஈடுபட்ட மாத்ரமின்றிக்கே இப்படியநுபவிக்க அநுபவிக்க அபிநிவேசம் கரை புரண்டு என்னைக் கொண்டு போய்த் ததீயருடைய திருவடிகளின் கீழே சேர்த்தது, இந்த மஹோபகாரத்துக்குத் தக்க ஸமர்ப்பணம் தம்பக்கல் ஒன்றுமில்லையென்று நெஞ்சினாருடைய காலிலே விழுகிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் தன்னுடைய நெஞ்சத்தை எம்பெருமானாருடைய சீல குணத்தில் ஈடுபடும்படி உரைத்தார். அதுவும் அப்படியே செய்தது. அதன் காரணமாக அந்தக் குணத்தை அனுபவிக்க அனுபவிக்க, அந்த ஈடுபாடு கரைபுரண்டு ஓடத் தொடங்கியது. அந்த வெள்ளமானது தன்னை எம்பெருமானாருடைய அடியார்களின் திருவடிகளில் கொண்டு சேர்த்தது என்றும், அந்த மிகப்பெரிய உதவி செய்த நெஞ்சத்துக்கு அளக்கவல்ல ஈடான ஏதும் தம்மிடம் இல்லை என்றும் கூறி, தனது நெஞ்சத்தின் திருவடிகளில் விழுகிறார்.

வ்யாக்யானம் - (பேரியல் நெஞ்சே) பெரியஸ்வபாவத்தை யுடைய மநஸ்ஸே. முதலிலே எம்பெருமானாருடைய சீலகுணத்திலேயிழிந்து அதிலே அத்யபிநிவிஷ்டமாய் உன்னோட்டை ஸம்பந்தமே ஹேதுவாக என்னையும் ததீயபர்யந்தமாக அத்யவஸிப்பித்த ஸ்வபாவத்தையுடைய மநஸ்ஸே யென்கிறபடி. (பேய்ப்பிறவிப் பூரியரோடுள்ள சுற்றம் புலர்த்தி) அசுரவர்க்கத்திலே ஜநித்து நிஹீநரான மூடரோடுண்டான ஸம்பந்தத்தை ஸவாஸநமாகப் போக்கி "ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம்" என்று சொல்லப்பட்ட நீசருடைய ஸம்பந்தத்தை, "அத்யப்ரப்ருதி ஹே லோகா:! யூயம் யூயம் வயம் வயம்" என்னும்படி பண்ணுவித்து. "கூழாட்பட்டு நின்றீர்களை யெங்கள் குழுவினில் புகுதலொட்டோம்" என்னும்படியே பண்ணுவித்ததென்கிறபடி. (பேய்ப்பிறவி) தீதானபிறவி. பூரியர் - பொல்லாதவர்கள். புலத்தல் - நீக்குதல்.

விளக்கம் – (பேரியல் நெஞ்சே) – "பெருந்தன்மை என்னும் இயல்புள்ள எனது மனமே! முதலில் நீ எம்பெருமானாருடைய சீல குணத்தில் ஈடுபட்டாய். அந்த ஈடுபாடு காரணமாக, உனனுடன் எனக்கு உள்ள ஸம்பந்தத்தைக் காரணமாகக் கொண்டு என்னையும் எம்பெருமானாருடைய அடியார்களின் திருவடிகள்வரை கொண்டு நிறுத்தி மிகவும் பெரிய உதவி செய்தாய். இப்படிப்பட்ட எனது மனமே!", என்று கருத்து. (பேய்ப்பிறவிப் பூரியரோடுள்ள சுற்றம் புலர்த்தி) – அஸுர ஜன்மம் எடுத்துப் பிறந்து, தாழ்ந்தவர்களாகிய அறிவற்றவர்களுடனான எனக்குள்ள தொடர்பை விலக்கி. கீதையில் (16-20) - ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி மாமப்ராப்யைவ கௌந்தேய ததோ யாந்த்யதமாம் - அர்ஜுனா! அறிவற்றவர்கள் என்னை வந்து சேராமல் ஒவ்வொரு பிறவியிலும் அஸுர ஸ்வபாவத்துடன் கூடிய தாழ்ந்த பிறவியை அடைகிறார்கள். அதனைக் காட்டிலும் தாழ்ந்ததான கோரமான நரகங்களையும் அடைகிறார்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள தாழ்ந்தவர்களுடைய ஸம்பந்தத்தை, அத்யப்ரப்ருதி ஹே லோகா: யூயம் யூயம் வயம் வயம் நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகம் ச பரஸ்பரம் அர்த்தகாமபரா யூயம் நாராயணபரா வயம் வயம் து கிங்கரா விஷ்ணோ: யூயம் இந்த்ரிய கிங்கரா: - ஜனங்களே! இன்று முதல் நீங்கள் நீங்கள்தாம், நாங்கள் நாங்கள்தாம். எங்களுக்கும் உங்களுக்கும் எந்தவிதமான ஸம்பந்தமும் இல்லை. நீங்கள் பணத்திலும் சிற்றின்பத்திலும் அதிக ஆசை உடையவர்கள், நாங்கள் ஸ்ரீமந்நாராயணனிடத்தில் ஆசை உடையவர்கள். நீங்கள் உலகவிஷயம் மூலம் கிட்டும் இன்பத்தில் ஆசை உள்ளவர்கள் என்பதால் ஐம்புலன்களுக்கு வேலை செய்யும் வேலைக்காரர்கள் ஆவீர்கள், நாங்கள் எம்பெருமானுடைய வேலைக்காரர்கள் ஆவோம். ஆகையால் உங்களுடன் நாங்கள் சேர மாட்டோம். எங்கள் தன்மை வேறு, உங்கள் தன்மை வேறு – என்னும்படியாகச் செய்து. திருப்பல்லாண்டில் – கூழாட்பட்டு நின்றீர்களை யெங்கள் குழுவினில் புகுதலொட்டோம் - என்று கூறுவதற்கு ஏற்ப செய்து. (பேய்ப்பிறவி) – மிகவும் தீமையை அளிக்கவல்ல பிறவி. பூரியர் – பொல்லாதவர்கள். புலத்தல் என்றால் நீக்குதல்.

வ்யாக்யானம் - (பொருவருஞ்சீர்) "நமோ சிந்த்யாத்யுதாக்லிஷ்ட ஞான வைராக்ய ராசயே" என்கிறபடியே உபமாந ரஹிதமாகையாலே ஏவம் பூதமென்று நிரூபித்துச் சொல்ல வரிதாயிருக்கிற கல்யாணகுணங்களையுடையராய். (ஆரியன்) ஸகலசாஸ்த்ரபாரீணராய். "யதிராஜோ ஜகத்குரு:", "தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி நாந்யத்ர"

என்கிறபடியே இவ்விபூதியிலே யிருந்துள்ள ஸகலசேதநருக்கும் திருவேங்கட முடையானுக்கும் ஆசார்யராய். (தன்னாரியனுக்கு) என்று ஆர்ய பதத்தை ஆசார்ய பத ஸமாநார்த்தமாக ஜீயர் ப்ரயோகித்தருளினாரிறே. (செம்மை) தாம் ஸங்கல்பித்தபடியே அநுஷ்டித்தும் உபதேசித்தும் இப்படி கரண த்ரயஸாரூப்யத்தையுடையரான. "ஆசிநோதி ய: ஸாஸ்த்ரார்த்தம் ஆசரே ஸ்தாபயதி அபி ஸ்வயம் ஆசரதே யஸ்மாத் ஆசார்யஸ் தேந கீர்த்தித:" என்றிறே ஆசார்ய லக்ஷணமிருக்கும்படி.

விளக்கம் - ஸ்தோத்ரரத்னத்தில் (தொடக்கம்) - நமோ சிந்த்யாத்யுதாக்லிஷ்ட ஞான வைராக்ய ராசயே - எண்ண இயலாததும், ஆச்சர்யம் ஏற்படுத்தவல்லதும், கஷ்டம் இல்லாததும் ஆகிய ஞானம் மற்றும் வைராக்யம் என்னும் கும்பலை உடையவராகிய - என்று கூறுவதற்கு ஏற்ப உவமை கூற இயலாதபடியும், "இப்படிப்பட்டவை" என்று நிரூபித்து உரைக்க இயலாதபடியும் உள்ள திருக்கல்யானகுணங்களைக் கொண்டவரும். (ஆரியன்) அனைத்து சாஸ்த்ரங்களையும் எந்தவிதமான ஐயமும் இன்றி அறிந்தவரும். ஸ்ரீவைஷ்ணவ சமயாசார நிஷ்கர்ஷத்தில் - தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி நாந்யத்ர – ஆசார்யன் என்னும் பதத்தின் பொருள் எம்பெருமானாரின் மீது மிகவும் தெளிவாக காணப்படுகிறது - என்று கூறுவதற்கு ஏற்ப இந்த உலகத்தில் உள்ள அனைத்து உயிர்களுக்கும், திருவேங்கடமுடையானுக்குச் சங்கு மற்றும் சக்கரம் பொறித்த காரணத்தால் அவனுக்கும் ஆசார்யராக உள்ளவரும். (தன்) ஆரியன் என்ற பதத்தை ஆசார்யன் என்று பதத்திற்கு ஒத்த பொருள் கொண்டதாக ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தார். (செம்மை) - தான் ஸங்கல்பித்தபடியே ஆசாரங்களைக் கடைப்பிடித்தும், மற்றவர்களுக்கு உபதேசித்தும் செய்தவராகிய. ஆசிநோதி ய: ஸாஸ்த்ரார்த்தம் ஆசரே ஸ்தாபயதி அபி ஸ்வயம் ஆசரதே யஸ்மாத் ஆசார்யஸ் தேந கீர்த்தித: – எவன் சாஸ்திரத்தின் அர்த்தங்களை ஆராய்ந்து, பிறரை அந்த சாஸ்த்ரங்களின் விதிப்பிரகாரம் நடக்கப் பண்ணுகிறார்களோ, அது மட்டும் அல்லாமல் தானே அந்த வழிப்படி நடந்து காட்டுகிறானோ அவனே ஆசார்யன் எனப்படுகிறான் - என்று அல்லவோ ஓர் ஆசார்யனுடைய இலக்கணம் உள்ளது?

வ்யாக்யானம் - (இராமநுசமுனிக்கு) "புண்யாம்போஜ விகாஸாய பாபத்தாம் தக்ஸயாயச ஸ்ரீமான் ஆவிர பூத்பூமவ் ராமானுஜ திவாகர:" என்னும்படியான தம்முடைய அவதார

ப்ரயோஜநத்திலே எப்போதும் மநநம் பண்ணிக் கொண்டிருக்கிற எம்பெருமானார் விஷயத்திலே, (அன்பு செய்யுஞ் சீரிய பேறுடையார்) அத்யபிநிவிஷ்ட சித்தராய் அதுதானே விலக்ஷணமென்று அத்யவஸித்திருக்கும் ஆழ்வான் முதலான ததீயருடைய. (அடிக்கீழ்) திருவடிகளின் கீழ். (என்னைச் சேர்த்ததற்கே) என்னுடைய சிரஸ்ஸிலே அத்திருவடிகள் பூஷணமாம்படி. பூர்வகாலத்திலே சரமபர்வத்தினுடைய ப்ரபாவத்தை யறியாதே யிருக்கிற என்னை அமைத்து வைத்ததற்கே. தனக்கு நான் உபதேசிக்க வேண்டியிருக்கத் தானே யெனக்கு புருஷகாரமாய் என்னைக் கொண்டு போய் ததீயருடைய ஸ்ரீபாதத்திலே சேர்த்ததற்கு. இந்த மஹோபகாரத்துக்கு நான் எத்தை ப்ரத்யுபகாரமாகப் பண்ணுவது என்று ஆராய்ந்து பார்த்தால், "மம நாத யதஸ்தி யோஸ்ம்யஹம் ஸகலம் தத்தி தவைவ மாதவ:" என்றிருக்கச்செய்தே, "ப்ரஹ்மவித்யா ப்ரதாநஸ்ய தேவைரபி ந சக்யதே ப்ரதி ப்ரதாநமபி வா தத்யாத் யதா சக்தித ஆதராத்" என்றும், "ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத:" என்றும் சொல்லுகிறபடியிலே, (அடிபணிந்தேனுன்னை) உன்னுடைய திருவடிகளிலே ஆச்ரயித்தேன்; உனக்கொரு நமஸ்காரம் பண்ணுகிறே னென்றபடி. "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம்" என்று பெறாப் பேறாக ஜீயர் ப்ரார்த்தித்தருளின ததீயப்ராவண்யத்தைக் காணும் இவருக்கு இவருடைய மநஸ்ஸும் முதலிலே யுண்டாக்கிற்று.

விளக்கம் - (இராமநுசமுனிக்கு) - புண்யாம்போஜ விகாஸாய பாபத்தாம் தக்ஸயாயச ஸ்ரீமான் ஆவிர பூத்பூமவ் ராமானுஜ திவாகர: - இராமானுஜர் என்னும் சூர்யன் இப்பூவுலகத்திலே உதித்தது; சூரியன் உதித்தால் வெளி இருள் ஓடும்; ஆனால் இராமானுஜர் என்னும் சூரியன் உதித்ததால் அக இருளாகிற அஞ்ஞானம் விலகிப் போகிறது - என்று கூறுவதற்கு ஏற்ப, தான் இந்தப் பூமியில் வந்ததற்கான காரணத்தை எப்போதும் மறக்காமல் சிந்தித்தபடி உள்ள எம்பெருமானார். அவரைக் குறித்து, (அன்பு செய்யுஞ் சீரிய பேறுடையார்) - மிகுந்த ப்ரீதி உள்ளவராகவும், அந்த நிலை என்பதே மிகவும் உன்னதமான நிலை என்று எண்ணியவராகவும் உள்ள ஸ்வாமி கூரத்தாழ்வான் முதலான அடியார்களுடைய. (அடிக்கீழ்) - அவர்களுடைய திருவடிகளின் கீழ். (என்னைச் சேர்த்ததற்கே) - எனது தலைக்கு அந்தத் திருவடிகள் ஆபரணங்களாக விளங்கும் விதத்தில். முன்பு பகவத்விஷயத்தில் மட்டுமே ஈடுபட்டபடி இருந்த நான், அடிமைத்தனத்தின்

எல்லைநிலமான பாகவத கைங்கர்யம் என்றால் என்ன என்று அதன் மேன்மை அறியாமல் இருந்தபோது, அதில் என்னை ஈடுபடுத்தியதற்காக. எனது நெஞ்சமாகிய உனக்கு நான் உபதேசம் செய்ய வேண்டியதாயிருக்க, நீயே எனக்குக் கிட்டிய உயர்ந்த சிபாரிசு செய்பவனாக என்னை அடியார்களுடைய திருவடிகளில் கொண்டு சேர்த்தற்காக. இப்படிப்பட்ட உயர்ந்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன் என்று ஆராய்ந்து பார்த்தால், ஸ்தோத்ரத்னம் (53) – மம நாத யதஸ்தி யோஸ்ம்யஹம் ஸகலம் தத்தி தவைவ மாதவ: - மஹாலக்ஷ்மியின் நாயகனாகிய உனக்கு, "எனக்கு வசப்பட்டது" என்று எவற்றை எல்லாம் நான் எண்ணுகிறேனோ அவை அனைத்தும் உன் வசப்பட்டது என்றுள்ள புத்தியுடன் ஸமர்ப்பிக்கிறேன் என்று இருக்கவேண்டிய நான், சாண்டில்ய ஸ்ம்ருதி - ப்ரஹ்மவித்யா ப்ரதாநஸ்ய தேவைரபி ந சக்யதே ப்ரதி ப்ரதாநமபி வா தத்யாத் யதா சக்தித ஆதராத் – ப்ரஹ்மவித்யையை உபதேசித்த ஆசார்யனுக்கு எந்த அளவு கைம்மாறு செய்யவேண்டும் என்று தேவர்களுக்கும் கூற இயலாது – என்றும், இராமாயணம் யுத்தகாண்டம் (1-14) – ஏஷ ஸர்வஸ்ய பூதஸ்து பரிஷ்வங்கோ ஹநூமத: - இந்த நேரத்தில் நான் அனுமனைக் கட்டித் தழுவிக் கொள்ளப்போகிறேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, (அடிபணிந்தேனுன்னை) - எனது நெஞ்சமாகிய உனது திருவடிகளில் அண்டி நிற்கிறேன். உனக்கு நமஸ்காரம் செய்து வணங்குகிறேன். யதிராஜ விம்ஸதியில் (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் - என்பதற்கு ஏற்ப ஸ்வாமி மணவாளமாமுனிகள் தனக்குக் கிட்டாத பெரும் பேறாக எண்ணிய அடியார்களுடைய அன்பு என்பதை அல்லவோ இவருடைய மனம் இவருக்கு முதலில் ஏற்படுத்திக் கொடுத்தது!!

4. என்னைப் புவியிலொரு பொருளாக்கி மருள் சுரந்த
முன்னைப் பழைவினை வேரறுத் தூழிமுதல்வனையே
பன்னப் பணித்த விராமாநுசன் பரன்பாதமு மென்
சென்னித் தரிக்க வைத்தா னெனக்கேதும் சிதைவில்லையே

பொருள் – “இருள் தரு மா ஞாலம்” என்று கூறப்படும் இந்த உலகத்தில் ஒரு பொருட்டாகவே கருத இயலாதபடி நான் இருந்தேன். அப்படிப்பட்ட என்னை ப்ரஹ்மவித்துக்களில் உயர்ந்தவனாகவும், சிறந்த வஸ்து என்று அனைவரும் கூறும்படியாகவும் எம்பெருமானார் மாற்றினார். எனது அறியாமை காரணமாகப் பல காலமாகவும், இந்தப் பிறவியிலும் எண்ணற்ற பாவங்கள் சேர்ந்தன. அந்தக் கர்மவினைகளை முற்றிலுமாக வேருடன் அழித்தார். அனைத்துக் காலங்களிலும் நிலையாக நிற்கும் ஸர்வேச்வரனை மட்டுமே அனைவரும் உணர்ந்து கொண்டு வணங்கும்படியும், மற்ற தேவதைகளின் தொடர்பு நீங்கும்படியும் செய்தார். அனைவரும் விரும்பி அனுபவிக்கும்படியாக ஸ்ரீபாஷ்யமும் கீதாபாஷ்யமும் அருளிச்செய்த எம்பெருமானார், தனது தாமரைமலர் போன்ற திருவடிகளை என் தலை மீது வைத்து அருளவும் செய்தார். இத்தனைக்கும் பிறகு என்னிடம் குறை என்பது என்ன இருக்கப் போகிறது?

அவதாரிகை - இப்படி மூன்று பாட்டளவும் தம்முடைய அபிநிவேசாதிசயத்தைச் சொல்லினால் இது ஸ்வகதமாக வந்தது, அத்யந்த பாரதந்த்ர்யமான ஸ்வரூபத்துக்குச் சேருமோ, பரகதமாக வந்ததேயாகிலும் அதுக்கு ப்ரச்யுதி யில்லையோவென்ன அருளிச்செய்கிறார்.

விளக்கம் - இவ்விதம் மூன்று பாசுரங்கள் வரை தம்முடைய நெஞ்சம் இராமநுசரிடம் கொண்ட ஈடுபாடு காரணமாக அவருடைய திருவடிகளைப் பற்றியபடி இருந்ததை உரைத்தார். இவ்விதம் உரைப்பதைக் காணும்போது இந்த ஈடுபாடு என்பது இவருடைய நெஞ்சத்துக்குத் தானாகவே உண்டானது, இது எல்லை நிலமான அடியார்களுக்கு வசப்படுதல் அல்லது அவர்களால் ஈர்க்கப்படுதல் என்ற நிலையை விளக்குமோ என்ற சந்தேகம் எழலாம் (அல்லது ஸ்ரீவசனபூஷணத்தில் - ஆசார்யன் தன்னைப் பற்றும் பற்று, தான் ஆசார்யனைப் பற்றும் பற்று என்பதான இரண்டு நிலைகள் குறித்துக் கூறப்பட்டது; இவற்றில் இங்கு ஆசார்யனைத் தான் பற்றும் பற்றுதல் மட்டுமே இதுவரை கூறப்பட்டது; ஆசார்யன் தன்னைப் பற்றும் பற்றுதலே ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்றது என்பது கூறப்படவில்லையே என்று சந்தேகம் எழுவதாகவும் கொள்ளலாம்). இதற்கான விடையை இங்கு அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (என்னை) இத:பூர்வகாலத்திலே "ந நமேயம்" என்றிருந்தவென்னை. "அஸந்நேவ ஸபவதி" என்கிறபடியே ஒரு பொருளல்லாத வென்னை யென்றபடி. (புவியில்) இருள்தருமாஞாலத்திலே. (ஒரு பொருளாக்கி) "அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத சந்தமேனம் ததோ விது:" என்கிறபடியே ஒரு வஸ்துவாகப் பண்ணி. ப்ரஹ்மவித்துக்களிலே அத்விதீயனாகப் பண்ணி யென்றபடி. (மருள் சுரந்த முன்னைப் பழைவினை) "ஸம்ஸார ஸாகரம் கோரம் அநந்த க்லேசம் பாஜநம்" என்றும், "அவிவேக கந அந்த திங்முகே பஹுதா ஸந்த துக்கவர்ஷிணி" என்றும், "ஸம்ஸார மருகாந்தரே துர்வ்யாதி வ்யாக்ரபீஷணே விஷயக்ஷுத்ர குல்மாட்யே த்ருஷ்ணாபாதபசாலிநி" என்றும், "புத்ர தாரக்ருஹ க்ஷேத்ர ம்ருக த்ருஷ்ணாம்பு புஷ்கலே க்ருத்யாக்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தமிதஸ் தத" என்றும், "அஜஸ்ரம் ஜாத த்ருஷ்ணார்த்தம் அவஸந்நாங்கமக்ஷமம் க்ஷீண சக்தி பலாரோக்யம் கேவலம் க்லேச ஸம்ச்ரயம்" என்றும், "அநாதிகால ப்ரவ்ருத்த அநந்த க்ருத்ய கரண க்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசார ரூப நாநாவித அநந்த அபசாராந்" என்றும் சொல்லுகிறபடியே அநாத்யவித்யாகர்ம வாஸநா ருசி ப்ரக்ர்தி ஸம்பந்தாத்மகமாயிருந்துள்ள புண்யபாப ரூபமான கர்மங்களை. (வேரறுத்து) வேர் கிடந்தால் திரியட்டும் அங்குரித்து வளர்ந்து வருமென்று ஸமூலோந்மூலநமாகச் சேதித்து.

விளக்கம் – (என்னை) - இப்போது உள்ள காலத்தைக் காட்டிலும் முன்பிருந்த காலகட்டங்களில் இராமாயணம் யுத்த காண்டம் - ந நமேயம் - நான் வணங்கமாட்டேன் - என்று கூறுவதற்கு ஏற்றபடி இருந்த என்னை, தைத்திரீய உபநிஷத் – அஸந்நேவ ஸ பவதி - அஸத் என்பதான இல்லை என்ற பொருளாக மாறுகிறான் - என்று கூறுவதற்கு ஏற்ப "இவன் ஒரு பொருள்" என்று கூறுவதற்குத் தகுதியற்றுக் கிடந்த என்னை. (புவியில்) - அறியாமை என்னும் இருள் சூழ்ந்த இந்த உலகத்தில். (ஒரு பொருளாக்கி) - தைத்திரீய உபநிஷத் - அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத சந்தமேனம் ததோ விது: - ப்ரஹ்மம் உண்டு என்பவன் "இருக்கின்ற பொருள்" என்று கூறலாம்படி ஆகிறான் – என்று கூறுவதற்கு ஏற்ப "இவன் ஒரு பொருள்" என்று என்னை மாற்றி. ப்ரஹ்மத்தை அறிந்தவர்களில் இவன் போன்று வேறு ஒருவன் இல்லை என்று அனைவரும் புகழும்படி என்னை மாற்றி. (மருள் சுரந்த முன்னைப் பழைவினை) – ஜிதந்தே ஸ்தோத்ரம் (4) – ஸம்ஸார ஸாகரம் கோரம்

அநந்த க்லேசம் பாஜநம் – எண்ணற்ற துக்கங்களுக்குப் பிறப்பிடமாகவும், மிகவும் கொடியதாகவும் உள்ள ஸம்ஸார என்ற ஸமுத்திரத்தை – என்றும், ஸ்தோத்ர ரத்னம் (49) – அவிவேக கந அந்த திங்முகே பஹுதா ஸந்த துக்கவர்ஷிணி - விவேகம் அற்ற காரணத்தால் மேகங்களால் இருண்ட திசைகள் கொண்டதும், இடைவிடாமல் துக்கங்களை மழை போன்று பொழிவதும் ஆகிய ஸம்ஸாரம் – என்றும், தேவராஜ அஷ்டகம் (4, 5, 6) – ஸம்ஸார மருகாந்தரே துர்வ்யாதி வ்யாக்ரபீஷணே விஷயக்ஷுத்ர குல்மாட்யே த்ருஷ்ணாபாதபசாலிநி; புத்ர தாரக்ருஹ க்ஷேத்ர ம்ருக த்ருஷ்ணாம்பு புஷ்கலே க்ருத்யாக்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தமிதஸ் தத; அஜஸ்ரம் ஜாத த்ருஷ்ணார்த்தம் அவஸந்நாங்கமக்ஷமம் க்ஷீண சக்தி பலாரோக்யம் கேவலம் க்லேச ஸம்ச்ரயம் – கொடிய நோய்களாகிற புலிகளால் பயங்கரமாகவும், உலகவிஷயங்கள் என்னும் சிறு புதர்கள் நிறைந்ததாகவும்,ஆசையாகிற அடர்ந்த மரங்கள் நிறைந்ததாகவும், புத்திரர்கள் மனைவி வீடு நிலம் என்பதான கானல் நிரம்பியதாகவும் உள்ள ஸம்ஸாரம் என்னும் காட்டில், நல்லது கெட்டது அறியும் பகுத்தறிவு இன்றித் திரிபவனாயும், எப்போதும் தாமக் எடுத்தவனாகவும், உடல் இளைத்தவனாகவும், சாமர்த்யம் அற்றவனாகவும், சக்தி-பலம்-ஆரோக்யம் இல்லாதவனாகவும், துன்பங்கள் மட்டுமே நிறைந்தவனாகவும் - என்றும், சரணாகதிகத்யம் (சூர்ணை-10) - அநாதிகால ப்ரவ்ருத்த அநந்த க்ருத்ய கரண க்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசர அஸஹ்யாபசார ரூப நாநாவித அநந்த அபசாராந் - எல்லையற்ற காலங்களாகச் செய்து வரும் கர்மங்கள், அவை அளவற்றவை, சாஸ்த்ரங்களில் விலக்கப்பட்டவற்றைச் செய்தல், சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டவற்றைச் செய்யாமல் விடுதல், ஸர்வேச்வரனைக் குறித்துச் செய்யும் குற்றங்கள், அவனடியார்கள் குறித்துச் செய்யப்படும் குற்றங்கள், எந்தக் காரணமும் இல்லாமல் இந்த இரண்டு விஷயங்களிலும் குற்றம் இழைத்தல், இப்படியாகச் செய்யப்படும் பலவிதமான குற்றங்கள் – என்றும் கூறுவதற்கு ஏற்றபடி, எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள அறியாமை என்பதால் உண்டாகும் கர்மவாஸனைகளின் காரணமாகத் தீயகர்மங்களில் ஈடுபாடு உண்டாகி இந்த ப்ரக்ருதியின் தொடர்பு காரணமாகச் செய்தபடி உள்ள புண்ணியபாவ கர்மங்களை. (வேரறுத்து) – வேர் இருந்தால் செடிகொடிகள் மீண்டும் முளைப்பது போன்று, இவையும் வளர்ந்துவிடும் என்றுள்ள காரணத்தால் இவை அனைத்தையும் இருந்த இடம் தெரியாமல் அழித்து.

வ்யாக்யானம் - (ஊழி முதல்வனையே) காலோபலக்ஷிதமான ஸர்வகார்யவர்க்கத்துக்கும் ப்ரதாந காரணபூதனான ஸர்வேச்வரனை. "மாமேகம் சரணம் வ்ரஜ ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றும், "புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸநையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும்" என்றும் சொல்லுகிறபடியே இச்சேதநருடைய ப்ராப்திப்ரதிபந்தகங்க ளெல்லாவற்றையும் விடுவித்து, "காரணந்து த்யேய:" என்கிறவனை. (முதல்வனையே) என்கிற ஏவகாரத்தாலே, "மாமேகம் சரணம்வ்ரஜ; மாமேவ யே ப்ரபத்யந்தே; தமேவசாத்யம் புருஷம் ப்ரபத்யே; மாமேகமேவ சரணமாத்மானம் ஸர்வ தேஹிநாம் யாஹிபர்யாத்ம சாவேந" என்கிறபடியே அந்யயோக வ்யவச்சேதம் பண்ணினபடி.

விளக்கம் - (ஊழி முதல்வனையே) - காலத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் அனைத்துவிதமான கார்யங்களான செயல்பாடுகளுக்கும் மூலகாரணமாக உள்ளவனாகிய ஸர்வேச்வரனை. கீதையில் (18-66) – மாமேகம் சரணம் வ்ரஜ ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – அனைத்துவிதமான உபாயங்களையும் விடுத்து என்னை மட்டுமே சரணம் புகுவாயாக, நான் உன்னை அனைத்து புண்யபாவங்களிலிருந்தும் விடுவித்து மோக்ஷம் அளிப்பேன் - என்றும், முமுக்ஷுப்படி (116) - புறம்புண்டான பற்றுக்களையடைய வாஸநையோடே விடுகையும், எம்பெருமானையே தஞ்சமென்று பற்றுகையும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப சேதனர்கள் அடையும் புண்யபாவங்கள் அனைத்திலிருந்து விடுவித்து, அதர்வசிகையில் – காரணந்து த்யேய: - காரணவஸ்துவே தியானிக்கத்தக்கது - என்று கூறுவது போன்று உள்ளவனை. (முதல்வனையே) - இங்கு "அவன் மட்டுமே முதல்வன்" என்று தொனிக்கும் ஏவகாரம் காண்க. இதனால் உரைப்பது என்ன? கீதை (18-66) – மாமேகம் சரணம் வ்ரஜ – என்னிடம் மட்டுமே சரணம் அடைவாய் - என்றும், கீதை (7-14) – மாமேவ யே ப்ரபத்யந்தே - யார் என்னை மட்டுமே புகலிடமாகக் கொள்கிறார்களோ - என்றும், கீதை (15-4) – தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே - ஆதிபுருஷனாகிய நாராயணனை மட்டுமே சரணம் அடைகிறேன் - என்றும், ஸ்ரீமத் பாகவதம் (11-12-15) – மாமேகமேவ சரணமாத்மானம் ஸர்வதேஹிநாம் யாஹிபர்யாத்ம சாவேந - நானே அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளேன், என்னைச் சரணம் புகுந்தால் அனைத்து பயங்களும் நீங்கப்பெறுவாய் – என்றும் கூறுவதற்கு ஏற்ப மற்ற அனைத்து உபாயங்களையும் தள்ளி.

வ்யாக்யானம் - (பன்னப்பணித்த) ஸர்வரும் விரும்பி விவேகித்தநுபவிக்கும்படி ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யமுகேந அருளிச்செய்த ஸர்வோத்க்ர்ஷ்டரான. பன்னுதல் - விவேகித்தல். (இராமாநுசன்) எம்பெருமானார். "ஸதாசார்ய மூலோ மந்த்ர ரத்ன:" என்று த்வயோபநிஷத்திலும், "யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குரு:" என்று மஹாபாரதத்திலும், "தத்தே ரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேசகாங்க்ஷீ" என்று வேதாந்தாசார்யராலும், "நாராயணோபி விக்ருதிம் யாதி குரோ ப்ரச்யுதஸ்ய துர்புத்தே ஜலாத பேதம் கமலம் ஸோஷயதி ரவிர்ந போஷயதி" என்று வரதாசார்யராலும், "பகவத் வந்தனம் ஸ்வாத்யம் குரு வந்தன பூர்வகம்" என்று அபியுக்தோக்தியாலும் அந்வய வ்யதிரேகங்களாலே சொன்ன கட்டளையாலே, தம்மை ஸகல ஜகத்காரணபூதனான எம்பெருமான் திருவடிகளிலே ஆச்ரயிப்பித்த வெம்பெருமானார்.

விளக்கம் - (பன்னப்பணித்த) - அனைவரும் விரும்பி, நன்மை எது தீமை எது என்று உணர்ந்து அனுபவிக்கவல்ல ஸ்ரீபாஷ்யம் மற்றும் கீதாபாஷ்யம் மூலமாக உயர்ந்த உபதேசத்தை அருளிச்செய்த. பன்னுதல் - நன்மை தீமை அறியக்கூடிய விவேகம். (இராமாநுசன்) - எம்பெருமானார். த்வயோபநிஷத் – ஸதாசார்ய மூலோ மந்த்ரரத்ன: - என்றும், மஹாபாரதத்தில் – யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குரு: - பரம்பொருளையே உபதேசிப்பதால் குரு அதைக் காட்டிலும் உயர்ந்தவர் - என்றும், ந்யாஸதிலகத்தில் வேதாந்ததேசிகன் (24) – தத்தே ரங்கீ நிஜமபி பதம் தேசிகா தேசகாங்க்ஷீ - ஸ்ரீரங்கநாதன் ஒரு மனிதனுடைய ஆசார்யனின் கட்டளையை எதிர்பார்த்தே தனது இடத்தை அளிக்கிறான் - என்றும், வரதாசார்யரால் - நாராயணோபி விக்ருதிம் யாதி குரோ ப்ரச்யுதஸ்ய துர்புத்தே ஜலாத பேதம் கமலம் ஸோஷயதி ரவிர்ந போஷயதி - எந்த ஒரு தாமரையை சூரியன் வளர்கிறதோ அதே தாமரையை அது தண்ணீரை விட்டு அகன்றால் சுட்டெரித்துவிடுகிறது; அதே போன்று ஆசார்யனைவிட்டு அகல்பவனுக்கு நாராயணன் தானே துர்புத்தியை அளிக்கிறான் – என்றும், பகவத் வந்தனம் ஸ்வாத்யம் குரு வந்தன பூர்வகம் – ஆசார்ய ஸேவையை முன்னிட்டு பகவானை சேவிப்பது இன்பமாகும் – என்று கூறுவதற்கு ஏற்ப தன்னை அனைத்து உலகங்களுக்கும் காரணமான ஸர்வேச்வரனுடைய திருவடிகளில் சமர்ப்பித்த எம்பெருமானார்.

வ்யாக்யானம் - (பரன் பாதமுமென் சென்னித் தரிக்க) ஸர்வோத்க்ர்ஷ்டரான வெம்பெருமானார் என்னுடைய சிரஸ்ஸிலே தரிக்கும்படி தம்முடைய ஸ்ரீபாதத்தை, "குருரேவ பரம் ப்ரஹ்ம" என்று இவ்விஷயத்திலே பரத்வ ப்ரதிபத்தி பண்ணினவராகையாலே (பரன்பாதம்) என்கிறார். அன்றிக்கே, (பரன்பாதமுமென் சென்னித் தரிக்க) ஸர்வஸ்மாத்பரனுடைய ஸ்ரீபாதத்தை நான் சிரஸ்ஸாலே தரிக்கும்படி யென்னவுமாம். (வைத்தான்) நிர்ஹேதுகமாக பரகதஸ்வீகாரமாய்த்தானே வைத்தான். இப்படி ஸ்வரூபாநுரூபமான பேற்றை நான் பெறும்படி உபகரித்தானென்றபடி. "எம்மாவீட்டுத் திறமுஞ்செப்பம் நின், செம்மா பாதபற்புத் தலை சேர்த்தொல்லைக், கைம்மா துன்பங் கடிந்த பிரானே, அம்மாவடியேன் வேண்டுவதீதே" என்று மயர்வற மதிநலமருளப் பெற்ற நம்மாழ்வாரும் ப்ரதமபர்வத்திலே அருளிச்செய்தார்.

விளக்கம் - (பரன் பாதமுமென் சென்னித் தரிக்க) - அனைத்தையும் காட்டில் மிகவும் உயர்ந்த எம்பெருமானார் என்னுடைய தலையில் நான் எப்போது வைத்திருக்கும் விதத்தில் தனது திருவடிகளை. அத்யவதாரகோபநிஷத் - குருரேவ பரம் ப்ரஹ்ம – குருவே பரப்ரஹ்மம் – என்று இந்த ஆசார்ய விஷயத்தில் ஸர்வேச்வரனைப் போன்று ஈடுபாடும் புத்தியும் கொண்டவர் என்பதால் "பரன் பாதம்" என்கிறார். அல்லது அனைத்திற்கும் ஆத்மாவாகிய ஸர்வேச்வரனுடைய திருவடிகளை நான் எனது தலையில் தரிக்கும்படிச் செய்தவர் என்றும் கூறலாம். (வைத்தவன்) - எந்தவிதமான காரணமும் இன்றி இந்தச் செயலை தானே செய்தார். இவ்விதம் எனது ஆத்மஸ்வரூபத்துக்கு ஏற்றதான ஒரு பேற்றை நான் அடையும்படி உபகாரம் செய்தார். திருவாய்மொழி (2-9) – எம்மாவீட்டுத் திறமுஞ்செப்பம் நின், செம்மா பாதபற்புத் தலை சேர்த்தொல்லைக், கைம்மா துன்பங் கடிந்த பிரானே, அம்மாவடியேன் வேண்டுவதீதே – என்று மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வார் முதல் பத்தில் அருளிச்செய்தார் அல்லவோ?

வ்யாக்யானம் - இப்படியான பின்பு, (எனக்கேதும் சிதைவில்லையே) "குருநாயேபிமன்யேத" என்கிறபடியே பரகத ஸ்வீகார பாத்ரபூதனான வெனக்கு ஏதேனுமொரு ஹாநியுண்டோ. சிதைவு – அழிவு. "யதாஹ்யேவைஷ ஏதஸ்மின் ந த்ருச்யேநாத்மயே, அநிருக்தே, அநிலயனே அபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததேத ஸோபயம் கதோ பவதி யதாஹ்யேவைஷ ஏதஸ்மின்னுதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி",

"யேதம் ஹவாவ நதபதி, கிமஹம் சாது நாகரவம், கிமஹம் பாப மகரவமிதி" என்று வேதபுருஷன் சொன்னானிறே. (சிதைவில்லையே) ஆகையாலே எனக்கொரு குறையுமில்லை யென்கிறார். இவர் அடியே பிடித்து பாட்டுக்கள் தோறும், "சரணாரவிந்தம்" என்றும், "கமலப்பதங்கள்" என்றும், "பாதம், அடி" என்றும் இடைவிடாதே வாய்விட்டுப் புலம்புகிறார். மோருள்ளதனையும் சோறேயோ, ஆகிலும் இவர் தம்முடைய காதலிருக்கும்படி ஒருக்காற் சொன்னத்தை ஒன்பதின் கால் சொல்லிக் கொண்டு போந்தாரென்கை.

விளக்கம் – இவ்விதம் ஆன பின்னர், (எனக்கேதும் சிதைவில்லையே) – குருநாயேபிமன்யேத - என்று கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனும் ஆசார்யனும் ஏற்றுக் கொண்ட எனக்கு எதும் தாழ்வு உண்டாகுமோ? சிதைவு என்றால் அழிவு. தைத்திரீய உபநிஷத் – யதாஹ்யேவைஷ ஏதஸ்மின் ந த்ருச்யேநாத்மயே, அநிருக்தே, அநிலயனே அபயம் ப்ரதிஷ்ட்டாம் விந்ததேத ஸோபயம் கதோ பவதி யதாஹ்யேவைஷ ஏதஸ்மின்னுதரமந்தரம் குருதே அத தஸ்ய பயம் பவதி - ஒருவிதமான ஐயமும் இல்லாமல், பரிபூர்ண ச்ரத்தையுடன், ப்ரஹ்மத்தை நம்பியவர்களுக்கு தவறாமல் முக்தி கிடைக்கும். சந்தேகப்படுபவர்களுக்கும், போலி பாகவதர்களுக்கும் மோக்ஷம் கிடைக்காது - என்று கூறுவது காண்க. (சிதைவில்லையே) - ஆகவே எனக்கு ஏதும் குறைபாடு இல்லை என்கிறார். இவர் எம்பெருமானாருடைய திருவடிகளை மட்டுமே எப்போதும் பற்றியவராக பல இடங்களிலும் – சரணாரவிந்தம், கமலபதங்கள், பாதம், அடி என்று பலவாறு கூறிப் புலம்புகிறார். இவர் எம்பெருமானார் மீது கொண்டுள்ள அளவு கடந்த சினேகம் காரணமாக ஒருமுறை உரைத்ததையே ஒன்பது முறை உரைக்கிறார் என்று கருத்து.

5. எனக்குற்ற செல்வம் இராமானுசன் என்று இசையகில்லா
மனக்குற்ற மாந்தர் பழிக்கில் புகழ் அவன் மன்னிய சீர்
தனக்குற்ற அன்பர் அவன் திருநாமங்கள் சாற்றும் என்பா
இனக்குற்றம் காணகில்லார் பத்தியேய்ந்த இயல்விதென்றே

பொருள் – நிலையற்ற உலகச் செல்வம் போன்று இல்லாமல் எப்போதும் என்னிடம் நிலைத்து நிற்கும் ஸம்பத்தாக, "தந்தை நல்தாய் தாரம் தனையர் பெரும் செல்வம் என்

தனக்கு நீயே எதிராசா" என்னும்படியாக உள்ள எம்பெருமானாரே எனக்குக் கிட்டிய மிகப் பெரும் நிதி என்று நான் அறிந்து கொண்டேன். அவருடைய புகழ் முழுவதையும் எனது இந்தப் பாசுரங்கள் மூலம் பறை சாற்றினேன். யதிராஜரின் உயர்ந்த குணங்களை அனுபவிக்கத் தகுதி உடைய பக்தி கொண்டவர்கள் நினைப்பது, "இந்தப் பாசுரங்கள் முழுவதும் எம்பெருமானார் மீது கொண்ட பக்தி காரணமாகவே உண்டானது; வேறு எந்தவிதமான பயன் கருதியும் இவை இயற்றப்படவில்லை", என்பதாகும். இதனால், இந்தப் பாசுரங்களில் ஏதேனும் குற்றம் இருந்தாலும் அவற்றைப் பொறுத்துக் கொள்வார்கள். ஆயினும், "நமது செல்வம் இராமானுசர்", என்று கூறுவதை ஏற்காத சிலர், தங்களின் தோஷம் நிறைந்த மனத்தால், இந்தப் பாசுரங்களில் குற்றம் உள்ளது என்று நிந்திக்கக்கூடும். அவற்றையும் நாம் புகழ் என்றே எடுத்துக்கொள்வோம்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே, எம்பெருமானார் தம்மை நிர்ஹேதுகமாக விஷயீகரித்தாரென்று கொண்டாடினார்; இதில், அந்த ப்ரீதியாலே ப்ரேரிதராய்க் கொண்டு அவருடைய குணகீர்த்தநம் பண்ண உத்யோகித்து, குத்ர்ஷ்டிகளாயிருப்பார் இதில் ஏதேனுமொரு குற்றத்தை ஆரோபித்து, தூஷித்தார்களாகில் அதுவே எனக்கு பூஷணமென்று சொல்லா நின்றுகொண்டு, இதன் ரஸமறிந்தவர்கள் குணமாக விரும்புவர்க ளென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் எம்பெருமானார் எந்தவிதமான காரணமும் இல்லாமல் தன்னை ஏற்றுக்கொண்டு கடாக்ஷித்தார் என்று அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில், அதன் காரணமாக ஏற்பட்ட மகிழ்ச்சியில் திளைத்தவராக எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களைக் குறித்து விரிவாக அருளிச்செய்ய முயல்பவராக, "இவ்விதம் செய்யும்போது மற்ற மதத்தவர்கள் இதில் ஏதேனும் குற்றங்களை ஏறிட்டுக் கொண்டு பரிகாசம் செய்து தூஷிப்பார்கள் என்றால், அதுவே எனக்கு ஆபரணம் போன்றதாகும்", என்று சிந்திந்தவராக, இவ்விதம் புகழ்வதின் தன்மையை அறிந்தவர்கள் இதனைக் குணம் என்று கொண்டு விரும்புவார்கள் என்கிறார்.

வ்யாக்யானம் - (எனக்குற்றசெல்வம்) "சரீர பதநாவதி ப்ரபு நிஷ்வணா பாதநாத் அபிந்தந தநஞ்ஜய ப்ரதமம் தநம் தந்தநம்" என்கிறபடியே அப்ராப்தமாய் அதிதீக்ஷணமாய்

அநித்யமான தநம் போலன்றிக்கே, “தநஞ்ஜய விவர்த்தநம் தநமுதூட கோவர்த்தநம் ஸ்ரீ ஸாதந மபாதஹம் ஸ்ரீமநஸாம் ஸமாராதநம்” என்றும், “தநஞ்ஜய ஸ்யந்தந பூஷணம் தநம்” என்றும், “தநம் மதீயம் தவ பாத பங்கஜம்” என்றும், “அஸ்தி மே ஹஸ்தி சைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம்” என்றும் சொல்லப்பட்ட விஷயத்தினுடைய சரமபர்வமாய் தத்யாதாத்ம்யபூதமாய், “குருரேவ பரம் தனம்” என்று அவதாரண பரத்வ ப்ரதிபத்தி பூர்வகமாகவே நிஷ்கர்ஷிக்கப்பட்டதாய் எனக்கு ஸ்வரூப ப்ராப்தமாயிருந்துள்ள ஸம்பத்து.

விளக்கம் - (எனக்குற்றசெல்வம்) – வைராக்யபஞ்சகம் (4) - சரீர பதநாவதி ப்ரபு நிஷ்வேணா பாதநாத் அபிந்தந தநஞ்ஜய ப்ரதமம் தநம் தந்தநம் - என்றும் நீரை மட்டுமே உணவாகக் கொள்ளும் வயிற்றில் உள்ள ஜாடராக்னியைத் தணிப்பதற்காகச் சம்பாதிக்கப்படும் செல்வம் என்பது இந்தச் சரீரம் அழியும்வரை செல்வந்தர்களைத் தொழுது நிற்கும்படிச் செய்வதால் பயனற்றதாகும் - என்பதற்கு ஏற்ப அடையவேண்டிய பேறாக இல்லாததும், நிரந்தரம் அல்லாததும் ஆகிய உலகியல் செல்வம் போன்று அல்லாமல், வைராக்யபஞ்சகம் (4) – தநஞ்ஜய விவர்த்தநம் தநமுதூட கோவர்த்தநம் ஸ்ரீ ஸாதந மபாதஹம் ஸ்ரீமநஸாம் ஸமாராதநம் - அர்ஜுனனை மேன்மை அடையும்படிச் செய்ததும், கோவர்த்தன மலையை உயர்த்தியதும், நல்ல மனம் கொண்டவர்களுக்கு எப்போதும் இன்பத்தை அளிப்பதும், எந்தவிதமான பயனாக இருந்தாலும் அதற்கு ஏற்ற உபாயமாக உள்ளதும், அழிவில்லாததும் ஆகிய க்ருஷ்ணன் என்னும் வஸ்துவே எனக்கு உண்மையான செல்வம் ஆகும்- என்றும், வைராக்ய பஞ்சகம் (3) - தநஞ்ஜய ஸ்யந்தந பூஷணம் தநம் - அர்ஜுனனுடைய தேருக்கு அலங்காரமாகத் திகழ்ந்த செல்வம் - என்றும், ஸ்தோத்ரரத்னம் (30) - தநம் மதீயம் தவ பாத பங்கஜம் - தனமாகிய உனது தாமரைமலர் போன்ற திருவடிகளை - என்றும், வைராக்யபஞ்சகம் (5) - அஸ்தி மே ஹஸ்தி சைலாக்ரே வஸ்து பைதாமஹம் தநம் – காஞ்சீபுரத்தில் உள்ள அத்திகிரியின் மேலே உள்ள வரதராஜன் என்ற உயர்ந்த செல்வமானது என்னுடைய பாட்டனாராகிய நான்முகன் எனக்கு வேண்டி சம்பாதித்த செல்வமாக உள்ளது – என்றும் கூறப்பட்ட ஸர்வேச்வரன் விஷயமான வைராக்யம் தொடங்கி, அந்தக் கைங்கர்யத்தின் எல்லை நிலமானதும், எனது உண்மை நிலையை அறியவைப்பதும் ஆகிய, குருரேவ பரம் தனம் - ஆசார்யனே உயர்ந்த செல்வம் – என்று முழங்கப்பட்டதான ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றதான செல்வம்.

வ்யாக்யானம் - (இராமாநுசனென்று) "தந்தை நல்தாய் தாரம் தனையர் பெருஞ்செல்வ மென்றனுக்கு நீயே யெதிராசா" என்கிறபடியே எம்பெருமானாரே தந்தாமுக்கு மஹாநிதி யென்று அத்யவஸித்து. "த்ருணீக்ருத விரிஞ்ச்யாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" என்கிறபடியே ததந்ய ஸம்பத்துக்களை யெல்லாம் அஸத்கல்பமாக த்ர்ணீகரித்து, நாம் அவருடைய குண கீர்த்தந மொன்றுமே பண்ணக் கடவோமென்று கணிசித்திருக்க, (இசையகில்லா மனக்குற்ற மாந்தர்) ஸம்மதிக்க மாட்டாதபடியான மநோதோஷத்தையுடைய மந்தமதிகள்.

விளக்கம் - (இராமாநுசனென்று) - ஆர்த்திப்ரபந்தம்(3) - தந்தை நல்தாய் தாரம் தனையர் பெருஞ்செல்வ மென்றனுக்கு நீயே யெதிராசா – என்பதற்கு ஏற்றபடி எம்பெருமானார் மட்டுமே தனக்கும், தன்னைச் சார்ந்தவர்களுக்கும் ஏற்ற மிக உயர்ந்த செல்லம் என்று கொண்டாடி. த்ருணீக்ருத விரிஞ்ச்யாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: - இராமாநுசரின் திருவடித் தாமரைகளைப் பற்றி நிற்பவர்கள், நான்முகன் முதலானவர்களுடைய உலகியல் செல்வங்கள் அனைத்தையும் அலட்சியமாகவே எண்ணுவர் - என்பதற்கு ஏற்றபடி, அவர் அல்லாமல் உள்ளதான மற்ற அனைத்து செல்வங்களையும் அஸத் போன்றே புறந்தள்ளி, நாம் அவருடைய திருக்கல்யாண குணங்கள் குறித்து மட்டுமே ஸங்கீர்த்தனம் செய்தபடி இருப்போம் என்று விருப்பத்துடன் உள்ளபோது. (இசையகில்லா மனக்குற்ற மாந்தர்) - இப்படிப்பட்ட உயர்ந்த நிலையை ஏற்க இயலாத, மனப்பக்குவம் அற்ற தாழ்ந்த புத்தி உள்ளவர்கள்; அதாவது உலகியல் செல்வங்களை விடுத்து இராமாநுசரைச் செல்வம் என்று கொண்டாடுவதை ஏற்க இயலாதவர்கள்.

வ்யாக்யானம் - (பழிக்கில்) இவர்கள், குணங்களை யறியமாட்டாதே தோஷத்ர்க்குக்களாகையாலே, "வித்யாந்யா சில்பநைபுணம்" என்று சொல்லப்படுகிற துஸ்தர்க்கங்களாலும் ஸாஹித்யத்தாலும் குத்ர்ஷ்டி கல்பநமாகிற தோஷங்களை யேறிட்டு நிந்தித்தால். "மாயயாபஹ்ருத ஜ்ஞாநா" என்றும், "பரம் பாவமஜாநந்தோ" என்றும், "அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ:" என்றுஞ் சொல்லுகிறபடியே அவர்கள் அஜ்ஞாராகையாலே (மாந்தர்) என்கிறார். "நித்ராலஸ்ய ப்ரமாதோத்தம் தத் தாமஸமுதாஹ்ருதம்", "தாந க்ருத்ஸ்நவிதோ மந்தாந்" என்றிறே இவர்களை சாஸ்த்ரஞ் சொல்லுகிறது.

விளக்கம் - (பழிக்கில்) - இப்படிப்பட்டவர்கள் உயர்ந்த குணம் என்றால் என்ன என்பதை அறியாத குற்றமுள்ள மனம் கொண்டவர்கள் என்பதால், வித்யாந்யா சில்பநைபுணம் – பந்தத்தை விடுவிக்காத கர்மம் என்பது சிற்பம் செய்வது போன்று துன்பத்தையே உண்டாக்கும் - என்று தவறான கருத்துக்கள் மூலம் தீயதான பல குற்றங்களை ஏறிட்டுக் கொண்டு நிந்தனை செய்தால், கீதை(7-15) - மாயயாபஹ்ருத ஜ்ஞாநா - மாயையால் அபகரிக்கப்பட்ட காரணத்தால் தங்கள் அறிவு இழந்தவர்கள் - என்றும், கீதை (9-11) - பரம் பாவமஜாநந்தோ - எனது உயர்ந்த இயல்பை அறியாத அறிவிலிகள் - என்றும், கீதை (5-15) – அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ: - அறியாமையால் அறிவு மூடப்பட்டுள்ளது; ஆகவே அறியாமையில் உள்ள மனிதர்கள் மோகம் அடைகிறார்கள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அவர்கள் அறிவற்றவர்கள் என்பதால் “மாந்தர்” என்கிறார். கீதை (18-39) – நித்ராலஸ்ய ப்ரமாதோத்தம் தத் தாமஸமுதாஹ்ருதம் – தூக்கம், சோம்பல், கவனம் இன்மை போன்றவற்றிலிருந்து தோன்றும் இன்பமானது தாமஸம் எனப்படும் - என்றும், கீதை (3-29) - தாந க்ருத்ஸ்நவிதோ மந்தாந் – முழுமையாக அறியாத குறைவான அறிவுள்ள அஞ்ஞானி – என்றும் அல்லவோ அவர்கள் குறித்து சாஸ்த்ரம் முழங்குகிறது !!

வ்யாக்யானம் - (பழிக்கில் புகழ்) “ஸ்வர்ககாமோ ஜ்யோதிஷ்டோமேந யஜேத:”, “வாயவ்யம் ச்வேத மாலபேத பூதிகாம:”, “ராயஸ்போஷாய ஸுப்ரஜாஸ்த்வாய ஸுவீர்யாய” என்று பலத்தோடே வ்யாப்த்தங்களான காம்யகர்மங்களை யிழிந்தாரென்றிறே அவர்கள் பழி சொல்லுவது. அவை தன்னை ஆராய்ந்தால், “யாமிமாம் புஷ்பிதாம் வாசம் ப்ரவதந்த்ய விபச்சித:”, “நாந்யதஸ்தீதி வாதிந:”, “ந து மாமபிஜாநந்தி தத்த்வே நாதச் ச்யவந்தி தே”, “அந்தவத்து பலம் தேஷாம் தத் பவத்யல்ப மேதஸாம்”, “க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி ஏவம் த்ரயீ தர்மமநுப்ரபந்தா”, “கதாகதம் காமகாமா லபந்தே” என்கையாலே ஸாதநாந்தரங்களின் தோஷமறியாதவர்கள் சொல்லும் பழியாகையாலே அதுவே நமக்குப் புகழாம். “கர்மயோகாதாச்சுத்தாஸ்ஸாங்கிய யோகவிதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம்கோடிதமீமபி”, “யத் யேந காமகாமேந நஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந ந ச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே புந: தேந தேநாப்யதே தத்தந்ந்யா ஸேநைவ மஹாமுநே பரமாத்மா ச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம:” என்றும் சொல்லப்படுகிற விஷயத்தைப்

பற்றினார்க்கு, "ஸித்திர் பவதி வா நேதி ஸம்சயோச்யுத ஸேவிநாம்" என்கையாலே பலஸித்தியில் கண்ணழிவுண்டா யிருக்கும்; அப்படியன்றிகே, "ந ஸம்ஸய: அத்ர தத் பக்த பரிசர்யா ரதாத்மநாம்" என்கிற ததீய வைபவத்தை யறியாதவர்கள் சொல்லும் பழியாகையாலே எனக்கு அதுவே புகழாம். "ஞாநமநுட்டாநமிவை நன்றாகவே யுடையனான குருவையடைந்தக்கால், மாநிலத்தீர், தேனார் கமலத்திருமாமகள் கொழுனன், தானே வைகுந்தந் தரும்" என்றும், "உய்ய நினைவுண்டாகில் உங்குருக்கள் தம் பதத்தே, வையு மன்பு தன்னை யிந்த மாநிலத்தீர், மெய்யுரைக்கேன், பையரவின் மாயன் பரமபதமுங்களுக்காம், கையிலங்கு நெல்லிக்கனி" என்றும் சொல்லப்படும் விஷயத்திலேயிறே அவர்கள் பழிசொல்லுவது; அது புகழேயாய்த் தலைக்கட்டுமித்தனை. "ந்யாஸ வித்யைக நிஷ்ட்டாநாம் வைஷ்ணவாநாம் மஹாத்மநாம் ப்ராக்ருதா அபிஷ்டுதிர் நிந்தா நிந்தா ஸ்துதிரிதி ஸ்ம்ருதா" என்றும், "அலகை முலை சுவைத்தாற்கு அன்பர் அடிக்கு அன்பர் திலதம் எனத் திரிவார் தம்மை உலகர் பழி தூற்றில் துதியாகும்" என்றும் சொல்லக்கடவதிறே.

விளக்கம் - (பழிக்கில் புகழ்) - அவர்கள் திருவரங்கத்தமுதனாரைக் குறித்து ஏன் பழிக்கவேண்டும்? இதற்கு விடை அளிக்கிறார். ஸ்வர்ககாமோ ஜ்யோதிஷ்டோமேந யஜேத: - ஸ்வர்கம் விரும்புபவன் ஜ்யோதிஷ்டோமம் என்ற யஞ்ஞம் இயற்றவேண்டும் – என்றும், வாயவ்யம் ச்வேத மாலபேத பூதிகாம் - வாயவ்யம் என்ற யாகம் இயற்றியவன் தனது விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்கிறான் – என்றும், ராயஸ்போஷாய ஸுப்ரஜாஸ்த்வாய ஸுவீர்யாய - நல்ல வலிமை, செல்வம், வீர்யம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, பலன் அளிக்கவல்ல காம்யகர்மங்களைச் செய்யாமல் இராமாநுசரை மட்டும் கொண்டாடியபடி உள்ளதால், இந்தப் பலன்களை இழந்தார் என்று அவர்கள் பழிக்கிறார்கள். ஆனால் அத்தகைய பழிச்சொற்களை ஆராய்ந்து பார்த்தால், கீதை (2-42) - யாமிமாம் புஷ்பிதாம் வாசாம் ப்ரவதந்த்ய விபச்சித: - காய்க்காத பூ போன்றுள்ள அழகான சொற்கள் பேசும் அறிவற்றவர்களின் இந்தச் சொற்கள் - என்றும், கீதை (2-42) - நாந்யதஸ்தீதி வாதிந: - ஸ்வர்க்கத்தைக் காட்டிலும் வேறு பலன் இல்லை என்பவர்கள் – என்றும், கீதை (9-24) – "ந து மாமபிஜாநந்தி தத்த்வே நாதச் ச்யவந்தி தே - அப்படிப்பட்டவர்கள் பரமாத்மாவாகிய என்னைத் தத்துவங்கள் மூலம் அறியாமல், மீண்டும் ஸம்ஸாரத்தில் உழல்கிறார்கள் - என்றும், கீதை (7-23) – அந்தவத்து பலம்

தேஷாம் தத் பவத்யல்ப மேதஸாம் – சிற்றறிவு உள்ள அவர்களுடைய பலன் அனைத்தும் அற்பமாக அழிவுள்ளதாகவே ஆகிறது - என்றும், கீதை (9-21) - க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி ஏவம் த்ரயீ தர்மமநுப்ரபந்தா - புண்ணிய பலன்கள் கழிந்தவுடன் இறப்புக்கு ஏற்றதான இந்தப் பூமியை அடைகிறார்கள்; இப்படியாக ஸ்வர்க்கம் அடைவதற்கான உபாயமாகவும், மூன்று வேதங்களில் கூறப்பட்டவையும் பலன்கள் அளிக்கவல்லவையும் ஆகிய கர்மங்களைச் செய்து அவர்கள் மீண்டும் பிறவியை அடைந்தபடி உள்ளனர் - என்றும் உரைப்பதன் மூலம், அவன் அல்லாமல் மற்ற உபாயங்களை அறிந்தவர்கள் கூறும் பழிச்சொற்கள் அனைத்தும் நமக்குப் புகழ்வது போன்றே உள்ளது. கர்மயோகா தாச்சுத்தாஸ் ஸாங்க்ய யோகவிதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம்கோடி தமீமபி - கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், இவைகளை அனுஷ்டிப்பவர்கள், சரணாகதர்களின் கோடியில் ஓரம்சம் கூடப் பெறமாட்டார்கள் – என்றும், லக்ஷ்மீ தந்த்ரம் - யத் யேந காமகாமேந நஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந நச பக்தித: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே புந: தேந தேநாப்யதே தத்தந்ந்யா ஸேநைவ மஹாமுநே பரமாத்மாச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம: – ஐச்வர்யத்தை விரும்பும் யாரால் எந்த ஓர் ஐச்வர்யம் மற்ற சாதனங்களால் பெற இயலாமல் உள்ளதோ அது ப்ரபத்தியினால் பெறத் தக்கது; எந்த ஒரு முமுக்ஷுவால் மீண்டும் திரும்புதல் இல்லாமை என்ற இடமான பரமபதமானது கர்மயோகம் போன்றவற்றால் பெற இயலாமல் உள்ளதோ அந்த இடம் ப்ரபத்தியினால் அடையப்படுகிறது; கைவல்யத்தை விட உயர்ந்த பரமாத்ம அனுபவம் ப்ரபத்தியில் கிட்டுகிறது - என்றும் கூறப்படும் பகவத்விஷயத்தைப் பற்றியவர்களுக்கு, ஸித்திர் பவதி வா நேதி ஸம்சயோச்யுத ஸேவிநாம் – அச்சுதனுக்குக் கைங்கர்யம் செய்பவர்கள் கூட அவனை அடையாமல் போவார்களோ என்னும் ஐயம் உண்டாகலாம் - என்பதற்கு ஏற்ப பலன் உண்டாகும்போது நழுவுதல் உண்டாகலாம். ஆனால் அவ்விதம் அல்லாமல், ந ஸம்ஸய: அத்ர தத் பக்த பரிசர்யா ரதாத்மநாம் - அவனுடைய அடியார்களை அடைந்தவர்களுக்கு நழுவுதல் இல்லை என்பது ஐயம் இல்லாமல் தெளிவாகிறது - என்று கூறுவதற்கு ஏற்ப அடியார்களின் அடியார்களுடைய வைபவத்தைக் குறித்து அறியாமல் உரைக்கும் பழிச்சொல்லாக உள்ளதால் எனக்கு அது புகழ்வதாகவே உள்ளது. உபதேச இரத்தினமாலை (61) - ஞாநமநுட்டாநமிவை நன்றாகவே யுடையனான குருவையடைந்தக்கால், மாநிலத்தீர், தேனார் கமலத்திருமாமகள் கொழுனன், தானே வைகுந்தந் தரும் - இந்தப் பூமியில் உள்ளவர்களே!

நமக்காக உபாயானுஷ்டானம் பண்ணி ரக்ஷிக்கவல்ல மகாபாகவதனான ஆசார்யனை அண்டினால், தேன் பொருந்திய தாமரைமலரிலிருக்கும் பெரியபிராட்டியின் நாயகனான ஸர்வேச்வரன் தானாகவே ஸ்ரீவைகுண்டத்தைக் கொடுப்பான் - என்றும், உபதேச இரத்தினமாலை (62) - உய்ய நினைவுண்டாகில் உங்குருக்கள் தம் பதத்தே, வையு மன்பு தன்னை யிந்த மாநிலத்தீர், மெய்யுரைக்கேன், பையரவின் மாயன் பரமபதமுங்களுக்காம், கையிலங்கு நெல்லிக்கனி – இந்த உலகில் உள்ளவர்களே! ஓர் உண்மையை உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களுக்குக் கரையேற வேண்டும் என்கிற ஆசை உள்ளது என்றால், உங்கள் ஆசார்யர்களுடைய திருவடிகளில் அதிகப்படியான அன்பைச் செலுத்துங்கள். அவ்வாறு செய்தீர்களானால் படத்தையுடைய திருவனந்தாழ்வான் மீது கண்வளரும் ஸர்வேச்வரனுடைய ஸ்ரீவைகுந்தமானது உங்களுக்குக் கையிலே விளங்கும் நெல்லிக்கனி போலே எளிதாகக் கிடைக்கும் - என்றும் கூறப்படும் ஆசார்ய விஷயத்தில் அல்லவோ அவர்கள் பழிச்சொற்கள் உரைக்கிறார்கள்? ஆகவே அது புகழ்வதாகவே உள்ளது என்று கருத்து. ந்யாஸ வித்யைக நிஷ்ட்டாநாம் வைஷ்ணவாநாம் மஹாத்மநாம் ப்ராக்ருதா அபிஷ்டுதிர் நிந்தா நிந்தா ஸ்துதிரிதி ஸ்ம்ருதா - சரணாகதி நெறியை மட்டுமே பற்றை நிற்கும் மஹாத்மாக்களாகிய ஸ்ரீவைஷ்ணவர்களைப் பாமரமனிதர்கள் துதிப்பது நிந்தையே ஆகும், நிந்திப்பது புகழ்வதே ஆகும் – என்றும், ஞானஸாரம் (39) - அலகை முலை சுவைத்தாற்கு அன்பர் அடிக்கு அன்பர் திலதம் எனத் திரிவார் தம்மை உலகர் பழி தூற்றில் துதியாகும் – தனது தாய் போன்று வந்த பேயான பூதனையின் ஸ்தனங்களை, அவளுடைய உயிருடன் சேர்த்து உண்ட க்ருஷ்ணனின் திருவடிகளில் விருப்பம் உள்ளவர்களும், இந்த உலகின் திலகம் என்று கொண்டாடப்படுபவர்களும் ஆகிய மஹாபுருஷர்களை உலகில் உள்ளவர்கள் பழித்தால், உண்மையில் அவர்களைத் துதித்தலே ஆகும் - என்றும் கூறுவது காண்க.

வ்யாக்யானம் - (அவன் மன்னியசீர் தனக்குற்ற வன்பர்) (அவன்) “பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந: சார்வாக சைலாசநி: பௌத்தத்வாந்த நிராஸ வாஸரபதிர: ஜைநேப கண்டீரவ: மாயாவாதி புஜங்கபங்க கருட: த்ரைவித்ய சூடாமணி: ஸ்ரீரங்கேச ஜயத்வஜ: விஜயதே ராமானுஜோயம் முநி:” என்று ப்ரஸித்தரான எம்பெருமானாருடைய. (மன்னியசீர்) நித்ய ஸித்தங்களாய் ஸ்வாபாவிகங்களாய், “ச்ருத்யக்ர வேத்ய நிஜ திவ்ய குணஸ்வரூப: ப்ரத்யக்ஷதாம் உபகத: இஹ ரங்கராஜ: வச்ய: ஸதா பவதி தே யதிராஜ தஸ்மாத் சக்த: ஸ்வகீய ஜந பாப விமோசநே த்வம்” என்கிற ச்லோகத்திலே சொல்லப்பட்ட ஜ்ஞாநசக்திகள் தொடக்கமான கல்யாணகுணங்கள்.

விளக்கம் - (அவன்) தாடீ பஞ்சகம் - பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந: சார்வாக சைலாசநி: பௌத்தத்வாந்த நிராஸ வாஸரபதிர: ஜைநேப கண்டீரவ: மாயாவாதி புஜங்கபங்க கருட: த்ரைவித்ய சூடாமணி: ஸ்ரீரங்கேச ஜயத்வஜ: விஜயதே ராமானுஜோயம் முநி: - நாஸ்திகர்கள் பாஷண்டர்கள் எனப்படுபவர்; காட்டுத் தீ வளர்ந்தால் எவ்விதம் மரங்கள் அழியுமோ அது போன்று, எம்பெருமானார் பாஷண்டர்களை அழித்தார். சார்வாகர், பௌத்தர் முதலிய மலைகளை மிகவும் எளிதாக எம்பெருமானர் சாய்த்தார். பௌத்தம் என்ற இருளுக்குச் சூரியன் போன்று எம்பெருமானார் அவதரித்தார். ஜைனர்கள் என்ற யானைகளைச் சிங்கம் போன்று விரட்டினார். மாயாவாதிகள் என்ற நாகங்களைத் தனது நிழல் மூலமே அழிக்கின்ற கருடன் போன்று விளங்கினார். ஸ்ரீரங்கநாதனின் திருக்கோயிலைத் திருத்தி, பெருமையுடன் நின்றார் - என்பதற்கு ஏற்ப புகழ் உள்ளவராகிய எம்பெருமானாருடைய. (மன்னியசீர்) – எப்போது உள்ளதும், இயல்பாகவே நிரம்பியதும், யதிராஜ விம்ஸதியில் - யதிகளின் தலைவனே! வேதங்கள், வேதாந்தங்கள் போன்ற அனைத்தாலும் போற்றப்படுபவனாகவும், திவ்யமான எழிலுடனும், உயர்ந்த திருக்கல்யாண குணங்களுடனும் ஸ்ரீரங்கத்தின் சக்ரவர்த்தியாக ஸ்ரீரங்கநாதன் உள்ளான். இத்தனை வல்லமை கொண்டவனாக உள்ளபோதிலும் அவன் உனக்கு வசப்பட்டவனாகவே உள்ளான். ஆகவே நீ மட்டுமே எனது பாவங்களைப் போக்கி, நற்கதி அருள இயலும் (ஸ்ரீரங்கநாதனால் நேரடியாக இயலாது என்றார்) - என்றும் கூறப்பட்டதான ஞானம், சக்தி போன்ற திருக்கல்யாண குணங்கள்.

வ்யாக்யானம் - (தனக்கு உற்றவன்பர்) தனக்குத் தகுதியான ப்ரேமத்தையுடையரான மஹாத்மாக்கள். (அவன் திருநாமங்கள் சாற்று மென்பாவினக் குற்றம்) அவர் விஷயமான பக்தி ஸந்துக்ஷணம் பண்ண தத்ப்ரேரிதனாய்க் கொண்டு அவருடைய திருநாமங்கள் பத்யரூபேண ஸமர்ப்பிப்பதாக என்னாலே சொல்லப்பட்ட சந்தஸ் ஸமூஹத்திலே அவத்யத்தை. அன்றிக்கே, (அவன் திருநாமங்கள் சாற்று மென்பாவினக் குற்றம்) அவருடைய திருநாமங்களைச் சொல்லா நின்றுள்ள என்னுடைய சப்த்த ஸமூஹத்திலே குற்றத்தையென்னவுமாம். பா – சந்தஸ்ஸு, இனம் – ஸமூஹம்.

விளக்கம் – (தனக்கு உற்றவன்பர்) - அவருடன் தங்களுக்கு ஏற்கும் விதத்தில் சினேகம் கொண்ட மஹாத்மாக்கள். (அவன் திருநாமங்கள் சாற்று மென்பாவினக் குற்றம்) - எம்பெருமானாரிடம் பக்தி செலுத்தி, சினேகம் கொண்டு, அவருடைய திருநாமங்களை

ஒவ்வொரு பாசுரத்திலும் சமர்ப்பிப்பதாக எண்ணி என்னால் உரைக்கப்பட்ட இந்தக் குற்றம் நிறைந்த தொகுப்பை. அல்லது, அவருடைய திருநாமங்களை உரைப்பது என்பதான எனது குற்றத்தை. இங்கு பா என்பது சந்தஸ் என்று பொருள் தரும்.

வ்யாக்யானம் - (காணகில்லார்) வத்ஸல ஸ்வபாவராகையாலே தோஷா தர்சிகளாய்ப் போருவார்கள். கில்லார் - ஸமர்த்தரல்லாதார்; மந்தமதிகளானவர்கள் தந்தாமுடைய அறிவுகேட்டாலே இவன் காம்யகர்ம பரித்யாகம் பண்ணினானென்றும் லக்ஷணத்தில் குறைச்சலாகச் சொன்னானென்றும் இப்படியான தோஷங்களைக் காணகில்லா ரென்றபடி. அதுக்கு மூலமேதென்ன, (பக்தியேய்ந்த வியல்விதென்றே) பக்தியோடே கூடின வ்ர்த்தியையுடைய தென்னவுமாம். இயல்வு - ப்ரவர்த்தி, ஏய்தல் – கூடுதல்.

விளக்கம் - (காணகில்லார்) - அப்படிப்பட்ட மஹாத்மாக்கள் மிகுந்த வாத்ஸல்யம் உள்ளவர்கள் என்பதால் இவற்றை ஏற்பர். மேலும் இப்படிப்பட்டவர்கள் - மந்தமான புத்தி உள்ள சிலர் தங்களுடைய அறிவுகேடு காரணமாக, "இவன் பலன் தரவல்ல கர்மங்களை இயற்றாமல் விட்டான், எம்பெருமானார் குறித்தும் முழுமையாக உரைக்கவில்லை", என்று கூறும் குற்றங்களைப் பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள். ஏன்? (பக்தியேய்ந்த வியல்விதென்றே) - பக்தியுடன் கூடிய ஸ்வபாவம் இது அல்லவோ என்பதால் ஆகும்.

6. இயலும் பொருளும் இசையத் தொடுத்து ஈன்கவிகள் அன்பால்
மயல் கொண்டு வாழ்த்தும் இராமானுசனை மதி இன்மையால்
பயிலும் கவிகளில் பத்தி இல்லாத என் பாவி நெஞ்சால்
முயல்கின்றனன் அவன் தன் பெரும் கீர்த்தி மொழிந்திடவே.

விளக்கவுரை – கூரத்தாழ்வான், பராசரபட்டர் போன்ற சிறந்த வல்லுனர்கள் எம்பெருமானார் மீது கொண்ட அன்பு மயக்கமாக மாறியது; இதனால் அவர்கள் அவரை வாழ்த்திப் பலவாறு கவிதைகள் புனைந்தனர். அவற்றில் சொல், பொருள் போன்ற அனைத்தும் மிகவும் பொருந்தி நிற்கின்றன. இது போன்ற காவியங்களில் நான் எனது மனதை வைத்து, அவற்றை அனுபவித்தபடி எனது பொழுதைப் போக்குவது அல்லவோ சிறந்தது? ஆனால் நான் செய்வது என்ன? அந்தக் காவியங்களில் பக்தி வைக்காமல்,

மிகவும் பாவம் செய்த நான் செய்யத் துணிந்தது என்ன? பாவம் நிறைந்த எனது சொற்கள் கொண்டு, "இதுவே இராமானுசனின் புகழ்", என்று வரையறுத்துக் கூற இயலாத அவரது புகழை, முழுமையாகக் கூற முயன்றேனே! இது எனது அறிவுக் கேட்டால் விளைந்தது அல்லவோ?

அவதாரிகை – கீழிற்பாட்டிலே, மந்தமதிகள் பழி சொன்னார்களாகில் அதுவே தமக்கு பூஷணமென்றார்; இப்பாட்டிலே என்னைப் பார்த்து, கீழ்ப்பாட்டிலே ப்ரஸ்துதரான அஞ்ஞர் சொல்லும் பழிக்கு ஒருபடி ஸமாதாநம் பண்ணிக் கொண்டு போனதாம்; என்னைப் பார்த்தால், ஸர்வலோக ப்ரஸித்தரான எம்பெருமானாருடைய வைபவத்துக்குத் தகுதியாயிருந்துள்ள பக்தி ப்ரேமங்களிலே ஒன்றாகிலும் என் பக்கலிலே யில்லை, ஆனாலும் அவர் தம்மை ஏத்துவதாக உத்ஸாஹியா நின்றேன், எத்தனை ஸாஹஸம் பண்ணத் தொடங்கினேனென்று, "மஹ்யம் நமோஸ்து கவயே நிரபத்ரபாய" என்றாப்போலே தம்மை கர்ஹிக்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் தான் இராமாநுசரை எப்போதும் அண்டி நிற்பதைக் கண்ட புத்தியற்றவர்கள் சிலர் தன்னை ஏளனமாகப் பேசினாலும், அது தனக்கு ஆபரணம் போன்றதாகும் என்றார். இந்தப் பாசுரத்தில், "என்னை நோக்கி கடந்த பாசுரத்தில் எம்பெருமானாருடைய கீர்த்தியை அறியாத ஒரு சிலர் உரைத்த பழிச்சொற்களை ஒரு விதத்தில் கேட்டு சமாதானம் செய்து கொண்டேன். என்னை நானே நோக்கிக் கொள்ளும்போது அனைத்து போகங்களிலும் பரவிய புகழ் நிறைந்த இராமாநுசருடைய பெருமைகளுக்குச் சேரும் விதத்தில் அவரிடம் நான் பக்தியும் அன்பும் கொண்டுள்ளேனோ என்றால் இல்லை என்றே ஆகிறது. என்றாலும் அவர்கள் உரைத்ததை நான் பெரிதாகக் கொள்ளவில்லை; அதன் காரணம் எம்பெருமானாருடைய கீர்த்தியை அறியாமல் அவர் குறித்து கவிதை இயற்றத் தொடங்கியதை நான் செய்யத் செய்யத் துணிந்தது ஸாஹஸம் அல்லவோ? ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னத்தில் (7) - மஹ்யம் நமோஸ்து கவயே நிரபத்ரபாய – வெட்கம் அற்ற கவியாகிய என் பொருட்டு நமஸ்காரம் – என்று கூறுவது போன்று இவரும் அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (இயலும்) சப்தமும். (பொருளும்) அர்த்தமும். ஸமுச்சயத்தாலே ராகமும். (இசைய) பொருந்தும்படி. (தொகுத்து) ப்ரதிபாதகத்துக்கும் ப்ரதிபாத்யத்துக்கும் ஒரு

குறையில்லாதபடி ஸந்தர்ப்பித்து. (ஈன்) அவதரிப்பித்து. ப்ரபந்த நிர்மாணம் பண்ணுகிற. (கவிகள்) "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம்" என்று இப்படிப்பட்ட கவிகள். (ஈன்கவிகள்) விலக்ஷணமான கவிகளென்னவுமாம். (அன்பால்) ப்ரேம ப்ரகர்ஷத்தாலே.

விளக்கம் – (இயலும்) – சப்தமும். (பொருளும்) - அர்த்தமும். இவ்விதம் சப்தம் மற்றும் அர்த்தம் ஒன்றாகச் சேர்வதால் எழும் ராகம். (இசைய) – இவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பொருந்தும்படியாக. (தொகுத்து) – கூற வந்த பொருள் குறித்து உரைப்பதான என்ற சொல், அப்படியாக உரைப்பதன் மூலம் உணர்த்தப்பட்ட பொருள் என்ற இரண்டும் சரியாகப் பொருந்தும்படியாக. (ஈன்) – உண்டாகி. அதாவது ப்ரபந்த வடிவில் உண்டாக்குகிற. (கவிகள்) – யதிராஜவிம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப் பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் - என்பதற்கு ஏற்ப உள்ள கவிதைகள். (ஈன்கவிகள்) – இவ்விதம் சிறப்பான கவிதை என்றும் கொள்ளலாம். (அன்பால்) – ப்ரேமையில் மிகுதி காரணமாக.

வ்யாக்யானம் - (மயல்கொண்டு) அறிவழிந்து. ஜ்ஞாந விபாக கார்யமான அஜ்ஞாநம் தலையெடுத்து. (வாழ்த்தும்) "ஜயதி ஸகலவித்யா வாஹிநீ ஜந்ம சைல: ஜநி பத பரிவ்ருத்தி ச்ராந்த விச்ராந்தி சாகீ நிகில குமதி மாயா சர்வரீ பாலஸூர்ய: நிகம ஜலதி வேலா பூர்ண சந்த்ரோ யதீந்த்ர:" என்றும்; "வாழியெதிராசன் வாழியெதிராசன் வாழியெதிராசனென வாழ்த்துவார், வாழியென வாழ்த்துவார், வாழியென வாழ்த்துவார் வாழியென்வாழ்த்துவார் தாளிணையில் தாழ்த்துவார் விண்ணோர் தலை" என்றும்;

“அறுசமயச் செடியதனை யடியறுத்தான் வாழியே” என்று தொடங்கி, “அறமிகுநல் பெரும்பூதூ ரவதரித்தான் வாழியே” என்றும்; “சீராரு மெதிராசர் திருவடிகள் வாழி” என்று தொடங்கி, “இனி திருப்போடெழில் ஞாநமுத்திரை வாழி” என்றும்; “வாழியரோ தக்கோர் பரவுந் தடஞ்சூழ் பெரும்பூதூர் முக்கோல் பிடித்த முனி” என்றும் இப்படி அவர்களாலே மங்களாசாஸநம் பண்ணப்படும்.

விளக்கம் - (மயல்கொண்டு) - அறிவற்று, ஞானத்தின் எதிர்த்தட்டாக உள்ள அறியாமை தலை தூக்கியதால். (வாழ்த்தும்) – யதிராஜ ஸப்ததி (28) - ஜயதி ஸகலவித்யா வாஹிநீ ஜந்ம சைல: ஜநி பத பரிவ்ருத்தி ச்ராந்த விச்ராந்தி சாகீ நிகில குமதி மாயா சர்வரீ பாலஸூர்ய: நிகம ஜலதி வேலா பூர்ண சந்த்ரோ யதீந்த்ர: – அனைத்து வித்யைகளும் நதி போன்று ப்ரவாகம் எடுப்பதாக உள்ள மலை போன்றும், ஸம்ஸாரத்தில் உழன்று திரிந்து களைப்படைந்தவர்கள் வந்து இளைப்பாறும் மரம் போன்றும், மற்ற மதத்தைச் சார்ந்தவர்களின் வாதம் என்ற இருள் இந்த உலகில் சூழ்ந்து விடாதபடி காத்து நிற்கும் இளம் சூரியன் போன்றும், வேதம் என்னும் கடலானது பொங்கி எழும்படிச் செய்யும் முழுநிலவு போன்றும் யதிராஜர் உள்ளார் - என்றும்; ஆர்த்தி ப்ரபந்தம் (1) - வாழியெதிராசன் வாழியெதிராசன் வாழியெதிராசனென வாழ்த்துவார், வாழியென வாழ்த்துவார், வாழியென வாழ்த்துவார் வாழியென்வாழ்த்துவார் தாளிணையில் தாழ்த்துவார் விண்ணோர் தலை - “எம்பெருமானார் பல்லாண்டு வாழ்க”, “எம்பெருமானார் பல்லாண்டு வாழ்க”, “எம்பெருமானார் பல்லாண்டு வாழ்க” என்று வாழ்த்துபவர்கள்; இவ்விதமாக எம்பெருமானாரை வாழ்த்துபவர்களை வாழ்த்துபவர்கள்; இவ்விதமாக வாழ்த்துபவர்களை வாழ்த்துபவர்களின் திருவடிகளில் பணிபவர்கள் நித்யஸூரிகளுக்கும் மேலானவர்கள் ஆவர். அவர்கள் திருவடிகளில் தேவர்களும் பணிவார்கள் - என்றும்; “அறுசமயச் செடியதனை யடியறுத்தான் வாழியே” என்று தொடங்கி, “அறமிகுநல் பெரும்பூதூ ரவதரித்தான் வாழியே” என்பது வரை உள்ளது போன்றும்; “சீராரு மெதிராசர் திருவடிகள் வாழி” – என்று தொடங்கி, “இனி திருப்போடெழில் ஞாநமுத்திரை வாழி” என்பது வரை உள்ளது போன்றும்; “வாழியரோ தக்கோர் பரவுந் தடஞ்சூழ் பெரும்பூதூர் முக்கோல் பிடித்த முனி” - என்றும் உயர்ந்தவர்களால் போற்றப்படும் எம்பெருமானாரை.

வ்யாக்யானம் - (இராமானுசனை) எம்பெருமானாரை. (மதியின்மையால்) “அஜ்ஞ: அயம் ஆத்மகுணலேச விவர்ஜிதச்ச” என்கிறபடியே அவருடைய கல்யாணகுண வைபவத்தை யறியாமையாலே. (பயிலும்) அடைவு கெடச் சொல்லும். (கவிகள்) கவநங்களிலே -

பாட்டுக்களிலே. அன்றிக்கே, பயிலுங் கவிகள் - எம்பெருமானாருடைய கல்யாண குணங்களையே ஸர்வகாலமும் அநுபவியா நிற்கிற ஆழ்வான், ஆண்டான், எம்பார் தொடக்கமானார் திறத்திலே யென்னவுமாம். (பக்தியில்லாத) ஸம்யஜ்ஞாந மில்லாவிடிலும் மூடபக்திதானே என் மநஸ்ஸிலே யுண்டோ வென்னில், அந்த பக்தியும் என் மநஸ்ஸிலே யில்லை.

விளக்கம் - (இராமானுசனை) – எம்பெருமானாரை. (மதியின்மையால்) - யதிராஜ விம்சதி (20) - விஜ்ஞாபநம் யதித மத்ய து மாமகீநம் அங்கீகுருஷ்வ யதிராஜ தயாம்புராசே அஜ்ஞ: அயம் ஆத்மகுணலேச விவர்ஜிதச்ச தஸ்மாத் அநந்ய சரணோ பவதி இதி மத்வா - யதிராஜரே! கருணைக்கடலே! ஏதும் அறியாத என்னை நீ அங்கீகாரம் செய்தருள வேண்டும். எத்தகைய உயர்ந்த குணங்களும் அற்றவனான எனது இந்தத் துதியை நீ உனது கருணையால் ஏற்றுக் கொள்ளவேண்டும். வேறு புகலிடம் இல்லாமல் உன்னைச் சரணம் புகுந்த என்னை ஏற்றுக் கொண்டு எனக்கு அருள் புரியவேண்டும் - என்பதற்கு ஏற்ப அவருடைய திருக்கல்யாணகுணங்களுடைய மேன்மைகள் அறியாமல். (பயிலும்) – முறை தவறி உரைப்பதான. (கவிகள்) - பாட்டுகளில், அல்லது எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களையே எப்போதும் அனுபவித்தபடி உள்ளவர்களான கூரத்தாழ்வான், முதலியாண்டான், எம்பார் முதலானவர்கள் செயல் போன்று. (பக்தியில்லாத) - தெளிவான ஞானம் இல்லை என்றாலும் பக்தியாவது எனது மனதில் உள்ளதா என்றால் அதுவும் இல்லை.

வ்யாக்யானம் - (பாவி நெஞ்சால்) ஜ்ஞாநபக்தியாதிகள் இன்றிக்கே யொழிந்தாலும் மநஸ்ஸு பரிசுத்தமானால் க்ரமேண இவற்றையுண்டாக்கிக் கொள்ளளாமிறே, இந்த சுத்தியில்லாமையாலே என் மநஸ்ஸு அத்யந்தம் பாபிஷ்டமாயாய்த்திருப்பது, இப்படிப்பட்ட மநஸ்ஸாலே. (அவன்றன் பெருங்கீர்த்தி மொழிந்திடவே) (அவன்றன்) "அடையார் கமலத்தலர்மகள் கேள்வன் கையாழியென்னும், படையோடு நாந்தகமும் படர் தண்டுமொண் சார்ங்கவில்லும், புடையார் புரிசங்கமு மிந்தப் பூதலங் காப்பதற்கென், றிடையே யிராமாநுச முனியாயின விந்நிலத்தே" என்று தம்மாலேயும், "ஆன்ற தமிழ்மறைக ளாயிரமு மீன்ற முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த விதத்தா யிராமநுசன்" என்று மற்றுள்ள ஆசார்யர்களாலும் கொண்டாடப்பட்டு ப்ரஸித்த ரானவருடைய. (பெருங்கீர்த்தி) அவருடைய கீர்த்தியும் அவருக் குறுதியாகக்

காணுமிருப்பது; “கா சங்கா சங்கர ஆதே: பஜதி யதி பதெள பத்ர வேதீம் த்ரிவேதீம்”, “ஸ்ரீரங்கேச ஜயத்வஜ: விஜயதே ராமானுஜோயம் முநி:”, “ஏய்ந்த பெருங்கீர்த்தி”, “எண்டிடையு மேத்து மெதிராசன்” என்கிறபடியே மஹாதநமான கீர்த்தியை. (மொழிந்திடவே) ஜ்ஞாந பக்திகளல்லாத வென் மநஸ்ஸிலே வாசா கைங்கர்யமாக க்ரந்தீகரித்து ஸமர்ப்பிக்கக் கடவேனென்று. (முயல்கின்றனன்) உத்ஸாஹியா நின்றேன். எத்தனை ஸாஹஸம் பண்ணா நின்றே னென்று ஸ்வநைச்யத்தை அநுஸந்திக்கிறாராய்த்து.

விளக்கம் - (பாவி நெஞ்சால்) - ஞானம், பக்தி போன்றவை மனதில் இல்லை என்றாலும், மனதைத் தூய்மையாக்கினால் அவை தாமாகவே ஏற்படும் அல்லவோ? அத்தகைய தூய்மையும் இல்லாமல் எனது மனம் முழுவதும் பாவங்கள் நிறைந்தே உள்ளது. இப்படிப்பட்ட மனம் கொண்டு. (அவன்றன்) - இராமானுச நூற்றந்தாதி (33) – அடையார் கமலத்தலர்மகள் கேள்வன் கையாழியென்னும், படையோடு நாந்தகமும் படர் தண்டுமொண் சார்ங்கவில்லும், புடையார் புரிசங்கமு மிந்தப் பூதலங் காப்பதற்கென், றிடையே யிராமாநுச முனியாயின விந்நிலத்தே - என்று தன்னாலும், “ஆன்ற தமிழ்மறைக ளாயிரமு மீன்ற முதல்தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த விதத்தா யிராமநுசன்” என்று மற்ற ஆசார்யர்களாலும் கொண்டாடப்படும் மிகுந்த கீர்த்தி உள்ள இராமாநுசருடைய. (பெருங்கீர்த்தி) - அவருடைய கீர்த்தி என்பதும் அவரை அண்டியே நிற்கிறது. யதிராஜசப்ததி (70) - காதா தாதாகதாநாம் களதி கமநிகா காபிலீ க்வாபி லீநா க்ஷீணா காணாத வாணீ த்ருஹிண ஹர கிர: ஸௌரபம் நாரபந்தே க்ஷாமா கௌமாரில உக்தி: ஜகதி குருமதம் கௌரவாத் தூரவாந்தம் கா சங்கா சங்கர ஆதே: பஜதி யதி பதெள பத்ர வேதீம் த்ரிவேதீம் - மூன்று வேதங்கள் மூலம் அமைக்கப்பட்ட ஸிம்ஹாஸனத்தை அடைந்து அதில் யதிராஜர் எழுந்தருளினார். உடனே நிகழ்ந்தது என்ன? பௌத்தர்களின் வாதம் உடனே நழுவியது. கபிலர் உபதேசித்த மார்க்கம் எங்கோ சென்று பதுங்கியது. காணாதரின் உபதேசம் மறைந்தது. நான்முகன், சிவன் ஆகியோரின் மதங்கள் நறுமணம் இழந்தன. குமாரிலபட்டரின் வாதம் தோற்றது. பிரபாகரரின் மதம் கற்பனை அதிகமாக உள்ளதென்று விலக்கப்பட்டது. சங்கரர் போன்றோர் வாதமும் கண்டிக்கப்பட்டதைக் கூற வேண்டுமா? - என்றும், தாடீ பஞ்சகம் (1) – பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந: சார்வாக சைலாசநி: பௌத்தத்வாந்த நிராஸ வாஸரபதிர: ஜைநேப கண்டீரவ: மாயாவாதி புஜங்கபங்க கருட: த்ரைவித்ய சூடாமணி: ஸ்ரீரங்கேச ஜயத்வஜ: விஜயதே ராமானுஜோயம் முநி: - நாஸ்திகர்கள் பாஷண்டர்கள் எனப்படுபவர். காட்டுத் தீ

வளர்ந்தால் எவ்விதம் மரங்கள் அழியுமோ அது போன்று, எம்பெருமானார் பாஷண்டர்களை அழித்தார். சார்வாகர், பௌத்தர் முதலிய மலைகளை மிகவும் எளிதாக எம்பெருமானர் சாய்த்தார். பௌத்தம் என்ற இருளுக்குச் சூரியன் போன்று எம்பெருமானார் அவதரித்தார். ஜைனர்கள் என்ற யானைகளைச் சிங்கம் போன்று விரட்டினார். மாயாவாதிகள் என்ற நாகங்களைத் தனது நிழல் மூலமே அழிக்கின்ற கருடன் போன்று விளங்கினார். ஸ்ரீரங்கநாதனின் திருக்கோயிலைத் திருத்தி, பெருமையுடன் நின்றார் - என்றும் கூறுவது காண்க. "ஏய்ந்த பெருங்கீர்த்தி", "எண்டிடையு மேத்து மெதிராசன் என்பதற்கு ஏற்ப உள்ள உயர்ந்த செல்வமாகிய கீர்த்தியை. (மொழிந்திடவே) – ஞானம், பக்தி போன்ற ஏதும் இல்லாத எனது மனம் கொண்டு வாக்கு மூலம் கைங்கர்யம் செய்வதாக மயங்கி சமர்ப்பிக்கக் கடவேன் என்று எண்ணி. (முயல்கின்றனன்) - முனைந்து நிற்கிறேன். அதாவது எத்தனை பெரிய செயல் செய்ய முனைந்தேன் என்று தன்னைத்தானே தாழ்த்திக்கொண்டு உரைக்கிறார்.

7. மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சம் முக்குறும்பாம்
குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண் கூடியபின்
பழியைக் கடத்தும் இராமானுசன் புகழ்பாடி அல்லா
வழியைக் கடத்தல் எனக்கு இனியாதும் வருத்தமன்றே.

பொருள் – ஒரு சில பதங்கள் மூலம் வர்ணிக்க அரியதாகவும், பரமபதம் அளவு பெருகிநிற்கும் திருக்கல்யாண குணங்கள் நிரம்பியவராகவும் உள்ளவர்; தவறான பாதையில் ஆத்மாவை இட்டுச் செல்ல வல்லதான அஹங்காரம், வித்யாகர்வம், தனகர்வம் ஆகிய மூன்று பெறும் குழிகளை மிகவும் எளிதாகக் கடந்து நிற்பவர்; நமக்கு நாதனாக உள்ளவர் – இவர் யார் என்றால் நம்முடைய கூரத்தாழ்வான் ஆவார். அப்படிப்பட்ட கூரத்தாழ்வானின் திருவடிகளை நாம் அண்டிய பிறகு நிகழ்வது என்ன? ஏய்ந்த பெரும் கீர்த்தி இராமானுசன், தமிழ் மறைகள் ஆயிரமும் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன் என்று கூறும்படியாகத் திருக்கல்யாண குணங்களை கொண்ட உடையவரின் குணங்களை சிந்தித்தபடி இருக்கும் நிலையானது எனது பாவங்கள் காரணமாக எனக்கு இதுவரை ஏற்படாமல் இருந்தது. அந்த நிலை மாறி (கூரத்தாழ்வானின் திருவடிகளை அண்டிய பின்னர்) , எம்பெருமானாரின் திருக்கல்யாண குணங்களையே புகழ்ந்து கூறியபடி, தவறான வழிகளில் செல்லாத நிலை ஏற்பட்டுவிட்டது. இன்று முதல் இனி வரும் காலங்களில் எந்த ஒரு விஷயமானாலும் எனக்குக் கஷ்டம் என்பதே இல்லை.

அவதாரிகை – இப்படி தம்முடைய அயோக்யதையைப் பார்த்து, "நமக்கு இது துச்சகம்" என்று மீள நினைத்தவர், ஆழ்வான் திருவடிகளில் ஸம்பந்தமுண்டானபின்பு எனக்கு அசக்யாம்ச மொன்றுமில்லை யென்று ஸ்தோத்ரத்திலே ப்ரவர்த்தராகிறார். ஜ்ஞாநபக்த்யாத் யநுபவ ரூபமான தம்முடைய அயோக்யதையை நினைத்து ப்ரபந்தாரம்பத்திலே பிற்காலித்து, இப்பாட்டிலே - ஆழ்வான் திருவடிகளின் ஸம்பந்தமாகிற ராஜகுல மாஹாத்ம்யத்தை அநுஸந்தித்து, இப்ப்ரபந்தோத்யோகம் கடிநமல்ல, ஸுலபமாயே யிருக்குமென்று அதிலே ஒருப்படுகிறார்.

விளக்கம் - இவ்விதமாகத் தன்னுடைய துதிக்கத் தகுதியின்மையைக் கண்டு, "இந்தச் செயல் நம்மால் இல்லாத ஒன்று" என்று அகன்று செல்ல எண்ணினார். ஆனால் ஸ்வாமி கூரத்தாழ்வானுடைய திருவடித் தொடர்பு தமக்குக் கிட்டிய பின்னர், தன்னுடைய தகுதியற்ற தன்மை தன்னை விட்டு நீங்கிவிட்ட காரணத்தால், தனக்கு அரிதான செயல் என்று ஏதும் இல்லை என்று தீர்மானித்தவராக மீண்டும் துதிக்கத் தொடங்குகிறார். அதாவது கடந்த பாசுரத்தில் ஞானம், பக்தி, பகவத் அனுபவம் போன்ற பல விஷயங்களில் தனக்கு தகுதியற்ற தன்மை உள்ளதை எண்ணியவராகத் தான் இயற்றத் தொடங்கிய இந்த ப்ரபந்தத்திலிருந்து பின் வாங்க எண்ணினார். ஆனால் அரசகுலத்தில் பிறப்பதைக் காட்டிலும் உயர்வான கூரத்தாழ்வானுடைய திருவடித் தொடர்பு தனக்குக் கிட்டியதை எண்ணி, இந்த ப்ரபந்தம் இயற்றும் செயல் என்பது அத்தனை கடினம் அல்ல, மிகவும் சுலபமானதே என்று எண்ணி இதில் நிலை நிற்கிறார்.

வ்யாக்யானம் - (மொழியைக் கடக்கும் பெரும்புகழான்) ஒரு சப்தத்தையிட்டு வர்ணிக்கவரிதாய் நித்யாபிவ்ர்த்தங்களாய்க் கொண்டு பரமபதத்தளவும் பெருகி வருகிற கல்யாண குணங்களை யுடையவன். "வாசாம் அகோசர மஹாகுண தேசிக அக்ர்ய கூராதிநாத கதித அகில நைச்ய பாத்ரம்" என்னக் கடவதிறே. (வஞ்சமுக்குறும்பாம்) வஞ்சக ஹேதுக்களாய் ததீய விஷயத்திலே ஸ்வஸாம்ய புத்திகளையும் ஸ்வஸ்மிந் ஆதிக்ய புத்திகளையும் பிறப்பித்து ஸ்வரூப நாசகங்களா யிருந்துள்ள அபிஜ்ஞ வித்யா வ்ர்த்தங்களாகிற அஹங்கார த்ரயமும். (முக்குறும்பு) "வ்ருத்யா பசுர் நரவபு: த்வஹம் ஈத்ருசோபி ச்ருத்யாதி ஸித்த நிகிலாத்ம குணாச்ரயோயம் இத்யாதரேண க்ருதிநோபி மித: ப்ரவக்தும் அத்யாபி வஞ்சந பரோத்ர யதீந்த்ர வர்த்தே" என்கிறபடியே ஜகத் ப்ரதாரகங்களான இம்மூன்றுமாகிற.

விளக்கம் - (மொழியைக் கடக்கும் பெரும்புகழான்) – சொற்களால் வர்ணிக்க இயலாதவைகளாகவும்; ஒவ்வொரு நாளும் வளர்ந்தபடி உள்ளவைகளாகவும், பரமபதம் முடிய பெருகி நிற்பதாகவும் உள்ள திருக்கல்யாண குணங்களைக் கொண்டவர். யதிராஜ விம்சதியில் (14) - வாசாம் அகோசர மஹாகுண தேசிக அக்ர்ய கூராதிநாத கதித அகில நைச்ய பாத்ரம் - எம்பெருமானாரே! இந்த உலகில் தகாத செயல்கள் செய்யும் ஒரு மனிதனை உதாரணம் என்று காட்ட வேண்டும் என்றால், அது நானே ஆவேன். கூரத்தாழ்வான் எவ்விதம் தன்னைத் தானே தாழ்வாகக் கூறினாரோ, அது போன்ற அத்தனை தாழ்வுகளும் இந்த உலகில் எனக்கும் உள்ளது - என்றது காண்க. (வஞ்சமுக்குறும்பாம்) - வஞ்சகம் என்றால் ஏமாற்றுதல். அதாவது அவனுக்கு அடிமையாக உள்ளதான ஆத்மா என்பதை மற்றொரு விதமாகக் காண்பது, அத்தகைய ஆத்மா மீது தனக்கு உரிமை உண்டு என்று எண்ணுவது போன்ற எண்ணங்களை உண்டாக்கி, ஆத்ம ஸ்வரூபத்திற்கு அழிவை ஏற்படுத்துவதான அஹங்காரம். இதுவே குறும்பு அல்லது குற்றம் ஆகும். இது குலம், கல்வி, நடத்தை ஆகிய மூன்றுவிதமாக உள்ளதாகும். (முக்குறும்பு) - யதிராஜ விம்சதியில் (7) - வ்ருத்யா பசுர் நரவபு: த்வஹம் ஈத்ருசோபி ச்ருத்யாதி ஸித்த நிகிலாத்ம குணாச்ரயோயம் இத்யாதரேண க்ருதிநோபி மித: ப்ரவக்தும் அத்யாபி வஞ்சந பரோத்ர யதீந்த்ர வர்த்தே - யதிகளின் நாதனே! எனது உடல் மட்டும் மனித வடிவில் உள்ளது, எனது செயல்கள் அனைத்தும் விலங்குகளின் செயலாகவே உள்ளது. இப்படி உள்ளபோது மற்றவர்களுக்கு நான் என்னை உயர்ந்த குணங்களின் இருப்பிடம், வேதவேதாந்தங்கள் கூறும் வழிப்படி நடப்பவன் என்று போலியாகக் காட்டிக்கொள்கிறேன். நான் அவர்களுக்கு எவ்விதம் தோற்றம் அளிக்கிறோனோ, அந்த தோற்றத்தை விட முற்றிலும் மாறுபட்டவனாகவே உள்ளேன். எனது நிலையானது இத்தனை இகழத் தக்கதாகவும் வருந்தத் தக்கதாகவும் உள்ளது - என்று கூறுவதற்கு ஏற்ப இந்த உலகில் பெரும்பாலானவர்களிடம் உள்ளதான இந்த மூன்றுவிதமான அஹங்காரம் என்பதான.

வ்யாக்யானம் - (குழியைக் கடத்தும்) நம்முடைய அபிமாநாந்தர்ப்பூதரை அந்தப் படுகுழியிலே விழாதபடி தம்முடைய உபதேசத்தாலே தத்வ ஹித புருஷார்த்த யாதாத்ம்ய ஜ்ஞாநத்தைப் பிறப்பித்து அதில் நின்றும் கடத்துமவன். கடத்துகை – தாண்டுவிக்கை. (குழியைக் கடக்கும்) என்று பாடமானபோது இம்மூன்றுமாகிற படுகுழியைக்

கடந்திருக்குமவ ரென்றபடி. (நங்கூரத்தாழ்வான்) நம்முடைய கூரத்தாழ்வான். இவரை உத்தரிப்பிக்கைக்குக்காணும் அவருடைய வவதாரம். ஆகையாலேயிறே "நங்கூரத்தாழ்வான்" என்கிறார். (கூரம்) என்கிற திவ்யதேசத்துக்கு நிர்வாஹகரான ஸ்வாமியுடைய திருநாமத்தை வஹித்தவர். "எங்கூரத்தாழ்வான்" என்றும் பாடஞ் சொல்லுவார்கள். (சரண் கூடியபின்) இப்படிப்பட்ட வைபவத்தையுடையரான ஆழ்வானுடைய திருவடிகளை ஆச்ரயித்த பின்பு. இப்படிப்பட்ட ராஜகுலமாஹாத்ம்யத்தை நான் பெற்றபின்பு.

விளக்கம் - (குழியைக் கடத்தும்) - தன்னிடம் பிரியத்துடன் உள்ளவர்களான தனது மனதுக்கு நெருக்கமாக உள்ளவர்களை அந்தப் படுகுழியில் விழாதபடி தன்னுடைய உபதேசங்கள் மூலமாக உண்மை மற்றும் நன்மை என்ற புருஷார்த்தம் குறித்த ஞானத்தை உள்ளது உள்ளபடி உண்டாக்கி, மேலே கூறப்பட்டதான குற்றங்களில் அவர்கள் அகப்படாமல் செய்பவர். கடத்தல் என்றால் தாண்டும்படிச் செய்தல். குழி என்பதால் இவ்விதம் உரைக்கிறார். சிலர் "குழியைக் கடக்கும்" என்றும் கூறுவர். இவ்விதம் பொருள் கொண்டால், அந்த மூன்றுமாகிற படுகுழியைக் கடந்தவர் என்று கருத்து. (நங்கூரத்தாழ்வான்) - நம்முடைய நெருக்கமான கூரத்தாழ்வான். திருவரங்கத் தமுதனாரைக் கரையேற்றுவதற்காவே கூரத்தாழ்வான் அவதரித்தார் என்பது போன்று உரைக்கிறார். அதனால்தான் "நம் கூரத்தாழ்வான்" என்கிறார். (கூரம்) - காஞ்சீபுரத்தை அடுத்துள்ளதான கூரம் என்ற திவ்யதேசத்தை ஆள்கின்ற ஸர்வேச்வரனுடைய திருநாமத்தைக் கொண்டவர். "என் கூரத்தாழ்வான்" என்றும் சிலர் உரைப்பர். (சரண் கூடியபின்) - இப்படிப்பட்ட பெருமைகள் கொண்டவராகிய கூரத்தாழ்வானுடைய திருவடிகளை அண்டிய பின்னர். இவ்விதமாக உள்ள "அரசகுலத்தில் பிறவி" என்பதைக் காட்டிலும் உயர்ந்த பேற்றை அடைந்த பின்னர்.

வ்யாக்யானம் - (பழியைக் கடத்தும்) இவ்வளவாக நான் மூலையடியே நடந்து போகையாலே வந்தேறியாய் லோககர்ஹிதமாய் தம்முடைய குணகீர்த்தநம் பண்ணுகைக்கு விரோதியான வென்னுடைய பாபத்தை ஸவாஸநமாக நிவர்த்திப்பிக்கும். (இராமாநுசன்) எம்பெருமானாருடைய. (புகழ்பாடி) "ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமாநுச முனிவன்", "தமிழ்மறைக ளாயிரமு மொய்ம்பால் வளர்த்த இதத்தா யிராமாநுசன்" என்னும்படியான அவருடைய கல்யாண குணங்களை இப்ப்ரபந்தமுகேந கீர்த்தநம்

பண்ணி. (அல்லாவழியைக் கடத்தல்) என்னுடைய அபதப்ரவ்ர்த்தியைத் தப்புகை. அன்றிக்கே கர்ப்பயாம்ய தூமாதிகளை ஆச்ரமிக்கையா லென்னுதல். எம்பெருமானாருடைய திருவடிகளைக் கிட்டி அநுபவிக்கையிலென்றபடி.

விளக்கம் - (பழியைக் கடத்தும்) பழி என்பது பாவம். நான் இதுநாள் வரை எனது விருப்பத்தின்படி வாழ்ந்த காரணத்தாலே எனக்கு வந்து சேர்ந்ததும், இந்த உலகில் உள்ள அனைவருடைய நன்மைக்காகவும் எம்பெருமானாருடைய குணங்கள் குறித்து துதிப்பதற்குத் தடையாக உள்ளதும் ஆகிய என்னுடைய பாவங்களை அவற்றுடைய வாசனையுடன் நீக்குகின்ற. (இராமாநுசன்) - எம்பெருமானாருடைய. (புகழ்பாடி) – “ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமாநுச முனிவன்”, “தமிழ்மறைக ளாயிரமு மொய்ம்பால் வளர்த்த இதத்தா யிராமாநுசன்” என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ளதான அவருடைய திருக்கல்யாண குணங்களை இந்த ப்ரபந்தம் மூலமாகக் கீர்த்தனை செய்து. (அல்லாவழியைக் கடத்தல்) – என்னை “தகாத வழியில் ஈடுபடுதல்” என்பதிலிருந்து காப்பாற்றி. அல்லது மீண்டும் கர்ப்பம், தூம மார்க்கத்தில் செல்லுதல் போன்ற நிலையை மாற்றி. எம்பெருமானாருடைய திருவடிகளை நான் அண்டி நின்று அனுபவிக்கும்போது.

வ்யாக்யானம் - (எனக்கினியாதும் வருத்தமன்றே) இப்படி எம்பெருமானாருடைய கைங்கர்யத்திலே அதிகரித்து க்ர்தார்த்தனான வெனக்கு இத்தனை நாளும் சில வுபத்ரவ முண்டா யிருந்தாலும் இன்று முதலாக மேலுள்ள காலமெல்லாம். (யாதும்) எந்த விஷயத்திலே யாகிலும். (வருத்தமன்றே) அஸாத்யமானதில்லை. (அல்லாவழியை) என்று - அம்மார்க்கங்கள் அதிஹேயங்களாகையாலே தம்முடைய திருப்பவளத்தாலே இன்னதென்று நிர்த்தேசிக்க அருவருத்து ஸாமாந்யேந வருளிச்செய்தார். (அல்லா வழியைக் கடத்தல் எனக்கினியாதும் வருத்தமன்றே) “ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜன பரமம் ஸாம்யம் உபைதி” என்கிறபடியே – ஸகல பாப விமோக்ஷண பூர்வமான பரமபதத்தைப் பெறுகையிலும் அவருக்கு ஒரு கண்ணழிவின்றிக்கே அத்யந்த ஸகல பலமாய்க் காணுமிருப்பது. “வைகுந்த மாநகர் மற்றது கையதுவே” என்னக்கடவதிறே.

விளக்கம் - (எனக்கினியாதும் வருத்தமன்றே) - இவ்விதம் எம்பெருமானாருடைய கைங்கர்யத்தில் நான் மிகுந்த ஈடுபாடு கொண்டு நிற்கும்போது, இத்தனை நாள்கள் எனக்குப் பலவிதமான இடையூறுகள் ஏற்பட்டபோதிலும், இனி வரும் காலங்களில்

எல்லாம். (யாதும்) - எப்படிப்பட்ட விஷயமாக இருந்தாலும். (வருத்தம் அன்றே) - எனக்கு அந்த விஷயம் குறித்துக் கவலை இல்லை. (அல்லாவழியை) - "அல்வாவழி" என்று ஏன் பொதுவாகக் கூறவேண்டும்? அந்த வழிகள் அனைத்தும் மிகவும் தாழ்ந்தவை என்பதால், இராமாநுசருடைய திருநாமத்தை உச்சரிக்கும் தனது திருவாய் கொண்டு அவற்றை உரைக்க அருவறுப்பு கொண்டவராகப் பொதுவாக அருளிச்செய்தார். (அல்லா வழியைக் கடத்தல் எனக்கினியாதும் வருத்தமன்றே) - முண்டக உபநிஷத் (3-1) - ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜன பரமம் ஸாம்யம் உபைதி - புண்யபாவங்களை உதறியவனாக, தூய்மை நிறைந்தவனாக, பரப்ரஹ்மத்தை ஒத்த நிலையை அடைகிறான் - என்று கூறுவதற்கு ஏற்ப, அனைத்து புண்ணிய பாவங்களும் கழிந்த நிலை உண்டானவுடன் கிட்டவல்ல பரமபதத்தைப் பெறுதல் என்பது கூட இவருக்குக் கடினம் இன்றி மிகவும் எளிதாக உள்ளது. திருவாய்மொழி (4-10-11) - வைகுந்த மாநகர் மற்றது கையதுவே - என்று உரைப்பது காண்க.

8. வருத்தும் புறவிருள் மாற்ற எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத்
திரித்து அன்று எரித்த திருவிளக்கைத் தன் திருவுள்ளத்தே
இருத்தும் பரமன் இராமானுசன் எம் இறையவனே.

பொருள் – (இது வரை கூறப்பட்ட பாசுரங்கள் அனைத்தும் உபோத்காதம் எனப்படும் முன்னுரை ஆகும். இனி வரும் பாசுரம், மூலம் தனது துதியைத் தொடங்குகிறார்) உலகவிஷயங்களை அடையும் பொருட்டு, "ஆட்டை அறுத்துக் கொடு, உன் தலையை அறுத்துக் கொடு" என்னும் க்ஷுத்ர தேவதைகளையும், மற்ற தேவதைகளையும் ஆராதித்து, அதனால் ஏற்படும் அஜ்ஞானம் என்ற இருளில் முழ்கி பலரும் வருந்துகின்றனர். இத்தகைய அஜ்ஞானம் என்ற இருள் நீங்கும்படியாக, நமக்கு ஏற்ற உபகாரம் செய்தவர் பொய்கையாழ்வார் ஆவார். வேதாந்தத்தின் முழுப் பொருளும் விளங்கும் விதமாகவும், "நடை விளங்கு தமிழ்" என்று போற்றப்படும் அழகான தமிழ் மொழியையும் இணைத்து அவர் செய்த உபகாரம் என்ன? தன்னிடம் சேர்ந்து விடும்படி

அவரை அணுகி, ஸர்வேச்வரன் நெருக்கியபோது (முதல் ஆழ்வார்கள் மூவரும் திருக்கோவிலூரில், ஒருவரை ஒருவர் அறியாமல் நிற்க, அவர்களை விளக்கும் விதமாக ஸர்வேச்வரன் அவர்களுக்கு இடையில் புகுந்து நெருக்கி நின்றான்), "வையம் தகளியா" என்ற பாசுரம் மூலம் உயர்ந்த திருவிளக்கை ஏற்றினார். இத்தகைய ஞானம் என்ற திருவிளக்கைத் தனது நெஞ்சத்தில் எப்போதும் ஏற்றி வைத்து, நிலைக்கும் ஆசார்யரான எம்பெருமானார் நமக்கு ஸ்வாமியாக உள்ளார்.

அவதாரிகை - முதலிலே எம்பெருமானாருடைய திருநாமங்களைச் சொல்லுவோம் வா வென்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்து, அநந்தரம் தம்முடைய திருவுள்ளம் எம்பெருமானாருடைய சீலகுணத்திலே ஆழங்கால்பட்டு மற்றொரு விஷயத்தை யறியாதபடியைக் கண்டு ஆச்சர்யபட்டு, அநந்தரம் தம்முடைய திருவுள்ளம் ததீயபர்யந்தமாகத் தம்மைச் சேர்த்த மஹோபகாரத்துக்குத் தோற்று அதின் காலிலே விழுந்து, அநந்தரம் எம்பெருமானார் தம்மை நிர்ஹேதுகமாக விஷயீகரித்த ராஜகுல மாஹாத்ம்யத்தை ப்ரகடியா நின்று கொண்டு தமக்கொரு குறையுமில்லை யென்று தம்முடைய ஸ்த்தைர்யத்தை யருளிச்செய்து, அநந்தரம் தத்விஷய ஸ்தோத்ரத்திலே ப்ரவ்ர்த்தரானவர், அதுக்கு ஸஹியாத ப்ரதிகூலரை நிந்தித்தாராகில் செய்வதென்னென்று நிவ்ர்த்யுந்முகராய், மீளவும் தாமே எம்பெருமானாரளவிலே ப்ராப்ய புத்தியில்லாதார் நிந்தித்தார்களாகிலும் அதுவே நமக்கு ஸ்துதியாமத்தனை, தத்விஷய ப்ரேம யுக்தர் இவருடைய ப்ரீதி ப்ரேரிக்க வந்த சொல்லன்றோவென்று இதில் தோஷதர்சநம் பண்ணமாட்டாதே இதுதன்னை குணமாக நினைப்பவரென்று ஸமாஹிதராய் ஸ்தோத்ரம் பண்ண ஒருப்பட்டு, அநந்தரம் இப்படியானாலும் அந்த ப்ரேமந்தன்னை நிரூபித்த விடத்தில் அது தமக்கு விஷயாநுகுணமாகச் சொல்லவரிதாகையாலும் தமக்கு ஸ்தோத்ராதிகாரமில்லை யென்று சொல்லி ஆக்ஷேபித்து, அநந்தரம் தமக்குண்டான ஆழ்வான் திருவடிகளில் ஸம்பந்தத்தை யநுஸந்தித்து, இது உண்டான பின்பு நமக்கு அசக்யாசமொன்றுமில்லை யென்று ஸமாஹிதமநஸ்கராய் நின்றார் - கீழ்; இவ்வளவும் ஸ்தோத்ரோபோத்காதம்; இனிமேலெல்லாம் ஸ்தோத்ரம் பண்ணுகிறார். லோகத்தாருடைய அஜ்ஞாநாந்தகாரத்தை நிவ்ர்த்திப்பித்து அவர்களுக்கு ஹேயோபாதேய விவேகத்தை யுண்டாக்கி உபகரிப்பதாக ஜ்ஞாந தீபத்தை யெடுத்து பொய்கையாழ்வா ரருளிச்செய்த திவ்யப்ரபந்தத்தைத் தம்முடைய திருவுள்ளத்தில் ஸுப்ரதிஷ்ட்டிதமாம்படி வைத்த பெருமையையுடையரான எம்பெருமானார் நமக்கு நாதரென்கிறார்.

விளக்கம் – தொடக்கத்தில், "எம்பெருமானாருடைய திருநாமங்களை உச்சரிப்போம், வருக", என்று தனது நெஞ்சத்தை குறித்து அருளிச்செய்தார். பின்னர் தன்னுடைய நெஞ்சமானது எம்பெருமானாருடைய சீல குணத்தில் நிலைநின்று, வேறு எந்தவொரு விஷயத்தையும் அறியாமல் நின்றதைக் கண்டு வியந்தார். பின்னர் தனது நெஞ்சம் தன்னை எம்பெருமாருடைய அடியார்களிடம் கொண்டு சேர்த்ததை எண்ணி, அந்தப் பேருதவிக்குத் தோற்றவராக, நெஞ்சத்தின் கால்களில் விழுந்து நின்றார். தொடர்ந்து, எந்த விதமான காரணமும் இல்லாமல் எம்பெருமானார் தனக்குக் காண்பித்த கருணை என்பதான அரசகுலபதவியைக் காட்டிலும் உயர்ந்த நிலையை வெளிப்படுத்தி, தனக்கு அதன் காரணமாக எந்தவிதமான குறையும் இல்லை என்று தனது உறுதியை உரைத்தார். தொடர்ந்து "எம்பெருமானாருடைய கருணை" என்பதிலேயே நிலை நின்று, அதனை மட்டுமே துதித்தபடி இருந்தார். இதனை ஏற்க இயலாத சிலர் இச்செயலை நிந்தித்தார்கள் என்றால் என்ன செய்வது என்று சிந்தித்து நின்றார். பின்னர் அந்தப் பிரமிப்பில் இருந்து வெளிவந்தவராக, எம்பெருமானாரைச் சென்று அடையவேண்டும் என்ற எண்ணம் அற்றவர்கள் நிந்தித்தாலும், அவ்விதம் அவர்கள் நிந்திப்பதே தனக்குப் புகழ் ஆகும்; எம்பெருமானாருடைய கருணையில் ஈடுபட்டு நிற்பவர்கள், "இவ்விதம் இவரை நிந்தித்தல் என்பது இவருடைய ப்ரீதியைத் தாழ்த்துவதற்கு ஆகும்", என்று உரைத்து அந்தச் சொற்களில் எந்தவிதமான தோஷமும் ஆராயாமல், இந்தச் செயல்களைக் குணங்களாகக் கொள்வார்கள் என்றும் சமாதானம் செய்து கொண்டு, எம்பெருமானாரைத் துதிப்பதில் நிலைநின்றார். இவ்விதம் உள்ளபோதிலும், அந்த ப்ரேமையை உறுதியாக்கியபோதிலும், அந்தப் ப்ரேமம் என்பது தனக்கு முழுமையாகக் கிட்டாமல் உள்ளதாலும், அதனை முழுமையாக உரைக்க இயலாத காரணத்தாலும், அதில் தனக்குத் தகுதி இல்லை என்று விலக எண்ணினார். தொடர்ந்து தனக்குள்ள கூரத்தாழ்வானுடைய திருவடித் தொடர்பை எண்ணியவராக, அந்தத் தொடர்பு உண்டான பின்னர் தனக்குச் செய்ய முடியாதது ஏதும் இல்லை என்று சமாதானம் ஆனார். இதுவரை கூறப்பட்டது முழுவதும் "இராமாநுச நூற்றந்தாதி" என்னும் இந்தத் துதியினைத் தொடங்கியதற்கான முன்னுரை ஆகும். இனி எம்பெருமானாரைக் குறித்துள்ள துதியைத் தொடங்குகிறார். இந்த உலகில் உள்ளவர்களுடைய அறியாமை என்ற இருளை நீக்கி, அவர்களுக்கு "உயர்ந்தது எது, தாழ்ந்தது எது" என்று பிரித்து அறியும் அறிவை ஏற்படுத்தி, உதவி செய்வதற்காக ஞானம் என்ற ஒளியைக் கையில் எடுத்து, பொய்கையாழ்வார் அருளிச்செய்த திவ்யப்ரபந்தத்தைத்

தனது திருவுள்ளத்தில் நிலைநிற்கும்படிச் செய்த பெருமை உள்ள எம்பெருமானாரே தனக்கு ஸ்வாமி என்கிறார்.

வ்யாக்யானம் – (வருத்தும்புறவிருள் மாற்ற) வருத்தம் என்கிறது இருளுக்கு விசேஷணம். வருத்தத்தைப் பண்ணக்கடவதான இருளென்றபடி. புறவிருள் – பாஹ்ய விஷய ப்ராவண்யத்துக் குடலான அஜ்ஞாநம். அதுதான் லோகத்திலே வருத்தங்களைப் பண்ணக் கடவதாயிருக்குமே. நிஷித்த விஷயங்களிலே ஸக்தனானவனுக்கு அவற்றைப் பெறும்போதும், பெற்ற பின்பும் ஐஹிகாமுஷ்மிகங்களிலும் சில துக்கங்களுண்டிறே; ஒரு வேச்யா ஸக்தனானவன் அவளுக்கு ஒரு வ்யாதி ப்ராப்த்தமாய் ப்ராண ஸம்சயம் வந்தவாறே இவள் பிழைத்தாளாகில் நான் அக்நி ப்ரவேசம் பண்ணுகிறே னென்று க்ஷுத்ரதேவதை காலிலே விழுந்து அப்படியே செய்தானென்று லோகப்ரஸித்தமிறே. சில ஐஹிக பலன்களைக் குறித்து க்ஷுத்ரதேவதைகளை ஆராதிக்கப்போனால், "ஆட்டை யறுத்துத் தா" என்றும், "உன் தலையை யறுத்துத் தா" என்றும், செடிலாட்டம் பண்ணச் சொல்லியும் அதிகோரமான பூஜைகளை அபேக்ஷிக்க அப்படியே அவனும் பண்ணிக் கொண்டு போவானிறே; ராவணன் தன் தலைகளை யறுத்து ருத்ரனை ஆராதித்தா னென்றும் ப்ரஸித்தமிறே. ராஜாவுக்கு ஒருவன் புத்ரனைக் கொடுத்து அந்த புத்ரனை விநாசம் பண்ணி யாகம் பண்ணவேணுமென்று சொல்ல, அந்த ராஜாவும் அப்படியே பண்ணி அபதாநம் ப்ரஸித்தமிறே. "மோத்தூளந ஜடாதாரண மலலேபந ஸுராகும்ப ஸ்த்தாபந நத்வோர்த்த்வபாஹுத்வாதி ரூபமான வருத்தத்தை த்ர்ஷ்டத்திலும், நரகாநுபவ ரூபமான வருத்தத்தை ஆமுஷ்மிகத்திலும் பண்ணக்கடவதாயிறே பாஹ்யவிஷய ப்ராவண்யத்துக் குடலான அஜ்ஞாநமிருப்பது.

விளக்கம் – வருத்தம் என்பது இருளுக்கு உரிய தன்மையாகும். வருத்தத்தை உண்டாக்கவல்ல இருள் என்று கருத்து, புறவிருள் - தாழ்ந்த விஷயத்தில் ஆழ்ந்து நிற்பதில் உண்டாகும் ஆசைக்குக் காரணமான அறியாமை. அந்த அறியாமை என்பதே இந்த உலகத்தில் பல துன்பங்களை ஏற்படுத்தக் காரணமாக உள்ளது. வேதங்களால் தள்ளப்பட்ட செயல்களில் ஈடுபட்டவனுக்கு, அந்தச் செயல்களில் ஈடுபடும்போது, அதன் மூலம் பயன் பெறும்போதும், இம்மை மறுமைகளில் துக்கம் ஏற்படுவது உறுதியே ஆகும். ஒரு விபச்சாரியிடம் அதிகமான மயக்கம் கொண்ட ஒருவன், அவளுடைய உயிர் போகக்கூடிய வியாதி அவளுக்கு வந்த போது, அவள் பிழைப்பாளா என்ற சந்தேகம்

வந்தது; அப்போது அவன், "இவள் உயிர் பிழைத்தால் நான் அக்னியில் குதிப்பேன்" என்று துர்தேவதை ஒன்றிடம் வேண்டுதல் செய்தான். அவள் உயிர் பிழைத்த பின்னர், அது போன்றே செய்து துக்கம் அடைந்தான். தாழ்வான உலகியல் பலன்களை அடைவதற்காக இது போன்றுள்ள தாழ்ந்த தெய்வங்களின் கால்களில் விழுந்து, அவர்களை ஆராதித்தால் அவை இவனிடம், "ஆட்டை அறுத்துக் கொடு, உனது தலையை அறுத்துக் கொடு, கம்பியில் உன்னைக் கட்டிக் கொண்டு ஆடு", என்று கொடுரமான பூஜைகளைச் செய்யும்படி இவனைப் பணித்து நிர்ப்பந்திக்கின்றன. இவனும் அதனைச் செய்தபடி துக்கம் கொள்கிறான். இராவணன் தனது தலையை அறுத்து ருத்ரனை ஆராதித்த சரிதம் அனைவரும் அறிந்ததாகும். ஒரு அரசனுக்குப் புத்திரபாக்கியம் கொடுத்து, பின்னர் அந்தப் பலனை அளித்ததற்குப் ப்ரதிபலனாக அந்தப் புத்திரனையே பலி கொடுக்கும்படியான யாகம் நடத்தவேண்டும் என்று ஒரு துர்தேவதை வற்புறுத்த, அந்த அரசனும் அவ்விதமே செய்தான். இப்படியாகத் துன்பங்களை நேரில் காணும்படியாகவும், நரக அனுபவம் என்பதான ரூபத்திலும் ஏற்படுத்த வல்லதாக, தாழ்ந்த விஷயங்களின் மீது ஆசை கொள்ளக் காரணமாக உள்ளதாக அறியாமை உள்ளது.

வ்யாக்யானம் - (புறவிருள்) ப்ரத்யக்ஷமான ஆத்மாவையும் ததந்தர்யாமியான ஈச்வரனையும் போலன்றிக்கே அவ்விருவரிலுங் காட்டிலும் பாஹ்யராய் ப்ரக்ர்திவித்தராய் அபரிசுத்தராய், "பீஷாஸ்மாத் வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய: பீஷாஸ்மா தக்நிஸ் சேந்த்ரஸ்ச ம்ருத்யுர் தாவதி பஞ்சம இதி" என்றும், "ஏதௌ த்வௌ விபுத ச்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸம்ருதள ததாதர்சித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வேச்வரனாலே ப்ராப்தமான ஐச்வர்யத்தைப் பெற்றும் ரஜஸ் தமோத்ரேகத்தாலே அத்தை மறந்தும் அஹங்கார க்ரஸ்தராய்ப் போருகிற ஸாமாந்ய தேவதைகளை க்ஷுத்ர பலன்களுக்காக ஆராதித்தவாறே, "தேஹி மே ததாமி தே" என்னும்படி ஸாபேக்ஷரான வவர்களை யாசிக்கப் பண்ணும் அஜ்ஞாநாந்தகார மென்னவுமாம். (மாற்ற) அத்தை ஸவாஸநமாகப் போக்குகைக்காக.

விளக்கம் - (புறவிருள்) - காண்பதற்கு ஏற்றதான ஆத்மா மற்றும் அதன் உள்ளே அந்தர்யாமியாக உள்ள ஈச்வரன் போல் ஞானமயமாக இல்லாமல், அவர்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்களாக, உலக விஷயங்களில் ஈடுபட்டவராக, அசுத்தமானவராக, தைத்திரீய உபநிஷத் ப்ரஹ்மானந்தவல்லீ – பீஷாஸ்மாத் வாத: பவதே பீஷோதேதி

ஸூர்ய: பீஷாஸ்மா தக்நிஸ் சேந்த்ரஸ்ச ம்ருத்யுர் தாவதி பஞ்சம இதி – அவனுக்குப் பயந்து காற்று வீசுகிறது, சூரியன் உதிக்கிறது, சந்த்ரனும் அக்னியும் அவ்விதமே ஆகும் - என்றும், ஏதௌ த்வௌ விபுத ச்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸம்ருதௌ ததாதர்சித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ – நான்முகன், சிவன் இருவரும் தேவர்களில் தலைமை பெற்றவர்கள்; எம்பெருமான் சாந்தமுடன் இருந்தபோது நான்முகனும், கோபத்துடன் இருந்தபோது சிவனும் உண்டானார்கள். அவனால் காட்டப்பட்ட வழிகளின்படி இவர்கள் ஸ்ருஷ்டியும், ஸம்ஹாரமும் செய்கின்றனர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள ஸர்வேச்வரனால் கிட்டக்கூடிய உயர்ந்த செல்வத்தைப் பெற்றபோதிலும், ரஜஸ் மற்றும் தமஸ் குணங்கள் தலையெடுத்த காரணத்தால், அதனை மறந்து, அஹங்காரம் நிறைந்த தாழ்ந்த தெய்வங்களை மிகவும் அற்பமான பலன்களுக்காக ஆராதித்து. யஜுர்வேதம் (1-8) – தேஹி மே ததாமி தே நிமே தேஹி நிதே ததே – நீ எனக்கு ஒரு பலனைக் கொடு, நான் உனக்கு ஒரு பலனைக் கொடுக்கிறேன் - என்று கூறுவதற்கு ஏற்ப தாழ்ந்த பலன்களை அடையும் பொருட்டு அவர்களிடம் யாசகம் கேட்கச் செய்யும் அறியாமை என்ற இருள் என்றும் கூறலாம். (மாற்ற) – அந்த இருளை அதன் வாசனையுடன் நீக்குவதற்காக.

வ்யாக்யானம் - (எம்பொய்கைப்பிரான்) தம்மொருவர் பொருட்டன்றிக்கே நம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகள் பொருட்டும் வந்தவரித்தாரென்று காணும் இவருடைய அபிநிவேசம். (எம்பொய்கை) என்னுடைய கோடியான ப்ரபந்ந ஜநங்களுக்காக காஞ்சீ நகரத்திலே பொய்கையென்னும் பேரையுடைத்தான புண்டரீக ஸரஸ்ஸிலே அவதரித்து, அது தன்னையே நிரூபகமான திருநாமமாகவுடையரான. அஜ்ஞாநாந்தகார நிவர்த்தகமாய் ப்ரதீபம்போலே தத்வார்த்த ப்ரகாசகமா யிருக்கிற திவ்யப்ரபந்தத்தை நிர்மித்து உபகரித்த உபகாரகர்.

விளக்கம் - (எம்பொய்கைப்பிரான்) - தன் விஷயத்தில் மட்டும் அல்லாமல் தன்னுடன் ஸம்பந்தம் உள்ளவர், அவர்களுடன் ஸம்பந்தம் உள்ளவர் என்றுள்ளவர்கள் பொருட்டும் வந்து அவதாரம் செய்தவர் என்றுள்ள பொய்கையாழ்வார். (எம்பொய்கை) - என்னுடைய எல்லை நிலமாக உள்ள “ஸர்வேச்வரனைத் தஞ்சம் புகுந்தவர்கள்” என்பவர்களுக்காக, காஞ்சீபுரத்தில் பொய்கை என்னும் பெயர் கொண்ட தாமரை மலர்கள் நிறைந்த ஸரஸ்ஸில் அவதரித்து, அதன் மூலம் விளங்கவல்லதான திருநாமத்தைக் கொண்டவர்.

அறியாமை என்னும் இருளை நீக்கவல்ல தீபம் போன்று, உண்மைகளை உள்ளது உள்ளபடி அறிவிக்கவல்ல ப்ரகாசம் நிறைந்த திவ்யப்ரபந்தத்தை அருளிச்செய்து உதவி புரிந்த பொய்கையாழ்வார்.

வ்யாக்யானம் - (மறையின் குருத்தின் பொருளையும்) "தீபோபமேநேஹ யுக்த: ப்ரபச்யேத்" என்றும், "தேஷாமேவாநுகம்பார்தம் அஹமஜ்ஞாநஜம் தம: நாஸயாம்யாத்ம பாவஸ்தோ ஜ்ஞாந தீபேந பாஸ்வதா" என்றுஞ் சொல்லப்படுகிற வேதாந்தார்த்தங்களையும். (செந்தமிழ் தன்னையும்) இவருடைய ப்ரபந்தத்துக்குச் செம்மையாவது - தத்வஹித புருஷார்த்தங்களை அடைவே ப்ரதிபாதிக்குமளவில் ஆதிமத்யாவஸாநங்களிலே ஏக ரூபமாயிருக்கை. (தமிழ் தன்னையும்) த்ரவிட ரூபமான திவ்ய ப்ரபந்தந் தன்னையும். (கூட்டி) வேதாந்தார்த்தங்களையும் நடைவிளக்கு தமிழான சொல்லையும் தன்னிலே சேரும்படி ஸந்தர்ப்பமாக்கி.

விளக்கம் - (மறையின் குருத்தின் பொருளையும்) – ச்வேதாஸ்வதர உபநிஷத் (2-15) - தீபோபமேநேஹ யுக்த: ப்ரபச்யேத் - யோகி தன்னை ப்ரகாசமான விளக்கு போன்று காண்கிறான் - என்றும், கீதை (10-11) - தேஷாமேவாநுகம்பார்தம் அஹமஜ்ஞாநஜம் தம: நாஸயாம்யாத்ம பாவஸ்தோ ஜ்ஞாந தீபேந பாஸ்வதா – அவர்களுக்கு அருள் செய்யும்விதமாக அவர்களுடைய உள்ளத்தில் நிலையாக நின்று அறியாமையால் உண்டான இருளை, உண்மை ஞான ரூபமாக உள்ள விளக்கு மூலம் நான் அழிக்கிறேன் - என்றும் புகழப்படும் வேத வேதாந்தங்களின் ஆழ்பொருள்களையும். (செந்தமிழ் தன்னையும்) - இவருடைய ப்ரபந்தத்துக்கு அழகு என்னவென்றால் உண்மை மற்றும் நன்மை என்பதான புருஷார்த்தங்களை உள்ளது உள்ளபடி உரைக்கும் விஷயத்தில் முதல் பகுதி, நடுப்பகுதி மற்றும் இறுதிப்பகுதி ஆகிய மூன்றிலும் ஒரே போன்று இருத்தல் ஆகும். (தமிழ் தன்னையும்) - திராவிட மொழியில் அமைந்த திவ்யப்ரபந்தத்தையும் (கூட்டி) – அதாவது வேதங்களில் பொதிந்து கிடக்கும் ஆழ்பொருள்களையும், பெருமாள் திருமொழி (1-11) – நடைவிளங்கு தமிழ் - என்பதற்கு ஏற்ப உள்ள தமிழாலான சொற்களையும் ஸர்வேச்வரனாகிய தன்னுடன் வந்து சேரும்படியான வாய்ப்பு உண்டாக்கி.

வ்யாக்யானம் - (ஒன்றத்திரித்து) அவ்விரண்டையும் ஒன்றக்கொன்று சேரும்படி ஒப்பித்து. (அன்று) திருக்கோவலூரிலே ஒரு ராத்ரி அந்தகாரத்திலே முதலாழ்வார்கள் மூவரும் வந்து

அதிஸங்குசிதமான வொரு திருவிடை கழியிலே ஒருவரையொருவர் அறியாமல் நிற்க, இவர்களை ஸம்ச்லேஷிக்கைக்காக ஆயனார் வந்து மூவர் நடுவிலும் புகுந்து அவர்களை நெருங்கின ஸமயத்திலே. (எரித்த திருவிளக்கை) "வையந் தகளியா வார்கடலே நெய்யாக வெய்ய கதிரோன் விளக்காக" என்று சதுர்தச புவநாத்மகமான லோகமெல்லாம் தகளியாகப் பண்ணியும், ஜலதத்வத்தை யெல்லாம் ஒருபடியாகக் கொண்ட ஸப்த ஸமுத்ரங்களை நெய்யாகப் பண்ணியும், தீக்ஷ்ண கிரணனான ஸூர்யனை விளக்காகச் சேர்த்தும், லோகத்திலிருந்த பதார்த்தங்கள் என்றும் பிறிகதிர்படாதபடி எல்லாவற்றையும் ப்ரகாசிக்கும்படி யிட்டருளின திவ்யப்ரபந்த ரூப தீபத்தை யென்றபடி.

விளக்கம் - (ஒன்றத்திரித்து) – வேதார்த்தங்கள், தமிழாலான சொற்கள் ஆகிய இரண்டையும் ஒன்றுக்கொன்று சேரும்படியாகச் செய்து. (அன்று) – திருக்கோவலூரில் ஒருநாள் இரவில், முதலாழ்வார்கள் மூன்று பேரையும் மிகவும் சிறியதான ஒரு வீட்டின் வாசலில் ஒருவரை ஒருவர் அறியாத விதத்தில் நிற்கவைத்து, அவர்களுடன் சேரும் விதத்தில் ஸர்வேச்வரன் வந்து அவர்கள் மூவர் நடுவில் புகுந்து, அவர்களை நெருக்கிய அந்த நேரத்தில். (எரித்த திருவிளக்கை) - முதல் திருவந்தாதி (1) - வையந் தகளியா வார்கடலே நெய்யாக வெய்ய கதிரோன் விளக்காக – என்று கூறுவதற்கு ஏற்ப பதினான்கு லோகங்களை அகல்விளக்காகவும், அனைத்து ஜலங்களையும் தன்னுள் சேர்த்துக் கொண்டதான ஏழு ஸமுத்ரங்களை நெய்யாகவும், சுட்டெரிக்கும் கதிர்கள் கொண்ட சூரியனை விளக்காகவும் வைத்து, லோகத்தில் உள்ள எந்த ஒரு பொருளும் அதிலிருந்து தப்பித்துச் சென்று விடாதபடி அனைத்தையும் விளங்க வைக்கும் விதத்தில் அருளிச்செய்த திவ்யப்பிரபந்த ரூபத்தில் உள்ள விளக்கை.

வ்யாக்யானம் - (தந்திருவுள்ளத்தேயிருத்தும்) அத்தீபத்தை ஸ்நேஹ நிர்ப்பரமான தம்முடைய திருவுள்ளத்தில் ஸ்தாவர ப்ரதிஷ்டையாம்படி நிறுத்தவல்ல. (பரமன்) "தேவம் ஆசார்யம் இவ உபாஸீத்" என்றும், "அஜ்ஞான திமிராந்தஸ்ய ஞானாஜ்ஞாந ஷலாகயா சக்ஷுர் உந்மீலிதம் யேந தஸ்மை ஸ்ரீகுரவே நம:", என்றும், "அஜ்ஞாந த்வாந்த ரோதாத் அக பரிஹரணாத் ஆத்ம ஸாம்யாவஹத்வாத்; ஜந்ம ப்ரத்வம்ஸி ஜந்ம ப்ரத கரிமதயா திவ்ய த்ருஷ்டி ப்ரபாவாத்; நிஷ்ப்ரத்யூஹாந்ருசம்ஸ்யாத் நியதரஸதயா நித்ய சேஷித்வ யோகாத்; ஆசார்ய: ஸத்பிரப்ரத்யுபகரண தியா தேவவத் ஸ்யாதுபாஸ்ய:" என்றுஞ் சொல்லப்பட்ட பெருமையை யுடையரான. (இராமாநுசன்) எம்பெருமானார். (எம்மிறையவனே)

எங்களுடைய நாதர், ஸ்வாமியென்றபடி. “ஆசார்ய தேவோ பவ”, “குருரேவ பரப்ரஹ்மா”, “ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாத் சரூபீ ந ஸம்சய” என்னக்கடவதிறே.

விளக்கம் - (தந்திருவுள்ளத்தேயிருத்தும்) - அந்த விளக்கை ஸர்வேச்வரனிடம் கொண்டுள்ள சிநேஹம் என்பது அல்லாமல் வேறு எதனையும் அறியாத தனது நெஞ்சத்தில் அசையாத தாவரங்கள் போன்று நிலையாக நிற்கும்படியாக நிறுத்துகின்ற, (பரமன்) - தேவம் ஆசார்யம் இவ உபாஸீத் – ஆசார்யனை பரதேவதை போன்று உபாஸிப்பானாக – என்றும், அஜ்ஞான திமிராந்தஸ்ய ஞானாஜ்ஞாந ஷலாகயா சக்ஷுர் உந்மீலிதம் யேந தஸ்மை ஸ்ரீகுரவே நம: - நான் அறியாமையின் இருளில் பிறந்திருந்தேன்; என் கண்களை ஞான ஒளியால் திறந்த எனது ஆசார்யனுக்கு எனது வணக்கங்களை சமர்ப்பிக்கிறேன் – என்றும், ந்யாஸ விம்சதி (2) - அஜ்ஞாந த்வாந்த ரோதாத் அக பரிஹரணாத் ஆத்ம ஸாம்யாவஹத்வாத்; ஜந்ம ப்ரத்வம்ஸி ஜந்ம ப்ரத கரிமதயா திவ்ய த்ருஷ்டி ப்ரபாவாத்; நிஷ்ப்ரத்யூஹாந்ருசம்ஸ்யாத் நியதரஸதயா நித்ய சேஷித்வ யோகாத்; ஆசார்ய: ஸத்பிரப்ரத்யுபகரண தியா தேவவத் ஸ்யாதுபாஸ்ய: - அறியாமை என்னும் இருளை நீக்குவதாலும், பாவங்களை விலக்குவதாலும், தன்னைப் போன்ற தன்மையை உண்டாக்குவதாலும், பிறவியை அழிக்கவல்ல புதியதொரு பிறவியை அளிக்கும் பெருமையாலும், உயர்ந்த கடாக்ஷம் செய்யும் மேன்மையாலும், தடையில்லாத கருணையைப் பொழிவதாலும், எப்போதும் இனிமையாக உள்ளதாலும், எப்போதும் எஜமானனாக உள்ளதாலும் ஒரு ஆசார்யன் என்பவன், ப்ரதி உபகாரம் செய்ய இயலாது என்னும் எண்ணத்துடன் ஸர்வேச்வரனைப் போன்றே வழிபடத் தக்கவன் ஆவான் - என்றும் கூறப்படும் பெருமை நிறைந்த. (இராமாநுசன்) - எம்பெருமானார். (எம்மிறையவனே) - எங்களுடைய ஸ்வாமி. ஆசார்ய தேவோ பவ – ஆசார்யனே தேவன் – என்றும், குருரேவ பரப்ரஹ்மா – ஆசார்யனே உயர்ந்த ப்ரஹ்மம் – என்றும், ஆசார்யஸ்ஸ ஹரிஸ்ஸாக்ஷாத் சரூபீ ந ஸம்சய – நம்முடைய கண்களுக்கு முன்பாகக் காணப்படும் ஸ்ரீஹரியின் ரூபம் ஆசார்யனே ஆவான் – என்றும் பலவாறு கூறுவது காண்க.

9. இறைவனைக் காணும் இதயத்து இருள்கெட ஞானம் என்னும்
நிறைவிளக்கு ஏற்றிய பூதத்திருவடித்தாள்கள் நெஞ்சத்து

உறைய வைத்தாளும் இராமானுசன் புகழ் ஓதும் நல்லோர்
மறையினைக் காத்து இந்த மண்ணகத்தே மன்ன வைப்பவரே.

விளக்கவுரை – அனைத்திற்கும் எஜமானனாக உள்ளவனை நாம் அறிந்து, உணர்ந்து கொள்வதற்கு ஏதுவான கருவி நமது இதயமே ஆகும். இத்தகைய இதயத்தில் பூர்வகர்ம பலன்கள் காரணமாக, அஜ்ஞானம் என்ற இருள் சூழ்ந்து கிடக்கிறது. அத்தகைய இருள் நீங்கும் விதமாக, பரம்பொருள் பற்றிய ஞானம் என்ற பரிபூர்ணமான விளக்கை ஏற்றியவர் பூதத்தாழ்வார் ஆவார். இந்த விளக்கு எப்படி உள்ளது என்றால் – அன்பே தகளி, ஆர்வமே நெய், சிந்தனையே திரி என்று கொண்டு ஞானமயமாக உள்ளது. அதாவது – ஆழ்வாரின் பக்தி என்பதே விளக்கானது; ஆழ்வாரின் ஆர்வமே நெய்யானது; பகவத் அனுபவத்தில் எப்போதும் ஊறிக் கிடக்கும் ஆழ்வாரின் மனமே திரியானது; பரிபூர்ணமான ஞானம் என்பதே தீபமானது; இப்படியான ஒரு விளக்கை நாராயணனுக்கு ஏற்றினார். இத்தகைய பூதத்தாழ்வாரின் உயர்ந்த திருவடிகளைத் தனது நெஞ்சத்தில் எப்போதும் வாசம் செய்யும்படியாக வைத்து அனுபவிப்பவர் உடையவர் ஆவார். இப்படிப்பட்ட எம்பெருமானாரின் உயர்ந்த கல்யாணகுணங்கள் குறித்து முன்பே பல பெரியோர்கள் உரைத்தனர் – கலியும் கெடும் கண்டு கொண்மின் என்று இவரது பிறப்பை முன்பே உணர்த்தினார் நம்மாழ்வார்; இத்தகைய இவரது விக்ரஹம் இவ்விதம் இருக்கும் என்று காலம் முழுவதும் சிந்தித்தவர் நாதமுனிகள்; "ஆ முதல்வன்" என்று வியப்புற்றவர் ஆளவந்தார். மற்ற மதத்தினர் மூலம் வேதங்கள் அழியாமல் காத்து நிற்பவர்கள் இப்படிப்பட்ட உயர்ந்தவர்களே ஆவார்கள்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே, பொய்கையாழ்வாருடைய ஸம்பந்தத்தாலே ஸர்வோந்நதரான எம்பெருமானார் தமக்கு ஸ்வாமியென் றருளிச்செய்து, இப்பாட்டிலே - ஸர்வஸ்வாமியான ஸர்வேச்வரனைக் காண்கைக்கு ஸர்வர்க்கும் உபகரணமா யிருந்துள்ள ஹ்ருதயம் அஜ்ஞாநாந்தகாரத்தாலே மோஹித்துப் போகையாலே அத்தை நசிப்பிப்பதாக பரஜ்ஞாநமாகிற பரிபூர்ண தீபத்தை ஏற்றியருளின பூதத்தாழ்வாருடைய திருவடிகளை மநஸ்ஸிலே வைத்துகொண்டு அநுபவிக்கிற எம்பெருமானாருடைய கல்யாண குணங்களை யநுஸந்தித்து, ஸத்துக்களானவர்கள் இந்த லோகத்திலே ஸகல வேதங்களையும் பாஹ்யகுத்ர்ஷ்டிகளால் அழிக்கவொண்ணாதபடி ரக்ஷித்து ஸுப்ரதிஷ்டிதமாக வைக்கவல்லவர்க ளென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் பொய்கையாழ்வாருடைய ஸம்பந்தம் காரணமாக அனைத்துவிதத்திலும் பூர்ணராக உள்ள எம்பெருமானார், திருவரங்கத்தமுதனாராகிய தனக்கு ஸ்வாமி என்றார். இந்தப் பாசுரத்தில் - அனைவருக்கும் ஸ்வாமியாக உள்ள ஸர்வேச்வரனைக் காண்பதற்கு அனைத்து உயிர்களுக்கும் கருவியாக உள்ள இதயமானது, அறியாமை என்பதான இருளில் முழ்கி மயக்கம் அடைந்து கிடப்பதால், அந்த அறியாமை என்ற இருளை அழிக்கும்விதமாக ஸர்வேச்வரனைக் குறித்த ஞானம் என்ற பரிபூர்ணமான தீபத்தைப் பூதத்தாழ்வார் தனது பாசுரங்கள் மூலமாக ஏற்றி அருளினார்; அத்தகைய பூதத்தாழ்வாருடைய திருவடிகளைத் தனது மனதில் எப்போதும் வைத்தபடி அனுபவிக்கும் எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களை எப்போதும் எண்ணியபடி ஸாதுக்களாக உள்ளவர்கள், இந்த உலகத்தில் உள்ள "வேதங்களுக்குப் புறம்பாகப் பேசுபவர்கள்", எப்போதும் வேதங்களை அழித்துவிடாதபடி காப்பாற்றி நிலையாக நிற்க வைக்க வல்லவர்கள் என்கிறார்.

வ்யாக்யானம் - (இறைவனை) ஸர்வலோகத்துக்கும் ஸ்வாமியானவனை. (காணும்) தர்சநம் பண்ணுகைக்கு உபகரணமான. (இதயத்து) ஹ்ருத்தயத்தைப் பற்றிக் கிடக்கிற. (இருள்கெட) "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ" என்றும், "ஈச்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர்ஜுந திஷ்டதி" என்றும், "குஹாம் ப்ரவிஷ்டௌ ஆத்மாநௌஹி தத் தர்சநாத்" என்றுஞ் சொல்லுகிறபடியே ஸர்வேச்வரனுக்கு இருப்பிடமான ஹ்ருத்யஸ்த்தாநமிறே அவனை யறியக் கடவதான ஜ்ஞாநத்துக்கு ப்ரஸரண த்வாரம். "ஹ்ருதா மனீஷா மனஸாபி க்ல்ருப்தோ" என்றும், "ஸ யேநம் விதுரம்ருதா ஸைபவந்தி" என்றுஞ் சொல்லப்படுகிற ஜ்ஞாநத்துக்கு வாரகமாய் இவர்களுடைய பூர்வகர்ம வாஸநையாலே வந்திருப்பதொரு அஜ்ஞாநமுண்டு; "அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ:" என்னக் கடவதிறே, அதுகெட. "சித்வைநம் ஸம்ஷயம் க்ருஷ்ண ஹ்ருத்ஸம் ஜ்ஞாநாக்நிநாத்மந:", "அஹமஜ்ஞாநஜம் தம:", "நாசயாம்யாத்ம பாவஸ்தே" என்கிறபடியே யாதாத்ம்ய ஜ்ஞாநபாத்யமான அஜ்ஞாநாந்தகாரமானது வாஸநையோடே நசிக்கும்படியாக.

விளக்கம் - அனைத்து உலகங்களுக்கும் எஜமானனாக உள்ளவனை. (காணும்) - தரிசிப்பதற்குக் காரணமாக உள்ள கருவியான. (இதயத்து) - இதயத்தினை

சூழ்ந்துள்ளதான. (இருள்கெட) – கீதை (15-15) - ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ – அனைத்து பிராணிகளுடைய இதயத்தில் நான் உள்ளேன் - என்றும், கீதை (18-61) - ஈச்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேசேர்ஜுந திஷ்டதி – அர்ஜுநா! அனைத்து பிராணிகளுடைய இதயத்திலும் ஈச்வரன் இருந்து கொண்டு – என்றும், ப்ரஹ்மஸூத்ரம் (1-2-11) - குஹாம் ப்ரவிஷ்டௌ ஆத்மாநௌஹி தத் தர்சநாத் – இதயம் என்னும் குகையில் உள்ளவர்கள் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஆவர், அதுவே காணப்படுவதால் ஆகும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுக்கு இருப்பிடமாக உள்ளது இதயம் அல்லவோ? அதுவே அவனைக் குறித்து அறிவதான ஞானம் உண்டாவதற்குரிய வழியாகும். ஆனால், கட உபநிஷத் (6-9) - ஹ்ருதா மனீஷா மனஸாபி க்ல்ருப்தோ - இதயக் குகையிலுள்ள ஜீவாத்மாவால், விழிப்புற்ற புத்தியில், மனதின் தொடர்ந்த முயற்சியால் ஈச்வரன் அங்கு உணரப்படுகிறான் - என்றும், ஸ யேநம் விதுரம்ருதா ஸைபவந்தி - என்றும் கூறுவதற்கு ஏற்ப அத்தகைய ஞானத்திற்கு இடையூறாக நம்முடைய பூர்வகர்ம வாசனை காரணமாக ஏற்படும் அறியாமை உள்ளது. கீதையில் (5-15) - அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ: - அஜ்ஞானத்தால் ஞானம் மூடப்பட்டுள்ளது, ஆகவே அனைத்து மனிதர்களும் மோகம் அடைகிறார்கள் - என்று கூறுவது காண்க; அத்தகைய அறியாமை என்பது அழியும் பொருட்டு, சித்வைநம் ஸம்ஷயம் க்ருஷ்ண ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞாநாக்நிநாத்மந: - என்றும், கீதை (10-11) - அஹமஜ்ஞாநஜம் தம: - அறியாமையால் உண்டான இருளை – என்றும், கீதை (10-11) - நாசயாம்யாத்ம பாவஸ்தே – ஞானம் என்னும் விளக்கு கொண்டு நான் அழிக்கிறேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, உண்மையான ஞானம் ஏற்படுவதற்கு முதல் வழியான "அறியாமை என்ற இருள் அழிதல்" என்பதான அறியாமை என்பது அதன் வாசனையுடன் நீங்கும்படியாக.

வ்யாக்யானம் - (ஞாநமென்னும் நிறைவிளக்கு) "யதா ந க்ரியதே ஜோத்ஸ்நாமல ப்ரக்ஷாளநாந்மணே: தோஷ ப்ரஹாணாத் ந ஜ்ஞாநம் ஆத்மந: க்ரியதே ததா யதோ தபாநகரணாத் க்ரியதே ந ஜலாம்பரம்" என்றாப்போலே ஜ்ஞாநத்துக்கு வாரகமான அஜ்ஞாநம் உடனே ப்ரகாசிக்குமிறே. இப்படிப்பட்ட பரஜ்ஞாநமாகிற பரிபூர்ண தீபத்தை. "ஜ்ஞாநேந து ததஜ்ஞாநம் யேஷாம் நாசிதமாத்மந: தேஷாமாதித்ய வஜ்ஜ்ஞாநம் ப்ரகாசயதி தத் பரம்" என்றானிறே கீதோபநிஷதாசார்யனும். (ஏற்றிய) "அன்பே தகளியா

வார்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை யிடுதிரியா, நன்புருகி, ஞாநச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு" என்று தம்முடைய பக்தியைத் தகளியாகப் பண்ணி, அபிநிவேசாதிசயத்தை நெய்யாக்கி, பகவதநுபவாநந்தத்தாலே உருகிக் கிடக்கிற மநஸ்ஸைத் திரியாக்கி, நாரணற்கு பரஜ்ஞாநமாகிற பரிபூர்ண தீபத்தை ஏற்றினேன் நான் என்று தொடங்கி தாமிட்டருளின திவ்யப்ரபந்தமாகிற பரிபூர்ண தீபத்தை ஏற்றி ஸர்வர்க்கு முபகாரமாம்படி ப்ரகாசிப்பித்த. (பூதத்திருவடி தாள்கள்) பூதத்தாழ்வாரென்கிற ஸ்வாமிகளுடைய திருவடிகள். "அந்தமிழால் நற்கலைகளாய்த் துரைத்த வாழ்வார்கள் இந்த வுலகி லிருள் நீங்க வந்துதித்த" என்றும் ஜீயரருளிச் செய்தாரிறே.

விளக்கம் - (ஞாநமென்னும் நிறைவிளக்கு) – ஸ்ரீவிஷ்ணுதர்மம் (104-55, 56) - யதா ந க்ரியதே ஜோத்ஸ்நாமல ப்ரக்ஷாளநாந்மணே: தோஷ ப்ரஹாணாத் ந ஜ்ஞாநம் ஆத்மந: க்ரியதே ததா யதோ தபாநகரணாத் க்ரியதே ந ஜலாம்பரம் – வைரம் முதலான கற்களில் உள்ள அழுக்கை எடுத்த பின்னர் அவற்றில் உண்டாகும் பிரகாசத்தை எவ்விதம் யாரும் உண்டாக்குவதில்லையோ, அதே போன்று அறியாமை நீங்கிய பின்னர் ஞானம் தானாகவே வெளிப்படுகிறது; கிணறு வெட்டும்போது அங்குள்ள மண்ணை மட்டுமே எடுக்கிறார்கள் அல்லாமல் நீரை உண்டாக்குவதில்லை - என்று கூறுவதற்கு ஏற்ப ஞானத்துக்குத் தடையாக உள்ள அறியாமை நீங்கினால் ஞானம் உடனடியாக ப்ரகாசித்து வெளிப்படும் அல்லவோ? அப்படிப்பட்ட உயர்ந்த ஞானம் என்ற வினக்கை. ஸ்ரீமத் பகவத்கீதையில் (5-16) - ஜ்ஞாநேந து ததஜ்ஞாநம் யேஷாம் நாசிதமாத்மந: தேஷாமாதித்ய வஜ்ஜ்ஞாநம் ப்ரகாசயதி தத் பரம் – யாருடைய அஜ்ஞானம் பரமாத்மா குறித்த ஞானத்தால் அழிக்கப்படுகிறதோ, அவர்களுடைய அந்த ஞானம் சூரியன் போன்று பரமாத்மாவை அவர்களுக்கு உணர்த்துகிறது - என்று கீதாசார்யனாகிய க்ருஷ்ணன் அருளிச்செய்தமை காண்க. (ஏற்றிய) – அன்பே தகளியா வார்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை யிடுதிரியா, நன்புருகி, ஞாநச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு - என்று தன்னுடைய பக்தியை அகல்விளக்காக்கி, தனது எல்லையற்ற ஆர்வத்தை நெய்யாக்கி, பகவத் அனுபவத்தில் எப்போதும் உருகியபடி நிற்கும் தனது மனதைத் திரியாக்கி, நாராயணனுக்காக உயர்ந்த ஞானம் என்னும் தீபத்தை நான் ஏற்றினேன் – என்று தொடங்கி, பூதத்தாழ்வாராகிய தான் அருளிச்செய்த திவ்யப்ரபந்தம் என்னும் பரிபூர்ணமான தீபத்தை ஏற்றி, அனைவருக்கும் உபகாரமாகும்படிச் செய்த. (பூதத்திருவடி

தாள்கள்) – பூதத்தாழ்வார் என்னும் ஸ்வாமியின் திருவடிகள். உபதேச இரத்தினமாலையில் (5) - அந்தமிழால் நற்கலைகளாய்த் துரைத்த வாழ்வார்கள் இந்த வுலகி லிருள் நீங்க வந்துதித்த – என்று ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தார் அல்லவோ?

வ்யாக்யானம் - (நெஞ்சத்துறைய வைத்தாளும்) தம்முடைய மநஸ்ஸிலே நிரந்தரவாஸம் பண்ணும்படியாக வைத்து ஸர்வகாலமும் அநுபவித்துக் கொண்டிருக்கிற. ஆளுகை – யதேஷ்ட விநியோகார்ஹமாம்படி விநியோகங் கொள்ளுகை. (இராமாநுசன்) எம்பெருமானாருடைய. (புகழோதும்) கல்யாணகுணங்களை ஸதோச்சாரணம் பண்ணும். (நல்லோர்) "கலியுங்கெடுங் கண்டு கொண்மின்" என்றருளிச்செய்த நம்மாழ்வார். அவ்வாழ்வாருடைய ப்ரஸாதத்தாலே லபித்த பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தைத் தம்முடைய காலமெல்லா மாராய்ந்து கொண்டு போந்த ஸ்ரீமந்நாதமுனிகள். இவரவதரித்த பின்பு இவருடைய கல்யாணகுணங்களைக் கேட்டருளி வித்தராய்த் திருப்புற்றுக்குக் கிழக்காகக் கரியமாணிக்கப்பெருமாள் திருமுன்பே அவரைக் கடாக்ஷித்து, "ஆ முதல்வன்" என்று ப்ரார்த்தித்தருளின ஆளவந்தார் போல்வாரான ஸத்துக்கள்.

விளக்கம் - (நெஞ்சத்துறைய வைத்தாளும்) – அந்தத் திருவடிகளைத் தனது மனதில் எப்போதும் வசிக்கும்படியாகச் செய்து, அனைத்து காலங்களிலும் அதனை அனுபவித்தபடி உள்ள. ஆளுகை என்றால் எந்தக் காலத்திலும், எதற்காகவும் பயன்படுத்திக் கொள்ளும்படியாக அளித்தல். (இராமாநுசன்) - எம்பெருமானாருடைய. (புகழோதும்) - திருக்கல்யாணகுணங்களை எப்போதும் உச்சரித்தபடி உள்ளவர்களாகிய. (நல்லோர்) - திருவாய்மொழி (5-2-1) - கலியும் கெடும் கண்டு கொண்மின் - என்று அருளிச்செய்த நம்மாழ்வார்; அந்த நம்மாழ்வாருடைய க்ருபை காரணமாக எதிர்காலத்தில் தோன்ற உள்ள ஆசார்யனுடைய விக்ரஹத்தைப் பெற்று, அதனைத் தனது வாழ்நாள் முழுவதும் கொண்டாடியபடி இருந்த நாதமுனிகள்; இராமாநுசர் அவதரித்த பின்னர், அவருடைய உயர்ந்த திருக்கல்யாண குணங்களைக் குறித்துக் கேட்டறிந்து, மிகவும் மகிழ்ந்து, காஞ்சீபுரத்தில் வரதராஜப்பெருமாள் கோயிலில் அந்த ஸர்வேச்வரன் முன்னிலையில், திருவாய்மொழி (7-9-3) - ஆமுதல்வன் – என்று கூறுவதற்கு ஏற்ப உரைத்த ஆளவந்தார் போன்ற ஸாதுக்கள்.

வ்யாக்யானம் - (மறையினைக் காத்து) "பிபேதி அல்ப ச்ருதாத் வேத: மாம் அயம் ப்ரதரிஷ்யதி" என்றும், "அர்தந்தந்தமநந்த ரூபமபிதஸ்ஸம்ஸ்வர்ஷ்ய முக்தைர் ஹ்ருதா" என்றும் சொல்லுகிறபடியே அல்பச்ருதரான பாஹ்யகுத்ர்ஷ்டிகளாலே கலங்காதபடி வேதத்தையெல்லாம் ரக்ஷித்து. அவர்கள்தா னாரென்னில், "யதுக்தயஸ் த்ரயி கண்டே யாந்தி மங்கள ஸூத்ரதாம்:" என்னும்படியாக ச்ருதியை ஸாதநமாக்கின ஆழ்வான் தொடக்கமானாரும், (மறையினை) என்று பொதுவாகச் சொல்லுகையாலே த்ரமிட வேதத்துக்குப் பிற்காலத்திலே அல்பச்ருதரான குத்ர்ஷ்டிகளால் அழிவு வாராதபடி அத்தை வ்யாக்யாநம் பண்ணியருளின பிள்ளான் தொடக்கமானாரு மென்றபடி. அவர்கள் செய்தது அவ்வளவேயன்றுகாணும். (இந்த மண்ணகத்தே மன்ன வைப்பவரே) விரோதி பூயிஷ்ட்டமான இந்த மஹாப்ர்திவியிலே அவ்விரண்டையும் ஸுப்ரதிஷ்டிதமாம்படி ப்ரவர்த்திப்பித்துக் கொண்டு போந்தார்களென்கிறார்.

விளக்கம் - (மறையினைக் காத்து) - பிபேதி அல்ப ச்ருதாத் வேத: மாம் அயம் ப்ரதரிஷ்யதி - அற்பமான அறிவுள்ளவன் வேதமாகிய என்னுடைய பொருளைத் தகாத விதத்தில் உரைப்பான் என்று வேதம் அஞ்சுகிறது - என்றும், அர்தந்தந்தமநந்த ரூபமபிதஸ்ஸம்ஸ்வர்ஷ்ய முக்தைர் ஹ்ருதா - என்றும் கூறுவதற்கு ஏற்ப வேதங்களுக்கு விரோதமாகப் பொருள் கூறுதல் என்ற அல்பமான மகிழ்ச்சியைக் கொண்டாடும் மதத்தினரால் அழியாதபடி வேதங்கள் அனைத்தையும் காப்பாற்றி. அப்படிப்பட்டவர்கள் யார் என்றால், கூரத்தாழ்வான் தனியனில் - யதுக்தயஸ் த்ரயி கண்டே யாந்தி மங்கள ஸூத்ரதாம்: - யாருடைய க்ரந்தங்கள் வேதம் என்னும் பெண்ணுக்குத் தாலி போன்று அமைந்து, அந்தப் பெண்ணின் கணவன் ஸ்ரீமந்நாராயணன் என்று உணர்த்துகிறதோ – என்று கூறுவதற்கு ஏற்ப, ச்ருதியை உபாயமாக்கிய கூரத்தாழ்வான் தொடக்கமானவர்களை. (மறையினை) – இங்கு "மறை" என்று பொதுவாக உரைக்கப்பட்டதால், அந்த ஸாதுக்கள் யார் என்றால், தமிழ்வேதமாகிய ப்ரபந்தங்களுக்கு பின் வரவுள்ள காலத்தில், தாழ்ந்த மதத்தினர்களால் ஆபத்து ஏற்படாதபடி, அவற்றுக்கு வ்யாக்யானம் செய்து காப்பாற்றிய திருக்குருகைப்பிரான்பிள்ளான் தொடக்கமாக உள்ள வ்யாக்யானம் செய்த அனைவரும் ஆவர். அவர்கள் செய்தது அது மட்டும் அல்ல. (இந்த மண்ணகத்தே மன்ன வைப்பவரே) - வேதங்களுக்கு விரோதமாக உள்ள பலரும் நிறைந்துள்ள இந்தப் பெரிய உலகத்தில், நான்கு வேதங்களையும் மற்றும்

தமிழ்வேதங்களையும் எப்போதும் நிலையாக இருக்கும்படி, இவற்றை எப்போதும் அனைவருக்கும் உணர்த்தியபடி இருப்பார்கள்.

10. மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள் மாமலராள்
தன்னொடும் ஆயனைக் கண்டமை காட்டும் தமிழ்த் தலைவன்
பொன்னடி போற்றும் இராமானுசற்கு அன்பு பூண்டவர் தாள்
சென்னியில் சூடும் திருவுடையார் என்றும் சீரியரே.

விளக்கவுரை – ஆத்மாவை அஹங்காரம், அஜ்ஞானம் போன்ற இருள் பற்றியபடி உள்ளது. இத்தகைய நீண்ட இருளானது பொய்கையாழ்வார் மற்றும் பூதத்தாழ்வார் ஆகிய இருவர் ஏற்றிய ஞானதீபங்களால் நீக்கப்பட்டது. இவர்களுக்குப் பின் வந்தவர் பேயாழ்வார் ஆவார். இவர் தனது "நீயும் திருமகளும்" என்னும் பாசுரம் மூலம் திருக்கோவலூரில் மஹாலக்ஷ்மியுடன் உள்ள க்ருஷ்ணனாகிய ஸர்வேச்வரனைக் கண்டதைக் காட்டினார் (இங்கு உள்ள தன்னொடுமாயனை என்பதை தன்னோடு +ஆயன் அல்லது தன்னோடு + மாயன் என்று பிரிக்கலாம்). ஆயன் என்பது திருக்கோவிலூரில் உள்ள ஆயனார் என்ற பெருமாளைக் குறிக்கும். மாயன் என்பது பாண்டவர்களுக்குத் தூது சென்று, அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டி, ஆயுதம் தொடமாட்டேன் என்ற சபதத்தை பாண்டவர்களுக்காக மீறி, அர்ஜுனனுக்காகச் சூரியனைத் தனது சக்கரத்தால் மறைத்து, கோவர்த்தனம் எடுத்து, அந்தணர் ஒருவரின் குழந்தை விஷயத்தில் அர்ஜுனன் செய்த சபதத்தை எண்ணி அவனைப் பல உலகங்கள் அழைத்துச் சென்று, சரமச்லோகம் உபதேசித்து – இப்படியாகப் பல வியப்பான செயல்கள் செய்த கண்ணனைக் குறிக்கும். இவ்விதம் தான் கண்டவனைப் பற்றி இனிய தமிழில் – திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன், திகழும் அருக்கண்ணி நிறமும் கண்டேன், செருக்கிளரும் பொன்னாழி கண்டேன், புரிசங்கைக் கண்டேன் – என்று பேயாழ்வார் மூன்றாம் திருவந்தாதியை அருளிச் செய்தார். இவருடைய திருவடிகளை என்றும் போற்றும் ஸ்வபாவம் உடையவர் எம்பெருமானார் ஆவார். இப்படிப்பட்ட உடையவரின் மீது மாறாத அன்பும் பக்தியும் உடையவர்கள், அந்த பக்தியையே தங்கள் ஆபரணங்கள் என்று கருதி அலங்கரித்துக் கொள்ளும் உயர்ந்தவர்கள் உண்டு. இவர்களது திருவடிகளைத் தங்கள் தலையில்

வைக்கப்படும் அழகான மலர்கள் போன்று ஏற்றுக் கொள்வாரும் உண்டு. இவர்கள் எந்தக் காலத்திலும் உயர்ந்து நிற்பவர்கள் ஆவர்.

அவதாரிகை – *கீழிரண்டு பாட்டாலும் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வாராகிற இருவராலேயு மெடுக்கப்பட்ட பரிபூர்ண தீபமான திவ்யப்ரபந்தக ளிரண்டாலும் லோகத்திலே ஒருவராலும் பரிஹரிக்க வரிதாம்படி வ்யாப்தமாய் நின்ற அஜ்ஞாநமாகிற மஹாந்தகாரம் நசித்தபடியை யருளிச்செய்து, இப்பாட்டிலே – அவ்வந்தகாரம் நசித்த பின்பு தாம் திருக்கோவலூரிலே வீற்றிருந்த ச்ரிய:பதியை ஸாக்ஷாத்கரித்து அந்த லாபத்தை எல்லார்க்கும் திவ்யப்ரபந்தரூபேண உபதேசிக்கும் பேயாழ்வாருடைய ஸ்ப்ர்ஹணீயமான திருவடிகளை ஸ்துதிக்கிற எம்பெருமானார் விஷயமான ப்ரீதியாலே பரிஷ்கரிக்கப்பட்டவர்களுடைய ஸ்ரீபாதங்களைத் தந்தாமுடைய தலை மேலே தரிக்கும் ஸம்பந்தத்தை யுடையவர்கள் ஸர்வகாலத்திலும் ஸ்ரீமான்க ளென்கிறார்.*

விளக்கம் - கடந்த இரண்டு பாசுரங்களாலும் பொய்கையாழ்வார் மற்றும் பூதத்தாழ்வார் ஆகிய இருவரும் அருளிச்செய்த பரிபூர்ணமான தீபம் போன்றதான திவ்யப்ரபந்தங்களைக் குறித்து உரைத்தார்; அதன் மூலம் இந்த லோகத்தில் யாராலும் விலக்க இயலாதபடி எங்கும் பரவி நிற்கும் அறியாமை என்ற இருள் விலக்கியதை அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில் - அத்தகைய இருள் நீங்கிய பின்னர், பேயாழ்வார் குறித்து அருளிச்செய்கிறார்; அதாவது தாம் திருக்கோவலூரில் வீற்றுள்ள மஹாலக்ஷ்மியின் நாயகனைத் தரிசித்து, அத்தகைய பெரும்பேற்றினை அனைவருக்கும் திவ்யப்ரபந்த வடிவில் உபதேசித்த பேயாழ்வாருடைய விரும்பத்தக்கதான திருவடிகளைத் துதித்தபடி எம்பெருமானார் உள்ளார்; அத்தகைய எம்பெருமானார் விஷயத்தில் ப்ரீதி நிறைந்துள்ளவர்களுடைய திருவடிகளைத் தங்களுடைய தலையில் தரிக்கும் செல்வம் உள்ளவர்கள் அனைத்து காலத்திலும் செல்வந்தர்களே ஆவர் என்கிறார்.

வ்யாக்யானம் - *(மன்னியபேரிருள்) "தத்வ ஜ்ஞாநேந விநா" மற்றொன்றால் போக்குகைக்கு அரியதாய் ஆத்மாவைப் பற்றிக் கிடக்கிற அஜ்ஞாநமாகிற மஹாந்தகாரம். "அவிவேக கநாந்த திங்முகே பஹுதா ஸந்தத து:கவர்ஷிணி பகவந் பவ துர்த்திநே" என்று சொல்லுகிற இருளானது. (மாண்டபின்) இந்தப் பேயாழ்வாருக்கு முன்னே ஜ்ஞாந தீபத்தை யெடுத்தருளின பொய்கையாழ்வார் பூதத்தாழ்வாராகிற இருவராலேயும் நசிப்பித்தபின்பு. "கு சப்தஸ் த்வந்தகார: ஸ்யாத் ரு சப்தஸ் தந்நிரோதக: அந்தகார*

நிரோதித்வாத் குருரித்யபிதீயதே" என்னும்படி அஜ்ஞாந த்வாந்தத்தை ஸவாஸநமாகப் போக்கின பின்பு.

விளக்கம் - (மன்னியபேரிருள்) - தத்வ ஜ்ஞாநேந விநா – உண்மையான ஞானத்தால் மட்டுமே நீங்கும் – என்பதற்கு ஏற்ப, எதனாலும் நீக்குவதற்குக் கடினமான ஆத்மாவைப் பிடித்து நிற்கும் அறியாமை என்னும் இருள். ஸ்தோத்ரரத்னம் (49) – அவிவேக கநாந்த திங்முகே பஹுதா ஸந்தத து:கவர்ஷிணி பகவந் பவ துர்த்திநே – நல்லது தீயது அறியாத அவிவேகம் என்னும் மேகங்களிலிருந்து, ப்ரகாசம் இல்லாத பல திசைகளை உடையதான ஸம்ஸாரமானது, இடைவிடாமல் துக்கம் என்னும் மழையைப் பொழிந்தபடி உள்ளது; இத்தகைய துர்தினத்தில் என்னுடைய பகவானே... - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள இருள். இத்தகைய இருளானது, (மாண்டபின்) – இந்தப் பேயாழ்வாருக்கு முன்பு ஞானம் என்ற தீபம் மூலம் பொய்கையாழ்வார் மற்றும் பூதத்தாழ்வாரால் அழிக்கப்பட்ட பின்னர். கு சப்தஸ் த்வந்தகார: ஸ்யாத் ரு சப்தஸ் தந்நிரோதக: அந்தகார நிரோதித்வாத் குருரித்யபிதீயதே – "கு" என்னும் சப்தம் இருள் என்னும் பொருளை அளிக்கவல்லது, "ரு" என்னும் சப்தம் அந்த இருளை நீக்குவது ஆகும், ஆக இருளை நீக்குவதால் ஆசார்யன் "குரு" எனப்படுகிறார் - என்று கூறுவதற்கு ஏற்ப அறியாமை என்ற இருளை அதன் வாசனையுடன் விரட்டி.

வ்யாக்யானம் - *(கோவலுள் மாமலராள் தன்னொடும்) "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப" என்றும், "அகலகில்லே னிறையு மென்றலர்மேல் மங்கை யுறை மார்பா", "ருக்மிணீ க்ர்ஷ்ண ஜநநீ" என்கிறபடியே புருஷகார பூதையான பெரிய பிராட்டியாருடனே. (மாயனை) க்ர்ஷ்ணனா யவதரித்து ஸ்வாச்ரிதரான பாண்டவர்களுக்குக் கழுத்திலே ஓலையைக் கட்டிக் கொண்டு போந்த தௌத்யமும், அர்ஜுநன் தன் காலாலே ப்ரேரிக்கப் பண்ணின ஸாரத்யமுமாகிற நிஹீந க்ர்த்யங்களைப் பண்ணுகையும், ஆயுதமெடே னென்று ஆயுதமெடுக்கையும், பகலை இரவாக்குகையும், கோவர்த்தநோத்தரணம் பண்ணுகையும், அர்ஜுநனை நித்யவிபூதி யருகே கொண்டு போகையும், அவனுக்கு சரமோபாயத்தை யுபதேசிக்கையு மாகிற இவ்வாச்சர்ய குணங்களை யுடையனான ஸர்வேச்வரனை. (ஆயனை) ஆயனாரை யென்னவுமாம். கீழ்ச் சொன்ன குணசேஷ்டிதங்களை யுடையனான க்ர்ஷ்ணனை யென்னவுமாம். (கண்டமை)*

அவ்வந்தகாரத்தைப் போக்கின ஜ்ஞாந தீபத்தாலே தாம் ஸாக்ஷாத்கரித்து அந்தத் தாழ்ச்சி ப்ரகாரத்தை யெல்லாம். (காட்டும்) "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழுமருக் கனணி நிறமும் கண்டேன், செருக்கிளரும், பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன், என்னாழி வண்ணன் பாலின்று" என்று தொடங்கி தாமிட்டருளின திவ்யப்ரபந்தத்தாலே காட்டியருளும்.

விளக்கம் - திருவாய்மொழி (4-9-10) - ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப - என்றும், திருவாய்மொழி (6-10-10) - அகலகில்லே னிறையு மென்றலர்மேல் மங்கை யுறை மார்பா - என்றும், ருக்மிணீ க்ர்ஷ்ண ஜநநீ - என்றும் கூறுவதற்கு ஏற்ப சிபாரிசு செய்யவல்ல பெரியபிராட்டியுடன் கூடியபடி. (மாயனை) - க்ருஷ்ணனாக அவதாரம் செய்து, தன்னை அண்டி நின்ற பாண்டவர்களுக்காகத் தூதுச்செய்தியை எடுத்துச் சென்ற தூது செயலும், அர்ஜுனனால் ஏவிக்கார்யம் கொள்ளும்படியான தேர் ஓட்டுதல் என்ற இழிந்த செயலும், ஆயுதம் எடுக்கமாட்டேன் என்று தனது சபதத்தை மீறி ஆயுதம் எடுத்த செயலும், அர்ஜுனனைக் காப்பாற்றுவதற்காகச் சூரியனைத் தனது சக்கரத்தால் மறைத்து பகல் பொழுதை இரவாக மாற்றிய செயலும், கோவர்த்தன மலையை எடுத்த செயலும், இறந்து போன அந்தணனின் குழந்தைகளை மீட்டுக்கொடுப்பதற்காக அர்ஜுனனைப் பரமபதம்வரை கொண்டு சென்ற செயலும், அர்ஜுனனுக்குச் சரம உபாயத்தைக் கீதை மூலம் உபதேசித்த செயலும் செய்யுகை என்ற வியக்கவைக்கும் குணங்கள் கொண்ட ஸர்வேச்வரனை. (ஆயனை) - ஆயனாரை என்றும் கூறுவர். இதுவரை உரைக்கப்பட்ட குணங்கள் கொண்ட க்ருஷ்ணனை. (கண்டமை) - அறியாமையை விலக்கிய அந்த ஞானம் என்ற தீபம் கொண்டு, தான் கண்ட பின்னர், அத்தகைய காட்சி முழுவதையும். (காட்டும்) - மூன்றாம் திருவந்தாதி - திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழுமருக் கனணி நிறமும் கண்டேன், செருக்கிளரும், பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன், என்னாழி வண்ணன் பாலின்று - என்று தொடங்கும் தன்னுடைய திவ்யப்ரபந்தம் மூலமாக உணர்த்துகின்ற.

வ்யாக்யானம் *- (தமிழ்த்தலைவன்) "பாலேய் தமிழர்" என்றும், "இன்கவி பாடும் பரமகவிகள்" என்றும், மயர்வற மதிநல மருளப் பெற்ற நம்மாழ்வாராலே கொண்டாடப்பட்ட த்ரமிட சாஸ்த்ர ப்ரவர்த்தகரில் மூலபூதரான பேயாழ்வாருடைய.*

(பொன்னடி போற்றும்) ப்ரபந்ந ஜநங்களுக்கெல்லாம் ஸ்ப்ர்ஹணீயமான திருவடிகளை மங்களாசாஸநம் பண்ணுகிற சேஷத்வாநுரூபமாக வடிமைத் தொழில் செய்கை தவிர்ந்து, ஸ்ப்ர்ஹணீயமாகையாலே ப்ரேம பரவசராய்க் கொண்டு மங்களாசாஸநம் பண்ணத் தொடங்கினார் காணும். போற்றுதல் - புகழ்தல். (இராமாநுசற்கு) எம்பெருமானார் விஷயமான. (அன்பு பூண்டவர்தாள்) ப்ரீதியைத் தங்களுக்கு ஆபரணமாம்படி அலங்கரித்துக் கொண்ட மஹாத்மாக்களுடைய திருவடிகளை. (சென்னியில் சூடும்) தந்தாமுடைய சிரஸ்ஸிலே செவ்விப்பூவைச் சூடுவாரைப்போலே தரிக்கும். (திருவுடையார்) "ஸதுநாகவரஸ் ஸ்ரீமாந், "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:", "அந்தரிக்ஷகதஸ் ஸ்ரீமாந்" என்கிற ஸம்பத்துக்கு ஸீமாபூமியான ஸம்பத்தை யுடையவர்கள்.

விளக்கம் – திருவாய்மொழி (1-5-11) – பாலேய் தமிழர் - என்றும், திருவாய்மொழி (7-9-6) – இன்கவி பாடும் பரமகவிகளால் - என்றும், மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வார் கொண்டாடுகின்ற தமிழ்வேதங்களை அருளிச்செய்த ஆழ்வார்களில் உள்ள பேயாழ்வாருடைய. (பொன்னடி போற்றும்) - ப்ரபன்னர்கள் அனைவருக்கும் விரும்பலாம்படியுள்ள திருவடிகளைப் புகழ்ந்து தொழுது. அதாவது பேயாழ்வாருடைய திருவடிகளில் கைங்கர்யம் செய்வதை விடுத்து, அந்தத் திருவடிகள் விரும்பத்தக்கதாக உள்ளதால் தன்னை மறந்து அவற்றில் ப்ரேமை கொண்டு புகழ்ந்து துதித்தபடி நின்றார் என்று கருத்து. (இராமாநுசர்) - எம்பெருமானார் குறித்துள்ள. (அன்பு பூண்டவர்தாள்) – ப்ரீதியைத் தங்களுக்கு ஆபரணம் போன்று அலங்கரித்துக் கொண்ட மஹாத்மாக்களுடைய திருவடிகளை. (சென்னியில் சூடும்) - தனது தலையில் அழகான மலரைச் சூட்டிக் கொள்வது போன்று அணிந்துள்ள. (திருவுடையார்) - ஸ்ரீவிஷ்ணுதர்மம் – ஸது நாகவர: ஸ்ரீமாந் – முதலையின் வாயில் அகப்பட்ட கஜேந்த்ரன் என்னும் கைங்கர்யச் செல்வந்தன் – என்றும், இராமாயணம் பாலகாண்டம் (18-28) – லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந: - லக்ஷ்மணன் கைங்கர்யம் என்னும் செல்வத்தால் நிறைந்தவன் – என்றும், இராமாயணம் யுத்தகாண்டம் (16-17) – அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந் – விபீஷணன் ஆகாயமார்க்கமாக வந்த கைங்கர்யச் செல்வந்தன் - என்றும் கூறபப்டும் பெருஞ் செல்வத்துக்கு இருப்பிடமான ஸம்பத்து உள்ளவர்கள்.

வ்யாக்யானம் - *(என்றும் சீரியரே) ததீயப்ராவண்யத்தை யுடையவராகையாலே அவர்கள் காலதத்வமுள்ளதனையும் ஸ்ரீமாந்கள். "ஸ்ரீமத் பாகவதார்ச்சநம் பகவத: பூஜாவிதேருத்தமம் ஸ்ரீவிஷ்ணோரவமாநநாத் குருதரம் ஸ்ரீவைஷ்ணவோல்லங்கநம் தீர்த்தாதச்யுத பாதஜாத் குருதரம் தீர்த்தம் ததீயாங்க்ரிஜம் தஸ்மாந் நித்யமதந்த்ரி தீபவஸதா தேஷாம் ஸமாராதநே", "தஸ்மாத் குருதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் நரப மம மத்பக்தேஷு ப்ரீதிரப்யதிகா நரப தஸ்மாந் மத் பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத:" என்னக்கடவதிறே. (திருமாலடியார்களைப் பூசிக்க நோற்றார்கள்) என்று ஆழ்வாரு மருளிச் செய்தாரிறே. அப்படியே, "வாசா யதீந்த்ர" என்று தொடங்கி, "பாதாநுசிந்தநபரஸ்ஸததம் பவேயம்" என்று இதொன்றையுமே ப்ரார்த்தித்தருளினாரிறே ஜீயரும்.*

விளக்கம் - (என்றும் சீரியரே) - அடியார்களிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர்கள் என்பதால், காலம் என்பது உள்ளவரையில் அவர்கள் உயர்ந்த ஐச்வர்யம் உள்ளவர்கள் ஆவர். மம மத்பக்தேஷு ப்ரீதிரப்யதிகா நரப தஸ்மாந் மத் பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத: - என்னுடைய அடியார்களிடம் எனது ப்ரியம் அதிகமானது ஆகும்; ஆகவே அவர்களை யார் வணங்கினாலும் அது எனக்கு மிகவும் விசேஷமான செயலாகவே தோன்றும் – என்று கூறுவது காண்க. திருவாய்மொழி (5-6-11) – திருமாலடியார்களைப் பூசிக்க நோற்றார்கள் – என்று நம்மாழ்வார் அருளிச்செய்தமை காண்க. இதே போன்று - யதிராஜ விம்சதி (3) – வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் – என்று, இத்தகைய நிலையை ஸ்வாமி மணவாளமாமுனிகளும் விரும்பி விண்ணப்பித்தார் அல்லவோ?

11. சீரிய நான்மறைச் செம்பொருள் செந்தமிழால் அளித்த
பார் இயலும் புகழ்ப் பாண்பெருமாள் சரணாம் பதுமத்
தாரியல் சென்னி இராமானுசன் தன்னைச் சார்ந்தவர்தம்
காரிய வண்மை என்னால் சொல்லொணாது இக்கடலிடத்தே.

விளக்கவுரை – எம்பெருமானின் ஸ்வரூபம் மற்றும் திருக்கல்யாண குணங்களை, உள்ளது உள்ளபடி எடுத்து உரைப்பதால் நான்காக வகைப்பட்ட வேதங்களுக்கு மிகுந்த மேன்மை உள்ளது. ஆழ்ந்த பொருளை உள்ளடக்கிய அவற்றின் ஆழ்பொருளை, அனைவரும் அறிந்து கொள்ளும் விதமாக இனிய தமிழ் மொழியில் அளித்து, நமக்கு உபகாரம் செய்தவர் திருப்பாணாழ்வார் ஆவார். அகண்ட இந்தப் பூமியில், அதனை விட அகன்ற புகழ் மற்றும் கல்யாண குணங்களைக் கொண்டவரும், பெரியபெருமாள் மகிழும்படியாக இனிதாகப் பாடவல்லவரும் ஆகிய திருப்பாணாழ்வாரின் திருவடிகள் என்ற தாமரை மலர்களைத் தனது திருமுடியில் அலங்காரமாக வைத்துள்ளவர் எம்பெருமானார் ஆவார். இப்படிப்பட்ட எம்பெருமானாரைச் சார்ந்தவர்களின் செயல் மேன்மைகள் எப்படிப்பட்டது என்று கடல் சூழ்ந்த இந்தப் பூமியில் உள்ள என் போன்றவர்களால் கூற இயலாது. காரியவண்மை என்பதைக் கார் + இயல் + வண்மை என்றும் கொள்ளலாம். இதன் பொருள் என்ன? கார் என்றால் கார் காலமேகம், இயல் – அந்த மேகத்தின் தன்மையானது பலன் பாராமல் மழை அளிப்பது, வண்மை – அந்த மேகம் போன்று எம்பெருமானாரின் திருக்குணங்களைப் பொழிகின்ற தன்மை – என்பதாகும். இராமானுசன் தன்னைச் சார்ந்தவர் தம் காரியவண்மை என்றால் என்ன? க்ர்மிகண்டன் என்னும் துர்அரசனின் சபையில் இருந்த குத்ருஷ்டிகளை வாதம் கொண்டு வென்ற கூரத்தாழ்வான்; எம்பெருமானாரின் கட்டளைக்கு இணங்க, மாயாவாதி வித்வான்களைத் தன்னுடைய திருவடிகளின் தீர்த்தம் (ஸ்ரீபாததீர்த்தம்) கொண்டே திருத்திய முதலியாண்டான்; எம்பெருமானாரின் ஆணைக்கு இணங்க திருமலை சென்று, அங்கு திருவேங்கடமுடையானே இவருக்காக மண் சுமந்த மேன்மையுடைய அனந்தாழ்வான் – முதலானவர்களின் மேன்மையை பாசுரங்களால் கூற இயலுமோ?

அவதாரிகை - இவ்வளவாக மூன்று பாட்டாலும் முதலாழ்வார்கள் மூவருடையவும் ஸம்பந்தத்தையுடைய எம்பெருமானாரைக் கொண்டாடி, இப்பாட்டிலே – தமக்கு இவ்வளவான வதிகாரமுண்டாம்படி முதலடியிலே தம்மை விஷயீகரித்த பெரியபெருமாளுடைய திருவடிகளிலே திருவவதாரமே பிடித்து இடைவிடாதே நிரவதிக ப்ரவணராய், “இசைகாரர்” என்று நம்மாழ்வாராலே கொண்டாடப்பட்ட மஹா வைபவத்தை யுடையரான திருப்பாணாழ்வார் திருவடித்தாமரைகளிலே நிரவதிக ப்ரவணரான எம்பெருமானாரை ஆச்ரயித்தவருடைய அநுஷ்டாநம் இந்த மஹா ப்ர்திவியிலே என்னால் சொல்லித் தலைக்கட்டப் போகாதென்கிறார்.

விளக்கம் - இப்படியாகக் கடந்த முன்று பாசுரங்கள் மூலம் முதலாழ்வார்கள் மூவருடைய ஸம்பந்தம் உள்ளவர் எம்பெருமானார் என்று கொண்டாடினார். இந்தப் பாசுரத்தில் – தனக்கு இந்த அளவிற்குத் தகுதி ஏற்படும்படியாக, முதல் அடியிலேயே தன்னை முற்றிலுமாக பற்றிக் கொண்ட பெரியபெருமாளாகிய ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில், தான் அவதரித்த நாள் தொடங்கியே பிடித்தபடி இடைவிடாமல் சிந்தித்து நிற்பவரும், நம்மாழ்வாரால் **திருவாய்மொழி** (1-5-11) – **இசைகாரர்** - என்று கொண்டாடப்படும் உயர்ந்த மேன்மை கொண்டவரும் ஆகிய திருப்பாணாழ்வார் திருவடித்தாமரைகளில் எல்லையற்ற ப்ரீதி உள்ளவரான எம்பெருமானாரை அண்டி நிற்பவர்களுடைய மேன்மை என்பது இத்தகையது என்று இந்த உலகில் தன்னால் கூறி முடிக்க இயலாது - என்று உரைக்கிறார்.

வ்யாக்யானம் - (சீரிய நான்மறைச் செம்பொருள்) "ஸாஹி ஸ்ரீ: அம்ருதா ஸதாம்" என்று ஸத்துக்களுக்கு ஸம்பத்தாய், ரிக் யஜுஸ் ஸாமாதர்வண ரூபேண நாலு வகைப்பட்டிருக்கிற வேதங்களில் வைத்துக் கொண்டு, "அஸாரமல்ப லாரஞ்ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத், பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே ரத்நாகர இவாம்ருதம்" என்றும், "அணுப்யச்ச மஹத்ப்யச்ச சாஸ்த்ரேப்ய: குசலோ (மதிமாந்) நர: ஸர்வத: ஸாரமாதத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத:" என்றும், "ச்ருதி பத விபரீதம் சஷ்வேள கல்பம் ச்ருதை ச ப்ரக்ருதி புருஷ போக ப்ராபக அம்சம் ந பத்ய: தத் இஹ விபுத குப்தம் ம்ருத்யுபீதா விசிந்வந்தி உபநிஷத் அம்ருத அப்தே: உத்தமம் ஸாரமார்யா:" என்றுஞ் சொல்லுகிறபடியே உபாதேய ஸாரதமமா யிருந்துள்ள திருமந்த்ரத்தினுடைய ப்ரக்ர்தியான ப்ரணவத்தினுடைய அவயங்களான அகார உகார மகாரங்களுடைய அர்த்தவிசேஷங்களை.

விளக்கம் - (சீரிய நான்மறைச் செம்பொருள்) - **யஜுர் - ஸாஹி ஸ்ரீ: அம்ருதா ஸதாம்** - அந்த வேதமானது பெரியோர்கட்கு அழிவற்ற தனமாய் இருக்கிறது – என்று கூறுவதற்கு ஏற்ப, நல்லவர்களுக்குச் செல்வமாக உள்ளவை ரிக், யஜுர், ஸாமம் மற்றும் அதர்வணம் என்ற நான்கு வகையான வேதங்களாகும். இப்படிப்பட்ட வேதங்களுடைய, வைகுண்ட தீக்ஷிதீயம் - அஸாரமல்ப லாரஞ்ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத், பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரே ரத்நாகர இவாம்ருதம் - சாரம் ஏதும் இல்லாதபடி வேதங்களுக்குப் புறம்பாக

உள்ளவற்றையும், அற்பமான பலன் அளிக்கவல்லதான வேதத்தின் முற்பாகத்தையும் (அல்லது கர்மகாண்டம்), வேதங்களின் சாரமாக உள்ள உபநிஷத்துக்களையும், உபநிஷத்துக்களின் சாரமாக உள்ள நாராயண அநுவாகத்தையும் கைவிட வேண்டும்; கடலில் மூழ்கி அமிர்தம் எடுப்பது போன்று நாராயண அநுவாகத்தின் சாரமாகிய விஷ்ணுகாயத்ரியை எடுத்தல் வேண்டும் – என்றும், **ஸ்ரீ உத்தவகீதை** (8:10) - **அணுப்யச்ச மஹத்ப்யச்ச சாஸ்த்ரேப்ய: குசலோ (மதிமாந்) நர: ஸர்வத: ஸாரமாதத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத: - தேனீ, மலர்களை நாசம் செய்யாமல் மலர்களின் சாரமான தேனைப் பருகுவது போல், அறிவாளி சிறிய பெரிய சாஸ்திரங்களில் இருந்து அதன் சாரங்களை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் – என்றும், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் (அத்யாயம் 2) - ச்ருதி பத விபரீதம் சஷ்வேள கல்பம் ச்ருதை ச ப்ரக்ருதி புருஷ போக ப்ராபக அம்சம் ந பத்ய: தத் இஹ விபுத குப்தம் ம்ருத்யுபீதா விசிந்வந்தி உபநிஷத் அம்ருத அப்தே: உத்தமம் ஸாரமார்யா: - வேத மார்க்கத்திற்கு மாறாகப் பொருள் உரைக்கும் அனைத்து மதங்களுமே விஷத்திற்குச் சமம் ஆகும். வேதங்களில் கூட, இந்த உலக விஷயங்களை அடையும் பொருட்டும், தனது ஆத்மாவையே அனுபவிக்கும் (கைவல்யம்) பொருட்டும் கூறப்படும் பகுதிகள் அனைத்தும் உயர்ந்தவை அல்ல. ஆகவே, ஸம்ஸாரம் என்னும் பிறப்பு-இறப்பைக் கண்டு அச்சம் கொள்ளும் அறிவாளிகள், உபநிஷத்துகள் என்ற கடலைக் கடைந்து எழும் சாரம் (ரஹஸ்யத்ரயம் = திருமந்த்ரம், சரமச்லோகம், த்வயம்) என்ற அமிர்தத்தையே பருக விரும்புவர். இந்த அமிர்தத்தை, நமது ஆசார்யர்கள், நமது நன்மைக்காக மிகுந்த பாடுபட்டுக் காப்பாற்றி வருகின்றனர்** என்றும் கூறுவதற்கு ஏற்ப உபதேசங்களின் சாரமாக உள்ளது திருமந்திரம் ஆகும். அப்படிப்பட்ட உயர்ந்த திருமந்த்ரத்தின் மூலமாக உள்ள ப்ரணவத்தின் உறுப்பாக உள்ள "அ, உ, ம" என்ற மூன்று எழுத்துக்களின் ஆழ்பொருளை.

வ்யாக்யானம் - (செந்தமிழால்) "அமலனாதிபிரான்" என்றும், "உவந்த வுள்ளத்தனாய்" என்றும், "மந்திபாய் வடவேங்கடமாமலை" என்றும் தம்முடைய ப்ரபந்தாதியான மூன்று பாட்டுக்களுடைய முதலடியிலே ஸாரதமார்த்த விசேஷ ப்ரதிபாதகங்களா யிருக்கையாலே ஸகலவேத ஸாரமென்று ச்லாகிக்கப்படுகிற அக்ஷரத்தையுங் கூட்டி ஸந்தர்ப்பித்த ப்ரபந்தத்தாலே. (அளித்த) ஸர்வரையும் ரக்ஷித்தருளினவராய். (பாரியலும் புகழ்) அகண்டமான பூமண்டலத்திலே வ்யாபித்த கல்யாணகுணங்களையும் கீர்த்தியையு முடையராய். இயலுதல் – நடத்தல். (பாண்பெருமாள்) "இசைகாரர்" என்கிறபடியே தந்த்ரீ

லயைகளை அடைவேயறிந்து, "ஏதத் ஸாமகாயந்நாஸ்தே" என்றாப்போலே பெரியபெருமாளுக்கு உகப்பாம்படி இனிதாகப் பாடுமவராகையாலே அந்த இசையை தமக்கு நிரூபகமாகவுடையராய் மஹாநுபாவரான திருப்பாணாழ்வாருடைய.

விளக்கம் - (செந்தமிழால்) - அமலானாதிபிரான் (1) - அமலனாதிபிரான் - என்றும், (2) - உவந்த வுள்ளத்தனாய் – என்றும், (3) - மந்திபாய் வடவேங்கடமாமலை - என்றும் தனது ப்ரபந்தத்தில் உள்ள மூன்று பாசுரங்களின் முதல் அடிகள் மூலம், அனைத்து வேதங்களுடைய ஆழ்பொருளை வெளிப்படுத்துவதால் அனைத்து வேதவேதாந்தங்களின் சாரம் என்று கொண்டாடப்படும் மூன்று எழுத்துக்களை [அ, உ, ம] உணர்த்திய ப்ரபந்தம் மூலம். (அளித்த) - அனைவரையும் காப்பாற்றியவராகவும். (பாரியலும் புகழ்) – விசாலமான இந்தப் பூமியில் எங்கும் நிரம்பும் விதத்தில் உயர்ந்த கல்யாண குணங்களையும் கீர்த்தியையும் உடையவராகவும். (பாண்பெருமாள்) - **திருவாய்மொழி** (1-5-11) – **இசைகாரர்** - என்று கூறுவதற்கு ஏற்ப, தான் மீட்டுகின்ற இசைக்கருவியில் உள்ள தந்திகளின் ஓசையை நன்றாக அறிந்தவராகவும், ஏதத் ஸாமகாயந்நாஸ்தே – **மேல் சொல்லப்போகிற ஸாமத்தைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள்** - என்று கூறுவதற்கு ஏற்ப பெரியபெருமாள் திருவுள்ளம் மகிழும்படியாக இனிமையாகப் பாடுபவர் என்பதால், அத்தகைய இசையைக் கொண்டே தன்னை இன்னார் என்று காண்பித்துக் கொள்ள வல்லவராகவும் உள்ள திருப்பாணாழ்வாருடைய.

வ்யாக்யானம் - (சரணாம் பதுமத்தாரியல் சென்னி) "குருபாதாம்புஜம் த்யாயேத்" என்றும், "பவத் பதாப்ஜே ஹ்ருஷ்டாஸ்து நித்யம் அநுபூய மம அஸ்ய புத்தி" என்றுஞ் சொல்லுகிறபடியே போக்யதமமான பாதபத்மத்தாலே, கிரீடாதி சிரோபூஷணங்களாலே தந்தாமுடைய சிரஸ்ஸுக்களை அலங்கரித்துக் கொள்ளுவாரைப்போலே அலங்கரிக்கப்பட்ட உத்தமாங்கத்தையுடையராய். (இராமாநுசன்றன்னை) இப்படி ததீய ப்ராவண்ய ஸீமாபூமியான எம்பெருமானாரை. (சார்ந்தவர் தம்) அபாச்ரயமாகப் பற்றி யிருக்கு மவர்களுடைய. (காரிய வண்மை) "ஸமய நியதயாஸா ஸாதுவ்ர்த்யா" என்கிறபடியே ஸம்ப்ரதாய ஸித்தமாகக் கொண்டு, "கர்த்தவ்யம் ஆசார்ய கைங்கர்யமும், பகவத் கைங்கர்யமும்" என்று உபதேசிக்கப்பட்ட அதுஷ்டாநஸௌஷ்டவம், ஸர்வ ப்ரபந்ந ஜநங்களுக்கும் இதொன்றுமே கர்த்தவ்யமென்று தெரியும்படி வெளிச் செறிப்பாகப் பண்ணினவர்க ளாகையாலே அவர்களுடைய இப்படிப்பட்ட ஔதார்யத்தை யென்றபடி.

விளக்கம் - (சரணாம் பதுமத்தாரியல் சென்னி) - **குரு பாதாம்புஜம் த்யாயேத் – ஆசார்யனுடைய தாமரை போன்ற திருவடிகளைத் த்யானித்தபடி – என்றும்**, யதிராஜ விம்சதி (5) - பவத் பதாப்ஜே ஹ்ருஷ்டாஸ்து நித்யம் அநுபூய மம அஸ்ய புத்தி - குறைந்த ஞானம் உள்ள எனக்கு இந்த வரத்தை அளிப்பதன் மூலம் உனது உயர்ந்த திருவடிகளில் நான் எப்போதும் பொருந்தியவனாக உள்ள நிலை ஏற்பட வேண்டும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப இனிமையை அளிக்கவல்ல தாமரை போன்ற திருவடிகளை, க்ரீடம் போன்ற உயர்ந்த ஆபரணங்கள் கொண்டு தங்கள் தலையை அலங்கரித்துக் கொள்பவர்கள் போன்று, அந்தத் திருவடிகளால் அலங்கரித்துக் கொள்கின்ற உயர்ந்த அங்கத்தைக் கொண்டவரான. (இராமாநுசன்) இவ்விதம் அரங்கனது அடியார்களிடம் மிகுந்த ப்ரீதி உள்ளவரான எம்பெருமானாரை. (சார்ந்தவர் தம்) - வேறு கதியற்று அண்டி நிற்பவர்களுடைய. (காரிய வண்மை) - ஸமய நியதயாஸா ஸாதுவ்ர்த்யா – ஸாதுக்களை வளர்த்தலே ஒரு ஸமயத்தின் நோக்கம் - என்று கூறுவதற்கு ஏற்ப, தங்களுடைய ஸம்ப்ரதாயத்திற்கு ஏற்ற செயலாகக் கருதி, **ஸ்ரீவசனபூஷணம்** (274) – **கர்த்தவ்யம் ஆசார்ய கைங்கர்யமும் பகவத் கைங்கர்யமும்** - என்று உபதேசிக்கப்பட்டதான தங்கள் செயல்கள் அனைத்தும், அனைத்து ப்ரபந்நர்களும் “இது மட்டுமே செயல்கள் போலும்” என்று உணரும்விதமாக வெளிப்படுத்துவதால் காணப்படுவதான ஔதார்யத்தை.

வ்யாக்யானம் - (என்னாற் சொல்லொணாதிக் கடலிடத்தே) சதுஸ்ஸமுத்ர பரிவேஷ்டிதமான பூலோகத்திலே அவர்களுடைய ப்ரபாவத்தை உள்ளபடி யறிய மாட்டாத என்னாலே சொல்லித் தலைக்கட்ட வரிதாயிருக்கும். பதுமத்தார் – தாமரை புஷ்பம். இயல்தல் – அலங்கரித்தல். காரியம் – கர்த்யம். “இக்கடலிடத்தே” என்கிற வாக்யத்தை, “இராமாநுசன் றன்னைச் சார்ந்தவர் தம்” என்கிற வாக்யத்தோடே கூட்டி அந்வயித்தபோது பகவத் ஸமாச்ரயணத்துக்குங்கூட இசைவாரில்லாத இருள்தருமா ஞாலத்திலே அதினுடைய எல்லைநிலமான எம்பெருமானார்திருவடிகளை ஆச்ரயிக்கப் பெற்றவர்களுடைய ப்ரபாவம் என்னால் சொல்லித் தலைக்கட்ட அரிதாயிருக்கு மென்றபடி. “காரியல் வண்மை” என்று பாடமானபோது, கார் – வர்ஷாகவலாகம்; அதினுடைய இயலாவது - ஜல ஸ்த்தல விபாகம் பாராதே ஏகரூபமாக வர்ஷிக்கை. வண்மை - அம்மேகம்போலே ஸர்வ விஷயமாகவும் எம்பெருமானாருடைய திவ்ய குணங்களை வர்ஷிக்கையாகிற ஔதார்யத்தை யென்றபடி.

விளக்கம் - (என்னாற் சொல்லொணாதிக் கடலிடத்தே) - நான்கு திசைகளிலும் ஸமுத்ரத்தால் சூழப்பட்டதான இந்தப் பூமியில், அப்படிப்பட்டவர்களுடைய ப்ரபாவத்தை உள்ளது உள்ளபடி அறிய இயலாதபடி உள்ளது. "இக்கடலிடத்தே" என்பதை "இராமாநுசன் தன்னைச் சார்ந்தவர்தம்" என்பதுடன் சேர்த்துப் பொருள் கொண்டால், ஸர்வேச்வரனை அண்டி நிற்கவேண்டும் என்ற சிந்தனை கூட இல்லாத, திருவாய்மொழி – இருள் தரு மாஞாலம் – அறியாமை என்னும் இருளை அளிப்பதான இந்தப் பெரியபூமி - என்று கூறுவதற்கு ஏற்ப மனிதர்கள் நிறைந்த இந்தப் பூமியில், அவனிடம் கொள்ளும் பக்தியின் எல்லைநிலமாக உள்ளதான எம்பெருமானாருடைய திருவடிகளை அண்டி நிற்பதன் காரணமாக, அவர்களுடைய ப்ரபாவத்தை என்னால் கூறி முடிக்க இயலாது என்று பொருள். "காரிய வண்மை" என்பதை "காரியல் வண்மை" என்றும் படிப்பர். இவ்விதம் பொருள் கொண்டால், கார் என்பது மழையின் தன்மை; அதாவது நீர், நிலம் என்ற வேறுபாடு காணாமல் ஒரே போன்று பெய்யும் தன்மை. வண்மை என்பது அத்தகைய மேகம் போன்று அனைவருக்கும் எம்பெருமானாருடைய திவ்யமான குணங்களை ஒரே போன்று உபதேசிக்கும் தாராளத் தன்மை என்று பொருள்.

வ்யாக்யானம் – இராமாநுசன் றன்னைச் சார்ந்தவர் தம் காரியவண்மை என்றது – போதாயந வ்ர்த்தியை ஸக்ர்த் தர்சநத்தாலே ஆநுபூர்வியாக க்ரஹித்தும், க்ர்மிகண்டன் ஸதஸ்ஸிலே சென்று குத்ர்ஷ்டிகளை ப்ரஸங்க முகத்தாலே ஜயித்தும் நிர்வாஹகரா யிருந்துள்ள ஆழ்வானும், எம்பெருமானார் மேல்நாட்டிலே திக்விஜயம் பண்ணியருளி கோயிலேற வெழுந்தருளுகிறபோது மார்க்கத்திலே ஒரு அக்ரஹாரத்திலே மாயாவாதி வித்வாந்கள் அநேகம் பேர் திரண்டிருக்க அவர்களைக் கடாக்ஷித்து எல்லாரையும் ஸ்ரீவைஷ்ணவராம்படி திருத்த வேணுமென்று திருவுள்ளம் பற்றி ஆண்டானைக் கடாக்ஷித்து, நீர் போய் அவர்கள் ஸ்நாநம் பண்ணுகிற துறையிலே நித்யம் ஸ்ரீபாதத்தை விளக்கிக் கொண்டு வாரும் என்றருளிச் செய்ய; அவரும் அப்படியே பண்ண; பின்பு அத்தீர்த்த பாநத்தாலே அந்த மாயாவாதிக ளெல்லாருக்கும் துர்வாஸனை போய் ஆபிமுக்யம் பிறந்து எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயித்தார்களென்று குருபரம்பரா ப்ரபாவத்திலே சொல்லப்பட்ட முதலியாண்டானும், ஸகல வேதாந்த ஸாரமான திருவாய்மொழிக்கு வ்யாக்யாநம் பண்ணின பிள்ளானும், திருவேங்கடமுடையான் விஷயமாக, "ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டும் நாம்" என்று ஆழ்வார் ப்ரார்த்தித்தருளின கைங்கர்யங்களைப் பண்ணிக் கொண்டு போந்து தாமாக ஒரு தடாக நிர்மாணம் பண்ணுகிறபோது, திருவேங்கடமுடையான் தானே

தம்மோடொக்க மண்தட்டைச் சுமந்து கொண்டு வந்து ஸஹாயம் பண்ணும்படி அப்ரதிம ப்ரபாவரான அநந்தாழ்வானும், ஒருநாள் வரையிலே எம்பெருமானாருடைய கோஷ்டிக்குப் போரும்படியாக ததீயாராதநம் பண்ணின பருத்திக்கொல்லையம்மாள் தேவிகள் முதலானவர்களுடைய ப்ரபாவத்தை பாசுரமிட்டுச் சொல்லப்போமோ? வாசாமகோசர மென்றபடி.

விளக்கம் – (இராமானுசன் றன்னைச் சார்ந்தவர் தம் காரியவண்மை) ப்ரஹ்ம ஸூத்திரத்திற்கான போதாயன வ்ருத்தியைக் காஷ்மீருக்குச் சென்றபோது, ஒருமுறை படித்துப் பார்த்த உடனேயே அதனை அப்படியே மனப்பாடம் செய்தும், கிருமிகண்டன் என்ற அரசனுடைய சபையில் நின்று வேதங்களுக்குப் புறம்பான பொருள் உரைத்தவர்களை வென்றும் ஸ்ரீவைஷ்ணவத்தை நிர்வஹித்த கூரத்தாழ்வான். எம்பெருமானார் திருநாராயணபுரத்திற்குச் சென்று விட்டு மீண்டும் திருவரங்கம் வரும் வழியில் ஒரு அக்ரஹாரத்தில் மாயாவாதம் செய்யும் வித்வான்கள் பலர் உள்ளதை நோக்கினார்; அவர்கள் அனைவரையும் திருத்தி ஸ்ரீவைஷ்ணவராக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றினார்; ஆகவே முதலியாண்டானை அழைத்து அவரிடம், "நீவிர் அவர்கள் நீராடும் இடத்திற்குச் சென்று உம்முடைய திருவடிகளை அங்கு ஒவ்வொரு நாளும் கழுவிக் கொண்டு வாரும்", என்று உரைத்த்கார்; அதனை ஏற்ற அவரும் அவ்விதமே செய்ய, அந்தத் திருவடிகளின் தீர்த்தபானம் காரணமாக அந்த மாயாவாதிகள் அனைவரும் தங்களுடைய மாயாவாத வாசனை நீங்கியவர்களாக, ஸ்ரீவைஷ்ணவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு அடைந்தவர்களாக, எம்பெருமானார் திருவடிகளை அண்டி நின்றனர் என்று குருபரம்பரை ப்ரபாவத்தில் கூறப்பட்ட முதலியாண்டான். அனைத்து வேதங்களுடைய சாரமாக உள்ள திருவாய்மொழிக்கு வ்யாக்யானம் செய்த திருக்குருகைப்பிரான்பிள்ளான். திருவேங்கடவன் விஷயமாக **திருவாய்மொழியில்** (3-3-1) – ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டும் நாம் - என்று நம்மாழ்வார் ப்ரார்த்தித்து அருளிச்செய்த அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்து கொண்டு வரும் காலகட்டத்தில், ஒரு குளம் வெட்ட முனைந்தபோது, அந்தத் திருவேங்கடமுடையான் தானே இவருடன் சேர்ந்து மண் தட்டைச் சுமந்து கொண்டு வந்து உதவி செய்யும் அளவில் ப்ரபாவம் உள்ள அநந்தாழ்வான். தனது இறுதி நாள் முடிய எம்பெருமானாருடைய கோஷ்டி முழுவதற்கும் அன்னதானம் செய்து வந்த பருத்திக் கொல்லையம்மான் தேவிகள். இப்படிபட்ட பலருடைய ப்ரபாவங்களை உரைக்கவும் இயலுமோ? வாசாம் அகோசரம் – வாக்குகளுக்கு எட்டாது - என்று கருத்து.

12. இடம் கொண்ட கீர்த்தி மழிசைக்கு இறைவன் இணை அடிப்போது
அடங்கும் இதயத்து இராமானுசன் அம்பொற்பாதம் என்றும்
கடம் கொண்டு இறைஞ்சும் திருமுனிவர்க்கன்றி காதல் செய்யாத்
திடம் கொண்ட ஞானியர்க்கே அடியேன் அன்பு செய்வதுவே.

விளக்கவுரை – இந்தப் பூமி எங்கும் தனது புகழ் பரவி, உயர்ந்த குணங்களுடன் உள்ளவர் திருமழிசை ஆழ்வார் ஆவார். அவருடைய இணைந்த தாமரை போன்ற அழகான திருவடிகள் என்றும் எம்பெருமானாரின் நெஞ்சத்தில் உள்ளன. இப்படிப்பட்ட உடையவரின் அழகான, அழகிற்கே இருப்பிடமான திருவடிகளை அனைத்துக் காலங்களிலும், தாங்கள் இந்த மனிதப்பிறவி எடுத்தது இந்தத் திருவடிகளை அடைவதற்கே என்றபடி சிந்தித்து சிலர் உள்ளனர். இப்படிப்பட்ட உயர்ந்த திருவடிகளின் தொடர்பை மட்டுமே உயர்வாகக் கொண்டு, அதனையே தங்கள் மனதில் வைத்தபடி உள்ள ஞானிகள் உள்ளனர். அந்த ஞானிகள் மற்ற விஷயங்கள் மீது ஈடுபாடு இல்லாமல், எம்பெருமானார் விஷயத்தில் மட்டுமே ஈடுபாட்டுடன் உள்ளனர். அவர்களுக்கு அல்லவோ நான் அன்புடன் தொண்டு செய்வேன்? இவ்வாறு எம்பெருமானார் விஷயத்தில் ஈடுபட்டு உள்ளவர்கள் எம்பெருமானைக் கூட இரண்டாவது பக்ஷமாகக் கருதுவதும் உண்டு. இதற்கு இரண்டு செயல்கள் காண்போம். ஒரு முறை ஸ்ரீரங்கத்தில் எம்பெருமானார் மடத்தின் அருகே நம்பெருமாள் திருவீதி உலா வந்தான். அப்போது அனைவரும் அவனை வணங்கியபடி நிற்க, இராமாநுசரின் சீடரான வடுகநம்பி என்பவர் மட்டும் வரவில்லை. ஏன் என்று காரணம் வினவ அவர், “நான் அங்கு வந்தால் இங்கு உமக்காக (இராமாநுசர்) அடுப்பில் காய்ச்சிக் கொண்டிருந்த பால பொங்கி விடுமே”, என்றார். இது போன்று , கிருமிகண்டன் என்ற அரசனின் நிபந்தனையால் ஸ்ரீரங்கத்தை விட்டு எம்பெருமானார் மேல்கோட்டை என்னும் திருநாராயணபுரம் சென்று விடுகிறார். அப்போது அவருடன் இருந்த கூரத்தாழ்வானுக்கு பெரியபெருமாளை க் காணவேண்டும் என்ற ஆசை மேலிட, ஸ்ரீரங்கம் வந்தார். நகரக்காப்பாளர்கள் அவரிடம், “இராமானுசருடன் தொடர்புடையவர்கள் உள்ளே புக அனுமதியில்லை”, என்றனர். உடனே அங்கிருந்தவர்கள், “இவர் ஞானம் உடையவர், இவரை உள்ளே விடுங்கள்”, என்று கூறினார்கள். இதனைக் கேட்ட கூரத்தாழ்வான், “எம்பெருமானார் தொடர்புக்கு

மீறி உள்ள ஞானமும், அதனால் ஏற்படும் பெரியபெருமாள் தரிசனமும் எனக்குத் தேவை அற்றது", என்று கூறி பெரியபெருமாளைத் தரிசிக்காமலேயே புறப்பட்டுவிட்டார்.

அவதாரிகை *– கீழ் நாலு பாட்டாலும், ஆழ்வாருடைய ஸம்பந்தத்தையிட்டு எம்பெருமானாரை அநுபவிக்கும் ப்ரகரணமாகையாலே முதலாழ்வாரோடு ஸமாநகாலராய், பேயாழ்வாருடைய ப்ரஸாதத்தாலே தத்வஹித புருஷார்த்த யாதாத்ம்ய ஜ்ஞாநரான திருமழிசையாழ்வாருடைய பரஸ்பர ஸத்ர்சமான திருவடிகளைத் தம்முடைய திருவுள்ளத்திலே நிறுத்திக் கொண்ட எம்பெருமானாருடைய பரமபோக்யமான திருவடிகளை ஆச்ரயித்தவர்களுக்கொழிய வேறோருவர்க்கு விதேயமாகாத த்ர்டாத்யவஸாய பரரான ஜ்ஞாநிகளுக்கு அடியேன் பக்தனாகா நின்றேனென்கிறார்.*

விளக்கம் - ஆழ்வார்களுடைய ஸம்பந்தம் என்பதை முன்னிட்டுக் கொண்டு எம்பெருமானாரை அனுபவிக்கும் ப்ரகரணமாக இந்தப் பகுதி உள்ளது என்பதால், கடந்த நான்கு பாசுரங்கள் மூலம் முதலாழ்வார்கள் குறித்து அருளிச்செய்தார். முதலாழ்வார்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவரும், பேயாழ்வாருடைய அனுக்ரஹம் காரணமாகத் தத்வம் மற்றும் ஹிதம் (உண்மை, நன்மை) ஆகியவற்றைக் குறித்த உண்மையான ஞானத்தை பெற்றவரும் திருமழிசையாழ்வார் ஆவார். அவருடைய ஒன்றுக்கொன்று காண்பதற்கு இனிமையானதும், பொருந்தியதும் ஆகிய திருவடிகளைத் தனது திருவுள்ளத்தில் எம்பெருமானார் நிலைநிறுத்தினார். இப்படிப்பட்ட எம்பெருமானாரின் மிகவும் இனிமையான திருவடிகளை அண்டி நிற்பவர்களுக்கு அல்லாமல் வேறு யாருக்கும் அடிமையாகாமல் உறுதியான வைராக்யம் கொண்ட ஞானிகளுக்கு மட்டுமே திருவரங்கத்தமுதனாராகிய தான் பக்தனாக நிற்பதாக அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் *- (இடங்கொண்டகீர்த்தி) பூமியெங்கும் வ்யாப்தமான குணவத்தா ப்ரதையையுடைய மாஹாத்ம்யத்தை சோதிப்பதாக ருத்ரன் பார்வதீ ஸமேதனாய்க் கொண்டு வந்து அநேகமாக ஸம்வாதித்து இவருடைய ப்ரபாவத்தைக் கண்டு ஆச்சர்யப்பட்டுப் போனானென்றும், காஞ்சீ நகரத்திலே ஒரு வ்ர்த்தஸ்த்ரீ சில நாள் அநுவர்த்தநம் பண்ணினவாறே அவளுக்கு யௌவந ஸௌந்தர்யாதிகளைக் கொடுத்தாரென்றும், அப்படியே இவ்வாழ்வாருடைய நகரத்தில் நின்றும் க்ஷுத்ரோபத்ரவ வ்யாஜேந தக்ஷிண திக்கேறப் போகத் தொடங்க அக்காலத்திலே அங்கே பள்ளி கொண்டருளின எம்பெருமானும் இவருடனே யெழுந்தருளுவதாகப் புறப்பட அவரும்*

அதைக் கண்டு அவ்விடத்திலேதானே யிருக்கவேணு மென்றருளிச்செய்ய, அப்படியே அந்த எம்பெருமானும் இவர் சொன்னபடி செய்து, "சொன்னவண்ணஞ்செய்த பெருமாள்" என்று ஸர்வலோக ப்ரஸித்தமாய்க் கொண்டு அதுவே நிரூபகமாம்படி யிருந்தானென்றும், சோழமண்டலத்திலே ஒரு அக்ரஹாரத்திலே இவரெழுந்தருள வீதியிலே அத்யயநம் பண்ணுகிற சில ப்ராஹ்மணர்கள் இவரைக் கண்டு அத்தை நிறுத்தி இவர் புறம்பே சென்றவாறே அந்த ப்ராஹ்மணருக்கு தரவாய் தெரியாதேபோக, இதென்ன என்று ஆச்சர்யத்துடனே இவரைப் போயழைக்க, இவரும் கறுப்பு நெல்லையெடுத்து உகிராலே உரிக்க அத்தைக் கண்டு அந்த ப்ராஹ்மணருக்கு மேல் தோற்றிற்று என்றும் ப்ரஸித்தமிறே; இவ்வ்ர்த்தாந்தங்களை யெல்லாமநுஸந்தித்து "இடங்கொண்ட கீர்த்தி" என்கிறார்.

விளக்கம் - (இடங்கொண்டகீர்த்தி) - இந்தப் பூமி முழுவதுமாகப் பரவியுள்ள குணம், ஞானம் போன்றவற்றைக் குறித்தும், அவற்றின் மேன்மை குறித்தும் ஆராயும் பொருட்டு சிவனும் பார்வதியுமாக வந்தபோது, திருமழிசையாழ்வாருடன் உரையாடி, இவருடைய மதியூகத்தைக் கண்டு வியந்து போனார்கள். காஞ்சீபுரத்தில் வாழ்ந்து வந்து ஒரு வயதான பெண் இவருக்குப் பல உதவிகளும் செய்ததைக் கண்டு, இவர் அவளுக்கு இளமை மற்றும் அழகு ஆகியவற்றை அளித்தார். மேலும் இந்த ஆழ்வார் காஞ்சீபுரத்தில் வசித்து வந்தபோது அங்கு ஆட்சி செய்த அரசன் இவருடைய சிஷ்யராகிய கணிகண்ணனுக்கும் இவருக்கும் மிகுந்த உபத்ரவம் செய்தபடி இருந்தபோது, அது காரணமாக இவர் தென்திசை நோக்கிப் புறப்பட, அந்த திவ்யதேசத்தில் பள்ளி கொண்டிருந்த ஸர்வேச்வரனும் இவருடன் சேர்ந்து புறப்படத் தயாரானபோது, "வேண்டாம்" என்று தடுத்து, தானும் அங்கேயே இருப்பதாகக் கூறி அவனையும் அங்கேயே பள்ளி கொள்ளும்படிக் கூற, அவனும் அப்படியே கிடந்த காரணத்தால், "சொன்னவண்ணம் செய்த பெருமாள்" என்று அனைவரும் அறியும்படியாக, ஆழ்வாருக்காகத் தான் செய்த செயலைக் கொண்டே தன்னை அனைவரும் அறியும்படியாகக் கிடந்தான். சோழநாட்டில் ஆழ்வாரும், கணிகண்ணனும் ஒருநாள் ஒரு அக்ரஹாரத்தில் செல்லும்போது அங்குள்ள வீதியில் சில அந்தணர்கள் வேதங்கள் ஓதிக் கொண்டிருந்தார்கள்; இவர்கள் இருவ்ரையும் கண்டபோது வேதம் ஓதுவதை அவர்கள் நிறுத்தினர்; அவர்கள் இருவரும் அந்த இடத்தைக் கடந்து சென்றவுடன் மீண்டும் வேதம் ஓத முயன்றபோது, தாங்கள் முன்பு எந்த வரியில் நிறுத்தினோம் என்று அறியாமல் திகைத்தனர்; அதனால் அவர்கள் இருவரையும்

அழைக்க, அப்போது ஆழ்வார் ஒரு கறுப்பு நெல்லை எடுத்து உரித்துக் காட்ட, அவர்கள் நினைவில் வந்தவராக மீண்டும் ஓதத் தொடங்கினர் - இது போன்றுள்ள பல நிகழ்வுகளைத் திருவுள்ளத்தில் கொண்டவாராக "இடங்கொண்ட கீர்த்தி" என்கிறார்.

வ்யாக்யானம் - *(இடங்கொண்ட கீர்த்தி) "நிற்பதுமோர் வெற்பகத்து" என்கிற பாசுரப்படியே ஸர்வதிக்குக்களிலும் வ்யாப்தையான கீர்த்தியை யுடையரான. (மழிசைக் கிறைவன்) திருமழிசையென்கிற திவ்யதேசத்துக்கு ஸ்வாமியாய் அதுவே நிரூபகமாக வுடையரான திருமழிசைப்பிரானுடைய. (இணையடிப்போது) பரமபோக்யமாய் பரஸ்பர ஸத்ர்சமான திருவடிகளாகிற பத்மங்கள். போது – பத்மம். (அடங்கு மிதயத்து) அணுவான மநஸ்ஸிலே மஹத்தான அத்திருவடிகள் அடங்கும்படி அமைத்துக் கொள்ளுகிற ஹ்ர்தய ப்ரதேசத்தை யுடையரான. (இராமானுசன்) எம்பெருமானாருடைய.*

விளக்கம் - (இடங்கொண்ட கீர்த்தி) - திருச்சந்தவிருத்தம் (65) - நிற்பதுமோர் வெற்பகத்து - என்றுள்ள பாசுரத்திற்கு ஏற்றபடி அனைத்து திசைகளிலும் பரவி நிற்கும் கீர்த்தி நிறைந்தவராகிய. (மழிசைக் கிறைவன்) - திருமழிசை என்ற திவ்யதேசத்திற்கு ஸ்வாமியாகவும், அந்த நிலையே இவரை இன்னார் என்று அடையாளம் காண்பிக்கும்படியும் உளள திருமழிசையாழ்வாருடைய. (இணையடிப்போது) - மிகவும் அழகாகவும், ஒன்றுக்கொன்று அழகாகப் பொருந்தியும் உள்ள திருவடித் தாமரைகள். (அடங்கு மிதயத்து) - அணு அளவில் உள்ள மனதில், மிகவும் பெரிய அந்தத் திருவடிகள் அடங்கும்படியாக அமைத்துக்கொள்ளும் இதயத்தை உடையவராகிய. (இராமாநுசன்) - எம்பெருமானாருடைய.

வ்யாக்யானம் - *(அம்பொற்பாதமென்றும்) ஸௌந்தர்யத்துக்கு கொள்கலமாகையாலே அதிவிலக்ஷணமாய் ஸ்ப்ர்ஹணீயமாகையாலே ஸர்வர்க்கும் ஸமாச்ரயணீயமாயிருக்கிற திருவடிகளை ஸர்வகாலத்திலும். (கடங்கொண்டிறைஞ்சும்) "நஸம்சயஸ்து தத்பக்த பரிசர்ய ரதாத்மநாம்", "குருரேவ பரம்ப்ரஹ்ம", "நீக்கமில்லா வடியார்தம் அடியாரடியார் எங்கோக்கள் அவர்களுக்கே குடிகளாய்ச் செல்லும் நல்ல கோட்பாடே" என்றும் சொல்லுகிறபடியே ப்ராப்யமென்று அத்யவஸித்து ஆச்ரயிக்கும். கடம் - ப்ராப்யம். கொள்கை - அத்யவஸிக்கை. (திருமுனிவர்க்கன்றிக் காதல் செய்யா) இப்படிப்பட்ட*

நிரவதிக சம்பத்தையுடையராய்க் கொண்டு, அதில் உபகார ஸ்மர்தியாலே அத்தையே மநநம் பண்ணிக் கொண்டிருக்கிற ஜ்ஞாநாதிகர், "த்ர்ணீக்ர்த விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" என்னும்படியான வர்களுக்கொழிய மற்றொருவருக்கு ச்ருதி ஸ்மர்தீதிஹாஸ புராணங்களிலே அதிரஹஸ்யமான சரம பர்வ விஷயத்திலே பண்ணப்படும் ஸ்தோத்ரத்தைப் பண்ணாத. (திடங்கொண்ட ஞாநியர்க்கே) த்ர்டாத்யவஸாயத்தை யுடையரான ஜ்ஞாநாதிகர்க்கே. திடம் – த்ர்டம். கொள்கை - உடைத்தாகை.

விளக்கம் – (அம்பொற்பாதமென்றும்) - அழகிற்கு இருப்பிடமாக உள்ளதால் மிகவும் மேன்மை கொண்டதாகவும், அனைவருக்கும் விரும்பத்தக்கதாக உள்ளதால் அனைவரும் அண்டி நிற்கும்படியும் உள்ளதாகவும் உள்ள திருவடிகளை அனைத்துக் காலங்களிலும். (கடங்கொண்டிறைஞ்சும்) - நஸம்சயஸ்து தத்பக்த பரிசர்ய ரதாத்மநாம் – பாகவத்தர்களுடைய அடியார்கள் மோக்ஷம் புகுவதில் எந்தவிதமான ஐயமும் இல்லை - என்றும், குருரேவ பரம்ப்ரஹ்ம – ஆசார்யனே பரப்ரஹ்மம் – என்றும், திருவாய்மொழி (8-10-10) - நீக்கமில்லா வடியார்தம் அடியாரடியார் எங்கோக்கள் அவர்களுக்கே குடிகளாய்ச் செல்லும் நல்ல கோட்பாடே - என்றும் கூறுவதற்கு ஏற்ப அடையத்தக்க இலக்கு என்று அண்டி நிற்கின்ற. (திருமுனிவர்க்கன்றிக் காதல் செய்யா) – இப்படியாகத் தடையற்ற ஸம்பந்தம் உள்ளவராக, அந்தத் திருவடிகள் தங்களுக்குச் செய்யும் உபகாரங்களை எப்போதும் எண்ணியபடி, அதனையே மனதில் நிலைநிறுத்தியபடி உள்ள ஞானம் நிறைந்தவர்கள். த்ருணீக்ருத விரிஞ்ச்யாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: - இராமாநுசரின் திருவடித் தாமரைகளைப் பற்றி நிற்பவர்கள், நான்முகன் முதலானவர்களுடைய உலகியல் செல்வங்கள் அனைத்தையும் அலட்சியமாகவே எண்ணுவர் - என்று கூறுவதற்கு ஏற்றபடி உள்ளவர்களுக்கு அல்லாமல், மற்ற யாருக்கும் ச்ருதி ஸ்மிருதி இதிஹாஸம் புராணங்கள் ஆகிய அனைத்திலும் மிகவும் மறைமுகமாகக் கூறப்படுவதான பாகவத ஆராதனம் என்பதைச் செய்யாத. (திடங்கொண்ட ஞாநியர்க்கே) - உறுதி கொண்ட அறிவு நிறைந்தவர்களுக்கு மட்டுமே.

வ்யாக்யானம் *- ஒருநாள் வரையிலே அழகியமணவாளர் வாஹநத்துடனே எம்பெருமானார் மடத்தருகே எழுந்தருள, எம்பெருமானாரும் திருவீதியிலே யெழுந்தருளி*

அவரைத் திருவடித்தொழுது மடத்திலே யெழுந்தருள, வடுகநம்பி அவரைத் திருவடித் தொழாதே அங்கே தானே யிருக்கையாலே அத்தைக் கடாக்ஷித்து, "நம்பெருமாளை ஸேவிக்க ஏன் காணும் வரவில்லை", என்ன, அவரும் தேவரீருடைய பெருமாளை ஸேவிக்கப் போனால் அடியேனுடைய பெருமாளுக்குக் காய்ச்சின பால் பொங்கிப் போனாலோ என்றார் - என்று ப்ரஸித்தமிறே. க்ர்மிகண்ட னுபத்ரவத்துக்காக எம்பெருமானார் மேல்நாட்டு கெழுந்தருளின பின்பு ஆழ்வான் அந்தப் பையலுடைய ஸதஸ்ஸிலே புகுந்து அங்குண்டான குத்ர்ஷ்டிகளை ஜயித்து திரும்பவும் கோயிலுக் கெழுந்தருளி அங்கே யிருக்கிற காலத்திலே ஒருநான் பெரியபெருமாளை ஸேவிப்பதாகக் கோயிலுக்குள்ளே யெழுந்தருள, திருக்கோபுர த்வாரத்திலே யிருக்கிற ராஜபடர் இவரைப் பார்த்து, "ராமாநுஜ ஸம்பந்தமுடையா ரொருவரையாகிலும் கோயிலுக்குள்ளே புகவிட வேண்டா" என்ற ராஜசாஸநத்தைச் சொல்ல, வேறே சிலர் அப்படியேயாகிலும் இவர் ஜ்ஞாநாதிகர், உள்ளே புகுரவிடுங்கோ ளென்ன, இவரும் அவர்களுடைய உக்தி ப்ரத்யுத்தரங்களைக் கேட்டருளி தம்மைப் போரவெறுத்து உடனே நாலடி பிற்காலித்து, எம்பெருமானார் ஸம்பந்தத்துக்குப் புறம்பான ஜ்ஞாநாதிக்யமும் இந்த பகவத்ஸேவையும் நமக்கு வேண்டாமென்று அன்று முதலாகக் கொண்டு எம்பெருமானார் திரும்பவும் கோவிலுக் கெழுந்தருளுகிற பர்யந்தம் பெரியபெருமாளைத் திருவடித் தொழாதே யிருந்தா ரென்றும் ப்ரஸித்தமிறே. இப்படிப்பட்ட த்ர்டாத்யவஸாய யுக்தரான ஜ்ஞாநாதிகருக்கென்றபடி.

விளக்கம் – ஒருநாள் ஸ்ரீரங்கநாதன் வாகனத்தில் புறப்பாடு கண்டருளி, எம்பெருமானாருடைய மடத்தின் அருகே வந்து நின்றான். அப்போது எம்பெருமானாரும் திருவீதியில் நின்று, அவனைத் திருவடி தொழுது மீண்டும் மடத்தின் உள்ளே புகுந்தார். அங்கு வடுகநம்பி அவரை வணங்கியபோது அவரிடம், "நம்பெருமாளைச் சேவிக்க ஏன் நீவிர் வரவில்லை?", என்றார். இதற்கு வடுகநம்பி, "உமக்கு அளிப்பதற்காக நான் அடுப்பில் பால் காய்ச்சிக் கொண்டிருந்தேன். நான் அதனை விட்டு நம்பெருமாளைத் தரிசிக்க வந்தால், எனது பெருமாளாகிய உமக்குத் தரவேண்டிய பால் பொங்கி வீணாகப் போயிருக்கும் அல்லவோ?" என்றார். க்ருமிகண்டன் என்ற அரசன் செய்த உபத்ரவங்களின் காரணமாக எம்பெருமானர் திருவரங்கத்தை விட்டு திருநாராயணபுரம் சென்றார். அப்போது அவனுடைய சபையில் புகுந்த கூரத்தாழ்வான் அங்குள்ள வாதிகள் அனைவரையும் தனது வாதங்கள் மூலம் வென்று மீண்டும் திருவரங்கம் வந்து வாழ்ந்தார். அப்போது ஒருநாள் பெரியபெருமாளாகிய ஸ்ரீரங்கநாதனைத் தரிசிக்கக் கோயிலுக்குள்

செல்ல முயன்றார். அப்போது கோபுரவாசலில் நின்றிருந்த அரசாங்கக் கோயில் காப்பாளர்கள் இவரை நோக்கி, "இராமானுசருடன் தொடர்பு கொண்டுள்ள யாரையும் கோயிலுக்குள் செல்ல அனுமதிக்கக்கூடாது", என்று எழுதப்பட்டிருந்த அரச ஆணையைக் காண்பித்தார்கள். அப்போது அங்கிருந்த சிலர், "அப்படியே அரச ஆணை இருந்தாலும் இவர் மிகுந்த ஞானம் உள்ளவர், ஆகவே இவரை உள்ளே செல்ல அனுமதிக்கவேண்டும்", என்றனர். அப்போது கூரத்தாழ்வான் இவ்விதம் இவர்கள் செய்த வாக்குவாதங்களைக் கேட்டு, மனம் வெறுத்து, உடனே பின்னே வந்து, "இராமானுசரைத் தள்ளி வைத்துள்ள இங்கே உள்ள ஞானமும் பகவத் தரிசனமும் நமக்கு அவசியம் இல்லை", என்று திரும்பினார்; அன்று தொடங்கி, எம்பெருமானர் மீண்டும் திருவரங்கக் கோயிலுக்குள் எழுந்தருகிற நாள் முடிய தானும் பெரியபெருமாளாகிய ஸ்ரீரங்கநாதனைத் தரிசிக்காமலேயே இருந்தார். இப்படிப்பட்ட உறுதியான மனம் கொண்ட ஞானம் நிறைந்தவர்கள் விஷயத்தில்.

வ்யாக்யானம் - *(அடியேன்) இப்படி ததீய பர்யந்தமான சேஷதைக ஸ்வரூபனான நான். (அன்பு செய்வதுவே) ஸ்நேஹித்து ஸக்தனாயிருப்ப தென்கிறார். "வாசா யதீந்த்ர மநஸா வபுஷாச யுஷ்மத் பாதாரவிந்தயுகளம் பஜதாம் குரூணாம் கூராதிநாத குருகேச முகாத்ய பும்ஸாம்பாதாநு சிந்தந பரஸ்ஸததம் பவேயம்" என்று இத்தையே ஜீயரும் ப்ரார்த்தித்தாரிறே.*

விளக்கம் - (அடியேன்) - இவ்விதம் ஸர்வேச்வரன் தொடங்கி அவனுடைய அடியார்கள் முடிய உள்ள அனைவருக்கும் அடிமையாக உள்ள நான். (அன்பு செய்வதுவே) - அவர்களை விரும்பி அன்புடன் உள்ளதைக் கூறுகிறார். யதிராஜ விம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் – என்பதற்கு ஏற்ப, ஸ்வாமி மணவாளமாமுனிகளும் இப்படியாகவே அல்லவோ விண்ணப்பித்துப் ப்ரார்த்தித்தார்!

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே, திருமழிசையாழ்வாருடைய ஸம்பந்தத்தையிட்டு எம்பெருமானாரைக் கொண்டாடி, இப்பாட்டிலே தாம் முந்துற முன்னம் தொண்டுபட்ட பெரியபெருமாள் திருவடிகளிலே அதிப்ரவணராய், "மற்றுமோர் தெய்வமுண்டே" என்று அவரையொழிந்த எம்பெருமான்களை விரும்பாத பதிவ்ரத்யத்தை யுடையரான ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வாருடைய திருவடிகளையொழிய வேறான்றிலே ஆதரமற் றிருக்கிற எம்பெருமானார் திருவடிகளே எனக்கு ப்ராப்யமென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் திருமழிசையாழ்வாருடன் உள்ள ஸம்பந்தம் என்பதைக் கூறி எம்பெருமானாரைக் கொண்டாடினார். இந்தப் பாசுரத்தில் பெரியபெருமாளாகிய ஸ்ரீரங்கநாதன் விஷயத்தில் கைங்கர்யம் செய்து, அவன் மீது அளவு கடந்த அன்பு கொண்டவரும், திருமாலையில் (9) – மற்றுமோர் தெய்வம் உண்டே – என்று பெரியபெருமாள் அல்லாத மற்ற எந்த ஒரு திவ்யதேசத்து எம்பெருமானையும் விரும்பால், உயர்ந்த பதிவ்ரதையாகவே வாழ்ந்த தொண்டரடிபொடியாழ்வாருடைய திருவடிகள் அல்லாமல் வேறு எதனையும் சார்ந்து நிற்காமல் உள்ள எம்பெருமானாருடைய திருவடிகளே, தான் அடைய வேண்டிய இலக்கு என்கிறார்.

வ்யாக்யானம் - (செய்யும் பசுந் துளபத்தொழில் மாலையும்) மிக்க சீர்த்தொண்டரான தம்மாலே, வைஜயந்தீ வந மாலையென்றும், கலம்பகன் மாலையென்றும் அநுபோக்த்தாக்களாலே உல்லேகிக்கும்படி ஸந்தர்ப்பிக்கப்பட்டதாய் தம்முடைய கரஸ்பர்சத்தாலே வந்த புதுக்கணிப்பெல்லாம் நிறத்திலே காணலாம்படியான பசுமையை யுடைத்தான திருத்துழாயாலே வகுப்புண்டாகச் சமைத்த திருமாலையும். "தொடையொத்த துளபமுங் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்னுமிவர், தம்மைத்தாமே நிரூபித்துக் கொள்ளவல்லாரிறே. (செந்தமிழில் பெய்யும் மறைத் தமிழ்மாலை) "அருமறைகள்" போலே த்ரைவர்ணிகாதிகாரமா யிருக்கை யன்றிக்கே பெண்ணுக்கும் பேதைக்கும் அதிகரிக்கலாம்படி ஸர்வாதிகாரமாய் அந்யோந்யோப மதர்த்த வாக்யங்களாலே ப்ரமத்தை விநாசிப்பித்தும் ஸ்வார்த்தத்தை யறிவதற்கு துரவகாஹங்களாயு மிருக்கையன்றிக்கே, ஸாரதமார்த்த ப்ரகாசகமாய் த்ரமிட பாஷையாலே நிர்மிக்கப்பட்ட திருவேதமென்று நிரூபிக்கும்படியா யிருப்பதாய் திருமாலையென்னும் பேரையுடைத்தான தமிழ்மாலையையும். பெய்தல் – உண்டாக்குதல்.

விளக்கம் – பெரியதிருமொழி (11-1-9) - மிக்க சீர்த்தொண்டர் - என்று கூறுவதற்கு ஏற்பத் தொண்டரடிப் பொடியாழ்வார் என்னும் தன்னால் புதிய வைஜயந்தீ மாலை என்றும், கலம்பக நன்மாலை என்றும் அனுபவிப்பவர்கள் மூலம் கொண்டாடும்படி உள்ளதாகவும், தனது திருக்கரம் பட்டதன் காரணமாக உண்டான மகிழ்ச்சி அனைத்தும் பசுமை நிறத்தில் வெளிப்படும்படி உள்ள துளசி போன்றதாகவும் உள்ள திருமாலை என்னும் ப்ரபந்தத்தை உண்டாக்கி, திருப்பள்ளியெழுச்சி (10) - தொடையொத்த துளபமுங் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி - என்று கூறும்படி உள்ள இவர் தம்மைத்தாமே நிரூபித்துக் கொள்ளவல்லவர் அல்லவோ! (செந்தமிழில் பெய்யும் மறைத் தமிழ்மாலை) - அருமறைகள் - என்று கூறுவதற்கு ஏற்ப முதல் மூன்று வர்ணத்தினருக்கு மட்டுமே அதிகாரம் உள்ள வேதங்கள் போன்று அல்லாமல், பெண்களும் ஏதும் அறியாதவர்களும் கூட கற்கும்படியாக அனைவருக்கும் ஏற்கும் விதத்தில் உள்ள; மறைந்து கிடக்கும் பொருளை உணர்த்தி மயக்கத்தை விலக்கும் வாக்கியங்கள் நிறைந்ததாகவும், கூறப்படும் உபதேசத்தை அறிந்து கொள்ள மிகவும் கடினம் என்பதான தன்மைகள் ஏதும் இல்லாமல், வேதங்களுடைய ஸாரத்தை மட்டுமே எடுத்துக்கொண்டு உயர்ந்த தமிழ் மொழியில் உண்டாக்கப்பட்ட வேதமே ஆகும் என்று கூறப்படுவதாகவும், திருமாலை என்று பெயர் உள்ளதாகவும் இருக்கின்ற தமிழ்மாலை.

வ்யாக்யானம் - (பேராத சீரரங்கத் தையன்) “பராஸ்ய சக்திர் விவிதைவச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியாச”, “யஸ்ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்”, “நித்யஸ் ஸத்யோ நிஷ்களங்கோ நிரஞ்சநோ நிர்விகல்போ நிராக்யாத்ச்சுதோ தேவ ஏகோ நாராயணா:” என்றும், “ஈறில் வண்புகழ் நாரணன்” என்றும் சொல்லுகிறபடியே ஹேயப்ரதிபடங்களாய் நித்யங்களாயிருக்கிற கல்யாண குணங்களை யுடையனாய், “மாதா பிதா ப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ர்த் கதி:” என்றும், “பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய”, “பிதா ப்ராதா ச மாதா ச மாதவ:” என்றும், “தாயாய்த் தந்தையாய்” என்றுஞ் சொல்லுகிறபடியே ஸர்வவித பந்துத்வம் தோற்றும்படி கோயிலேலே கண்வளர்ந்தருளின பெரியபெருமாள். “ஐயனே யரங்கனே” என்று இவரும் தம் ப்ரபந்தத்திலே யருளிச் செய்தாரிறே.

விளக்கம் - (பேராத சீரரங்கத் தையன்) – ச்வேதாஸ்வதர உபநிஷத் (6-7) பராஸ்ய சக்தி: விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஞானபலக்ரிய ச – இவனுக்கு உள்ள சக்தியானது

இயற்கையிலேயே உள்ளது; மேலும் ஞானம், பலம், அறிவு முதலியவை கொண்டது. - என்றும், முண்டக உபநிஷத் (1-1-9) – ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் – அனைத்தையும் அறிந்தவன் யாரோ, அறிபவன் யாரோ - என்றும், நாராயண உபநிஷத் - நித்யஸ் ஸத்யோ நிஷ்களங்கோ நிரஞ்சநோ நிர்விகல்போ நிராக்யாத்ச்சுதோ தேவ ஏகோ நாராயணா: - எப்போதும் உள்ளவன், ஸத்யமானவன், களங்கம் அற்றவன், தோஷங்கள் அற்றவன், மாற்றங்கள் அற்றவன், தனக்கு நிகர் இல்லாதவன், தேவர்களுடைய தேவன், நாராயணன் - என்றும், திருவாய்மொழி (1-2-10) - ஈறில் வண்புகழ் நாரணன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப தாழ்ந்த அனைத்திற்கும் எதிர்த்தட்டாக எப்போதும் உள்ளதான திருக்கல்யாண குணங்களைக் கொண்டவன். ஸுபால உபநிஷத் - மாதா பிதா ப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருத் கதி: - தாயும், தந்தையும், உடன் பிறந்தவனும், இருப்பிடமும், காப்பவனும் நண்பனும், பேறும் ஆகிய எல்லாம் நாராயணனே - என்றும், கீதை (11-43) - பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய – இந்த லோகம் மற்றும் அனைத்து சராசரங்களுக்குத் தந்தை நீயே - என்றும், மஹாபாரதம் வனபர்வம் (161-56) - பிதா ப்ராதா ச மாதா ச மாதவ: - மஹாலக்ஷ்மியின் நாதனாகிய ஸர்வேச்வரனே அனைத்தின் தந்தை, சகோதரன், தாய் ஆவான் - என்றும், திருவாய்மொழி (7-8-1) - தாயாய்த் தந்தையாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்துவிதமான உறவும் இவனே ஆவான் என்றுள்ள தன்மை வெளிப்படும்படி திருவரங்கத்தில் கண்வளர்பவன். பெருமாள் என்று போற்றப்படும் இராமனால் ஆராதிக்கப்பட்டதால் பெரியபெருமாள் என்று கொண்டாடப்படும் ஸ்ரீரங்கநாதன். திருமாலையில் (33) – ஐயனே அரங்கனே – என்று இந்தத் தொண்டரடிப் பொடியாழ்வாரும் அருளிச்செய்தமை காண்க.

வ்யாக்யானம் - (அரங்கத்தையன்) அந்த ஸ்தலத்தை யிட்டு அவர் தம்மை நிரூபிக்கவேண்டும்படி காணும் இவர் தமக்கு அதிலே ப்ராவண்யாதிசயமிருப்பது. பேராமை – நீங்காமை. அப்படிப்பட்டவருடைய (கழற்கணியும்) திருவடிகளுக்கு அலங்காரமாக ஸமர்ப்பித்த. (பரன்) சேஷத்வத்துக்கு தமக்கு மேற்பட்டாரில்லை யென்னும்படி அதினுடைய சரமாவதியிலே நிற்கையாகிற அதிகாரத்தைப் பெற்று உத்க்ர்ஷ்டரான ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வாருடைய. "தொண்டரடிப்பொடி யென்னு மடியனை அளியனென்றருளி உன்னடியார்க் காட்படுத்தாய்" என்று சேஷத்வத்தினுடைய சரமாவதியையிறே இவர் ப்ரார்த்தித்தது. (தாளன்றி) திருவடிகளை யொழிய. இவர்

கோடியான ஆழ்வார்களுடையவும், பெரியமுதலியார் தொடக்கமான ப்ரபந்நருடையவும் திருவடிகளை யொழிய வென்றபடி. (ஆதரியா மெய்யன்) வேறாரு ஸாதநாந்தர நிஷ்ட்டரை விரும்பாத ஸத்யசீலரான. யதா த்ர்ஷ்டார்த்த வாதித்வம், ஸத்யசீலத்வம். ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை தாம் அவனுக்கு பர்யங்கமாயிருக்கிற தசையிலே கண்டபடியே அவதாரத்திலே ஸ்ரீபாஷ்யத்தை யருளிச்செய்த ஸத்ய சீலராகையாலே (மெய்யன்) என்கிறார்.

விளக்கம் - (அரங்கத்தையன்) - திருவரங்கம் என்ற அந்த க்ஷேத்ரத்தின் பெயரைக் கொண்டே தன்னை அறியலாம்படி ஸ்ரீரங்கநாதன் உள்ளான்; அவனிடம் கொண்ட காதல் என்பதைக் கொண்டே தன்னை அறியலாம்படி தொண்டரடிப்பொடியாழ்வார் உள்ளார். அப்படிப்பட்டவருடைய. (கழற்கணியும்) - திருவடிகளுக்கு அலங்காரம் போன்று சமர்ப்பிக்கப்பட்ட. (பரன்) - அடிமைத்தனத்திற்கு தனக்கு மேற்பட்டவர்கள் யாரும் இல்லை என்னும்படி அடிமைத்தனத்தின் எல்லையில் நிற்பது என்ற தகுதி பெற்று உயர்ந்தவராகிய தொண்டரடிப்பொடியாழ்வாருடைய. திருப்பள்ளியெழுச்சி (10) - தொண்டரடிப்பொடி யென்னு மடியனை அளியனென்றருளி உன்னடியார்க் காட்படுத்தாய் – என்று கூறுவதர்கு ஏற்ப அடிமைத்தனத்தின் எல்லையை அல்லவோ இவர் அரங்கனிடம் வேண்டி நின்றார். (தாளன்றி) - அவருடைய திருவடிகள் அல்லாமல். இவர் முடிய உள்ள ஆழ்வார்கள், ஜடாயு தொடக்கமாக உள்ள ப்ரபந்நர்கள் ஆகியோர்களுடைய திருவடிகள் அல்லாமல் என்று கருத்து. (ஆதரியா மெய்யன்) - மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளும் வேறு யாரையும் விரும்பாமல் உள்ளவர். ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப ரூப குணங்களை, தான் அவனுடைய மெத்தையாக உள்ள நிலையில், அதாவது எம்பெருமானாராகிய தான் ஆதிசேஷனாக உள்ளதால், கண்டதை தனது எம்பெருமானார் என்னும் அவதாரத்தில் ஸ்ரீபாஷ்யத்தை அருளிச்செய்தார்; இதனால் எம்பெருமானாரை “மெய்யன்” என்கிறார்.

வ்யாக்யானம் - (இராமாநுசன்) எம்பெருமானாருடைய. (சரணே கதி வேறெனக்கே) திருவடிகளே என்ற அவதாரணத்தாலே – அநந்யகதித்வஞ் சொல்லிற்று. (எனக்கே) வெறொரு க்ரியா விசேஷத்தைப் பண்ணமாட்டாத அகிஞ்சநனான வடியேனுக்கு திருவடிகளே விசேஷித்து உபாயமும் உபேயமுமென்றபடி. “உபாயோபேய பாவேந

தத்வதஸ் ஸர்வதேசிகை: ஸுநிச்சிதாங்க்ரி பத்மாய யதிராஜாய மங்களம்” என்னக் கடவதிறே.

விளக்கம் - (இராமாநுசன்) - எம்பெருமானாருடைய. (சரணே கதி வேறெனக்கே) - “திருவடிகளே” என்று ஏவகாரம் மூலம் மற்ற எதனையும் சாராத நிலை கூறப்பட்டது. (எனக்கே) - மற்றொரு விஷயம் எதற்கும் இது போன்ற அடிமைத்தனம் என்பதைச் செய்யாத, வேறு கைம்மாறு இல்லாத எனக்கு, அவருடைய திருவடி மட்டுமே உபாயம் மற்றும் உபேயம் ஆகும். உபாயோபேய பாவேந தத்வதஸ் ஸர்வதேசிகை: ஸுநிச்சிதாங்க்ரி பத்மாய யதிராஜாய மங்களம் – அனைத்து உபாய உபேயங்களைத் தெளிவாக உள்ளது உள்ளபடி உபதேசிக்கும் யதிராஜருக்கு மங்களம் - என்றது காண்க.

14. கதிக்குப் பதறி வெங்கானமும் கல்லும் கடலும் எல்லாம்
கொதிக்கத் தவம் செய்யும் கொள்கையற்றேன் கொல்லிகாவலன் சொல்
பதிக்கும் கலைக் கவிபாடும் பெரியவர் பாதங்களே
துதிக்கும் பரமன் * இராமானுசன் என்னைச் சோர்விலனே.

விளக்கவுரை – கொல்லிநகர் என்று கூறப்படும் திருவஞ்சிக்களம் (கேரளம்) என்ற நகரின் அரசரான குலசேகரப்பெருமாள் செய்தது என்னவெனில் – சாஸ்திரச் சொற்களுக்கு விஷயமாக உள்ள ஸ்ரீரங்கநாதனின் விபூதிகள், குணங்கள் ஆகியவற்றை – முத்துக்கள், இரத்தினக் கற்கள் போன்றவற்றைக் கோர்ப்பவர் போன்ற செயல் செய்து, “இருளிரிய சுடர் மணிகள்”, என்று தொடங்கி, “நலந்திகழ் நாரணன் அடிக் கீழ் நண்ணுவார்”, என்று முடித்து, இந்தக் கவிதைகளில் அந்தச் சாஸ்திரச் சொற்களைப் பதித்தார். இப்படிப்பட்ட குலசேகராழ்வாரின் பெருமாள் திருமொழியை எப்போதும் அநுஸந்திக்கும் நாதமுனிகள், ஆளவந்தார், பெரிய நம்பி, திருமலைநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, திருவரங்கப் பெருமாளரையர், திருமாலையாண்டான் போன்றவர்களின் திருவடிகளை மட்டுமே ஆராதித்து வருபவரும், பகவத் விஷயத்தில் இவரை விட உயர்ந்தவர் யாரும் இல்லாமல் உள்ளவரும் ஆகிய எம்பெருமானார் என்னை விட்டு நீங்காமல் எப்போதும் என்னுடன் உள்ளார். இதனால் என்ன நிகழ்ந்தது? மிகவும் உயர்ந்த புருஷார்த்தங்களைப் பெறுவதற்காக – தீயுடன் கூடிய காடுகள், கால்களை வருத்தும் கற்கள் நிறைந்த

இடங்கள், அதிக குளிர் உணடாக்கி வாட்டும் நீர் நிலைகள் ஆகியவற்றில் இருந்தபடி, அனைத்து உடல் உறுப்புகளும் வருந்தும்படி தவம் செய்யும் ஸ்வபாவம் நீங்கப் பெற்றேன். (இதன் கருத்து – உடையவரின் திருவடித் தொடர்பு கிட்டிய பின்னர் வேறு பயன் கருதி எந்தச் செயல்களிலும் ஈடுபட வேண்டியதில்லை என்பதாகும்).

அவதாரிகை - இவ்வெம்பெருமானார் தம்முடைய பூர்வாவதாரத்திலே தாம் ஈடுபட்ட சக்ரவர்த்தித்திருமகன் விஷயத்திலே அதிவ்யாமுக்த்தரான ஸ்ரீகுலசேகரப்பெருமாள், "ஸுத்ரே மணிகணா இவ" என்னும்படி முகமறிந்தவர்கள் மாணிக்கங்களைக் கோக்குமாப்போலே சாஸ்த்ரஞ் சொல்லக் களைபறித்து தம்முடைய திவ்யஸூக்திகளாலே நிர்மித்த திவ்யப்ரபந்தங்களை அநுஸந்திக்கும் பெரியோர்களுடைய திருவடிகளை ஸ்துதிக்கும் எம்பெருமானார் என்னை விடமாட்டார்; ஆன பின்பு புருஷார்த்த லாபத்துக்கான துச்சகங்களான ஸாதநாந்தரங்களை அநுஷ்டிக்கும் ஸ்வபாவம் போகப் பெற்றே னென்கிறார்.

விளக்கம் - எம்பெருமானாருடைய பூர்வ அவதாரமாகிய லக்ஷ்மணன் ஈடுபட்ட இராமன் விஷயத்தில் மயங்கிக் கிடந்தவர் குலசேகராழ்வார். கீதை (7-7) – ஸுத்ரே மணிகணா இவ – நூலில் இரத்தினமணிகள் கோர்க்கப்பட்டது போன்று - என்பதற்கு ஏற்ப, மாணிக்கக் கற்கள் குறித்து நன்றாக அறிந்தவர்கள், அவற்றின் தரம் பார்த்துக் கோர்ப்பது போன்று சாஸ்த்ரங்களில் உளள சொற்களை நேர்த்தியாக எடுத்து, தனது வாக்கு கொண்டு குலசேகராழ்வார் தன்னுடைய திவ்யபிரபந்தங்களை அமைத்தார். அத்தகைய ப்ரபந்தங்களை எப்போதும் எண்ணியபடி உள்ளவர்களுடைய திருவடிகளை ஒருநாளும் விடாமல் துதித்தபடி உள்ள எம்பெருமானார், என்னைக் கைவிடமாட்டார். ஆகவே மற்ற புருஷார்த்தங்களை அடையும் பொருட்டு தாழ்ந்த உபாயங்களைக் கைக்கொள்ளும் என்னுடைய இயல்பு மாறிவிட்டது என்கிறார்.

வ்யாக்யானம் - (கொல்லிகாவலன் சொல்பதிக்கும் கலைக்கவி) சொல்லி நகரென்று சொல்லப்படுகிற திருவஞ்சிக்களத்துக்கு ரக்ஷகரான ஸ்ரீகுலசேகரப்பெருமாள், சாஸ்த்ரச் சொல்லுக்களினுடைய தாத்பர்ய விஷயபூதங்களா யிருக்கிற பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளையும், தத்வஹித புருஷார்த்தங்களையும், முத்துக்களையும் ரத்நங்களையும் முகமறிந்து கோக்கும் விரகரைப்போலே விசதமாக தத்தத் ஸ்தாநங்களிலே சேர்த்து,

"இருளிரியச் சுடர்மணிகள்" என்று தொடங்கி, "நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவார்" என்னுமளவாக திவ்யப்ரபந்தரூபேண வருளிச்செய்த போக்யமான கவிகளை. காவலன் - ரக்ஷகன். (பாடும் பெரியவர் பாதங்களே) தந்தாமுடைய ப்ரீதிக்குப் போக்குவீடாகப் பாடாநின்றுள்ள வைபவத்தையுடையரான நாதமுநிகள், ஆளவந்தார், பெரியநம்பி, திருமலைநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, திருவரங்கப்பெருமாளரையர், திருமாலை யாண்டான் முதலான ஜ்ஞாநாதிகருடைய திருவடிகளையே.

விளக்கம் – (கொல்லிகாவலன் சொல்பதிக்கும் கலைக்கவி) – "கொல்லி நகர்" என்று கேரள நாட்டில் உள்ள திருவஞ்சிக்களத்தின் காவலராகிய குலசேகராழ்வார். இவர் செய்தது என்னவென்றால் - சாஸ்த்ரங்களில் உள்ள சொற்களின் ஆழ்பொருளாக உள்ள பகவத் ஸ்வரூப, ரூப, குண, விபூதிகள் குறித்தும் மற்றும் நன்மையை அளிக்கவல்ல உண்மையான புருஷார்த்தங்கள் குறித்தும், முத்துக்கள் மற்றும் இத்தினங்கள் ஆகியவற்றை, அவற்றைக் குறித்து நன்கு அறிந்தவர்கள் சரியாகக் கோர்ப்பது போன்று விளக்கமாகவும், பொருத்தமாகவும் தனது பெருமாள் திருமொழி என்னும் ப்ரபந்தத்தில், பெருமாள் திருமொழி (1-1) – இருளிரியச் சுடர்மணிகள் – எனறு தொடங்கி, பெருமாள் திருமொழி (10-11) – நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே – என்பது வரை உள்ள பாசுரங்களில், திவ்யப்ரபந்த வடிவத்தில், இன்பம் நிறைந்தவிதத்தில் அருளிச்செய்தார். இத்தகைய பாசுரங்களை. (பாடும் பெரியவர் பாதங்களே) - தங்களுடைய பகவத்ப்ரீதியை வெளிப்படுத்திக் கொள்ளும்விதமாக நாதமுநிகள், ஆளவந்தார், பெரியநம்பி, திருமலைநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, திருவரங்கப்பெருமாளரையர், திருமாலை யாண்டான் முதலானவர்கள் இருந்தனர். அவர்களுடைய திருவடிகளை.

வ்யாக்யானம் - (துதிக்கும் பரமன்) "குருபாதாம்புஜம் த்யாயேத் குரோர்நாம ஸதாஜபேத் குரோர் வ்ர்த்தாச்ச கதயேத் குரோரந்யம் நபாவயேத் அர்ச்சநீயச்ச வந்த்யச்ச கீர்த்தநீயச்ச ஸர்வதா" என்கிறபடியே ஸதாஸ்தோத்ரம் பண்ணிக் கொண்டு போந்து, அந்த பாகவத நிஷ்டைக்கு மேற்பட்டாரில்லை யென்னும்படி உத்கர்ஷ்டரான. "யவரேலும் - எம்மையாளும் பரமர்" என்றும், "நம்மையளிக்கும் பிராக்கள்" என்றும், மயர்வற மதிநல மருளப் பெற்றவரும் அப்படியே யருளிச்செய்தாரிறே. (இராமாநுசன்) எம்பெருமானார். (என்னை) பரகதஸ்வீகாரமாக அங்கீகரிக்கப்பட்டவென்னை. (சோர்விலன்) இனி

விடமாட்டார். சோர்வு – பிரிவு. சோர்விலன் என்றது –பிரிகிறில னென்றபடி. ஆன பின்பு ப்ராப்யத்திலே த்வரித்து ப்ராபகாந்தரங்களிலே கண்வைக்கும் ஸ்வபாவத்தைத் தவிர்ந்தே னென்கிறார். ப்ராபகாந்தர பரித்யாகத்துக்கும் அஜ்ஞாநாசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதாந ஹேது. "ப்ராபகாந்தரம் அஜ்ஞர்க்குபாயம், ஜ்ஞாநிகளுக் கபாயம்" என்னக் கடவதிறே.

விளக்கம் - (துதிக்கும் பரமன்) குருபாதாம்புஜம் த்யாயேத் குரோர்நாம ஸதாஜபேத் குரோர் வ்ர்த்தாச்ச கதயேத் குரோரந்யம் நபாவயேத் அர்ச்சநீயச்ச வந்த்யச்ச கீர்த்தநீயச்ச ஸர்வதா - எப்போதும் ஆசார்யனுடைய திருவடித் தாமரைகளையே த்யானிக்கவேண்டும்; எப்போதும் ஆசார்யனின் திருநாமத்தையே ஜபிக்கவேண்டும்; எப்போதும் ஆசார்யனுடைய சரிதங்களையே கேட்கவேண்டும்; ஆசார்யனைக் காட்டிலும் வேறு எதிலும் அகலக்கூடாது; அவரையே அப்போதும் அர்ச்சனை செய்தபடியும், துதித்தபடியும் இருத்தல்வேண்டும் - என்பதற்கு ஏற்ப எப்போதும் துதித்தபடி இருந்து, அத்தகைய பாகவத ஈடுபாட்டிற்கு எம்பெருமானாரைக் காட்டிலும் மேம்பட்டவர்கள் வேறு யாரும் இல்லை என்னும்படியாக. திருவாய்மொழி (3-7-1) – யவரேலும் அவர் கண்டீர் பயிலும் பிறப்பிடைதோறு எம்மை ஆளும் பரமரே - என்றும், திருவாய்மொழி (3-7-5) – நம்மை அளிக்கும் பிராக்களே - என்றும் ஸர்வேச்வரனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வாரும் இது போன்றே அருளிச்செய்தமை காண்க. (இராமாநுசன்) - எம்பெருமானார். (என்னை) - என்னுடைய ஜீவாத்மாவை தானே ஏற்றுக்கொண்டார். (சோர்விலன்) – இவ்விதம் ஏற்றுக்கொண்ட என்னை இனிக் கைவிடமாட்டார். சோர்வு என்றால் இங்கு பிரிவு என்று பொருள். அதாவது பிரியமாட்டார் என்று பொருள். ஆகவே, அடைய வேண்டிய இலக்கான ஸர்வேச்வரனை மட்டும் எண்ணி, மற்ற விஷயங்களில் கண் வைக்காமல் உள்ள ஸ்வபாவம் பெற்றேன் என்கிறார்; அல்லது மற்ற விஷயங்களைத் தவிர்த்து, அறியாமை என்பது அகன்று, ஸ்வரூப விரோதம் தவிர்தலே முக்கியமான காரணம் என்கிறார். ஸ்ரீவசனபூஷணம் (116) – ப்ராபகாந்தரம் அஜ்ஞர்க்கு உபாயம் – என்றும், ஸ்ரீவசனபூஷணம் (117) – ஜ்ஞானிகளுக்கு அபாயம் – என்றும் கூறியது காண்க.

வ்யாக்யானம் - (கதிக்குப் பதறி) பரமபுருஷார்த்தத்துக்கு த்வரித்து. (வெங்கானமும் கல்லும் கடலும்) "பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும், ஐந்து நெருப்பிடையே நிற்கவும் நீர்

வேண்டா" என்றும், "ஊன் வாட உண்ணாது உயிர் காவல் இட்டு உடலில் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா" என்றும், "காயோடு நீடு கனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம், ஐந்து தீயொடு நின்று தவஞ்செய்ய வேண்டா" என்றுஞ் சொல்லுகிறபடியே அதிக்ரூரங்களான காடுகளிலே யிருந்தும் பர்வதாக்ரங்களிலே வஸித்தும், சீதளமான தீர்த்தங்களிலே அவகாஹித்தும், பஞ்சாக்நி மத்யத்திலே நின்றும். (எல்லாம் கொதிக்கத் தவஞ் செய்யும்) எல்லா வவயங்களுக்கு மொக்க பரிதபித்து க்லேசிக்கும்படியாக தபஸ்ஸுக்ளைப் பண்ணும். (கொள்கையற்றேன்) ஸ்வபாவம் போகப்பெற்றேன். கொள்கை – ஸ்வபாவம்.

விளக்கம் - (கதிக்குப் பதறி) - பரமபுருஷார்த்தம் கிட்டவேண்டும் என்ற வேகத்துடன். (வெங்கானமும் கல்லும் கடலும்) - மூன்றாம் திருவந்தாதி (76) - *பொருப்பிடையே* நின்றும் புனல்குளித்தும், ஐந்து நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா - என்றும், பெரியதிருமொழி (3-2-1) - *ஊன் வாட உண்ணாது* உயிர் காவல் இட்டு உடலில் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து தாம் வாட வாடத் தவம் செய்ய வேண்டா - என்றும், *பெரியதிருமொழி* (3-2-2) - *காயோடு நீடு கனியுண்டு* வீசு கடுங்கால் *நுகர்ந்து நெடுங்காலம், ஐந்து தீயொடு நின்று தவஞ்செய்ய வேண்டா* - என்றும் கூறுவதற்கு ஏற்ப, மிகவும் கொடிய கானகத்தில் இருந்தும், மலைக்குகைகளில் வசித்தும், மிகவும் குளிர்ந்த நீரில் நின்றும், ஐந்து விதமான அக்னியின் நடுவில் ஒற்றைக்காலில் நின்றும். (எல்லாம் கொதிக்கத் தவஞ் செய்யும்) - இப்படியாக உடலின் அனைத்து உறுப்புகளும் வேதனையில் துடிக்கும்படியான தவம் இயற்றுகின்ற. (கொள்கையற்றேன்) - இயல்பை நான் அகற்றினேன். இங்கு கொள்கை என்றால் இயல்பு.

வ்யாக்யானம் - அன்றிக்கே, (வெங்கானமும் கல்லும் கடலு மெல்லாங் கொதிக்கத் தவஞ் செய்யுங் கொள்கையற்றேன்) என்றது – "ஏதாம் த்ருஷ்டிமவஷ்டப்ய நஷ்டாத்மாநோ அல்ப புத்தய: ப்ரபவந்த்யுக்ர கர்மாண: க்ஷயாய ஜகதோஹிதா:", "காமமாஸ்ரித்ய துஷ்பூரம் தம்பமாநமதாந்விதா: மோஹாத் க்ருஹீத்வா ஸத்க்ராஹாந் ப்ரவர்தந்தே அஸுசிவ்ரதா:" என்று கீதையிலும், "பஹுபி: காரணைர்தேவ விச்வாமித்ரோ மஹாமுநி: || லோபித: க்ரோதிதச்சைவ தபஸா சாபிவர்ததே | ந ஹ்யஸ்ய வ்ருஜிநம் கிஞ்சித் த்ருச்யதே ஸுக்ஷ்மமப்யத || ந தீயதே யதி த்வஸ்ய மநஸா யதபீப்ஸிதம் | விநாசயதி த்ரைலோக்யம்

தபஸா ஸசராசரம் || வ்யாகுலாச்ச திச: ஸர்வா ந ச கிஞ்சித் ப்ரகாசதே | ஸாகரா: க்ஷுபிதா: ஸர்வே விசீர்யந்தே ச பர்வதா: || ப்ரகம்பதே ச ப்ருதிவீ வாயுர்வாதி ப்ருசாகுல: | ப்ரஹ்மந் ந ப்ரதிஜாநீமோ நாஸ்திகோ ஜாயதே ஜந: || ஸம்மூடமிவ த்ரைலோக்யம் ஸம்ப்ரக்ஷுபித மாநஸம் | பாஸ்கரோ நிஷ்ப்ரபச்சைவ மஹர்ஷேஸ்தஸ்ய தேஜஸா" என்று ஸ்ரீராமாயணத்திலும், "தஸ்ய தூமஸ் ஸமுத்பந்ந: தூமோக்நி ஸதபோமய: திர்யக் ஊர்த்த்வம் அதோலோகோ நதபத் விஷ்வகீரித: திவிஸ்த்தாதும் நசச்நுவந்" என்று பாகவதத்திலும் சொல்லுகிறபடியே இப்படி ப்ராப்யாந்தரங்களுக்காக தபஸ்ஸுக்களைப் பண்ணும் லோகத்துக்கெல்லாம் க்ஷோபத்தைப் பண்ணும் ஸ்வபாவம் போகப் பெற்றே னென்கிறா ரென்னவுமாம்.

விளக்கம் – அல்லது, "வெங்கானமும் கல்லும் கடலு மெல்லாங் கொதிக்கத் தவஞ் செய்யுங் கொள்கையற்றேன்" என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். *கீதை* (16-9) – *ஏதாம் த்ருஷ்டிமவஷ்டப்ய நஷ்டாத்மாநோ அல்ப புத்தய: ப்ரபவந்த்யுக்ர கர்மாண: க்ஷயாய ஜகதோஹிதா:* - "*உலகம் பொய்யானது*" போன்றதான தவறான கருத்துக்கள் காரணமாக யாருடைய புத்தி சீரழிந்ததோ, யாருடைய புத்தி மந்தமாக உள்ளதோ, யார் அனைவருக்கும் தீமையை எண்ணுகிறார்களோ, யார் கொடிய செயல்களைச் செய்கிறார்களோ, அவர்கள் உலகின் அழிவிற்காகவே முனைகிறார்கள் – என்றும், *கீதை* (16-10) – *காமமாஸ்ரித்ய துஷ்பூரம் தம்பமாநமதாந்விதா: மோஹாத் க்ருஹீத்வா ஸத்க்ராஹாந் ப்ரவர்தந்தே அஸுசிவ்ரதா:* - *ஆடம்பரம், தற்பெருமை, மதம் போன்றவற்றுடன் கூடியவராக, எந்தவிதத்திலும் பூர்த்தி செய்ய இயலாத ஆசையைக் கருத்தில் வைத்தவராக, அறியாமை காரணமாக தவறான கருத்துக்களையே ஏற்றவராக, தூய்மை அற்ற செயல்களைச் செய்தபடி உள்ளனர் – என்றும் கீதையில் கூறுவது போன்றும், இராமாயணம் பாலகாண்டம்* (1-65-10 *முதல்* 1-65-15) – *பஹுபி: காரணைர்தேவ விச்வாமித்ரோ மஹாமுநி:* || *லோபித: க்ரோதிதச்சைவ தபஸா சாபிவர்ததே | ந ஹ்யஸ்ய வ்ருஜிநம் கிஞ்சித் த்ருச்யதே ஸுசிக்ஷ்மமப்யத* || *ந தீயதே யதி த்வஸ்ய மநஸா யதபீப்ஸிதம் | விநாசயதி த்ரைலோக்யம் தபஸா ஸசராசரம் || வ்யாகுலாச்ச திச: ஸர்வா ந ச கிஞ்சித் ப்ரகாசதே | ஸாகரா: க்ஷுபிதா: ஸர்வே விசீர்யந்தே ச பர்வதா: || ப்ரகம்பதே ச ப்ருதிவீ வாயுர்வாதி ப்ருசாகுல: | ப்ரஹ்மந் ந ப்ரதிஜாநீமோ நாஸ்திகோ ஜாயதே ஜந: || ஸம்மூடமிவ த்ரைலோக்யம் ஸம்ப்ரக்ஷுபித மாநஸம் |*

பாஸ்கரோ நிஷ்ப்ரபச்சைவ மஹர்ஷேஸ்தஸ்ய தேஜஸா – விச்வாமித்திரரின் தவம் குறித்து தேவர்கள் நான்முகனிடம் சென்று, "தவத்தில் ஈடுபட்டிருந்த மஹாமுனிவரான விச்வாமித்திரர் பலவிதங்களில் ஆசை காண்பிக்கப்பட்டும், கோபப்படுத்தப்பட்டும் கூட அவர் தடுமாறாமல் உள்ளார். தனது தவம் காரணமாக அவர் மேன்மை அடைந்தபடியே உள்ளார். அவருடைய தவத்தில் எந்தவிதமான தோஷமும் காணப்படவில்லை. அவருடைய மனதில் அவர் எண்ணியுள்ளதை அளிக்கவில்லை என்றால், மூன்று லோகங்களிலும் உள்ள அனைத்தையும் அவர் தனது தவ வலிமையால் அழித்துவிடுவார். அவருடைய தவம் காரணமாக அனைத்து திசைகளும் நடுங்குகின்றன, எந்தப் பொருளையும் தெளிவாகக் காண இயலவில்லை, கடல்கள் பொங்கியபடி உள்ளன, அனைத்து மலைகளும் வெடித்துச் சிதறுகின்றன, பூமி முழுவதும் நடுங்கியபடி உள்ளது, காற்று தீவிரமாக வீசுகிறது. அனைத்து உலகங்களும் கலங்கியபடிஉள்ளன. மஹரிஷியான அவருடைய தவ ஒளி காரணமாகச் சூரியனும் ஒளி குறைந்து நிற்கிறான்", என்றனர் – என்பது போன்றும், ஸ்ரீமத் பாகவதம் (7-3-4) – தஸ்ய தாமஸ் ஸமுத்பந்ந: தூமோக்நி ஸதபோமய: திர்யக் ஊர்த்த்வம் அதோலோகோ நதபத் விஷ்வகீரித: திவிஸ்த்தாதும் நசச்நுவந் – ஹிரண்யகசிபுவின் தவ வலிமை காரணமாக அவனுடைய தலையிலிருந்து அக்னியும், அந்த அக்னியிலிருந்து புகையும் எழுந்தது. அந்தப் புகையானது மேல் லோகம், கீழ் லோகம் என்று அனைத்து உலகங்களையும் மூடி, அனைத்தையும் வெப்பம் அடையச் செய்தது – என்பது போன்றும் மற்ற விஷயங்களை அடைவதற்காக தவங்கள் செய்து, இந்த உலகம் மூழ்குவதற்குத் தவறான உதாரணம் காண்பிக்கும் ஸ்வபாவம் நீங்கப் பெற்றேன் என்கிறார்.

15. சோராத காதல் பெருஞ்சுழிப்பால் தொல்லை மாலை ஒன்றும்
பாராது அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன் தாள்
பேராத உள்ளத்து இராமானுசன் தன் பிறங்கிய சீர்
சாரா மனிசரைச் சேரேன் எனக்கு என்ன தாழ்வினியே.

விளக்கவுரை – என்றும் வாடாத பக்தி பூண்டு (பரிபூர்ணமான பக்தி) , அத்தகைய பக்தி என்ற வெள்ளத்தில் ஏற்பட்ட பெருஞ்சுழி ஒனறில் அகப்பட்டவராக நின்றவர் பெரியாழ்வார் ஆவார். இவர் செய்தது என்ன? இந்த உலகம் என்ற ஸம்ஸாரக் கடலில்

விழுந்து அவதிப்படும் ஜீவன்கள் படும் துன்பம் கண்டு இரக்கப்பட்டபடி உள்ளவனை; என்றும் உள்ளவனை; உயர்வற உயர்நலம் உடையவன், நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தான் என்று பலவாறு போற்றப்படுபவனை; "அவன் ஸர்வேச்வரன், அனைத்தும் பொருந்தியவன்", என்ற ஏற்றத் தாழ்வு பாராமல், சாதாரண மனிதர்களை "தீர்க்காயுஷ்மாந் பவேத்" என்று ஆசி அளிப்பது போன்று, எம்பெருமாளுக்குப் பல்லாண்டு கூறினார். இவ்விதமாக அரங்கனுக்கே, "உன் செவ்வடி செவ்வித் திருக்காப்பு", என்று மங்களாசாஸனம் செய்த பெரியாழ்வாரின் திருவடிகளை எம்பெருமானார் தனது மனதில் நீங்காமல் வைத்துள்ளார். இப்படிப்பட்டவர்கள் – கிட்டுவதற்கு மிகவும் அரியதான மனிதப் பிறவி எடுத்த போதிலும், நஷ்டத்துடன் கூடியவர்களே ஆவார்கள். இப்படியாக எம்பெருமானாரின் கருணைக்கு இலக்கான எனக்கு, இனி தாழ்வு எவ்விதம் ஏற்படும்? ஒரு குறையும் இன்றி, அனைத்தும் கூடும்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே, குலசேகரப்பெருமாளுடைய ஸம்பந்தத்தையிட்டுத் தம்மாலே கொண்டாடப்பட்ட வெம்பெருமானார் தம்மை பரிக்ரஹித்த வைபவத்தைச் சொல்லி, இப்பாட்டிலே ஸர்வபூத ஸுஹ்ர்த்தாய் ஸர்வரக்ஷகனான ஸர்வேச்வரனை ஸாக்ஷாத்கரித்து அவனுடைய ரக்ஷகத்வாதிகளிலே கண்வையாதே ப்ரேமதசை தலையெடுத்து அவனுக்கு என்வருகிறதோ வென்னு மதிசங்கையாலே திருப்பல்லாண்டாலே மங்களாசாஸநம் பண்ணி அவனுக்குக் காப்பிட்ட பெரியாழ்வாருடைய திருவடிகளுக்கு ஆச்ரயமாக்கின திருவுள்ளத்தை யுடையரான வெம்பெருமானாருடைய கல்யாணகுணங்களைத் தங்களுக்கு ஆச்ரயமாகப் பற்றியிராத மநுஷ்யரை நான் கிட்டேன், ஆகையாலே எனக்கு இனி என்ன குறையுண்டென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் குலசேகராழ்வாருடைய ஸம்பந்தத்தை முன்னிட்டுக் கொண்டு, தம்மால் கொண்டாடப்படும் எம்பெருமானார் தன்னை எவ்விதம் வசீகரித்தார் என்று அருளிச்செய்தார். அனைத்து உயிர்களுக்கும் நம்மை செய்பவனாகவும், அனைத்தையும் காப்பாற்றுபவனாகவும் உள்ள ஸர்வேச்வரனை நேரடியாகவே கண்டு, அவனுடைய காப்பாற்றும் தன்மை போன்றவற்றை நோக்காமல், அவன் மீது கொண்ட மாறாத காதல் ஓங்கி நின்ற காரணத்தால் அவனுக்கு ஏதேனும் தீங்கு உண்டாகிவிடுமோ என்று சந்தேகம் கொண்டு, திருப்பல்லாண்டு மூலம் வாழ்த்து கூறி அவனுக்குப் பெரியாழ்வார் காப்பிட்டார். இந்தப் பாசுரத்தில், இப்படிப்பட்ட பெரியாழ்வாருடைய திருவடிகளில் அண்டி நிற்பதான திருவுள்ளத்தைக் கொண்டவராகிய உடையவருடைய

திருக்கல்யாண குணங்களை அண்டி நிற்காத மனிதர்களை நான் அண்டமாட்டேன். ஆகவே எனக்கு என்ன குறை உள்ளது என்கிறார்.

வ்யாக்யானம் - (சோராதகாதல்) சோராதே – வாடாதே. ஸங்குசிதமாகதே யிருக்கிற பக்தி. பரிபூர்ண பக்தியென்றபடி. "புநர் விச்லேஷ பீருத்வம் பரமா பக்திர் உச்யதே" என்னும்படியான பக்தியென்றபடி. அன்றிக்கே, சோராத காதல் - அவ்யபிசாரிணியான பக்தி யென்னவுமாம். (பெருஞ்சுழிப்பால்) அவர்பட்ட சுழிதான் ஸங்குசிதமன்றுகாணும். (பெருஞ்சுழி) பரிபூர்ணையான பக்தி கரைபுரண்டவோபாதி அதினுடைய மஹாப்ரவாஹத்தின் நடுவே பிறந்ததாகையாலே மஹாவேக கர்த்தத்தோடேகூடி அதிவிஸ்த்ர்தமாயிருக்கிற சுழியிலே யகப்பட்டு ஆழங்கால் படுகையாலே. (தொல்லைமாலை) "நித்யஸ்ஸத்ய:" என்கிறபடியே நித்யஸத்யனுமாய், "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந: ஸ ஏகாகீ ந ரமேத" என்றும், "அசிதவிஷ்டாந் ப்ரளயே ஜந்தூநவலோக்ய ஜாதநிர்வேத:" என்றுஞ் சொல்லுகிறபடியே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து நோவுபட்டு உருமாய்ந்து கிடக்கிற இச்சேதநருக்காக நிர்வேதப்படும்படியான வ்யாமோஹத்தையுடைய ச்ரிய:பதியை.

விளக்கம் - (சோராதகாதல்) சேராத என்றால் வாடாத. அதாவது சுருக்கம் அடையாமல் உள்ள பக்தி, பரிபூர்ணமான பக்தி என்று கருத்து. புநர் விச்லேஷ பீருத்வம் பரமாபக்திர் உச்யதே – அவனை மீண்டும் பிரிந்துவிடுவோமோ என்னும் அச்சத்தை பரமாபக்தி என்பர் - என்பதற்கு ஏற்ப உள்ள பக்தி. அல்லது சேராத காதல் = சேரம் போகாத காதல், அடுத்தவரை நோக்காத பக்தி. (பெருஞ்சுழிப்பால்) - அவர் அகப்பட்ட சுழியும் சுருக்கம் அற்று பெரியதாக உள்ளது. (பெருஞ்சுழி) - பரிபூணமான பக்தியானது கரைபுரண்டு ஓடத் தொடங்கியது; அந்த மஹாப்ரவாஹத்தின் நடுவில் மிகவும் பெரியதாக உள்ளதான சுழியினைப் போன்றுள்ள காதலில் சிக்குண்ட காரணத்தால். (தொல்லைமாலை) - நித்யஸ்ஸத்ய: - என்றும் உள்ளவன், ஸத்யமானவன் - என்பதற்கு ஏற்றபடி எப்போதும் ஸத்யமாக உள்ளவனாகவும், ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந: ஸ ஏகாகீ ந ரமேத - தொடக்கத்தில் நாராயணன் மட்டுமே இருந்தான், நான்முகனும் இல்லை சிவனும் இல்லை, தனியாக இருந்த அவனுக்கு மகிழ்வு ஏற்படவில்லை - என்றும், தயாசதகம் (17) - அசித் அவிசிஷ்டாந் ப்ரளயே ஜந்தூந் அவலோக்ய ஜாத நிர்வேதா -

ப்ரளயத்தின்போது அனைத்து உயிரினங்களும் அசேதனப் பொருள்கள் போன்று, அசைவற்று - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸம்ஸாரம் என்ற இந்தப் பெருங்கடலில் சிக்குண்டு துடித்து தங்களுடைய ஸ்வரூபம் இன்னது என்று அறியாமல் கிடக்கும் இந்தச் சேதனர்களை எண்ணி வருந்தும்படியான மயக்கம் உள்ளவனாகவும் இருக்கும் மஹாலக்ஷ்மியின் நாதனை.

வ்யாக்யானம் - (ஒன்றும் பாராது) "மங்களாநாஞ்ச மங்களம்", "ந வாஸுதேவாத் பரமஸ்தி மங்களம்" என்றும், "உயர்வற வுயர்நல முடையவன் – அயர்வறு மமரர்க ளதிபதி" என்றும், "நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே" என்றும், "ஒன்றும் தேவுமுலகுமுயிரும் மற்றும் யாதுமில்லாவன்று நான்முகன் றன்னொடு தேவருலகோ டுயிர் படைத்தான்" என்றும் சொல்லுகிறபடியே ஸகல ஜகத் ஸ்ரஷ்டாவாய் ஸர்வேச்வரனாய் ஸர்வமங்களங்களையும் கொடுக்கக் கடவனானவனை இப்புடைகளாலே ஏகதேசமும் நிரூபியாதே, தம்முடைய ப்ரேம பரவசராய்க் கொண்டு, இவையென்றும் விசாரியாதே - இவற்றிலொன்றிலும் கண்வையாதே யென்றபடி.

விளக்கம் – (ஒன்றும் பாராது) - ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் – மங்களாநாம் ச மங்களம் – மங்களமானவற்றில் மங்களமானவன் - என்றும், ந வாஸுதேவாத் பரமஸ்தி மங்களம் – வாஸுதேவனைக் காட்டிலும் உயர்ந்த மங்களம் வேறு இல்லை - என்றும், திருவாய்மொழி (1-1-1) - உயர்வற வுயர்நல முடையவன் – அயர்வறு மமரர்க ளதிபதி - என்றும், திருவாய்மொழி (6-10-10) - நிகரில் அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே - என்றும், திருவாய்மொழி (4-10-1) – ஒன்றும் தேவுமுலகுமுயிரும் மற்றும் யாதுமில்லாவன்று நான்முகன் றன்னொடு தேவருலகோ டுயிர் படைத்தான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து உயிர்களையும் படைத்தவனாகவும், அனைத்திற்கும் ஈச்வரனாகவும், அனைத்து மங்களங்களையும் அளிப்பவனாகவும் உள்ள இவனுடைய இந்தச் செயல்கள் மூலம் இவனுடைய வலிமையை நோக்காமல், தனது காதல் காரணமாக இவற்றை ஆராயாமல்.

வ்யாக்யானம் - (அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன் தாள்) லோகத்திலே பரிமித காலவர்த்தியான ஸாதாரண ஜநங்களுக்கு ஆயுரர்த்தமாக "ஆயுராசாஸ் தே" என்கிறபடியே தீர்க்காயுஷ்மாந் பவேத் என்று மங்களாசாஸநம் பண்ணுவாரைப்போலே

அந்த ச்ரிய:ப்பதியைக் குறித்து, "பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு, பல கோடி நூறாயிரம், மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு – நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு, சுடராழியும் பல்லாண்டு, அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டு" என்று அபரிமிதமான காலத்தை யுண்டாக்கி அது தன்னையே பெருக்கி இப்படிப்பட்ட காலதத்வமுள்ளதனையும் செவ்வி மாறாதே நித்யஸ்ரீயாக வாழவேணுமென்று இப்படி மங்களாசாஸநம் பண்ணுகையே தமக்கு ஸ்வபாவமாக வுடையரான பெரியாழ்வாருடைய திருவடிகளை. பான்மை - ஸ்வபாவம். தாள் – திருவடிகள்.

விளக்கம் - (அவனைப் பல்லாண்டென்று காப்பிடும் பான்மையன் தாள்) - இந்த லோகத்தில் காலத்தினால் அளவுபடுத்தப்படும் சாதாரண மக்கள் நீண்ட ஆயுளுடன் வாழவேண்டும் என்பதற்காக "ஆயுராசாஸ் தே – உனக்கு தீர்க்கமான ஆயுள் உண்டாகக்கடவது" என்று கூறுவதற்கு ஏற்ப, "தீர்க்காயுஷ்மாந் பவேத் - நீ பல்லாண்டு வாழவேண்டும்" என்று வாழ்த்துவது போன்று, அந்த மஹாலக்ஷ்மியின் நாயகனைக் குறித்து, திருப்பல்லாண்டு (1) - பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு, பல கோடி நூறாயிரம், மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு – நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு, சுடராழியும் பல்லாண்டு, அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டு – என்று எல்லையற்ற காலத்தைக் கூறி, அந்தக் காலத்தையே பலவாகப் பெருக்கிக் கூறி, இப்படிப்பட்ட காலதத்வம் உள்ளவரை அழகும் இளமையும் மாறாமல் எப்போதும் ஐச்வர்யம் நிரம்பியவனாக வாழவேண்டும் என்று வாழ்த்தியபடி நிற்பதையே தனக்கு இயல்பாகக் கொண்ட பெரியாழ்வாருடைய திருவடிகளை.

வ்யாக்யானம் - (போராதவுள்ளத் திராமாநுசன்றன்) விட்டு நீங்காத திருவுள்ளத்தை யுடையரான எம்பெருமானாருடைய, பேருகை – நீங்குகை. (பிறங்கியசீர்) நித்யாபிவ்ர்த்தமான கல்யாணகுணங்களை. "குத்ருஷ்டி குஹநா முகே நிபதத: பரப்ரஹ்மண: கர க்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மண: அயம் முநி:" என்கிறபடியே குதர்ஷ்டிகளாலே யழிக்கப்பட்ட பகவத்வைபவத்தை ஸ்ரீபாஷ்யமுகேந வெளிப்படுத்தி, இவ்வளவும் இனிமேலுள்ள காலமெல்லாமும் நித்யாபிவர்த்தமாம்படி பண்ணுகையாலே

இவருடைய கல்யாணகுணங்களும் நித்யாபிவ்ர்த்தமாய்க் காணுமிருப்பது. பிறங்குதல் - மிகுதி.

விளக்கம் - (போராதவுள்ளத் திராமாநுசன்றன்) - விட்டு அகலாத திருவுள்ளத்தைக் கொண்டவராகிய எம்பெருமானாருடைய. (பிறங்கிய சீர்) - எப்போதும் வளர்ந்தபடி உள்ள திருக்கல்யாண குணங்களை. குணங்கள் எவ்விதம் ஒவ்வொரு நாளும் வளர்ந்தபடி உள்ளன என்று கூறலாம் என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். யதிராஜ ஸப்ததி (38) - குத்ருஷ்டி குஹநா முகே நிபதத: பரப்ரஹ்மண: கர க்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மண: அயம் முநி: - பரப்ரஹ்மமானது மாயாவாதிகளின் வாதங்களில் சிக்குண்டது. இவை அனைத்தையும் நீக்கி, பரப்ரஹ்மத்தை மிகவும் எளிதாக உயர்த்த வல்லவராக உள்ள இராமாநுஜர், அனைவரிலும் மேம்பட்டவராகவே உள்ளார் – என்று கூறுவதற்கு ஏற்ப, வேதங்களுக்குத் தவறான பொருள் உரைப்பவர்கள் மூலமாக அழிக்கப்படுவதான ஸர்வேச்வரனுடைய வைபவம் குறித்து ஸ்ரீபாஷ்யம் மூலம் வெளிப்படுத்தி, இது போன்ற பலவும் காலதத்வம் உள்ளது முடிய அன்றாடம் வளர்ந்தபடி உள்ள நிலையை உண்டாக்கிய காரணமாக இவருடைய திருக்கல்யாண குணங்களும் வளர்ந்தபடி உள்ளன என்று கருத்து.

வ்யாக்யானம் - (சாராமனிசரை) அவற்றைத் தங்களுக்கு அபாச்ரயமாகப் பற்றியிராத மநுஷ்யரை "நர்தேஹமாத்யம் ப்ரதிலப்ய துர்லபம்" என்கிறபடியே அதிதுர்லபமான மநுஷ்ய தேஹத்தையுடையரா யிருந்தும், "புமாந் பவாப்திம் ந தரேத் ஸ ஆத்ம ஹ" என்னும்படி நஷ்டப்ராயரான மநுஷ்யரென்றபடி. யோக்யதையில்லாதே அகன்று போனார்களென்று ஆறியிருக்கப்போமோ. ச்ரவண மநநங்களுக்கு ஸாதநங்களை யுடைத்தான மநுஷ்ய தேஹத்தைப் பெற்றும் ஆச்ரயிக்காத கர்ப்ப நிர்ப்பாக்யரை. (சேரேன்) அப்படிப்பட்டவரை ஒருக்காலும் கிட்டாதே ஸவாஸநமாக விட்டிருந்தேன். "நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகம் ச பரஸ்பரம்" என்கிறபடியே குடநீர் வழித்துக் கொண்டிருந்தேன். (எனக்கென்ன தாழ்வினியே) இப்படியான பின்பு எம்பெருமானாருடைய க்ர்பைக்கு விஷயபூதனான வடியேனுக்கு என்ன தாழ்வுண்டு - என்ன அவத்யமுண்டு. "ததேவமுஷ்ணாத்யசுபாந் யசேஷத:" என்றும், "ஸித்தே ததீயஸேஷத்வே ஸர்வாதாஸ் ஸம்பவந்திஹி" என்றுஞ் சொல்லுகிறபடியே ஒருகுறைகளு மின்றிக்கே ஸர்வமும் கரதலாமலகமா யிருக்கு மென்றபடி.

விளக்கம் - (சாராமனிசரை) - அத்தகைய எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களையே தங்களுக்கு ஆபத்து உண்டாகும்போது, வேறு கதி இல்லை என்று எண்ணி பற்றாமல் உள்ள மனிதர்களை, நிர்தேஹமாத்யம் ப்ரதிலப்ய துர்லபம் - என்று கூறுவதற்கு ஏற்ப கிட்டுவதற்கு மிகவும் அரிதான மனிதப்பிறவி அடைந்துள்ளபோதிலும், ஸ்ரீமத் பாகவதம் (11-20-17) – (உத்தவகீதை) புமாந் பவாப்திம் ந தரேத் ஸ ஆத்ம ஹ - மனிதப்பிறவியை ஸம்ஸாரம் என்னும் கடலைக் கடக்கப் பயன்படுத்தாதவன், தனது ஆத்மாவைத் தானே நாசம் செய்பவன் ஆவான் - என்பதற்கு ஏற்ப, கிடைத்த வாய்ப்பினை இழந்த மனிதர்கள் என்று பொருள். அவர்களுக்குத் தகுதி இல்லை என்ற காரணத்தால் அகன்றுவிட்டனர் என்று சமாதானம் செய்துகொண்டேன். வாயால் கூறவும், மனதால் மனப்பாடம் செய்யவும் ஏற்றதான மனித சரீரம் பெற்றுள்ளபோதிலும், எம்பெருமானாரை அண்டாத, கர்ப்பத்திலேயே பாக்யம் அற்ற மனிதர்களை. (சேரேன்) - அவர்களை நான் ஒரு நாளும் அண்டாமல், அவர்களையும் என்னை அண்டவிடாமல் உள்ளேன். அத்யப்ரப்ருதி ஹே லோகா:! யூயம் யூயம் வயம் வயம் நாஸ்தி ஸங்கதிரஸ்மாகம் யுஷ்மாகம் ச பரஸ்பரம் அர்த்தகாமபரா யூயம் நாராயணபரா வயம் வயம் து கிங்கரா விஷ்ணோ:, யூயம் இந்த்ரியகிங்கரா: - ஜனங்களே! இன்று முதற்கொண்டு நீங்கள் நீங்கள்தாம்; நாங்கள் நாங்கள்தாம். எங்களுக்கும் உங்களுக்கும் எந்தவிதமான ஸம்பந்தமும் இல்லை. நீங்கள் பணத்திலும் சிற்றின்பத்திலும் நிறைய ஆசை உடையவர்கள். நாங்கள் ஸ்ரீமந்நாராயணனிடத்தில் மட்டுமே ஆசை உடையவர்கள். நீங்கள் பணத்திலும் இகலோக இன்பத்திலும் ஆசை உள்ளவர்கள் என்பதால் ஐம்புலன்களுக்கு வேலை செய்யும் வேலைக்காரர்கள். நாங்கள் எம்பெருமானுடைய வேலைக்காரர்கள். ஆகையால் உங்களுடன் நாங்கள் சேர மாட்டோம். எங்கள் தன்மையே வேறு; உங்கள் தன்மையே வேறு - என்று கூறுவதற்கு ஏற்ப, இறந்தவர்களை தீ மூட்டிய பின்னர், சம்பந்தம் தீர்த்தது என்று சட்டியைக் கீழே போட்டு உடைப்பது போன்று, நான் ஒதுக்கினேன். (எனக்கென்ன தாழ்வினியே) - இவ்விதம் எம்பெருமானாருடைய கருணைக்கு இலக்காகிவிட்ட எனக்கு எந்தவிதத்தில் குறை உள்ளது? ந்யக்ரோத பீஜே வடவத் ப்ரணவே சப்தஜாலவத் ஸித்தே ததீயஸேஷத்வே ஸர்வாதாஸ் ஸம்பவந்திஹி - ஆலம் விதையில் ஆலமரம் போன்றும், ப்ரணவத்தில் அனைத்து சப்தங்கள் போன்றும் பாகவத சேஷத்வம் கிட்டினால், அனைத்துப் பொருள்களும் கிடைத்தது போன்றே ஆகும்

– என்பதற்கு ஏற்ப ஒரு குறையும் இல்லாமல், அனைத்தும் எப்போதும் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று எனக்கு ஏற்படும்.

16. தாழ்வு ஒன்றில்லா மறை தாழ்ந்து தலமுழுதும் கலியே
ஆள்கின்ற நாள் வந்து அளித்தவன் காண்மின் அரங்கர் மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூட்டிக் கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்ற வள்ளல் இராமனுசன் என்றும் மாமுனியே

பொருள் – திருவரங்கத்தில் கண்வளர்கின்ற பெரியபெருமாளின் உத்தமமான திருமேனிக்கு, அலங்கரிக்கத் தகுதி கொண்ட மலர் மாலையை, "இந்த மாலை அவனுக்கு உறுத்துமோ, மணம் சேர்க்குமோ", என்று சோதிக்கும் விதமாகத் தனது தலையில் சூட்டி, அதனைக் களைந்து அவனுக்கு அளித்தாள் (ஆண்டாள்). இப்படிப்பட்ட ஆண்டாளின் கருணையாலேயே தனது வாழ்வு கொண்டவர் எம்பெருமானார் ஆவார். திருவரங்கத்தில் பங்குனி உத்திர நன்னாளில், அழகிய மணவாளன் ஸ்ரீரங்கநாயகியுடன் சேர்ந்து நின்றபோது அல்லவோ – பகவன் நாராயண – என்று சரணாகதி செய்தார்? இவ்விதமாக, தான் அழகிய மணவாளன் திருவடிகளில் சரணாகதி அடைந்து பெற்ற பலன்கள் அனைத்தையும் இந்த உலகம் முழுமைக்கும் அளித்த வள்ளல் ஆவார். அப்படிப்பட்ட மாமுனிவராக உள்ளவர் எம்பெருமானார் ஆவார். இராமாநுஜர் செய்தது என்ன? வேதங்கள் அனைத்தும் எந்தவிதமான தாழ்வுகளும் இன்றி இருந்து வந்தன. அப்படிப்படட உயர்ந்த வேதங்கள் மதிக்கப்படாமல், வேதமார்க்கம் என்பது முலையில் சென்றபடி இருந்து. எப்பொது இவ்விதம் ஆனது என்றால் – இருள்தருமாஞாலம் என்ற இந்தப் பூமியைக் கலியுகமானது ஆள்கின்ற காலத்தில் (கலியுகத்தில்) ஆகும். இந்தக் காலத்தில் வேதங்களை மீட்க, பரமபதத்தில் இருந்து வந்து ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்து, இந்த உலகங்களைக் காத்தவர் எம்பெருமானார் ஆவார் என்று உணர்வீர்களாக.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே, பெரியாழ்வார் ஸம்பந்தத்தையிட்டு எம்பெருமானாரைக் கொண்டாடி, இப்பாட்டிலே அந்த ஆழ்வாருடைய பெண்பிள்ளையான ஆண்டாளுடைய ஸ்வாபாவிக க்ர்பையாலே வாழ்ந்து கொண்டு பரமோதார ஸ்வபாவராய், அத்தாலே எல்லாருக்கும் பரமபதத்தைக் கொடுக்கைக்கு மநநம் பண்ணிக் கொண்டு போருகிற வெம்பெருமானார், வேத மார்க்கமெல்லா மழிந்து பூமண்டலமெங்குமொக்க வ்யாபித்து கலியானது ஸாம்ராஜ்யம் பண்ணுகிற காலத்திலே "விண்ணின் தலைநின்றும் மண்ணின்

தலத்துதித்து எல்லாரையும் ரக்ஷித்தருளின" நல்லன்பரென்று ஸர்வரும் தம்மைப்போலே தத்விஷய ப்ரவணராகைக் குடலாக அவர் செய்தருளின வுபகாரத்தை யருளிச்செய்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் பெரியாழ்வாருடைய ஸம்பந்தம் உள்ள காரணத்தால் எம்பெருமானாரைக் கொண்டாடினார். இந்தப் பாசுரத்தில், பெரியாழ்வாருடைய புத்ரியான ஆண்டளுக்கு இயல்பாகவே உள்ள கருணை மூலமாக வாழ்ந்து வருபவரும், அதனால் தாராளமான மனம் கொண்டவரும், அதன் காரணமாக அனைவருக்கும் பரமபதம் கிட்டவேண்டும் என்று எப்போதும் எண்ணியபடி உள்ள எம்பெருமானார் செய்வது என்ன என்று அருளிச்செய்கிறார். அது என்னவென்றால் - வேத மார்க்கம் முழுவதுமாக மறைந்து, இந்தப் பூமி முழுவதும் ஒரே போன்று கலியானது பரவி நிற்கிறது; இந்தக் காலகட்டத்தில், இராமானுச நூற்றந்தாதி (95) - விண்ணின் தலைநின்றும் மண்ணின் தலத்துதித்து எல்லாரையும் ரக்ஷித்தருளின - என்பதற்கு ஏற்ப அனைவரையும் காப்பாற்றருளின, இராமானுச நூற்றந்தாதி தனியனில் - நல்லன்பர் - என்னும் அனைவரும் தம்மைப் போன்றே ஸர்வேச்வரனிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொள்வதற்காக அவர் செய்தருளிய உபகாரத்தை அருளிச்செய்கிறார்

வ்யாக்யானம் - (அரங்கர்மௌலி) கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாள் தானே ஸ்ரீவில்லிபுத்தூரிலே வடபெருங்கோயிலுடையா னென்னும் திருநாமத்தை யுடையராய்க் கொண்டு கண்வளர்ந்தருளுகையாலே அவரை, (அரங்கர்) என்றருளிச் செய்கிறார். அப்படிப்பட்ட ஸ்வாமியுடைய உத்தமாங்கத்துக்கு. (சூழ்கின்ற மாலை) அலங்கரிக்கத்தக்க புஷ்பமாலையை. (சூடிக்கொடுத்தவள்) முந்துற முன்னம், "தாழ் குழலாள்" என்னும்படியான தன்னுடைய திருக்குழலிலே அலங்கரித்துக்கொண்டு அது தன்னைக் களைந்து ஸ்வாமிக்கு ஸமர்ப்பிக்கும்படி கொடுத்தவள். இப்படியாகையாலே இவளுக்கு "சூடிக்கொடுத்தவள்" என்று அதுவே நிரூபகமாய்த்து. "சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே" என்னக் கடவதிறே. (தொல்லருளால்) "உததி பரம வ்யோம்நோ: விஸ்ம்ருத்ய மாத்ருச ரக்ஷண க்ஷமம் இதி தியா பூய: ஸ்ரீரங்கதாமநி மோதஸே" என்றும், "அநுக்ரஹ மயீம் வந்தே நித்யம் அஜ்ஞாத நிக்ரஹாம்" என்றுஞ் சொல்லுகிறபடியே அகிலஜகந்மாத்ர்த்வத்தாலே வந்த குடல்துடக்கை யுடைத்தான வவளுடைய ஸ்வாபாவிகமான க்ர்பையாலே.

விளக்கம் - (அரங்கர்மௌலி) - திருவரங்கம் பெரியகோயிலில் கண்வளரும் பெரியபெருமாளாம் ஸ்ரீரங்கநாதனே, ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபெருங்கோயில் உடையான் என்னும் திருநாமம் கொண்டவனாக அங்கு கண்வளர்வதால், அவனையே "அரங்கர்" என்று அருளிச்செய்கிறார். அப்படிபட்ட ஸ்ரீரங்கநாதனுடைய புனிதமான திருமேனிக்கு. (சூழ்கின்ற மாலை) - அலங்கரிப்பதற்குச் சேரும் தகுதி உள்ள மாலையை. (சூடிக்கொடுத்தவள்) - தான் முதலில், நாச்சியார் திருமொழி (12-10) – தாழ்குழலாள் - என்பதற்கு ஏற்ப, தனது அழகான கேசத்தில் அலங்கரித்துக் கொண்டு, அதனை எடுத்து அரங்கனுக்குச் சமர்ப்பிக்கும்படியானவள். இவ்விதம் செய்யும் காரணத்தால் இவளுக்கு "சூடிக்கொடுத்தவள்" என்பது திருநாமத்தின் அடைமொழியாக வந்தது. திருப்பாவைத் தனியன் - சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே - என்பது காண்க. (தொல்லருளால்) - ஸ்ரீகுணரத்னகோசம் (56) - ஜநநபவந ப்ரீத்யா துக்த அர்ணவம் பஹுமந்யஸே ஜநநி தயித ப்ரேம்ணா புஷ்ணாஸி தத் பரமம் பதம் உததி பரம வ்யோம்நோ: விஸ்ம்ருத்ய மாத்ருச ரக்ஷண க்ஷமம் இதி தியா பூய: ஸ்ரீரங்கதாமநி மோதஸே - தாயே! ஸ்ரீரங்கநாயகீ! நீ பிறந்த இடம் என்ற காரணத்தினால் திருப்பாற்கடலை மிகவும் மதிக்கிறாய். நீ புகுந்த இடம் என்ற காரணத்தினாலும், உனது கணவன் மீது உள்ள காதல் என்னும் காரணத்தினாலும், அனைவரும் துதிக்கும் பரமபதத்தை மிகவும் விரும்புகின்றாய். ஆனால் இரண்டையும் நீ இப்போது நீ மறந்துவிட்டாய் போலும்! அதனால்தான் உனது பிள்ளைகளான எங்களைப் பாதுகாப்பதற்கு, உனக்கு ஏற்ற இடம் என்று மனதில் கொண்டு, நாங்கள் உள்ள ஸ்ரீரங்கத்தில் என்றும் மகிழ்வுடன் அமர்ந்தாய் போலும் - என்றும், யதிராஜ ஸப்ததி (2) - ஸஹ தர்மசாரீம் ஸைலேய: ஸம்மந்த்ரித ஜகத்திதாம் அநுக்ரஹ மயீம் வந்தே நித்யம் அஜ்ஞாத நிக்ரஹாம் - இந்த உலகிற்கு எந்த வகையில் நன்மை செய்யலாம் என்று பெரியபெருமாளுடன் எப்போதும் ஆலோசனை செய்பவள், அருள் என்பதே வடிவம் கொண்டதோ என்னும்படி உள்ளவள், அன்பின் மிகுதியால் தண்டனை என்பதையே அறியாதவள், பெரியபெருமாளுக்கு ஏற்றவளாக இருப்பவள் - இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாச்சியாரை நான் வணங்குகிறேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்து உலகிற்கும் தாயானவளுடைய அம்சமாக வந்தவள் என்பதால் இயல்பாகவே கருணையுடன் உள்ள ஆண்டாளுடைய கருணையால்.

வ்யாக்யானம் - (வாழ்கின்ற) அவளுடைய க்ர்பையாலே காணும் இவருடைய வாழ்வெல்லாம். எம்பெருமானார் சரணாகதி பண்ணும்போது ஸ்ரீரங்கநாயகியாருடைய

ஸந்நிதியிலே அழகியமணவாளன் சேர்த்தி கொடுத்திருக்கச்செய்தே, "பகவந்நாராயணாபி மதாநுரூப" என்று தொடங்கி முந்துறமுன்னம் அவள் திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணிற்று ப்ரஸித்தமிறே. (வள்ளல்) இப்படி அவள் முன்னிலையாக அவன் திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணி தாம் பெற்ற பலத்தை இந்த லோகத்திலே எல்லாருக்குங் கொடுத்த பரமோதாரன். "காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத் க்ஷமைவ ஸா ச த்வயைவ கமலா ரமணே அர்த்திதா யத் க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம்" என்று இந்த ஸௌந்தர்யத்தை ஜீயரும் அருளிச்செய்தாரிறே. (என்னும் மாமுனி) இப்படி பரமோதார ராகையாலே ஸர்வகாலத்திலும் ஸ்வாச்ரித ரக்ஷணத்திலேதானே மநநம் பண்ணிக் கொண்டிருக்கிற. (இராமாநுசன்) எம்பெருமானார்.

விளக்கம் - (வாழ்கின்ற) - அவளுடைய க்ருபை காரணமாக இவருடைய வாழ்வு உள்ளது. எம்பெருமானார் சரணாகதி செய்யும்போது, ஸ்ரீரங்கநாச்சியாருடைய அருகில் ஸ்ரீரங்கநாதனாகிய அழகியமணவாளன் சேர்ந்து நிற்கும்போது, சரணாகதி கத்யம் - பகவந்நாராயணாபி மதாநுரூப - என்று அவளுடைய திருவடிகளில் அல்லவோ முதலில் சரணம் புகுந்தார்! (வள்ளல்) - இவ்விதம் பெரியபிராட்டியை முன்னிட்டுக் கொண்டு ஸர்வேச்வரன் திருவடிகளில் சரணம் புகுந்து, அதனால் தான் பெற்ற பலனை இந்த லோகத்தில் உள்ள அனைவருக்கும் வாரி வழங்கிய தாராள மனம் கொண்டவர். யதிராஜ விம்சதி (18) - காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத் க்ஷமைவ ஸா ச த்வயைவ கமலா ரமணே அர்த்திதா யத் க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம் - யதிராஜரே! ஒருவன் தனது மனம், வாக்கு, செயல் ஆகிய மூன்றின் மூலம் எண்ணற்ற பாவங்களைத் தொடர்ந்து செய்தபடி இருக்கலாம். அப்படிப்பட்டவனுக்கு மூன்று காலத்திலும் ஸ்ரீரங்கநாதனால் மட்டுமே அடைக்கலம் அளிக்க இயலும். ஆனால் அவனும் அதனை நேரடியாகச் செய்வதில்லை. அவன், தாமரை மலரில் வீற்றுள்ள ஸ்ரீரங்கநாச்சியாருடன் சேர்ந்து நிற்கும் பங்குனி உத்தர நன்னாளில், நீ அருளிச் செய்த சரணாகதி கத்யங்கள் மட்டுமே என்னைப் போன்றவர்களைக் காக்க வல்லவை ஆகும் - என்று இதனால் ஏற்பட்ட அழகை ஸ்வாமி மணவாளமாமுனிகளும் அருளிச்செய்தார் அல்லவோ? (என்னும் மாமுனி) - இப்படியான தாராள மனம் கொண்டவர் என்பதால், எப்போதும் தன்னை அண்டி நிற்பவர்களைக் காப்பதில் சிந்தனை உள்ளவராகிய. (இராமானுசன்) - எம்பெருமானார்.

வ்யாக்யானம் - (தாழ்வொன்றில்லா மறை) வேதத்துக்குத் தாழ்வொன்றில்லாமையாவது - ப்ரமப்ரமாத விப்ரலம்பாதி தர்மவிசிஷ்டத்வம், புருஷப்ரணீதத்வம், ஸ்வப்ராமாண்யே அந்யஸாபேக்ஷத்வம், அநித்யத்வம் தொடக்கமானவற்றில் ஒன்றின்றிக்கே, யதா பூதவாதியாய் அபௌருஷேயமாய் நித்யமுமாயிருக்கை. (மறை தாழ்ந்து) இப்படிப்பட்ட வேதமானது ஈர்ஷ்யாடம்பரான பாஹ்ய குத்ர்ஷ்டிகளாலேயாதல், கலிதோஷத்தாலே யாதல் அபிபூதமாய்க் கொண்டு இழவுபட்டு. கலியுகமானது வேதத்தை ஸங்கோசிப்பித்து அழித்தபடி. ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் ஸ்ரீபாகவதத்திலும் விஸ்தரேண உபபாதிக்கப் பட்டதிறே. "கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரம் ஈஸ்வரம் நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்ட உபஹதா ஜநா:" என்றும், "அந்தச் சாக்தம் பஹிச்சைவம் ஸபாமத்யேதுவைஷ்ணவம், கலௌ கஷ்டா ப்ரவர்த்தந்தே வர்ணாச்ரம ஜநாமுநே, கலௌ கார்த்த யுகம் தர்மம் கர்த்துமிச்சதியோ நர:, ஸ்வாமித்ரோஹீதிதம்மத்வா தஸ்மை ப்ரத்விஷதே கலி:" என்றும் சொல்லுகிறபடியே நிஷித்த மார்க்கத்தை நடப்பித்துக் கொண்டு போருகிற கலி தோஷத்தாலே வேதமார்க்கமானது மூலையடியே நடந்து.

விளக்கம் - (தாழ்வொன்றில்லா மறை) - வேதத்திற்குத் தாழ்வு இல்லாத நிலை என்கிறார். வேதத்திற்கு தாழ்வு இல்லாமை என்றால் என்ன என்பதற்கு விடை அருளிச்செய்கிறார். அறிவற்றவர்கள் அறிவுள்ளவர்கள் என்றுள்ள வேறுபாடுடன் கூடிய தர்ம நிலைப்பாடு, தான் ஸ்வயமாக வெளிப்படாமல் தன்னை வெளிப்படுத்த மற்றொன்றை நாடுதல், ஒரு காலகட்டத்தில் இருந்து மற்றொரு காலத்தில் மறைந்து போதல் என்பது போன்ற தன்மைகள் ஏதும் இல்லாமல், எப்போதும் இருந்தபடியும் யாராலும் இயற்றப்படாததாயும் உள்ள நிலையே வேதங்களுக்குத் தாழ்வு ஒன்று இல்லாத நிலை எனப்பட்டது. (மறை தாழ்ந்து) - இப்படிப்பட்டதான உயர்ந்த வேதங்கள் தங்களைத் தாங்களே புகழ்ந்து கொள்ளும் வேதங்களுக்குப் புறம்பான பொருள் உரைப்பவர்கள், கலியின் கொடுமை போன்றவற்றால் அழிக்கப்பட்டு. கலியுகம் என்பது வேதத்தைச் சுருக்கி அழிப்பதாகிறது. ஸ்ரீவிஷ்ணுபுராணம் மற்றும் ஸ்ரீமத் பாகவதத்தில் இந்தக் கருத்து கூறப்பட்டுள்ளதைக் காணலாம். ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-41) - கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரம் ஈஸ்வரம் நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்ட உபஹதா ஜநா: - மைத்ரேயரே! கலியுகத்தில், இந்த உலகத்திற்குத் தலைவனும், எங்கும் நிறைந்திருப்பவனும், எல்லாரையும் படைத்தவனும் ஸர்வேச்வரனும் ஆகிய விஷ்ணுவை பாஷண்டிகளால்

கெடுக்கப்பட்ட மக்கள் வழிபடுவதில்லை - என்றும், அந்தச் சாக்தம் பஹிச்சைவம் ஸபாமத்யேதுவைஷ்ணவம், கலௌ கஷ்டா ப்ரவர்த்தந்தே வர்ணாச்ரம ஜநாமுநே, கலௌ கார்த்த யுகம் தர்மம் கர்த்துமிச்சதியோ நர:, ஸ்வாமித்ரோஹீதிதம்மத்வா தஸ்மை ப்ரத்விஷதே கலி: - என்றும் கூறுவது போன்று தாழ்ந்த மார்க்கத்தை நிலைநிறுத்தி நடத்துகின்ற கலிதோஷம் காரணமாக மிகவும் உயர்ந்த வேதங்கள் ஏதோ ஒரு சில இடங்களில் மட்டும் இருந்து வருவதான நிலை.

வ்யாக்யானம் - (தலமுழுதுங் கலியே யாள்கின்ற நாள்) தீபஸங்கோசத்தில் திமிர வ்யாப்தி போலே "இருள் தரு மாஞாலமான" பூமிக்கு கலியுகமானது தனிக்கோல் செல்லும்படி ஸாம்ராஜ்யம் பண்ணுகிற காலத்திலே. தேசகாலங்கள் ஸமீசீநங்களானால் திருத்தி ரக்ஷிக்கலாம். அப்படியின்றிக்கே தேசமோ அநேக விரோதி பூயிஷ்ட்டமானது, காலமோ தத்வசருக்கு வர்த்தகமானது. (வந்து) அப்படி அதிக்ரூரங்களான தேசகாலங்களிலே பரமபதத்தில் நின்றும் இந்த விபூதியிலே ஸ்ரீபெரும்பூதூரிலே யவதரித்தருளி. (அளித்தவன் காண்மின்) உத்தரிப்பித்து இந்த லோகத்தை ரக்ஷித்தவர் காணுங்கோள். எல்லாரும் இவரை ரக்ஷகரென்று தெளிந்து ஆச்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்று கருத்து. "கலியுங் கெடுங் கண்டு கொண்மின்" என்னக் கடவதிறே.

விளக்கம் - (தலமுழுதுங் கலியே யாள்கின்ற நாள்) - ஒளி மங்கும்போது இருள் படர்வது போன்று, திருவாய்மொழி – இருள் தரு மாஞாலம் - என்பதற்கு ஏற்றபடி உள்ள பூமியில், கலிகாலம் என்பது தனியான ஓர் ஆட்சி நடத்துவதாக உள்ள காலகட்டத்தில், இடமும் காலமும் நன்றாக இருந்தாலாவது அதில் உள்ளவர்களைத் திருத்தி காப்பாற்ற இயலும்; ஆனால் இருப்பிடமானது பலவிதமான விரோதிகள் நிறைந்துள்ளதாகவும், காலம் என்பது அவர்களுக்கு ஏற்றதாகவும் மாறியது. (வந்து) - இவ்விதம் மிகவும் கொடூரமான காலகட்டத்தில், கொடுமையான நிகழ்வுகள் நிறைந்துள்ள பூமியில், பரமபதத்திலிருந்து ஸ்ரீபெரும்பூதூரில் வந்து அவதரித்து. (அளித்தவன் காண்மின்) - இந்த லோகத்தைக் காப்பாற்றியவர். அதாவது இவரே அனைவரையும் காப்பாற்றவல்லவர் என்று அறிந்து கொண்டு, இவரை அண்டிப் பிழைத்துக் கொள்ளவேண்டும் என்று கூறுகிறார். திருவாய்மொழி (5-2-1) – கலியுங் கெடுங் கண்டு கொண்மின் - என்றது காண்க.

17. முனியார் துயரங்கள் முந்திலும் இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார் மனம் கண்ணமங்கை நின்றானை கலை பரவும்
தனி ஆனையைத் தண் தமிழ் செய்த நீலன் தனக்கு உலகில்
இனியானை எங்கள் இராமானுசனை வந்து எய்தினரே.

விளக்கவுரை – அனைத்து ச்ருதி, இதிஹாஸம் மற்றும் புராணங்கள் ஆகியவற்றால் துதிக்கப்படுபவன்; இதனைப் போன்றே ஒத்த வேறு யானை ஒன்று இல்லை என்றுள்ள கம்பீரமான யானை போன்று செருக்குடன் உள்ளவன் – இவன் யார் என்றால், தனது அழகு முழுவதையும் அனைவரும் அனுபவிக்கும்படி, திருக்கண்ணமங்கை என்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளி உள்ள பத்தராவிப்பெருமாள் ஆவான். இப்படிப்பட்ட பத்தராவிப்பெருமாளின் ஸ்வரூபம், ரூபம், குணங்கள் ஆகியவற்றைப் பற்றி, அவனை அண்டியவர்களின் தாபங்கள் அனைத்தும் தீரும்விதமாக, இனிய தமிழ் மொழியில் பிரபந்தம் இயற்றியவர் திருமங்கையாழ்வார் ஆவார். இந்த ஆழ்வாருக்கு, இந்த உலகில் உள்ள அனைத்துப் பாகவதர்களையும் விட, பிரியமானவராக உள்ளவர் நமது எம்பெருமானார் ஆவார். என்னைப் போன்றே அனைவரும் உய்ய வேண்டும் என்னும் நோக்கத்துடன் அவதரித்தவர் எம்பெருமானார் ஆவார். எம்பெருமானாரின் ப்ரபாவம் பற்றி அறிந்து, அவரை அண்டிய அனைவரும் பாக்கியம் பெற்றவர் ஆவர், ஏன்? இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு மலை போன்று, அடுக்கடுக்காய்த் துன்பங்கள் ஏற்பட்டாலும், “இந்தத் துன்பங்கள் வந்துவிட்டதே”, என்று புலம்பமாட்டனர்; இதே போன்று அளவிட இயலாத இன்பம் வந்தாலும், “இந்த அதிசயம் நமக்கு உண்டானதே”, என்று துள்ளவும் மாட்டனர்.

அவதாரிகை - கீழெல்லாம் ஆழ்வார்களுடைய ஸம்பந்தத்தையிட்டே எம்பெருமானாரைக் கொண்டாடுகிற ப்ரகரணமாகையாலே இப்படி எம்பெருமானார் செய்தருளின உபகாரத்தைக் கேட்டு தத் ஸமாச்ரயண ருசி பிறந்தவர்கள் இவ்விஷயத்தை ஆச்ரயித்தாலும் ஸுக துக்க நிபந்தமாகக் கலக்கம்வரில் செய்வதென்னென்று திருக்கண்ணமங்கையுள் நின்றருளின பத்தராவி விஷயமாக திவ்யப்ரபந்தத்தை அருளிச்செய்த திருமங்கையாழ்வாருக்கு ப்ரியதமரான வெம்பெருமானாரை ஆச்ரயித்தவர்களுக்கு ஸுகதுக்கங்கள் வந்து மேல் விழுந்தாலும் ஹர்ஷாமர்ஷங்களாலே சலியார்க ளென்கிறார்.

விளக்கம் - இங்கு உள்ள பாசுரங்கள் அனைத்தும் ஆழ்வார்களுடைய ஸம்பந்தம் என்பதைக் கொண்டு எம்பெருமானாரைக் கொண்டாடுகிற விதமாக உள்ளன; இவ்விதம் உள்ளது கொண்டு எம்பெருமானாரை உணர்ந்து, அவர் செய்தருளும் உபகாரங்களை எண்ணி, அவருடைய திருவடிகளை அண்டி நின்றாலும், இன்ப துன்பங்களுடைய காரணமாகக் கலக்கம் உண்டானால் என்ன செய்வது என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார். திருக்கண்ணமங்கை என்ற திவ்யதேசத்தில் எழுந்தருளியுள்ள பத்தராவிப்பெருமாள் குறித்து திவ்யப்ரபந்தத்தை அருளிச்செய்த திருமங்கையாழ்வாருக்கு மிகவும் பிடித்தமான எம்பெருமானாரை அண்டி நிற்பவர்களுக்கு எத்தனை இன்ப துன்பங்கள் வந்தாலும், அதன் இன்ப துன்பங்கள் காரணமாக அவர்கள் தளரமாட்டார்கள் என்கிறார்.

வ்யாக்யானம் - (கலைபரவும்) "ஸர்வே வேதா: யத் பதமாமநந்தி", "வேதாச்ஷராணி யாவந்தி படிதாநி த்விஜாதிபி: தாவந்தி ஹரிநாமாநி கீர்த்திதாநி ந ஸம்சய", "வேதே ராமாயணே புண்யே பாரதே பரதர்ஷப ஆதௌ மத்யே ததாந்தேசே விஷ்ணுஸ் ஸர்வத்ர கீயதே" என்கிறபடியே ஸகல ச்ருதி ஸ்ம்ர்தீதிஹாஸ புராணங்களாலும் ஸ்துதிக்கப்படுமவனாய். (தனி யானையை) "த்யாவா ப்ர்த்வீ ஜநயன் தேவ ஏக:", "ஸ யச்சாயம் புருஷே யச்சா ஸாவாதித்யே ஸ ஏக:", "திவ்யோ தேவ ஏகோ நாராயண:" என்கிறபடியே அத்விதீயமாய் மத்தகஜம் போலே செருக்கை யுடையனாய்க் கொண்டு. (கண்ணமங்கையுள் நின்றானை) "முத்தின் திரள் கோவையை பத்தர் ஆவியை நித்திலத் தொத்தினை அரும்பினை அலரை அடியேன் மனத்து ஆசையை அமுதம் பொதி இன் சுவைக் கரும்பினைக் கனியை சென்று நாடிக் கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே" என்கிறபடியே தன்னுடைய போக்யதையை எல்லாருமநுபவிக்கும்படி திருக்கண்ண மங்கையிலே யெழுந்தருளி யிருக்கிற பத்தராவியை.

விளக்கம் - (கலைபரவும்) - ஸர்வே வேதா: யத் பதமாமநந்தி – யார் ஒருவனுடைய ஸ்வரூபத்தை எல்லா வேதங்களும் சொல்லுகின்றனவோ – என்றும், வேதாச்ஷராணி யாவந்தி படிதாநி த்விஜாதிபி: தாவந்தி ஹரிநாமாநி கீர்த்திதாநி ந ஸம்சய - வேதங்களிலுள்ள ஒவ்வொரு பதமும் பகவானைக் கூறுவது மட்டும் அல்லாமல், ஒவ்வொரு எழுத்தும் பகவானையே கூறுகிறது என்னும்போது, அனைத்து வேதங்களும் பகவானைக் குறிக்கின்றனவா இல்லையா என்னும் ஐயம் எப்படி எழும்? – என்றும்,

ஹரிவம்சம் பவிஷ்ய பர்வம் (132-95) – வேதே ராமாயணே புண்யே பாரதே பரதர்ஷப ஆதௌ மத்யே ததாந்தேசே விஷ்ணுஸ் ஸர்வத்ர கீயதே – பரத குலத்தில் உயர்ந்தவனே! மஹாவிஷ்ணு குறித்து வேதங்களின் தொடக்கம், மத்தி, இறுதி ஆகியவற்றிலும், இராமாயணம் மற்றும் மஹாபாரதத்திலும் கூறப்பட்டுள்ளது – என்றும் கூறுவதற்கு ஏற்றபடி அனைத்து ச்ருதி, ஸ்ம்ருதி, இதிகாசம், புராணம் ஆகியவற்றால் துதிக்கப்படுபவனும். (தனி யானையை) - மஹாநாராயண உபநிஷத் – த்யாவா ப்ர்த்வீ ஜநயன் தேவ ஏக: - ஒருவனே ஆகிய அந்தத் ஸர்வேச்வரன், பூமி போன்ற அனைத்தையும் கைகளாலும் சேர்த்துப் பிடிக்கின்றான் - என்றும், ஸ யச்சாயம் புருஷே யச்சா ஸாவாதித்யே ஸ ஏக: - அவனே ஆதித்ய மண்டலத்தில் உள்ள புண்டரீகாக்ஷன் – என்றும், ஸுபால உபநிஷத் - திவ்யோ தேவ ஏகோ நாராயண: - பரமபதத்திலிருக்கும் தேவனான நாராயணன் ஒருவனே - என்றும் கூறுவதற்கு ஏற்ப இதனைப் போன்று இன்னொன்று உண்டு என்று கூற இயலாதபடி உள்ள மதம் கொண்ட யானை போன்று செருக்கை உடையவனும் ஆகிய. (கண்ணமங்கையுள் நின்றானை) - பெரியதிருமொழி (7-10-1) - முத்தின் திரள் கோவையை பத்தர் ஆவியை நித்திலத் தொத்தினை அரும்பினை அலரை அடியேன் மனத்து ஆசையை அமுதம் பொதி இன் சுவைக் கரும்பினைக் கனியை சென்று நாடிக் கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனே - என்பதற்கு ஏற்ப தன்னுடைய இன்பம் அளிக்கவல்ல திருமேனியை எல்லாரும் அனுபவிக்கும்படியாகத் திருக்கண்ணமங்கை திவ்யதேசத்தில் எழுந்தருளியுள்ள பத்தராவிப் பெருமாள்.

வ்யாக்யானம் - (தண்டமிழ்செய்த) "நின் தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே" என்கிறபடியே அவனுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளாகிற ப்ரதிபாத்யார்த்த கௌரவத்தாலே தன்னை அப்யஸித்தவர்களுடைய ஸகல தாபங்களு மாறும்படிச் ச்ரம ஹரமாய் த்ரமிட பாஷாரூபமாக ப்ரபந்தீகரித்தருளின. (நீலன்றனக்கு) திருமங்கையாழ்வாருக்கு. "கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனென்று காதலால் கலியனுரை செய்த வண்ணவொண்டமிழ்" என்று ஆழ்வார்தாமே யருளிச்செய்தாரிறே. (உலகிலினியானை) இவ்விபூதியிலே ஸமஸ்த பாகவத ஜநங்களுக்கும் அதிப்ரியகரரான. "பரகால முகாப்ஜ மித்ரம்" என்று ஜீயருமருளிச் செய்தாரிறே. (எங்களிராமாநுசனை) என்னைப் போலே எல்லாரையு முத்தரிப்பிக்கைக்காக வந்தவதரித்தருளின எம்பெருமானாரை. (வந்தெய்தினரே) "ஸ்ரீமான் ஆவிரபூத்பூமௌ ராமாநுஜ திவாகர:" என்னும்படியான ப்ரபாவத்தை யறிந்து வந்து ஸபங்தி பண்ணி ஆச்ரயித்த பாக்யவாந்கள்.

விளக்கம் - (தண்டமிழ்செய்த) – பெரியதிருமொழி (7-10-10) - நின் தனக்கும் *குறிப்பாகில் கற்கலாம்* கவியின் பொருள்தானே - என்பதற்கு ஏற்ப அவனுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்கள், விபூதிகள் போன்ற பலவற்றையும் உள்ளது உள்ளபடி வெளிப்படுத்திய கம்பீரம் காரணமாக, "பெரியதிருமொழி" என்னும் தன்னைக் கற்க வல்லவர்களுடைய அனைத்து துன்பங்களும் நீங்கும் விதமாக தமிழ்மொழியில் அமைந்துள்ள ப்ரபந்தத்தை அருளிச்செய்த. (நீலன்றனக்கு) – திருமங்கையாழ்வாருக்கு. பெரியதிருமொழி (7-10-10) – கண்ணமங்கையுள் கண்டுகொண்டேனென்று காதலால் கலியனுரை செய்த வண்ண வொண்டமிழ் - என்று ஆழ்வார் தனது திருவாக்கு கொண்டு அருளிச்செய்தது காண்க. (உலகிலினியானை) - இந்த உலகில் உள்ள அனைத்து பாகவதர்களுக்கும் மிகவும் ப்ரியமாக உள்ளவராகிய. யதிராஜ விம்சதி (2) - ஸ்ரீபட்டநாத பரகால முகாப்ஜ மித்ரம் - சூரியனைக் கண்டு தாமரை மலர்வது போன்று இராமாநுசரைக் கண்டவுடன் அர்ச்சையில் (விக்ரஹம்) உள்ள பெரியாழ்வாரின் முகமும், திருமங்கையாழ்வாரின் முகமும் மலர்கின்றன - என்று ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தது காண்க. (எங்களிராமாநுசனை) – என்னைப் போன்றுள்ள அனைவரையும் கரை ஏற்றுவதற்காக வந்து அவதரித்தருளிய எம்பெருமானாரை. (வந்தெய்தினரே) – ஸ்ரீமான் ஆவிரபூத்பூமௌ ராமாநுஜ திவாகர: - சூரியனைக் கண்டு இருள் விலகுவது போன்று, எம்பெருமானாராகிய சூரியனைக் கண்டு நம்முடைய பாவங்கள் விலகுகின்றன – என்பதற்கு ஏற்ப உள்ள அவருடைய ப்ரபாவத்தை நன்றாக அறிந்து கொண்டு அண்டி நிற்கும் பாக்கியம் செய்தவர்கள்.

வ்யாக்யானம் - (முனியார் துயரங்கள் முந்திலும்) துக்கங்களானவை அஹமஹ மென்கையாய் வந்து மொசிந்தாலும் இது வந்தேயென்று வ்யாகுலப்படார்கள். முனிவு – வெறுப்பு. (இன்பங்கள் மொய்த்திடினுங் கனியார் மநம்) ஸுகங்களானவை ஏகோத்யோகேந வந்து திரண்டாலும் இந்த அதிசயம் நமக்கு வந்ததேயென்று பக்வ பலம் போலே மநஸ்ஸில் ஏகாகாரங்களாய். மொய்த்தல் - திரளுதல். "ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத் ப்ராப்ய சாப்ரியம்" என்றாரிறே கீதாசார்யரும். "மதந கதநை: ந க்லிச்யந்தே யதீச்வர ஸம்ச்ரயா:" என்று இவ்வர்த்தத்தை அபியுக்த்தரு மருளிச் செய்தாரிறே.

விளக்கம் - (முனியார் துயரங்கள் முந்திலும்) - துன்பங்கள் அவர்களிடம் "அஹம் அஹம் = நான், நான்" என்று போட்டியிட்டுக் கொண்டு வந்தாலும், "இவை இவ்விதம் வந்ததே" என்று வருந்தமாட்டார்கள். (இன்பங்கள் மொய்த்திடினுங் கனியார் மநம்) - இன்பங்கள் அனைத்தும் முழுவதுமாகத் திரண்டு வந்தாலும், "இப்படிப்பட்ட அதிசயம் நமக்கு நிகழ்ந்ததே" என்று அதற்கும் துள்ளாமல் ஒரே போன்று மனம் கொண்டவர்களாக இருப்பர். கீதை (5-20) – ந ப்ரஹ்ருஷ்யேத் ப்ரியம் ப்ராப்ய நோத்விஜேத் ப்ராப்ய சாப்ரியம் – விருப்பமான பொருளை அடையும்போது மகிழாமலும், விருப்பம் இல்லாத ஒன்றை அடையும்போது கலங்காமலும் – என்றது காண்க. இதனை வேதாந்த தேசிகரும் தனது யதிராஜ ஸப்ததியில் (45) - மதந கதநை: ந க்லிச்யந்தே யதீச்வர ஸம்ச்ரயா: - யதிராஜரை அடைந்தவர்கள் காமத் துன்பங்களில் சிக்கிக் கொள்வதில்லை – என்று அருளிச்செய்தமை காண்க.

18. எய்தற்கரிய மறைகளை ஆயிரம் இன் தமிழால்
செய்தற்கு உலகில் வரும் சடகோபனை சிந்தையுள்ளே
பெய்தற்கு இசையும் பெரியவர் சீரை உயிர்கள் எல்லாம்
உய்தற்கு உதவும் இராமானுசன் எம் உறுதுணையே.

விளக்கவுரை – சிறந்த ஞானம் உள்ளவர்களுக்கும் அறிவதற்குக் கடினமான ஆழ்பொருள் அடக்கிய வேதங்கள் அனைத்தையும், பெண்கள் – சிறுவர்கள் என்னும் பேதம் இன்றி அனைவரும் கற்கும் விதமாக, ஆயிரம் இனிய பாசுரங்களில் செய்தருளினார். இவர் யார் என்றால் – இவ்விதமாக இந்த வேதங்களை எளிமைப்படுத்தவே இந்த உலகில் அவதாரம் செய்தவரும், மற்ற மதங்கள் என்னும் சடம் (ஒருவிதமான வாயு) நீங்க, சடகோபன் என்ற திருநாமம் கொண்டவரும் ஆகிய நம்மாழ்வார் ஆவார். இப்படிப்பட்ட நம்மாழ்வாரை எப்போதும் தனது உள்ளத்தில், "தேவு மற்று அறியேன்", என்று வைத்துக் கொள்ளும் தகுதி கொண்டவர் மதுரகவியாழ்வார் ஆவார். இத்தகைய மதுரகவிகளின் உயர்ந்த திருக்கல்யாண குணங்கள் அனைத்தையும், இந்த உலகில் உள்ளவர்களை உய்விக்கும் விதமாக அருளியவர் எம்பெருமானார் ஆவார். இப்படிப்பட்ட உடையவரே எனக்குத் திடமான துணை ஆவார் (வேறு யாரும் அல்லர்).

அவதாரிகை - கீழ்ப்பாட்டுக்களிலே ப்ரதிபாதிக்கப்பட்ட ஆழ்வார்களில் வைத்துக் கொண்டு ப்ரதாநராய் ஸர்வாதிகாரமாம்படி திருவாய்மொழி யென்கிற திவ்யப்ரபந்தத்தை யருளிச்செய்கைக்காக அவதரித்தருளின நம்மாழ்வாருக்கு அநந்யார்ஹரான ஸ்ரீமதுரகவியாழ்வாருடைய கல்யாணகுணங்களை ஸகலாத்மாக்களும் உஜ்ஜீவிக்கைக்காக உபகரித்தருளின எம்பெருமானார் எனக்கு ஸஹாயமென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரங்களில் விவரிக்கப்பட்ட ஆழ்வார்களில் முதன்மையானவராகவும், அனைத்து தகுதிகளும் உடையவராகவும், திருவாய்மொழி என்ற உயர்ந்த ப்ரபந்தத்தை அருளிச்செய்வதற்காகவே அவதரித்தருளியவரும் ஆகிய நம்மாழ்வாரைத் தவிர மற்ற யாருக்கும் கைங்கர்யம் செய்யாதவராகிய மதுரகவியாழ்வாருடைய திருக்கல்யாண குணங்களை, அனைத்து உயிர்களும் கரையேற வேண்டும் என்ற எண்ணம் காரணமாக விவரித்து அருளிய எம்பெருமானாரே தனக்கு உதவுபவர் என்கிறார்.

வ்யாக்யானம் - (எய்தற்கரியமறைகளை) “அநந்தாவை வேதா:” என்கிறபடியே ஒரு ஸங்க்யையிட்டுச் சொல்லப் போகாதபடி அபரிமிதங்களாய், ஸர்வோபஜீவ்யங்களாகாதே அதிக்ர்தாதிகாரங்களாய், அந்யோபமர்த்தக வாக்யங்களாகாதே ஸ்வார்த்தத்தைத் தெளியும்போது, எத்தனையேனும் அதிசயித ஜ்ஞாநரானவர்களுக்கும் அருமைப்படுத்தக் கடவனவான ஸம்ஸ்க்ர்த வேதங்களை. (ஆயிரமின்றமிழால்) வர்ணாதி நியதியின்றிக்கே ருசி பிறந்தவர்களெல்லாரும் அதிகரிக்கும்படியாய், ஆயிரம் என்று ஒரு ஸங்க்யையோடே கூடியிருப்பதாய், “உயர்வறவுயர்நலம்” என்று தொடங்கி, “உயர்ந்தே” என்னுமளவும் ஆதி மத்யாவஸாநங்களிலே பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளையும், சேதநாசேதந ரூப ஸ்வபாவங்களையும், சேதநருடைய ஸம்ஸார பந்த ஹேதுக்களையும், தந்நிவர்த்தநோபாயமான தத்விஷய ப்ரீதி ரூபாபந்ந ஜ்ஞாநத்தையும், ஜகத் காரணவஸ்து நாராயணனேயென்று தேவதாவஸ்து விசேஷி நிர்த்தாரணத்தையும், அவனுடைய ஸமஸ்த கல்யாண குணாத்மகத்வத்தையும், அநந்த கருட விஷ்வக்ஸேநாதி திவ்யஸூரி பரிசர்யமாண நளிநனாய்க் கொண்டு நின்றபடியையும், தாமநுபவித்தபடியை எல்லாராலும் அநுபவிப்பிக்கைக்காக தம்முடைய நிர்ஹேதுக பரமக்ர்பையாலே லௌகிகரைக் குறித்து உபதேசித்தபடியையும், தம்முடைய அபிநிவேசமெல்லாந் தீரும்படி அவனை ப்ராபித்தபடியையும் விசதமாக ப்ரதிபாதிப்பதாய், ஸ்வார்த்தத்தையெல்லாம்

ஸுஸ்பஷ்டமாகவும் ஸுக்ரஹமாகவும் தெரிவிக்குமதாய், அதஏவ அத்யந்த ஸுலபமாய், "பக்தாம்ர்தம்", "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள்" என்னும்படி அநுபோக்த்தாக்களுக்கு அத்யந்தம் போக்யமாய் "நடைவிளங்கு தமிழான" த்ரமிட பாஷைஷயாலே திருவாய்மொழியென்கிற ப்ரபந்த ரூபேண (செய்தற்கு) அவதரிப்பிப்பதற்கு. ஆவிர்ப்பாவத்தைப் பண்ணுவதற்கென்றபடி.

விளக்கம் - (எய்தற்கரியமறைகளை) - அநந்தாவை வேதா: - வேதங்கள் எண்ணற்றவை - என்பதற்கு ஏற்ப ஒரு எண்ணிக்கையிட்டுக் கூற முடியாதபடி எண்ணற்றதாகவும், அனைவரும் கற்றுக் கரையேறலாம்படி இல்லாமல் தனித்தகுதி இருந்தால் மட்டுமே கற்க இயலும்படியும், மிகவும் மறைமுகமான பொருள்களை விளக்கும் கருத்துக்கள் பொதிந்துள்ளதால் தன்னுடைய அர்த்தத்தை அறிய முனைபவர்கள் மிகவும் ஞானம் உள்ளவர்களாக இருந்தாலும் அறிவதற்கு மிகவும் கடினமானதாகவும் உள்ளதான வடமொழி வேதங்களை. (ஆயிரமின்றமிழால்) - அந்தணன், க்ஷத்ரியன், வைசியன், சூத்ரன் என்ற வேறுபாடு இன்றி இவற்றின் மீது ஆசை கொண்டவர்கள் அனைவராலும் கற்கலாம்படி உள்ளதும்; ஆயிரம் என்று ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையால் கூறலாம்படி உள்ளதும்; திருவாய்மொழி (1-1-1) - உயர்வற உயர்நலம் - என்று தொடங்கி, திருவாய்மொழி (10-10-11) – உயர்ந்தே - என்று முடியும்வரை தொடக்கம், நடு, இறுதி என்றுள்ள அனைத்து இடங்களிலும் பகவானின் ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதிகள் குறித்தும், சேதந அசேதந ஸ்வரூபங்கள் குறித்தும், சேதநர்கள் ஸம்ஸாரத்தில் சிக்குவதற்கான காரணங்கள் குறித்தும், அத்தகைய ஸம்ஸாரம் என்பது நீங்குவதற்கு உபாயமாக உள்ள ஸர்வேச்வரன் குறித்த ஞானத்தையும், உலகம் அனைத்திற்கும் காரணம் ஸ்ரீமந்நாராயணனே என்று உறுதியுடன் உரைத்தும், அவனுடைய எல்லையற்ற திருக்கல்யாண குணத்தையும், அவன் ஆதிசேஷன் - கருடன் - விஷ்வக்ஸேநர் உள்ளிட்ட நித்யஸூரிகளுடன் சேர்ந்து நிற்பதையும், தாம் அனுபவித்ததை அனைவரும் அனுபவிக்க வேண்டும் என்பதால் எந்தவிதமான காரணமும் இன்றித் தன்னிடம் வெளிப்படும் கருணை காரணமாக ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுக்கு உபதேசித்ததையும், தனது விருப்பம் முழுவதும் தீரும்படியாக அவனை அடைந்தவிதத்தையும் மிகவும் விளக்கமாக உணர்த்துவதும்; தன்னில் பொதிந்துள்ள ஆழ்பொருள் அனைத்தையும் மிகவும் தெளிவாகவும், சுருக்கமாகவும் உணர்த்துவதும்; அதன் காரணமாக மிகவும் எளிமையானதும்; நாதமுனிகள் அருளிச்செய்த திருவாய்மொழி தனியன் – பக்தாம்ருதம் –

அடியார்களுக்கு அமிர்தமாக - என்றும், திருவாய்மொழி (9-4-9) - தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன்மாலைகள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப தன்னை அனுபவிப்பவர்களுக்கு எல்லையற்ற இன்பமாகவும்; பெருமாள் திருமொழி (1-11) – நடைவிளங்கு தமிழ் - என்பதற்கு ஏற்றபடி தமிழ்மொழியில் உள்ளதும் ஆகிய திருவாய்மொழி என்பதான ப்ரபந்த வடிவில். (செய்தற்கு) வெளிப்படுத்தும்படியாக. அதாவது திருவாய்மொழியை வெளிப்படுத்துவதற்காகவே.

வ்யாக்யானம் – (உலகில்) "அசுத்தாஸ்தே ஸமஸ்தாச்ச தேவாத்யா: கர்மயோநய: ஆவிரிஞ்சாதி மங்களம்" என்றும், "இருள்தருமா ஞாலம்" என்றும், "கர்ப்ப ஜந்மாத்யவஸ்த்தாஸு துக்கமத்யந்ததுஸ்ஸஹம் ந கிஞ்சித் கணயன் நித்யம் சராமீந்த்ரிய கோசர:" என்றுஞ் சொல்லப்படுகிற இந்த லீலாவிபூதியிலே. (வருஞ்சடகோபனை) "வரும்" என்ற வர்த்தமாந நிர்த்தேசத்துக்கு, அவருடைய திவ்யமங்கள விக்ரஹம் ஸமஸ்த திவ்ய தேசங்களிலும், ஸமஸ்த ப்ரபந்ந ஜநங்களுடைய திருமாளிகையிலும், நவம் நவமாய்க் கொண்டு ஆராத்யமாகையும், அவருடைய திவ்யஸூக்திகள் இந்த லோகத்திலே இவ்வளவும் இன்னுமுள்ள காலத்திலும் நடையாடிப் போருகையும் பொருளாகக் கடவது; இப்படியவதரித்தருளின. (சடகோபனை) சடராவார் ஸ்வரூப ஜ்ஞாநமில்லாத ஸம்ஸாரிகள். அவர்களைக் குறித்து "ஒரு நாயகத்திலும்", "நண்ணாதார் முறுவலிலும்" பருஷம் பண்ணினவனை. பாஹ்ய குத்ர்ஷ்டிகளாகிற சடர்க்கு ப்ரதிபரரானாரை யென்னுதல். இப்படிப்பட்ட நம்மாழ்வாரை.

விளக்கம் - (உலகில்) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-7-77) – அசுத்தாஸ்தே ஸமஸ்தாச்ச தேவாத்யா: கர்மயோநய: - நான்முகன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் கர்மத்தின் காரணமாகப் பிறந்தவர்கள் என்பதால் அசுத்தர்களே ஆவர் - என்றும், திருவாய்மொழி (10-6-1) – இருள் தரு மா ஞாலம் - என்றும், கர்ப்ப ஜந்மாத்யவஸ்த்தாஸு துக்கம் அத்யந்த துஸ்ஸஹம் ந கிஞ்சித் கணயன் நித்யம் சராமீந்த்ரிய கோசர: - கர்ப்பம் புகுவதில் தொடங்கி எப்போதும் துக்கத்தில் ஆழ்ந்து, ஒரு நொடியும் கூட விடாமல் இந்த்ரியங்களால் அலைக்கழிக்கப்பட்டு - என்றும் கூறப்படுகிற இந்த உலகத்தில். (வருஞ்சடகோபனை) - "வரும்" என்று நிகழ்காலம் கூறியது காண்க. இது ஏன்? நம்மாழ்வாருடைய திவ்யமங்கள விக்ரஹம் அனைத்து திவ்யதேசங்களிலும், அனைத்து ப்ரபந்நர்களின் வீடுகளிலும்,

ஒவ்வொரு நாளும் புதிதுபுதிதாக அமைக்கப்பட்டு ஆராதனை செய்யப்படுவதாலும், அவருடைய திவ்யப்ரபந்தங்கள் இன்றளவும் இந்த உலகில் இருப்பதாலும், இனி வரவுள்ள காலங்களிலும் இருக்கும் என்பதாலும் நிகழ்காலத்தில் அருளிச்செய்தார். இப்படியாக அவதரித்தருளிய. (சடகோபனை) – "சடர்" என்றால் தங்களைக் குறித்தும், ஸ்வரூபம் குறித்தும் ஞானம் அற்ற ஸம்ஸாரிகள். அப்படிப்பட்டவர்கள் குறித்து திருவாய்மொழி (4-1-1) – ஒரு நாயகமாய் – ஐச்வர்யமும் ஆத்ம அனுபவமும் தாழ்ந்தது, பகவத் அனுபவமே உயர்ந்தது – என்றும், திருவாய்மொழி (4-9-1) – நண்ணாதார் முறுவலிப்ப - ஆகிய இரண்டிலும் கடுமையாக உரைத்தவரை. வேதத்தைச் சரிவர அறியாமல் விரோதமாகக் காண்பவர்களுக்கு விரோதமாக உள்ளவரை. இப்படிப்பட்ட நம்மாழ்வாரை.

வ்யாக்யானம் - (சிந்தையுள்ளே) தம்முடைய திருவுள்ளத்திலே. (பெய்தற்கு) தமக்கு பரதேவதையாய் ஆராத்யராயிருக்கும்படி வைக்கைக்கு. (இசையும்) உபயுக்தமான ப்ரபாவத்தையுடைய. "மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே தேவுமற்றறியேன்" என்றும், "மிக்க வேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினான்" என்றுமிறே இவர் தாமருளிச் செய்யும்படி. (பெரியவர்) "உண்டபோதொரு வார்த்தையு முண்ணாதபோதொரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப் பேருண்டிறே, அவர்கள் பாசுரங்கொண்ட ன்று இவ்வர்த்த மறுதியிடுவது; அவர்களைச் சிரித்திருப்பாரொருவ ருண்டிறே; அவர் பாசுரங்கொண்டு இவ்வர்த்த மறுதியிடக் கடவோம்" என்று ஸ்ரீவசநபூஷணத்திலே சொல்லுகிறபடியே, "யஸ்மாத் தது தேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குரு:, அர்ச்சநீய ஸ்வவந்த்யஸ்ச" இத்யாதி சாஸ்த்ரங்களிலே சொல்லப்பட்ட சரமபர்வ நிஷ்டராயும் தத்ப்ரவர்த்ததகராயு மிருக்கையாகிற மஹாப்ரபாவத்தை யுடையவ ராகையாலே ஸர்வாதிகரான ஸ்ரீமதுரகவியாழ்வாருடைய. (சீரை) "மாறன் சடகோபன் வண்குருகூர் ஏறு எங்கள் வாழ்வாம் என்றேத்தும் மதுரகவியார் எம்மை ஆள்வார் அவரே அரண்" என்றும், "பாருலகில் மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்த நாள்களிலும் உற்றது எமக்கென்று நெஞ்சே ஓர்" என்றும் இப்படி ச்லாகிக்கப்பட்ட கல்யாணகுணங்களை.

விளக்கம் - (சிந்தையுள்ளே) - தனது திருவுள்ளத்தில். (பெய்தற்கு) – தனக்கு மிகவும் உயர்ந்த தெய்வமாகவும் ஆரதனை செய்யும்படியும் வைப்பதற்கு. (இசையும்) -

தேவையான ப்ரபாவம் நிறைந்த. கண்ணிநுண் சிறுத்தாம்பில் - மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே தேவுமற்றறியேன் - என்றும், மிக்க வேதியர் வேதத்தி னுட்பொருள் நிற்கப்பாடி யென்னெஞ்சுள் நிறுத்தினான் – என்றும் இம்மதுரகவி ஆழ்வார் தானே அருளிச்செய்தது போன்று. (பெரியவர்) - ஸ்ரீவசனபூஷணம் (408, 409) - உண்டபோதொரு வார்த்தையு முண்ணாதபோதொரு வார்த்தையும் சொல்லுவார் பத்துப் பேருண்டிறே, அவர்கள் பாசுரங்கொண்ட ன்று இவ்வர்த்த மறுதியிடுவது; அவர்களைச் சிரித்திருப்பாரொருவ ருண்டிறே; அவர் பாசுரங்கொண்டு இவ்வர்த்த மறுதியிடக் கடவோம் – இதற்கான விளக்கத்தை அடியேனுடைய இணையதளத்தில் உள்ள ஸ்ரீவசனபூஷண எளியநடையில் (பகுதி 6) காண்க – என்பதற்கு ஏற்றபடி, யஸ்மாத் தது தேஷ்டாஸௌ தஸ்மாத் குருதரோ குரு: - பரம்பொருளையே உபதேசிப்பதால் குரு அதைக் காட்டிலும் உயர்ந்தவர் - என்பதான சாஸ்த்ரங்களில் கூறியது போன்று எல்லை நிலமான பாகவத கைங்கர்யத்தில் நிலைநிற்பராகவும், அப்படிப்பட்ட பாகவத கைங்கர்யமே உயர்ந்தது என்று உபதேசித்தபடி உள்ளதான உயர்ந்த ப்ரபாவம் கொண்டவராகவும் உள்ளதால் அனைத்து தகுதியும் நிறைந்த மதுரகவியாழ்வாருடைய. (சீரை) - கண்ணிநுண்சிறுத்தாம்பு தனியன் - *மாறன் சடகோபன் வண்குருகூர்* ஏறு எங்கள் வாழ்வாம் என்றேத்தும் மதுரகவியார் எம்மை ஆள்வார் அவரே அரண் - *நம்மாழ்வாரை அன்றி வேறு ஒன்றையும் அடைக்கலமாகக் கொள்ளாத மதுரகவியாழ்வாரே எங்களுக்கு கதியாவார்* – என்றும், உபதேச ரத்தினமாலை (25) - பாருலகில் மற்றுள்ள ஆழ்வார்கள் வந்துதித்த நாள்களிலும் உற்றது எமக்கென்று நெஞ்சே ஓர் - அழகு பொருந்திய மதுரகவியாழ்வார் இந்த உலகத்தில் வந்து அவதரித்தருளின சித்திரை மாதத்தில் சித்திரை நக்ஷத்திரமானது, பூமியில் மற்றவர்களாயுள்ள பதினோரு ஆழ்வார்கள் அவதரித்த திருநக்ஷத்திரங்களை காட்டிலும், நம் ஸ்வரூபத்துக்கு மிகவும் ஏற்றது என்று மனமே நீ நினைப்பாயாக – என்றும் போற்றப்பட்ட திருக்கல்யாண குணங்களை.

வ்யாக்யானம் - (உயிர்களெல்லாம்) வர்ணாச்ரம குணவ்ர்த்தாத் யுத்க்ர்ஷ்டாபகர்ஷ்ட விபாகமற ருசியுடையரான ஸகல ஸம்ஸாரிகளுடையவும். (உய்தற்கு) உஜ்ஜீவ நார்த்தமாக. இதொழிந்த உபாயங்களெல்லாம் உஜ்ஜீவந ஹேதுக்களன்றென்றுகாணும் இந்த வமுதனாருடைய திருவுள்ளத்திலோடுகிறது. (உதவும்) உபகரித்தருளும் எல்லாருக்கும் மோக்ஷோபாயமான திருமந்த்ரார்த்தத்தை யுபதேசிக்கும் வேளையிலே அர்த்த விசேஷங்களையெல்லாம் ததீய பர்யந்தமாக அநுஸந்திக்க வேணுமென்னும்

மதுரகவியாழ்வாருடைய நிஷ்டையையே காணும் எம்பெருமானா ருபதேசிப்பது. (இராமாநுச னெம்முறு துணையே) இப்படிப்பட்ட எம்பெருமானர் எனக்கு திடமான துணை. துணை - ஸஹாயபூதர். உறு - த்ர்டம். இத்தால் – பரமபதத்திலே கொண்டு போய்ச் சேர்க்குமென்றபடி. அன்றிக்கே, பெரியவர் என்கிற பதத்துக்கு ஆழ்வாருடைய திருவடிகளைத் திருவுள்ளத்திலே நிறுத்திக் கொண்ட ஸ்வாமிகளெல்லாரும் என்றும் பொருளாகவுமாம்.

விளக்கம் - (உயிர்களெல்லாம்) - இந்த வர்ணத்தைச் சேர்ந்தவர்கள், இன்ன குணம் உள்ளவர்கள் என்று உயர்த்தியும் தாழ்த்தியும் ஆராயாமல், கைங்கர்யம் என்பதில் ஆசை உள்ள அனைத்து உயிர்களும். (உய்தற்கு) - கரை ஏறுவதற்காக. இப்படிப்பட்ட பாகவத கைங்கர்யம் என்பது அல்லாமல் மற்ற எந்த உபாயமும் கரை ஏற்றவல்லது அல்ல என்ற கருத்தே திருவரங்கத்தமுதனாரின் திருவுள்ளத்தில் உள்ளது. (உதவும்) - உதவுகின்ற. அனைவருக்கும் மோக்ஷம் கிட்டவைக்கும் உபாயமான திருமந்த்ரத்தின் ஆழ்பொருளை உபதேசிக்கும்போது, அதன் அர்த்தங்கள் அனைத்தையும் ஸர்வேச்வரன் அளவில் நின்றுவிடாமல் பாகவதர்கள் முடிய என்ணவேண்டும் என்பதான மதுரகவியாழ்வாருடைய சிந்தனை என்பதே எம்பெருமானார் உபதேசிப்பதாகும். (இராமாநுச னெம்முறு துணையே) – இப்படிப்பட்ட எம்பெருமானாரே எனக்கு உறுதியான துணை ஆவார். இதன் மூலம் பரமபதத்தில் கொண்டு சேர்ப்பார் என்கிறார். அல்லது “பெரியவர்” என்னும் பதத்திற்கு ஆழ்வாருடைய திருவடிகளை எப்போதும் திருவுள்ளத்தில் நிறுத்தி வைத்துள்ள ஸ்வாமிகள் அனைவரும் என்று கொள்க.

19. உறு பெரும் செல்வமும் தந்தையும் தாயும் உயர் குருவும்
வெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளங்கிய சீர்
நெறி தரும் செந்தமிழ் ஆரணமே என்று இந்நீணிலத்தோர்
அறி தர நின்ற இராமானுசன் எனக்கு ஆரமுதே.

விளக்கவுரை – நமக்கு நாம் இன்னார் என்று அறியும் அறிவை அளிக்கவல்லது; நம்மிடம் ப்ரியமாக உள்ளது; அஜ்ஞானத்தை நீக்கவல்லது; ஞானம் ஏற்பட உபாயமாக உள்ளது; அள்ள அள்ள குறைவில்லாத செல்வமாக உள்ளது; “வீடுமின் முற்றவும்” என்று தொடங்கி, “கண்ணன் கழலிணை”, என்பதுவரை நமது நன்மைகளை மட்டுமே கருத்தில் கொண்டு

உபதேசித்த காரணத்தினால், நமது தாய்தந்தையைப் போன்றது; அனைத்து வகையிலும் நமக்கு ஏற்ற ஆசார்யனாக உள்ளது; மிகுந்த நறுமணம் வீசும் தாமரை மலரைத் தனது பிறப்பிடமாகக் கொண்ட பெரியபிராட்டிக்கு நாதனான ஸர்வேச்வரன் போன்றும் உள்ளது – இது எது? ஸர்வேச்வரன் தனது கருணை மூலம் நம்மாழ்வாருக்கு "மயர்வற மதிநலம் அருளி", அத்தகைய நம்மாழ்வார் அவனது ஸ்வரூப-ரூபங்களை நாம் அறியும் வண்ணம் விளக்கிய, தமிழ் வேதமாகிய திருவாய்மொழியே ஆகும். இத்தகைய திருவாய்மொழி மட்டுமே புருஷார்த்தம் என்று இந்தப் பெரிய உலகில் உள்ள அனைவருக்கும் அறிவிக்கும்படியாக எம்பெருமானார் உள்ளார். இப்படிப்பட்ட எம்பெருமானாரே எனக்கு அமிர்தம் போன்று உள்ளார்.

அவதாரிகை - ஐஹிகாமுஷ்மிக ஸமஸ்த ஸம்பத்தும், ஸர்வவித பந்துக்களும் வகுத்த சேஷியான ஸ்ரீய:பதியும், நம்மாழ்வார், தமக்கு பகவந் நிர்ஹேதுக க்ர்பையாலே ப்ரகாசியா நின்ற அர்த்தவிசேஷங்களை அடைவேயருளிச் செய்த த்ரமிடோபநிஷத்தே யென்று ஸகல ஜநங்களுக்கு முபதேசிக்கிற எம்பெருமானார் எனக்கு நிரதிசய போக்ய ரென்கிறார்.

விளக்கம் - இம்மையிலும் மறுமையிலும் உள்ள அனைத்துவிதமான ஸம்பத்துக்களும், அனைத்துவிதமான உறவினர்களும், இயல்பாகவே தனக்கு எஜமானனான மஹாலக்ஷ்மியின் நாதனும் எம்பெருமானாராகிய தனக்கு யார் என்றால் – நம்மாழ்வார், தனக்கு எந்தவிதமான காரணமும் இன்றிப் பொழிந்த கருணையால் வெளிப்பட்டதும், ஆழ்பொருள்கள் அனைத்தையும் முழுமையாக உள்ளடக்கியதும் ஆகிய தமிழ்மொழியில் அமைந்த உபநிஷத்துக்களே ஆகும் என்று அனைவருக்கும் உபதேசித்தார். இப்படிப்பட்ட எம்பெருமானாரே தனக்கு அனைத்துவிதத்திலும் எல்லையற்ற இனிமையானவர் என்கிறார்.

வ்யாக்யானம் - (உறு) "அபிந்தந தநஞ்சய ப்ரசமதம் தனம் தந்தநம்" என்கிறபடியே அப்ராப்தமான ஸம்பத்தன்றிக்கே, "தநஞ்சய விவர்த்தநம் தனம் உதூட கோவர்த்தநம் ஸுஸாதந மபாதநம் ஸுமநஸாம் ஸமாராதநம்" என்றும், "ஸாஹி ஸ்ரீ: அம்ருதா ஸதாம்" என்றும் முக்தைச்வர்யத்துக் குடலாகையாலே ப்ராப்தமாய். (பெரும்) "க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி" என்றும், "ஒரு நாயகமாய் ஓடவுலகுடனாண்டவர், கருநாய் கவர்ந்த

காலர் சிதைகிய பானையர், பெருநாடு காண இம்மையிலே பிச்சை தாம்கொள்வர்" என்றுஞ் சொல்லுகிறபடியே அதிஸ்வல்பமாய் அநித்யமாயிருக்கையன்றிக்கே, "கொள்ளக் குறைவற்றிலங்கி, கொழுந்துவிட்டோங்கிய" என்கிறபடி கொள்ளக் கொள்ளப் பெருகி வரக் கடவதாயிருக்கிற.

விளக்கம் - (உறு) – வைராக்யபஞ்சகம் (4) - அபிந்தன தநஞ்சய ப்ரசமதம் தனம் தந்தனம் – நீரை உணவாகக் கொண்ட ஜாடராக்நியைத் தணிப்பதற்கான செல்வம் - என்பதற்கு ஏற்றபடி [அதாவது எத்தனை செல்வம் சம்பாதித்தாலும் அவை நம்முடைய வயிற்றை நிரப்பி, அங்குள்ள ஜாடராக்னியைத் தணிப்பதற்கு மட்டுமே ஆகும் என்று கருத்து], இந்த உலகில் உள்ள ஸம்பத்துக்கள் போன்று அல்லாமல், வைராக்ய பஞ்சகம் (4) – தநஞ்சய விவர்த்தநம் தனம் உதூட கோவர்த்தநம் ஸுஸாதந மபாதநம் ஸுமநஸாம் ஸமாராதநம் – அர்ஜுனனை சிறப்படையும்படிச் செய்ததும், கோவர்த்தனம் என்னும் மலையைத் தாங்கியதும், நல்ல உள்ளம் கொண்டவர்களுக்கு மகிழ்வை அளிப்பதும், எந்த ஒரு பயனுக்கும் ஏற்ற உபாயமாக உள்ளதும், அழிக்க இயலாததும் ஆகிய செல்வமே உண்மையானதாகும் - என்றும்; தைத்திரீய உபநிஷத் – ஸாஹி ஸ்ரீ: அம்ருதா ஸதாம் – அந்த ப்ரஹ்மம் அம்ருதமயமாய் உள்ளது - என்றும் கூறுவதற்கு ஏற்ப முக்தி என்ற ஐச்வர்யத்துக்கு உறுப்பாக உள்ளதால் அடையக்கூடியதாக. (பெரும்) - கீதை (9-21) – க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி – புண்ணியம் தீர்ந்தவுடன் பூமிக்குத் திரும்புகிறார்கள் – என்றும், திருவாய்மொழி (4-1-1) – ஒரு நாயகமாய் ஓடவுலகுடனாண்டவர், கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர், பெருநாடு காண இம்மையிலே பிச்சை தாம்கொள்வர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அற்பமாகவும், அழியக் கூடியதாகவும் இல்லாமல், இராமானுச நூற்றந்தாதி (27) - கொள்ளக் குறைவற்றிலங்கி கொழுந்து விட்டு - என்பதற்கு ஏற்ப, எடுக்க எடுக்கப் பெருகியபடி உள்ளதான.

வ்யாக்யானம் - (செல்வமும்) ஸம்பத்தும். "அளவியன்ற வந்தாதியாயிர" மிறேயிது. (தந்தையும் தாயும்) "மாதாபித்ர் ஸஹஸ்ரேப்யோ வத்ஸல தரம் சாஸ்த்ரம்" என்று ஸகல ஜநோஜ்ஜீவந ப்ரவ்ர்த்தமாயிறே வேதத்வ ஸாமாந்ய விசிஷ்ட வேதம் எல்லாரும் விரும்புவது. அப்படியே "த்ராவிட வேதஸாகரம்" என்றும் இத்தை வேதமாக நிதர்சிக்கையாலே ஸகல ஜநோஜ்ஜீவநைக ப்ரவர்த்தமாகையாலும், "பக்தாம்ர்தம்

விச்வஜநாநுமோதநம்" என்றும், "தொண்டர்க்கமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன்" என்றும் சொல்லுகிறபடியே ப்ரியத்தையே நடத்தக்கடவதாகையாலும், திருவாய்மொழியிலே "வீடுமின் முற்றவும்" என்று தொடங்கி, "கண்ணன் கழலிணை" என்னுமளவும் ஆத்யந்தத்திலே ஹிதத்தையே போதிக்கையலே ஹிதத்தை நடத்தக் கடவதாகையாலும் தாயுந்தந்தையுமா யிருக்கு மென்றபடி.

விளக்கம் - (செல்வமும்) - ஸம்பத்தும். திருவாய்மொழி (1-4-11) - அளவியன்ற அந்தாதி ஆயிரம் - என்பதற்கு ஏற்ப அதிக அளவில் உள்ளது அல்லவோ? (தந்தையும் தாயும்) - மாதாபித்ர் ஸஹஸ்ரேப்யோ வத்ஸல தரம் சாஸ்த்ரம் – [திருவாய்மொழி போன்றே] ஆயிரம் தாய் தந்தைகளுடைய வாத்ஸல்யத்தைக் கொண்டது வேதங்கள் ஆகும் - என்பதற்கு ஏற்ப அனைத்து உயிர்களும் கரையேறுவதற்காக உள்ளது என்பதால் அல்லவோ வேதங்களை அனைவரும் விரும்புகிறார்கள்? அந்த வேதங்கள் போன்று, நாதமுனிகள் அருளிச்செய்த தனியன் - நமாம்யஹம் த்ராவிட வேத ஸாகரம் – தமிழ்வேதமாகிய அமிர்தக்கடலை நான் வணங்குகிறேன் – என்று திருவாய்மொழியை வேதமாகவே காண்பதால் அனைத்து உயிர்களும் கரையேறுவதற்கு முயன்றபடி உள்ளதாலும், நாதமுனிகள் அருளிச்செய்த திருவாய்மொழி தனியன் – பக்தாம்ருதம் – அடியார்களுக்கு அமிர்தமாக - என்றும், திருவாய்மொழி (9-4-9) - தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன்மாலைகள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப ப்ரியத்தை மட்டும் கொண்டபடி உள்ளதாலும், திருவாய்மொழி (1-2-1) – வீடுமின் முற்றவும் - என்று தொடங்கி, திருவாய்மொழி (10-5-1) - கண்ணன் கழலிணை - என்று முடியும்வரை, தொடக்கம் மற்றும் இறுதியில் நன்மையை மட்டுமே உபதேசம் செய்வதால் நன்மையை மட்டும் செய்யவல்லதாக உள்ளதாலும், இந்தத் தமிழ்வேதம் தாயும்தந்தையுமாகவே இருக்கும் என்று கருத்து.

வ்யாக்யானம் - (உயர்குருவும்) "புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந் ... ஸர்வதர்மாம்ச்ச ஸந்த்யஜ்ய" என்று த்யாஜ்யகோடியில் பரிகணிக்கப்பட்ட குருவன்றிக்கே, "அத்ரபரத்ரசாபி" என்கிறபடியே உபயவிபூதியிலும் இச்சேதநனுக்கு உபாதேயதமனாய், பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி அஜ்ஞாத ஜ்ஞாபநம் பண்ணின ஸதாசார்யனும். இவ்வுபகாராதிக்யத்தாலேகாணும் இவன் பரித்யாஜ்யனாகாதே யொழிந்தது. உயர்த்தியை யுடையனானதும், சேதநருடைய அஜ்ஞாநாந்தகாரத்தை

நிவர்த்திப்பித்தவ னாகையாலே (குரு) என்கிறார். "அந்தகார நிரோதித்வாத் குருரித்யபி தீயதே" என்னக்கடவதிறே.

விளக்கம் - (உயர்குருவும்) சரணாகதி கத்யம் – புத்ராந் பந்தூந் ஸகீந் குரூந் ... ஸர்வதர்மாம்ச்ச ஸந்த்யஜ்ய - மக்கள், உறவினர், நண்பர், ஆசாரியர்கள் ... பலன்களை பெற்று தரும் உபாயங்களான எல்லா தர்மங்கள் ஆகிய அனைத்தையும் கைவிட்டு - என்பதற்கு ஏற்ப கைவிடத்தகுந்த வஸ்துகளில் சேர்க்கப்பட்ட குரு போன்று அல்லாமல், ஸ்தோத்ரரத்னம் (2) – அத்ரபத்ர சாபி - எந்த நாதமுனிகளுடைய இரண்டு திருவடிகள் இம்மை மறுமை என்னும் இரண்டு உலகங்களிலும் எப்போதும் என்னைக் காப்பாற்றும் பொருள்களோ - என்பதற்கு ஏற்ப, லீலாவிபூதி மற்றும் நித்யவிபூதி ஆகிய இரண்டிலும் சேதனனுக்கு மிகவும் ஏற்றுக் கொள்ளத்தக்கவனாக உள்ளவனும், இந்த உலகில் நானும் ஒரு பொருள் என்று கூறும்படியாக, அற்பனாகிய என்னை ஒரு பொருளாக்கி எனது அறியாமையை நீக்கிய ஆசார்யனும். இத்தகைய உபகாரங்கள் செய்வதால்தான் இந்த ஆசார்யன் கைவிடத்தகுந்த வஸ்துக்களிலிருந்து விலக்கப்பட்டவர் ஆகிறார். உயர்த்தியை உடையவர் என்பதாலும், அறியாமை என்ற இருளை நீக்கியவர் என்பதாலும், "குரு" என்கிறார். அந்தகார நிரோதித்வாத் *குருரித்யபி* தீயதே – அறியாமை என்னும் இருளை நீக்குவதால் குரு என அறியப்படுகிறார் - என்று கூறியது காண்க.

வ்யாக்யானம் - (வெறிதருபூமகள் நாதனும்) வெறி - பரிமளம். இந்தப் பதம் புஷ்பத்துக்கு விசேஷணமாய், பரிமளமான புஷ்பத்தைப் பிறப்பிடமாக வுடையளான பெரியபிராட்டியாருக்கு, "பூமகளார் தனிக்கேள்வன்" என்கிறபடியே வல்லபனான ஸர்வேச்வரனென்றபடி. அன்றிக்கே (வெறிதரு பூமகள்) வெறி என்கிற பதம் பிராட்டிக்கு விசேஷணமாய், "கந்தத்வாரம்" என்கிறபடியே திவ்யகந்த ப்ரதமான திருமேனியையுடைய பெரியபிராட்டியா ரென்னவுமாம். அன்றிக்கே (வெறிதருபூமகள் நாதனும்) வெறி என்கிற பதம் ஈச்வரனுக்கு விசேஷணமாய், "ஸர்வகந்த:" என்கிறபடியே திவ்ய பரிமள ஸ்வரூபனான ஸ்ரீய:பதி யென்றுஞ் சொல்லவுமாம்.

விளக்கம் - (வெறிதருபூமகள் நாதனும்) வெறி என்றால் பரிமளம். இந்தப் பதம் புஷ்பத்தை விளக்குவதாக உள்ளது என்று கொள்ளலாம். இவ்விதம் கொண்டால், பரிமளம் நிறைந்த

புஷ்பத்தைப் பிறப்பிடமாக உடைய மஹாலக்ஷ்மியின், திருவாய்மொழி (1-9-3) - பூமகளார் தனிக்கேள்வன் - என்பதற்கு ஏற்ப நாயகனான ஸர்வேச்வரன் என்று கருத்து. அல்லது "வெறி" என்ற பதம் மஹாலக்ஷ்மியை விளக்குவதாக உள்ளது என்று கொண்டால், ஸ்ரீஸூக்தம் - கந்தத்வாராம் - என்பதற்கு ஏற்றபடி திவ்யமான நறுமணத்தை எப்போதும் முதன்மையாகக் கொண்ட திருமேனியுடன் கூடிய மஹாலக்ஷ்மி என்று கருத்து. அல்லது "வெறி" என்ற பதம் ஸர்வேச்வரனை விளக்குவதாகக் கொண்டால், ஸர்வகந்த: - என்பதற்கு ஏற்ப திவ்யமான பரிமள ஸ்வரூபம் உள்ள மஹாலக்ஷ்மிநாதன் என்று கருத்து.

வ்யாக்யானம் - இவ்வபிநிவேசமெல்லாம் இவருக்கு எவ்விஷயத்தைப் பற்றவென்றால், (மாறன் விளங்கிய சீர் நெறி தருஞ்செந்தமிழாரணமே யென்று) (மாறன்) நம்மாழ்வாருடைய பிதாவான காரியாலே ஸமர்ப்பிக்கப்பட்ட திருநாமமாய்த்து இது. இப்படிப்பட்ட நம்மாழ்வாருக்கு. (விளங்கிய) ப்ரகாசித்த. ஸர்வேச்வரன் தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே உபயவிபூதி வ்ர்த்தாந்தங்களையெல்லாம் அடைவே யறியலாம்படி. மயர்வற மதிநல மருளப் பெற்ற நம்மாழ்வாருக்கு. "ஏவம் நித்யாத்ம பூகாதாச் சடகோப ப்ரணேஷ்யதி" என்கிறபடியே நித்யாபௌருஷேயமாயிருக்கிறவிது அவர் தம்மாலே யுண்டாக்கப்பட்டதென்று, தோற்றும் - ப்ரகாசித்ததென்றபடி. ஆகையாலேயிறே (விளங்கிய) என்றருளிச்செய்கிறார். (சீர்நெறிதரும்) பகவத் ஸ்வரூப ரூப குண விபூதி ஸ்ரீயையெல்லாம் எல்லாருமறியும்படி ஸாத்மிக்க ஸாத்மிக்க அநுபவிப்பிக்குமதாய். நெறி - ஒழுக்கம், அதாகிறது - ஸாத்மிக்க என்றபடி.

விளக்கம் - இத்தகைய ஈடுபாடுகள் அனைத்தும் இவருக்கு எதனைக் குறித்து என்றால் அதற்கு விடை அளிக்கிறார், (மாறன் விளங்கிய சீர் நெறி தருஞ்செந்தமிழாரணமே யென்று) என்று. (மாறன்) - நம்மாழ்வாருடைய தந்தையாகிய காரியால் சூட்டப்பட்ட திருநாமம். இப்படிப்பட்ட நம்மாழ்வாருக்கு. (விளங்கிய) – ஸர்வேச்வரன் எந்தவிதமான காரணமும் இன்றிப் பொழியும் தனது கருணையால் லீலாவிபூதி மற்றும் நித்யவிபூதி குறித்து முழுமையாக உணர்த்திய மயர்வற மதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வாருக்கு. இராமாயணம் ஸுந்தரகாண்டம் – ஏதத் வ்ரதம் மம – இது என்னால் கைவிட இயலாத ஸங்கல்பம் ஆகும் - என்பதற்கு ஏற்றபடி எப்போதும் உள்ளதாகவும், மனிதர்களால் செய்யப்படாதது என்றும் தோன்றும்படியாக உள்ளதும் ஆகிய இந்தத் தமிழ்வேதம்

நம்மாழ்வாரால் வெளிப்பட்டது. இதனால்தான் "விளங்கிய" என்றார். (சீர்நெறிதரும்) - பகவத் ஸ்வரூப ரூப குண விபூதி என்பதான செல்வங்களை அனைவரும் அறியலாம்படி, முழுவதுமாக அனுபவிக்க அனுபவிக்க மேன்மேலும் அனுபவிக்கும்படிச் செய்கிறதாக.

வ்யாக்யானம் - அன்றிக்கே, (மாறன் விளங்கிய சீர்நெறிதரும்) ஆழ்வார், பகவத் ப்ரஸாதத்தாலே தமக்கு ப்ரகாசித்த பரபக்த்யாதி ஸ்வபாவங்களினுடைய அடைவிலே உபகரித்தருளின வென்று யோஜிக்கவுமாம். அங்ஙனன்றிக்கே, (சீர்நெறிதரும்) "அகஸ்த்யோ பகவாந் ஸாக்ஷாத் தஸ்ய வ்யாகரணம் வ்யதாத் சந்தச் சாஸ்த்ராநுஸாரேண வ்ர்த்தாநாமபி லக்ஷணம் உக்தமந்யைஸ் ததாசார்யை: த்ராமிடஸ்ய மஹாமுநே ஸம்ஸ்க்ர்தஸ்ய யதாஸந்தி பாட்யபந்தஸ்ய ஸர்வத: லக்ஷணா நிததாஸந்தி த்ராமிடஸ்யாபி பூதலே" என்கையாலே எழுத்து, அசை, சீர், பந்தம், அடி, தொடை, நிரை, பா என்று சொல்லப்படுகிற ப்ரபந்த லக்ஷணோபேதமா யிருக்கமென்னவுமாம். (சீர்) என்கிறவிது - எழுத்து அடை தொடக்கமானவற்றுக்கு உபலக்ஷணமாகக் கடவது. நெறி – ஒழுக்கம். அதாவது – ஸ்வபாவமாய், லக்ஷணமென்றபடி. தருகை - உடைத்தாகை.

விளக்கம் - அல்லது, (மாறன் விளங்கிய சீர்நெறிதரும்) என்பதற்கு வேறு விளக்கம் கூறலாம். பகவத் க்ருபை மூலம் தனக்குக் கிட்டியதான பரபக்தி முதலியவற்றின் இயல்புகளை முழுமையாக அனைவருக்கும் நம்மாழ்வார் அருளிச்செய்து உதவி செய்தார். அல்லது, (சீர்நெறிதரும்) - அகஸ்த்யோ பகவாந் ஸாக்ஷாத் தஸ்ய வ்யாகரணம் வ்யதாத் சந்தச் சாஸ்த்ராநுஸாரேண வ்ர்த்தாநாமபி லக்ஷணம் உக்தமந்யைஸ் ததாசார்யை: த்ராமிடஸ்ய மஹாமுநே ஸம்ஸ்க்ர்தஸ்ய யதாஸந்தி பாட்யபந்தஸ்ய ஸர்வத: லக்ஷணா நிததாஸந்தி த்ராமிடஸ்யாபி பூதலே – அகஸ்த்யர் வடமொழியில் உள்ள வ்யாகரணம் என்பதான இலக்கணங்களுக்கு ஒத்தவிதத்திலும், சந்தஸ் முதலான சாஸ்த்ர நுணுக்கங்களை ஒத்தபடியும் த்ராவிடமொழியில் அனைத்து இலக்கணங்களையும் உண்டாக்கினார் - என்பதற்கு ஏற்ப "எழுத்து, அசை, சீர், பந்தம், அடி, தொடை, நிரை, பா என்பதான ப்ரபந்தங்களின் தன்மைகளை வெளிப்படுத்துவதாக உள்ள" என்றும் கூறலாம். (சீர்) – இந்தப் பதம் எழுத்து, அசை, சீர் என்று மேலே கூறப்பட்ட அனைத்திற்கும் உதாரணம் போன்று உள்ளது.

வ்யாக்யானம் - (செந்தமிழாரணமேயென்று) ஆதிமத்யாவஸாநங்களிலே ஏகரூபமாய் த்ரமிடபாஷாரூபமான உபநிஷத்தேயென்று அவதாரணத்தாலே - அந்யயோக வ்யவச்சேதம் பண்ணுகிறது. இது காணும் எம்பெருமானாருடைய ப்ரதிபத்தி. எம்பெருமானார் தமக்கு ஐஸ்வர்யாதி பரதேவதா பர்யந்தமான புருஷார்த்தங்களெல்லாம் திருவாய்மொழியே யன்றி வேறொன்றை அத்யவஸித்திராரென்றபடி. (இந்நீணிலத்தோரறிதர நின்ற) இவ்வர்த்தத்தை விஸ்தீர்ணையான இந்த ப்ர்திவியிலேயுள்ள சேதநர்க்கு அஜ்ஞாத ஜ்ஞாபநம் பண்ணுகைக்கு நின்றருளின.

விளக்கம் - (செந்தமிழாரணமேயென்று) - தொடக்கம், நடு, இறுதி என்று அனைத்து பகுதிகளிலும் ஒரே போன்ற தன்மை கொண்டதாக தமிழில் அமையப்பெற்ற உபநிஷத்தாக திருவாய்மொழி உள்ளது. இங்கு "அரணமே" என்று ஏவகாரம் கூறுவதால் மற்ற அனைத்திற்கும் இந்தத் தகுதி இல்லை என்றார். இதுதான் எம்பெருமானாரின் ஞானம் ஆகிறது. அதாவது எம்பெருமானார் தனக்குரிய செல்வம் தொடங்கி ஸர்வேச்வரன் முடிய உள்ள அனைத்து புருஷார்த்தங்களும் திருவாய்மொழி அல்லாமல் வேறு ஏதும் இல்லை என்றிருந்தார். (இந்நீணிலத்தோரறிதர நின்ற) - இத்தகைய ஆழ்பொருளைப் பரந்து விரிந்துள்ள இந்தப் பூமியில் உள்ள சேதநர்களுக்கு உள்ள அறியாமை விலகும்விதமாக அருளிச்செய்த.

வ்யாக்யானம் - அன்றிக்கே, இவ்வர்த்தத்தை மஹாப்ர்திவியிலுள்ளா ரெல்லாரும் அறியும்படி நின்றருளின வென்னவுமாம். "ஏதத் வ்ரதம் மம" என்கிறபடியே பத்தகங்கணரா யிருக்கிற வென்றபடி. (இராமாநுசன்) எம்பெருமானார். (எனக்காரமுதே) அடியேனுக்கு அபர்யாப்த்தாம்ர்தம்; நிரதிசய போக்யரென்றபடி.

விளக்கம் - அலல்து இந்த ஆழ்பொருளை இந்தப் பரந்த பூமியில் உள்ள அனைவரும் அறியும்படி அருளிச்செய்த. இராமாயணம் ஸுந்தரகாண்டம் – ஏதத் வ்ரதம் மம – இது என்னால் கைவிட இயலாத ஸங்கல்பம் ஆகும் - என்பதற்கு ஏற்றபடி உள்ளவர். (இராமாநுசன்) – யார் இவ்விதம் உள்ளார் என்றால், எம்பெருமானார் என்கிறார். (எனக்காரமுதே) - எனக்கு எல்லையற்ற இனிமையானவர்.

20. ஆரப்பொழில் தென்குருகைப் பிரான் அமுதத் திருவாய்
ஈரத் தமிழின் இசை உணர்ந்தோர்கட்கு இனியவர்தம்
சீரைப் பயின்று உய்யும் சீலம் கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப் பருகும் இராமானுசன் எந்தன் மாநிதியே.

விளக்கவுரை – தாமிரபரணியின் நீர்வளத்தால் உயர்ந்து நிற்கும் சந்தன மரங்கள் சூழ்ந்த சோலையினால் சூழப்பட்டது திருக்குருகூர் என்னும் ஆழ்வார்திருநகரி ஆகும். இத்தகைய திருக்குருகையில் அவதாரம் செய்து, அனைவருக்கும் திருவாய்மொழி அருளி, நாதமுனிகளுக்கு அனைத்தையும் உபதேசம் செய்து, நமது ஸம்ப்ரதாயத்தை வழி நடத்தியவர் நம்மாழ்வார் ஆவார். அத்தகைய நம்மாழ்வாரின் அழகான திருவாயில் பிறந்ததும், னமது ஸம்ஸார தாபம் நீக்கும் ஈரம் உள்ளதும், தமிழ்மொழியில் உள்ள வேதம் போன்றுள்ளதும் திருவாய்மொழியாகும். இப்படிப்பட்ட உயர்ந்த திருவாய்மொழியின் இசையை, அதன் ராகம் போன்றவற்றுடன் அறிந்தவர்களின் குணங்களில் நின்று, அவர்களுடைய திருக்கல்யாண குணங்களை எப்போதும் கூறியபடி உள்ளவர் நாதமுனிகள் ஆவார். இப்படிப்பட்ட நாதமுனிகளை, அவரது குணங்களுடன் அனுபவித்தபடி உள்ளவர் எம்பெருமானார் ஆவார். அப்படிப்பட்ட உடையவர், இந்த உலகில் உள்ள அனைவருக்கும் ஏற்ற செல்வமாக உள்ளபோதிலும், எனக்குக் கிட்டிய பெரியநிதி ஆவார். நவநிதி போன்று ப்ரளயத்தில் அழியக்கூடியது அல்லாமல், எப்போதும் உள்ள மாநிதி ஆவார்.

அவதாரிகை - தர்சநீயமான திருநகரிக்கு நிர்வாஹகரான நம்மாழ்வாருடைய அம்ர்தமய திவ்யஸூக்தி ரூபமாயிருந்துள்ள திருவாய்மொழியை ஸார்த்தமாக அப்யஸிக்க வல்லவர் திறத்திலே அதிப்ரவணரா யிருக்குமவர்களுடைய கல்யாணகுணங்களிலே ஸக்தராய் உஜ்ஜீவிக்கும் ஸ்வபாவத்தையுடையரான ஸ்ரீமந்நாதமுநிகளை தம்முடைய மநஸ்ஸாலே யநுபவிக்கும் எம்பெருமானார் அடியேனுக்கு மஹாநிதியா யிருப்பரென்கிறார்.

விளக்கம் – காண்பதற்கு மிகவும் அழகாக உள்ளதான ஆழ்வார்திருநகரி என்ற நகரத்தின் நிவாஹகரான நம்மாழ்வாருடைய அமிர்தம் போன்றதும், தெய்வீகமானதும் ஆகிய திருவாய்மொழியை அவற்றின் பொருள் உணர்த்து சிலர் கற்கக்கூடும். அப்படிக் கற்பவர்களிடம் ஒரு சிலர் மிகுந்த அன்புடன் இருக்கக்கூடும். அவ்விதம் அன்பு

செலுத்துபவர்களுடைய உயர்ந்த திருக்கல்யாணகுணங்களில் எப்போது நிலைநிற்பது மட்டுமே, தான் பிழைத்திருக்கும் வழி என்று இருந்தவர் ஸ்ரீநாதமுனிகள் ஆவார். அந்த நாதமுனிகளைத் தனது மனதால் எப்போதும் த்யானித்தபடி உள்ள இராமாநுசரே எனக்கு மிகப் பெரிய பொக்கிஷம் ஆவார்.

வ்யாக்யானம் - (ஆரப்பொழில் தென்குருகை) திருத்தாம்ரபர்ணீ தீரமாகையாலும், நீர்வாசியாலும் நித்யாபிவ்ர்த்தங்களான சந்தநச்சோலையாலே சூழப்பட்டு தர்சநீயமான திருக்குருகூர்க்கு. ஆரம் - சந்தநம். (பிரான்) ஸர்வருக்கும் ஸேவ்யமாம்படி உபகாரகர். "குயில் நின்றார் பொழில்சூழ் குருகூர்நம்பி" என்று ஸ்ரீமதுரகவியாழ்வா ரருளிச் செய்தாரிறே. (குருகைப்பிரான்) திருக்குருகையிலே யவதரித்து ஸகல ஜநங்களுக்கும் திருவாய்மொழி முகத்தாலும், நாதமுநிகளுக்கு ஸகலார்த்தங்களையு முபதேசித்து ஸம்ப்ரதாயத்தை நடத்தினபடியாலும் உபகாரக ரென்றபடி. (அமுதத்திருவா யீரத் தமிழின்) இப்படிப்பட்ட நம்மாழ்வாருடைய, "தொண்டர்க்கமுதுண்ணச் சொன்மாலைகள் சொன்னேன்" என்கிறபடியே பரமபோக்யமாய்க் கொண்டு திருப்பவளத்தில் பிறந்ததாய், ஸ்வநிஷ்ட்டரான சேதநருடைய ஸம்ஸார தாபமெல்லாம் ஆறும்படியாக ஈரப்பாட்டை யுடைத்தாய், த்ரமிடபாஷா ரூபமான திருவாய்மொழியினுடைய. (இசை) காநம். ராகாதி லக்ஷணங்களோடே கூடி. (உணர்ந்தோர்கட்கு) அப்யஸித்து பின்னையும் ஆவர்த்தி பண்ணி அதிலே பூர்ண ஜ்ஞாநமுடையவர்களுக்கு. ஸ்ரீமந்மதுரகவிகள், திருமங்கையாழ்வார் முதலானவர்களுக்கென்றபடி.

விளக்கம் - (ஆரப்பொழில் தென்குருகை) - தாமிரபரணி எப்போதும் ஒரு கரையில் உள்ளதாலும், தண்ணீர் எப்போதும் அங்கு வேறுபட்ட சுவையுடன் உள்ளதாலும் என்றும் வளர்ந்தபடி உள்ளதான சந்தன மரங்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பட்டுள்ளதால், காண்பவர்கள் களைப்பை நீக்கும் விதமாக அமைந்துள்ள திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரிக்கு. ஆரம் என்றால் சந்தனம் என்று பொருள். (பிரான்) - அனைவரும் வணங்கி நிற்கும்படியாகப் பல உதவிகள் செய்தவர். கண்ணிநுண் சிறுத்தாம்பு (10) - குயில் நின்றார் பொழில்சூழ் குருகூர்நம்பி - என்று ஸ்வாமி மதுரகவியாழ்வார் அருளிச்செய்தார் அல்லவோ? (குருகைப்பிரான்) - அப்படிப்பட்ட திருக்குருகூரில் அவதரித்து, அனைத்து மக்களுக்கும் திருவாய்மொழி மூலமாகவும், நாதமுனிகளுக்கு அனைத்து ஆழ்பொருள்களையும் உபதேசித்து குருபரம்பரையை வழி நடத்திய காரணத்தாலும்

பெரும் உதவி செய்தவர் என்று கருத்து. (அமுதத்திருவா யீரத் தமிழின்) - இப்படிப்பட்டவரான நம்மாழ்வாருடைய, திருவாய்மொழி (9-4-9) - தொண்டர்க்கு அமுது உண்ணச் சொன்மாலைகள் - என்பதற்கு ஏற்ப மிகவும் இனிமையுடன் திருவாயிலிருந்து வெளிப்பட்டதாகவும், திருவாய்மொழியாகிய தன்னில் எப்போதும் நிலைநிற்கும் சேதநர்களுடைய ஸம்ஸார துக்கங்கள் அனைத்தும் தீரும்படியான தன்மை கொண்டதாகவும், தமிழ்மொழியில் அமையப்பெற்றதும் ஆகிய திருவாய்மொழியின். (இசை) - கானம். ராகம் முதலான இலக்கணங்களுடன் சேர்ந்து. (உணர்ந்தோர்கட்கு) - கற்று, தொடர்ந்து அதிலேயே நிலைநின்று, பின்னர் அதனைக் குறித்து பரிபூர்ணமாக அறிந்தவர்களுக்கு. அதாவது மதுரகவியாழ்வார், திருமங்கையாழ்வார் போன்றவர்களுக்கு என்று கருத்து.

வ்யாக்யானம் - (இனியவர்) அவர்களுக்கு அத்யந்தம் ப்ரியதமராய் ஸ்ரீமந் நாதமுநிகளுக்குக் கண்ணிநுண் சிறுத்தாம்பை உபதேசித்தருளின ஸ்ரீபராங்குசநம்பி. (இனியவர்தம் சீரைப்பயின்று) அவர்களுடைய கல்யாணகுணங்களை ஸர்வகாலமு மநுஸந்தித்து அவர் செய்தருளின உபகாரத்தை விஸ்மரியாதே க்ர்தஜ்ஞராய்க் கொண்டு. பயிலும் - அநுஸந்திக்கை. (உய்யும்) அவ்வளவாக இவருக்கு உஜ்ஜீவநமில்லை, அந்த மதுரகவியாழ்வாருடைய ஸம்ப்ரதாயஸ்த்தரான ஸ்ரீபராங்குசநம்பி உபதேசித்தவநந்தரம் அவர் பக்கலிலே க்ர்தஜ்ஞராய்ப் போந்த பின்பு காணும் இவர் உஜ்ஜீவித்தது. (சீலங்கொள் நாதமுனியை) இப்படி உஜ்ஜீவநமே ஸ்வபாவமாக வுடையரான ஸ்ரீமந்நாதமுனிகளை. ஸ்ரீரங்கநாதருடைய திருநாமத்தை வஹித்து ஆழ்வார் தமக்கு உபதேசித்த வர்த்தங்களை அடைவே ஸர்வதா மநநம் பண்ணிக் கொண்டு எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாதமுநிகளை யென்றபடி.

விளக்கம் – (இனியவர்) - அவர்கள் குறித்து மிகுந்த ப்ரியம் கொண்ட நாதமுனிகளுக்கு, கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற பாசுரத்தை உபதேசித்து அருளிய ஸ்வாமி பராங்குச நம்பி. (இனியவர்தம் சீரைப்பயின்று) - இப்படிப்பட்டவர்களுடைய திருக்கல்யாண குணங்களை எப்போதும் இடைவிடாமல் எண்ணியபடி, அவர்கள் செய்த உபகாரங்களை எப்போதும் மறக்காமல், செய்ந்நன்றி அறிபவராக நின்று. பயிலுதல் என்றால் எப்போதும் எண்ணியபடி என்று பொருள். (உய்யும்) - அந்த அளவுடன் இவர் பிழைக்கும் வழி கிட்டியது என்று நின்று விடவில்லை. மதுரகவியாழ்வாருடைய வழிவந்தவராகிய

பராங்குசநம்பி கண்ணிநுண் சிறுத்தாம்பு என்ற பாசுரத்தை உபதேசித்தருளியதைத் தொடர்ந்து, அவரிடம் செய்ந்நன்றி அறிபவராக நின்ற பின்னரே இவருக்குப் பிழைக்கும் மார்க்கம் கிட்டியது என்று இருந்தார். (சீலம்) – இப்படியாக ஆத்மாவைக் கரையேற்றுவதையே இயல்பாகக் கொண்டவராகிய நாதமுனிகளை. ஸ்ரீரங்கநாத முனிகள் என்று ஸ்ரீரங்கநாதனுடைய திருநாமத்தை ஏற்றுக்கொண்டு, ஆழ்வார் தனக்கு உபதேசித்தருளிய ஆழ்பொருள்கள் அனைத்தையும் எப்போதும் மனனம் செய்தபடி எழுந்தருளியுள்ள நாதமுனிகளை என்று கருத்து.

வ்யாக்யானம் - (நெஞ்சால் வாரிப்பருகும்) ஸமாந காலமானால் காயிகமாகத் தழுவி முழுசிப் பரிமாறி யநுபவிப்பர்காணும். அத்யந்த காலவ்ய வதாநமா யிருக்கையாலே அந்த ஸ்ரீமந்நாதமுநிகளை நெஞ்சாலே யள்ளிக் கொண்டு பிறிகதிர்ப்படாதபடி விக்ரஹ குணங்களோடே கூட வநுபவிக்கிற. பருகுகை - அநுபவிக்கை. (இராமாநுசன்) எம்பெருமானார். (என்றன் மாநிதியே) லோகத்தா ரெல்லாருக்குமாக அவதரித்தாராகிலும் அமுதனாருடைய அத்யவஸாயம் தமக்கேயாக வவதரித்தாரென்றுகாணும். (என்றன் மாநிதி) அடியேனுடைய மஹாநிதி. நவநிதியான தநங்களுக்கும் தைநம்திநய ப்ரளயத்திலும் அழிவுண்டு; அப்படி யன்றிக்கே அவற்றைக் காட்டில் விலக்ஷணமாய் அப்ராக்ர்தமான நிதியென்கிறார். யாவதாத்மபாவியாக உஜ்ஜீவந ஹேதுவாயிருக்கும் நிதியென்றபடி. "அத்ரபாத்ரசாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம்" என்றருளிச் செய்தாரிறே ஆளவந்தாரும்.

விளக்கம் - (நெஞ்சால் வாரிப்பருகும்)- தன்னுடைய காலத்திற்கு ஒத்த காலத்தில் நாதமுனிகள் வாழ்ந்திருந்தால் தனது சரீரம் கொண்டு ஆரத் தழுவி அனுபவித்திருப்பார். ஆனால் தன் காலத்திற்கு முன்பே அவர் சென்று விட்டதால் தனது மனதால் நாதமுனிகளைத் தழுவியபடி அனுபவிக்கின்ற. பருகுதல் என்றால் அனுபவித்தல் என்று பொருள். (இராமாநுசன்) – எம்பெருமானார். (என்றன் மாநிதியே) - எம்பெருமானார் இந்த உலகில் உள்ள அனைவருக்காகவும் அவதரித்தவர் என்றபோதிலும் அமுதனாருடைய ஆழ்ந்த ஈடுபாடு காரணமாகத் தனக்காக மட்டுமே அவதரித்தார் என்கிறார். (என்றன் மாநிதி) - என்னுடைய மிகப்பெரிய பொக்கிஷம். ஒன்பது நிதிகளுக்குக்கூட ப்ரளயகாலத்தில் அழிவு ஏற்படும் [ஒன்பது நிதி = பதும நிதி, மகாபதும நிதி, மகா நிதி, கச்சப நிதி, முகுந்த நிதி, நந்த நிதி, நீல நிதி, கற்ப நிதி மற்றும் சங்க நிதி ஆகும்]; ஆனால்

அவற்றைக் காட்டிலும் மேம்பட்டதான அழிவற்ற பொக்கிஷம் எம்பெருமானாரே ஆவார் என்கிறார். ஆத்மா உள்ளவரை அதனைக் கரையேற்றக் காரணமாக உள்ள பொக்கிஷம். அத்ர – என்றது காண்க. ஸ்தோத்ரரத்னத்தில் ஸ்வாமி ஆளவந்தார் (2) - அத்ரபாத்ரசாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம் - எந்த நாதமுனிகளுடைய திருவடிகளானவை இம்மை மறுமை இரண்டிலும் எப்போதும் என்னைக் காப்பாற்றும் பொருளாக இருக்கின்றனவோ – என்றது காண்க.

21. நிதியைப் பொழியும் முகில் என்று நீசர் தம் வாசல் பற்றித்
துதிகற்று உலகில் துவள்கின்றிலேன் இனி தூய்நெறி சேர்
எதிகட்கு இறைவன் யமுனைத்துறைவன் இணை அடியாம்
கதி பெற்றுடைய இராமானுசன் என்னைக் காத்தனனே.

விளக்கவுரை – தூய்மையான அனுஷ்டானங்களை உடைய பெரியநம்பி, திருமலைநம்பி, திருக்கோட்டியூர் நம்பி, திருவரங்கப்பெருமாள் அரையர், திருமாலையாண்டான், திருக்கச்சி நம்பி, மாறனேரிநம்பி போன்ற யதிகளின் ஸ்வாமியாக உள்ளவர் யார் என்றால் – காட்டுமன்னார்கோயில் எம்பெருமானின் திருநாமத்தை என்றும் பற்றியிருந்த ஆளவந்தார் ஆவார். இவருடைய திருவடிகள் என்னும் உபாயத்தை மட்டுமே பற்றி, அந்தத் திருவடிகள் காரணமாகவே இந்த உலகில் உள்ள ப்ரபன்னர்கள் அனைவருக்கும் ஸ்வாமியாக உள்ளவர் எம்பெருமானார் ஆவார். தன்னை அண்டியவர்களைக் காப்பதில் பெருமை ஏதும் இல்லை, தன்னை எளிதில் அண்டாமல் உள்ளவர்களையும் காத்தருளியவர் எம்பெருமானார் ஆவார். ஆகவே இனி உள்ள காலம் முழுவதும் நமது ஸித்தாந்தத்தைத் தூஷிப்பவர்கள், அஹங்காரம் பற்றியவர்கள் ஆகியோருடைய நரகத்தின் வாயிலை ஒத்த அவர்களின் இருப்பிடத்தை நான் நாடமாட்டேன்; அவர்களை, “மேகம் போன்று நவநிதியைப் பொழிவார்கள்”, என்று வாய்க்கு வந்தபடி துதிக்கமாட்டேன்; ஸம்ஸாரத்தில் உழல வைக்கும் இது போன்ற செயல்களில் இனி நான் ஈடுபடமாட்டேன்.

அவதாரிகை – இவ்வளவும், ஆழ்வார்களுடையவும் ஸ்ரீமந்நாதமுனிகளுடையவும் ஸம்பந்தத்தையிட்டு எம்பெருமானாருடைய வைபவத்தை யருளிச்செய்து கொண்டு வந்து, இதிலே, சரமபர்வநிஷ்ட்டரெல்லார்க்கும் ஸ்வாமியான ஆளவந்தாருடைய திருவடிகளை

உபாயோபேயமாகப் பற்றின எம்பெருமானார் என்னை ரக்ஷித்தருளின பின்பு இனி நீசரான மநுஷ்யரை ஸ்துதித்து க்லேசப்படே னென்கிறார்.

விளக்கம் - இதுவரை ஆழ்வார்கள் மற்றும் ஸ்ரீமந்நாதமுனிகள் ஆகியோருடன் எம்பெருமானாருக்கு உள்ள ஸம்பந்தத்தைக் கூறியபடி எம்பெருமானாரின் வைபவத்தை அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில், கைங்கர்யத்தின் எல்லையான பாகவத கைங்கர்யம் என்பதில் நிலைநிற்பவர்கள் அனைவருக்கும் ஸ்வாமியான ஆளவந்தாருடைய திருவடிகளைத் தனது உபாயமாகவும், உபேயமாகவும் பற்றிய எம்பெருமானார் தன்னைக் காப்பாற்றி அருளிய பின்னர், தாழ்ந்த மனிதர்களைத் துதித்து நான் துன்பம் அடையமாட்டேன் என்கிறார்.

வ்யாக்யானம் - (தூய்நெறிசேர்) "ச்ருதிபத விபரீதம் சுஷ்வேள கல்பம் ச்ருதெள ச ப்ரக்ருதி புருஷ யோக ப்ராபகாம்சோ ந பத்ய:" என்கிறபடியே அபரிசுத்தமாயிருக்கிற உபாயாந்தரங்களுக்கும், "ப்ரபகாந்தர பரித்யாகத்துக்கும் அஜ்ஞாநாசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதான ஹேது" என்றும், "மதிராபிந்துமிச்ரமான சாதகும்பம்ய கும்பகத தீர்த்தஸலிலம்போலே அஹங்காரமிச்ரமானவுபாயாந்தரம்" என்றும் சொல்லப்படுகிற அவத்யங்களொன்றுமின்றிக்கே அத்யந்த பாரதந்த்ர்ய ஸ்வரூபாநுரூபமாய், அதிலும் பந்தமோக்ஷங்க ளிரண்டுக்கும் பொதுவான ஈச்வரனைப் பற்றுகை யன்றிக்கே மோக்ஷைக ஹேதுவான ஸதாசார்யனைப் பற்றி, அதிலும் அஹங்கார கர்ப்பமான தான் பற்றும் பற்றுகை யன்றிக்கே க்ர்பாமாத்ர ப்ரஸந்நாசார்யரான ஆளவந்தார்தம்மாலே பரகதமாக ஸ்வீகரிக்கப்பட்டதாகையாலே அத்யந்த பரிசுத்தமான ஆசார்யாபி மாநத்திலே யொதுங்கி வர்த்திக்கிற. தூய்மை - பரிசுத்தி, நெறி – உபாயம்.

விளக்கம் - ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் (இரண்டாம் அத்யாயம்) - ச்ருதிபத விபரீதம் சுஷ்வேள கல்பம் ச்ருதெள ச ப்ரக்ருதி புருஷ யோக ப்ராபகாம்சோ ந பத்ய: - வேத மார்க்கத்திற்கு மாறாகப் பொருள் உரைக்கும் அனைத்து மதங்களுமே விஷத்திற்குச் சமம் ஆகும். வேதங்களில் கூட, இந்த உலக விஷயங்களை அடையும் பொருட்டும், தனது ஆத்மாவையே அனுபவிக்கும் (கைவல்யம்) பொருட்டும் கூறப்படும் பகுதிகள் அனைத்தும் உயர்ந்தவை அல்ல – என்பதற்கு ஏற்ப தூய்மையற்றதாக உள்ள ப்ரபத்தி அல்லாத மற்ற உபாயங்களுக்கும். இங்கு ஸ்ரீவசனபூஷணத்தின் இரண்டு சூர்ணைகளை அருளிச் செய்கிறார். அவையாவன -

சூர்ணை (115) - ப்ரபகாந்தர பரித்யாகத்துக்கும் அஜ்ஞாநாசக்திகளன்று, ஸ்வரூப விரோதமே ப்ரதான ஹேது - "ப்ராபகாந்தரங்கள்" என்பவை ப்ரபத்தியைத் தவிர உள்ள மற்ற உபாயங்கள் ஆகும். "அஜ்ஞாநாசக்திகளன்று" என்றால் அப்படிப்பட்ட மற்ற உபாயங்கள் எவை என்று அறிந்து கொள்வதற்குத் தேவையான ஞானம் மற்றும் அவற்றை இயற்ற நம்மிடம் ஆற்றல் இல்லை என்பதன் காரணமாகவே அவற்றைக் கைவிடவேண்டும் என்பது அவற்றைக் கைவிடுவதற்கான முக்கியமான காரணங்கள் அல்ல - என்பதாகும். "ஸ்வரூப விரோதமே ப்ரதாநஹேது" என்றால் – அது போன்று மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளுதல் என்பது எமபெருமானுக்கு மட்டுமே நாம் அனைத்துவகையிலும் வசப்பட்டவர்கள் என்பதான நமது ஆத்மஸ்வரூபத்திற்குப் பொருந்தாது என்பதால் கைவிடவேண்டும் என்று கொள்ளவேண்டும்.

சூர்ணை (122) - மதிராபிந்துமிச்ரமான சாதகும்பம்ய கும்பகத தீர்த்தஸலிலம்போலே அஹங்காரமிச்ரமானவுபாயாந்தரம் – "மதிரை" என்றால் – மிகவும் விலக்கப்பட்ட வஸ்து; தனது தொடர்பு சிறிது ஏற்பட்டாலும் கூட, அந்த வஸ்துவையும் தன்னைப் போன்றே மிகவும் விலக்கப்பட்டதாக மாற்றவல்ல வஸ்து என்று பொருள். இதனை அஹங்காரத்திற்கு உவமையாகக் கூறுவதால், அத்தகைய அஹங்காரம் என்பது மிகவும் விலக்கப்படவேண்டிய ஒன்று என்பதும், அந்த அஹங்காரத்துடன் தொடர்புடைய அனைத்தும் விலக்கிவைக்கப்படும் என்பதும் தெளிவாகிறது. "சாதகும்பம்" என்றால் தங்கம் ஆகும். "தந்மயகும்பம்" என்றால் உட்புறம் வேறு உலோகம் ஒன்றினால் செய்யப்பட்டு, மேலே தங்கமுலாம் பூசப்பட்டது போல் அல்லாமல், முழுவதுமாகவே தங்கத்தால் செய்யப்பட்ட குடம் என்று பொருள்; இதன் மூலம் அந்தக் குடத்தின் தூய்மை உணர்த்தப்பட்டது. "தத்கததீர்த்த ஸலிலம்" என்பதன் மூலம் அத்தகைய குடத்தின் உள்ளே வைக்கப்படுகின்ற தண்ணீரின் தூய்மை கூறப்பட்டது. "அதுபோலே அஹங்கார மிச்ரமான உபாயாந்தரம்" என்றால் இங்கு பாத்திரத்தின் தூய்மை மற்றும் அந்தப் பாத்திரத்தில் வைக்கப்பட்ட பொருளின் தூய்மை கூறப்படவேண்டும். ஸ்ரீவிஷ்ணு புராணம் – ஆத்மா ஜ்ஞாநமயோமல: - ஆத்மா ஞானமயமானது, தோஷம் அற்றது - என்று கூறுவதற்கு ஏற்ப இயற்கையாகவே தோஷம் அற்ற தன்மை மற்றும் எம்பெருமான் தவிர மற்ற யாருக்கும் அடிமையற்ற தன்மை ஆகிய இரண்டாலும் மிகவும் தூய்மையாக உள்ளது ஆத்மாவாகும். அத்தகைய ஆத்மாவில் உள்ள எம்பெருமானைக் குறித்த பக்தி என்பதும், ஸர்வேச்வரன் விஷயமாக மட்டுமே உள்ளதால், மிகவும் தூய்மையானது ஆகும். அதில் அஹங்காரம் கலக்காமல் உள்ளபோது எந்தவிதமான குறையும் இல்லை.

மற்ற உபாயங்களுக்கு மேலே உள்ள இரண்டு குறைகள் இல்லாமல் எல்லையற்ற பாரதந்த்ர்ய ஸ்வரூபமாக உள்ளதான. பந்தம் உண்டாக்கவல்லவன், மோக்ஷம் அளிக்கவல்லவன் என்ற இரண்டையும் செய்கின்ற ஸவேச்வரனைப் பற்றிக் கொள்ளாமல், மோக்ஷத்திற்கு மட்டுமே காரணமாக உள்ள தனது ஆசார்யனைப் பற்றிக் கொண்டு; அத்தகைய பற்றுதல் என்பது "நான் சென்று ஆசார்யனை அடைந்தேன்" என்னும் அஹங்காரத்துடன் கூடிய பற்றுதல் அல்லாமல், கருணை காரணமாகக் கடாக்ஷித்த ஆளவந்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தால் எல்லையற்ற தூய்மையான ஆசார்ய விஷயத்தில் எப்போதும் நிலையாக நிற்கின்ற.

வ்யாக்யானம் - (எதிகட்கு) "ஐஹிகம் ஆமுஷ்மிகம் ஸர்வம் குருரஷ்டாக்ஷர ப்ரத:" என்றும், "மாதா பிதா யுவத: தநயா: விபூதி ஸர்வம்" என்றுஞ் சொல்லுகிறபடியே ஸ்வாசார்யரான ஆளவந்தாரே தங்களுக்கு ஐஹிகாமுஷ்மிகங்களெல்லாம் என்று கொண்டு மேக பிந்துக்களை யொழிய மற்றோன்றை விரும்பாத சாதகம் போலே, ததீய விஷயங்களை விரும்பாதபடி தந்தாமுடைய மநஸ்ஸை நியமித்துப் போருகிற பெரியநம்பி, திருமலைநம்பி, திருக்கோட்டியூர்நம்பி, திருவரங்கப்பெருமாளரையர், திருமாலை யாண்டான், திருக்கச்சி நம்பி, மாறனேரிநம்பி முதலானவர்களுக்கு. (இறைவன்) ஸ்வாமியானவர்.

விளக்கம் – (எதிகட்கு) - ஐஹிகம் ஆமுஷ்மிகம் ஸர்வம் குருரஷ்டாக்ஷர ப்ரத: - இம்மை மற்றும் மறுமைப் பயன்கள் அனைத்தும் அஷ்டாக்ஷரத்தை உபதேசித்த ஆசார்யனே ஆவார் - என்றும், ஸ்தோத்ர ரத்னம் (5) - மாதா பிதா யுவத: தநயா: விபூதி ஸர்வம் – தாய், தந்தை, புத்திரர், செல்வம் போன்ற அனைத்தும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப தங்களுடைய ஆசார்யரான ஆளவந்தார் மட்டுமே தங்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் கிட்டவல்ல பலன்கள் அனைத்தும் ஆவார் என்று கொண்டு, மேகங்களிலிருது விழும் மழைத்துளியைத் தவிர மற்ற எதனையும் உட்கொள்ளாத சாதகப்பறவை போன்று, மற்ற எந்த விஷயங்களை விரும்பாமல் தங்களுடைய மனதை நிலைநிறுத்துகின்ற பெரியநம்பி, திருமலைநம்பி, திருக்கோஷ்டியூர்நம்பி, திருவரங்கப் பெருமாளரையர், திருமாலையாண்டான், திருக்கச்சி நம்பி, மாறனேரிநம்பி போன்றவர்களுக்கு (இறைவன்) – ஸ்வாமியாக உள்ளவர்.

வ்யாக்யானம் - (யமுனைத்துறைவன்) யமுநாதீரத்திலே யெழுந்தருளியிருந்த நாதமுநிகளுக்கு உத்தேச்யராய் காட்டுமன்னார்கோயிலிலே யெழுந்தருளி யிருந்த ஸ்வாமிகளுடைய திருநாமத்தை வஹித்த ஆளவந்தாருடைய. (இணையடியாம்) பாவநத்வ போக்யத்வங்களாலே பரஸ்பர ஸத்ர்சமான திருவடிகளாகிற. (கதி பெற்று) உபாயத்தை லபித்து. உபாயோபேயங்களாகப் பற்றியென்றபடி. கதி – கதி. அதாவது - ப்ராப்யமும், ப்ராபகமும். அத்தாலே - லோகத்திலே ப்ரபந்ந ஜநங்களுக்கெல்லாம் ஸ்வாமியாயிருக்கிற. (இராமாநுசன்) எம்பெருமானார். (என்னைக் காத்தனன்) லோகத்திலே ஜ்ஞாநாதிகர்களை ரக்ஷித்தது ஆச்சர்யமாயிராது, ப்ரதிகூலனா யிருக்கிற வென்னை அநுகூலனாக்கி ரக்ஷித்தான்; இதென்ன அகடித கடநா ஸாமர்த்யமென்று வித்தராகிறார். "தூய் நெறிசேர் யதிகட்கிறைவன் யமுனைத்துறைவ னிணையடியாங் கதி பெற்றுடைய" என்கிறது - எம்பெருமானாருக்கு விசேஷணமாகவுமாம்.

விளக்கம் - (யமுனைத்துறைவன்) - யமுனைநதிக்கரையில் எழுந்தருளியிருந்த நாதமுனிகளுக்கு மிகவும் விருப்பமானவராக, காட்டுமன்னார்கோவிலில் எழுந்தருளியுள்ள ஸ்வாமியுடைய திருநாமம் கொண்ட ஆளவந்தாருடைய. (இணையடியாம்) - பாவங்களை போக்கவல்லது, இன்பம் அளிக்கவல்லது ஆகிய தன்மைகள் காரணமாக ஒன்றுக்கொன்று பொருந்தி காட்சி அளிக்கும் திருவடிகள் என்பதான. (கதி பெற்று) - உபாயத்தைப் பெற்று. அவற்றையே உபாயம், உபேயம் என்று அடைந்து. அவையே அடையப்பெறும் இலக்கு, அந்த இலக்கை அடையச் செய்யும் உபாயம் என்று கொண்டு. அதன் காரணமாக இந்த உலகில் உள்ள அனைவருக்கும் ஸ்வாமியாக உள்ள. (இராமநுசன்) - எம்பெருமானார். (என்னைக் காத்தனனே) - இந்த லோகத்தில் ஞானம் நிறைந்தவர்களை எம்பெருமானார் காப்பது ஒரு பெரிய வியப்பு அல்ல; அவரை அண்டி நிற்காமல் நின்ற என்னையும், மிகுந்த ப்ரியமுள்ளவனாக்கிக் காப்பாற்றினார் என்று வியக்கிறார். இது யாராலும் செய்ய இயலாத செயலாகும் என்று வியந்து போகிறார். அல்லது "தூய் நெறிசேர் யதிகட்கிறைவன் யமுனைத்துறைவ னிணையடியாங் கதி பெற்றுடைய" என்று, "ஆளவந்தாரைத் தனது அனைத்துமாகக் கொண்ட" என்று மேலே பெரியநம்பி உள்ளிட்டவர்களுக்குக் கூறப்பட்டவை அனைத்தும் எம்பெருமானாருக்குக் கூறப்பட்டவை என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - (இனி) அவர்க்கு அடியேன் ரக்ஷ்யபூதனாய் விட்டபின்பு. (இனி) மேலுள்ள காலமெல்லாம். (நீசர்தம் வாசல்பற்றி) "யம் கிஞ்சித் புருஷாதமம் கதிபய க்ராமேசம் அல்பார்ததம்" என்கிறபடியே அஹங்கார தூஷிதராய் நிஹீநரா யிருக்கிறவர்களுடைய, "துரீச்வர த்வார பஹிர் விதர்த்திகா துராஸிகாயை ரசிதோய மஞ்ஜலி:" என்கிறபடியே நரக ப்ராயமான வாசலை ஆச்ரயித்து.

விளக்கம் – (இனி) - அப்படிப்பட்ட எம்பெருமானாரால் காக்கப்படுபவன் என்று ஆன பின்னர். (இனி) - இனி வர உள்ள காலங்களில் எல்லாம். (நீசர்தம் வாசல்பற்றி) - முகுந்தமாலா (28) - யம் கிஞ்சித் புருஷாதமம் கதிபய க்ராமேசம் அல்பார்ததம் - யாராவது ஒரு மனிதனையோ, கீழான மனிதரையோ, சில கிராமங்களின் தலைவரையோ, சிறிதே செல்வத்தை அளிப்பவனையோ தேடுகிறோம் - என்பதற்கு ஏற்ப அஹங்காரம் நிறைந்தவர்கள் என்று மற்றவரால் தூஷிக்கப்படுபவரும், தங்களுடைய அஹங்காரத்தால் மற்றவர்களைத் தூஷிப்பவர்களும் ஆகிய தாழ்ந்தவர்களுடைய, வைராக்ய பஞ்சகம் (4) – துரீச்வர த்வார பஹிர் விதர்த்திகா துராஸிகாயை ரசிதோய மஞ்ஜலி: - அற்பமான அரசர்களுடைய அரண்மனையின் வாசலில் உள்ள திண்ணையில் இழிவான முறையில் அமரும் நிலைக்கு இந்தக் கைகூப்புதல் செய்யப்பட்டது - என்பதற்கு ஏற்ப உள்ளதான நரகத்தை அடைய வைக்கும் வீட்டு வாசலை அண்டி.

வ்யாக்யானம் - (நிதியைப் பொழியும் முகிலென்று) லோகத்திலே மேகம் ஜலத்தை வர்ஷிக்குமித்தனை, இந்த தாதாவானால் நவநிதியையும் ஒருக்காலே வர்ஷிக்கும் காளமேகமா யிருந்தா னென்று. (துதி கற்று) "சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவேன் கேண்மினோ, என்னாவில் இன்கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன்" என்கிற "தர்மஜ்ஞ ஸமய"த்தையும் லங்கித்து வாய்வந்தபடியெல்லாம் ஸ்தோத்ரம் பண்ணி. மற்றொருவர் சொன்ன மித்யா ஸ்தோத்ரங்களை அப்யஸித்து முன்னே சொல்லி யென்னுதல். (உலகில்) இப்படியிருந்த "இருள் தருமாஞால"த்திலே. (துவள்கின்றிலேன்) அவர்களுடைய அவஸரம் பார்த்து என்னுடைய ரக்ஷணத்துக்காக க்லேசப்படக் கடவே னல்லேன். துவளுகை – வாடுகை. "குருபாதாம்புஜம் த்யாயேத் குரோர்நாம ஸதாஜபேத் குரோர் வ்ர்த்தாச்ச கதயேத் குரோரந்யம் நபாவயேத்" என்கிறபடியே யிருக்கக் கடவே னென்று கருத்து.

விளக்கம் - (நிதியைப் பொழியும் முகிலென்று) – "இந்த லோகத்தில் நீருண்ட மேகம் மழையைப் பொழிவது போன்று இவர்கள் ஒன்பது நிதிகளையும் பொழியும் காளமேகம் போன்றவர்கள்" என்று துதித்து. (துதி கற்று) - திருவாய்மொழி (3-9-1) - சொன்னால் விரோதமிது ஆகிலும் சொல்லுவேன் கேண்மினோ, என்னாவில் இன்கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன் – என்னும்படியாக, ஆபஸ்தம்ப தர்மசூத்திரம் - தர்மஜ்ஞ ஸமயம் – தர்மத்தை அறிபவர்களுக்கு இடையே உள்ள ஒப்பந்தம் – என்று இருப்பதைத் தள்ளி, வாய்க்கு வந்தபடி துதித்து. அதாவது மற்றவர்கள் அவர்களைக் குறித்து உரைத்து பொய்யான துதிகளை உண்மையானவை என்று நான் கற்றுக் கொண்டு, அவர்களை முன்பு கூறிவந்தேன் என்கிறார். (உலகில்) – இப்படியாக, திருவாய்மொழி (10-6-1) – இருள் தரு மாஞாலம் – என்னும்படியான உலகத்தில். (துவள்கின்றிலேன்) - அவர்களுடைய நேரம் பார்த்து அவர்களை அண்டி நின்று என்னைக் காப்பாற்றவேண்டும் என்று கூறி துன்பம் அடையமாட்டேன். குருபாதாம்புஜம் த்யாயேத் குரோர்நாம ஸதாஜபேத் குரோர் வ்ர்த்தாச்ச கதயேத் குரோரந்யம் நபாவயேத் - எப்போதும் ஆசார்யனுடைய திருவடித் தாமரைகளையே த்யானிக்கவேண்டும்; எப்போதும் ஆசார்யனின் திருநாமத்தையே ஜபிக்கவேண்டும்; எப்போதும் ஆசார்யனுடைய சரிதங்களையே கேட்கவேண்டும்; ஆசார்யனைக் காட்டிலும் வேறு எதிலும் அகலக்கூடாது - என்பதற்கு ஏற்ப இனி நான் இருப்பேன் என்று கருத்து.

22. கார்த்திகையானும் கரிமுகத்தானும் கனலும் முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு மூவுலகும்
பூத்தவனே! என்று போற்றிட வாணன் பிழை பொறுத்த
தீர்த்தனை ஏத்தும் இராமானுசன் எந்தன் சேமவைப்பே.

விளக்கவுரை – ருத்திரனின் புத்திரனாகக் கார்த்திகை நட்சத்திரத்தில் நீரில் பிறந்த ஷண்முகன், யானையின் முகம் கொண்டதால் கஜாநநன் என்ற பெயர் கொண்ட ருத்ர கணபதி, ப்ரளய காலத்தில் இந்த உலகை எரிக்கவல்லதான காலாக்னி போன்ற ஒளி வீசும் மூன்று கண்கள் கொண்டதால் விரூபாக்ஷன் என்ற பெயர் கொண்ட ருத்ரன், துர்க்கை, ஜ்வரதேவதை ஆகிய அனைவரும் பாணாசுர யுத்தத்தில் க்ருஷ்ணனின்

அம்புகளை எதிர் கொள்ள இயலாமல் புறமுதுகு காட்டி ஓடினர். அப்போது அவர்கள் – க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ ஜாநேத்வாம் புருஷோத்தமம் – எனக் கண்ணனையே, "வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றுமாய் தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி அதனுள் கண்வளரும்", என்று கூறுவதற்கு ஏற்றபடி இந்த உலகம் அனைத்தும் உண்டாகக் காரணமாக இருந்த நீரில் ஆலந்தளிரில் பள்ளிகொண்ட ஸர்வேச்வரன் என்று அறிந்தனர். அவர்கள் கண்ணனை, "மூன்று உலகங்களையும் உனது திருநாபிக்கமலம் மூலம் தோன்றிய ப்ரம்மன் வாயிலாகப் படைத்தவனே!", என்று போற்றி நின்றனர். இவர்களுக்காகத் தனது பேரனான அநிருத்தனைச் சிறை எடுத்த பாணாசுரனைப் பொறுத்து அருளினான். ஒருவன் ஒரு தவறு செய்தாலே பல ப்ராயச்சித்தம் செய்ய வேண்டுவது இருக்க, பாணனின் பல பிழைகளை வெறும் ஸ்தோத்ர மாத்ரத்தில் மட்டுமே பொறுத்துக் கொள்ளும் உயர்ந்த திருக்கல்யாண குணங்கள் கொண்ட ஸர்வேச்வரனை, ஸ்ரீபாஷ்யம் கீதாபாஷ்யம் போன்றவை மூலம் அனைத்துக் காலத்திலும், அனைத்து லோகத்திலும் அவனது பராக்ரமங்கள் நிலை நிற்கும்படிச் செய்தவர் எம்பெருமானார் ஆவார். எனது ஆபத்து காலங்களில் உதவுவதற்காகச் சேமித்து வைத்த தனம் இவரே ஆவார்.

அவதாரிகை - பாணனென்கிற மஹாஸுரன் கோர தபஸ்ஸாலே ருத்ரனை வசீகரித்து அவனைத் தன் வாசலிலே வைத்துக் கொண்டிருக்கிற காலத்திலே, அவன் தன் பெண்பிள்ளையான உஷா நிமித்தமாக அநிருத்தாழ்வானை நிரோதிக்க, க்ருஷ்ணன் இவ்வ்ர்த்தாந்தத்தைக் கேட்டு அவன் மேலே படையெடுத்து வர, ருத்ரனும் ஸபரிகரனாய்க் கொண்டு வந்து எதிரிட்டு க்ருஷ்ணனோடே கோரயுத்தம் பண்ணி பலாயிதனான பின்பு தன்னை உள்ளபடி யறிந்து ஸ்தோத்ரம் பண்ணினவாறே, அப்போது ருத்ரன் முதலான தேவஜாதிக்காக பாணனுடைய ஆர்த்த்ராபராதத்தைப் பொறுத்த க்ருஷ்ணனை ஸ்துதிக்கும் எம்பெருமானார் எனக்கு மஹா நிக்ஷேப பூதரென்கிறார்.

விளக்கம் - பாணன் என்னும் ஒரு கொடிய அஸுரன் தனது கோரமான தவம் காரணமாக ருத்ரனை வசிகரித்து, அந்த ருத்ரனைத் தனது ஏவலாள் போன்றே செய்தான். அப்போது அவன் தனது பெண்ணாகிய உஷா என்பவள் காரணமாக க்ருஷ்ணனுடைய திருப்பேரனாகிய அநிருத்தனை விரோதித்துக் கொண்டு, அவனை அடக்கி வைத்தான். இதனை அறிந்த க்ருஷ்ணன், பாணாஸுரன் மீது படை எடுத்து வந்தான். அப்போது

பாணாஸுரன், ருத்ரனின் துணையுடன் பெரும்படை திரட்டி எதிர்த்த அன்று, க்ருஷ்ணனுடன் கோரமான யுத்தம் செய்து தோற்றுப் போனான். அப்போது அவன் க்ருஷ்ணனை உள்ளது உள்ளபடி அறிந்து ஸ்துதித்து நின்றான். அந்த நேரத்தில் அங்கிருந்த ருத்ரன் போன்றவர்களுக்காக பாணாஸுரன் அந்த நொடியில் செய்த அபராதத்தைப் பொறுத்துக் கொண்ட க்ருஷ்ணனை எப்போதும் ஸ்துதிக்கும் எம்பெருமானார், தனக்குச் சரணாகதி அடையத்தக்கவர் என்கிறார்.

வ்யாக்யானம் - (கார்த்திகையானுமித்யாதி) ப்ரஹ்லாதனுடைய பௌத்ரனாய் மஹாபலியுடைய புத்ரனான பாணனென்கிற மஹாஸுரன் கோரமான தபஸ்ஸுக்களாலே ருத்ரனை ப்ரஸந்நனாக்கி வசீகரித்துக்கொண்டு, "நீ என் வாசலிலே யிருந்து ஸகல லோக ஜயத்தையும் பண்ணித் தரவேண்டும்" என்று அர்த்தித்தவாறே ருத்ரனும், "அப்படியே பார்யா புத்ராதி ஸஹிதனாய் வந்து தலையில் பூ வாடாதபடி உன்னைக் காக்கிறேன்", என்று ப்ரதிஜ்ஞை பண்ணி, அவனுடைய வாசலிலே யிருக்கிற காலத்திலே, அவனுடைய கந்யகையான உஷா ரூப லாவண்யாதிகளாலே அப்ரதிமையா யிருக்கையாலே அவளுக்கு க்ரீடார்த்தமாக ஒரு ஸௌதத்தைப் பண்ணிக் கொடுக்க; அவளும் பஹு பரிசாரிகா ஸ்த்ரீகளோடே அந்த ஸௌதத்திலே விஹரியா நின்று கொண்டு தனக்குத் தகுதியானவர்களைத் தேடும் பருவம் வந்தவாறே ஒரு மாயாப் பிறவியான தோழியை யழைத்து, பூலோகத்திலே யிருக்கிற ராஜகுமார ரெல்லாரையும் ஒரு சித்ரபடத்திலே எழுதிக் கொண்டு வரவேண்டுமென்று சொல்ல, அவளும் அப்படியே எழுதிக் கொண்டு அவள் கையிலே கொடுக்க, அவள் எல்லாரையும் பார்த்து அவர்களிலே த்வாரகா நகரவாஸியாய் க்ருஷ்ணனுக்குப் பேரனாய் ப்ரத்யும்நனுடைய குமாரனான அநிருத்தாழ்வானைப் பார்த்து அவனையே வரிக்கவேணுமென்னும் அதிவ்யாமோஹத்தாலே அந்தத் தோழியைப் ப்ரார்த்திக்க, அவளும் அஸுரஜாதியிலே பிறந்த மாயா விநியாகையாலே த்வாரகையிலுள்ளா ரெல்லாரையும் வஞ்சித்து அநிருத்தாழ்வானை யெடுத்துக் கொண்டு வந்து அந்த ஸௌதத்திலே வைக்க, உஷையும் அநிருத்தாழ்வானும் அந்யோந்ய ஸம்வதித்துக் கொண்டு காந்தர்வ விவாஹத்தாலே ஒருவரையொருவர் வரித்து போகபரரா யிருக்க, பாணனும் அச்செய்தி தெரிந்து குடில சித்தனாய் அநிருத்தாழ்வானைப் பிடித்து நிரோதிக்க; இவ்வ்ர்த்தாந்தத்தை க்ருஷ்ணன் கேட்டருளி பாணன் மேலே சீறி ஸபரிகரனாய்ப் படையெடுத்து வர, அவன் வாசலிலே யிருந்த ருத்ரன் எதிரிட்டுத் தோற்று ஸ்துதி பண்ணினானென்று இந்த வ்ர்த்தாந்தங்க

ளெல்லாம் பாகவத ஹரிவம்சாதிகளிலே ப்ரஸித்தமிறே; அந்த கதாமுகேந இப்பாட்டை யருளிச்செய்கிறார்.

விளக்கம் – (கார்த்திகை) – ப்ரஹ்லாதனுடைய பேரனும், மஹாபலியின் புத்திரனும் ஆகியவன் பாணன் என்னும் கொடிய அஸுரன் ஆவான். அவன் தனது கடுமையான தவங்கள் மூலமாக ருத்ரனைத் தன் முன்பாக வரவழைத்தான். ருத்ரனைத் தன்வசப்படுத்திய அவன் ருத்ரனிடம், "நீவிர் எனது அரண்மனை வாசலில் நின்று அனைத்து லோகங்களையும் நான் வெல்லும்படியாகச் செய்யவேண்டும்", என்று வேண்டினான். இதனைக் கேட்ட ருத்ரனும், "அப்படியே ஆகட்டும். நான் எனது மனைவி, புத்திரர்களுடன் கூடியவனாக வந்து தலையில் உள்ள மலர்கள் வாடாதபடி உன்னைக் காப்பாற்றுகிறேன்", என்று உறுதி அளித்து, அவன் அரண்மனை வாசலில் நின்றான். பாணனின் பெண்ணாகிய உஷா என்பவள் மிகவும் அழகான ரூபமும், நல்ல குணமும் கொண்டிருந்தாள். அவளுக்காக பாணாஸுரன் மாடி மீது நல்ல வீட்டை அமைத்துக் கொடுத்திருந்தான். அவள் தனது பல தோழிகளுடன் கூடியவளாக அந்த வீட்டில் விளையாடிக் களித்தாள். ஒரு காலகட்டத்தில், தனக்குரிய கணவனைத் தேடும் நிலை வந்தவுடன் ஒரு தோழியை அழைத்து பூலோகத்தில் உள்ள அரசகுமாரர்களுடைய படங்கள் அனைத்தையும் ஓவியமாகத் தீட்டும்படி பணித்தாள். மாயாஜாலங்களில் வல்லவளாகிய அந்தத் தோழியும் அவ்விதமே செய்து கொடுத்தாள். அவர்கள் அனைவரையும் பார்த்த உஷா, அவர்களில் த்வாரகை நகரத்தில் உள்ளவனும், க்ருஷ்ணனின் பேரனும், ப்ரத்யும்நனின் புத்திரனும் ஆகிய அநிருத்தனைக் கண்டவுடன், அவனையே தனது கணவனாக அடையவேண்டும் என்று தீர்மானித்தாள். அவன் மீது கொண்ட ஆழ்ந்த மயக்கம் காரணமாக, அவ்விதமே செய்யும்படி தனது தோழியை ப்ரார்த்தித்தாள். அஸுரகுலத்தில் பிறந்த காரணத்தால் மாயாஜாலங்களில் வல்லவளாகிய அந்தத் தோழி, த்வாரகையில் உள்ள அனைவரையும் ஏமாற்றி, அநிருத்தனைத் தூக்கி வந்து உஷாவின் வீட்டில் சேர்த்தாள். உஷாவும் அநிருத்தனும் ஒருவருக்கொருவர் மிகுந்த அன்புடனும் ஈடுபாட்டுடனும் மகிழ்ந்தவர்களாக, காந்தர்வ விவாஹம் செய்து கொண்டு இன்பமாக இருந்தனர். அப்போது இந்த விஷயத்தை அறிந்த பாணாஸுரன் மிகுந்த கோபம் கொண்டு அநிருத்தனைப் பிடித்து வைத்தான். இதனை அறிந்த க்ருஷ்ணன், பாணாஸுரன் மீது கோபம் கொண்டு, பெரும்படை எடுத்து வந்தான். பாணாஸுரனின்

வீட்டைக் காவல் காத்து வந்த ருத்ரன், அந்த யுத்தத்தில் தோற்று க்ருஷ்ணனை ஸ்துதித்து நின்றான். இந்த நிகழ்வுகள் அனைத்தும் ஸ்ரீமத்பாகவதம் மற்றும் ஸ்ரீஹரிவம்சம் ஆகியவற்றில் மிகவும் ப்ரஸித்தம் ஆகும். இந்த நிகழ்வுகளை அடியொட்டி இந்தப் பாசுரத்தை அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் - (கார்த்திகையானும்) ருத்ரபுத்ரனாய் க்ர்த்திகா நக்ஷத்ரத்திலே ஜலத்திலே ஜநித்த ஷண்முகனும். (கரிமுகத்தானும்) ருத்ரன் தக்ஷ யாக த்வம்ஸம் பண்ணினபோது அங்கேயிருந்தவர்கள் இவனுடைய சிரஸ்ஸை சேதித்தவாறே தேவஜாதியெல்லாம் திரண்டு வந்து ஒரு ஆனையினுடைய தலையை யறுத்துக் கொண்டு வந்து இவன் கழுத்தின் மேலே சேர்க்க அன்று தொடங்கி கஜாநநனென்று பேரை வஹித்த ருத்ரகணபதியும். (கனலும் முக்கண்மூர்த்தியும்) லோக ஸம்ஹாரம் பண்ணுகிற ஸம்வர்த்த காலாக்நி போலே ப்ரஜ்வலிதமான மூன்று கண்களையுடைய நாமத்தாலே விரூபாக்ஷனென்று பேசப்படுகிற ருத்ரனும். அன்றிக்கே, கனலும் என்று அவர்களுக்கு ஸஹாயமான அக்நியைச் சொல்லவுமாம். (மோடியும்) துர்க்கையும். (வெப்பும்) யுத்த பரிகரமாய் எதிரிப்படைக்கு ஸந்தாபகரமான ஜ்வராதி தேவதையும். இத்தனை ஸாதநங்களுடனே வந்து யுத்தம் பண்ணி க்ர்ஷ்ணனுடைய பாணபாதத்துக்கு ஸஹிக்கமாட்டாதே. (முதுகிட்டு) "முண்டன் நீறன் மக்கள் வெப்பு மோடியங்கியோடிட" என்கிறபடியே விமுகராய்ப் புறங்காட்டியோடி. அப்போது அவனுடைய பரத்வத்தை யறிந்து.

விளக்கம் - (கார்த்திகையானும்) - ருத்ரனின் புத்திரனாக, கார்த்திகை நக்ஷத்திரத்தில் நீரில் ஜனித்த ஷண்முகன். (கரிமுகத்தானும்) - ருத்ரன் ஒருமுறை தக்ஷன் என்பவனுடை யாகத்தை அழித்தான். அப்போது அங்கிருந்த பலரும் ருத்ரனுடைய புத்திரன் தலையை அறுத்தனர். அந்த நேரத்தில் தேவர்கள் பலரும் ஒன்றாகத் திரண்டு ஒரு யானையின் தலையை அறுத்துக் கொண்டு வந்து அவன் கழுத்தில் சேர்த்தனர். அன்று முதல் கஜாநநன் என்று பெயர் பெற்ற ருத்ரகணபதி. (கனலும் முக்கண்மூர்த்தியும்) - உலகையே அழிக்கவல்ல காலாக்னி போன்று ஒளிரும் மூன்று கண்கள் கொண்டுள்ளதால் விரூபாக்ஷன் என்று பெயர் பெற்ற ருத்ரன். அல்லது கனல் என்பதன் மூலம் பாணாஸுரனுக்கு உதவிக்கு வந்த அக்னியைக் கூறுவதாகவும் கொள்ளலாம். (மோடியும்) – துர்க்கையும். (வெப்பும்) - எதிரிப்படைகளை அழிப்பதற்காக வந்த ஜ்வரம் உள்ளிட்ட

தேவதைகள். இத்தனை விதமான துணையுடன் வந்து பாணாஸுரன் யுத்தம் செய்தபோதிலும் க்ருஷ்ணனுடைய பாணங்களைத் தாங்க இயலாமல். (முதுகிட்டு) – திருச்சந்தவிருத்தம் (71) - முண்டன் நீறன் மக்கள் வெப்பு மோடியங்கியோடிட - என்பதற்கு ஏற்ப முகம் காண்பிக்க இயலாமல் புறமுதுகு காண்பித்து ஓடியபோது க்ருஷ்ணனுடைய ஸர்வேச்வரத்தன்மையை உணர்ந்து.

வ்யாக்யானம் - (மூவுலகும் பூத்தவனேயென்று) “க இதி ப்ரஹ்மணோ நாம ஈசோஹம் ஸர்வதேஹிநாம் ஆவாந்தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவ நாமவாந்” என்றும், “ஏதௌ த்வௌ விபுத ச்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸம்ருதௌ ததாதர்சித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ” என்றும், ”வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றுமாய் தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி யதனுட் கண்வளரும்” என்றும் சொல்லுகிறபடியே ஸமஸ்தலோகங்களையும் ஸ்ருஷ்டிக்கைக்காக காரணஜலத்திலே ஒரு பவனான ஆலந்தளிர் மேலே பள்ளிகொண்டு அவனுடைய திருநாபீ கமலத்திலே சதுர்முகன் தொடக்கமான ஸகல ஜகத்துக்களினுடையவும் உத்பத்தி காரணமா யிருப்பதொரு தாமரைப்பூவை விகஸிப்பித்த ஜகத்காரணபூதனானவ னென்று.

விளக்கம் - ஹரிவம்ஸம் (3-131-4) - க இதி ப்ரஹ்மணோ நாம ஈச அஹம் ஸர்வ தேஹிநாம் ஆவாம் தவாங்கே ஸம்பூதௌ தஸ்மாத் கேசவ நாமாவான் – (சிவன் கூறுவது) “க” என்பது நான்முகனுடைய பெயராகும். நான் அனைத்து ப்ராணிகளுக்கும் ஈசன். நாங்கள் இருவரும் உன்னுடைய திருமேனியிலிருந்து தோன்றியவர்கள். ஆகவே உனக்கு கேசவன் என்பது திருநாமம் - என்றும், மஹாபாரதம் சாந்திபர்வம் (350-19) - ஏதௌ த்வௌ விபுத ச்ரேஷ்டௌ ப்ரஸாத க்ரோதஜௌ ஸம்ருதௌ ததாதர்சித பந்தாநௌ ஸ்ருஷ்டி ஸம்ஹார காரகௌ – ஸர்வேச்வரனுடைய மகிழ்வாலும், கோபத்தலும் உண்டானவர்களும், தேவர்களில் உயர்ந்தவர்களும் ஆகிய நான்முகன் மற்றும் சிவன் ஆகிய இருவரும் அவனால் காண்பிக்கப்பட்ட விதத்தில் ஸ்ருஷ்டி மற்றும் ஸம்ஹாரத்தைச் செய்கிறார்கள் – என்றும், திருவாய்மொழி (1-5-4) - வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றுமாய் தானோர் பெருநீர் தன்னுள்ளே தோற்றி அதனுள் கண்வளரும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து லோகங்களையும் ஸ்ருஷ்டிக்க எண்ணியவனாக ப்ரளய நீரில் ஒரு ஆலந்தளிர் மீது பள்ளி கொண்டு, தன்னுடைய நாபிக்கமலத்தில் நான்முகன் தொடக்கமான அனைத்து உயிர்களின் உற்பத்திக்குக் காரணமாக உள்ள தாமரைமலரை மலரச் செய்து ஜகத் காரணமாக உள்ளவன்.

வ்யாக்யானம் - (போற்றிட) தங்களுக்கு மவனுக்குமுண்டான பித்ருபுத்ராதி ஸம்பந்தங்களை ஸுசிப்பியா நின்று கொண்ட ஸ்தோத்ரம் பண்ண. போற்றுதல் - புகழுதல். "க்ருஷ்ண க்ருஷ்ண மஹோபாஹோ ஜாநேத்வாம் புருஷோத்தமம்" என்றானிறே ருத்ரன். "க்ருஷ்ணேதி மங்களம்நாம யஸ்ய வாசி ப்ரவர்த்ததே பஸ்மீபவந்தி ராஜேந்த்ர மஹாபாதக கோடோய:" – (க்ருஷ்ண) தான் தீரக் கழியச் செய்த அபராதத்துக்கு ப்ராயச்சித்தார்த்தமாக திருநாம ஸங்கீர்த்தநம் பண்ணுகிறான் காணும். "ப்ராயச்சித்தாந்ய சேஷாணி தப: கர்மாத்மகாநிவை யாநி தேஷாம் அசேஷாணாம் க்ருஷ்ணாநு ஸ்மரணம் பரம்" என்னக் கடவதிறே. "க்ருஷிர்ப்பூ வாசகச்சப்தோ ணச்ச நிர்வ்ருதி வாசக: தயோரைக்யம் பரப்ரஹ்ம க்ருஷ்ண இத்யபிதீயதே" உபயவிபூத்யாத்மகனாய், "ஜகச்சஸ:" என்று தத்ரூப மஹாப்ருவியானவனே.

விளக்கம் – (போற்றிட) - தங்களுக்கும் க்ருஷ்ணனுக்கும் இடையே உள்ள புத்திரன் முதலான ஸம்பந்தங்களை மறைமுகமாக உணர்த்தியபடி துதித்து நின்ற. ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-33-41) - க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ ஜாநே த்வாம் புருஷோத்தமம் – (சிவன் கூறுவது) க்ருஷ்ணா! உனது தோள்வலிமை கண்ட பின்னர் நீ ஸர்வேச்வரன் என்று அறிந்தேன் - என்று ருத்ரன் உரைத்தான். பாண்டவ கீதை (54) – (வசிஷ்டர் கூறுவது) – க்ருஷ்ணேதி மங்கலம் நாம யஸ்ய வாசி ப்ரவர்த்ததே பஸ்மீ பவந்தி ராஜேந்த்ர மஹாபாதக கோடய: - "க்ருஷ்ணா" என்னும் மங்களகரமான திருநாமத்தை யார் ஒருவன் உச்சரிக்கிறானோ, அந்த நொடியில் அவனுடைய கோடிக்கணக்கான பாவங்கள் எரிந்து சாம்பலாகின்றன – என்றது காண்க. ஆக ருத்ரனும் "க்ருஷ்ண" என்று உச்சரித்து தான் செய்த அபராதத்திற்குப் ப்ராயச்சித்தம் செய்யும்விதமாக க்ருஷ்ணனின் திருநாம ஸங்கீர்த்தனம் செய்தமை காண்க. மேலும் ஸ்ரீவிஷ்ணுபுராணம் (2-6-39) – ப்ராயச்சித்தாந்ய சேஷாணி தப: கர்மாத்மகாநிவை யாநி தேஷாம் அசேஷாணாம் க்ருஷ்ணாநு ஸ்மரணம் பரம் – ப்ராயச்சித்தங்களைத் தவங்கள், தகுந்த கர்மங்கள் போன்ற பலவற்றால் செய்யலாம். ஆனால் அனைத்தையும் விட உயர்ந்தது க்ருஷ்ணனை எண்ணியபடி இருத்தலாகும் - என்பது காண்க. க்ருஷிர்ப்பூ வாசகச் சப்தோ ணச்ச நிர்வ்ருதி வாசக: தயோரைக்யம் பரப்ரஹ்ம க்ருஷ்ண இத்யபிதீயதே – "க்ருஷ்" என்பது பூமி அல்லது லோகங்களைக் குறிக்கும், "ண" என்பது அதன் நிர்வ்ருதியைக் குறிக்கும் -

என்பதற்கு ஏற்ப நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டிற்கும் அந்தராத்மாவாக ஜகச்சஸ: - உனது ரூபமே இந்த உலகம் என்னும்படி உள்ளவனே.

வ்யாக்யானம் – [மஹாபாஹோ] பூர்வகாலத்திலே தேவர்களும் ரிஷிகளும், "அசுத்தாஸ்தே ஸமஸ்தாஸ்து தேவத்யா: கர்மயோநய:" என்றும், "அவித்யாந்தர்கதாஸ் ஸர்வே" என்றும், "ந மே விது: ஸுரகணா: ப்ரபவம் ந மஹர்ஷ்ய:" என்றும் சொல்லப்பட்ட ப்ரக்ருதராகையாலே ஹரிஹரர்க ளிருவருடையவும் பலாபலங்களை யறிவதற்காக விச்வகர்மாவை யழைத்து இரண்டு தநுஸ்ஸுக்களைப் பண்ணச் சொல்ல அவனும் அப்படியே பண்ணிக் கொடுக்க, அவர்கள் அந்த தநுஸ்ஸுக்களை யெடுத்து இருவர் கையிலுங் கொடுத்து யுத்தம் பண்ணவேணுமென்று ப்ரார்த்திக்க, அப்படியே இருவரும் யுத்தம் பண்ணும்போது விஷ்ணுவினுடைய சரவேகத்தை ருத்ரன் ஸஹிக்கமாட்டாதே மிகவும் அவஸந்நனாய் ரஜஸ் தமஸ்ஸுக்கள் அபிபூதமாய் ஸத்வம் தலையெடுத்தவாறே, அப்போது அவரை "ஸர்வஸ்மாத்பரன்" என்றறிந்து ஸ்தோத்ர பண்ணினானென்று ப்ரஸித்தமிறே; அப்படியே இப்போதும் தமோத்ரேகத்தாலே யுத்தம் பண்ணி அவனாலே யடிபட்டு பின்பு ஸத்வம் தலையெடுக்க பூர்வகாலத்திலே அபதாநத்தை ஸ்மரித்து அவனுடைய பாஹுபலத்தை யறிந்தவனாகையாலே "மஹாபாஹோ" என்று ஸம்போதிக்கிறான்.

விளக்கம் - தேவர்களும் ரிஷிகளும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-7-56) – அசுத்தாஸ்தே ஸமஸ்தாஸ்து தேவத்யா: கர்மயோநய: - அனைத்து தேவர்களும் கர்மம் காரணமாக வந்த பிறப்பை உடையதால், அனைவருமே அசுத்தர்கள் - என்றும், அவித்யாந்தர்கதாஸ் ஸர்வே – அனைத்துமே அவித்யையை உள்ளடக்கியது - என்றும், கீதை (10-2) – ந மே விது: ஸுரகணா: ப்ரபவம் ந மஹர்ஷ்ய: - என்னுடைய மேன்மையை தேவர்களும், அஸுரர்களும், மஹரிஷிகளும் அறியமாட்டனர் - என்றும் கூறும்படி இந்த உலகைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் முன்பு ஒருமுறை, ஸ்ரீஹரி மற்றும் சிவன் ஆகிய இருவருடைய பலன் அளிக்கும் திறனை அறிய எண்ணினர். ஆகவே அவர்கள் விச்வகர்மாவை அழைத்து இரண்டு வில்களைச் செய்யும்படி உரைத்தனர். அவனும் அவற்றைச் செய்து கொடுத்தான். அவர்கள் அந்த இரண்டையும் இருவருடைய கைகளிலும் கொடுத்து யுத்தம் செய்யும்படி ப்ரார்த்தித்தனர். இருவரும் யுத்தம் செய்யத் தொடங்கியபோது மஹாவிஷ்ணுவின் அம்புகளுடைய வேகத்தைத் தாங்க இயலாத

ருத்ரன், தன்னுடைய ரஜஸ் மற்றும் தமஸ்ஸுக்கள் மறையப் பெற்று, ஸத்வம் தலையெடுக்க மஹாவிஷ்ணுவை "ஸர்வஸ்மாத்பரன் – அனைத்து ஆத்மாக்களிலும் உயர்ந்த பரமாத்மா" என்று உணர்ந்து துதித்து நின்றான் என்பது ப்ரஸித்தம் ஆகும். அது போன்றே பாணாஸுர யுத்தத்தில் ருத்ரன் தனது தமோ குணம் தலையெடுத்த காரணத்தினால் யுத்தம் செய்து, ஸர்வேச்வரனால் தோற்கடிக்கப்பட்டு, ஸத்வம் தலையெடுத்து நிற்க, முன்பு செய்த தவறுகளை எண்ணி, மஹாவிஷ்ணுவின் புஜபலத்தை அறிந்தவன் என்பதால் – மஹாபாஹோ – என்றான்.

வ்யாக்யானம் – [ஜாநே] இவ்வளவும் தேவரீர் கொடுத்த அதிகாரத்தாலே யுத்தம் பண்ணி அடிபட்ட பின்பு ஸத்வம் தலையெடுத்துத் தெளிந்தேன். "ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞானம்" என்றதிறே. தெளிந்தபடி யெங்ஙனேயென்னில் "த்வாம் புருஷோத்தமம்"; "த்வாம்" வஸுதேவகுமாராய் ஆச்ரிதஸுலபரான தேவரீரை. "புருஷோத்தமம்" – "அதோஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம:", "யோ மாமேவம ஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம்" என்று தேவரீர் அருளிச்செய்தபடியே பரமபுருஷனென்று இப்போது தெளிந்தேனென்று. (போற்றிட) இப்படி குணிநிஷ்ட குணாபிதாநம் பண்ணி ஸ்துதிக்க.

விளக்கம் – (சிவன் தொடர்வது) இதுவரை நீ எனக்கு அளித்த அதிகாரம் காரணமாகவே நான் உன்னுடன் யுத்தம் செய்தேன். உன்னால் தோற்கடிக்கப்பட்ட பின்னர் ஸத்வம் மேலோங்க நான் தெளிந்தேன். கீதை (14-17) - ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞானம் – ஸத்வத்திலிருந்து ஞானம் உண்டாகிறது – என்பது காண்க. தெளிந்தது எப்படி என்றால், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-33-41) - த்வாம் புருஷோத்தமம் – நீயே புருஷர்களில் உயர்ந்தவன் – என்பதால் ஆகும். த்வாம் – வஸுதேவருடைய புத்திரனும், அடியார்களுக்கு எளிதாக அடையலாம்படி உள்ளவனும் ஆகிய உன்னை, கீதை (15-18) – அதோஸ்மி லோகே வேதே ச ப்ரதித: புருஷோத்தம: - (எதனால் நான் ஜீவாத்மாவைக் காட்டிலும் அப்பாற்பட்டவனோ) அந்தக் காரணத்தினால் உலகிலும், வேதங்களிலும் நான் புருஷோத்தமன் எனப்படுகிறேன் – என்றும், கீதை (15-19) – யோ மாமேவம ஸம்மூடோ ஜாநாதி புருஷோத்தமம் – எந்த ஞானி என்னை இவ்விதம் புருஷோத்தமன் என்று அறிகிறானோ - என்றும் நீயே அருளிச்செய்தபடி பரமபுருஷன் என்று தெளிந்தேன்.

(போற்றிட) – இப்படியாக உயர்ந்த திருக்கல்யாண குணங்களை உடையனுடைய குணங்களைப் போற்றித் துதித்து.

வ்யாக்யானம் - (வாணன் பிழை பொறுத்த) இந்த ஸ்தோத்ரத்தாலே ப்ரஸந்நனாய் அநிருத்தாழ்வானை நிரோதித்து மஹாபராதம் பண்ணி நின்ற வாணனுடைய மஹாபராதத்தை க்ஷமித்த. (தீர்த்தனை) ஒருவன் சில அபராதங்களைப் பண்ணினால் அவை அநுபவ ப்ராயச்சித்தங்களாலே போக்கவேணுமிறே; இவன் அப்படியன்றிக்கே ஒருவரை ஸ்தோத்ரமாத்ரத்தாலே அவனுடைய பாபங்களையெல்லாம் பொடி பண்ணின பாவனை. பதித பாவனை. (ஏத்தும்) – இந்த ப்ரபாவத்தையிட்டு ஸ்துதிக்கிற. (ஏத்தும்) என்கிற வர்த்தமாந நிர்த்தேசத்தாலே, ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளாலே ஸர்வகாலத்திலும் லோகத்திலே அவனுடைய ப்ரபாவத்தை ஸ்தாபிக்கிறவரென்றபடி. (இராமாநுசன்) எம்பெருமானார். (என்றன் சேமவைப்பே) எனக்கு யாவதாத்மபாவியாய் உஜ்ஜீவிக்கும்படி சேமித்து வைத்த ஆபத்தந மென்றதாய்த்து. வைப்பு – நிக்ஷேபம்.

விளக்கம் - (வாணன் பிழை பொறுத்த) – இந்தத் துதியால் மகிழ்ந்த காரணத்தால், அநிருத்தனை அடக்கி வைத்து பெரிய தவறு இழைத்த பாணனுடைய தவறுகளைப் பொறுத்துக் கொண்ட. (தீர்த்தன்) - ஒருவன் சில தவறுகளைச் செய்தால் அதற்கான ப்ராயச்சித்த செயல்களை அனுபவித்துச் செய்த பின்னரே அவற்றைப் போக்க இயலும். ஆனால் இங்கு அப்படி அல்லாமல், ஒருவனைத் துதித்த செயல் கொண்டு மட்டுமே தன்னுடைய அனைத்து பாவங்களும் பொடிப்பொடியாகப் போகும்படியான நிலை. (ஏத்தும்) - இப்படிபட்ட பாணாஸுர யுத்தம் என்ற ப்ரபாவத்தை உரைத்து க்ருஷ்ணனைத் துதிக்கின்ற. (ஏத்தும்) – இங்கு “ஏத்தும்” என்பதன் மூலம் “இப்போதும் புகழ்ந்தபடி உள்ள” என்று நிகழ்காலத்தில் கூறப்படுவது காண்க. அதாவது ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம் மூலம் எப்போதும் இந்த லோகத்தில் அவனுடைய ப்ரபாவங்களை ஆழமாக நிலை நிறுத்துகிறார் என்று கருத்து. (இராமாநுசன்) - எம்பெருமானார். (என்றன் சேமவைப்பே) - இந்தச் சரீரத்தில் உயிர் தங்கும் காலம் முடிய நான் பிழைப்பதற்காகச் சேமித்து வைக்கப்பட்ட, ஆபத்து காலத்தில் உதவுகின்ற செல்வம் என்கிறார்.

23. வைப்பாய வான் பொருளென்று நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கும் இராமானுசனை இருநிலத்தில்
ஒப்பாரில்லாத உறுவினையேன் வஞ்ச நெஞ்சில் வைத்து
முப்போதும் வாழ்த்துவன் என்னாம் இது அவன் மொய்புகழ்க்கே?

விளக்கவுரை – ஆபத்துக் காலத்தில் உதவுவதற்காகச் சேர்த்து வைக்கப்பட்ட மிகவும் உயர்ந்த பெருமையுடைய தனம் எம்பெருமானார் ஆவார். வைத்தமாதியாக உள்ள இவரை மிகவும் உயர்ந்த தனம் என்று ஆழ்வான், பின்னர், எம்பார், முதலியாண்டான் போன்றோர் தங்கள் மனதில் வைத்தனர். உயர்ந்த இரத்தினக் கற்களைச் செப்புக் குடத்தில் வைப்பது போன்று இவர்கள் இவ்விதம் தங்கள் மனதில் உடையவரை வைத்தனர். எப்போதும், எக்காலத்திலும் இது போன்றவர்கள் மனதில் நீங்காமல் உள்ளவர் இராமாநுசர் ஆவார். மிகவும் பரந்த இந்தப் பூமியில், பாவம் செய்வதில் என்னைவிட உயர்ந்தவர்கள் தேடினாலும் கிட்டமாட்டனர். இவ்விதம் பாவத்தையே செய்து வரும் நான், வஞ்சகம் நிறைந்த என் மனதில் எம்பெருமானாரை அனைத்துக் காலத்திலும், என் நெஞ்சில் இருக்கும்படி வேண்டுகிறேன். இதனால், “தகாத இடத்தில் எம்பெருமானார் தங்குகிறார்”, என்று அவருடைய பெருமைகளுக்கு என்னால் ஏதேனும் இழுக்கு உண்டாகிவிடுமோ? (என்று அஞ்சுகிறார்)

அவதாரிகை - பூர்வாசார்யர்களெல்லாரும் வைத்தநிதியென்னுமாப் போலே தங்களுக்கு ஆபத்ரக்ஷகமாக வைக்கப்பட்ட அக்ஷய்ய பரமதநமென்று கொண்டு தங்களுடைய திருவுள்ளத்திலே ஸர்வகாலமும் வைக்கும் விஷயமான வெம்பெருமானாரை அதிபாபிஷ்ட்டனான வென்னுடைய மநஸ்ஸிலே வைத்துக் கொண்டு அவருடைய கல்யாணகுணங்களை ஸ்துதிக்கத் தொடங்கினேன். மஹாப்ரபாவமுடைய வவருடைய கல்யாணகுணங்களுக்கு இது என்னாய் விளையுமோவென்று பரிதபிக்கிறார்.

விளக்கம் - பூர்வாசார்யர்கள் அனைவரும் ஒரு பொக்கிஷம் போன்று, தங்களுக்கு ஆபத்து காலத்தில் உதவக்கூடிய விதத்தில் வைக்கப்படுகின்றதும், அள்ள அள்ளக் குறையாத செல்வம் என்றும் கொண்டாடி தங்களுடைய திருவுள்ளத்தில் எப்போதும் எம்பெருமானாரை வைத்தபடி உள்ளனர். இப்படிபட்ட எம்பெருமானாரை, மிகுந்த பாவங்கள் செய்த நானும் எனது மனதில் வைத்தபடி, அவருடைய திருக்கல்யாண

குணங்களைக் குறித்து ஸ்துதிக்கத் தொடங்கினேன். மிகுந்த ப்ரபாவத்துடன் கூடிய அவருடைய திருக்கல்யாண குணங்களுக்கு இதனால் என்ன நேருமோ என்று அஞ்சுகிறார்.

வ்யாக்யானம் - (வைப்பாய வான்பொருளென்று) சேமித்த மஹாதநமென்று. நிக்ஷேபித்து வைத்த பரமதநமென்று. வான் – பெருமை. "விஷ்ணு: சேஷீ ததீய: சுபகுணநிலயோ விக்ரஹ: ஸ்ரீசடாரி: ஸ்ரீமாந் ராமாநுஜார்ய: பதகமலயுகம் பாதி ரமயம் ததீயம்" என்று சொல்லப்படுகிறபடியே பத கமலத்தை, "தநம் மதீயம்" என்றருளிச் செய்கையாலே அப்படிப்பட்ட எம்பெருமானாரை பரமதநமாக நிரூபித்தென்றபடி. "குருரேவ பரம் தநம்" என்னக் கடவதிறே. இப்படி யாவதாத்மபாவி உஜ்ஜீவந ஹேதுவான பரம தநமென்று அத்யவஸித்திருக்கிற.

விளக்கம் - (வைப்பாய வான்பொருளென்று) - சேமித்து வைக்கப்பட்ட உயர்ந்த செல்வம். உறுதியுடன் வைக்கப்பட்ட உயர்ந்த தனம். வான் என்றால் இங்கு பெருமை என்ற பொருள் தருகிறது. *விஷ்ணு: சேஷீ ததீய: சுபகுணநிலயோ விக்ரஹ: ஸ்ரீசடாரி: ஸ்ரீமாந் ராமாநுஜார்ய: பதகமலயுகம் பாதி ரமயம் ததீயம்* – *மஹாவிஷ்ணு அனைவருக்கும் எஜமானன் ஆவான், உயர்ந்த திருக்கல்யாண குணங்களின் இருப்பிடமாகவே உள்ள நம்மாழ்வார் அவனுடைய திருவடிகள் ஆவார், கைங்கர்யச் செல்வம் பொருந்திய இராமானுசர் நம்மாழ்வாருடைய தாமரை போன்ற திருவடிகள் ஆவார்* - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள திருவடித்தாரைகளை, தநம் மதீயம் – என்னுடைய தனம் - என்று கூறுவதால், எம்பெருமானாரை உயர்ந்த தனம் என்று கொண்டாடி. *குருரேவ பரம் தனம்* – *ஆசார்யனே உயர்ந்த செல்வம் ஆவார்* - என்பது காண்க. இவ்விதம் இந்தச் சரீரத்தில் ஆத்மா தங்கியிருக்கும் காலம் முடிய பிழைப்பதற்குக் காரணமாக உள்ள உயர்ந்த தனம் என்று எண்ணியபடி உள்ள.

வ்யாக்யானம் - (நல்லன்பர்) ஜ்ஞாநாதிகராய் அவர் திருவடிகளிலே ப்ரீதியுக்தரானவர்கள். நல்லன்பர் என்கிறவிடத்தில், நம்மை அன்புக்கு விசேஷணமாய் அநந்ய ப்ரயோஜநதயா விலக்ஷணையான பக்தியை யுடையவரென்னவுமாம். அவர்களாகிறார் - ஆழ்வான், பிள்ளான், எம்பார், ஆண்டான், பிள்ளையுறங்காவில்லிதாஸர் முதலானவர்கள்.

(மநத்தகத்தே - வான்பொருளென்று) வானென்று – விபுவாசகமாய், "குருரேவ பரம்ப்ரஹ்ம" என்று சொல்லப்பட்ட மஹாதநமென்று கொண்டு அத்தை வெளிச்செறிப்பாக வைத்தால் ஸாதகமாயிருக்குமென்று அறியாதபடி நிரவயவமான மநஸ்ஸினுள்ளே. (நல்லன்பர் மநத்தகத்தே) "ஸ்தோத்ரரத்னம் இதம் ந்யஸ்தம் ஆசார்ய ஸ்துதி ஸம்புடே" என்று அநர்க்கமான ரத்நம் கிடைத்தால் செப்பிலே வைத்துக் கொண்டிருப்பாரைப்போலே இந்த லோகவிஷணமான மஹாதநத்தைத் தங்களுடைய நெஞ்சினுள்ளே.

விளக்கம் - (நல்லன்பர்) - மிகுந்த ஞானத்துடன் கூடியவர்களாக, எம்பெருமானாருடைய திருவடிகளில் மிகுந்த ப்ரீதியுடன் உள்ளவர்கள். "நல்லன்பர்" என்னும்போது நன்மை என்பதை அன்புக்கு அடைமொழியாக்கி எந்தவிதமான பலனையும் எதிர்பாராத பக்தியை உடையவர்கள் என்றும் கொள்ளலாம். அவர்கள் யார் என்றால் - கூரத்தாவான், திருக்குருகைப்பிரான்பிள்ளான், எம்பார், திருமாலையாண்டான், பிள்ளையுறங்காவில்லி தாஸர் போன்றவர்கள் ஆவர். (மநத்தகத்தே - வான்பொருளென்று) - வான் என்பது எங்கும் வ்யாபித்து இருத்தல் என்ற பொருளைத் தருவதாகவும் கொள்ளலாம். இவ்விதம் கொண்டால், *குருரேவ பரம் ப்ரஹ்ம – ஆசார்யனே உயர்ந்த ப்ரஹ்மமும் ஆவார்* - என்பதற்கு ஏற்ப கூறப்பட்டதும், எங்கும் வ்யாபித்துள்ளதும் ஆகிய ப்ரஹ்மம் போன்ற உயர்ந்த தனம் என்று கொண்டு, அதனை வெளியே அறியாதபடி மனதில் வைத்து. (நல்லன்பர் மநத்தகத்தே) - விலையற்றதான இரத்தினக்கல் ஒன்று கிடைத்தால் அதனைப் பூமிக்கடியில் செப்புக்குடத்தில் வைத்துப் பாதுகாப்பது போன்று, இந்த லோகத்தில் காணப்படும் செல்வங்களில் எல்லாம் மேம்பட்டதான உயர்ந்த செல்வத்தை தங்களுடைய நெஞ்சின் உள்ளே.

வ்யாக்யானம் - (எப்போதும் வைக்கும்) பூத பவிஷ்யத் வர்த்தமாந காலத்திலும் வைக்கும். பூதகாலத்திலே நம்மாழ்வார், "கலியுங்கெடும் கண்டு கொண்மின் பொலிக பொலிக பொலிக" என்று இவரை மங்களாசாஸநம் பண்ணாநிற்கையாலும், ஆளவந்தார், இவருடைய ப்ரபாவத்தைக் கேட்டருளிப் பெருமாள்கோயிலுக் கெழுந்தருளி கரியமாணிக்கப்பெருமாள் ஸந்நிதியிலே இருந்து இவரை மங்களாசாஸநம் பண்ணின ராகையாலும், ஸ்ரீமந்நாதமுனி, ஆழ்வார் ஸம்ப்ரதாயத்தாலே இவருடைய விக்ரஹத்தைப்

பெற்று ஸர்வகாலமும் ஆராதித்துக் கொண்டு போந்தாராகையாலே, (நல்லன்பர் மநத்தகத்தே எப்போதும் வைக்கும்) என்னத் தட்டில்லையிறே.

விளக்கம் – (எப்போதும் வைக்கும்) - கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று காலங்களிலும் வைக்கின்ற. கடந்த காலத்தில் நம்மாழ்வார், எம்பெருமானாரைக் குறித்து திருவாய்மொழி (5-2-1) - கலியுங்கெடும் கண்டு கொண்மின் பொலிக பொலிக பொலிக - என்று புகழ்ந்து உரைத்ததாலும்; இவருடைய ப்ரபாவத்தைக் கேட்ட ஆளவந்தார், காஞ்சீபுரம் வரதராஜப்பெருமாள் ஸந்நிதியில் வந்து இவரைப் புகந்து உரைத்ததாலும்; ஸ்ரீமந்நாதமுனிகள், நம்மாழ்வாரிடமிருந்து இவருடைய விக்ரஹத்தைப் பெற்று அதனை எப்போதும் ஆராதித்தபடி இருந்ததாலும், "நல்லன்பர் மநத்தகத்தே எப்போதும் வைக்கும்" என்று கூறுவதில் எந்தக் குறையும் இல்லை.

வ்யாக்யானம் - (வைக்கும்) சேர்த்து வைக்கும். "ஜங்கம ஸ்ரீ விமாநாநி ஹ்ருதயாதி மநீஷிணாம்" என்னக்கடவதிறே. கிரணங்களாலே தப்தனாய்க் கொண்டு ரவி மண்டலத்திலே வர்த்தித்தும், காடும் மேடுமான பர்வதாக்ரத்திலே ஜடாதாரணம் பண்ணி நின்றும், ஜலதத்வத்திலே ஸர்வதா வஸித்தும் இப்படி ஸாதநாநுஷ்டாநம் பண்ணின ஸர்வேச்வரனுக்கு ஜ்ஞாநிகளுடைய ஹ்ருதயகமலவாஸம் ஸாத்யமென்று ப்ரஸித்தமாகச் சொல்லுகையாலே இது பகவத் பரமானாலும், "யஸ்ய தேவே பராபக்திர் யதா தேவே ததா குரௌ" என்றும், "தேவம் இவ ஆசார்ய உபாஸீத" என்றும், "தேவ வஸ்த்யாத் உபாஸ்ய:" என்றும் சொல்லுகையாலே இருவருக்கும் ஒக்குமிறே. (இராமாநுசனை) எம்பெருமானாரை.

விளக்கம் – (வைக்கும்) - சேர்த்து வைக்கின்ற. லைங்க புராணம் – வைஷ்ணவாநாம் விசேஷோஸ்தி விஷ்ணோராயதநம் மஹத் ஜங்கம ஸ்ரீ விமாநாநி ஹ்ருதயாதி மநீஷிணாம் - ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஒரு தனியான சிறப்பு உண்டு; அது என்னவென்றால் அவர்கள் விஷ்ணுவின் இருப்பிடமாக உள்ளனர்; அவர்களில் சிறந்த ஞானம் கொண்டவர்களின் மனம் என்பது நடமாடும் கோவில்கள் என்றே ஆகின்றன - என்றது காண்க. எப்போதும் தகிக்கும் கிரணங்கள் வெளிப்பட்டபடி உள்ள ஆதித்யமண்டலத்தில் காணப்படுபவனும், காடும் மேடும் நிறைந்ததான மலையின் மேற்புறத்தில் ஜடை மற்றும் மரவுரி தரித்து இராமனாக நின்றவனும், நாராயணனாக எப்போதும் திருப்பாற்கடல் நீரில் வசிப்பவனும்

ஆகிய ஸர்வேச்வரனுக்கு ஞானிகளின் தாமரை போன்ற இதயத்தில் வசிப்பது இயல்பான செயலே என்று கூறுவதால், மனதில் வசிப்பது என்பது ஸர்வேச்வரனுக்கு இயன்ற ஒன்றாகும். ச்வேதாஸ்வதர உபநிஷத் – யஸ்ய தேவே பராபக்திர் யதா தேவே ததா குரௌ – ஸர்வேச்வரனிடம் எவ்விதம் உயர்ந்த பக்தி வைக்கிறோமோ அதே போன்று ஆசார்யனிடமும் வைக்கவேண்டும் – என்றும், *தேவம் இவ ஆசார்ய உபாஸீத* – *தேவனைப் போன்றே ஆசார்யனை உபாஸிக்கவேண்டும்* - என்றும், *தேவ வஸ்த்யாத் உபாஸ்ய:* - *தேவ வஸ்துவைப் போன்றே உபாஸிக்கவேண்டும்* – என்றும் கூறுவதால், இவ்விதம் மற்றவர்கள் மனதில் வசித்தல் என்பது ஸர்வேச்வரனுக்கும் எம்பெருமானாருக்கும் ஒரே போன்று இயலும் என்று கருத்து. (இராமாநுசனை) – எம்பெருமானாரை.

வ்யாக்யானம் - (இரு நிலத்தில்) அதிவிஸ்த்ர்தையான இந்த பூமியிலே. (ஒப்பாரிலாத) என்னைப்போலே பாபிஷ்ட்டனாகிலும் கிடைப்பனோவென்று ஆராய்ந்தால் எனக்குத் துல்யரான பாபிஷ்டர் இந்த லோகத்திலே கிடையாமையாலே ஸத்ர்சரில்லாத. ஒப்பார் – ஸத்ர்சர். (அருவினையேன்) ப்ராயச்சித்தாதிகளாலே நிவர்த்திப்பிக்க வரிதாய், "அவச்யம் அநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம்" என்கிறபடியே அநுபவைகநாச்யமான பாபத்தை பண்ணின நான். "நத்விராணி க்ருதாந்யநேந நிரயைர் நாலம்புந: கல்பிதை: பாபாநாமிதி மத்க்ருதேதததிகாந் கர்த்தும் ப்ரவர்த்ததே த்வயி தேப்யோப்யப்யதிகாநிதாந் யஹம் அபிக்ஷுத்ர: கரோமிக்ஷணாத்" என்றும், "அஹமஸ்ம்யபராத சக்ரவர்த்தி" என்றும், "யாவச்ச யச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்ச தத்தத் அதிகஞ்ச மமாஸ்தி ஸத்யம்" என்றும், "பூர்வை: ஸ்வநைச்யம் அநுஸம்ஹிதம் ஆர்யவர்யைர் மாமேவ வீக்ஷ்ய மஹதாம் ந ததஸ்தி தேஷாம் நைச்யம் த்விதம் சடரிபோ மம ஸத்யமேவ மத்த: பரோ ந மலிநோ யத ஆவிரஸ்தி" என்றும் சொல்லுகிறபடியே அத்யந்தபாபிஷ்ட்டனான வென்னுடைய.

விளக்கம் - (இரு நிலத்தில்) மிகுந்த நிலப்பரப்பு உள்ளதான பரந்த இந்த பூமியில். (ஒப்பாரிலாத) – என்னைப் போன்று பாவங்கள் செய்தவர்கள் இந்தப் பூமியில் வேறு யாரும் கிடைப்பார்களோ என்றால், என்னை ஒத்த பாவம் செய்தவர்கள் இந்த லோகத்தில் கிடைக்காத காரணத்தால் ஒப்பார் இல்லாத. (அருவினையேன்) - எத்தனைப் பிராயச்சித்தம் செய்தாலும் விலக்கிக் கொள்ள இயலாமல் உள்ள, *அவச்யம் அநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம் – அவரவர்கள் செய்த நற்கர்மங்கள் மற்றும் தீய*

கர்மங்களுக்காக பலனை அனுபவித்தே தீரவேண்டும் - என்பதற்கு ஏற்ப அனுபவித்தால் அல்லாமல் கழியாதபடியான பாவங்கள் செய்த நான். நத்விராணி க்ருதாந்யநேந நிரயைர் நாலம்புந: கல்பிதை: பாபாநாமிதி மத்க்ருதேததததிகாந் கர்த்தும் ப்ரவர்த்ததே த்வயி தேப்யோப்யப்யதிகாநிதாந் யஹம் அபிக்ஷுத்ர: கரோமிக்ஷணாத் - என்றும், *தயா சதகம்* (30) - *அஹம் அஸ்மி அபராத சக்ரவர்த்தி – நான் அபராதங்களுக்குச் சக்ரவர்த்தியாக உள்ளேன்* – என்றும், *பராங்குச பஞ்சவிம்சதி* (14) – *யாவச்ச யச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்ச தத்தத் அதிகஞ்ச மமாஸ்தி ஸத்யம் – அனைத்து உயிரினங்களுடைய பாவங்கள் எவை எவை உள்ளனவோ, அவற்றைக் காட்டிலும் எனது பாவங்கள் அதிகமாகவே இருக்கும் என்பது ஸத்யம் ஆகும்* – என்றும், *பராங்குச பஞ்சவிம்சதி* (18) – *பூர்வை: ஸ்வநைச்யம் அநுஸம்ஹிதம் ஆர்யவர்யைர் மாமேவ வீக்ஷ்ய மஹதாம் ந ததஸ்தி தேஷாம் நைச்யம் த்விதம் சடரிபோ மம ஸத்யமேவ மத்த: பரோ ந மலிநோ யத ஆவிரஸ்தி* - என்றும் கூறுவதற்கு ஏற்ப எல்லையற்ற பாவங்கள் நிறைந்தவனாகிய என்னுடைய.

வ்யாக்யானம் - (வஞ்ச நெஞ்சில் வைத்து) நான் அப்படியானாலும் என் மநஸ்ஸு நிர்மலமோ, என்னோட்டை ஸம்பந்தம் பெற்றதாகையாலே எனக்கு முன்னே பாப கர்மங்களிலே ப்ரவர்த்திக்குமாய்த்து. "பந்தாய விஷயா ஸங்கி" என்னும்படியே - பாஹ்ய விஷய ப்ரவணமாய், எல்லாரையும் மோசம் போக்கக்கடவதாய், ஸர்வஜ்ஞரான தேவரீருங்கூட நல்லவனென்று திருவுள்ளத்திலே கொண்டாடும்படியான வஞ்சநத்தை யுடைய மநஸ்ஸிலே வைத்து. "வ்ருத்யா பசுர் நரவபு: த்வஹம் ஈத்ருசோபி ச்ருத்யாதி ஸித்த நிகிலாத்ம குணாச்ரயோயம் இத்யாதரேண க்ருதிநோபி மித: ப்ரவக்தும் அத்யாபி வஞ்சந பரோத்ர யதீந்த்ர வர்த்தே" என்று ஜீயரு மநுஸந்தித்தாரிறே. (முப்போதும் வாழ்த்துவன்) ஸர்வகாலத்திலும். "அறுசமயச் செடியதனையடி யறுத்தான் வாழியே – அழகாரு மெதிராச ரடியிணைகள் வாழியே", "எதிராசன் வாழி யெதிராசன் வாழி" என்று கொண்டு மங்களாசாஸநம் பண்ணினாரிறே ஜீயரும்; ஸக்ர்த்ப்ரஷ்டனுக்கு ப்ராயச்சித்தம் லகுவாயிருக்கும், அப்படியன்றிக்கே இதுவே யாத்ரையாக இந்த அக்ர்த்யத்தைப் பண்ணா நின்றேன்.

விளக்கம் - (வஞ்ச நெஞ்சில் வைத்து) – சரி, நான்தான் இந்த அளவு பாவங்கள் நிறைந்தவன், எனது மனம் பாவங்கள் அற்றதோ என்றால், அதுவும் இல்லை; எனது

ஸம்பந்தம் பெற்றதன் காரணமாக நான் பாவங்களில் ஈடுபடும் முன்பாக எனது மனம் அவற்றில் ஈடுபடுகிறது. *ஸ்ரீவிஷ்ணுபுராணம்* (6-7-28) – *பந்தாய விஷய ஸங்கி – மனமே உலக விஷயங்களுடனான பந்தங்களுக்குக் காரணம்* - என்பதற்கு ஏற்ப தாழ்ந்த விஷயங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டதாகவும், அனைவரையும் மோசம் செய்யவல்லதாகவும், அனைத்து அறிந்தவராகிய எம்பெருமானார் கூட என்னை நல்லவன் என்று தனது திருவுள்ளதில் வைத்துக் கொண்டாடும்படியாக வஞ்சகம் உள்ளதாகவும் இருக்கிற எனது மனதில் வைத்து. யதிராஜ விம்சதியில் (7) - வ்ருத்யா பசுர் நரவபு: த்வஹம் ஈத்ருசோபி ச்ருத்யாதி ஸித்த நிகிலாத்ம குணாச்ரயோயம் இத்யாதரேண க்ருதிநோபி மித: ப்ரவக்தும் அத்யாபி வஞ்சந பரோத்ர யதீந்த்ர வர்த்தே - யதிகளின் நாதனே! எனது உடல் மட்டும் மனித வடிவில் உள்ளது, எனது செயல்கள் அனைத்தும் விலங்குகளின் செயலாகவே உள்ளது. இப்படி உள்ளபோது மற்றவர்களுக்கு நான் என்னை உயர்ந்த குணங்களின் இருப்பிடம், வேதவேதாந்தங்கள் கூறும் வழிப்படி நடப்பவன் என்று போலியாகக் காட்டிக்கொள்கிறேன். நான் அவர்களுக்கு எவ்விதம் தோற்றம் அளிக்கிறோனோ, அந்த தோற்றத்தை விட முற்றிலும் மாறுபட்டவனாகவே உள்ளேன். எனது நிலையானது இத்தனை இகழத் தக்கதாகவும் வருந்தத் தக்கதாகவும் உள்ளது - என்று ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தமை காண்க. (முப்போதும் வாழ்த்துவன்) - அனைத்து காலங்களிலும். ஆர்த்தி ப்ரபந்தம் (31) - அறு சமயச் செடியதனை அடியறுத்தான் வாழியே - வேதங்களுக்கு விரோதமாகப் பேசிய கபிலர், பதஞ்ஜலி போன்ற ஆறு மதங்களையும் செடி போன்று எளிதாக அறுத்த எம்பெருமானார் வாழவேண்டும் – என்று தொடங்கி, அழகாரும் எதிராசர் அடியிணைகள் வாழியே - பரிபூர்ண அழகுடன் உள்ள எம்பெருமானாரின் அழகான திருவடிகள் எப்போதும் வாழவேண்டும் – என்பது முடியவும், ஆர்த்தி ப்ரபந்தம் (1) - எதிராசன் வாழி எதிராசன் வாழி – என்றும் ஸ்வாமி மணவாளமாமுனிகள் புகழ்ந்தார். நல்ல செயல்களைச் செய்தபடி உள்ளவனுக்கு அறியாமல் செய்த பாவங்களுக்கான பிராயச்சித்தம் எளிதாகவே இருக்கும். ஆனால் நான் பாவம் செய்வதையே தொழிலாகக் கொண்டு, செய்யத்தகாதவற்றைச் செய்தபடி இருந்தேன்.

வ்யாக்யானம் - (என்னாமிதுவவன் மொய்புகழ்க்கே) (அவன்) “அநந்த: ப்ரதமம் ரூபம் த்விதீயம் லக்ஷ்மணஸ் ததா பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ (ராமாநுஜ ஸ்ம்ருத:) கச்சித் பவிஷ்யதி” என்று ப்ரஹ்மநாரதீயத்திலும், “சேஷோவா ஸைந்யநாதோவா ஸ்ரீபதிர் வேத்தி ஸாத்விகை: விதர்க்கயாய மஹாப்ராஜ்ஞை: யதிராஜாய மங்களம்”, சமித உதய

சங்கராதி கர்வ: ஸ்வ பலாத் உத்த்ருத யாதவ ப்ரகாச: அவரோபிதவாந் ச்ருதே: அபார்த்தாந் நநு ராம அவரஜ: ஸ ஏஷ பூய:" என்று அபியுக்தராலும் ப்ரதிபாதிக்கப்பட்ட அப்ரதிம ப்ரபாவரான எம்பெருமானாருடைய, (மொய்புகழ்க்கு) அதிச்லாக்யமான ப்ரபாவத்துக்கு. மொய் - அழகு. அன்றிக்கே, அஸங்க்யேயமான ப்ரபாவத்துக் கென்னுதல். (இது என்னாம்) இது என்னாய்விடுமோ. இப்படிப்பட்ட மங்களாசாஸநம் பண்ணுகிறவிது அவருடைய வைபவத்துக்கு என்னாய்த் தலைக்கட்டுமோ வென்றபடி. "நினைந்து நைந்துள் கரைந்துருகி, இமையோர் பலரும் முனிவரும், புனைந்த கண்ணி நீர்சாந்தம் புகையோ டேந்தி வணங்கினால், நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்தாய், முதலில் சிதையாமே, மனஞ்செய் ஞானத்துன் பெருமை மாசூணாதோ மாயோனே" என்றாப்போலே தலைக்கட்டுகையாலே எத்தனை ஸாஹஸம் பண்ணுகிறேனென்று அநுதபிக்கிறார். "திக சுசி மவி நீதம் நிர்த்தயம் மாமலஜ்ஜம் பரமபுருஷ யோஹம் யோகி வர்யாக்ர கண்யை: விதிசிவ ஸநகாத்யைர் த்யாது மத்யந்ததூரம் தவ பரிஜன பாவம் காமயே காமவ்ருத்த:" என்று ஆளவந்தாரும் இப்படியே அநுஸந்தித்தருளினாரிறே.

விளக்கம் – (என்னாமிதுவவன் மொய்புகழ்க்கே) (அவன்) - அநந்த: ப்ரதமம் ரூபம் த்விதீயம் லக்ஷ்மணஸ் ததா பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ (ராமாநுஜ ஸ்ம்ருத:) கச்சித் பவிஷ்யதி – ஆதிசேஷனே முதல் ரூபம், லக்ஷ்மணன் இரண்டாவது ரூபம், பலராமன் மூன்றாவது ரூபம், கலிகாலத்தில் ராமானுஜ ரூபம் - என்று ப்ரஹ்ம நாரதீயத்திலும், சேஷோவா ஸைந்யநாதோவா ஸ்ரீபதிர் வேத்தி ஸாத்விகை: விதர்க்கயாய மஹாப்ராஜ்ஞை: யதிராஜாய மங்களம் - என்றும், யதிராஜ ஸப்ததி (13) - சமித உதய சங்கராதி கர்வ: ஸ்வ பலாத் உத்த்ருத யாதவ ப்ரகாச: அவரோபிதவாந் ச்ருதே: அபார்த்தாந் நநு ராம அவரஜ: ஸ ஏஷ பூய: - பாணசுர யுத்தத்தின்போது சிவபெருமானைக் கண்ணன் வென்றான் (இது போன்று அத்வைதிகளின் வாதங்களை இராமாநுசர் வென்றார்). யாதவர்களின் பெருமையை க்ருஷ்ணன் மேம்படுத்தினான் (யாதவப்ரகாசரை நல்வழிப்படுத்தி அவருக்கு பெருமை அளித்தார் இராமாநுசர்). அர்ஜுனன் தேர் முன்பு நின்று, அவனது எதிரிகளைக் க்ருஷ்ணன் வென்றான் (வேதத்தின் முன்பாக நின்று இராமாநுசர், வேதங்கள் கூறுவதை மறுப்பவர்களை வென்றார்). பலராமனின் தம்பியாகிய இராமாநுசன் என்ற க்ருஷ்ணன் மீண்டும் இராமாநுசராக அவதரித்தானோ? - என்றும் சான்றோர்களால் போற்றப்படும் எம்பெருமானாருடைய. (மொய்ப்புகழ்க்கே) - மிகவும் போற்றத்தக்கதான ப்ரபாவத்துக்கு. மொய் என்றால் அழகு. அல்லது அளவற்றதான ப்ரபாவத்துக்கு. (இது என்னாம்) - இவ்விதம் நான் அவரை எனது

தாழ்ந்த மனதில் வைப்பதால் அவருடைய ப்ரபாவத்துக்கு என்ன விளையுமோ? இவ்வித அவரை நான் புகழ்வது அவருடைய வைபவத்துக்கு எவ்விதம் முடியுமோ? திருவாய்மொழி (1-5-2) - நினைந்து நைந்துள் கரைந்துருகி, இமையோர் பலரும் முனிவரும், புனைந்த கண்ணி நீர்சாந்தம் புகையோ டேந்தி வணங்கினால், நினைந்த எல்லாப் பொருள்கட்கும் வித்தாய், முதலில் சிதையாமே, மனஞ்செய் ஞானத்துன் பெருமை மாசூணாதோ மாயோனே - வியக்கவைக்கின்ற பல குணங்கள் மற்றும் செயல்கள் கொண்டவனே! நான்முகன் உள்ளிட்ட தேவர்களும், ஸநகர் உள்ளிட்ட மஹரிஷிகளும் உன்னுடைய குணங்களைத் தங்கள் உள்ளத்தில் நினைந்து, அதனால் சரீரம் நிலைகுலைந்து மனம் நிலைதடுமாறி, தண்ணீர்ப்பண்டம் போன்று உருகுகின்றனர்; இத்தகைய ப்ரேமை மாற்றங்களுடன் தொடுக்கப்பட்ட மாலைகள், நீர், சந்தனம், அகிற்புகை போன்ற பலவற்றையும் ஏந்தி வருகின்றனர். இவ்விதம் இவர்கள் செய்தால் நிகழ்வது என்ன? இவர்களது இந்தச் செயல்கள் மூலம் கண்ணால் காண்பது மட்டும் அல்லாமல், மனதால் எண்ணப்படுகின்ற வஸ்துக்களுக்கும் காரணமாக உள்ளவனும், சற்றும் மாறுதல் அடையாமல் உள்ளவனும், மனதால் எண்ணப்படும் ஸங்கல்ப வடிவமாகவே உள்ள ஞானம் கொண்டவனும் ஆகிய உனது மேன்மைகள் தாழ்ச்சி அடையாதோ? - என்பதற்கு ஏற்ப எம்பெருமானாருடைய வைபவத்தை புகழ்வது என்பதன் மூலம் எத்தகைய துணிச்சலான செயலைச் செய்கிறேன் என்று கழிவிரக்கம் கொள்கிறார். ஸ்தோத்ரரத்னத்தில் (47) - திக சுசி மவி நீதம் நிர்த்தயம் மாமலஜ்ஜம் பரமபுருஷ யோஹம் யோகி வர்யாக்ர கண்யை: விதிசிவ ஸநகாத்யைர் த்யாது மத்யந்ததூரம் தவ பரிஜன பாவம் காமயே காமவ்ருத்த: - மனம் போன போக்கெல்லாம் செல்லும் குற்றங்கள் உடையவனாக, வெட்கம் அற்றவனாக, தயை போன்ற ஏதும் இல்லாதவனாக உள்ள நான், அன்னத்தை வாகனமாகக் கொண்ட நான்முகன் சிவன் ஸநகர் போன்ற யோகிகளுக்கும் கூட தூரமாக உள்ள உனது திருவடிக்குக் கைங்கர்யம் செய்ய முயலும் என்னை, அதற்கான தகுதி சிறிதும் இல்லாதவன் என்றே கூறுவேன் - என்று ஸ்வாமி ஆளவந்தாரும் இவ்விதமே செய்தார் அல்லவோ?

24. மொய்த்த வெந்தீவினையால் பல்லுடல் தொறும் மூத்து அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாள்கள் எல்லாம் இன்று கண்டு உயர்ந்தேன்
பொய்த்தவம் போற்றும் புலைச் சமயங்களில் நிலத்தவியக்
கைத்த மெய்ஞ்ஞானத்து இராமானுசன் என்னும் கார் தன்னையே.

விளக்கவுரை – தண்டகாரண்யத்தில் இராமனை கரன் போன்ற பதினான்காயிரம் அசுரர்கள் சூழ்ந்து நின்றது போன்று, பலஆண்டுகளாக என்னால் இயற்றப்பட்ட பாவங்கள் அனைத்தும், எனது ஆத்மாவைச் சூழ்ந்தபடி உள்ளன. இந்தப் பாவங்கள் அனைத்தும் மிகவும் கொடுமையான தீயவினை காரணமாக தேவர்கள், மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் போன்ற பல விதமான உருவங்கள் எடுத்து; அந்தச் சரீரங்களில் மேலும் பாவங்கள் செய்து; கிழட்டுத்தன்மை ஏற்பட மடிந்து போனேன். இது போன்ற பிறப்பு- இறப்பு சுழற்சி எத்தனை காலமாக உள்ளது என்றால், பல காலமாகத் தொடங்கி இன்றளவும் உள்ளது. இப்போது நடந்தது என்ன? சாஸ்திரங்களுக்கு மீறிய தவம், இராவணன் போன்று போலியான ஸந்ந்யாஸம் போன்றவற்றை ஆதரிக்கும் சைவம், மாயாவாதம், காணாபத்யம், பௌத்தம் போன்ற சமயங்கள் அனைத்தும் எரிந்து பஸ்மம் ஆயின. எப்படி என்றால் – எம்பெருமானார் அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், வேதார்த்த ஸங்க்ரஹம் போன்றவை மூலம் தீயில் இட்ட பிணம் போல் ஆயின. இப்படிப்பட்ட மெய்ஞானம் உள்ள எம்பெருமானார் – காகாசுரன் என்ற அசுரனுக்கு இராமன் உதவியது போன்றும், தானாகவே வந்து மழை பொழியும் மேகம் போன்றும் எனக்குத் தன்னைக் காட்டிக் கொண்டார். இதனால் நான் உயர்ந்துவிட்டேன்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே மஹாப்ரபாவரான எம்பெருமானாரை என்னுடைய வஞ்சகமான மநஸ்ஸிலே வைத்து ஸ்துதியாநின்றே னென்று நிர்வேதப்பட்டார்; இப்பாட்டிலே இப்படிப்பட்ட வுமக்கு ஸ்தோத்ரம் பண்ணுகைக்குத்தான் அதிகாரமுண்டோவென்ன; தேன்கூண்டை ஈ மொய்த்துக் கிடக்குமாப்போலே ஆத்மாவைச் சுற்றிக் கொண்டிருக்கிற கோரமான பாபகர்மங்களாலே அநாதி காலந் தொடங்கி நாநாவித தேஹபரிக்ரஹம் பண்ணி கர்ப்பஜந்மாத்யவஸ்த்தா ஸப்த்தகத்தாலே இவ்வளவும் நசித்துப் போந்தேன், சாஸ்த்ர விஹிதமான தபஸ்ஸுக்களைப் பண்ணும் நீச ஸமய நிஷ்ட்டரெல்லாம் பக்நராம்படி ஸ்ரீபாஷ்யாதிகளைப் பண்ணும் யதார்த்த ஜ்ஞாநத்தை யுடையரான எம்பெருமானார் என்னுடைய காளமேகமானார், அவரைக் கண்டு உத்க்ருஷ்டனானேன், ஆகையாலே ஸ்தோத்ரம் பண்ணுகிறே னென்கிறார்.

விளக்கம் - “மிகுந்த ப்ரபாவம் நிறைந்தவராகிய எம்பெருமானாரை என்னுடைய வஞ்சகம் நிறைந்த மனதில் வைத்துத் துதித்தேன்” என்று கடந்த பாசுரத்தில் துயரத்துடன்

உரைத்தார். இதனைக் கேட்ட சில இவரிடம், "இவ்விதம் எம்பெருமானாரைத் துதிக்க உமக்குத் தகுதி உள்ளதோ?", என்று கேட்க விடை அருளிச்செய்கிறார். "தேன் கூட்டை எல்லையற்ற தேனீக்கள் இடைவிடாமல் மொய்த்தபடி உள்ளது போன்று ஆத்மாவை எல்லையற்ற காலமாக மிகவும் கொடிய பாவங்கள் சுற்றியபடியே உள்ளன. அதன் காரணமாக ஏற்றுக் கொள்ளத்தக்கதான பலவிதமான சரீரங்களை எடுத்து, கர்ப்பத்தில் சேர்ந்து, ஜன்மங்கள் எடுத்து துடித்தபடியே உள்ளேன். சாஸ்த்ரங்களுக்குப் புறம்பான தவங்கள் பல இயற்றியபடி உள்ள தாழ்ந்த சமயங்களைச் சேர்ந்தவர்கள் திருந்தும்படியாக ஸ்ரீபாஷ்யம் போன்ற பல க்ரந்தங்களை அருளிச்செய்தவரும், உண்மையான ஞானம் கொண்டவரும் ஆகிய எம்பெருமானார் என்னைப் பிழைக்க வைக்கும் காளமேகம் ஆனார். அவரைக் கண்டவுடன் நான் உயர்ந்தேன். ஆகவே அவரைத் துதிக்கிறேன்", என்கிறார்.

வ்யாக்யானம் - (மொய்த்த) அநாதிகாலமே தொடங்கி என்னாலே பண்ணப்பட்ட பாபங்களெல்லாம் என்னாத்மாவை மொய்த்துக் கிடக்குமே. மொய்த்தல் – திரளுதல். தண்டகாரண்யத்திலே சக்ரவர்த்தித்திருமகளை கரதூஷணாதி பதினாலாயிரம் ராக்ஷஸர்கள் மொசிந்தாப்போலே கானும் இவரை மொசிந்தபடி. "ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ" என்று க்லேசிக்கும்படி சூழ்ந்து கொண்டிருக்கிற. (வெம்) அநுகூலமாகவும் அநுபயமாகவும் மொசிந்தால் ஒருபடி ஸஹிக்கலாம், அப்படியன்றிக்கே அதிக்ருரமான. (தீவினையால்) புண்யபாபங்களிரண்டுமன்று நான் செய்தது, எல்லாம் பாபமேயாய்த்து. அன்றிக்கே, சிறிது புண்யங்களுண்டானாலும் அதுவும் ப்ராப்தி ப்ரதிபந்தகமாய்த் தலைக்கட்டுகையாலே இவரபிப்ராயத்தாலே தீவினையாமிறே. "அதபாதக பீதஸ்த்வம்" என்று புண்யங்களெல்லாம் பாதக சப்தத்தாலே சொல்லப்பட்டதிறே. ஸ்ரீவிஷ்ணுதர்மத்திலும் அப்படியே, "அநக:" என்கிற ஸ்ரீராமாயண ச்லோக பதத்துக்கு ததீயபர்ந்தமன்றிக்கே யிருக்கிற ராமபக்தியும் அகமென்னுமத்தை ஈட்டுக்காரரு மருளிச்செய்தாரிறே.

விளக்கம் - (மொய்த்த) எல்லையற்ற காலமாக நான் செய்து வரும் பலவிதமான பாவங்கள் எனது ஆத்மாவை மொய்த்தபடியே இருக்கும். மொய்த்தல் என்றால் திரண்டு சுற்றி வளைத்தல் என்று பொருள். தண்டகாரண்ய வனத்தில் இராமனைக் கரன், தூஷணன் போன்ற பதினான்காயிரம் ராக்ஷஸர்கள் பரவி நின்றது போன்று இவரையும் பாவங்கள்

பரவி நின்றன. திருவாய்மொழி (6-9-9) - *ஆவி திகைக்க* ஐவர் குமைக்கும் சிற்றின்பம் பாவியேனைப் பல நீ காட்டிப் படுப்பாயோ - என்று துயரம் கொள்ளும்படியாக பாவங்கள் சூழ்ந்து நின்றன. (வெம்) - நன்மை அளிக்கவல்லதாகவும் அல்லது நன்மை மற்றும் தீமை ஆகிய இரண்டையும் அளிக்கவல்லதாகவும் இருந்து சூழ்ந்து கொண்டால் சமாளிக்க இயலும். ஆனால் அப்படி இல்லாமல் மிகவும் க்ரூரமான. (தீவினையால்) - புண்ணியம் பாவம் என்று இரண்டையும் சேர்த்து நான் செய்யவில்லை; அனைத்துமே பாவங்கள் மட்டுமே ஆகும். சிறிதளவு புண்ணியங்கள் இருந்தாலும், அவையும் அடையவேண்டிய இலக்கான மோக்ஷம் என்பதற்குத் தடையாகவே உள்ளதால், இவர் அந்தப் புண்ணியங்களையும் தீவினை என்றே கருதுகிறார். ஸ்ரீவிஷ்ணுதர்மம் (77-72) – அதபாதக பீதஸ்த்வம் – நீ பாவங்களுக்குப் பயந்தால் - என்பதற்கு ஏற்ப புண்ணியங்கள் கூட “பாதகம்” என்ற பதத்தால் கூறப்பட்டது அல்லவோ? இங்கு இராமாயண ச்லோகம் ஒன்றை மேற்கொள் காண்பிக்கிறார். இராமாயணம் அயோத்யாகாண்டம் (1-1) - கச்சதா மாதுலகுலம் பரதேந ததா அநக: சத்ருக்நோ நித்யசத்ருக்நோ நீத: ப்ரீதி புரஸ்க்ருத - பாவங்கள் அற்றவனும், எப்போதும் எதிரிகளாக உள்ள இந்த்ரியங்களை வென்றவனும், எதிரிகளை வீழ்த்துபவனாகையால் சத்ருக்நன் என்று பெயர் சூட்டப்பட்டவனும் ஆகிய அவன், பரதன் மீது கொண்ட அன்பினால் தூண்டப்பட்டு, பரதனால் மாமன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டான் - என்ற ச்லோகம் காண்க. இந்த ச்லோகத்தில் அநக: - அகம் இல்லாதது - என்றுள்ளது காண்க. இங்கு “அகம்” என்பது இராமபக்தி ஆகும். இந்தப் பாவம் அற்றவன் என்று ச்லோகம் கூறுகிறது; இராமபக்தியை எவ்விதம் பாவம் எனலாம் என்றால், சத்ருக்நனுக்கு தான் விரும்பும் பரதனுக்குச் செய்யும் கைங்கர்யம் என்பதற்கு இராமபத்தி விரோதமாக உள்ளதால் அவனுக்கு இது பாவம் ஆகிறது. ஆக பரதனுக்குச் செய்யும் பாகவத கைங்கர்யத்துக்கு இராமனுடைய அழகு தடையாக உள்ளதால், அந்த இராமபக்தி இங்கு பாவம் எனப்பட்டது. இந்த உதாரணத்தை திருவாய்மொழி (3-7) ஈடு வ்யாக்யானத்தில் காணலாம்.

வ்யாக்யானம் - (மொய்த்த வெந்தீவினையால்) ராவணபவநத்திலே பிராட்டியைச் சுற்றிலும் வளைத்துக் கொண்டு, “தஹ, பச” என்று கோர பாஷணங்களைப் பண்ணும் ஏகாக்ஷி ஏககர்ணி முதலான ராக்ஷஸ ஸ்த்ரீகள் போலே சூழ்ந்து கொண்டு தபந ஹேதுக்களான என்னுடைய பாபங்களாலே தப்தனான வென்றபடி. (பல்லுடல் தொறும்) தேவ திர்யங் மநுஷ்ய ஸ்த்தாவர ரூபமான நாநாவித சரீரங்கள் தோறும். சரீர

ஸம்பந்தமடியாகவிறே பாபங்களைப் பண்ணுவது. (மூத்து) அவ்வவ சரீரங்களிலே ஜராவதியாக வஸித்து. இது கர்ப்பவாஸ ஜந்மாதிகளுக்கும் உபலக்ஷணம். "வேதநூல் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவரேலும் பாதியும் உறங்கிப் போகும் நின்றுஅதில் பதினை யாண்டு பேதை பாலகன் அதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்" என்று மயர்வற மதிநல மருளப் பெற்றவரும் அருளிச்செய்தாரிறே. "கர்ப்ப ஜந்மாத்ய வஸ்த்தாஸு துக்கம் அத்யந்ததுஸ் ஸஹம், ந கிஞ்சித் கணந் நித்யம் சராமீந்த்ரிய கோசர:; ஏவம் விஷய த்ர்ஷ்ணாய வசகஸ்ய ஜராமம, தத் போக கரணாநாஞ்ச சைதில்யம் குருதே ப்ருசம்" என்று அபியுக்தரும் சொன்னார்களிறே. "..." என்று ஸ்ரீபராசர ப்ரஹ்மரிஷி சொன்னபடியும் ஜரையை யநுபவித்து.

விளக்கம் - (மொய்த்த வெந்தீவினையால்) - இராவணனுடைய வீட்டில் சீதையைச் சுற்றி வளைத்தபடி, "தஹ, பச" என்று கொடிய அச்சத்தை ஏற்படுவதல்ல ஓசைகளை உண்டாக்கியபடி ஒரு கண் உள்ளவள், ஒரு காது உள்ளவள் என்று பல ராக்ஷஸிகள் நின்று கொடுமைப்படுத்தியது போன்று, எரிக்கவல்ல எனது பாவங்கள் மூலமாக நான் எரிந்தேன். (பல்லுடல் தொறும்) - தேவர்கள், விலங்குகள், மனிதர்கள், தாவரங்கள் என்று பலவிதமான சரீரங்கள் எடுத்தபடி இருத்தல். (மூத்து) - அந்தந்த சரீரங்களில் வயோதிகம் முடிய வசித்து வந்து. வயோதிகம் என்பது கர்ப்பவாசம், பிறப்பு போன்றவற்றுக்கும் உதாரணமாகும். திருமாலை (3) - திருமாலை (3) - வேதநூல் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவரேலும் பாதியும் உறங்கிப் போகும் நின்றுஅதில் பதினை யாண்டு பேதை பாலகன் அதாகும் பிணிபசி மூப்புத் துன்பம் ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகர் உளானே - என்று மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வாரும் அருளிச்செய்தமை காண்க. கர்ப்ப ஜந்மாத்ய வஸ்த்தாஸு துக்கம் அத்யந்ததுஸ் ஸஹம், ந கிஞ்சித் கணந் நித்யம் சராமீந்த்ரிய கோசர:; ஏவம் விஷய த்ருஷ்ணாய வசகஸ்ய ஜரா மம, தத் போக கரணாநாஞ்ச சைதில்யம் குருதே ப்ருசம் – என்று நன்மை உரைக்கவல்லவர்களும் கூறியது காண்க. " ... " என்று பராசர மஹரிஷியும் வயோதிகத்தை அனுபவித்தே அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் - (அதனாலெய்த் தொழிந்தேன்) இப்படி சரீரம் ஜீர்ணமானவாறே மரித்துப் போனேன். "அத தேஹாவாஸாநே ச துக்கம் உத்க்ராந்தி ஸம்பவம், க்ருச்ச்ரேண தேஹாந் நிஷ்க்ராந்திம் யாம்ய கிங்கர தர்சநம்; யாதநா தேஹ ஸம்பந்தம் யாம்ய பாசைச்ச

கர்ஷணம், உக்ர மார்க்க கத க்லேசம் யமஸ்ய புரத ஸ்த்திதிம்; தந்நியோக வசாயா தயா தநாச்ச ஸஹஸ்ரச:, ச்ருத்வா ஸ்ம்ர்த்வாச தூயேஹம் தத் ப்ரவேச பயாகுல:; புநச்ச கர்ப்ப ஜந்மாதி ப்ரவேசம் கர்ம நிர்மிதம், முஹுர் விஷிந்த்ய மச்சித்தம் கம்பதே ஜல சந்த்ரவத்" என்று அபியுக்தரும் சொன்னார்களிறே. (முன நாள்களெல்லாம்) இது அநாதிகாலமே தொடங்கி இவ்வளவான காலமெல்லாம் ஜந்ம ஜரா மரணாதிகளை யுடையனாய்க் கொண்டு அவஸந்நனாய் விட்டேனென்றபடி.

விளக்கம் – (அதனாலெய்த் தொழிந்தேன்) - இவ்விதம் சரீரம் தளர்ந்து போன காலத்தில் நான் இறந்தேன். அத தேஹாவாஸாநே ச துக்கம் உத்க்ராந்தி ஸம்பவம், க்ருச்ச்ரேண தேஹாந் நிஷ்க்ராந்திம் யாம்ய கிங்கர தர்சநம்; யாதநா தேஹ ஸம்பந்தம் யாம்ய பாசைச்ச கர்ஷணம், உக்ர மார்க்க கத க்லேசம் யமஸ்ய புரத ஸ்த்திதிம்; தந்நியோக வசாயா தயா தநாச்ச ஸஹஸ்ரச:, ச்ருத்வா ஸ்ம்ர்த்வாச தூயேஹம் தத் ப்ரவேச பயாகுல:; புநச்ச கர்ப்ப ஜந்மாதி ப்ரவேசம் கர்ம நிர்மிதம், முஹுர் விஷிந்த்ய மச்சித்தம் கம்பதே ஜல சந்த்ரவத் - என்று நன்மையை உரைக்க வல்லவர் கூறினார் அல்லவோ? (முன நாள்களெல்லாம்) - எல்லையற்ற காலத்திற்கு முன்பே தொடங்கி, இது நாள் முடிய பிறப்பு, வயோதிகம், மரணம் ஆகியவற்றை எப்போதும் கொண்டதால் துன்பம் அடைந்தேன் என்று கருத்து.

வ்யாக்யானம் - (இன்று) இப்போது. (பொய்த்தவம்) சாஸ்த்ரவிஹிதமான தபஸ்ஸு, ராவண ஸந்யாஸநம், காலநேமி ஜபம் போலே. (போற்றும்) "அசாஸ்த்ரா விஹிதம் கோரம் தப்யந்தேயே தபோ ஜநா:", "யஜந்தே நாம யஜ்ஞைச்ச தம்பேநா விதிபூர்வகம்", "கர்சயந்த: சரீரஸ்தம் பூதக்ராமம் அசேதஸ:, மாஞ்சைவாந்தச் சரீரஸ்த்தம் தாந்வித்த்யாஸுர நிச்சயாந்" என்கிறபடியே அசாஸ்த்ரீயங்களாய், அயதாபூதங்களான விஷய விரக்தி பரஹிம்ஸா நிவ்ருத்தி குருஸேவாதிகளான தபஸ்ஸுக்களை ஆசரித்துக் கொண்டு போரும் இவர்கள்தான் வெளிக்கு "செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்" போலே காணு மிருப்பது.

விளக்கம் – (இன்று) – இப்போது. (பொய்த்தவம்) - சாஸ்த்ரங்களில் விலக்கப்பட்ட தவங்கள், இராவணன் எடுத்த கபட ஸந்ந்யாஸ வேஷம், காலநேமி செய்த ஜபம் போன்று. (போற்றும்) – கீதை (17-5) - அசாஸ்த்ரா விஹிதம் கோரம் தப்யந்தேயே தபோ ஜநா: -

எந்த மனிதர்கள் சாஸ்த்ர விதிகளை விடுத்து கொடிய தவங்களைச் செய்கிறார்களோ – என்றும், கீதை (16-17) - யஜந்தே நாம யஜ்ஞைச்ச தம்பேநா விதிபூர்வகம் – பெயரளவில் யாகம் என்னும் செயல்களால் ஆடம்பரமாக சாஸ்த்ர விதிகளை மீறி யாகம் செய்கிறார்கள் – என்றும், கீதை (17-6) - கர்சயந்த: சரீரஸ்தம் பூதக்ராமம் அசேதஸ:, மாஞ்சைவாந்தச் சரீரஸ்த்தம் தாந்வித்த்யாஸுர நிச்சயாந் – அறிவற்றவர்களாகவும், தங்கள் உடலில் உள்ள பஞ்சபூதங்களை வருந்த வைப்பவர்களாகவும், தங்கள் உடலில் எனது அம்சமாகவே உள்ள ஜீவாத்மாவை வருத்துபவர்களாகவும் உள்ளவர்கள் எனது ஆணையை மீறும் அஸுர இயல்பு கொண்டவர்கள் என்று அறிவாயாக - என்றும் கூறுவதற்கு ஏற்ப சாஸ்த்ரங்களுக்கு உட்படாதவைகளாய், உண்மைகள் சற்றும் இல்லாதவைகளான உலக விஷயங்களில் விருப்பு இல்லாமை, மற்ற ஜீவராசிகளைத் துன்புறுத்துவதைச் சகிக்காமை, ஆசார்யனுக்குத் தொண்டு செய்தல் போன்றவைகளான பொய்யான தோற்றத்தையும் செயல்களையும் செய்தபடி உள்ள நிலை. இவர்கள் நோக்கினால் திருப்பாவை (14) - செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் - என்பதற்கு ஏற்ப உள்ளவர்கள் போன்று ஆகும்.

வ்யாக்யானம் - (புலச்சமயங்கள்) நீசஸமயங்கள். சைவ மாயாவாத சாக்தேய காணபத்ய சார்வாக பௌத்தாதி ஸமயங்கள். (நிலத்தவிய) பூலோகத்திலே பஸ்பமாம்படி. “ஹ்ருத்பத்ம ஸிம்ஹாஸன ரஸிக ஹயக்ரீவ ஹேஷோர்மிகோஷ க்ஷிப்த ப்ரதியர்தீ த்ருப்தி:”, “...”, “சமிதோதய சங்கராதிகர்வ:”, “காதாதாதா கதாநாம்” இத்யாதிகளில் சொல்லுகிறபடியே அவையெல்லாம் இந்த பூலோகத்திலே அவியும்படி. யஜ்ஞமூர்த்தி, யாதவப்ரகாசன் முதலானாரை சிக்ஷித்து அநுகூலராகப் பண்ணியும், திருநாராயணபுரத்திலே பௌத்தரை நிரஸித்தும், அவற்றை பஸ்மஸாத்தாம்படி பண்ணி யருளினாரென்று ஸர்வலோக ப்ரஸித்தமிறே. (கைத்த) ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்ய வேதார்த்தஸங்க்ரஹாதிகளை யருளிச் செய்து வ்யாக்யாநம் பண்ணியருளின. அன்றிக்கே, கைத்தல் - அவற்றை விளக்குப்பிணம் போலே நசிக்கும்படியாக நிரஸித்த வென்னவுமாம்.

விளக்கம் - (புலச்சமயங்கள்) - தாழ்ந்த மதங்கள். சைவம், மாயாவாதம், சாக்தம், காணாபத்யம், சார்வாகம், பௌத்தம் போன்றன. (நிலத்தவிய) – இந்த உலகத்தில் எரியும்படியாக. ஹ்ருத்பத்ம ஸிம்ஹாஸன ரஸிக ஹயக்ரீவ ஹேஷோர்மிகோஷ க்ஷிப்த

ப்ரதியர்தீ த்ருப்தி: - இதயம் என்னும் தாமரையில் அமர்ந்துள்ள ஹயக்ரீவனுடைய மங்களம் அளிக்கவல்ல கனைப்பொலியின் காரணமாக உயர்ந்த வித்தையுடன் கூடிய – என்றும், யதிராஜ சப்ததி (13) - சமிதோதய சங்கராதிகர்வ: – பாணாசுர யுத்தத்தின்போது சிவபெருமானைக் கண்ணன் வென்றான்; இது போன்று அத்வைதிகளின் வாதங்களை இராமானுசர் வென்றார் - என்றும், யதிராஜ சப்ததி (70) - காதா தாதா கதாநாம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அந்த மதங்கள் இந்தப் பூலோகத்தில் காணாமல் போகும்படி. யஜ்ஞமூர்த்தி, யாதவப்ரகாசர் ஆகியவர்களை நல்வழிப்படுத்தி அவர்களைத் தனக்கு ஏற்றவர்களாகச் செய்தும், திருநாராயணபுரத்தில் பௌத்தமதத்தினரை வாதத்தில் வென்றும், அவர்களைச் சாம்பல் போன்று செய்தருளியவர் எம்பெருமானார் என்பது அனைவரும் அறிந்ததே ஆகும். (கைத்த) - ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், வேதார்த்தஸங்க்ரஹம் போன்றவற்றை அருளிச்செய்து; அதாவது ப்ரஹ்மஸூத்ரம் மற்றும் ஸ்ரீமத் பகவத்கீதைக்கு வ்யாக்யானம் செய்தருளி. அல்லது கைத்தல்- அந்த மதங்களை விளக்குப்பிணம், அதாவது இருள் போன்று அழித்து.

வ்யாக்யானம் - (மெய்ஞ்ஞானத்து) யதாவஸ்த்தித தத்வ விஷயிக ஜ்ஞாநயுக்தரான. (இராமாநுசன்) எம்பெருமானார். (என்னுங் கார்தன்னையே) இவராகிற மேகத்தை. வேதமார்க்க ப்ரதிஷ்டாபநம் பண்ணி ஸர்வலோகத்தையும் ரக்ஷித்தது ஒரு ஔதார்யமாக நினைத்திலர், ஆர்த்த்ராபராதியான காகாஸுரனை சக்ரவர்த்தித்திருமகன் ரக்ஷித்தாப்போலே அப்படிப்பட்ட தம்மையும் ரக்ஷித்தருளினபடியாலே ஜல ஸ்த்தல விபாகமற வர்ஷிக்கும் வர்ஷுகவலாஹகம் போலே யிருந்தா ரென்று ச்லாகிக்கிறார். “கார்தன்னையே” என்றது - முற்றுவமை. (கண்டு) இப்படிப்பட்ட பரமோதாரரைக் கண்டு. கோயிலிலே ஸேவித்து. ஆழ்வான் புருஷகாரமாக ஆச்ரயித்தென்றபடி. அவர் விஷயீகரித்த பின்பு, (உயர்ந்தேன்) – உத்க்ருஷ்டனானே னென்றதாயித்து. அத்தாலே - ஸ்தோத்ரம் பண்ணத் தொடங்கினே னென்று கருத்து.

விளக்கம் - (மெய்ஞ்ஞானத்து) - இருக்கவேண்டியதான உண்மையான பொருளைக் குறித்த ஞானம் நிரம்பியவரான. (இராமாநுசன்) - எம்பெருமானார். (என்னுங் கார்தன்னையே) - இராமாநுசன் என்ற மேகத்தை. வேதவழிகளை அனைவருக்கும் போதித்து, அதனை ஆழமாக நிலை நிறுத்தியதன் காரணமாக அனைத்து லோகங்களையும் காப்பாற்றிய பெரும் செயலை, தான் உதவி செய்ததாகவே

எண்ணவில்லை; மிகவும் பெரிய அபராதம் செய்த காகாஸுரனை இராமன் காப்பாற்றியது போன்று, அவன் செய்தது போன்ற பாவங்கள் பல செய்த என்னையும் காப்பாற்றினார்; ஆக நீர்நிலைகள், கட்டாந்தரை என்று வேறுபாடு காணாமல் எங்கும் ஒரே போன்று மழையைப் பொழிகின்ற மேகம் போன்று உள்ளவர் என்று கொண்டாடுகிறார். (கண்டு) - இப்படிப்பட்ட உதவிகள் செய்தவரை திருவரங்கம் பெரியகோயிலில் வணங்கி. கூரத்தாழ்வானை முன்னிட்டுக் கொண்டு அடைந்தேன் என்று கருத்து. அவர் என்னையும் ஒரு பொருள் என்று மதித்து ஏற்றுக் கொண்ட பின்னர். (உயர்ந்தேன்) - உயர்ந்தவனாக ஆனேன். அதன் காரணமாக நான் அவரைத் துதிக்கத் தொடங்கினேன் என்று கருத்து.

25. காரேய் கருணை இராமானுச இக்கடலிடத்தில்

ஆரே அறிபவர் நின் அருளின் தன்மை? அல்லலுக்கு
நேரே உறைவிடம் நான் வந்து நீ என்னை உய்த்தபின் உன்
சீரே உயிர்க்கு உயிராய் அடியேற்கு இன்று தித்திக்குமே

விளக்கவுரை – மேகம் போன்று பலன் எதிர்பாராமல் அனைத்து உயிர்களுக்கும் அருளும் கருணை கொண்ட எம்பெருமானாரே! உம்முடைய கருணையின் அளவை, கடல் சூழ்ந்த இந்த உலகில் உள்ள யார்தான் முற்றிலுமாக அறிவார்கள்? ஆனால் நான் இதனை உணர்ந்துவிட்டேன். எப்படி? அனைத்து விதமான துக்கங்களுக்கு இருப்பிடமாக, அவை தங்கும் பூமியாக நான் இருந்தேன். கஜேந்திரனின் கூக்குரலைக் கேட்ட பரம்பொருள், பரமபதத்தில் இருந்து ஓடி வந்தது போன்று, எனது துன்பங்கள் கண்ட நீவிர் இந்த உலகில் அவதரித்தீர். இவ்விதமாக என்னை நீ வந்து ஆட்கொண்ட பின்னர் எனக்கு நேர்ந்தது என்ன? இந்த உலகில் உள்ள அனைவருக்கும் அவரவர்களின் ப்ராணனே உயிர் தரிக்க ஏதுவாக உள்ளது. ஆனால் எனக்கு உனது ப்ராணனே ப்ராணனாக அமைந்துள்ளது. இப்படிப்பட்ட உயர்ந்த உமது திருக்கல்யாண குணங்கள் அனைத்தும் தேன், பால், பாயஸம் போன்று எனக்கு மிகவும் உள்ளது.

அவதாரிகை - மேகம் போலே ஸர்வ விஷயமாக உபகரிக்கும் க்ருபையையுடைய எம்பெருமானாரே! சதுஸ் ஸமுத்ர பரிவேஷ்டிதமான இந்த பூப்ரதேசத்திலே தேவரீருடைய க்ருபா ஸ்வபாவத்தைத் தெளிந்தவரார், ஸகல துக்கங்களுக்கும் ஸாக்ஷாதாகரமான

வென்னை தேவரீரே யெழுந்தருளி யங்கீகரித்தபின்பு, தேவரீருடைய கல்யாணகுணங்கள் என்னுடைய ப்ராணனுக்கு ப்ராணனாய் அடியேனுக்கு ரஸியா நின்றதென்று எம்பெருமானார் திருமுகத்தைப் பார்த்து நேர்கொடு நேரே விண்ணப்பம் செய்கிறார்.

விளக்கம் - மழைமேகம் போன்று உலகில் உள்ள அனைத்திற்கும் உதவிகள் செய்கின்ற கருணை நிறைந்த எம்பெருமானாரே! நான்கு திசைகளிலும் ஸமுத்ரங்களால் சூழப்பட்ட இந்தப் பூமியில், உம்முடைய கருணையின் தன்மை முழுவதையும் அறிந்து தெளிந்தவர் யார் உள்ளனர்! அனைத்து துக்கங்களுக்கும் நேரடியான இருப்பிடமாக இருந்த என்னை, நீவிர் என் முன்பாக வந்து நின்று ஏற்றுக்கொண்டீர். ஆக உம்முடைய திருக்கல்யாண குணங்கள் எனது ப்ராணனுக்கு ப்ராணன் போல் எனக்குச் சுவைக்கலாம்படியாக நின்றன – இப்படியாக எம்பெருமானாருடைய திருமுகத்தை நோக்கி நின்று நேரடியாக விண்ணப்பிக்கிறார்.

வ்யாக்யானம் - (காரேய் கருணை) ஜல ஸ்த்தல விபாகமற வர்ஷகவலாஹகம் போலே, "அநாலோசித விசேஷ லோக சரண்ய"மான க்ருபை. "ஸித்தே ததீய சேஷத்வே ஸர்வாதாஸ் ஸம்பவந்திஹி" என்னக் கடவதிறே. கார் – மேகம், ஏய்கை - ஒப்பு. இப்படிப்பட்ட க்ருபையையுடைய. (இராமாநுசா) எம்பெருமானாரே. (இக்கடலிடத்தில்) சதுஸ் ஸமுத்ர பரிவேஷ்டிதமான இந்த "இருள் தரு மாஞால"த்திலே, (நின்னருளின்) பரதுக்காஸஹிஷ்ணுத்வ நிராசிகீர்ஷத்வாதி லக்ஷணங்களோடே கூடியிறே க்ருபை யிருப்பது, அப்படிப்பட்ட க்ருபைக்கு.

விளக்கம் - (காரேய் கருணை)- கட்டாந்தரை அல்லது நீர்நிலை என்று எந்த வேறுபாடும் ஆராயாமல் மழையைப் பொழிகின்ற மேகம் போன்று. ஸ்ரீரங்க கத்யம் – அநாலோசித விசேஷா லோக சரண்யா - என்றுள்ளதான அனைத்து லோகத்தில் உள்ளவர்களுக்கும் அடைக்கலம் அளிக்கவல்ல க்ருபை. ஸித்தே ததீய சேஷத்வே ஸர்வாதாஸ் ஸம்பவந்திஹி – அடியார்களுக்கு அடிமையாக உள்ள நிலையில் அனைத்தும் கிட்டும் - என்று கூறுவது காண்க. கார் என்றால் மேகம். இவ்விதமான க்ருபை நிறைந்த. (இராமாநுசா) - எம்பெருமானாரே. (இக்கடலிடத்தில்) - நான்கு திசைகளிலும் ஸமுத்ரங்களால் சூழப்பட்டதான, திருவாய்மொழி (10-6-1) – இருள்தரு மாஞாலம் - என்பதற்கு ஏற்ப அறியாமையை ஏற்படுத்தவல்ல பரந்த பூமியில். (நின்னருளின்) - மற்றவர்களுடைய

துக்கங்களைக் கண்டு பொறுத்துக்கொள்ள இயலாத தன்மையுடன் கூடியபடி அல்லவோ உமது கருணை உள்ளது! அப்படிப்பட்ட கருணைக்கு.

வ்யாக்யானம் - (நின்னருளின்) என்று – ஆச்ரய ப்ராபல்யத்தாலே வந்து வெளிச்செறிப்பு ஸ்வர்ணத்துக்கு பரிமளம் வந்தாப்போலே காணுமிருப்பது. (தன்மை) இப்படிப்பட்ட க்ருபா ஸ்வபாவத்தை. (ஆரேயறிபவர்) தெளிந்தவர்தான் ஆர். நித்யவிபூதியி லிருந்தவர்களாகில், "ஸதாபச்யந்தி" என்றும், "விப்ராஸ:" என்றும், "ஜாக்ருவாம்ஸ:" என்றும் – ஸார்வஜ்ஞ முடையவராகையாலே அறியக் கேட்டவர்களித்தனை; "யா நிசா ஸர்வ பூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்ய மீ" என்னும்படி அஜ்ஞாநத்தை விளைப்பிக்கும் பூலோகத்திலிருந்தவர் தெரிகிலரென்றபடி.

விளக்கம் - (நின்னருளின்) - தனக்கு அருகில் உள்ள பொருள்களுடைய பிரதிபிம்பங்கள் ப்ரதிபலிப்பதால் தங்கத்துக்கு அவற்றின் தோற்றம் வருவது போன்று. (தன்மை) - இப்படியாக உள்ள உமது கருணையின் தன்மையை. (ஆரேயறிபவர்) - முற்றிலுமாக உணர்ந்தவர் யார் உள்ளனர்! நித்யவிபூதியில் உள்ளவர்கள் அனைவரும், விஷ்ணுஸூக்தம் – ஸதா பச்யந்தி – நித்யஸூரிகள் அவனை எப்போதும் காண்கிறார்கள் என்றும், ருக்வேதம் – தத்விப்ராஸ: விபந்யவ: ஜாக்ருவாம்ஸ: ஸமிந்ததே விஷ்ணோ: யத்பரமம் பதம் - பரமபதத்திலே இருக்கின்ற நித்தியஸூரிகளும் விஷ்ணுவைத் துதி செய்தபடியே இருக்கிறார்கள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்தும் அறிந்தவர்கள் என்பதால், உம்முடைய கருணையின் இயல்பைக் குறித்து அறிந்துள்ளனர் எனலாம். ஆனால் கீதை (2-69) - யா நிசா ஸர்வ பூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்ய மீ - ஆத்ம தரிசனத்தைப் பற்றிய அறிவு என்பது அனைத்துப் பிராணிகளுக்கும் இரவு போன்று இருண்டே உள்ளது. ஆனால் அப்போது, தனது புலன்களைத் தன்வயப்படுத்தியவன், ஆத்ம தரிசனம் குறித்து விழிப்புடனே உள்ளான் - என்பதற்கு ஏற்ப அறியாமையை ஏற்படுத்தவல்ல இந்தப் பூமியில் உள்ளவர்கள் அறிவில்லை.

வ்யாக்யானம் - (அல்லலுக்கு) "கர்ப்ப ஜந்மாத்யவஸ்த்தாஸு துக்கம் அத்யந்த துஸ்ஸஹம்" என்னும்படியான துக்கங்களுக்கு. (நேரேயுறைவிடம் நான்) ஸாக்ஷாத் ஆவாஸ பூமியா யிருப்பா னொருவன் நான். சரீர ஸம்பந்திகளுக்கு வந்த துக்கங்களெல்லாம் தத் ஸம்பந்தத்தாலே எனக்கு ப்ராப்தமானால் சிறிது லகுவாயிருக்கும்; அப்படியன்றிக்கே, ஸாக்ஷாத் எனக்கு வந்ததாகையாலே அவற்றுக்கெல்லாம் நான் த்ருடமான ஆச்ரயமா

யிருந்தே னென்றபடி. (வந்து நீ) "நீ வந்து" தேவரீர் பரதுக்காஸஹிஷ்ணு வாகையாலே ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்த த்வநி கேட்டவாறே ஸர்வேச்வரன் அரைகுலையத் தலைகுலைய வந்தாப்போலே பரமபதத்தினின்றும் இவ்வளவாக எழுந்தருளி. (என்னை) துக்காச்ரயமான வென்னை. (உற்றபின்) "த்வயாபி லப்தம் பகவந் நிதா நீம் அநுத்தமம் பாத்ரம் இதம் தயாயா" என்றாப்போலே அலப்யலாபமாக என்னைப் பெற்ற பின்பு.

விளக்கம் - (அல்லலுக்கு) - கர்ப்ப ஜந்மாத்யவஸ்த்தாஸு துக்கம் அத்யந்த துஸ்ஸஹம் – கர்ப்பம், ஜனனம் போன்ற துன்பத்தை அளிக்கவல்ல நிலைகள், தொடக்கம் முதலாக இறுதிவரை வேண்டாத துணையே ஆகும் - என்பதற்கு ஏற்றபடியான துக்கங்கள் அனைத்திற்கும். (நேரேயுறைவிடம் நான்) - நேரடியான விளைநிலமாக யாரேனும் ஒருவன் உண்டு என்றால் அது நானே ஆவேன். சரீரத்துடன் தொடர்பு கொண்டதன் காரணமாக வருகின்ற துக்கங்கள் என்றால் அந்தந்த சரீர ஸம்பந்தத்தின் விளைவாகக் குறைவாகவே இருக்கும்; ஆனால் என் விஷயத்தில் அவை பெருமளவில் நேரடியாக வந்து நிற்பதால் அவை அனைத்தும் அண்டி நிற்கும் இடமாகவே நான் உள்ளேன். (வந்து நீ) - நீ வந்து. நீவிர் மற்றவர்கள் அடைகின்ற துக்கங்களைப் பொறுத்துக் கொள்ள இயலாதவர் என்பதால், கஜேந்த்ரனுடைய கூக்குரலைக் கேட்டவுடன் ஸர்வேச்வரன் தனது அழகான கேசங்களும் பட்டாடைகளும் அங்கும் இங்குமாக கலைந்து கிடந்த விதமாக ஓடி வந்தது போன்று, நீவிர் பரமபதத்தில் இருந்து இங்கு வந்தீர். (என்னை) - துக்கங்கள் அண்டி நிற்கும் என்னை. (உற்றபின்) ஸ்தோத்ர ரத்னம் (24) - த்வயாபி லப்தம் பகவந் நிதா நீம் அநுத்தமம் பாத்ரம் இதம் தயாயா – உன்னையே அடையத்தக்க கரையாக அடைந்தேன். உன்னுடைய க்ருபையைச் செலுத்துவதற்கான பாத்திரமாக என்னை நீ அடைந்தாய் - என்பதற்கு ஏற்ப, பெறுவதற்கு அரிய பேறாக என்னைப் பெற்ற பின்னர்.

வ்யாக்யானம் - (உன் சீரே) தேவரீருடைய கல்யாணகுணங்களே. "குணாநாம் ஆகரோ மஹாந்" என்றாப்போலே சீர் என்னும்படியான வாத்ஸல்ய ஸௌசீல்யாதி குணங்களை. (உயிர்க்குயிராய்) ஆத்மாவுக்கு தாரகமாய். லோகத்தில் எல்லார்க்கும் தந்தாமுடைய ப்ராணன் ஜீவந ஹேதுவாயிருக்கும்; இங்கு இப்படி யன்றிக்கே இவருடைய ப்ராணனுக்கு ப்ராணனாய்க் காணும் அவருடைய சீரிருப்பது. (அடியேற்கு) சேஷபூதனானவெனக்கு.

(இன்று) "ரஸம் ஹி ஏவாயம் லப்த்வ ஆனந்தீ பவதி", "ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ" என்றுஞ் சொல்லப்படுகிற ப்ரஹ்மத்தினுடைய கல்யாணகுணாம்ருதாநுபவமும். "அடியார்கள் குழாங்களை உடன்கூடுவதென்று கொலோ" என்று ததீயரோடே கூடிப் பண்ணக் கடவேனென்று ப்ரார்த்தித்தபடி தலைக்கட்டுவது பரமபதத்திலேயா யிருக்கும்; அப்படி யன்றிக்கே எனக்கு இது இந்த பத்ததசையிலேதானே. (தித்திக்குமே) ரஸ்யமாய் ஆநந்தாவஹமா யிருக்கு மென்றதாய்த்து. "தேனும் பாலும் கன்னலு மமுத"மாகித் தித்தித்தாப்போலே யாய்த்தென்றபடி. "அண்ணிக்கு மமுதூறு மென்னாவுக்கே" என்னக் கடவதிறே.

விளக்கம் - (உன் சீரே)- உம்முடைய உயர்ந்த திருக்கல்யாண குணங்களே. இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (15-21) – குணாநாம் ஆகரோ மஹாந் – குணங்கள் அனைத்திற்கும் இருப்பிடமாக உள்ளவன் - என்பது போன்று வாத்ஸல்யம், ஸௌசீல்யம் முதலான திருக்கல்யாண குணங்களை. (உயிர்க்குயிராய்) - ஆத்மா தரித்திருப்பதற்குத் தேவையானதாய். உலகில் உள்ள அனைவருக்கும் அவரவர்களுடைய ப்ராணனே உயிர் வாழ அவசியமாக இருக்கும்; ஆனால் இங்கு திருவரங்கத்தமுதனாருக்கு இரமாநுசருடைய திருக்கல்யாண குணங்களே ப்ராணனுக்கு ப்ராணனாக உள்ளது. (அடியேற்கு) - உம்முடைய அடிமையான எனக்கு. (இன்று) - தைத்திரீய ஆனந்தவல்லீ – ரஸம் ஹி ஏவாயம் லப்த்வ ஆனந்தீ பவதி – அவனை அடைபவன் எப்போதும் ஆனந்தம் அடைகிறான் – என்றும், ஸோச்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ – ப்ரஹ்மத்தை ஒத்த ஆனந்தத்தையும் அனைத்து விருப்பங்கள் நிறைவேறப் பெற்ற தன்மையையும் அடைகிறான் - என்றும் கூறப்படுவதான ப்ரஹ்மத்தின் திருக்கல்யாண குணங்கள் என்னும் அமிர்தத்தைச் சுவைக்கவல்ல அனுபவமானது, திருவாய்மொழி (2-3-10) - அடியார்கள் குழாங்களை உடன்கூடுவதென்று கொலோ - என்று அடியார்களுடன் கூடி நின்று அனுபவிப்பேன் என்றுள்ள விண்ணப்பத்திற்கு ஏற்ப கிட்டுவது பரமபதத்திலே ஆகும்; ஆனால் அவ்விதம் அல்லாமல் எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களுடைய அனுபவம் என்பது எனக்கு இந்த உலகத்திலேயே பந்தப்படுத்தப்பட்ட நிலையிலும் கிட்டியது. (தித்திக்குமே) - அதிக சுவை உள்ளதாகவும், ஆனந்தம் அளிக்கவல்லதாகவும் உள்ளது. திருவாய்மொழி (2-3-1) - தேனும் பாலும் கன்னலு மமுது -

என்பதற்கு ஏற்ப இனிமையாக உள்ளது. கண்ணிநுண்சிறுத்தாம்பு (1) - அண்ணிக்கு மமுதூறு மென்னாவுக்கே - என்றது காண்க.

26. திக்குற்ற கீர்த்தி இராமானுசனை என் செய்வினையாம்
மெய்க்குற்றம் நீக்கி விளங்கிய மேகத்தை மேவு நல்லோர்
எக்குற்றவாளர் எது பிறப்பு ஏதியல்வாக நின்றோர்
அக்குற்றம் அப்பிறப்பு அவ்வியல்வே நம்மை ஆட்கொள்ளுமே.

விளக்கவுரை – மற்றவர்கள் மூலம் அல்லாமல் என்னாலேயே செய்யப்பட்ட தீய வினைகள் என்னும் நிலை பெற்ற தோஷங்கள் அனைத்தையும், அவை போன இடம் தெரியாமல், எம்பெருமானார் நீக்கினார். "இவனது விரோதிகளாக உள்ள அனைத்தையும் நீக்கி விட்டோம்", என்று மகிழ்ந்தபடி உள்ளார் (எம்பெருமானார்). எட்டுத்திசைகளிலும் பரவியுள்ள குணப் பெருமைகள் கொண்ட எம்பெருமானாரை – மேவினேன் அவன் பொன்னடி மெய்மையே – என்னும்படியும்; ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் – என்னும்படியும், அவரது திருவடிகளைத் தங்கள் நன்மையாகவும் இலக்காகவும் பற்றியபடி பலர் உள்ளனர். இவர்கள் வேறு எந்தப் பயனையும் யதிராஜரிடம் எதிர்பாராமல் உள்ள மஹாத்மாக்கள் ஆவர். இப்படிப்பட்ட மஹாத்மாக்கள் குற்றம் செய்யும் இழிவான பிறப்பை அடைந்த போதிலும், குற்றம் செய்யும் இழிவான தொழிலை மேற்கொண்டபோதிலும் அவர்களுக்கு இழிவு ஏற்படாது. மேலும் இது போன்ற பிறப்பு, தொழில் ஆகியவை நம்மிடம் இல்லை என்றாலும், அந்த மஹாத்மாக்களின் "யதிராஜ பக்தி" என்பது நம்மை அவர்களிடம் அடிமைப்படுத்திவிடும்.

அவதாரிகை - மேகம்போலே உதாரரான எம்பெருமானார் தம்மை விஷயீகரித்த பின்பு அவருடைய கல்யாணகுணங்கள் தமக்கு தாரகமாயிருந்தபடியைக் கீழ்ப்பாட்டிலே சொல்லி, இப்பாட்டிலே அவர்க்கு அநந்யார்ஹராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஜந்மவ்ருத்தாதிகளில் ஓரொன்றே அடியேனை யெழுதிக் கொள்ளாநின்ற தென்கிறார்.

விளக்கம் – மேகம் போன்று மிகவும் தாராள குணம் கொண்டவரான எம்பெருமானார் தன்னை அங்கீகரித்து ஏற்றுக்கொண்ட பின்னர், அவருடைய திருக்கல்யாண குணங்களே தான் உயிர் தரிப்பதற்குத் தேவையான அனைத்துமாக இருந்தன என்று கடந்த பாசுரத்தில்

அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில், "எம்பெருமானாருக்காக மட்டுமே இருக்கிறோம்" என்றுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பிறப்பு, சரிதம் போன்ற ஒவ்வொன்றும் தன்னை ஈர்த்துக்கொண்டன என்கிறார்.

வ்யாக்யானம் - (என் செய்வினையாம்) "த்விஷந்த: பாபக்ருத்யாம்" என்கிறபடியே அசல்பிளந்து ஏறிட வந்ததன்றிக்கே என்னாலே செய்யப்பட்ட அக்ருத்ய கரணாதி ரூபமாய் ப்ராயச்சித்தாதிகளாலே நிவர்த்தியாதே, "நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி" என்னும்படியான கர்மமாகிற. (மெய்க்குற்றம்) நிலைநின்ற தோஷம். "வாசாம் அகோசர மஹாகுண தேசிக அக்ர்ய கூராதிநாத கதித அகில நைச்ய பாத்ரம் ஏஷ: அஹம் ஏவ ந புநர் ஜகதி ஈத்ருச" என்றும், "பூர்வைஸ் ஸ்வநைச்யம் அநுஸம்ஹித மார்யவர்யைர் மாமேவ வீக்ஷ்ய மஹாதாந்நதஸ்தி தேஷாம் நைச்யந்த்விதம் சடரிபோ மம ஸத்யமேவ மத்த: பரோ நமலிநோயத ஆவிரஸ்தி யாவச்சயச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்சதத்ததி கஞ்சமமாஸ்தி ஸத்யம்" என்றும் சொல்லுகிறபடியே ப்ரத்யயம் பண்ணிச் சொல்லுகிறார். மெய்யாவது - நிலைநிற்குமது. இது நிலைநிற்கையாவது – அநுபவ விநாச்யமாதல், ப்ராயச்சித்த விநாச்யமாதலன்றிக்கேயிருக்கை. இப்படிப்பட்ட பாபத்தை நீக்கி. "வானோ மறி கடலோ மாருதமோ தீயகமோ கானோ ஒருங்கிற்று கண்டிலமால்" என்கிறபடியே போனவிடம் தெரியாதபடி ஸவாஸநமாகப் போக்கி. (விளங்கிய) அத்தாலே அத்யுஜ்வலமான. இவன் விரோதியைப் போக்கப் பெற்றோமே யென்னும் ப்ரீதியாலேகாணும் அவர்தாம் உஜ்வலரானது. (மேகத்தை) வர்ஷுக வலாஹகம்போலே பரமோதாரராய். மேகத்தை என்றது – முற்றுவமை.

விளக்கம் - (என் செய்வினையாம்) - சாட்யாயநசாகை – தஸ்ய புத்ரா தாயம் உபாஸந்தி ஸுஹ்ருத ஸாதுக்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம் – மோக்ஷம் செல்லும் உபாஸகனின் புத்திரர்கள் அவனது செல்வத்தையும், நண்பர்கள் புண்ணியத்தையும், பகைவர்கள் பாவத்தையும் அடைகின்றனர் - என்று கூறுவதற்கு ஏற்ப மற்றவர்களிடமிருந்து வந்தது என்று அல்லாமல், என் மூலமாகவே செய்யப்பட்டதும், செய்யக்கூடாத பலவற்றையும் செய்த காரணத்தால் வந்ததும், எந்தவிதமான ப்ராயச்சித்தம் செய்தாலும் நீங்காமல் உள்ளதும் ஆகிய, நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி - பலன் அனுபவிக்கப்படாத கர்மங்கள், நூறு கோடி கல்பங்கள் கழிந்தாலும் அழிவதில்லை -

என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள எனது கர்மங்கள் என்பதான. (மெய்க்குற்றம்) - யதிராஜ விம்ஸதி (14) - வாசாம் அகோசர மஹாகுண தேசிக அக்ர்ய கூராதிநாத கதித அகில நைச்ய பாத்ரம் ஏஷ: அஹம் ஏவ ந புநர் ஜகதி ஈத்ருசஸ் தத் ராமாநுஜார்ய கருணைவ து மத்கதிஸ்தே - எம்பெருமானாரே! இந்த உலகில் தகாத செயல்கள் செய்யும் ஒரு மனிதனை உதாரணம் என்று காட்ட வேண்டும் என்றால், அது நானே ஆவேன். கூரத்தாழ்வான் எவ்விதம் தன்னைத் தானே தாழ்வாகக் கூறினாரோ, அது போன்ற அத்தனை தாழ்வுகளும் இந்த உலகில் எனக்கும் உள்ளது. ஆகவே நீ கூரத்தாழ்வானுக்கு அருளியது போன்று, உனது கருணைக்கு நானும் ஏற்றவன் ஆவேன் - என்றும், பூர்வைஸ் ஸ்வநைச்யம் அநுஸம்ஹித மார்யவர்யைர் மாமேவ வீக்ஷ்ய மஹாதாந்நதஸ்தி தேஷாம் நைச்யந்த்விதம் சடரிபோ மம ஸத்யமேவ மத்த: பரோ நமலிநோயத ஆவிரஸ்தி யாவச்சயச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்சதத்ததி கஞ்சமமாஸ்தி ஸத்யம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப உறுதிபட உரைக்கிறார். மெய் என்றால் நிலையாக நிற்பவை. கர்மங்கள் நிலைநிற்பவை என்றால் – அனுபவித்தாலும் அழியாமல், எந்தவிதமான ப்ராயச்சித்தம் செய்தாலும் அழியாமல் அப்படியே இருப்பவை ஆகும். இப்படியாக உள்ள எனது பாவங்களை நீக்கி. பெரியதிருவந்தாதி (54) - வானோ மறி கடலோ மாருதமோ தீயகமோ கானோ ஒருங்கிற்று கண்டிலமால் – நமது பாவங்களை அருகில் காணவில்லை; அவை மறைந்த இடம் கடலோ, வானமோ, காற்றோ, தீயோ, கானகமோ என்று அறிய இயலவில்லை - என்று கூறுவதற்கு ஏற்ப அந்தப் பாவங்கள் சென்ற இடம் தெரியாமல், அதன் வாசனையுடன் நீக்கி. (விளங்கிய) - அதனால் மிகவும் ஒளி பொருந்திய. அதாவது, திருவரங்கத்தமுதனாருடைய விரோதிகளான பாவங்களை நீக்கிவிட்டோம் என்ற மகிழ்ச்சியால் அவர் மிகவும் ஒளியுடன் காணப்பட்டார் என்கிறார். (மேகத்தை) - மழை பொழியத் தயாராக உள்ள மேகம் போன்று மிகுந்த தாராளகுணம் கொண்டவராக.

வ்யாக்யானம் - (திக்குற்ற கீர்த்தி) “ஏய்ந்த பெருங்கீர்த்தி” என்கிறபடியே அஷ்டதிக்கிலும் வ்யாபித்திருக்கிற குணவத்தா ப்ரதையை யுடையரான. (இராமாநுசனை) எம்பெருமானாரை. (மேவும்) “மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே” என்கிறபடியே “ராமாநுஜஸ்ய சரணௌ சரணம்” என்னும்படி அவருடைய திருவடிகளையே ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் அத்யவஸித்திருக்கிற. (நல்லோர்) “நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்” என்கிறபடியே அநந்யப்ரயோஜநரான மஹாத்மாக்கள். அன்றிக்கே

(மேவும் நல்லோர்) "ராமாநுஜ பதச்சாயா" என்கிறபடியே பதச்சாயாதிகள் போலே அப்புதக் ஸித்தமாம்படி பொருந்தியிருக்கும் விலக்ஷணரானவர்க ளென்னவுமாம்.

விளக்கம் - (திக்குற்ற கீர்த்தி) - ஏய்ந்த பெருங்கீர்த்தி – என்று கூறுதற்கு ஏற்ப எட்டுத்திசைகளிலும் பரவி நிற்கும் "நல்லவர் என்னும் புகழ்" என்பதைக் கொண்டவராகிய. (இராமாநுசனை) – எம்பெருமானாரை. (மேவும்) - கண்ணிநுண் சிறுத்தாம்பு (2) - மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே – என்று கூறுவதற்கு ஏற்ப - ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் - என்னும்படியாக எம்பெருமானாருடைய திருவடிகளையே அடையத் தக்கதாகவும், அவையே அந்தப் பேற்றை அடைவிப்பதாகவும் எண்ணியபடி உள்ள. (நல்லோர்) - கண்ணிநுண் சிறுத்தாம்பு (4) - நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் - என்று கூறுவதற்கு ஏற்ப பலன்கள் ஏதும் எதிர்பாராமல் உள்ள மஹாத்மாக்கள். அல்லது, (மேவும் நல்லோர்) - ராமாநுஜ பதச்சாயா - எம்பெருமானாருடைய திருவடி நிழல் - என்று கூறுவதற்கு ஏற்ப திருவடிகளுடைய நிழல் போன்று எப்போதும் பிரியாமல் பொருந்தியபடி உள்ள மேன்மையானவர்கள் என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - (எக்குற்றவாளர் எதுபிறப்பேதியல்வாக நின்றோர்) அந்த மஹாத்மாக்கள் ஆச்ரயண பூர்வகாலத்திலே யாதொரு ஜ்ஞாந ஸங்கோசமாகிற குற்றத்தையுடையராகவும், யாதொரு உத்க்ருஷ்டாபக்ருஷ்ட ஜாதியையுடையரகவும், யாதொரு நிஷித்தா நுஷ்ட்டாநமாகிற வ்ருத்தியை யுடையராகவும் நின்றார்கள். குற்றம் – ஜ்ஞாந ஸங்கோசம். இயல்பு – வ்ருத்தம். அவர்களுடைய, (அக்குற்ற மப்பிறப் பவ்வியல்வே) இவையெல்லாம் அவ்யவதாநேந ஆச்ரயண பூர்வபாவிகளாகையாலும். அந்த சரீரத்தோடே தானே ஆச்ரயணத்தைப் பண்ணினார்க ளாகையாலும், "சிறுமாமனிசர்" என்னலாம்படி மஹாப்ரபாவரான இவர்களுடைய பூர்வ தசாவஸ்த்தித விசேஷங்களான விவையே.

விளக்கம் - (எக்குற்றவாளர் எதுபிறப்பு ஏதியல்வாக நின்றோர்) - அப்படிப்பட்ட மஹாத்மாக்கள் எம்பெருமானாருடைய திருவடிகளை அண்டி நிற்பதற்கு முன்பாக சுருங்கப் பெற்ற ஞானம் என்ற தோஷத்தையும், உயர்ந்த குலம் தாழ்ந்த குலம் என்ற வேறுபாடு உள்ளவர்களாயும், தள்ளப்பட்ட கர்மங்களை மேன்மேலும் செய்தபடி உள்ளவர்களாயும் இருந்தார்கள். குற்றம் என்பது ஞானத்தில் ஏற்படும் சுருக்கம், இயல்பு –

நடத்தை. (அக்குற்றம் அப்பிறப்பு அவ்வியல்வே) - இது போன்ற அனைத்தையும் திருவடிகளை அண்டும் முன்பு இடைவிடாமல் செய்தபடி இருந்தார்கள் என்றாலும், அப்படிப்பட்ட தோஷம் நிறைந்த சரீரத்துடனே வந்து திருவடிகளை அண்டினார்கள் என்றாலும், திருவாய்மொழி (8-10-3) – சிறுமா மனிசர் - என்பதற்கு ஏற்ப மிகுந்த ப்ரபாவம் கொண்டவர்களான அவர்களுடைய முந்தைய நிலை என்பவையே ...

வ்யாக்யானம் - (நம்மையாட் கொள்ளுமே) இவ்வளவும் ப்ரதிகூலித்துப் போந்த நம்மையும், தாஸபூதராய் க்ரயவிக்ரயார்ஹராம்படி எழுதிக் கொள்ளக்கடவன். அன்றிக்கே, (நம்மையாட் கொள்ளுமே) இப்படி மஹாப்ரபாவரான இவர்கள் நிஷ்க்ருஷ்ட ஜந்மாதிகளை பரிக்ரஹித்தது தாத்ருசரான நம்போல்வாரும் இவ்விஷய ஸமாச்ரயணார்ஹர் என்னுமிடத்தை தர்சிப்பிக்கைக்காகவென்று நினைத்திருக்கிற நம்மை யநுஸந்திக்குந்தோறும் எழுதிக் கொள்ளாநின்ற வென்னவுமாம். "துராசாரோபி ஸர்வாஸீக்ருதக்நோ நாஸ்திக: புரா ஸமாஸ்ரயேத் ஆதிதேவம் ஸ்ரத்தயா ஸரணம்யதி நிர்த்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்ந:" என்கிற வசநம் இவ்விடத்துக்கு ப்ரமாணம். அப்போது, ஆதிதேவ சப்தத்தாலே ப்ரதமாசார்யனென்று தோற்றினாலும் அந்த ஸர்வேச்வரனே சேஷியென்றபடியிலே உபதேசித்து உபகரித்தவ ராகையாலே, ஆதிதேவ சப்தமும் எம்பெருமானாரைச் சொல்லுமென்னக் குறையில்லை. அன்றிக்கே எம்பெருமானாருக்கு அநந்யார்ஹாரான மஹாத்மாக்கள் எந்த வர்ணமுடையரானாலும், எந்த வ்ருத்தமுடையரானாலும், எந்த ஸ்வபாவமுடையாரானாலும் அந்தந்த வர்ண வ்ருத்த ஸ்வபாவங்களே நமக்கு உத்தேச்யமாயிருக்கு மென்னவுமாம். அந்த மஹாத்மாக்கள் எந்த வர்ணத்திலே ஜநித்தாலும் ப்ரக்ருதி ஸம்பந்தாயத்தமாய்க் கொண்டு அதுக்கு அநுரூபங்களான ஸ்வபாவ வ்ருத்தங்க ளுண்டாயிருக்குமிறே.

விளக்கம் - (நம்மையாட் கொள்ளுமே) - இது போன்று பலவிதமான தகாதவற்றில் ஈடுபட்ட நம்மையும், அடிமையாக எழுதி வாங்கிக் கொள்ளும்படியாக அடியேன் இருக்கக் கடவேன். அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். (நம்மையாட் கொள்ளுமே) – "மிகவும் உயர்ந்த ப்ரபாவங்கள் கொண்டவர்களான இவர்கள், இது போன்ற தாழ்ந்த பிறவிகளை எடுத்தது என்பது, அதே போன்ற பிறவி எடுத்த நாமும் இவர்கள் போன்றே அவருடைய திருவடிகளை அண்டி நிற்கும் தகுதி கொண்டவர்களே ஆவோம் என்பதை வெளிப்படுத்தவே ஆகும்", என்று நாம் அன்றாடம் சிந்தித்து நிற்கும்போது, நம்மை உரிமையுடன் எடுத்துக் கொள்வதற்காக ஆகும் என்றும் கொள்ளலாம். மஹாபாரதம்

சாந்திபர்வம் - துராசாரோபி ஸர்வாஸீ க்ருதக்நோ நாஸ்திக: புரா ஸமாஸ்ரயேத் ஆதிதேவம் ஸ்ரத்தயா ஸரணம்யதி நிர்த்தோஷம் வித்தி தம் ஜந்தும் ப்ரபாவாத் பரமாத்ந: - தீய ஒழுக்கம், உண்ணத் தகாதனவற்றை உண்ணுதல், நன்றி செய்தவனுக்குத் தீமை செய்தல், வேதநெறியினை இல்லை என மறுத்தல் ஆகியவற்றைப் எல்லையற்ற காலமாகச் செய்தபடி உள்ள ஒருவன், "இவன் நமக்கு அனுகூலன் ஆவது எப்போதோ?" என்று காலம் பார்த்திருக்கும் பகவானைச் சென்று அடைந்த பின்னர், அவனைக் குற்றம் அற்றவனாகவே நினைத்தல் வேண்டும் - என்றுள்ள வாக்கியம் இதற்குச் சான்றாகும். ஆனால் இப்போது கூறப்பட்டுள்ள வாக்கியத்தில் உள்ள "ஆதிதேவம்" என்று பதமானது, "முதல் ஆசார்யன்" என்ற பொருளில் வந்தது என்றாலும், அந்த ஸர்வேச்வரனே அனைத்திற்கும் எஜமானன் என்ற நிலையில் நின்று உபதேசித்த காரணத்தால், "ஆதிதேவம்" என்ற அந்தப் பதத்தை, அதே போன்று உபதேசிக்கும் எம்பெருமானாருக்கும் உபயோகப்படுத்தலாம் என்பதில் தவறில்லை. அல்லது எம்பெருமானார் அல்லாமல் மற்ற யாருக்கும் வசப்படாமல் உள்ள மஹாத்மாக்கள் எந்த வர்ணத்தைச் சேர்ந்தவர்களானாலும், எந்த நடத்தை உள்ளவர்களானாலும், எப்படிப்பட்ட தன்மை உள்ளவர்களானாலும், அந்தந்த வர்ணம் – நடத்தை - தன்மை ஆகியவை நமக்கு ஏற்கத்தக்கவையே ஆகும் என்றும் பொருள் கூறலாம். அந்த மஹாத்மாக்கள் எந்த வர்ணத்தில் பிறந்தாலும், இந்த உலகத்துடனான ஸம்பந்தம் காரணமாக, அந்தந்த வர்ணங்களுக்கு ஏற்றதான தன்மைகள் அல்லது நடத்தைகள் உண்டாகும் அல்லவோ?

வ்யாக்யானம் – குற்றங்களில்லையே யாகிலும், மணி தர்ப்பணாதி ஸ்வச்ச த்ரவ்யங்களிலே எதிரிருந்த பதார்த்தங்களெல்லாம் தோற்றுமாப்போலே நிர்மலரான அவர்களைக் கொண்டு தந்தாமுடைய ஸ்வபாவ வருத்தங்களை அவர்கள் பக்கலிலே ஏறிட்டுக் கொண்டு அஜ்ஞராய் ப்ரமித்திருப்பாரிறே சிலர், அப்படிப்பட்ட ஸ்வபாவ வ்ருத்தங்களேயாகிலும் நமக்குத்தேச்ய மென்னுதல்; அங்ஙனுமன்றிக்கே, அவர்களுக்கு சரீர ஸம்பந்தத்தாலே ப்ராமாதிகமாய்க் கொண்டு சில குற்றங்களுண்டாயிருந்தாலும், "லிப்யதே ந ஸ பாபேந பத்ம பத்ரமிவாம்பஸா" என்கிறபடியே, அவற்றோடு அவர்கள் ஒட்டற்றிறே யிருப்பது. அப்படியேயானாலும், அவர்களுக்கு அவையும் உண்டாகையாலே நம்மை உத்தரிப்பிக்கைக்கு அவையே போரும்; இப்படியே எம்பெருமானார்க்கு அநந்யார்ஹாராயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஜந்மவ்ருத்தாதிகளால் குறையுண்டானாலும், அவர்கள் நமக்கு ஆச்ரயணீயரென்று கருத்து.

விளக்கம் - அப்படிப்பட்ட மஹாத்மாக்கள் எந்தவிதமான தோஷங்களும் அற்றவர்களாக உள்ளபோதிலும், இரத்தினக்கல் மற்றும் கண்ணாடி போன்றவற்றில் எதிரே காணப்படும் பொருள்களுடைய உருவங்கள் ப்ரதிபலிப்பது போன்று, எந்தவிதமான தோஷமும் அற்ற அவர்கள் மீது தங்களுடைய தன்மைகள், நடத்தைகள் போன்றவற்றைச் சுமத்தி, அவர்களும் தங்கள் போன்று தோஷம் நிறைந்தவர்களே ஆவர் என்று அறியாமை காரணமாகச் சிலர் மயங்கி இருப்பர். அப்படிப்பட்ட தன்மைகள், நடத்தைகளும் நமக்கு ஏற்கத்தக்கவையே ஆகும். அல்லது, அவர்களுக்கு உள்ள சரீர ஸம்பந்தம் காரணமாக ஒரு சில தோஷங்கள் உண்டானாலும், லிப்யதே ந ஸ பாபேந பத்ம பத்ரமிவாம்பஸா - தாமரை இலைத்தண்ணீர் போல பாவம் தொடாமல் உள்ள நிலை வரும் – என்பதற்கு ஏற்ப அந்தக் குற்றங்கள் அவர்களிடம் ஒட்டாமல் இருக்கும். அப்படியே குற்றங்கள் இருந்தாலும், இது போன்றுள்ள தன்மை காரணமாக, நம்மை உயர்த்துவதற்கு அந்தத் தன்மையே போதுமானதாகும். ஆக இப்படியாக எம்பெருமானாருக்கு மட்டுமே வசப்பட்டுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பிறப்பு, நடத்தை போன்றவற்றால் தோஷம் ஏற்பட்டாலும், அவர்கள் அண்டி நிற்கத்தக்கவர்களே ஆவர் என்று கருத்து.

வ்யாக்யானம் – “யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே, தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதாஹ்யஹம்” என்று ம்லேச்சனானாலும் பக்தனாகில் என்னைப்போலே பூஜ்யன், அவன்பக்கல் ஜ்ஞாநோபதேசம் கொள்ளலாமென்றானிறே(). “அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாம் அநந்யபாக் ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ:” திருத்தேர்த்தட்டிலே அக்ஞாத ஜ்ஞாபநம் பண்ணா நின்று கொண்டு கீதாசார்யனான வென்னை அநந்ய ப்ரயோஜநனாய் பஜித்தானாகில் அவன் அப்படிப்பட்ட குற்றத்தை யுடையவனாகிலும் “ஸாதுரேவ ஸ மந்தவ்ய:” என்றானிறே. இத்தால், அவர்களுடைய ப்ராமாதிகமான ஸ்வபாவ வ்ருத்தங்களெல்லாம் அகிஞ்சித்கரம், ஆச்ரய ப்ராபல்யமே ப்ரதாநமாக அவர்கள் பூஜ்யரென்றபடி. “தஸ்மாத் மத்பக்த்த பக்தாச்ச பூஜநீயா விசேஷத:” என்றானிறே. “பயிலும் திருவுடையார் யவரேலும் அவர் கண்டீர் பயிலும் பிறப்பிடைதோறு எம்மையாளும் பரமரே”, “நம்மையளிக்கும் பிராக்களே”, “எம் தொழு குலம் தாங்களே”, “படியாதுமில் குழவிப் படி எந்தை பிரான் தனக்கு அடியார் அடியார் தம் அடியார் அடியார் தமக்கு அடியார் அடியார் தம் அடியார் அடியோங்களே”, “சிறுமா

மனிசராய் என்னையாண்டார் இங்கே திரியவே", "தமர்கள் தமர்கள் தமர்களாம் சதிரே வாய்க்க தமியேற்கே", "அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்லகோட்பாடே" என்று இவ்வர்த்தத்தை பத்தும் பத்தாக நம்மாழ்வா ரருளிச்செய்தாரிறே. "ப்ரத்யக்ஷிதாத்ம நாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்" என்றானிறே ஸ்ரீபரத்வாஜ மாஹாமுநியும்.

விளக்கம் - கருடபுராணம் – (பகவானின் வாக்கு) பத்தி ரஷ்டவிதாஹ் யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே, தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதாஹ்யஹம் - எட்டுவிதமான பக்தியானது மிகவும் தாழ்ந்த குலத்தில் பிறந்த ஒருவனுக்கு உள்ளது என்றால், அவனுக்கு அனைத்து சாஸ்த்ரங்களையும் உபதேசம் செய்யலாம்; நான் எவ்விதம் வணங்கத் தக்கவனோ அதே போன்று அவனும் வணங்கத்தக்கவன் - என்பதற்கு ஏற்ப, மிகவும் தாழ்ந்த செயல்கள் கொண்ட ஒருவன் எனது பக்தன் என்றால், அவனும் என்னைப் போன்றே வணங்கத்தக்கவன் ஆவான்; அவனிடம் ஞான உபதேசம் பெற வேண்டும் என்று ஸர்வேச்வரன் கூறினான் அல்லவோ? கீதை (9-30) – அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாம் அநந்யபாக் ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ: - ஒருவன் மிகவும் தாழ்வான ஒழுக்கங்களைக் கொண்டிருக்கக்கூடும். ஆயினும் அவன் எதனையும் எதிர்பாராமல் என்னிடம் பக்தியுடன் உள்ளான் என்றால், அவன் மிகவும் உயர்ந்த ஞானியே ஆவான். காரணம், அவன் என்னிடம் உறுதியான ஈடுபாடு கொண்டுள்ளான் அல்லவோ? – என்றது காண்க. அதாவது, "இந்தத் திருத்தேரில் நின்றபடி தனது அறியாமையை வெளிப்படுத்திக்கொண்டு, கீதாசார்யனான என்னை, மற்ற யாருக்கும் வசப்படாதவனாக நின்று, அர்ஜுனன் போன்று, எப்படிப்பட்ட தோஷம் உள்ளவனாக இருந்தாலும், ஸாதுரேவ ஸ மந்தவ்ய:" என்று கூறியது காண்க. இதன் மூலம், அடியார்களுடைய மயக்கம் காரணமாக அவர்களுக்கு வந்தேறியதான தன்மைகள், நடத்தைகள் போன்ற பலவும் ஒரு பொருட்டல்ல; அவர்கள் எம்பெருமானாரை அண்டி நிற்கும் தன்மை ஒன்றையே முக்கியமாகக் கொண்டு, அவர்கள் வணக்கத்தக்கவர்கள் என்றாகிறது. மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (116-23) – தஸ்மாத் மத்பக்த்த பக்தாச்ச பூஜநீயா விசேஷத: - எனவே எனது அடியார்களை நன்றாகப் பூஜித்தல் வேண்டும் - என்று க்ருஷ்ணனும் அருளிச்செய்தான் அல்லவோ? திருவாய்மொழி (3-7-1) – பயிலும் திருவுடையார் யவரேலும் அவர் கண்டீர் பயிலும் பிறப்பிடைதோறு எம்மையாளும் பரமரே, திருவாய்மொழி (3-7-5) – நம்மையளிக்கும் பிராக்களே, திருவாய்மொழி (3-7-8) –

எம் தொழு குலம் தாங்களே, திருவாய்மொழி (3-7-10) – படியாதுமில் குழவிப் படி எந்தை பிரான் தனக்கு அடியார் அடியார் தம் அடியார் அடியார் தமக்கு அடியார் அடியார் தம் அடியார் அடியோங்களே, திருவாய்மொழி (8-10-3) – சிறுமா மனிசராய் என்னையாண்டார் இங்கே திரியவே, திருவாய்மொழி (8-10-9) – தமர்கள் தமர்கள் தமர்களாம் சதிரே வாய்க்க தமியேற்கே, திருவாய்மொழி (8-10-10) – அவர்க்கே குடிகளாய்ச் செல்லும் நல்லகோட்பாடே - என்று கீழே உள்ள கருத்தையே நம்மாழ்வாரும் பத்து பத்து பாசுரங்களாக அருளிச்செய்தார் அல்லவோ? இதனையே, பவிஷ்யோத்தர புராணம் – கிமப்யத்ராபி ஜாயந்தே யோகிநஸ் ஸர்வயோனிஷு ப்ரத்யக்ஷிதாத்ம நாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம் – யோகிகள் இந்தப் பூமியில் பல பிறவிகளில் பிறக்கிறார்கள். ஜீவாத்மாக்களின் நாதனான பரமாத்மாவை நேரில் கண்டறிந்த அவர்களுடைய குலம், தொழில் போன்றவை ஆராயத்தக்கதல்ல - என்று பரத்வாஜ மஹாமுனிவரும் உரைத்தமை காண்க.

வ்யாக்யானம் - இனி, (அக்குற்றம்) என்றதுக்கு ப்ராமாதிகமாய் வந்ததன்றிக்கே ஆச்ரயணாந்தரபாவி புத்திபூர்வாகபரமாய் அர்த்தஞ்சொல்லில், "தீ பூர்வோத்தர பாப்மநா மஜநநாத்" என்றும், "புண்யத்துக்கு அஞ்சுகிறவன் பாபத்தைப் பண்ணானிறே" என்றுஞ் சொல்லுகையாலே இவர்களுக்கு அது புத்திபூர்வகமாக வர வழியில்லை. "ஜாதேபி" என்கிறபடியே ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலே புத்திபூர்வகமாக ப்ரஸக்தமானாலும், "என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்றுஞ் சொல்லப்படுகிற பகவதபிஸந்தி விசேஷத்தாலும், "வாத்ஸல்ய ஜலதே" என்கிறபடியே அவன் ஸ்வாச்ரிதருடைய குற்றத்தை போக்யமாகக் கொள்ளும் ஸ்வபாவனாகையாலும், "இறையும் அகலகில்லேன்" என்று அவனைப் பிரியாதே நித்யாநபாயிநியா யிருக்கிற பெரியபிராட்டியாருடைய புருஷகார பலத்தாலும் குற்றத்தை அவளாலே பொறுப்பித்துக் கொள்ளத் தட்டில்லை, ஓரஞ்சலி மாத்ரத்தாலே நசிக்கக் கடவதான பாவத்தை.

விளக்கம் - இனி "அக்குற்றம்" என்பதற்கு, "அவை மயக்கத்தின் காரணமாக வந்தது அன்று; ஸர்வேச்வரனை அண்டி நின்ற பின்னரும், அவர்கள் அறிந்துகொண்டே செய்த தீய செயல்களால் வந்தது" என்று சிலர் பொருள் உரைக்கலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் (அத்யாயம் 6) – தீபூர்வோத்தர பாப்மநா

மஜ்ஜநநாத் – ப்ரபத்திக்குப் பின்னர் ஒருவனுக்கு மனமறிந்து செய்யும் பாவங்கள் நேராது - என்றும், "புண்யங்கள் பந்தப்படுத்தும் என்று அவற்றுக்கே அஞ்சுபவன், நிச்சயம் பாவங்களைச் செய்யமாட்டான் அல்லவோ" என்றும் கூறுவதற்கு ஏற்ப, அது போன்ற நிலையானது, இவர்கள் அறிந்துகொண்டே செய்த செயல்களால் ஏற்பட்டதல்ல. ஜாதேபி - வந்தேறியது - என்பதற்கு ஏற்ப, இந்த உலகின் தொடர்பு காரணமாக அவர்கள் அறிந்து கொண்டே செய்ததன் விளைவாக, அந்தக் குற்றங்கள் அவர்களுக்கு வந்தன என்று கொண்டாலும், பெரியாழ்வார் திருமொழி (4-9-2) – என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார் - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள ஸர்வேச்வரனுடைய திருவுள்ளத்தின் வெளிப்பட்டாலும், சரணாகதி கத்யம் – வாத்ஸல்யைக ஜலதே – தன்னை அண்டியவனிடம் வாத்ஸல்யத்தின் ஸமுத்திரம் போன்றவனே - என்று கூறுவதற்கு ஏற்ப அவன் தன்னுடைய அடியார்கள் செய்யும் குற்றங்களையும் இன்பமாகவே கருதுவதாலும், திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் இறையும் – ஒருநொடியும் அகலமாட்டேன் - என்று எப்போதும் அவனை விட்டு அகலாமல், அவனை விட்டு அகன்றால் அடியார்களுக்குத் துன்பம் ஏற்படும் என்று எண்ணி, எப்போதும் அவனை விட்டுப் பிரியாமல் உள்ள பெரியபிராட்டியின் சிபாரிசு காரணமாக, அடியார்களுடைய குற்றங்களை அவள் மூலம் பொறுத்துக் கொள்ளும்படியாக உள்ள நிலையில் எந்தக் குறையும் இல்லை. ஓர் அஞ்ஜலி மூலம் மட்டுமே அவன் அனைத்து பாவங்களையும் அழிக்கிறான் அல்லவோ?

வ்யாக்யானம் – "ஸர்வபாபேப்யோ மோக்ஷ இஷ்யாமி" என்று கீதாசார்யனும், "ததைவமுஷ்ணாத் யசுபாந் யசேஷத:" என்று ஆளவந்தாரும், "ஸர்வ" சப்தத்தா லசேஷ பத்த ஸாமாநாதி கரண்யேந வந்த பாபத்தை நிர்த்தேசிக்கையாலே அந்த சப்தங்களிலே புத்தி பூர்வோத்தராகமும் அந்தர்ப்பவிக்குமிறே. ஸர்வேச்வரன் இவனுடைய குற்றத்தை அபேக்ஷித்தானாகிலும், அவனுக்கு ஒரு குற்றமடையாதபடி ப்ரபந்நனும் சாவதாநமா யிருக்க வேணும். இப்படிப்பட்ட ப்ரபாவம் அவர்கள் பக்கல் உண்டாயிருக்கையாலே, அத்தையிட்டு அவர்களை அநாதரியாதே, அவர்கள் எனக்கு சேஷிகள் என்று அத்யவஸிக்க வேணும் என்றதாய்த்து. இவ்வளவான ப்ரதிபத்தி பிறந்தாலிறே இவனுக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கலிலே ஸஜாதீயதா ப்ரதிபத்தி குலைந்ததாவது.

விளக்கம் – கீதை (18-66) – ஸர்வபாபேப்யோ மோக்ஷ இஷ்யாமி – அனைத்து பாவங்களிலிருந்தும் விலக்கி - என்று க்ருஷ்ணனும், ஸ்தோத்ர ரத்னம் (28) – ததைவமுஷ்ணாத் யசுபாந் யசேஷத: - கைகூப்புதல் என்பது அப்போதே பாவங்களை மீதம் இல்லாமல் போக்குகிறது - என்று ஸ்வாமி ஆளவந்தாரும், "ஸர்வ" என்னும் பதத்தால், அனைத்துவிதத்திலும் சூழ்ந்து கொண்டு வரும் பாவங்களை உறுதிபடக் கூறுவதால், அந்த "ஸர்வ" என்று சப்தத்தில், அறிந்துகொண்டே செய்யும் செயலால் வரும் பாவங்களும் அடங்கிவிடும் அல்லவோ? அடியார்கல் செய்யும் குற்றங்களைப் பொறுத்துக் கொள்ள ஸர்வேச்வரன் விருப்பத்துடன் உள்ளான் என்றாலும், "அவன் அனைத்தையும் மன்னிக்கிறான்" என்ற அவப்பெயர் அவனுக்கு ஏற்படாதவிதத்தில், ப்ரபந்நன் கவனமாக இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட உயர்ந்த ப்ரபாவங்கள் அவர்களிடம் உள்ளது என்ற காரணத்தால், இப்படிப்பட்ட ப்ரபாவங்கள் என்னிடம் எதும் இல்லை என்று என்னை நானே தாழ்வாக எண்ணிக்கொண்டு, அவர்களை விட்டு நான் அகன்றுவிடாமல், "அவர்கள் எனது எஜமானர்கள்" என்று எண்ணியபடி இருத்தல் வேண்டும் என்கிறார். "அடியார்களுக்குக் குற்றங்கள் உண்டு" என்னும் எண்ணம் ஏற்பட்டால் அல்லவோ ஒருவனுக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் குறித்து "இவர்கள் நம் போன்றவர்கள்" என்னும் எண்ணம் மாறிவிடும்?

27. கொள்ளக் குறைவு அற்று இலங்கி கொழுந்துவிட்டு ஓங்கிய உன்
வள்ளல் தனத்தினால் வல்வினையேன் மனம் நீ புகுந்தாய்
வெள்ளைச் சுடர்விடும் உன் பெருமேன்மைக்கு இழுக்கு இதென்று
தள்ளுற்று இரங்கும் இராமானுச என் தனி நெஞ்சமே.

விளக்கவுரை – எம்பெருமானாரே! உன்னுடைய ஔதார்யம் என்ற வள்ளல் தன்மை எப்படி உள்ளது என்றால் – அன்றாடம் மேகங்கள் நீரை எடுத்தாலும் குறையாமல் உள்ள ஸமுத்திரம் போன்று, அள்ளஅள்ளக் குறையாமல் உள்ளது; ஆனால் அந்தக் கடல் போன்று, அதே அளவில் இல்லாமல் மேன்மேலும் ப்ரகாசம் அடைவது உனது வள்ளல் தன்மை ஆகும். வள்ளல் என்று கூற என்ன காரணம் உள்ளது? இந்த உலகில் உள்ள அனைவருக்கும் பகவானின் ஸ்வரூபம், ரூபம் பற்றி உபதேசம் செய்து, "இவ்விதம் செய்து விட்டோம், இது போதும்", என்று எண்ணாமல், அனைவரும் அனைத்துக் காலத்திலும

உய்யும் விதமாக ஸ்ரீபாஷ்யம் மற்றும் கீதா பாஷ்யம் போன்றவற்றை அருளிச்செய்து வைத்தார். சிபிச்சக்ரவர்த்தி போன்றவர்களும் வள்ளல் எனப்படுகிறார்களே என்ற கேள்வி எழலாம். அவர்கள், ஏழைகளாக வந்தால் அழியக்கூடிய செல்வத்தைப் பரிசாக அளிக்கவல்லவர்களாக இருந்தனர்; நீயோ வந்தவர்களின் நிலை பாராமல், வேறு கதி இல்லை என்று வந்தால், உயர்ந்த மோக்ஷ உபாயத்தையே பரிசாக அளிக்க வல்லவர் அல்லவோ? நான் அழியும்படியாகவே (எனது மனசாட்சிக்குத் தெரிந்தே) பல பாவங்களை இயற்றியபடி இருந்தேன். இப்படிப்பட்ட பாவியான எனது மனதில், பரமபதத்தின் நாயகனால் கௌரவிக்கப்பட்ட நீ புகுந்தாய். உனது உயர்வு எங்கே, பாவியான நான் எங்கே? இது சேர இயலாத தொடர்பாக அல்லவா உள்ளது? இந்த உலகின் சிரமங்களைத் தனது குளிர்ந்த ஒளியால் ஆற்றவல்ல சந்திரனுக்குக் கூட களங்கம் உண்டு. ஆனால் பகவத் கடாக்ஷம் முழுமையாகப் பெற்ற உனக்கு, உன்னுடைய தேஜஸ்ஸுக்கு எந்தவிதமான களங்கமும் இல்லாமல் உள்ளவரே! கூரத்தாழ்வானைக் கொண்டு என்னை நல்வழிப்படுத்தி, அரங்கனுக்கே அடிமையாகும்படி அருளியதால், உனக்கு இந்தக் களங்கமற்ற தேஜஸ் உள்ளது போலும். வெண்மையான சுடர் போன்று எந்தவிதமான களங்கமும் அற்ற நீவிர் என் நெஞ்சில் புகுந்ததால், உனது மேன்மைக்கு இழுக்கு ஏற்பட்டுவிடும் என்று அறிந்து எனது நெஞ்சம் தவித்தபடி உள்ளது.

அவதாரிகை - இப்படி இவர் தமக்கு அநந்யார்ஹர்பக்கலிலே ப்ரதிபத்தி பண்ணினவாறே எம்பெருமானார் இவருடைய நெஞ்சு, குற்றமே ஸர்வகாலமும் விஷயமாக்கிக் கொடுக்க பாபிஷ்டனான என்னெஞ்சிலே புகுந்தருளின விது தேவரீருடைய ப்ரபாவத்துக்கு அவத்யமன்றோவென்று என்னெஞ்சு தளராநின்ற தென்கிறார்.

விளக்கம் - இவ்விதம் இவர் மற்றவர்களுக்கு வசப்பட்டு நின்றபடி அவர்களையே எண்ணியபடி உள்ளபோது, எம்பெருமானார் இவருடைய நெஞ்சத்துக்கு எப்போதும் தன்னையே இலக்காக்கியபடி இருந்தார். இதனைக் கண்ட இவர், “மிகுந்த பாவங்கள் பல செய்தபடி உள்ள எனது நெஞ்சத்தில் புகுகிறீரே! இது உம்முடைய மேன்மைக்குத் தாழ்வை ஏற்படுத்தும் அல்லவோ?” என்று எண்ணியபடி மனம் கலங்கி உரைக்கிறார்.

வ்யாக்யானம் - (கொள்ளக் குறைவற்று) வேண்டுவார் வேண்டுவதெல்லாம் கொண்டாலும், ஒரு குறைவின்றிக்கே – குறைப்பட்டிராதே. மஹாமேருவானாலும்

நித்யவாஸம் பண்ணத் தொடங்கினால் நாளுக்கு நான் குறைப்பட்டு அழிந்து போமிறே; இங்கு அப்படியன்றிக்கே புஷ்கலாவர்த்தகாதி மேகங்கள் பருகினாலும் ஸமுத்ரஜலம் குறைப்பட்டிராதே நிச்சலமாய் பூர்ணமாயிருக்குமாப்போலே யிருந்தது. (இலக்கி) இந்த ப்ரபாவத்தாலே, "ஆவிரபூத் ராமாநுஜதிவாகர:" என்றாப்போலே அத்யுஜ்வலமாய். (கொழுந்து விட்டோங்கிய) ஸமுத்ரத்துக்கும் இவருடைய வள்ளல்தனத்துக்கும் ஒரு வாசியுண்டு; அது அதிகம்பீரமாய்ப் பொருந்தி இருந்தபடியே யிருக்கும்; இந்த வள்ளலானால் லோகத்திலே இவருடைய க்ருபா விஷய பூதரெல்லாரும் வாங்கிக் கொண்டு போந்தால் அதுவே ஹேதுவாக ப்ரகாசித்து பல்லவித்து பரமபத பர்யந்தமாகப் படராநிற்கும்; இப்படி ஓங்கி வளராநிற்க.

விளக்கம் - (கொள்ளக் குறைவற்று) கேட்பவர்களுக்குக் கேட்டவற்றை அளித்தபடி இருந்தாலும் எந்தவிதமான குறைவும் இல்லாமல் – அதாவது குறையாமல். மிகவும் உயர்ந்த மேருமலை என்றாலும், அதில் எப்போதும் இருக்கின்ற உயிர்கள் காரணமாக அது நாளுக்கு நாள் தேய்ந்தபடி அல்லவோ இருக்கும்? அவ்விதம் அல்லாமல், மழையை அளிக்கும் பொருட்டு மேகங்கள் ஸமுத்திரத்தில் எந்த அளவு நீரை எடுத்தாலும், குறைவற்றும் அசைவற்றும் பூர்ணமாகவே ஸமுத்திரம் உள்ளது. அது போன்று இங்கும் உள்ளது. (இலக்கி) – இப்படிப்பட்ட மேன்மையால். ஆவிரபூத் ராமாநுஜதிவாகர: - என்பதற்கு ஏற்ப மிகவும் ப்ரகாசமாக. (கொழுந்து விட்டோங்கிய) - ஸமுத்ரத்திற்கும் எம்பெருமானாரின் வள்ளல் தன்மைக்கும் ஒரு வேறுபாடு உண்டு. ஸமுத்திரமானது மிகவும் கம்பீரமாக ஒரே இடத்தில் ஒரே போன்று நிலையாக நிற்கும். ஆனால் இவருடைய வள்ளல் தன்மையானது, இந்த உலகத்தில் உள்ள பலரும் இவருடைய கருணைக்கு இலக்காகும்படிச் செய்து, அதன் காரணமாக மேன்மேலும் ப்ரகாசித்து, பரமபதம் முடிய ஓங்கி வளர்ந்தபடி இருக்கும்.

வ்யாக்யானம் - (உன் வள்ளல் தனத்தினால்) இவர்தாம் தம்முடைய அவதாரதசையே பிடித்து எல்லாருக்கும் பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை, "அறியாதனவறிவித்து" என்கிறபடியே விசதமாகத் தெளியும்படி உபதேசித்து, இப்படி பண்ணினோமேயென்று ஆறியிருக்கையன்றிக்கே, ஸர்வரும் ஸர்வகாலமும் அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதி ப்ரபந்தங்களைப் பண்ணியருளி உபகரித்தாரிறே. க்ரந்த கரணத்தை, "வள்ளல்" என்பாரோ வென்னில், "தத்வேன யச்சித சிதீச்வர தத் ஸ்வபாவ

போகாபவர்க்க ததுபாய கதீருதார: ஸந்தர்சயந் நிரமிமீத புராண ரத்னம்" என்று ஆளவந்தாரு மருளிச்செய்தாரிறே.

விளக்கம் - (உன் வள்ளல் தனத்தினால்) – எம்பெருமானார், தான் அவதாரம் செய்த காலம் தொடங்கி, அனைவருக்கும் பகவானின் ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி போன்றவற்றை, திருவாய்மொழி (2-3-2) – அறியாதன அறிவித்து - என்பதற்கு ஏற்ப மிகவும் விரிவாக, நன்றாகத் தெளியும்படி உபதேசித்து, இவ்விதம் அனைவருக்கும் உபதேசித்துவிட்டோம் என்று மேற்கொண்டு ஏதும் செய்யாமல் இருந்துவிடாமல், அனைவரும் எப்போதும் இதனையே எண்ணிக் கரையேறவேண்டும் என்று சிந்தித்தார். அதனால் ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம் போன்றவற்றை அருளிச்செய்தார். ஆனால் இவ்விதம் பல நூல்களை ஏற்படுத்தியதன் காரணமாக "வள்ளல்" என்று கூறிப் புகழ்வது உண்டோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார். ஸ்தோத்ரரத்னத்தில் (4) – தத்வேன யச்சித சிதீச்வர தத் ஸ்வபாவ போகாபவர்க்க ததுபாய கதீருதார: ஸந்தர்சயந் நிரமிமீத புராண ரத்னம் – சேதனங்கள், அசேதனங்கள், ஈச்வரன் போன்றவை எவை, அவற்றின் தன்மைகள் என்ன, ஸுகம் என்பது என்ன, மோக்ஷம் என்ன, இவற்றுக்கான உபாயம் என்ன, அவற்றை அனுபவிக்கச் செல்லும் மார்க்கம் என்ன போன்றவற்றை உள்ளது உள்ளபடி விளக்கவல்லதும், புராணங்களில் இரத்தினமாக உள்ளதும் ஆகிய ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை, எத்தகைய வள்ளல் தன்மை கொண்டவராகிய பராசரர் - என்று ஸ்வாமி ஆளவந்தார் அருளிச்செய்தமை காண்க.

வ்யாக்யானம் - (உன் வள்ளல் தனத்தினால்) லோகத்திலே கர்ண சிபி மாந்தாதாதிகள் வதான்யராய் அநேகம் பேருண்டு. அவர்கள் ஸகாசத்திலே பாத்ரனான அர்த்தி வந்தால், அர்த்தங்கலைக் கொடுப்பார்களென்று ப்ரஸித்தமா யிருக்கும்; அப்படியன்று தேவரீருடைய வள்ளல்தனம். அர்த்தித்வ நிரபேக்ஷமாக பாத்ராபாத்ரங்களைப் பாராதே ஆகிஞ்சந்ய அநந்ய கதித்வங்களே பற்றாசாகக் கொண்டு பரமபுருஷார்த்தத்தையே கொடுக்கக் கடவதாயிருக்கும்; இப்படிப்பட்ட தேவரீருடைய ஔதார்யத்தாலே. வள்ளலுடைய மஹாத்ம்யம் சொன்னீரோ அது உமக்கு தெளிந்தபடி யென்னென்ன; நான் புறம்பே எங்கேயாகிலும் சென்று கர்ணா கர்ணியாய்க் கேட்டுத் தெளிந்தேனா, இது ஸ்வபாவத்தாலே வந்ததன்றோ வென்கிறார்.

விளக்கம் - (உன் வள்ளல் தனத்தினால்) - இந்த உலகத்தில் கர்ணன், சிபி, மாந்தாதா என்று கொடைவள்ளல்கள் பலர் உண்டு. அவர்கள் இருப்பிடம் தேடி, பொருள் வேண்டும் என்று யாசித்து வந்தால், பொருள்களை அவர்கள் அள்ளிக் கொடுப்பார்கள். ஆனால் எம்பெருமானாராகிய உம்முடைய வள்ளல்தன்மை அவ்விதம் அல்ல. "என்னிடம் பொருள் ஏதும் இல்லை" என்று வெறும் கையைக் காண்பிப்பவர்களுக்குத் தகுதி உள்ளதா அல்லது தகுதி இல்லையா என்று ஆராயாமல், "நான் சரணாகதி செய்வதற்கு என்னிடம் எந்தக் கைம்மாறும் இல்லை, மற்ற யாரும் எனக்கு அடைக்கலம் இல்லை" என்றுள்ள அவர்களுடைய தன்மைகளையே கைம்மாறாகக் கொண்டு, பரமபுருஷார்த்தமாகிய மோக்ஷ உபாயத்தை அவர்களுக்கு அளிக்கிறீர். இப்படியாக உள்ள உம்முடைய தாராள குணம் கொண்ட மனத்தாலே. "இவ்விதமாக எம்பெருமானாரின் வள்ளல் தன்மை உள்ளது என்று அதன் மாஹாத்ம்யம் குறித்து உரைக்கிறீரே. இது குறித்து நீவிர் எப்படி அறிந்தீர்?", என்று திருவரங்கத்தமுதனாரிடம் சிலர் கேட்க அவர் அவர்களிடம், "இது குறித்து நான் கர்ணபரம்பரை கதைகள் போன்று செவிவழிச் செய்தியாகவோ உரைத்தேன்! அல்லவே! இது அவருடைய இயல்பாகவே உள்ள தன்மை அல்லவோ?", என்கிறார்.

வ்யாக்யானம் - (வல்வினையேன் மனம்) நன்மையென்று பேரிடலாலதொரு தீமையு மின்றிக்கே யொழிந்தாலும், "திருவடி தன் நாமம் மறந்தும் புறந்தொழா மாந்தர்" என்கிறபடியே தடஸ்த்தனா யிருந்தேனோ. நான் அறியும்படியே மஹாகோரமான பாபங்களைப் பண்ணினேன். இப்படி பாபிஷ்ட்டனான வென்னுடைய மநஸ்ஸிலே; "பந்தாய விஷயாஸங்கீ" என்னப்பட்ட மநஸ்ஸிலே. (நீ புகுந்தாய்) உபயவிபூதி ஸாம்ராஜ்யத்துக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட தேவரீர் புகுந்தீர். உம்மை என் மநஸுக்கு விஷயமாக்கியே நிறுத்தினீரென்றபடி. இத்தைப் பார்த்தால் அத்யந்த பாபிஷ்ட்டனான நான் எங்கே, "ஸ்ரீவிஷ்ணுலோக மணிமண்டப மார்க்கதாயீ" என்னும்படியான அப்ரதிம ப்ரபாவத்தையுடைய தேவரீர் எங்கே. இது சேராச் சேர்த்தியன்றோ. சண்டாள வாடிகைக்குள்ளே வஸிஷ்டன் புகுந்தாப்போலே இது அதிஸாஹஸ ப்ரவர்த்தியா யிருக்கு மென்றபடி. (இராமாநுசா) எம்பெருமானாரே.

விளக்கம் - (வல்வினையேன் மனம்) - நன்மை என்று கூறவும் வழியின்றி, தீமை ஏதும் இல்லாதபடி இருந்தாலும். நான்முகன் திருவந்தாதி (68) – திருவடி தன் நாமம் மறந்தும் புறந்தொழா மாந்தர் - என்பதற்கு ஏற்ப நடுநிலை தவறாதபடி இருந்தேனா என்றால், அதுவும் இல்லை. எனது மனம் உணர்ந்திருந்தும் மிகவும் கொடிய பாவங்களைச் செய்தேன். இவ்விதம் மிகுந்த பாவங்கள் நிறைந்த எனது மனதில். ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-7-28) – மன ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: பந்தாய விஷயாஸங்கி – மனிதனின் பந்தங்களுக்கும் மோக்ஷத்திற்கும் காரணம் மனமே ஆகும்; அதுவே உலகவிஷயங்களுடனான பந்தங்களை உண்டாக்குகிறது – என்பதற்கு ஏற்ப உள்ள மனதில். (நீ புகுந்தாய்) – "நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டிற்கும் நீரே பொறுப்பு", என்று ஸ்ரீரங்கநாதனால் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்ட நீவிர் புகுந்தீர். உம்மை எனது மனதிற்கு இலக்காக்கி நின்றீர். இதனை நோக்கும்போது, எல்லையற்ற பாவங்கள் செய்தபடி உள்ள நான் எங்கே, தாடீ பஞ்சகம் (5) - ஸ்ரீவிஷ்ணுலோக மணிமண்டப மார்க்கதாயீ – ஸ்ரீமந்நாராயணன் அமர்ந்துள்ள பரமபதம் செல்லும் வழியைக் காட்டினார் - என்பதற்கு ஏற்ப இந்த உலகில் காண இயலாத மேன்மைகள் பொருந்திய நீவிர் எங்கே; இது என்ன சேராப்பொருத்தமாக உள்ளதே! மற்றவர்கள் வசிக்கும் பகுதிக்குள் வசிஷ்டர் புகுந்தது போன்று, உம்முடைய இந்தச் செயல் வேறு யாராலும் செய்ய இயலாத ஒன்றாக உள்ளதே! (இராமாநுசா) எம்பெருமானாரே.

வ்யாக்யானம் - (வெள்ளைச்சுடர்) லோகோபகாரமாய் ச்ரமஹரமான சந்த்ர தேஜஸ்ஸுக்கும் ஒரு களங்கமுண்டு; அப்ராக்ருதமாய் பகவத் கடாக்ஷ விசேஷத்தாலே வந்ததாகையாலே தேவரீருடைய தேஜஸ்ஸு அப்படிப்பட்டதன்றே, "அடியார்க்கென்னை யாள் படுத்த விமலன்" என்கிறபடியே ஆழ்வானையிட்டு என்னைத் திருத்துவித்து அவருக்கு சேஷபூதனாம்படி க்ருபை பண்ணியருளுகையாலே அதிநிர்மலமா யிருக்கு மென்றபடி. இப்படிப்பட்ட தேவரீருடைய பராபிபவந ஸாமர்த்த்யமாகிற தேஜஸ்ஸை. (விடும்) லோகத்திலே மாம்பழமிருக்கிற தோப்பை கொள்ளையாகவிடும் தார்மிகரைப் போலே, "ச்வஸித அவதூத பரவாதி வைபவா:" என்று கொண்டாடும்படி ஸ்வாச்ரிதருக்கு முற்றூட்டாகக் கொடுத்தருளுகிற. (உன் பெருமேன்மைக் கிழுக்கி தென்று) "நிகம ஜலதிவேலா" பூர்ண சந்த்ரராகையாலே எல்லாருக்கு மொக்க பவ்யராயிருக்கும் தேவரீருடைய மஹத்தான அப்ரதிம வைபவத்துக்கு அவத்யமென்று கொண்டு.

விளக்கம் – (வெள்ளைச்சுடர்) - இந்த உலகில் உள்ளவர்களின் களைப்பை நீக்கும் விதமாகக் குளிர்ந்துள்ள சந்த்ரனுடைய தேஜஸ்ஸுக்கும் கூட களங்கம் உண்டு. ஆனால் இந்த உலகியல் பொருள்களால் ஆகாததான பகவத் கடாக்ஷம் காரணமாக வந்ததால் உம்முடைய தேஜஸ் அது போன்று களங்கம் இல்லாதது அல்லவோ? அமலனாதிபிரான் (1) – அடியார்க்கென்னை யாள் படுத்த விமலன் - என்பதற்கு ஏற்ப கூரத்தாழ்வான் மூலம் என்னை நேர்வழிப்படுத்தி, அவருக்கு நான் அடிமை என்னும்படியாகக் க்ருபை செய்து அருளிய காரணத்தால், உம்முடைய தேஜஸ் எந்தவிதமான தோஷம் இன்றி இருக்கும். இவ்விதம் அனைவரையும் ஈர்க்கின்ற ஸாமர்த்யம் என்ற உம்முடைய தேஜஸ்ஸை. (விடும்) - இந்த லோகத்தில் மாம்பழங்கள் நிறைந்த தங்களுடைய தோப்பில் உள்ளவற்றை, யார் வேண்டுமானாலும் பறித்துப் போகட்டும் என்ற தாராள எண்ணம் கொண்ட நல்லவர்கள் போன்று. யதிராஜ ஸப்ததி (21) - ச்வஸித அவதூத பரவாதி வைபவா: - தங்களது மூச்சுக்காற்று மூலமே தங்கள் வாதங்களை எதிர்ப்பவர்களை வீழ்த்திவிடுவர் - என்பதற்கு ஏற்ப கொண்டாடும்படியாக உம்மை அடைந்து நிற்பவர்களுடைய பரிபூர்ணமான அனுபவத்துக்கு இலக்காக ஆகும்படி க்ருபையை அளித்தருளுகின்ற. (உன் பெருமேன்மைக் கிழுக்கி தென்று) – யதிராஜ ஸப்ததி (29) - நிகம ஜலதி வேலா பூர்ண சந்த்ரோ யதீந்த்ர: - வேதம் என்னும் கடலானது பொங்கி எழும்படிச் செய்யும் முழுநிலவு போன்றும் யதிராஜர் உள்ளார் – என்பதற்கு ஏற்ப பூர்ணமான சந்த்ரன் போன்றவர் என்பதால், அனைவரும் ஒரே போன்று அணுகுவதற்கு மிகவும் எளிமையாக உள்ள உம்முடைய மேன்மையான வைபவத்துக்குத் தாழ்ச்சி ஏற்படும் என்று கொண்டு.

வ்யாக்யானம் - (இழுக்கிதென்று) பிராட்டி தன்னுடைய க்ருபையை வெளியிடுகைக்காக ராவணபவநத்திலே புகுந்தால் அது லோகத்தாருக்கும் ஈச்வரனுக்கு அஸஹ்யமா யிருந்தாப்போலே, அவரும் இவர்தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்து நின்றால் அது அவருடைய மேன்மைக்கு அஸஹ்யமாய், அதுக்கு அவத்யத்தை விளைக்குமென்றுகாணும் இவருடைய அத்யவஸாயம். (என் தனிநெஞ்சமே) மநஸ்ஸிலே ஒரு க்லேச முண்டானவாறே தனக்கு ஆப்த்தராயிருப்பாரோடே சொன்னால் செய்தது சாமகமா யிருக்கும், அதுக்கு நமக்கு ஒரு ஸஹாய பூதருண்டோ. இப்படி பயப்படுகைக்கு தன்போல்வா ரொருவரும் இல்லாமையாலே அத்விதீயமான மநஸ்ஸென்னவுமாம். இந்த ப்ரகாரமான மநஸ்ஸானது. (தள்ளுற்றிரங்கும்) தளர்ந்து ஈடுபடா நின்றதென்று போர

நிர்வேதப் படுகிறாராய்த்து. தள்ளுதல் - தளும்புதல். இரக்கம் – ஈடுபாடு. (என் தனி நெஞ்சமே) இத்தனை நாளும், தான் பண்ணின ப்ராதிகூல்யத்துக்கு தன்னோடு ஸத்ருசில்லை யென்றிருக்கிற என்னுடைய மநஸ்ஸென்னவுமாம்.

விளக்கம் - (இழுக்கிதென்று) - சீதை தனது க்ருபையை உணர்த்துவதற்காக இராவணனின் இருப்பிடத்திற்குச் சென்றாள் என்றபோதிலும், அந்தச் செயல் உலகில் உள்ளவர்களாலும், ஸர்வேச்வரனாகிய இராமனுக்கும் பொறுக்க இயலாததே ஆகும். அதே போன்று இவரும், திருவரங்கத்தமுதனாராகிய தன்னுடைய மனதில் புகுந்தால் அது அவருடைய மேன்மைக்கு பொறுக்க இயலாத தாழ்வை ஏற்படுத்தும் என்கிறார். இவ்விதம் தனது தாழ்வை உரைக்கும்படியாக இவருக்கு உள்ளத்தில் துணிவு உள்ளது. (என் தனிநெஞ்சமே) – மனதில் ஏதேனும் துன்பம் ஏற்பட்டால், அதனை நம்முடைய நன்மையைக் குறித்து மட்டுமே எண்ணும் ஒருவரிடம் உரைத்தால் சற்று ஆறுதல் ஏற்படும். அவ்விதம் கூறும் அளவிற்கு நமக்கு யாரும் உண்டோ என்று அச்சம் கொள்கிறார். இதற்குக் காரணம் தன்னைப் போன்று மிகவும் தாழ்ந்தவர்கள் யாரும் இல்லை என்ற எண்ணமே ஆகும். தன்னுடைய மனம் போன்று இன்னொன்று உண்டு என்று கூற இயலாதபடியான தனது மனம். இப்படிப்பட்ட மனமானது. (தள்ளுற்றிரங்கும்) – தளர்ந்து நிற்கிறது என்று மிகவும் வேதனை அடைகிறார். இரக்கம் என்றால் ஈடுபாடு. (என் தனி நெஞ்சமே) - இதுவரை தான் செய்து வந்த விரோதமான செயல்களுக்கு, தன்னுடன் ஒத்துப் போகாமல் நின்ற தனது மனம் என்றும் பொருள் உரைக்கலாம்.

28. நெஞ்சில் கரைகொண்ட கஞ்சனைக் காய்ந்த நிமலன் நங்கள்
பஞ்சித் திருவடிப் பின்னைதன் காதலன் பாதம் நண்ணா
வஞ்சகர்க்கு அரிய இராமானுசன் புகழ் அன்றி என்வாய்
கொஞ்சிப் பரவகில்லாது என்ன வாழ்வு இன்று கூடியதே.

விளக்கவுரை – அசரீரி கூறியதைக் கேட்டுத் தனது மனதில் க்ருஷ்ணன் மீது எப்போதும் விரோதம் கொண்டு கம்ஸன் இருந்தான். இப்படியாக நெஞ்சத்தில் கறை ஒன்றைக் கொண்டிருந்த கம்ஸனை, ஸம்ஹாரம் செய்தவன்; என்னை எம்பெருமானார் திருவடிகளில் பொருந்தி இருக்கும்படி அருளியவன் (நிமலன்); தாழ்வுகளுக்கு எதிர்தட்டாக

உள்ளவன் (நிமலன்) ; பஞ்சு போன்ற வெண்மையான திருவடிகளை உடைய நப்பின்னை பிராட்டியின் நாயகன் – இப்படிப்பட்ட கண்ணனின் திருவடிகளை அண்டாமல் உள்ள வஞ்சக நெஞ்சம் படைத்தவர்களால் நெருங்க இயலாமல் உள்ளவர் எம்பெருமானார் ஆவார். என் போன்ற தாழ்ந்தவர்களின் மனதிலும் புகுந்து நிற்கும் எம்பெருமானாரின் உயர்ந்த குணங்கள் தவிர, வேறு எதனையும் உயர்வாகக் கூறி, எனது வாய் துதிக்காது. எனக்குக் கிட்டிய இத்தகைய உயர்ந்த வாழ்க்கையைக் கண்டீர்களா?

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே மநஸ்ஸினுடைய ஸம்ருத்தியைச் சொல்லி, இதிலே - வாக்குக்குள்ள ஸம்ருத்தியைச் சொல்ல ஒருப்பட்டு, துர்ப்புத்தியான கம்ஸனை ஸம்ஹரித்து, அதிகோமளமான ஸ்ரீபாதங்களையுடைய நப்பின்னைப் பிராட்டிக்கு ஸ்நேஹியான க்ருஷ்ணனுடைய ஸ்ரீபாதங்களை ஆச்ரயியாத ஆத்மாபஹாரிகளுக்கு அகோசரரான எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களையொழிய வேறொரு விஷயத்தை என் வாக்கானது ஸ்துதிக்கமாட்டாது, ஆகையாலே இப்போது எனக்கொரு அலப்யலாபம் சேர்ந்ததென்று வித்தராகிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் தனது மனமானது எம்பெருமானார் அல்லாமல் மற்ற எதனையும் எண்ணாமல் உள்ளது என்று மனதின் சாமர்த்யத்தை உரைத்தார். இந்தப் பாசுரத்தில் தனது வாக்கிற்கு உள்ள சாமர்த்யத்தைக் கூற எண்ணினார். ஆகவே, துர்புத்தி உள்ளவனாகிய கம்ஸனை அழித்து, மிகவும் மென்மையான திருவடிகளைக் கொண்ட நப்பின்னையின் ப்ரியமான க்ருஷ்ணனுடைய திருவடிகளை அண்டி நிற்காதவர்களான ஆத்ம அபஹாரம் செய்பவர்களுடைய வாக்கிற்கு எட்டாதபடி உள்ள எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்கள் அல்லாமல் மற்றொரு விஷயத்தை எனது வாக்கு துதிக்காது; ஆகவே எனக்கு இப்போது கிடைத்தற்கு அரிய பேறு கிடைத்தது என்று பக்தியால் வியந்து நிற்கிறார்.

வ்யாக்யானம் - (நெஞ்சில் கறை கொண்ட கஞ்சனை) கம்ஸன் அசரீரி வாணி சொன்ன வார்த்தையைக் கேட்டவன்று தொடங்கி மநஸ்ஸிலே க்ரோதத்தை வைத்துக் கொண்டிருந்தான். அந்தக் க்ரோதமானது தம: கார்யமென்கையாலே அத்தைக் கறுப்பாக வருளிச்செய்கிறார். “தீய புத்திக் கஞ்சனுன்மேல் சினமுடையன்” என்கிறபடியே ஹ்ருதயத்திலே சீற்றத்தையுடையனான கம்ஸன். “கம்ஸஸ் ததோத் விக்ந மநா: க்ராஹ ஸ்ர்வாந் மஹாஸ்ராந் ப்ரலம்ப கேசி ப்ரமுகாநாஹூய அஸ்ர புங்கவாந்; ஹே ப்ரலம்ப

மஹாபாஹோ கேசிந் தேனுக பூதனே அரிஷ்டாத்யாஸ் ததைவாந்யே ச்ரூயதாம் வசனம் மம; மாம் ஹந்துமமரைர் யத்ந: க்ருத: துராத்மபி: மத் வீர்யதாபி தாந்வீரோ ந த்வேதாந் குணயாம்யஹம்; கிம் இந்த்ரேணால்ப வீர்யேண கிம் ஹரேணைகசாரிணா ஹரிணா வாபி கிம் ஸாத்யம் சித்ரேஷ்வஸ்ர காதிநா" என்று தொடங்கி, "அமரேஷு மமாவஜ்ஞா ஜயதே தைத்ய புங்கவா: ஹாஸ்யம் மே ஜாயதே வீராஸ்தேஷு யத்ந பரேஷ்வபி; ததாபி கலு துஷ்டாநாம் தேஷாமப்யதிகம் மயா அபகாராய தைத்யேந்த்ரா யதநீயம் துராத்மநாம்" என்று சொல்லிக் கொண்டு போந்து, "உத்பந்நச்சாபி மே ம்ருத்யுர் ப்ருத பூர்வஸ்ஸ வை கில இத்யேதத்தாரிக்தா ப்ராஹ தேவகீ கர்ப்ப ஸம்பவா; தஸ்மாத் பாலேஷு ச பரோ யத்ந: கார்யோ மஹீதலே யத்ரோத்ரிக்தம் பலம் பாலோ ஸ ஹந்தவ்ய: ப்ரயத்நத:" என்று இவ்விருத்தாந்தம் விஷ்ணுபுராணத்திலே பரக்கச் சொல்லப்பட்டதிறே.

விளக்கம் - (நெஞ்சில் கறை கொண்ட கஞ்சனை) - கம்சன் அசரீரியின் சொற்கள் கேட்ட நாள் முதலாக தனது மனதில் தேவகியின் எட்டாவது குழந்தை மீது க்ரோதத்தை வளர்த்தபடியே இருந்தான். அத்தகைய க்ரோதம் என்பது தமோ குணத்தின் செயல் என்பதால், அதனைக் கறுப்பாக வர்ணிக்கிறார். பெரியாழ்வார் திருமொழி (2-2-5) - தீய புத்திக் கஞ்சனுன்மேல் சினமுடையன் - என்பதற்கு ஏற்றபடி தனது உள்ளத்தில் எப்போதும் க்ருஷ்ணனைக் குறித்துச் சீற்றத்துடன் உள்ள கம்சனை. ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (5-4-1 முதல் 4) - கம்ஸஸ் ததோத் விக்ந மநா: க்ராஹ ஸர்வாந் மஹாஸுராந் ப்ரலம்ப கேசி ப்ரமுகாநாஹூய அஸுர புங்கவாந்; ஹே ப்ரலம்ப மஹாபாஹோ கேசிந் தேனுக பூதனே அரிஷ்டாத்யாஸ் ததைவாந்யே ச்ரூயதாம் வசனம் மம; மாம் ஹந்துமமரைர் யத்ந: க்ருத: துராத்மபி: மத் வீர்யதாபி தாந்வீரோ ந த்வேதாந் குணயாம்யஹம்; கிம் இந்த்ரேணால்ப வீர்யேண கிம் ஹரேணைகசாரிணா ஹரிணா வாபி கிம் ஸாத்யம் சித்ரேஷ்வஸ்ர காதிநா – கம்ஸன் மிகவும் கலக்கம் கொண்ட மனதுடன் கூடியனவாக தன்னுடைய முதன்மையாக அஸுரர்களான ப்ரலம்பன், கேசி போன்றவர்களையும் மற்றவர்களையும் அழைத்து அவர்களிடம், "ப்ரலம்பா, கேசி, தேனுகா, பூதனா, அரிஷ்டனே, மற்றவர்களே! நான் கூறுவதைக் கேளுங்கள். என்னுடைய சக்திக்கு அஞ்சியவர்களான தேவர்கள் என்னைக் கொல்வதற்காகப் பலவிதமான திட்டங்களைத் தீட்டியபடி உள்ளனர். வீரர்களே! ஆனால் நான் அவர்களை ஒரு பொருட்டாகவே கொள்ளவில்லை. அற்பமான வீரம் கொண்ட இந்த்ரனும், ஹரியும் தங்களுடைய விரோதிகளைத் தந்திரம் மூலம் அழிப்பது அல்லாமல் வேறு என்ன

செய்வர்", என்று கூறினான் – என்று தொடங்கி, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-4-9, 10) - அமரேஷு மமாவஜ்ஞா ஜயதே தைத்ய புங்கவா: ஹாஸ்யம் மே ஜாயதே வீராஸ்தேஷு யத்ந பரேஷ்வபி; ததாபி கலு துஷ்டாநாம் தேஷாமப்யதிகம் மயா அபகாராய தைத்யேந்த்ரா யதநீயம் துராத்மநாம் – என்னுடைய ஆணைக்குட்பட்டும், எனது வீரத்திற்குப் பயந்தும், உலகில் உள்ள அனைத்து அரசர்களும் எனது உறவினனான ஜராஸந்தனைக் காக்கவில்லையா? தைத்ய குல வீரர்களே! நான் தேவர்கள் மற்றும் இந்த்ரன் ஆகியவர்கள் என் விஷயத்தில் செய்யும் தாழ்ந்த செயல்களை அனைவருக்கும் மேலும் உணர்த்துவேன் - என்று கூறப்பட்டு, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-4-12, 13) - உத்பந்நச்சாபி மே ம்ருத்யுர் ப்ருத பூர்வஸ்ஸ வை கில இத்யேதத்தாரிக்தா ப்ராஹ தேவகீ கர்ப்ப ஸம்பவா; தஸ்மாத் பாலேஷு ச பரோ யத்ந: கார்யோ மஹீதலே யத்ரோத்ரிக்தம் பலம் பாலோ ஸ ஹந்தவ்ய: ப்ரயத்நத: - தேவகியின் வயிற்றில் பிறந்த பெண் குழந்தை, என்னுடைய யமனான குழந்தை உயிருடன் உள்ளதாகக் கூறினாள். ஆகவே நாம் சிசுக்களைத் தேடுவோமாக. எந்தக் குழந்தையாவது அதிசயமான பலத்துடன் காணப்பட்டால் அதனைக் கொல்லுவோம் – என்று கம்ஸன் க்ருஷ்ணன் மீது கொண்டிருந்த க்ரோதமானது விரிவாகக் கூறப்பட்டது.

வ்யாக்யானம் - (காய்ந்த) "உத்ப்லுத்யாருஹ்ய தம் மஞ்சம் கம்ஸம் ஜக்ராஹ வேகத:; கேசேஷ்வாக்ருஷ்ய விகலத் க்ரீடம் அவநீதலே; ஸ கம்ஸம் ஸம்பாதயாமாஸ தஸ்யோபரி பபாத ச; அசேஷ ஜகதாதார குருணா பததோபரி க்ருஷ்ணேந த்யாஜித ப்ராணாந் உக்ரஸேநாத்மஜோ ந்ருப:" என்கிறபடியே ஸம்ஹரித்த. (நிமலன்) கல்மஷ ரஹிதன். முன்னே ஒரு மலமிருந்து அத்தைப் போக்கிக் கொண்டபடியன்று, நைஸர்க்கிகமான நைர்மல்யத்தையுடையவன். ஹேயப்ரதிபடனென்றபடி. அன்றிக்கே, கம்ஸனைக் கொல்லுமளவும் மாதாபிதாக்களைச் சிறையிலேயிருக்கக் கேட்டு பொறுத்திருந்ததொரு மலமுண்டு, அவனைக் கொன்று மாதாபிதாக்களைச் சிறையில் நின்றும் விடுவித்த பின்பு நிர்மலனான னென்னவுமாம். "தந்தை காலில் விலங்கற வந்து தோன்றிய தோன்றல்" என்னக் கடவதிறே. அங்ஙனுமன்றிக்கே, "அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன்" என்கிறபடியே, தம்மை எம்பெருமானார் திருவடிகளிலே அநந்யார்ஹராம்படி பண்ணினானாகையாலே (நிமலன்) என்கிறாராகவுமாம்.

விளக்கம் – (காய்ந்த) – ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-20-85, 86, 87) - உத்ப்லுத்யாருஹ்ய தம் மஞ்சம் கம்ஸம் ஜக்ராஹ வேகத:; கேசேஷ்வாக்ருஷ்ய விகலத் க்ரீடம் அவநீதலே; ஸ கம்ஸம் ஸம்பாதயாமாஸ தஸ்யோபரி பபாத ச; அசேஷ ஜகதாதார குருணா பததோபரி க்ருஷ்ணேந த்யாஜித ப்ராணாந் உக்ரஸேநாத்மஜோ ந்ருப: - மதுவைரியான க்ருஷ்ணன், கம்ஸன் அமர்ந்திருந்த இருக்கைக்குத் தாவி அவனுடைய தலைமுடியைப் பற்றினான்; அவனுடைய க்ரீடத்தைத் தரையில் மோதினான்; அந்த கோவிந்தன் அவன் மீது ஏற் அமர்ந்தான்; அனைத்து லோகங்களையும் தாங்குகின்ற க்ருஷ்ணனின் பாரத்தால் நசுக்கப்பட்டவனாக, உக்ரஸேனனின் புத்திரனும், அரசனும் ஆகிய் கம்சன் தனது ப்ராணனை விட்டான் - என்பதற்கு ஏற்றபடி அந்தக் கம்சனை ஸம்ஹாரம் செய்த. (நிமலன்) - தோஷங்கள் அற்றவன். முன்பு ஒரு காலகட்டத்தில் தோஷங்கள் இருந்து, பின்னர் அதனை நீக்கிக்கொள்ளுதல் என்பது போன்று அல்லாமல், எப்போதும் தோஷம் இல்லாதபடி உள்ளவன். தாழ்வுகள் அனைத்திற்கும் எதிர்த்தட்டாக உள்ளவன். அல்லது, கம்ஸனை அழிக்கும்வரை தனது தாய்தந்தையர் சிறையில் உள்ளதை அறிந்தும், ஏதும் செய்யாமல் பொறுத்துக் கொண்டிருந்தான் என்ற தோஷம் உண்டு; கம்ஸனை அழித்து தாய்தந்தையரைச் சிறையிலிருந்து விடுவித்த பின்னர் தோஷங்கள் அற்றவன் ஆனான் என்றும் கொள்ளலாம். பெரியதிருமொழி (8-5-1) - தந்தை காலில் விலங்கற வந்து தோன்றிய தோன்றல் – என்றது காண்க. அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். அமலனாதிபிரான் (1) – அடியார்க்கென்னை யாட்படுத்த விமலன் - என்பதற்கு ஏற்ப திருவரங்கத்தமுதனாராகிய தன்னை எம்பெருமானார் திருவடிகள் அல்லாமல் மற்ற எதற்கும் வசப்படாத விதம் செய்தான் என்பதால் “நிமலன்” என்கிறார் என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் – (நங்கள் பஞ்சித் திருவடி பின்னைதன் காதலன்) (நங்கள் பஞ்சித்திருவடி) “பஞ்சிய மெல்லடிப் பின்னை” என்கிறபடியே பஞ்சு போலே ஸுகுமாரமான திருவடிகளை யுடையளான. அன்றிக்கே, அத்யந்த புஷ்பஹாஸ ஸுகுமாரியாகையாலே கடிநமான பூமியிலே திருவடிகளை வைத்தாலே வாடுமென்று நினைத்து, பஞ்சுமேல் அடியை யிட்டுத் திரியும்படியான திருவடிகளையுடையா ளென்னவுமாம். (பின்னைதன்) இப்படிப்பட்ட ஸௌகுமார்யத்தை யுடையளான நப்பின்னைப்பிராட்டிக்கு. (பின்னைதன் காதலன்) என் போல்வாரெல்லாருடையவும் ஈச்வர நிக்ரஹ ஹேதுவான அபராதங்களை அவனாலே பொறுப்பித்து நம்மை ஆச்ரயிப்பிக்கைக்காக அவனோடே அநேகாவதாரங்களைப் பண்ணினா ளாகையாலே நமக்கேயா யிருக்கிறாளென்று

நினைத்து, (நங்கள்) என்கிறார். ஆக ஆச்ரித ரக்ஷணார்த்தமாக வவதரித்து அதிஸௌகுமார்யத்தை யுடையளான நப்பின்னைப்பிராட்டி தனக்கு ஸ்நிக்த்தனானவென்றபடி.

விளக்கம் - (நங்கள் பஞ்சித்திருவடி) – பெரியதிருமொழி (3-4-4) - பஞ்சிய மெல்லடிப் பின்னை – என்பதற்கு ஏற்ப பஞ்சு போன்ற மென்மையான திருவடிகள் கொண்ட. அல்லது மிகவும் மென்மையான இளம் வயதுள்ளவள் என்பதால் கடினமான பூமியில் அந்தத் திருவடிகள் கொண்டு நடந்தால் வாடிவிடும் என்பதால், பஞ்சுவிரிப்பை விரித்து அதன் மேல் திருவடிகளை வைத்து நடக்கும்படியான திருவடிகள் கொண்டவள் என்றும் கூறலாம். (பின்னைதன்) – இப்படியான மென்மை கொண்டவளாகிய நப்பின்னைப் பிராட்டிக்கு. (பின்னைதன் காதலன்) – என்னைப் போன்றவர்களுடைய, ஸர்வேச்வரன் தண்டிப்பதற்குக் காரணமாக உள்ளதான குற்றங்களை, அவன் பொறுத்துக் கொள்ளும்படிச் செய்து, நம்மை அவன் தன்னுடன் சேர்த்துக் கொள்வதற்கு ஏற்றபடி, அவனுடன் பல அவதாரங்களில் சேர்ந்து இவளும் வந்தாள் என்பதால், நமக்காவே உள்ளாள் என்று எண்ணுவதால் “நங்கள்” என்கிறார். ஆக அடியார்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும்விதமாக அவதரித்து, மிகுந்த மென்மை உடையவளாகிய நப்பின்னை பிராட்டிக்கு மிகவும் ப்ரியமானவன் என்று கருத்து.

வ்யாக்யானம் - ஸ்ரீஜநகராஜன், தன் பூமியிலுள்ள இடையர்க்கெல்லாம் தலைவனாய் கும்பனென்னும் பேரையுடையனானவன், இடையர் கோஷ்ட்டியிலே ஏழு வ்ருஷபங்கள் அஸுராவேசத்தாலே மஹாபலவீர்ய வத்துக்களாய்க் கொண்டு, இருந்த ராஜ்யங்களை யெல்லாம் பாதிக்கத் தொடங்கினவாறே, அவன் கும்பனையழைத்து பயப்படுத்த; அவனும் நப்பின்னைப் பிராட்டியென்று எனக்கு ஒரு பெண்பிள்ளையுண்டு, இந்த வ்ருஷபங்களை ஸம்ஹரித்தவனுக்கு இந்தப் பெண்பிள்ளையைக் கொடுக்கக் கடவேனென்று ப்ரதிஜ்ஞை பண்ணினேன் என்ன; ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் கும்பன் மாதுலனாகையாலே இந்த வ்ருத்தாந்தத்தைக் கேட்டு சடக்கென அங்கே சென்று நப்பின்னைப் பிராட்டியைப் பார்த்து அவள் திறத்திலே அதிவ்யாமுக்த்தனாய்க் கொண்டு அவளோட்டை ஸம்ச்லேஷத்துக்கு ப்ரதிபந்தகங்களான ஸப்த வ்ருஷபங்களையும் ஒருகாலே ஊட்டியாகத் தழுவி ஸம்ஹரித்தா னென்று புராணங்களிலே ப்ரதிபாதிதமான இந்த அபதாநத்தைக் கொண்டு, (காதலன்) என்று அருளிச்செய்கிறார். “தளவேழ் முறுவல் பின்னைக்காய் வல்லானாயர்

தலைவனாய் இளவேறேழுந் தழுவிய வெந்தாய்" என்று நம்மாழ்வாரும் அருளிச் செய்தாரிறே. இப்படிப்பட்ட க்ருஷ்ணனுடைய.

விளக்கம் - ஜனகராஜனின் நாட்டில் இருந்த இடையர்கள் அனைவருக்கும் தலைவனாகக் கும்பன் என்பவன் இருந்தான். அவனிடமிருந்து ஏழு எருதுகள் மிகுந்த பலம் மற்றும் வீர்யம் மிக்கவைகளாக அனைவரையும் அச்சுறுத்தியபடி இருந்தன. அப்போது ஜனகராஜன் கும்பனை அழைத்து எச்சரித்தான். உடனே கும்பன் ஜனகராஜனிடம், "எனக்கு நப்பின்னை என்ற பெண் உண்டு. இந்த எருதுகளை வெல்பவனுக்கு எனது பெண்ணை விவாகம் செய்து தருவேன்", என்றான். கும்பன் க்ருஷ்ணனின் தாய்மாமன் ஆவான். க்ருஷ்ணன் கும்பனின் இந்தச் சொற்களைக் கேட்டு, சட்டென்று அங்கு சென்று நப்பின்னைப் பிராட்டியைக் கண்டான்; அவள் மீது ஆழ்ந்த ப்ரியம் கொண்டான்; அவளோடு தான் சேர்வதற்குத் தடையாக இருந்த ஏழு எருதுகளையும், அவற்றின் குரல்வளையைப் பிடித்துத் தழுவி வீழ்த்தினான். புராணங்களில் விவரிக்கப்பட்டதான வியக்க வைக்கும் இந்த நிகழ்வை எண்ணியவராக "காதலன்" என்கிறார். திருவாய்மொழியில் (1-5-1) - தளவேழ் முறுவல் பின்னைக்காய் வல்லானாயர் தலைவனாய் இளவேறேழுந் தழுவிய வெந்தாய் - என்று நம்மாழ்வாரும் அருளிச்செய்தது காண்க. இப்படிப்பட்ட க்ருஷ்ணனுடைய.

வ்யாக்யானம் - (பாதம் நண்ணா வஞ்சர்க்கு) திருவடிகளை ஆச்ரயியாத வஞ்சகருக்கு. "யோந்யதா ஸந்தமாத்மாந மந்யதா ப்ரதிபத்யதே கிம் தேநந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்கிறபடியே "த்வம் மே" என்றால், "அஹம் மே" என்னும்படியான ஆத்மாபஹாரிகளுக்கு. "ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: மாயயாபஹ்ருதஜ்ஞாநா: ஆஸுரம் பாவமாச்ரிதா:" என்றானிறே கீதாசார்யனும்; அப்படிப்பட்ட வஞ்சகருக்கு.

விளக்கம் - (பாதம் நண்ணா வஞ்சர்க்கு) - திருவடிகளை அண்டாத வஞ்சகம் நிறைந்தவர்களுக்கு. மஹாபாரதம் உத்யோகபர்வம் - யோந்யதா ஸந்தமாத்மாந மந்யதா ப்ரதிபத்யதே கிம் தேநந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா – பகவானுக்குச் சொந்தமான ஆத்மாவைத் தன்னுடைய என்று அபகரிக்கும் பாவம் குறித்து என்ன

கூறுவது - என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் "த்வம் மே - நீ எனக்கு உரியவன்" என்றால், "அஹம் மே – நான் எனக்கே உரியவன்" என்று கூறுபவர்களான ஆத்மாவை அபகரித்தவர்களுக்கு. கீதையில் (7-15) – ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: மாயயாபஹ்ருதஜ்ஞாநா: ஆஸுரம் பாவமாச்ரிதா: – மாயையால் அபகரிக்கப்பட்டவர்களும், அஸுரத்தன்மை கொண்டவர்களும், தாழ்ந்தவர்களும், இழிவான செயல்களைச் செய்பவர்களும் என்னை வழிபடுவதில்லை - என்று க்ருஷ்ணன் அருளிச்செய்தான் அல்லவோ? அப்படிப்பட்ட வஞ்சகர்களுக்கு.

வ்யாக்யானம் - (அரியவிராமாநுசன்) ஆச்ரயிக்கைக்கு கடிநராய் ஸுதுர்லபரான எம்பெருமானாருடைய. (புகழன்றி) கீழ்ப்பாட்டிலே வஞ்சகமான என் மநஸ்ஸிலே என்னுடைய தோஷத்தைப் பாராதே அதுவே போக்யமாக அங்கீகரித்துப் புகுந்து நிற்க அத்தாலே ப்ரகாசிதங்களான வாத்ஸல்ய ஸௌசீல்யாதி கல்யாண குணங்களையொழிய. (என் வாய்) இத்தனை நாளும் ப்ரதிகூலனாய்ப் போந்த வென்னுடைய வாக்கானது. (கொஞ்சிப் பரவகில்லாது) அந்ய விஷய ஸ்தோத்ரத்துக்கு ஸங்கோசித்து அத்தை ஸ்தோத்ரம் பண்ணமாட்டாது. முக்தஜல்பமாய்க் கொண்டு அறிவு கெடமாட்டாது. கொஞ்சுதல் – அபூர்ணோக்தியாகச் சொல்லுதல். (என்ன வாழ்வின்று கூடியதே) இப்போது இந்த ஸம்ருத்தி நமக்குச் சேர்ந்தது கண்டோ, இது பெறாப்பேறென்று வித்தராகிறார். "இராமாநுசன் புகழன்றி" என்கையாலே - பகவத் குணங்களையும் ஸ்தோத்ரம் பண்ணமாட்டாதென்று தம்முடைய சரமநிஷ்டையை வெளியிட்டருளினா ரென்றதாய்த்து.

விளக்கம் - (அரியவிராமாநுசன்) - அப்படிப்பட்ட வஞ்சகர்களால் அண்டுவதற்கு மிகவும் அரியவராக உள்ள எம்பெருமானாருடைய. (புகழன்றி) - கடந்த பாசுரத்தில் கூறியதற்கு ஏற்ப, வஞ்சகம் நிறைந்த எனது மனதில் எனது குற்றங்களை ஆராயாமல், அத்தகைய குற்றங்களையே இனிமையாகக் கொண்டு என்னை ஏற்றுக்கொண்டு எனது மனதில் புகுந்து நின்றார்; இதன் மூலம் வெளிபட்டதான வாத்ஸல்யம், ஸௌசீல்யம் போன்ற திருக்கல்யாணகுணங்கள் அல்லாமல். (என் வாய்) – இத்தனை நாளும் அவரிடம் விரோதம் காண்பித்து வந்து எனது வாக்கானது. (கொஞ்சிப் பரவகில்லாது) – மற்ற விஷயங்களைத் துதிப்பதற்குத் தயக்கம் கொண்டு, அவற்றைத் துதிக்காது. மழலைச்சொற்கள் போன்று

மற்ற விஷயங்கள் கூறி இனி அறிவைக் கெடுக்காது. (என்ன வாழ்வின்று கூடியதே) - இத்தகைய சேர்த்தி உண்டானது கண்டீர்களா? "இது என்ன ஒரு பெறுதற்கு அரிய பேறு கிட்டியது!" என்று மகிழ்கிறார். "இராமானுசன் புகழ் அன்றி" என்று கூறுவதால், பகவத் குணங்களைக் கூட நான் துதிக்கமாட்டேன் என்று பக்தியின் எல்லை நிலத்தில் தான் உள்ளதை உணர்த்துகிறார்.

29. கூட்டும் விதி என்று கூடுங்கொலோ? தென்குருகைப்பிரான்
பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ் தன்னை தன் பத்தி என்னும்
வீட்டின் கண்வைத்த இராமானுசன் புகழ் மெய்யுணர்ந்தோர்
ஈட்டங்கள் தன்னை என் நாட்டங்கள் கண்டு இன்பம் எய்திடவே

விளக்கவுரை – தென்திசையில், பரமபதத்திற்கு இணையான ஸ்வபாவம் கொண்ட ஊராகிய ஆழ்வார் திருநகரியில் அவதரித்தவர் நம்மாழ்வார் ஆவார். அவருடைய திருவாய்மொழி என்பது செந்தமிழில் செய்யப்பட்ட வேதம் என்று கூறும்படி உள்ளது. இப்படிப்பட்ட திருவாய்மொழியை – ஈன்ற முதல் தாய் சடகோபன், இதத்தாய் இராமானுசன் – என்னும்படி, தனது இதயத்தில் எப்போதும் நிலை நிறுத்தியவர் எம்பெருமானார் ஆவார். அந்தத் திருவாய்மொழியை எப்போதும் கேட்டபடியும், உபதேசம் செய்தபடியும், வ்யாக்யானம் செய்தபடியும், திருக்குருகைபிரான் பிள்ளான் மூலம் வ்யாக்யானம் செய்வித்தபடியும் இராமானுசரின் திருக்கல்யாண குணங்கள் அமைந்திருந்தன. இப்படியாக எம்பெருமானாரின் குணங்கள் உள்ளன என்று அறிந்தவர்கள் கூரத்தாழ்வான், முதலியாண்டான் போன்றவர்கள் ஆவர். இவர்களையே எப்போதும் என் கண்கள் பார்த்தபடியும், அதனால் நான் ஆனந்தம் கொண்டபடியும் இருக்கும் உயர்ந்த வாய்ப்பு எப்போது அடியேனுக்குக் கூடுமோ?

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே தம்முடைய வாக்கானது எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களுக்கு அநந்யார்ஹமாய்விட்டதென்று அந்த ஸம்ருத்தியைச் சொல்லி, அவ்வளவிலே சுவறிப் போகாதே மேல்மேல் பெருகி வருகிற அபிநிவேசாதிசயத்தாலே, இப்பாட்டில் - தர்சநீயமான திருக்குருகைக்கு நிர்வாஹகராய் திருவாய்மொழி முகத்தாலே தத்வ ஹித புருஷார்த்தங்களை ஸர்வருக்கும் உபகரித்தருளின நம்மாழ்வாருடைய திவ்யஸூக்திமயமான வேதமாகிற செந்தமிழ் தன்னை தம்முடைய பக்தியாகிற கோயிலிலே ப்ரதிஷ்டிப்பித்துக் கொண்டிருக்கிற எம்பெருமானாருடைய

கல்யாணகுணங்களை உள்ளபடி தெளிந்திருக்கும் ஜ்ஞாநாதிகர்களுடைய திரள்களை என் கண்கள் கண்டு ஆனந்தித்துக் களிக்கும்படி சேரக்கடவதான பாக்யம் எப்போது லபிக்குமோவென்று ததீயபர்யந்தமான ப்ரீதியை ப்ரார்த்தித்தருளுகிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், தன்னுடைய வாக்கானது எம்பெருமானாருடைய திருக்கல்யாணகுணங்களுக்கு மட்டுமே வசப்பட்டுவிட்டது, மற்றவை எதனையும் பேசாது என்று அதன் வளர்ச்சியை உரைத்தார். அத்துடன் ஆர்வம் வற்றிப்போகாமல் மேன்மேலும் பெருகி வரும் அதிகமான ஈடுபாடு காரணமாக, இன்பம் அளிக்கவல்லதான திருக்குருகைக்கு எஜமானராகவும், திருவாய்மொழி மூலம் உண்மை மற்றும் நன்மை ஆகியவற்றுடன் கூடிய புருஷார்த்தங்களை அனைவருக்கும் அளித்து பேருதவி செய்தருளியவரும் ஆகிய நம்மாழ்வாருடைய திவ்யமான செந்தமிழ் வேதங்களை, தனது பக்தி என்னும் கோயிலில் ஆழ்ந்து நிலைநிறுத்தியபடி உள்ள எம்பெருமானாருடைய திருகல்யாணகுணங்களை, உள்ளது உள்ளபடி தெளிவாக அறிந்துள்ள அறிவுள்ளவர்களின் கூட்டத்தை, எனது கண்கள் கண்டு, ஆனந்தம் அடைந்து, மகிழ்ச்சியில் களிக்கும்படி, அவர்களுடைய கூட்டத்தில் சேருவதான பாக்கியம் எப்போது கிட்டுமோ என்கிறார்; அதாவது அடியார்கள் முடிய உள்ளதான ப்ரீதியை விண்ணப்பிக்கிறார்.

வ்யாக்யானம் - (தென்குருகைப்பிரான்) (தென்) தர்சநீயுமானவென்னுதல்; தெற்கு திக்கிலேயிருக்கிறவென்னுதல். (குருகை) பரமபதத்தைச் சேர்க்குமூரென்னுதல்; பரமபதத்தோடே ஸமமான வைபவத்தையுடைய ஊரென்னுதல். (பிரான்) இப்படிப்பட்ட திருநகரியிலே அவதரித்து லோகத்தாரெல்லாரும் உஜ்ஜீவிக்கும்படி தத்வஹித புருஷார்த்த தத் யாதாத்ம்யங்களை திவ்யப்ரபந்தமுநேக உபகரித்த நம்மாழ்வாருடைய. அன்றிக்கே, இவ்வூரிலே அவதரிக்கையாலே எல்லாருக்கும் அவர் உத்தேச்யராயிருக்கிற வழியாலே அவ்வூருக்கு உபகாரகரென்னவுமாம். (பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ் தன்னை) “அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன” என்றும், “தமிழ்மறைக ளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன்” என்றுஞ் சொல்லுகிறபடியே தென்குருகைபிரா னருளிச்செய்த பாட்டென்று ப்ரஸித்தமாய் ஸாமவேதரூபமாய் செந்தமிழாயிருக்கிற திருவாய்மொழியை.

விளக்கம் – (தென்) - காண்பதற்கு இனிமையாக உள்ள அல்லது தெற்குத்திசையில் உள்ள. (குருகை) – அனைவரையும் பரமபதம் கொண்டு சேர்க்கும் ஊர் அல்லது பரமபதத்துக்குச் சமமான மேன்மைகள் பொருந்திய ஊர் என்று கருத்து. (பிரான்) - இப்படிப்பட்ட ஆழ்வார்திருநகரியில் அவதரித்து, உலகில் உள்ள அனைவரும் கரையேறும் விதமாக, உண்மை மற்றும் நன்மை நிறைந்த புருஷார்த்தத்தை, உள்ளது உள்ளபடி, தனது திவ்யப்ரபந்தங்கள் மூலமாக அளித்து, மிகுந்த உதவி செய்த நம்மாழ்வாருடைய. அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். அந்த ஊரில் அவதரித்த காரணத்தால், அவர் அனைவருக்கும் குறிக்கோளாக உள்ளதால் அந்தஊருக்கு மிகுந்த உதவி செய்தவர் என்றும் கூறலாம். (பாட்டென்னும் வேதப்பசுந்தமிழ் தன்னை) - திருவாய்மொழி (10-10-11) – அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன் சொன்ன – என்றும், திருவாய்மொழி தனியன் – தமிழ்மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப தென்குருகைப்பிரானாகிய நம்மாழவார் அருளிச்செய்த பாசுரங்கள் என்று விளங்குகின்றதும், ஸாமவேதரூபமாக செந்தமிழில் அமையப் பெற்றதும் ஆகிய திருவாய்மொழியை.

வ்யாக்யானம் - (தன் பத்தியென்னும்) அத்தை விஸ்மரித்தால் ஒரு க்ஷணம் ஒரு கல்பம் போலே யிருக்கும்படி பண்ணக்கடவதான பரமபக்தியாகிறவதுவும். (தன் பத்தி) எல்லாருடைய பக்தியைப் போலன்றிக்கே பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை உள்ளபடி யறிந்த எம்பெருமானாருடைய ப்ரேமம், அவருடைய ஜ்ஞாந வைசத்யத்துக்குத் தகுதியா யிருக்குமிறே. இப்படிப்பட்ட பக்தியாகிற. (வீட்டின் கண்வைத்த) கண் - ஸப்தமி. வீடு – ஆவாஸ ஸ்த்தாநம். அநர்க்கமான ரத்நத்தைச் செப்பிலே வைத்துக் கொண்டிருப்பாரைப்போலே தம்முடைய பக்தியாகிற மஹாஸௌதத்திலே வைத்துக் கொண்டிருக்கிற. (இராமாநுசன் புகழ்) திருவாய்மொழியை ஸதா காலக்ஷேபம் பண்ணியும், அந்தரங்கர்க்கு ஸார்த்தமாக அத்தை உபதேசித்தும், அந்தப் பாசுரங்களைக் கொண்டு சாரீரக ஸூத்ரங்களுக்கு வ்யாக்யாநம் பண்ணியும், பிள்ளானையிட்டு அதுக்கு வ்யாக்யாநம் பண்ணுவித்தும் இப்படிப்பட்ட வைபவத்தையுடையரான எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை.

விளக்கம் - (தன் பத்தியென்னும்) - அப்படிப்பட்ட திருவாய்மொழியைச் சிந்திக்கும் ஒவ்வொரு நொடியும் ஒரு கல்பகாலம் போன்று செய்யக்கடவதான பரமபக்தி. (தன் பத்தி)

- மற்ற அனைவருடைய பக்தி போன்று அல்லாமல், ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி போன்ற அனைத்தையும் உள்ளது உள்ளபடி அறிந்த எம்பெருமானாருடைய ப்ரேமம் என்பது, அவருடைய ஞானத்தின் மேன்மைக்குத் தகுதியான உள்ளதாகிறது. இப்படிப்பட்ட பக்தி என்பதான. (வீட்டின்கண்) – இங்கு "கண்" என்பது ஏழாம் வேற்றுமை; "வீடு" என்பது வசிக்கும் இடம். விலைமதிப்பற்ற இரத்தினம் ஒன்றைச் செப்புக்குடத்தில் வைத்து பாதுகாப்பவர்கள் போன்று, திருவாய்மொழியைத் தனது பக்தி என்கிற பெரிய அரண்மனையில் பாதுகாப்பாக வைத்துக் கொண்டிருக்கும் (இராமாநுசன் புகழ்) - திருவாய்மொழியை எப்போதும் அனைவருக்கு விளக்கியபடியும், தனது சீடர்களுக்கு அதில் கூறப்பட்ட ஆழ்ந்த பொருளை எப்போதும் உபதேசித்தபடியும், அந்தப் பாசுரங்களை அடிப்படையாகக் கொண்டு ப்ரஹ்மஸூத்ரத்திற்கு வ்யாக்யானம் செய்தருளியும், திருக்குருகைப்பிரான்பிள்ளானை அந்தத் திருவாய்மொழிக்கு வ்யாக்யானம் செய்யும்படிப் பணித்தும் என்று இப்படியாகப் பலவிதமான வைபவங்கள் கொண்டவராகிய எம்பெருமானாருடைய திருக்கல்யாணகுணங்களை.

வ்யாக்யானம் - (மெய்யுணர்ந்தோர்) மெய்யாகத் தெளிந்து கொண்டிருக்கிற பெரியோர்களுடைய. (ஈட்டங்கள் தன்னை) "ஸம்ஸேவிதஸ் ஸம்யமி ஸப்த சத்யா பீடைஸ் சதுஸ்ஸப்ததிபிஸ் ஸமேதை: அந்யைரநந்தைரபி விஷ்ணுபக்தைராஸ்தேதி ரங்கம் யதி ஸார்வபௌம:" என்கிறபடியே – ஸப்தசதி ஸங்க்யாதரான யதிகளும், ஆழ்வான் முதலான முதலிகளும், ஏகாங்கிகளும், அஸங்க்யாதரான ஸ்ரீவைஷ்ணவர்களும், ஆண்டாள் முதலான ஸ்ரீவைஷ்ணவ ஸ்த்ரீகளுமாய்க் கொண்டு திரளாயிருந்துள்ள ததீயருடைய திரள்களை. ஈட்டம் - திரள்.

விளக்கம் - (மெய்யுணர்ந்தோர்) - உள்ளது உள்ளபடி அறிந்துள்ள சான்றோர்களுடைய. (ஈட்டங்கள் தன்னை) - ஸம்ஸேவிதஸ் ஸம்யமி ஸப்த சத்யா பீடைஸ் சதுஸ்ஸப்ததிபிஸ் ஸமேதை: அந்யைரநந்தைரபி விஷ்ணுபக்தைராஸ்தேதி ரங்கம் யதி ஸார்வபௌம: - யதிராஜரான உடையவர் எழுநூறு யதிகளாலும் எழுபத்து நாலு ஸிம்ஹாஸநாதிபதிகளாலும் மற்றும் எண்ணற்ற விஷ்ணு பக்தர்களாலும் நன்கு வணங்கப்பட்டவராய் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருயுள்ளார் - என்பதற்கு ஏற்ப எழுபத்திரண்டு யதிகளும், கூரத்தாழ்வான் போன்ற சிஷ்யர்களும், ஏகாங்கிகளும், எண்ணற்ற ஸ்ரீவைஷ்ணவர்களும், கூரத்தாழ்வானின் மனைவியாகிய ஆண்டாள்

உள்ளிட்ட ஸ்ரீவைஷ்ணவப்பெண்களும் என்று பெருங்கூட்டமாக உள்ளதான எம்பெருமானாருடைய அடியார்கள் கூட்டத்தை. ஈட்டம் என்றால் கூட்டம், திரள்.

வ்யாக்யானம் - (என் நாட்டங்கள்) ஸமாச்ரயண பர்யந்தம் ஈஷண த்ரயத்தையே பற்றி ஸுகிக்க நினைத்திருக்கிற என்னுடைய த்ருஷ்டிகள். நாட்டம் – த்ருஷ்டி. (கண்டு) கண்ணாரக் கண்டு ஸேவித்து. (இன்பமெய்திடவே) பண்ணின பின்பு, பூர்வகாலத்திலே தேஹ ஸம்பந்திகளாய்க் கொண்டு வருகிற ஸுகதுக்கங்களைக் காற்கடைக்கொண்டு இந்த ஜ்ஞாநாதிகளுடைய திரள்களைக் கண்டு ஆநந்தத்தைப் பெறும்படி. (கூட்டும் விதி என்று கூடுங்கொலோ) சேர்க்கும் பாக்யம் எப்போது லபிக்கவல்லதோ. விதி – ஸுக்ருதம். இவர் தமக்கு பேற்றுக்கடியான ஸுக்ருதமாக நினைத்திருப்பது அத்தலையில் க்ருபையையிறே.

விளக்கம் - (என் நாட்டங்கள்) – உயிர் பிரியும் காலம்வரை புத்திரன், வீடு, மனைவி ஆகிய மூன்றை மட்டுமே நோக்கியபடி ஸுகமாக இருக்க விரும்பும் எனது கண்கள் அல்லது பார்வை. (கண்டு) – எம்பெருமானாருடைய அடியார்கள் கூட்டத்தைக் கண்ணாரக் கண்டு வணங்கி. (இன்பமெய்திடவே) - அதன் பின்னர், முன்பு இந்தச் சரீரத்துடன் உள்ள தொடர்பு காரணமாக வருவதான இன்பதுன்பங்களைப் பொருட்படுத்தாமல், இப்படிப்பட்ட சான்றோர்களின் கூட்டத்தைக் கண்டு மிகுந்த ஆனந்த அடையும்படி. (கூட்டும் விதி என்று கூடுங்கொலோ) - அவர்களுடன் சென்று சேரும் பாக்கியம் எப்போது கிட்டுமோ? விதி என்றால் நற்செயல்கள். இவர் தம்முடைய பேற்றுக்குக் காரணமாக உள்ள நற்செயல்கள் என்பது, அடியார்கள் காண்பிக்கும் க்ருபை அல்லவோ?

வ்யாக்யானம் - இரமாநுசன் புகழ் மெய்யுணர்ந்தோ ரீட்டங்கள் தன்னை தத்காலத்தில் காணாநிற்கச்செய்தே இங்ஙனே சொல்லுவானென்னென்னில் - காண்கிறதிலன்று இப்போது இவருக்கு அபேக்ஷை; கண்டால் கண்கள் விக்ருதமாகையன்றிக்கே, இன்பமெய்துகை - ப்ரேமம், அதுக்கடியான ப்ரேமம் எம்பெருமானா ரருளாலே விளைய வேணுமிறே, அத்தாலே சொல்லுகிறார். அன்றிக்கே, மெய்யுணர்வாவது - அஸங்குசித ஜ்ஞாநம். அது ஒரு தேச விசேஷத்திலே சேர்ந்த பின்பு வரக்கடவதாகையாலே அப்படிப்பட்ட ஜ்ஞாந வைசத்யத்தை யுடையரானவர்களுடைய திரளை இங்கே கண்டு பரிபூர்ணாநுபவம் பண்ணும்படியாக இப்பேற்றை நமக்குச் சேர்விப்பதான அவருடைய

க்ருபை எக்காலத்துக் கூடவல்லதோ என்னவுமாம். அத்திரள்கள் இவருக்கு ஸதா ஸேவ்யங்களா யிருந்தாலும், நித்யாபூர்வங்களாயே யிருக்குங்காணும். "உன் தொண்டர்களுக்கே அன்புற்றிருக்கும்படி யென்னை யாக்கியங்காள் படுத்தே" என்றிறே மேலும் இவருடைய ப்ரார்த்தனை.

விளக்கம் – ஆனால், எப்பெருமானாருடைய வைபவங்கள் அனைத்தையும் உள்ளது உள்ளபடி அறிந்தவர்கள் கூட்டத்தை, திருவரங்கத்தமுதனார், தான் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலேயே தனது கண்களால் கண்டவர் அல்லவோ? பின்னர் ஏன் தனது கண்கள் அவர்களைக் கண்டு, அவர்களுடன் சேர்வது எப்போதோ என்று உரைக்கவேண்டும்? இதற்கு விடை அருளிச்செய்கிறார். அந்த கூட்டத்தைக் காண்பது என்பது மட்டுமே இவருக்கு விருப்பம் அல்ல; கண்ட பின்னர் கண்கள் மாறுபாடு அடையாமல், அதாவது மற்றவற்றில் ஈடுபடாமல் இருக்கவேண்டும் என்பதே இவர் விருப்பம். இன்பம் எய்துகை என்றால் ப்ரேமம்; அதாவது கண்கள் மாறுபாடு அடையாமல் தடுக்கவல்ல ப்ரேமம். அத்தகைய நிலை எம்பெருமானாருடைய அருளால் மட்டுமே ஏற்படும் என்பதால் இவ்விதம் உரைக்கிறார். அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். மெய்யுணர்வு என்றால் சுருக்கம் அடையாமல் மலர்ந்த ஞானம். அப்படிப்பட்ட ஞானம், குறிப்பிட்ட இடத்தை அடைந்தால் வெளிப்படக்கூடியது என்பதால், அப்படிப்பட்ட ஞான மேன்மையைக் கொண்டவர்கள் கூட்டத்தை அடைந்து, பரிபூர்ணமான ஞான அனுபவம் பெறும்படியான க்ருபை எப்போது கிட்டுமோ என்று கூறுவதாகவும் கொள்ளலாம். அந்தக் கூட்டத்தை இவர் எப்போதும் காணும்படி இருந்தாலும், அன்றாடம் அந்த அனுபவமானது இவருக்குப் புதுமையாகவே உள்ளது. இராமாநுசநூற்றந்தாதி (107) – உன் தொண்டர்களுக்கே அன்புற்றிருக்கும்படி யென்னை யாக்கியங்காள் படுத்தே - என்று அல்லவோ இவருடைய விண்ணப்பம் உள்ளது?

30. இன்பம்தரு பெருவீடு வந்தெய்திலென் எண்ணிறந்த
துன்பம்தரு நிரயம் பல சூழிலென் தொல் உலகில்
மன் பல் உயிர்கட்கு இறைவன் மாயன் என மொழிந்த
அன்பன் அனகன் இராமானுசன் என்னை ஆண்டனனே

விளக்கவுரை – மிகவும் பழமையான இந்த உலகத்தில், அறியாமை மற்றும் பூர்வ கர்ம வாசனை ஆகியவற்றின் காரணமாக ஸம்ஸாரத்தில் சிக்கித் தவிக்கும் எண்ணற்ற ஆத்மாக்களின் எஜமானன்; த்ரிவிக்ரமனாக உலகம் அளந்து, நரஸிம்ஹமாக விரைவாக வந்து, ஜடாயு என்ற பறவையின் ஈமச் சடங்குகள் செய்து, குரங்குகளின் உதவியைக் கொண்டே இலங்கைக்குப் பாலம் அமைத்து, கோவர்த்தன மலையைக் கையில் எடுத்து – இவ்விதம் பல வியப்பான செயல்களைச் செய்யும் மாயன் – இவனே ஸர்வேச்வரன் என்று எம்பெருமானார் உறுதிபட மொழிந்தார். அவர் ஸ்ரீபாஷ்யத்தின் மூலம் இவனே ஸர்வேச்வரன் என்று நிரூபித்து, உலகம் முழுமையும் உணரும்படிச் செய்தார். அனைவரிடமும் அன்பு பூண்டபடி உள்ளார். இப்படிப்பட்ட எம்பெருமானார், எதற்கும் உரிமை இல்லாத என்னைத் தத்து எடுத்து, என்னை ஆட்கொண்டார். இப்படிப்பட்ட உயர்ந்த புருஷார்த்தம் கிட்டிய பின் என் நிலை என்ன? எல்லையற்ற இன்பம் அளிக்கவல்லதும், மிகவும் உயர்ந்த புருஷார்த்தம் என்று கூறப்படுவதும் ஆகிய மோக்ஷம் கிட்டினாலும் என்ன; எண்ணற்ற துன்பம் அளிக்கவல்லதான நரகம் வந்து சூழ்ந்தாலும் என்ன – இவற்றை நான் ஒன்றாகவே நினைத்து, வருந்தாமல் உள்ளேன்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே, எம்பெருமானாருடைய கல்யாணகுண வைபவத்தை உள்ளபடி யறியும் பெரியோர்களுடைய திரளைக் கண்டு ஆநந்தத்தைப் பெறுவிக்குமதான பாக்யம் உண்டாவ தெப்போதோவென்று இவர் அபிநிவேசிக்க, இத்தைக் கண்டவர்கள் உம்முடைய அபேக்ஷை இவ்வளவேயோ பின்னையு முண்டோவென்ன; அநாதியான ஸம்ஸார ஸாகரத்திலே ப்ரமித்துத் திரிகிற ஜந்துக்களுக்கெல்லாம் ஸ்வாமியாய் ஆச்சர்ய குண சேஷ்டிதங்களை யுடையனான ஸர்வேச்வரனென்று ஸ்ரீபாஷ்யாதிமுகேந அருளிச்செய்து, ப்ரயோஜநாந்தர கந்த ரஹிதமான ப்ரீதியோடே உபகரித்தருளும் எம்பெருமானார் அடியேனை அடிமை கொண்டருளினார், இனி ஆநந்தாவஹமான பதம் வந்து ப்ராபித்தாலென், அஸங்யாதங்களான துக்கங்கள் வந்து ப்ராபித்தாலென், இவற்றை ஒன்றாக நினைக்கிறோனோவென்று தம்முடைய அத்யவஸாய தார்ட்யத்தை யருளிச்செய்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களின் மேன்மைகளை உள்ளது உள்ளபடி அறிந்துள்ள சான்றோர்களின் கூட்டத்தைத் தனது

கண்களால் கண்டு ஆனந்தம் அடைவதான பாக்கியம் எப்போது கிட்டுமோ?", என்று இவர் மிகுந்த ஈடுபாட்டுடன் உரைத்தார். இதனைக் கண்ட சிலர் இவரிடம், "உம்முடைய விருப்பம் இது மட்டுமோ, அல்லது மேலும் உண்டோ?" என்று கேட்க, இவர் உரைக்கத் தொடங்குகிறார். அதாவது, "எல்லையற்ற காலமாக உள்ள ஸம்ஸாரக்கடலில் மயக்கம் கொண்டு திரிந்தபடி உள்ள உயிர்கள் அனைத்திற்கும் ஸ்வாமியாகவும், வியக்கவைக்கும் திருக்கல்யாண குணங்கள் மற்றும் செயல்கள் நிறைந்தவனும் ஆகியவன் ஸர்வேச்வரன் ஆவான்", என்று ஸ்ரீபாஷ்யம் முதலான க்ரந்தங்களில் எம்பெருமானார் அருளிச்செய்தார். மற்ற பலன்களின் வாசனை கூட இல்லாதபடி உள்ள அந்த எம்பெருமானார், என்னை ப்ரீதியுடன் நோக்கி உதவினார். அத்துடன் நில்லாமல், என்னைத் தனது அடிமையாக ஆக்கிக் கொண்டார். இவ்விதம் ஆன பின்பு, ஆனந்தம் மட்டுமே நிரம்பியதான பரமபதம் கிட்டினால் என்ன, எல்லையற்ற துக்கங்கள் வந்து சேர்ந்தபடி உள்ள நிலை வந்தால் என்ன, இவற்றை நான் ஒன்றாகவே எண்ணுகிறேன்", என்று தனது உள்ளத்துணிவை உறுதிபடி உரைத்தார்.

வ்யாக்யானம் - (தொல்லுலகில் மன் பல்லுயிர்கட்கு) "ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே, ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:" என்கிறபடியே, அவித்யா கர்மவாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்தமுடைய ஸம்ஸாரத்தில் நித்யராய் அஸங்க்யாதராய்க் கொண்டு வர்த்திக்கிற ஆத்மாக்களுக்கு. (இறையவன்) "ய: ஸர்வேஷு பூதேஷு திஷ்டந் ஸர்வேஷாம் பூதாநாம் அந்தர:, ய: ஸர்வபூதா ந விந்தந்தி, யஸ்ய ஸர்வே பூதாச்சரீரம், ய: ஸர்வேஷாம் பூதாநாம் அந்தரோ யமயதி, நத ஆத்மா அந்தர்யாம்யம்ருத:", "ஸர்வே ஸஸ்மை பலிமாவஹந்தி" , "பீஷாஸ்மாத் வாத: பவதே, பீஷோதேதி ஸூர்ய:, பீஷாஸ்மா தக்நிஸ் சேந்த்ரஸ்ச ம்ருத்யுர் தாவதி பஞ்சம இதி", "அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:" என்று இத்யாதிகளில் சொல்லப்படுகிறபடியே வகுத்த சேஷியானவன்.

விளக்கம் - (தொல்லுலகில் மன் பல்லுயிர்கட்கு) - அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் – ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே, ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: -இப்படியாக ஸம்ஸாரம் என்ற சக்கரத்தில் சுற்றியபடி உள்ள ஜீவன் – என்பதற்கு ஏற்ப அவித்யை, கர்மங்கள் முதலானவற்றின் வாசனை காரணமாக மேன்மேலும் அவற்றில் எப்போதும் உழன்றபடியே உள்ளவர்களாகவும், எண்ணற்றவர்களாகவும் உள்ள ஆத்மாக்களுக்கு. (இறையவன்) – ய: ஸர்வேஷு பூதேஷு திஷ்டந் ஸர்வேஷாம் பூதாநாம் அந்தர:, ய:

ஸர்வபூதா ந விந்தந்தி, யஸ்ய ஸர்வே பூதாச்சரீரம், ய: ஸர்வேஷாம் பூதாநாம் அந்தரோ யமயதி, நத ஆத்மா அந்தர்யாம்யம்ருத: - யார் அனைத்து உயிர்களிலும் காணப்படுகிறானோ, யார் இவ்விதம் உள்ளதை எந்த உயிரும் அறியாதோ, யாருக்கு இவை அனைத்தும் சரீரமோ, யார் உள்ளிருந்து அனைத்தையும் இயக்குகிறானோ, அந்த ஆத்மா (பரமாத்மா) அழிவற்றவன் - என்றும், தைத்திரீயம் (5-6) – ஸர்வே ஸஸ்மை பலிமாவஹந்தி – அவனுக்கு அனைத்து தேவர்களும் பரிசுப்பொருட்களை எடுத்துச் செல்கிறார்கள் - என்றும், தைத்திரீயம் - பீஷாஸ்மாத் வாத: பவதே, பீஷோதேதி ஸூர்ய:, பீஷாஸ்மா தக்நிஸ் சேந்த்ரஸ்ச ம்ருத்யுர் தாவதி பஞ்சம இதி - அவனுக்குப் பயந்தே காற்று வீசுகிறது, சூரியன் உதிக்கிறது, சந்திரன் அக்கினி யமன் முதலியவர்களும் அவ்விதமே - என்றும், நாராயணஸூக்தம் (5) – அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித: - அனைத்தின் உள்ளும் புறமும் நாராயணன் வ்யாபித்து நிற்கிறான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப இயற்கையாகவே எஜமானனாக உள்ளவன்.

வ்யாக்யானம் - (மாயனென) த்ரிவிக்ரம நருஸிம்ஹாதி ரூபேணாவிர்ப்பாவ ஜடாயு மோக்ஷ ப்ரதாந ஸேது பந்தந அயோத்யாவாஸி த்ரிகுணகுல்மலதாதி முக்தி ப்ராபண கோவர்த்தநோத்தரணாதி ஆச்சர்ய சேஷ்டிதங்களை யுடையனான ஸர்வேச்வரனென்று. (மொழிந்த அன்பன்) ஸ்ரீபாஷ்யாதிமுகேந லோகத்தார்க்கெல்லா மருளிச்செய்தும் உபதேசித்தும் போந்த பரமப்ரீதியை யுடையவன். (அநகன்) இந்த உக்த்யுபதேசங்களிலே சில க்யாதி லாப பூஜைகளை அபேக்ஷித்திருந்தால் அது அரஸமாய்த் தலைக்கட்டும்; அப்படியன்றிக்கே, ப்ரீதி ப்ரேரிதராய்க் கொண்டு அவற்றைப் பண்ணியருளினா ராகையாலே "அநகன்" என்று அருளிச்செய்கிறார். (இராமாநுசன்) எம்பெருமானார். (என்னை) அதிகாரமில்லாத வென்னை. இவ்வளவும் ப்ரதிகூலித்துப் போந்தவென்னை. (ஆண்டனனே) பரகத ஸ்வீகாரமாக என்னை யாளாநின்றார். ஆத்மாந்த தாஸ்யத்திலே அந்வயிப்பித்து உஜ்ஜீவிக்கும்படி என்னை யடிமை கொண்டருளினார். இப்படிப்பட்ட புருஷார்த்த காஷ்ட்டையைப் பெற்ற பின்பு.

விளக்கம் – (மாயனென) - த்ரிவிக்ரமனாகவும், நரஸிம்ஹனாகவும் ரூபங்கள் எடுத்து வெளிப்பட்டு, ஜடாயுவுக்கு மோக்ஷம் அளித்து, ஸேது ஸமுத்திரத்தில் பாலம் அமைத்து, அயோத்தியில் உள்ளவர்களுக்கு மூன்று குணங்களின் பிடியில் சிக்கியதால் ஏற்பட்ட தோஷங்களை நீக்கி முக்தி அளித்து, கோவர்த்தன பர்வத்தைத் திருக்கரத்தில் உயர்த்திப்

பிடித்து என்று இவ்விதமாகப் பல வியக்கவைக்கும் செய்கைகளைக் கொண்டவன் ஸர்வேச்வரன் ஆவான் என்று. (மொழிந்த அன்பன்) - ஸ்ரீபாஷ்யம் முதலான பல க்ரந்தங்கள் மூலம் உலகில் உள்ள அனைவருக்கும் அருளிச்செய்தும், உபதேசித்தும் செய்து வந்த மிகுந்த ப்ரீதி உள்ளவர். (அநகன்) – இவ்விதம் செய்த உபதேசங்கள் மூலமாகத் தனக்கு புகழ் வரவேண்டும் என்று எண்ணியவராக இருந்திருந்தால், அதுவும் அவருக்கு உண்டாகி இருக்கும்; ஆனால் அவ்விதம் எண்ணாமல், மக்கள் மீது கொண்டிருந்த அன்பு காரணமாகவே அவற்றைச் செய்தருளினார். இதனால் "அநகன் = தோஷம் அற்றவர்" என்றார். (இராமாநுசன்) - எம்பெருமானார். (என்னை) - இந்த உபதேசங்களைக் கேட்பதற்கு கூடத் தகுதியில்லாத என்னை. இதுநாள் வரை விரோதமாக நடந்த என்னை. (ஆண்டனனே) – பிராணிடம் உள்ளதான ஜீவனைத் தனதாக்கிக் கொண்டது போன்று என்னை ஆட்கொண்டார். மிகுந்த ஈடுபாட்டுடன் நான் அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்யும்விதத்தில் என்னை ஈடுபடுத்தி, பிழைத்துக் கொள்ளும்படி என்னை அடிமை ஆக்கி அருளினார். இப்படிப்பட்ட உயர்ந்த புருஷார்த்த நிலையை நான் அடைந்த பின்னர்.

வ்யாக்யானம் - (இன்பந்தரு பெருவீடு வந்தெய்திலென்) "அம்ருதஸ்யைஷ ஸேது", "ரஸோவைஸ:, ரஸம் ஹி ஏவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி" என்றும், "நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுக பாவைக லக்ஷணா" என்றும், "நலமந்தமில்லதோர் நாடு" என்றும், "அந்தமில் பேரின்பம்" என்றும் சொல்லுகிறபடியே ஆநந்தாவஹமாய் ஆத்மாநுபவம்போலே பரிமிதமாயிருக்கையன்றிக்கே பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷமானது இங்கே வந்து மேல்விழுந்தாலென், அத்தை ஸுகமாகக் கணிசித்திருக்கிறேனோ.

விளக்கம் - (இன்பந்தரு பெருவீடு வந்தெய்திலென்) - முண்டக உபநிஷத் (2-2-5) - அம்ருதஸ்யைஷ ஸேது - மோஷத்தை அடைவிக்கும் பாலம் ப்ரஹ்மம் ஆகும் – என்றும், தைத்திரீயம் (2-7) – ரஸோவைஸ:, ரஸம் ஹி ஏவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி – ப்ரஹ்மம் அனைத்து ரஸமாகவும் உள்ளது, அவனை அடையும் ஜீவாத்மா அதே போன்ற ஆனந்தம் அடைகிறான் – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-5-59) - நிரஸ்தாதிசயாஹ்லாத ஸுக பாவைக லக்ஷணா - தனக்கு மேல் ஏதும் இல்லாதபடியான ஆனந்தவடிவமான சுகம்

ஒன்றை மட்டுமே வடிவாகக் கொண்டதும் – என்றும், திருவாய்மொழி (2-8-4) – நலமந்தமில்லதோர் நாடு – என்றும், திருவாய்மொழி (10-9-10) – அந்தமில் பேரின்பத்து – என்றும் உரைப்பதற்கு ஏற்ப ஆனந்தம் பெருகி நிற்பதாகவும், ஆத்ம அனுபவம் போன்று அளவுபட்டு உள்ளதாக இன்றி மிகவும் உயர்ந்த புருஷார்த்தத்தின் அனைத்து இலக்கணங்களும் பொருந்தியதாகவும் உள்ள மோக்ஷம், என்னைத் தேடி வந்து நின்றால் என்ன, அதனைச் சுகம் என்று நான் எண்ணுவேனோ!

வ்யாக்யானம் - (எண்ணிறந்த துன்பம்) ஸங்க்யைக்கு நிமலமல்லாத துக்கம். "யாம்ச கிங்கர பாசாதி க்ரஹணம் தண்ட தாடநம், யமஸ்ய தர்சநஞ்ச உக்ரமுக்ர மார்க்க விலோகநம்; கரம்பவாலு காவஹ் நியந்த்ர சஸ்த்ராதி பீஷணை:, ப்ரத்யேக நரகேயாச்சயா தநாத் விஜதுஸ்ஸஹா:; க்ரகசை: பாட்யமாநாநாம் மூஷாயாஞ்ச அபிதஹ்யதாம்; குடாரை க்ருத்ய மாநாநாம் பூமௌ ச அபிநிகந்யதாம்; சூலைராரோப்யமாணாநாம் வ்யாக்ர வக்த்ரை: ப்ரவேச்யதாம், க்ருத்ரைஸ் ஸம்பக்ஷய மாணாநாம் த்வீபிபிச்ச உபபுஜ்யதாம்; க்வாத்யதாம் தைல மத்யே சுக்லத்யதாம் க்ஷாரக்ருத்தமே; உச்சாந் நிபாத்யமாநாநாம் க்ஷிப்யதாம் க்ஷேபயந்த்ரகை:; நரகேயாநி துக்காநி பாபஹேது உத்பவாநிச, ப்ராப்யந்தே நாரகேர் விப்ரதேஷாம் ஸங்க்யா ந வித்யதே" என்னும்படியான துக்கங்களை.

விளக்கம் - (எண்ணிறந்த) - சந்தேகம் ஏற்படாதவிதத்தில் பெருகி வரும் துக்கம். யாம்ச கிங்கர பாசாதி க்ரஹணம் தண்ட தாடநம், யமஸ்ய தர்சநஞ்ச உக்ரமுக்ர மார்க்க விலோகநம்; கரம்பவாலு காவஹ் நியந்த்ர சஸ்த்ராதி பீஷணை:, ப்ரத்யேக நரகேயாச்சயா தநாத் விஜதுஸ்ஸஹா:; க்ரகசை: பாட்யமாநாநாம் மூஷாயாஞ்ச அபிதஹ்யதாம்; குடாரை க்ருத்ய மாநாநாம் பூமௌ ச அபிநிகந்யதாம்; சூலைராரோப்யமாணாநாம் வ்யாக்ர வக்த்ரை: ப்ரவேச்யதாம், க்ருத்ரைஸ் ஸம்பக்ஷய மாணாநாம் த்வீபிபிச்ச உபபுஜ்யதாம்; க்வாத்யதாம் தைல மத்யே சுக்லத்யதாம் க்ஷாரக்ருத்தமே; உச்சாந் நிபாத்யமாநாநாம் க்ஷிப்யதாம் க்ஷேபயந்த்ரகை:; நரகேயாநி துக்காநி பாபஹேது உத்பவாநிச, ப்ராப்யந்தே நாரகேர் விப்ரதேஷாம் ஸங்க்யா ந வித்யதே – யம கிங்கரர்களின் பாசக்கயிற்றில் சிக்குண்டு, அவர்களால் தடி கொண்டு அடிக்கப்படும் தண்டனை, யமனை முதன்முதலில் காணப்போகும் வழியில் உள்ள பலவிதமான உக்கிரமான தண்டனைகள், செல்லும் வழியில் உள்ள பயங்கரங்கள், கொதிக்கும் எண்ணெய், இரத்தம் நிறைந்த குழிகள்

என்பதானவற்றில் சிக்குண்டு தவித்தல், இப்படியாக உள்ள எண்ணற்ற நரக துன்பங்கள் - என்பதற்கு ஏற்ப உள்ளதான துக்கங்களை.

வ்யாக்யானம் - (தரு நிரயம் பல சூழிலென்) கொடுக்கும் நரகங்கள் ஒன்றும் சேஷியாதபடி வந்து வளைத்துக்கொண்டாலுமென். இப்படிப்பட்ட நரகங்களை ஒரு துக்கமாக நினைத்திருக்கிறேனோவென்று தம்முடைய த்ருடாத்யவஸாயத்தை யருளிச்செய்தா ராய்த்து. "த்ருணீக்ருத விரிஞ்ச்யாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" என்று எம்பாரருளிச் செய்தாரிறே.

விளக்கம் - (தரு நிரயம் பல சூழிலென்) அளிக்கவல்ல நரகங்கள் பலவும் நான் சிறிதும் தப்பித்து விடாதபடி என்னை வந்து சுற்றி வளைத்துக்கொண்டால் என்ன? இப்படிப்பட்ட நரகங்களைக் கூட நான் துக்கமாக எண்ணுவதில்லை. இதன் மூலம் தனது உறுதியான நம்பிக்கையை உணர்த்தினார். த்ருணீக்ருத விரிஞ்ச்யாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: - இராமாநுசரின் திருவடித் தாமரைகளைப் பற்றி நிற்பவர்கள், நான்முகன் முதலானவர்களுடைய உலகியல் செல்வங்கள் அனைத்தையும் அலட்சியமாகவே எண்ணுவர் - என்று எம்பாரும் அருளிச்செய்தார் அல்லவோ?

31. ஆண்டுகள் நாள் திங்களாய் நிகழ் காலம் எல்லாம் மனமே!
ஈண்டு பல்யோனிகள் தோறு உழல்வோம் இன்று ஓர் எண்ணின்றியே
காண்தகு தோள் அண்ணல் தென் அத்தியூரர் கழலிணைக்கீழ்
பூண்ட அன்பாளன் இராமானுசனைப் பொருந்தினமே.

பொருள் – ஸம்ஸாரபந்தம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டிற்கும் காரணமாக உள்ள மனமே! பல ஆண்டுகள், பல மாதங்கள், பல நாட்கள் என்றுள்ள காலங்கள் முழுவதிலும் – தேவர்கள், மனிதர்கள், விலங்குகள் என்று பலவாகப் பிறந்தும், இறந்தும் உழல்கின்றோம். இவ்விதம் இன்று வரை நான் எம்பெருமானாரின் திருவடிகள் பற்றிய சிந்தனை இல்லாமல் இருந்தேன். ஆனால் இன்று நடந்தது என்ன? காண்பதற்கு ஏற்ற அகன்ற தோள்களை உடையவனும், நாம் சரணம் புக ஏற்ற எஜமானன் போன்றவனும், "நகரேஷு காஞ்சி" எனப்படும் காஞ்சீபுரத்தில் தானே வந்து ஹஸ்திகிரியில் நின்றவனும் ஆகிய பேரருளானனின் அழகான பொருந்திய திருவடிகளைத் தனது தலைக்கு ஆபரணமாகப்

பூண்டு, அவன் மீது இடைவிடாது பக்தி கொண்டவர் எம்பெருமானார் ஆவார். இத்தகைய எம்பெருமானாரிடம் சென்று – உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே – என்று கூறும்படி பொருந்தி நின்றேன்.

அவதாரிகை - லோகத்திலே ஒருவனுக்கு ஒரு நிதி லபித்தால் தன்னுடைய அந்தரங்கனுக்குச் சொல்லுமாப்போலே, இவரும் தம்முடைய பந்தமோஷங்களிரண்டுக்கும் பொதுவான மநஸ்ஸை ஸம்போதித்து, "கலாமுஹூர்த்தாதி ரூபமாய்க் கொண்டு வர்த்திக்குங் காலமெல்லாம் தேவாதிதேஹங்கள்தோறும் ஸஞ்சரித்து இவ்வளவும் போந்தோம். இப்போது ஒரு ஸாதநமின்றிக்கே ஸுந்தரபாஹுவாய் நமக்கு உபகாரகரான போரருளாளன் திருவடிகளின் கீழே அங்குத்தைக்கு ஒரு ஆபரணம் போலேயிருந்துள்ள ப்ரேமத்தையுடையரான எம்பெருமானாரைச் சேர்ந்து கொண்டு நிற்கப் பெற்றோம் கண்டாயே!", என்று சொல்லி ஹ்ருஷ்டராகிறார்.

விளக்கம் - இந்த உலகில் உள்ளவர்கள் தங்களுக்கு ஒரு பெரிய பொக்கிஷம் கிடைத்தால், அதனைக் குறித்து யாருக்கும் கூறாமல், தனக்கு மிகவும் நெருக்கமானவர்களிடம் மட்டுமே கூறுவர். இது போன்று தனது பந்தம், மோக்ஷம் ஆகிய இரண்டிற்கும் காரணமாக உள்ள தனது மனதிடம், "பல காலங்களாக வாழும்போது தேவர்கள் உள்ளிட்ட பலவிதமான சரீரங்களில் பிறவி எடுத்து வளர்ந்தபடி இதுவரை இருந்தோம். ஆனால் இப்போது, மற்ற எந்தவிதமான உபாயத்தையும் நாடாமல், அழகான திருத்தோள்கள் கொண்டவனும், தனக்குப் பேருதவிகள் செய்தவனும் ஆகிய பேரருளான் என்னும் வரதனுடைய திருவடிகளில், அங்கு கிடக்கும் ஒரு ஆபரணம் போன்று ப்ரேமை கொண்டவராகிய எம்பெருமானாரை அடையப்பெற்றோம்", என்று கூறி மகிழ்கிறார்.

வ்யாக்யானம் - (ஆண்டுகள் நாள் திங்களாய் நிகழ்காலமெல்லாம்) "கலா முஹூர்த்தா: காஷ்ட்டாச்ச அஹோராத்ராச்ச ஸர்வச:, அர்த்த மாஸாமாஸாரிதவத் ஸம்வத்ஸரச் ச கல்பதாம்" என்றும், "நிமேஷோ மாநுஷோ யோஸௌ மாத்ராமாத்ர ப்ரமாணத: தைரஷ்டா தசபி: காஷ்ட்டா த்ரிம்சத் காஷ்ட்டா: கலா ஸ்ம்ருதா:; நாடிகாது ப்ரமாணேன கலாதசச பஞ்சச, நாடிகாப்யாமதத்வாப்யாம முஹூர்த்தோ த்விஜ ஸத்தம; அஹோராத்ர முஹூர்த்தாம்ஸ்து த்ரிம்சந்மாஸஸ்துதைஸ்ததா, மாஸைர் த்வாதசபிர் வர்ஷ மஹோ

ராத்ரம் து தத் திவி" என்றும் சொல்லப்படுகிற ஸர்வகாலமும். ஆண்டுகள் – வத்ஸரங்கள், நாள் - தினம், திங்கள் – மாஸம், நிகழ்தல் – வர்த்தித்தல்.

விளக்கம் – கலா முஹூர்த்தா: காஷ்ட்டாச்ச அஹோராத்ராச்ச ஸர்வச:, அர்த்த மாஸாமாஸாரிதவத் ஸம்வத்ஸரச் ச கல்பதாம் – கலை, முஹூர்த்தம், காஷ்டை, அஹோராத்ரம், அர்த்தமாதம், மாதம், வருடம், கல்பம் - என்றும், நிமேஷோ மாநுஷோ யோஸௌ மாத்ராமாத்ர ப்ரமாணத: தைரஷ்டா தசபி: காஷ்ட்டா த்ரிம்சத் காஷ்ட்டா: கலா ஸ்ம்ருதா:; நாடிகாது ப்ரமாணேன கலாதசச பஞ்சச, நாடிகாப்யாமதத்வாப்யாம முஹூர்த்தோ த்விஜ ஸத்தம; அஹோராத்ர முஹூர்த்தாம்ஸ்து த்ரிம்சந் மாஸஸ்துதைஸ்ததா, மாஸைர் த்வாதசபிர் வர்ஷ மஹோ ராத்ரம் து தத் திவி - என்றும் கூறப்படுகின்ற அனைத்து காலங்களிலும் [**குறிப்பு** – இங்கு கூறப்பட்டுள்ளவை அனைத்தும் காலத்தின் பல்வேறு அளவுகளாகும். அவையாவன – த்வம்சி = 28.8 விநாடிகள், 2 த்வம்சி = 1 நிமேஷா, 2 நிமேஷா = 1 காஷ்டை, 2.5 காஷ்டைகள் = 1 கலா, 5 கலா = 1 க்ஷணம், 2 க்ஷணம் = 1 முஹூர்த்தம், 30 முஹூர்த்தங்கள் = 1 அஹோராத்ரம், 15 அஹோமாத்ரம் = 1 அர்த்தமாதம், 2 அர்த்தமாதங்கள் = 1 மாதம், 2 மாதங்கள் = 1 ருது, 6 ருதுக்கள் = 1 ஸம்வத்ஸரம் அல்லது வருடம்].

வ்யாக்யானம் - (ஈண்டு பல்யோநிகள் தோறுழல்வோம்) தேவமநுஷ்யாதி ஜாதிகள் ஒவ்வொன்றிலேதானே அநேகமநேகமாக அவாந்தர ஜாதிகளுண்டு, அவை யெல்லாவற்றிலும் ஒருக்கால் புகுந்தத்திலே ஒன்பதின்கால் புகுந்து, (மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து) என்கிறபடியே அநாதிகாலமே பிடித்து ஸஞ்சரித்துப் போந்தோம். ஈண்டுதல் - திரளுதல், யோநி – ஜாதி, உழலுகை - தட்டித்திரிகை. (மநமே) பந்தமோக்ஷங்க ளிரண்டுக்கும் பொதுவாய் அறிவுக்கு ப்ரஸர த்வாரமான நீ அறிந்தாயென்று அந்தரங்கமான மநஸ்ஸை ஸம்போதித் தருளிச்செய்கிறார். "ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே, ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:, ஜீவே துக்காகுலே" என்கிறபடியே இவ்வளவும் ஸஞ்சரித்துப் போந்தோம்.

விளக்கம் - (ஈண்டு பல்யோநிகள் தோறுழல்வோம்) – தேவர்கள், மனிதர்கள் முதலான பல பிறவிகளிலும் பலவிதமான பிறவிகளும் குலங்களும் உண்டு. அவை அனைத்திலும்

ஒருமுறை அல்ல, பலமுறை மீண்டும் மீண்டும் புகுந்து பிறந்து. (மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து) - எல்லையற்ற காலமாகப் பிடித்தபடி உழன்று கொண்டுள்ளோம். (மநமே) – ஒருவனுக்கு ஸம்ஸார பந்தம் ஏற்படுவதற்கும், அதிலிருந்து விடுதலை கிட்டுவதற்கும் பொதுவாக எனது மனமே! நீயே உள்ளாய். அறிவு ஏற்படுவதற்கான வாசலாகவும் நீயே உள்ளாய். இப்படிப்பட்ட நீ, இதுவரை நான் கூறியபடி உள்ள நிலையை நன்கு அறிவாய். இப்படியாகத் தனது அந்தரங்கமான மனதிடம் கூறியபடி உள்ளார். அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை – ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே, ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:, ஜீவே துக்காகுலே - இப்படியாக ஸம்ஸாரம் என்ற சக்கரத்தில் சுற்றியபடி உள்ள ஜீவன் - என்பதற்கு ஏற்ப இதுவரை ஸஞ்சரித்தபடி இருந்துள்ளோம்.

வ்யாக்யானம் - (இன்று) இப்போது. (ஓரெண்ணின்றியே) நான் ஒன்றையெண்ணிக் கொண்டிராதே யிருக்க. எம்பெருமானார் திருவடிகளிலே நான் ஒரு சைதந்ய கார்யத்தையும் பண்ணாதேயிருக்க. (காண்டகு தோளண்ணல்) "ஆயதாச்ச ஸுவ்ருத்தாச்ச பாஹவ: பரி கோபமா: ஸர்வ பூஷண பூஷார்ஹா:" என்கிறபடியே யிருந்துள்ள திருத்தோள்களை யுடையராய் விந்த்யாடவியில் நின்றும் காஞ்சீபுரத்துக்குத் துணையாக வந்து, "அஹம் ஏவ பரம் தத்த்வம்" என்று திருக்கச்சிநம்பி முகமாக உபதேசித்த உபகாரகனாய். (தென்னத்தியூரர்) தர்சநீயமாய். "நகரேஷு காஞ்சீ" என்னப்பட்ட காஞ்சீ நகரத்திலே, "ஸ்ரீஹஸ்தி சைல சிகரோஜ்வல பாரிஜாதம்" என்று தாமே யருளிச்செய்யும்படி ஹஸ்திகிரியிலே யெழுந்தருளி யிருந்து, வகுத்த சேஷியான பேரருளாளப் பெருமாளுடைய. (கழலிணைக் கீழ்) பாவநத்வ போக்யத்வங்களுக்கு பரஸ்பர ஸத்ருசமான திருவடிகளின் கீழே.

விளக்கம் – (இன்று) - இப்போது. (ஓரெண்ணின்றியே) நான் எதனையும் ஆழ்ந்து சிந்திக்காமல், எம்பெருமானாருடைய திருவடிகளில் புத்தி அறிந்து எந்தவிதமான செயல்களையும் செய்யாமலும் இருக்க. (காண்டகு தோளண்ணல்) – இராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் (3-14) – ஆயதாச்ச ஸுவ்ருத்தாச்ச பாஹவ: பரி கோபமா: ஸர்வ பூஷண பூஷார்ஹா: - (அனுமன் இராமனிடம் கேட்பது) நீண்டிருப்பவையும், அழகுடன் திரண்டுள்ளவையும், உலக்கை போன்றுள்ளவையும், அனைத்து ஆபரணங்கள் மூலம் மறைக்கப்பட வேண்டியவையும் ஆகிய திருக்கரங்கள் - என்று கூறுவதற்கு ஏற்ப அழகான

திருத்தோள்கள் கொண்டவனாகவும், விந்த்ய மலைப்பகுதிகளிலிருந்து காஞ்சீபுரம் வரை வழித்துணையாக வந்தவனும், அஹம் ஏவ பரம் தத்வம் - நானே உயர்ந்த தத்வம் ஆவேன் – என்று ஸ்வாமி திருக்கச்சிநம்பிகள் மூலமாக உபதேசித்துப் பேருதவி செய்தவனும். (தென்னத்தியூரர்) - காண்பதற்கு மிகவும் அழகாக, நகரேஷு காஞ்சி - நகரங்களில் சிறந்தது காஞ்சீ - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ளதான காஞ்சீபுரத்தில், ஸ்ரீஹஸ்தி சைல சிகரோஜ்வல பாரிஜாதம் – அத்திகிரி மலையின் உச்சியில் காணப்படும் ஒளி வீசும் பாரிஜாதம் - என்று எம்பெருமானாராகிய தானே அருளிச்செய்யும்படியான காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருந்து, அனைவருக்கும் இயற்கையாகவே எஜமானனாகிய வரதனுடைய. (கழலிணைக் கீழ்)- புனிதத்தன்மை மிக்கது, இன்பம் அளிக்கவல்லது என்பதாகிய பொருந்திய இரண்டு திருவடிகளின் கீழ்.

வ்யாக்யானம் - (பூண்டவன்பாளன்) சிரோ பூஷணமான திருவபிஷேகத்தை அலங்கரிக்கு மவர்களைப்போலே, தம்மாலே அலங்கரிக்கப்பட்ட பக்தி ப்ரகர்ஷத்தை யுடையரான. (இராமாநுசன்) எம்பெருமானாரை. (பொருந்தினமே) “உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே” என்றும், “ராமானுஜ பதச்சாயா” என்றும் சொல்லுகிறபடியே பொருந்திவிட்டோம் கண்டாயே! என்று தாம் பெற்ற வாழ்வுக்கு ஹர்ஷித்துக் கொண்டு நின்றாராய்த்து.

விளக்கம் - (பூண்டவன்பாளன்) - தலையில் அழகான ஆபரணங்கள் அணிந்து கொண்டு அலங்கரித்துக் கொள்பவர்கள் போன்று, அந்தத் திருவடிகளில் தனது பக்தி என்பதைக் கொண்டு அலங்கரித்தபடி உள்ளவரும், அதனால் மகிழ்ந்தபடி உள்ளவரும் ஆகிய. (இராமாநுசன்) - எம்பெருமானார். (பொருந்தினமே) - திருவாய்மொழி (6-10-10)- அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேன் - என்றும், ராமானுஜ பதச்சாயா – எம்பெருமானாருடைய திருவடி நிழல் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அண்டி நின்று, அவருடன் பொருந்திவிட்டோம் என்பதைக் கண்டாயா? இப்படியாகத் தாம் பெற்ற வாழ்வைக் கண்டு மகிழ்ந்து நின்றார்.

32. பொருந்திய தேசும் பொறையும் திரலும் புகழும் நல்ல
திருந்திய ஞானமும், செல்வமும் சேரும் செறு கலியால்
வருந்திய ஞாலத்தை வண்மையினால் வந்து எடுத்து அளித்த
அருந்தவன் எங்கள் இராமானுசனை அடைபவர்க்கே.

பொருள் – இருள் தரு மாஞாலம் என்றபடி, கலியின் பிடியில் சிக்கி, துக்கப்பட்டபடி உள்ள இந்தப் பூமியைக் காப்பாற்ற, தனது கருணை காரணமாகப் பரமபதத்தில் இருந்து இறங்கி எம்பெருமானார் வந்தார். திருக்கோட்டியூர் நம்பி தனக்கு அளித்த சரமச்லோகத்தின் (இது ஸ்ரீமத் பகவத் கீதையில் உள்ள பதினெட்டாவது அத்தியாயம், 66 ஆவது ச்லோகம்) பொருளை, எந்தவித பயனும் எதிர்பாராமல், உலகம் அனைத்திற்கும் அளித்தார். ஸ்ரீரங்கநாயகியை முன்னே நிறுத்தி, ஸ்ரீரங்கத்தின் நாதனான அழகிய மணவாளனின் திருவடிகளில் சரணாகதி செய்தார். இவ்விதம் சரணாகதி என்ற தவம் உடைய, எங்கள் ஸ்வாமியான, எம்பெருமானாரை சரணம் புகுந்ததால் கிட்டுவது என்ன தெரியுமா? தங்கள் ஸ்வரூபத்திற்கு ஏற்ற மதிப்பைப் பெறுவார்கள். பௌத்தர்கள், யாதவப்ரகாசன், யஜ்ஞமூர்த்தி போன்றவர்கள் பெற்றிருந்த போலியான மதிப்பு போன்று அல்லாமல், உண்மையான மதிப்பு என்று கருத்து. மிகுந்த பொறுமையைப் பெறுவார்கள். பகவானுக்கும் அவனது அடியார்களுக்கும் இடைவிடாமல் கைங்கர்யம் செய்யும் பலன் பெறுவார்கள். சரியான முறையில் பெறப்பட்ட உயர்ந்த ஞானம் பெறுவார்கள். இவை அனைத்தையும் நாம் நாடிப் போகவேண்டுமா? அவசியம் இல்லை, பெரியபிராட்டியின் கடாக்ஷம் மூலம் ஓடிவரும் செல்வம் போன்று, இவை தாமாகவே நம்மிடம் ஓடி வந்து சேர்ந்துவிடும்.

அவதாரிகை – “இராமாநுசனைப் பொருந்தினமே” என்று இவர் ஹ்ருஷ்டராகிற இத்தைக் கண்டவர்கள், “நாங்களும் இவ்விஷயத்தை லபிக்கப் பார்க்குமளவில் எங்களுக்கு உம்மைப் போலே ஆத்மகுணங்க ளொன்றுமில்லையே” யென்ன; “எம்பெருமானாரைச் சேருமவர்களுக்கு ஆத்மகுணங்கள் முதலானவையெல்லாம் தன்னடையே வந்து சேரும்” என்கிறார்.

விளக்கம் – “எம்பெருமானாரை அடைந்து, அவருடன் பொருந்திய நின்றதைக் காண்டாயா” என்று தன்னுடைய உள்ளத்திடம் இவர் உரைத்தார். இவ்விதம் மகிழ்ந்த இவரைக் கண்ட சிலர், “நாங்களும் இது போன்று எம்பெருமானாரை அண்டி நிற்க ஆர்வமாக உள்ளோம். ஆனால் அதற்கு ஏற்ற நல்ல குணங்கள் ஏதும் எங்களிடம்

இல்லையே" என்று கூறினார். இதற்கு இவர், "எம்பெருமானாரை அண்டுபவர்களுக்கு ஆத்மகுணங்கள் போன்ற பலவும் தானாகவே வந்து சேரும்", என்கிறார்.

வ்யாக்யானம் – (செறு கலியால் வருந்திய ஞாலத்தை) "கலேஸ் ஸ்வரூபம் மைத்ரேய யதி வா ச்ரோதுமிச்சஸி, தந்நிபோதஸ மாஸே ந வர்த்ததே யந் மஹாமுநே; வர்ணாச்ரம ஆசாரவ தீப்ரவர்த்தி ந கலௌ ந்ருணாம், ந ஸாம யஜுரிக் தர்ம விநிஷ்பாதந ஹேதுகீ; விவாஹோ ந கலௌ தர்ம்யாந் ந சிஷ்ய குரு ஸம்ஸ்த்திதி:, ந தாம்பத்ய க்ரமோநைவ வஹ்நி தேவாத்மக க்ரம:" என்று தொடங்கி, "பரித்யக்ஷ்யதி பர்த்தாரம் வித்தஹீநம் ததா ஸ்த்ரிய:, பர்த்தா பவிஷ்யதி கலௌ வித்தவாநேவ யோஷிதாம்; ஸ்த்ரிய: கலௌ பவிஷ்யந்தி ஸ்வைரிண்யோ லலிதஸ்ப்ருஹா:; அநாவ்ருஷ்டி பயப்ராயா: ப்ரஜா: க்ஷுத்பயகாதரா:, பவிஷ்யந்தி ததா ஸர்வே ககநாஸக்த த்ருஷ்டய:; அஸ்நாந போஜிநோ ந அக்னி தேவத அதிதி பூஜநம், கரிஷ்யந்தி கலௌ ப்ராப்த்தே ந ச பிண்டோதக க்ரியாம்; பாஷண்ட ஸம்ச்ரயாம் வ்ருத்திம் ஆச்ரயிஷ்யந்தி ஸத்க்ருதா:; யதா யதா ஹி பாஷண்ட வ்ருத்திர் மைத்ரேய லக்ஷ்யதே, ததா ததா கலே வ்ருத்திரநுமேயா விசக்ஷணை:" என்னுமளவும் ப்ரதிபாதித்தபடியே அபிபவியா நின்றுள்ள கலியாலே க்லேசப்படுகிற பூலோகத்தை. "இருள் தருமாஞால"மான பூலோகத்திலேயிருந்த சேதநரையென்றபடி.

விளக்கம் - (செறு கலியால் வருந்திய ஞாலத்தை) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-1-9 முதல் 12) – கலேஸ் ஸ்வரூபம் மைத்ரேய யதி வா ச்ரோதுமிச்சஸி, தந்நிபோதஸ மாஸே ந வர்த்ததே யந் மஹாமுநே; வர்ணாச்ரம ஆசாரவ தீப்ரவர்த்தி ந கலௌ ந்ருணாம், ந ஸாம யஜுரிக் தர்ம விநிஷ்பாதந ஹேதுகீ; விவாஹோ ந கலௌ தர்ம்யாந் ந சிஷ்ய குரு ஸம்ஸ்த்திதி:, ந தாம்பத்ய க்ரமோநைவ வஹ்நி தேவாத்மக க்ரம: - மைத்ரேயரே! கலியினுடைய ஸ்வரூபத்தை விளக்கமாகக் கூறுகிறேன், கேட்பீராக. கலியுகத்தில் வர்ணாச்ரம தர்மங்கள் இருக்காது. ஆகவே ருக், யஜுர், ஸாமம் என்ற வேதங்களில் கூறப்பட்ட யாகம் போன்றதான எதுவும் நடக்காது. கலி காலத்தில் தர்மத்திற்கு ஏற்ப திருமணங்கள் நடைபெறாது. குரு சிஷ்ய முறையும் இருக்காது. தம்பதிகள் ஒருவருக்கொருவர் நடந்து கொள்வதில் எந்தவிதமான தர்மமும் இருக்காது – என்று தொடங்கிக் கீழே உள்ள பல வரிகளில் விரிவாக விளக்கப்பட்டபடி மேலோங்கி நிற்கின்ற கலியின் கொடுமையால் துன்பம் அடைந்துள்ள பூமியை:

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-1-18) – பரித்யக்ஷ்யதி பர்த்தாரம் வித்தஹீநம் ததா ஸ்த்ரிய:, பர்த்தா பவிஷ்யதி கலௌ வித்தவாநேவ யோஷிதாம் - பெண்கள் பொருளில்லாத கணவனைக் கைவிட்டு, எவனாயினும் பொருளுடையவனாக இருந்தால் அவனையே தங்களுடைய கணவனாகத் தேடிக் கொள்வார்கள்

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-1-18) – ஸ்த்ரிய: கலௌ பவிஷ்யந்தி ஸ்வைரிண்யோ லலிதஸ்ப்ருஹா: - பெண்கள் சளுக்கனாக உள்ளவனிடம் காதல் கொண்டு உடலாலோ மனதாலோ விபசாரிகளாக இருப்பார்கள்

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-1-24) – அநாவ்ருஷ்டி பயப்ராயா: ப்ரஜா: க்ஷுத்பயகாதரா:, பவிஷ்யந்தி ததா ஸர்வே ககநாஸக்த த்ருஷ்டய: - மக்கள் அனைவரும் மழையில்லாமை குறித்து அச்சமுடையவர்களாய், பசிக்குப் பயந்தும், சோர்ந்தும் வானத்தையே நோக்கி இருப்பார்கள்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-1-27) – அஸ்நாந போஜிநோ ந அக்னி தேவத அதிதி பூஜநம், கரிஷ்யந்தி கலௌ ப்ராப்த்தே ந ச பிண்டோதக க்ரியாம் – பலரும் அக்னி பூஜை, தேவ பூஜை, அதிதி பூஜை, பிண்டோதக தான ரூபமான பித்ரு பூஜை முதலியவற்றைச் செய்யாமல், நீராடாமல் கூட உணவு உண்பார்கள்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-1-37) – பாஷண்ட ஸம்ச்ரயாம் வ்ருத்திம் ஆச்ரயிஷ்யந்தி ஸத்க்ருதா: - போலியாக உள்ள சிலர் நல்ல செயல்கள் செய்வது போன்று தங்களை அண்டுபவர்களை ஏமாற்றி வளர்வார்கள்.

- ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-1-45) – யதா யதா ஹி பாஷண்ட வ்ருத்திர் மைத்ரேய லக்ஷ்யதே, ததா ததா கலே வ்ருத்திரநுமேயா விசக்ஷணை: - எப்போது மக்களுக்கு போலியானவர்களுடைய வாக்கியங்களில் இச்சையுண்டாகுமோ அப்போது கலி நன்றாக வளர்ந்துள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

அதாவது, திருவாய்மொழி (10-6-1) – இருள் தரு மா ஞாலம் - என்பதற்கு ஏற்ப அறியாமை என்ற இருளை ஏற்படுத்துகின்ற பூமியில் உள்ள சேதநர்களை என்று கருத்து.

வ்யாக்யானம் – (வண்மையினால்) "துர்லபோ மாநுஷோ தேஹோ தேஹிநாம் க்ஷணபங்குர:, தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்ட ப்ரிய தர்ஸநம்" என்னும்படி ஜ்ஞாநமாந்த்யத்தாலே இத்தலையில் அபேக்ஷையின்றிக்கே யிருக்க, தம்முடைய பரதுக்காஸஹிஷ்ணுத்வ லக்ஷண க்ருபா மூலமாக ஔதார்யத்தாலே வந்து பரமபதத்தில் நின்றும் க்ருபா மாத்ர ப்ரஸந்நராய்க் கொண்டு இந்த லோகத்திலே யெழுந்தருளி. "புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்த க்ஷயாயச, ஸ்ரீமான் ஆவிரபூத்பூமௌ ராமாநுஜ திவாகர:" என்னக் கடவதிறே. "வெறிதே யருள் செய்வர்" என்கிறபடியே நிர்ஹேதுகமாக வந்தருளி.

விளக்கம் - (வண்மையினால்) - ஸ்ரீமத்பாகவதம் (11-2-29) - துர்லபோ மாநுஷோ தேஹோ தேஹிநாம் க்ஷணபங்குர:, தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்ட ப்ரிய தர்ஸநம் - உயிர்களுக்கு, க்ஷண நேரத்தில் அழியக்கூடிய மனித உடல் கிடைப்பது அரிது, அது கிடைத்தபோதிலும் ஸ்ரீவைகுண்டநாதனுடைய அன்புக்கு இலக்கான பாகவதர்களைக் காண்பது மிகவும் அரிது - என்பதற்கு ஏற்ப, ஞானச்சுருக்கம் காரணமாக உலகில் உள்ளவர்களுக்கு பகவத்விஷயத்தில் எந்தவிதமான ஆர்வமும் இல்லாதபோதிலும், மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாத கருணைக்குக் காரணமான தனது தாராள குணத்தால் தூண்டப்பட்டு, பரமபதத்திலிருந்து இங்கு வந்து கருணையை மட்டுமே வெளிப்படுத்துபவராக இந்த உலகத்தில் எழுந்தருளி. புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்த க்ஷயாயச, ஸ்ரீமான் ஆவிரபூத்பூமௌ ராமாநுஜ திவாகர: - சூரியனைக் கண்ட தாமரை மலர்வது போன்று, இராமாநுசன் என்னும் சூரியனைக் கண்ட நம்முடைய பாவங்கள் அனைத்தும் மறைகின்றன - என்பது காண்க. திருவாய்மொழி (8-7-8) – வெறிதேயருள் செய்வர் - என்பதற்கு ஏற்ப எந்தவிதமான ப்ரதிபலன் காரணமும் இன்றி இங்கு அவதரித்து.

வ்யாக்யானம் - (எடுத்தளித்த) "ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வாமர்த்யமயீம் தநும் மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ர பாணிநா" என்கிறபடியே லோகத்தா ரெல்லாரையும் அர்த்தித்வ நிரபேக்ஷமாக ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிப்பித்து

ரக்ஷித்தவராய். திருக்கோட்டியூர்நம்பி குஹ்யதமமாக உபதேசித்துப் போந்த சரமச் ச்லோகார்த்தத்தை எல்லார்க்கும் பூரிதாநம் பண்ணியும், ஸ்ரீரங்கநாயகியார் முன்னிலையாக அழகியமணவாளன் திருவடிகளிலே ப்ரபத்தி பண்ணியும் ரக்ஷித்தருளினா ரென்று ப்ரஸித்தமிறே.

விளக்கம் – (எடுத்தளித்த) ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வாமர்த்யமயீம் தநும் மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ர பாணிநா – ஸர்வேச்வரனாகிய நாராயணன், இந்த உலகில் உள்ள ஜீவாத்மாக்கள் மீது கருணை கொண்டு, அவர்களைக் கரையேற்றும் பொருட்டு, தன்னுடைய திருக்கரங்களில் சாஸ்த்ரத்தைக் கைக்கொள்கிறான் - என்பதற்கு ஏற்ப, உலகத்தில் உள்ள அனைவரையும், அவர்களுடைய வேண்டுதல்களை எதிர்பார்க்காமல், அவர்களை ஸம்ஸாரத்திலிருந்து கரை ஏற்றிக் காப்பாற்றியவராக. திருக்கோஷ்டியூர்நம்பி தமக்கு மிகவும் இரகசியமாக உபதேசித்த ஸ்ரீமத்பகவத்கீதையின் சரமச்லோகத்துடைய ஆழ்பொருளை அனைவருக்கும் மகிழ்வுடன் வெளியிட்டு, ஸ்ரீரங்கநாச்சியார் முன்னிலையில் அழகியமணவாளனாகிய ஸ்ரீரங்கநாதன் திருவடிகளில் சரணம் அடைந்து, அனைவரையும் காப்பாற்றினார்.

வ்யாக்யானம் – (அருந்தவன்) “தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:” என்றும், “ஸத்கர்மநிரதா: சுத்தா: ஸாங்க்யயோகவிதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி”, “யத்யேந காமகாமேந ந ஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந ந ச பக்தி: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி: தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸைநவ மஹாமுநே பரமாத்மா ச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம:” என்றும் சொல்லுகிறபடியே தபஸ்ஸுக்களெல்லாவற்றிலும் வைத்துக் கண்டு உத்தமமான தபஸ்ஸாய், வ்யவஸாயிகளுக்கு துர்லபமாய், “ப்ரபத்தேரந்யந் நமே கல்பகோடி ஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந:” என்று தம்மாலே நிஷ்கர்ஷிக்கப்பட்ட சரணாகதி ரூப தபஸ்ஸையுடையவராய்.

விளக்கம் - (அருந்தவன்) - தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு: - ஆகையால் ந்யாஸத்தை (சரணாகதி) தவங்களில் மேலானதாகக் கூறுகிறார்கள் - என்றும், லக்ஷ்மீ தந்த்ரம் (17-62) - ஸத்கர்மநிரதா: சுத்தா: ஸாங்க்யயோகவிதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி – கர்மயோகத்தைக் கைக்கொண்டு, ஞானயோக பக்தி யோகங்களைச் செய்பவர்கள் ப்ரபத்தி செய்தவனுடைய கோடியில் ஒரு பாகத்தைக் கூடப்

பெறத் தகுதியானவர்கள் அல்லர் – என்றும், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37, 25 – 27) - யத்யேந காமகாமேந ந ஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந ந ச பக்தி: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி: தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸேநைவ மஹாமுநே பரமாத்மா ச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம: - பயனில் விருப்பம் கொண்ட பலராலும், எந்தெந்த பலன்கள் மற்ற உபாயங்களால் அடைய இயலாதோ, முமுக்ஷுவால் மோக்ஷம் என்னும் பலன் கர்மயோகம், ஞானயோகம் மற்றும் பக்தியோகம் ஆகியவற்றால் அடைய இயலாதோ அப்படிப்பட்ட பலவிதமான பலன்களும் ப்ரபத்தியால் அடையப்படுகின்றன. அப்படிப்பட்ட ப்ரபத்தி மூலமே புருஷோத்தமனாகிய பரமாத்மாவும் அடையப்படுகிறான். எங்கு சென்றால் மீண்டும் திரும்புவது என்பது இல்லையோ, அந்த இடமே முமுக்ஷுக்களால் விரும்பப்படும் இடமாகும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தவங்கள் அனைத்திலும் மிகவும் உயர்ந்த தவமாகவும், சாதாரணமாக உள்ளவர்களுக்கு மிகவும் அரிதாகவும், ப்ரபத்தேரந்யந் நமே கல்பகோடி ஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந: - கோடி, ஆயிரம் என்று எத்தனை வணங்கினாலும், ப்ரபத்தியைத் தவிர உயர்ந்த மோக்ஷ உபாயம் இல்லை - என்று தன்னால் உறுதிபட உரைக்கப்பட்டதும் ஆகிய சரணாகதி வடிவில் உள்ள தவம் நிறைந்தவர்.

வ்யாக்யானம் - (எங்கள்) எங்களுடைய ஸ்வாமியான. எங்களுக்குத் தம்மை முற்றூட்டாகக் கொடுத்தருளினவென்னுதல். ஞாலத்தை யெடுத்தருளுகை ஒரு வ்யாஜமாய், தம்மை யெடுத்தருளுகைக்கே வந்தாரென்று காணும் இவரபிஸந்தி. அன்றிக்கே, "விநாசாய ச துஷ்க்ருதாம்" என்று பஹுவசநத்தாலே சொல்லி, அநேகம் பேரை ஸம்ஹரித்தாலும் ஹிரண்ய ராவண கம்ஸாதிகளே ப்ரத்யவதாரத்திலும் ப்ரதாநரா யிருக்குமாப்போலே, லோகத்தாரையெல்லாம் உத்தரிப்பிக்கவேணுமென்று அவதரித்தாராகிலும், தம்மை யொருவரையும் உத்தரிப்பிக்கவேணுமென்று அவதரித்தாராகக் காணும் இவர் நினைத்திருப்பது. (இராமாநுசனை) இப்படிப்பட்ட எம்பெருமானாரை. (அடைபவர்க்கே) ஸமாச்ரயணம் பண்ணினவர்களுக்கே. "ஸேஷமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம்" என்னக் கடவதிறே.

விளக்கம் - (எங்கள்) - எங்களுடைய ஸ்வாமியாகிய. எங்களுக்குத் தன்னைப் பரிபூர்ணமாக அனுபவிக்கும்படியும், பலன் பெறும்படியும் அளித்தார். இந்த உலகத்தைத் தன்னுடையது என்று கருதி கருணை பொழிய எம்பெருமானார் வரவில்லை, திருவரங்கத் தமுதனராகிய தன்னை எடுத்தாண்டு கருணை பொழியவே எம்பெருமானார் வந்தார்

என்று எண்ணுகிறார். அல்லது, கீதை (4-8) – விநாசாய ச துஷ்க்ருதாம் – பாவங்களை அழிப்பதற்காகவும் – என்று தீயவர்களை வதம் செய்து காப்பாற்றுவதற்காக உலகிற்கு வருவதாக ஸர்வேச்வரன் உரைத்தாலும், அந்தந்த அவதாரங்கள் ஹிரண்யன், இராவணன், கம்சன் என்று குறிப்பிட்டவர்களை வதம் செய்வதற்காகவே எடுக்கப்பட்டவை என்றுள்ளது போன்று, எம்பெருமானார் இந்த உலகில் உள்ள பலரையும் கரையேற்றவேண்டும் என்று எண்ணி அவதரித்தார் என்றாலும், திருவரங்கத் தமுதனாராகிய தன்னைக் கரையேற்றவேண்டும் என்பதற்காகவே வந்தார் என்று இவர் எண்ணுகிறார். (இராமாநுசனை) - இப்படிப்பட்ட எம்பெருமானாரை. (அடைபவர்க்கே) – அண்டி நிற்பவர்களுக்கு மட்டுமே, யதிராஜ விம்சதி (18) - ஸேஷமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம் - நீ அருளிச் செய்த சரணாகதி கத்யங்களில் கூறப்பட்டவை மட்டுமே என்னைப் போன்றவர்களைக் காக்க வல்லவை ஆகும் - என்பது காண்க.

வ்யாக்யானம் - (பொருந்திய தேசும்) ஸ்வரூபத்துக்குத் தகுதியான பராபிபவந ஸாமர்த்யமும், ஸரஸ்வதீ பண்டாரத்திலிருந்த மாயாவாதிகளையும், திருநாராயண புரத்திலிருந்த பௌத்தரையும், யாதவப்ரகாசன், யஜ்ஞமூர்த்தி தொடக்கமானவரையும் ப்ரஸங்க முகத்தாலே அபிபவித்தவருடைய மதிப்புக்குப் போலியான மதிப்பென்றபடி. பொருந்துதல் – சேருதல், அதாவது – ஸ்வரூபாநுரூபத்வம். தேசு - மதிப்பு. (பொறையும் எத்தனை வ்யஸந ஸுகங்கள் வந்து மேல் விழுந்தாலும் அநவஸாதாநுத்தர்ஷங்களுக் குடலாய், "விபதி தைர்யம் அதாப்யுதயே க்ஷமா" என்னும்படியான க்ஷமா குணமும்.

விளக்கம் - (பொருந்திய தேசும்) - தனது ஸ்வரூபத்திற்கு ஏற்றபடியாக தன்னையும் ஸ்ரீவைஷ்ணவத்தையும் எதிர்ப்பவர்களை அவமதித்து ஓடும்படிச் செய்யவல்ல திறன். ஸரஸ்வதீ பண்டாரத்திலிருந்த மாயாவாதிகள், திருநாராயணபுரத்திலிருந்த பௌத்தர்கள், யாதவப்ரகாசன், யஜ்ஞமூர்த்தி போன்ற பலரையும் தனது வாதத் திறனால் வென்ற எம்பெருமானாருக்கு எழுந்த மதிப்பு போன்றதான மதிப்பை அடைவர். எத்தனைவிதமான இன்பதுன்பங்கள் வந்தாலும், எல்லையற்ற உயர்த்திக்கு இலக்கணமாக உள்ளதான பர்த்ருஹரி நீதி சதகம் (1-63) – விபதி தைர்யம் அதாப்யுதயே க்ஷமா – ஒரு ஞானிக்குத் தைர்யமே தந்தை, மன்னிக்கும் பொறுமையே தாய் - என்பதற்கு ஏற்ப உள்ள மன்னித்தருளும் பொறுமையைப் பெறுவர்.

வ்யாக்யானம் - (திறலும்) பகவத் பாகவதாசார்ய விஷயங்களிலே, "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்றாப்போலே ஸகலவித கைங்கர்யங்களையும் பண்ணித் தலைக்கட்டுகைக் குறுப்பான மநோபலமும். (புகழும்) சம தம ஆத்யாத்ம குணமென்னுதல்; ஸகலதிகந்த வ்யாப்தையான கீர்த்தியென்னுதல்; (நல்ல திருந்திய ஞாநமும்) சேதநராயிருப்பார்க் கெல்லாம் ஸாதாரணமாயிருப்பதொரு ஜ்ஞாநமுண்டு ஐஹிகாமுஷ்மிக விஷயங்களிலே அநுகூலமாயும் ப்ரதிகூலமாயுமிருக்கிற விஷயங்களையும், அவற்றுக்கு ஸாதநமாயிருக்கு மவற்றை அறிவிப்பிக்கக் கடவதாய், அப்படியன்றிக்கே, ஸதாசார்ய ஸமாச்ரயணம் பண்ணி குருகுலவாஸாதிகளாலே அவனுக்கு முகமலர்த்தி யுண்டாக்கி அவனால் உபதேசிக்கப்பட்ட தத்வஹித புருஷார்த்த தத்யாதாத்ம்ய ஜ்ஞாநமும். "தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா: உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்நாநிநஸ் தத்வ தர்சிந:" என்றும், "மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச" என்றும், "ஏதத் ஜ்ஞாநம் இதி ப்ரோக்தம்" என்றும், "செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்" என்றும் சொல்லுகிறபடியே, ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே கட்டளைப்பட்ட ஸம்யஜ்ஞாநமும். (செல்வமும்) "ஸாஹிஸ்ரீரம்ருதாஸதாம்" என்றுஞ் சொல்லப்படுகிற வேதவேதாந்த பாரகத்வமாகிற ஸ்ரீயும், "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்த:" என்கிற கைங்கர்யஸ்ரீயு மென்னுதல்; "நல்ல பதத்தால் மனை வாழ்வர் கொண்ட பெண்டிர் மக்கள்" என்கிறபடியே ஐஹிகஸ்ரீயுமென்னுதல். இவையெல்லாம் அஹமஹ மிகையா வந்து தன்னடையே சேருமென்றதாய்த்து.

விளக்கம் - (திறலும்) ஸர்வேச்வரன், அவன் அடியார்கள், ஆசார்யர்கள் விஷயத்தில் இராமாயணம் ஆரண்யகாண்டம் - அஹம் ஸர்வம் கரிஷ்யாமி - நான் உனக்கு வேண்டிய அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்வேன் – என்பதற்கு ஏற்ப, அனைத்து விதமான கைங்கர்யங்களையும் முழுமையாகச் செய்து முடிக்கவல்ல உறுதியும் பெறுவர். (புகழும்) – எந்த நிலையிலும் ஸமமாக இருத்தல் போன்ற ஆத்மகுணங்கள், அனைத்து திசைகளிலும் பரவி நிற்கும்படியான கீர்த்தி பெறுவர். (நல்ல திருந்திய ஞாநமும்) - மனிதர்களாக உள்ள அனைவருக்குமே பொதுவாகச் சில தன்மைகள் உண்டு. அவையாவன, இக பர சுகங்கள் குறித்து விருப்பமும், மற்ற விஷயங்களில் வெறுப்பும் ஆகும். இது போன்ற விஷயங்களை உணர்த்தவல்ல ஞானம் என்பது மனிதர்களுக்குப்

பொதுவாகவே காணப்படும். இத்தகைய ஞானம் போன்று அல்லாமல், தனது ஆசார்யனை அண்டி நின்று, குருகுல வாசம் போன்றவை மூலம் அவரை மகிழும்படிச் செய்து, அவரால் உபதேசிக்கப்பட்ட உண்மை மற்றும் நன்மைகள் நிறைந்த புருஷார்த்தம் குறித்து உள்ளது உள்ளபடி அறியவல்ல ஞானத்தை அடைவர். கீதை (4-34) – தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா: உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்நாநிநஸ் தத்வ தர்சிந: - ஆத்மஞானிகளை நன்றாக வணங்குவதாலும், பொறுமையாகக் கேட்பதாலும், கைங்கர்யம் செய்வதாலும் அவர்களிடமிருந்து ஆத்மஞானத்தைப் பெறுவாயாக. ஆத்மஸ்வரூபத்தை உணர்ந்த அவர்கள் உனக்கு அத்தகைய ஞானத்தை உபதேசிப்பார்கள் - என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-1-1) – மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச – மைத்ரேயர் என்னும் ரிஷி நன்றாக வணங்கிக் கேட்டார் – என்றும், கீதை (13-11) – ஏதத் ஜ்ஞாநம் இதி ப்ரோக்தம் – இவை அனைத்தும் ஞானம் - என்றும், கண்ணிநுண்சிறுத்தாம்பு - செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான் – என்றும் கூறுவதற்கு ஏற்ப தனது ஆசார்யன் கருணைக்கு அடிபணிந்து உண்டான ஞானம். (செல்வமும்) - ஸாஹிஸ்ரீரம்ருதாஸதாம் – என்று கூறப்படுவதான வேதவேதாந்தங்களை உள்ளது உள்ளபடி அறியவல்ல செல்வத்தை அடைவர். அல்லது இராமாயணம் – லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந: - மஹாலக்ஷ்மி பொருந்திய லக்ஷ்மணன் - என்பதற்கு ஏற்ப கைங்கர்யச் செல்வத்தை அடைவர். திருவாய்மொழி (8-10-11) – நல்ல பதத்தால் மனை வாழ்வர் கொண்ட பெண்டிர் மக்கள் – என்று கூறுவதற்கு ஏற்றபடி இந்த உலகில் வாழும்போது உள்ளதான பொருட்செல்வமும் பெறுவர். இவை அனைத்தும் “நான் முந்தி, நான் முந்தி” என்று போட்டி இட்டபடி வந்து சேரும் என்று கருத்து.

33. அடையார் கமலத்து அலர்மகள் கேள்வன் கை ஆழி என்னும்
படையோடு நாந்தகமும் படர் தண்டும் ஒண் சார்ங்கவில்லும்
புடை ஆர் புரிசங்கமும் இந்தப் பூதலம் காப்பதற்கு என்று
இடையே இராமானுச முனி ஆயின இந்நிலத்தே

விளக்கவுரை – அழகு, நறுமணம், குளிர்ச்சி ஆகிய தன்மைகள் மிகுதியாகவும் இலைகள் நெருங்கவும் உள்ளது தாமரை மலராகும். இந்தத் தாமரை மலரின் பரிமளம் என்பது ஒரு வடிவு கொண்டதோ என்று கூறும்படி, இதில் அவதரித்தவள் பெரியபிராட்டி ஆவாள். இவள் விரும்பும் நாதனாக, இவனை மட்டுமே விரும்பும் நாயகனாக வாஸுதேவன்

உள்ளான். அடியார்களுக்கு ஏற்படும் துன்பம் கலளைய, கஜேந்திரனைக் காத்தது போன்று துயர் நீக்கத் தனது கையில் எப்போதும் சக்கரத்தாழ்வானை வைத்துள்ளான். மேலும் நந்தகம் என்ற வாள், சார்ங்கம் என்ற வில், ஞானத்திற்கு இடமாகிய பாஞ்சஜன்யம் என்ற வலம்புரிச் சங்கு ஆகியவற்றைத் தனது கைகளில் கொண்டுள்ளான். இந்த ஆயுதங்கள் அனைத்தும், இந்த "இருள் தருமாஞாலத்தை" காப்பாற்றுவதற்காக, இந்த உலகிற்கு வந்து, இந்தச் செயலில் ஈடுபட்டுள்ள எம்பெருமானாருக்குத் துணையாக நிற்கின்றன. அல்லது, இவையே எம்பெருமானாராக அவதரித்துள்ளன என்றும் கூறலாம்.

அவதாரிகை - இலைகளாலே நெருங்கியிருக்கிற தாமரைப்பூவிலே யவதரித்த பெரியபிராட்டியாக்கு வல்லபனான ஸர்வேச்வரனுடைய திருக்கையிலே ஸ்த்தாவர ப்ரதிஷ்டையா யிருக்கிற திருவாழியாழ்வானும், அவனோடு ஒரு கோவையா யிருக்கிற ஸ்ரீநந்தகமென்னும் பேரையுடைத்தான கட்கமும், ஆச்ரிதரக்ஷணத்தில் பொறுப்பை யுடைத்தான ஸ்ரீகதையும், அதிச்லாக்யமான ஸ்ரீசார்ங்கமும், புடையாலே தர்சநீயமாய் வலம்புரியென்னும் பேரையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யமும், கலிதோஷாபி பூதமாய்க் காணப்படுகிற இந்த லோகத்தை ரக்ஷிப்பதாகவே எம்பெருமானார் அதிகரித்த கார்யத்துக்கு ஸஹகாரிகளாய்க் கொண்டு அவர் பக்கலிலேயாய்த் தென்கிறார். அன்றிக்கே, பஞ்சாயுதங்களும் எம்பெருமானாராய் வந்து திருவவதரித்தன வென்கிறா ரென்னவுமாம்.

விளக்கம் - இலைகள் நெருக்கமாக உள்ளதான தாமரைமலரில் அவதரித்த பெரியபிராட்டியாரின் நாயகனான ஸர்வேச்வரனுடைய திருக்கரத்தில் அசையாமல் வீற்றுள்ள சக்கரத்தாழ்வானும், ஸர்வேச்வரனுடன் எப்போதும் கோர்த்தபடி உள்ள ஸ்ரீநந்தகம் என்ற வாளும், அடியார்களை எப்போதும் காப்பாற்றுவதில் மட்டுமே பொறுப்பு உள்ளதான கதையும், கொண்டாடத்தக்கதாக உள்ள ஸ்ரீசார்ங்கம் என்ற வில்லும், காண்பதற்கு மிகவும் அழகாக உள்ளதும் வலம்புரி என்று கொண்டாடப்படுவதும் ஆகிய ஸ்ரீபாஞ்சஜந்யம் என்ற சங்கும், கலியின் தோஷங்களைத் தாங்கியபடி உள்ளதான இந்த லோகத்தைக் காப்பாற்றுவதற்காக, எம்பெருமானார் எத்தகைய காரணத்திற்காக இந்த லோகத்தில் அவதரித்தாரோ அந்தச் செயல்களில் அவருக்குத் துணை நிற்பதற்காக, அவர் அருகில் எப்போதும் உள்ளன என்கிறார். அல்லது

இந்த ஐந்து ஆயுதங்களும் எம்பெருமானாராகவே ரூபம் எடுத்து அவதரித்தன என்று கூறுகிறார் என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - (அடையார் கமலத்தலர்மகள் கேள்வன்) தாமரை தான் "கம்பீராம்பஸ் ஸமுத்பூத"மானால், செவ்வி, நாற்றம், குளிர்த்தி முதலான குணங்களெல்லாம் மிகுந்து இலை நெருக்கத்தை யுடைத்தா யிருக்குமிறே; அப்படிப்பட்ட தாமரைப்பூவினுடைய பரிமளந்தான் ஒரு வடிவு கொண்டாப்போலே இதிலே ஈடுபட்டு விடமாட்டாதே திருவவதரித்த பெரியபிராட்டியாருக்கு வல்லபனான ஸ்ரீவாஸுதேவனுடைய. அடை – இலை. (கையாழி யென்னும் படையோடு) திருக்கையில் நிரந்தரமாகவிருந்துள்ள திருவாழியென்கிற ஆயுத விசேஷத்தோடே. "சல ஸ்வரூபம் அத்யந்தம் ஜவேநாந்தரிதாநிலம்; சக்ர ஸ்வரூபம் ச மநோ தத்தே விஷ்ணு: கரே ஸ்திதம்" என்று அஸ்த்ரபூஷணாத்யாயத்தில் சொல்லுகிறபடியே மநஸ் தத்வாபிமாநியாய் கம்பீர ஸ்வபாவனான திருவாழியாழ்வானோடே ஒரு கோவையாகக் கணிசிக்கப்படவென்றபடி. விரோதிகளாலே ஆச்ரிதர் நலிவுபட்டு ஸ்ரீகஜேந்த்ராழ்வானைப்போலே கூப்பிட, அக்கூப்பீடு கேட்டு ஆயுதம் வரக்கொள்ளில் பணிப்படுமென்று எப்போதும் ஆசிலே கையை வைத்துக் கொண்டே யிருக்கிறான் காணும். படை - ஆயுதம்.

விளக்கம் - (அடையார் கமலத்தலர்மகள் கேள்வன்) – கம்பீராம்பஸ் ஸமுத்பூதம் – அகன்ற நீரை விட்டு விலகாத தாமரை – என்பதற்கு ஏற்றபடி உள்ள தாமரையானது அழகு, நறுமணாம், குளிர்ச்சி போன்ற பல தன்மைகளையும் கொண்டதாகவும், இலைகள் அடர்த்தியாகவும் உள்ளதாக இருக்கும் அல்லவோ? அப்படிப்பட்ட தாமரையின் பரிமளம் என்பதே ஒரு ரூபம் கொண்டது போன்று, தாமரையின் தன்மைகளில் ஈடுபட்டு, அவற்றை விட்டு அகல இயலாதபடியாக, அதிலேயே அவதரித்த பெரியபிராட்டியாருடைய நாயகனாகிய பரவாஸுதேவனுடைய. அடை என்றால், இலை என்று பொருள். (கையாழி யென்னும் படையோடு) – திருக்கரத்தில் நிரந்தரமாக வீற்றுள்ள சக்கராயுதம். ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-22-71) – சல ஸ்வரூபம் அத்யந்தம் ஜவேநாந்தரிதாநிலம்; சக்ர ஸ்வரூபம் ச மநோ தத்தே விஷ்ணு: கரே ஸ்திதம் – சஞ்சலத்துடன் கூடியதான மனம் என்பதே அதிக வேகம் காரணமாகக் காற்றையும் மிஞ்சக்கூடிய சக்கரமாக மஹாவிஷ்ணுவின் திருக்கரத்தில் உள்ளது – என்று கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனுடைய திருவுள்ளத்தை எப்போதும் அறிந்துள்ள கம்பீரமான தன்மை கொண்ட சக்கரத்தாழ்வான். விரோதிகளால் துன்பத்தில் ஆழ்கின்ற கஜேந்த்ராழ்வான் போன்றுள்ள அடியார்கள் அழைப்பதைக் கேட்டவுடன் ஆயுதத்தை எடுக்கவேண்டும்

என்றால் தாமதம் ஏற்படும் என்பதால், ஆயுதத்தின் கைப்பிடியிலேயே எப்போதும் திருக்கரத்தை வைத்தபடி உள்ளான். படை என்றால், ஆயுதம் என்று பொருள்.

வ்யாக்யானம் - (நாந்தகமும்) "பிபர்த்தி யச்சாஸிவரம் அச்யுதோ அத்யந்த நிர்மலம்; வித்யாமயம் து தத் ஜ்ஞானம் அவித்யா கோச ஸம்ஸ்திதம்" என்கிறபடியே ஜ்ஞாநாபிமாநியாய் நந்தகமென்னும் பேரையுடைத்தான திருவாளும். (படர்தண்டும்) "புத்திரப்யாஸ்தே கதா ரூபேண மாதவே" என்கிறபடியே புத்த்யபிமாநியாய் ஆச்ரித விரோதிகளான ப்ரதிபக்ஷத்தை சிக்ஷிக்கும்போது அதிவிபுலமாய்த் தோன்றும் ஸ்ரீகதையும். படர்தல் – விபுலத்வம்.

விளக்கம் - (நாந்தகமும்) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-22-74) – பிபர்த்தி யச்சாஸிவரம் அச்யுதோ அத்யந்த நிர்மலம்; வித்யாமயம் து தத் ஜ்ஞானம் அவித்யா கோச ஸம்ஸ்திதம் – வித்யை என்பதே எந்தவிதமான தோஷமும் அற்றதான வாளாகவும், அவித்யை என்பது அதன் உறையாகவும் அச்சுதனின் திருக்கரத்தில் உள்ளது - என்பதற்கு ஏற்ப ஞானத்தின் அபிமான தேவதையே நந்தகம் என்று பெயர் கொண்ட வாள். (படர்தண்டும்) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-22-69) – புத்திரப்யாஸ்தே கதா ரூபேண மாதவே – புத்தியே கதை ரூபமாக மாதவனின் திருக்கரத்தில் உள்ளது - என்பதற்கு ஏற்ப புத்தியின் தேவதையானதும், அடியார்களுடைய விரோதிகளைத் தண்டிக்கும்போது எங்கும் பரவி நிற்பது போன்று தோன்றுவதுமான கதாயுதம். படர்தல் என்றால் எங்கும் நிறைதல் என்று பொருள்.

வ்யாக்யானம் - (ஒண் சார்ங்க வில்லும் புடையார் புரிசங்கமும்) "பூதாதிம் இந்த்ரியாதி ச த்விதா அஹங்காரம் ஈச்வர:; பிபர்த்தி சங்க ரூபேண சார்ங்க ரூபேண ச ஸ்திதம்" என்கிறபடியே இந்த்ரிய கரணமான ஸாத்விகா ஹங்காராபிமாநியாய் அத்யந்த விலக்ஷணமாய் சார்ங்கமென்னும் பேரையுடைத்தான திருவில்லும். பூத கரணமான தாமஸாஹங்காராபிமாநியாய், மிகவும் முழங்குகைக் குறுப்பாம்படி புடை பெருத்து தர்சநீயமான ஸம்ஸ்த்தாநத்தை யுடைய வலம்புரியான ஸ்ரீபாஞ்சஜந்யமும். ஒண்மை - அழகு. புடை - இடம். புரி – வலம்புரி, அதாவது தக்ஷிணாவர்த்தம்.

விளக்கம் - (ஒண் சார்ங்க வில்லும் புடையார் புரிசங்கமும்) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-22-70) – பூதாதிம் இந்த்ரியாதி ச த்விதா அஹங்காரம் ஈச்வர:; பிபர்த்தி சங்க ரூபேண சார்ங்க ரூபேண ச ஸ்திதம் – பூதாதியும் இந்த்ரியங்களும் இரண்டுவிதமான அஹங்காரங்களாக, தாமஸ அஹங்காரம் சங்காகவும், ஸாத்விக அஹங்காரம் வில்லாகவும் ஈச்வரனுடைய திருக்கரத்தில் உள்ளது - என்பதற்கு ஏற்ப இந்த்ரிய கரணமாக உள்ளதான ஸாத்விக அஹங்காரத்தின் அபிமான தேவதையாகவும், மிகவும் மேன்மை உள்ளதும் ஆகிய சார்ங்கம் என்ற பெயர் கொண்ட வில். பஞ்சபூதங்களுக்குக் கரணமான தாமஸ அஹங்காரத்தின் அபிமான தேவதையாயும், மிகுந்த ஒலி எழுப்புவதற்கு ஏற்றபடி நடுப்பாகம் பெருத்ததாயும், காண்பதற்கு அழகான உருவம் கொண்டதாயும், வலம்புரியாகவும் உள்ள ஸ்ரீபாஞ்சஜந்யம்.

வ்யாக்யானம் - (இந்தப் பூதலங் காப்பதற்கென்று) பரித்ருச்யமாநமாய் கீழில் பாட்டில்போலே கலி ஸாம்ராஜ்யம் பண்ணி வேதமார்க்கத்தை மூலையடியே நடத்திக் கொண்டு போருகிற "இருள் தருமாஞாலத்தை" ரக்ஷிக்கைக்காகவென்று. (இடையே) மத்யே வந்து. (இந்நிலத்தே) நித்யஸூரிகளான இவர்கள் அத்யந்த ஹேயமாய் அருவருக்கும்படியான இந்த லோகத்தில். (இராமானுச முனியாயின) எம்பெருமானார்தாம் மநநம் பண்ணிக் கொண்டிருக்கிற இந்த ஜகத் ரக்ஷண கார்யத்துக்கு தாங்கள் ஸஹகரிக்கைக்காக இவர் பக்கலிலே ஆயின. எம்பெருமானார்க்குக் கையாளாயிருந்தன வென்றபடி. அன்றிக்கே, இந்த லோகத்தை ரக்ஷிக்கைக்காக ஸ்ரீபஞ்சாயுதங்களும் தாங்களே வந்து இந்த லோகத்திலே எம்பெருமானாராய் அவதரித்தனவென்னவுமாம். "ப்ரதயந் விமதேஷு தீக்ஷ்ண பாவம் ப்ரபு: அஸ்மத் பரிரக்ஷணே யதீந்த்ர: அப்ருதக் ப்ரதிபந்ந யந்மயத்வை: வவ்ருதே பஞ்சபி ஆயுதை: முராரே:" என்று இவ்வர்த்தத்தை அபியுக்தரும் அருளிச்செய்தாரிறே.

விளக்கம் - (இந்தப் பூதலங் காப்பதற்கென்று) - கடந்த பாசுரத்தில் கூறப்பட்டபடி, கலியின் ஸாம்ராஜ்யத்தை நடத்தியபடியும், வேதமார்க்கத்தை எங்கோ ஒரு மூலையில் தள்ளியபடியும் உள்ளதான, திருவாய்மொழி (10-6-1) – இருள்தரு மா ஞாலம் – என்பதற்கு ஏற்ப உள்ள இந்த உலகத்தைக் காப்பதற்காக. (இடையே) - நடுவில் வந்து. (இந்நிலத்தே) – நித்யஸூரிகள் மிகவும் தாழ்ந்தது என்று அருவறுக்கும்படியாக உள்ள இந்த லோகத்தில்.

(இராமானுச முனியாயின) - எம்பெருமானார் எப்போதும் சிந்தித்தபடி உள்ளதான இந்த "லோகத்தைக் காப்பாற்றவேண்டும்" என்ற செயலுக்குத் தாங்கள் துணையாக நிற்பதற்காக, அவர் அருகில் எப்போதும் உள்ளன. அல்லது, இந்த லோகத்தைக் காப்பாற்றுவற்காக ஸர்வேச்வரனுடைய ஐந்து ஆயுதங்களும் தாங்களே இந்த லோகத்திற்கு வந்து, எம்பெருமானாராகவே அவதரித்தன என்றும் கூறலாம். யதிராஜ ஸப்ததி (12) - ப்ரதயந் விமதேஷு தீக்ஷ்ண பாவம் ப்ரபு: அஸ்மத் பரிரக்ஷணே யதீந்த்ர: அப்ருதக் ப்ரதிபந்ந யந்மயத்வை: வவ்ருதே பஞ்சபி ஆயுதை: முராரே: - பகவானின் ஐந்து ஆயுதங்களான சங்கு, சக்கரம், கதை, வாள் மற்றும் வில் ஆகிய அனைத்தும் இராமானுஜராக வடிவம் கொண்டு இந்த உலகிற்கு வந்தன. வேதங்களை எதிர்க்கும் மதத்தினரிடம் தனது கொடிய தன்மையை காண்பித்து வாதம் செய்யும் இராமாநுஜர், நம்மையும் காப்பாற்றுவதில் வல்லவர் ஆவார் - என்று இந்தக் கருத்தை நம்பத்தக்கவர் உரைத்தார் அல்லவோ?

34. நிலத்தைச் செறுத்து உண்ணும் நீசக்கலியை நினைப்பரிய
பலத்தைச் செறுத்தும் பிறங்கியதில்லை என் பெய் வினை தென்
புலத்தில் பொறித்த அப்புத்தகச் சும்மை பொறுக்கியபின்
நலத்தைப் பொறுத்தது இராமானுசன் தன் நயப்புகழே

விளக்கவுரை – தர்மம், அர்த்தம், காமம் (அறம், பொருள், இன்பம்) மற்றும் மோக்ஷம் ஆகிய நான்கு புருஷார்த்தங்கள் ஏற்படுவதற்கு இடமாக உள்ளது இந்தப் பூமியாகும். இந்தப் பூமியில் உள்ள மனிதர்களை மயங்க வைக்கும்; அவர்களுக்குத் துயரமும் ஏற்படவைக்கும்; யுகங்களில் தாழ்வானது; மனதால் ஸர்வேச்வரனின் வலிமையைக்கூட அறிந்து கொள்ளலாம், ஆனால் இதன் வலிமையை அறிய இயலாது – இப்படிப்பட்ட தன்மைகள் உடையது எது என்றால் கலிகாலமாகும். சூரியன் உதயம் ஆனவுடன் இருள் விலகியது போன்று, எம்பெருமானார் திருஅவதாரம் செய்தவுடன் இந்தக் கலியின் தோஷம் விலகியது. இவ்விதமாக எம்பெருமானார் இந்த உலகைக் காப்பாற்றினார். இவ்விதம் மிகவும் உயர்வான செயல்கள் செய்த பின்னரும் எம்பெருமானாரின் உயர்ந்த திருக்கல்யாண குணங்கள் பிரகாசம் அடையவில்லை. பின்னர் வேறு எதன் மூலம் பிரகாசம் அடைந்தது? பல ஆண்டுகளாக நான் இயற்றி வந்த பாவங்கள் அனைத்தும், தெற்குத் திசையை இருப்பிடமாக உடைய யமலோகத்தில் சித்திரகுப்தனால் அவன்

சுவடிகளில் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பாவங்களையும், அந்தச் சுவடிகளையும் எம்பெருமானார் அழித்தார். அதன் பின்னரே அவரது குணங்கள் பிரகாசம் பெற்றன.

அவதாரிகை – கீழிரண்டு பாட்டிலே கலியினுடைய க்ரௌர்யத்தாலே க்லேசப்பட்ட லோகத்தை ரக்ஷித்த எம்பெருமானாரை ஆச்ரயித்தவர்களுக்கு ஸ்வரூபாநு ரூபமான ஸம்பத்துக்கள் தன்னடையே வந்து சேருமென்றும், அவர்தாம் ப்ரதிபாதித்து, இப்பாட்டிலே – "அப்படிப்பட்ட ரக்ஷணத்தாலே எம்பெருமானாருடைய ப்ரபாவம் ப்ரகாசித்ததில்லை, என்னுடைய ஆஸுர க்ருத்யங்களை யமலோகத்திலே யெழுதி வைத்த புஸ்தக பாரத்தையெல்லாம் தஹித்த பின்புகாணும் அவருடைய கல்யாணகுண வைபவத்துக்கு ஒரு ப்ரகாசம் லபித்தது" என்கிறார்.

விளக்கம் - கடந்த இரண்டு பாசுரங்கள் மூலம் கலியின் கொடுமை காரணமாக மிகுந்த துன்பத்தில் ஆழ்ந்துள்ள லோகத்தைக் காப்பாற்றிய எம்பெருமானாரை அண்டி நின்றவர்களுக்கு, அவர்களுடைய ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்றபடியான ஸம்பத்துக்கள் தாங்களாகவே வந்து சேரும் என்றும், அப்படிப்பட்ட காப்பாற்றுதலுக்குரிய மேன்மை அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவர் எம்பெருமானார் ஆவார் என்றும் விளக்கினார். இந்தப் பாசுரத்தில் - அவ்விதம் அனைவரையும் காப்பாற்றிய காரணத்தால் எம்பெருமானாருக்கு மேன்மை வெளிப்படவில்லை; நான் செய்த பலவிதமான தீய செயல்கள் காரணமாக யமலோகத்தில் உள்ள எனது பாவக்கணக்கு என்னும் புஸ்தகம் பெரிதாகியபடி இருந்தது; அதனை எரித்து என்னை நேர்வழி ஆக்கிய பின்னரே அவருக்கு அந்த மேன்மைகள் கிட்டின - என்கிறார்.

வ்யாக்யானம் - (நிலம்) தர்மார்த்த காமமோக்ஷ புருஷார்த்தங்களுக்கெல்லாம் விளைநிலமான மஹாப்ருதிவி. க்ருத த்ரேதா த்வாபாராதி யுகங்களிலே, "சாதுர் வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குண கர்ம விபாகச:" என்று சொல்லப்படுகிற தத்தந் மர்யாதைகளிலே நடந்து, "நிராமயோ ஹ்யரோகச்ச துர்பிக்ஷ பய வர்ஜித:; ந புத்ர மரணம் கேசித் த்ரக்ஷ்யந்தி புருஷா: க்வசித், நார்யச்சா விதவா நித்யம் பவிஷ்யந்தி பதி வ்ரதா:; ந சாக்நிஜம் பயம் கிஞ்சிந்நாப்ஸு மஜ்ஜந்தி ஜந்தவ:, ந வாதஜம் பயம் கிஞ்சந்நாபி ஜ்வர க்ருதம் ததா; ந சாபி க்ஷுத் பயம் தத்ர ந தஸ்கர பயம் ததா, நகராணி ச ராஷ்ட்ராணி

தநதாந்ய யுதாநி ச; நித்யம் ப்ரமுதிதா: ஸர்வே யதா க்ருத யுகே ததா" என்கிறபடியே ஸுகோத்தரமாக பகவதாஜ்ஞா பரிபாலநம் பண்ணிக் கொண்டு போருகிற பூமியென்றபடி.

விளக்கம் – (நிலம்) – அறம், பொருள், வீடு, இன்பம் என்பதான நான்கு புருஷார்த்தங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இந்தப் பூமி உள்ளது. க்ருதயுகம், த்ரேதாயுகம், துவாபரயுகம் ஆகியவற்றில், கீதை (4-13) – சாதுர் வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குண கர்ம விபாகச: - நான்கு வர்ணங்கள் மற்றும் அவர்களுடைய கர்மங்கள் ஆகியவை என்னால் படைக்கப்பட்டன - என்பதற்கு ஏற்றபடி அந்தந்த யுகங்களின் முறைப்படி நடந்து, இராமாயணம் பாலகாண்டம் (1-90, 91, 92, 93, 94) – நிராமயோ ஹ்யரோகச்ச துர்பிக்ஷ பய வர்ஜித:; ந புத்ர மரணம் கேசித் த்ரக்ஷ்யந்தி புருஷா: க்வசித், நார்யச்சா விதவா நித்யம் பவிஷ்யந்தி பதி வ்ரதா:; ந சாக்நிஜம் பயம் கிஞ்சிந்நாப்ஸு மஜ்ஜந்தி ஜந்தவ:, ந வாதஜம் பயம் கிஞ்சந்நாபி ஜ்வர க்ருதம் ததா; ந சாபி க்ஷுத் பயம் தத்ர ந தஸ்கர பயம் ததா, நகராணி ச ராஷ்ட்ராணி தநதாந்ய யுதாநி ச; நித்யம் ப்ரமுதிதா: ஸர்வே யதா க்ருத யுகே ததா – அயோத்தியில் மக்கள் மன வியாதி மற்றும் உடல் வியாதி அற்றவர்களாகவும், பஞ்சம் முதலான பயம் அற்றவர்களாகவும் வாழ்ந்தனர்; சிறுவர்களுடைய மரணம் உண்டாகவில்லை; திருமணம் ஆனவர்கள் விதவைகள் ஆகவில்லை; எப்போதும் பதிவிரதைகளாகவே இருந்தனர்; தீயினால் அச்சம் உண்டாகவில்லை; எந்த ஒரு ஜீவராசியும் நீரில் முழுகி இறக்கவில்லை; புயல் முதலான காற்றினால் பயம் உண்டாகவில்லை; உணவு இல்லாத காரணத்தால் பசிக்கொடுமை, திருடர்களால் பயம் உண்டாகவில்லை; அனைத்து இடங்களும் தனமும் தான்யமும் நிறைந்ததாகவே இருந்தன; எப்போதும் மக்கள் க்ருத யுகத்தில் இருந்தது போன்று மகிழ்வுடன் இருந்தனர் - என்று கூறுவதற்கு ஏற்ப, இன்பத்தை அளிக்கவல்லதான ஸர்வேச்வரனுடைய ஆணையைப் பின்பற்றியபடி நடந்து கொண்டிருக்கும் பூமி.

வ்யாக்யானம் - (நிலத்தை) அந்த பூமியிலே வர்த்திக்கிற சேதநரை. (செறுத்து) அந்த மர்யாதையை யெல்லாம் மூலையடியே நடத்திக் கொண்டு பூர்வகாலத்துக்கு விபரீதமாக எல்லாரையும் துக்காகுலராம்படி பண்ணி. (உண்ணும்) லோகத்தாரை யெல்லாம் ஸ்வ வசமாக்கிக் கொண்டு ஸாம்ராஜ்யம் பண்ணி நிற்கிற கலிதான், லோகத்தை அழித்த ப்ரகாரத்தை கீழில் பாட்டுக்களிலே பரக்கச் சொன்னோம். (நீசக்கலியை) மநுஷ்யரிலே

சண்டாளரைப் போலே காணும் யுகங்களிலே அதிஹேயமான கலியுகமும். (நீசக்கலியை) நீசமான கலியுகத்தினுடைய. (நினைப்பரிய பலத்தை) "அப்ராப்ய மநஸா ஸஹ" என்னுமாப்போலே எத்தனையேனும் தரமுடையார்க்கும் அந்த யுகத்தினுடைய க்ரௌர்யம் தட்டாதபடி வர்த்திப்போமென்று நினைத்திருக்கவு மரிதாயிருக்கிற பலத்தை. மநஸ்ஸால் பரிச்சேதிக்க வரிதாயிருக்கிற பலத்தை யென்றபடி. "மஹாபல:" என்று சொல்லப்படுகிற ஸர்வேச்வரனுடைய பலத்தை பரிச்சேதிக்கிலும் இதினுடைய பலத்தை பரிச்சேதிக்க வொண்ணாதுகாணும்.

விளக்கம் - (நிலத்தை) - இப்படிப்பட்ட பூமியில் வசிக்கின்ற சேதநர்களை. (செறுத்து) இவ்விதமாக உள்ள நேர்வழிகள் அனைத்தையும் தள்ளி, முன்பு இருந்த காலகட்டத்துக்கு விரோதமாக, அனைவரையும் துக்கத்தால் தவிக்கும்படிச் செய்து. (உண்ணும்) – லோகத்தில் உள்ள அனைவரையும் தன்வசப்படுத்திக் கொண்டு இந்த உலகை ஆண்டபடி நிற்கின்ற கலி. இத்தகைய கலியானது இந்த லோகத்தை எவ்விதம் அழித்தது என்பது குறித்து பல பாசுரங்களில் விரிவாக உரைக்கப்பட்டன. (நீசக்கலியை) – யுகங்களில் மிகவும் தாழ்ந்ததாக உள்ள கலியுகம். (நீசக்கலியை) – மிகவும் தாழ்ந்த கலியுகத்தின். (நினைப்பரிய பலத்தை)- தைத்திரீய ஆநந்தவல்லீ – அப்ராப்ய மநஸா ஸஹ – மனதாலும் எண்ண இயலாதபடி - என்பதற்கு ஏற்ப, எந்த அளவு உயர்ந்த குணங்கள் மற்றும் செயல்கள் கொண்டவராக உள்ளபோதிலும் "கலியுகத்தின் கொடுமை என்பது நம்மை அண்டாதபடி நாம் வாழ்வோம்" என்று எண்ணுவது கூட மிகவும் கடினமாக உள்ள கலியின் பலத்தை. கலியின் பலம் இத்தகையது என்று மனதாலும் எண்ணிப் பார்க்கக்கூட இயலாதபடி உள்ளது. ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் (172) – மஹாபல: - அளப்பரிய பலம் பொருந்தியவன் - என்பதற்கு ஏற்ப உள்ள ஸர்வேச்வரனுடைய பலத்தை ஆராய்ந்து பார்க்க முடிந்தால் கூட, கலியின் பலத்தை அவ்வாறு செய்ய இயலாதபடி உள்ளது.

வ்யாக்யானம் – (செறுத்தும்) பாஸ்கரன் உதித்து அந்தகாரத்தை ஸவாஸநமாகப் போக்கினாப்போலே கலிதோஷத்தை நிவர்த்திப்பித்தவளவிலும் "பொலிக, பொலிக, பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம், நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கி யாதொன்றுமில்லை, கலியுங் கெடுங் கண்டு கொண்மின்" என்று மயர்வற மதிநல மருளப் பெற்றவரும் இவருடைய அவதாரத்தைக் கொண்டாடினாரிறே. "ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தாம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந்

ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்", "கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்கசக்ரபாணே பவ சரணமிதீரயந்தி யே வை த்யஜ படே தூரதரேண தாநபாபாந்", "ந கலு பாகவதா யம விஷயம் கச்சந்தி" என்கிறபடியே இவரவதரித்து எல்லாரையும் ப்ரபத்தி மார்க்கத்திலே நடப்பித்து பாகவதராகப் பண்ணி, "கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து நாவலிட்டுழி தருகின்றோம் நமன்றமர் தலைகள் மீதே" என்கிற ப்ரகாரத்திலே கலியினுடைய வெக்காயம் தட்டாதபடி லோகத்தையெல்லாம் ரக்ஷித்தவளவிலு மென்றபடி.

விளக்கம் – (செறுத்தும்) - சூரியன் உதித்து அடர்ந்த இருளை முற்றிலுமாக அதன் அடையாளத்துடன் நீக்குவது போன்று, கலியின் தோஷத்தை எம்பெருமானார் நீக்குவார் என்று திருவாய்மொழி (5-2-1) – பொலிக, பொலிக, பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம், நலியும் நரகமும் நைந்த நமனுக்கிங்கி யாதொன்றுமில்லை, கலியுங் கெடுங் கண்டு கொண்மின் – என்பதற்கு ஏற்ப மயர்வற மதிநலம் அருளப் பெற்ற நம்மாழ்வார், இவருடைய அவதாரத்தை முன்பே கொண்டாடினார் அல்லவோ? விஷ்ணுபுராணம் (3-7-14) - ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தாம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் – தன்னுடைய கைகளில் பாசக்கயிற்றுடன் உள்ள தனது கிங்கரனைப் பார்த்து யமன் அவனது காதில் மிகவும் ரகசியமாக, "நான் சாதாரணவர்களுக்கு மட்டுமே ப்ரபு ஆவேன். எனது அதிகாரம் என்பது நாராயணனின் பக்தர்களிடம் செல்வதில்லை. ஆகவே மது என்னும் அசுரனை அழித்த ஸர்வேச்வரனின் திருவடிகளில் ப்ரபத்தி செய்தவர்களிடம் நீ செல்லவேண்டாம்", என்பான் - என்றும், விஷ்ணுபுராணம் (3-7-33) - கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்கசக்ரபாணே பவ சரணமிதீரயந்தி யே வை த்யஜ படே தூரதரேண தாநபாபாந் – யமன் தனது கிங்கரனிடம், "தாமரை போன்ற கண்கள் கொண்டவனே! வாஸுதேவா! விஷ்ணுவே! அடியார்களை நழுவவிடாதவனே! சங்கு மற்றும் சக்கரங்களைத் திருக்கரங்களில் கொண்டவனே! நீயே எனக்கு அடைக்கலம் – இவ்விதமாகக் கூறுபவர்கள் எந்தவிதமான பாவங்களும் அற்றவர்கள் ஆவர். அவர்களை நீ அணுகாமல், அவர்களை விட்டு விலகிச் செல்வாயாக", என்றான் - என்றும், ந கலு பாகவதா யம விஷயம் கச்சந்தி – பாகவதர்கள் யம பயத்தை அடையமாட்டார்கள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, எம்பெருமானர் இந்த உலகில் அவதரித்து, அனைவரையும் பாகவதர்களாக்கி, திருமாலை(1) – கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து நாவலிட்டுழி தருகின்றோம் நமன்றமர் தலைகள் மீதே - என்பதற்கு ஏற்ப கலியால் ஏற்படும் துன்பம் பாதிக்காதபடி இந்த உலகங்கள் அனைத்தையும் காப்பாற்றி.

வ்யாக்யானம் - (இராமாநுசன்றன் நயப்புகழே) எம்பெருமானாருடைய ஸ்ப்ருஹணீயமான கல்யாணகுணங்கள், நயம் – விருப்பம். (பிறங்கியதில்லை) ப்ரகாசித்ததில்லை. பின்னை எத்தாலே ப்ரகாசித்ததென்றால், (என் பெய்வினை) அநாதிகாலமே தொடங்கி இவ்வளவாக "தேப்யோப் யதிகாநிதாந்யஹமபி க்ஷுத்ர: கரோமி க்ஷணாத்" என்றும், "யாவச்சயச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்சதத் தததி கஞ்சம மாஸ்தி ஸத்யம்" என்றும்சொல்லுகிறபடியே ஹேயோபாதேய விவேக சூந்யனான வென்னாலே உண்டாக்கப்பட்ட அக்ருத்யகரணமும் க்ருத்யாகரணமும் தொடக்கமான பாபங்களை. பெய்கை – உண்டாக்குகை.

விளக்கம் - (இராமாநுசன்றன் நயப்புகழே) – அனைவராலும் விரும்பத்தக்கதாக உள்ள எம்பெருமானாருடைய திருக்கல்யாணகுணங்கள். நயம் என்றால் விருப்பம் என்று பொருள். (பிறங்கியதில்லை) - அனைவரையும் இவ்விதம் காப்பாற்றிய காரணத்தால் அவருடைய திருக்கல்யாண குணங்கள் ப்ரகாசம் பெறவில்லை. வேறு எதனால் ப்ரகாசம் அடைந்தது? இதற்கு விடை அருளிச்செய்கிறார். (என் பெய்வினை) - எல்லையற்ற காலம் தொடக்கமாக இன்று முடிய, தேப்யோப் யதிகாநிதாந்யஹமபி க்ஷுத்ர: கரோமி க்ஷணாத் - என்றும், யாவச்சயச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்சதத் தததி கஞ்சம மாஸ்தி ஸத்யம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப "தாழ்ந்தது எது, உயர்ந்தது எது" என்று பிரித்து அறியக்கூடிய விவேகம் இல்லாத என்னால், எனக்கு ஏற்படுத்தப்பட்டதான "செய்யத்தகாத செயல்கள் செய்தமை, செய்யவேண்டியவற்றைச் செய்யாமல் விட்டமை" என்பதால் வந்ததான பாவங்களை. பெய்கை என்றால் ஏற்படுத்திக் கொள்ளுதல் என்று பொருள்.

வ்யாக்யானம் - (தென்புலத்தில்) தக்ஷிண திக்கிலே பாதக ஸ்த்தலமாய்க் கொண்டிருக்கிற யமலோகத்திலே. தென்புலம் - யமபுரம். பொறித்த - சித்ரகுப்தனாலே எழுதப்பட்ட. (அப்புத்தகச் சும்மை) அந்த புஸ்தக பாரங்களை. சும்மை - பாரம். இத்தால் – பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசார ரூபமாய், ஸம்சித ப்ராரப்தாகாமி ரூபமாயிருக்கிற கர்மங்களுடைய அபரிமிதத்வத்தைச் சொல்லிற்றாய்த்து. (பொறுக்கிய பின்) அந்த பாபங்களெல்லாவற்றையும் பிறிகதிர் படாதபடி தஹித்த பின்பு. பொறுக்குதல் - தஹித்தல்.

(நலத்தைப் பொறுத்தது) "பாபாத்வாந்த க்ஷயாய ச ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர:" என்கிறபடியே ப்ரகாசத்தைப் பெற்றது அப்போதென்றபடி.

விளக்கம் - (தென்புலத்தில்) - தெற்குத்திசையில் பாவங்களை அனுபவிக்கவல்லதாக உள்ள இடமான யமலோகத்தில். தென்புலம் = யமலோகம். பொறித்த = சித்ரகுப்தனால் எழுதப்பட்டதான. (அப்புத்தகச் சும்மை) - நமது பாவக்கணக்கு நிறைந்த கணக்கு புஸ்தகங்களுடைய பாரங்களை. இதன் மூலம் பகவத் விஷயத்தில் செய்யப்படும் அபசாரம், பாகவதர்கள் விஷயத்தில் செய்யப்படும் அபசாரங்கள் மற்றும் உள்ள பலவிதமான அபசாரங்கள், பலவிதமான ஆசைகள் காரணமாகச் செய்யப்படும் கர்ம்பலன்கள் போன்றவற்றின் எண்ணிக்கை அற்ற தன்மையைக் கூறினார். (பொறுக்கிய பின்) - இப்படியாக உள்ள அனைத்து பாவங்களையும் ஒன்று விடாமல் நீக்கி, எரித்த பின்னர். (நலத்தைப் பொறுத்தது) - பாபாத்வாந்த க்ஷயாய ச ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர: - ராமானுஜன் என்னும் சூரியன் இந்தப் பூமியில் உதித்தவுடன், பாவங்கள் என்னும் இருட்டு அகன்றது – என்பதற்கு ஏற்றபடி எம்பெருமானாருடைய திருக்கல்யாணகுணங்கள் ப்ரகாசம் பெற்றது அந்த நேரத்தில்தான் என்று கூறுகிறார்.

35. நயவேன் ஒரு தெய்வம் நானிலத்தே சில மானிடத்தைப்
புயலே எனக் கவிபோற்றி செய்யேன் பொன் அரங்கமென்னில்
மயலே பெருகும் இராமானுசன் மன்னு மா மலர்த்தாள்
அயரேன் அருவினை என்னை எவ்வாறு இன்று அடர்ப்பதுவே

விளக்கவுரை – எம்பெருமானாரைத் தவிர்த்து மற்றோருவரை நான் பரதேவதையை என்று கூறமாட்டேன், அதனை விரும்பவும் மாட்டேன். மதுரகவியாழ்வார் - தேவு மற்றறியேன் – என்று நம்மாழ்வார் குறித்து இருந்தது போன்றும்; ஸ்வாமி மணவாளமுனிகள் – உன்னை ஒழிய ஒரு தெய்வம் மற்றறியா மன்னுபுகழ்சேர் வடுகநம்பி – என்று புகழ்ந்த ஸ்வாமி வடுகநம்பி போன்றும் – நான் இருப்பேன். அனைத்து திசைகளிலும் கடலால் சூழப்பட்ட உலகில் உள்ள க்ஷேத்ரன் ஒருவனைக் குறித்து, "நீர் நிலம் என்று வேறுபாடு காணாமல், எங்கும் ஒரே தன்மையுடன் பெய்யும் மழை போன்று குணம் உள்ளவன்", என்று மற்றவர்களைத் துதிக்கமாட்டேன். "திருவரங்கம்" என்று கூறினாலே போதும் – அந்தச் சொல்லைக் கேட்டு, காதல் வயப்பட்டு நிற்கும் எம்பெருமானாரின் தாமரை போன்ற

திருவடிகளை நான் மறக்க மாட்டேன். இவ்விதம் நான் உள்ளபோது, எம்பெருமானாரின் தொடர்பு உள்ள என்னைக் கர்மங்கள் மற்றும் கர்மவினைகள் எவ்விதம் பாதிக்கும்?

அவதாரிகை – "எம்பெருமானார் உம்மை நிர்ஹேதுகமாக அங்கீகரித்தருளின ராஜகுல மாஹாத்ம்யத்தாலே களித்து அநாதியான கர்மங்கள் என்னை பாதிக்கமாட்டாதென்றீர். நீர் ப்ரக்ருதி ஸம்பந்தத்தோடே யிருக்கிற காலமெல்லாம், "நாபுக்தம் க்ஷீயதே கர்ம" என்கிறபடியே கர்மபலாநுபவமாயன்றோ விருப்பது" என்ன; "தேவதாந்தர பஜநம், அஸேவ்ய ஸேவை தொடக்கமான விருத்த கர்மங்களை அநுஷ்டித்தாலேன்றோ அநாதி கர்மம் மேலேறுகைக்கு அவகாசமுள்ளது. அவற்றை ஸவாஸநமாக விட்டேன், எம்பெருமானார் திருவடிகளை ஸர்வகாலமும் விஸ்மரியாதே வர்த்தித்தேன். இப்படியான பின்பு க்ரூர கர்மங்கள் என்னை வந்து பாதிக்கைக்கு வழியில்லை" என்கிறார்.

விளக்கம் - திருவரங்கத்தமுதனாரிடம் சிலர், "எந்தவிதமான காரணமும் இன்றி உம்மை எப்பெருமானார் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டார். இப்படிப்பட்ட அரசபதவியைக் காட்டிலும் மேலான கதி கிட்டியது குறித்து நீவிர் மகிழ்ந்து நிற்கிறீர். எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள கர்மங்கள் உம்மைப் பாதிக்காது என்கிறீர். ஆனால் நீவீர் இந்த உலகத்துடன் தொடர்பு கொண்டுள்ள காலம் முடிய – நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிசதைரபி - பலன் அனுபவிக்கப்படாத கர்மங்கள், நூறு கோடி கல்பங்கள் கழிந்தாலும் அழிவதில்லை - என்பதற்கு ஏற்ப கர்மத்தின் பிடியில் சிக்கியபடி அல்லவோ இருத்தல் வேண்டும்?", என்றனர். அவர்களிடம் இவர், "மற்ற தேவதைகளை வணங்குதல், தகாதவர்களை வழிபடுதல் போன்றதான தள்ளப்பட்ட பலவற்றையும் இயற்றியபடி இருந்தால் அல்லவோ எல்லையற்ற கர்மம் மேன்மேலும் வளர்ந்தபடி இருக்கும்? ஆனால் நானோ அவற்றை, அதன் வாசனையுடன் கைவிட்டேன். எம்பெருமானாருடைய திருவடிகளை நான் ஒரு நாளும் மறக்காமல் படித்து நின்றேன். இதன் காரணமாகக் கொடுமையான கர்மங்கள் என்னை வந்து பாதிப்பதற்கு வாய்ப்பு இல்லை", என்கிறார்.

வ்யாக்யானம் - (நயவேனொரு தெய்வம்) எம்பெருமானாரை யொழிய மற்றொருவரை பரதேவதை யென்று ஆதரிக்கிறேனல்லென். நயவேனென்றது - விரும்பேனென்றபடி. "நாந்யம் வதாமி ந ச்ருணோமி ந சிந்தயாமி, நாந்யம் ஸ்மராமி ந பஜாமி ந ச ஆச்ரயாமி;

பக்த்யா த்வதீய சரணாம்புஜமாதரேண ஸ்ரீஸ்ரீநிவாஸ புருஷோத்தம தேஹி தாஸ்யம்" என்றும், "நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றைத் தெய்வம் நாடுதிரே", "மற்றெத் தெய்வம் விளம்புதிரே" என்றும் சொல்லுகிறபடியே, ப்ரதம பர்பர்யந்த ஆத்யவஸாயமின்றிக்கே, "குரோரந்யம் ந பாவயேத்", "தேவுமற்றறியேன்" என்கிறபடியே எம்பெருமானாரை பரதேவதையாக அத்யவஸித்திருந்தே னென்றபடி. "உன்னையொழிய ஒரு தெய்வம் மற்றறியா மன்னு புகழ்சேர் வடுகநம்பி தன்னிலையை என் தனக்கு நீ தந்து எதிராசா எந்நாளும் உன் தனக்கே ஆட்கொள் உகந்து" என்று இது தன்னை ஜீயரும் ப்ரார்த்தித் தருளினாரிறே. "த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" என்னக்கடவதிறே.

விளக்கம் - (நயவேனொரு தெய்வம்) – "எம்பெருமானார் அல்லாமல் வேறு யாரையும் நான் உயர்ந்த தெய்வம் என்று கொண்டாடமாட்டேன்" என்று பொருள். பாண்டவகீதை (26) – நாந்யம் வதாமி ந ச்ருணோமி ந சிந்தயாமி, நாந்யம் ஸ்மராமி ந பஜாமி ந ச ஆச்ரயாமி; பக்த்யா த்வதீய சரணாம்புஜமாதரேண ஸ்ரீஸ்ரீநிவாஸ புருஷோத்தம தேஹி தாஸ்யம் – ஸ்ரீநிவாஸா! புருஷோத்தமா! உன்னுடைய திருநாமம் அல்லாமல் நான் வேறு எந்த ஒன்றையும் உச்சரிக்கவில்லை, எதனையும் கேட்பதில்லை, எதனையும் எண்ணுவதில்லை, எதனையும் நினைத்தபடி இருப்பதில்லை; உன்னுடைய தாமரை போன்ற திருவடிகள் அல்லாமல் எதனையும் வணங்குவதில்லை, எதனையும் அண்டி நிற்பதில்லை; என்னை உனது அடிமையாக ஏற்கவேண்டும் - என்றும், திருவாய்மொழி (4-10-1) – நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றைத் தெய்வம் நாடுதிரே – என்றும், திருவாய்மொழி (4-10-8) – மிக்க ஆதிப்பிரான் நிற்க மற்றைத் தெய்வம் விளம்புதிரே - என்றும் கூறுவது போன்று, தொடக்கம் முதல் இறுதிவரை என்று மட்டும் இல்லாமல், குருகீதை – குரோரந்யம் ந பாவயேத் – குரு அல்லாமல் எதனையும் நினைத்தல் ஆகாது - என்றும், கண்ணிநுண்சிறுத்தாம்பு (2) – தேவு மற்றறியேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, எம்பெருமானரையே உயர்ந்த தெய்வமாக உறுதி செய்துள்ளேன். ஆர்த்தி ப்ரபந்தம் (11) - உன்னையொழிய ஒரு தெய்வம் மற்றறியா மன்னு புகழ்சேர் வடுகநம்பி தன்னிலையை என் தனக்கு நீ தந்து எதிராசா எந்நாளும் உன் தனக்கே ஆட்கொள் உகந்து - எம்பெருமானாரே! உம்மை அல்லாது மற்றொரு பரதேவதையை அறியாமல் இருந்த காரணத்தினால், ஸ்திரமான புகழை வடுகநம்பி அடைந்தார் அல்லவா? அப்படிப்பட்ட பக்தி நிஷ்டையை நீ எனக்கும் அருள வேண்டும். எப்போதும் நான் உமக்கே அடிமையாக

இருக்கும் நிலையை நீயே அருளவேண்டும் – என்று, இந்த நிலையையே ஸ்வாமி மணவாளமாமுனிகளும் விண்ணப்பித்தார் அல்லாவோ? த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: - என்பதும் காண்க.

வ்யாக்யானம் - (நானிலத்தே சில மானிடத்தைப் புயலேயெனக் கவி போற்றி செய்யேன்) "என்னாவில் இன் கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன்", "மானிடம் பாட வந்த கவியேன் அல்லேன்" என்றும், "க்ஷோணீ கோண சதாம்ச பாலந கலா துர்வார கர்வாநல க்ஷுப்யத் க்ஷுத்ர நரேந்த்ர சாடு ரசநா தந்யாந் ந மந்யாமஹே" என்றும், "யம் கிஞ்சித் புருஷாதமம் கதி பய க்ராமேசம் அல்பார்த்ததம்" என்றுஞ் சொல்லுகிறபடியே சதுஸ் ஸமுத்ர பரிவேஷ்டிதையான மஹாப்ருதிவியிலே, ஒரு க்ஷுத்ரனைக் குறித்து ஜல ஸ்த்தல விபாகமற ஸர்வ விஷயத்திலும் வர்ஷிக்கும் வர்ஷுக வலாஹம் போலே யிருப்பா னொருவ னென்று அவனுடைய ஔதார்யத்தைக் கவிபாடி ப்ரபந்தீகரித்தும், வாசா ஸ்துதித்தும் இப்படி அப்ராப்த்தரை ஸேவியேன். புயல் – மேகம், போற்றுதல் – புகழ்தல். அன்றிக்கே, தாம் சரமபர்வ நிஷ்டராகையாலே, ஸர்வேச்வரனையுங் கூட தேவதாந்தரத்தோ டொக்க அநாதரிக்கக் கணிசித்து, "ஸ்ரீவேங்கடாத்ரி சிகராலய காளமேகம்" என்று அவரைப்போலே ஸ்துதியாதே, "தேவுமற்றறியேன்", "குரோரந்யம் ந பாவயேத்" என்கிறபடியே இருக்கக்கடவே னென்னவுமாம்.

விளக்கம் - (நானிலத்தே சில மானிடத்தைப் புயலேயெனக் கவி போற்றி செய்யேன்) - திருவாய்மொழி (3-9-1) – என்னாவில் இன் கவி யானொருவர்க்கும் கொடுக்கிலேன் - என்றும், திருவாய்மொழி (3-9-9) – மானிடம் பாட வந்த கவியேன் அல்லேன் – என்றும், வைராக்ய பஞ்சகம் (1) – க்ஷோணீ கோண சதாம்ச பாலந கலா துர்வார கர்வாநல க்ஷுப்யத் க்ஷுத்ர நரேந்த்ர சாடு ரசநா தந்யாந் ந மந்யாமஹே – பூமியின் சிறு பகுதியினுடைய நூற்றில் ஒரு சிறிய பாகத்தைக் காப்பாற்றுதல் என்னும் காரணமாக உண்டான அடக்க இயலாத கர்வம் என்னும் தீயால் மதி கலங்கி நிற்கும் அற்பமான அரசர்களைப் புகழ்ந்து பேசுதலைத் தங்கள் பாக்கியம் என்று எண்ணுபவர்களை நாம் பொருட்படுத்த மாட்டோம் – என்றும், முகுந்தமாலை (28) – யம் கிஞ்சித் புருஷாதமம் கதி பய க்ராமேசம் அல்பார்த்ததம் – சில கிராமங்களுக்கு மட்டுமே தலைவனும், அற்பமான செல்வம் அளிப்பவனும் ஆகிய யாரோ ஒரு தரம் அற்றவனிடம் வேலை தேடி அலைகிறோம் - என்றும் கூறுவதற்கு, ஏற்ப நான்கு பக்கங்களிலும் ஸமுத்திரத்தால்

சூழப்பட்டதான இந்தப் பரந்த உலகத்தில் உள்ள ஒரு தாழ்ந்தவனைக் குறித்து, "மழையாவது எவ்விதம் நீர் நிலை, கட்டாந்தரை என்று வேறுபாடு காணாமல் பொழிகின்றதோ அது போன்று அனைவருடைய விஷயத்திலும் கார்மேகம் போன்று உள்ளான்" என்பது போன்று அவனுடைய தாராளகுணம் குறித்து கவி பாடி நூல் இயற்றியும், வாக்கு கொண்டு ஸ்துதி பாடியும், புகழ் அடையவேண்டிய தகுதி இல்லாதவனை வணங்கமாட்டேன். புயல் என்றால் மேகம் என்று பொருள். அல்லது இவர் கைங்கர்யத்தில் எல்லைநிலையான ஆசார்ய கைங்கர்யம் என்பதில் நிலைப்பதால், ஸர்வேச்வரனைக் கூட மற்ற தெய்வங்கள் போன்று தள்ளி விட எண்ணியவராக, ஸ்ரீவேங்கடாத்ரி சிகராலய காளமேகம் – திருவேங்கடமலையில் உள்ள காளமேகம் போன்றவன் - என்று மற்றவர்கள் போன்று துதிக்காமல், குருகீதை – குரோரந்யம் ந பாவயேத் – குரு அல்லாமல் எதனையும் நினைத்தல் ஆகாது - என்றும், கண்ணிநுண்சிறுத்தாம்பு (2) – தேவு மற்றறியேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப இருக்கக் கடவேன் என்கிறார் என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் - இப்படி இவ்வளவும் தேவதாந்தரங்களும் நீச மநுஷ்யரும் அப்ராப்தராகையாலே அவர்களை திரஸ்கரித்தும், ப்ராப்த்த விஷயனான ஸர்வேச்வரன் ஸ்வதந்த்ரனாகையாலே பந்தமோக்ஷங்க ளிரண்டுக்கும் பொதுவானவனென்னும் ஸம்சயத்தாலே அவனை அநாதரித்தும், ப்ராதிகூல்ய வர்ஜநம் பண்ணினீர், ஆனாலும் சிறிது ஆநுகூல்யாசரணமென்று பேரிடலாவதொரு வ்யாஜம் உம்மிடத்திலே யுண்டோ வென்ன, உண்டென்கிறார். அதென்னென்ன, (பொன்னரங்கமென்னில் மயலே பெருகும்) "வானும் மண்ணும் நிறையப் புகுந்து ஈண்டி வணங்கும் நல் தேனும் பாலும் கலந்து அன்னவர் சேர் தென்னரங்கமே" என்கிறபடியே தத்விஷயமான பக்தி, ததீய பர்யந்தமாய், திருவரங்கமென்று யாத்ருச்சிகமாகச் சொன்னாலும் தத் பக்தி பாரவச்யத்தாலே காதல்மையல் மேன்மேலனப் பெருகி வாராநிற்கும். மையல் – ப்ராந்தி (இராமானுசன்) இப்படிப்பட்ட எம்பெருமானாருடைய. (மன்னு மாமலர்த்தாள்) இவருடைய திருவடிகளுக்கும், (மன்னு மாமலர்) என்று நித்யமாய் மஹத்தாய் விகஸிதமான புஷ்பத்தைப் போலியாக வருளிச்செய்தது, லோகத்தில் ஸாதாரண புஷ்பத்தை யெடுத்துச் சொல்லிற்றன்று, லோகத்தில் புஷ்பத்துக்கு விகாஸம் செவ்வி குளிர்த்தி நாற்றந் தொடக்கமானவை ஒரு கால விசேஷத்திலே யுண்டாய் ஒரு கால விசேஷத்திலே யில்லாதே யொழியுமிறே, அப்படியன்றிக்கே யாவதாத்ம பாவியாய்க்

கொண்டிருப்பதாய், விகாஸமும் பரிமளமும் மாறாதே மேன்மேலும் பெருகி வரும்படி அவற்றையுடையதாய், லோகத்தாரையெல்லாம் ஸ்வ வசமாக்கிக் கொள்ளுகைக்கீடான மஹத்வத்தை யுடைத்தானதொரு புஷ்பங் கிடைத்தால் அத்தை அவர் திருவடிக்கு ஒரு படி போலியாகச் சொல்லலாமென்றபடி.

விளக்கம் - இதனைக் கேட்ட சிலர் இவரிடம், "இவ்விதம் மற்ற தெய்வங்களும், அவர்களைக் காட்டிலும் தாழ்ந்த மனிதர்களும் புகழத்தக்கவர் அல்லர் என்பதால் அவர்களை உமது பார்வையில் இருந்து மறைத்துக் கொண்டீர். புகழத்தக்கவனும், அடையத்தக்கவனும் ஆகிய ஸர்வேச்வரன் சுதந்திரமானவன் என்பதால், அவன் ஸம்ஸாரம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டிற்கும் காரணமாகி விடுகிறானோ என்று சந்தேகம் கொண்டு அவனையும் தள்ளுகிறீர். இப்படியாக உமக்கு நன்மை அளிக்காதவர்களைக் கைவிட்டீர். ஆனால் எம்பெருமானார் உம்மைத் தனது திருவடிகளில் சரணம் புகுவதற்கு அனுமதிக்கும்படியான தகுதி அல்லது காரணம் ஏதேனும் ஒன்றாவது உம்மிடம் உண்டோ?", என்றனர். இதற்கு "உண்டு" என்று விடை அருளிச்செய்கிறார். அது எது என்றால், (பொன்னரங்கமென்னில் மயலே பெருகும்) - பெரியதிருமொழி (5-4-8) – வானும் மண்ணும் நிறையப் புகுந்து ஈண்டி வணங்கும் நல் தேனும் பாலும் கலந்து அன்னவர் சேர் தென்னரங்கமே – என்பதற்கு ஏற்ப திருவரங்கன் மீது கொள்ளும் பக்தியானது அவனுடைய அடியார்கள் முடியச் செல்வதாகவும், "திருவரங்கம்" என்று தற்செயலாக உச்சரித்தாலும் அந்த பக்தி காரணமாக அவனைக் குறித்த அன்பு மேன்மேலும் பெருகியபடி இருக்கும். மையல் என்றால் பித்து. (இராமாநுசன்) - இவ்விதம் உள்ளவரான எம்பெருமானாருடைய. (மன்னு மாமலர்த்தாள்) திருவடிகளுக்கு. (மன்னு மாமலர்) - என்றும் எப்போதும் உள்ளதால், மலர்ந்ததாய், பெரியதாய் உள்ள தாமரை மலரை உதாரணமாக உரைத்தார். இதன் மூலம் இந்த உலகில் உள்ள ஏதோ ஒரு சாதாரண மலரை உரைத்தார் என்று கருதக்கூடாது. காரணம், உலகில் உள்ள மலருக்கு மலர்ச்சி, அழகு, குளிர்ச்சி, நறுமணம் போன்ற பல தன்மைகளும் ஒரு காலகட்டத்தில் இருந்து, மற்றொரு காலகட்டத்தில் இல்லாமல் அழிந்துவிடும். இவ்விதம் அல்லாமல், ஆத்மா என்பது உள்ள காலம் வரை, மலர்ச்சியும் நறுமணமும் மாறாமல் மேன்மேலும் பெருகியபடி உள்ள ஒரு மலரைக் கூறுகிறார். இதன் காரணமாக இந்த மலரானது, உலகில் உள்ள அனைவரையும் தன் வசம் ஈர்த்தபடி உள்ளதான மஹத்வம்

கொண்டதாகும். இப்படிப்பட்ட ஒரு மலர் கிடைத்தால், அதனை மட்டுமே எம்பெருமானாருடைய திருவடிகளுக்கு உதாரணமாகக் கூறமுடியும்.

வ்யாக்யானம் - (அயரேன்) "குருபாதாம்புஜம் த்யாயேத்", "த்யாயேத் ஜபேத் நமேத் பக்த்யா" என்கிறபடியே அத்திருவடிகளை ஸர்வதா த்யாநம் பண்ணிக் கொண்டு விஸ்மரியேன். அயர்வு – மறப்பு. "யே நாதவந்தோ ஹி பவந்தி லோகே தே நாத்மகர்மாபி ஸமாரபந்தே தேஷாம் ஹி கார்யேஷு பவந்தி நாதா: சைப்யாதயோ ராம யதா யயாதே:" என்கிறபடியே என்னுடைய பரத்தையெல்லாம் எம்பெருமானார் பரித்த பின்பு நிர்ப்பரனா யிருக்கிறே னென்று கருத்து. ஆன பின்பு (அருவினை) அநுபவ ப்ராயச்சித்தங்களாலும் போக்கவரிதாய், அநாதிகாலமே தொடங்கி பண்ணப்பட்ட புண்யபாப ரூப கர்மங்கள் வந்து (என்னை) "யேந யத்ர ச போக்தவ்யம் ஸுகம் வா துக்கமேவ வா ஸ தத்ர ரஜ்வாபத்வை வபலாத் தேவே நநீயதே" என்கிறபடியே இத்தனை நாளும் ஸ்வ ஸ்வ பலங்களை யநுபவிப்பித்து ஸம்ஸாரத்திலே மூட்டினாலும், இப்போது எம்பெருமானாருடைய ஸம்பந்தமாகிற ராஜகுல மாஹாத்ம்ய முடைய என்னை. (இன்று) இப்போது. (எவ்வாறடர்ப்பது) எந்த உபாயத்தாலே பாதிப்பது. "வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ, கானோ வொருங்கிற்றுக் கண்டிலமால்" என்கிறபடியே, ஸிம்ஹத்தைக் கண்ட க்ஷுத்ர ம்ருகங்களைப் போலே, கண்டு ஓடிப்போகிற கர்மங்களுக்கு, "சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே" என்கிறபடியே இரு செவி யறியாதபடி போகவேண்டி யிருக்கை யொழிய, என்னை பாதிக்க வழியில்லை யென்றதாய்த்து. "நயவேன் பிறர் பொருளை" என்கிற பாட்டிலே இவ்வர்த்தத்தை ப்ரதம பர்வ நிஷ்டரும் அருளிச்செய்தாரிறே.

விளக்கம் - (அயேரேன்) - குரு பாதாம்புஜம் த்யாயேத் – எப்போதும் குருவின் தாமரை போன்ற திருவடிகளை த்யானித்தபடி – என்றும், த்யாயேத் ஜபேத் நமேத் பக்த்யா – குருவை எப்போதும் த்யானித்தபடியும், அவருடைய திருநாமத்தை ஜபித்தபடியும், அவரை வணங்கியபடியும் பக்தி செலுத்தி – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அந்தத் திருவடிகளையே எப்போது த்யானித்தபடி மறக்காமல் இருப்பேன். அயர்வு என்றால் மறத்தல் என்று பொருள். மஹாபாரதம் வனபர்வம் (96-2) - யே நாதவந்தோ ஹி பவந்தி லோகே தே நாத்மகர்மாபி ஸமாரபந்தே தேஷாம் ஹி கார்யேஷு பவந்தி நாதா: சைப்யாதயோ ராம

யதா யயாதே: - இந்த உலகில் உள்ள யாருக்கு ஸ்வாமியாக ஸர்வேச்வரன் உள்ளானோ, அவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்வதற்கான செயல்களைச் செய்ய முனைவதில்லை; பலராமா! அவர்களுடைய ரக்ஷகத்திற்குத் தேவையான செயல்களை அவர்களுடைய ஸ்வாமியாகிய ஸர்வேச்வரனே செய்வான்; யயாதிக்குச் சிபி செய்தது போன்று - என்பதற்கு ஏற்ப, என்னுடைய பாரங்கள் முழுவதையும் எம்பெருமானார் ஏற்றுக் கொண்ட பின்னர் நான் பாரம் அற்றவனாக உள்ளேன் என்று கருத்து. இவ்விதம் உள்ளபோது, (அருவினை) – அனுபவித்துக் கழித்தல், ப்ராயச்சித்தம் செய்தல் போன்றவற்றால் கூட விலக்குவதற்கு இயலாதபடி உள்ளதும், எல்லையற்ற காலமாகத் தொடர்ந்து வருவதும், என்னால் செய்யப்பட்டதும் ஆகிய புண்ணிய பாவ வடிவில் உள்ள கர்மங்களும் அவற்றின் பலன்களும் வந்து. (என்னை) - யேந யத்ர ச போக்தவ்யம் ஸுகம் வா துக்கமேவ வா ஸ தத்ர ரஜ்வாபத்வை வபலாத் தேவே நநீயதே – என்பதற்கு ஏற்ப இத்தனை காலங்கள், தங்கள் தங்கள் பலன்களை நான் அனுபவிக்கும்படிச் செய்தன; இதனால் என்னை ஸம்ஸாரத்தில் நிலை நிறுத்தின. ஆனால் இப்போது "எம்பெருமானாருடைய ஸம்பந்தம்" என்பதான அரசகுலத்திற்குள்ள மரியாதையைக் காட்டிலும் அதிகமான மாஹாத்ம்யம் கொண்ட என்னை. (இன்று) – இப்போது. (எவ்வாறு) – எந்த உபாயம் கொண்டு பாதிக்கும்? பெரிய திருவந்தாதி (54) – வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ, கானோ வொருங்கிற்றுக் கண்டிலமால் - என்பதற்கு ஏற்ப, சிங்கத்தைக் கண்டு மற்ற தாழ்ந்த விலங்குகள் ஓடிப் போவது போன்று, என்னுடைய "எம்பெருமானாருடைய ஸம்பந்தம்" என்பதைக் கண்டு ஓடிப் போகும் கர்மங்களுக்கு, பெரியாழ்வார் திருமொழி (5-4-3) – சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே - என்பதற்கு ஏற்ப "கர்மங்கள் உள்ளன" என்று இரண்டு காதுகள் கேட்க இயலாதபடி உள்ள தூரத்தில் நிற்பது அல்லாமல், என்னைப் பாதிக்க வேறு வழி ஏதும் இல்லை. இந்தப் பாசுரத்தில் உள்ள இதே பொருளை, முதல் திருவந்தாதியில் (64) - நயவேன் பிறர் பொருளை – என்று ஆழ்வார் உரைத்தார் அல்லவா?

36. அடல்கொண்ட நேமியன் ஆருயிர் நாதன் அன்று ஆரணச்சொல்
கடல் கொண்ட ஒண்பொருள் கண்டளிப்ப பின்னும் காசினியோர்
இடரின்கண் வீழ்ந்திடத்தானும் அவ்வொண்பொருள் கொண்டு அவர்பின்
படரும் குணன் எம் இராமானுசன்தன் படி இதுவே

விளக்கவுரை – முதலையால் பீடிக்கப்பட்ட கஜேந்திரனையும், அச்வத்தாமனின் ப்ரஹ்மாஸ்திரத்தில் இருந்து பரீக்ஷித்தையும் காத்த அழகான சக்கரம் ஏந்தியவன்; அனைத்து உயிர்களின் நாயகன் – இப்படிப்பட்ட வாஸுதேவன் செய்தது என்ன? ஸமுத்திரத்தில் மறைந்து கிடந்த இரத்தினக் கற்களை வெளியெடுத்தது போன்று வேதங்கள் என்னும் கடலில் உள்ள ஆழ்பொருள்களை கீதாசாஸ்திரமாக அனைத்து ஜீவன்களும் உய்யும்படி வெளிப்படுத்தினான். ஆனால் இந்த உயர்ந்த சாஸ்திரத்தைப் பின்பற்றாமல், கலியுகத்தில் ஸம்ஸாரம் என்னும் பிடியில் இந்த உலகம் சிக்கித் துன்பப்படுவதைக் கண்டு எம்பெருமானாரின் இளகிய மனம் பொறுக்கவில்லை. எனவே அந்த சாஸ்திரத்தின் மெய்ப்பொருளை திருக்கோட்டியூர் நம்பியிடம் கற்றுத் தெளிந்து, தானும் அந்தச் சாஸ்திரத்திற்குப் பாஷ்யம் அருளிச்செய்தார். இதனை அனைவருக்கும் உபதேசித்து, அதனைப் பின்பற்றுபவர்களை இன்றளவும் தொடர்ந்து வரும் உயர்ந்த குணம், நம்முடைய உடையவரின் திருக்குணம் ஆகும்.

அவதாரிகை – “இராமாநுசன் மன்னுமாமலர்த்தா ளயரேன் என்றீர். நாங்களும் அவரை ஆச்ரயிக்கப் பார்க்கிறோம். அவருடைய ஸ்வபாவமிருந்தபடி சொல்லிக் காணீர்” என்று கேட்க; ப்ரதிபக்ஷத்துக்கு பயங்கரனான திருவாழியாழ்வானை ஆயுதமாகவுடையனாய் ஸகலாத்மாக்களுக்கும் சேஷியானவன், உபயஸேநா மத்யத்திலே பந்து ஸ்நேஹத்தாலே அர்ஜுநன் யுத்தாந்நிவ்ருத்தனானவன்று கடலிலேயழுந்தித் தரைப்பட்டுக் கிடக்கிற ரத்நங்களைக் கொண்டு வந்து உபகரிப்பாரைப்போலே வேதாந்த ஸமுத்ரத்திலே குப்த்தங்களாய் ச்லாக்யங்களான அர்த்தங்களை ஸ்ரீகீதாசாஸ்த்ரமுகேந உபகரித்தருளின பின்பும் இந்த கலிகாலத்திலே லௌகிக ஜநங்கள் அவஸாதத்தாலே கிடக்க; அந்த கீதா ரூபமான அத்யாத்ம சாஸ்த்ரத்தை வ்யாக்யாநம் பண்ணி உபதேசிக்கைக்கு அந்த லௌகிக ஜநங்களை ஸ்ரீபதரிகாச்ரமத்தளவும் பின் தொடர்ந்த மஹாகுணமுடைய பேர் இல்லை கீடரென்று கொண்டு இப்படியிருந்துள்ள எம்பெருமானாருடைய ஸ்வபாவமிது வென்றருளிச் செய்கிறார்.

விளக்கம் - திருவரங்கத்தமுதனாரிடம் சிலர், “கடந்த பாசுரத்தில் - இராமாநுசன் மன்னுமாமலர்த்தா ளயரேன் - என்று கூறினீர். உங்களைப் போன்றே நாங்களும் அவரை அண்டி நிற்க முயல்கிறோம். அவருடைய ஸ்வபாவம் குறித்து நீவிர் உரைக்கவேண்டும்”, என்றனர். இதற்கு விடை அருளிச்செய்கிறார். அடியார்களுக்கு விரோதியாக உள்ளவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தும் சக்கரத்தாழ்வானைத் தனது ஆயுதமாகக்

கொண்டவனும், அனைத்து ஆத்மாக்களுக்கும் எஜமானனும் ஆகிய ஸர்வேச்வரன், பாரதப்போரின்போது இரண்டு படைகளுக்கும் நடுவில், உறவினர்கள் மீது கொண்ட பாசம் காரணமாக மயங்கிய அர்ஜுனன், தான் அந்த யுத்தத்திலிருந்து விலகுவதாக உரைத்தபோது, கடலின் ஆழத்தில் புதைந்துள்ள பெரும் இரத்தினங்களை மேலே எடுத்து வந்து உபகாரம் செய்பவர்கள் போன்று, வேதாந்தம் என்னும் ஸமுத்திரத்தில் மறைத்து கிடக்கின்றதும், கொண்டாடத்தக்கதான ஆழ்பொருள்களை உள்ளடக்கியதும் ஆகிய பலவற்றையும் ஸ்ரீமத்பகவத்கீதை என்ற ரூபத்தில் வெளிப்படுத்தினான். இவ்விதம் அவன் செய்த பின்னரும், கலிகாலத்தில் உள்ளவர்கள், அத்னைப் பின்பற்றாமல் ஸம்ஸாரம் என்று துக்கத்தில் பிடியில் சிக்கித் தவித்தபடி இருந்தனர். ஆகவே கீதையின் வடிவில் இருந்த அந்தச் சாஸ்த்ரத்தை விளக்கியும், கீதாபாஷ்யம் செய்து உபதேசிக்கும் விதமாகவும் பத்ரிநாத் வரை உள்ள அனைத்து மனிதர்களின் பின் சென்று திருத்த முயன்ற உயர்ந்த குணம் கொண்டவர் வேறு யாரும் இல்லை என்பதான ஸ்வபாவம் கொண்டவர் எம்பெருமானார் ஆவார் என்கிறார்.

வ்யாக்யானம் - (அடல் கொண்ட நேமியன்) மடுவின் கரையிலே ஸ்ரீகஜேந்த்ராழ்வானை பாதித்த முதலையும் அச்வத்தாம ப்ரேரிதமாய்க் கொண்டு பரிக்ஷித்தை பாதிக்க வந்த ப்ரஹ்மாஸ்த்ரமும் துடக்கமான ஆச்ரித விரோதிகளுக்கு அத்யந்த பயங்கரமான ஆகாரத்தையுடையனாய், "வடிவார்சோதி வலத்துறையும் சுடராழி" என்கிற திருவாழியாழ்வானை ப்ரதாநாயுதமாகயுடையனாய். அடல் - மிடுக்கு. (ஆருயிர்நாதன்) "பதிம் விச்வஸ்யாத்மேச்வரம்" என்றும், "உதாம்ருதத்வஸ்ய ஈசாந:" என்றும், "அயர்வறும் அமரர்களதிபதி" என்றுஞ் சொல்லுகிறபடியே ஸகலாத்மாக்களுக்கும் நாதனாய், "நாத்ருயாச்ஞாயாம்" என்கையாலே ஸகலார்த்தங்களையும் யாசிக்கப்படுமவனாய், "ஏகோபஹ்யநாம் விததாதி காமாந்" என்கிறபடியே ஸமஸ்த புருஷார்த்த ப்ரதனானவன்.

விளக்கம் - (அடல் கொண்ட நேமியன்)- குளத்தின் கரையில் கஜேந்த்ரனை பிடித்த முதலை, அச்வச்தாமனால் அழைக்கப்பட்டு பரிக்ஷித்தை அழிக்க வந்த ப்ரஹ்மாஸ்த்ரம் என்பது தொடக்கமாக, அடியார்களுக்கு விரோதிகளாக உள்ள அனைத்திற்கும் எல்லையற்ற பயத்தை ஏற்படுத்தும் தொழிலை உடையவனும், திருப்பல்லாண்டில் (1) – வடிவார்சோதி வலத்துறையும் சுடராழி - என்பதற்கு ஏற்ப உள்ளவனும் ஆகிய சக்கரத்தாழ்வானைத் தனது முதன்மையான ஆயுதமாகக் கொண்டவன். (ஆருயிர் நாதன்) -

நாராயண ஸூக்தம் - பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் – உலகிற்கு நாயகனும், ஆத்மாக்களின் ஸ்வாமியும் - என்றும், புருஷஸூக்தம் (2) – உதாம்ருதத்வஸ்ய ஈசாந: - மோக்ஷம் என்னும் அமிர்தத்தை அளிப்பவனும் ஸர்வேச்வரனே ஆவான் - என்றும், திருவாய்மொழி (1-1-1) – அயர்வறும் அமரர்கள் அதிபதி - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்துவிதமான ஆத்மாக்களுக்கும் நாதனாகவும், நாத்ருயாச்ஞாயாம் - என்பதற்கு ஏற்ப அனைத்து பொருள்களையும் அளிக்கத்தக்கவனாகவும், ஏகோபஹூநாம் விததாதி காமாந் - ஒருவனாய் அனேக ஜீவாத்மாக்களுக்கு இஷ்டங்களைக் கொடுப்பவனாய் - என்பதற்கு ஏற்ப அனைத்துவிதமான புருஷார்த்தங்களையும் அளிப்பவனாகவும் உள்ள ஸர்வேச்வரன்.

வ்யாக்யானம் - (அன்று) "தத்ர பாண்டவானாம் குருணாம் ச யுத்தே ப்ராரப்தே ஸ பகவான் புருஷோத்தம: ஸர்வேச்வரேச்வரோ ஜகத் உபக்ருதிமர்த்ய ஆச்ரித வாத்ஸல்யவிவச: பார்த்தம் ஆத்மாநம் ச ஸாரதிம் ஸர்வ லோக ஸாக்ஷிகம் சகார" என்கிறபடியே, குருபாண்டவர்கள் யுத்த ஸந்நத்தரானவளவிலே, "பித்ரூன் அத பிதாமஹான் ஆசார்யான் மாதுலான் ப்ராத்ரூன் புத்ரான் பௌத்ரான் ஸகீம்ஸ்ததா" இத்யாதியாலே சொல்லப்படுகிற பந்து வர்க்கத்தையெல்லாம் உபயஸேனையிலும் அர்ஜுநன் பார்த்து "யேஷாம் அர்தே காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போகா: ஸுகாநி ச த இமே அவஸ்திதா யுத்தே ப்ராணாம்ஸ்த்யக்த்வா தநாநி ச" என்றும், "ஆசார்யா: பிதர: புத்ராஸ் ததைவ ச பிதாமஹா: மாதுலா: ச்வசுரா: பௌத்ரா: ச்யாலா: ஸம்பந்திநஸ்ததா; ஏதான் ந ஹந்தும் இச்சாமி க்நதோ அபி மதுஸூதந" என்றும் பந்து ஸ்நேஹத்தாலே தர்மத்திலே அதர்ம புத்தியைப் பண்ணி, "விச்ருஜ்ய ஸசரம் சாபம் சோக ஸம்விக்ந மாநஸ:" என்று சோகித்து யுத்தாந் நிவர்த்தனான வன்று.

விளக்கம் – (அன்று) - எம்பெருமானார் கீதா பாஷ்யம் (முன்னுரை) - தத்ர பாண்டவானாம் குருணாம் ச யுத்தே ப்ராரப்தே ஸ பகவான் புருஷோத்தம: ஸர்வேச்வரேச்வரோ ஜகத் உபக்ருதிமர்த்ய ஆச்ரித வாத்ஸல்யவிவச: பார்த்தம் ஆத்மாநம் ச ஸாரதிம் ஸர்வ லோக ஸாக்ஷிகம் சகார - பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் போர் தொடங்கியவுடன் கண்ணன் செய்தது என்ன? புருஷோத்தமனும், அனைத்து ஈச்வரர்களுக்கும் ஈச்வரனும், இந்த உலகைக் கரை ஏற்றி உதவும் பொருட்டு மனிதனாக வடிவம் எடுத்தவனும் ஆகிய பகவான் – தனது அடியவனான அர்ஜுனன் மீது கொண்ட அளவு கடந்த ப்ரியம்

காரணமாகச் செய்தது என்ன? அர்ஜுனனைத் தேரில் அமர வைத்து, தான் தேரோட்டுபவனாக அமர்ந்து, தன்னை உலகம் காணும்படிச் செய்தான் - என்று கூறுவதற்கு ஏற்ப, பாண்டவர்கள் பாரதயுத்தத்திற்குத் தயாராக நின்றபோது, கீதை (1-26) - பித்ரூன் அத பிதாமஹான் ஆசார்யான் மாதுலான் ப்ராத்ரூன் புத்ரான் பௌத்ரான் ஸகீம்ஸ்ததா – தந்தையர், பாட்டனார்கள், ஆசாரியர்கள், மாமாக்கள், சகோதரர்கள், மகன்கள், பேரன்கள், நண்பர்கள் - என்பது போன்றவற்றால் கூறப்படுகிற உறவினர்கள் அனைவரையும் இரண்டு படைகளிலும் கண்ணுற்ற அர்ஜுன், கீதை (1-33) - யேஷாம் அர்தே காங்க்ஷிதம் நோ ராஜ்யம் போகா: ஸுகாநி ச த இமே அவஸ்திதா யுத்தே ப்ராணாம்ஸ்த்யக்த்வா தநாநி ச - எந்த ஆசார்யர்கள் போன்றவர்களின் பொருட்டு நமக்கு ராஜ்யம், அனுபவிக்கவல்ல வஸ்துக்கள், சுகங்கள் ஆகியவை விரும்பப்பட்டனவோ அந்த ஆசார்யர்கள் பலரும் தங்களது உயிர், செல்வம் போன்றவற்றைக் கைவிடத் தயாராக நின்று இங்கு யுத்தம் செய்ய நிற்கிறார்கள் – என்றும், கீதை (1-34, 35) - ஆசார்யா: பிதர: புத்ராஸ் ததைவ ச பிதாமஹா: மாதுலா: ச்வசுரா: பௌத்ரா: ச்யாலா: ஸம்பந்திநஸ்ததா; ஏதான் ந ஹந்தும் இச்சாமி க்நதோ அபி மதுஸூதந - ஆசார்யர்கள், தகப்பனார்கள், புத்திரர்கள், பாட்டனார்கள், மாமனார்கள், மாமன்கள், பேரன்கள், மைத்துனர்கள், மேலும் பல உறவினர்கள் போன்ற பலரும் இங்கு நிற்கின்றனர். மதுசூதனா! இவர்கள் என்னைக் கொல்வதற்காக நின்றாலும், இவர்களைக் கொல்ல நான் விரும்பவில்லை - என்றும் கூறுவதற்கு ஏற்ப உறவினர்கள் மீது கொண்ட பாசம் காரணமாகத் தனது க்ஷத்ரிய தர்மத்தை, அதர்மம் என்று எண்ணியவனாக, கீதை (1-47) - விச்ருஜ்ய ஸசரம் சாபம் சோக ஸம்விக்ந மாநஸ: - இப்படியாகக் கூறிய பின்னர் அம்புகளுடன் கூடிய தனது வில்லை எறிந்து விட்டுத் தேர்த்தட்டில் அமர்ந்தான் - என்பதற்கு ஏற்ப துக்கம் கொண்டு யுத்தத்தை விட்டு விலகுவதாக உரைத்த அன்று.

வ்யாக்யானம் - (ஆரணச்சொல் கடல் கொண்ட வொண்பொருள் கண்டளிப்ப) ஸமுத்ர மத்யத்திலே, மறைந்து கிடக்கிற, தரைப்பட்டுக் கிடக்கிற மஹாரத்நங்களை யெடுத்துக் கொண்டு வந்து உபகரிப்பாரைப்போலே கடல்போல் கம்பீரமாயிருந்துள்ள வேதாந்த வாக்யங்களிலே, "தாவாந்ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத:" என்னும்படியாய் ரஹஸ்ய தமமாய், "தமேவம் வித்வான் அம்ருத இஹ பவதி", என்றும், "தமேவம் விதித்வா அதி ம்ருத்யும் ஏதி" என்றும், "அநந்தோ ப்ரஹ்ம" என்றும், "பதிம் விச்வஸ்யாத்மேச்வரம்" என்றும் சொல்லப்படுகிற விலக்ஷணார்த்தங்களை அடைவே கடாக்ஷித்து கீதாசாஸ்த்ர முகேந உபதேசித்து ரக்ஷித்தருள.

விளக்கம் - (ஆரணச்சொல் கடல் கொண்ட வொண்பொருள் கண்டளிப்ப) - ஸமுத்திரத்தின் நடுவில், ஆழத்தில் கிடக்கின்ற விலை உயர்ந்த இரத்தினங்களைக் கொண்டு வந்து உபகாரம் செய்பவர்கள் போன்று, ஸமுத்திரம் போலே கம்பீரமாக உள்ள வேதாந்த வாக்கியங்களில், கீதை (2-46) - தாவாந்ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜாநத: - எங்கும் நீர் நிரம்பிய இடத்தில் ஒரு சிறு குட்டை என்ன பயன் அளிக்கும்? அது போன்று ப்ரஹ்மத்தை அறிந்த அந்தணனுக்கு வேதங்கள் ஆகின்றன – என்பதற்கு ஏற்ப மறைபொருளாகவும், புருஷஸூக்தம் - தமேவம் வித்வான் அம்ருத இஹ பவதி – ப்ரஹ்மத்தை அறிந்தவன் இந்தப் பிறவியிலேயே முக்தி அடைகிறான் – என்றும், தமேவம் விதித்வா அதி ம்ருத்யும் ஏதி – ப்ரஹ்மத்தை அறிந்தவன் மரணம் என்பதைக் கடக்கிறான் - என்றும், அநந்தோ ப்ரஹ்ம – ப்ரஹ்மம் எல்லையற்றது – என்றும், நாராயண ஸூக்தம் (13-1-3) - பதிம் விச்வஸ்யாத்மேச்வரம் - உலகிற்கு நாயகனும், ஆத்மாக்களின் ஸ்வாமியும் - என்றும் கூறப்படுவதான மேன்மையான ஆழ்பொருளாகவும் உள்ளவற்றை, ஸர்வேச்வரன் ஸ்ரீமத்பகவத்கீதை என்ற சாஸ்த்ரம் மூலம் உபதேசித்து காத்தருளினான்.

வ்யாக்யானம் - அன்றிக்கே, (அன்று) "கார்பண்யதோஷோபஹத ஸ்வபாவ: ப்ருச்சாமி த்வாம் தர்ம ஸம்மூடசேதா: யச்ச்ரேய: ஸ்யாந் நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தே அஹம் ஸாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்று அர்ஜுநன் உபஸத்தி பண்ணினவாறே அவனுக்கு மோக்ஷோபாயமாக கர்மயோகத்தையும் ஜ்ஞாநயோகத்தையும் பக்தியோகத்தையும், அவதார ரஹஸ்யத்தையும், புருஷோத்தமவித்யை தொடக்கமானவற்றையும் உபதேசிக்க, அவையெல்லாம் துச்சகங்களென்றும், ஸப்ரமாதங்களென்றும், விளம்ப்ய பலப்ரதங்களென்றும், ஸ்வரூப விரோதிகளென்றும் நினைத்து அர்ஜுநன் சோகாவிஷ்டனான வன்று. (ஆரணச்சொல் கடல் கொண்டு வொண்பொருள் கண்டளிப்ப) வேதாந்த வாக்யங்களாகிற ஸமுத்ரத்திலே, "தஸ்மாந் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தமாஹு:", "வேதாந்த விஜ்ஞாநஸு நிச்சிதார்த்தாஸ் ஸந்ந்யாஸ யோகாத்ய தயச்சுத்த ஸத்வா: தே ப்ரஹ்மலோகே து பராந்த காலே பராம்ருதாத் பரிமுச்யந்தி ஸர்வே", "ந கர்மணா ந ப்ரஜயா தனே ந த்யாகேனைகே அம்ருதத்வமானச:" இத்யாதிகளாலே குஹ்யதமமாக ப்ரதிபாதிக்கப்படுகிற விலக்ஷணார்த்தங்களை யெல்லாம் கண்டு திரட்டி, "மந்மநா பவ மத் பக்த" என்றும், "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்றும் இரண்டு ச்லோகத்தாலே ஸகலசேதநருடையவும் உஜ்ஜீவநார்த்தமாக அர்ஜுந வ்யாஜேந ப்ரபத்த் யுபதேசம் பண்ணி லோகத்தையெல்லாம் ரக்ஷிக்க வென்னவுமாம்.

விளக்கம் - அல்லது கடந்த இரு பத்திகளுக்கு வேறுவிதமாகவும் விளக்கம் கூறலாம். (அன்று) - கீதை (2-7) – கார்பண்யதோஷோபஹத ஸ்வபாவ: ப்ருச்சாமி த்வாம் தர்ம ஸம்மூடசேதா: யச்ச்ரேய: ஸ்யாந் நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தே அஹம் ஸாதி மாம் த்வாம் ப்ரபந்நம் - மன உறுதி குலைதல் என்ற தோஷம் காரணமாகத் தளர்ந்த ஸ்வபாவம் கொண்டவனாக, எது தர்மம் என்று அறியாத மனம் கொண்டவனாக நான் உன்னைக் கேட்கிறேன். எனக்கு எது நன்மை பயக்கும் என்று நீ எண்ணுகிறாயோ அதனை எனக்கு உபதேசிப்பாயாக. உன்னுடைய சிஷ்யனாக உன்னிடம் சரணம் அடைகிறேன். என்னைக் காப்பாயாக – என்று அர்ஜுனன் க்ருஷ்ணனை நெருங்கித் தொழுதான். அப்போது அவனுக்கு மோக்ஷ உபாயமான கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், தனது அவதார ரஹஸ்யம், புருஷோத்தம வித்யை என்பது தொடக்கமாக உள்ள பலவற்றையும் உபதேசித்தான். அவை அனைத்தையும் கேட்ட அர்ஜுனன், அவை அனைத்தும் மிகுந்த சிரமத்துடன் கைக்கொள்ளப்பட வேண்டியவை என்றும், மகிழ்வை அளிக்கக்கூடியவை என்றாலும் சிரமமானவை என்றும், தாமதமாகப் பலன் அளிப்பவை என்றும், ஆத்ம ஸ்வரூபத்திற்கு விரோதிகள் என்றும் தவறாக எண்ணியபடி வருத்தத்துடன் நின்று அன்று. (ஆரணச்சொல் கடல் கொண்ட வொண்பொருள் கண்டளிப்ப) – வேதாந்த வாக்கியங்கள் என்னும் ஸமுத்திரத்தில் காணப்படுகின்ற, மஹாநாராயண உபநிஷத் (24-1) - தஸ்மாந் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தமாஹு: - ஆகையால் ந்யாஸத்தை (சரணாகதியை) இந்த தபஸ்களில் மேலானதாகக் கூறுகிறார்கள் – என்றும், மஹாநாராயண உபநிஷத் (12-3-5) – வேதாந்த விஜ்ஞாநஸு நிச்சிதார்த்தாஸ் ஸந்ந்யாஸ யோகாத்ய தயச்சுத்த ஸத்வா: தே ப்ரஹ்மலோகே து பராந்த காலே பராம்ருதாத் பரிமுச்யந்தி ஸர்வே - ப்ரஹ்மலோகத்தில் உள்ள பரப்ரஹ்ம உபாஸகர்கள் அனைவரும் “பரன்” என்று அழைக்கப்படும் நான்முகனின் ஆயுள் முடியும் போது, நான்முகனைப் போன்றே, தங்கள் உபாஸனை பலன் காரணமாக முக்தி அடைகின்றனர் – என்றும், ந கர்மணா ந ப்ரஜயா தனே ந த்யாகேனைகே அம்ருதத்வமானச: - கர்மங்களால் அல்ல, மக்கட்பேறால் அல்ல, செல்வத்தினால் அல்ல, சரணாகதியாலேயே மோக்ஷம் கிட்டுகிறது – என்றும் உள்ள பல வாக்கியங்களில் மறைமுகமாக உரைக்கப்பட்டதான அனைத்திலும் வேறுபட்டு நிற்கும் ஆழ்பொருள்கள் அனைத்தையும் ஒன்றாகத் திரட்டி, கீதை (9-34) – மந்மநா பவ மத் பக்த: - என்னிடமே மனதை நிலை நிறுத்தி எனது பக்தனாக ஆவாயாக – என்றும், கீதை (18-66) – ஸர்வதர்மாந் பரித்யஜ்ய: - மோக்ஷத்திற்கான அனைத்து உபாயங்களையும் கைவிட்டு –

என்றும் உள்ள இரண்டு ச்லோகங்கள் மூலம் அனைத்து சேதநர்களும் கரையேறும் விதமாக, அர்ஜுனனுக்கு உபதேசிப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு உலகில் உள்ள அனைவருக்கும் உபதேசித்து, உலகம் முழுவதையும் காத்தருளினான் என்றும் பொருள் கூறலாம்.

வ்யாக்யானம் - (பின்னும்) பிற்காலமான கலியுகத்திலேயும். (காசினியோர்) பூலோகத்திலே யிருந்துள்ள சேதநரெல்லாரும். காசினி - பூமி. (இடரின் கண் வீழ்ந்திட) ஸம்ஸாரத் துக்கத்திலே விழுந்து அழுந்தித் தரைப்பட்டுக் கிடக்க. த்வாபர யுகத்தில் அர்ஜுநனொருவனே யிடர்பட்டான், இந்தக் கலிகாலத்திலே ஒரு லோகமாகக்காணும் இடர்பட்டது. இத்தைக் கண்டு பொறுக்கமாட்டாத தம்முடைய க்ருபையாலே. (தானுமவ் வொண்பொருள் கொண்டு) எம்பெருமானாரும் அந்த ச்லாக்யமான கீதாசாஸ்த்ரத்துக்கு வ்யாக்யாநம் பண்ணியருளி அத்தைக் கொண்டு. அன்றிக்கே, திருக்கோட்டியூர் நம்பியைப் பதினெட்டு தரம் அநுவர்த்தித்து பரமகுஹ்யமென்று அவருபதேசிக்கப் பெற்ற சரம ச்லோகார்த்தத்தைக் கொண்டென்றுமாம். (அவர் பின்படருங் குணன்) ஸ்ரீபதரிகாச்ரமமீறாக இந்த பூலோகத்திலுள்ள சேதநரையெல்லாம் போதித்துப் பின்தொடர்ந்தவருடைய ஸம்ஸார துக்கத்தைப் போக்கக் கடவதான க்ருபா குணத்தை யுடையரான.

விளக்கம் – (பின்னும்) கீதை உபதேசிக்கப்பட்ட த்வாபர யுகத்திற்குப் பிற்காலமான கலியுகத்திலும். (காசினியோர்) – உலகத்தில் உள்ள சேதநர்கள் அனைவரும். காசினி என்றால் பூமி என்று பொருள். (இடரின் கண் வீழ்ந்திட) - ஸம்ஸாரம் என்ற துக்கத்தில் ஆழ்ந்து, ஸம்ஸாரக்கடலில் விழுந்து ஆழத்தில் கிடந்தனர். இதனைக் கண்ணுற்ற எம்பெருமானார் தனது திருவுள்ளத்தில், “த்வாபர யுகத்தில் அர்ஜுனன் ஒருவன் மட்டுமே துக்கத்தில் நின்றான். இந்தக் கலிகாலத்தில் உலகம் முழுவதும் துன்பப்படுகிறதே”, என்று ஆராய்ந்தவராக, இதனைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாத தனது கருணை காரணமாக. (தானும் அவ்வொண்பொருள் கொண்டு) எம்பெருமானாராகிய தான், அந்தக் கீதையில் ஆழ்பொருளுக்கான வ்யாக்யானம் செய்தருளி, அதன் மூலமாக. அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். திருக்கோஷ்டியூர் நம்பியைப் பதினெட்டு முறை சென்று வணங்கி, அவர் “மிகவும் உயர்ந்த இரகசியம்” என்று கூறி உபதேசித்த கீதையின் சரமச்லோகத்திற்கான ஆழ்பொருளை அறிந்து கொண்டு. (அவர் பின்படருங் குணன்) -

பத்ரிநாத் முடிய உள்ள அனைத்து சேதநர்களையும் உபதேசம் மூலமாகப் பின் தொடர்ந்து சென்று, அவர்களுடைய ஸம்ஸார துக்கத்தைப் போக்கவல்ல கருணையைத் தனது இயல்பாகவே கொண்டவராகிய.

வ்யாக்யானம் - அங்ஙனன்றிக்கே, (பின்னும் - தானும் அவ்வொண்பொருள் கொண்டு) பின்னும், தானும் என்ற இரண்டு பதத்திலும் சகாரங்களை ப்ரயோகித்தது – அந்த த்வாபரகாலம் புண்யப்ரசுரமானது, அதிகாரி ஜ்ஞாநாதிகனான அர்ஜுநன், உபதேஷ்டா பரமப்ரஹ்ம பூதனானவன் ஆகையாலே அது அரிதன்று; இந்தக் கலிகாலம் பாப ப்ரசுரமானது, அதிகாரிகள் தோஷ பூயிஷ்டரான ஸர்வவர்ண ஜநங்களும் ஆகையாலே இவர் லோகத்தையெல்லாம் ரக்ஷித்ததுவே யரிதென்னுமிடம் தோற்றுகைக்காக.

விளக்கம் - அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். (பின்னும் - தானும் அவ்வொண்பொருள் கொண்டு) - "பின்னும், தானும்" ஆகிய இரண்டு சொற்களிலும் உம்மைத் தொகையைக் கூறியது ஏன் என்றால் - த்வாபர யுகமானது புண்ணியம் நிறைந்தாகும், இயல்பாகவே ஞானம் உள்ள அர்ஜுனன் அங்கு உபதேசம் பெற்றான், அவனுக்கு உபதேசம் செய்தவன் பரப்ரஹ்மமே ஆவான், ஆகவே அங்கு அர்ஜுனனுடைய துன்பத்தை க்ருஷ்ணன் போக்கியது ஒரு பெரிய செயல் அல்ல. இப்போதுள்ள கலிகாலம் பாவம் நிறைந்ததாகும், கற்கவல்ல அதிகாரிகள் தோஷங்கள் நிறைந்தவராகவும் அனைத்து வர்ணத்தைச் சேர்ந்தவராகவும் உள்ளனர் - இதன் காரணமாக எம்பெருமானார் இந்த லோகத்தைக் கீதாபாஷ்யம் மூலம் உபதேசித்துக் காப்பாற்றியது மிகவும் கடினமான செயல் ஆகும். இதனை உணர்த்தவே உம்மைத்தொகையில் கூறப்பட்டது.

வ்யாக்யானம் - (தானும்) எம்பெருமானாரும். (அவ் வொண்பொருள் கொண்டு) திருக்கோஷ்டியூர்நம்பி பக்கலிலே பதினெட்டுத்தரம் எழுந்தருளினவளவிலே அவரும் சூழாவு கொண்டு, குஹ்யதமமென்று நியமித்து, சரமச்லோகார்த்தத்தை உபதேசித்தவாறே, அந்தச் ச்லோகார்த்தத்தைக் கொண்டு, (அவர் பின்படருங் குணன்) காசினியிலுள்ள ஜநங்களை அதிகாராநதிகார விபாகமற தாமே வந்து தொடர்ந்து அந்த சரம ச்லோகார்த்தத்தை பூரிதாநமாகக் கொடுத்த க்ருபா வாத்ஸல் யௌதார்யாதி கல்யாணகுணங்களையுடைய. (எம்மிராமாநுசன்றன்) இப்படிப்பட்ட கல்யாணகுணமான திவ்யமங்கள விக்ரஹத்தை நமக்கு முற்றூட்டாகக் கொடுத்தருளின எம்பெருமானார்

தம்முடைய. (படியிதுவே) ஸ்வபாவமிதுவே. படி - ஸ்வபாவம். "ஏதாவாநஸ்ய மஹிமா" என்கிறபடியே யாய்த்து.

விளக்கம் - (தானும்) - எம்பெருமானாரும். (அவ் வொண்பொருள் கொண்டு) – திருக்கோஷ்டியூர்நம்பி உள்ள இடத்திற்குப் பதினெட்டு முறை நடந்தார். அவரும் இதனைக் கண்டு மகிழ்ந்து, "நான் கூறப்போகும் இது மிகவும் உயர்ந்த இரகசியமாகும்" என்று உணர்த்தி, சரமச்லோகத்திற்கான ஆழ்பொருளை வெளியிட்டார். அந்த ஆழ்பொருள் மூலமாக, (அவர் பின்படருங் குணன்) உலகில் உள்ள மனிதர்களில் தகுதி உள்ளவர் யார், தகுதி அற்றவர் யார் என்று ஆராயாமல், தானாகவே முன்வந்து அந்த ச்லோகத்தின் ஆழ்பொருளை விளக்கிய கருணை, வாத்ஸல்யம், தாராளம் போன்ற திருக்கல்யாணகுணங்கள் நிறைந்த தனது திருமேனியை நமக்குக் கரையேறும் விதமாக அளித்த எம்பெருமானாருடைய. (படியிதுவே) - ஸ்வபாவம், இயல்பு இதுவே ஆகும். புருஷ ஸூக்தம் (3) – ஏதாவாந் அஸ்ய மஹிமா – இந்தப் புருஷனின் பெருமை இப்படிப்பட்டது - என்பது காண்க.

37. படி கொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் பத்தி வெள்ளம்
குடி கொண்ட கோயில் இராமானுசன் குணம் கூறும் அன்பர்
கடி கொண்ட மாமலர்த்தாள் கலந்து உள்ளம் கனியும் நல்லோர்
அடி கண்டு கொண்டு உகந்து என்னையும் ஆளவர்க்கு ஆக்கினரே.

விளக்கவுரை – இந்தப் பூமி முழுவதும் பரவியுள்ள புகழ் கொண்டது எது என்றால் இராமாயணம் ஆகும். இத்தகைய இராமாயணம் என்னும் கரை புரண்டு ஓடும் பக்தி ரஸத்தை, தானே ஒரு கோவில் போன்று அவதரித்து, தன்னுள் வைத்திருப்பவர் உடையவர் ஆவார். பரமபுருஷனுக்கு வைகுண்டம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை போன்று இராமாயணத்தின் இருப்பிடமாக எம்பெருமானார் உள்ளார். இப்படிப்பட்ட எம்பெருமானாரின் திருக்கல்யாண குணங்களை, அவர் அவதரிப்பதற்கு முன்பே பலரும் இந்த உலகில் உள்ளவர்களுக்கு உபதேசம் செய்தனர். அவர்கள் யார் என்றால் – "கலியும் கெடும் கண்டு கொண்மீன்" என்று உடையவர் பிறப்பால் கலிகாலம் சீரடையும் என உபதேசம் செய்த ஸ்வாமி நம்மாழ்வார்; அவர் கூறியபடி உள்ள விக்ரஹத்தை மனதால்

ஆராதித்த ஸ்வாமி நாதமுனிகள்; “ஆம் முதல்வன்” என்று வியந்த ஸ்வாமி ஆளவந்தார் – ஆகியோர் ஆவர். இப்படிப்பட்ட இவர்களுடைய பெருமை மிகுந்த திருவடித் தாமரைகளைத் தங்கள் உள்ளத்தில் கலந்து நின்றவர்கள் ஸ்வாமி கூரத்தாழ்வான் போன்றவர்கள் ஆவர். இப்படிப்பட்ட கூரத்தாழ்வான் போன்றோர் என்னைக் கண்டு, “இவனிடம் சிறிது நன்மை உள்ளது”, என்று உணர்ந்தனர். அவர்கள் தங்களைப் போன்றே என்னையும் “எம்பெருமானாருக்கு உரியவன்” என்று ஆக்கினர்.

அவதாரிகை - இந்தப்படி ஆச்ரயண ஸௌகர்யா பாதகங்களான க்ருபாதி குணங்களை நீரறிந்த பின்பிறே ஆச்ரயித்தது, உமக்கு இப்படி தெளிவு பிறந்தது என்னென்று கேட்டவர்களைக் குறித்து, முதலிலே நானறிந்து ஆச்ரயித்தேனல்லேன், எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை யறிந்து அநுபவிக்கும் ப்ரியதமருடைய திருவடிகளிலே அவகாஹித்தநுபவிக்கும் ரஸஜ்ஞர் தங்களுடைய பரஸம்ருத்தியைக ப்ரயோஜநதையாலே என்னைப் பார்த்து அங்குத்தைக்கு ஆளாக்கி அநந்யார்ஹராம்படி பண்ணினார்கள், அத்தாலே நானறிந்தே னென்கிறார்.

விளக்கம் – “இப்படியாக எம்பெருமானாரை அண்டுவதற்கு எளிமையாக உள்ளதான தன்மைக்கு விரோதம் இன்றி உள்ள அவருடைய திருக்கல்யாண குணங்கள் குறித்து நன்றாக அறிந்த பின்னர் அல்லவோ நீவிர் அண்டி நின்றீர்? இவ்விதம் உமக்கு அவருடைய குணங்கள் குறித்த தெளிவு எப்படி உண்டானது?”, என்று திருவரங்கத்தமுதனாரிடம் சிலர் கேட்டனர். அதற்கு இவர், “அவற்றை அறிந்து கொண்டு நான் அண்டவில்லை. எம்பெருமானாருடைய திருக்கல்யாணகுணங்கள் குறித்து நன்றாக அறிந்து கொண்டு, அவற்றை அனுபவித்தபடி சிலர் இருந்தனர். அவர்களுடைய திருவடிகளில் சிலர் மூழ்கி நின்று பக்தி ரஸத்தை அனுபவித்தனர். அவர்கள் மற்றவர்களுடைய வளர்ச்சி என்பதையே தங்கள் பயனாகக் கொண்டவர்கள் ஆவர். இப்படிப்பட்ட அவர்கள் என்னை நோக்கிக் கடாக்ஷித்து, எம்பெருமானார் திருவடிகள் அல்லாமல் மற்ற எதற்கும் வசப்படாதபடி என்னை ஈடுபடுத்தினர். இதன் மூலம் நான் அறிந்தேன்”, என்கிறார்.

வ்யாக்யானம் - (படிகொண்ட கீர்த்தி) “வால்மீகி கிரி ஸம்பூதா ராம ஸாகர காமினீ புநாது புவநம் புண்யா ராமாயண மஹாநதீ” என்றும், “ச்லோக ஸார ஸமாகீர்ணம்

ஸர்ககல்லோல ஸங்குலம் காண்ட க்ராஹ மஹாமீனம் வந்தே ராமாயணார்ணவம்" என்றும், "வால்மீகீர் முனி ஸிம்ஹஸ்ய கவிதா வன சாரிண: ச்ருண்வந் ராமகதாநாதம் கோ ந யாதி பராங்கதிம்" என்றும், "இதம் பவித்ரம் பாபக்னம் புண்யம் வேதைச்ச ஸம்மிதம்" என்றும், "சதகோடி ப்ரவிஸ்தரம்" என்றும், "வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா" என்றுஞ் சொல்லுகிறபடியே பூலோகத்தையெல்லாம் வ்யாபித்திருக்கிற கீர்த்தியை உடைத்தான. (படிகொண்ட) என்றவிது உபலக்ஷணம்; ஸத்யலோகத்தில் நின்றும் ப்ரஹ்மாவும் தாத்ருசரான நாரதபகவானும் பூலோகத்திலே வந்து வால்மீகியைக் குறித்து நியமித்தும் உபதேசித்தும் போருகையாலே இதினுடைய கீர்த்தி ஊர்த்த்வ லோகங்களிலுமிறே ப்ரஸித்தமாயிருப்பது.

விளக்கம் - (படி கொண்ட) ஸங்க்ஷேப ஸுந்தரகாண்டம் (வாயு புராணம்) – வால்மீகி கிரி ஸம்பூதா ராம ஸாகர காமினீ புநாது புவநம் புண்யா ராமாயண மஹாநதீ - வால்மீகி என்ற மலையில் தோன்றி, ஸ்ரீராமன் என்ற ஸமுத்திரத்தை நோக்கி ஓடும் ஒரு நதி இராமாயணம் ஆகும். அது, பூவுலகைப் புனிதப்படுத்தும் நதியாகும் - என்றும், ச்லோக ஸார ஸமாகீர்ணம் ஸர்ககல்லோல ஸங்குலம் காண்ட க்ராஹ மஹாமீனம் வந்தே ராமாயணார்ணவம் – ச்லோகங்கள் என்னும் நீரால் நிரம்பியதும், ஸர்க்கங்கள் என்னும் அலைகள் நிறைந்ததும், காண்டங்கள் என்னும் பெரிய மீன்கள் உள்ளதும் ஆகிய இராமயணம் என்னும் ஸமுத்திரத்தை வணங்குகிறேன் – என்றும், வால்மீகீர் முனி ஸிம்ஹஸ்ய கவிதா வன சாரிண: ச்ருண்வந் ராமகதாநாதம் கோ ந யாதி பராங்கதிம் – கானகத்தில் வாழ்கின்றவரும், கவிஞர்களில் சிங்கம் போன்றவரும் ஆகிய வால்மீகி முனிவர் படைத்த இராமனுடைய சரிதமாகிய இராமாயணத்தைப் படிக்கும் யார்தான் உயர்ந்த கதியை அடையமாட்டனர் – என்றும், இதம் பவித்ரம் *பாபக்னம் புண்யம்* வேதைச்ச ஸம்மிதம் – வேதங்களுக்கு நிகரான புண்ணியம் அளிக்கக்கூடியதும், தூய்மையானதும், பாபங்களை அழிக்கவல்லதும் ஆகிய இராமாயணத்தை – என்றும், ஸ்ரீராம ரக்ஷா ஸ்தோத்ரம் - சரிதம் ரகு நாதஸ்ய சதகோடி ப்ரவிஸ்தரம் – ரகு குலத்தின் நாதனாகிய இராமனின் சரிதமானது நூறு கோடி ச்லோகங்கள் கொண்டது - என்றும், வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா - ப்ரசேதஸின் புத்திரரான வால்மீகியின் மூலமாக வேதமே இராமாயணமாக உருவெடுத்தது - என்றும் கூறுவற்கு ஏற்ப, இந்தப் பூமி முழுவதிலும் பரவி நிற்கிறது என்பதான கீர்த்தி கொண்ட. (படி கொண்ட) - ஸத்யலோகத்திலிருந்து நான்முகனும், அவனுடைய புத்திரனாகிய நாரதனும்

இந்த உலகத்தில் வந்து வால்மீகி முனிவரை நோக்கி இராமாயணம் குறித்து நியமித்தும், அவருக்கு அதனை உபதேசித்தும் சென்றனர். இதனால் இராமாயணத்தின் கீர்த்தி என்பது மேல் லோகங்களிலும் பரவி நின்றது என்பது தெளிவாகிறது.

வ்யாக்யானம் - (ராமாயணமென்னும் பக்தி வெள்ளம்) "காவ்யம் ராமாயணம் க்ருஸ்நம் ஸீதாயாச் சரிதம் மஹத்" என்றிருந்தாலும், "யஸ்யைதே தஸ்ய தத்தநம்" என்கிற கட்டளையிலே அவளுடைய ஸம்பத்தெல்லாம் சேஷியானவவனதாகையாலே ராம விஷயமாயிருக்குமென்று சொல்லத் தட்டில்லையிறே. தாத்ருசமான ராமாயணமென்கிற கரை புரண்ட பக்தி ரஸத்தை. இதிலே ப்ரதிபாத்யமாயிருந்துள்ள அர்த்தத்தையே பக்தி ரஸமென்று சொல்லவேண்டியிருக்க இது தன்னை, "பக்தி வெள்ளம்" என்றது, "தத் குண ஸார ஸ்யாத் து தத் வ்யபதேச:" என்றாப்போலே அதுக்கு உத்பாதகமாகையாலே. "ஏகைகமக்ஷரம் ப்ரோக்தம் மஹாபாதக நாசநம்" என்ற ப்ரகாரத்திலே அர்த்தபர்யந்தம் போகவேண்டாதே சப்தராசிதானே ரஸித்திருக்குமென்னுதல்,

விளக்கம் - (ராமாயணமென்னும் பக்தி வெள்ளம்) - இராமாயணம் பாலகாண்டம் – காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாச் சரிதம் மஹத் – சீதையின் மஹத்தான சரிதத்தை உரைக்கும் காவியமான இராமாயணம் - என்று கூறப்பட்டபோதிலும், மஹாபாரதம் - த்ரய ஏவாதநா ராஜந் பார்யா தாஸஸ் ததா ஸு த: யத்தே ஸமதி கச்சந்தி யஸ்யைதே தஸ்ய தத்தநம் - மனைவி முதலானவர்கள் யாருக்கு உடைமையோ, அவர்களுடைய செல்வமும் அவருக்கு உடைமையே ஆகும் - என்கிறபடி சீதையுடைய செல்வம் முழுவதும் அவளுடைய எஜமானனாகிய இராமனுடையதாக உள்ளது கூறத் தடையில்லை. இராமாயணம் என்ற கரை புரண்டு ஓடும் பக்தி ரஸத்தை. இராமாயணம் மூலம் வெளிப்படும் விஷயங்களை அல்லவோ பக்தி ரஸம் என்று கூறவேண்டும், இதனை விடுத்து இராமாயணத்தையே பக்தி ரஸம் என்று ஏன் கூறினார்? இதற்கு விடை தருகிறார். ப்ரஹ்மஸூத்திரம் (2-3-29) - தத் குண ஸார ஸ்யாத் து தத் வ்யபதேச: - ஞான குணத்தைச் சாரமாகக் கொண்டுள்ளதால், ஆத்மாவானது ஞானம் என்றே கூறப்படுகிறது - என்பதற்கு ஏற்ப, இந்த பக்தி ரஸம் ஏற்பட இராமாயணமே காரணமாக உள்ளதால், இராமாயணத்தையே பக்தி ரஸம். ஏகைகமக்ஷரம் *ப்ரோக்தம் மஹாபாதக* நாசநம் – இராமாயணத்தில் உள்ள 24000 ச்லோகங்களின் ஏதேனும் ஒரு எழுத்தை உச்சரித்தாலே

மஹாபாதகமும் அழியும் - என்று கூறுவது போன்று இதன் பொருள் என்ன உரைக்கிறது என்று ஆராயவேண்டாதபடி, இதன் ஓசையே இன்பம் அளிக்கவல்லது.

வ்யாக்யானம் - இப்படிப்பட்ட பக்திதான் அங்கே யாச்ரயித்திருக்கும், நாங்கள் அத்தைப்பெறுகைக்கென்னென்றால், (குடிகொண்ட கோயிலிராமாநுசன்) எம்பெருமானாரே ஒரு கோயிலாக, அவர் திருவுள்ளத்தை ஒரு க்ஷணமும் பிரியாதே இவ்விடமே குடியாக நித்யவாஸம் பண்ணியிருந்தது. "இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை யென்னும் பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர்" ஏதத் ப்ரதிபாத்யனான பரமபுருஷனுக்கு அவையெல்லாம் கோயில்களாமாப்போலே தத் ப்ரதிபாதகமான ஸ்ரீராமாயண மென்கிற பக்தி ப்ரவாஹத்துக்கு இவரும் ஒரு கோயிலாகக் காணுமிருப்பது. (இராமாநுசன்) அந்த ராமாவதாரத்திலே திவ்யதம்பதிகள் விஷயமாக ஸர்வவித கைங்கர்யங்களையும் பண்ணி வயிற்றைப் பெருக்கி பக்தியினுடைய ரஸமறிந்தவரிறே எம்பெருமானாரா யவதரித்தது.

விளக்கம் - இப்படிப்பட்ட பக்தி எம்பெருமானாரிடம் அண்டி நிற்கும். இதனைக் கேட்ட அவர்கள் திருவரங்கத்தமுதனாரிடம், "நாங்கள் அதனை எப்படிப் பெறுவது?", என்று கேட்க, விடை அருளிச்செய்கிறார். (குடிகொண்ட கோயிலிராமாநுசன்) - எம்பெருமானாரையே ஒரு கோயிலாக எண்ணி, அவருடைய திருவுள்ளத்தை விட்டு ஒரு நொடியும் பிரியாமல், அதனையே இருப்பிடமாகக் கொண்டு எப்போதும் வாழவேண்டும். இராமாநுஜ நூற்றந்தாதி (106) – இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ்சோலை என்னும் பொருப்பிடம் மாயனுக்கு என்பர் நல்லோர் - என்பதில் கூறுவது போன்று ஸ்ரீவைகுண்டம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை போன்ற பலவும் இராமாயணத்தில் கூறப்படும் பரமபுருஷனுக்கு இடமாக உள்ளது போன்று, அவனைக் குறித்து உரைக்கின்ற இராமாயணம் என்ற பக்தி ப்ரவாஹத்திற்கு எம்பெருமானார் கோயிலாக உள்ளார். (இராமாநுசன்) - இப்படிப்பட்ட இராமாவதாரத்தில் திவ்யதம்பதிகளாகிய இராமனுக்கும் சீதைக்கும் தேவையான அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்து, அதன் மூலம் மட்டுமே தான் உணவு உண்ட நிலையை அடைந்து, பக்தி ரஸத்தின் சுவையை அறிந்த லக்ஷ்மணன் அல்லவோ எம்பெருமானாராக அவதரித்தது?

வ்யாக்யானம் – (குணம்) அவருடைய கல்யாணகுணங்களை. (கூறுமன்பர்) இந்த லோகத்தா ரெல்லார்க்கும் உபதேசிக்கும் ப்ரேமயுக்தர். "அர்வாஞ்சோ யத் பத ஸரஸிஜ த்வந்த்வம் ஆஸ்ரித்ய பூர்வே மூர்த்நா யஸ்யாந்வயம் உபகதா தேசிகா முக்திமாபு: ஸோயம் ராமாநுஜ முநிர் அபி ஸ்வீய முக்திம் கரஸ்தாம் யத் ஸம்பந்தாத் அமநுத கதம் வர்ண்யதே கூரநாத:" என்கிறபடியே, "நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றும் இல்லை கலியும் கெடும் கண்டு கொண்மின்" என்று ச்லாகித்த நம்மாழ்வாரும், அவர் கொடுத்த பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தையே ஆராதித்துக் கொண்டு போந்த ஸ்ரீமந்நாதமுனிகளும், "ஆ முதல்வனிவன்" என்று ப்ரதிபத்தி பண்ணின ஆளவந்தாருமென்றபடி. (கடி கொண்ட மாமலர்த்தாள்) அவர்களுடைய பரிமள ப்ரசுரமாய் விலக்ஷணமாய் பரமபோக்யமான திருவடிகளிலே. கடி - பரிமளம். மா - மஹத்வம். யாவதாத்மபாவியாக அநுபவித்தாலும் சரமபர்வ நிஷ்டர்க்குக் குறைப்பட்டிராதே மேன்மேலும் பெருமையு டைத்தாயிறே யிருப்பது. (மலர்) லோகத்தில் புஷ்பம்போலே ஒருக்கால் விகஸிதமா யிருக்கை யன்றிக்கே ஸர்வதா விகாஸத்தோடே யிருக்குமென்றபடி. "பரத்ர சாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம்" என்னக்கடவதிறே. (தான்) "யா நிசா ஸர்வ பூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ" என்னும்படியிருக்கிற அவர்களுடைய திருத்தாள்களிலே. (கலந்துள்ளம்) திருவுள்ளங் கலந்து. (கனியும் நல்லோர்) பக்வபலம்போலே ரஸித்திருக்கும் ஸம்யஜ்ஞாநத்தை யுடையரானவர்கள்; கூரத்தாழ்வா னென்றபடி.

விளக்கம் – (குணம்) - எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களை. (கூறும் அன்பர்) - இந்த லோகம் முழுவதும் உபதேசித்தபடி அவர் மீது மிகுந்த ப்ரேமை கொண்டவர்கள். அர்வாஞ்சோ யத் பத ஸரஸிஜ த்வந்த்வம் ஆஸ்ரித்ய பூர்வே மூர்த்நா யஸ்யாந்வயம் உபகதா தேசிகா முக்திமாபு: ஸோயம் ராமாநுஜ முநிர் அபி ஸ்வீய முக்திம் கரஸ்தாம் யத் ஸம்பந்தாத் அமநுத கதம் வர்ண்யதே கூரநாத: - எம்பெருமானாருக்குப் பின்னர் வந்த ஆசார்யர்கள், எம்பெருமானாருடைய திருவடித் தொடர்பு காரணமாகவே தங்களுக்கு மோக்ஷம் உண்டு என்றனர்; எம்பெருமானாருக்குப் முன்னர் இருந்த ஆசார்யர்கள், எம்பெருமானாருடைய திருமுடித் தொடர்பு காரணமாகவே தங்களுக்கு மோக்ஷம் உண்டு என்றனர்; ஆனால் எம்பெருமானாரோ, கூரத்தாழ்வானோடு தனக்கு உள்ள தொடர்பு காரணமாகவே தனக்கு மோக்ஷம் உண்டு என்றார்; இவ்விதம் உள்ள கூரத்தாழ்வானுடைய மேன்மை குறித்து என்ன கூற இயலும்? - என்பதற்கு ஏற்ப, திருவாய்மொழியில் (5-3-2) – நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றும்

இல்லை கலியும் கெடும் கண்டு கொண்மின் - என்று புகழ்ந்த நம்மாழ்வாரும், நம்மாழ்வார் அளித்த பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை மட்டுமே எப்போது ஆராதித்த நாதமுனிகளும், திருவாய்மொழி (7-9-3) – ஆமுதல்வன் இவன் - என்று உணர்த்திய ஆளவந்தாரும் என்று கருத்து. (கடி கொண்ட மாமலர்த்தாள்) - இப்படிப்பட்ட இவர்களுடைய, மிகுந்த பரிமளம் நிறைந்த மேன்மையான இன்பம் அளிக்கவல்ல திருவடிகளில். ஆத்மா உள்ளவரை அனுபவித்தபடி இருந்தாலும் குறைவு இன்றி மேன்மேலும் பெருமைகள் ஓங்கியபடி உள்ள திருவடிகள். (மலர்) - இந்த உலகத்தில் உள்ள சாதாரண மலர்கள், ஒரு நேரம் வந்தவுடன் தங்களுடைய மலர்ச்சி என்பதை இழந்து விடும்; இது போன்று அல்லாமல் எப்போதும் மலர்ச்சியுடன் உள்ள திருவடிகள். ஸ்தோத்ரரத்னம் - அத்ர பரத்ர சாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம் - நாதமுனிகளையே இவ்வுலகிலும் பரவுலகிலும் அண்டி இருப்பேன் – என்பது காண்க. (தாள்) – கீதை (2-69) – யா நிசா ஸர்வ பூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ – அனைத்து உயிர்களும் இரவு போன்று உறங்கும்போது, ஞானியானவன் விழித்தபடி அறிகிறான் - என்பதற்கு ஏற்ப உள்ள அவர்களுடைய திருவடித்தாள்களில், (கலந்துள்ளம்) - திருவுள்ளத்தினை எப்போதும் நிலைநிறுத்தி அல்லது ஒன்றாகக் கலந்து. (கனியும் நல்லோர்) - பக்திப்பழம் போன்று ரசித்தபடி உள்ள தெளிவான ஞானம் கொண்டவர்கள்; குறிப்பாகக் கூரத்தாழ்வான் என்று கருத்து.

வ்யாக்யானம் - (அடி கண்டுகொண்டுகந்து) இவ்வாத்மவஸ்து அங்குத்தைக்கு சேஷமானதன்றோவென்று கொண்டு இதினுடைய படியை தர்சித்து அந்த ஸம்பந்தமே ஹேதுவாக விரும்பி அங்கீகரித்து. ஒரு ராஜபுத்ரன் வழி தப்பிப்போய் ஒரு வேடன் க்ருஹத்திலே சேர்ந்திருக்க, அந்த ப்ரகாரத்தை யறிந்திருக்கும் தார்மிகரான சிலர், இருவருடையவும் ஸம்பந்தத்தை யறிவிப்பித்து இருதலையையும் சேர்க்குமாப்போலே. (என்னையும்) அவருக்குத் தம்மைப்போலே என்னையும் எம்பெருமானார்க்கு. சக்ரவர்த்தித் திருமகன் பக்கலிலே ப்ரேம யுக்தரானவரென்று (அவர்க்கு) என்ற தச்சப்தத்தாலே தோற்றுகிறது. (ஆள் ஆக்கினர்) - அங்குத்தைக்கு ப்ராப்தமான ஆகாரத்தோடே கூட்டினார்கள். சேஷபூதனாம்படி பண்ணினார்க ளென்றபடி. ஆகையாலே நான் வகுத்த விஷயமென்றறிந்து ஆச்ரயித்தேனல்லேன், எனக்கு புருஷகார பூதரான ஆழ்வான் ஆச்ரயிப்பிக்க ஆச்ரயித்தே னென்றதாய்த்து.

விளக்கம் - (அடி கண்டுகொண்டுகந்து) - என்னுடைய ஆத்மாவானது அப்படிப்பட்டவர்களுக்கு அடிமை அல்லவோ என்று சிந்தித்து, இந்த ஆத்மாவினை உணர்ந்து, அத்தகைய ஸம்பந்தமே ஆத்மா கரையேறக் காரணம் என்று அதனை விரும்பி ஏற்றுக்கொண்டு. சிறிய வயதில் ஒரு அரசகுமாரன் காணாமல் போய், ஒரு வேடனின் வீட்டில் வளர்ந்தபடி உள்ளான் என்று வைத்துகொள்வோம்; இந்த நிகழ்வை அறிந்த சில நல்லவர்கள், அந்த அரசகுமாரன் மற்றும் வேடன் ஆகிய இருவருக்கும் இடையே ஏற்பட்ட ஸம்பந்தத்தை உணர்த்தி, அரசனுக்கும் அந்த அரசகுமாரனுக்கும் இடையே உள்ள தொடர்பைக் காண்பித்து, அவர்கள் இருவரையும் சேர்ப்பர். இது போன்று, (என்னையும்) - அவர்களுக்கு நான் எவ்விதம் உள்ளேனோ, அதோ போன்று எம்பெருமானார்க்கு நான் உள்ளபடிச்செய்து, அவர்கள் சக்ரவர்த்தித்திருமகனாகிய இராமனிடம் எவ்விதம் ப்ரேமையுடன் உள்ளனரோ அது போன்று. (ஆள் ஆக்கினர்) - எம்பெருமானார் திருவடிகளில் நான் அடிமையாக நிற்கும்படிச் செய்தனர். ஆக, எம்பெருமானாருடைய திருவடிகளே எனக்கு இயல்பாகச் சேர வேண்டிய இடம் என்று அறிந்து கொண்டு அண்டி நிற்கவில்லை. எனக்குச் சிபாரிசு செய்பவராக நிற்கும் ஸ்வாமி கூரத்தாழ்வான் என்னை இங்கு சேர்க்க, நான் அண்டி நின்றேன்.

38. ஆக்கி அடிமைநிலைப் பித்தனை என்னை இன்று அவமே
போக்கிப் புறத்திட்டது என்பொருளா முன்பு புண்ணியர்தம்
வாக்கில் பிரியா இராமானுச நின் அருளின் வண்ணம்
நோக்கில் தெரிவரிதால் உரையாய் இந்த நுண்பொருளே

விளக்கவுரை – வெகுகாலம் இந்த உடலும் ஆத்மாவும் ஒன்று என்றே எண்ணியிருந்தேன்; அதன் பின்னர் அவை வெவ்வேறு என உணர்ந்த போதிலும், இந்த ஆத்மாவும் ஸர்வேச்வரனும் ஒன்று என எண்ணியிருந்தேன்(ஈச்வரோ அஹம்); அதன் பின்னர் வெகுகாலம் உலக இன்பங்களில் திளைத்தபடி இருந்தேன். இப்படி இருந்த என்னை, அவற்றில் இருந்து நீவிர் (எம்பெருமானார்) விடுவித்தீர். அதனைத் தொடர்ந்து, என்னை எம்பெருமானுக்கு அடிமையாக்கி, அவனுக்கு மட்டுமே கைங்கர்யம் செய்யும்படி பணித்தீர். இது நாள்வரை எனது உயிரை மற்ற விஷயங்களில் நான் வீணாக்கும்படிச் செய்து விட்டு, நீவிர் பேசாமல் நின்றது ஏன்? (நான் அறியேன்). மிகுந்த நன்மை

உள்ளவர்கள் மற்றும் “பொலிக பொலிக பொலிக” என்று கூறும் ஸ்வாமி நம்மாழ்வார் போன்றவர்கள் ஆகியோர்களின் வாக்கில் எப்போதும் நிலைக்கும் எம்பெருமானாரே! எம்பெருமானின் லீலையானது என் போன்றவர்களை மோக்ஷம், பந்தம் ஆகிய இரண்டிலுமே ஈடுபடுத்திவிடும். ஆனால் உமது கருணை என்பது மோக்ஷத்தில் மட்டுமே ஈடுபடுத்தவல்லது அல்லவோ? இப்படிப்பட்ட மேன்மை உடைய உமது சிந்தனை (ஏன் என்னை இத்தனை நாள்கள் திருத்தாமல் காலம் கடத்தினீர் என்ற கேள்விக்கான விடை) எத்தனை ஆராய்ந்தாலும் அறிவதற்குக் கடினமே ஆகும். ஆகவே இந்த நுட்பமான சிந்தனை குறித்து நீரே எனக்குக் கூறவேண்டும்.

அவதாரிகை - இப்படி ஆழ்வானையிட்டு அடியேனைத் திருத்திச் சேர்த்து சேஷத்வத்துக்கு இசைவிப்பித்து தத் யாதாத்ம்ய ஸீமாபூமியான சரமபர்வத்திலே அத்யபிநிவிஷ்டனாம்படி பண்ணியருளின தேவரீர், இதுக்கு முற்காலமெல்லாம் அந்த ரஸத்தை அடியேனுக்கு அநுபவிப்பியாதே வ்யர்த்தமே விஷயாந்தரங்களிலே வைத்ததுக்கு மூலமேது, பாக்யவான்களுடைய வாக்கிலே இடைவிடாதே ஸர்வகாலமும் ஸ்துதிக்கப்படும் எம்பெருமானாரே! தேவரீருடைய க்ருபா ப்ரகாரம் உள்ளபடியறியப் பார்த்தால் எத்தனை தரமுடையார்க்கும் அரிதாயிருக்கும், தேவரீரே! இந்த ஸூக்ஷ்மார்த்தத்தை யருளிச் செய்யவேண்டுமென்று நேரே கேட்கிறார்.

விளக்கம் - “இவ்விதமாகக் கூரத்தாழ்வான் மூலமாக இந்த அடியேனை நேர்வழியில் நடத்தி, உம்முடன் சேர்த்துக் கொண்டீர். உமக்குக் கைங்கர்யம் செய்யும் அடிமையாக என்னை ஏற்றுக் கொண்டீர். உம்முடைய கைங்கர்யம் என்ற உண்மையான இன்பம் அளிக்கவல்ல இடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவனாக என்னை மாற்றினீர். இவ்விதம் செய்த நீவிர், இந்தக் காலகட்டத்துக்கு முந்தைய காலகட்டங்களில் அடியேனுக்கு இந்தக் கைங்கர்ய சுவையை அளிக்காமல், மற்ற விஷயங்களில் ஈடுபட்டு வெறுமனே பொழுதைக் கழிக்கும்படிச் செய்ததன் காரணம் என்ன? மிகுந்த பாக்கியம் செய்தவர்களுடைய வாக்கில் இடைவிடாமல் எப்போதும் துதிக்கப்படும் எம்பெருமானாரே! உம்முடைய கருணை எத்தகையது என்று உள்ளது உள்ளபடி அறிய முயன்றால், எத்தனை உயர்ந்த குணம் கொண்டவர்களாக இருந்தாலும், இயலாது. ஆகவே நீரே இந்த உண்மையை அருளிச் செய்ய வேண்டும்”, என்று எம்பெருமானாரிடம் நேரடியாக விண்ணப்பிக்கிறார்.

வ்யாக்யானம் - (என்னை) அநாதிகாலமே தொடங்கி சில நாள் தேஹமே ஆத்மாவென்று ப்ரமித்த அஜ்ஞாநத்தாலும், பின்பு தேஹாதிரிக்தமாய்க் கொண்டு ஒரு ஆத்மவஸ்து இருக்கிறதென்று அறிந்தாலும், "ஈச்வரோஹமஹம் போகீ ஸித்தோஹம் பலவாந் ஸுகீ" என்னும்படியான அந்யதா ஜ்ஞாநத்தாலும், பின்பு காமநாதிகாரத்திலே விழுந்து, "காமைஸ்தைஸ்தைர் ஹ்ருத ஜ்ஞாநா: ப்ரபத்யந்தேந்ய தேவதா:" என்னும்படியான விபரீத ஜ்ஞாநத்தாலும் தரித்து அஸத் கல்பனாய்ப் போந்தவடியேனை (இன்று) இப்போது.

விளக்கம் - (என்னை) - எல்லையற்ற காலமாக இந்த உடலே ஆத்மாவாகும் என்று மயங்கிய காரணத்தால் அறியாமையில் மூழ்கிக் கிடந்தேன். பின்னர் சரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டதான ஆத்மா என்ற ஒரு வஸ்து உள்ளது என்று தெளிந்தேன். ஆனாலும், கீதை (16-14) – ஈச்வரோஹமஹம் போகீ ஸித்தோஹம் பலவாந் ஸுகீ – நானே இச்வரன், அனைத்தையும் அனுபவிப்பவன் நானே, அனைத்து ஸித்திகளையும் பெற்றவன் நானே, வலிமையானவனும், சுகமானவனும் நானே – என்பதற்கு ஏற்ப உள்ள சிந்தனையாலும், ஆசையின் பிடியில் சிக்குண்டு, கீதை (7-20) - காமைஸ்தைஸ்தைர் ஹ்ருத ஜ்ஞாநா: ப்ரபத்யந்தேந்ய தேவதா: - இன்பம் அளிக்கவல்ல பொருள்களின் மீது உண்டாகும் ஆசை காரணமாக அறிவிழந்தவர்கள் மற்ற தேவதைகளை நாடுகிறார்கள் - என்பதற்கு ஏற்ப உண்டாகிய தவறான ஞானத்தாலும் திரிந்தபடி உள்ள காரணத்தால் இந்த உலகில் "இல்லாத பொருள்" என்று கூறும்படியாகக் கிடந்த அடியேனை. (இன்று) - இப்போது.

வ்யாக்யானம் – (ஆக்கி) அப்படிப்பட்டவற்றையெல்லாம் விடுவித்து முதலிலே, "நானுமுனக்குப் பழவடியேன்" என்னும்படி பகவச்சேஷத்வத்திலே அந்வயிப்பித்து. (அடிமைநிலைப் பித்தனை) பின்பு "அடியார்க்கென்னை யாள்படுத்த விமலன்", "உன்னடியார்க்காட்படுத்தாய்" என்னும்படி ஸர்வேச்வரன் உபகரித்தாப்போலே,() "குருரேவ பரம்ப்ரஹ்ம", "ஆசார்யஸ் ஸ ஹரிஸ்ஸாக்ஷாத் சர ரூபி ந ஸம்சய:" என்னும்படியான தேவரீர், அடியேனை சேஷத்வகாஷ்டா ரூபமான ததீய சேஷத்வத்திலே நிலைநிறுத்தினீர். (முன்பு) பூர்வகாலத்திலே. (அவமே போக்கி) வ்யர்த்தமாகப் பொகட்டு. (புறத்திட்டது) அப்ராப்த விஷயங்களிலே ப்ரவணனாகப் பண்ணினது. (என் பொருளா)

என்ன ப்ரயோஜநம். மூலமேது என்று கேட்க; "மக்நாந் உத்தரதே லோகாந்" என்கிறபடியே ஸர்வரையும் உத்தரிப்பிக்கைக்காக அவதரித்த நீரும் ஸர்வேச்வரனைப்போலே என்னை உம்முடைய க்ரீடைக்கு இவ்வளவும் விஷயமாக்கி வைத்தீரே என்ன; இவ்வளவும் உமக்கதிகார மில்லாமையாலே அப்படி வைத்தோமென்ன; "அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ அதிகாரம் இல்லாதார்க்கு அன்றோ எதிராசா நீ இரங்க வேண்டுவது"; ஆனாலும் இப்போது நீர் இரங்க வேண்டுவது எந்த அதிகாரத்தைப் பார்த்தென்று முன்பு தம்மை, "அவமே புறத்திட்டதென் பொருளா" என்னும்படியைப் பிடிக்கிறார் காணும். "இன்றென்னைப் பொருளாக்கி" என்கிற பாட்டிலே ஆழ்வாரும் அவன் மடியைப் பிடித்தாரிறே. நம்முடைய க்ருபையாலே இன்று உம்மை இப்படிப் பண்ணினோமென்றீராகில் அந்த க்ருபையினுடைய ஸ்வபாவத்தைச் சொல்ல வேணு மென்கிறார்.

விளக்கம் – (ஆக்கி) அது போன்ற பலவற்றையும் என்னிலிருந்து அகற்றி. முதலில் திருப்பல்லாண்டு (11) – நானும் உனக்குப் பழவடியேன் – என்பதற்கு ஏற்ப "ஸர்வேச்வரனுக்கு நான் அடிமை" என்பதான நிலையை எனக்கு உண்டாக்கினீர். (அடிமைநிலைப் பித்தனை) – இந்த நிலையைத் தொடர்ந்து, அமலனாதிபிரான் (1) – அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன் - என்றும், திருப்பள்ளியெழுச்சி (10) – உன்னடியார்க்கு ஆட்படுத்தாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் அடியேனுக்கு எவ்விதம் உதவிகள் செய்தானோ அதே போன்று, குருரேவ பரம்ப்ரஹ்ம – ஆசார்யனே பரப்ரஹ்மம் - என்றும், ஆசார்யஸ் ஸ ஹரிஸ்ஸாக்ஷாத் சர ரூபி ந ஸம்சய: - ஆசார்யனே நடமாடும் ஸ்ரீஹரி என்பதில் ஐயம் இல்லை - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள நீவீர், அடியேனை ஒரு கட்டை போன்று பாகவதர்களுக்குக் கைங்கர்யம் செய்யும் நிலையில் நிறுத்தினீர். (முன்பு) - இதற்கு முன்பு உள்ள காலகட்டத்தில். (அவமே போக்கி) - வீணாகக் காலத்தைக் கழித்து. (புறந்திட்டது) அடையவேண்டிய அவசியம் அற்றதான விஷயங்களில் மிகுந்த ஆசை கொண்டு ஈடுபட்டு. (என் பொருளா) - என்ன பலன்? அதன் காரணம் என்ன என்கிறார். ஜயாக்ய ஸம்ஹிதை - ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ர பாணிநா – நாராயணன் என்னும் தேவன், மனித சரீரத்தை எடுத்தவனாக, ஸம்ஸாரத்தில் மூழ்கி உள்ள ஜீவன்களை, சாஸ்த்ரம் என்னும் கைகள் கொண்டு, கருணையால் மேலே ஏற்றுகிறான் - என்பதற்கு ஏற்ப அனைவரையும் கரையேற்றுவதற்காக அவதரித்த நீரும்

ஸர்வேச்வரன் போன்றே என்னை உம்முடைய லீலைக்கு உட்படுத்தி, இது போன்று உலக விஷயங்களுக்கு இலக்காகும்படி வைத்தீர் அல்லவோ? இதனைக் கேட்ட எம்பெருமானார் இவரிடம், "உமக்குத் தகுந்த அதிகாரம் இல்லை என்ற காரணத்தினால் இவ்விதம் வைத்தோம்", என்று கூற, திருவரங்கத்தமுதனார் தொடர்ந்து உரைக்கிறார். அவர் எம்பெருமானாரிடம், "ஆர்த்தி ப்ரபந்தம் (14) - அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ அதிகாரம் இல்லாதார்க்கு அன்றோ எதிராசா நீ இரங்க வேண்டுவது - கர்மம், ஞானம், பக்தி போன்றவற்றைக் கொண்டுள்ளவர்களுக்கு மட்டுமே திருவரங்கன் இரக்கம் கொண்டு அருள் செய்கிறான். எம்பெருமானாரே! நீவிர் இவ்விதம் தகுதி இல்லாதவர்களுக்கும் இரங்குபவர் ஆயிற்றே - என்பதற்கு ஏற்ப அல்லவோ நீவீர் இருத்தல் வேண்டும்? ஆனால் என்னைக் குறித்து உமக்கு இரக்கம் ஏற்படுவதற்கு என்னிடம் எந்த விதமான தகுதியை நீவிர் எதிர்பார்க்கிறீர்? அவமே புறத்திட்டதென் பொருளா - என்பதற்கு ஏற்ப, முன்பு எந்தக் காரணத்தால் அடியேனை மற்ற விஷயங்களில் தள்ளினீர்?", என்றார். இதற்கு எம்பெருமானார், "திருவாய்மொழி (10-8-9) – இன்று என்னைப் பொருளாக்கி - என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாரும் ஸர்வேச்வரனை அல்லவோ பற்றினார்? நம்முடைய கருணையால் உம்மை இன்று இவ்விதம் உயர்த்தினோம் என்று நீவிர் கூறுகிறீர். அந்தக் கருணையின் தன்மையை நீவிர் உரைக்கவேண்டும்", என்றார். இதற்குத் திருவரங்கத்தமுதனார் விடை அளிக்கிறார்.

வ்யாக்யானம் - (புண்ணியர்தம்) "மயர்வற மதிநலம்" பெறுகைக்குடலான பகவந் நிர்ஹேதுக க்ருபையான பாக்யத்தையுடையவர்கள். (வாக்கில் பிரியா) அவர்களுடைய திருவாயிலே இடைவிடாதே யிருக்கிற. "பூர்வே மூர்த்நா யஸ்யாந்வயம் உபகதா தேசிகா" என்னும்படியான நம்மாழ்வார் முதலானவர்கள், "பொலிக பொலிக பொலிக" என்று மங்களாசாஸநம் பண்ணினார்களிறே. அன்றிக்கே, "குரோர் நாம ஸதா ஜபேத் குரோர் வார்த்தாச்ச கதயேத்" என்றிருக்கையாலே, "நித்யம் யதீந்த்ர தவ திவ்ய வபு: ஸம்ருதௌ ள மே ஸக்தம் மநோ பவது வாக்குண கீர்த்தநேஸௌ ள க்ருத்யம் ச தாஸ்ய கரணம் து கரத்வயஸ்ய வ்ருத்த்யந்தரே" என்கிறபடியே ப்ரார்த்தித்தருளும்; "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம்" என்னும்படி ஆழ்வார் பிள்ளான் தொடக்கமான பாக்யவான்களுடைய திருவுள்ளத்தாலே ஸர்வதா அநுஸந்தாநம் பண்ணப்படுகிற.

விளக்கம் - (புண்ணியர்தம்) – திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் - என்பதற்கு ஏற்ப ஞானம் பெறுவதற்குத் தகுதியான விதத்தில், எந்தவிதமான காரணமும் இன்றி வெளிப்படுவதான பகவத் கருணை என்பதைப் பெற்ற பாக்கியம் செய்தவர்கள், (வாக்கில் பிரியா) - அவர்களுடைய வாக்கில் எப்போதும் இடைவிடாதபடி உள்ளதான. பூர்வே மூர்த்நா யஸ்யாந்வயம் உபகதா தேசிகா - எம்பெருமானாருக்குப் முன்னர் இருந்த ஆசார்யர்கள், எம்பெருமானாருடைய திருமுடித் தொடர்பு காரணமாகவே தங்களுக்கு மோக்ஷம் உண்டு என்றனர் - என்பதற்கு ஏற்ப உள்ளவர்களான நம்மாழ்வார் போன்றவர்கள், திருவாய்மொழி (5-2-1) – பொலிக பொலிக பொலிக - என்று புகழ்ந்து உரைத்தார்கள் அல்லவோ? அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். குரோர் நாம ஸதா ஜபேத் குரோர் வார்த்தாச்ச கதயேத் – எப்போதும் ஆசார்ய நாமம் உரைத்தபடியும், அவர் உரைத்தவற்றைக் குறித்து பேசியபடியும் – என்று உள்ளதன் காரணமாக, யதிராஜ விம்சதி (4) - நித்யம் யதீந்த்ர தவ திவ்ய வபு: ஸம்ருதௌ மே ஸக்தம் மநோ பவது வாக்குண கீர்த்தநேஸௌ க்ருத்யம் ச தாஸ்ய கரணம் து கரத்வயஸ்ய வ்ருத்த்யந்தரேஸ்து விமுகம் கரணத்ரயம் ச - யதிகளின் தலைவனே! உன்னுடைய எழிலான திருமேனியை எப்போதும் த்யானித்து இருக்கிம்படி நீ எனது மனதிற்கு அருள வேண்டும். உனது திருக்கல்யாண குணங்களைப் பற்றி மட்டுமே எனது நாக்கு பேசியபடி இருத்தல் வேண்டும். உனக்கு அடிமையாகத் தொண்டு புரிவதற்கு மட்டுமே எனது இரண்டு கைகளும் பயன்பட வேண்டும். மற்ற உலக நாட்டங்களில் இருந்து எனது மூன்று கரணங்களும் (வாக்கு, மனம், செயல்) முற்றிலுமாக விடுபட வேண்டும் - என்பது போன்றவற்றால் ப்ரார்த்தித்து அருளுகின்ற, யதிராஜ விம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் - என்பதற்கு ஏற்ப உள்ளவர்களான கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் முதலான பாக்கியம் செய்தவர்களுடைய திருவுள்ளத்தால் எப்போதும் எண்ணப்பட்டபடி உள்ள. (இராமாநுசா) - எம்பெருமானாரே.

வ்யாக்யானம் - (நின்னருளின்வண்ணம்) பந்த மோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவான அவனுடைய க்ருபை போலன்றிறே மோக்ஷைக ஹேதுவான தேவரீருடைய க்ருபை. வண்ணம் – அதினுடைய ப்ரகாரம், ஸ்வபாவமென்றபடி. (நோக்கில்) அத்தை நன்றாக தர்சித்தால். அறியவேணுமென்று பார்த்தால், (தெரிவரிது) - அறிகைக்கு கடிநமாயிருக்கும். இத்தனை நாளும் பலியாதே போய் இன்று நிர்ஹேதுகமாக பலித்த ப்ரகாரமென்னென்று விசாரித்தால் அந்த ப்ரகாரமின்னதென்று விவேகிக்க அரிதாயிருக்குமென்றபடி. ஆல் – ஆச்சர்யம். ஏகாகாரமான தேவரீருடைய க்ருபை என்னளவிலே மாத்ரம் ஆகாரத்வயத்தை பஜித்ததோவென்று ஆச்சர்யப்படுகிறார்காணும். அன்றிக்கே, ஆல் – இன்று நிர்ஹேதுகமாக பலித்த க்ருபை முற்காலத்திலே பலியாதே, "போரவைத்தாய் புறமே", "அற்ப சாரங்களவை சுவைத்து அகன்றொழிந்தேன்" என்று ஆழ்வார் நிர்வேதப்பட்டாப்போலே இந்த அநுபவத்தை இழந்து விஷய ப்ரவணனாய்ப் போனேன் என்று இழந்த நாளை நினைத்து நிர்வேதப்படுகிறார். (உரையாயிந்த நுண்பொருளே) இந்த ஸூக்ஷ்மார்த்தத்தை, உபயவிபூதி வ்ருத்தாந்தத்தையும் ஸாக்ஷாகரித்தவ ராகையாலே தேவரீர் அறிந்தருளுமே, ஆகையாலே தேவரீரே யருளிச்செய்ய வேணும் என்றதாய்த்து.

விளக்கம் - (நின்னருளின்வண்ணம்) - ஸம்ஸாரம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டையும் அளிப்பது ஸர்வேச்வரனுடைய கருணையின் தன்மை ஆகும். அது போன்று அல்லாமல், மோக்ஷத்தை மட்டுமே அளிக்கக்கூடியது உம்முடைய கருணையின் தன்மை. வண்ணம் என்றால் தன்மை. (நோக்கில்) - இந்தத் தன்மையை நன்கு அறிந்து கொள்ளவேண்டும் என்று முயற்சித்தால், அறிந்து கொள்ளக் கடினமானதாகவே இருக்கும். இத்தனை நாட்கள் இந்தக் கருணையானது என் விஷயத்தில் வெளிப்படாமல், இப்போது எந்தவிதமான காரணமும் இன்றி வெளிப்பட்டது ஏன் என்று ஆராய்ந்தால், அதன் காரணம் இன்னது என்று புரிந்து கொள்ளக் கடினமானதாகவே இருக்கும். ஆல் என்றால் இங்கு வியப்பைக் கூறுகிறது. ஒரே தன்மையாக உள்ள உம்முடைய கருணையானது எனது விஷயத்தில் விருப்பமானவற்றை அளித்தல், விருப்பம் அல்லாதவற்றை விலக்குதல் என்று இரண்டு விதமாக உள்ளதோ? அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். "ஆல்" என்றால் இன்று எந்தவிதமான காரணமும் இன்றி என் விஷயத்தில் வெளிப்பட்ட கருணை, முன்பு வெளிப்படாமல், திருவாய்மொழி (5-1-5) - போரவைத்தாய் புறமே - என்றும்,

திருவாய்மொழி (3-2-6) - அற்ப சாரங்களவை சுவைத்து அகன்றொழிந்தேன் – என்றும் நம்மாழ்வார் துன்பம் அடைந்தது போன்று, இந்த விஷயத்தை இழந்து நிற்கும்படியும், மற்ற விஷயங்களை நாடும்படியும் செய்ததே என்று கடந்த காலத்தை எண்ணி வேதனை அடைகிறார் எனலாம். (உரையாயிந்த நுண்பொருளே) - மறைமுகமான இந்த விஷயத்தை, இரண்டு விபூதிகளுக்கும் நீவிர் தலைவராக உள்ளதன் காரணமாக அவற்றைக் குறித்து நன்கு அறிந்தவர் என்பதால் எனக்கு அருளிச்செய்ய வேண்டும்.

39. பொருளும் புதல்வரும் பூமியும் பூங்குழலாரும் என்றே
மருள் கொண்டு இளைக்கும் நமக்கு நெஞ்சே மற்றுளார் தரமோ?
இருள் கொண்ட வெந்துயர் மாற்றித் தன்னீறில் பெரும் புகழே
தெருளும் தெருள் தந்து இராமானுசன் செய்யும் சேமங்களே.

விளக்கவுரை – எனது உள்ளமே! நாம் செய்வது என்ன? மிகையான செல்வம், புத்திரர்கள், வசிப்பதற்குச் சிறந்த நிலம், மலர்கள் அலங்கரித்த மனைவி ஆகியவற்றை மட்டுமே விரும்பியபடி உள்ளோம். இவற்றையே மிகவும் உயர்ந்த பொருள்கள் என்று உணவையும் மறந்து, இளைத்து நிற்கிறோம் (இங்கு உணவு என்பது உண்ணும் உணவு, ஞானம் ஆகிய இரண்டையுமே குறிக்கும்). இதனைத் திருமங்கையாழ்வார் – தாயே தந்தை என்றும் தாரமே கிளை மக்கள் என்றும் நோயே பட்டொழிந்தேன் – என்றார் அல்லவோ? இப்படிப்பட்ட அஜ்ஞானம் மூலம் நமக்கு ஏற்படும் கொடூரமான துயரங்கள் அனைத்தையும் நீக்கி, தன்னுடைய மேன்மேலும் எல்லையற்றுப் பெருகியபடி உள்ள திருக்கல்யாண குணங்களை நமக்கு வெளிப்படுத்தியபடி உள்ளவர் எம்பெருமானார் ஆவார். இவர் நமக்காகச் செய்யும் ரக்ஷணங்கள் (நம்மைக் காப்பாற்றும் செயல்கள்) மற்றவர்களால் செய்யவும் இயலுமோ? அந்தக் கண்ணன் கூட – தூது செல்வது, தேர் ஓட்டுவது, கீதை உபதேசம் செய்வது – போன்ற பலவற்றையும் பாண்டவர்களுக்குகாக மட்டுமே, குறிப்பாக அவர்களில் ஒருவனான அர்ஜுனனுக்காக மட்டுமே செய்தான் அல்லவோ? ஆனால் எம்பெருமானார் அனைவருக்கும், அனைத்தையும் உபதேசித்தார் அன்றோ? ஆக இவர் போன்று நமக்கு அந்த மாயக்கண்ணனாலும் உதவ இயலவில்லை என்பது உண்மைதானே! இப்படி உள்ளபோது பொருள், புத்திரர்கள், மனைவி போன்றவையா நம்மைக் காக்கும் – என்று கருத்து.

அவதாரிகை – “உரையாயிந்த நுண்பொருளே” என்று இவர் நேர்கொடு நேர்நின்று கேட்டவிடத்திலும் எம்பெருமானார் ஒரு மறுமாற்ற மருளிச்செய்யக் காணாமையாலே அத்தைவிட்டு, அவர் செய்த வுபகாரங்களை அநுஸந்தித்து அவற்றைத் தம்மருகே யிருக்கிற பாகவதரோடே சொல்ல வொருப்பட்டவாறே, இவ்வளவும் இவர்தாம் அவர்களைக் குறித்து எம்பெருமானாருடைய கல்யாணகுண வைபவத்தை ப்ரஸங்கித்தா ராகையாலே அவர்களும் அந்த குணங்களிலே ஆழங்கால்பட்டு வித்தராய் இவர் சொல்லுமத்தைக் கேட்கவும் மாட்டாதே பரவசராயிருக்க, தம்முடைய திருவுள்ளத்தை ஸம்போதித்து, புத்ர தார க்ருஹ க்ஷேத்ராத்ய ப்ராப்த விஷயங்களிலே மண்டி நிஹீநராய்ப் போந்த நமக்கு அஜ்ஞாநத்துக்குடலான துக்கத்தைப் போக்கி, நித்யமாய் நிரவதிகமா யிருக்கிற தம்முடைய கல்யாணகுண ஜாதமெல்லாம் தெளியும்படியான அறிவைக் கொடுத்தருளின எம்பெருமானார் செய்த ரக்ஷணங்கள் பின்னை ஒருவராலே செய்யப்போமோ வென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் “உரையாய் இந்த நுண்பொருளே” என்று எம்பெருமானாருடைய திருமுன்பாக நின்று நேருக்குநேர் விண்ணப்பித்தார். ஆனால் இதற்கு எம்பெருமானார் எத்தகைய விடையும் அருளிச்செய்யவில்லை. ஆகவே அதனை விடுத்து, எம்பெருமானார் தனக்குச் செய்தருளிய உதவிகளை எண்ணியவராக, அவற்றைக் குறித்துத் தன்னருகில் உள்ள பாகவதர்களுக்கு உரைக்க முனைந்தார். இவை அனைத்தையும் இவர் அவர்களிடம் உரைத்து, மேலும் எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்ளையும் விளக்கியதால், அவர்கள் அந்தக் குணங்களில் ஆழமாக ஈடுபட்டு, இவர் கூறுவதைச் செவிமடுக்காமல் பரவசம் அடைத்து, இவரிடம் ஏதும் உரைக்காமல் நின்றனர். இதனைக் கண்ட இவர் தமது திருவுள்ளத்தை அண்டி நின்று, “புத்திரன், மனைவி, வீடு, இடம் போன்று உலக விஷயங்களில் மட்டுமே எப்போதும் புதைந்து நின்று தாழ்ந்து போன நமக்கு, நம்முடைய அறியாமையின் அடிப்படையான துக்கத்தினைப் போக்கி, எப்போதும் எல்லையற்று விளங்கும் தனது திருக்கல்யாண குணங்கள் புலப்படும்படியான அறிவை அளித்தருளிய எம்பெருமானார் செய்த கரையேற்றும் முயற்சிகளை வேறு யாராலும் செய்ய இயலுமோ?”, என்கிறார்.

வ்யாக்யானம் – (நெஞ்சே) கீழில் பாட்டுக்களிலே தமக்கு எம்பெருமானார் க்ருபையாலே ப்ராப்தமான ஸம்ருத்தியையும், அவருடைய கல்யாணகுண வைபவத்தையும் ஸமீபவர்த்திகளான பாகவதர்களோடே சொல்லிக் கொண்டு போருகிறவளவிலே, அவர்கள் அவற்றில் வித்தராய் பரவசராய் ஒரு மறுமாற்றமாகிலும் அருளிச்செய்ய மாட்டாதே யிருந்தவாறே தம்முடைய நெஞ்சைப் பார்த்து தாம் பெற்ற பல பரம்பரையை யருளிச்செய்கிறார். (பொருளும்) ஸமஸ்த புருஷார்த்த ஸாதநமாய் ஸ்வஜநங்களோடே கூடி யாவஜ்ஜீவம் ஸுகிக்கைக்குறுப்பா யிருந்துள்ள தன, கநக வஸ்து வாஹநாதி ஸகல பதார்த்தங்களும். (புதல்வரும்) "புத்ரோத்பத்தி விநாசாப்யாம் ந பர ஸுக துக்கயோ:" என்கிறபடியே இனி இதுக்கவ்வருகே ஒரு ஸுகமில்லை என்னலாம்படி நிரவதிக ஸுகரூபனாயும், கரணாம் பாடவ தசையிலே பேக்ஷகனாயும், "புந்நாம்நோ நரகாத்த்ராயேத்" என்கிறபடியே அத்ருஷ்டோபகாரகனாயு மிருந்துள்ள புத்ரனும். (பூமியும்) சல ஸ்வபாவங்களான வஸ்துக்களைப் போலன்றிக்கே ஸ்த்தாவரமாகையாலே புத்ர பௌத்ராதி பர்யந்தமாக ஜீவந ஹேதுவான க்ஷேத்ரமும். (பூங்குழலாரும்) பரிமள ப்ரசுரங்களான புஷ்பங்களாலே பரிஷ்கரிக்கபட்ட கபரீ பந்தங்களை யுடையளாய், "பார்யா ஸமோ நாஸ்தி சரீர தோஷணே" என்று ச்லாகிக்கப்பட்ட நல்ல தாரமும்.

விளக்கம் – (நெஞ்சே) - கடந்த பாசுரங்களில் தனக்கு எம்பெருமானாருடைய கருணை காரணமாக ஏற்பட்ட வளர்ச்சிகள் மற்றும் அவருடைய திருக்கல்யாண குணங்களுடைய வைபவம் ஆகியவற்றைத் தன் அருகில் உள்ள பாகவதர்களிடம் உரைத்தார். அப்போது அவர்கள் அதில் ஈடுபட்டு, பரவசம் அடைந்து, இவரிடம் ஏதும் உரைக்காமல் மௌனமாக நின்றனர். இதனால் தனது உள்ளத்திடம், தான் பெற்ற பலன்களின் தொகுப்பை உரைக்கிறார். (பொருளும்) - மோக்ஷம் தவிர்த்து உள்ள மற்ற அனைத்து புருஷார்த்தங்களையும் பெறுவதற்கான உபாயமாகவும், தன்னைப் போன்ற உள்ள உறவினர்களுடன் சேர்ந்து இந்த உயிர் உடலில் நிலைநிற்கும்வரை சுகமாக இருப்பதற்குத் துணையாகவும் உள்ள தனம், பொன், வாகனம் போன்ற பலவிதமான பொருள்களும். (புதல்வரும்) - புத்ரோத்பத்தி விநாசாப்யாம் ந பர ஸுக துக்கயோ: - புத்திரன் பிறப்பதும், இறப்பதும் போன்ற [முறையே] உயர்ந்த சுகமும் இல்லை, துன்பமும் இல்லை - என்பதற்கு ஏற்றபடி, இதனைக் காட்டிலும் வேறு ஒரு இன்பம் இல்லை என்று கூறலாம்படி எல்லையற்ற சுகரூபனாகவும், அனைத்தையும் அனுபவிப்பவனும், புந்நாம்நோ நரகாத்த்ராயேத் – "புத்" என்னும் நரகத்திலிருந்து உயர்த்துபவன் புத்திரன் -

என்பதற்கு ஏற்ப பலவிதங்களிலும் உதவிகள் செய்பவனும் ஆகிய புத்திரன். (பூமியும்) - அசையும் தன்மை கொண்ட பொருள்கள் போன்று அல்லாமல், அசையாமல் உள்ளதால் புத்திரன், பேரன் என்று பலருக்கும் வாழ்வதற்கு ஆதாரமாக உள்ள இருப்பிடம். (பூங்குழலாரும்) – மிகுதியான பரிமளத்திற்கு இருப்பிடமான மலர்களால் அலங்கரிக்கப்பட்ட கூந்தலை உடையவளும், பார்யா ஸமோ நாஸ்தி சரீர தோஷணே – சரீரத்தைப் பேணுவதில் மனைவிக்கு நிகர் யாரும் இல்லை - என்று போற்றப்படுபவளும் ஆகிய நல்ல மனைவியும்.

வ்யாக்யானம் - (என்றே மருள் கொண்டிளைக்கும்) "க்ஷேத்ராணி மித்ராணி தநாநி நாத புத்ராச்ச தாரா: பசவோ க்ருஹாணி, த்வத் பாதபத்ம ப்ரவணாத்ம வ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூல ரூபா:" என்று சொல்லப்படுகிற ஆகாரத்தை மறந்து, இவை தாரக போஷக போக்யங்களென்று இவற்றிலே ஸக்தனாய் ப்ரமித்து, அந்த அஜ்ஞாநத்திலே துவக்குண்டு, அவஸந்நராய்ப் போந்த நமக்கு. "தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும் நோயே பட்டொழிந்தேன்" என்றும், "புத்ர தார க்ருஹ க்ஷேத்ர ம்ருக த்ருஷ்ணாம்பு புஷ்கலே க்ருத்யா க்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தம் இதஸ் தத:" என்றும் சொல்லக்கடவதிறே.

விளக்கம் - (என்றே மருள் கொண்டிளைக்கும்) - ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் – க்ஷேத்ராணி மித்ராணி தநாநி நாத புத்ராச்ச தாரா: பசவோ க்ருஹாணி, த்வத் பாதபத்ம ப்ரவணாத்ம வ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூல ரூபா: – எனது எஜமானனே! நிலங்கள், நண்பர்கள், செல்வம், புத்திரர்கள் மனைவி, பசுக்கள், வீடுகள் போன்ற அனைத்தும் உன்னுடைய தாமரை போன்ற திருவடிகளில் ஈடுபட்டு நிற்பவர்களுக்கு விரோதிகளாக உள்ளன – என்று கூறப்படுவதான அடிப்படை விஷயத்தை மறந்து, இது போன்றவையே உயிர் தரிப்பதற்கும் இன்பம் அனுபவிப்பதற்கும் அவசியமானவை என்று கருதி, இவற்றிலிருந்து விலகாமல் மயங்கி, அத்தகைய அறியாமையில் சிக்குண்டு, துன்பம் அடைந்து நிற்கும் நமக்கு. பெரிய திருமொழி (1-9-1) – தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும் நோயே பட்டொழிந்தேன் – என்றும், தேவராஜ அஷ்டகம் (5) - புத்ர தார க்ருஹ க்ஷேத்ர ம்ருக த்ருஷ்ணாம்பு புஷ்கலே க்ருத்யா க்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தம் இதஸ் தத: - (ஸம்ஸாரம் என்ற வனத்தில்) ஆசை என்னும் மரங்கள், மக்கள், மனைவி வீடு நிலம் இவைகள் கானல் நீர் போல் நிறைந்திருக்கின்றன. இப்படிப்பட்ட வனத்தில்

செய்யவேண்டியவை எவை, செய்யத்தகாதவை எவை என்னும் பகுத்தறிவில்லாத குருடனாகவும் இங்கும் அங்கும் அலைந்து - என்றும் கூறியது காண்க.

வ்யாக்யானம் - (இருள் கொண்ட வெந்துயர் மாற்றி) "அவிவேக கந அந்த திங்முகே பஹுதா ஸந்தத துக்க வர்ஷிணி பகவந் பவதுர்த்திநே பத: ஸ்கலித மாம் அவலோகய அச்யுத" என்கிறபடியாலே அஜ்ஞாந மூலமாய், க்ரூடமாயிருக்கிற துக்கத்தை ஸவாஸநமாக நிவர்த்திப்பித்து. (தன்னீறில் பெரும்புகழ்) ஸ்வாபாவிகமாய் அவதி யின்றிக்கே மேன்மேலும் பெருகி வருகிற மஹத்தான உம்முடைய கல்யாணகுண ஜாதத்தை. (தெருளும் தெருள் தந்து) தெளியும்படியான ஜ்ஞாநத்தைக் கொடுத்து. (இராமாநுசன் செய்யும் சேமங்களே) இப்படி எம்பெருமானார் செய்தருளும் ரக்ஷணங்கள். (மற்றுளார் தரமோ) எத்தனை தரமுடையராநாலும் செய்ய சக்தரோ. "அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன அடியேன் அறியேனே" என்றாப்போலே சரமபர்வமான எம்பெருமானார் பக்கலிலே க்ருதஜ்ஞரா யருளிச்செய்கிறார்.

விளக்கம் - (இருள் கொண்ட வெந்துயர் மாற்றி) – ஸ்தோத்ர ரத்னம் (49) – அவிவேக கந அந்த திங்முகே பஹுதா ஸந்தத துக்க வர்ஷிணி பகவந் பவதுர்த்திநே பத: ஸ்கலித மாம் அவலோகய அச்யுத – பகவானே! அடியார்களை நழுவவிடாதவனே! விவேகம் இல்லாமை என்னும் மேகங்களால் இருளடைந்த திசைகளைக் கொண்டதும், பலவிதமான துன்பங்களை இடைவிடாமல் பொழிவதும் ஆகிய ஸம்ஸாரம் என்னும் மழைக்கால இருளில், நல்ல வழியிலிருந்து விலகிய என்னை நோக்குவாயாக - என்பதற்கு ஏற்ப அறியாமைக்கு மூலமாகவும், கொடூரமாகவும் உள்ள துக்கத்தை, அதன் வாசனையுடன் விலக்கி. (தன்னீறில் பெரும்புகழ்) – இயல்பாகவே எல்லையில்லாமல் மேன்மேலும் பெருகி வருவதான மேன்மையான உம்முடைய திருக்கல்யாணகுணங்களுடைய கூட்டத்தை. (தெருளும் தெருள் தந்து) - உணர்ந்து கொள்வதற்கு ஏற்ற ஞானத்தை அளித்து. (இராமாநுசன் செய்யும் சேமங்களே) - இப்படியாக எம்பெருமானார் செய்தருளும் நம்மைக் காக்கும் செயல்பாடுகளானவை (மற்றுளார் தரமோ) – வேறு ஒருவர் எத்தனை மேன்மை கொண்டவர் என்றாலும் அவரால் செய்ய இயலுமோ? திருவாய்மொழி (2-3-2) – அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன அடியேன் அறியேனே

- என்பது போன்று எல்லைநிலமான எம்பெருமானாரிடம் சென்று செய்ந்நன்றி அருளிச் செய்கிறார்.

வ்யாக்யானம் - (மற்றுளார் தரமோ) கழுத்திலே ஓலை கட்டிக்கொண்டு திரிந்தும், ஸாரத்யம் பண்ணியும், பதினெட்டத்யாயம் கீதையை உபதேசித்தும், "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றும், "அபயம் ஸர்வ பூதேப்யோ ததாம்ய ஏதத் வ்ரதம் மம" என்றும் அநேக ப்ரகாரமாக "படாதன பட்டும்" ஒருவனையாகிலும் ஸர்வேச்வரன் ரக்ஷித்தா னல்லன். "நாராயணேமஹ திலோசகுராவதந்தே கோமாநுஷ ச்ரியமவாப ஸநாதிநீம்தாம் ராமாநுஜே புவிமிதே ஸகலோபி ஜந்துஸ் ஸம்ஸார திவ்யபதயோர் ந ஹி வேத்தி பேதம்" என்கிறபடியே நெஞ்சே! கண்டாயே? எம்பெருமானார் நமக்குப் பண்ணின உபகார பரம்பரை வாசாமசோசரமாய்த்து. "தென் அரங்கர் தமக்காமோ? தேவியர்கட்காமோ? சேனையர்கோன் முதலான சூரியட்கர்காமோ? மன்னிய சீர் மாறன் அருள்மாரி தமக்காமோ? மற்றும் உள்ள தேசிகர்கள் தங்களுக்குமாமோ? என்னுடைய பிழை பொறுக்க யாவருக்கு முடியும்? எதிராசா உனக்கு அன்றி யான் ஒருவர்க்கு ஆகேன்" என்று இவ்வர்த்தத்தை ஜீயருமநுஸந்தித் தருளினாரிறே.

விளக்கம் - (மற்றுளார் தரமோ) – பாண்டவர்களுக்காகத் தூது போயும், தேர் ஓட்டியும், பதினெட்டு அத்யாயங்கள் கொண்ட ஸ்ரீமத்பகவத்கீதையை உபதேசித்தும், கீதையில் (18-66) - ஸகல பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – உன்னை அனைத்துவிதமான பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன் - என்றும், இராமாயணம் யுத்தகாண்டத்தில் – அபயம் ஸர்வ பூதேப்யோ ததாம்ய ஏதத் வ்ரதம் மம – அடைக்கலம் என்று புகுந்த யாராகிலும் அடைக்கலம் அளிப்பேன் என்பது எனது விரதமாகும் – என்றும் உரைத்தும்; இப்படியாகப் பலவிதமாக, திருவாய்மொழியில் (7-5-2) – படாதன பட்டு - என்பதற்கு ஏற்ப முயன்றாலும், பாண்டவர்களில் ஒருவரையாவது ஸர்வேச்வரன் காப்பாற்றினான் என்பது இல்லை. ஆனால், நாராயணேமஹ திலோசகுராவதந்தே கோமாநுஷ ச்ரியமவாப ஸநாதிநீம்தாம் ராமாநுஜே புவிமிதே ஸகலோபி ஜந்துஸ் ஸம்ஸார திவ்யபதயோர் ந ஹி வேத்தி பேதம் - என்பதற்கு ஏற்ப, எம்பெருமானார் நமக்குச் செய்த உபகாரங்களை எண்ணினால், சொற்கள் கொண்டு அளவிட்டு உரைக்க இயலாது. ஆர்த்தி ப்ரபந்தத்தில் (26) - தென் அரங்கர் தமக்காமோ? தேவியர்கட்காமோ? சேனையர்கோன் முதலான சூரியட்கர்காமோ? மன்னிய சீர் மாறன் அருள்மாரி தமக்காமோ? மற்றும் உள்ள

தேசிகர்கள் தங்களுக்குமாமோ? என்னுடைய பிழை பொறுக்க யாவருக்கு முடியும்? எதிராசா உனக்கு அன்றி யான் ஒருவர்க்கு ஆகேன் - எம்பெருமானாரே! நான் செய்த பலவிதமான பிழைகளை பெரியபெருமாளான திருவரங்கன் பொறுத்துக் கொள்வானா? ஸ்ரீரங்கநாச்சியார் தொடக்கமாக உள்ள பிராட்டிமார்கள் பொறுத்துக் கொள்வார்களா? சேனைமுதலியார் தொடக்கமாக உள்ள நித்யஸூரிகள் பொறுத்துக் கொள்வார்களா? என்றும் உயர்ந்த குணங்கள் பொருந்திய நம்மாழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும் பொறுத்துக் கொள்வார்களா? மற்றும் நாதமுனிகள் தொடக்கமாக உள்ள ஆசார்யர்கள் பொறுத்துக் கொள்வார்களா? இவ்விதம் எனது பிழைகளை யாரால்தான் பொறுத்துக் கொள்ள இயலும்? எம்பெருமானாரே! இனி உன்னை அல்லாமல் வேறு யாரிடமும் செல்லமாட்டேன் - என்று இதே கருத்தை ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தார் அல்லவோ?

40. சேமநல் வீடும் பொருளும் தருமமும் சீரியநற்
காமமும் என்றிவை நான்கு என்பர் நான்கினும் கண்ணனுக்கே
ஆமது காமம் அறம் பொருள் வீடு இதற்கென்று உரைத்தான்
வாமனன் சீலன் இராமானுசன் இந்த மண் மிசையே.

விளக்கவுரை – மோக்ஷம் என்பதும், அயோத்யை மற்றும் அபராஜிதா என்றும் கூறப்படும் பரமபதம்; இத்தகைய மோக்ஷம் கிட்ட இயற்றும் செயல்களுக்குத் தேவையான பொருள்; இத்தகைய மோக்ஷம் என்பதற்கு உறுப்பாக உள்ள கர்மங்கள் என்னும் தர்மம்; சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டபடி உள்ள காமம் – இப்படிப்பட்ட நான்கையே புருஷார்த்தம் என்று சாஸ்திரம் அறிந்தவர்கள் கூறுவார்கள். இந்த நான்கிலும் எம்பெருமானிடத்தில் கொள்ளும் காமம் என்பதே மிகவும் உயர்ந்த, முதன்மையான புருஷார்த்தம் ஆகும். அவனுடைய திருமுகம் நமது கைங்கர்யம் கண்டு மகிழ்வதற்கு அடிப்படையாக உள்ள நமது கர்மங்களே புருஷார்த்தம் ஆகும். ஆக க்ருஷ்ண காமமே ப்ரதானமாக நம்மிடம் இருக்க வேண்டும். மற்ற மூன்று புருஷார்த்தங்களாகிய அறம் (தர்மம்), பொருள் (தனம்) மற்றும் வீடு (தர்மம் மற்றும் தனம் ஆகியவற்றுக்கு ஏற்ற இடம்) ஆகிய மூன்றும் க்ருஷ்ண காமத்திற்கு அடிமைகளே என்று உரைத்தார் – யார்? வாமனனாக வந்து வசிஷ்டர் போன்ற உயர்ந்தவர்கள் தொடங்கி உள்ள அத்தனை மனிதர்கள், விலங்குகள் ஆகியவற்றின் தலைகளில், வேறுபாடு காணாமல், தனது

திருவடிகளை வைத்து அருளிய த்ரிவிக்ரமன் போன்று – இந்த உலகத்தாரில் ஏற்றத்தாழ்வு பாராமல், அனைவருக்கும் உபதேசித்த எம்பெருமானார் ஆவார்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே எம்பெருமானார் தம்மை ரக்ஷித்தபடியைச் சொல்லி ஹருஷ்டாராய்க் கொண்டு போந்து, இதிலே – அர்த்தித்வ நிரபேக்ஷமாக ஸ்ரீவாமநாவதாரத்திலே "தாள் பரப்பி மண்டாவிய வீசனை" என்கிறபடியே ஸர்வருடையவும் சிரஸ்ஸுக்களிலே ஸ்ரீபாதத்தை வைத்து உபகரித்தாப் போலே, இவரும் அதிகாராநதிகார விபாகமற எல்லார்க்கும் ஸ்வரூபாநுரூபமான அர்த்தத்தை உபகரித்தாரென்று வித்தராகிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் திருவரங்கத்தமுதனாராகிய தன்னை எம்பெருமானார் காப்பாற்றிய விதத்தை உரைத்து மகிழ்ந்து நின்றார். இந்தப் பாசுரத்தில், ஸர்வேச்வரன் தன்னை யாரும் வேண்டி நின்று ப்ரார்த்திக்காதபோதிலும், வாமனாவதாரத்திலே திருவாய்மொழி (3-3-11) – தாள் பரப்பி மண் தாவிய ஈசனை - என்பதற்கு ஏற்ப, அனைவருடைய தலைகளிலும் தனது திருவடிகளை வைத்து உபகாரம் செய்தது போன்று, எம்பெருமானாரும், தகுதி உள்ளவர்கள் மற்றும் தகுதி அற்றவர்கள் என்ற வேறுபாடு காணாமல் அனைவருக்கும் ஆத்மஸ்வரூபத்தின் தன்மையை உபதேசித்தார் என்கிறார்.

வ்யாக்யானம் - (சேமநல்வீடும்) மோக்ஷத்தைக் கொடுக்குமதாய் "தமஸ: பரஸ்தாத்" என்கிறபடியே அப்ராக்ரதமாய், அயோத்த்யை என்றும், அபராஜிதை என்றும் அபராஜிதை என்றும் சொல்லப்படுகிற பரமபதமும். (பொருளும்) அதுக்கங்கமாகவாதல், பரம்பரையாஸாதநமாகவாதல், ஸாதநாநுஷ்டாநத்துக் குடலாகவாதல் விதிக்கப்படுகிற ந்யாயார்ஜித தநமும். (தருமமும்) நித்ய நைமித்திகாதி ரூபமாய் ஆராதநரூபமாய் வர்ணாச்ரம விஹிதமாயிருக்கிற தர்மமும். (சீரிய நற்காமமும்) சாஸ்த்ரங்களிலே ச்லாகிக்கப்பட்டதாய் போக்யமாய் விஹிதமாய் ஸ்வயம் புருஷார்த்தமான காமமும்.

விளக்கம் - (சேமநல்வீடும்) - மோக்ஷத்தை அளிப்பதாகவும், கீதை (8-9) – தமஸ: பரஸ்தாத் – இருளுக்கு அப்பால் உள்ளதான - என்பதற்கு ஏற்ப இந்த உலகியல் பொருள்களால் உண்டாக்கப்படாததாகவும், அயோத்யை மற்றும் அபராஜிதை என்று

போற்றப்படுவதாகவும் உள்ள பரமபதமும். (பொருளும்) - அத்தகைய மோக்ஷத்தினை அடையும் உபாயத்திற்கு அங்கமாக உள்ளதும், அதற்கு ஸாதனமாக உள்ளதும், வேத சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட நியாயமான முறைகளில் சேர்க்கப்பட்டதும் ஆகிய தனமும். (தருமமும்) – நித்யம், நைமித்திகம் என்ற வடிவில் உள்ளதும், பகவத் ஆராதனையாக இயற்றப்படுவதும், அந்தந்த வர்ணாச்ரமங்களுக்கு ஏற்றபடி உள்ளதும் ஆகிய தருமமும். (சீரிய நற்காமமும்) – சாஸ்த்ரங்களில் பெரிதும் கொண்டாடப்படுவதும், இன்பம் அளிப்பதும், விதிக்கப்படுவதும், தானே பலன் என்று உள்ளதும் ஆகிய காமமும்.

வ்யாக்யானம் - (என்றிவை நான்கென்பர்) ஏவம்வித ரூபேண நாலுவகைப்பட்டிருக்கும் புருஷார்த்தமென்று தர்மசாஸ்த்ர ப்ரவர்த்தகரான வ்யாஸபராசராதிகள் சொல்லுவர்கள். "தர்மார்த்த காம மோக்ஷாக்யா: புருஷார்த்தா உதாஹ்ருதா:" என்னக் கடவதிறே. இந்நாலிலும் தர்மார்த்தகாமங்கள் மூன்றும் ப்ராக்ருதங்களுமாய் ஸ்வரூபாநநு ரூபங்களுமாய் இச்சரீரத்தோடே அநுபவிக்கப்படுமவையாயிருக்கும்; துரீய புருஷார்த்தமான மோக்ஷம், சேதநனுக்கு ப்ரக்ருதி விமோசநாநந்தரம் இவன் தேஹாந்தரத்தை பரிக்ரஹித்து தேசவிசேஷத்திலே சென்றநுபவிக்குமது அப்ராக்ருத்மா யிருக்கும்; இது ஸாதநாந்தரபரனுக்கும் ஸ்வப்ரயோஜநமாயிருக்கும்; ஸ்வரூப ஜ்ஞாநமுடைய அதிகாரிக்கு இவையெல்லாம் மாறடியிருக்கும். எங்ஙனேயென்னில் சேதநன் அசித்வத் பரதந்த்ரனாய் தனக்கென்று ஒரு ப்ரயோஜநமுமின்றிக்கே பேறிழவுகள் ஸ்வாமியானவனுக்கே என்று அத்யவஸித்தவனாகையாலே யென்றபடி.

விளக்கம் – இப்படியாகப் புருஷார்த்தம் என்பது நான்குவிதமாக உள்ளது என்று தர்ம சாஸ்த்ரங்களை ப்ரசாரம் செய்யும் வ்யாஸர், பராசரர் போன்றவர்கள் உரைப்பர். ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-18-22) – தர்மார்த்த காம மோக்ஷாக்யா: புருஷார்த்தா உதாஹ்ருதா: - தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய நான்கும் புருஷார்த்தங்கள் என்று கூறப்பட்டுள்ளன – என்றது காண்க. இந்த நான்கில் தர்மம், அர்த்தம், காமம் ஆகிய மூன்றும் இந்த உலகியல் பொருள்களுடன் தொடர்பு கொண்டவையாகவும், ஆத்ம ஸ்வரூபத்திற்கு முரண்பட்டதாகவும், சரீரம் கொண்டு அனுபவிப்பதாகவும் இருப்பதாகும். நான்காவது புருஷார்த்தமான மோக்ஷம் என்பது, சேதநன் ஒருவனுக்கு இந்த உலகத்துடன் உள்ள தொடர்பு நீங்கிய பின்னர், அவன் தன்னுடைய சரீரத்தைக் கைவிட்டு, பரமபதத்தில் சென்று அனுபவிக்கக் கூடியதாகும்; ஆகவே அது உலகியல்

ஸம்பந்தம் அற்றதாகும். மோக்ஷ புருஷார்த்தம் என்பது அல்லாமல் உள்ள மற்ற மூன்று புருஷார்த்தங்களும், மோக்ஷம் அல்லாத மற்றவற்றில் ஈடுபாடு கொண்டவனுக்குத் தாங்களே பலன் அளிப்பதாக உள்ளவை ஆகும். ஆனால் அவை அனைத்தும் ஆத்ம ஸ்வரூபத்தைக் குறித்து நன்கு அறிந்த ஒருவனுக்கு வேறுபட்டதாகவே இருப்பதாகும். எப்படி? பொதுவாகவே சேதநன் எனபவன் அசித் வஸ்துக்களைக் காட்டிலும் வேறுபட்ட வஸ்துவுக்கு வசப்பட்டவனாயும், தனக்காக எந்த ஒரு பலனையும் எதிர்பாராமல் உள்ளவனாயும், பேறு மற்றும் இழப்பு என்றுள்ள அனைத்தும் தனது ஸ்வாமியான ஸர்வேச்வரனுக்கு மட்டுமே என்று உள்ளவனாயும் எண்ணியபடி உள்ளதால் ஆகும்.

வ்யாக்யானம் - (நான்கினும்) நாலிலுமென்றபடி. புருஷார்த்தமான நாலிலும் வைத்துக் கொண்டு. (கண்ணனுக்கேயாமது காமம்) "ந காம கலுஷம் சித்தம் மமதே பாதயோஸ்ஸ்திதம், காமயே வைஷ்ணவத்வந்து ஸர்வ ஜந்மஸு கேவலம்" என்றும், "ந தேவலோகா க்ரமணம் ந அமரத்வமஹம் வ்ருணே ஐச்வர்யம் வாபி லோகாநாம் காமயே ந த்வயா விநா" என்றும், "காம க்ரோத நிருணாம் லோகே நிரயத்யேவ காரணம் ஹரிம் ஸமேத்ய தாமேவ முக்த்யே கோபீ ஸுரத்விஷம்" என்றும், "ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோ அத்யர்தம் அஹம் ஸ ச மம ப்ரிய:" என்றும், "யா ப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ த்வாமநுச்மரத: ஸா மே ஹ்ருதயாந்மா அபஸர்ப்பது" என்றும், "ஸ்வாமித்வம் ப்ரார்த்த நாஞ்ச" என்றும் சொல்லுகிறபடியே, வகுத்த சேஷியாய் ஸுலபனான ஸர்வேச்வரனுடைய ஸம்ச்லேஷத்தை யபேக்ஷிக்கும்படியான காமம் ப்ரதாந புருஷார்த்தமாயிருக்கும்; அதிலே ஸ்வார்த்ததையாகிற அஹங்காரத்தைத் தவிர்த்து அவனுடைய முகமலர்த்தியை உத்தேசித்துப் பண்ணும் பகவத் ஸம்ச்லேஷமே ப்ரதாந புருஷார்த்தமென்றபடி.

விளக்கம் - (நான்கினும்) - இந்த நான்கு புருஷார்த்தங்களில். (கண்ணனுக்கேயாமது காமம்) - ருக்வேதகிலமாகிய ஜிதந்தா – ந காம கலுஷம் சித்தம் மமதே பாதயோஸ்ஸ்திதம், காமயே வைஷ்ணவத்வந்து ஸர்வ ஜந்மஸு கேவலம் - எந்தவிதமான காரணமும் இன்றி எஜமானனாகவும், எல்லையற்ற இனிமையும் கொண்ட உன்னுடைய திருவடிகளில் மட்டுமே நிலையாக நிற்கின்ற எனது நெஞ்சமானது ஸ்ரீவைகுண்டம் உள்ளிட்ட மற்றொரு புருஷார்த்தம் அவசியம் என்று இல்லாமல், தாங்களாகவே புருஷார்த்தமாக உள்ள திவ்யதேசங்களை எண்ணிக் கலங்கியபடி இருப்பதில்லை; அனைத்துப்

பிறவிகளிலும் உனக்கு மட்டுமே கைங்கர்யம் செய்தபடி இருத்தல் என்ற இன்பமான அடிமை நிலையை மட்டுமே எண்ணியபடி உள்ளது - என்பதாகும் [இதன் மூலம் நமது மகிழ்விற்காகக் கிட்டும் பரமபதம் கூட அஹங்காரத்தின் அடிப்படை என்கிறார்] - என்றும், இராமாயணம் அயோத்யாகாண்டம் (31-5) – (லக்ஷ்மணன் இராமனிடம்) ந தேவலோகாக்ரமணம் ந அமரத்வமஹம் வ்ருணே ஐச்வர்யம் வாபி லோகாநாம் காமயே ந த்வயா விநா – வானவர்களுடைய நாடான பரமபதச் செல்வத்தையும், இறவாமை என்னும் கைவல்ய மோக்ஷத்தையும், இந்த உலகில் உள்ள ஐச்வர்யங்களையும் நீ இல்லாவிடில் நான் வேண்டேன் – என்றும், கீதை (7-17) – ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோ அத்யர்தம் அஹம் ஸ ச மம ப்ரிய: - என்னை அறிகின்ற ஞானிக்கு நான் ப்ரியமானவன், அவனும் எனக்கு மிகவும் ப்ரியமானவன் – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-20-19) - யா ப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ த்வாமநுச்மரத: ஸா மே ஹ்ருதயாந்மா அபஸர்ப்பது – ப்ரஹ்லாதன் ஸர்வேச்வரனிடம், “பகுத்தறிவு இல்லாதவர்களுக்கு உலகப்பொருட்களில் உள்ள பற்று போன்று, எனக்கு உன்னிடம் தடையில்லாத பற்று உண்டாகவேண்டும்”, என்றான் – என்றும், அஷ்டச்லோகி (5) - ஸ்வாமித்வம் ப்ரார்த்த நாஞ்ச – என்றும் கூறுவதற்கு ஏற்ப நமக்கு இயல்பான எஜமானனாயும், மிகவும் சுலபமாக அடையத்தக்கவனாயும் உள்ள ஸர்வேச்வரனுடைய சேர்க்கை என்பதை எப்போதும் விரும்பும்படியாக உள்ள காமம் என்பது முதன்மையான புருஷார்த்தமாக உள்ளது. ஆனால் “நான் விரும்புகிறேன்” என்றுள்ள சிந்தனை அதில் அஹங்காரத்தை எற்படுத்தும் என்பதால் அத்தகைய எண்ணத்தைத் தவிர்த்து , ஸர்வேச்வரனுடைய திருமுக மலர்ச்சியைக் கருத்தில் கொண்டு விரும்புகின்ற பகவத் சேர்க்கை என்பதே முதன்மையான புருஷார்த்தமாகும்.

வ்யாக்யானம் – “கண்ணனுக்கே” என்கிற அவதாரணத்தாலே, “தனக்கேயாக வெனைக் கொள்ளும்” என்றும், “உற்றோமேயாவோ முனக்கே நாமாட் செய்வோம் மற்றநங் காமங்கள் மாற்று” என்கிறபடியே அத்யவஸிக்க வேணுமென்றபடி. ஆக இந்த அதிகாரிக்கு பகவத்காமமே ப்ரதாந புருஷார்த்தமாயிருக்கும். “காம ஏவார்த்த தர்மாப்யாம் கரீயா நிதி மே மதி:” என்று பெருமாள் சொன்னது நிந்தாஸ்துதியாகையாலே விருத்த காமத்தை கர்ஹித்ததித்தனை. “அர்த்த தர்மௌ பரித்யஜ்ய ய: காமமநுவர்த்ததே ஏவமாபத்யதே க்ஷிப்ரம் ராஜா தசரதோ யதா” என்று அடைவே இவ்வர்த்தத்தைச் சொன்னாரிறே.

விளக்கம் - (கண்ணனுக்கே) - "கண்ணனுக்கே" என்ற பதத்தில் உள்ள "அவனுக்காக மட்டுமே" என்ற பொருள் தருவதான ஏவகாரம் என்பது, திருவாய்மொழி (2-9-4) - தனக்கேயாக வெனைக் கொள்ளும் – என்றும், திருப்பாவை (29) – உற்றோமே யாவோம் உனக்கே நாமாட் செய்வோம் மற்றநங்காமங்கள் மாற்று - என்றும் கூறுவதற்கு ஏற்ப பொருள் தருவதாகும். ஆகவே இந்த அதிகாரிக்கு ஸர்வேச்வரனுடைய விருப்பம் என்பதே முதன்மையான புருஷார்த்தமாக இருக்கும். இராமாயணம் அயோத்யாகாண்டம் (53-9) – காம ஏவார்த்த தர்மாப்யாம் கரீயா நிதி மே மதி: - (இராமன் உரைப்பது) அர்த்தம், தர்மம் ஆகியவற்றைக் காட்டிலும் காமம் வலுவாக உள்ளது என்று என்னால் சிந்திக்காமல் இருக்க இயலவில்லை - என்று இராமன் உரைத்தது நிந்தனை செய்யும்விதத்தில் உள்ளதால், முரண்பட்ட காமத்தை நிந்திக்கிறார். இராமாயணம் அயோத்யாகாண்டம் (53-13) – அர்த்த தர்மௌ பரித்யஜ்ய ய: காமமநுவர்த்ததே ஏவமாபத்யதே க்ஷிப்ரம் ராஜா தசரதோ யதா – அர்த்தம் மற்றும் தர்மம் ஆகியவறைக் கைவிட்டு, காமத்தை மட்டுமே கைக்கொள்ளுபவர்கள் தசரத சக்ரவர்த்தி போன்றே அழிவர் – என்று இந்தக் கருத்தை இராமன் முழுவதுமாக உரைத்தது காண்க.

வ்யாக்யானம் - (அறம் பொருள் வீடிதற்கென்றுரைத்தான்) அறம் - விசேஷ தர்மம். "குணைர்த் தாஸ்யமுபாகத:", "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி", "உனக்கே நாமாட் செய்வோம்" என்கிறபடியே ஸம்மார்ஜநோபலாபநபவநநந்த நாத்யௌபசாரிக ஸாம்ஸ்பர்சிகங்க ளாகிற அசேஷ வ்ருத்திகளுமென்றபடி. (பொருள்) தாஸ்யத்துக்கு உபயுக்தமாய் அமுதுபடி சாத்துப்படி முதலானவற்றுக்கு ஸாதநமாயிருக்கிற அர்த்தம். (வீடு) தர்மார்த்தங்களை ஸம்பாதிக்கைக்குத் தகுதியாய் அவற்றினுடைய அபிவ்ருத்திக்குடலான ப்ராப்ய தேசம். (இதற்கென்று) காம சப்த வாச்யமான இந்த பகவத் ஸம்ச்லேஷ ரூப ப்ராதாந புருஷார்த்தத்துக்கு ஸஹகாரியாய் சேஷமாயிருக்குமித்தனை யென்று. (இந்த மண் மிசையே) ஒரு தேசவிசேஷத்திலே யன்றிக்கே, பரித்ருச்யமாநமாய் எல்லார்க்கும் அஜ்ஞாநத்தை விளைக்குமதான இந்த மஹாப்ருதிவியிலேதானே. (வாமநன் சீலன்) இத்தலையில் அர்த்தித்வாதி நிரபேக்ஷமாகத் தாமே வந்து உபகரிக்கைக்கு ஸ்ரீவாமந துல்ய சீலரான. (இராமாநுசன்) எம்பெருமானார். (உரைத்தான்) ஒரு தேசவிசேஷத்தே பெறவேண்டி யிருக்குமதான இவ்வர்த்தத்தை இங்கே தானே யருளிச்செய்தார்.

விளக்கம் - (அறம் பொருள் வீடிதற்கென்றுரைத்தான்) - அறம் = விசேஷமான தர்மம். இராமாயணம் – குணைர் தாஸ்யமுபாகத – (லக்ஷ்மணன் உரைப்பது) இராமனின் குணங்களுக்குத் தோற்று அடிமையானேன் – என்றும், இராமாயணம் அயோத்யாகாண்டம் (58-31) – அஹம் ஸர்வம் கரிஷ்யாமி – (லக்ஷ்மணன் இராமனிடம்) உனக்கு நான் அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்வேன் - என்றும், திருப்பாவை (29) – உனக்கே நாமாட் செய்வோம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அவன் எழுந்தருளியுள்ள திருக்கோயிலைப் பெருக்குதல், மெழுகுதல் அல்லது விளக்கேற்றுதல் மாலை கட்டுதல் என்பதான பலவிதமான உபசாரங்களைச் செய்தபடி. (பொருள்) – அந்தக் கைங்கர்யங்களுக்கு வேண்டியவையாக உள்ள தளிகை, அலங்காரங்கள் போன்றவற்றுக்குத் தேவையான பொருள். (வீடு) – தர்மம், அர்த்தம் ஆகியவற்றை ஈட்டுவதற்குத் தகுதியாக அவற்றை மேன்மேலும் வளர்க்க அவசியமான இடம் ஆகியவை. (இதற்கு என்று) - “காமம்” என்ற பதத்தின் மூலம் கூறப்படுவதான “பகவானுடன் சேர்க்கை” என்னும் முதன்மையான புருஷார்த்தத்திற்குத் துணையாகவும் அடங்கி உள்ளதுமாகவும் உள்ளன என்று. (இந்த மண் மிசையே) - “இந்த இடம்” என்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே அல்லாமல் அனைவராலும் காணும்படியாக, அனைவருக்கும் ஒரே போன்று அறியாமையை உண்டாக்குகின்ற இந்தப் பெரிய பூமியில். (வாமநன் சீலன்) உள்ளவர்கள் வேண்டி நிற்கவேண்டிய அவசியம் இன்றி தானாகவே வந்து உபகாரம் செய்த வாமனாவதாரத்திற்கு ஒப்பான சீல குணம் கொண்டவரான. (இராமாநுசன்) – எம்பெருமானார். (உரைத்தான்) - ஒரு குறிப்பிட்ட இடமான பரமபதத்திற்கு சென்ற பின்னரே அறியப்படுவதான இந்த உண்மையை, இங்கேயே அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் – (வாமநன் சீலன்) ஸ்ரீவாமநாவதாரத்திலே அர்த்தித்வாதி நிரபேக்ஷமாகத் தானே வசிஷ்ட்ட சண்டாளாதி விபாகமற ஸர்வருடையவும் தலைகளிலே, “நல்லடிப்போது” என்னும்படியான ஸ்ரீபாதத்தை வைத்தாப்போலே “நிதித்யாஸிதவ்ய:” இத்யாதி வேதாந்த சாஸ்த்ர விஹிதமாய், “மஹநீய விஷயே ப்ரீதிர்ப்பக்தி:” என்கிறபடியே பக்திரூபமான இந்த பகவத்காமத்தை ஸ்ரீபாஷ்யமுகேந அருளிச்செய்தாராகையாலும், லோகத்தா ரெல்லார்க்கும் பகவத் ஸம்ச்லேஷ ரஸம் பிறக்கும்படி அவருடைய

அதிகாராநதிகாரங்களைப் பாராதே உபதேசித்தாராகையாலும், அவனுடைய ஸ்வபாவமே இவர்க்கும் ஸ்வபாவமாய் அவனோடு துல்யரானாரென்றதாய்த்து.

விளக்கம் - (வாமநன் சீலன்) - வாமன அவதாரத்தில் வேண்டி நிற்கவேண்டிய அவசியம் இன்றி, ஸர்வேச்வரன் தானாகவே வலிய வந்து வசிஷ்ட முனிவர் மற்றும் வேறு சிலர் என்றுள்ள வேறுபாடு ஆராயாமல், அனைவருடைய தலைகளிலும், அடைக்கலப்பத்து (4) - நல்லடிப்போது - என்பதற்கு ஏற்ப உள்ள திருவடியை வைத்தது போன்று, ப்ருஹத் உபநிஷத் – நிதித்யாஸிதவ்ய: - எப்போதும் மனதால் சிந்திக்கப்படவேண்டும் - என்பது போன்று வேதாந்த சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டதும், மஹநீய விஷயே ப்ரீதிர்ப்பக்தி: - என்பதற்கு ஏற்ப பக்திரூபமானதும் ஆகிய பகவத்விஷயம் குறித்த காமம் என்பதை ஸ்ரீபாஷ்யம் மூலம் அருளிச்செய்தார். மேலும் உலகத்தில் உள்ள அனைவருக்கும் பகவானுடனான சேர்க்கையில் உள்ள இன்பம் மூலம் பெறப்படும் ரஸம் ஏற்படும்படி அவர்களுடைய தகுதி மற்றும் தகுதி இன்மை ஆகியவற்றை ஆராயாமல் உபதேசித்தார். ஆகவே ஸர்வேச்வரனுடைய, அதாவது வாமன அவதாரத்தின் தன்மையே இவருக்கும் தன்மையாக உள்ளதால், இவர் அவனோடு ஒத்தவர் என்றானது.

41. மண்மிசை யோனிகள்தோறும் பிறந்து எங்கள் மாதவனே
கண்ணுற நிற்கிலும் காணகில்லா உலகோர்கள் எல்லாம்
அண்ணல் இராமானுசன் வந்து தோன்றிய அப்பொழுதே
நண்ணருஞானம் தலைக் கொண்டு நாரணற்கு ஆயினரே.

விளக்கவுரை – மாறிமாறிப் பல பிறவிகள் எடுக்கும் மனிதர்கள் போன்று மனிதன், விலங்கு என்ற பல ரூபங்களில் இராமனாகவும், கண்ணனாகவும் எம்பெருமான் அவதரித்தான். “அகலகில்லேன் இறையும்” எனத் தன்னைவிட்டுப் பிரியாத பெரியபிராட்டியுடன்வன் எப்போதும், எங்கும், அனைவரின் கண்களில் புலப்படும்படி நின்றாலும் – இந்த உலக மக்கள் செய்வது என்ன? இவனே நமக்கு ஏற்ற எஜமானன் என்று அறியாமல் உள்ளனர், அறியாமல் இருந்தனர். ஆனால் இந்த உலகைக் காப்பாற்றுவதற்காக, பரமபதத்தில் இருந்து, நம் மீது கொண்ட கருணை காரணமாக, இந்தப் பூமியில் எம்பெருமானார் திருஅவதாரம் செய்தார். இதனால் நிகழ்ந்தது என்ன? இந்த உலகில் உள்ள மக்கள் பலரும், தங்களில் இயல்பான ஞானம் பெற்று,

அனைவருக்கும் பந்துவாக உள்ளவனும், அனைவரின் அந்தர்யாமியாக உள்ளவனும் ஆகிய ஸ்ரீமந் நாராயணனுக்கு அடிமைகள் ஆனார்கள்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே எம்பெருமானார் பண்ணின உபதேச வைபவத்தைச் சொல்லி, இப்பாட்டிலே பூலோகத்திலே ப்ரக்ருதி பரவசராயிருக்கிற சேதநரை ரக்ஷிக்கைக்காக ஸர்வேச்வரன் மநுஷ்ய திர்யகாத்யநேந தேஹ பரிக்ரஹம் பண்ணி எல்லார்க்கும் ஸுலபனாய்க் கண்ணுக்கிலக்காய் நின்றாலும், இவன் ஸாது பரித்ராணார்த்தமாக அவதரித்தவனென்று அறியமாட்டாத லௌகிகர்களே! நமக்கு பிதாவான வெம்பொருமானார் அவதரித்த பின்பு அவர் ப்ரஸாதத்தாலே ஸம்யக் ஜ்ஞாந நிஷ்டராய், நாராயணனே தங்களுக்கு ஸர்வப்ரகாரத்தாலும் வகுத்த சேஷியென்று தெளிந்து அவனுக்குத் தங்களை சேஷமாக்கி வைத்தார்களென்று அருளிச்செய்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் எம்பெருமானார் செய்தருளிய உபதேசத்தின் வைபவத்தை அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில் - இந்தப் பூமியில் உலகியல் பொருள்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ள சேதநர்களைக் காப்பாற்றுவதற்காக ஸர்வேச்வரன் மனிதனாகவும், விலங்காகவும் என்று பல சரீரங்களில் அவதரித்து, அனைவருடைய கண்களிலும் புலப்படும்படியாகச் சுலபனாக நின்றான். ஆனாலும் அவன் சாதுக்களைக் காப்பாற்றுவதற்காகவே இவ்விதம் அவதரித்தான் என்று உணராமல் மனிதர்கள் இருந்தார்கள். ஆனால் நம்முடைய பிதாவான எம்பெருமானார் அவதரித்த பின்னர், அவருடைய கருணை காரணமாக அனைவரும் பூர்ணமான ஞானம் அடைந்தவர்களாக, நாராயணனே அனைத்துவிதங்களிலும் தங்களுக்கு இயல்பான எஜமானன் என்று தெளிந்தவர்களாக, அவனுக்கே தங்களை அடிமை என்று ஆக்கிக் கொண்டனர் – என்கிறார்.

வ்யாக்யானம் – (மண்மிசை யோநிகள்தோறும் பிறந்து) "மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்த" விச்சேதநரைப்போலே, "எந்நின்ற யோநியுமாய்ப் பிறந்தாய்" என்கிறபடியே, மநுஷ்ய திர்யக் ஸ்தாவர ரூபங்களான பல யோநிகள்தோறும் ராம க்ருஷ்ண வராஹாதி ரூபேண வவதரித்து. (எங்கள் மாதவனே) இத்தனை நிஹீநமான யோநிகளிலே புக்கது உங்களுடைய இழவைக் காணமாட்டாத பரமக்ருபையாலேயிறே. உங்களை ரக்ஷிக்கைக்காக வென்றபடி. (மாதவனே) க்ருபா குணத்துக்கு உத்தம்பகை

பெரியபிராட்டியா ராகையாலே அவளுடைய சேர்த்தியை ஸ்மரிக்கிறார். "லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா ரக்ஷக: ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே" என்று ஈச்வரனுடைய ரக்ஷணமெல்லாம் பெரியபிராட்டியாரோடே கூடி ஆசரிக்கப்படுகிறதாகையாலும், அவளும் இந்த சேதநருடைய ரக்ஷணத்துக்காகவே, "அகிலகில்லேன் இறையும்" என்று ஸர்வதா அநபாயிநியா யிருக்கையாலும் அத்தைப் பற்றி, "மாதவன்" என்றருளிச் செய்கிறார்.

விளக்கம் - (மண்மிசை யோநிகள்தோறும் பிறந்து) - திருவாய்மொழி (2-6-8) – மாறி மாறி பல பிறப்பும் பிறந்து - என்பதற்கு ஏற்ப பல பிறவிகள் எடுத்த இந்தச் சேதநர்கள் போன்றே, திருவிருத்தம் (1) - எந்நின்ற யோநியுமாய்ப் பிறந்தாய் – என்பதற்கு ஏற்ப மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் என்றுள்ளபடி பல பிறவிகளில் இராமன், க்ருஷ்ணன், வராகம் என்று பலவாக அவதாரம் செய்து. (எங்கள் மாதவனே) - இந்த அளவிற்குத் தாழ்ந்த பிறவிகள் எடுத்து அவன் வந்தது என்பது, நாம் அவனை இழந்து நிற்கிறோம் என்று நிலையைப் பொறுக்க முடியாமல் வெளிப்பட்ட பரமகருணை காரணமாகவே அல்லவோ? இப்படியாக உள்ள உங்களைக் காப்பாற்றுவதற்காகவே ஆகும். (மாதவனே) இவ்விதம் உள்ள அவனுடைய க்ருபைக்குத் தூண்டுதலாக உள்ளவள் பெரியபிராட்டி என்பதால், அவளுடைய சேர்த்தியை எண்ணுகிறார். லக்ஷ்மீ தந்த்ரம் (28-14) - லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா ரக்ஷக: ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேபி ச கீயதே - கருணையே வடிவம் எடுத்தாற்போன்று இருக்கின்ற லக்ஷ்மியுடன் இருந்தபடியே ஸர்வேச்வரன் அனைத்தையும் ரக்ஷிக்கிறான் என அனைத்து ஸித்தாந்தங்களும் வேதாந்தங்களும் உரைக்கின்றன - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய காக்கும் செயல்கள் அனைத்தும் அவன் பெரியபிராட்டியாருடன் சேர்ந்து நின்றே செய்வதாலும், அவளும் சேதநர்களைக் காப்பாற்றுவதற்காகவே திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் இறையும் - என்று எப்போதும் அவனை விட்டு அகலாமல் உள்ளதாலும், இதனைக் குறிப்பதற்காகவே "மாதவனே" என்கிறார்.

வ்யாக்யானம் - அந்த ஸ்ரீயாலே யிட்டு கார்யங் கொள்ளுகை யன்றிக்கே நேர்கொடுநேரே தானே. (கண்ணுற நிற்கிலும்) "எதிர்சூழல் புக்கெனைத்தோர் பிறப்பும்" என்கிறபடியே ஸர்வகாலத்திலும் ஸர்வதேசத்திலும் ஸர்வப்ரத்தாலும் ஸர்வருடையவும் கண்ணுக்கு தன்னை விஷயமாக்கிக் கொண்டு நிற்கிலும். "அபயம் ஸர்வபூதேப்யோ ததாம் ஏதத்

வ்ரதம்" என்றும், "மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு" என்றும், "மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோஸி மே" என்றும், "அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:" என்றும், "அஹம் ஸ்மராமி மத் பக்தம் நயாமி பரமாம் கதிம்" என்றும் இப்படி உபதேசித்து, "படாதனபட்டு" தூத்ய ஸாரத்யங்களைப் பண்ணினாலும்.

விளக்கம் - அத்தகைய லக்ஷ்மீ ஸம்பந்தத்தால் கார்யம் கொள்ளுகை அல்லாமல், நேரடியாக ஸர்வேச்வரன் தானாகவே. (கண்ணுற நிற்கிலும்) - திருவாய்மொழி (2-7-6) – எதிர்சூழல் புக்கெனைத்தோர் பிறப்பும் - என்பதற்கு ஏற்ப அனைத்து காலத்திலும், அனைத்து இடத்திலும், அனைத்து விதத்திலும், அனைவருடைய கண்களிலும் புலப்படும்படியாக ஸர்வேச்வரன் நின்றபோதிலும், இராமாயணம் யுத்தகாண்டம் – (இராமன் உரைப்பது) அபயம் ஸர்வபூதேப்யோ ததாம் ஏதத் வ்ரதம் – அபயம் என்று என்னை அண்டினாலும் அவர்களைக் காப்பது எனது விரதமாகும் – என்றும், கீதை (9-34) - *மந்மநா* பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு – என்னிடம் மனதை நிலை நிறுத்தி, எனது பக்தனாகி, என்னை வணங்குவாயாக – என்றும், கீதை (18-65) - மாமேவைஷ்யஸி ஸத்யம் தே ப்ரதிஜாநே ப்ரியோஸி மே – இதனால் நீ என்னையே அடைவாய் என்பது உண்மையாகும், காரணம் நீ எனக்கு ப்ரியமானவன் ஆவாய் – என்றும், கீதை (18-66) – அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச: - உன்னை நான் அனைத்து பாவங்களிலிருந்தும் விடுவிக்கிறேன், கவலை கொள்ளாதே – என்றும், வராஹ சரமச்லோகம் – அஹம் ஸ்மராமி மத் பக்தம் நயாமி பரமாம் கதிம் – எனது பக்தனுடைய இறுதி நேரத்தில் நான் அவனை நினைக்கிறேன், அவனை உயர்ந்த கதிக்கு இட்டுச் செல்வேன் – என்றும் பலவிதமான உபதேசங்கள் செய்தும், திருவாய்மொழி (7-5-2) - படாதனபட்டு - என்பதற்கு ஏற்ப தூது செல்லுதல், தேர் ஓட்டுதல் என்று பல செயல்களைத் தனித்து நின்று செய்தாலும்.

வ்யாக்யானம் - (காணகில்லா) "அவஜாநந்தி மாம் மூடா மாநுஷீம் தநுமாச்ரிதம் பரம் பாவமஜாநந்தோ மம பூத மஹேச்வரம்" என்கிறபடியே, இவன் நமக்கு வகுத்த சேஷியென்று அறியமாட்டாதே. "ந மாம்ஸ க்ஷுரபிவீக்ஷதே தம்" என்னும்படியான அவனுடைய ஸ்வரூபம் அவதரித்தவிடத்திலும் அப்படியேயாய் தலைக்கட்டிற்றுக்காணும்.

"ந து மாம் சக்யஸே த்ரஷ்டும் அநேநைவ ஸ்வசக்ஷுஷா - நாஹம் வேதைர்ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா சக்ய ஏவம் விதோ த்ரஷ்டும்" என்று அவதாரத்திலும் அவன் படி அருளிச் செய்தாரிறே. "கண்கள் காண்டற்கரியனாய்" என்றாரிறே ஆழ்வாரும். இப்படி நேர்கொடுநேரே உபதேசித்தாலும் திருந்தாதே போன.

விளக்கம் – (காணகில்லா) - கீதை (9-11) – அவஜாநந்தி மாம் மூடா மாநுஷீம் தநுமாச்ரிதம் பரம் பாவமஜாநந்தோ மம பூத மஹேச்வரம் – என்னுடைய மேலான இயல்பை அறியாத அறிவற்றவர்களான இவர்கள், சரீரத்துடன் கூடிய அனைத்திற்கும் தலைவனாக உள்ள என்னை அற்பமாக எண்ணுகிறார்கள் - என்பதற்கு ஏற்ப, நமக்கு இயற்கையாகவே அமைந்துள்ள எஜமானன் இவனே ஆவான் என்று உணராமல். ருக் வேதம் - ந மாம்ஸ சக்ஷுரபிவீக்ஷதே தம் - அந்த எம்பெருமானை மாம்ஸக்கண் காணாது - என்பதற்கு ஏற்ப உள்ள அவனுடைய ஸ்வருபம் என்பது அவன் அவதரித்த இடத்தில் கூட அப்படியே ஆனது. கீதை (11-8) – ந து மாம் சக்யஸே த்ரஷ்டும் அநேநைவ ஸ்வசக்ஷுஷா – நீ உன்னுடைய இந்த மாமிசக்கண்கள் கொண்டு என்னைக் காண இயலாது – என்றும், கீதை (10-53) – நாஹம் வேதைர்ந தபஸா ந தாநேந ந சேஜ்யயா சக்ய ஏவம் விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம் யதா – என்னை நீ எவ்விதம் பார்த்தாயோ, அவ்விதமாக உள்ள நான் வேதங்களைக் கற்பதால் காணப்பட முடியாதவன்; தவங்களால் காணப்பட இயலாதவன், தானத்தாலோ யாகத்தாலோ காணப்பட முடியாதவன் – என்றும் அவன் தனது நிலையை அருளிச்செய்தமை காண்க. திருவாய்மொழி (3-6-11) – கண்கள் காண்டற்கு அரியனாய் – என்று ஆழ்வாரும் உரைத்தார். ஆக இவ்விதம் நேருக்குநேர் அவன் வந்து நின்று உபதேசித்தாலும் திருந்தாமல் போன.

வ்யாக்யானம் - (உலகோர்களெல்லாம்) லௌகிகரெல்லாரும். (அண்ணல்) "ஸ ஹி வித்யாஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்டம் ஜந்ம" என்கிறபடியே அச்ரேஷ்டமாயிருக்கிற ஜந்ம ப்ரத்வம்ஸி ஜந்மத்தைக் கொடுத்திருக்கிற. அன்றிக்கே, ஸ்வாச்ரிதருடைய இழவு பேறுகள் தம்மாதாம்படியான ஸ்வாமித்வ ப்ராப்தியை யுடையரான, (இராமாநுசன்) எம்பெருமானார். (வந்து) லோகத்தையெல்லாம் ரக்ஷிக்கைக்காக பரமபதத்தில் நின்றும் தீக்ஷிதராய் வந்து. (தோன்றிய வப்பொழுதே) அவதரித்தவக்காலத்திலே. அன்றிக்கே

(வந்து தோன்றிய வப்பொழுதே) அவதரித்து ஸ்ரீபாஷ்யகரணாதிகளாலே தத்வஹித புருஷார்த்த ப்ரகாசகரான அக்காலத்திலே யென்றுமாம். தோன்றுதல் - ப்ரகாசித்தல்.

விளக்கம் - (உலகோர்களெல்லாம்) - உலகில் உள்ள அனைவரும். (அண்ணல்) - ஆபஸ்தம்ப தர்ம ஸூத்ரம் - ஸ ஹி வித்யாஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்டம் ஜந்ம – (குருவானவர்) கல்வி மூலம் சிஷ்யனுக்குப் புதிய பிறவியை அளிக்கிறார் – என்பதற்கு ஏற்ப உயர்த்தி இல்லாத பிறவியை உயர்த்தியுள்ள. அல்லது அவனுடைய அடியார்கள் இழந்த நிலை என்பது தன்னுடைய இழப்பே ஆகும் என்று எண்ணும்படியான எஜமான நிலையைக் கொண்டவராகிய. (இராமாநுசன்) - எம்பெருமானார். (வந்து) - அனைத்து லோகங்களையும் காப்பதற்காகப் பரமபதத்திலிருந்து ஸங்கல்பம் செய்து அவதரித்து. (தோன்றிய வப்பொழுதே) - அவதரித்த அந்த நேரத்திலேயே. அல்லது, (வந்து தோன்றிய வப்பொழுதே) - அவதாரம் செய்து ஸ்ரீபாஷ்யம் போன்றவை மூலம் உண்மை, நன்மை ஆகியவற்றைக் கொண்ட புருஷார்த்தங்களை வெளிப்படுத்திய அந்தக் காலத்தில்.

வ்யாக்யானம் - (நண்ணரு ஞானந்தலைக் கொண்டு) ஜ்ஞாநம் தலைக்கொள்ளுகையாவது - ஜ்ஞாநமதிசயிக்கை. ஸர்வவிலக்ஷணமய் ஸ்வயத்நத்தாலே ப்ராபிக்கைவரிதான ஸம்பந்த ஜ்ஞாநமதிசயித்தென்றபடி. (நாரணற்காயினரே) "மாதா பிதா ப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருத்" என்றும், "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாய்த் தாய்தந்தையும் அவரே" என்றுஞ் சொல்லுகிறபடியே ஸர்வவித பந்துவாய். "அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய" என்றும், "கரந்தெங்கும் பரந்துளன்" என்றும் சொல்லுகிறபடியே அந்தர்ப்பஹிச்ச வ்யாபகனாய், "யஸ்யாத்மா சரீரம்", "ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏக:" என்றும், "தானோருருவே தனிவித்தாய்த் தன்னில் மூவர் முதலாய வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றுமாய்" என்றுஞ் சொல்லுகிறபடியே ஸகலசேதநாசேதநங்களும் ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாகக் கொண்டிருக்கிற நாராயணனுக்கே சேஷபூதரானார்கள். திருமந்த்ர த்வய நிஷ்டர்களானார்க ளென்றதாய்த்து.

விளக்கம் - (நண்ணரு ஞானந்தலைக் கொண்டு) - ஞானம் தலைக்கொள்ளுகை என்றால் ஞானம் ப்ரகாசித்து வெளிப்படுதல். அனைத்திலும் மேம்பட்டதாக, அறியாமையில்

மூழ்கிக் கிடந்த காரணத்தால் தானாகவே வெளிப்பட அரிதாக உள்ளதான அவனுடைய ஸம்பந்தம் என்ற ஞானம் வெளிப்பட்டது என்று கருத்து. (நாரணற்காயினரே) – மாதா பிதா ப்ராதா நிவாஸச் சரணம் ஸுஹ்ருத் – தாய், தந்தை, சகோதரன், வாழும் இடம், சரணம் புகும் இடம், நண்பன் என்று அனைத்தும் அவனே - என்றும், திருவாய்மொழி (5-1-8) – சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாய்த் தாய்தந்தையும் அவரே – என்றும் கூறுவதற்காக ஏற்ப அனைத்துவிதமான உறவினனாகவும். நாராயணஸூக்தம் – அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய – உள்ளும் புறமும் என்று அனைத்திலும் வ்யாபித்து – என்றும், திருவாய்மொழி (1-1-10) – கரந்தெங்கும் பரந்துளன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ளும் புறமும் என எங்கும் பரவி உள்ளவனாகவும். யஸ்யாத்மா சரீரம் – யாருக்கு இந்த ஆத்மா சரீரமோ - என்றும், ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ தேவ ஏக: நாராயண: - அனைத்திலும் அந்தர்யாமியாகவும், தோஷங்கள் அற்றவனும், தேவர்களுக்கும் தேவனும் ஆகியவன் நாராயணனே ஆவான் - என்றும், திருவாய்மொழி (1-5-4) – தானோருருவே தனிவித்தாய்த் தன்னில் மூவர் முதலாய வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றுமாய் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து சேதநர்கள் மற்றும் அசேதநங்களைத் தனது சரீரமாகக் கொண்டவனாகவும், தான் அவற்றின் ஆத்மாவாக உள்ளவனாகவும் உள்ள நாராயணனுக்கு மட்டுமே அடிமை என்று ஆனார்கள். அதாவது திருமந்த்ரம், த்வயம் ஆகியவற்றை எப்போதும் உச்சரித்தபடி நின்றனர் என்று கருத்து.

42. ஆயிழையார் கொங்கை தங்கும் அக்காதல் அளறு அழுந்தி
மாயும் என்னாவியை வந்து எடுத்தான் இன்று மாமலராள்
நாயகன் எல்லா உயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும்
தூயவன் தீது இல் இராமானுசன் தொல் அருள் சுரந்தே.

விளக்கவுரை – தங்கள் உடலில் உள்ள குற்றம் குறைகள் தெரியாதபடி மறைத்து உடை மற்றும் ஆபரணங்கள் அணிந்த பெண்களின் ஸ்தனங்களில் எனது ஆத்மாவை ஈடுபடுத்தியபடியே இருந்தேன். அப்போது எம்பெருமானார் செய்தது என்னவெனில் – அனைத்து மலர்களிலும் உயர்ந்த தமர் மலரில் வாசம் செய்யும் பெரியபிராட்டியின் நாயகனாக உள்ளவனும், திருவரங்க மாநகரில் கண்வளர்பவனும் ஆகிய பெரியபெருமாளே அனைத்து உயிர்களின் எஜமானன் என்று உபதேசம் செய்தார்.

இப்படிப்பட்ட உபதேசம் செய்தவரும், தோஷங்கள் அற்றவரும், தூய்மையானவரும் ஆகிய எம்பெருமானார், இந்த உலகிற்கு வந்து அவருடைய இயல்பான கருணையை அனைவருக்கும் சுரந்தார்.

அவதாரிகை - கீழில்பாட்டிலே ஈச்வரனவதரித்து உபதேசித்தவிடத்திலும் திருந்தாத லௌகிகர், எம்பெருமானா ரவதரித்த பின்பு திருந்தி விலக்ஷணராய் பகவததீயரானார்க ளென்கிறார். இப்பாட்டிலே, ஆபாதரமணீய வேஷைகளான தருணீ ஜநங்களுடைய ஸ்தநங்களிலே பத்தமான ப்ரீதியாலே ஆழங்கால்பட்டு நசித்து போகிற என்னாத்மாவை ஸ்ரீய:பதியான திருவரங்கச்செல்வனாரே ஸகலாத்மாக்களுக்கும் வகுத்த சேஷியென்று உபதேசிக்கும்படியான ஜ்ஞாந வைசத்யத்தை யுடையராய் நிர்த்துஷ்டரான எம்பெருமானார், இப்போது அந்த லௌகிக ரெல்லாரிடத்திலேயும் பண்ணின தம்முடைய ஸ்வபாவிக க்ருபையை அடியேனொருவரிடத்திலும் கட்டடங்க ப்ரவஹித்து விஷயாந்தர ப்ராவண்யத்தின் கர்த்தத்தில் நின்றும் உத்தரித்தார் கண்டாயே! என்று தலைசீய்க்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "ஸர்வேச்வரன் இந்த உலகில் அவதரித்து நேரடியாக நின்று உபதேசித்தபோதிலும் உலகில் உள்ளவர்கள் திருந்தவில்லை. ஆனால் எம்பெருமானார் அவதரித்த பின்னர் அவர்கள் திருந்தி, மேன்மை பெற்று, ஸர்வேச்வரனுக்கு அடிமை ஆனார்கள்", என்றார். இந்தப் பாசுரத்தில் - வெளித்தோற்றத்தில் மட்டும் அழகுள்ளவர்களாக வேடம் பூண்டுள்ள யௌவனம் பொருந்திய பெண்களுடைய ஸ்தனங்களின் மீது கொண்ட பற்றுதல் காரணமாக அவர்கள் மீது கொள்ளும் அன்பில் ஈடுபட்டு எனது ஆத்மாவின் ஸ்வரூபம் அழிந்தபடி உள்ளது. இப்படிப்பட்ட எனது ஆத்மாவை, "பெரியபிராட்டியின் நாயகனான திருவரங்கச் செல்வன் மட்டுமே அனைத்து உயிர்களுக்கும் இயல்பான எஜமானன்" என்று உபதேசிக்கும் ஞானம் கொண்ட எம்பெருமானார் உயர்த்தினார். எப்படி? அனைத்து உலக மக்களிடமும் காண்பித்த தனது இயல்பான க்ருபையை என் ஒருவனிடம் மட்டும் எல்லையில்லாத விதத்தில் காண்பித்து, எனது ஆத்மாவானது மற்ற விஷயங்களில் சென்று லயிக்காதபடி உயர்ந்தினார். இதனை எனது நெஞ்சமாகிய நீ கண்டாய் அல்லவோ என்கிறார்.

வ்யாக்யானம் - (ஆயிழையார்) "சர்மா ஸ்ருக் மாம்ஸமேதோஸ்த்தி மஜ்ஜா சுக்லாதி ஸம்யுதே தேஹே சேத் ப்ரீதிமாந் மூடோ" என்றும், "க்ரிமி ஜந்து ஸங்குலம்" என்றும்,

"ஸ்வபாவம் துர்கந்தம் அசௌசம் அத்ருவம் களேபரம் மூத்ர புரீஷ பாஜநம்" என்றும், "முடைத்தலையூன்" என்றும் சொல்லுகிறபடியே அதிஹேயமாயிருக்கிற தேஹத்தினுடைய ஹேயதை தெரியாதபடி ஸ்ரக்வஸ்த்ராபரணாங்க ராகாதிகளாலே அலங்கரித்துக் கொண்டு, ஆபாதரமணீயைகளான தருணீ ஜநங்களுடைய. ஆய்தல் - தெரிதல், இழை – ஆபரணம், இழையார் - ஸ்த்ரீகள். அகவாயில் தோஷமொன்றும் தோற்றாதபடி கைப்பாணியிட்டாப்போலே காணும் இவர்கள் தம்மை அலங்கரித்துக் கொண்டிருப்பது. (கொங்கை தங்கும்) "ஸ்தநௌ மாம்ஸ க்ரந்தீ" என்கிறபடியே "மாம்ஸா ஸ்ருங்"மயமான ஸ்தநங்களிலே ஸக்தனாய், அவற்றின் தோஷத்தைத் தெரியமாட்டாதே போக்யதா புத்தியைப் பண்ணி, அவற்றுக்கு அவ்வருகு போக அசக்தனாய், த்ருஷார்த்தனானவன் தண்ணீர்ப்பந்தலிலே விழுந்து கிடக்குமாப்போலே அவற்றிலே தானே நித்யவாஸம் பண்ணும்படியான.

விளக்கம் - (ஆயிழையார்) - சர்மா ஸ்ருக் மாம்ஸமேதோஸ்த்தி மஜ்ஜா சுக்லாதி ஸம்யுதே தேஹே சேத் ப்ரீதிமாந் மூடோ – தோல், மாமிசம், இரத்தம், எலும்பு போன்றவை மட்டுமே உள்ள சரீரத்தின் மீது அன்பு வைக்கும் மூடன் - என்றும், க்ரிமி ஜந்து ஸங்குலம் – கிருமிகளும் விஷப்பூச்சிகளும் சேர்ந்த - என்றும், ஸ்வபாவம் துர்கந்தம் அசௌசம் அத்ருவம் களேபரம் மூத்ர புரீஷ பாஜநம் – இயல்பாகவே துர்நாற்றம் வீசுவதாகவும், தூய்மை அற்றதாகவும், நிலையற்றதாகவும், களேபரம் நிறைந்ததாகவும், மல மூத்ரங்கள் கொண்டதாகவும் உள்ள சரீரம் - என்றும், இராமானுச நூற்றந்தாதி – முடைத்தலையூன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப மிகவும் தாழ்ந்ததாக உள்ள சரீரத்தின் தாழ்வுகள் ஏதும் வெளியே தெரியாதபடி புதியதான வஸ்த்ரங்கள், ஆபரணங்கள் போன்றவையால் நன்றாக அலங்கரித்துக் கொண்டு, வெளித்தோற்றத்தில் மட்டும் அழகைக் காண்பித்தபடி யௌவனத்தில் உள்ள பெண்களுடைய. ஆய்தல் - தெரிதல், இழை – ஆபரணம், இழையார் – பெண்கள். உள்ளே இருக்கின்ற தோஷம் ஏதும் வெளியே தெரியாதபடி மணியாஸனம் போன்றவை இடுவது போன்று அல்லவோ இவர்கள் தங்களை அலங்காரம் செய்து கொண்டுள்ளனர்! (கொங்கை தங்கும்) - ஸ்தநௌ மாம்ஸ க்ரந்தீ – ஸ்தனங்கள் மாமிசக் குவியலே ஆகும் - என்பதற்கு ஏற்ப, மாமிசக்குவியல் என்பதாக உள்ள ஸ்தனங்களில் நாட்டம் கொண்டவர்களாக, அவற்றில் உள்ள சிறுமை ஏதும் அறியாமல் அவற்றின் இன்பத்தை மட்டும் நோக்கியபடி, அவற்றை விட்டு அகல முயன்றால் அதற்குச் சக்தி அற்றவர்களாக, அதிக தாகம் எடுத்து மயக்கம் உற்றவன்

தண்ணீர்ப்பந்தலில் விழுந்து கிடப்பது போன்று அவற்றில் எப்போதும் வசிக்கும்படியாகவே இருந்தபடி.

வ்யாக்யானம் - (அக்காதலளற்றழுந்தி) அந்த விஷயம்போலே அதிஹேயமான வ்யாமோஹ மென்கிற அள்ளல்தறையிலே மக்நனாய். அன்றிக்கே, (அக்காதல்) வாக்குக்கு நிலமல்லாதபடி கைகழிந்த காதலென்னவுமாம். (மாயும்) நசித்துப் போந்த. (என்னாவியை) கீழே லௌகிகரெல்லாரையு முத்தரித்தபடி யருளிச்செய்தீர், இது உமக்குத் தெரிந்தபடியென், கர்ணகர்ணியாய்க் கேட்டிருந்தீராகில் இது நமக்கு விச்வஸநீயமா யிருக்குமோ வென்ன; அப்படி கேட்டுச் சொன்னே னல்லேன், இதுக்கு நான் ஸாக்ஷியென்று தம்மைக் காட்டுகிறார். (என்னாவியை) என்னாத்மாவை. இவ்வளவும் "அஸந்நேவ" என்னும்படியாய்ப் போந்த என்னாத்மாவை. ஒரு கைம்முதலில்லாத என்னாத்மாவை.

விளக்கம் – (அக்காதல் அளறு அழுந்தி) – அதனைப் போன்றே அவர்கள் விஷயத்தில் தாழ்ந்த மயக்கம் என்பதான சேற்றுத்தரையில் மூழ்கியபடி. அல்லது வேறுவிதமாகவும் கூறலாம். (அக்காதல்) - சொற்களால் விவரிக்க இயலாதபடி கைவிட்டுப்போன காதல் என்றும் கூறலாம். (மாயும்) - இதன் காரணமாக அழிந்தபடி உள்ள. (என் ஆவியை) - திருவரங்கத்தமுதனாரிடம் சிலர், "நீவிர் கூறிய பாசுரங்களில், உலகத்தில் உள்ள அனைவரையும் எம்பெருமானார் கரையேற்றியதாக உரைத்தீர். இந்த விஷயம் உமக்கு எவ்விதம் தெரிந்தது? செவிவழிச் செய்தி என்றால், இதனை எங்களால் விச்வாசத்துடன் ஏற்க இயலாதபடி உள்ளது", என்றனர். இதற்குத் திருவரங்கத்தமுதனார், "இவ்விதம் மற்றவர் உரைக்க நான் அவற்றைக் கேட்டு உங்களிடம் கூறவில்லை. இந்த நிகழ்வுக்கு நானும், எனது வாழ்வுமே சாட்சி", என்று தன்னையே உதாரணம் காட்டுகிறார். (என்) – எனது ஆத்மாவை, ஆத்மஸ்வரூபத்தை. தைத்திரீயம் - அஸந்நேவ – "இல்லை" என்று கூறலாம்படி - என்பதற்கு ஏற்ப ஆகிவிட்ட எனது ஆத்மாவை. எந்தவிதமான கைம்முதலும் இல்லாத எனது ஆத்மாவை.

வ்யாக்யானம் - (மாமலராள் நாயகன்) மாமலர் என்று ஸமஸ்த புஷ்பஜாதிக்கும் உத்க்ருஷ்டமாய் ச்லாக்யமாயிருந்ததாகையாலே கமலத்தைச் சொல்லுகிறது. அந்தக்

கமலந்தான் தன்னுடைய கர சரண நேத்ராதிகளுக்கு ஒருபடிப் போலியாயிருக்கையாலும், பரிமள ப்ரசுரமாகையாலே போக்ய தமமாகையாலும் அதிலே உத்பந்நையாய், அங்கே நித்யவாஸம் பண்ணுகையாலே "மாமலராலள்" என்கிறார். (மாமலராள் நாயகன்) ப்ரஹ்மசாரி யெம்பெருமானானால் பந்த மோக்ஷங்களிரண்டுக்கும் பொதுவாய் தண்டதரனாயிருக்க வேண்டி யிருக்கையாலே "வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்", "க்ருத ப்ரயத்நாபேக்ஷ: து விஹிதப்ரதிக்ஷித்த அவையர்த்யாதிப்ய:" என்கிறபடியே, ஸகலசேதநர்களுடையவும் போக்யதா யோக்யதைகளை அடைவே கடாக்ஷித்து, ததநுரூபமான பலத்தைக் கொடுப்பனென்று பயப்பட வேண்டாதபடி, "ஸஹ தர்மசரீம் ஸைரே: ஸம்மந்த்ரித ஜகத்திதாம் அநுக்ரஹ மயீம் வந்தே நித்யம் அஜ்ஞாத நிக்ரஹாம்" என்கிறபடியே, தானும் அஜ்ஞாத நிக்ரஹையாய், அநுக்ரஹமயியாய், ஜகத்தினுடைய ஹிதத்தை ஸர்வேச்வரனுக்கு அறிவிப்பாளாய், கண்ணைப் புரட்டுதல், கச்சை நெகிழ்க்குதல் முதலான தன்னுடைய ப்ரூவிலாஸ சேஷ்டிதங்களாலே அவனை வசீகரித்துத் தனக்குக் கையாளாகப் பண்ணிக் கொண்டு, தானும் "இறையும் அகலகில்லேன்" என்று அநபாயிநியா யிருந்துள்ள பெரியபிராட்டியார்க்கு வல்லபனானவன். இவள்தான் "ந கச்சித் ந அபராத்யதி" என்றவளிறே.

விளக்கம் - (மாமலராள் நாயகன்) - அனைத்து மலர்களுக்கும் ஒரு உயர்வை அளிப்பதாலும், கொண்டாடத்தக்கதாக உள்ளதாலும் தாமரையைக் கூறுகிறார். அப்படிப்பட்ட தாமரை என்பது மஹாலக்ஷ்மியாகிய தனது திருக்கரம், திருவடி, திருக்கண்கள் ஆகியவற்றுக்கு உவமையாகக் கூறலாம்படி உள்ளதாலும், பரிமளம் எப்போதும் நிறைந்துள்ளதால் இன்பம் அளிப்பதாலும், அந்தத் தாமரையில் அவதரித்து, அதிலேயே வசித்தபடி உள்ளாள். இதனை உணர்த்தவே "மாமலராலள்" என்றார். (மாமலராள்) - ஸர்வேச்வரன் ப்ரம்மசாரியாக இருந்தால் பந்தம், மோக்ஷம் ஆகிய இரண்டிற்கும் ஒரே போன்று பொதுவானவனாக இருத்தல் வேண்டும். ஆனால் இவ்விதம் அல்லாமல், ப்ரஹ்மஸூத்ரம் (2-1-34) – வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் – தேவர்கள் முதலான ஏற்றத்தாழ்வுகளுடன் கூடியுள்ள ஸ்ருஷ்டி காரணமாக ஸர்வேச்வரனுக்குப் பாரபட்சம் மற்றும் கருணை இன்மை உண்டாகாது – என்றும், ப்ரஹ்மஸூத்ரம் (2-3-41) – க்ருத ப்ரயத்நாபேக்ஷ: து விஹிதப்ரதிக்ஷித்த அவையர்த்யாதிப்ய: - அனைத்து செயல்களிலும் ஜீவனால் செய்யப்பட்ட முதல் முயற்சியை எதிர்பார்த்தே பரமாத்மா அந்த முயற்சியை அனுமதித்து அந்தச் செயலைச்

செய்விக்கிறான்; காரணம், அவற்றை விதித்த சாஸ்த்ரங்கள் வீணாகப் போகாமல் இருக்கவே ஆகும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து சேதநர்களுடைய தகுதிகளை நன்றாக ஆராய்ந்து, அதற்கு ஏற்றபடி அவற்றின் பலனை அளிப்பானோ என்று அஞ்ச வேண்டாதபடி உள்ளான். இவன் இவ்விதம் உள்ளதற்குக் காரணம் என்ன? யதிராஜ ஸப்ததி (2) - ஸஹ தர்மசாரீம் ஸைரே: ஸம்மந்த்ரித ஜகத்திதாம் அநுக்ரஹ மயீம் வந்தே நித்யம் அஜ்ஞாத நிக்ரஹாம் - இந்த உலகிற்கு எந்த வகையில் நன்மை செய்யலாம் என்று பெரியபெருமாளுடன் எப்போதும் ஆலோசனை செய்பவள், அருள் என்பதே வடிவம் கொண்டதோ என்னும்படி உள்ளவள், அன்பின் மிகுதியால் தண்டனை என்பதையே அறியாதவள், பெரியபெருமாளுக்கு ஏற்றவளாக இருப்பவள் - இப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாச்சியாரை நான் வணங்குகிறேன் - என்பதற்கு ஏற்ப பெரியபிராட்டியாராகிய தானும் அனைவருடைய அறியாமையைப் போக்குபவளாகவும், அனுக்ரஹம் என்பதே வடிவம் எடுத்தவளாகவும், இந்த உலகிற்கு எது நன்மை என்று ஸர்வேச்வரனுக்கு உணர்த்தியபடி உள்ளவளாகவும், தனது கண்களைப் புரட்டியும் கச்சையை நெகிழ்வித்தும் தனது புருவ நெரிப்பு போன்ற லீலைகளாலும் அவனை வசீகரித்து, தான் கூறுவதைக் கேட்க வைப்பவளாகவும் இருப்பதால் ஆகும். ஸர்வேச்வரனாகிய அவன், திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் இறையும் - என்பதற்கு ஏற்ப தன்னை விட்டுச் சிறிதும் அகலாதபடி உள்ள பெரியபிராட்டியாரின் நாயகனாக உள்ளான். இவள், ந கச்சித் ந அபராத்யதி - இந்த உலகில் குற்றம் செய்யாதவர்கள் யார் – என்று கேட்பவள் அல்லவோ?

வ்யாக்யானம் - (எல்லாவுயிர்கட்கும் நாதன்) “பதிம் விச்வஸ்ய” என்கிறபடியே ஸகலாத்மாக்களுக்கும் பாலகன். வகுத்த சேஷியென்றபடி. ஆனால், “விதி சிவ ஸநகாத்யைர் த்யாதும் அத்யந்த தூரம்” என்கிறபடியே, நமக்கு எட்டாத நிலத்திலே யிருந்தா னென்னவேண்டா. (அரங்கன்) நாமிருந்த விடந்தேடி ஸந்நிஹிதனாய்க் கொண்டு, “அபயம் ஸர்வபூதேப்யோ ததாமி” என்கிறபடி இருந்தவனன்றோ. (என்னும்) இப்படி உபதேசம் பண்ணும்படியான. (தூயவன்) “ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருசம் பவித்ரம் இஹ வித்யதே” என்கிறபடியே தத்வ யாதாத்ம்ய ஜ்ஞாந பூர்த்தியாலே என் போல பதிதரையும் பாவநராம்படி பண்ணுகிறார்.

விளக்கம் - (எல்லா உயிர்கட்கும் நாதன்) - பதிம் விச்வஸ்ய – அனைத்து உலகிற்கும், அவற்றில் உள்ளவற்றுக்கும் நாதன் – என்பதற்கு ஏற்ப அனைத்து ஆத்மாக்களையும்

ஆள்பவன், நியமிப்பவன், இயல்பான எஜமானன் என்று கருத்து. ஆனால் இப்படிப்பட்ட அவன், ஸ்தோத்ரரத்னம் – விதி சிவ ஸநகாத்யைர் த்யாதும் அத்யந்த தூரம் – நான்முகன், சிவன், ஸௌநகர் என்றுள்ள பலருக்கும் உனக்குக் கைங்கர்யம் செய்தல் கடினமே - என்பதற்கு ஏற்ப நம்மால் எளிதில் அணுக இயலாத இடத்தில் உள்ளானோ என்று எண்ண வேண்டாதபடி, (அரங்கன்) – நாம் உள்ள இடம் தேடி வந்து நமக்கு மிகவும் அருகில், இராமாயணம் – அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி ஏதத் வ்ரதம் மம – என்னிடம் "அபயம்" என்று அண்டும் அனைத்தையும் நான் காப்பேன், இது எனது விரதம் ஆகும் – என்பதற்கு ஏற்ப உள்ளவன் ஆவான். (என்னும்) - என்று இவ்விதம் உபதேசம் செய்யும்படியான, (தூயவன்) - கீதை (4-38) – ந ஹி ஜ்ஞாநேந ஸத்ருசம் பவித்ரம் இஹ வித்யதே – தூய்மை செய்வதில் ஞானத்திற்கு நிகராக எதனையும் காண இயலாது – என்பதற்கு ஏற்ப உண்மையான ஞானத்தை உள்ளது உள்ளபடி அறிந்தவர் என்பதால், என் போன்று தகுதி அற்றவர்களையும் தூய்மையாகும்படிச் செய்கிறார்.

வ்யாக்யானம் - ஆனால் நீர் அநுவர்த்தநம் பண்ணாதே விஷயாந்தர ப்ரவணரா யிருந்தீரே யென்ன, (தீதில்) அப்படி யித்தலையில் அதிகாரத்தைப் பார்க்கையாகிற தோஷரஹிதர். உபதேசிக்குமிடத்தில் க்யாதிலாப பூஜாத்யபேக்ஷாரூப தோஷரஹிதரென்றுமாம். (இராமநுசன்) இப்படிப்பட்ட எம்பெருமானார். (இன்று) அதுவும் காலாந்தரத்திலேயோ. (இன்று வந்து) ஸகல ஜந்துக்கும் ப்ரத்யக்ஷமாகவே இப்போது வந்து. (தொல்லருள் சுரந்து) உமக்கொருவர்க்கும் ஒரு காலவிசேஷத்திலே க்ருபை பண்ணினார். அவர்க்கெப்போது முண்டோவென்ன, (தொல்) அந்த க்ருபை அவருக்கு ஸ்வாபாவிகம். (அருள் சுரந்து) அப்படிப்பட்ட க்ருபை கிளர்ந்து, மேன்மேலும் என்னுடைய துர்வாஸநை யெல்லாம் அடிமாண்டு போம்படி, "த்ரிபாவநா ரேணு நிவாரணோதம்" என்கிறபடியே அவஸரித்து மேகம் வர்ஷித்தாப்போலே பண்ணியருளி. (எடுத்தான்) ஆற்று வெள்ளத்திலே பாய்ந்து போகிறவனை விரகறியும் தார்மிகர் வந்தெடுத்து ரக்ஷிக்குமாப் போலேயும் "கூபத்தில் வீழுங்குழவியுடன் குதித்து அவ்வாபத்தை நீக்குமந்த வன்னை போல"வும் அந்த க்ருபா ப்ரேரிதராய்க் கொண்டு வந்தெடுத்தருளினார்.

விளக்கம் – இதனைக் கேட்ட சிலர் திருவரங்கத்தமுதனாரிடம், "ஆனால் நீவிர் இதனை எண்ணாமல் உலகவிஷயங்களின் மீது மிகுந்து ஈடுபாடு கொண்டபடி அல்லவோ

இருந்தீர்?" என்றனர். இதற்கு விடை அளிக்கிறார். (தீதில்) - இவ்விதம் தன்னை நாடி வந்தவர்களுக்குத் தகுதி உள்ளதா என்று ஆராய்ந்து பார்க்கும் தோஷம் அற்றவர் ஆவார். மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும்போது, அதனால் தனக்கு புகழ், லாபம், அவர்கள் தன்னை வணங்குவர் போன்ற எண்ணங்களாகிற தோஷங்கள் ஏதும் அற்றவர் ஆவார். யார் இவ்விதம் உள்ளவர் என்றால், (இராமாநுசன்) – எம்பெருமானார். (இன்று) – காலதாமதமாக வந்து இவ்விதம் உதவினாரோ என்றால் இல்லை, அப்போதே வந்து. (இன்று வந்து) - அனைத்து ஆத்மாக்களுக்கும் நேரடியாகவே வந்து நின்று. (தொல்லருள் சுரந்து) - திருவரங்கத்தமுதனாரிடம், "உமக்கு ஓடி வந்து அன்றே உதவினார். ஆனால், இது போன்றே மற்றவர்களுக்கும் க்ருபை செய்வாரோ?", என்று கேட்க, விடை அளிக்கிறார். (தொல்) - இவ்விதம் க்ருபை செய்வது அவருடைய இயல்பாகும். (அருள் சுரந்து) - அப்படிப்பட்டதான க்ருபை ஓங்கி வளர்ந்து. அதன் காரணமாக எனது தீய வழக்கங்கள் அனைத்தும் அடியுடன் அழிந்து போகும்படியாக. சரியான நேரம் பார்த்து, மழை பெய்கின்ற மேகம் போன்று க்ருபையைப் பொழிந்து. (எடுத்தான்) – ஆற்று வெள்ளத்தில் அடித்து இழுத்துச் செல்லப்படும் ஒருவனை, எப்போது காப்பாற்ற வேண்டும் என்று நன்கு அறிந்த நல்லவர், பாய்ந்து வந்து எடுப்பது போன்றும், ஆர்த்திப்ரபந்தம் (9) - கூபத்தில் வீழும் குழவியுடன் குதித்து அவ்வாபத்தை நீக்கும் அந்த அன்னைபோல் - கிணற்றில் விழுந்த தனது குழந்தையைக் காப்பாற்ற எண்ணும் தாய், அந்த துன்பத்தில் இருந்து குழந்தையைக் காப்பாற்ற தானும் கிணற்றில் குதிக்கிறாள் – என்பது போன்றும், க்ருபை நிறைந்தவராக வந்து என்னைக் காத்தருளினார்.

43. சுரக்கும் திருவும் உணர்வும் சொல்லப்புகில் வாயமுதம்
பரக்கும் இருவினை பற்றறவோடும் படியில் உள்ளீர்
உரைக்கின்றனன் உமக்கு யான் அறம் சீறும் உறுகலியைத்
துரக்கும் பெருமை இராமானுசன் என்று சொல்லுமினே.

விளக்கவுரை – எம்பெருமானார் அவதரித்ததால் புண்ணியம் செய்த இந்தப் பூமியில் வசிப்பவர்களே! இத்தனை காலமாக உலக விஷயங்கள் மட்டுமே உண்மை என்று திரிந்து கொண்டிருக்கும் உங்களுக்கு, இதே போன்ற நிலையில் இருந்து எம்பெருமானாரால் திருத்தப்பட்ட நான் உபதேசிக்க உள்ளேன். தர்மம் என்பது தழைப்பதையே பொறுத்துக்

கொள்ள இயலாமல், தான் மட்டுமே விளங்கும்படி இருப்பது இந்த கலிகாலமாகும். இத்தகைய கலியை, அந்தக் கலிபுருஷனுடன் சேர்ந்து அதர்மங்களையும் ஓடிவிடச் செய்யும்படியான அதிசயம் ஒன்று உண்டு. அது "இராமானுசா", என்று எம்பெருமானாரின் திருநாமத்தைக் கூறுவதே ஆகும். எம்பெருமானின் திருநாமங்கள் போன்று ஆயிரம் திருநாமங்கள் கூற வேண்டிய அவசியம் இல்லை – ஒருமுறை உடையவரின் திருநாமத்தைக் கூறினாலே போதுமானது. இதனால் நிகழ்வது என்ன? எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்யும் ஸம்பத்து, அவன் மீது பக்தி என்னும் ஸம்பத்து, பகவத்ஞானம் என்னும் ஸம்பத்து ஆகியவை உண்டாகிவிடும். இந்தத் திருநாமத்தைக் கூறும்போது நாக்கில் அமிர்தம் சுரந்தபடி இருக்கும். எந்தவிதமான ப்ராயச்சித்தம் செய்தாலும் நீங்காமல் உள்ள பாவங்கள், தோஷங்கள் அனைத்தும், இந்தத் திருநாமத்தைக் கூறிய உடனேயே, வேருடன் களையப்பட்டுவிடும்.

அவதாரிகை - இப்பாட்டிலே எம்பெருமானார், தம்முடைய தோஷங்களைப் பாராதே தம்மை விஷயீகரித்த வாத்ஸல்ய குணத்திலே யீடுபட்டு அந்தப் ப்ரீதி தலைமண்டையிட்டு லோகத்தாரெல்லாரையும் உஜ்ஜீவிப்பிக்கவேணுமென்னும் பரஸம்ருத்தி பரராய் அவர்களை ஸம்போதித்து, "ஸம்ஸார மக்நரான உங்களுக்கு கரைகண்ட நான் உபதேசிக்கிறேன். தர்ம ப்ரத்வேஷியான கலியை வைதேசிகமாகப் போக்கக் கடவதான சதுரக்ஷரி மந்த்ரத்தை அதிகரியுங்கோள், உங்களுக்கு ஸகல சுபங்களும் தன்னடையே வந்து சேரும்", என்கிறார்.

விளக்கம் - திருவரங்கத்தமுதனாராகிய தனது தோஷங்கள் எதனையும் ஆராயாமல் தன்னை ஏற்றுக் கொண்ட எம்பெருமானாருடைய வாத்ஸல்ய குணத்தில் ஈடுபட்டவராக, அதனால் ஏற்பட்ட ப்ரீதி மிகவும் அதிகமாகி, உலகில் உள்ளவர்கள் அனைவரையும் கரையேற்று வேண்டும் என்ற "மற்றவர்கள் உயரவேண்டும்" என்னும் எண்ணத்தால் அவர்கள் அனைவரையும் அழைத்தார். அவர்களிடம், "ஸம்ஸாரத்தில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு, அதிலிருந்து கரையேறும் மார்க்கம் உணர்ந்த நான் உபதேசம் செய்கிறேன். கேட்பீராக. தர்மத்தின் மீது பகை கொண்ட கலியை உங்களுக்குடன் சம்பந்தம் அற்றுப்போகச் செய்வதான 'ராமாநுஜ' என்னும் நான்கு எழுத்து மந்திரத்தை

உச்சரிப்பீராக. இதனால் அனைத்து சுபங்களும் உங்களுக்குத் தாமாகவே வந்து சேரும்" என்கிறார்.

வ்யாக்யானம் - (படியிலுள்ளீர்) "இருள்தரு மாஞால"மான இந்த லோகத்தில் வர்த்திக்கிற அறிவிலிகளான மனிசரே. ஸுகதுக்க மூலமான புண்யபாபங்களுக்கு விளைநிலமா யிருக்கிற பூமியிலே யிருந்துள்ள மநுஷ்யரையென்றபடி. அன்றிக்கே, எம்பெருமானார் திருவவதரித்தருளுகையாலே "விச்வம்பரா புண்யவதீ" என்கிறபடியே பாக்யவதியா யிருக்கிற பூமிக்குட்பட்டவர்களே யென்னுதல். உள்ளபடி தத்வஹித புருஷார்த்தங்களை யறியப் பெறாதே ப்ரக்ருதி ஸ்வபாவத்தாலே திரியுமவர்களே என்னுதல். படி - பூமியும், ஸ்வபாவமும். (உமக்கு) அநாதிகாலமே தொடங்கி இதின் வாசியறியாதே இவ்வளவும் சப்தாதி விஷயங்களுக்கே சேஷமாய்ப் போந்த உங்களுக்கு. (யான்) முன்பு துர்விஷயங்களிலே மக்நனாக, பின்பு எம்பெருமானார் தம்முடைய க்ருபையாலே "மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ர பாணிநா" என்கிறபடியே ஸமுத்தரிக்க, அங்குத்தைக்கு அந்தரங்கனாய் அங்கேயிருக்கிற ரஸத்தை யநுபவித்துக் கைகண்ட நான். (உரைக்கின்றனன்) "ஸ்நேஹாச்ச பஹுமாநாச்ச ஸ்மாரயே த்வாம் ந சிக்ஷயே" என்கிறபடியே ஹிதோபதேசம் பண்ணுகிறேன்.

விளக்கம் - (படியிலுள்ளீர்) - திருவாய்மொழி (10-6-1) – இருள் தருமா ஞாலம் - என்பதற்கு ஏற்ப உள்ளதான இந்த லோகத்தில் வாழ்கின்ற அறிவை இழந்த மனிதர்களே! அதாவது சுகம் மற்றும் துக்கம் ஆகியவற்றுக்குக் காரணமான புண்ணியம் மற்றும் பாபம் என்பவற்றுக்கு விளைநிலமாக உள்ள பூமியில் உள்ள மனிதர்கள். அல்லது இதற்கு வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். எம்பெருமானார் திருஅவதாரம் செய்த காரணத்தால், விச்வம்பரா புண்யவதீ – புண்ணியம் செய்த உலகம் - என்பதற்கு ஏற்ப மிகுந்த பாக்கியம் செய்த பூமியில் உள்ளவர்கள் என்றும் கூறலாம். அல்லது உண்மையானதும் நன்மையானதும் ஆகிய புருஷார்த்தம் இன்னது என்று உள்ளது உள்ளபடி அறிய இயலாமல், இந்த உலகத்தின் இயல்புக்கு ஏற்றபடித் திரிபவர்கள் எனலாம். "படி" என்றால் பூமி மற்றும் இயல்பு என்று இரண்டு பொருள். (உமக்கு) – எல்லையற்ற காலம் தொடங்கி இந்த உலகவிஷயங்களுக்கும் புருஷார்த்தத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு அறியாமல், உலகவிஷயங்களுக்கு மட்டுமே அடிமையாக

நிற்கும் உங்களுக்கு. (யான்) – முன்பு ஒரு காலகட்டத்தில் தாழ்ந்த விஷயங்களில் மூழ்கிக் கிடந்து, பின்னர் எம்பெருமானார் தன்னுடைய கருணை காரணமாக, ஜயாக்ய ஸம்ஹிதை – மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ர பாணிநா – உலகத்தை உயர்த்தவேண்டும் என்னும் கருணை காரணமாகச் சாஸ்த்ரங்கள் என்னும் வடிவில் உள்ள தனது திருக்கரத்தை நீட்டுகிறான் – என்பதற்கு ஏற்ப என்னை உயர்த்தி விட, அதன் பின்னர் அவருக்கு மட்டுமே மிகவும் அந்தரங்க அடிமையாக நின்று, அங்கு கைங்கர்யம் செய்வதால் உண்டாகும் சுவையை அனுபவித்து, அதில் மூழ்கி நிற்கும் நான். (உரைக்கின்றனன்) - இராமாயணம் ஆரண்யகாண்டம் (9-23,24) – ஸ்நேஹாச்ச பஹுமாநாச்ச ஸ்மாரயே த்வாம் ந சிக்ஷயே – (சீதை இராமனிடம் ராக்ஷஸர்களைக் கொல்லவேண்டாம் என்று உரைக்கும்போது) நான் உம்மிடம் உள்ள ஸ்நேஹம் காரணமாகவே இவ்விதம் கூறுகிறேன், உமக்கு உபதேசிப்பதற்காக அல்ல – என்பதற்கு ஏற்ப நன்மை அளிக்கவல்லதைக் கூறுகிறேன்.

வ்யாக்யானம் – (அறம்) "கலௌகார்த்த யுகம் தர்மம் கர்த்துமிச்சதி யோ நர:" என்று, "சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குண கர்ம விபாகச:" என்கிறபடியே பகவதாஜ்ஞா ரூபமாய், தத் தத் வர்ணாச்ரம தேசகாலாதிகாரிகளாலே நியதமாய் அதீந்த்ரிய வ்யாபார நிர்வ்ருத்தமான வ்ருத்தி விசேஷம். (சீறுமுறுகலியை) இப்படிப்பட்ட தர்மத்தையும் தத் கர்த்தாவையும் குறித்து "ஸ்வாமித்ரோஹீதிதம் மத்வா தஸ்மை ப்ரத்வேஷ்ய தே கலி:" என்கிறபடியே அத்யந்த்குபிதனாய் இந்த துர்வ்யாபாரத்திலே முறுகியிருக்கிற கலி புருஷனை. அன்றிக்கே, (உறுகலியை) ப்ரபலமாய் உறைத்து நிற்கிற கலியை யென்றுமாம்.

விளக்கம் – (அறம்) - கலௌகார்த்த யுகம் தர்மம் கர்த்துமிச்சதி யோ நர: - என்றும், கீதை (4-13) – சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம் குண கர்ம விபாகச: - அவரவர்களுடைய குணங்கள் மற்றும் கர்மங்களின் அடிப்படையில் நான் நான்கு வர்ணங்களை உண்டாக்கினேன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, பகவத் கட்டளை என்னும் வடிவமாகவும், அந்தந்த வர்ணாச்ரம தர்மங்களைச் சேர்த்தவர்களான அந்தந்த காலம் மற்றும் இடம் ஆகியவற்றில் உள்ள அதிகாரிகளால் சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டவையும், இந்த்ரியங்களின் பிடியில் சிக்காதபடிச் செய்யப்படுவதும் ஆகிய செயல்கள். (சீறுமுறுகலியை) – இப்படிப்பட்ட தர்மம் மற்றும் அதனைச் செய்யும் மனிதர்கள்

ஆகியவற்றைக் குறித்து, ஸ்வாமித்ரோஹீதிதம் மத்வா தஸ்மை ப்ரத்வேஷ்ய தே கலி: - என்பதற்கு ஏற்ப மிகுந்த கோபம் கொண்டவனாக, இத்தகைய தாழ்ந்த செயல்களில் ஈடுபட்டு நிற்கும் கலிபுருஷனை. அல்லது (உறுகலியை) – என்கும் பரவி நிற்கும் கலியை என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் - (துரக்கும் பெருமை) "சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே" என்கிறபடியே அந்தக் கலிபுருஷனும், அவனாலே ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட அதர்மங்களும் ஓடிப்போம்படி பண்ணக்கடவ அதிசயத்தையுடைய. (இராமாநுசனென்று சொல்லுமினே) இராமாநுசன் என்கிற திருநாமத்தைச் சொல்லுங்கோள். ஸஹஸ்ராக்ஷரீ மாலா மந்த்ரத்தை ஜபிக்கவேண்டா. "ந சேத் ராமாநுஜேத் யேஷா சதுரா சதுரக்ஷரீ காமவஸ்த்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச:" என்று இவருடைய ஆசார்யரான ஆழ்வானும் ஆழங்கால்பட்டாப்போலே லோகத்தாருடைய ஸம்ஸார துக்கத்தைப் பார்த்த இவர்க்கு கரைபுரண்டு வந்தவாறே, எம்பெருமானாரைப்போலே இவரும் இந்த அதிரஹஸ்யத்தை தாளிதாநமாக எல்லார்க்கும் வெளியிடுகிறார் காணும்.

விளக்கம் - (துரக்கும் பெருமை) - பெரியாழ்வார் திருமொழி (5-4-3) – சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே - என்பதற்கு ஏற்ப அந்தக் கலிபுருஷன் மற்றும் அவனால் வளர்க்கப்பட்ட அதர்மங்கள் ஆகியவை ஓடிப்போகும்படிச் செய்வதான வியப்பான செயல்களை உடைய. (இராமாநுசன்) – "இராமாநுசன்" என்னும் திருநாமத்தை உச்சரீப்பீர்களாக. ஆயிரம் திருநாமங்கள் கொண்டதான ஸர்வேச்வரனைக் குறித்துள்ள மந்த்ரங்களைக் கூட ஜபிக்க வேண்டிய அவசியம் இல்லை. ந சேத் ராமாநுஜேத் யேஷா சதுரா சதுரக்ஷரீ காமவஸ்த்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச: - "ராமாநுஜ" என்னும் நான்கு எழுத்துகள் கொண்ட மந்த்ரம் இல்லை என்றால், புழு போன்ற அற்பனாகிய என் போன்றவர்களுடைய கதி என்னவாயிருக்கும் - என்று திருவரங்கத்தமுதனாராகிய இவருடைய ஆசார்யரான கூரத்தாழ்வான் ஈடுபட்டு நின்றது போன்றே, உலகில் உள்ளவர்களுடைய ஸம்ஸார துக்கத்தைக் கண்டவுடன் இவருக்கும் "இவைகளைக் காப்பாற்றவேண்டும்" என்ற எண்ணம் கரைபுரண்டது. அதனால் எம்பெருமானார் எவ்விதம் ஸர்வேச்வரனுடைய திருநாமம் என்ற உயர்ந்த இரகசியத்தை வெளியிட்டாரோ அதே போன்று இவரும், எம்பெருமானாருடைய திருநாமம் என்னும் மிகவும் உயர்ந்த இரகசியத்தை அனைவரும் அறிய வெளியிடுகிறார்.

வ்யாக்யானம் – இத்தாலே பலிக்கிறதென்னென்ன, (சுரக்கும் திருவுமுணர்வும்) "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" என்றும், "ஸ து நாகவரஸ் ஸ்ரீமாந்" என்றும், "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்த்தோசித ஸர்வவித கைங்கர்ய ஸம்பத்தும், அத்யந்த பரசேஷதைகரஸ ஸ்வரூப ஜ்ஞாநமும் மேன்மெலன வர்த்திக்கும். "அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார்தம் அடியோரடியோங்களே" என்கிறபடியே பக்தியாகிற ஸம்பத்தும், அதில் நின்றும் ததீயபர்யந்தமாயிருக்கிற ஸஹ்யத்தில் நின்றும் காவேரி பிறந்தாப்போலே சுரக்குமென்றபடி.

விளக்கம் - இதனால் நிகழ்வது என்ன? (சுரக்கும் திருவும் உணர்வும்) இராமாயணம் – லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந: - லக்ஷ்மணன் கைங்கர்யஸ்ரீயை உடையவனாக இருந்தான் - என்றும், ஸ்ரீவிஷ்ணுதர்மம் – ஸ து நாகவரஸ் ஸ்ரீமாந் – அந்தக் கஜேந்த்ரன் கைங்கர்ய செல்வம் கொண்டவனாக இருந்தான் - என்றும், திருவாய்மொழி (3-3-1) – ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து இடங்களிலும், அனைத்து காலங்களிலும், அனைத்து விதங்களிலும், அனைத்து நிலைகளிலும் கைங்கர்யம் செய்தல் என்ற ஐச்வர்யமும், எல்லையற்றதும் மிகவும் உயர்ந்ததும் ஆகிய கைங்கர்யச்சுவை என்பது குறித்ததும், ஆத்மாவுக்கு ஏற்றதும் ஆகிய கைங்கர்ய ஞானமும் மேன்மேலும் வளர்ந்தபடி இருக்கும். திருவாய்மொழி (3-7-10) – அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார்தம் அடியோரடியோங்களே - என்பதற்கு ஏற்ப பக்தி என்னும் செல்வமும், அதில் தொடங்கி அடியார்கள் குறித்த பக்தி என்ற ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்ற நிலை என்னும் ஞானமும் ஏற்படும். இவை எப்படி உண்டாகும் என்றால் ஸஹ்ய மலையிலிருந்து காவேரி சுரப்பது போன்றதாகும்.

வ்யாக்யானம் - (சொலப்புகில் வாயமுதம் பரக்கும்) தேவஜாதியெல்லாம் திரண்டு அநேக ஸாமக்ரியைக் கொண்டு நெடுங்காலம் "படாதனபட்ட" பின்பிறே இந்த உப்புச்சாறு பிறந்தது. பிறப்பே பிடித்து போஜந ரஸமறியாதவர்க ளாகையாலே அத்தை அம்ருதமென்று பேரிட்டார்கள். அது போலன்றிக்கே "தென்குருகூர்நம்பி யென்றக்கா

லண்ணிக்கு மமுதூறு மென்னாவுக்கே" என்கிறபடியே ஆழ்வாருடைய திருநாமத்தைத் தாமநுஸந்தித்த பின்பிறே ஸ்ரீமதுரகவிகளுடைய நாவுக்கு யதார்த்தமான அம்ருதம் பிறந்தது. அதின் படியையுமன்றிக்கே, இந்த சதுரையான சதுரக்ஷரியை யநுஸந்திக்க வேணுமென்று உத்யோகிக்கவே அவர்களுடைய திருப்பவளத்துக்கு ஸ்வரூபோஜ் ஜீவநமான அம்ருதம் ஊற்றுப்போலே சுரவாநிற்கும். (இருவினை பற்றறவோடும்) "ததா வித்வாந் புண்யபாபே விதூய" என்கிறபடியே அநுபவத்தாலும் ப்ராயச்சித்தாதிகளாலும் நிவர்த்திப்பிக்க வரிதான மஹாபாபங்களெல்லாம் வாஸநையோடே கூடப் பிரிகதிர் படாதே விட்டோடும். வேதாந்த விரோதம் வாராமைக்காக; "ஸுஹ்ருத ஸாதுக்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம்" என்கிறபடியே அசல்பிளந்தேறிட்டு இந்த அதிகாரிகளை நிர்மலராகப் பண்ணுமென்றதாய்த்து.

விளக்கம் - (சொலப்புகில் வாயமுதம் பரக்கும்) - அனைத்து தேவர்களும் ஒன்றாகத் திரண்டு பலவிதமான செயல்கள் செய்து, நீண்ட காலம், திருவாய்மொழி (7-5-2) - படாதனபட்டு – என்று கூறுவதற்கு ஏற்ப போராடிய பின்னரே இந்த அமிர்தம் வெளிப்பட்டது. தங்களுடைய பிறவி தொடங்கிய நாள் முதலாகவே கைங்கர்யம் என்னும் போஜன சுவையை அறியாத காரணத்தால் தேவர்கள் அதற்கு அமிர்தம் என்று பெயர் வைத்தனர். ஆனால் அது போன்று அல்லாமல் கண்ணிநுண்சிறுத்தாம்பு (1) - தென்குருகூர்நம்பி என்றக்கால் அண்ணிக்கும் அமுதூறும் என்னாவுக்கே - என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாருடைய திருநாமத்தை எண்ணிய பின்னர் மட்டுமே மதுரகவியாழ்வாருடைய நாக்கில் உண்மையான அமிர்தம் பிறந்தது. அது போன்றும் அல்லாமல், அனைத்து சாமர்த்யமும் உள்ளதான "ராமாநுஜ" என்ற நான்கு எழுத்து கொண்டதான இதனை எண்ணவேண்டும் என்று எண்ண முயலும்போதே, அப்படி முயல்பவர்களுடைய உதடுகளின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதான அமிர்தம் ஊற்றுப் போன்று தானாகவே சுரக்கும். (இருவினை பற்றறவோடும்) - ததா வித்வாந் புண்ய பாபே விதூய – அந்த ஞானி தனது புண்ணிய பாபங்களை உதறுகிறான் - என்பதற்கு ஏற்ப எத்தனை அனுபவித்தாலும், ப்ராயச்சித்தங்கள் செய்தாலும் நீக்கிக்கொள்வதற்கு இயலாதபடி உள்ள மஹாபாபங்கள் அனைத்தும் அவற்றின் வாசனையுடன் ஒன்றுவிடாமல் கூட்டமாக ஓடிவிடும். ஆனால் இவ்விதம் உரைத்தால், அனுபவித்தால் மட்டுமே கர்மபலன்கள் கழியும் என்னும் வேதாந்த கருத்திற்கு முரண்பாடு வரும். இதனை நீக்க சமாதானம் உரைக்கிறார்; சாட்யாயநசாகை – தஸ்ய புத்ரா தாயம் உபாஸந்தி ஸுஹ்ருத

ஸாதுக்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம் – மோக்ஷம் செல்லும் உபாஸகனின் புத்திரர்கள் அவனது செல்வத்தையும், நண்பர்கள் புண்ணியத்தையும், பகைவர்கள் பாவத்தையும் அடைகின்றனர் - என்பதற்கு ஏற்ப நல்ல விஷயத்தில் கொண்டு சேர்க்கும்விதத்தில் இப்படிப்பட்ட அதிகாரிகளைத் தோஷம் இன்றி ஆக்கிவிடும் என்று கருத்து.

44. சொல்லால் தமிழ் ஒரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லை
இல்லா அறநெறி யாவும் தெரிந்தவன் எண்ணரும் சீர்
நல்லார் பரவும் இராமானுசன் திருநாமம் நம்பிக்
கல்லார் அகல் இடத்தோர் எது பேறு என்று காமிப்பரே

விளக்கவுரை – அநந்தா என்றும், விபுலா என்றும் அழைக்கப்படும் இந்த அகண்ட பூமியில் உள்ள மனிதர்களுக்கு உயர்ந்தவற்றை நான் உபதேசித்தாலும், அவர்கள் அதில் ஈடுபாடு கொள்ளாமல் இருப்பார்கள்; அறிவு கெட்டு திரிவார்கள்; நாம் சரணம் அடையும் இடம் எது என்று தேடியபடி, அங்கும் இங்கும் செல்வார்கள்; இப்படியாகத் தங்கள் வாழ்வை வீணடிப்பார்கள். மேலும் இவர்கள் செய்வது என்ன? தமிழ் மொழியில் உள்ள இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் கொண்டதாகவும், சொற்கள் என்னும் மாலைகள் உடையதாகவும் உள்ள தமிழ் (இதன் மூலம் கூறப்படுவது நம்மாழ்வார் அருளிச்செய்த ப்ரபந்தங்கள்); நான்கு வேதங்கள்; எண்ணற்றதும், எல்லையற்றதும் ஆகிய தர்ம நெறிகள் ஆகியவற்றை அறிந்தவர் எம்பெருமானார்; எண்ணற்ற திருக்கல்யாண குணங்கள் கொண்டவர்; மிகவும் உயர்ந்தவர்களால் சூழப்பட்டவர் – இப்படிப்பட்ட எம்பெருமானாரின் திருநாமத்தை ஒருமுறை நான் உபதேசிப்பதைக் கேட்டு, உச்சரித்தாலே போதும், இவர்களின் தேடுதலுக்கு விடை கிட்டும் – ஆனால் செய்ய மறுக்கிறார்களே!

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே லோகத்தாரெல்லார்க்கும் அவர்களுடைய அதிகாராநதிகார விபாகம் பாராதே அத்யந்த விலக்ஷணமான உபாயத்தை உபதேசித்தாலும், அத்தை அத்யவஸிக்கமாட்டாதே புருஷார்த்தமேதென்று ஸந்தேஹியா நின்று கொண்டு, சிக்ஷிதமான சப்தராசியாலே நிறையப்பட்டதாய், அத்விதீயமாய் இயலும் இசையும் ஸந்தர்ப்பமுங் கூடி விலக்ஷணமான இப்ப்ரபந்தமும், ரிகாதி வேதசதுஷ்டயமும்,

அபரிமிதமாய் ததுபப்ருஹ்மணமான தர்மசாஸ்த்ரமாகிய இவற்றை அடைவே ஆராய்ந்திருக்குமவராய், ஸத்துக்களாலே அடைவுகெட ஸ்துதிக்கும்படியா யிருக்கிற எம்பெருமானாருடைய திருநாமத்தை அப்யஸியாதே போனார்களென்று இன்னாதாகிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், இந்த லோகத்தில் உள்ள அனைவருக்கும், அவர்களுக்குத் தகுதி உள்ளதா இல்லையா என்று ஆராயாமல், எல்லையற்ற மேன்மை கொண்டதான "ராமாநுஜ" என்ற நான்கு எழுத்து கொண்ட உபாயத்தை உபதேசித்தார். ஆனாலும் இந்த லோகத்தில் உள்ளவர்கள் அதனைப் பின்பற்றாமல், புருஷார்த்தம் எது என்று சந்தேகத்துடன் ஆராய்ந்தபடி இருந்தனர். பலவற்றையும் கற்பிக்கவல்லதான ஏழு ஸ்வரங்களுடன் கூடிய சொற்கள் நிறைந்ததும், இதனைப் போன்று மற்றொன்று இல்லை என்னும்படி உள்ளதும், இயல் இசை என்று அனைத்தும் பொருந்தியதும் ஆகிய ஆழ்வார்களுடைய ப்ரபந்தங்கள், ரிக்வேதம் போன்ற நான்கு வேதங்கள், வேதங்களை விளக்கவல்லதான எல்லையற்ற தர்மசாஸ்த்ரங்கள் போன்ற பலவற்றையும் நன்றாக ஆராய்ந்து தெளிந்தவரும், ஸாதுக்களால் சூழ்ந்த நின்று ஸ்துதிக்கும்படியாக உள்ளவரும் ஆகிய எம்பெருமானாருடைய திருநாமத்தை இவர்கள் த்யானிக்காமல் உள்ளனரே என்று வருந்துகிறார்.

வ்யாக்யானம் - (அகலிடதோர்) "அநந்தா" என்றும், "விபுலா" என்றும் பேரையுடைத்தான இந்த மஹாப்ருதிவியிலுள்ள சேதநர்கள். (எது பேறென்று காமிப்பர்) நான் இவர்களுடைய இழவைக் கண்டு பொறுக்கமாட்டாதே, "மந்த்ரம் யத்நேந கோபயேத்" என்ற சாஸ்த்ரத்தையும் அதிக்ரமித்து அத்யந்த ஸுலபமாய், "குரோர் நாம ஸதா ஜபேத்" என்கிறபடியே ததீய சேஷதைக ரஸ ஸ்வரூபாநுரூபமாய் பரம போக்யமான சதுரக்ஷரியை உபதேசித்தாலும் அதிலே நிஷ்டராகமாட்டாதே அறிவு கெட்டு, பின்னையும் நமக்கோர் சரணமேதென்று இங்குமங்கும் நாடி அந்த இச்சையோடே காலமெல்லாம் இப்படியே வ்யர்த்தமாகப் போக்குகிறார்கள், ஐயோ! இவர்கள் ப்ராரப்தத்தினுடைய க்ரௌர்யம் இங்ஙனேயாய்த் தலைக்கட்டிற்றென்று இன்னாதாகிறார்.

விளக்கம் – "அநந்தா" என்றும், "விபுலா" என்றும் கூறப்படுவதான இந்த பரந்த லோகத்தில் உள்ள சேதநர்கள். (எது பேறென்று காமிப்பர்) – இப்படிப்பட்ட சேதநர்கள் இதுவரை எதனை இழந்து நிற்கிறார்கள் என்பதைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாத நான், மந்த்ரம் யத்நேந கோபயேத் – மந்த்ரத்தை முயற்சியால் மறைத்தல் வேண்டும் - என்பதான சாஸ்த்ரத்தையும் கடந்து, மிகவும் சுலபமாக உள்ளதும், குரோர் நாம ஸதா ஜபேத் - என்பதற்கு ஏற்ப அடியார்களுக்குத் தொண்டு செய்தல் என்ற சுவையைக் கொண்ட ஸ்வரூபத்தை உணர்த்துவதும், மிகவும் இன்பமானதும் ஆகிய "ராமாநுஜ" என்ற நான்கு எழுத்து மந்திரத்தை இவர்களுக்கு உபதேசித்தேன். ஆனால் இவர்கள் அதில் ஈடுபடாமல், தங்கள் அறிவு இழந்து, "நமக்குச் சரணம் புகத்தக்க இடம் எது" என்று புலம்பியபடி, தங்கள் காலம் முழுவதும் வீணாகக் கழித்தபடி உள்ளனர். இவர்கள் செய்த கர்மபலன்கள் இவ்விதமாகப் பலன் அளிக்கத் தொடங்கியதன் கொடுமை இப்படியல்லவோ முடிகிறது என்று வேதனைப்படுகிறார்.

வ்யாக்யானம் - ஆனால் அத்யயநம் பண்ணுவிக்குமவர்கள் மந்தமதிகளுக்கு பின்னையும் ஒரு சந்தையைச் சொல்லி அவர்கள் தரிக்குமளவும் க்ருஷி பண்ணுவர்களிறே, அப்படி நீரும் செய்யவேண்டாவோ வென்ன; "யச்ச கிஞ்சித் ஜகத் ஸர்வம் த்ருச்யதே ச்ரூயதேபி வா அந்தர் பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்தித:" என்றும், "எண்பெருக் கந்நலத்து ஒண்பொரு ளீறில வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே" என்றும் ப்ரபாவ புரஸ்ஸரமாக அம்மந்த்ரத்தை உபதேசித்தாப்போலே, இவரும் தாம் முன்பருளிச் செய்த சதுரக்ஷரி மந்த்ரத்தை எதிரிட்டு ப்ரபாவ வர்ணந பூர்வகமாக அருளிச்செய்கிறார். (சொல்லார் தமிழொரு மூன்றும்) "சீர்த்தொடையாயிரம்" என்றும், "சடகோப வாங்மயம்" என்றுஞ் சொல்லுகிறபடியே, கோமளங்களாய் தத்வார்த்த நிச்சாயகங்களான சப்தங்களாலே நிறையப்பட்ட தமிழென்று – திருவாய்மொழி. ஒரு என்ற பதம், காகாக்ஷி ந்யாயேந பூர்வோத்தர பதங்களிலே அந்வயிக்கும். லோகத்திலும் வேதத்திலும் அதுக்கு ஸத்ருசமான ப்ரமாணமில்லை யென்றபடி. (மூன்றும்) அதுக்கு மூன்று ப்ரகாரமாகக் கணிசிக்கத் தக்கதாய் அத்விதீயமான மற்ற மூவாயிர ப்ரபந்தமும். இப்படி ஆழ்வார் பதின்மராலும் அருளிச்செய்யப்பட்ட ஸமஸ்த திவ்ய ப்ரபந்தங்களும். அன்றிக்கே, ஒரு மூன்று என்றது - திருவிருத்தமும், திருவாசிரியமும், பெரியதிருவந்தாதியும் என்று பொருளாகவுமாம்.

விளக்கம் - இதனைக் கேட்ட சிலர் திருவரங்கத்தமுதனாரிடம், "ஆனால் அத்யயனம் செய்விக்கும் ஒருவர், குறைந்த புத்தி உள்ளவர்களுக்கு மீண்டும் மீண்டும் உரைத்து, அவர்கள் அதனைக் கற்கும்வரை முயல்வார்கள். அது போன்று நீரும் செய்ய வேண்டாமோ?", என்று கேட்டனர். இதற்கு, நாராயண ஸூக்தம் - யச்ச கிஞ்சித் ஜகத் ஸர்வம் த்ருச்யதே ச்ரூயதேபி வா அந்தர் பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்தித: - இந்த ப்ரபஞ்சம் முழுவதிலும் காணப்படுவதும், கேட்கப்படுவதும், உள்ளிலும், புறத்திலும் என முழுவதும் வ்யாபிக்கப்பட்டிருப்பது அந்த பரமாத்மாவான நாராயணனே ஆவான் - என்றும், திருவாய்மொழி (1-2-10) - எண்பெருக் கந்நலத்து ஒண்பொரு ளீறில வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸ்ரீமந்நாராயணனுடைய ப்ரபாவங்களை முன்னிட்டு திருமந்த்ரத்தை உபதேசிப்பது போன்று, தாமும் முன்பு அருளிச்செய்த "ராமாநுஜ" என்ற நான்கு எழுத்து மந்திரத்தை முன்னிட்டு எம்பெருமானாருடைய ப்ரபாவத்தின் வர்ணனையை அருளிச்செய்கிறார். (சொல்லார் தமிழொரு மூன்றும்) - திருவாய்மொழி (1-2-11) – சீர்த்தொடை ஆயிரம் – என்றும், நாதமுனிகள் அருளிச்செய்த திருவாய்மொழி தனியன் – சடகோப வாங்மயம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப மென்னையானதும் மெய்யான பொருளை உணர்த்துவதும் ஆகிய சொற்கள் நிறைந்த தமிழ்; அதாவது திருவாய்மொழி. இங்கு "தமிழொரு" என்பதில் காணப்படும் "ஒரு" என்ற பதம், காகாக்ஷி ந்யாயத்தின்படி [காகத்திற்கு கண் இந்த்ரியம் ஒன்றாயிருப்பினும், அந்த ஒரு இந்த்ரியமே இரு விழிகளிலும் சென்று பார்வையை உண்டாக்குவது காகாக்ஷி ந்யாயம் எனப்படும்] முன்பும் பின்பும் உள்ள சொல்லுடன் சேர்க்கப்பட்டு, "தமிழ் ஒரு" என்றும், "ஒரு மூன்று" என்றும் கொள்ளப்படலாம். "ஒரு தமிழ்" என்று கொள்ளும்போது "ஒரு தமிழ் மூன்று" என்று பொருள்; அதாவது, மூன்று லோகங்களிலும், மூன்று வேதங்களிலும் திருவாய்மொழிக்குச் சமமான உயர்ந்த ப்ரமாணம் வேறு ஏதும் இல்லை என்று பொருள். இதனை "ஒரு மூன்றும்" என்று கொள்ளும்போது, அந்த ஒரு திருவாய்மொழியில் கூறப்பட்டதை மூன்று விதங்களாகக் கூறப்படுவதாய், இவற்றைப் போன்று மற்றொன்று இல்லை என்பதான மற்ற மூவாயிரம் பாசுரங்கள் என்று பொருள். அல்லது "ஒரு மூன்று" என்பதன் மூலம் திருவிருத்தம், திருவாசிரியம் மற்றும் பெரியதிருவந்தாதி ஆகியவை கூறப்பட்டன எனலாம்.

வ்யாக்யானம் - அன்றிக்கே, (சொல்லார் தமிழொரு மூன்று) சொல் நிரப்பத்தை யுடைத்தாய், அத்விதீயமாய், இயல் இசை நாடக ஸம்பந்தத்தாலே மூன்று வகைப்பட் டிருந்துள்ள தமிழென்னவுமாம். (சுருதிகள் நான்கும்) ப்ரமாணாந்தரங்களைப்போலே அநித்யமாயும் ஸாபேக்ஷமாயுமிருக்கை யன்றிக்கே, "வாசா விரூப நித்யயா" என்கிறபடியே நித்யமாய், அபௌருஷேயமாய், ஸ்வத:ப்ரமாணமாய் புஸ்தக நிரீக்ஷணாதி ஸாத்யமன்றிக்கே, "ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய:" என்கிறபடியே ஆசார்யோச்சாரணா நுச்சாரணாத்மகாத்யயந ஸாத்யமாய், "ரிசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச" என்னும்படியான பேர்களையுடைத்தாய்க் கொண்டு நாலுவகைப்பட்டிருக்கிற வேதங்களும். (எல்லையில்லாவற நெறி) அந்த வேதங்களுடைய அர்த்த ப்ரகாசகங்களாய் தொடையிட்டுச் சொல்லவொண்ணாதபடி அநந்தமாய் தர்மமார்க்கங்களை. (யாவுந் தெரிந்தவன்) வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார் யோபயவேதாந்தாசார்ய ராகையாலே இவையெல்லாவற்றையும் அலகலகாக ஆராய்ந்திருக்குமவராய்.

விளக்கம் - அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். (சொல்லார் தமிழொரு மூன்று) – ஏற்ற சொற்கள் நிரம்பி உள்ளதாகவும், இதனைப் போன்று இரண்டாவது ஏதும் இல்லை என்னலாம்படி உள்ளதாகவும், இயல் இசை நாடகம் ஆகியவற்றின் தொடர்பு கொண்டுள்ளதால் மூன்றுவகைப்பட்டுள்ளதாகவும் உள்ள தமிழ் என்றும் கொள்ளலாம்; இப்படிப்பட்ட தமிழில் உள்ள ஆழ்வார் பாருரங்கள். (சுருதிகள் நான்கும்) - மற்ற ப்ரமாணங்கள் போன்று நிலையற்றதாகவும், பலன்களை எதிர்பார்ப்பதாகவும் இல்லாமல்; வாசா விரூப நித்யயா - என்றும் உள்ள வேதங்களால் - என்பதற்கு ஏற்ப எப்போதும் உள்ளதாகவும், மனிதர்களால் செய்யப்படாததாகவும், தானாகவே ப்ரமாணமாக உள்ளதாகவும், நூல்களைக் கொண்டு படித்து மட்டுமே நிச்சயித்து அறிவதற்கு இயலாததாகவும், ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய: - தன்னுடைய சாகையை அத்யயம் மூலமே கற்கவேண்டும் – என்பதற்கு ஏற்ப அத்யாபகன் ஒருவனுடைய உச்சரிப்பைக் கேட்டு அதனைப் பின்பற்றி உச்சரித்து மீண்டும் மீண்டும் அத்யயனம் செய்தால் மட்டுமே அறியப்படக்கூடியதாகவும், ரிசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச – ருக், யஜுர், ஸாமவேதங்களும், அப்படியே அதர்வணமும் – என்பதற்கு ஏற்ப பெயர்கள் கொண்டதாகவும் உள்ள நான்கு வகைப்பட்ட வேதங்களும். (எல்லை இல்லா அறநெறி) – அத்தகைய வேதங்களுடைய ஆழ்பொருள்களை வெளிப்படுத்துபவையும், இந்த அளவு

என்று எண்ணி உரைக்க இயலாதபடியும் உள்ள எண்ணற்ற தர்மார்க்கங்களை. (யாவும் தெரிந்தவன்) - வேதமார்க்கத்தை நிலை நிறுத்தியவரும், உபயவேதாந்தங்களில் தேர்ந்தவரும் ஆகையால் இவை அனைத்தையும் ஒவ்வொரு பகுதியாக நன்றாக ஆராய்ந்துள்ளவர்.

வ்யாக்யானம் - (எண்ணருஞ்சீர்) இவர் பகவதவதாரமாகையாலே, "ஸங்க்யாதும் நைவ சக்யந்தே குணா" என்னும்படி அநந்த கல்யாண குணாகரராய். "ந தஸ்ய ஈசே கச்சந தஸ்ய நாம மஹத்யச:" என்னும்படியான அவனுடைய கீர்த்தியை பரிச்சேதிக்கிலும் இவருடைய கீர்த்தியை பரிச்சேதிக்கவொண்ணாது காணும். அன்றிக்கே, "எண்ணருஞ்சீர்" என்றது , "நல்லோர்" என்ற பதத்துக்கு விசேஷணமாகவுமாம்; அப்போது, "வாசாம் அகோசர மஹாகுண தேசிகாக்ர்ய கூராதிநாத" என்கிறபடியே எண்ணித் தலைக்கட்டவரிதான கல்யாணகுணங்களையுடையரான ஆழ்வான், பிள்ளான் எம்பார், தொடக்கமானா ரென்றபடி. (நல்லார் பரவும்) – "ஜயதி ஸகலவித்யா வாஹிநீ ஜந்ம சைல:" இத்யாதியாலும், "காதா தாதாகதாநாம்" இத்யாதியாலும், "வாழியெதிராசன்" இத்யாதியாலும் அந்த ஸத்துக்களுடைய ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே அடைவுகெட ஏத்தும்படியிருக்கிற.

விளக்கம் – (எண்ணருஞ்சீர்) – எம்பெருமானார் பகவானுடைய அவதாரமாகவே உள்ளதால், ஸங்க்யாதும் நைவ சக்யந்தே குணா - குணங்களை எண்ண இயலாது - என்பதற்கு ஏற்ப, எண்ணற்ற திருக்கல்யாண குணங்களைக் கொண்டவராக. நாராயணவல்லீ (1-2) - ந தஸ்ய ஈசே கச்சந தஸ்ய நாம மஹத்யச: - இவனுக்கு ஈச்வரன் யாரும் இல்லை, இந்த உலகின் காரணம் அவனே என்பது ப்ரஸித்தம் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய கீர்த்தியை அறிய முயன்றால் அது இயலும், ஆனால் இவருடைய கீர்த்தியை அவ்விதம் செய்ய இயலாது என்னும்படி உள்ளவர். அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். "எண்ணருஞ்சீர்" என்னும் சொல்லை, "நல்லோர்" என்ற சொல்லிற்குச் சிறப்பு சேர்ப்பதற்காக அமைக்கப்பட்டது எனலாம்; இவ்விதம் கொண்டால், யதிராஜ விம்சதி (14) – வாசாம் அகோசர மஹாகுண தேசிகாக்ர்ய கூராதிநாத - இத்தனை என்று அளவற்று உள்ளதால் வாய்கொண்டு வர்ணிக்க இயலாதபடியும், ஒவ்வொரு

குணமும் எத்தனை அனுபவித்தாலும் அனுபவித்து முடிக்க இயலாதபடியான பெருமையையுடன் கூடியதுமான நற்குணங்களையுடைய ஆசார்ய ச்ரேஷ்டராகிய கூரத்தாழ்வான் - என்பதற்கு ஏற்ப, உரைக்க முயன்று முடிக்க இயலாதபடி உள்ளதான திருக்கல்யாணகுணங்கள் கொண்டவர்களான ஸ்வாமி கூரத்தாழ்வான், திருக்குருகைப் பிரான்பிள்ளான், எம்பார் தொடக்கமாக உள்ள பலரும் என்று கருத்து. (நல்லார் பரவும்) - யதிராஜ ஸப்ததி (28) - ஜயதி ஸகலவித்யா வாஹிநீ ஜந்ம சைல: - அனைத்து வித்யைகளும் நதி போன்று ப்ரவாகம் எடுப்பதாக உள்ள மலை போன்று - என்றும், யதிராஜ ஸப்ததி (70) - காதா தாதாகதாநாம் களதி கமநிகா காபிலீ க்வாபி லீநா க்ஷீணா காணாத வாணீ த்ருஹிண ஹர கிர: ஸௌரபம் நாரபந்தே க்ஷாமா கௌமாரில உக்தி: ஜகதி குருமதம் கௌரவாத் தூரவாந்தம் கா சங்கா சங்கர ஆதே: பஜதி யதி பதௌ பத்ர வேதீம் த்ரிவேதீம் - மூன்று வேதங்கள் மூலம் அமைக்கப்பட்ட ஸிம்ஹாஸனத்தை அடைந்து அதில் யதிராஜர் எழுந்தருளினார். உடனே நிகழ்ந்தது என்ன? பௌத்தர்களின் வாதம் உடனே நழுவியது. கபிலர் உபதேசித்த மார்க்கம் எங்கோ சென்று பதுங்கியது. காணாதரின் உபதேசம் மறைந்தது. நான்முகன், சிவன் ஆகியோரின் மதங்கள் நறுமணம் இழந்தன. குமாரிலபட்டரின் வாதம் தோற்றது. பிரபாகரரின் மதம் கற்பனை அதிகமாக உள்ளதென்று விலக்கப்பட்டது. சங்கரர் போன்றோர் வாதமும் கண்டிக்கப்பட்டதைக் கூற வேண்டுமா - என்றும், ஆர்த்தி ப்ரபந்தம் (1) – வாழி எதிராசன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அத்தகைய ஸாதுக்களால் அவர்களுடைய அளவற்ற ப்ரீதி காரணமாகப் புகழ்ந்து ஏத்தும்படி உள்ள.

வ்யாக்யானம் - (இராமானுசன் திருநாமம்) எம்பெருமானாருடைய திருநாமம். ராமானுசன் என்கிற இத்திருநாமத்தை. (நம்பிக் கல்லார்) இவருடைய ப்ரபாவத்தையறிந்து விச்வஸித்து இவருக்குத் திருநாமமான சதுரக்ஷரி மந்த்ரத்தை அப்யஸியாதே போனார்கள். "பாதாங்குஷ்டேந சிக்ஷேப ஸம்பூர்ணம் தச யோஜநம்; பிபேத ச புந: ஸாலாந் ஸப்தைகேந மஹேஷ்வாஸா, கிரிம் ரஸாதலம் சைவ ஜநயந் ப்ரத்யயம் ததா; தத: ப்ரீதமநாஸ்தேந விச்வஸ்த: ஸ மஹாகபி:" என்கிறபடியே குரங்கானாலும் மஹாராஜர், ப்ரத்யயம் பண்ணின பின்பு விச்வசித்தாரிறே; இவர்கள் ஸதஸத் விவேசநம் பண்ணுகைக்கு யோக்யரான மநுஷ்யராயிருந்தும், நம்மை எம்பெருமானார் விஷயீகரித்தபடியைத் தெளிவித்து ப்ரத்யயம் பண்ணிக் கொடுத்தாலும், இவர்கள் விச்வஸிக்க மாட்டாதே போனார்கள்; இவர்கள் அபாக்யத்தின் க்ரௌர்யமென்னென்று இன்னாதாகிறார்.

விளக்கம் - (இராமாநுசன் திருநாமம்) - எம்பெருமானாருடைய திருநாமம். இந்த "இராமாநுசன்" என்னும் திருநாமத்தை. (நம்பிக் கல்லார்) - எம்பெருமானாருடைய ப்ரபாவத்தை நன்றாக அறிந்து, அதனைக் குறித்து ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, அவருடைய திருநாமமாக உள்ள "ராமாநுச" என்ற நான்கு எழுத்து திருமந்த்ரத்தைக் கற்காமல் பலரும் உள்ளனர். இராமாயணம் பாலகாண்டம் (1-65, 66, 67) - பாதாங்குஷ்டேந சிக்ஷேப ஸம்பூர்ணம் தச யோஜநம்; பிபேத ச புந: ஸாலாந் ஸப்தைகேந மஹேஷ்வாஸா, கிரிம் ரஸாதலம் சைவ ஜநயந் ப்ரத்யயம் ததா; தத: ப்ரீதமநாஸ்தேந விச்வஸ்த: ஸ மஹாகபி: - (சுக்ரீவனின் ஐயத்தை உணர்ந்த இராமன்) எலும்புகளின் குவியல்களை, தனது திருவடியின் கட்டைவிரல் கொண்டு பத்து யோஜனை தூரம் தூக்கி எறிந்தான்; மேலும் அவனுக்கு நம்பிக்கை உண்டாக்குவதற்காக ஒரே ஒரு பாணம் கொண்டு ஏழு ஆச்சா மரங்களையும், மலையையும், ரஸாதலத்தையும் ஒருங்கே துளைத்தான்; இப்படிப்பட்ட அரிய செயல்களைக் கண்ட அந்த பெருவானரனாகிய சுக்ரீவன் நம்பிக்கையால் மனநிறைவு கொண்டான் - என்பதற்கு ஏற்ப சுக்ரீவன் வானரமாக உள்ளபோதிலும் இராமன் தனது வலிமையை நிரூபித்தவுடன் நம்பினான். ஆனால் இந்த மனிதர்கள், "ஸத் எது, அஸத் எது" என்று பிரித்து அறியும் புத்தி உள்ளவர்களாக உள்ளபோதிலும், நம்மை எம்பெருமானார் ஏற்றுக்கொண்டதை உணர்த்தி நிரூபித்தாலும், இவர்கள் நம்பிக்கை அற்றவர்களாகவே உள்ளனரே; இவர்களுடைய பாக்யம் இன்மையின் கொடுமை எத்தகையது என்று வேதனைப்படுகிறார்.

45. பேறு ஒன்று மற்றில்லை நின் சரண் அன்றி அப்பேறு அளித்தற்கு
ஆறு ஒன்றும் இல்லை மற்றச் சரணன்றி என்று இப்பொருளைத்
தேறும் அவர்க்கும் எனக்கும் உனைத்தந்த செம்மை சொல்லால்
கூறும் பரம் அன்று இராமானுசா மெய்ம்மை கூறிடிலே.

விளக்கவுரை – உடையவரே! உமது திருவடிகளைத் தவிர்த்து நாங்கள் பெறும் புருஷார்த்தம் வேறு ஏதும் இல்லை. இத்தகைய உயர்ந்த பேற்றினை உமது திருவடிகள் தவிர வேறு ஏதும் அளிக்காது. இவற்றைப் பெறும் உபாயம் வேறு ஏதும் இல்லை. எம்பெருமானாரின் திருவடிகளைக் கண்டு உணர்ந்த நமக்கு – பரமபதமும் உயர்ந்த இடம்

அன்று, பகவத் ப்ராப்தியும் உயர்ந்த உபாயம் அன்று, பக்தியோகமும் உயர்ந்தது அன்று. இப்படிப்பட்ட உமது திருவடிகளின் உன்னதமான தன்மையை அறிந்தவர்கள்; இதனை அறியாமல் உள்ள நான் – ஆகிய இரு பிரிவினருக்கும் உமது செம்மையான திருக்கல்யாண குனங்களை, எந்தவிதமான வேறுபாடும் பாராமல் அருளினீர்! ஒரு பொருள் கொடுத்தால், அதற்குப் பதில் ஒரு துணி கொடுப்பது போல் அல்லாமல், எங்களிடம் இருந்து எதனையும் எதிர்பாராமல், உம்மையே அல்லவா நீவிர் எங்களுக்குக் கொடுத்துவிட்டீர்! இப்படிப்பட்ட உமது திருக்கல்யாண குணத்தை உண்மையாகவே, உள்ளது உள்ளபடி கூற வேண்டுமானால், அது அரிய செயலாகவே அமையும்.

அவதாரிகை - கீழில்பாட்டில், அஜ்ஞராய்ப் போருகிற மநுஷ்யர் படியைச் சொல்லி விஷண்ணராய், இதிலே அப்படிப்பட்ட அஜ்ஞரிலே அந்யதமராய்ப் போந்த நம்மை நிர்ஹேதுகமாக விஷயீகரித்து, தம்முடைய திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமென்று விச்வஸித்திருக்கும்படி பண்ணின உபகாரத்தை யநுஸந்தித்து, அப்படிப்பட்ட ப்ரபாவத்தைக் கொண்டாடுகிறேனென்று சொல்ல வொருப்பட்டால் அதுவே நமக்கு வாசாமகோசரமா யிருந்ததென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் மனிதர்களின் தன்மையைக் கூறி வருந்தினார். இந்தப் பாசுரத்தில் – அத்தகைய அறியாமை நிறைந்தவர்களில், [எம்பெருமானாருடைய ப்ரபாவம் அறிந்த காரணத்தால்] வேறாக நிற்கும் நம்மை எந்தவிதமான காரணமும் இன்றி ஏற்றுக்கொண்டு, தன்னுடைய திருவடிகளே அடையத்தக்கதாகவும், அடைவிப்பதாகவும் உள்ளதாகும் என்று நம்மை விச்வாசம் கொள்ளும்படியாகச் செய்த உபகாரத்தை எண்ணியபடி இருந்து, அப்படிப்பட்ட ப்ரபாவத்தைக் கொண்டாடப்போகிறேன் என்று முயன்றால், அதுவும் நம்முடைய வாக்குக்கும் மனதிற்கும் எட்டாது – என்கிறார்.

வ்யாக்யானம் - (பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி) “ஆநந்தோ ப்ரஹ்ம”, “ரஸோவைஸ:” இத்யாதிகளாலே ஸர்வேச்வரனே யென்றும் ப்ராப்யம் என்று சொல்லுகையாலும், “ஆசார்யதேவோ பவ”, “குருரேவ பரம் ப்ரஹ்ம”, “பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யதாரிஷம்” இத்யாதிகளாலே ஸர்வேச்வரனே

ஆச்ரயணீயனென்று நிஷ்கர்ஷிக்கப்படுகையாலும், "பாதிநாந்யத்ர" என்கையாலே - ஆசார்யத்வம் எம்பெருமானாரிடத்திலே தானே வ்யவஸ்த்திதமாயிருக்கையாலும், அவருடைய திருவடிகளே ப்ராப்யமென்று நிஷ்கர்ஷித்தருளினார்.

விளக்கம் - (பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி) - ஆனந்தோ ப்ரஹ்ம: - ப்ரஹ்மம் ஆனந்தமயமானது – என்றும், ரஸோவைஸ: - ரஸமயமானவன் – என்றும் உள்ள வாக்கியங்களில் ஸர்வேச்வரனே எப்போது அடையத்தக்கவன் என்று கூறுவதாலும், ஆசார்யதேவோ பவ –ஆசார்யன் தேவதையைப் போன்று பூஜிக்கத்தக்கவன் – என்றும், குருரேவ பரம் ப்ரஹ்ம – குருநாதன் ப்ரப்ரஹ்மமே ஆவார் – என்றும், பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யதாரிஷம் - என்றும் உள்ள வாக்கியங்கள் மூலம் [ஆசார்ய ரூபத்தில் உள்ள] ஸர்வேச்வரனே அண்டி நிற்கத்தக்கவன் என்று உறுதிபட உரைப்பதாலும், பாதிநாந்யத்ர – அதனைக் காட்டிலும் வேறு இல்லை - என்பதால், ஆசார்யத்தன்மை என்பது எம்பெருமானாரிடம் தானாகவே உறுதிபட உள்ளதாலும், அவருடைய திருவடிகளே அடையப்படத்தக்கது என்று உறுதியாக உரைத்தார்.

வ்யாக்யானம் - (பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி) "ந குரோர் பரஸ் த்ராதா" என்கிறபடியே வகுத்த சேஷியான தேவரீருடைய திருவடிகளே புருஷார்த்தமென்றிருக்கிற நமக்கு அத்திருவடிகளை யொழிய வேறொரு ப்ராப்யமில்லை. "ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி", "ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி", "ரஸாம் ஹ்யேவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி", இத்யாதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்ட ப்ரதம பர்வத்துக்கும், "குருரேவ பரம் ப்ரஹ்ம", "உபாய உபேய பாவேந தமேவ சரணம் வ்ரஜேத்" இத்யாதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்ட சரமபர்வத்துக்கு முண்டான வாசியறியாதவர்களுக்கிறே ப்ரதம பர்வம் ப்ராப்யமாகிறது; "அத்ர பரத்ர சாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம்" என்றிறே ஆளவந்தார் சந்தையும், ஸர்வத்ர அவதாரணத்தாலே இந்த அதிகாரிக்கு ஆசார்யன் திருவடிகளே ப்ராப்யமென்றதாய்த்து.

விளக்கம் - (பேறொன்று மற்றில்லை நின் சரணன்றி) - ந குரோர் பரஸ் த்ராதா – குருநாதன் அல்லாமல் நம்மைக் காக்கக் கூடிய உயர்ந்தவர்கள் யாரும் இல்லை - என்பதற்கு ஏற்ப இயல்பான எஜமானனாக உள்ள உம்முடிடைய திருவடிகள் மட்டுமே

உயர்ந்த புருஷார்த்தம் என்றுள்ள நமக்கு அந்தத் திருவடிகள் அல்லாமல் அடையத்தகுந்தது வேறு ஏதும் இல்லை. முண்டக உபநிஷத் – ப்ரஹ்மவேத ப்ரஹ்மைவ பவதி – ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான் – என்றும், சாந்தோக்ய உபநிஷத் (4-15-6) - வித்யுதம் தத்புருஷோ அமாநவ: ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி - வித்யுத் புருஷன் எனப்படும் அமாநவன் என்பவன் இவர்களை ப்ரஹ்மத்திடம் இட்டுச் செல்கிறான் - என்றும், தைத்திரீயம் ஆனந்தவல்லீ (7-1) – ரஸாம் ஹ்யேவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி – ரஸமயமான ப்ரஹ்மத்தை அடைந்த ஜீவனும் ஆனந்தமயமாகிறான் – என்றும் விவரிக்கப்பட்ட முதல் நிலையான ஸர்வேச்வரனிடம் உள்ள பக்திக்கும், குருரேவ பரம் ப்ரஹ்ம – குருநாதன் ப்ரப்ரஹ்மமே ஆவார் – என்றும், உபாய உபேய பாவேந தமேவ சரணம் வ்ரஜேத் – உபாயமாகவும் உபேயமாகவும் குருநாதனுடைய திருவடிகளையே சரணம் அடையவேண்டும் – என்றும் விவரிக்கப்பட்ட இறுதிநிலையான ஆசார்யனிடம் உள்ள பக்திக்கும் வேறுபாடு அறியாதவர்களுக்கு மட்டுமே முதல் நிலை என்பது அடையத்தகுந்தாக உள்ளது. ஸ்தோத்ரரத்னம் – அத்ர பரத்ர சாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம் – (நாதமுனிகள் குறித்து உரைப்பது) யாருடைய திருவடிகள் இங்கும் அங்கும் என்று மற்ற உபாயம் எதுவும் வேண்டாதபடி எனக்குச் சரணமாகும் - என்று கூறுவதன் மூலம் ஆளவந்தாரின் வாக்கியமும், தேறிய பொருளின் காரணமாக இந்த அதிகாரிக்கு ஆசார்யன் திருவடிகளே அடையத்தகுந்தது என்று கூறுவதாயிற்று.

வ்யாக்யானம் – (அப்பேறளித்தற்காறொன்றுமில்லை மற்றச் சரணன்றி) “உபாயோபாய பாவேந தமேவ சரணம் வ்ரஜேத்” என்றும், “ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே” என்றும் நிஷ்கர்ஷித்தபடியே அந்தத் திருவடிகளையொழிய வேறொரு உபாயமில்லை. “ந குரோர் பரஸ் த்ராதா”, “குரோரந்யம் ந பாவயேத்” என்கிறபடியே வேறொரு ப்ராபகாந்தர மில்லை. எம்பெருமானார் திருவடிகளைக் கண்டு கொண்ட நமக்கு, “எம்மா வீடு” என்கிறபடியே எத்தனை விலக்ஷணமானாலும் பரமபதமும் ப்ராப்யமன்று, “பஜந ஸுகமேகஸ்ய விபுலம்” என்கிற பக்தியோகமும் உபாயமன்று, “வேதமொரு நான்கின் உட்பொதிந்த மெய்ப்பொருளும் கோதில் மனு முதல் நூல் கூறுவதும் தீதில் சரணாகதி தந்த தன் இறைவன் தாளே அரணாகும் என்னும் அது” என்னுமிவ் வர்த்தத்தை அருளாளப்பெருமா ளெம்பெருமானாரும் அருளிச்செய்தாரிறே. “காலத்ரயேபி” இத்யாதியாலே இது தன்னை ஜீயருமநுஸந்தித் தருளினாரிறே.

விளக்கம் - (அப்பேறளித்தற்காறொன்றுமில்லை மற்றச் சரணன்றி) உபாய உபேய பாவேந தமேவ சரணம் வ்ரஜேத் – உபாயமாகவும் உபேயமாகவும் குருநாதனுடைய திருவடிகளையே சரணம் அடையவேண்டும் – என்றும், ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே – என்றும் உறுதிபட உரைத்தபடி, அடையத்தகுந்த இலக்காக உள்ள எம்பெருமானின் திருவடிகளை அடையும்படிச் செய்விப்பது என்பது எம்பெருமானாருடைய திருவடிகள் அல்லாமல் வேறு உபாயம் இல்லை. எம்பெருமானாருடைய திருவடிகளைக் குறித்து அறிந்து, அவற்றைப் பற்றிய நமக்கு, திருவாய்மொழி (2-9) – எம்மாவீடு - என்பதற்கு ஏற்ப எத்தனை மேன்மையானது என்றாலும், அத்தகைய பரமபதம் கூட அடையத்தக்கது அல்ல, பஜந ஸுகமேகஸ்ய விபுலம் - என்று கூறப்படும் பக்தியோகமும் உபாயம் அல்ல, ஸித்திர்ப் பவதி வா நேதி ஸம்சயோச்யுத ஸேவிநாம் - எம்பெருமானைப் பற்றினவர்களுக்குப் பேற்றில் ஐயம் உண்டு – என்பதற்கு ஏற்ப சந்தேகிக்கும்படியான பகவத் சரணாகதியும் உபாயம் அல்ல. இந்தக் கருத்தை அருளாளப்பெருமானார் எம்பெருமானார் - ஞானஸாரம் (31) - வேதமொரு நான்கின் உட்பொதிந்த மெய்ப்பொருளும் கோதில் மனு முதல் நூல் கூறுவதும் தீதில் சரணாகதி தந்த தன் இறைவன் தாளே அரணாகும் என்னும் அது - சரணாகதி என்பதைக் காட்டித் தந்த தன்னுடைய தெய்வமாகிய ஆசார்யனுடைய திருவடிகளே தஞ்சமாகும் என்று கூறப்படும் சரணகதி தத்துவமே நான்கு வேதங்களில் மறைவாக கூறப்பட்ட பொருளாகவும், மனு நீதி முதலான சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட பொருளாகவும் உள்ளன - என்று அருளிச்செய்தார். இதனையே, யதிராஜ விம்சதியில் (18) - காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத் க்ஷமைவ - ஒருவன் தனது மனம், வாக்கு, செயல் ஆகிய மூன்றின் மூலம் எண்ணற்ற பாவங்களைத் தொடர்ந்து செய்தபடி இருக்கலாம். அப்படிப்பட்டவனுக்கு மூன்று காலத்திலும் ஸ்ரீரங்கநாதனால் மட்டுமே அடைக்கலம் அளிக்க இயலும். ஆனால் அவனும் அதனை நேரடியாகச் செய்வதில்லை - என்று ஸ்வாமி மணவாளமாமுனிகளும் அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் - (என்றிப் பொருளைத் தேறுமவர்க்கும்) எம்பெருமானார் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமுமென்கிற இவ்வர்த்தத்தை, “ந ஸம்சயம் து தத் பக்த பரிசர்ய ரதாத்மானம்” என்கிறபடியே ஸம்சய விபர்யய நிரஸந பூர்வகமாகக் கொண்டு தத்வ யாதாத்ம்ய ஜ்ஞாநத்தாலே விச்வஸித்திருக்கு மவருக்கும். “வாசா யதீந்த்ர” இத்யாதியாலே சொல்லப்பட்ட அப்ரதிம ப்ரபாவரான ஆழ்வான், பிள்ளான் தொடக்கமானவர்களுக்கு

மென்றபடி. தேறுதல் – விச்வஸித்தல். (எனக்கும்) "வ்ருத்யா பசு:" இத்யாதிப்படியே அதிபாபிஷ்டனாய் அதிலே விச்வாஸலேசமில்லாத அடியேனுக்கும்.

விளக்கம் - (என்று இப்பொருளைத் தேறுமவர்க்கும்) எம்பெருமானாருடைய திருவடிகளே அடையத்தக்க இலக்காகவும், அதனை அடையும்படிச் செய்யவல்ல உபாயமாகவும் உள்ளன என்பதான இந்த ஆழ்பெருளை, ந ஸம்சயம் து தத் பக்த பரிசர்ய ரதாத்மானம் – எம்பெருமானுடைய அடியார்களின் அடியார்கள் எம்பெருமானை அடைவதில் ஐயம் இல்லை – என்பது போன்று எந்தவிதமான ஐயமும் இன்றி மிகவும் தெளிவாக உள்ள உண்மையான ஞானத்தின் மூலம் உறுதியாக நம்பியுள்ளவர்களுக்கும். இவர்கள் யார் என்றால், யதிராஜ விம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் – என்று கூறப்பட்டவராகிய, இவர்களைப் போன்று வேறு யாரும் இல்லை என்பது போன்ற ப்ரபாவங்கள் கொண்டவராகிய கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்களுக்கும் - என்று கருத்து. தேறுதல் என்றால் விச்வாஸத்துடன் இருத்தல். (எனக்கும்) – யதிராஜ விம்சதி (7) – வ்ருத்யா பசு: - எனது செயல்கள் அனைத்தும் விலங்குகளின் செயலாகவே உள்ளது - என்பதற்கு ஏற்ப மிகுந்த பாபங்கள் நிறைந்தவனும், எம்பெருமானார் திருவடிகள் மீது விச்வாஸம் முழுமையாக இல்லாதவனாகிய எனக்கும் [அதாவது அவர்களைப் போன்ற உயர்ந்தவர்களுக்கும், என்னைப் போன்ற தாழ்ந்தவர்களுக்கும்].

வ்யாக்யானம் - (இராமாநுசா) எம்பெருமானாரே. (உனைத் தந்த செம்மை) உன்னைத் தந்த செம்மை. ஜ்ஞாநாதிகரானவர்களுக்கும் அஜ்ஞனான எனக்குமுண்டான வாசி பாராதே, ஒரு வஸ்துவைக் கொடுக்குமிடத்தில் ததீயமாயிருப்பதொரு வஸ்த்வந்தரத்தைக் கொடுக்கையன்றிக்கே, தேவரீர் தம்மையே கொடுத்தருளினீர். "ப்ரஹ்மணே த்வா மஹச ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத" என்றும், "ஸ்வாத்மாநம் ச நிவேதயேத்" என்றும்

சொல்லுகிறபடியே நான் ஸ்வரூப ஸமர்ப்பணம் பண்ண வேண்டியிருக்க, தேவரீர் தம்மை அடியோங்களுக்காக்கினவிது அதரோத்தரமாய்த்து. "லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதம் இச்சதி" என்னுமாப்போலே யாய்த்து. "ஏஷ ஸர்வஸ்வ பூதோமே பரிஷ்வங்கோ ஹநூமத:" என்று பெருமாள், திருவடிக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணினாப்போலே நமக்கு இவரும் அப்படியே ஸர்வஸ்வதாநம் பண்ணுகிறார் காணும். (உனைத் தந்த செம்மை) இப்படி ஸர்வஸ்வதாநம் பண்ணுகைக்குடலான ஆர்ஜவ குணத்தை. (மெய்ம்மை கூறிடிலே) ஸத்யமாகச் செல்லப்புக்கால். உள்ளபடி பேசப்புக்கால். (சொல்லால் கூறும் பரமன்று) ஒரு வாசக சப்தத்தையிட்டு உள்ளபடி சொல்லவரிதாயிருக்கும். வாசா வ்யவஹரிக்க சக்யமாகிறதில்லை, அநுபவித்துக் குமிழ்நீருண்டு போமித்தனை என்றதாய்த்து.

விளக்கம் – (இராமாநுசா) – எம்பெருமானாரே. (உனைத் தந்த செம்மை) - உன்னை நீ எங்களுக்கு அளித்த எளிமை. அதாவது ஞானம் நிறைந்தவர்கள், அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் என் போன்றவர்கள் என்று எந்தவிதமான வேறுபாடும் ஆராயாமல். ஒரு பொருளை அளிக்கவேண்டும் என்று விரும்பி, உமக்கு அடிபணிந்து நிற்கும் ஏதோ ஒன்றை அளிக்காமல், உம்மையே அளித்தீர். தைத்திரீயம் நாராயணவல்லீ - ப்ரஹ்மவேத்வா மஹச ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத - ப்ரஹ்மம் ஆகிய உன்னை அடையும் பொருட்டு ஓம் என்ற மந்திரத்தை அநுஸந்தித்து - என்றும், ஸ்வாத்மாநம் ச நிவேதயேத் – ஆத்மாவை நிவேதனம் செய்து - என்றும் கூறுவதற்கு ஏற்ப, நாங்கள் எங்களுடைய ஆத்ம ஸ்வரூபத்தை உமக்குச் சமர்ப்பணம் செய்யவேண்டியதாக உள்ளபோது, நீவிர் உம்மை எங்களுக்கு ஆக்கி வைத்தீர்; இது மிகவும் உத்தமமான ஒன்றானது. இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் (4-18) – லோகநாத: புரா பூத்வா ஸுக்ரீவம் நாதம் இச்சதி – லோகநாதனாகிய இராமன் சுக்ரீவனை நாதனாக விரும்புகிறான் – என்பதற்கு ஏற்ப இந்தச் செயலானது, இராமாயணம் யுத்தகாண்டம் – ஏஷ ஸர்வஸ்வ பூதோமே பரிஷ்வங்கோ ஹநூமத: - ஹநுமானான திருவடிக்கு என்னால் கொடுக்கப்பட்ட இந்த ஆலிங்கனமானது - என்பதற்கு ஏற்ப இராமன் அனுமனுக்கு அனைத்து ஐச்வர்யத்தையும் அளித்தது போன்று, நமக்கு நீவிர் அளிப்பதற்குத் தேவையாக உள்ள உமது ஆர்ஜவ குணத்தை, (மெய்ம்மை கூறிடிலே) - உள்ளது உள்ளபடி உரைக்கவேண்டும் என்றால். (சொல்லால் கூறும் பரமன்று) – அதனைச் சொற்கள் கொண்டு கூற இயலாதபடியே

இருக்கும். அந்தக் குணத்தைச் சொற்கள் கொண்டு அடக்கக்கூடிய திறன் அந்தச் சொற்களுக்கு இல்லை; அதனை அனுபவித்து மட்டுமே உணர இயலும் என்று கருத்து.

46. கூறும் சமயங்கள் ஆறும் குலைய குவலயத்தே
மாறன் பணித்த மறை உணர்ந்தோனை மதியிலியேன்
தேறும்படி என் மனம் புகுந்தானைத் திசை அனைத்தும்
ஏறும் குணனை இராமானுசனை இறைஞ்சினமே

விளக்கவுரை - இந்த உடலே ஆத்மா என்றும், உடல் பரிணாமமே ஆத்மா என்றும், அணுவே ஆத்மா என்றும், ஞானம் மட்டுமே உள்ளது என்றும், சூன்யம் மட்டுமே உண்மை என்றும், ப்ரஹ்மம் என்பது குணங்கள் அற்றது என்றும், ப்ரஹ்மம் முதலான பலவும் மித்யா (பொய்) என்றும், ருத்ரனே பரமாத்மா என்றும் – பல்வேறு தாழ்வான, உண்மையற்ற கருத்துக்கள் கூறிய மதங்கள் அனைத்தும் நாசம் அடைந்தன. எப்போது? இந்த உலகத்தில், மயர்வறு மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் அவதாரம் செய்த காரணத்தால் புண்ணியம் அடைந்த உலகில், நம்மாழ்வாரால் அருளிச் செய்யப்பட்ட தமிழ் வேதத்தை அறிந்து, பரிபூர்ண ஞானம் பெற்ற எம்பெருமானாரின் வாதங்களால் ஆகும். அனைத்துத் திசைகளிலும் பரவிய தனது திருக்கல்யாண குணங்களால் புகழ் பெற்ற எம்பெருமானார், சிறிதும் ஞானம் இல்லாத எனது இதயத்தில் வந்து புகுந்து கொண்டார். இப்படியாக இவர் செய்த உபகாரத்திற்கு ஏற்ற கைம்மாறு தெரியாமல், அவரது திருவடிகளிலே பணிந்தேன்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டில் சொல்லுகிறபடியே ஸமஸ்த கல்யாண குணத்மகரானவர், தம்மை இவர்க்கு முற்றூட்டாகக் கொடுக்கையாலே அந்த உபகாரத்தை யநுஸந்தித்து விஸ்ரப்த்தராய்க் கொண்டு துஸ்தர்க்கங்களாய் கேவலம் உக்தி மாத்ர ஸாரங்களா யிருக்கிற பாஹ்ய ஸமயங்களாறும் குத்ருஷ்டி ஸமயங்களாறும் அடியோடே நசிக்கும்படி பூலோகத்திலே நம்மாழ்வாரருளிச்செய்த த்ரமிட வேதத்தை ஸார்த்தமாக அறிந்தவராய், ஸகல திக்வ்யாபையான ப்ரதையையுடையராய், அறிவுகேடனான நான் விச்வஸிக்கும்படி என்னுடைய மநஸ்ஸிலே ஸ்த்தாவர ப்ரதிஷ்டையாகப் புகுந்தருளின எம்பெருமானாரை ஆச்ரயிக்கிறோ மென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் கூறப்பட்டபடி அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்களும் நிரம்பப் பெற்ற எம்பெருமானார், தன்னை திருவரங்கத்தமுதனார் முற்றிலும் அனுபவிக்கும்படியாகச் செய்தார். அத்தகைய உபகாரத்தை எண்ணியவராக இந்தப் பாசுரத்தில் - தாழ்ந்த தர்க்கங்களாகவும், வெறும் பேச்சளவில் மட்டும் உள்ளதாகவும், வேறு ஆழ்ந்த பொருள் ஏதும் அற்றதாகவும், வேதங்களுக்கு விரோதமான பொருள்களை உரைப்பதாகவும் உள்ள ஆறு மதங்களும் அடியுடன் அழியும்படுயாக இந்த உலகத்தில் நம்மாழ்வார் அருளிச்செய்த தமிழ்வேதத்தை, அதன் ஆழ்பொருளுடன் அறிந்தவரும், அனைத்து திசைகளிலும் பரவி நிற்கும் முதன்மையைக் கொண்டவரும், தாழ்ந்த அறிவு கொண்ட நானும் கூட நம்பிக்கை கொள்ளும்படியாக எனது மனதில் நிலைத்து நிற்கும்படிப் புகுந்தவரும் ஆகிய எம்பெருமானாரை அண்டி நிற்கிறோம் - என்கிறார்.

வ்யாக்யானம் - (கூறுஞ்சமயங்களாறுங் குலைய) தேஹமே ஆத்மாவென்றும், தேஹபரிமாணமே ஆத்மாவென்றும், க்ஷணிக விஜ்ஞாநமே ஆத்மாவென்றும், ஜ்ஞாநமொன்றுமே உள்ளது என்றும், சூந்யமே தத்வமென்றும், ப்ரஹ்மம் நிர்க்குண மென்றும், நிராகாரமென்றும், அத்விதீயமென்றும், அவிபூதிகமென்றும், நிச்ஸ்ரீக மென்றும், விக்ரஹ குணங்களெல்லாம் ஸ்வரூப விகாரமென்றும், ப்ரஹ்ம வ்யதிரிக்த மெல்லாம் மித்யையென்றும், ருத்ரன் ஸர்வஸ்மாத்பரமென்றும், இப்படி ப்ரமாண தர்க்காநுக்ருஹீதங்களன்றிக்கே ஸ்வஸ்வாஜ்ஞாந விஜ்ரும்பிதங்களான ப்ரலாபங்களை அநேக ப்ரகாரமாக கத்தி கொண்டு போருகிற பாஹ்ய குத்ருஷ்டி ஷட்ஸமயங்களும் சிதிலமாய் நசித்துப் போம்படி.

விளக்கம் - (கூறும் சமயங்கள் ஆறும் குலைய) - சரீரமே ஆத்மா என்றும், சரீரத்தின் மாற்றங்களே ஆத்மா என்றும், நெடிப்பொழுதில் மாறியபடி உள்ளதே ஆத்மா என்றும், ப்ரஹ்மம் நிராகாரம் என்றும், ஞானம் மட்டுமே உள்ளது என்றும், சூந்யம் மட்டுமே உண்மையானது என்றும், ப்ரஹ்மம் எந்தவிதமான குணங்களும் அற்றது என்றும், ப்ரஹ்மத்திற்கு எந்தவிதமான விபூதிகளும் இல்லை என்றும், ப்ரஹ்மம் செல்வங்கள் அற்றது என்றும், ஸர்வேச்வரனுக்கு உள்ள திருமேனிகளில் கூறப்படும் குணங்கள் அனைத்தும் அவனுடைய ஸ்வரூபத்தில் கற்பிக்கப்படும் மாற்றங்கள் என்றும், ப்ரஹ்மம் தவிர்ந்த மற்ற அனைத்தும் இல்லாத ஒன்று என்றும், ருத்ரனே அனைத்தின் ஆத்மா என்றும் இப்படியாகப் பலவிதமாக ப்ரமாணங்கள் மூலம் உறுதியாக்காமல் அவரவர்கள்

ஞானத்திற்குத் தோன்றிய அனைத்துவிதமான ஸித்தாந்தங்களையும் உரைத்தபடி மற்ற மதங்கள் உள்ளன. இவை அனைத்தும் தகர்க்கப்பட்டு அழியும்படியாக.

வ்யாக்யானம் - (குவலயத்தே) "கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா: க்வசித் க்வசித் மகாபாகா த்ரமிடேஷு ச பூரிச: தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ காவேரீ ச மகாபாகா ப்ரதீசீ ச மகாநதீ" என்றும், "ஜாயதே" என்றும் கொண்டாடும்படி மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களுடைய திருவவதார ப்ரதேசமான பூலோகத்திலே, கலியுகத்திலே யென்றபடி. (மாறன் பணித்த) "உயர்வற வுயர்நல முடையவன் அயர்வறு மமரர்க ளதிபதி", "உளன் சுடர்மிகு சுருதியுள்", "நான்முகன் தன்னொடு தேவருலகொடு உயிர் படைத்தான்", "நாடி நீர் வணங்கும் தெய்வமும் உம்மையும் முன் படைத்தான்", "அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறை மார்பா", "அவாவில் அந்தாதி இப்பத்து அறிந்தார் பிறந்தார் உயர்ந்தே" என்று இப்படி நம்மாழ்வாராலே அருளிச்செய்யப்பட்ட. "மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும் தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல்" என்கிறபடியே ஆழ்வாராலே அருளிச் செய்யப்பட்டதாய், அர்த்தபஞ்சகத்தையும் அடைவே ப்ரதிபாதிக்கிற திருவாய்மொழி யென்றபடி. (மறையுணர்ந்தோனை) இப்படிப்பட்ட திருவாய்மொழியாகிற த்ரமிட வேதத்தை ஸார்த்தமாகத் தெளிந்து கொண்டிருக்கையாகிற பரிபூர்ண ஜ்ஞாநத்தை யுடையராய்.

விளக்கம் - (குலயத்தே) – ஸ்ரீமத்பாகவதம் (11-5-38, 39) - கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா: க்வசித் க்வசித் மகாபாகா த்ரமிடேஷு ச பூரிச: தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ காவேரீ ச மகாபாகா ப்ரதீசீ ச மகாநதீ - கலியுகத்தில் நாராயணனின் அடியார்கள் உயர்ந்த பக்தியுடன் கூடியவர்களாக திராவிட நாட்டின் இங்குமங்கும் பல இடங்களில் பிறப்பார்கள்; அவர்கள் தாமிரபரணி, வைகை, பாலாறு, காவேரி, மகாநதி ஆகிய நதிகள் ஓடும் இடங்களில் அவதரிப்பர் - என்றும், ஜாயதே – பிறத்தல் - என்றும் கொண்டாடப்படும்படியாக மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் அவதரித்த இடமான இந்தப் பூமியில், கலியுகத்தில். (மாறன் பணித்த) - திருவாய்மொழி (1-1-1) – உயர்வற உயர்நலம் உடையவன், அயர்வறும் அமரர்கள் அதிபதி – என்றும், திருவாய்மொழி (1-1-7) – உளன் சுடர்மிகு சுருதியுள் – என்றும்,

திருவாய்மொழி (4-10-1) – நான்முகன் தன்னொடு தேவருலகொடு உயிர் படைத்தான் - என்றும், திருவாய்மொழி (4-10-2) – நாடி நீர் வணங்கும் தெய்வமும் உம்மையும் முன் படைத்தான் - என்றும், திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறை மார்பா - என்றும், திருவாய்மொழி (10-10-11) – அவாவில் அந்தாதி இப்பத்து அறிந்தார் பிறந்தார் உயர்ந்தே - என்றும் நம்மாழ்வாரால் அருளிச் செய்யப்பட்ட. ஸ்வாமி பராசரபட்டர் அருளிச்செய்த திருவாய்மொழி தனியன் – மிக்க இறை நிலையும் மெய்யாம் உயிர் நிலையும் தக்க நெறியும் தடையாகித் தொக்கியலும் ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன் யாழினிசை வேதத்தியல் – என்பதற்கு ஏற்ப நம்மாழ்வாரால் அருளிச்செய்யப்பட்டதும், அர்த்தபஞ்சகத்தை முழுவதுமாகத் தன் மூலம் வெளிப்படுத்துவதும் ஆகிய திருவாய்மொழி என்று கருத்து. (மறையுணர்ந்தோனை) - இப்படியாக உள்ள திருவாய்மொழி என்னும் தமிழ்வேதத்தை, அதன் ஆழ்பொருளுடன் தெளிதல் என்பதான பரிபூர்ணமான ஞானத்தை உடையவராகவும்.

வ்யாக்யானம் - (திசையனைத்து மேறுங் குணனை) “திக்குற்ற கீர்த்தி யிராமாநுசன்” இத்யாதிகளிலும், “பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந:” இத்யாதிகளிலும், “காதா தாதா கதாநாம்” இத்யாதிகளிலும் சொல்லுகிறபடியே திகந்தரங்களிலே வ்யாப்ததையான கீர்த்தியை யுடையராய். (மதியிலியேன் தேறும்படி என் மநம் புகுந்தானை) ப்ரமாண கதிகளாலே தர்சித்து விச்வஸிக்கைக்குடலான ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாந சூந்யனாய், சுஷ்க ஹ்ருதயனாய், அவிவேகியாய்ப் போந்தவடியேன், கீழ்ச்சொன்ன ப்ரபாவத்தைத் தெளிந்து விச்வஸிக்கும்படி அடியேனுடைய மநஸ்ஸிலே ப்ரவேசித்து எனக்கு வகுத்த சேஷியான. (இராமாநுசனை) எம்பெருமானாரை. (இறைஞ்சினமே) அவ்வுபகாரத்துக்குத் தோற்று வணங்கினோம். அவருடைய குண க்ருஷ்டராய்க் கொண்டு காணும் இவர் அவர் திருவடிகளிலே வணங்குவது.

விளக்கம் - (திசையனைத்து மேறுங் குணனை) - இராமாநுச நூற்றந்தாதி (26) – திக்குற்ற கீர்த்தி இராமாநுசன் - என்றும், தாடீ பஞ்சகம் (1) – பாஷண்ட த்ருமஷண்ட தாவதஹந: - நாஸ்திகர்கள் பாஷண்டர்கள் எனப்படுபவர்; காட்டுத் தீ வளர்ந்தால் எவ்விதம் மரங்கள் அழியுமோ அது போன்று, எம்பெருமானார் பாஷண்டர்களை அழித்தார் – என்றும், யதிராஜ ஸப்ததி (70) - காதா தாதாகதாநாம் களதி கமநிகா காபிலீ க்வாபி லீநாக்ஷீணா

காணாத வாணீ த்ருஹிண ஹர கிர: ஸௌரபம் நாரபந்தே க்ஷமா கௌமாரில உக்தி: ஜகதி குருமதம் கௌரவாத் தூரவாந்தம் கா சங்கா சங்கர ஆதே: பஜதி யதி பதௌ பத்ர வேதீம் த்ரிவேதீம் - மூன்று வேதங்கள் மூலம் அமைக்கப்பட்ட ஸிம்ஹாஸனத்தை அடைந்து அதில் யதிராஜர் எழுந்தருளினார். உடனே நிகழ்ந்தது என்ன? பௌத்தர்களின் வாதம் உடனே நழுவியது. கபிலர் உபதேசித்த மார்க்கம் எங்கோ சென்று பதுங்கியது. காணாதரின் உபதேசம் மறைந்தது. நான்முகன், சிவன் ஆகியோரின் மதங்கள் நறுமணம் இழந்தன. குமாரிலபட்டரின் வாதம் தோற்றது. பிரபாகரரின் மதம் கற்பனை அதிகமாக உள்ளதென்று விலக்கப்பட்டது. சங்கரர் போன்றோர் வாதமும் கண்டிக்கப்பட்டதைக் கூற வேண்டுமா – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து திசைகளிலும் பரவி நிற்கும் கீர்த்தி உள்ளவராகவும். (மதியிலியேன் தேறும்படி என் மநம் புகுந்தானை) - என்பது போன்ற ப்ரமாணங்கள் மூலம் உணர்ந்து, ஆத்மஸ்வரூபத்தைக் குறித்த ஞானம் ஏதும் அற்றவனாகவும், ஈரம் அற்ற இதயம் கொண்டவனாகவும், விவேகம் அற்றவனாகவும் நான் இருந்தேன்; ஆனால் தன்னுடைய ப்ரபாவங்களை நான் நன்றாக உணர்ந்து, நம்பிக்கை கொள்ளும்படியாக எனது மனதில் புகுந்து எனது இயல்பான எஜமானராக உள்ள. (இராமாநுசனை) - எம்பெருமானாரை. (இறைஞ்சினமே) - அந்த உபகாரத்தினால் வெல்லப்பட்டு வணங்கினோம். எம்பெருமானாருடைய திருக்கல்யாணகுணங்களில் ஈடுபட்டவராக திருவரங்கத்தமுதனார் அவருடைய திருவடிகளில் பணிந்தார் என்று கருத்து.

47. இறைஞ்சப்படும் பரன் ஈசன் அரங்கன் என்று இவ்வுலகத்து
அறஞ்செப்பும் அண்ணல் இராமானுசன் என் அருவினையின்
திறஞ்செற்று இரவும் பகலும் விடாது என்தன் சிந்தையுள்ளே
நிறைந்தொப்பறவிருந்தான் எனக்கு ஆறும் நிகரில்லையே.

விளக்கவுரை – இந்த உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் சரணம் புக ஏற்றவனாகவும், அனைத்து ஆத்மாக்களின் தலைவனாகவும், அனைத்திற்கும் ஸ்வாமியாக உள்ளவனும் யார் என்றால், திருவரங்கத்தில் கண்வளரும் பெரியபெருமாள் என்ற திருவரங்கச்செல்வனே ஆவான் – என்று, இப்படியாக இருள்தருமா ஞாலத்தில் உள்ள மக்களுக்கு உயர்ந்த உபாயத்தை எம்பெருமானார் அருளிச் செய்தார். இப்படிப்பட்ட உயர்ந்த தர்மத்தை இந்த உலக மக்களின் சுக-துக்கம் ஆகியவற்றைத் தன்னுடையதாகவே கொள்ளும் உறவினன் போன்ற எம்பெருமானார் உபதேசித்தார்.

இவர் எனக்குச் செய்த உதவி என்ன என்றால் – எத்தனை அனுபவித்தாலும், எத்தனை ப்ராயச்சித்தம் செய்தாலும் கழியாமல் எனது வினைப்பயன்கள் இருந்தன; அவற்றை அழித்தார்; அவை மீண்டும் என்னை அண்டிவிடாமல் தடுக்க, இரவு-பகல் பாராமல் இடைவிடாமல் எனது இதயத்தில் நிலையாக வீற்றிருந்தார். இத்தகைய இவரது வாத்ஸல்ய குணத்திற்கு ஈடில்லாமல் இருந்தார். இவ்விதம் எம்பெருமானாரை அடைந்துவிட்ட எனக்கு, இந்த உலகில் நிகரானவர்கள் யாரும் இல்லை.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே எம்பெருமானார், தம்முடைய திருவுள்ளத்திலே ப்ரகாசித்து உஜ்வலராக அவரை வணங்கினோமென்று சொல்லி, இதிலே – லோகத்தாரெல்லாரையும் குறித்து ஸர்வஸமாச்ரயணீயனான ஸர்வேச்வரன், கோயிலிலே ஸந்நிஹிதனாயிருந்தான்; அவனை ஆச்ரயியுங்கோளென்று பரம தர்மத்தை உபதேசித்த உபகாரகரான எம்பெருமானார், என்னுடைய ஆர்த்தாபராதங்களை நசிப்பித்து திவாராத்ர விபாகமற என்னுடைய ஹருதயத்திலே ஸுப்ரதிஷ்டிதராய், இவ்விருப்புக்கு ஸத்ருசமொன்றுமில்லை யென்னும்படி யெழுந்தருளியிருந்தார். இப்படியான பின்பு நமக்கு ஸத்ருசரொருவரு மில்லையென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் திருவரங்கத்தமுதனாராகிய தனது திருவுள்ளத்தில் எம்பெருமானார் ப்ரகாசித்து ஒளிர்ந்தபடி நின்றபோது, அவரை வணங்கியதைக் கூறினார். இந்தப் பாசுரத்தில் – அனைத்து லோகங்களிலும் உள்ளவர்களை நோக்கி எம்பெருமானார், "அனைத்து ஆத்மாக்களும் அண்டி நிற்கும்படியாக ஸர்வேச்வரன் திருவரங்கம் பெரியகோயிலில் மிகவும் அருகில் உள்ளான். அவனை அண்டுவீர்களாக" என்று மிகவும் உயர்ந்த தர்மத்தை உபதேசித்தார்; இப்படியாக உபகாரம் செய்தவராகிய எம்பெருமானார் எனது துன்பங்களை மற்றும் தவறுகளை அழித்து, இரவுபகல் என்று வேறுபாடு ஆராயாமல், எப்போதும் எனது உள்ளத்தில் நிலையாக நின்று, இவ்விதம் அவர் உள்ள நிலைக்கு இணையாக எத்னையும் காண இயலாது என்னும்படியாக எழுந்தருளியுள்ளார்; இவ்விதம் ஆன பின்னர் நம்மைப் போன்று இந்த உலகில் வேறு யாரும் இல்லை – என்கிறார்.

வ்யாக்யானம் – (இறைஞ்சப்படும்) "ஸம்ஸாரார்ணவ மக்நாநாம் விஷயாக்ராந்த சேதஸாம் விஷ்ணுபோதம் விநாநந்யத் கிஞ்சித் அஸ்திபராயணம்", "ஸர்வலோக சரண்யாய", "சரண்ய சரணம் ஸுஹ்ருத்", "சரண்ய ஸர்வலோகாநாம் பிதா மாதாச்ச மாதவ:" என்றும், "எழுவார் விடை கொள்வார் ஈன் துழாயானை வழுவா வகை நினைந்து வைகல் தொழுவார்" என்றும், "முழுவேழுலகுக்கும் நாதன்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வஸமாச்ரயணீயனாய்க் கொண்டு ப்ரஸித்தனாய். (பரன்) "பர: பராணாம்" என்கிறபடியே ஸர்வஸ்மாத்பரனான. (ஈசன்) ஸர்வேச்வரன். (அரங்கனென்று) அநந்தசாயித்வாதிகளாலே கோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளென்று.

விளக்கம் – (இறைஞ்சப்படும்) - ஸ்ரீவிஷ்ணுதர்மம் - ஸம்ஸாரார்ணவ மக்நாநாம் விஷயாக்ராந்த சேதஸாம் விஷ்ணுபோதம் விநாநந்யத் கிஞ்சித் அஸ்திபராயணம் – பிறப்பு என்னும் பெருங்கடலில் மூழ்கினவர்களாய், ஐம்புலன்களாகிற என்னும் நீர் வாழ் விலங்குகளால் இழுக்கப்படுகின்றவர்களாய் உள்ளவர்களுக்கு, எங்கும் நிறைந்திருக்கிற விஷ்ணுவாகிற ஓடத்தினைத் தவிர, சிறந்த கதி வேறு ஏதும் இல்லை - என்றும், ஸர்வலோக சரண்யாய – அனைத்து லோகங்களும் சரணம் புகத்தக்கவன் - என்றும், சரண்ய சரணம் ஸுஹ்ருத் – சரணம் அடையப்படும் இடம், நெருங்கிய நண்பன் - என்றும், சரண்ய ஸர்வலோகாநாம் பிதா மாதாச்ச மாதவ: - அனைத்தும் சரணம் புகும் தந்தையும் தாயும் மாதவனே ஆவான் – என்றும், முதல் திருவந்தாதி (26) - எழுவார் விடை கொள்வார் ஈன் துழாயானை வழுவா வகை நினைந்து வைகல் தொழுவார் - என்றும், திருவாய்மொழி (2-7-2) – முழுவேழுலகுக்கும் நாதன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்து உயிர்களும் அண்டி நிற்கும்படி உள்ளதால் மிகவும் ப்ரஸித்தி பெற்றவன். (பரன்) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-5-85) – பர: பராணாம் – உயர்ந்தவற்றைக் காட்டிலும் உயர்ந்தவன் - என்பதற்கு ஏற்ப அனைத்து ஆத்மாக்களிலும் உயர்ந்தவனாய். (ஈசன்) - ஸர்வேச்வரன். (அரங்கன்) – ஆதிசேஷன் என்னும் படுக்கையில் திருவரங்கத்தில் கண்வளர்கின்ற பெரியபெருமாளாகிய ஸ்ரீரங்கநாதன்.

வ்யாக்யானம் - அன்றிக்கே, (இறைஞ்சப்படும்) ஸர்வஸமாச்ரயணீயன். (ஈசன்) ஸர்வஸ்மாத்பரன். (ஈசன்) "ஸ்வாபாவிகா நவதிகாதிசயே சித்ருத்வம் நாராயண த்வயி ந ம்ருஷ்யதி" என்கிறபடியே ஸர்வஸ்வாமியானவன். இந்த மஹிமாவாந் ஆரென்னில்,

(அரங்கன்) அப்படிப்பட்டவன் எட்டாநிலத்திலேயிராதே இன்று ஸந்நிஹிதனாய் ஸுலபனாய்க் கோயிலிலே யெழுந்தருளியிருக்கிற திருவரங்கச்செல்வனார். (என்று) இப்படிப்பட்டவரென்று, (இவ்வுலகத்து) அதர்மாநுஸாரியான இந்த லோகத்திலே, அதர்மபூதமான இருள்தருமா ஞாலத்திலே யிருந்துள்ள ஜநங்களுக்கு. (அறஞ் செப்பும்) ஸாக்ஷாத் தர்மத்தை அருளிச்செய்யும். அன்றிக்கே, அப்படிப்பட்டவனை ஆச்ரயியுங்கோளென்று ஸம்ஸார நிஸ்தரணோபாயத்தை உபதேசித்தருளும்.

விளக்கம் – அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். (இறைஞ்சப்படும்) – அனைத்து உயிர்களும் அண்டி நிற்கும்படியாக உள்ளவன். (ஈசன்) – அனைத்தைக் காட்டிலும் உயர்ந்தவன். (ஈசன்) ஸ்தோத்ரரத்னம் (11) – ஸ்வாபாவிகா நவதிகாதிசயே சித்ருத்வம் நாராயண த்வயி ந ம்ருஷ்யதி - இயல்பாகவே உண்டானதும், தனக்கு மேற்பட்ட எல்லை அற்றதும் ஆகிய ஈச்வரனாக உள்ள தன்மை - என்பதற்கு ஏற்ப அனைத்திற்கும் எஜமானன். இப்படிப்பட்ட மகிமை பொருந்தியவன் யார் என்றால், (அரங்கன்) - அப்படிப்பட்டவன் நமக்கு எளிதில் காணக் கிடைக்காத பரமபதம் போன்ற இடங்களில் அல்லாமல், மிகவும் அருகில், எளிதாகக் காணவல்லவனாக திருவரங்கம் பெரியகோயிலில் எழுந்தருளியுள்ள திருவரங்கச்செல்வனார். (என்று) - இப்படிப்பட்டவன் என்று. (இவ்வுலகத்து) - அதர்மங்களை எப்போதும் செய்தபடி உள்ள இந்த லோகத்தில். திருவாய்மொழியில் (10-6-1) – இருள் தருமா ஞாலம் – என்பதாகக் கூறப்படும் இந்த உலகில் உள்ள அதர்ம வழியில் நிலைக்கும் மனிதர்களுக்கு. (அறம் செப்பும்) - எப்போதும் உயர்ந்த தர்மத்தை மட்டுமே உபதேசித்தபடி உள்ள. அல்லது, "அப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாதனை அண்டி நில்லுங்கள்" என்று ஸம்ஸாரத்திலிருந்து பிழைக்கும் உபாயத்தை உபதேசித்து அருளுகிற.

வ்யாக்யானம் - அன்றிக்கே, (இறைஞ்சப்படும்) தேவஜாதிக்கு ஒரு உபத்ரவம் வந்தால் அவர்களெல்லாருந் திரண்டு ப்ரஹ்மாவோடே கூடிப் போய்க் கூப்பிடும் கூப்பீடு கேட்கைக்காக வ்யூஹ ஸ்த்தாநமான திருப்பாற்கடலிலே கண் வளர்ந்து அவர்களாலே ஸேவிக்கப்படுமவன். இத்தால் வ்யூஹத்தைச் சொன்னபடி. (பரன்) "அயர்வறு மமரர்க ளதிபதியான" பரன். (ஈசன்) "அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா" என்கிறபடியே ஸர்வரையும் நியமிக்கைக்காக ஸர்வாந்தர்யாமியாயிருக்குமவன். இத்தால்

அந்தர்யாமித்வத்தைச் சொன்னபடி. (அரங்கன்) "அர்ச்சயஸ் ஸர்வஸஹிஷ்ணு: அர்ச்சக பராதீந அகில ஆத்ம ஸ்திதி:" என்னும்படியான அர்ச்சாவதாரங்களிலே வைத்துக் கொண்டு ப்ரதாநனாயிருக்குமவன். இத்தால் – அர்ச்சாவதாரத்தைச் சொன்னபடி. (அறம்) "ராமோ விக்ரஹவாந் தர்ம:", "யே ச வேத விதோ விப்ரா: யே சாத்யாத்மவிதோ ஜநா: தேவதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்கிறபடியே அவதாரங்களிலே ப்ரதாநமான விபவம். (என்று) என்கிறத்தை இத்தோடே அந்வயித்தபடி. அஞ்சுவகைப் பட்டிருக்கும் நாராயணனை ப்ராப்யமும் ப்ராபகமுமென்று அருளிச்செய்யு மென்னவுமாம்.

விளக்கம் - (பரன்) – திருவாய்மொழி (1-1-1) - அயர்வறும் அமரர்கள் அதிபதி - என்றுள்ளவன்; இதனால் பர நிலையை உரைத்தார். (ஈசன்) - தைத்திரீய ஆரண்யகம் (3-11-21) – அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா – அனைத்திற்கும் உள்ளே நுழைந்து அவற்றை நியமிப்பதால், அவனே அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளான் - என்பதற்கு ஏற்ப அனைவரையும் நியமிக்கும் பொருட்டு அனைவருக்குள்ளும் அந்தர்யாமியாக உள்ளான். இதன் மூலம் அந்தர்யாமி நிலையை உரைத்தார். (அரங்கன்) - ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-74) - அர்ச்சயஸ் ஸர்வஸஹிஷ்ணு: அர்ச்சக பராதீந அகில ஆத்ம ஸ்திதி: - இந்தப் பூமியில் உள்ள கோயில்கள், வீடுகள், ஆச்ரமங்கள் ஆகியவற்றில் ஆராதனை செய்யும்படியான அர்ச்சா விக்ரஹமாக, அனைத்தையும் பொறுத்துக் கொள்பவனாக, அர்ச்சகரால் ஸமர்பிக்கப்படும் அனைத்து நிலைகளையும் ஏற்றுக் கொள்பவனாக மகிழ்வுடன் உள்ளாயே - என்பதற்கு ஏற்ப அர்ச்சாவதாரங்களில் முதன்மையானவன். இதன் மூலம் அர்ச்சா நிலையை உரைத்தார். (அறம்) - ராமோ விக்ரஹவாந் தர்ம: - இராமன் தர்மத்தின் ஸ்வரூபம் - என்றும், யே ச வேத விதோ விப்ரா: யே சாத்யாத்மவிதோ ஜநா: தேவதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம் – வேதம் அறிந்தவர்கள், வேதாந்தங்கள் அறிந்தவர்கள் ஆகிய பலரும் பரமபுருஷனாகிய க்ருஷ்ணனையே பழமையான தர்மத்தின் ஸ்வரூபம் என்று கூறுகிறார்கள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அவதாரங்களில் முதன்மையான விபவம்; இதனால் விபவ நிலையை உரைத்தார். இப்படியாக ஐந்து நிலைகளில் உள்ள நாராயணனை, அடையப்படும் இலக்கு என்றும், அந்த இலக்கை அடையச்செய்யும் உபாயம் என்றும் உரைத்தார் என்பதாகவும் பொருள் கூறலாம்.

வ்யாக்யானம் - (அண்ணல்) "ஸஹி வித்யாத: தம் ஜநயதி தத் ச்ரேஷ்டம் ஜன்ம" என்றும், "குருர்மாதா குரு: பிதா:" என்றுஞ் சொல்லுகிறபடியே, இவ்வுபதேசமுகேந சேதநருக்கு ஸர்வவித பந்துவுமாய், அவர்களுடைய இழவு பேறுகள் தம்மதாம்படியான ஸம்பந்தத்தி னுறைப்பை யுடையரா யிருக்கிற (இராமாநுசன்) எம்பெருமானார்.

விளக்கம் – (அண்ணல்) – ஆபஸ்தம்ப தர்மசூத்திரம் - ஸஹி வித்யாத: தம் ஜநயதி தத் ச்ரேஷ்டம் ஜன்ம – கல்வியால் மிகவும் உயர்ந்த அடுத்த ஜன்மத்தை அளித்து - என்றும், குருர்மாதா குரு: பிதா: - குருவே தாயும் தந்தையும் ஆவார் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, இப்படிப்பட்ட உபதேசங்கள் மூலமாக, உலகில் உள்ள அனைத்து மக்களுக்கும் அனைத்துவிதமான உறவினராகவும், அவர்களுடைய லாபநஷ்டங்கள் அனைத்தும் தன்னுடையதே ஆகும் என்று கருதுபவராகவும் உள்ள சம்பந்தத்தின் உறுதியைக் கொண்டவரான (இராமாநுசன்) - எம்பெருமானார்.

வ்யாக்யானம் - (என்னருவினையின் திறஞ்செற்று) "அஹம் அஸ்மி அபராதாநாம் ஆலய:" என்றும், "அமர்யாத: க்ஷுத்ரச் சலமதி:" என்றும், "பாபாநாம் ப்ரதம அஸ்மி அஹம்" என்றும், "ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே ஸஹஸ்ரசோ யந்ந மயா வ்யதாயி" என்றும், "அஹம் அஸ்மி அபராத சக்ரவர்த்தி" என்றும், "யாவச்சயச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்ச தத் தத் அதிகம் ச மமாஸ்தி ஸத்யம்" என்றுஞ் சொல்லுகிறபடியே என்னாலே தீரக்கழியச் செய்யபட்டதாய், அநுபவத்தாலும் ப்ராயச்சித்தத்தாலும் போக்கவரிதான பாப ஸமூஹத்தை, "வானோ மறிகடலோ" என்னும்படி நசிப்பித்து. திறம் – ஸமூஹம்.

விளக்கம் - (என்னருவினையின் திறஞ்செற்று) - அஹம் அஸ்மி அபராதாநாம் ஆலய: - தவறுகளின் இருப்பிடமாக நான் உள்ளேன் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (62) – அமர்யாத: க்ஷுத்ரச் சலமதி: - மரியாதை தெரியாதவனாயும், மற்ற உபாயம் அற்றவனாயும், ஸஞ்சலமான புத்தி கொண்டவனாயும் - என்றும், பாபாநாம் ப்ரதம அஸ்மி அஹம் – பாபங்கள் நிறைந்தவர்களில் முதன்மையாக நானே உள்ளேன் (அல்லது பாபங்கள் செய்வதில் முதன்மையாக நானே உள்ளேன்) – என்றும், ஸ்தோத்ரரத்னம் (23) – ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே ஸஹஸ்ரசோ யந்ந மயா வ்யதாயி – எத்தகைய கர்மங்கள் என்னால் பலமுறை செய்யப்படவில்லையோ, அந்தக் கர்மங்கள் சாஸ்த்ரங்களால் இந்த

லோகத்தில் தடுக்கப்படவில்லை (அதாவது தடுக்கப்பட்ட கர்மங்களை மட்டுமே செய்தபடி இருத்தல்) – என்றும், தயாசதகம் (30) – அஹம் அஸ்மி அபராத சக்ரவர்த்தி - நான் குற்றம் செய்பவர்களுக்கும் பாபங்களுக்கும் சக்ரவர்த்தியாக உள்ளேன் – என்றும், யாவச்சயச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்ச தத் தத் அதிகம் ச மமாஸ்தி ஸத்யம் – எந்தெந்த வகையான பாபங்கள் உள்ளனவோ, அவை அனைத்தும் மிகவும் அதிகமாகவே என்னிடம் உள்ளன என்பது உண்மை - என்றும் கூறுவதற்கு ஏற்ப என்னால் உறுதியாகக் கழிக்க இயலாது என்னும்படியாகச் செய்யப்பட்டதும், அனுபவித்தோ அல்லது ப்ராயச்சித்தம் மூலமாகவோ போக்குவதற்கு அரிதாக உள்ளதும் ஆகிய எனது பாபக்கூட்டங்களை, பெரியதிருவந்தாதி (52) – வானோ மறிகடலோ – வானிலோ அல்லது கடலிலோ மறைந்தனவா என்று அறியாதபடி – என்பதற்கு ஏற்ப அழித்து. திறம் என்றால் கூட்டம் என்று பொருள்.

வ்யாக்யானம் - (இரவும்பகலும் விடாது) "அல்லும் பகலுமிடைவீடின்றி" என்கிறபடியே திவாராத்ர விபாகமற இடைவிடாதே. (என்றன் சிந்தையுள்ளே) பண்டெல்லாம் ஆசாபரனாய்ப் போந்து இப்போது இவ்விஷயீகாரத்தைப் பெற்ற என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே. (நிறைந்து) ஸ்ப்ருஷ்டாஸ்ப்ருஷ்டி மாத்ரமன்றிக்கே குணங்களோடும் விக்ரஹத்தோடும் விதிப்போடுங் கூட அதிலே பூர்ணனாய்ப் புகுந்து. அணுவான ஆத்மாவினுள்ளே விபுவான ஈச்வரன் ஸ்வரூப ரூப குணங்களோடே அஸங்குசிதமாக வ்யாபித்து நிற்குமாப்போலே காணும் எம்பெருமானாரும் அதிஸூக்ஷ்மமான இவருடைய திருவுள்ளத்திலே அஸங்குசிதமாக வ்யாபித்து நிற்கிறபடி. (ஒப்பறவிருந்தான்) இவ்வாத்ஸல்யத்துக்கு ஸத்ருசமில்லதபடி இருந்தார். அதிலே தானே ஸுப்ரதிஷ்டிதராய் எழுந்தருளி யிருந்தாரென்றபடி. ஒப்பு- ஸாத்ருச்யம்.

விளக்கம் - (இரவும்பகலும் விடாது) - திருவாய்மொழி (1-10-8) – அல்லும் நன்பகலும் இடை வீடின்றி - என்பதற்கு ஏற்ப பகல் மற்றும் இரவு என்று எந்தவிதமான வேறுபாடும் ஆராயாமல் இடைவிடாது. (என்றன் சிந்தையுள்ளே) – முன்பு உலகவிஷயங்கள் என்பதன் மீது உள்ள ஆசையின் பின்னே சென்ற நான், இப்போது "எம்பெருமானாருடைய ஏற்பு" என்னும் நிலையைப் பெற்றேன். இப்படிப்பட்ட எனது மனதில், (நிறைந்து) - ஆத்மாவுக்குள் இருந்தாலும் அதனைத் தொட்டும் தொடாமலும் உள்ள நிலை மட்டும் அன்றி, குணங்கள் மற்றும் திருமேனி ஆகியவற்றுடன் முழுமையாகப் புகுந்து, அணுவாக

உள்ள ஆத்மாவின் உள்ளே நிறைந்துள்ள ஸர்வேச்வரன், தனது ஸ்வரூபம் மற்றும் ரூபம் ஆகியவற்றால் எந்தத் தடையும் இன்றி வ்யாபித்து நிற்கிறான். இது போன்றே எம்பெருமானாரும், மிகவும் நுண்ணியதான திருவரங்கத்தமுதனாருடைய இதயத்தில் தடையின்றி வ்யாபித்து உள்ளார் என்று கருத்து. (ஒப்பறவிருந்தான்) – இத்தகைய வாத்ஸல்யத் தன்மைக்கு நிகராக வேறு ஒன்றும் காண இயலாதபடி இருந்தார். அந்த இதயத்தில், தான் நிலையாக எழுந்தருளி இருந்தார்.

வ்யாக்யானம் - (எனக்கு) இப்படி எம்பெருமானாருடைய விஷயீகாரத்தைப் பெற்ற வெனக்கு. (ஆரும் நிகரில்லையே) எத்தனை தரமுடையா ருண்டானாலும் ஸத்ருசராக மாட்டார்கள். "அவித்யாந்தர்க்கதாஸ் ஸர்வே தேஹி ஸம்ஸார கோசார:" என்று சொல்லப்படுகிறவர்கள் ஸத்ருசராவர்களோ. நிகர் – ஒப்பு. "த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" என்னக் கடவதிறே.

விளக்கம் - (எனக்கு) இப்படியாக எம்பெருமானாரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையை அடைந்த எனக்கு. (ஆரும் நிகரில்லையே) – எந்த அளவு உயர்ந்தவர்கள் என்றாலும், அவர்கள் நிகராக மாட்டார்கள். அதாவது, அவித்யாந்தர்க்கதாஸ் ஸர்வே தேஹி ஸம்ஸார கோசார: - அவித்யையில் உழன்றபடி உள்ள அனைத்துவிதமான சரீரங்களும் (சரீரத்தில் பந்தப்படுத்தப்பட்ட ஆத்மாக்கள்) ஸம்ஸாரத்தில் மூழ்கியபடியே உள்ளன - என்பதற்கு ஏற்ப உள்ளவர்கள் நிகராவார்களோ, மாட்டார்கள். த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: – எம்பெருமானாருடைய தாமரை போன்ற திருவடிகளின் ஸம்பந்தம் பெற்றவர்கள், நான்முகன் உள்ளிட்ட தடையற்ற அதிகாரங்கள் கிடைத்தாலும், அவற்றைப் புல்லுக்குச் சமமாகவே காண்பார்கள் - என்பது காண்க என்கிறார்.

48. நிகரின்றி நின்ற என் நீசதைக்கு நின் அருளின் கணன்றிப்
புகல் ஒன்றும் இல்லை அருட்கும் அஃதே புகல் புன்மையிலோர்
பகரும் பெருமை இராமானுச இனி நாம் பழுதே
அகலும் பொருளேன் பயன் இருவோமுக்கும் ஆன பின்னே.

விளக்கவுரை – ஆத்மகுணங்கள் (மிகவும் உயர்ந்த குணங்கள் எனலாம்) உள்ளவர்கள், அனாத்ம குணங்கள் (தாழ்ந்த குணங்கள் எனலாம்) உள்ளவர்கள் என்று இந்த உலகில் உள்ளவர்களைத் தனித்தனியே பிரித்து ஆராய்ந்தால், என்னைப் போன்று ஆத்மகுணங்கள் முற்றிலும் அற்றவன், அனாத்ம குணங்கள் பரிபூர்ணமாக உள்ளவன் வேறு யாரும் இருக்கமுடியாது. இப்படிப்பட்ட தாழ்ந்தவனான எனக்கு உமது கருணை அல்லாமல் வேறு புகலிடம் இல்லை. சேஷபூதன் (அடிமை) ஒருவனின் குற்றங்கள் அனைத்திலும் சேஷியின் (எஜமானன்) குணங்கள் புகும் தன்மை போன்று, எம்பெருமானாரின் திருக்கல்யாண குணங்கள் உள்ளன. இவரது குணங்கள் அனைத்தும் எனது தோஷங்களில் புகலிடம் தேடி வந்தன – காரணம், தோஷம் அற்றவர்களுக்கு இவரது குணங்கள் பயன்படாது; அவை என் போன்று பலவிதமான குற்றங்கள் செய்பவர்களுக்கு மட்டுமே, அவர்களைத் திருத்துவதற்காகக் பயன்படும். ஆக இவரது குணங்களுக்கு எனது தோஷங்கள் புகலிடமாக இருந்தன. இப்படியாக் எம்பெருமானாரின் குனங்கள் வந்து தங்கும் பாத்திரமாக நான் அவருக்குப் பெரும் பேறாக அமைந்துவிட்டேன். ஸம்ஸாரம் என்ற பிடியில் சிக்காமல் கரை ஏறிய முக்தர்கள, நித்யஸூரிகள் ஆகியவர்களால் பெருமையாகப் போற்றப்படும் எம்பெருமானாரே! இவ்விதமாக நாம் ஒருவருக்கு ஒருவர் பயனுள்ளவர்களாக உள்ளோம். இப்படி உள்ளபோது, இனி உள்ள காலங்களில் நாம் ஒருவரை ஒருவர் பிரிவதற்குக் காரணம் ஏதேனும் உண்டாகுமோ? (உண்டாகாது)

அவதாரிகை – “இராமாநுசன் இரவும் பகலும் விடாதென்றன் சிந்தையுள்ளே நிறைந்தொப்பற விருந்தான் எனக்காரும் நிகரில்லை” என்று இவர் சொன்னவாறே எம்பெருமானார் இவரைப் பார்த்து “நீர், நம்மை விட்டு காலாந்தரத்திலே வேறொரு விஷயத்தை விரும்புதல், நாம் உம்மை விட்டு வேறொரு விஷயத்தை யாதரித்தல் செய்யில், இந்த ஹர்ஷம் நிலைநிற்கமாட்டாதே” யென்ன; “என்னுடைய நைச்யத்துக்கு தேவரீருடைய க்ருபையும், அந்த க்ருபைக்கு என்னுடைய நைச்யமுமே யொழியப் புகலில்லை யாயிருக்க, வ்யர்த்தமே நாம் அந்யபரராகைக்குக் காரணமென்” னென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், “இராமாநுசன் இரவும் பகலும் விடாதென்றன் சிந்தையுள்ளே நிறைந்தொப்பற விருந்தான் எனக்காரும் நிகரில்லை” என்று இவர்

கூறியதைக் கேட்ட எம்பெருமானார் இவரிடம், “நீவீர், ஏதோ ஒரு காலகட்டத்தில் நம்மை விட்டு மற்றொரு விஷயத்தை விரும்புதல் அல்லது நாம் உம்மை விட்டு மற்றொரு விஷயத்தைக் கைக்கொள்ளுதல் என்று ஆகலாம். இவ்விதம் ஆனால், உம்முடைய இந்த மகிழ்வானது நிலையாக நிற்காது அல்லவோ?,” என்றார். இதற்குத் திருவரங்கத்தமுதனார் எம்பெருமானாரிடம், “நான் இவ்விதம் என்னைத் தங்கள் முன்பாகத் தாழ்த்திக் கொள்வதற்கு உம்முடைய க்ருபையும், அத்தகைய க்ருபை ஏற்பட எனது தாழ்வுமே காரணமாக உள்ளன. இவை இரண்டிற்கும் ஒன்றை விட்டால் மற்றொன்றுக்குப் புகலிடம் வேறு இல்லை. இவ்விதம் உள்ளபோது, நாம் மற்றொரு விஷயத்தின் பின்னே செல்வதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை”, என்கிறார்.

வ்யாக்யானம் - (நிகரின்றி நின்றவென் நீசதைக்கு) “நீசனேன் நிறைவொன்றுமிலேன்”, “அஹம் அஸ்மி அபராதாநாம் ஆலய:”, “அத்யாபி வஞ்சநபர:” இத்யாதிப்படியே ஆத்மகுண ராஹித்யத்தாலும், அநாத்மகுண பாஹுள்யத்தாலும் வந்த தண்மையை யுடையவர்களை, இந்த விபூதியில் தனித்தனியே ஆராய்ந்து பார்த்தாலும் என்னைப்போலே ஆத்மகுண லவலேச ரஹிதனாய், அநாத்மகுண பரிபூர்ணனா யிருப்பா ரொருவராகிலும் கிடையாமையாலே, “கோந்யோஸ்தி ஸத்ருசோ மயா” என்கிறபடியே உபமாந ரஹிதனாய்க் கொண்டிருக்கிற என்னுடைய நீசபாவத்துக்கு. (உன்னருளின் கணன்றி) “வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஸம்பவதி துக்கித:” என்கிறபடியே பரதுக் பரதுக்கித்வ நிராசிகீர்ஷத்வ அஸஹிஷ்ணுத்வாதி லக்ஷணமான தேவரீருடைய க்ருபா குணமொழிய.

விளக்கம் - (நிகரின்றி நின்றவென் நீசதைக்கு) – திருவாய்மொழி (3-3-4) - நீசனேன் நிறைவொன்றுமிலேன் - என்றும், அஹம் அஸ்மி அபராதாநாம் ஆலய: - நான் அபராதங்களின் இருப்பிடமாக உள்ளேன் – என்றும், யதிராஜ விம்சதி (7) – அத்யாபி வஞ்சநபர: - வஞ்சனையுடன் கூடிய - என்றும் கூறுவதற்கு ஏற்ப ஆத்மகுணங்கள் இல்லாத காரணத்தாலும், ஆத்மகுணங்கள் அல்லாத குணங்கள் மிகுதியாக உள்ளதாலும் ஏற்பட்ட தாழ்வை உடையவர்கள் இந்தப் பூமியில் பலரும் உண்டு. அவர்கள் அனைவரையும் தனித்தனியே ஆராய்ந்தாலும் என்னைப் போன்று சிறிதளவு கூட ஆத்மகுணங்கள் அற்றவனும், ஆத்மகுணங்கள் அல்லாதவை பரிபூர்ணமாக உள்ளவனும் என்று யாரும்

சிக்க மாட்டார்கள். ஆக, கீதை (16-15) – கோந்யோஸ்தி ஸத்ருசோ மயா – எனக்கு நிகரானவர்கள் யார் உள்ளனர் (என்று அஹங்காரத்துடன் கேட்கும் தன்மை) - என்பதற்கு ஏற்ப உவமை கூற இயலாதபடி உள்ளதான எனது தாழ்ந்த தன்மைக்கு. (உன்னருளின் கணன்றி) – இராமாயணம் அயோத்யாகாண்டம் (2-40) – வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஸம்பவதி துக்கித: - பிரஜைகள் துக்கம் கொள்ளும்போது இராமனும் துக்கம் அடைகிறான் - என்பதற்கு ஏற்ப மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு பொறுக்க இயலாமல் அதனை விலக்க விரும்புகின்ற இயல்புடைய உம்முடைய கருணையான தன்மை அல்லாமல்.

வ்யாக்யானம் - (புகலொன்றுமில்லை) வேறொரு புகலிடமில்லை. அந்த நீசதைதானே பச்சையாக அங்கீகரிக்கும் தேவரீருடைய க்ருபையினிடத்தி லொழிய ஒதுங்க நிழலொன்று மில்லையென்றபடி. கண் - இடம். "அபராத கணை: அபூர்ண குக்ஷி: கமலா காந்த தயே கதம் பவித்ரீ" என்னுமாப்போலே இவரும் வயிறு நிரம்புகைக்காக எப்போதும் பூர்ணதோக்ஷத்தை தேடித் திரியுமவராகையாலும், ஸர்வேச்வரன் ஆர்த்ராபராதியான காகாஸுரனை சிக்ஷித்ததுவும், "யதிவா ராவணஸ் ஸ்வயம்" என்றும் சொன்னதுவும் பாபிஷ்டரை ரக்ஷித்தால் யசஸ்ஸு அதிசயித்திருக்குமென்றத்தைப் பற்றவாகையாலும், சேஷபூதனுடைய தோஷங்களெல்லாம் சேஷியினுடைய க்ருபா குணத்துக்கு லக்ஷ்யங்களாயிறே யிருப்பது. ஆக தம்முடைய நீசதைக்கு எம்பெருமானாருடைய க்ருபா குணமொழிய வேறொரு புகலிடமில்லையென்று அருளிச்செய்யத் தட்டில்லையிறே. (அருட்குமஃதே புகல்) தேவரீருடைய க்ருபா குணத்துக்கு அடியேனுடைய துஷ்டபாவதையே லக்ஷ்யமாயிருக்கும். தோஷ ரஹிதரானவர்கள் பக்கலிலே க்ருபா குணத்துக்கு ப்ரயோஜநமில்லாமையாலே, எத்தனையேனும் தண்ணியரே அதுக்குப் பாத்ரமாகையாலும், எனக்கு ஸத்ருசரான பாபிஷ்டர் ஒருவராகிலு மில்லாமையாலே என்னுடைய நைச்யமே அதுக்குப் புகலிடமென்றபடி.

விளக்கம் - (புகலொன்றுமில்லை) - வேறு எந்த அடைக்கலமும் இல்லை. எனது தாழ்வையே ஒரு ஸாதனச் செயலாக ஏற்றுக் கொள்ளும் உம்முடைய க்ருபையிடம் அல்லாமல் ஒதுங்குவதற்கு ஏற்ற நிழல் வேறு எதும் இல்லை. கண் என்றால் இடம் என்று பொருள். தயாசதகம் (29) - மயி திஷ்ட்டதி துஷ்க்ருதாம் ப்ரதாநே *மித தோஷாந் இதராந் விசிந்வதீ த்வம் அபராத கணை: அபூர்ண குக்ஷி: கமலா காந்த தயே கதம் பவித்ரீ* -

தயாதேவியே! பாவம் செய்தவர்களில் முதன்மையானவனாக உன் முன்பாக நான் உள்ளேன். நீ என்னைக் கவனிக்காமல், குறைவான பாவங்கள் செய்தவர்களைத் தேடுகிறாய். இவ்விதம் நீ செய்தால், குறைந்த பாவங்கள் மட்டுமே உனது வயிறுக்குக் கிடைக்கும். இவ்விதம் வயிறு நிறையாமல் நீ எவ்விதம் வாழ்வாய்? - என்று கூறுவது போன்று எம்பெருமானாரும் தனது நிறைவுக்காக பூர்ணமாக குற்றங்கள் நிறைந்தவர்கள் யாரும் உள்ளனரோ என்று தேடியபடியே உள்ளதாலும்; ஸர்வேச்வரன் அப்போதே தவறுகள் பல புரிந்தவனாகிய காகாஸுரனைத் தான் காப்பாற்றியதும், இராமாயணம் யுத்தகாண்டம் (18-38) – யதிவா ராவணஸ் ஸ்வயம் – இராவணனாகவே உள்ளபோதிலும் - என்று கூறப்படுவதும், பாபங்கள் நிறைந்தவர்களைக் காப்பாற்றினால் புகழானது மேலோங்கும் என்ற காரணத்தாலும்; அடிமை ஒருவனுடைய குற்றங்கள் அனைத்தும் அவனுடைய எஜமானனின் க்ருபைக்கு இலக்காக உள்ளன அல்லவோ? ஆகவே திருவரங்கத்தமுதனாருடைய தாழ்வுக்கு எம்பெருமானாருடைய க்ருபை அல்லாமல் வேறு புகல் இடம் இல்லை என்று கூறுவதில் தவறில்லை. (அருட்குமஃதே புகல்) - அதே போன்று உம்முடைய க்ருபைக்கும், அடியேனுடைய இந்தத் தாழ்வு என்பதே இலக்காக இருக்கும். குற்றங்கள் செய்யாதவர்கள் விஷயத்தில் க்ருபையானது வெளிப்படக் காரணம் இல்லாமையால், அது பலனற்று இருக்கும்; ஆகவே எந்த அளவு தாழ்ந்தவராக உள்ளனரோ, அந்த அளவு அதற்குப் பலன் உண்டு என்பதாலும், என்னைப் போன்று பாபங்கள் செய்த ஒருவன் வேறு யாரும் காணப்படமாட்டார்கள் என்பதாலும், எனது தாழ்வே உம்முடைய க்ருபைக்குப் புகலிடமாக உள்ளது.

வ்யாக்யானம் – “நிகமஜ்ஜதோநந்த பவார்ண வாந்தச் சிராய மே கூலமிவாஸி லப்த: த்வயாபி லப்தம் பகவந் நிதாநீ மனுத்தமம் பாத்ர மிதம் தயாயா:” [த்வயாபி] இப்படி நமக்குக் கைப்பட்ட தேவரீருக்கும். [இதாநீம்] இத்தனை நாளைக்கு இப்போது. [பகவந்] ஸர்வஜ்ஞனாயிருந்தாயே, நான் சொல்லவேணுமோ. [தயாயா:] தேவரீருடைய க்ருபைக்கு. [அநுத்தமம் பாத்ரமிதம்] மயி திஷ்டட்தி துஷ்க்ருதாம் ப்ரதாநே மித தோஷாந் இதராந் விசிந்வதீ த்வம் அபராத கணை: அபூர்ண குக்ஷி: கமலா காந்த தயே கதம் பவித்ரீ” என்றும், “அபராத சக்ரவர்த்தி”, “பாபாநாம் ப்ரதமோஸ்ம்யஹ” என்கிறபடியே பூர்ண பாத்ரமான நானும். [லப்த்தம்] தேவரீருக்குப் பெறாபேறாக லபித்தேன்.

விளக்கம் – இங்கு ஸ்தோத்ரரத்னம் (24) ச்லோகம் வ்யாக்யானம் செய்யப்படுகிறது. அந்த ச்லோகம் - நிகமஜ்ஜதோநந்த பவார்ண வாந்தச் சிராய மே கூலமிவாஸி லப்த: த்வயாபி லப்தம் பகவந் நிதாநீ மனுத்தமம் பாத்ர மிதம் தயாயா: - பகவனே! ஸம்ஸாரம் என்னும் ஸமுத்திரத்தின் நடுவில் சிக்குண்டு நிற்கும் எனக்கு, நீண்டநாள் கழித்து கரை போன்று அடையப்பட்டவனாக நீ உள்ளாய்; பகவானே! உன்னாலும் உன்னுடைய இந்த தயைக்கு இதற்கு மேற்பட்ட தாழ்வு இல்லாத பாத்ரம் அடையப்பட்டது – என்பதாகும் [இதனையே மேலே வ்யாக்யானத்தில் ஒவ்வொரு பதமாகக் கூறுகிறார். ஆகவே மேலும் விளக்கப்படவில்லை. ஆனால் மேலே மூன்று ப்ரமாண வாக்கியங்கள் கூறப்படுகின்றன. அவற்றை இங்கு தந்துள்ளோம்] [அநுத்தமம் பாத்ரமிதம்] தயாசதகம் (29) - மயி திஷ்ட்டதி துஷ்க்ருதாம் ப்ரதாநே *மித தோஷாந் இதராந் விசிந்வதீ த்வம் அபராத கணை: அபூர்ண குக்ஷி: கமலா காந்த தயே கதம் பவித்ரீ* - தயாதேவியே! பாவம் செய்தவர்களில் முதன்மையானவனாக உன் முன்பாக நான் உள்ளேன். நீ என்னைக் கவனிக்காமல், குறைவான பாவங்கள் செய்தவர்களைத் தேடுகிறாய். இவ்விதம் நீ செய்தால், குறைந்த பாவங்கள் மட்டுமே உனது வயிறுக்குக் கிடைக்கும். இவ்விதம் வயிறு நிறையாமல் நீ எவ்விதம் வாழ்வாய்? – என்றும், *தயா சதகம்* (30) – *அபராத சக்ரவர்த்தி – பாபங்கள் செய்பவர்களுக்குச் சக்ரவர்த்தியாக – என்றும், பாபாநாம் ப்ரதமோஸ்ம்யஹம் – பாபங்கள் செய்வதில் நானே முதலில் உள்ளேன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப பாபங்களின் பாத்திரமாக உள்ள நான்.* [லப்தம்] - என்று கூறுவதற்கு ஏற்ப உம்முடைய க்ருபைக்குப் பரிபூர்ணமான இலக்காக உள்ள நான் உமக்குப் பெறுதற்கு அரிய பேறாகக்கிட்டினேன்.

வ்யாக்யானம் – "அநந்த பவார்ணவாந்த:" ப்ரஸித்தார்ணவத்துக்கு பரிகணநமுண்டு, என்னுடைய ஸம்ஸாரமாகிற அர்ணவத்துக்கு அந்தமில்லை. காலமும் அநாதியாய், ஜந்மங்களும் பலவாய், கர்மங்களும் விசித்ரங்களாய் பஹுவாயிருக்கையாலே இந்த அர்ணவம் அநந்தமாயிருக்கும்; இப்படிப்பட்ட பவார்ணவத்தினுடைய அகாத ஜலத்திலே. [நிமஜ்ஜத:] அமுந்திக்கிடப்பன். [சிராய] "கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந" என்கிறபடி அநந்தமான காலத்துக்கு. [மே] அடியேனுக்கு. [கூலமிவ] கரைபோலே. [லப்தம்] ப்ரஸித்தார்ணவத்திலே விழுந்து அழுந்தின சேதநம் அப்போதே முடிய, முஹூர்த்த மாத்ரத்திலே அந்தப் பிணத்தைக் கொண்டு வந்து கரையிலே தள்ளிவிடுமென்று ஸர்வஜந ப்ரஸித்தம். இந்த ஸம்ஸாரத்திலே யழுந்தி, "அஸந்நேவ"

என்கிறபடியே யிருந்த வென்னை, சிரகாலத்துக்கு ஸத்தையுண்டாக்கி, அந்த அர்ணவத்துக்கு பாரமாய்க் கைப்பட்டாய். "கண்டு கொண்டு என்னைக் காரிமாறப்பிரான், பண்டை வல்வினை பாற்றியருளினான்" என்று இருவர்க்கும் ப்ரயோஜநமா யிருந்தததென்று அபியுக்தரு மருளிச்செய்தாரிறே. "அந்தோ அடியேன் உனபாதம் அகலகில்லேன் இறையுமே" என்றும், "புகல் ஒன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்றுமருளிச் செய்தாரிறே நம்மாழ்வாரும். "பரமகாருணிகோ நபவத் பர: பரமசோச்யதமோ ந ஹி மத்பர:" என்னக் கடவதிறே.

விளக்கம் – [மேலே உள்ள ஸ்தோத்ரரத்ன வ்யாக்யானம் தொடர்கிறது] அநந்த பவார்ணவாந்த: - ஸமுத்திரத்திற்குக் கூட அளவிட இயலும் என்ற நிலை உண்டு; ஆனால் எனது ஸம்ஸாரம் என்று ஸமுத்திரத்திற்கு முடிவு இல்லை. காலம் என்பதும் எல்லையற்றதாய், பிறவிகளும் பலவாய், கர்மங்களும் பலவிதமாய் உள்ளதால் இந்த ஸம்ஸார ஸமுத்திரம் அளவற்று இருக்கும். இப்படிப்பட்ட இந்த ஆழ்கடலில் உள்ள நீரில். [நிமஜ்ஜத:] - அமுந்திக்கிடப்பவன். பாஞ்சராத்ரம் – கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந – எனது விருப்பம் காரணமாக மட்டுமே நான் ஒருவனைக் கடாக்ஷிக்கிறேன் - என்பதற்கு ஏற்ப எல்லையற்ற காலங்களுக்கு. [மே] – அடியேனுக்கு. [கூலமிவ] - கரை போன்று, [லப்தோஸி] அதாவது மிகவும் ப்ரஸித்தமான ஒரு ஸமுத்திரத்தில் விழுந்து அழுந்தியபடி உள்ள சேதநன் அந்த நொடியிலேயே மரணம் அடைந்தாலும், ஒரு முஹூர்த்த நேரத்தில், உயிரற்ற அந்தச் சரீரத்தை கொண்டு வந்து ஸமுத்திரமானது கரையில் சேர்த்துவிடும் என்பது அனைவரும் அறிந்ததே ஆகும். இது போன்று ஸம்ஸாரம் என்ற பெருங்கடலில் அழுந்தி, அஸந்நேவ - இல்லை என்று ஆகிறான் - என்பதற்கு ஏற்பக் கிடந்த என்னை, ஒரு காலகட்டத்தில், "இருப்பவன் என்று ஆகிறான்" என்னும்படி மாற்றி, இந்த ஸமுத்திரத்திலிருந்து வெளியேற உதவினாய். கண்ணிநுண்சிறுத்தாம்பு – கண்டு கொண்டு என்னைக் காரிமாறப்பிரான், பண்டை வல்வினை பாற்றியருளினான் - என்று இருவருக்கும் பலன் கிட்டியதாக ஆழ்வார் அருளிச்செய்தார் அல்லவோ? திருவாய்மொழி (6-10-9) – அந்தோ அடியேன் உனபாதம் அகலகில்லேன் இறையுமே – என்றும் , திருவாய்மொழி (6-10-10) – புகல் ஒன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே – என்றும் நம்மாழ்வார் அருளிச்செய்தமை காண்க. பரமகாருணிகோ நபவத் பர: பரமசோச்யதமோ ந ஹி மத்பர: –என்பதும் காண்க.

வ்யாக்யானம் - (புன்மை) தோஷங்களுக்கு ஆகரமான ஸம்ஸாரம். அநாத்ய வித்யா கர்மவாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்த ரூபமான ஸம்ஸாரமென்றபடி. (இலோர்) ஸாம்ஸாரிகமான பந்தத்தைப் பூண் கட்டிக்கொண்டு நிற்கையாலே அவர்களை இங்கே சொல்லவொண்ணாதிறே; முக்தர், சிறிது காலம் ஸம்ஸாரத்தைப் பூண் கட்டிக்கொண்டு திரிந்தும் பின்னை, "கரை கண்டோர்" என்னும்படி அத்தை ஸவாஸநமாகப் பொகட்டு பகவத் குணாநுபவத்திலே ஆழங்கால் பட்டிருந்தார்களேயாகிலும் நிருபபதமாகச் சொல்லுகையாலே அவர்களையும் இங்கே சொல்லக்கூடாதிறே. இனி "பரிசேஷாத் ", "யத்ர பூர்வே ஸாத்யா: ஸந்தி தேவா:", "தத் விப்ராஸோ விபந்பவோ ஜாக்ருவாம்ஸஸ் ஸமிந்ததே" என்கிறபடியே அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகளையாய்த்து (இலோர்) என்றருளிச் செய்தது.

விளக்கம் – (புன்மை) - தோஷங்கள் அனைத்திற்கும் மூலமாக உள்ள ஸம்ஸாரம். தொன்று தொட்டு வருவதான அறியாமை, கர்மவாஸனை, உலக விஷயங்களில் உள்ள ஆசை என்பவற்றின் தொடர்பு ஒரு வடிவம் எடுத்தது போன்றுள்ள ஸம்ஸாரம். (இலோர்) - ஸம்ஸாரம் என்ற பந்தத்தை, விலங்கு போன்று இட்டுக் கொண்டு நிற்பதால் ஸம்ஸாரிகளை இங்கு கூறியிருக்க முடியாது. முக்தர்கள் என்பவர்கள் சிறிது காலம் ஸம்ஸாரத்தில் சிக்குண்டு கிடந்து, பின்னர் திருவாய்மொழி (8-3-10) – கரை கண்டோர் - என்பதற்கு ஏற்ப அதனை அதன் வாஸனையுடன் கைவிட்டு, பகவத் குணங்களில் ஈடுபட்டு உள்ளபோதிலும் நிருபபதமாகக் கூறுவதால் அவர்களையும் இங்கு கூறியிருக்க முடியாது. ஆகவே பரிசேஷாத் – எஞ்சியுள்ள – என்றும், புருஷஸூக்தம் - *யத்ர பூர்வே* ஸாத்யா: ஸந்தி தேவா: - எங்கு பழையவர்களாகிய நித்யஸூரிகள் உள்ளனரோ – என்றும், விஷ்ணுஸூக்தம் - *தத் விப்ராஸோ* விபந்பவோ ஜாக்ருவாம்ஸஸ் ஸமிந்ததே – அங்கு அறிவுள்ளவர்களும், பக்தியுடன் கூடியவர்களும், எப்போதும் விழித்துள்ளவர்களும் ஆகிய நித்யஸூரிகள் உள்ளனர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸம்ஸாரத்தால் தீண்டப்படாமல் உள்ள நித்யஸூரிகளையே இங்கு "இலோர்" என்று அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் - (பகரும் பெருமை) ஏகதேசாவ ஸ்த்தாநத்தாலும், ஏகவிஷயாநுபவத்தாலும் அடியே பிடித்து இவருடைய ப்ரபாவத்தை அடைவே யறியுமவர்கள். நித்யஸூரிகளாகையாலே அவர்களாலே ஸ்தோத்ரம் பண்ணப்பட்ட ப்ரபாவத்தை

யுடையரான. (இராமாநுசா) எம்பெருமானாரே. (பயன் இருவோமுக்குமான பின்னே) தேவரீரும் அடியேனுமாகிற இருவருக்கும் ஸ்வரூபலாபமும் குணலாபமுமாகிற பரம ப்ரயோஜநம் ஸித்தித்த பின்பு. இப்படி இருவர்க்கும் ப்ரயோஜநமாயிருக்க (இனி நாம் பழுதேயகலும் பொருளென்) இதறிந்திருக்கிற நாம் மேலுள்ள காலம் வ்யர்த்தமே அகலுகைக்குக் காரணமென். நாம் என்றது - தம்மையும் எம்பெருமானாரையும். அன்றிக்கே, நாம் என்று பஹுவசந ப்ரயோகம் பண்ணுகையாலே - எம்பெருமானாரும் இவருடைய ஸம்பந்த ஸம்பந்திகளுமான எல்லாருமென்று பொருளாகவுமாம்.

விளக்கம் - (பகரும் பெருமை) – தாங்கள் உள்ள இடத்தின் காரணத்தாலும், பகவத் விஷயம் என்னும் ஒன்றை மட்டுமே அனுபவித்தபடி உள்ளதாலும் எம்பெருமானாருடைய பெருமைகளை முற்றிலுமாக அறிந்தவர்கள் நித்யஸூரிகள் மட்டுமே ஆவர்; அப்படிப்பட்ட அவர்களால் போற்றப்படும் ப்ரபாவத்தை உடைய. (இராமாநுசா) - எம்பெருமானாரே. (பயன் இருவோமுக்குமான பின்னே) - உமக்கும் அடியேனுக்கும் இதன் மூலம் ஒருவருக்கொருவர் பயன் உண்டு; அடியேனுக்கு ஆத்மஸ்வரூபத்தை அடைந்த லாபமும், உமக்கு உம்முடைய குணத்தினைப் பயனாக அளித்த லாபமும் உண்டு. இவ்விதம் ஒருவருக்கு ஒருவர் பயன்படும்படி உள்ளபோது. (இனி நாம் பழுதேயகலும் பொருளென்) - இதனை அறிந்துள்ள அடியேன், இனிமேல் வருகின்ற காலங்களில் வீணாக அடியேன் உம்மையும், நீவிர் அடியேனை விட்டு அகல்வதற்கு என்ன காரணம் உள்ளது. நாம் என்பது தம்மையும் எம்பெருமானாரையும் என்று கருத்து. அல்லது நாம் என்று பன்மையில் கூறுவதாகக் கொண்டு எம்பெருமானாரும், இவருடைய ஸம்பந்தம் கொண்ட அனைவரும் என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - (நாம் பழுதே யகலும் பொருளென்) “பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டாய்”, “என்னைத் தீமனம் கெடுத்தாய்”, “மருவித் தொழும் மனமே தந்தாய்”, “அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன அடியேன் அறியேன் ” என்கிறபடியே நாம் க்ருதஜ்ஞராய்ப்போமதொழிய நமக்கு அகலுகையென்று ஒரு ப்ரயோஜநமுண்டோ. “பாபத்தால் யான் பிறப்பேனேலும் இனி எந்தை எதிராசன் தான் பிறக்குமென்னை உய்ப்பதா” என்கிறபடியே கைவிடுகை அவர்க்கு அவத்யமாய்த் தலைக்கட்டக் கடவதாகையாலும், பெறாப்பேறாக அடியோங்களை தேவரீர்

விஷயீகரித்துக் கொள்ளுகையாலும், “நிழலு மடிதாறும்” போலே அடியோங்களை அநந்யார்ஹராம்படி அங்கீகரித்திருகையொழிய தேவரீருக்கு அகலுகையென்று ஒரு ப்ரயோஜநமுண்டோ வென்றதாய்த்து.

விளக்கம் - (நாம் பழுதே யகலும் பொருளென்) - திருவாய்மொழி (5-7-3) – பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டாய் – என்றும், திருவாய்மொழி (2-7-8) – என்னைத் தீமனம் கெடுத்தாய் - என்றும், திருவாய்மொழி (2-7-7) – மருவித் தொழும் மனமே தந்தாய் - என்றும், திருவாய்மொழி (2-3-2) – அறியாதன அறிவித்த அத்தா நீ செய்தன அடியேன் அறியேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அடியேன் செய்யவேண்டியது செய்தபடியே இனி இருப்பேன் அல்லாமல் ஒருவரை ஒருவர் அகல்வதற்குக் காரணமும் பயனும் உள்ளதோ? ஆர்த்தி ப்ரபந்தம் (9) – பாபத்தால் யான் பிறப்பேனேலும் இனி எந்தை எதிராசன் தான் பிறக்குமென்னை உய்ப்பதா - நானும் பாவங்கள் என்ற இந்த ஸம்ஸாரத்தில் விழுந்து, மேலும் பல பிறவிகள் எடுக்கும்படி உள்ளேன்; எனது தந்தையான எம்பெருமானார் என்னைக் காக்கும் பொருட்டு இந்த உலகில் அவதரித்தார் - என்பதற்கு ஏற்ப கைவிடுதல் என்பது தாழ்வு ஏற்படும்படி அவர்க்கு முடிவாக உள்ளது என்றாலும், பெறுதற்கு அரிய பேறு என்று எங்களை நீவிர் ஏற்பதாலும், பெரிய திருவந்தாதி (31) – நிழலும் அடிதாறும் - என்பதற்கு ஏற்ப எங்களை, மற்றவர்களுக்கு வசப்படாத விதத்தில் ஏற்பது அல்லாமல், உமக்கு எம்மை விட்டு அகல்வது பயன் அளிக்குமோ?

49. ஆனது செம்மை அறநெறி பொய்ம்மை அறுசமயம்
போனது பொன்றி இறந்தது வெங்கலி பூங்கமலத்
தேனதிபாய் வயல் தென் அரங்கன் கழல் சென்னி வைத்துத்
தானதில் மன்னும் இராமானுசன் இத்தலத்து உதித்தே.

விளக்கவுரை – அழகிய தாமரை மலர்களில் உள்ள தேன் என்னும் ஆறானது எங்கும் பாய்ந்தபடி நிற்கும் வயல்களால் சூழப்பட்டது திருவரங்கம் ஆகும். இந்தத் திருவரங்கத்தில் கண்வளர்ந்தபடி உள்ள பெரியபெருமாளான அழகியமணவாளனின் திருவடிகளை, தாம் பெற்ற உயர்ந்த செல்வம் இதுவே என்று தனது தலையில் வைத்து, அவற்றில் ஈடுபட்டபடி உள்ளவர் எம்பெருமானார் ஆவார். வேதவேதாந்த தர்மங்கள் அனைத்திற்கும் பாதகம் வரும்படியாக ஏற்பட்ட பௌத்தம் முதலான ஆறு மதங்களாலும், கலியுகத்தால்

பீடிக்கப்பட்ட நிலையில் உள்ளதாலும் துவண்டிருந்த இந்தப் பூமியில் எம்பெருமானார் அவதரித்தார். இதனால் நிகழ்ந்தது என்ன? மறைந்து விட்டிருந்த வேதவேதாந்த மார்க்கங்கள் மீண்டும் தழைத்தன. பொய்யான கருத்துக்களைப் பரப்பிய ஆறு (பௌத்தம், சார்வாகம், சாக்கியம், உலூக்கியம், பாசுபதம் மற்றும் காணாபத்யம்) மதங்களும் நிலை குலைந்தன. நமக்கு அஜ்ஞானம் உண்டாக்கிக் கொண்டிருந்த கலியானது அழிந்தது.

அவதாரிகை - எம்பெருமானார் தம்முடைய ப்ராப்தி ப்ரதிபந்தங்களை யெல்லாம் போக்கி தம் திருவுள்ளத்திலே நிரந்தர வாஸம் பண்ணுகிற மஹோபகாரத்தால் வந்த ப்ரீதி ப்ரகர்ஷத்தையும், அந்த ப்ரீதி எப்போதுமுண்டாகக் கூடுமோவென்று அதிசங்கை பண்ணினவரைக் குறித்து அதினுடையசாஞ்சல்ய ஹேதுவில்லாமையும், கீழிரண்டு பாட்டுக்களாலே அருளிச்செய்து, இதிலே எம்பெருமானார் திருவவதரித்தருளின பின்பு வேதத்துக்குண்டான ஸம்ருத்தியையும், துர்மதங்களுக்கும் கலிதோஷத்துக்குமுண்டான விநாசத்தையு மநுஸந்தித்து இனியராகிறார்.

விளக்கம் - திருவரங்கத்தமுதனாராகிய தனது மனதில் எம்பெருமானார் நிரந்தரமாக வசித்து, தான் அடையவேண்டிய இலக்குகளை அடையத் தடையாக உள்ள அனைத்தையும் நீக்கியபடி மிகுந்த உபகாரம் செய்ததால் ஏற்பட்ட மட்டற்ற மகிழ்ச்சி, அத்தகைய மகிழ்வு என்பது நிரந்தரமாக நிலைக்குமோ என்று சந்தேகம் எழுப்புபவர்களிடம் அந்த நிலையானது அழியாமல் இருக்கும் என்றும் அது அசைவதற்குக் காரணம் இல்லை என்ற நிலையை விளக்குதல் போன்றவற்றைக் கீழே உள்ள இரண்டு பாசுரங்களில் அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில் - எம்பெருமானார் அவதரித்த பின்னர் வேதங்களுக்கு ஏற்பட்ட வளர்ச்சி, மற்ற மதங்கள் மற்றும் கலியுகம் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட அழிவு போன்றவற்றை எண்ணி எண்ணி மகிழ்ந்து நிற்கிறார்.

வ்யாக்யானம் – (பூங்கமலத் தேன் நதி பாய் வயல்) அழகிய தாமரைப் பூக்களிலுண்டான தேனாகிற ஆறு விளைநீராகப் பாயா நின்றுள்ள வயலாலே சூழப்பட்ட. (தென்னரங்கன்) திருமதிள்களும் திருக்கோபுரங்களும் திருச்சோலைகளுமான ஸமுதாயசோபையாலே தர்சநீயமான கோயிலை இருப்பிடமாக விருக்கிற பெரியபெருமாளுடைய. (கழல் சென்னி வைத்து) திருவடிகளைத் தம்முடைய சிரஸ்ஸிலே வைத்துக்கொண்டு. கொக்குவாயும் படுகண்ணியும்இசைந்தாப்போலே யாய்த்துத் திருவடிகளும் திருமுடியும் சேர்ந்தபடி.

அன்றிக்கே, ராஜாக்கள் ஸிம்ஹாஸநத்திலலே ஆரோஹிக்கும்போது ஆதிராஜ்ய ஸூசகமான அபிஷேகத்தைத் தந்தாமுடைய சிரஸ்ஸுக்களில் வைத்துக் கொண்டாப் போலே, "உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே" என்னும்படி பரமப்ராப்யமான அவர் திருவடிகளை தம்முடைய உபய விபூத்யைச்வர்ய ஸூசகமாம்படி திருமுடியிலே வைத்துக் கொண்டா ரென்னவுமாம். (தானதில் மன்னும்) தாமும் அதே நிஷ்டையிலே ஸுப்ரதிஷ்டிதராய் திருவடிகளிலே நித்ய ஸம்ச்லேஷம் பண்ணா நின்றுள்ள. (இராமானுசன்) எம்பெருமானார். (இத்தலத்துதித்தே) வேதோக்த தர்மங்களுக்கெல்லாம் ஸாங்கர்யம் வரும்படி வேத வ்ருத்தங்களான ஷட் ஸமயங்களும் வ்யாபித்து கலியானது ஸாம்ராஜ்யம் பண்ணிக் கொண்டு போருகிற இந்த மஹாப்ருத்வியிலே திருவவதரிக்கவே.

விளக்கம் – (பூங்கமலத் தேன் நதி பாய் வயல்) - அழகான தாமரைமலர்களிலிருந்து வழிந்து பெருகின்ற தேன் ஆறானது நீர் போன்று பாய்கின்ற வயல்களால் சூழப்பட்டதான (தென்னரங்கன்) - அழகான உயர்ந்த மதிள்கள், அழகான கோபுரங்கள், அழகான சோலைகள் என்று இவ்விதம் பலவிதமான எழில் காரணமாகக் காண்பதற்கு மிகவும் இன்பமாக உள்ள திருவரங்கம் பெரியகோயிலைத் தனது இருப்பிடமாகக் கொண்டுள்ள பெரியபெருமாளுடைய. (கழல் சென்னி வைத்து) - திருவடிகளை எப்போதும் தனது தலையில் வைத்தபடி. ஆபரணம் ஒன்றில் காணப்படும் கொக்கி போன்ற அமைப்பும் அதனை மாட்டுகின்ற வளையமும் இணைந்துள்ளது போன்று, ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளும் எம்பெருமானாருடைய திருமுடியும் உள்ளன. அல்லது அரசர்கள் சிம்மாசனத்தில் ஏறி அமரும்போது க்ரீடத்தைத் தங்கள் தலையில் வைத்துக் கொள்வது போன்று திருவாய்மொழி (6-10-10) - உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே - என்பதற்கு ஏற்ப அடைவதற்கான உயர்ந்த இலக்கான பெரியபெருமாளுடைய திருவடிகளை, தான் உபயவிபூதிகளையும் நிர்வகிப்பவர் என்பது மறைமுகமாக வெளிப்படும்படி தனது திருமுடியில் வைத்துக் கொண்டவர் எனலாம். (தானதில் மன்னும்) - தான் எப்போதும் நிலையாக நின்று திருவடிகளுடன் நித்யமான தொடர்பு கொண்டபடி உள்ள (இராமாநுசன்) - எம்பெருமானார். (இத்தலத்து உதித்தே) - வேதமார்க்கங்களுக்கு கலப்பு ஏற்படும்படியாக வேதங்களுக்கு முரணாக உள்ள ஆறு மதங்களும் எங்கும் பரவி நின்று, இப்படியாகத் தனது ஆளுமையை கலியுகம் எங்கும் நிலைநாட்டியிருந்தது. இப்படியாகக் கலியால் ஆளப்பட்டதான இந்தப் பரந்த உலகத்தில் அவதரித்ததால்.

வ்யாக்யானம் – (ஆனது செம்மையற நெறி) அறநெறி செம்மையானது - முன்பு அழிந்துபோன வேதோக்தமான ஸமீசீந தர்மமார்க்கம் மீண்டுண்டானது. "யதி புரந்தரஸ்ய உக்தய: சிரந்தந ஸரஸ்வதீ சிகுர பந்த ஸைரந்த்ரிகா:", "அவரோபிதவாந் ச்ருதே: அபார்த்தாந் நநு ராம அவரஜ: ஸ ஏஷ பூய:" என்கிறபடியே அல்ப ச்ருதராலே ப்ரதாரணம் பண்ணப்பட்ட வேதமெல்லாம் இவராலே ருஜுவாகத் திருந்தி ததுக்தி தர்மபரமானது ஸமீசீநமாய் ப்ரதிஷ்டிதமா யிரா நின்றது. ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யரிறே யிவர். (பொய்ம்மையறு சமயம் போனது பொன்றி) வேத பாஹ்யமாகையாலே அயதாவான ஷட் ஸமயமும் முடிந்து போய்த்து. பொன்றுதல் –முடிதல். "பொன்மையறு சமயம்" எனறு பாடமானபோது, "தாமஸாநாம் மோஹநார்த்தம்", "மோஹ சாஸ்த்ராணி காரய" என்கிறபடியே பகவதாஜ்ஞாதி லங்கநம் பண்ணினவர்களை ப்ரம ப்ரமாதங்களாலே நசிப்பிக்க கடவதான அபஸித்தாந்தம் மென்றபடி. (இறந்தது வெங்கலி) கீழ்ச் சொன்னபடியே அஜ்ஞாநத்தை விளைவிப்பிக்குமதாகையாலே அதிக்ரூரமானது நசித்துப் போய்த்து. "கலியும் கெடும் கண்டு கொண்மின்" என்று அருளிச்செய்தாரிறே நம்மாழ்வாரும். "ஆசிநோதி ஹி சாஸ்த்ரார்த்தான் ஆசாராந் ஸ்தாபயத்யபி, ஸ்வயமாசாரதேயஸ்து ஸ ஆசார்ய உதாஹ்ருத:" என்றிறே ஆசார்ய லஷணமிருப்பது; அது இவரிடத்திலே காணும் நிறம் பெற்றது. "புண்யாம் போஜ விகாஸாய பாபத்வாந்த சஷயாயச, ஸ்ரீமாநாவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர" என்னக் கடவதிறே.

விளக்கம் - (ஆனது செம்மையற நெறி) - முன்பு அழிந்த போயிருந்த உயர்ந்த வேதமார்க்கங்கள் அனைத்தும் மீண்டும் தழைக்கத் தொடங்கின. யதிராஜ ஸப்ததி (36) - இதம் ப்ரதம ஸம்பவத் குமதி ஜால கூலங்கஷா: ம்ருஷா மத விஷாநல ஜ்வலித ஜீவ ஜீவாதவ: க்ஷரந்தி அம்ருதம் அக்ஷரம் யதி புரந்தரஸ்ய உக்தய: சிரந்தந ஸரஸ்வதீ சிகுர பந்த ஸைரந்த்ரிகா: - இந்தக் கலிகாலத்தில் புதிதுபுதிதாகப் பல மதங்கள் தலை எடுத்து, விபரீதமான புத்தி கொண்டவையாக உள்ளன. அந்தக் கூட்டங்கள் அனைத்தையும் வேருடன் அறுக்க வல்லது; பொய் என்பதை மட்டுமே தங்கள் குறிக்கோளாகக் கொண்டு, அந்தத் தீ மூலம் ஜீவன்களை விஷம் போல் அழிக்கும் மதங்களில் இருந்து ஜீவன்களைக் காப்பாற்றுவது; வேதம் என்ற அரசியின், உபநிஷத் என்ற கூந்தலை அழகாகச் சீவி அலங்கரிக்கும் பணிப்பெண்கள் போன்றது – இவை எது என்றால் யதிராஜரின் நூல்களே ஆகும். அவை அழிவற்ற மோக்ஷத்தை நம் மீது பொழிகின்றன - என்றும், யதிராஜ ஸப்ததி (13) - அவரோபிதவாந் ச்ருதே: அபார்த்தாந் நநு ராம அவரஜ: ஸ ஏஷ பூய: - அர்ஜுனன் தேர் முன்பு நின்று, அவனது எதிரிகளைக் க்ருஷ்ணன் வென்றான் (வேதத்தின் முன்பாக

நின்று இராமாநுசர், வேதங்கள் கூறுவதை மறுப்பவர்களை வென்றார்). பலராமனின் தம்பியாகிய இராமாநுசன் என்ற க்ருஷ்ணன் மீண்டும் இராமாநுசராக அவதரித்தானோ? – என்றும் கூறுவதற்கு ஏற்ப, சிறிதளவு மட்டுமே ஞானம் கொண்டவர்களால், தவறாகப் பொருள் உரைக்கப்பட்ட வேதங்கள் அனைத்தும் எம்பெருமானாரால் நேர்த்தியாகத் திருத்தப்பட்டு, அதன் மூலம் வெளிப்படுவதான தர்மமார்க்கமானது நன்றாக அனைத்து இடங்களிலும் உறுதிபடி நின்றது. "ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்" அல்லவோ இவர்? (பொய்ம்மையறு சமயம் போனது பொன்றி) - வேதங்களுக்குப் புறம்பாக உள்ளதால் உண்மை அல்லாத ஆறு மதங்களும் முடிந்து போயின. பொன்றுதல் என்றால் முடிதல் என்று பொருள். "பொய்ம்மையறு சமயம்" என்பதை "பொன்மையறு சமயம்" என்றும் சிலர் படிப்பது உண்டு. இவ்விதம் கொண்டால் - பாத்ம புராணம் – தாமஸாநாம் மோஹனார்த்தம் – தாமஸத்தை அதிகரித்து மயக்கத்தை உண்டாக்க - என்றும், வராஹபுராணம் – மோஹ சாஸ்த்ராணி காரய – மயங்க வைக்கும் சாஸ்த்ரங்களை உண்டாக்கி – என்றும் கூறுவதற்கு ஏற்ப பகவத் ஆணைகளை மீறி நடப்பவர்களை மயங்க வைக்கும் ஸித்தாந்தங்களை உணர்த்தி அவர்களை அழியும்படிச் செய்வதான தவறான ஸித்தாந்தங்கள் என்று பொருள். (இறந்தது வெங்கலி) - கீழே உரைத்தபடி அறியாமையை ஏற்படுத்துவதால் மிகவும் க்ரூரமாக உள்ள அவை அழிந்தன. நம்மாழ்வார் திருவாய்மொழியில் (5-2-1) – கலியும் கெடும் கண்டு கொண்மின் – என்று அருளிச்செய்தார் அல்லவோ? ஆசிநோதி ஹி சாஸ்த்ரார்த்தாந் ஆசாராந் ஸ்தாபயத்யபி ஸ்வயமாசரேத்யஸ்து ஸ ஆசார்ய உதாஹ்ருத: - சாஸ்த்ரத்தின் உட்பொருளை நன்கு அறிந்தவரும், பிறரை அவ்வழியில் நிலைநிறுத்துபவரும், தாமும் அதன்படி வாழ்பவருமே ஆசார்யர் எனப்படுகிறார் – என்பதாக அல்லவோ ஆசார்யனின் இலக்கணம் இருத்தல் வேண்டும்; இந்த இலக்கணம் எம்பெருமானார் மூலமாகவே நிரூபணம் அடைந்தது. புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்த க்ஷயாய ச ஸ்ரீமான் ஆவிரபூத்பூமௌ ராமாநுஜ திவாகர: - சூரியனைக் கண்ட தாமரை எவ்விதம் மலருமோ அது போன்று இராமாநுசன் என்னும் சூரியனால் நம்முடைய பாபங்கள் அழிந்து புண்ணியங்கள் மலர்கின்றன – என்பது காண்க.

50. உதிப்பன உத்தமர் சிந்தையுள் ஒன்னலர் நெஞ்சம் அஞ்சிக்
கொதித்திட மாறி நடப்பன கொள்ளைவன் குற்றம் எல்லாம்
பதித்த என் புன்கவிப் பாவினம் பூண்டன பாவு தொல்சீர்

எதித்தலை நாதன் இராமானுசன் தன் இணை அடியே.

விளக்கவுரை – அனைத்து திசைகளிலும் பரவி உள்ளதாக, முயற்சி செய்து அடையப் பெறாமல் தானாகவே இயற்கையாக அமைந்துள்ள உயர்ந்த திருக்கல்யாண குணங்கள் கொண்டவர் எம்பெருமானார் ஆவார். அருளாளப் பெருமாள் எம்பெருமானார், எம்பார் தொடங்கி எழுநூறு ஜீயர்களின் தலைவராக உள்ளவர் எம்பெருமானார் ஆவார். இவரது திருவடிகள் மிகவும் உயர்ந்தவை ஆகும். எப்படி என்றால் – இந்த ஸம்ஸார உலகில் உள்ள மக்களுடன் ஒன்றாக வாழ்ந்து, அவர்களைக் கரை ஏற்றியபடி உள்ளது; பரதன் போன்ற உயர்ந்தவர்களின் சொற்களை நிராகரித்து எம்பெருமானின் திருவடிகள் கானகம் சென்றன, ஆனால் எம்பெருமானாரின் திருவடிகள் அப்படி அல்லவே! ஆக இவரது திருவடிகளுக்கு ஒப்பான திருவடிகளைக் கொண்டவர்கள் வேறு யாரும் இல்லை என்றானது. மிகவும் உயர்ந்தவர்களின் நெஞ்சங்களில் இந்தத் திருவடிகள் எப்போதும் நீங்காமல் உள்ளன. வேதவேதாந்தங்களைக் குறித்து எதிர்வாதம் செய்பவர்கள் அச்சம் கொள்ளும்விதமாக இவரது திருவடிகள் கம்பீரமாக நடக்கின்றன. அனைத்து வகையான குற்றங்கள் உள்ள என் போன்ற நீசனின் மூலம் வெளிப்பட்டதும், கவிதை கூறும் திறன் அற்ற என் போன்றவன் மூலம் வெளிப்பட்டதும் ஆகிய இந்தப் பாசுரங்களை – "இவை குற்றம் நிறைந்த பாசுரங்கள்", என்று ஒதுக்காமல், மாலையாக எண்ணி, தன் மீது எம்பெருமானாரின் திருவடிகள் சூடிக்கொண்டன.

அவதாரிகை – "தென்னரங்கன் கழல் சென்னி வைத்துத்தானதில் மன்னும்" என்று எம்பெருமானாருக்கு பெரியபெருமாள் திருவடிகளில் உண்டான ப்ராவண்யத்தை யநுஸந்தித்தார் கீழ். இதில் - அந்த ப்ரஸங்கத்திலே தமக்கு உத்தேச்யரான எம்பெருமானார் திருவடிகளை யநுஸந்தித்து, அவற்றினுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை அடைவே யருளிச்செய்து கொண்டு வித்தாராகிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "தென்னரங்கன் கழல் சென்னி வைத்துத்தானதில் மன்னும்" என்று எம்பெருமானாருக்குப் பெரியபெருமாளுடைய திருவடிகளில் உள்ள ஈடுபாட்டினை எண்ணினார். இந்தப் பாசுரத்தில், தன்னால் அடையப்பட வேண்டிய இலக்காக உள்ள எம்பெருமானாருடைய திருவடிகளை எண்ணியபடி, அவற்றின் ஸ்வரூபம் மற்றும் தன்மைகளை விரிவாக அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (பாவு தொல்சீர்) பரவுகை – பரம்புகை. "திசையனைத்து மேறுங்குணன்" என்று இவர் தாமருளிச்செய்தபடியே ஸகல திக்குக்களிலும் வ்யாப்த்தங்களாய் வந்தேறியன்றிக்கே ஸ்வாபாவிகங்களா யிருந்துள்ள கல்யாணகுணங்களை யுடையராய். (எதித்தலைநாதன்) அருளாளப்பெருமா ளெம்பெருமானார், எம்பார் தொடக்கமான எழு நூறு ஜீயர்களுக்கும் வகுத்த சேஷியாய், அவர்களுக்கு ஸ்வரூபோபாய புருஷார்த்தங்களை தத் யாதாம்ய பர்யந்தமாக உபதேசித்தருளி, அவ்வழியாலே அவர்களுக்குத் தலைவராய், நாதபூதராயிருந்துள்ள. (இராமானுசன்) எம்பெருமானார். (தன்னிணையடியே) இஸ்ஸம்சார சேதனரை அதில் நின்றும் நிவர்த்திப்பிக்கைக்கும், அநுபாவ்யமாய்க் கொண்டு ரஸிப்பிக்கைக்கும், இத்திருவடிகளோடொத்திருப்பாருண்டோ வென்று ஆராய்ந்து பார்த்தால், "ரஸோ வை ஸ:. ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி", "கோ ஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத், *யதேஷ ஆகாச* ஆநந்தோ ந ஸ்யாத், ஏஷ ஹ்யேவாநந்தயாதி", "*அபயம் ஸர்வபூதேப்யோ* ததாம்யேதத் வ்ரதம் மம", "அஹம் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று வேதபுருஷனாலும் சொல்லப்பட்ட ப்ரபாவத்தை யுடையனான ஸர்வேச்வரனும், "ஸித்திர்ப் பவதி வா நேதி ஸம்சயோச்யுதஸேவிநாம்" என்கிறபடியே ப்ராப்யமுண்டோ வில்லையோ வென்று ஸம்சயிக்க வேண்டும்படி பண்ணக்கடவ னாகையாலும், ஸ்ரீபரதாழ்வானுக்கு இரங்காதே போனபடியாலும், இவ்வுபாயத்துக்கு ஒப்பாகமாட்டாது. "ந ஸம்சயோஸ்தி தத்பக்தபரிசர்யாரதாத்மநாம்", "குரோரேவ பராகதி: குருரேவ பர காம:", "உபாயோபேய பாவேன தமேவ சரணம் வ்ரஜேத்" என்று நிஸ்ஸம்சய ப்ரதிபாதகமாய் அந்யயோக வ்யவச்சேதகமா யிருந்துள்ள ப்ரமாண பலத்தாலே இவ்வுபாயம் அதிலும் ச்ரேஷ்டமாய்த்திருப்பது. ஆகையாலே அந்த அதிசயத்துக்கு, ஒன்றுக்கொன்றே ஸத்ருசமாயிருக்கிற இரண்டு திருவடிகளுமென்றபடி.

விளக்கம் – (பாவு தொல்சீர்) - பரவுதல் என்றால் நிரம்புதல். முன்பு உள்ள பாசுரத்தில் (46), "திசையனைத்து மேறுங்குணன்" என்று இவரே அருளிச்செய்தபடி அனைத்து திசைகளிலும் பரவி நிற்பதும், நடுவில் வந்து சேர்ந்தவை என்று இல்லாமல் இயற்கையாகவே இருப்பதும் ஆகிய உயர்ந்த திருக்கல்யாணகுணங்களைக் கொண்டவராக. (எதித்தலைநாதன்) – அருளாளப்பெருமாள் எம்பெருமானார், எம்பார்

தொடக்கமாக உள்ள எழுநூறு ஜீயர்களுக்கு இயல்பான தலைவராய், அவர்களுக்கு ஆத்மஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தங்களை உள்ளது உள்ளபடி உபதேசித்து அருளியவராய், அதன் காரணமாக அவர்களுடைய ஆசார்யராய், அவர்களுக்கு நாதனாய் உள்ள. (இராமாநுசன்) – எம்பெருமானார். (தன் இணை அடியே) - ஸம்ஸாரத்தில் மூழ்கியபடி உள்ளவர்களை, இந்த ஸம்ஸாரத்திலிருந்து வெளியேற்றுவதற்கும், அனுபவிக்கத்தகுந்தது என்று அவர்களை ரசிக்கும்படிச் செய்வதற்கும், ஏற்றதான இவருடைய திருவடிகள். இத்தகைய திருவடிகளை ஒத்தவர்கள் யாரும் உள்ளனரோ என்று ஆராய்ந்து பார்த்தால், தைத்திரீய உபநிஷத் (2.7.1) - ரஸோ வை ஸ:. ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி - ரஸங்களின் இருப்பிடமான ப்ரஹ்மத்தை ஒருவன் புரிந்து கொள்ளும்போது, அவன் ஆனந்தமுடையவனாக ஆகிறான் - என்றும், தைத்திரீய உபநிஷத் (2.7.3) - கோ ஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத், *யதேஷ ஆகாச* ஆநந்தோ ந ஸ்யாத், ஏஷ ஹ்யேவாநந்தயாதி – எங்கும் ப்ரகாசிக்கும் இந்த ஆனந்தமயன் இல்லை என்றால், யாரால் இம்மை மற்றும் மறுமையில் இன்பங்களை அடைய இயலும்? இவனே அனைத்தையும் ஆனந்தம் அடையச் செய்கிறான் - என்றும், *இராமாயணம் யுத்தகாண்டம் - அபயம் ஸர்வபூதேப்யோ* ததாம்யேதத் வ்ரதம் மம – (இராமன் உரைப்பது) – "அபயம்" என்று என்னிடம் யார் வந்தாலும் அவர்களைக் காப்பது எனது விரதம் ஆகும் – என்றும், "கீதை (18-66) - அஹம் ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – என்னைச் சரணம் அடைந்தவனை, அவனுடைய அனைத்து பாபங்களிலிருந்தும் விடுவிப்பேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப வேதபுருஷனாலும், ஸர்வேச்வரனாகிய தன்னாலும் கூறப்பட்டதான ப்ரபாவத்தைக் கொண்ட ஸர்வேச்வரன் கூட, ஸித்திர்ப் பவதி வா நேதி ஸம்சயோச்யுதஸேவிநாம் – ஸர்வேச்வரனைப் பற்றினவர்களுக்குப் பேற்றில் சந்தேகம் உண்டு - என்பதற்கு ஏற்ப தன்னுடைய திருவடிகள் அடையப்பட வேண்டிய தகுதி கொண்டவையோ அல்லது இல்லையோ என்று சந்தேகம் கொள்ளும்படியாக உள்ளதாலும், பரதனுக்கு இரக்கம் காண்பிக்காமல் சென்றதாலும் ஸர்வேச்வரனுடைய திருவடிகள் கூட, இவருடைய திருவடிகள் என்ற உபாயத்திற்கு ஒப்பாகமாட்டாது. மேலும், ந ஸம்சயோஸ்தி தத்பக்தபரிசர்யாரதாத்மநாம் - பாகவதர்களைப் பற்றினவர்கள் சந்தேகப்படாமல் மார்பில் கை வைத்து உறங்கலாம் - என்றும், குரோரேவ பராகதி: குருரேவ பர காம: - குருவே உயர்ந்த கதி, குருவே உயர்ந்த விரும்பப்படும் விஷயம் – என்றும், *உபாயோபேய* பாவேன தமேவ சரணம் வ்ரஜேத் – தனது ஆசார்யனே உபாயம்

என்று ஒருவன் சரணம் புகுவானாக - என்றும் எந்தவிதமான ஐயமும் வெளிப்படாத விதத்தில் உரைப்பதும், ஒன்றுக்கொன்று பல்வேறு விதங்களில் உள்ளதும் ஆகிய ப்ரமாணங்கள் மூலமாக, எம்பெருமானாருடைய திருவடிகள் என்ற உபாயமானது, ஸர்வேச்வரனுடைய திருவடிகள் என்ற உபாயத்தைக் காட்டிலும் உயர்ந்து விளக்குகிறது. ஆகவே இவற்றுக்கு இணையாக மற்றொன்று உண்டு என்றால், அந்த இரு திருவடிகளும் ஒன்றுக்கு ஒன்று நிகராக உள்ளன என்று மட்டுமே கூறலாம்.

வ்யாக்யானம் – (உதிப்பன உத்தமர் சிந்தையுள்) உத்தமராவார் - அதம மத்யமரான வேதபாஹ்யருக்கும், வைதிகராய்க் கொண்டு ஸாமாந்ய தர்மத்திலேதானே மண்டி யிருக்கு மவர்களுக்கும், அவர்களுடைய நிஷ்டைக்கும் ப்ரதிபடராய் பரமவைதிகரான விசேஷ சாஸ்த்ரைக நிஷ்ட்டராய் முமுக்ஷுக்களா யிருக்குமவர்கள். உத்க்ருஷ்டராய், அநந்ய ஸாதநராய், அநந்ய ப்ரயோஜநரா யிருக்கு முத்தமாதிகாரிக ளென்றபடி. அன்றிக்கே, இது சரம பர்வ ப்ரதிபாதக சாஸ்த்ரமாகையாலும், முமுக்ஷுக்களிலும் ஏகாந்திகளிலும் பரமைகாந்திகளிலும் வைத்துக் கொண்டு உத்தமர் பரமைகாந்திகளாகையாலும், இவ்விடத்திலே "உத்தமர்" என்றது பரமைகாந்திகளைச் சொன்னபடி யென்னவுமாம். (சிந்தையுள்) அவர்களுடைய திருவுள்ளங்களிலே. (உதிப்பன) "எல்லையில் சீரிள நாயிறிரண்டு போல்" என்கிறபடியே சக்ரவாள பர்வதத்தில் இரண்டாதித்யர்கள் சேரவுதித்தாப்போலே, ஸத்துக்களுடைய திருவுள்ளங்களிலே எம்பெருமானாருடைய திருவடிகளிரண்டும் எப்போதுமுதித்து ப்ரகாசியா நிற்கும் தன்மையையுடையன. கீழ்ச் சொல்லப்பட்ட அத்யாவஸாய ரஹிதர்க்கு ஒருக்காலாகிலும் ப்ரகாசிக்கிறனவல்ல. இப்படிப்பட்ட ப்ராவண்யாதிசய முடையவர்களுக்கே ப்ரகாசிக்கு மென்றபடி. "யதீந்த்ரநாத சிஷ்டாக்ர கண்ய ஜந ஸேவ்ய பவத் பதாப்ஜே" என்றிறே ஜீயரு மருளிச் செய்தது. "அஜடாசயோதயம் யதிராஜ சந்த்ரம்" என்று அபியுக்தரு மருளிச்செய்தாரிறே.

விளக்கம் – (உதிப்பன உத்தமர் சிந்தையுள்) - உத்தமர்கள் என்றால் யார்? விடை அளிக்கிறார். வேதமார்க்கத்தை முற்றிலுமாகப் புறக்கணிப்பதும், வேதங்களைப் பொறுத்தவரை எந்தக் கருத்தும் கூறாமல் நடுநிலைமையில் உள்ளதும் ஆகிய வேதங்களுக்கு முரணாகக் கூறுபவர்களுக்கும், வேத தர்மத்தில் நிலைநின்றாலும் சாதாரண தர்ம மார்க்கத்தில் நிலை நிற்பவர்களுக்கும், இவர்களுடைய அன்றாட

செயல்பாடுகளுக்கும் மாறுபட்டு உள்ளவர்கள்; சாஸ்த்ரங்களில் மட்டுமே நிலை நிற்கும் வைதிகர்கள்; முமுக்ஷுக்கள் - இப்படிப்பட்டவர்களே உத்தமர்கள் ஆவர். இவர்கள் அனைவரைக் காட்டிலும் உயர்ந்தவர்களாகவும், மற்ற உபாயங்களைக் கைக்கொள்ளாதவராகவும், மற்ற பலன்கள் எதனையும் எதிர்பாராமல் உள்ளவர்களாகவும் இருப்பவர்கள் ஆவர். வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். இராமானுச நூற்றந்தாதியாகிய இந்த ப்ரபந்தம் "பாகவதர்களுக்கு அடியார்கள்" என்பதான இறுதி நிலையை வெளிப்படுத்தும் சாஸ்த்ரம் என்பதால் "உத்தமர்" என்று பதமானது முமுக்ஷுக்கள், ஏகாந்திகள், பரம ஏகாந்திகள் என்ற மூவரில், பரமைகாந்திகளையே குறிக்கும் என்றும் கூறலாம். (சிந்தையுள்) - அப்படிப்பட்ட உத்தமர்களுடைய திருவுள்ளங்களில். (உதிப்பன) - திருவாய்மொழி (8-5-5) - எல்லையில் சீரிள நாயிறு இரண்டு போல் - என்பதற்கு ஏற்ப சக்ரவாள பர்வதத்தில் இரண்டு ஆதித்யர்கள் ஒன்றாக உதித்தது போன்று, ஸாதுக்களின் திருவுள்ளங்களில் எம்பெருமானாருடைய இரண்டு திருவடிகளும் எப்போதும் உதித்தபடி இருந்து, ப்ரகாசத்துடன் காணப்படும் தன்மை கொண்டவையாகும். ஆனால், மேலே கூறப்பட்ட உள்ளத் துணிவு அற்றவர்களுக்கு, எப்போதும் ப்ரகாசிப்பதில்லை, மிகுந்த ஈடுபாடும் வெற்றியும் உள்ளவர்களுக்கு மட்டுமே ப்ரகாசிக்கும். யதிராஜ விம்சதி (5) - யதீந்த்ர நாத: சிஷ்டாக்ரகண்ய ஜந ஸேவ்ய பவத் பதாப்ஜே – யதிகளின் அரசனே! உனது உயர்ந்த திருவடிகளில் நான் எப்போதும் பொருந்தியவனாக உள்ள நிலை ஏற்பட வேண்டும் - என்று ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச்செய்தார். யதிராஜ ஸப்ததி (17) – அஜடாசய உதிதம் யதிராஜ சந்த்ரம் - உலக விஷயங்கள் மீது உள்ள ஆசைக்கு அப்பால் உள்ளவர்; தன்னை அண்டியவர்களிடம் சந்திரன் போன்று குளிர்ந்து உள்ளவர் – என்று ஸ்வாமி வேதாந்த தேசிகனும் அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் – (ஒன்றலர் நெஞ்சமஞ்சிக் கொதித்திட மாறி நடப்பன) ஒன்றலர் என்றது - பாஹ்ய குத்ருஷ்டிகள் தொடக்கமான ப்ரதிபக்ஷிகளை. அவர்களுடைய ஹ்ருதயமானது ஸூர்யோதயத்தாலே திவா பீதங்கள் பயப்படுமாபோலே, "க்ஷிப்த ப்ரத்யர்த்தி த்ருப்தி:" என்னும்படியான அவர் திருவடிகள் தன்னுதயத்தால் பீதமாய், ஆதித்யனுடைய தேஜஸ்ஸாலே அவை பரிதபிக்குமாபோலே, ஸ்வதேஜஸ்ஸாலே பரிதபிக்கும்படி. ஆதித்யன் இவற்றுக்கு ப்ரதிபடனாய்க் கொண்டு உத்தராயண தக்ஷிணாயநங்கள்தோறும்

மாறி மாறி ஸஞ்சரிக்குமாபோலே அதுக்கு ப்ரதிபடங்களாய்க் கொண்டு ஸர்வ திக்குகளிலும் பரஸ்பரம் மாறி நடவா நிற்கும் தன்மையையுடையன. இத்தால் - பாஹ்ய குத்ருஷ்டிகளை நிரஸிக்கைக்காக வேங்கடாசலத்துக்கும் யாதவாசலத்துக்கும் சாரதாபீடம் முதலான ஸ்தலங்களுக்கும் இவர் எழுந்தருளினபடியை அருளிச்செய்தாராய்த்து.

விளக்கம் – (ஒன்றலர் நெஞ்சமஞ்சிக் கொதித்திட மாறி நடப்பன) - "ஒன்றலர்" என்றால் வேதங்களுக்கு முரணாகப் பொருள் உரைக்கின்றவர்கள் தொடக்கமான மற்ற மதங்களை. அவர்களுடைய இதயங்கள், சூரியனைக் கண்டு இருள் அஞ்சி ஓடுவது போன்று அஞ்சுகின்றன என்று கருத்து. க்ஷிப்த ப்ரத்யர்த்தி த்ருப்தி: - என்பதற்கு ஏற்ப உள்ள எம்பெருமானாருடைய திருவடிகள், தங்களுடைய உதயம் காரணமாக, அவர்களுக்கு அச்சம் ஏற்படுத்துவையாகவும், சூரியன் போன்ற தேஜஸ்ஸால் அவர்களைத் தவிக்கும்படிச் செய்பவையாகவும், இருளைச் சூரியன் விரட்டும் விதத்தில் உத்தராயணம்-தக்ஷிணாயம் என்று மாறி மாறி ஸஞ்சரிப்பது போன்று, வேதங்களுக்குப் புறம்பாக உரைக்கும் மதங்களைத் தள்ளும் விதத்தில் அனைத்து திசைகளிலும் இவருடைய திருவடிகள் மாறி மாறி நடந்தபடி உள்ளன. இதன் மூலம், வேதங்களுக்குப் புறம்பாக பொருள் உரைப்பவர்களை நீக்கும்விதமாக திருவேங்கடாசலத்திற்கும், திருநாராயண புரத்திற்கும், சாரதா பீடத்திற்கும் எம்பெருமானார் எழுந்தருளின விதத்தைக் கூறினார்.

வ்யாக்யானம் – (கொள்ளை வன் குற்றமெல்லாம் பதித்த) "ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே ஸஹஸ்ரசோ யந்ந மயா வ்யதாயி" என்றும், "தேப்யோப்யப்யதிகாநிதாந் யஹம் அபிக்ஷுத்ர: கரோமிக்ஷணாத்" என்றும், "யாவச்ச யச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்ச தத்தத் அதிகஞ்ச மமாஸ்தி ஸத்யம்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வதா ஸர்வ ப்ரகாரத்தாலும் பண்ணப்பட்டவை யாகையாலே ஸம்ருத்தங்களாய் ப்ரபலங்களா யிருந்துள்ள தோஷங்களெல்லாம் திரட்டி ஒரு குப்பலாக வைக்கப்பட்ட. (என் புன் கவி பாவினம்) கவி பாடுகைக்குத் தகுதியான ஜ்ஞாநமும் காவ்ய லக்ஷண பரிஜ்ஞாநமு மில்லாத வென்னுடைய கவியாகையாலே புல்லியதாய், அஸமீசீநமான கவியாகிற சந்தஸ் ஸமூஹத்தை; பாட்டுக்களை யென்றபடி. அன்றிக்கே, அநேக சந்தஸ்ஸுக்களோடே கூடின கலித்துறையாகையாலே "பாவினம்" என்றாராகவுமாம். (பூண்டன) இவனுடைய அஜ்ஞாநத்தாலே சொன்ன சொல்லுக்களன்றோ விவையென்று அவற்றில் ஒரு குறைகளும் பாராதே கலம்பகன் மாலையை அலங்கரித்துக் கொள்ளுவாரைப்போலே

இவற்றையலங்கரித்துக் கொண்டன. இவற்றினுடைய தன்மை யிருக்கும்படி யென்னென்று வித்தராகிறார் காணும்.

விளக்கம் - (கொள்ளை வன் குற்றமெல்லாம் பதித்த) - *ஸ்தோத்ரரத்னம்* (23) - *ந நிந்திதம் கர்ம ததஸ்தி லோகே ஸஹஸ்ரசோ யந்ந மயா வ்யதாயி* – எத்தகைய தடுக்கப்பட்ட கர்மங்கள் என்னால் பலமுறைகள் செய்யப்படாமல் உள்ளனவோ, சாஸ்த்ரங்களில் அப்படிப்பட்ட கர்மங்களே இல்லை [அதாவது தடுக்கப்பட்ட கர்மங்கள் எதனையும் நான் செய்யாமல் விட்டதில்லை] - என்றும், தேப்யோப்யப்யதிகாநிதாந் யஹம் அபிக்ஷுத்ர: கரோமிக்ஷணாத் – என்றும், *பராங்குச பஞ்சவிம்சதி* (14) – *யாவச்ச யச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்ச தத்தத் அதிகஞ்ச மமாஸ்தி ஸத்யம்* – *அனைத்து உயிரினங்களுடைய பாவங்கள் எவை எவை உள்ளனவோ, அவற்றைக் காட்டிலும் எனது பாவங்கள் அதிகமாகவே இருக்கும் என்பது ஸத்யம் ஆகும்* - என்றும் கூறுவதற்கு ஏற்ப, எப்போதும் அனைத்துவிதங்களிலும் செய்யப்பட்டவை என்பதால் வளர்ந்தபடி உள்ளதும், அனைவரும் அறியலாம்படி உள்ளதும் ஆகிய எனது தோஷங்கள் அனைத்தும் திரட்டப்பட்டு ஒரு குவியலாக வைக்கப்பட்ட. (என் புன் கவி பாவினம்) - கவி பாடுவதற்குத் தேவையான ஞானம் இல்லாத நிலை, காவிய இலக்கணத்தைக் குறித்து ஏதும் தெரியாத நிலை ஆகியவற்றுடன் கூடிய எனது கவி என்பதால் மிகவும் தாழ்ந்ததாய், பொருத்தமற்ற சொற்கள் கொண்டதாய் உள்ளதும், கவி என்று கூறிக் கொள்வதும் ஆகிய பாசுரங்கள் அல்லது பலவிதமான சந்தஸ்ஸுக்களுடன் கூடிய கலித்துறை என்பதால் “பாவினம்” என்கிறார் என்றும் கூறலாம். (பூண்டன) - எம்பெருமானாருடைய திருவடிகள் செய்தது என்ன என்று அடுத்து கூறுகிறார். இந்தக் கவிதைகள் இவனுடைய அறியாமையால் கூறப்பட்ட சொற்கள் நிறைந்தவை அல்லவோ என்று இவற்றில் உள்ள குறைகள் எதனையும் ஆராயாமல், பலவிதமான மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அலங்கரித்துக் கொள்பவர்கள் போன்று, இவற்றை ஏற்றுக் கொண்டு அலங்கரித்துக் கொண்டன. ஆக எம்பெருமாருடைய திருவடிகளின் தன்மை எத்தகையது என்று வியந்து நிற்கிறார்.

51. அடியைத் தொடர்ந்து எழும் ஐவர்கட்காய் அன்று பாரதப் போர்
முடியப் பரிநெடும் தேர்விடும் கோனை முழுது உணர்ந்த

அடியர்க்கமுதம் இராமானுசன் என்னை ஆள வந்து இப்
படியில் பிறந்தது மற்றில்லை காரணம் பார்த்திடிலே.

விளக்கவுரை – சிறு வயது முதலேயே வ்யாஸபகவான், குந்தி, மார்க்கண்டேயன் ஆகியவர்கள் கூறி வந்த அறிவுரைகளைக் கேட்டுவந்த பாண்டவர்கள் செய்தது என்னவென்றால் – தங்களுக்கு ஆபத்து வந்தபோது உதவி செய்தபடி இருந்த கண்ணனை, சாதாரண மனிதன் என்று எண்ணாமல், தங்களைக் காப்பாற்றும் பரம்பொருள் என்றே கொண்டனர். அவனது திருவடிகளை மட்டுமே பற்றியபடி ருத்ரன், இந்திரன் ஆகியவர்களை வென்று, இந்த உலகில் தங்களுக்கு யாரும் நிகரில்லை என்றபடி பாண்டவர்கள் இருந்தனர். இவர்கள் ஒரு காலகட்டத்தில் துரியோதனன், கர்ணன், சல்லியன் போன்ற தீயவர்கள் அனைவராலும் தனிமைப்படுத்தப் பட்டபோது, தன்னை அல்லாமல் வேறு கதி இன்றி நிற்பதைக் க்ருஷ்ணன் கண்டான். அப்போது நிகழ்ந்த மஹாபாரத யுத்தம் பாண்டவர்களுக்குச் சாதகமாக முடியும் விதமாக, தனது ஸ்வாமித்வம் அனைவருக்கும் தெரியும்படி, உயர்ந்த தேரில் தானே சாரதியாக அமர்ந்தான். இந்தக் கண்ணனை – அவனது ஸ்வரூபம், ரூபம் ஆகியவற்றுடன் சேர்த்து உணர்ந்தவர்கள் ஆழ்வான், ஆண்டான்பிள்ளான், எம்பார் போன்றவர்கள் ஆவர். இவனது தன்மை எப்படிப்பட்டது என்றால் – தந்தை வசுதேவன் சொல் கேட்டு, நான்கு திருக்கரங்களை மறைத்து, இயல்பான தோற்றம் எடுத்தான்; யமுனை நதி முழுவதையும் தனது திருவடிகளால் தூய்மைப்படுத்தினான்; ஆய்ச்சி கைகளால் உரலில் கட்டுண்ண்டு நின்று அடி வாங்கினான்; பூதனை, சகடன், அரிஷ்டன், ப்ரலம்பன், தேநுகன், காளியன், கேசி, குவலயாபீடம், சாணூரன், கௌஸலன், கம்சன் ஆகிய விரோதிகளை அழித்தான்; அக்ரூரர் போன்றவர்களுக்கு அனுக்ரஹம் செய்தான்; கோவர்த்தன மலை எடுத்தல் போன்ற வியப்பான செயல்களைச் செய்தான்; பாண்டவர்களுக்காக சமாதான ஓலையை எடுத்துக் கொண்டு தூது சென்றான்; சாரதியாக அமர்ந்து விச்வரூபம் எடுத்தான்; அர்ஜுனனிடம் உயர்ந்த சாஸ்திரத்தை வெளியிட்டான் – இப்படிப்பட்ட இவனது உயர்ந்த திருக்கல்யாண குணங்களில் பலரும் தோற்று, தங்களை அவனுக்கு அடிமை என்று எழுதிக் கொடுத்தனர். இப்படிப்பட்டவர்களுக்கு அமிர்தம் போன்று உள்ளவர் எம்பெருமானார் ஆவார். இப்படிப்பட்ட யதிராஜர், என்னைத் தனது அடிமை என்று கொள்வதற்காகவே

இந்தப் பூமியில் திருஅவதாரம் செய்தார். இதனைத் தவிர இவரது அவதாரத்திற்கு வேறு காரணம் இல்லை.

அவதாரிகை - பால்யமே பிடித்து மாதுலேயனென்று நினையாதே ரஷகனென்று அத்யவஸித்திருக்கிற பஞ்சபாண்டவர்களுக்கு ப்ரதிபக்ஷ மழியும்படி ஸாரத்த்யம் பண்ணின க்ருஷ்ணனுடைய ஆனைத் தொழில்களெல்லாந் தெளிந்த ஸ்வரூபஞான முடைய ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆராவமுதா யிருக்கும் எம்பெருமானார், இந்த பாப ப்ரசுரமான பூலோகத்திலே அவதரித்தது ஆராய்ந்து பார்த்தால் என்னை யாளுகைக்காகவென்று நிச்சிதமாய்த் தித்தனை யொழிய வேறொரு ஹேதுவில்லை யென்கிறார்.

விளக்கம் – சிறுவயது முதலாகவே க்ருஷ்ணன் தங்களுடைய அத்தைமகன் என்று எண்ணாமல், தங்களைக் காப்பாற்றுபவன் என்று மட்டுமே திடமாக நம்பியுள்ள பஞ்சபாண்டவர்களுடைய விரோதிகள் அழியும்படி திருத்தேரை, சாரதியாக நின்று வழி நடத்தினான். இப்படிப்பட்ட க்ருஷ்ணனின் செயற்கரிய செயல்கள் அனைத்தையும் நன்கு உணர்த்து, தனது ஆத்மஸ்வரூபத்தைக் குறித்த ஞானம் நிறைந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் திகட்டாத அமிர்தமாக எம்பெருமானார் உள்ளார். ஆனால், பாபங்களின் உற்பத்தி மற்றும் இருப்பிடமான இந்தப் பூமியில் எம்பெருமானார் அவதரித்தது எதற்காக என்று ஆராய்ந்து பார்த்தால், என்னை ஆள்வதற்காகவே ஆகும் என்று உறுதிபடக் கூற இயலும் அல்லாமல், வேறு காரணம் இல்லை என்கிறார்.

வ்யாக்யானம் – (அடியைத் தொடர்ந்தெழும்) - பால்யமே பிடித்து வ்யாஸர், குந்தி, மார்க்கண்டேயன் முதலானவர்களுடைய உக்தி விசேஷங்களாலும், ஆபத்து வந்த போதெல்லாம் உதவி ரஷித்தபடியாலும் க்ருஷ்ணனை மாதுலேயனென்று நினைக்கை யன்றிக்கே தங்களை ரக்ஷிக்கும் பரதத்வமென்று அத்யவஸித்து, "க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாச்ச பாண்டவா:" என்கிறபடியே அவன் திருவடிகளை ஆச்ரயித்து, ருத்ரேந்த்ராதிகளை வென்று, காலகேய ஹிடிம்ப ஜராஸந்தாதிகளை ஸம்ஹரித்து, லோகத்திலே தங்களுக்கு ஒருவரும் ஸத்ருசரில்லை என்று கர்வோத்தரரா யிருக்கிற ஔத்தத்யம். (ஜவர்கட்கா) – தர்ம பீமார்ஜுன நகுல ஸஹதேவரென்று ஐந்து பேரான பஞ்ச பாண்டவர்களுக்காக. (அன்று) துரியோதநனிடத்தில் பக்ஷபாதத்தாலே

கர்ண சல்யாதி துர்வர்க்க மெல்லாம் திரண்டு இந்த பாண்டவர்களும் தனிமைப்பட்டு, தன்னையொழிய வேறொரு துணை யின்றிக்கே யிருக்கிற ஸமயத்தில்.

விளக்கம் - (அடியைத் தொடர்ந்தெழும்) - சிறுவயது தொடங்கி வ்யாஸர், குந்தி, மார்க்கண்டேயன் போன்ற பலருடைய சொற்களின் மேன்மை மூலமாகவும், ஆபத்து ஏற்பட்ட அனைத்து நேரங்களிலும் ஓடி வந்து உதவியதாலும் க்ருஷ்ணனைத் தங்களுடைய அத்தைமகன் என்று எண்ணுவது மட்டும் அல்லாமல், தங்களைக் காப்பாற்றும் பரதத்வம் என்று உறுதியாக நின்று, மஹாபாரதம் த்ரோணபர்வம் (183-24) - க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதச்ச பாண்டவா: - பாண்டவர்கள் க்ருஷ்ணனுடைய திருவடிகளையே பற்றுக்கோடாக அடைந்தவர்கள்; அவனையே வலிமையாக உடையவர்கள்; அவனையே தலைவனாகக் கொண்டவர்கள் - என்பதற்கு ஏற்ப அவனுடைய திருவடிகளை அண்டி நின்று, பாணாஸுர யுத்தத்தில் ருத்ரன் மற்றும் இந்த்ரன் போன்றவர்களை வென்று, காலகேயன், ஹிடிம்பன், ஜராஸந்தன் போன்ற பலரையும் வென்று, இந்த லோகத்தில் தங்களுக்கு நிகராக வேறு யாரும் இல்லை என்று கர்வத்துடன் உள்ள பாண்டவர்களுடைய உறுதி. (ஜவர்கட்கா) – தர்மன், பீமன், அர்ஜுனன், நகுலன் மற்றும் ஸஹாதேவன் என்று ஐந்து பேரான பஞ்ச பாண்டவர்களுக்காக. (அன்று) - துரியோதனிடம் உள்ள தவறான பாசம் காரணமாக கர்ணன், சல்லியன் போன்ற தீயவர்கள் அனைவரும் திரண்டு நின்று பாண்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு, தன்னை அல்லாமல் வேறு எந்த ஒரு துணையும் இன்றி நின்ற நேரத்தில்.

வ்யாக்யானம் – (பாரதப்போர் முடிய) உபய ஸேனையிலும் பரத வம்சத்தாரில் பரிமிதரானாலும் துர்வர்க்கங்கள் இந்த உபய ஸேனையிலும் அந்வயித்து யுத்தம் பண்ணினார்க ளாகையாலே அந்த யுத்தத்துக்கு “பாரத யுத்தம்” என்று பேராயிருக்கிறது; அப்படிப்பட்ட உபய ஸேனையிலும் திரண்டிருக்கிற பதினெட்ட க்ஷோஹிணி பலத்துக்குமாக பாண்டவர்க ளைவரும் சேஷித்து அவர்களுக்கு ப்ரதிபக்ஷ பூதரான மற்றப் பேரெல்லாரும் முடியும்படி. (பரிநெடுந் தேர் விடுங்கோனை) “ஆடிய மா நெடுந் தேர்” என்கிறபடியே ச்வெதாச்வங்களாலே பூணப்பட்டு ஸர்வாலங்க்ருதமாய், தேவதா ப்ரஸாதத்தாலே வந்ததாகையாலே திவ்யமாய், மஹத்தான திருத்தேரை, தான் ஸாரதியாய்

நடத்தி, தன்னுடைய ஸர்வ ஸ்வாமித்வம் ஸர்வருக்கும் தெரியும்படி யிருக்கிற க்ருஷ்ணனை. "தத்ர பாண்டவாநாம் குரூணாம் ச யுத்தே ப்ராரப்தே பகவாந் புருஷோத்தம:, ஸர்வேச்வர:, ஜகது பக்ருதிமர்த்ய:, ஆச்ரித வாத்ஸல்ய விவச: பார்த்தம் ரதிநம் ஆத்மாநஞ்ச ஸாரதிம் ஸர்வலோக ஸாக்ஷிகம் சகார" என்று கீதா பாஷ்யத்திலே இவ்வர்த்தத்தை எம்பெருமானார் அருளிச் செய்தாரிறே. இந்த க்ருஷ்ணன், யது குலத்திலே யவதரித்தாலும் ஸ்ரீருக்மிணி பிராட்டியினுடைய ஸ்வயம்வரத்துக்காக குண்டிநபுரத்துக் கேறவெழுந்தருளினபோது, இந்த்ரன் தேவ ஜாதிகையிலே ஒரு ஸிம்ஹாஸனத்தை யனுப்பிவித்து, க்ருஷ்ணனை ராஜாவாம்படி அந்த ஸிம்ஹாஸனத்திலே எழுந்தருளப் பண்ணுவித்துத் திருவபிஷேகம் பண்ணிவித்தானென்று பிரஸித்தமிறே. ஆக, ராஜாவென்னக் குறையில்லை; இப்படிப்பட்டவனை

விளக்கம் – (பாரதப்போர் முடிய) - இரண்டு படைகளிலும் பரத வம்சத்தைச் சேர்ந்தவர்கள் அளவுபடுத்தப்பட்ட அளவிலே உள்ளபோதிலும், மற்ற தீயவர்கள் இரண்டு படைகளிலும் நிறைந்து நின்று யுத்தம் செய்ததால் அந்த யுத்தத்திற்கு "பாரதயுத்தம்" என்று பெயர் வந்தது. இப்படியாக உள்ள இரண்டு படைகளிலும் உள்ள பதினெட்டு அக்ஷௌஹிணி வீரர்களில், பாண்டவர்கள் ஐந்து பேர் மட்டுமே பிழைக்கும்படிச் செய்து, அவர்களுடைய விரோதிகளான மற்ற அனைவரும் அழியும்படியாக. (பரிநெடுந் தேர் விடுங்கோனை) - திருவாய்மொழி (6-8-3) – ஆடிய மாநெடுந்தேர் - என்பதற்கு ஏற்ப, வெண்குதிரைகள் பூட்டப்பட்டும்; மிகுந்த அலங்காரங்கள் செய்யப்பட்டும்; தேவர்கள் அளித்த காரணத்தால் தெய்வீகமாக உள்ளதும் ஆகிய உயர்ந்த திருத்தேரில், தான் சாரதியாக அமர்ந்து கொண்டு நடத்தி, தனது எஜமானத்தன்மை என்பதை அனைவரும் உணரலாம்படி உள்ள க்ருஷ்ணனை. எம்பெருமானார் கீதாபாஷ்யம் முன்னுரை அத்யாயம் - தத்ர பாண்டவாநாம் குரூணாம் ச யுத்தே ப்ராரப்தே பகவாந் புருஷோத்தம:, ஸர்வேச்வர:, ஜகது பக்ருதிமர்த்ய:, ஆச்ரித வாத்ஸல்ய விவச: பார்த்தம் ரதிநம் ஆத்மாநஞ்ச ஸாரதிம் ஸர்வலோக ஸாக்ஷிகம் சகார – பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் போர் தொடங்கியவுடன் கண்ணன் செய்தது என்ன? புருஷோத்தமனும், அனைத்து ஈச்வரர்களுக்கும் ஈச்வரனும், இந்த உலகைக் கரை ஏற்றி உதவும் பொருட்டு மனிதனாக வடிவம் எடுத்தவனும் ஆகிய பகவான் – தனது அடியவனான அர்ஜுனன் மீது கொண்ட அளவு கடந்த ப்ரியம் காரணமாகச் செய்தது என்ன? அர்ஜுனனைத் தேரில் அமர வைத்து, தான்

தேரோட்டுபவனாக அமர்ந்து, தன்னை உலகம் காணும்படிச் செய்தான் - என்று கீதாபாஷ்யத்தில் இந்த விஷயத்தினை எம்பெருமானார் அருளிச்செய்தார். க்ருஷ்ணன் யது வம்சத்தில் அவதரித்தபோதிலும் "ராஜா" என்பது எப்படி என்ற கேள்விக்கு விடை அருளிச் செய்கிறார். ருக்மிணிப்பிராட்டியின் ஸ்வயம்வரத்திற்காக க்ருஷ்ணன் சென்றபோது, இந்த்ரன் ஒரு ஸிம்ஹாசனத்தை க்ருஷ்ணனுக்காக அனுப்பி வைத்து, அவனை ஒரு ராஜாவாக அதில் எழுந்தருளச்செய்து, பட்டாபிஷேகம் செய்தான் என்பது அறிக. ஆகவே க்ருஷணனை "ராஜா" என்று கூறுவதில் தோஷம் இல்லை. இப்படிப்பட்ட க்ருஷ்ணனை.

வ்யாக்யானம் – (முழுதுணர்ந்த வடியர்க்கு) ஸ்வரூபரூபகுணவிபூதிகளையும், "ஏஷ நாராயணச் ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:, நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரிம்" என்கிறபடியே ஸர்வஸ்மாத் பரனாயும் அஜஹத் ஸ்வபாவனாயும் வந்தவதரித்து, "உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபமேதச் சதுர்புஜம்" என்று பிதாவானவன் ப்ரார்த்தித்தவாறே ப்ராக்ருதரைப் போலே யிருந்தபடியையும், யமுநா நதியைக் கால்நடையாக பண்ணினதும், ஓரபலை கையிலே கட்டுண்டடி யுண்டதும், பூதநா சகட யமளார்ஜுநாரிஷ்ட ப்ரலம்ப தேநுக காளிய கேசி குவலயாபீட சாணூர கௌஸல கம்ஸாதிகளாகிற ஆச்ரித விரோதிகளைக் கொன்றதும், அக்ரூர மாலாகாராதிகளை அநுக்ரஹித்ததும், கோவர்த்தநோத்தரணாத் யதிமாநுஷ திவ்ய சேஷ்டிதங்களைப் பண்ணினதும், பாண்டவர்களுக்கு பரதந்த்ரனாய்க் கழுத்திலே ஓலை கட்டிக் கொண்டு தூத்யம் பண்ணினதும், காலாலே ஏவிக் கார்யங் கொள்ளும்படியான ஸாரத்யத்தைச் செய்ததும், விச்வரூபத்தை தர்சிப்பித்ததும், அர்ஜுந வ்யாஜேந லோகோபகாரார்த்தமாக அத்யாத்ம சாஸ்த்ரத்தை வெளியிட்டதும் முதலானவற்றையும் அறிந்தவர்களாய், அவ்வவ ஸ்வபாவங்களுக்குத் தோற்றுத் தங்களை எழுதிக் கொடுத்து சேஷத்வ ஸ்வரூபத்திலே நிஷ்டரான ஆழ்வான், ஆண்டான், பிள்ளான், எம்பார் முதலானவர்களுக்கு. (அமுதம்) ஸ்வரூபோஜ் ஜீவநத்தைப் பண்ணுமவராகையாலே நித்யாபூர்வராய் ரஸிக்குமவரான.

விளக்கம் - (முழுதுணர்ந்த அடியர்க்கு) - ப்ரஹ்மத்திற்கே உரிய ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதிகள் ஆகிய அனைத்தையும் கொண்டவனாக உள்ளபோதிலும், ஹரிவம்ஸம் விஷ்ணுபர்வம் (54-50) - ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: | நாகபர்யங்கம்

உத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம் – எப்போதும் மஹாலக்ஷ்மியை விட்டு அகலாதவனும், திருப்பாற்கடலில் சயனித்தபடி உள்ளவனும் ஆகிய நாராயணன், தனது படுக்கையாக உள்ள ஆதிசேஷனை விட்டுவிட்டு மதுராவிற்கு வந்தான் - என்பதற்கு ஏற்ப அனைத்து ஆத்மாக்களுக்கும் ஆத்மாவாகவும், இந்த உலகில் காணப்படாத தன்மைகள் உள்ளவனாகவும் வந்து அவதரித்தான். ஸ்ரீவிஷ்ணுபுராணம் (5-3-13) - உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபமேதச் சதுர்புஜம் – அனைவருக்கும் ஆத்மாவாக உள்ளவனே! நான்கு திருக்கரங்களுடன் உள்ள உனது இந்த ரூபத்தை மறைத்துக் கொள்வாயாக - என்று கூறுவதற்கு ஏற்ப, தனது தந்தையான வஸுதேவர் ப்ரார்த்தித்த உடனேயே தனது நான்கு புஜங்களையும் மறைத்துக் கொண்டு, இந்த உலகில் உள்ள மனிதன் போன்று மாறியும், யமுனை நதியில் தனது திருவடிகளை வைத்தும், யசோதை போன்ற ஆய்ச்சிமார்களுடைய கைகளால் கட்டப்பட்டு அடி பெற்றும், பூதனை – சகடாஸுரன் – யமளார்ஜுனன் – அரிஷ்டன் - ப்ரலம்பன் – தேனுகன் - காளியன் – கேசி – குவலயாபீடம் – சாணுரன் - கௌஸலன் - கம்சன் முதலான விரோதிகளை அழித்தும், அக்ரூரர் – மாலை தொடுப்பவன் போன்றவர்களுக்கு அனுக்ரஹம் செய்தும், கோவர்த்தனத்தை உயர்த்துதல் முதலான மனிதரால் செய்ய இயலாத பல லீலைகளைச் செய்தும், பாண்டவர்களுக்காக ஓலை ஏந்தித் தூது சென்றும், அர்ஜுனனுடைய கால்கள் படக்கூடியதான தாழ்ந்த இடத்தில் அமர்ந்து தேரோட்டியும், அர்ஜுனனை விச்வரூபம் காணும்படிச் செய்தும், அர்ஜுனனை ஒரு வாய்ப்பாக வைத்துக் கொண்டு இந்த உலகிற்குப் பயன்படும்படியான எல்லையற்ற ஆழ்பொருள் நிறைந்த கீதாசாஸ்த்ரத்தை உபதேசித்தும் - என்று இப்படியாக க்ருஷ்ணனுடைய பலவற்றையும் அறிந்தவர்களாக, அந்தத் தன்மைகளுக்குத் தோற்று தங்களையே அவனுக்கு அடிமை என்று எழுதிக் கொடுத்து, அடிமைத்தனத்தில் நிலை நிற்பவர்களான கூரத்தாழ்வான், முதலியாண்டான், திருக்குருகைப் பிரான்பிள்ளான், எம்பார் போன்றவர்களுக்கு. (அமுதம்) - அவர்களுடைய ஸ்வரூபத்தைக் கரையேற்றுபவர் என்பதால் அவர்களால் எப்போதும் கொண்டாடப்படும் இனிமையுள்ள.

வ்யாக்யானம் - (இராமானுசன்) எம்பெருமானார். (என்னையாள வந்து) பரமபதத்திலே பரிபூர்ணாநுபவம் நடவா நிற்க, அத்தைக் காற்கடைக் கொண்டு, அதில் நின்றும் அடியேனை அடிமை கொள்ளுக்கைக்காகவே எழுந்தருளி. (இப்படியில்) “பகவத் ஸ்வரூப திரோதா நகரீம் விபரீத ஜ்ஞாந ஜநநீம் ஸ்வவிஷயாயாச்ச போக்ய புத்தேர் ஜநநீம்”

என்னும்படியான ப்ராக்ருத பூமியிலே. (பிறந்து) "ஸ்ரீமாநாவிரபூதத் பூமௌ" என்கிறபடியே அவதரித்தருளினது. (என்னையாள) "அஹமஸ்ம்யபராத சக்ரவர்த்தி" என்றும், "பாபாநாம் ப்ரதமோஸ்ம்யஹம்" என்னும்படியான அடியேனை ரஷிக்கவேயாய்த்து. (மற்றில்லை காரணம் பார்த்திடிலே) பின்னையும் இவ்வவதாரத்துக்கு மூலமேதென்று ஆராய்ந்து பார்த்தால் வேறொரு காரணமில்லையென்று அருளிச் செய்தாராயிற்று.

விளக்கம் - (இராமானுசன்) - எம்பெருமானார். (என்னை ஆள வந்து) - பரமபதத்தில் எப்போதும் ஸர்வேச்வரனுடைய பரிபூர்ண ஆனந்தம் கிட்டப்பெற்றாலும், அதனை ஒதுக்கி, அதனைக் காட்டிலும் அடியேனாகிய என்னை அடிமை கொள்வதற்காக இங்கு எழுந்தருளி. (இப் படியில்) - சரணாகதி கத்யம் - பகவத் ஸ்வரூப திரோதா நகரீம் விபரீத ஜ்ஞாந ஜநநீம் ஸ்ஸவவிஷயாயாச்ச போக்ய புத்தேர் ஜநநீம் – பகவானுடைய ஸ்வரூபத்தை மறைப்பதும், விபரீதமான ஞானத்தை உண்டாக்குவதும், தன்னைக் குறித்த விஷயங்களின் மீது இன்பத்தையும் பற்றுதலையும் உண்டாக்குவதும் ஆகிய இந்த லோகத்தில் – என்பதற்கு ஏற்ப உள்ளதான இந்தப் பூமியில். (பிறந்து) - ஸ்ரீமாநாவிரபூதத் பூமௌ – இந்தப் பூமியில் கைங்கர்யச் செல்வம் நிறைந்த அவர் தோன்றினார் - என்பதற்கு ஏற்ப அவதரித்தருளியது எதற்காக என்றால். (என்னை ஆள) – தயாசதகம் (30) – அஹம் அஸ்மி அபராத சக்ரவர்த்தீ – அபாரதங்களை செய்பவர்களுடைய சக்ரவர்த்தியாக நான் உள்ளேன் - என்றும், பாபாநாம் ப்ரதம அஸ்மி அஹம் – பாபங்களைச் செய்பவர்களில் நான் முதன்மையாக உள்ளேன் – என்றும் கூறும்படியாக உள்ள என்னைக் காப்பாற்றவே ஆகும். (மற்றில்லை காரணம் பார்த்திடிலே) - இது அல்லாமல் எம்பெருமானர் இங்கு அவதரித்ததற்கு வேறு ஏதேனும் காரணம் உள்ளதோ என்று ஆராய்ந்தால், ஏதும் இல்லை என்கிறார்.

52. பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப இப்பார் முழுதும்
போர்த்தான் புகழ் கொண்டு புன்மையினேன் இடைத்தான் புகுந்து
தீர்த்தான் இருவினை தீர்த்து அரங்கன் செய்ய தாள் இணையோடு
ஆர்த்தான் இவை எம் இராமானுசன் செய்யும் அற்புதமே

விளக்கவுரை – பௌத்தம், சார்வாகம், சாக்கியம், உலூக்கியம், பாசுபதம் மற்றும் காணாபத்யம் ஆகிய ஆறு பிரிவுகளும் அழியும்படிப் பார்த்தார். இவ்விதம் செய்தது மூலம், இந்த உலகில் உள்ள பண்டிதர்கள் முதல் பாமர மக்கள் வரை உள்ள அனைவரும் போற்றும்படி தனது புகழ் அனைத்துத் திசைகளிலும் பரவும்படி விளங்கினார். அன்றாடம் செய்யும் பாவங்களே ஒரு வடிவு எடுத்து நிற்பது போன்ற என்னுடைய மனதில் புகுந்தார். இதன் மூலம் எத்தனை ப்ராயச்சித்தம் செய்தாலும் தீர்க்க இயலாத எனது வினைகள் மற்றும் பாவங்களைத் தீர்த்து வைத்தார். இவ்விதம் எனது பாவங்களை நீக்கிய பின்னர், "எளிதில் அடைய இயலாத பரமபதம் சென்று நிலைப்பாய்", "யோக மார்க்கத்தில் ஈடுபடுவாய்", என்றெல்லாம் கடினமான செயல்களை எனக்கு உபதேசிக்கவில்லை. மாறாக, நான் இருந்த உலகில் உள்ள பெரியபெருமாளான திருவரங்கனின் திருவடிகளுடன் எனக்குத் தொடர்பு ஏற்படுத்தினார். இவை அனைத்தும், என் போன்ற பாவம் நிறைந்தவர்களுக்காகவே அவதரித்த எம்பெருமானார் செய்யும் அற்புதங்கள் ஆகும்.

அவதாரிகை – "**என்னையாள வந்திப்படியில் பிறந்தது**" என்று ஒருவராலும் ஆளவரிய வென்னை ஆள வந்தவதரித்தாரென்று அவரைக் கொண்டாடா நின்றீர், இந்த அவதாரத்திலே உம்மை யொருவரையே ஆளா நின்றாரோவென்ன; முதல் முன்னம் உத்தேசித்தவதரித்தது என்னை யாளுக்கைக்காகவே; ஆகிலும், இவர் அவதரித்தருளி, அவைதிக ஸமயங்களாலே நசித்துப் போன லோகங்களையெல்லாங் கண்டு ஸஹிக்க மாட்டாதே அந்த அவைதிக ஸமயங்களை நசிப்பித்துத் தம்முடைய கீர்த்தியாலே லோகங்க ளெல்லாவற்றிலும் வ்யாபித்து, க்ரூர பாபியான வென் பக்கலிலே ப்ரவேசித்து, என்னுடைய பாபங்க ளெல்லாம் நசித்துப் போம்படி பண்ணி, பின்பு பெரியபெருமாளுடைய அழகிய திருவடிகளோடே ஸம்பந்திப்பித்தார்; இப்படி ஒரு கார்யத்தை உத்தேசித்து அநேக கார்யங்களைச் செய்தார். இப்படி இந்த எம்பெருமானார் செய்தருளும் ஆச்சர்யங்களைக் கண்டீரே என்று வித்தராகிறார்.

விளக்கம் – "கடந்த பாசுரத்தில் - என்னை ஆள வந்து இப்படியில் பிறந்தது - என்று யாராலும் வசப்படுத்துவதற்கு மிகவும் அரியவனாகிய திருவரங்கத்தமுதனாராகிய உம்மை ஆள்வதற்காகவே எம்பெருமானார் இந்த உலகில் வந்து அவதரித்தார் என்று அவரைக் கொண்டாடியபடி இருந்தீர். ஆனால் எம்பெருமானார் தனது அவதாரத்தில் இங்கு வந்தது

என்பது, உம் ஒருவரை மட்டுமே ஆள்வதற்காகாவோ?" என்று சிலர் இவரிடம் கேட்டனர். இதற்குத் திருவரங்கத்தமுதனார் விடை அருளிச்செய்கிறார். எம்பெருமானார் இங்கு அவதரிக்க வேண்டும் என்று முதன்முதலில் திருவுள்ளம் கொண்டு அவதரித்தது என்பது என்னை ஆள்வதற்காகவே ஆகும். ஆனால் அவர் அவதரித்தருளியபோது, வேதமார்க்கத்திற்குப் புறம்பாக உரைத்த பல மதங்கள் மூலமாக, அனைத்து லோகங்களும் அழிவதைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாமல், அந்த மதங்கள் அனைத்தையும் அழித்து, தனது கீர்த்தி மூலம் இந்த லோகங்கள் அனைத்திலும் பரவி நின்றார். மேலும், மிகுந்த பாபங்கள் பல செய்தபடி உள்ள என்னிடம் வந்து, எனது பாபங்கள் அனைத்தும் அழியும்படியாகச் செய்து, பெரியபெருமாளுடைய திருவடிகளுடன் என்னை இணைத்தார். இவ்விதம் ஒரு செயலை முன்னிட்டுக் கொண்டு இங்கு வந்தவர், பல செயல்களையும் செய்தார். இவ்விதம் எம்பெருமானார் செய்தருளும் வியப்பானவற்றை நீவிர் கண்டீரோ என்று மகிழ்கிறார்.

வ்யாக்யானம் – (பார்த்தான் அறு சமயங்கள் பதைப்ப) (அறு சமயங்கள்) - பௌத்த சார்வாக சாக்ய உலூக்ய பாசுபத காணாபத்யங்க ளென்கிற வேதபாஹ்ய ஸமயங்க ளாறென்னுதல்; அன்றிக்கே, அநுஷ்டான தசையிலே அத்யந்த துக்க ரூபங்களானவை யென்னுதல். (பதைப்பப் பார்த்தான்) இப்படிப்பட்ட வேதபாஹ்ய ஸமயங்களெல்லாம் நிர்மூலமாய்ப் போம்படி அவற்றை கடாஷித்தார். பதைத்தல் – துடித்தல். "திக்ஸௌதாபத்த ஜைத்ர த்வஜபட பவநஸ்பாதி நிர்த்தூத தத் தத் ஸித்தாந்த ஸ்தோம கூலஸ்தபக விகமந வ்யக்த ஸத்வர்த்தநீகா" என்று அபியுக்தரும் அருளிச்செய்தாரிறே. (இப்பார் முழுதும் போர்த்தான் புகழ் கொண்டு) லோகமெல்லாம் நிஸ்ஸபத்நமாகப் பண்ணவே தமக்கு எல்லாம் கைவசமாய்த்து. இப்படிப்பட்ட பூமியெங்கும் பண்டித பாமர ஸாதாரணமாகத் தம்மைக் கொண்டாடும்படி தம்முடைய கீர்த்தியை ஸர்வதிக்கிலும் வ்யாபித்தார். போர்த்தல் – மூடுதல்.

விளக்கம் - (அறுசமயங்கள்) – பௌத்தம், ஸார்வாகம், சாக்யம், உலூக்யம், பாசுபதம் மற்றும் காணாபத்யம் என்பதான வேதங்களுக்கு புறம்பான மதங்கள் ஆறு. அல்லது, அவற்றில் கூறப்பட்ட விஷயங்களைக் கைக்கொள்ள முயன்றால், எல்லையற்ற துக்கத்தை ஏற்படுத்தவல்லவை என்றும் கூறலாம். (**பதைப்பப் பார்த்தான்**) – இவ்விதம் வேதங்களுக்குப் புறம்பாக உரைத்த மதங்கள் அனைத்தும் அழிந்து போகும்படியாகத்

தனது பார்வை கொண்டு இந்த லோகத்தை கடாக்ஷித்தார். பதைத்தல் என்றால் துடித்தல் என்று பொருள். திக்ஸௌதாபத்த ஜைத்ர த்வஜபட பவநஸ்பாதி நிர்த்தூத தத் தத் ஸித்தாந்த ஸ்தோம கூலஸ்தபக விகமந வ்யக்த ஸத்வர்த்தநீகா - என்று கூறியது காண்க. **(இப்பார் முழுதும் போர்த்தான் புகழ் கொண்டு)** - இப்படியாக இந்த லோகங்கள் அனைத்தையும் தன் வசப்படுத்தினார். இவ்விதம் இந்தப் பூமியில் உள்ள பண்டிதர்கள் தொடங்கி, சாதாரண பாமரர்கள் முடிய உள்ள அனைவரும் தனது கீர்த்தியைக் கொண்டாடும்படியாக, தனது கீர்த்தியை அனைத்து திசைகளிலும் வ்யாபித்தார். போர்த்தல் என்றால் மூடுதல் என்று பொருள்; தனது கீர்த்தியால் உலகினை மூடினார் என்று கருத்து.

வ்யாக்யானம் – (புன்மையினேனிடை) – வந்தேறியான பாபங்க ளொன்று மின்றிக்கே, "வேம்பு முற்றக் கைப்பு மிகுவது போலே" என்கிறபடியே நாள்தோறும் என்னாலே தீரக் கழியச் செய்யப்பட்டவையாய் , "பாபாநாம் வா" என்றும், "தேத்வகம் புஞ்ஜதே பாபா:" என்றும் சொல்லுகிறபடியே அந்த பாபங்களையே ஒரு வடிவாக வுடையவனாகையாலே அத்யந்த பாபியான வென்னிடத்திலே. (தான் புகுந்து) அடியேன் ஒரு ஸாதநாநுஷ்டாநம் பண்ணாதே யிருக்கச் செய்தேயும், அர்த்தியாதே யிருக்கச் செய்தேயும், ததுபய நிரபேஷமாகத் தாமே நிர்ஹேதுகமாக வந்து ப்ரவேசித்து.

விளக்கம் – (புன்மையினேன் இடை) "வந்து சேர்ந்தவை" என்று கூற முடியாதபடி எப்போதும் சேர்ந்தே உள்ளது மட்டும் அல்லாமல், ஆர்த்தி ப்ரபந்தம் (6) – வேம்பு முற்றக் கைப்பு மிகுவதுபோல் - வேப்பமரமானது நாள்கள் செல்லச் செல்ல கசப்புத் தன்மையையே அதிகப்படுத்திக் கொள்ளும் - என்பதற்கு ஏற்ப அன்றாடம் என்னால் செய்யப்பட்டு, எத்தனை அனுபவித்தாலும் தீர்க்க இயலாத பாபங்கள், இராமாயணம் யுத்தகாண்டம் (113-46) – பாபாநாம் வா – அதிகமான பாபங்கள் செய்தவரிடம் - என்றும், கீதை (3-13) – தேத்வகம் புஞ்ஜதே பாபா: - அவர்கள் பாபங்களையே உண்கிறார்கள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அத்தகைய பாபங்களே ஒரு வடிவம் பெற்றவன் என்பவனாக உள்ளதால், எல்லையற்ற பாபங்கள் நிறைந்த என்னிடம். (தான் புகுந்து) - எந்தவிதமான உபாயத்தையும் நான் கைக்கொள்ளாதபோதிலும், அவரைத் துதிக்காமல் இருந்த

போதிலும், இந்த இரண்டையுமே எதிர்பாராமல், எந்தவிதமான காரணமும் இன்றி தானாகவே வந்து என்னிடம் நின்றார்.

வ்யாக்யானம் – (இருவினை) இரண்டு வகைப்பட்ட வினை; புண்ய பாபங்க ளென்றபடி. அன்றிக்கே, (இருவினை) இருமை – பெருமையாய், "யத்ப்ரஹ்மகல்ப நியுதாநுபவே அப்யநாச்யம் தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே", "பாபாநாம் ப்ரதம அஸ்மி அஹம்", "மயி திஷ்ட்டதி துஷ்க்ருதாம் ப்ரதாநே", "அஹம் அஸ்மி அபராத சக்ரவர்த்தீ" என்கிறபடியே அநுபவ ப்ராயச்சித்தங்களாலும், எத்தனையேனும் தரமுடையவராலும் நிவர்த்திப்பிக்கவரிதான என்னுடைய மஹா பாபங்களை யென்றபடி. (தீர்த்தான்) இவற்றை அநாயாஸேந மணலிலே யெழுதின எழுத்தைத் துடைப்பாரைப் போலே துடைத்தார். "வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ கானோ வொருங்கிற்றுக் கண்டிலமால்" என்றும், "சும்மெனாதே கை விட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே" என்றும் சொல்லுகிறபடியே வாஸநையோடு போக்கினாரென்றபடி.

விளக்கம் - (**இருவினை**) - இரண்டுவிதமான வினைகள் - புண்ணியம் மற்றும் பாபம் என்பவை. அல்லது "இருவினை" என்பதில் உள்ள "இருமை" என்பதை "பெருமை" என்று பொருள் தருவதாகக் கொள்ளலாம். ஸ்ரீவைகுண்டஸ்தவம் (61) - யத்ப்ரஹ்மகல்ப நியுதாநுபவே அப்யநாச்யம் தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே ஏவம் ஸதா ஸகலஜந்மஸு ஸாபராதம் க்ஷாம்ய ஸ்யஹோ ததாபிஸந்தி விராம மாத்ராத் – நான்முகனின் காலத்தில் பதினாயிரம் கல்ப காலங்கள் அநுபவித்தாலும் கழியாத தீயபலன்களை அளிக்கக்கூடிய பாவங்களை ஒருவன் அரை நொடியில் செய்யக்கூடும். இப்படியாக அனைத்துப் பிறவியிலும் பாவங்களையே ஒருவன் செய்துவந்தாலும், "பாவங்களைச் செய்யமாட்டேன்" என்ற நினைவு அவனுக்குத் தோன்றிவிட்டாலே நீ மன்னித்துவிடுகிறாய் – என்றும், பாபாநாம் ப்ரதம அஸ்மி அஹம் – பாபங்களைச் செய்பவர்களில் நான் முதன்மையாக உள்ளேன் – என்றும், தயாசதகம் (29) - மயி திஷ்ட்டதி துஷ்க்ருதாம் ப்ரதாநே – தயாதேவியே! பாவம் செய்தவர்களில் முதன்மையானவனாக உன் முன்பாக நான் உள்ளேன் - என்றும், தயாசதகம் (30) – அஹம் அஸ்மி அபராத சக்ரவர்த்தீ – அபாரதங்களை செய்பவர்களுடைய சக்ரவர்த்தியாக நான் உள்ளேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, எத்தனை அனுபவித்துக் கழித்தாலும், எத்தனை

ப்ராயச்சித்தம் செய்தாலும், எந்த அளவு உயர்ந்தவராக உள்ளபோதிலும் நீக்குவதற்கு மிகவும் அரிதாக உள்ள எனது மஹாபாபங்களை என்று கருத்து. (தீர்த்தான்) – இத்தகைய பாபங்களை, மணலில் எழுதப்பட்ட எழுத்தை மிகவும் எளிதாக அழிப்பது போன்று, மிகவும் எளிதாகத் துடைத்தார். பெரியதிருவந்தாதி (52) – வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ கானோ வொருங்கிற்றுக் கண்டிலமால் – வானிலோ அல்லது கடலிலோ மறைந்தனவா என்று அறியாதபடி என்றும், பெரியாழ்வார் திருமொழி (5-4-3) – சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாந்தனவே – என்றும் கூறுவதற்கு ஏற்ப எனது பாபங்களை, அவற்றுடைய வாசனையுடன் போக்கினார்.

வ்யாக்யானம் – (தீர்த்து) அந்தப்படி ரஷணம் பண்ணி ஆறிக் கை வாங்கி யிருக்கை யன்றிக்கே, இப்படி பாபங்களை யெல்லாம் போக்கி. (அரங்கன்) எட்டா நிலமான பரமபதத்தில் போய் ஆச்ரயி என்றும், யோக மார்க்கத்தாலே அந்தர்யாமியை ஆச்ரயியென்றும் இப்படி அநேகங்களானவற்றை உபதேசித்துப் போருகையன்றிக்கே, அத்யந்த ஸுலபராய்க் கொண்டு, நானிருந்தவிடத்திலே யிருக்கிற பெரியபெருமாளுடைய. (செய்ய தாளிணையோ டார்த்தான்) "அரங்கத்தம்மான் திருக்கமல பாதம்" என்கிறபடியே தர்சநீயமாய் பாவநத்வ போக்யத்வங்களுக்கு பரஸ்பர ஸத்ருசமான திருவடிகளோடே ஸம்பந்திப்பித்தார். சேஷ சேஷி பாவ ஸம்பந்தத்தை அறிவிப்பித்தாரென்றபடி. ஆர்த்தல் – பந்தித்தல்.

விளக்கம் - (தீர்த்து) - இப்படியாக என்னைக் காப்பாற்றிய பின்னர், சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளாமல், எனது பாபங்கள் அனைத்தையும் நீக்கி, (அரங்கன்) - "அடைவதற்கு மிகவும் அரிதான பரமபதத்தில் சென்று அவனை அடைவாயாக" என்றும், "யோக மார்க்கம் கொண்டு உனக்கு அந்தர்யாமியாக உள்ள அவனை அடைவதற்கு முயல்வாயாக", என்றும் பலவிதமாக எனக்கு உபதேசிக்காமல், மிகுந்த சுலபன் என்பதாக, நான் உள்ள இடம் தேடி வந்து சயனித்துள்ள பெரியபெருமாளுடைய. (**செய்ய தாளிணையோ டார்த்தான்**) – அமலனாதிபிரானில் - அரங்கத்தம்மான் திருக்கமல பாதம் – என்பதற்கு ஏற்ப, காண்பவர் களைப்பை நீக்குவதும், பாபங்களைப் போக்குவது மற்றும் இன்பம் அளிப்பது என்று இரண்டுவிதமான செயல்களைச் செய்வதும் ஆகிய ஒன்றுக்கொன்று பொருந்திய திருவடிகளுடன் சம்பந்தம் ஏற்படுத்தினார். அதாவது "எஜமானன் – அடிமை"

என்றுள்ள தொடர்பை உணர்த்தினார். ஆர்த்தல் என்றால் சம்பந்தம் உண்டாக்குதல் என்று பொருள்.

வ்யாக்யானம் – (இவை யெம்மிராமானுசன் செய்யுமற்புதமே) இவ்வளவும் சொன்னவை யெல்லாம் எங்களுக்காக அவதரித்தருளின எம்பெருமானார் செய்தருளும் அற்புத கார்யங்கள். அற்புதம் – அத்புதம். பித்ரு வாக்ய பரிபாலனம் பண்ணவேணுமென்று காட்டுக்குப் போய், அவ்வளவிலே நில்லாதே ராக்ஷஸரையெல்லாம் ஸம்ஹரித்துத் திருவணை கட்டுவித்து, மஹாராஜருக்கும் ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கும் ஸ்வ ஸ்வ ராஜ்யங்களைக் கொடுத்தும் போந்த சக்கரவர்த்தித்திருமகனைப் போலே, ஒன்று செய்யவென்று ஒருப்பட்டு, அநேகமான அதிமாநுஷ சேஷ்டிதங்களைப் பண்ணி யருளினார் காணும் இவரும். இப்படியிறே மஹாபுருஷர்கள் படியிருப்பது. கா புருஷர்களானால், உபக்ரமத்திலே அநேக ப்ரகல்பங்களைச் சொல்லி, கார்ய ஸமயம் வந்தவாறே வருந்தியும் அல்பமாகிலும் செய்யமாட்டார்க ளென்றதாய்த்து.

விளக்கம் - (இவை எம் இராமானுசன் செய்யும் அற்புதமே) - இதுவரை கூறிய அனைத்தும் எங்களுக்காகவே இந்த உலகில் அவதரித்து அருளிய எம்பெருமானார் செய்தருளிய அற்புதமான செயல்கள் ஆகும். தனது தந்தையான தசரதன் கூறிய சொற்களைப் பின்பற்றவேண்டும் என்று எண்ணி கானகம் சென்று அத்துடன் நிற்காமல், அங்குள்ள ராக்ஷஸர்களை அழித்து, ஸமுத்திரத்தில் பாலத்தைக் கட்டி, சுக்ரீவன் மற்றும் விபீஷணன் ஆகியவர்களுக்கு அவர்கள் இழந்த ராஜ்யங்களை மீண்டும் அளித்து, இப்படியாகப் பலவிதமான செயல்களை இராமன் செய்தான். இதே போன்று இங்கு எம்பெருமானாரும் என்னைக் காப்பாற்றவேண்டும் என்ற ஒரு செயலை மட்டுமே எண்ணி அவதரித்தபோதிலும், மனிதர்களால் செய்ய இயலாத பலவிதமான செய்கைகளைச் செய்தார். இப்படி அல்லவோ மஹாபுருஷர்கள் இருப்பார்கள்? சாதாரண மனிதர்கள் என்றால், அந்தந்த காலகட்டம் வந்தாலும், பலவிதமான காரணங்களைக் காண்பித்து, செயலாற்ற வேண்டிய நேரம் வந்தாலும், அந்தச் செயல்கள் மிகவும் எளிதாக இருந்தாலும், மிகவும் வருத்தப்பட்டு செய்யாமல் விடுவார்கள் என்று கருத்து.

53. அற்புதம் செம்மை இராமானுசன் என்னை ஆளவந்த

கற்பகம் கற்றவர் காமுறு சீலன் கருதரிய
பற்பல்லுயிர்களும் பல்லுலகு யாவும் பரனதென்னும்
நற்பொருள் தன்னை இந்நானிலத்தே வந்து நாட்டினனே.

விளக்கவுரை – ஸ்ரீமந் நாராயணனின், "இந்த உலகில் உள்ள அனைத்து உயிர்களும் கரையேற்றப்பட வேண்டும்", என்ற ஆணையை ஏற்று, இந்த உலகிற்கு எம்பெருமானார் வந்தார். என்றாலும் இந்த உலகில் உள்ள அனைவரிலும் மிகவும் தாழ்ந்தவனாக உள்ளை என்னை அடிமை கொள்ளவே வந்தார். நான் உள்ள இடம் தேடி வந்த கற்பக மரம் போன்று இவர் உள்ளார். அனைத்து உயர்ந்த புருஷார்த்தங்களையும் அளிக்கவல்ல கற்பகம் போன்று உள்ளார். அனைத்து சாஸ்திரங்களையும் அறிந்தவர், பெரியவன் – சிறியவன் என்ற ஏற்றத்தாழ்வு பாராமல், அனைவருக்கும் சமமாக உள்ள தன்மை கொண்டவர் ஆவார். இப்படிப்பட்ட எம்பெருமானார் உபதேசித்தது என்னவென்றால் – உபதேசம் செய்வதற்கு மிகவும் கடினமான கருத்தாக உள்ள, "அனைத்து ஆத்மாக்கள், ஆத்மாக்கள் உள்ள அனைத்து லோகங்கள் ஆகிய அனைத்தும் – அனைவரிலும் மிகவும் உயர்ந்தவனாக உள்ள ஸ்ரீமந் நாராயணனுக்கே அடிமை", என்று நிரூபித்தார். இத்தகைய உயர்ந்த கருத்தை இந்த உலகம் முழுவதிலும் வெளிப்படுத்த, இந்த உலகம் பிழைக்கும்படி, தானே வந்து அவதரித்தார். ஒரு சிலருக்கு, ஒரு சில காலம் மட்டுமே உபதேசம் செய்தார் என்று இல்லாமல், இந்த உலகினருக்கு எப்போதும் உள்ளபடி ஸ்ரீபாஷ்யம் போன்றவற்றை நிலைநிறுத்தினார்.

அவதாரிகை - "பார்த்தா னறுசமயங்கள் பதைப்ப" என்று பாஹ்ய ஸமயங்களைக் குலையப் பண்ணினாரென்றும், "அரங்கன் செய்ய தாளிணையோ டார்த்தான்" என்று பரமபுருஷார்த்த ஸாம்ராஜ்யத்தைக் கொடுத்தாரென்றும் சொன்னீர், அம்மாத்ரமேயோ அவர் செய்ததென்னில்; அவ்வளவேயன்று, ஸகலாபேக்ஷிதங்களையும், அபேக்ஷா நிரபேக்ஷமாக கல்பகம் போலே கொடுக்குமவராய், சௌசீல்யத்தையுடையராய், அத்யாச்சர்ய பூதராய், ஆர்ஜவ குணயுக்தரான எம்பெருமானார், ஸகலலோகங்களிலு மிருந்துள்ள ஸகலாத்மாக்களும் ஸர்வஸ்மாத்பரனுக்கே சேஷபூதரென்று இந்த லோகத்திலே ப்ரதிஷ்டிப்பித்தருளினார்.

விளக்கம் – "கடந்த பாசுரத்தில் – பார்த்தான் அறு சமயங்கள் பதைப்ப - என்று வேதங்களுக்குப் புறம்பாக உரைத்த மதங்கள் அனைத்தையும் தள்ளினார் என்றும், அரங்கன் செய்யதாளிணையோடு ஆர்த்தான் - என்று கூறுவதற்கு ஏற்ப உயர்ந்த புருஷார்த்த ஸாம்ராஜ்யமான திருவரங்கன் திருவடிகளுடனான ஸம்பந்தத்தை அளித்தார் என்றும் நீவிர் கூறினார். இது மட்டுமா எம்பெருமானார் உமக்குச் செய்தது?" என்று சிலர் திருவரங்கத்தமுதனாரிடம் கேட்டனர். இதற்கு அவர், "அது மட்டும் அன்று. நம்முடைய அனைத்து விருப்பங்களையும், நாம் ப்ரார்த்திக்காமல் உள்ளபோதிலும், நம்முடைய அனைத்து தேவைகளையும் கற்பக மரம் போன்று கொடுப்பவராகவும், ஸௌசீல்யத்தை உடையவராகவும், மிகுத்த ஆச்சர்யம் உண்டாக்கும் தன்மை கொண்டவராகவும், அனைத்து லோகங்களிலும் உள்ள அனைத்து ஆத்மாக்களுக்கும் அவற்றின் அந்தராத்மாவாக உள்ள ஸர்வேஸ்வரனுக்கு மட்டுமே அடிமை என்று இந்த உலகத்தில் நிரூபித்தார்", என்று அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (என்னையாள) ஸ்ரீய:பதியினுடைய திவ்யாஜ்ஞையினாலே ஸகலலோகோஜ்ஜீவந விஷயமாக வவதரித்தாரேயாகிலும், "எதிர்சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய" என்கிறபடியே லோகத்தாரெல்லாரிலும், "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்கிறபடியே அத்யந்த நிஹீநனான வென்னிடத்திலே க்ருபை பண்ணியருளி அடியேனை அடிமை கொள்ளுகைக்காக. (வந்த கற்பகம்) தம்மை யொருவரை ரக்ஷிக்கைக்காக அவதரித்தாரென்று காணும் இவருடைய திருவுள்ளத்திலோடுகிறது. (வந்த கற்பகம்) நித்யவிபூதியில் நின்றும் லீலாவிபூதிக்கு எழுந்தருளின கல்பகம். கல்பகம்போலே அபீஷ்டார்த்த ப்ரதரானவர், ஐடமாய் ஸ்தாவரமாய் ஐஹிக புருஷார்த்த மாத்ர ப்ரதமாய், ஒரு தேசவிசேஷத்திலே தானே நியதமாயிறே அந்த கல்பகமிருப்பது; இந்த கல்பகம் அதில் நின்றும் அதிவிலக்ஷணமாய் அப்ராக்ருதமாய், "அஜஹத் த்ரிவர்க்கம் அபவர்க்க வைபவம்", "நலமந்தமில்லதோர் நாடு புகுவீர்", "நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர்மக்கள்" என்கிறபடியே – ஐஹிகாமுஷ்மிக ஸமஸ்த புருஷார்த்தங்களையும் கொடுக்கக் கடவ ஔதார்யத்தை யுடையத்தாய், உபய விபூதியிலும் வ்யாபித்திருப்பதாய், நித்யமாய் நிற்பதொன்றிறே. ஆகையாலே, "வந்த கற்பகம்" என்று சாகாசந்த்ர ந்யாயேந புத்த்யாரோ பத்துக்காகச் சொன்னாரித்தனை. நான் கிடந்தவிடம் தேடி வந்து விஷயீகரித்தவிது மஹௌதார்யமிறே என்று வித்தராய்க் காணும் "வந்த கற்பகம்" என்கிறார்.

விளக்கம் – (என்னை ஆள) பெரியபிராட்டியின் நாயகனாகிய ஸர்வேச்வரனுடைய திவ்யமான கட்டளைக்கு இணங்கி, அனைத்து லோகங்களில் உள்ளவர்களும் கரை ஏறும் பொருட்டு இந்த உலகத்தில் எம்பெருமானார் அவதரித்தார் என்றபோதிலும்; திருவாய்மொழி (2-7-6) – எதிர்சூழல் புக்கு எனைத்தோர் பிறப்பும் எனக்கே அருள்கள் செய்ய - என்பதற்கு எற்ப இந்த உலகில் உள்ள அனைவரைக் காட்டிலும், திருவாய்மொழி (3-3-4) – நீசனேன் நிறைவொன்றுமிலேன் - என்பதற்கு ஏற்ப மிகவும் தாழ்ந்த என்னிடம் கருணையைப் பொழிந்து, இந்த அடியேனைத் தனது அடிமையாக்குவதற்காக. (வந்த கற்பகம்) - திருவரங்கத்தமுதனாராகிய தன்னை மட்டுமே காப்பாற்ற இந்த உலகிற்கு எம்பெருமானார் வந்தார் என்ற சிந்தனையே இவருக்கு உள்ளது. (வந்த கற்பகம்) - நித்யவிபூதியிலிருந்து இந்த உலகத்திற்கு வந்த கற்பகம். அதாவது கற்பகமரம் போன்று வேண்டுவதை அளிக்கவல்லவர். அறிவற்றதாய், நகர இயலாததாய், அந்த உலகிற்குச் சென்றால் மட்டுமே அனைத்தையும் அளிக்கவல்லதாய், ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே இருப்பதாய் அல்லவோ அந்தக் கற்பகமரம் உள்ளது? ஆனால் எம்பெருமானார் என்ற இந்தக் கற்பகம், மிகவும் மேன்மை நிரம்பியதாய், இந்த உலகில் காணப்படாத தன்மைகள் கொண்டதாய், யதிராஜ ஸப்ததி (20) - அஜஹத் த்ரிவர்க்கம் அபவர்க்க வைபவம் - அறம் – பொருள் – இன்பம் ஆகிய எதனையும் துறக்காமலேயே மோக்ஷ இன்பத்தை இந்தத் திருவடிகள் அளிக்கவல்லவை - என்றும், திருவாய்மொழி (2-8-4) – நலமந்தமில்லதோர் நாடு புகுவீர் - என்றும், திருவாய்மொழி (8-10-11) – நல்ல பதத்தால் மனைவாழ்வார் கொண்ட பெண்டிர் மக்களே – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்துவிதமான இம்மை மறுமை பலன்கள் அனைத்தையும் அளிக்கவல்ல தாராள குணம் கொண்டதாய், இரண்டு விபூதிகளிலும் பரவி நிற்பதால் எப்போதும் உள்ளதாய் நிற்பதாகும். இதனால்தான், “வந்த கற்பகம்” என்று சாகாசந்த்ர ந்யாயம் போன்று உரைத்தார் [சந்த்ரனைக் காண்பிக்கும்போது, “அதோ, அத இரண்டு மரக்கிளைகளுக்கு நடுவே தெரிகிறது அல்லவோ? அதுவே சந்த்ரன்” என்று மரக்கிளைகள் மூலமாகச் சந்த்ரனை அடையாளம் காண்பிப்பது போன்று இங்கு கற்பகத்தையும் எம்பெருமானாரையும் கூறுகிறார்]. “அடியேன் கிடந்த இடம் தேடி வந்து என்னை ஏற்றுக் கொண்ட செயல் எத்தனை தாராளமான ஒன்றாகும்!”, என்று வியந்து நின்று “வந்த கற்பகம்” என்கிறார்.

வ்யாக்யானம் - (கற்றவர் காமுறு சீலன்) ஸகல சாஸ்த்ரங்கலையும் அப்யஸித்ததாலே ஜ்ஞாநாதிகராய், "உன்னையொழியவொரு தெய்வம் மற்றறியா மன்னுபுகழ்சேர் வடுகநம்பி" என்று கொண்டாடப்படுகின்ற வடுகநம்பி, கிடாம்பியாச்சான் முதலான முதலிகள், வ்யாமுக்த்தராய் ஆசைப்படும்படியாக ஸ்வபாவத்தையும் ஸத்வ்ருத்தியையு முடையராய். அன்றிக்கே, பெரியவன் தாழ்ந்தவருடனே புரையறக் கலந்து பரிமாறு கையாகிற சீல குணத்தை யுடையவரென்றுமாம். காமுறுதல் – விரும்புதல். எம்பெருமானார் கோயிலே வாழுகிற காலத்திலே ஒருநாள் மத்யாஹ்ந ஸமயத்திலே திருக்காவேரியிலே நீராடித் திரும்பவும் எழுந்தருளுகிற வளவிலே வழியிலே திருக்கோட்டியூர்நம்பி எதிரே எழுந்தருள, எம்பெருமானாரும் அந்த மணலிலே ஸாஷ்டாங்கமாக தண்டனிட்டு நிற்க, நம்பியும் அவரைக் கடாக்ஷித்து "எழுந்திரும்" என்றருளிச் செய்யாதே வெறுமனே யிருந்தவாறே, அச்சேர்த்தியைக் கிடாம்பியாச்சான் கடாக்ஷித்தருளி, "நம்பீ! இவரைக் கொல்ல நினைத்தீரோ" என்று சீறுபாறு செய்து, மணலிலே ஸாஷ்டாங்கமாக விழுந்திருக்கிற எம்பெருமானாரை வாரியெடுத்துக் கொண்டார் என்று நம் முதலிகள் கோஷ்டியிலே ப்ரஸித்தமிறே.

விளக்கம் – (கற்றவர் காமுறு சீலன்) - அனைத்து சாஸ்த்ரங்களையும் நன்கு கற்றறிந்த காரணத்தால் மிகுந்த ஞானம் நிறைந்தவராக. ஆர்த்தி ப்ரபந்தம் (11) – உன்னையொழிய ஒரு தெய்வம் மற்றறியா மன்னுபுகழ்சேர் வடுகநம்பி - என்பதற்கு ஏற்ப கொண்டாடப்படும் வடுகநம்பி, கிடாம்பியாச்சான் போன்றவர்கள் எம்பெருமானாருடன் எப்போதும் சேர்ந்து இருத்தல் வேண்டும் என்று விரும்பும்படியான தன்மையையும், நல்ல குணங்களின் வளர்ச்சியையும் கொண்டவராக. அல்லது உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்னும் வேறுபாடு இன்றி, அனைவருடனும் கலந்து பழகும் சீல குணத்தைக் கொண்டவர் என்றும் கொள்ளலாம். காமுறுதல் என்றால் விரும்புதல் என்று பொருள். எம்பெருமானார் திருவரங்கத்தில் வாழ்ந்து வந்து நாள்களில் ஒரு நாள் உச்சிப்பொழுதில் திருக்காவேரியில் நீராடி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது வரும் வழியில் எதிரே திருக்கோஷ்ட்டியூர்நம்பி எழுந்தருளினார். அவரைக் கண்ட எம்பெருமானார், அந்த மணலில் ஸாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். இதனைக் கண்ட நம்பி, அவருக்கு ஆசி கூறிவிட்டு, "எழுந்திருப்பீராக" என்று கூறாமல் நின்றார். இதனைக் கண்ட கிடாம்பியாச்சான் நம்பியிடம், "நீவிர் இவரைக் கொல்ல எண்ணினீரோ?", என்று

கோபத்துடன் உரைத்து, மணலில் கிடந்த எம்பெருமானாரை வாரி எடுத்துக் கொண்டார் என்பது எம்பெருமானாருடைய சிஷ்யர்கள் கோஷ்டியில் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

வ்யாக்யானம் - (அற்புதம் செம்மை) அதிமாநுஷங்களான சேஷ்டிதங்களைப் பண்ணுகையாலே அத்புதராய் ஆச்ரிதருடைய கௌடில்யத்தைப் பார்த்துக் கைவிடாதே, நீரேறா மேடுகளிலே விரகாலே நீரேற்றுமாப் போலே, தம்மை அவர்களுக்கீடாக அமைத்துப் பரிமாறும் ஆர்ஜவ குணத்தையுடையரான. (இராமாநுசன்) எம்பெருமானார். (கருதரிய) நினைக்கப்புக்கால் நினைத்துத் தலைக்கட்ட வரிதாம்படி. (பற்பல்லுயிர்களும்) பலபடியான. பல்பல் என்கையாலே ஒரு ஜாதியே அஸங்க்யாதமாய், அப்படிப்பட்ட ஜாதி குலங்களும் அஸங்க்யாதங்களாய், "எண் பெருக்கந்நலத் தொண்பொருள்" என்கிறபடியே எண்ணிறந்த ஆத்மாக்களும். (பல்லுலகியாவும்) அந்த ஆத்மாக்களுக்கு ஆவாஸ ஸ்த்தாநமாய் அஸங்க்யாதமா யிருக்கிற ஸகலலோகங்களும். (பரனதென்னும்) "பர: பராணாம்" என்கிறபடியே ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கும் பரனாய், ஸ்ரீய:பதியானவனுக்கு சேஷபூதமென்றும், "ஸர்வேசாபி ஸநாதந அகில ஜகத் வ்யாப்த அவபோத அமல அநந்தகார யுதோப்யநந்த ஸுகுணஸ் ஸர்வாத்மநாம் சாஸிதா தேஹீ தாரண சாஸநேந முகை: ஸ்வாதீந நித்ய ஸ்திதி: ஸ்வாமீ நித்ய மநோக்ய மங்கள வபு: ஸ்ரீபூமிநீளாதிப:" என்கிறபடியே – போக்ய போகோபகரண போகஸ்த்தாந போக்த்ருத்வங்க ளெல்லாம் ஸர்வஸ்மாத்பரனான நாராயணனுக்கே சேஷபூதமென்கிறது.

விளக்கம் - (அற்புதம் செம்மை) - மனிதர்களால் செய்ய இயலாத பலவிதமான செய்கைகளை மிகவும் எளிதாகச் செய்த காரணத்தால் அற்புதம் நிறைந்தவராய். உள்ளத்தின் கடினத்தன்மையை ஆராய்ந்து பார்த்து ஒருவரையும் கைவிடாமல், நீர் ஏற இயலாமல் நிற்கின்ற மேட்டுப்பகுதிகளிலும் நீரை முயற்சி செய்து ஏற்றுவது போன்று, தன்னை அவர்களுக்கு ஈடாக அமைத்துக் கொண்டு, அவர்களுடன் கலந்து பழகும் நேர்மை கொண்டவராய். (இராமாநுசன்) - எம்பெருமானார். (கருதரிய) – எண்ண முயன்றால் எண்ணி முடிக்க இயலாதபடியான. (பற்பல் உயிர்களும்) – பலவிதமான. "பற்பல" என்பதன் மூலம், ஒரு பிரிவில் உள்ள எண்ணிக்கையே அதிகமாக, அது போன்று உள்ள பிரிவுகளும் எண்ண இயலாதபடி உள்ளவை என்பதைக் கூறுகிறார். திருவாய்மொழி (1-2-10) – எண் பெருக்கு அந்நலத்து ஒண் பொருள் - என்று கூறுவதற்கு

ஏற்ப எண்ணற்ற ஆத்மாக்களும். (பல்லுலகியாவும்) - அந்த ஆத்மாக்களுக்கு இருப்பிடமாக உள்ளதும், எண்ணற்றதும் ஆகிய அனைத்து லோகங்களும். (பரனது என்னும்) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் – பர: பராணாம் – உயர்ந்தவற்றைக் காட்டிலும் உயர்ந்த - என்பதற்கு ஏற்ப நான்முகன், ருத்ரன் ஆகியவர்களைக் காட்டிலும் உயர்ந்தவனாய், பெரியபிராட்டியின் நாயகனாய் உள்ள ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமை என்றும், ஸர்வேசாபி ஸநாதந அகில ஜகத் வ்யாப்த அவபோத அமல அநந்தகார யுதோப்யநந்த ஸுகுணஸ் ஸர்வாத்மநாம் சாஸிதா தேஹீ தாரண சாஸநேந முகை: ஸ்வாதீந நித்ய ஸ்திதி: ஸ்வாமீ நித்ய மநோக்ய மங்கள வபு: ஸ்ரீபூமிநீளாதிப: - என்பதற்கு ஏற்ப இன்பங்கள், இன்பம் அளிப்பவை, இன்பம் அளிக்கும் இடங்கள், இன்பம் அனுபவிப்பவர்கள் என்றுள்ள அனைத்தும், அனைத்து ஆத்மாக்களுக்கும் அந்தராத்மாவாகிய ஸ்ரீமந்நாராயணனுக்கே அடிமை என்று கருத்து.

வ்யாக்யானம் - (நற்பொருள் தன்னை) யதாவஸ்த்தித ஸமீசீந ஜ்ஞாநத்தை. அன்றிக்கே, இப்படிப்பட்ட சீரியவர்த்தத்தை. (இந்நானிலத்தே வந்து) இந்த லோகமெல்லா முஜ்ஜீவிக்கைக்காக தாமே வந்தவதரித்தருளி. (நாட்டினனே) ஒருவரும் அபேக்ஷியாதிருக்கச் செய்தே, நிர்ஹேதுகமாகவே ப்ரதிஷ்டிப்பித் தருளினார். நாட்டுதல் - ஸ்த்தாபித்தல். சிலருக்கு ஒரு காலத்திலே உபதேசித்துப்போன மாத்ரமே யன்றிக்கே, லோகத்தாரெல்லாரும் ஸர்வ காலமும் அநுபவித்து உஜ்ஜீவிக்கும்படியாக, ஸ்ரீபாஷ்யாதி முகேந ப்ரதிஷ்டாபநம் பண்ணி யருளினா ரென்றதாய்த்து. "யதண்ட மண்டாந்தர கோசரம் ச யத் தசோத்தராண் யாவரணாநி யாநி ச குணா: ப்ரதாநம் புருஷ: பரம் பதம் பராத்பரம் ப்ரஹ்ம ச தே விபூதய:" என்று ஆளவந்தாரு மருளிச்செய்தாரிறே.

விளக்கம் – (நற்பொருள் தன்னை) - இருக்கவேண்டியதும், சிறப்பானதும் ஆகிய ஞானத்தை [கடந்த பத்தியில் கூறப்பட்டதான – அனைத்தும் ஸ்ரீமந்நாராயணனுக்கே அடிமை என்பதான ஞானத்தை]. அல்லது இப்படிப்பட்டதான உயர்ந்த ஆழ்பொருளை. (இந்நானிலத்தே) - இந்த லோகங்கள் அனைத்தும் கரையேறுவதற்காக, தானே நேரில் இங்கு வந்து அவதரித்து. (நாட்டினனே) யாரும் எம்பெருமானாரிடம், "இது போன்று செய்தருள வேண்டும்" என்று விண்ணப்பிக்காமல் உள்ளபோதிலும், எந்தவிதமான காரணமும் இல்லாமல் ஸ்தாபித்து அருளினார். ஒரு சிலருக்கு, ஒரு சில காலத்தில்

உபதேசித்துச் செல்லுதல் என்று இல்லாமல், இந்த லோகத்தில் உள்ள அனைவரும் எப்போதும் அனுபவித்துக் கரையேறும் விதமாக, ஸ்ரீபாஷ்யம் போன்ற பலவற்றையும் ஏற்படுத்தி வைத்தார் என்று கருத்து. ஸ்தோத்ரரத்னத்தில் (17) - யதண்ட மண்டாந்தர கோசரம் ச யத் தசோத்தராண் யாவரணாநி யாநி ச குணா: ப்ரதாநம் புருஷ: பரம் பதம் பராத்பரம் ப்ரஹ்ம ச தே விபூதய: - எது ப்ரஹ்மாண்டமோ, அண்டங்களுக்குள் இருக்கக்கூடியவை எவையோ, பத்து மடங்காகப் பெருகியபடி உள்ள அண்டத்தின் ஆவரணங்கள் எவையோ, ஸத்வ ரஜோ தாமஸ குணங்கள் என்பவை, ப்ரக்ருதி ஜீவாத்மா பரமபதம் என்பவை, ப்ரக்ருதியைக் காட்டிலும் உயர்ந்த ஸம்ஸாரிகளைக் காட்டிலும் மேலான முக்தி பெற்ற ஆத்மாக்கள், நித்யஸூரிகள், திவ்யமங்கள விக்ரஹம் என்னும் அனைத்தும் உனது விபூதிகள் ஆகும் - என்று ஸ்வாமி ஆளவந்தார் அருளிச்செய்தார் அல்லவோ?

வ்யாக்யானம் - கல்பகத்தைக்காட்டில் இவருக்கு விசேஷம் - அடிமை கொள்ளுகையும் இருந்தவிடத்தே வருகையும். "பல்லுலகில் யாவும்" என்றும் பாடம் சொல்லுவர்கள். எழுத்து ஏற்றமாகையாலே அது சேராது. ஆனால் "பல்லுலகியாவும்" என்றால், எழுத்தேற்றம் வாராதோ வென்னில், "உரைக்கின்றனனுமக்கி யான்" என்கிற விடத்தில் போலவே, "பல்லுலகியாவும்" என்கிறவிடத்திலே இகரம் குற்றியலிகரமாய் வண்ணங் கெடாமைக்குக் கழியுண்கையாலே, எழுத்தேற்றம் வாராதென்று ஜீயரு மருளிச் செய்தாரிறே.

விளக்கம் - கற்பகமரத்தைக் காட்டிலும் எம்பெருமானாருக்கு உள்ள மேன்மை என்ன என்று அருளிச்செய்கிறார்; அவையாவன – அனைவரையும் அடிமை கொள்ளுதல் மற்றும் இருந்த இடம் தேடி வருதல் - என்பதாகும். "பல்லுலகியாவும்" என்பதை "பல்லுலகில் யாவும்" என்று சிலர் உரைப்பார்கள்; ஆனால், "ல்" என்னும் எழுத்தின் மீது "யா" என்றுள்ள எழுத்து சேர்வதால் இது பொருந்தாது. ஆனால் "பல்லுலகியாவும்" என்று கூறுவது முறையோ என்று சிலர் கேட்கலாம். இராமாநுச நூற்றந்தாதி (43) - உரைக்கின்றனன் உமக்கியான் - என்று கூறுவது போன்று, "பல்லுலகியாவும்" என்று கூறும்போது குற்றியலிகரமாக மாறுவதால் தவறில்லை என்று ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தார்.

54. நாட்டிய நீசச் சமயங்கள் மாண்டன நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது தென்குருகை வள்ளல்
வாட்டம் இலா வண்தமிழ் மறை வாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டிய சீலத்து இராமானுசன் தன் இயல்வு கண்டே

விளக்கவுரை – அறியாமையின் இடமாக உள்ள இந்தப் பூமியில், தான் பெற்றிருந்த பரமபதத்தை விடுத்து, இந்த உலகினரின் சிறுமையைக் பாராமல் எம்பெருமானார் அவதரித்தார். இவரது ஸ்வபாவம் மற்றும் உயர்ந்த குணங்களைக் கண்டு, சூரியனைக் கண்ட இருள் விலகுவது போன்று, வைதிகம் அற்ற மதங்கள் அனைத்தும் நிர்மூலமாகச் சென்றன. இவரது அவதாரம் ஏற்பட்ட பின்னர் ஸர்வேச்வரனாகிய நாராயணனப் போற்றும் வேதங்கள் அனைத்தும், "நமக்கு இனி குறையில்லை", என்று கர்வம் அடைந்தன. மிகவும் உயர்ந்த இடமும், நம்மாழ்வாரின் அவதார இடமும் ஆகிய ஆழ்வார்திருநகரியில் உதித்த நம்மாழ்வார் அருளிச் செய்ததும், அனைத்து புருஷார்த்தங்களையும் அளிக்கவல்லதும், தமிழ் வேதமும் ஆகிய திருவாய்மொழி எந்தக் குறையும் இன்றி வளர்ந்தது.

அவதாரிகை – கீழெல்லாம், எம்பெருமானார் துர்மத நிரஸநம் பண்ணினாரென்றும், வேதோத்தரணம் பண்ணினாரென்றும், ஆழ்வாருடைய திவ்யஸூக்திகளிலே தானே அவகாஹித்தாரென்றும் சொன்னீர். ஆன பின்பு அத்தால் துர்மதங்களுக்கும் வேதங்களுக்கும் ஆழ்வாருடைய அருளிச்செயல்களுக்கு முண்டான ஆகாரத்தைச் சொல்லவேண்டாவோ வென்ன; துர்மதங்களடங்கலும் வேரோடேகூட நசித்துப் போந்தன, வேதமானது பூலோகத்திலே "எனக்காரும் நிகரில்லை" என்று கர்வித்திருந்தது, அருளிச்செயல்களெல்லாம் அனைவரும் உஜ்ஜீவிக்கும்படி நித்யாபிவ்ருத்தங்களாய்க் கொண்டிருந்தனவென்கிறார்.

விளக்கம் – திருவரங்கத்தமுதனாரிடம் சிலர், "கடந்த சில பாசுரங்களில் எம்பெருமானார் வேதங்களுக்குப் புறம்பாக உள்ள மற்ற மதங்களைத் தள்ளினார் என்றும், வேதங்களை மீண்டும் உயர்த்தினார் என்றும், ஆழ்வாருடைய திருப்பாசுரங்களில் ஈடுபட்டு நின்றார்

என்றும் உரைத்தீர். இதன் விளைவாக மற்ற மதங்களுக்கும், வேதங்களுக்கும், ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களுக்கும் ஏற்பட்டது என்ன என்று நீங்கள் கூற வேண்டாமோ?", என்று கேட்டனர். இதற்கு இவர், "மற்ற மதங்ள் அனைத்தும் வேருடன் அழிந்தன. வேதங்கள் 'இந்த உலகத்தில் எங்களுக்கு யாரும் ஒப்பு இல்லை' என்று கர்வத்துடன் நின்றன. அருளிச்செயல்கள் அனைத்தும், இந்த உலகில் உள்ளவர்கள் கரை ஏறும்படியாக அன்றாடம் ஓங்கி வளர்ந்தன", என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் - (நாட்டிய நீசச்சமயங்கள் என்று தொடங்கி) (மண்ணுலகில்) அஜ்ஞாநத்துக்கு விளைநிலமான பூலோகத்திலே. (ஈட்டிய சீலத்து) உபயவிபூத் யைச்வர்யத்தைப் பெற்ற தம்முடைய மாஹாத்ம்யத்தையும் லௌகிகருடைய சிறுமையையும் பாராதே, திருக்கோட்டியூரிலே பால வ்ருத்த விபாகமற எல்லார்க்கும், குஹ்யதமமாகத் தாம் பெற்ற சரம ச்லோகார்த்தத்தை வெளியிட்டு, கொங்கில் பிராட்டியையும், இரட்டைத் திருப்பதியிலே மாடு மேய்க்கிற பெண்பிள்ளையையும், மேல்நாட்டுக் கெழுந்தருளுகிறபோது காட்டிலே ஒரு இடையனையும், மற்றும் ஊமை முதலானவர்களையும், நிர்ஹேதுகமாக விஷயீகரித்துக் கலந்து பரிமாறி, மேல்மேலனத் திரட்டிக் கொண்ட ஸௌசீல்யத்தையுடையரான. ஈட்டுதல் - திரட்டுகை. (இராமாநுசன்றன்) எம்பெருமானாருடைய. (இயல்வு கண்டு) ப்ரதிபக்ஷ ப்ரதிக்ஷேபகத்வ தர்மமார்க்க ப்ரதிஷ்டாபகத்வாதி ஸ்வபாவங்களைக் கண்டு. இயல்பு – ஸ்வபாவம்.

விளக்கம் – (மண்ணுலகில்) - அறியாமை ஏற்படும் விளைநிலமாக உள்ள இந்தப் பூமியில். (ஈட்டிய சீலத்து) - நித்யவிபூதி மற்றும் லீலாவிபூதி ஆகிய இரண்டையும் ஸ்ரீரங்கநாதன் மூலமாகத் தனது உடைமை என்று பெற்றுக் கொண்ட தன்னுடைய மேன்மை மற்றும் இந்த உலகியல் விஷயங்களில் மட்டுமே ஈடுபட்டு நிற்கின்ற மற்றவர்களுடைய சிறுமை ஆகியவற்றை ஆராயாமல், திருக்கோஷ்டியூரில் சிறுவர்கள் – வயோதிகர்கள் என்றுள்ள வேறுபாடு காணாமல் அனைவருக்கும், மிகவும் இரகசியமாகத் தான் பெற்றதான சரமச்லோகத்தின் ஆழ்பொருளை வெளியிட்டார். கொங்கில் பிராட்டி [இவர் எம்பெருமானாருடைய பாதுகைகளை மட்டுமே வைத்து அன்றாடம் ஆராதனை செய்தவர் ஆவார்], ஆழ்வார் நவதிருப்பதிகளில் உள்ள இரட்டைத் திருப்பதியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு பெண்பிள்ளை, திருநாராயாணபுரத்திற்கு எழுந்தருளும்போது காட்டிலே இருந்த ஒரு இடையன் மற்றும் ஊமை போன்ற பலரையும் எந்தவிதமான

காரணமும் இன்றி ஏற்றுக்கொண்டு, அவர்களுடன் கலந்து நின்று, இது போன்ற பலரையும் திரட்டிய லௌசீல்யத்தைக் கொண்டவராகிய. (இராமாநுசன்) - எம்பெருமானாருடைய. (இயல்வு கண்டு) - வேதங்களுக்கு முரணாகப் பேசும் மற்றவர்களுடைய விரோதத்தைத் தள்ளி, தர்மமார்க்கத்தை ஆழமாக நிலை நாட்டியபடி உள்ள தன்மைகளைக் கண்டு.

வ்யாக்யானம் - (நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன) சோழமண்டலத்திலே யிருக்கிற திவ்ய தேசங்களில், கோயில்களெல்லாம் தைஷ்யடிம்பரான பாஷண்டிகள் பிடுங்கிப் பொகட்டுச் சிவாலயங்களைக் கட்டுவிக்கும்போது, திருமங்கைமன்னன் திருவவதரித்தருளி அந்த பாஷண்டிகளுடனே ப்ரஸங்கித்து அவர்களை வென்று, திவ்யதேசங்களைக் கட்டடங்க நிர்வஹித்தார்; ஆளவந்தார், சோழன் ஸபையிலே ருத்ர பக்ஷபாதிகளோடே ப்ரஸங்கித்து அவர்களை வென்று அந்த ராஜாவாலே அர்த்தராஜ்யத்தைப் பெற்றார்; இங்கு அப்படியன்றிக்கே, இவர் தம்முடைய காலத்திலே, தானே அவ்யபதேச்ய னென்பா னொருவன் "சிவாத்பரம்நாஸ்தி" என்று சாஸநத்தையெழுதி இந்த பூமண்டலத்திலே ஸ்தாபிப்பதாக அநேக பகவத் பாகவத த்ரோஹங்களைப் பண்ணிக் கொண்டு போந்து, "நீசரும் மாண்டனர்" என்கிறபடியே இவருடைய யத்நமின்றிக்கே இவர் தம்முடைய அப்ரதிம ப்ரபாவத்தைக் கண்டபோதே கழுத்திலே புண்பட்டு க்ருமிகண்டனாய் நசித்தான் என்றும், காளஹஸ்தியில் நின்றும் சைவர்கள் திரண்டு வந்து திருவேங்கடமுடையானைத் தங்களுடைய கந்தநாயனார் என்று வழக்குப் பிடித்து அக்காலத்திலே ராஜாவான யாதவராயனாலேயும் பரிஹரிக்கவரிதாம்படி திருமலையை ஆக்ரமிக்க, அப்போது திருவேங்கடமுடையானுடைய விஷயீகாரத்தாலே எம்பெருமானா ரெழுந்தருளி அவர்களை பராஜிதராக்கினவாறே அவர்களெல்லாரும் தலையறுப்புண்டு போனார்க ளென்றும், மேல்நாட்டிலே பௌத்த ஸமயத்தார் ப்ரபலராய் அவ்விடத்தில் ராஜாவும் அவர்களுடைய சிஷ்யனாய் அத்தேசத்திலே தத்வ்யதிரிக்தர் இருக்கவுங்கூட வரிதாய்ப் போந்திருந்த காலத்திலே, இவரும் யாத்ருச்சிகமாக அத்தேசத்திலே சில நாளெழுந்தருளியிருக்க, அந்த ராஜாவும் இவருடைய வைபவத்தை ஸேவித்து அந்த பௌத்தர்க்கும் எம்பெருமானார்க்கும் ப்ரஸங்கம் பண்ணுவித்து, அவர்களுடைய குத்ருஷ்டி கல்பநத்தையும், எம்பெருமானாருடைய ஸமீசீந கல்பநத்தையும் கண்டு வித்தனாய், இவர் திருவடிகளிலே ஆச்ரயித்து, பட்டாசார்யன் காலத்திலும் நசியாதே வேர் பாய்ந்திருக்கிற பௌத்தருடைவும் ஜைநருடையவும் தலைகளை யறுப்பித்து

அத்தேசத்திலே அப்படிப்பட்ட நீசஸமயங்கள் நடையாடாதபடி பண்ணினாரென்றும் ப்ரஸித்தமிறே.

விளக்கம் – (நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன) - சோழநாட்டில் உள்ள திவ்யதேசங்களில் இருந்த கோயில்களை, பாஷாண்டிகள் அபகரித்துக் கொண்டு, சிவன் கோயில்களைக் கட்டினர். அப்போது திருமங்கையாழ்வார் அவதரித்து, அந்த பாஷாண்டிகளுடன் வாதம் செய்து, அவர்களை வென்று, திவ்யதேசங்களை மீண்டும் நிர்மாணித்தார். ருத்ரனே உயர்ந்தவன் என்று வாதிட்ட சோழன் சபையில் இருந்த பலரையும் ஆளவந்தார் வாதத்தில் வென்று, அந்த அரசனிடமிருந்து பலவற்றையும் பெற்றார். ஆனால் எம்பெருமானார் விஷயத்தில் அவ்விதம் வாதம் செய்து வெல்லவேண்டிய அவசியம் இல்லாமலேயே பலவும் நடைபெற்றன. அவையாவன -

- எம்பெருமானார் காலத்தில் அவ்யபதேச்யன் என்னும் மன்னன் ஒருவன் "சிவாத் பரதரம் ந அஸ்தி - சிவனே உயர்ந்தவன், வேறு இல்லை" என்று ஒரு ஓலையில் எழுதி, அதனை இந்த உலகம் முழுவதும் நிலைநாட்ட எண்ணி, பல பகவத் அபசாரம் மற்றும் பாகவத அபசாரங்களைச் செய்தபடி வந்தான். அப்போது "நீசரும் மாண்டனர்" என்பதற்கு ஏற்ப எம்பெருமானாருடைய முயற்சி ஏதும் இன்றியே, இவருடைய ஒப்பற்ற ப்ரபாவத்தைக் கண்டவுடன் அவன் தன்னுடைய கழுத்தில் புண் ஏற்பட்டு, "க்ருமி கண்ட சோழன்" என்பதற்கு ஏற்ப அழிந்தான்.

- திருவேங்கடமலையில் உள்ள ஸ்ரீநிவாஸன் தங்களுடைய கந்தநாயனார் என்று முழங்கியபடி காளஹஸ்தியிலிருந்து பல சைவர்கள் வந்தனர். அப்போது அந்த இடத்தின் அரசனாக இருந்த யாதவராயனால் கூட அவர்களைத் தடுக்க இயலவில்லை. அந்த நேரத்தில் திருவேங்கடமுடையானுடைய திருவுள்ளம் காரணமாக எம்பெருமானர் அங்கு எழுந்தருளி, அவர்கள் அனைவரையும் தோற்றவர்கள் என்று ஆக்கினார். அதனால் அவர்கள் தலை குனிந்து சென்றனர்.

- திருநாராயணபுரத்தில் பௌத்தம் வேரூன்றி இருந்தது. அங்கிருந்து அரசனும் அந்த மதத்தின் சீடனாகவே இருந்தான். இதனால் அந்த மதம் அல்லாத வேறு யாரும் அங்கு வாழ இயலாதபடி ஆயிற்று. அப்போது எம்பெருமானார் தற்செயலாக அங்கு

சென்று சில நாட்கள் தங்கினார். அப்போது இவருடைய ப்ரபாவம் குறித்து அறிந்த அந்த அரசன், பௌத்தர்களுக்கும் எம்பெருமானாருக்கும் இடையே ஒரு வாதத்தை ஏற்பாடு செய்தான். அங்கு அவர்களுடைய முறையற்ற வாதங்களையும், எம்பெருமானாருடைய நேர்த்தியான வாதங்களையும் கண்டு மகிழ்ந்து, இவருடைய திருவடிகளில் பணிந்தான். ஆக பூர்வமீமாம்ஸகரான பட்டாசார்யன் காலத்தில் கூட அழிக்க இயலாதபடி வேர் பாய்ந்திருந்த பௌத்தர், ஜைநர் போன்றவர்களைத் தலை குனிய வைத்து, அந்த இடத்தில் தாழ்ந்த மதங்கள் ஏதும் மீண்டும் தலையெடுக்க இயலாதபடி செய்தார்.

வ்யாக்யானம் - (நாட்டியவித்யாதி) ஆதித்ய தர்சநத்தில் அந்தகாரம் நசிக்குமாப்போலே இவருடைய வைபவங்களைக் கண்டு ப்ரமாண தர்க்கங்களன்றிக்கே ஸ்வயுக்தி ஸ்த்தாபிதங்களாய், எத்தனை தரமுடையவராலும் நிவர்த்திப்பிக்க அசக்யங்களாய், வேதபாஹ்யங்க ளாகையாலே அதிநீசங்களாயிருக்கிற அவைதிக ஸமயங்களெல்லாம் நிர்மூலமாய்ப் போயின. (நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது) "நாராயண பரம்ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: நாராயண பரோஜ்யோதி: ஆத்மா நாராயண: பர: யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருச்யதே ச்ரூயதேபிவா அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" என்றும், "நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே" என்று தொடங்கி, "ப்ரஹ்மா நாராயண: சிவஸ்ச நாராயண: நாராயண ஏவேதம் ஸர்வம் யத் பூதம் யச்ச ஸர்வம்; நிரஞ்ஜனெள நிர்விகல்பெள நிராக்யாத: சப்தோ தேவ ஏகோ நாராயண: நத்விதீயோஸ்தி கஸ்சித் ய ஏவம் வேத ஸவிஷ்ணுரேவ பவதி" என்றும், "*ஏஷ ஸர்வ* பூதாந்தராத்மா அபஹத பாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:" என்றும், "*ஹ்ரீச்ச* தே லஷ்மீச்ச பத்ன்யௌ" என்றும் நாராயண பரத்வத்தைக் காட்டுகிற வேதமானது பூர்வோத்தர பாகங்களிரண்டிலும் வைத்துக் கொண்டு, பூர்வபாகம் ஆராதந கர்ம ஸ்வரூப ப்ரதிபாதக மாகையாலும், உத்தரபாகம் ஆராத்ய ப்ரஹ்ம ஸ்வரூபோபாய புருஷார்த்த ப்ரதிபாதக மாகையாலும், இரண்டுக்கும் ஏகசாஸ்த்ரத்வத்தை இவ்வெம்பெருமானார் ஸமர்த்தித்து, ஆஸேதுஹிமாசல ப்ரதிஷ்டை பண்ணுகையாலே நாவலிட்டு ஸஞ்சரியாநின்றது. களித்தல் – கர்வித்தல்.

விளக்கம் – (நாட்டிய இத்யாதி) – சூரியனைக் கண்டவுடன் இருள் மறைவது போன்று, எம்பெருமானாருடைய வைபவங்களைக் கண்டு, தகுந்த ப்ரமாணம் மூலம் மட்டுமே நிரூபிக்கவல்லதான வாதங்கள் ஏதும் இன்றி தாமாகவே வெளிப்படும் வாதங்கள் மூலம் தங்களை நிலைநாட்டிக் கொண்டவையும், எத்தனை ஞானம் நிறைந்தவர்களாக உள்ளபோதிலும் அழிப்பதற்கு இயலாதவையாகவும், வேதங்களுக்குப் புறம்பாக உரைப்பதால் மிகவும் தாழ்ந்தவையாகவும் உள்ள அனைத்து மதங்களும் நிர்மூலம் ஆயின. (நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது) - தைத்திரீய நாராயணவல்லி - நாராயண பரம்ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர: நாராயண பரோஜ்யோதி: ஆத்மா நாராயண: பர: யச்ச கிஞ்சித் ஜகத்யஸ்மிந் த்ருச்யதே ச்ரூயதேபிவா அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: - நாராயணனே உயர்ந்த ப்ரஹ்மம், உயர்ந்த உண்மையான வஸ்து நாராயணனே, உயர்ந்த ஆத்மா நாராயணனே, இந்த உலகத்தில் காண்பனவும் கேட்பனவுமான அனைத்து வஸ்துக்களிலும் உள்ளும் புறமும் புகுந்து நிறைந்திருப்பவன் நாராயணனே ஆவான் – என்றும், நாராயணாத் ப்ரஹ்மா ஜாயதே – நாராயணனிடமிருந்து நான்முகன் தோன்றினான் – என்று தொடங்கி; ப்ரஹ்மா நாராயண: சிவஸ்ச நாராயண: நாராயண ஏவேதம் ஸர்வம் யத் பூதம் யச்ச ஸர்வம்; நிரஞ்ஜனௌ நிர்விகல்பௌ நிராக்யாத: சப்தோ தேவ ஏகோ நாராயண: நத்விதீயோஸ்தி கஸ்சித் ய ஏவம் வேத ஸவிஷ்ணுரேவ பவதி – நான்முகனும் நாராயணனே, சிவனும் நாராயணனே, அனைத்தும் நாராயணனே; ஸ்வரூபரூப குணங்களில் எந்தவிதமான தோஷமும் அற்றவனாய், ப்ராக்ருதமான குணங்களும் பெயர்களும் அற்றவனாய், தூய்மையாக உள்ளவன் நாராயணன் ஒருவனே ஆவான், இரண்டாமவன் ஒருவனுமில்லை; அனைத்தும் விஷ்ணு மட்டுமே - என்றும், ஸுபால உபநிஷத் - *ஏஷ ஸர்வ* பூதாந்தராத்மா அபஹத பாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண: - அனைத்து உயிர்களின் ஆத்மாவாகவும், பாபங்கள் அற்றவனாகவும், திவ்யமாகவும் உள்ளவன் நாராயணன் - என்றும், *ஹ்ரீச்ச* தே லக்ஷ்மீச்ச பத்ன்யௌ – மஹாலக்ஷ்மி உன்னுடைய பத்னியாவாள் - என்றும் நாராயணனுடைய உயர்ந்த நிலையைக் காண்பிக்கும் வேதங்கள் அனைத்தும் பூர்வபாகம் மற்றும் உத்தரபாகம் என்று பிரிந்து நின்றபோது, பூர்வபாகம் ஆராதனைக்குத் தேவையான கர்மங்களையே வெளிப்படுத்துகின்றன என்றும், உத்தரபாகம் அந்த ஆராதனையை ஏற்கும் ப்ரஹ்ம ஸ்வரூபத்தையும் உயர்ந்த புருஷார்த்தத்தையும் வெளிப்படுத்துகின்றன என்றும் உணர்த்தி, இதன் காரணமாக இவை இரண்டும் ஒரே சாஸ்த்ரமே ஆகும் என்று ஸேது தொடங்கி இமயம் வரை எம்பெருமானார் நிரூபித்தார். இதனால் அந்த வேதங்கள்,

“இனி நமக்கு எந்த குறையும் இல்லை” என்று தேஜஸ் நிறைந்து, அரசர்கள் அணிகின்ற கலவைச்சந்தனத்தைப் பூசிக்கொண்டு, இந்த உலகில் ஆரவாரம் செய்திருந்தன.

வ்யாக்யானம் – (தென்குருகைவள்ளல் வாட்டமிலா வண்டமிழ் மறை வாழ்ந்தது) ”திருவழுதி நாடென்றும் தென்குருகூரென்றும்” என்னும்படி, தென்தேசத்துக் கெல்லாம் அலங்கார பூதமாய், தர்சநீயமான திருநகரியைத் தமக்குத் திருவவதார ஸ்தலமாக வுடையராய், பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை யநுபவிக்க அநுபவிக்க உள்ளடங்காமே ததநுபவ பரீவாஹ ரூபங்களாய், “மொழி பட்டோடும் கவியமுதின் நுகர்ச்சி யுறுமோ முழுதுமே” என்று தம்மாலே ச்லாகிக்கப்படுமவையான ஸ்வஸூக்திகளை லோகத்தாரெல்லார்க்கும் ஸர்வாதிகாரமாம்படி உபகரித்தருளும் பரமோதாரரான நம்மாழ்வாராலே அருளிச்செய்யப்பட்டதாய் பாஹ்ய குத்ருஷ்டிகளால் அவிசால்யமாகையாலே ஒரு குறையுமின்றிக்கே யிருப்பதாய், “நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே” என்கிறபடியே ஐஹிக புருஷார்த்தத்தையும், “நிரனிறை யாயிரத்து இவை பத்தும் வீடே”, “இவை பத்தும் பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரிய வானுள் நிலாவுவரே”, “அவாவி லந்தாதிப் பத்தறிந்தார் பிறந்தா ருயர்ந்தே” என்கிறபடியே ஆமுஷ்மிகமான பரமபுருஷார்த்தத்தையும் கொடுக்கக் கடவதான ஔதார்யத்தை யுடைத்தாயிருக்கிற த்ராவிட வேதமான திருவாய்மொழியானது, “சடகோபன் தண்டமிழ் நூல் வாழ” என்கிறபடியே ஸமஸ்த ப்ரபந்ந ஜநங்களும் மங்களாசாஸநம் பண்ணும்படி உஜ்வலமாய்த்து. வாட்டம் – ஸங்கோசம்.

விளக்கம் – (தென்குருகைவள்ளல் வாட்டமிலா வண்டமிழ் மறை வாழ்ந்தது) – ஈச்வர முனிகள் அருளிச்செய்த திருவாய்மொழி தனியன் – திருவழுதி நாடென்றும் தென்குருகூரென்றும் - என்று கூறுவதற்கு ஏற்ப, தெற்குத் திசையில் உள்ள அனைத்து திவ்யதேசங்களுக்கும் அலங்காரமாகவும், காண்பதற்கு மிகவும் இன்பம் அளிப்பதாகவும் உள்ள ஆழ்வார்திருநகரியைத் தனது அவதார இடமாகக் கொண்டவரும்; பகவத் ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி போன்றவற்றை அனுபவிக்க அனுபவிக்க அதில் மனநிறைவு ஏற்படாமல், அந்த அனுபவங்கள் அனைத்தும் உணர்ச்சிப் பிழம்புகளாக வெளிப்பட்டு, திருவாய்மொழி (8-10-5) – மொழி பட்டோடும் கவியமுதின்

நுகர்ச்சியுறுமோ முழுவதுமே - என்று தன்னால் கொண்டாடப்படும் திவ்யப்ரந்தங்களை இந்த உலகத்தில் உள்ள அனைவரும் அனுபவிக்கலாம்படி உபகாரம் செய்தவரும் ஆகிய தாராள குணம் நிறைந்த நம்மாழ்வாரால் அருளிச்செய்யப்பட்டதும்; வேதங்களுக்கு முரணாகப் பொருள் உரைக்கும் மதங்களால் அசைக்க இயலாததால் எந்தவிதமான குறையும் இல்லாததும்; திருவாய்மொழி (8-10-11) – நல்ல பதத்தால் மனைவாழ்வர் கொண்ட பெண்டிர் மக்களே - என்பதற்கு ஏற்ப இந்த உலகில் உள்ளபோது செல்வத்தையும், திருவாய்மொழி (1-1-11) – நிரல் நிறை ஆயிரத்து இவை பத்தும் வீடே - என்றும், திருவாய்மொழி (6-10-11) – இவை பத்தும் பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவரே - என்றும், திருவாய்மொழி (10-10-11) – அவாவில் அந்தாதிப் பத்தறிந்தார் பிறந்தார் உயர்ந்தே - என்றும் கூறுவதற்கு ஏற்ப அங்கு சென்ற பின்னர் அனுபவிக்கவல்ல புருஷார்த்தத்தையும் அளிக்கவல்ல தாராளகுணம் கொண்டதும் ஆகிய தமிழ்வேதமான திருவாய்மொழியானது, சடகோபன் தண்டமிழ் நூல் வாழ – என்பதற்கு ஏற்ப அனைத்து ப்ரபந்நர்களும் உரைக்கும்படியாக ஒளிர்ந்தது.

55. கண்டவர் சிந்தை கவரும் கடிபொழில் தென்னரங்கன்
தொண்டர் குலாவும் இராமானுசனை தொகையிறந்த
பண்தரு வேதங்கள் பார் மேல் நிலவிடப் பார்த்தருளும்
கொண்டலை மேவித் தொழும் குடியாம் எங்கள் கோக்குலமே

விளக்கவுரை – எண்ணற்ற வேதங்களை, அனைத்து ஞானமும் அளிக்கவல்ல வேதங்களை, எண்ணற்ற காலம் இருந்துவரும் வேதங்களை இந்த அகண்ட பூமியில் உள்ள ஜைனர்கள், பௌத்தர்கள் போன்றோர் மறுத்தனர். இவர்களைப் போன்றோரை வாதத்தின் மூலம் வீழ்த்தி, வேதங்கள் எங்கும் பரவும்படிச் செய்தார். இப்படிப்பட்ட வேதங்கள் என்னும் மழையைப் பெய்விக்கும் மேகமாக எம்பெருமானார் உள்ளார். திருவரங்கத்தில் உள்ள அழகியமணவாளன், யார் தன்னைக் காண்கிறார்களோ அவர்களின் மனதை அப்போதே பறித்துக் கொள்பவனாக, “மீண்டும் இவனை நாம் எப்போது காண்போம்?”, என்று துடிக்கும்படிச் செய்பவனாக உள்ளான். இப்படிப்பட்ட அரங்கனின் திருவடிகளையே எப்போதும் பற்றியுள்ள அரங்கனின் தொண்டர்கள், அவனை விடுத்து இப்போது எம்பெருமானாரின் திருக்கல்யாண குணங்களை உணர்ந்தவர்களாக, இவரையே சூழ்ந்தபடி உள்ளனர். இப்படிப்பட்ட எம்பெருமானாரின்

திருவடிகளைப் பற்றியபடி உள்ளவர்கள், எந்தக் குலத்தில் பிறந்துள்ளபோதும், அவர்களது குலமே எங்கள் குலம் என்று கூறும்படியாக நாங்கள் உள்ளோம்.

அவதாரிகை - கீழ்ப் பாட்டிலே வேதமானது எம்பெருமானாருடைய வைபவத்தை கண்டு கர்வித்து, தனக்கு ஒருவரும் லக்ஷ்யம் ஆகமாட்டார்கள் என்று பூலோகத்தில் ஸஞ்சரியா நின்றதென்றார்; இதிலே, அப்படி அந்த வேதங்களை ஒருவர் அபேக்ஷியாதிருக்கத் தாமே நிஷ்கண்டகமாக ப்ரவர்த்திப்பித்த ஔதார்யத்தையுடையராய் ஸகல ஜந மநோஹரமாய், பரிமளத்தையுடைய திவ்யோத்யாநங்களாலே சூழப்பட்டு தர்சநீயமான கோயிலுக்கு ஸ்வாமியான பெரியபெருமாளுடைய அடியாரான ஆழ்வார்களைக் கொண்டாடுகிற எம்பெருமானாருடைய இந்த ஸ்வபாவங்களிலே யீடுபட்டு ஆச்ரயித்திருக்கு மவர்களுடைய குலத்தார், எங்களை ஆளக்கடவ ஸ்வாமித்வத்தையுடைய குலத்தாரென்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் வேதமானது எம்பெருமானாருடைய வைபவத்தை உணர்த்து கொண்ட காரணத்தால், இனி தனக்கு யாரும் இலக்காக மாட்டனர் என்று பூலோகத்தில் பரவாமல் நின்றது என்றார். இந்தப் பாசுரத்தில் - இப்படியாக வேதத்தை யாரும் விரும்பாமல் (நாடாமல்) உள்ளபோது, தான் எந்தவிதமான தடையும் இன்றி வேதங்களை எங்கும் பரப்பிய தாராள குணம் கொண்டவராகவும்; அனைத்துவிதமான மனிதர்களுக்கும் இன்பம் அளிக்கின்றதும் பரிமளம் நிறைந்ததும் ஆகிய திவ்யமான நந்தவனங்களால் சூழப்பட்டதால் காண்பதற்கு மிகுந்த இன்பத்தை அளிக்கவல்ல திருவரங்கம் பெரியகோயிலின் எஜமானனாகிய பெரியபெருமாளுடைய அடியார்களான ஆழ்வார்களைக் கொண்டாடுபவரும் ஆகிய எம்பெருமானாருடைய இப்படிப்பட்ட தன்மைகளில் ஈடுபட்டு அவரை அண்டி நிற்கும் அடியவர்கள் குலமே, எங்களை ஆளவல்ல எஜமானத்தன்மை கொண்ட குலம் – என்கிறார்.

வ்யாக்யானம் – (தொகையிறந்த) வேதங்களை எண்ணப்புக்கால், "அநந்தாவை வேதா:" என்கையாலே எண்ணித் தலைக்கட்டப் போகாதிறே. தொகை – ஸங்க்யை. இப்படி ஒரு தொகையிலடங்காதபடி அநந்தமாய். (பண்தரு வேதங்கள்) **பண் என்று** கானமாய், அதுதானும் இங்கு உதாத்தாநுதாத்த ஸ்வரித ப்ரசயாத்மகமாய், அந்த ஸ்வரங்களும் சாகா பேதேந பஹுவிதங்களாய், அவற்றுக்கு ப்ரகாசகமான வேதங்களென்னுதல்; எல்லார்க்கும்

அவ்வவ ஸ்வர பரிஜ்ஞாநத்தை கொடுக்கவல்ல வேதங்களென்னுதல். "ஸமஸ்தாந் ஜ்ஞாதவ்யார்த்தாம்ச்ச வேதயதீதி வேத:" என்று ஆராதநாராத்யோபயாத்மகமான அர்த்தத்தை அபேக்ஷித்தவர்களுக்கு அடைவே யறிவிப்பிக்குமதாகையாலே வேதமென்று பேராயிருக்கிறது.

விளக்கம் – (தொகையிறந்த) - வேதங்களை எண்ணுவதற்கு முயன்றால், அநந்தாவை வேத: - என்பதற்கு ஏற்ப எண்ணி முடிக்க இயலாத ஒன்றாகும். இப்படியாக ஒரு எண்ணிக்கையில் அடங்காதபடி எண்ணற்றதாக. (பண்தரு வேதங்கள்) - பண் என்றால் கானம், பாட்டு. அவை வேதங்களைப் பொறுத்தவரை உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் மற்றும் ப்ரசயாத் என்று பலவிதங்களாக உள்ளன. இப்படியாக உள்ள ஸ்வரங்கள் அனைத்தும் பலவிதமான சாகை என்னும் பிரிவுகளைக் கொண்டதாகவும் உள்ளன. இவை அனைத்தையும் வெளிப்படுத்தவல்ல வேதங்கள் என்று கருத்து. கற்பவர்கள் அனைவருக்கும் அந்தந்த ஸ்வரத்தின் ஆழ்ந்த ஞனாத்தை அளிக்கவல்ல வேதங்கள். ஸமஸ்தாந் ஜ்ஞாதவ்யார்த்தாம்ச்ச வேதயதீதி வேத: -என்று கூறுவதற்கு ஏற்ப பகவத் ஆராதனையைக் கூறுவதாகவும், தானே ஆராதிக்கத்தகுந்த தன்மை கொண்டதாகவும், இப்படியாக இரண்டுவிதமான தன்மையுடன் கூடியதான தனது ஆழ்பொருள்களை, தன்னை விரும்புவர்களுக்கு முழுமையாக உணர்த்தவல்லதால் வேதம் என்று பெயர் கொண்டது.

வ்யாக்யானம் – (பண்டரு வேதங்கள்) என்கிறவிடத்தில், பண்டென்று பூர்வ காலீநமாய், அருவென்று தெரியவரியதாயிருக்கும் வேதங்களென்று பொருளானாலோவென்னில்; பண்டு என்று கால மாத்ர வாசகமாகையாலே காலீநத்தைச் சொல்லமாட்டாது, பண்டை என்றால் காலீநத்தைச் சொல்லலாம்; "பண்டை நான்மறை", "பண்டைக்குலம்", "பண்டையோமல்லோம்" என்று இவை காலீநத்துக்கு உதாஹரணங்கள்; "பண்டு நூற்றுவர்", "பண்டொரு நாள்" என்று இவை பூர்வ கால வாசகத்துக்கு உதாஹரணங்கள். ஆகையால் பண்டு என்று பதம் பண்ணினாலும், கால பரமாய்ப்போமித்தனை யொழிய காலீந பரமாக மாட்டாது. ஆக பண்தரு என்று பதச் சேதம் பண்ணினால்தான் ஸுஸங்கதமென்று உரையிலே ஜீயருமருளிச்செய்தாரிறே. இப்படி யிருந்துள்ள ரிக் யஜுஸ் ஸாமாதர்வண ரூப சதுர்வேதங்களும், பராசர பாராசர்ய ப்ராசேதஸாதி பரம

ரிஷிகளாலே அவகாஹிக்கப்பட்ட வேதாந்தங்களும். (**பார்மேல்**) மஹாப்ருதிவியிலே. (நிலவிடப் பார்த்தருளும்) ஜைந பௌத்தாதி பாஹ்யரை வேரோடே முடிவித்து வேதங்களை ஆஸேது ஹிமாசலம் வ்யாபிக்கும்படி பண்ணியருளின. நிலவுதல் – வர்த்தித்தல். இவர்தாம் வேத மார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யரிறே. (கொண்டலை) ஜல ஸ்தல விபாகமற வர்ஷிக்கும் மேகமென்னலாம்படி வதாந்யராய்.

விளக்கம் – (பண்டருவேதங்கள்) - இதனை "பண்டு + அரு" என்றும் பிரித்து சிலர் பொருள் கொள்வர். பண்டு என்றால் முன்பு உள்ள அனைத்து காலங்கள், அரு என்றால் அறிந்து கொள்ள அரிதாக இருக்கும் வேதங்கள் என்று இவர்கள் கூறலாம். இவ்விதம் பொருள் கொள்வதில் பொருத்தம் ஏற்படாது. காரணம், "பண்டு" என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தை மட்டுமே குறிக்கும் அல்லாமல், "அனைத்து காலத்திலும்" என்பதை உணர்த்தாது; "பண்டை" என்றால் மட்டுமே "அனைத்து காலத்திலும்" என்று உணர்த்தும். இதற்கு திருவாய்மொழி (5-7-1) – பண்டை நான்மறை, திருப்பல்லாண்டு (5) – பண்டைக்குலம், பெருமாள் திருமொழி (6-7) – பண்டையோம் அல்லோம் போன்றவை உதாரணங்கள் ஆகும். திருவாய்மொழி (3-6-10) – பண்டு நூற்றுவர், திருப்பாவை (10) – பண்டு ஒருநாள் – போன்றவை முன்பு ஒரு காலம் என்பதற்கு உதாரணங்கள் ஆகும். ஆகவே "பண்டு" என்று பிரித்துப் பொருள் கொண்டால் ஒரு குறிப்பிட்ட பூர்வகாலத்தை உணர்த்தும் அல்லாமல், அந்தக் காலம் முழுவதையுமே உணர்த்தாது. ஆகவே "பண்தரு" என்று பிரித்தால் மட்டுமே மிகவும் பொருந்தமாக இருக்கும் என்று ஸ்வாமி மணவாளமாமுனிகளும் தனது உரையில் அருளிச்செய்தார். இப்படியாக உள்ள ரிக், யஜுர், ஸாம மற்றும் அதர்வண ரூபமாக உள்ள நான்கு வேதங்களும், பராசரர் மற்றும் ப்ராசேதஸ் போன்ற மஹரிஷிகள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட வேதாந்தங்களும். (பார் மேல்) - இந்த அண்ட பூமியில். (நிலவிடப் பார்த்தருளும்) - ஜைநர்கள், பௌத்தர்கள் போன்று வேதங்களுக்குப் புறம்பாகப் பேசும் மதங்களை வேருடன் அழித்து, வேதங்களை ஸேது கரை தொடங்கி இமயமலை முடிய உள்ள அனைத்து இடங்களிலும் வ்யாபித்து நிற்கும்படியாகச் செய்தருளிய. இவர் "வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்" என்று கொண்டாடப்படுபவர் அல்லவோ? (கொண்டலை) – நீர், நிலம் என்ற வேறுபாடு ஆராயாமல் அனைத்து இடங்களிலும் ஒரே போன்று மழையைப் பொழியவல்ல மேகம் என்று கூறலாம்படியான கொடைவள்ளலாய்.

வ்யாக்யானம் – (கண்டவர் சிந்தை கவரும்) "பூகீ கண்ட த்வயஸ ஸரஸ ஸ்நிக்த நீரோபகண்டாம் ஆவிர்மோத ஸ்திமித சகுநாநூதித ப்ரஹ்மகோஷாம் மார்கே மார்கே பதிக நிவஹை: உஞ்ச்யமாந அபவர்காம் பச்யேயம் தாம் புநரபி புரீம் ஸ்ரீமதீம் ரங்கதாம்ந:" என்கிறபடியே தன்னைப் பார்க்கிறவர்களுடைய மநஸ்ஸை அபஹரித்துத் தன் வசமாக்கி, பாராதுபோது "திரும்பவும் காண்கிறதெப்போதோ" என்று ஆகாங்க்ஷிக்கும்படி நிற்பதாய். **கவருகை** – க்ரஹிக்கை. (கடிபொழில் தென்னரங்கன்) பரிமள ப்ரசுரங்களான சோலைகளாலே சூழப்பட்டும், விமாந மண்டப கோபுர ப்ராகார உத்யாநங்களாலே நிபிடமாயும், த்வஜ பதாகாதிகளாலே அலங்க்ருதமாயு மிருக்கையாலே தர்சநீயமாயிருக்கிற கோயிலிலே நித்யவாஸம் பண்ணி, அதுவே நிரூபகமாம்படி யிருக்கிற திருவரங்கச்செல்வனாருடைய. **கடி** – பரிமளம்.

விளக்கம் – (கண்டவர் சிந்தை கவரும்) - ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம் - பூகீ கண்ட த்வயஸ ஸரஸ ஸ்நிக்த நீரோபகண்டாம் ஆவிர்மோத ஸ்திமித சகுநாநூதித ப்ரஹ்மகோஷாம் மார்கே மார்கே பதிக நிவஹை: உஞ்ச்யமாந அபவர்காம் பச்யேயம் தாம் புநரபி புரீம் ஸ்ரீமதீம் ரங்கதாம்ந: - பாக்கு மரங்களின் கழுத்தளவாக உள்ளதும், சுவை நிரம்பியதும், இனிமையானதும் ஆகிய நீரை உடையதாய், மகிழ்ச்சியினால் அசையாமல் உள்ள கிளிகளால் திருப்பிச் சொல்லப்பட்ட வேதகோஷத்தை உடையதாய், மோக்ஷம் வேண்டி பாதை முழுவது நிரம்பிய கூட்டத்தை உடையதாய் இருக்கின்ற திருவரங்கத்தில் உள்ள ஸ்ரீரங்கநாதனை நான் மறுபடியும் சேவிக்கப் பெறுவேனோ - என்பதற்கு ஏற்ப தன்னைக் காண்பவர்களுடைய மனதை அபகரித்துக் கொண்டு தன்வசப்படுத்தி, அவர்கள் அதனைக் காணாமல் உள்ளபோது, "மீண்டும் அவனை நான் காணும் நாள் எப்போதோ?", என்று விருப்பத்துடன் எதிர்பார்த்து நிற்கும்படிச் செய்யவல்ல. (கடிபொழில் தென்னரங்கன்) – பரிமளம் நிறைந்த சோலைகளால் சூழப்பட்டும், விமானம் - மண்டபம் - கோபுரங்கள் – ப்ராகாரங்கள் – நந்தவனங்கள் என்று பலவற்றாலும் நிறைந்ததாகவும், கொடிமரங்கள் பதாகைகள் ஆகியவற்றால் அலங்கரிக்கப்பட்டதாகவும் உள்ளதால் காண்பதற்கு இன்பமாக உள்ள திருவரங்கம் பெரியகோயிலில் நித்யவாஸம் செய்தருளி, அந்தப் பெரியகோயில் மூலமே தன்னை அடையாளம் காண்பிக்கும்படியாக உள்ள திருவரங்கச்செல்வனாருடைய.

வ்யாக்யானம் – "கண்டவர் சிந்தை கவரும் கடி" என்று பரிமளத்துக்கு விசேஷணமாகச் சொல்லவுமாம். அன்றிக்கே "கண்டவர் சிந்தை கவரும் தென்னரங்கன்" என்று பெரியபெருமாளுக்கு விசேஷணமாகச் சொல்லவுமாம். "ஸர்வ கந்த:" என்று சொல்லப்படுகிற வவரோட்டை ஸ்பர்சத்தாலே காணும் அவ்விடத்தே யிருந்த திருச்சோலைகளுக்கு "கடி பொழில்" என்று நிரூபிக்கும்படி பரிமளமுண்டாவது. **(தொண்டர் குலாவும்)** "கண்டேன் திருவரங்கமே யான் திசை" என்றும், "இனியறிந்தேன் தென்னரங்கத்தை" என்றும், "தேனார் திருவரங்கம்" என்றும், "பண்டரங்கமேயதுவும்" என்றும், "திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய்" என்றும், "அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் கடல் விளங்கு கருமேனியம்மான்றன்னைக் கண்ணாரக் கண்டு" என்றும், "அணியரங்கத்தே கிடந்தாய்" என்றும், "அரங்கத்தம்மா" என்றும், "அண்டர்கோனணி யரங்கனென்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றும், "நின்னடியிணை யடைந்தே னணிபொழில் திருவரங்கத்தம்மானே" என்றும் - **அவருடைய போக்யதையிலே யீடுபட்டிருக்கிற பொய்கையார் தொடக்கமான ஆழ்வார்கள் பத்துப் பேரையும்**, "அன்றெரித்த திருவிளக்கைத் தன் திருவுள்ளத்தேயிருத்தும்" இத்யாதிகளில் சொல்லுகிறபடியே கொண்டாடி நிற்கிற. அவர்கள் பக்கலிலே எப்போதும் ப்ரதிபத்தி பண்ணிக் கொண்டு போரா நிற்கிறவென்றபடி. **குலவுதல்** – கொண்டாட்டம்.

விளக்கம் – "கண்டவர் சிந்தை கவரும் கடி" என்று பரிமளத்திற்கு அடைமொழி கூறியதாகக் கொள்ளலாம். அல்லது "கண்டவர் சிந்தை கவரும் தென்னரங்கன்" என்று பெரியபெருமாளுக்கு உரைத்ததாகவும் கூறலாம். ஸர்வகந்த: - அனைத்து நறுமணங்களும் நிரம்பியவன் - என்று கூறுவதற்கு ஏற்ப உள்ள அந்த ஸ்ரீரங்கநாதனுக்கு ஒத்தபடி உள்ள பரிமளம், அங்குள்ள திருச்சோலைகளுக்கு அவனுடைய ஸ்பர்சம் காரணமாகவே ஏற்படுகிறது. **(தொண்டர் குலாவும்)** - முதல் திருவந்தாதி (6) – கண்டேன் திருவரங்கமேயான் திசை – என்றும், இரண்டாம் திருவந்தாதி (88) – இனி அறிந்தேன் தென்னரங்கத்து எந்தை – என்றும், மூன்றாம் திருவந்தாதி (62) – தேனார் திருவரங்கம் – என்றும், நான்முகன் திருவந்தாதி (3) – பண்டரங்கமே அதுவும் – என்றும், பெரியதிருமொழி (7-2-3) – திட்கொடி மதிள் சூழ் திருவரங்கத்தாய் – என்றும், பெருமாள் திருமொழி (1-11) – அரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னைக் கண்ணாரக் கண்டு – என்றும், பெரியாழ்வார் திருமொழி (2-7-2) –

அணியரங்கத்தே கிடந்தாய் – என்றும், திருப்பள்ளியெழுச்சி – அரங்கத்தம்மா – என்றும், அமலனாதிபிரான் (10) – அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே – என்றும், பெரியதிருமொழி (5-8-1) – நின்னடியிணை அடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே - என்றும் ஸ்ரீரங்கநாதனுடைய இனிமையில் ஈடுபட்ட பொய்கையாழ்வார் தொடக்கமாக உள்ள ஆழ்வார்கள் பத்து பேரையும். இராமானுச நூற்றந்தாதி (8) – அன்றெரித்த திருவிளக்கைத் தன் திருவுள்ளத்தே இருத்தும் - என்பதற்கு ஏற்ப கொண்டாடியபடி உள்ள. அதாவது அவர்களிடம் எப்போதுமே ஈடுபட்டபடி நிற்கின்ற.

வ்யாக்யானம் – (**இராமானுசனை**) எம்பெருமானாரை. (மேவித் தொழுங்குடி) அவருடைய ஸ்வபாவங்களிலே அத்யபிநிவிஷ்ட சித்தராய், விஷயாந்தரபிமுகராய் ஆச்ரயித்திருக்கு மவர்களுடைய திருவம்சத்தாரடங்கலும். (ஆமெங்கள் கோக்குடியே) தத் ஸம்பந்திகளே உத்தேச்யரென்றிருக்கும் எங்களை அடிமை கொள்ள வல்லவருடைய திருவம்சத்தாராவர். தமக்கு ஒருவருக்குமேயன்று, தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கும் இக்குடி யொன்றுமே வகுத்த சேஷியென்று காணும் இவருடைய ப்ரதிபத்தியிருக்கும்படி. அன்றிக்கே, எம்பெருமானார் திருவடிகளிலே ஆச்ரயித்தவர்கள் எந்தக் குலத்திலே அவதரித்தாலும் , அந்தக் குலமே எங்களை யெழுதிக் கொள்ளவல்ல ஸ்வாமியாமென்று யோஜிக்கவுமாம். "த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து" என்று இவ்வர்த்தத்தையிறே ஜீயரும் ப்ரார்த்தித்தருளினது. "ஸாரஜ்ஞோ யதி கச்சித் அஸ்தி புவநே நாதஸ் ஸயூதஸ்ய" என்று அபியுக்தரும் அருளிச்செய்தாரிறே. "குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ்இழிந்து எத்தனை நலந்தான் இலாத சண்டாள சண்டாளர்கள் ஆகிலும் வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்கு ஆளென்று உள்கலந்தார் அடியார் தம்மடியார் எம் அடிகளே" என்றாப்போலே அருளிச்செய்தாராய்த்து.

விளக்கம் – (இராமாநுசனை) – எம்பெருமானாரை. (மேவித் தொழுங்குடி) - அவருடைய சிறந்த தன்மைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாகவும், மற்ற விஷயங்களில் ஒதுங்கி நிற்பவர்களாகவும் உள்ள வம்சத்தில் உள்ள அனைவரும். (ஆமெங்கள் கோக்குடியே) – அந்தத் தொடர்பு உள்ளவர்களே எங்களுக்கு இலக்கு என்றுள்ள எங்களை

அடிமையாக்கிக் கொள்ளவல்லவர்கள் ஆவர். அதாவது திருவரங்கத்தமுதனாராகிய தனக்கு மட்டும் அல்லாமல், தனது ஸம்பந்தம் பெற்றவர்கள், அவர்களுடைய ஸம்பந்தம் பெற்றவர்கள் என்றுள்ள அனைவருக்கும், இப்படியாக எம்பெருமானாரை அண்டி நிற்கும் அவர்களே இயற்கையான எஜமானர்கள் என்று கொண்டாடும்படியாக இவருடைய ஞானம் உள்ளது. அல்லது எம்பெருமானாருடைய திருவடிகளில் பணிந்து நிற்பவர்கள் எத்தகைய குலத்தில் பிறந்திருந்தாலும், அந்தக் குலம் முழுவதும் எங்களைத் தங்களுக்காக அடிமை என்று எழுதி வாங்கிக் கொள்ளும்படி உள்ள குலமாகும் என்றும் கொள்ளலாம். யதிராஜ விம்சதியில் (16) - த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து - என்னை உனது தொண்டனுக்குத் தொண்டனாகக் கொள்ளவேண்டும். இதன் மூலம் நான் உன்னைச் சரணம் என்று பற்றும்படி செய்யவேண்டும். உனக்கு அர்ப்பணிக்க என்னிடம் ஏதும் இல்லை. ஆகவே என்னிடம் இருந்து எதனையும் எதிர்பாராமல் உள்ள உனது கருணை மட்டுமே கொண்டு என்னை நீ காக்க வேண்டும் – என்று இந்தப் பொருளையே ஸ்வாமி மணவாளமாமுனிகளும் அருளிச்செய்தார். ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் (அதிகாரம் 2) – ஸாரஜ்ஞோ யதி கச்சித் அஸ்தி புவநே நாதஸ் ஸயூதஸ்ய – ரஹஸ்ய த்ரயத்தின் ஸாரத்தை அறிந்த ஒருவனே நமது கூட்டத்திற்குத் தலைவன் – என்று ஸ்வாமி வேதாந்ததேசிகரும் அருளிச்செய்தார். திருவாய்மொழி (3-7-9) - குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ்இழிந்து எத்தனை நலந்தான் இலாத சண்டாள சண்டாளர்கள் ஆகிலும் வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணிவண்ணற்கு ஆளென்று உள்கலந்தார் அடியார் தம்மடியார் எம் அடிகளே– என்று அருளிச்செய்தது போன்று இவரும் அருளிச்செய்தார் என்று கருத்து.

56. கோக்குல மன்னரை மூவெழுகால் ஒரு கூர்மழுவால்
போக்கிய தேவனைப் போற்றும் புனிதன் புவனம் எங்கும்
ஆக்கிய கீர்த்தி இராமானுசனை அடைந்தபின் என்
வாக்கு உரையாது என் மனம் நினையாது இனி மற்றொன்றையே

விளக்கவுரை – முன்பு ஒரு காலகட்டத்தில், மிகுந்த செல்வம் [செல்வம் என்பது இங்கு பொருட்செல்வம் மட்டும் அல்ல; கருணை, கொடை போன்ற பலவிதமான நற்குணங்களும் அடங்கும்] உள்ளதால் அரசன் என்று இல்லாமல், இயல்பிலேயே க்ஷத்ரியர்களாக உள்ளதால் அரசர்கள் என்று கூறிக் கொள்பவர்களை இருபத்து ஒரு

தலைமுறை, தனது கோடாரி கொண்டு வதைத்த பரசுராமனை எம்பெருமானார் போற்றி நின்றார். இப்படிப்பட்ட தூய்மையான எம்பெருமானாரின் புகழ் இந்த உலகம் முழுவதும் பரவி நிற்கிறது. இத்தகைய எம்பெருமானாரை அண்டிய பின்னர், இனி வரும் காலங்களில், எனது மனம் வேறு எதனையும் நாடாது; எனது வாக்கு அவரது புகழ் அல்லாமல் எதனையும் கூறாது.

அவதாரிகை - "கொண்டலை மேவித்தொழுங் குடியாமெங்கள் கோக்குடி" என்று சொன்னவாறே, நீர் இப்போது எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களை யநுபவித்து வித்தராய்ச் சொன்னீர், நீர் விஷயாந்தரங்களை விரும்பினபோது முற்காலத்தில் அப்படியேயன்றோ சொல்லுவது, ஆகையாலே உமக்கு இது ஸ்வபாவமாய் விட்ட பின்பு இவரையே பற்றியிருக்கிறேனென்ற விது நிலைநிற்கக் கடவதோவென்று சிலர் ஆக்ஷேபிக்க; அவர்களைக் குறித்து நான் துர்வாஸனையாலே விஷயாந்தரங்களை விரும்புவதாக யத்நித்தேனாகிலும் என்னுடைய வாக்கும் மநஸ்ஸும் அவற்றை விரும்ப இசையாதே யிருந்ததென்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் – கொண்டலை மேவித் தொழும் குடியாம் எங்கள் கோக்குடி - என்று அருளிச்செய்தார். இதனைக் கேட்ட சிலர் திருவரங்கத்தமுதனாரிடம், "நீவிர் தற்போது எம்பெபெருமானாருடைய திருக்கல்யாணகுணங்களை அனுபவித்து, பக்தியில் திளைத்து நிற்பதன் காரணமாக இவ்விதம் கூறுகிறீர்கள். முன்பு உலக விஷயங்களை நீவிர் பெரிதும் விரும்பியபோது, அவற்றைக் குறித்தும் இது போன்றே அல்லவோ ஈடுபாட்டுடன் உரைத்தீர்? ஆக, இது போன்று அந்தந்த சூழலுக்கு ஏற்ப உரைத்தல் என்பது உமக்கு இயல்பான பின்னர், எம்பெருமானாரை அண்டி இருக்கிறேன் என்று கூறும் இதுவும் நிலையாக நிற்குமோ?", என்று ஆக்ஷேபம் தெரிவித்தார்கள். அவர்களிடம் இவர், "எனது துர்வாசனை காரணமாகவே நான் மற்ற விஷயங்களை விரும்புவதாக, அவற்றின் பின்னே செல்ல முயன்றேன்; ஆனால், எனது வாக்கும் மனமும் அவற்றை விரும்பத் தயாராக இருந்ததில்லை", என்கிறார்.

வ்யாக்யானம் - (கோக்குலமன்னரை) த்ரேதா யுகத்தில் கார்த்தவீர்யார்ஜுந னென்பா னொரு ராஜா மஹாபல பராக்ரமசாலியாய் ஒருவரும் எதிரின்றிக்கே திரியாநிற்கிற காலத்திலே ஒருநாள் ஜமதக்நி மஹரிஷியினுடைய ஆச்ரமத்திலே சென்று ப்ரஸங்காத்

ராஜ்ய கர்வத்தாலே அவனை ஹிம்ஹித்துப்போக; அந்த ரிஷி புத்ரனான ஸ்ரீபரசுராமாழ்வான் அச்செய்தியைக் கேட்டு மிகவும் குபிதனாய் தத் க்ஷணத்திலே தானே அந்த ராஜாவைக் கொன்றும், பித்ரு வத ஜந்யமான கோபம் சமியாமையாலே "ராஜகுலத்தையெல்லாம் நிக்ஷத்ரமாகப் பண்ணக்கடவோம்" என்று ஸங்கல்பித்து பூமியிலுள்ள ராஜாக்களையெல்லாம் ஸம்ஹரித்து, சிறிது நாள் தபஸ்ஸு பண்ணிக் கொண்டு போந்து, பின்னையும் க்ஷத்ரியகுலம் உத்பந்நமாய்க் கொழுந்து விட்டுப் படர்ந்தவாறே அத்தைக் கண்டு திரியட்டும் முன்பு போலே நிக்ஷத்ரமாகப் பண்ணி, இப்படி இருபத்தொரு தலைமுறை க்ஷத்ரிய ராஜாக்களையெல்லாம் ஸம்ஹரித்து அவர்களுடைய ரத்தத்தாலே திலதர்ப்பணம் பண்ணினாரென்று ப்ரஸித்தமிறே. அப்படி ரோஷாவிஷ்டனாய் நின்றபோது வேறொரு குலத்தில் பிறந்தார் ராஜ்யம் பண்ணிக் கொண்டிருந்தாலும் அவர்கள் வழிபோகாதே, க்ஷத்ரிய குலமாத்ரத்தையே ஸம்ஹரித்தபடியை யருளிச்செய்கிறார்.

விளக்கம் – (கோக்குல மன்னரை) - த்ரேதாயுகத்தில் கார்த்தவீர்யார்ஜுனன் என்னும் ஒரு அரசன் மிகுந்த வலிமையும் பராக்ரமும் பொருந்தியவனாக, தன்னை எதிர்ப்பவர்கள் யாரும் இன்றி வாழ்ந்து வந்தான். அவன் ஒருநாள் ஜமதக்னி மஹரிஷியின் ஆச்ரமத்திற்குச் சென்று, அவருடன் வாதம் செய்து, தனது அரசபதவி காரணமாக அவரைக் துன்புறுத்திக் கொன்றான். அந்த ரிஷியின் புத்திரனாகிய பரசுராமன் இந்தக் செய்தியைக் கேட்டு மிகுந்த கோபம் கொண்டவனாக, அந்த நொடியிலேயே தானே சென்று அந்த அரசனைக் கொன்றான். தனது தந்தையைக் கொன்ற கோபம் அடங்காத காரணத்தால், "அரசகுலம் அனைத்தையும் இல்லாமல் ஆக்குவேன்", என்று உறுதி பூண்டு, பூமியில் உள்ள அரசர்கள் அனைவரையும் அழித்து, பின்னர் சில காலம் தவம் செய்தான். அதன் பின்னர் மீண்டும் சில காலம் கழிந்து க்ஷத்ரிய குலம் உற்பத்தியாகி எங்கும் பரவத் தொடங்கியது. அப்போது முன்பு போன்றே அவற்றை இல்லாமல் செய்தான். இது போன்று இருபத்தொரு தலைமுறை க்ஷத்ரிய அரசர்களை அழித்து, அவர்களுடைய இரத்தம் கொண்டு எள் தர்ப்பணம் செய்தான் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். இப்படியாக இருந்த பரசுராமன் மிகுந்த கோபத்துடன் உள்ளபோதிலும், க்ஷத்ரிய குலத்தில் பிறக்காதவர்கள் அரசபதவியில் இருந்தால் அவர்களை ஏதும் செய்யாமல், க்ஷத்ரிய குலத்தை மட்டுமே அழித்ததைக் கூறுகிறார்.

வ்யாக்யானம் - (கோக்குலமன்னரை) வேறொரு குலத்தில் பிறந்து ஐச்வர்யத்தாலே ராஜகுலத்தை ப்ராபிக்கையன்றிக்கே ஸாக்ஷாத் க்ஷத்ரிய குலோத்பவரான ராஜாக்களை. (மூவெழுகால்) மூவெழுதரம். "இருபத்தொரு காலரசுகளைக் கட்ட" என்கிறபடியே இருபத்தொரு தலைமுறையென்றபடி. (ஒரு கூர்மழுவால்) ஆவேசாவதாரமான ஸ்ரீபரசுராமாழ்வானுக்கு நிரூபகமா யிருக்கையாலே அத்விதீயமாய் இருபத்தொரு பர்யாயம் க்ஷத்ரியரை ஸம்ஹரிக்கத் தக்கதான கூர்மையையுடைய பரசுவாலே. (போக்கிய தேவனை) விரோதி நிரஸந ப்ரயுக்தமான ஔஜ்வல்யத்தையுடைய ஸர்வேச்வரனை யென்றபடி. இப்படிபட்ட தொழில்களெல்லாம் அந்த அவதாரத்தில் பண்ணின க்ரீடையாகையாலே ஏவம் ப்ரகாரமான க்ரீடாயுக்தனை யென்னுதல். (போற்றும்) ஆச்ரயித்திருக்கிற, மங்களாசாஸநம் பண்ணிக் கொண்டிருக்கிற. போற்றுதல் - புகழ்தல். "விநாசாய ச துஷ்கருதாம்" என்கிறபடியே ஆச்ரித விரோதி நிரஸந சீலமாகிற குணத்திலே தோற்று ஏத்தாநின்றார்கள் காணும். மஹாபாரத பாஞ்சராத்ராதிகளாலும், நம்முடைய பூர்வாசார்யர்களாலும், ப்ரஹ்ம ருத்ரார்ஜுந வ்யாஸ ககுத்ஸ்த ஜாமதக்ந்யாதிகள் அநுபாஸ்யரென்று பஹுமுகமாகச் சொல்லியிருக்க, எம்பெருமானார் பரசுராமாழ்வனை ஏத்துகிறவிது சேருமோவென்னில்; அந்த அவதாரம் எம்பெருமானுடை அஹங்கார யுக்த ஜீவாவேசமாகையாலே அவனாலே செய்யும் அம்சத்துக்கு எம்பெருமானார் ஈடுபட்டு ஸ்துதித்தாரென்று சொன்னேனித்தனை யொழிய, ததுபாஸநம் பண்ணுகிறாரென்று சொல்லாமையாலே விரோதமில்லை. "மன்னடங்க மழு வலங்கைக் கொண்ட விராம நம்பீ" என்றும், "வென்றி மாமழுவேந்தி முன் மண்மிசை மன்னரை மூவெழுகால் கொன்ற தேவா" என்றும், மயர்மற மதிநல மருளப்பெற்றவர் அருளிச் செய்ததும் விரோதி நிரஸந ஸ்வபாவத்துக்கு தோற்று. (புனிதன்) பகவந் மங்களாசாஸநத்தாலே பரிசுத்த ஸ்வபாவராய், தன்னை ஆச்ரயித்தவர்களையும், "ஆத்ம ஸாம்யாவஹத்வாத்" என்று சொல்லப்பட்ட ஸ்வஸாம்யத்தை யுடையராம்படி பண்ணவல்ல பாவந தமர். புனிதன் – சுத்தன். (புவநமெங்குமாக்கிய கீர்த்தி) "இப்பார் முழுதும் போர்த்தான் புகழ் கொண்டு" என்கிறபடியே, இந்த லோகமெங்கும் வ்யாபிக்கும்படி பண்ணின கீர்த்தியையுடையரான.

விளக்கம் – (கோக்குல மன்னரை) - மற்றொரு குலத்தில் பிறந்து, ஐச்வர்யம் காரணமாக அரசகுலத்தை அடைவது அல்லாமல், க்ஷத்ரிய குலத்திலேயே பிறந்து அரசரானவர்களை. (மூவெழுகால்) - மூன்று ஏழுமுறை, அதாவது இருபத்து ஒன்று. திருவாய்மொழி (6-2-10) – இருபத்தொருகால் அரசு களை கட்ட – என்பதற்கு ஏற்ப, இருபத்தொரு தலைமுறை என்று கருத்து. (ஒரு கூர்மழுவால்) - பரசுராம அவதாரம் என்பது மிகுந்த ஆவேசம் கொண்டதாகும் என்று நிரூபிக்கும் விதத்தில், இவனைப் போன்று இரண்டாவதாக யாரும் இல்லை என்று கூறும்படியாக, இருபத்தொரு தடவைகள் க்ஷத்ரியர்களை அழிப்பதற்கு ஏற்றதான கூர்மை மிகுந்த கோடாலியால். (போக்கிய தேவனை) - விரோதிகளை அழிப்பதற்கு ஏற்றதான தேஜஸ்ஸை உடைய ஸர்வேச்வரனை என்று கருத்து. இப்படிப்பட்ட செயல்கள் அனைத்தும் அந்தப் பரசுராம அவதாரத்தில் செய்த லீலைகள் என்பதால், அந்தச் செயல்கள் வெளிப்படும்படியான ஸர்வேச்வரனை. (போற்றும்) - அண்டி நிற்கிற, புகழ்ந்தபடி உள்ள. கீதை (4-8) – விநாசாய ச துஷ்க்ருதாம் - என்பதற்கு ஏற்ப அடியார்களுடைய விரோதிகளை அழித்தல் என்ற குணத்தில் மயங்கிப்போய் நின்றனர். மஹாபாரதம், பாஞ்சராத்ரம், நம்முடைய பூர்வாசார்யர்கள் போன்ற பலரும் நான்முகன், ருத்ரன், அர்ஜுனன், வ்யாஸர், ககுத்ஸ்தன், ஜமதக்னி போன்றவர்கள் வழிபடத்தக்கவர்கள் என்று பலவிதங்களில் கூறியுள்ளபோது, எம்பெருமானார் பரசுராமனைப் புகழ்வது சரியோ என்று கேட்கலாம். இதற்குச் சமாதானம் அருளிச் செய்கிறார். பரசுராம அவதாரம் என்பது ஸர்வேச்வரனுடைய அஹங்காரத்தை வெளிப்படுத்துகின்ற ஜீவாத்மாவிற்குள் புகுந்த நிலை என்பதால், அவனால் கைக்கொள்ளப்பட்ட அந்த அம்சத்தில் எம்பெருமானார் ஈடுபட்டு, அந்த அவதாரத்தை துதித்தார் என்று கூறினேன் அல்லாமல், அதனை உபாஸனை செய்கிறார் என்று கூறவில்லை; ஆகவே எந்தவிதமான முரண்பாடும் இல்லை. பெரியாழ்வார் திருமொழி (5-4-6) – மன்னடங்க மழு வலங்கைக் கொண்ட விராம நம்பீ - என்றும், பெரியதிருமொழி (5-3-1) – வென்றி மாமழுவேந்தி முன் மண்மிசை மன்னரை மூவெழுகால் கொன்ற தேவா - என்றும் பலவிதமாக மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் அருளிச்செய்தமையும் அவனுடைய “அடியார்களின் விரோதிகளை விலக்குதல்” என்ற தன்மைக்குத் தோற்றுப் போனதால் ஆகும். (புனிதன்) – ஸர்வேச்வரனை எப்போதும் போற்றியபடி உள்ளதன் காரணமாகத் தூய்மையான தன்மை உள்ளவராக, தன்னை அண்டுபவர்களையும், ந்யாஸ விம்சதி (2) – ஆத்ம ஸாம்ய அவஹத்வாத் – தன்னை ஒத்த நிலையை ஆத்மாவுக்கு - என்று கூறப்படுவதான தனக்கு நிகரான நிலையை அடையும்படிச் செய்யவல்லவராக உள்ள

தூய்மையானவர். (புவநம் எங்கும் ஆக்கிய) - இப்பார் முழுதும் போர்த்தான் புகழ் கொண்டு - என்பதற்கு ஏற்ப, இந்த லோகம் முழுவதும் பரவி நிற்கும்படியான கீர்த்தி நிரம்பியவராகிய.

வ்யாக்யானம் - (இராமாநுசன்) எம்பெருமானாரை. (அடைந்தபின்) ஆச்ரயித்த பின்பு. இங்கே, "அடைந்ததற் பின்" என்றும் பாடம் சொல்லுவர்கள்; ஆகிலும் அர்த்த பேதமில்லை. (இனி மற்றொன்றை) மேலுள்ள காலமெல்லாம் வேறொரு விஷயத்தை. (என் வாக்குரையாது என் மநம் நினையாது) முற்காலமெல்லாம் அஸத்ய பாஷ்ஷணத்தையும் அஸத் கீர்த்தநத்தையும் பண்ணிக் கொண்டு போந்தவென்னுடைய வாக்கானது, எம்பெருமானாரை ஆச்ரயித்த பின்பு அவருடைய திவ்யகுணங்களையே கீர்த்தியா நிற்குமித்தனை யொழிய வேறொன்றைக் கீர்த்திக்கமாட்டாது. முற்காலமெல்லாம் பாபசிந்தையைத்தானே பண்ணிக்கொண்டு போந்த என் மநஸ்ஸானது அவரை ஆச்ரயித்த பின்பு அவருடைய திவ்யகுணங்களிலே யீடுபட்டு, ஸர்வதா அவை தன்னை மநநம் பண்ணிக் கொண்டிருக்கும் மித்தனை யொழிய வேறொன்றை ஸ்மரிக்கமாட்டாதென்று அருளிச்செய்தாராய்த்து. "த்ருணீ க்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" என்னக்கடவதிறே.

விளக்கம் - (இராமாநுசனை) - எம்பெருமானாரை. (அடைந்த பின்) – அண்டி நின்ற பின்னர். இங்கு "அடைந்ததன் பின்" என்றும் சிலர் படிப்பார்கள். இரண்டிற்கும் பொருளில் வேறுபாடு இல்லை. (இனி மற்றொன்றை) - இனி உள்ள காலம் முழுவதிலும் இது அல்லாமல் வேறு விஷயத்தினை. (என் வாக்கு உரையாது என் மனம் நினையாது) – முன்பு, உண்மைக்குப் புறம்பானவற்றைக் கூறியபடியும், பொருளாகவே மதிக்கத்தகாத பலவற்றையும் பொருள் என்று உரைத்தபடியும் எனது காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது எம்பெருமானாரை அண்டிய பின்னர், அவருடைய திவ்யமான திருக்கல்யாண குணங்களை மட்டுமே புகழ்ந்தபடி இருப்பேன் அல்லாமல், வேறு எதனையும் புகழ மாட்டேன். முன்பு பாபங்கள் நிறைந்த சிந்தனைகளால் மட்டுமே நிரப்பப்பட்ட எனது மனம், எம்பெருமானாரை அண்டிய பின்னர், அவருடைய திருக்கல்யாண குணங்களில் மட்டுமே ஈடுபட்டு, எப்போதும் அவற்றையே எண்ணியபடி இருக்கும் அல்லாமல், மற்ற எதனையும் எண்ணாது என்று அருளிச்செய்கிறார். த்ருணீ க்ருத விரிஞ்சாதி நிரங்குச நிபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: -

எம்பெருமானாருடைய தாமரை போன்ற திருவடிகளை அண்டி நிற்பவர்கள், நான்முகன் முதலான பட்டங்களைக் கூட அற்பமாகவே எண்ணுவர் - என்று கூறியது காண்க.

57. மற்றொரு பேறுமதியாது அரங்கன் மலரடிக்கு ஆள்
உற்றவரே தனக்கு உற்றவராக் கொள்ளும் உத்தமனை
நல்தவர் போற்றும் இராமானுசனை இந்நானிலத்தே
பெற்றனன் பெற்றபின் மற்றறியேன் ஒரு பேதைமையே

விளக்கவுரை – வேறு எந்தவிதமான தேவதைகளையும் அணுகாமல், அவை மூலம் பெறும் பயன்கள் எதனையும் விரும்பாமல், திருவரங்கத்தை தான் வாசம் செய்யும் இருப்பிடமாகக் கொண்ட பெரியபெருமாளின் திருவடிகளை மட்டுமே சிலர் அண்டியபடி உள்ளனர். இப்படிப்பட்டவர்களை தனது அனைத்து விதமான உறவினர்கள் என்று கொள்ளும் உத்தமராக எம்பெருமானார் உள்ளார். இப்படிப்பட்ட எம்பெருமானாரை அறிவில் சிறந்தவர்கள் – ஸ்ரீமாந் அவிரபூத் பூமௌ ராமானுஜ திவாகர:, ராமானுஜபத அம்போஜ ஸமாச்ரயண சாலிந:, ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு, ஜயதி லக்ஷ்மணோயம் முனி: வாழி யதிராசன் வாழி யதிராசன் – என்று பலவாறு போற்றியபடி உள்ளனர். இந்த எம்பெருமானாரை, இருள் தரு மா ஞாலம் என்றுள்ள இந்த உலகத்தின் நான் அண்டினேன். இவ்விதமாக அவரை அடைந்த பின்னர், எனது அறியாமை அனைத்தும் எங்கு சென்றது என்பதை நான் அறியவில்லை.

அவதாரிகை – "இனியென் வாக்குரையாது என் மநம் நினையாது மற்றொன்றையே" என்றீர்; "இருள் தரும் மா ஞாலத்திலே" இந்நாளிலே இந்த நியமம் நிலை நிற்குமோ, "சஞ்சலம் ஹி மந:" என்று மநஸ்ஸு ஒரு விஷயத்தில் தானே ஸர்வகாலமும் நிற்கமாட்டாதிறே; ஆகையாலே மற்றொரு காலத்திலே மனஸ்ஸு வ்யபிசரித்து அஞ்ஞாநத்தை விளைத்தாலோ என்று ஆக்ஷேபித்தவர்களைக் குறித்து, "நீங்கள் சொன்னதே ஸத்யம். ஆகிலும் நான் கீழே இழந்து போன நாள் போலேயன்று இந்நாள், இப்போது தந்தாமுடைய பரமைகாந்த்யத்தாலே ஸ்ரீரங்கநாதனுடைய பரம போக்யமான திருவடிகளுக்கு அடிமைப்படுகையே பரமபுருஷார்த்தமென்று அத்யவஸித்திருக்கு மவர்களையே தமக்கு பந்துபூதராக அங்கீகரித்துக்கொண்டு, ப்ரபந்ந குலோத்தேச்யராய் ஸர்வதபஸ்ஸுக்களிலும் வைத்துக்கொண்டு விலக்ஷண தபஸ்ஸான சரணாகதி

தர்மத்திலே நிஷ்டரானவர்கள் தம்முடைய வைபவத்தைச் சொல்லிப் புகழும்படியான எம்பெருமானாரை இந்த லோகத்திலே லபித்தேன்; ஆனபின்பு, ப்ராப்தாப்ராப்த விவேகமின்றிக்கே கண்டதொன்றை விரும்பக் கடவதான அஞ்ஞாநமானது என்னிடத்திலே சேரக்கண்டிலேனென்கிறார்.

விளக்கம் – திருவரங்கத்தமுதனாரிடம் சிலர், "நீவிர் கடந்த பாசுரத்தில் - இனியென் வாக்குரையாது என் மநம் நினையாது மற்றொன்றையே - என்று உரைத்தீர்கள். ஆனால் திருவாய்மொழி (10-6-1) – இருள் தருமா ஞாலம் - என்பதற்கு ஏற்ப உள்ள இந்த உலகத்தில், இந்தக் கலிகாலத்தில், இப்படி ஒரு உறுதியானது நிலையாக நிற்குமோ? கீதை (6-34) – சஞ்சலம் ஹி மந: - மனம் நிலையாக நிற்காமல் அலைந்தபடி உள்ளதாகும் - என்பதற்கு ஏற்ப மனம் என்பது ஒரு விஷயத்தில் எப்போதும் நிலையாக இருக்காது அல்லவோ? ஆகவே வேறு ஒரு காலகட்டத்தில் உம்முடைய மனம் வேறு விஷயத்தில் திரும்பிச் சென்று உமக்கு அறியாமையை ஏற்படுத்தினால் என்ன செய்வீர்?", என்று கேட்டனர். அவர்களிடம், "நீங்கள் உரைப்பது உண்மையே ஆகும். ஆனால் இதுவரை நான் கழித்த நாள்கள் போன்று அல்லாமல், இந்த நாள்களில் தங்களுடைய பரமைகாந்தித் தன்மையால் ஸ்ரீரங்கநாதனுடைய மிகவும் இனிமையான திருவடிகளுக்கு அடிமைப்படுதல் என்பதை மட்டுமே மிகவும் உயர்ந்த புருஷார்த்தம் என்று ஈடுபட்டுள்ளவர்களை மட்டுமே தனது உறவினர்களாக ஏற்றுக்கொண்டு, ப்ரபந்ந குலத்தில் மட்டுமே தனது குறிக்கோளைக் கொண்டவராக இருந்து, அனைத்துவிதமான தவங்களிலும் மேன்மையான தவமாக உள்ள சரணாகதி தர்மத்தில் நிலைநிற்பவர்கள் அனைவரும் தனது வைபவத்தைக் கூறி புகழும்படியாக உள்ள எம்பெருமானாரை அண்டியுள்ளேன். இவ்விதம் நான் செய்த பின்னர், அடையவேண்டியது எது அடையவேண்டாதது எது என்று பிரித்து அறியக்கூடிய ஞானம் இன்றி, காண்பவை அனைத்தையும் விரும்புவதான அறியாமை என்னிடம் வராது", என்கிறார்.

வ்யாக்யானம் – (மற்றொரு பேறுமதியாது) – "ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: மாயயாபஹ்ருத ஜ்ஞாநா ஆஸுரம் பாவமாச்ரிதா:", "கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரம் ஈச்வரம் நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷாண்டோபஹதா ஜநா:", "காமை: தை: தை: ஹ்ருத ஜ்ஞாநா: ப்ரபத்யந்தே அந்யதேவதா:" என்று நிஷேதித்தபடியே ஸத்துக்களுடைய உபதேசாதிகளாலே தெளிந்துகொண்டு, "அநந்யாச்சிந்தயந்தோ மாம்", "வ்யவஸாயாத்மிகா புத்திர் ஏகேஹ குருநந்தந", "மயி

சாநந்ய யோகேந பக்திர் அவ்யபிசாரிணீ” என்கிறபடியே ததேக நிஷ்டராய், “ஏகாந்தீது விநிச்சித்ய தேவதா விஷயாந்தரை: பக்த்யுபாயம் ஸமம் க்ருஷ்ண ப்ராப்தெள க்ருஷ்ணைக ஸாதந:” என்னும்படி தேவதாந்தர மந்த்ராந்தர ப்ரயோஜநாந்தரங்களை ஸ்மரியாத பாரமைகாந்த்யத்தாலே. மதிக்கை – விரும்புகை.

விளக்கம் – (மற்றொரு பேறுமதியாது) - கீதை (7-15) – ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: மாயயாபஹ்ருத ஜ்ஞாநா ஆஸுரம் பாவமாச்ரிதா: - இந்த உலகில் உள்ள மூடர்கள், பாபங்கள் செய்பவர்கள், அழிக்கப்பட்ட அறிவு உடையவர்கள் ஆகியோர் என்னைச் சரணம் புகுவதில்லை. காரணம், மாயையால் அவர்களுடைய அறிவு அழிக்கப்பட்டு, அதனால் அசுரத்தன்மை அடைகிறார்கள் – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-41) – கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரம் ஈச்வரம் நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷாண்டோபஹதா ஜநா: - மைத்ரேயரே! கலியுகத்தில், இந்த ஜகத்தின் நாதனும், எங்கும் நிறைந்திருப்பவனும், எல்லாரையும் படைத்தவனும் ஈச்வரன் என்ற பெயரை உடையவனும் ஆகிய மஹாவிஷ்ணுவை, பாஷண்டிகளால் கெடுக்கப்பட்ட மக்கள் வழிபடுவதில்லை – என்றும், கீதை (7-20) – காமை: தை: தை: ஹ்ருத ஜ்ஞாநா: ப்ரபத்யந்தே அந்யதேவதா: - பலவிதமான காமங்கள் காரணமாக இந்த உலகில் உள்ள பலரும் தங்களது ஞானம் அபகரிக்கப்பட்டவர்களாக, (என்னை அல்லாமல்) மற்ற தேவதைகளை ஆராதிக்கிறார்கள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப விலக்கப்பட்டவற்றைத் தெரிந்து கொண்டு, ஸாதுக்களுடைய உபதேசங்கள் மூலம் மனமும் அறிவும் ஒளியும் பெற்று, கீதை (7-22) – அநந்யாச்சிந்தயந்தோ மாம் – மற்ற சிந்தனை எதிலும் நாட்டல் இல்லாமல் – என்றும், கீதை (2-41) – வ்யவஸாயாத்மிகா புத்திர் ஏகேஹ குருநந்தந – அர்ஜுனா! சாஸ்திரங்கள் கூறும் அனைத்து வகையான கர்மங்களும் இயற்றப்படும்போது, ஒரே சிந்தனையுடன் ஒரே குறிக்கோளுடன் மட்டுமே புத்தி காணப்படுகிறது – என்றும், கீதை (13-10) – மயி சாநந்ய யோகேந பக்திர் அவ்யபிசாரிணீ – என்னைத் தவிர வேறு எதனையும் சிந்திக்காக யோகத்தின் மூலம், மாறாத பக்தி – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸர்வேச்வரனை மட்டுமே சிந்தையில் நிலைநிறுத்தியபடி உள்ளவராக, ப்ருஹத் உபநிஷத் – ஏகாந்தீது விநிச்சித்ய தேவதா விஷயாந்தரை: பக்தியுபாயம் ஸமம் க்ருஷ்ண ப்ராப்தெள க்ருஷ்ணைகஸாதந: - பரமைகாந்தி ஒருவன் கண்ணனை மட்டுமே உபாயமாகக் கொண்டிருக்கக்கூடும். அப்படிப்பட்ட அவன் அந்த க்ருஷ்ணனை அடையும் விஷயத்தில் மற்ற தேவதைகளைத் தனது ஐந்து புலன்களால்

அடையப்படும் இன்பங்களுக்குச் சமமாக வைத்து (அதாவது ஒதுக்கி), பக்தி என்னும் உபாயத்தைக் கைக்கொள்வானாக - என்பதற்கு ஏற்ப மற்ற தேவதைகளையும், மற்ற மந்த்ரங்களையும், மற்ற பலன்களையும் எண்ணிப் பார்க்காத பரமைகாந்தித் தன்மையால்.

வ்யாக்யானம் – (அரங்கன் மலரடிக்கு) "ரங்கம் ரங்கம் இதி ப்ரூயாத் யோஜநாநாம் சதைரபி முச்யதே ஸர்வபாபேப்யோ விஷ்ணுலோகம் ஸ கச்சதி", "இதம் ஸ்ரீரங்கம் த்யஜதாமிஹாங்கம்" என்னும்படி ப்ரஸித்த தமமான ஸ்ரீரங்கநகரத்தைத் தனக்கு இருப்பிடமாகவுடையனாய் அதுவே நிரூபகமாம்படி எழுந்தருளியிருக்கிற ஸ்ரீரங்கநாதனுடைய "ஸர்வே வேதா யத் பதமாமநந்தி", "விஷ்ணோ: பதே பதமே மத்வ உத்ஸ:", "கதாபுநச் சங்கரதாங்க கல்பக த்வஜ அரவிந்த அங்குச வஜ்ரலாஞ்சநம் த்ரிவிக்ரம த்வத் சரணாம்புஜ த்வயம் மதீய மூர்த்தாநம் அலங்கரிஷ்யதி", "கதாஹம் பகவத் பாதாம்புஜ த்வயம் சிரஸா ஸங்க்ரஹிஷ்யாமி" என்றும் சொல்லுகிறபடியே வேதாந்த வாக்ய ஸர்வஸ்வமாய், நித்ய நிரதிசய போக்யமாய், ஸர்வ லஷணோ பேதமாய், அத்யந்த ப்ரார்த்தநீயமாய், புஷ்பஹாஸ ஸுகுமாரமாய், ஸேவித்தவர்களை அநந்யார்ஹராம்படி பண்ணக்கடவதான திருவடிகளுக்கு.

விளக்கம் – (அரங்கன் மலரடிக்கு) - ரங்கம் ரங்கம் இதி ப்ரூயாத் யோஜநாநாம் சதைரபி முச்யதே ஸர்வபாபேப்யோ விஷ்ணுலோகம் ஸ கச்சதி – "ரங்கம் ரங்கம்" என்று உச்சரித்தபடி உள்ள இடத்திலிருந்து நூறு யோஜனை பரப்பளவில் உள்ளவர்கள் கூட தங்களுடைய பாபங்கள் அனைத்தும் நீங்கப்பெற்று பரமபதம் செல்வர் – என்றும், ஆதிசங்கரரின் ஸ்ரீரங்கநாத அஷ்டகம் – இதம் ஸ்ரீரங்கம் த்யஜதாமிஹாங்கம் – இந்த ஸ்ரீரங்கத்தில் தங்களுடைய சரீரத்தை விட்டவர்கள் (மீண்டும் திரும்புவதில்லை) – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைவருக்கும் அறிந்த இடமான திருவரங்கத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டவனும், அந்தத் திருவரங்கத்தைக் கொண்டு மட்டுமே தன்னை அறியலாம்படி உள்ளவனும் ஆகிய ஸ்ரீரங்கநாதனுடைய. ஸர்வே வேதா யத் பதமாமநந்தி – அனைத்து வேதங்களும் எந்தப் பரம்பொருளிடம் ஒருமுகமாக ஆகின்றனவோ – என்றும், ஸ்ரீவிஷ்ணுஸூக்தம் (3) – விஷ்ணோ: பதே பதமே மத்வ உத்ஸ: - விஷ்ணுவின் உயர்ந்த திருவடியில் அமிர்த தேன் பெருகும் இடத்தை அடைவேனாக – என்றும், ஸ்தோத்ரரத்னம் (32) – கதாபுநச் சங்கரதாங்க கல்பக த்வஜ அரவிந்த அங்குச வஜ்ரலாஞ்சநம் த்ரிவிக்ரம த்வத் சரணாம்புஜ த்வயம் மதீய மூர்த்தாநம் அலங்கரிஷ்யதி –

மூன்று அடிகள் கொண்டு இந்த உலகங்களை அளந்தவனே! சங்கு, சக்கரம், கற்பகவ்ருக்ஷம், கொடி, தாமரை, அங்குசம், வஜ்ராயுதம் ஆகியவற்றை அடையாளங்களாகக் கொண்ட உன்னுடைய தாமரை போன்ற திருவடிகள் இரண்டும் எனது தலையை எப்போது அலங்கரிக்கப் போகின்றன – என்றும், கதாஹம் பகவத் பாதாம்புஜ த்வயம் சிரஸா ஸங்க்ரஹிஷ்யாமி – பகவானின் தாமரை போன்ற இரண்டு திருவடிகளை நான் என்று எனது தலையில் ஏற்கப்போகிறேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப வேதாந்த வாக்கியங்களுக்கு அனைத்துவிதமான செல்வமாகவும், எப்போதும் எல்லையற்ற இன்பம் உள்ளதாகவும், அனைத்தையும் விட வேறுபட்ட மேன்மை உள்ளதாகவும், எல்லை இல்லாதபடி வேண்டத்தக்கதும், மலர்களைக் காட்டிலும் மென்மை உடையதும், தன்னை வணங்கியவர்களை வேறு எதனையும் நாடாமல் தன்னை மட்டுமே அண்டி நிற்கும்படிச் செய்வதும் ஆகிய திருவடிகளுக்கு.

வ்யாக்யானம் – (ஆளுற்றவரே) "தாஸோஹம் வாஸுதேவஸ்ய", "லக்ஷ்மீபர்த்துர் நரஹரிதநோர் தாஸ தாஸஸ்ய தாஸ:", "பொன்னாழிக்கை என்னம்மான் நீக்கமில்லா அடியார்" என்றும் சொல்லுகிறபடியே வழுவிலா வடிமைகளில் அந்வயித்து, "முகில்வண்ணன் அடியை அடைந்து அருள் சூடி உய்ந்தவன்", "ஆதலால் வந்து உன் அடியிணை அடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே" என்றும் அதுவே பரமபுருஷார்த்த மென் றத்யவஸித்திருக்கிற பராங்குச பரகாலாதிகளே. **(தனக்குற்றவராகக் கொள்ளும்)** "பாந்தவா விஷ்ணு பக்தாச்ச", "மாதா பிதா யுவதய: தநயா விபூதிஸ் ஸர்வம்" என்றும் சொல்லுகிறபடியே மாதா பித்ரு ப்ரப்ருதியான ஸர்வவித பந்துக்களாக அநுஸந்தித்திருக்குமவராய். **(உத்தமனை)** கீழ்ச் சொன்ன அதிகாரிகளிலெல்லாரிலும் வைத்துக் கொண்டு உத்தமாதிகாரியாய். ஆசார்யரா யென்றபடி.

விளக்கம் – (ஆளுற்றவரே) - நாரதீய புராணம் – தாஸோஹம் வாஸுதேவஸ்ய – வாஸுதேவனுடைய அடிமை நான் – என்றும், லக்ஷ்மீபர்த்துர் நரஹரிதநோர் தாஸ தாஸஸ்ய தாஸ: - மஹாலக்ஷ்மியின் நாயகனான நரஸிம்ஹனுடைய அடிமைக்கு அடிமையாக உள்ளவர்களுக்கு நான் அடிமை – என்றும், திருவாய்மொழி (8-10-10) – பொன்னாழிக்கை என்னம்மான் நீக்கமில்லா அடியார் - என்றும் கூறுவதற்கு ஏற்ப

அனைத்துவிதமான கைங்கர்யங்களிலும் எப்போதும் மாறாதபடி நின்று, திருவாய்மொழி (7-2-11) – முகில்வண்ணன் அடியை அடைந்து அருள் சூடி உய்ந்தவன் – என்றும், பெரியதிருமொழி (5-8-7) – ஆதலால் வந்து உன் அடியிணை அடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே – என்றும் கூறுவதற்கு ஏற்ப இதுவே மிகவும் உயர்ந்த புருஷார்த்தம் என்று ஈடுபட்டு நிற்கின்ற நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் போன்றவர்கள் மட்டுமே, (தனக்கு உற்றவராகக் கொள்ளும்) - பாந்தவா விஷ்ணு பக்தாச்ச – விஷ்ணு பக்தர்களே உறவினர்கள் - என்றும், ஸ்தோத்ரரத்னம் (5) – மாதா பிதா யுவதய: தநயா விபூதிஸ் ஸர்வம் – தாய், தந்தை, மாதர், மக்கள், செல்வம், மற்றுமுள்ள அனைத்தும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப தாய், தந்தை, அனைத்துவிதமான உறவு என்று எண்ணியபடி உள்ளவர். (உத்தமனை) - மேலே கூறப்பட்ட பலவிதமான ப்ரபந்நர்களைக் காட்டிலும் மிகவும் உயர்ந்த உத்தமர், ஆசார்யனாக உள்ளவர்.

வ்யாக்யானம் – (நற்றவர் போற்றும்) தவம் –தபஸ்ஸு. நல்தவம் - விலக்ஷணமான தபஸ்ஸு. “தஸ்மாந் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தம் ஆஹு:” என்றும், “ஸத்கர்மநிரதா: சுத்தா: ஸாங்க்யயோக விதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி” என்றும் ச்ருதி ஸ்ம்ருதிகளாலே ப்ரசம்ஸிக்கப்பட்டதாய், அர்ஜுனனுக்கு மோக்ஷோபாயங்களை உபதேசிக்குமிடத்தில் முந்துற முன்னம் கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோக அவதார ரஹஸ்ய புருஷோத்தமவித்யா நாமஸங்கீர்த்தன ரூப இதரோபாயங்களை உபதேசித்தவாறே அவற்றைக் கேட்டு சோகாவிஷ்டனானவனைக் குறித்து அவனுடைய சோகாபநோதநார்த்தமாக உபதேசிக்கப்பட்ட அர்த்தமாய், அத ஏவ ஸுசகமாய், அவிளம்ப்ய பலப்ரதமாய் ,ஸ்வரூபாநுரூபமாய், அத்யந்த விலக்ஷணமான சரணாகதி தர்மத்திலே அத்யபிநிவிஷ்டரான ஆழ்வான், ஆண்டான், பிள்ளான், எம்பார் கிடாம்பியாச்சான் முதலான முதலிகளையும் லோகத்தாரையும் உத்தரிப்பிக்கைக்காக அவதரித்தவருடைய வைபவத்தையறிந்து, “ந சேத் ராமாநுஜேத் யேஷா சதுரா சதுரக்ஷரீ காமவஸ்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச:” என்றும், “புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்த க்ஷயாயச ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர:” என்றும், “த்ருணீ க்ருத விரிஞ்சாதி நிரங்குச நிபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:” என்றும், “ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு: ஸ ஏவ ஸர்வலோகாநாம் உத்தர்தா நாத்ர ஸம்சய:” என்றும், “குத்ருஷ்டி குஹநா முகே நிபதத:

பரப்ரஹ்மண: கர க்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மண: அயம் முநி:" என்றும், "ச்ருத்யக்ர வேத்ய நிஜ திவ்ய குணஸ்வரூப: ப்ரத்யக்ஷதாம் உபகத: இஹ ரங்கராஜ: வச்ய: ஸதா பவதி தே யதிராஜ தஸ்மாத் சக்த: ஸ்வகீய ஜந பாப விமோசநே த்வம்" என்றும், "வாழி எதிராசன் வாழி எதிராசன்" என்றும் சொல்லிப் புகழும்படி எழுந்தருளியிருக்கிற.

விளக்கம் – (நற்றவர் போற்றும்) - தவம் என்றால் தபஸ். நல்தவம் என்றால் மிகவும் மேன்மையான தபஸ். தைத்திரீய உபநிஷத் - தஸ்மாந் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தம் ஆஹு: - தவங்களைக் காட்டிலும் ந்யாஸம் (ப்ரபத்தி) மிகவும் உயர்ந்தது – என்றும், லக்ஷ்மீ தந்த்ரம் (17-63) - ஸத்கர்மநிரதா: சுத்தா: ஸாங்க்யயோக விதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி - தூயகர்மங்களை மட்டுமே செய்பவன், ஸாங்க்யம் மற்றும் யோகம் ஆகியவற்றை இயற்றுபவன் ஆகியோரை, இவ்விதம் என்னைச் சரணம் அடைந்தவனில் கோடியில் ஒரு பங்கு கூட ஒப்பு நோக்க இயலாது – என்றும் ச்ருதி மற்றும் ஸ்ம்ருதிகளில் கொண்டாடப்பட்டதாகவும்; அர்ஜுனனுக்கு மோக்ஷத்திற்கான உபாயத்தினை உபதேசம் செய்வதற்கு முன்பாக, கர்மயோகம் – ஞானயோகம் – பக்தியோகம் – தனது அவதாரத்தின் பின்னணி - புருஷோத்தம வித்யை – நாம ஸங்கீர்த்தனம் போன்ற பல ரூபங்களில் உள்ள மற்ற உபதேசங்கள் செய்யப்பட்டபோதிலும் அவனுடைய மனக்குழப்பம் மாறாமல் இருந்ததால் அதனை மாற்றும் விதத்தில் உபதேசம் செய்யப்பட்ட ஆழ்பொருளைக் கொண்டதும்; இதனால் எல்லையற்ற சுகமானதும்; தாமதம் ஆகாமல் விரைந்து பலன் தரவல்லதும்; ஆத்மஸ்வரூபத்திற்கு ஏற்றதும்; மிகவும் மேன்மையாக உள்ளதும் ஆகிய சரணாகதி. இத்தகைய சரணாகதி தர்மத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாகிய கூரத்தாழ்வான், முதலியாண்டான், திருக்குருகைப்பிரான்பிள்ளான், எம்பார், கிடாம்பியாச்சான் போன்ற சிஷ்யர்களையும் இந்த உலகில் உள்ள மற்ற அனைவரையும் கரை சேர்ப்பதற்காக அவதரித்த எம்பெருமானாருடைய வைபவத்தை நன்றாக அறிந்த கொண்டு. அதன் காரணமாகப் பலரும், ந சேத் ராமாநுஜேத் யேஷா சதுரா சதுரக்ஷரீ காமவஸ்த்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச: - "ராமாநுஜ" என்னும் நான்கு எழுத்துகள் கொண்ட மந்த்ரம் இல்லை என்றால், புழு போன்ற அற்பனாகிய என் போன்றவர்களுடைய கதி என்னவாயிருக்கும் - என்றும், புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்த க்ஷயாயச ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர: - இராமானுஜர் என்னும் சூரியம் உதிக்கும்போது, பாபம் என்னும் இருள் நீங்கி, புண்ணியம் என்னும் தாமரை மலர்கிறது – என்றும், த்ருணீ

க்ருத விரிஞ்சாதி நிரங்குச நிபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: - எம்பெருமானாருடைய தாமரை போன்ற திருவடிகளை அண்டி நிற்பவர்கள், நான்முகன் முதலான பட்டங்களைக் கூட அற்பமாகவே எண்ணுவர் – என்றும், ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு: ஸ ஏவ ஸர்வலோகாநாம் உத்தர்தா நாத்ர ஸம்சய: - "யதிராஜராகிய எம்பெருமானாரே இந்த உலகின் குரு என்பது ஸத்யம்" என்று கைகளை உயர்த்தி மூன்றுமுறை கூறுகிறேன்; அவரே இந்த உலகை உயர்த்த வந்தவர் என்பதில் ஐயம் இல்லை – என்றும், யதிராஜ ஸப்ததி (38) - குத்ருஷ்டி குஹநா முகே நிபதத: பரப்ரஹ்மண: கர க்ரஹ விசக்ஷணோ ஜயதி லக்ஷ்மண: அயம் முநி: - பரப்ரஹ்மமானது மாயாவாதிகளின் வாதங்களில் சிக்குண்டது. இவை அனைத்தையும் நீக்கி, பரப்ரஹ்மத்தை மிகவும் எளிதாக உயர்த்த வல்லவராக உள்ள இராமாநுஜர், அனைவரிலும் மேம்பட்டவராகவே உள்ளார் –என்றும், யதிராஜ விம்சதி (17) - ச்ருத்யக்ர வேத்ய நிஜ திவ்ய குணஸ்வரூப: ப்ரத்யக்ஷதாம் உபகத: இஹ ரங்கராஜ: வச்ய: ஸதா பவதி தே யதிராஜ தஸ்மாத் சக்த: ஸ்வகீய ஜந பாப விமோசநே த்வம் - யதிகளின் தலைவனே! வேதங்கள், வேதாந்தங்கள் போன்ற அனைத்தாலும் போற்றப்படுபவனாகவும், திவ்யமான எழிலுடனும், உயர்ந்த திருக்கல்யாண குணங்களுடனும் ஸ்ரீரங்கத்தின் சக்ரவர்த்தியாக ஸ்ரீரங்கநாதன் உள்ளான். இத்தனை வல்லமை கொண்டவனாக உள்ளபோதிலும் அவன் உனக்கு வசப்பட்டவனாகவே உள்ளான். ஆகவே நீ மட்டுமே எனது பாவங்களைப் போக்கி, நற்கதி அருள இயலும் (ஸ்ரீரங்கநாதனால் நேரடியாக இயலாது என்றார்) – என்றும், ஆர்த்தி ப்ரபந்தம் (1) – வாழி எதிராசன் வாழி எதிராசன் - என்றும் பலவிதமாக உரைத்துப் புகழும்படியாக எழுந்தருளியுள்ள.

வ்யாக்யானம் – (இராமானுசனை) – எம்பெருமானாரை. (இந்நானிலத்தே) – "இருள் தருமா ஞால"த்திலே. (பெற்றனன்) ஆச்ரயித்தேன். நிழலும் நீருமில்லாத மருகாந்தரத்திலே தண்ணீர்ப்பந்தல் பெற்றவன் ஹ்ருஷ்டனாமாப்போலே இந்த லோக ஸ்வபாவத்தை யழிய மாறி என்னை உஜ்ஜீவிப்பிக்கும் விஷயத்தைப் பெற்றேனென்று ஹ்ருஷ்டராகிறார் காணும். (பெற்ற பின் மற்றறியேனொரு பேதைமையே) எம்பெருமானாரை ஆச்ரயித்த பின்பு, முன்பு அநாதிகாலமே தொடங்கி ஆவிர்ப்பூதமாயிருக்கிற என்னுடைய தேஹாத்ம ப்ரமமும், ஸ்வ ஸ்வாதந்த்ர்ய ப்ரமமும், அந்ய சேஷத்வ ப்ரமமும், அநுபாயே உபாயத்வ ப்ரமமும் எங்கே சென்றற்றது, கண்டிலேன். (மற்றறியேனொரு பேதைமையே) அஜ்ஞானமானது மநஸ்ஸுக்குத் தோற்றுகிறதில்லை; ப்ரத்யக்ஷமாகக்

காணப்படுகிறதில்லை. ப்ராப்தாப்ராப்த விவேகம் பண்ணாதே கண்டதொன்றிலே மேல் விழுந்து மண்டுகைக்குறுப்பான அஜ்ஞானம் வாஸநையோடே போய்த்தென்றபடி. "த்யஜ பட தூரதனே தாநபாபாந்" என்றாப்போலே அஜ்ஞாநமடங்கலும் தூரதோ நிரஸ்தமென்றதாய்த்து.

விளக்கம் – (இராமாநுசனை) - எம்பெருமானாரை. (இந்நானிலத்தே) - திருவாய்மொழி (10-6-1) – இருள் தருமா ஞாலம் - என்பதற்கு ஏற்ப உள்ள இந்தப் பூமியில். (பெற்றனன்) - அண்டி நின்றேன். நிழலும் நீரும் இல்லாத பாலைவனத்தில், தண்ணீர்பந்தல் கிடைக்கப் பெற்ற ஒருவன் மகிழ்வது போன்று, இந்த உலகில் உள்ள மற்றவர்களிடம் காணப்படும் தன்மைகள் என்னிடமிருந்து அழியும்படியாக என்னை மாற்றி, என்னைக் கரை சேர்க்கவல்ல பொருளை நான் பெற்றேன் என்று மகிழ்கிறார். (பெற்ற பின் மற்றறியேனொரு பேதைமையே) - இப்படியாக எம்பெருமானாரை அடைந்த பின்னர், எல்லையற்ற காலமாக என்னில் ஏற்பட்டதான சரீரமே என் ஆத்மா என்ற மயக்கம், நான் சுதந்திரமானவன் என்ற மயக்கம், நான் மற்றவர்களுக்கு வசப்பட்டவன் என்ற மயக்கம், உபாயம் அல்லாதவற்றை உபாயம் என்று எண்ணும் மயக்கம் ஆகிய அனைத்தும் எங்கு சென்று முடிந்தன என்று அறியவில்லை. (மற்றறியேன் ஒரு பேதைமையே) - அறியாமை என்பது எனது மனதில் அதன் பின்னர் வெளிப்படவில்லை; அதனை எனது கண்களாலும் காண இயலவில்லை. எது அடையத்தக்கது, எது அடையத்தகாதது என்பதான பிரித்து அறியும் ஞானம் இல்லாமல், காண்பவை அனைத்தையும் ஏற்கின்ற நிலைக்கு அடிப்படையான அறியாமை என்பது என்னில் அடியுடன் அகன்றுவிட்டது. ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-7-15) – த்யஜ பட தூரதனே தாநபாபாந் – (யம)தூதனே! பாபம் அற்ற அவர்களை விட்டு தூரமாகச் செல்வாயாக – என்பது போன்று, அறியாமை விலகியவுடன், தாழ்ந்த விஷயங்கள் அனைத்தும் நீக்கப்பட்டன என்று கருத்து.

58. பேதையர் வேதப்பொருள் இதென்று உன்னி பிரமம் நன்றென்று
ஓதி மற்றெல்லா உயிரும் அஃது என்று உயிர்கள் மெய்விட்டு
ஆதிப்பரனோடு ஒன்றாம் என்று சொல்லும் அவ்வல்லல் எல்லாம்
வாதில் வென்றான் எம் இராமானுசன் மெய்ம்மதிக் கடலே

விளக்கவுரை – வேதங்களைப் ப்ரமாணம் என்று ஒப்புக்கொளாத மதம் அன்றி, வேதங்களே ப்ரமாணம் என்று ஏற்றுக்கொள்ளும் தன்மையில் உள்ளபோதும் – யாதவப்ரகாசர் முதலானோர் வேதங்களுக்குத் தவறான பொருள்களைக் கூறியபடி உள்ளனர். இவர்கள் தாங்கள் கூறுவதே வேதங்களின் உண்மையான பொருள் என்று வாதாடியபடி உள்ளனர். ப்ரஹ்மம் மட்டுமே உண்மை என்று கூறி, மற்ற அனைத்து ஆத்மாக்களும் ப்ரஹ்மமே என்று வாதாடுகின்றனர். அனைத்து ஆத்மாக்களும் ப்ரஹ்மமும் ஒன்றே என்பது போன்ற தவறான கருத்துக்களைப் பரப்பியபடியும் வந்தனர். இப்படிப்பட்ட இவர்களின் ஆரவாரம் நிறைந்த வாதங்கள் அனைத்தையும், இந்த உலகைக் காப்பாற்றும் விதமாக, தனது வாதம் மூலம் எம்பெருமானார் வென்றார். இவ்விதமாக இவர்களை வென்ற நமது எம்பெருமானார், உண்மையான ஞானம் நிரம்பிய கடலாகவே உள்ளார்.

அவதாரிகை – கீழ் பலவிடங்களிலும், வேத பாஹ்ய ஸமயங்கள் பூலோகத்தில் நடையாடாதபடி எம்பெருமானார் சாஸ்த்ரமுகத்தாலே அவர்களோடே ப்ரஸங்கித்து அவர்களை ஸவாஸநமாக நிரஸித்த வைபவத்தைக் கொண்டாடினார்; இதிலே "கட்டப் பொருளை மறைப்பொருள்" என்று சொல்லுகிற குத்ருஷ்டிகளை வேதாந்த வாக்யங்களாலே ப்ரஸங்கம் பண்ணி ஜயித்தவருடைய வைபவத்தைக் கொண்டாடுகிறார்.

விளக்கம் – இதுவரை பல பாசுரங்களில், வேதங்களை ஏற்காத மதங்கள் இந்த உலகத்தில் இல்லாதபடி எம்பெருமானார் சாஸ்த்ரங்களைக் கொண்டு அவர்களுடன் வாதம் செய்து அவர்கள் அடியுடன் அழித்த வைபவத்தைக் கொண்டாடினார். இந்த பாசுரத்தில் இராமானுச நூற்றந்தாதி (93) – கட்டப்பொருளை மறைப்பொருள் - என்று கூறும் தவறான பார்வை கொண்ட மதங்களை வேதாந்த வாக்கியங்கள் மூலம் வாதம் செய்து வென்ற வைபவத்தைக் கொண்டாடுகிறார்.

வ்யாக்யானம் – (பேதையர்) வேதத்தை ப்ரமாணமென்ன இசையாத சார்வாகாதிகளுடைய ஸம்யஸ்தரான பாஹ்யரைப் போலன்றிக்கே, வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரித்து வைத்தும், அந்த அர்த்த நிரூபணம் பண்ணுகிற வேளையிலே, "அநாதி பாப வாஸநா தூஷிதா சேஷ சேமுஷீகராய்" கொண்டு வேதத்துக்கு தந்தாமுடைய குத்ருஷ்டி

கல்பநங்களான அபார்த்தங்களைச் சொல்லி. "அயதாவத் ப்ரஜாநாதி ... புத்தி: ஸா பார்த்த தாமஸீ" என்கிறபடியே **தம: ப்ரசுரராய்ப் போருகிற சங்கர பாஸ்கர யாதவாதிகளை, "பேதையர்" என்று நிர்த்தேசிக்கிறார். பேதையர் – அஞ்ஞர். (வேதப்பொருளிதென்றுன்னி)** வேதாந்தங்களினுடைய தாத்பர்யார்த்தம் இதுவேயென்று நிரூபித்து. உன்னுதல் – நிரூபித்தல்.

விளக்கம் – (பேதையர்) - வேதங்களை ப்ரமாணம் என்று ஏற்காத சார்வாதிகர்கள் போல வேதங்களை மறுப்பவர்கள் போன்று அல்லாமல், வேதங்களை ப்ரமாணமாக ஒப்புக் கொண்டுள்ளபோதிலும், அதன் பொருளைத் தீர்மானிக்கும்போது, எல்லையற்ற காலமாகச் சேர்க்கப்பட்ட பாவங்களின் வாசனை காரணமாக வேதங்களுக்குத் தாங்கள் விரும்பும் விதத்தில் தங்களுக்குத் தோன்றுகின்ற தவறான பொருள்களைக் கற்பனை செய்து கொண்டு, தவறான பொருள்களைக் கூறியபடி. கீதை (18-31) – அயதாவத் ப்ரஜாநாதி ... (18-32) புத்தி: ஸா பார்த்த தாமஸீ – தவறாக அறியும் அறிவானது தாமஸத்தால் உண்டாகிறது - என்பதற்கு ஏற்ப தாமஸம் அதிகமாக நிறைந்தபடி உள்ள சங்கர, பாஸ்கர, யாதவ ப்ரகாசர் ஆகியவர்களை "பேதையர்" என்று குறிப்பிடுகிறார். பேதையர் என்றால் அறியாமை நிறைந்தவர். (வேதப்பொருள்) -வேதாந்தங்களுடைய உண்மையான ஆழ்பொருள் இதுதான் என்று நிரூபித்து.

வ்யாக்யானம் – (பிரமம் நன்றென்றோதி) ப்ரஹ்மமே ஸமஸ்த ப்ரபஞ்ச விலக்ஷணமென்று அந்த வேதவாக்யங்களாலே ப்ரதிபாதித்து. "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம", "ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத்", "ஏகம் ஏவ அத்விதீயம்", "யத்ர த்வஸ்ய ஸர்வம் ஆத்மைவாபவத்" என்கிற விசிஷ்டைக்ய ப்ரதிபாதகங்களான ச்ருதி வாக்யங்களுக்கு குத்ருஷ்டி கல்பநமாக, "அசேஷ விசேஷ ப்ரத்யநீக சிந்மாத்ரம் ப்ரஹ்ம ஏவ பரமார்த்த:" என்று அபார்த்தங்களைச் சொல்லியென்றபடி. (மற்றெல்லாவுயிருமஃதென்று) ப்ரஹ்மாதிரிக்தமான ஜீவவர்க்கங்க ளடங்கலும் அந்த ப்ரஹ்மத்தினுடைய ப்ரதிபிம்பபூதமாயிருக்கும், ஸ்வாஜ்ஞாநத்தாலே ப்ருதக்பூதமாய்த் தோற்றுகிறதித்தனையென்று, "தததிரேகி நாநாவித ஜ்ஞாத்ரு ஜ்ஞேய தத் தத் க்ருத ஜ்ஞாந பேதாதி ஸர்வம் தஸ்மிந் ஏவ பரிகல்பிதம் மித்யாபூதம்" என்றும், "நிர்விசேஷ சிந்மாத்ரம் ப்ரஹ்ம ஏவ ஸத்யம்" என்றும் தத்வ நிர்ணயத்தைப் பண்ணி என்றபடி.

விளக்கம் – (பிரமம் நன்றென்றோதி) – அனைத்து ப்ரபஞ்சங்களைக் காட்டிலும் ப்ரஹ்மம் வேறுபட்டது, மேன்மையானது என்பதை அந்த வேதாந்தங்கள் மூலமே வெளிப்படுத்தி. சாந்தோக்ய உபநிஷத் (3-14) - ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம – இவை அனைத்தும் ப்ரஹ்மமே, சாந்தோக்ய உபநிஷத் (3-1-6) – ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் – குழந்தாய்! தொடக்கத்தில் ஸத் என்னும் ப்ரஹ்மம் மட்டுமே இருந்தது, சாந்தோக்ய உபநிஷத் (6-2-1) – ஏகம் ஏவ அத்விதீயம் – இரண்டாவது என்பது இல்லாமல் இது மட்டுமே இருந்தது, ப்ருஹத் உபநிஷத் (2-4-14) – யத்ர த்வஸ்ய ஸர்வம் ஆத்மைவாபவத் – எங்கு அனைத்தும் ஆத்மாவாகிவிட்டதோ – என்பது போன்றதான, பரம்பொருளுடன் ஆத்மாவுக்கு உள்ளதான ஸம்பந்தத்தை வெளிப்படுத்தும் ச்ருதி வாக்கியங்களுக்கு, முரண்பாடாகவும் கற்பனையாகவும், அசேஷ விசேஷ ப்ரத்யநீக சிந்மாத்ரம் ப்ரஹ்ம ஏவ பரமார்த்த: – எந்தவிதமான விசேஷங்களும் அற்றதான ஞானமயமாக உள்ள ப்ரஹ்மம் மட்டுமே உண்மையானது - என்று தவறான பொருளைக் கூறி என்றபடி. (மற்றெல்லா உயிரும் அஃதென்று) – ப்ரஹ்மம் தவிர உள்ள மற்ற அனைத்து ஜீவாத்மாக்களும் ப்ரஹ்மத்தின் ப்ரதிபிம்பமாகவே இருக்கும், ப்ரஹ்மம் தனது அறியாமை காரணமாகவே தனித்தனியாகத் தோன்றுகின்றன என்று, தததிரேகி நாநாவித ஜ்ஞாத்ரு ஜ்ஞேய தத் தத் க்ருத ஜ்ஞாந பேதாதி ஸர்வம் தஸ்மிந் ஏவ பரிகல்பிதம் மித்யாபூதம் – பலவிதமான ஞானங்கள் மூலம் தடுமாறி பலவிதமான ஜீவாத்மாக்கள் உள்ளதாய் கற்பனை செய்யப்பட்டு உண்மை அல்லாதவற்றைக் கண்டு மயங்கி - என்றும், நிர்விசேஷ சிந்மாத்ரம் ப்ரஹ்ம ஏவ ஸத்யம் – எந்தவிதமான தன்மைகளும் அற்றதாய், ஞானமயமாக உள்ளதாய் இருக்கின்ற ப்ரஹ்மம் மட்டுமே ஸத்யம் - என்றும் தவறான கருத்துக்களை நிலைநாட்டி.

வ்யாக்யானம் – (உயிர்கள் மெய்விட்டாதிப் பரனோடொன்றாமென்று சொல்லும்) மோக்ஷ நிர்ணயம் பண்ணுகிறவளவிலும் அப்படிப்பட்ட ஜீவ வர்க்கங்களடங்கலும் தேஹாத்யுபாதி விநிர்முக்தமானவாறே, "ப்ரஹ்மவேத ப்ரஹ்ம ஏவ பவதி", "பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேண அபி நிஷ்பத்யதே" **இத்யாதி ச்ருதிகளுடைய தாத்பர்யத்தை யறியமாட்டாதே, அவற்றுக்குக் காரணபூதனான ஸர்வஸ்மாத்பரனோடே ஏகீபவித்திருக்கு மென்கிற அபார்த்தத்தைச் சொல்லும்.**

விளக்கம் – (உயிர்கள்) - மோக்ஷம் குறித்து உரைக்கும்போது ஜீவாத்மாக்கள் அனைத்தும் தங்களுடைய சரீரம் போன்ற இடையூறுகளை விடும்போது, முண்டக உபநிஷத் (3-2) – ப்ரஹ்மவேத ப்ரஹ்ம ஏவ பவதி – ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான் – என்றும், சாந்தோக்ய உபநிஷத் (8-3-4) - பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேண அபி நிஷ்பத்யதே – பரம்பொருளை அடையும் ஜீவன் தனது ஸ்வரூபம் விளங்கப் பெறுகிறான் - என்றும் உள்ள ச்ருதி வாக்கியங்களுடைய தாத்பர்யத்தை அறியாமல் அவற்றுக்குக் காரணப் பொருளாக உள்ளதும் அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளதும் ஆகிய ப்ரஹ்மத்துடன், அனைத்தும் ஒரே பொருள் என்று கூறலாம்படி ஒன்றாகிவிடும் என்னும் தவறான பொருளைக் கூறுகின்ற.

வ்யாக்யானம் – **(அவ்வல்லலெல்லாம்)** – இப்படி சொல்லுகிற குத்ருஷ்டிகளுடைய சுஷ்க தர்க்கங்களுடைய தோஷங்களையெல்லாம். அல்லல் – ஆரவாரம், அதாவது கோஷம். "ஆதிப்பரனோடு" என்று குத்ருஷ்டிகளுடைய பக்ஷத்தைப் பார்த்துச் சொன்ன வார்த்தையன்று, ஒரு ஜகத்தையும் அதுக்கு அவனுடைய காரணத்வத்தையும், ஸர்வமும் பரார்த்தபூதமாய், அவற்றுக்கெல்லாம் பரனாயிருப்பானென்னுமத்தையும் அந்த பக்ஷத்தார் இசையாரிறே. ஆக, ஸ்வஸித்தாந்தாபிப்ராயத்தாலே அருளிச்செய்தாரித்தனை. **(வாதில் வென்றான்)** லோக ரக்ஷணார்த்தமாக வாதம் பண்ணி ஜயித்தருளினார். "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" என்கிற ச்ருதிக்கு - ப்ரஹ்ம சப்தம் ஸமஸ்த கல்யாண குணாத்மகமான வஸ்துவையும், இதம் சப்தமும் ஸர்வ சப்தமும் பரிக்ருச்யமாநமா யிருக்கிற போக்ய போகோபகரண போகஸ்தான போக்த்ருவர்க்க தத்வைவித்யத்தையும் ப்ரதிபாதிக்கக் கடவதாயிருக்கையாலே, "ப்ரஹ்ம மொன்றுமே ஸத்யம், தத் வ்யதிரிக்தமெல்லாம் மித்யாபூதம்" என்கிற சுத்தாத்வைதம் ஸித்தியாதே, சரீரபூதமா யிருக்கிற சேதநாசேதந வர்க்கத்துக்கும் சரீரியான ப்ரஹ்மத்துக்கும் சரீர சரீரி பாவ நிபந்தநமாக ஐக்யம் ஸித்திக்கையாலே விசிஷ்டைக்யமே அர்த்தமென்று சொல்லியும்.

விளக்கம் – (அல்வல்லல் எல்லாம்) – இவ்விதம் கூறுகின்ற பிழையான பார்வைகள் கொண்டவர்களுடைய உலர்ந்த வாதங்கள் அனைத்தின் தோஷங்களையும். ஆனால், "ஆதிபரனோடு = அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ள உயர்ந்தவன்" என்று கடந்த

பத்தியில் வேதத்திற்கு புறம்பாகப் பொருள் உரைப்பவர்களுடைய வாக்கியத்தின் நடுவில், அவர்கள் கூறுவது போன்று அந்தச் சொல்லை வைத்தது சரியோ? ஒரு உலகத்தையும், அதற்கு அவனுடைய காரணமாக உள்ள தன்மையையும், அனைத்தும் அவனுக்கு மட்டுமே வசப்பட்டதாக அவன் அவற்றைக் காட்டிலும் உயர்ந்தவனாக உள்ளதையும் அவர்கள் ஏற்கமாட்டார்கள் அல்லவோ? அதற்குச் சமாதானம் உரைக்கிறார். அந்தச் சொல் அவர்கள் கூறியதாக இவர் உரைக்கவில்லை; தனது ஸித்தாந்தத்தைக் கருத்தில் கொண்டே உரைத்தார். (வாதில் வென்றான்) – இந்த உலகத்தினைக் காப்பாற்றும் விதமாக அவர்களுடைய வாதங்கள் அனைத்தையும் வென்றார். சாந்தோக்ய உபநிஷத் (3-14) - ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம – இவை அனைத்தும் ப்ரஹ்மமே - என்ற வேதவாக்கியத்திற்கு "ப்ரஹ்மம மட்டுமே உண்மை, ப்ரஹ்மத்தை விடுத்து உள்ள மற்ற அனைத்தும் உண்மையானவை அல்ல" என்று அத்வைதிகள் உரைத்தனர்; ஆனால் இந்த வரியில் உள்ள "ப்ரஹ்மம்" என்ற பதம் அனைத்துவிதமான திருக்கல்யாணகுணங்கள் பொருந்தியதும், அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளதும் ஆகிய வஸ்துவைக் குறிக்கும் என்றும், "இதம், ஸர்வம்" ஆகிய இரண்டு பதங்களும் "இன்பங்கள், இன்பம் அளிக்கவல்ல கருவிகள், இன்பம் அளிக்கவல்ல இடங்கள், இன்பத்தை அனுபவிக்கும் ஜீவாத்மாக்கள்" ஆகியவற்றைக் குறிக்கும் என்றும் உணர்ந்து, மேலே உள்ள அத்வைத பொருள் இந்த வரிக்கு ஏற்பட்டுவிடாமல், ப்ரஹ்மத்தின் சரீரமாகவே உள்ள அனைத்து சேதன அசேதனங்கள் மற்றும் அவற்றைச் சரீரமாகக் கொண்ட ப்ரஹ்மம் - இவற்றுக்கு இடையே "சரீரத்தை உடையவன் - சரீரம்" என்ற ஸம்பந்தமே வெளிப்படுகிறது என்று கூறி, இந்தப் பொருளே அந்த வாக்கியத்தின் பொருள் என்றார்.

வ்யாக்யானம் – "ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத், ஏக மேவ அத்விதீயம்" என்கிற ச்ருதிக்கு, "அவ்யக்தம் அக்ஷரே லீயதே அக்ஷரம் அக்ஷரம் தமஸி லீயதே தம: பரே தேவ ஏகீ பவதி" என்கிறபடியே கல்பாதியிலே ஸூக்ஷ்ம சிதசிச்சரீரகனாய் ஒருவனே யிருந்தானென்றும், காணாத மதத்திலே ஒரு கார்யத்தைக் குறித்து அநேக காரணங்களுண்டாயிருக்கிறாப்போலே இந்த ஜகத் ரூப கார்யத்துக்கும் அவித்யை யொழிய வேறொரு காரணாந்தரம் வேண்டாதபடி தானே ஸர்வவித காரணங்களுமா யிருக்கையாலே அபிந்ந நிமித்தகோபாதாந காரணமாயிருக்கும் என்றும், அக்ஷரார்த்தத்தை ப்ரதிபாதித்தும்.

விளக்கம் – அடுத்து, சாந்தோக்ய உபநிஷத் (3-1-6) – ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் – குழந்தாய்! தொடக்கத்தில் ஸத் என்னும் ப்ரஹ்மம் மட்டுமே இருந்தது – என்றும், சாந்தோக்ய உபநிஷத் (6-2-1) – ஏகம் ஏவ அத்விதீயம் – இரண்டாவது என்பது இல்லாமல் இது மட்டுமே இருந்தது – என்றும் உள்ள வேதவரிக்கு விளக்கம் கூறினார். எவ்விதத்தில்? ஸுபால உபநிஷத் (2) – அவ்யக்தம் அக்ஷரே லீயதே அக்ஷரம் அக்ஷரம் தமஸி லீயதே தம: பரே தேவ ஏகீ பவதி – அவ்யக்தம் அக்ஷரத்தில் லயிக்கிறது, அக்ஷரம் தமஸ்ஸில் லயிக்கிறது, தமஸ் ஒரே தேவனில் லயிக்கிறது - என்பதற்கு ஏற்ப, கல்பத்தின் தொடக்கத்தில் சித் மற்றும் அசித் ஆகிய அனைத்தும் ஸூக்ஷ்ம சரீரம் கொண்டுள்ளபோது, அவற்றைத் தனது சரீரமாகக் கொண்டு இவன் மட்டுமே இருந்தான் என்றும்; இந்த உலகம் உண்டாவதற்கு அவித்யை மட்டுமே காரணம் என்ற வாதத்தினைத் தள்ளி, காணாத மதத்தில் ஒரு கார்யப்பொருள் உண்டாகப் பல காரணப்பொருள்கள் இருக்கலாம் என்ற கருத்தை சற்றே ஏற்று, இப்படிப் பல காரணப்பொருள்கள் இருத்தல் வேண்டியதில்லை என்று தானே அனைத்துவிதமான காரணப்பொருளாகவும் ப்ரஹ்மம் இருக்கிறது என்றும், இதனால் இந்த ஜகத்தின் நிமித்த காரணமாகவும், உபாதானக் காரணமாகவும் ப்ரஹ்மமே உள்ளது என்றும் விளக்கம் கூறினார்.

வ்யாக்யானம் – "யத்ர த்வஸ்ய ஸர்வம் ஆத்மைவாபவத்" என்கிற ச்ருதிக்கு ஜகத்துக்கு தாரகனாயும் வ்யாபகனாயும் நியந்தாவாயும் அந்தர்யாமியாயும் ஸ்வாமியாயும் சேஷியாயு மிருக்கையாலே எல்லாம் அந்த ப்ரஹ்மமேயா யிருக்குமென்று அர்த்த வர்ணநம் பண்ணியும், இன்னமும் அவர்கள் ஸ்வாஜ்ஞாநத்தாலே அபார்த்தங்களைச் சொல்லியும், உதாஹ்ருதங்களான, "தத்வமஸி" இத்யாதி ச்ருதிகளுக்கெல்லாம் அயதாவஸ்த்திதத பதார்த்தங்களைச் சொல்லியும், தாம் சொன்ன அர்த்தங்களுக்கெல்லாம் அநுகூலமா யிருந்துள்ள, "போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா", "ப்ருதக் ஆத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ் ததஸ் தேந அம்ருதத்வமேதி", "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வ ஜாதே | தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அநச்நந் அந்யோ அபிசாகசீதி", "நித்யோ நித்யாநாம் சேதந: சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதிகாமாந்" இத்யாதியான ஜீவ ப்ரஹ்மணோரத்யந்த பேத ப்ரதிபாதக ச்ருதிகளையும், "ய: ப்ருதிவீம் அந்தரே ஸஞ்சரந் யஸ்ய ப்ருதிவீ சரீரம்", "ஏஷ ஸர்வ பூதாந்தராத்மா அபஹத பாப்மா திவ்யோ தேவ ஏகோ நாராயண:" இத்யாதி கடக

ச்ருதிகளையும் உபந்யஸித்து, இனி ப்ரபஞ்ச மித்யாத்வ ப்ரதிபாதநத்துக்கு பௌத்தார்த்த ஸாரங்களான கேவல துஸ்தர்க்கங்களை யொழிய ஸமீசீந ப்ரமாண மொன்றுமில்லை யென்று அத்தை நிரஸித்து.

விளக்கம் – அடுத்து, ப்ருஹத் உபநிஷத் (2-4-14) – யத்ர த்வஸ்ய ஸர்வம் ஆத்மைவாபவத் – எங்கு அனைத்தும் ஆத்மாவாகிவிட்டதோ - என்ற வேதவரிக்கு இந்த உலகிற்கு ஆதாரமாகவும், உட்புகுந்து நியமிப்பவனாகவும், அந்தர்யாமியாகவும், எஜமானனாகவும், ஸ்வாமியாகவும் உள்ளதால் அந்த ப்ரஹ்மமே அனைத்தின் ஆத்மாவாக உள்ளது என்று பொருள் உரைத்தார். மேலும் மற்ற மதத்தினர்கள் சாந்தோக்ய உபநிஷத் – தத் த்வம் அஸி – நீ அதுவாகிறாய் - போன்ற ச்ருதி வாக்கியங்களுக்குத் தங்கள் அறியாமை காரணமாக பலவிதமாகத் தவறான பொருள்களை உரைத்தபடி இருந்தனர். இவற்றுக்கான பொருளை உரைக்க ப்ரமாணமாக இருந்துள்ள ச்வேதாஸ்வதர உபநிஷத் (1-12) – போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா – அனுபவிக்கப்படுவது, அனுபவிப்பவன், இந்த இரண்டையும் தனது உடமைகளாகக் கொண்டவன், ச்வேதாஸ்வதர உபநிஷத் (1-6) – ப்ருதக் ஆத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ் ததஸ் தேந அம்ருதத்வமேதி – ஜீவாத்மாவையும், அனுபவிக்கும்படிச் செய்யும் பரமாத்மாவையும் தனித்தனியானவர்கள் என்று அறிந்து, இத்தகைய ஞானத்தால் மகிழ்ந்த பரமாத்மாவால் அன்புடன் ஏற்கப்பட்டு மோக்ஷத்தை அடைகிறான், முண்டக உபநிஷத் (3-1) – த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வ ஜாதே | தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அநச்நந் அந்யோ அபிசாகசீதி – தங்கமயமான சிறகுகள் கொண்ட இரண்டு பறவைகள் (ஜீவாத்மா, பரமாத்மா) ஒரு அத்தி மரத்தில் (சரீரம்) உள்ளன. இவற்றில் ஒன்று பழத்தை (ஜீவாத்மா – கர்மபலன்) உண்கிறது, மற்றொன்று ப்ரகாசத்துடன் பார்த்தபடி உள்ளது, ச்வேதாஸ்வதர உபநிஷத் (6-13) மற்றும் கட உபநிஷத் (5-13) – நித்யோ நித்யாநாம் சேதந: சேதநாநாம் ஏகோ பஹூநாம் யோ விததாதிகாமாந் – என்றும் உள்ள ஆத்மாக்களுக்கு இடையே, என்றும் உள்ள அந்த ஆத்மா, மற்ற ஆத்மாக்களின் விருப்பங்களை நிறைவேற்றுகிறது - போன்ற "ஜீவாத்மாவும் பரஹ்மமும் அடி முதல் நுனிவரை வேறானவை" என்று உரைக்கின்ற வாக்கியங்கள் ஆகியவற்றை விவரமாக உரைத்தார். இந்தக் காரணங்களால் "இந்த உலகம் உண்மையானது அல்ல" என்று கூறும் வாக்கியங்களுக்கு தவறான

வாதங்கள் அல்லாமல், நன்றாக அமையப் பெற்ற ப்ரமாணங்கள் ஏதும் இல்லை என்று அவற்றித் தள்ளினார்.

வ்யாக்யானம் – "ப்ரஹ்மவேத ப்ரஹ்ம ஏவ பவதி", "ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி", "ஸ்வேந ரூபேண அபி நிஷ்பத்யதே" இத்யாதி ச்ருதிகளுக்கு முக்தி வேளையில் ஐக்யத்தை ப்ரதிபாதிக்கை அர்த்தமென்று சொன்னால் – "இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநு ஸஞ்சரந்", "ஏதத் ஸாம காயந் ஆஸ்தே", "ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகம் அபி ஸம்பத்யதே ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே", "நிரஞ்ஜந: பரமம் ஸாம்யம் உபைதி", "மம ஸாதர்ம்யமாகதா:", "போகமாத்ர ஸாம்ய லிங்காச்ச" இத்யாத்யநேக ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ர விரோதம் வரக்கடவதாகையாலே, "ப்ரஹ்மபூத ப்ரஸந்நாத்மா ந சோசதி ந காங்க்ஷதி" என்கிறபடியே ப்ரஹ்ம ஸாம்யாபந்நராய் ப்ரஹ்ம ப்ரகார பூதராய், "ஸர்வகத்வாத் அநந்தஸ்ய ஸ ஏவ அஹம் அவஸ்த்தித:" என்கிறாப் போலே யிருக்கிறார்களென்றும் அந்த ச்ருதிகளுக்கு அர்த்த நிர்ணயம் பண்ணி பஹுமுகமாக ப்ரஸங்கித்தருளி அவர்களை ஜயித்தாரென்றபடி. "கூறும் மா குரு மதத்தோடு குமாரிலன் மதம் அவற்றின் மேல் கொடிய தர்க்க சரம் விட்டபின் குறுகிய மாயவாதியரை வென்றிட மீறி வாதில் வரும் பாக்கரன் மதவிலக்கடிக் கொடியெறிந்து போய் மிக்க யாதவ மதத்தை மாய்த்த பெருவீரர் நாளும் மிக வாழியே" என்று இந்த ஆனைத் தொழில்களில் ஈடுபட்டு ஜீயரும் மங்களாசாஸநம் பண்ணினாரிறே.

விளக்கம் – முண்டக உபநிஷத் (3-2) – ப்ரஹ்மவேத ப்ரஹ்ம ஏவ பவதி – ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான், சாந்தோக்ய உபநிஷத் (4-15-6) – ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி – (அமாநவன்) ப்ரஹ்மத்திடம் இட்டுச் செல்கிறான், சாந்தோக்ய உபநிஷத் (8-3-4) - ஸ்வேந ரூபேண அபி நிஷ்பத்யதே – தனது ஸ்வரூபம் விளங்கப் பெறுகிறான் - போன்ற ச்ருதி வாக்கியங்களுக்கு முக்தி அடையும்போது ஜீவாத்மா ப்ரஹ்மத்துடன் ஒன்றிவிடுகிறது என்று கூறுவதே உண்மையான பொருள் என்று சிலர் உரைக்கலாம்; இவ்விதம் உரைத்தால், தைத்திரீயம் (3-10-5) – இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந் – விரும்பிய லோகங்களில் விரும்பிய உருவம் எடுத்தபடி முக்தாத்மா ஸஞ்சரிக்கிறான், தைத்திரீயம் – ஏதத் ஸாம காயந் ஆஸ்தே – ஸாமகானத்தைப் பாடியபடி, சாந்தோக்ய உபநிஷத் (8-12-1) – ஸ கல்வேவம் வர்த்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகம் அபி ஸம்பத்யதே ந ச புநராவர்த்ததே ந ச புநராவர்த்ததே – வர்ணாச்ரம தர்மங்களைத்

தனது ஆயுள் உள்ளவரை இயற்றி வந்து, அதன் பின்னர் ப்ரஹ்மலோகம் அடைகிறான்; அங்கிருந்து மீண்டும் திரும்புவதில்லை, மீண்டும் திரும்புவதில்லை, முண்டக உபநிஷத் (3-1-3) – நிரஞ்ஜந: பரமம் ஸாம்யம் உபைதி - தோஷம் அற்றவனாக, ப்ரஹ்மத்துடனான ஒற்றுமை அடைகிறான், கீதை (14-2) - மம ஸாதர்ம்யமாகதா: - என்னை ஒத்த குணங்கள் அடைகின்றனர், ப்ரஹ்மஸூத்ரம் (4-4-21) – போகமாத்ர ஸாம்ய லிங்காச்ச - போகம் மூலமாகவே முக்தனுக்கு ப்ரஹ்மத்துடனான ஒற்றுமை – என்பது போன்று பல ச்ருதி, ஸ்ம்ருதி, ஸூத்ர வாக்கியங்களுக்கு முரண்பாடு ஏற்படுகிறது என்பதால், "கீதை (18-54) - ப்ரஹ்மபூத ப்ரஸந்நாத்மா ந சோசதி ந காங்க்ஷதி – ப்ரஹ்மத்தை அடைந்த முக்தாத்மா எதற்கும் வருந்துவதில்லை, எதனையும் விரும்புவதில்லை – என்பதற்கு ஏற்ப, ப்ரஹ்மத்தைப் போன்ற தன்மைகள் கொண்டவர்களாகவும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-19-85) - ஸர்வகத்வாத் அநந்தஸ்ய ஸ ஏவ அஹம் அவஸ்த்தித: - அநந்தன் என்னும் திருநாமம் கொண்ட அந்தப் பரம்பொருள் எங்கும் உள்ளதால், நான் அந்தப் பரம்பொருளாகவே இருக்கிறேன் – என்பதற்கு ஏற்பவும் முக்தி பெற்ற நிலையில் ஜீவாத்மாக்கள் உள்ளனர்", என்று அந்த வாக்கியங்களுக்குப் பொருள் உரைத்தார். இப்படியாகப் பலவிதமாக அவர்களுடன் வாதிட்டு அவர்களை வென்றார் என்று கருத்து. ஆர்த்தி ப்ரபந்தம் (29) - கூறும் மா குருமதத்தோடு குமாரிலன் மதம் அவற்றின் மேல் கொடிய தர்க்க சரம் விட்டபின் குறுகிய மாயவாதியரை வென்றிட மீறி வாதில் வரும் பார்க்கரன் மதவிலக்கடிக் கொடியெறிந்து போய் மிக்க யாதவ மதத்தை மாய்த்த பெருவீரர் நாளும் மிக வாழியே - தவறான வாதங்களுடன் கூடிய பிரபாகர மதத்தை விட உயர்ந்த குமாரிலபட்டரின் மதத்தின் மீது தனது வாதம் என்ற பாணங்கள் விட்டு அழித்தார். அதன் பின்னர் மாயாவாதிகளை வென்றார். மிகவும் கர்வம் கொண்டபடி இருந்த பாஸ்கர மதத்தை வேருடன் அழித்தார். அதனையும் தொடர்ந்து நின்ற யாதவப்ரகாசரின் மதத்தையும் மாய்த்தார். இவ்விதம் பல பராக்ரமங்கள் கொண்ட எம்பெருமானார் என்றும் வாழ வேண்டும் - என்று இந்தச் செய்கைகளை ஸ்வாமி மணவாளமாமுனிகளும் அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் – (**எம்மிராமானுசன்**) இப்படிப்பட்ட ஆனைத்தொழில்களைச் செய்தருளினா ராகையாலும், அத்யந்த ப்ரதிகூலனாய் விமுகனாய் அநாதியான ஸம்ஸாரத்திலே அழுந்திக் கிடக்கிறவென்னை உத்தரிக்கைக்காக அவதரித்தருளின எம்பெருமானாருடைய. (**மெய்மதிக்கடல்**) யதார்த்த ஜ்ஞாநம் கடல்போலே அவிச்சிந்நமா யிருக்குமென்றபடி. அன்றிக்கே, தத்வஜ்ஞாந ஸாகரமாய் நம்முடைய நாதராயிருக்கிற

எம்பெருமானார், லோக ரக்ஷணார்த்தமாக குத்ருஷ்டிகளோடே ப்ரஸங்கம் பண்ணி அவர்களை ஜயித்தருளினாரென்று இங்ஙனே அந்வயிக்கவுமாம். இவர் தாமே "**வாதியர்காள் உங்கள் வாழ்வு அற்றதே**" என்று அருளிச் செய்தாரிறே. "ஆத்மைக்யம் தேவதைக்யம் த்ரிகஸமதிகதா துல்யதைக்யம் த்ரயாணாம் | அந்யத்ர ஐச்வர்யம் இத்யாதி அநிபுணா பணிதீ: ஆத்ரியந்தே ந ஸந்த: | த்ரயந்தை: ஏககண்டை: தத் அநுகுண மநு வ்யாஸ முக்ய உக்திபி: ச ஸ்ரீமாந் நாராயணோ ந: பதி: அகிலதநு: முக்தித: முக்தபோக்ய:" என்று இவ்வர்த்தத்தை அபியுக்தரு மருளிச்செய்தாரிறே.

விளக்கம் – (எம் இராமானுசன்) இப்படிபட்ட செய்வதற்கு அரிய செயல்களைச் செய்தபோதிலும், மிகவும் தாழ்ந்தவனாகவும், சாஸ்திரங்களுக்கு விரோதமாகவே செயல்படுபவனாகவும், எல்லையற்ற காலம் ஸம்ஸாரத்தில் மூழ்கியபடி உள்ளவனாகவும் இருக்கின்ற என்னைக் கரை ஏற்றுவதற்காகவே அவதரித்தருளிய எம்பெருமானாருடைய. (மெய்மதிக்கடல்) - உண்மையான ஞானம் என்பது எல்லை காண இயலாதபடி கடல் போன்று இருக்கும். அல்லது மெய்ஞானக் கடலாக உள்ளவரும், நமக்கு எஜமானராகவும் உள்ள எம்பெருமானர், இந்த உலகைக் காப்பாற்றும்விதமாக பிழையான பார்வைகள் கொண்டவர்களுடன் வாதம் செய்து அவர்கள் வென்றார் என்றும் படிக்கலாம். இவரே இதனை இராமானுச நூற்றந்தாதி (64) – வாதியர்காள் உங்கள் வாழ்வு அற்றதே – என்றார். இதனையே ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் (அதிகாரம் 6) - ஆத்மைக்யம் தேவதைக்யம் த்ரிகஸமதிகதா துல்யதைக்யம் த்ரயாணாம் | அந்யத்ர ஐச்வர்யம் இத்யாதி அநிபுணா பணிதீ: ஆத்ரியந்தே ந ஸந்த: | த்ரயந்தை: ஏககண்டை: தத் அநுகுண மநு வ்யாஸ முக்ய உக்திபி: ச ஸ்ரீமாந் நாராயணோ ந: பதி: அகிலதநு: முக்தித: முக்தபோக்ய: – சாஸ்த்ர ஞானம் அற்றவர்கள் கூறுவது என்னவெனில் : ஆத்மாக்கள் எல்லாம் ஒன்றே, இந்திரன் முதலான தேவதைகள் ஒன்றே, ப்ரம்மன் உள்ளிட்ட மூன்று மூர்த்திகளின் தன்மைகளை அறிந்து கொண்டால் அவர்கள் ஒன்றே,இவர்களின் ஆத்மஸ்வரூபம் ஒன்றே, இவர்கள் மூவரைக் காட்டிலும் மேலான ஒருவனே ஈச்வரன் – போன்றவையாகும். உண்மை எது, பொய் எது என்று பிரித்து அறியக்கூடியவர்கள், இந்தச் சொற்களை உண்மை என்று ஏற்பதில்லை. அனைத்து உபனிஷத்துக்களும் ஒரே கருத்தை முழங்குகின்றன, இந்த உபனிஷத்துக்களின் கருத்தைப் பின்பற்றியே மனு, வ்யாஸர் முதலானவர்களின் ஸ்ம்ருதிகள் உள்ளன, இந்தக் கருத்து என்னவெனில் – அனைத்தையும் சரீரமாகக் கொண்டவன், மோக்ஷத்தை அளிக்கக்கூடியவன், முக்தர்களால் அனுபவிக்கக்கூடியவன் பெரியபிராட்டியுடன் கூடியுள்ள நாராயணனே

ஆவான்; அவனே நமக்கும் அனைவருக்கும் எஜமானன் - என்று அருளிச்செய்தார் அல்லவோ?

59. கடல் அளவாய திசை எட்டின் உள்ளும் கலி இருளே
மிடை தரு காலத்து இராமானுசன் மிக்க நான்மறையின்
சுடர் ஒளியால் அவ்விருளைத் துரந்திலனேல் உயிரை
உடையவன் நாரணன் என்று அறிவாரில்லை உற்று உணர்ந்தே

விளக்கவுரை – கடல் சூழ்ந்த எட்டுத் திசைகளும் கொண்ட இந்தப் பூமி முழுவதும், கலி புருஷன் தனது ஸ்வபாவம் மூலம் உலகில் உள்ள அனைவருக்கும் அஜ்ஞானம் என்ற இருளை உண்டாக்கினான். இதனால் தர்ம மார்க்கத்தை யாரும் எளிதில் காணாதபடி செய்தான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பரமபதத்தில் இருந்து இந்த உலகில் எம்பெருமானார் திருஅவதாரம் செய்தார். ஸர்வேச்வரனின் ஸ்வரூபம் மற்றும் ரூபங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய நான்கு வேதங்கள் என்ற கொழுந்து விட்டு எரியும் ஒளி கொண்டு, கலிபுருஷனால் உண்டாக்கப்பட்ட அஜ்ஞானம் என்னும் இருளை நீக்கினார். இவ்விதமாக எம்பெருமானார் செய்யவில்லை என்றால் என்ன நிகழ்ந்திருக்கும்? இந்த உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் எஜமானனாக நாராயணனே உள்ளான் என்று மிகவும் தெளிவாக ஆராய்ந்து அறிபவர்கள் யாரும் இல்லை என்ற அவலநிலை உண்டாகியிருக்கும்.

அவதாரிகை - எம்பெருமானார் வேதோத்தரணம் பண்ணியருளினா ரென்றும், ததர்த்தோத்தரணம் பண்ணியருளினா ரென்றும் கீழெல்லாம் பலபடியாகச் சொன்னீர். அவர் இப்படி செய்திராகிலும், ப்ரமாதாக்களான சேதநரும் நித்யராய், ப்ரமாணங்களான வேதங்களும் நித்யமாயிருக்கையாலே அவர்கள் அந்த வேதத்தை அடைவேயோதி தத் ப்ரதிபாத்யனான நாராயணனே ஆத்மாக்களுக்கு சேஷியென்று தெளிந்து உஜ்ஜீவிக்க லாகாதோவென்று சொன்னவர்களைக் குறித்து, "கலியிருளானது லோகமெல்லாம் வ்யாபித்து தத்வ யாதாம்ய ஜ்ஞாநத்துக்கு ப்ரதிபந்தகமா யிருக்கையாலே, எம்பெருமானார் திருவவதரித்து, ஸகல சாஸ்த்ரங்களையும் அதிகரித்து, அவற்றினுடைய நிரவதிக தேஜஸ்ஸாலே அந்த கலி ப்ரயுக்தமான அஞ்ஞாநாந்தகாரத்தை ஓட்டிற்றிலராகில்,

நாராயணன் ஸர்வசேஷியென்று இந்த ஜகத்திலுள்ளா ரொருவரும் அறியக் கடவாரில்லை யென்கிறார்.

விளக்கம் – எம்பெருமானார் வேதங்களை மீண்டும் உயர்த்தினார் என்றும், அவற்றின் ஆழ்பொருளை இன்னது என்று நிரூபித்தார் என்றும் இதுவரை பலவிதமாக அருளிச்செய்தார். சிலர் திருவரங்கத்தமுதனாரிடம், "எம்பெருமானார் இவ்விதம் செய்யவில்லை என்றாலும் - அறிவுள்ள சேதநர்கள் நித்யமாக உள்ளதாலும், ப்ரமாணங்களான வேதங்கள் நித்யமாக உள்ளதாலும், அந்தச் சேதநர்கள் காலப்போக்கில் தாங்களே வேதங்களின் ஆழ்பொருளை உணர்ந்து, அவற்றில் கூறப்பட்ட நாராயணனே தங்கள் ஆத்மாவுக்கு எஜமானன் என்று அறிந்துகொண்டு கரையேற மாட்டார்களோ?", என்று கேட்டனர். இவர்களிடம், "கலியின் காரணமாக அறியாமை என்று இருளானது இந்த லோகம் முழுவதும் பரவி நின்று, உண்மையான ஞானம் ஏற்படுவதற்குத் தடையாக உள்ளது. ஆகவே எம்பெருமானார் இந்த உலகில் அவதரித்து, அனைத்து சாஸ்த்ரங்களையும் தெளிவாக உணர்ந்து, அவற்றின் எல்லையற்ற ஞானம் காரணமாக, கலியினால் உண்டான அறியாமை என்ற இருளை விரட்டினார். இவ்விதம் எம்பெருமானார் செய்திருக்கவில்லை என்றால், நாராயணனே அனைத்திற்கும் எஜமானன் என்று இந்த உலகத்தில் உள்ள ஒருவரும் அறிந்திருக்கமாட்டனர்", என்கிறார்.

வ்யாக்யானம் – (கடலளவாய திசை யெட்டி னுள்ளும்) சதுஸ் ஸாகர பர்யந்தமான அஷ்ட திக்குகளினுடைய ஆந்தரமான ப்ரதேசமெல்லாம். சதுஸ் ஸமுத்ரமுத்ரிதமான பூமிப்பரப் பெல்லாமென்றபடி. **(கலியிருளே மிடை தரு காலத்து)** "கலேர்த் தோஷ நிதே:" என்னும்படியான கலிபுருஷன் தன்னுடைய ஸ்வபாவத்தாலே லோகத்தாரெல்லார்க்கும் ஜ்ஞாந ப்ரம்சத்தைப் பண்ணுவித்தும், ஸந்மார்க்கத்தை மூலையடியே நடப்பித்தும் போருகையாலும் தத் ப்ரயுக்தமான அஞ்ஞாநாந்தகாரமே நெருங்கி எங்குமொக்க வ்யாபித்துக் கொண்டு வர்த்திக்கும் காலத்திலே. கலி, ஸாம்ராஜ்யம் பண்ணுகிற காலத்திலே யென்றபடி. **மிடைதல்** – நெருங்குதல்.

விளக்கம் – **(கடல் அளவாய திசை எட்டின் உள்ளும்)** - நான்கு ஸமுத்திரங்களை எல்லையாகக் கொண்ட நடுவில் உள்ள அனைத்து பகுதிகளிலும். (கலி இருளே மிடை தரு காலத்து) – ஸ்ரீமத் பாகவதம் (12-3-51) - கலேர் தோஷ நிதே: - தோஷங்கள் நிறைந்த

கலிகாலம் – என்பதற்கு ஏற்ப, கலிபுருஷன் தனது இயல்பு காரணமாக உலகில் உள்ள அனைவருக்கும் ஞானச்சுருக்கத்தை ஏற்படுத்தியும், நல்ல தர்மங்களை ஒதுக்கியும் செய்த காரணத்தால் விளைந்த அறியாமை என்ற இருள் அனைத்து இடங்களிலும் ஒரே போன்று நெருக்கமாகப் பரவி நின்ற காலகட்டத்தில். அதாவது, கலிபுருஷன் ஆட்சி செய்கின்ற காலத்தில்.

வ்யாக்யானம் – (இராமாநுசன்) விண்ணின் தலைநின்றும் மண்ணின் தலத்து உதித்த எம்பெருமானார். **(மிக்க நான்மறையின்)** "மிக்க வேதியர் வேதத்தினுட்**பொருள்**" என்றும், "சுடர்மிகு சுருதியுள்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வ ப்ரமாணோத்க்ருஷ்டமாய், ஸர்வேச்வரனுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை அடைவே ப்ரகாசிக்கக் கடவதாய், அபௌருஷேயமாய், நித்ய நிர்த்தோஷமாய், ரிக் யஜுஸ் ஸாமாதர்வண ரூபேண நாலுவகைப்பட்டிருக்கிற வேதத்தினுடைய. **(சுடரொளியால்)** "சுடர்மிகு சுருதி" யாகையாலே அந்த வேதத்தினுடைய சுடர் வளர்ந்து அவைதிக ஸமயங்களையெல்லாம் நிர்மூலமாக்கி, பின்னையும் மேல்மேலென ஒளி நெருங்கி வருகையாலே, "**சுடரொளி**" என்று ப்ரயோக்கிக்கிறார். அப்படிப்பட்ட நிரவதிக தேஜஸ்ஸாலே.

விளக்கம் – (இராமாநுசன்) - பரமபதத்திலிருந்து வந்து இந்தப் பூமியில் அவதரித்த எம்பெருமானார். (மிக்க நான்மறையின்) - கண்ணிநுண்சிறுத்தாம்பு (9) – மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள் - என்றும், திருவாய்மொழி (1-1-7) – சுடர்மிகு சுருதியுள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து ப்ரமாணங்களைக் காட்டிலும் மிகவும் உயர்ந்ததாக உள்ளதும், ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம் – ரூபம் – குணம் – விபூதி ஆகிய அனைத்தையும் முழுவதுமாக வெளிப்படுத்துவதாக உள்ளதும், மனிதர்களால் செய்யப்படாததும், எப்போதும் எந்தவிதமான தோஷமும் இன்றி உள்ளதும், ரிக் – யஜுர் – ஸாமம் - அதர்வணம் என்று நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளதும் ஆகிய வேதத்தின். (சுடரொளியால்) – திருவாய்மொழி (1-1-7) – சுடர்மிகு சுருதி – என்பதால், இந்த வேதத்தின் ஒளியானது ஓங்கி வளர்ந்து, வேதங்களுக்கு முரணாகக் கூறும் அனைத்து மதங்களையும் நிர்மூலம் செய்து, அதனைத் தொடர்ந்து மேன்மேலும் ஒளி பெருகியபடி உள்ளதால், "சுடரொளி" என்று கூறினார். அப்படிப்பட்ட எல்லையில்லாத பேரொளியால்.

வ்யாக்யானம் – (அவ்விருளை) "அஜ்ஞாந திமிராந்தஸ்ய", "அஞ்ஞாநத்வாந்த ரோகாத்" என்கிறபடியே கலி புருஷனாலே ப்ரவர்த்திப்பிக்கப்பட்ட பாபங்களாலேயுண்டா யிருக்கிற அஞ்ஞாநாந்தகாரத்தை. (துரந்திலனேல்) ப்ரமாணமும் அநாதியாய் நித்யமாய், ப்ரமாதாக்களும் அநாதியாய் நித்யராய், காலமும் அநாதியாய் நித்யமாய்க் கொண்டிருந்தாலும், ஒருத்தராகிலும் வேதார்த்தத்தை ஸ்வயமாகவே தெளிந்து உஜ்ஜீவித்தாரென்று ஒரு சாஸ்த்ரமும் சொல்லக் கேட்டதில்லை. "யஸ்ய தேவே பராபக்தி யதா தேவே ததா குரௌ: தஸ்யை தே கதிதாஹி அர்த்தா ப்ரகாசந்தே மஹாத்மந:", "ஜ்ஞாந அஜ்ஞாந சலாகயா சக்ஷுருந்மீலதம் யேந தஸ்மை தத் குரவே நம:", "நாராயணோபி விக்ருதிம் யாதி குரோ: ப்ரச்யுதஸ்ய துர்புத்தே: ஜலாத பேதம் கமலம் சோஷயதி ரவிர்ந போஷயதி" என்று ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளிலே சொல்லப்படுகையாலும், "என்றும் அனைத்துயிர்க்கும் ஈரம் செய் நாரணனும் அன்றும் தன் ஆரியன் பால் அன்பொழியில் நின்ற புனல் பிரிந்த பங்கயத்தைப் பொங்கு சுடர் வெய்யோன் அனல் உமிழ்ந்து தான் உலர்த்தியற்று" என்று அருளாளப்பெருமாளெம்பெருமானார் அருளிச் செய்கையாலும், "ஸ்வாபிமாநத்தாலே ஈச்வராபிமாநத்தைக் குலைத்துக் கொண்ட இவனுக்கு, ஆசார்யாபிமாநம் ஒழிய கதியில்லையென்று பிள்ளை பலகாலும் அருளிச் செய்யக் கேட்டிருக்கையாய் இருக்கும்" என்கையாலும், "சும்மனாதே கை விட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே" என்கிறபடியே ஓடிப் போம்படி பண்ணுகையன்றிக்கே, "அவரவர் விதி வழி யடைய நின்றனரே" என்று தடஸ்த்தனாயிருந்து கொண்டு அந்த அஞ்ஞாநாந்தகாரத்தை போக்குகைக்கு க்ருஷி பண்ணாதே யொழிந்தால். துரத்தல் – ஓட்டுதல்.

விளக்கம் – (அவ்விருளை) – அஜ்ஞாந திமிராந்தஸ்ய – அறியாமை என்னும் இருளால் மறைக்கப்பட்டு - என்றும், அஜ்ஞாநத்வாந்த ரோதாத் – அறியாமை என்ற இருள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, கலிபுருஷனால் மிகுந்த ஈடுபாட்டுடன் வளர்க்கப்பட்ட பாபங்கள் மூலம் ஏற்பட்டுள்ள அறியாமை என்ற இருளை. (**துரந்திலனேல்**) - ப்ரமாணமான வேதங்கள் எப்போதும் உள்ளன, அந்த வேதத்தை அரியவல்ல சேதநர்களும் எப்போதும் உள்ளனர், காலம் என்பதும் எப்போதும் உள்ளது என்ற நிலை இருந்தாலும், இந்தப் பூமியில் ஒரு மனிதனாவது வேதங்களின் ஆழ்பொருளைத் தானாகவே முயன்று அறிந்துகொண்டு கரை ஏறினான் என்று எந்த ஒரு சாஸ்த்ரமும் இதுவரை கூறியதில்லை. ச்வேதாஸ்வதர

உபநிஷத் - யஸ்ய தேவே பராபக்தி யதா தேவே ததா குரௌ: தஸ்யை தே கதிதாஹி அர்த்தா ப்ரகாசந்தே மஹாத்மந: - யாருக்கு பகவானிடம் பக்தி உள்ளதோ, பகவானைப் போன்றே ஆசார்யனிடம் பக்திய உள்ளதோ, அந்த மஹாத்மாவுக்கு அனைத்து ஆழ்பொருள்களும் தாமாகவே ப்ரகாசிக்கின்றன - என்றும், ஜ்ஞாந அஜ்ஞாந சலாகயா சக்ஷுருந்மீலதம் யேந தஸ்மை தத் குரவே நம: - ஞானம் மற்றும் அஜ்ஞானம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வேறுபாடு அறியாமல் இருந்த எனது ஞானக்கண்ணைத் திறந்த ஆசார்யனுக்கு நமஸ்காரம் – என்றும், நாராயணோபி விக்ருதிம் யாதி குரோ: ப்ரச்யுதஸ்ய துர்புத்தே: ஜலாத பேதம் கமலம் சோஷயதி ரவிர்ந போஷயதி – சூரியனால் மலர வைக்கப்படும் தாமரையானது நீரை விட்டு வெளியே வந்தால் அந்தச் சூரியனாலேயே கருகுவது போன்று, ஆசார்யனை விட்டு விலகும் ஒருவனை நாராயணன் துன்பத்தில் ஆழ்த்துகிறான் - என்றும் ச்ருதிகளிலும் ஸ்ம்ருதிகளிலும் கூறப்படுவதாலும், ஞானஸாரம் (35) - என்றும் அனைத்துயிர்க்கும் ஈரம் செய் நாரணனும் அன்றும் தன் ஆரியன் பால் அன்பொழியில் நின்ற புனல் பிரிந்த பங்கயத்தைப் பொங்கு சுடர் வெய்யோன் அனல் உமிழ்ந்து தான் உலர்த்தியற்று - என்று ஸ்வாமி அருளாளப்பெருமாள் எம்பெருமானார் அருளிச்செய்வதாலும், ஸ்ரீவசனபூஷணம் (443) - ஸ்வாபிமாநத்தாலே ஈச்வராபிமாநத்தைக் குலைத்துக் கொண்ட இவனுக்கு, ஆசார்யாபிமாநம் ஒழிய கதியில்லையென்று பிள்ளை பலகாலும் அருளிச் செய்யக் கேட்டிருக்கையாய் இருக்கும் - என்று கூறுவதாலும், பெரியாழ்வார் திருமொழி (5-4-3) – சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தன - என்பதற்கு ஏற்ப தானாகவே ஓடிப் போகும்படிச் செய்யாமல், திருவாய்மொழி (1-1-5) – அவரவர் விதிவழி அடைய நின்றனரே – என்பதற்கு, ஏற்ப நடுநிலையில் நின்றபடி அத்தகைய அறியாமை என்ற இருளானது விலகுவதற்கு எந்தவிதமான முயற்சியையும் எம்பெருமானார் செய்யாமல் இருந்தால்.

வ்யாக்யானம் – (உயிரையுடையவன் நாரணனென்று) “பதிம் விச்வஸ்ய ஆத்மேச்வரம்” என்றும், “யச்ச கிஞ்சிஜ்ஜகத் ஸர்வம் த்ருச்யதே ச்ரூயதேபி வா அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:” என்றும், “நிகரில் புகழாய் உலகம் மூன்று உடையாய்” என்றும், “யத் அண்டம் அண்டாந்தர கோசரம் ச யத் தச உத்தராணி ஆவரணாநி யாநி ச குணா: ப்ரதாநம் புருஷ: பரம்பதம் பராத்பரம் ப்ரஹ்ம ச தே விபூதய:” என்றும் சொல்லுகிறபடியே தன்னையொழிந்ததடங்கலும் ப்ரகாரமாய், தான் ப்ரகாரியாய்

இருக்கையாலே, நாராயண சப்த வாச்யனான ஸர்வேச்வரன் இந்த த்ரிவித சேதந வர்க்கத்தையும் தனக்கு சேஷமாக வுடையானா யிருப்பானென்று.

விளக்கம் – (உயிரை உடையவன் நாரணன் என்று) - பதிம் விச்வஸ்ய ஆத்மேச்வரம் – அனைத்து உலகிற்கும் பதி, அனைத்து ஆத்மாக்களுக்கும் ஈச்வரன் – என்றும், நாராயண ஸூக்தம் (5) - யச்ச கிஞ்சிஜ்ஜகத் ஸர்வம் த்ருச்யதே ச்ரூயதேபி வா அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: - உலகம் முழுவதிலும் காணப்படுவது எதுவாயினும், கேட்கப்படுவது எதுவாயினும் அவை அனைத்தையும் உள்ளும் புறமும் வ்யாபித்தபடி நாராயணன் உள்ளான் – என்றும், திருவாய்மொழி (6-10-10) – நிகரில் புகழாய் உலகம் மூன்றுடையாய் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (17) - யத் அண்டம் அண்டாந்தர கோசரம் ச யத் தச உத்தராணி ஆவரணாநி யாநி ச குணா: ப்ரதாநம் புருஷ: பரம்பதம் பராத்பரம் ப்ரஹ்ம ச தே விபூதய: - எந்த ஒன்று ப்ரம்மாண்டமோ, அண்டங்களுக்குள் இருப்பது எதுவோ, ஒன்றைவிட அடுத்தது பத்து மடங்காகக் கூறப்படும் ஆவரணங்கள் எதுவோ ஆகியவையும், மூன்று குணங்களும், ப்ரக்ருதியும், ஜீவாத்மாவும், ஸ்ரீவைகுண்டமும், மிகவும் உயர்ந்த நித்யஸூரிகளும், திவ்யமங்கள திருமேனியும் உனக்கே அடிமையானவை - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தன்னைத் தவிர உள்ள மற்ற அனைத்தும் தனது சரீரமாகவும், தான் அவற்றின் ஆத்மாவாகவும் உள்ளதால், "நாராயண" என்ற பதம் மூலம் கூறப்படும் ஸர்வேச்வரன், மூன்றுவிதமான சேதநர்களைத் [பத்தர், முக்தர், நித்யர்] தனது அடிமைகளாகவே கொண்டுள்ளவன் ஆவான் என்று,

வ்யாக்யானம் – (உற்று) – அத்யவஸித்து. விசதமாகத் தெளிந்து கொண்டு. (அறிவாரில்லை) அறியத்தக்காரில்லை. "பிபேத் அல்ப ச்ருதாத் வேதோ மாம் அயம் ப்ரதரிஷ்யதி" என்கையாலே, அத்தாலும் ஸ்வரூப நாசமே ஸித்திக்குமித்தனையொழிய ஸ்வரூப ஸித்தியில்லை யென்றதாய்த்து. "நிராலோகே லோகே நிருபதி பர ஸ்நேஹ பரித: யதி சஷ்மாப்ருத் தீப: யதி ந கலி ஜாஜ்வல்யத இஹ அஹங்கார த்வாந்தம் விஜஹதி கதங்காரம் அநகா: குதர்க்க வ்யாள ஓகம் குமதி மத பாதாள குஹரம்" என்று இவ்வர்த்தத்தை அபியுக்தரும் அருளிச்செய்தாரிறே.

விளக்கம் – (உற்று) – உறுதி செய்து. விவரமாகத் தெளிந்து கொண்டு. (அறிவார் இல்லை) - அறியவல்லவர்கள் யாரும் இல்லை. பிபேத் அல்ப ச்ருதாத் வேதோ மாம் அயம் ப்ரதரிஷ்யதி – அற்பமான ஞானம் உள்ளவனைக் கண்டு வேதங்களும் அஞ்சுகின்றன - என்று கூறுவதால், விபரீதமாகப் பொருளை உணர்ந்து கொண்டு, ஆத்ம ஸ்வரூபத்திற்கு அழிவையே ஏற்படுத்திக்கொள்வர் அல்லாமல், ஆத்மஸ்வரூபத்தை உணரமாட்டனர். யதிராஜ ஸப்ததி (56) - நிராலோகே லோகே நிருபதி பர ஸ்நேஹ பரித: யதி சஷ்மாப்ருத் தீப: யதி ந கலி ஜாஜ்வல்யத இஹ அஹங்கார த்வாந்தம் விஜ்ஹதி கதங்காரம் அநகா: குதர்க்க வ்யாள ஓகம் குமதி மத பாதாள குஹரம் - இந்த உலகில் அறிவு என்னும் ஒளி இல்லாமல் அறியாமை என்னும் இருள் மட்டுமே சூழ்ந்துள்ளது. இந்த இருளை நீக்கும் ஒளியாக (தீபமாக) யதிராஜர் உள்ளார். இந்தத் தீபம் எரிய உதவும் எண்ணையாக எம்பெருமானிடம் அவர் கொண்ட ஆழ்ந்த பக்தி உள்ளது. இவ்விதம் இந்தத் தீபம் எரியவில்லை என்றால் என்ன நேரிடும்? விஷம் கொண்ட ஜந்துக்கள் பலவும் நிறைந்த மற்ற மதம் என்னும் குகையில், அறிவுள்ளவர்கள் தள்ளப்பட்டுக் கிடப்பார்கள் அல்லவா? - என்று நம்பத் தகுந்தவர்கள் அருளிச்செய்து காண்க.

60. உணர்ந்த மெய்ஞ்ஞாநியர் யோகந்தொறும் திருவாய்மொழியின்
மணம் தரும் இன்னிசை மன்னும் இடந்தொறும் மாமலராள்
புணர்ந்த பொன்மார்வன் பொருந்தும் பதிதொறும் புக்கு நிற்கும்
குணம் திகழ் கொண்டல் இராமானுசன் எங்குலக் கொழுந்தே

விளக்கவுரை – இங்கு உணர்வு என்பது பக்தியைக் குறிக்கும். பக்தி என்பது ஸ்ரீமந் நாராயணனே அனைத்திற்கும் எஜமானன் என்று அறிந்து, அவன் அனைத்து திருக்கல்யாண குணங்களும் கொண்டவன் என்று உணர்ந்து, அவன் ஆனந்தமயமாக உள்ளவன் என்று தெளிந்து அவனைப் போற்றும் தன்மையாகும். இப்படிப்பட்ட தன்மையில் தங்களை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டவர்கள் ஆழ்வார்கள் ஆவர். ஆக – உணர்ந்த மெய்ஜ்ஞானியர் – என்பது ஆழ்வார்களைக் குறிக்கும். இப்படிப்பட்ட ஆழ்வார்கள் கூட்டத்தில் எப்போதும் உள்ளவர்; ஆழ்வார்களில் ப்ரதானமாக உள்ள நம்மாழ்வார் அருளிச் செய்த தமிழ் வேதமாகிய திருவாய்மொழியானது, தனது இசை என்னும் நறுமணத்தை எங்கெல்லாம் பரப்பியபடி உள்ளதோ, அங்கெல்லாம் உள்ளவர்; தாமரை மலரில் அமர்ந்த மஹாலக்ஷ்மி மிகவும் விரும்பி ஆரத்தழுவுகின்ற திருமார்பைக் கொண்டவனாகிய ஸ்ரீமந் நாராயணன் மிகவும் உகந்து எழுந்தருளியுள்ள

திவ்யதேசங்களில் பொதிந்து நிற்பவர் – இவற்றுள் தானாகவே கானகத்தில் வந்து வழிகாட்டி சேர்த்துவிட்ட காஞ்சீபுரம், பெரியபெருமாளின் ஆணையின் பேரில் வந்து அருளிய திருவரங்கம், சைவர்களின் பிடியில் இருந்து காப்பாற்றிய திருமலை, வேதங்களை ஏற்காத மதங்களை வாதம் செய்து வீழ்த்திய திருநாராயணபுரம், நம்மாழ்வார் அவதரித்த ஆழ்வார்திருநகரி, ஆண்டாளின் விருப்பத்தை நிறைவேற்றிய திருமாலிருஞ்சோலை – ஆகியவை முக்கியமானவை – இப்படியாக பல இடங்களிலும் மிகவும் ப்ரியம் கொண்டு ஈடுபட்டு எம்பெருமானார் காணப்படுவார். இவ்விதம் பக்தி என்ற குணமே இவரிடம் சென்று மேலும் மேன்மை பெற்றது என்னும்படியாக உள்ள எம்பெருமானார், எங்களது வைணவ குலம் தழைக்க வந்த கொழுந்து ஆவார். வேருக்கு அதிக வெப்பம் ஏற்பட்டால் அதனை உணர்ந்த கொழுந்துப்பகுதி வாடுவது போன்று, எங்கள் ஸ்ரீவைஷ்ணவ குலத்திற்கு ஏதேனும் நேர்ந்தால், தனது முகம் வாடும் தன்மை கொண்டவர் என்று கருத்து.

அவதாரிகை - கீழெல்லாம் எம்பெருமானாருடைய வேதமார்க்க ப்ரதிஷ்ட்டாபநத்தையும், பாஹ்ய மத நிரஸன ஸாமர்த்த்யத்தையும், வேதாந்தார்த்த பரிஜ்ஞாநத்தையும், அந்த ஜ்ஞாநத்தை லோகத்தார்க்கெல்லாம் உபதேசித்தபடியையு மருளிச்செய்து, இதிலே - அந்த ஜ்ஞாந பரிபாக ரூபமாய்க் கொண்டு பகவத் விஷயத்திலும், அவனுக்கு "**நிழலும் அடிதாறுமா**"**யிருந்துள்ள பாகவத விஷயத்திலு**ம், ததுபய வைபவ ப்ரதிபாதகமான திருவாய்மொழியிலும் இவருக்குண்டாயிருக்கிற நிரவதிக ப்ரேமத்தையும், இம்மூன்றினுடைய வைபவத்தையும் ஸர்வ விஷயமாக உபகரிக்கைக்குடலான இவருடைய ஔதார்யத்தையும் அருளிச்செய்கிறார்.

விளக்கம் – இதுவரை எம்பெருமானாருடைய வேதமார்க்கத்தை நிலைநாட்டிய திறனையும், வேதங்களை ஏற்காத மற்ற மதங்களைத் தனது வாதங்கள் மூலம் தள்ளிய திறமையையும், வேதங்களின் ஆழ்பொருளின் மூலம் ஏற்பட்ட ஆழ்ந்த ஞானத்தையும், அத்தகைய உண்மையான ஞானத்தை அனைத்து உலகங்களில் உள்ள அனைவருக்கும் உபதேசித்த விதத்தையும் அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில் - அத்தகைய ஞானத்தின் முதிர்ந்த ரூபமாக உள்ளதான நிலையைக் கொண்டு பகவத் விஷயத்திலும், அவனுக்கு பெரிய திருவந்தாதி (31) – நிழலும் அடிதாறும் - என்பதற்கு ஏற்ப மரமாகவும்

பாதுகையாகவும் உள்ள பாகவதர்கள் விஷயத்திலும், இந்த இரண்டு வைபவங்களையும் ஒருசேர வெளிப்படுத்தும் திருவாய்மொழியிலும் எம்பெருமானாருக்கு உள்ள எல்லையற்ற அன்பையும், இந்த மூன்றின் வைபவத்தையும் வெளிப்படுத்தி உபகாரம் செய்வதற்கு மூலமாக உள்ள அவருடைய தாராள மனதையும் – அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும்) பக்தியாகிறது ஜ்ஞாந விகாஸ விசேஷமாகையாலே ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன் ஸர்வசேஷியென்று முந்துறத் தெளிந்து, அது, ஸமஸ்த கல்யாணகுணாத்மகனாய், ஆநந்தமயனாய், "ஸர்வகந்த: ஸர்வரஸ:" என்கையாலே ஸர்வவித போக்யனானவனை விஷயீகரிக்கையாலே, ஸ்வயம் ப்ரீதி ரூபாபந்நமாய், பக்தி என்கிற பேரையுடைத்தானதா யிருக்கிறது. ஆக, உணர்வு என்றது பக்தியென்றபடி. இப்படிப்பட்ட பக்தியாகிற, மெய்ஞ்ஞானம் - யாதவஸ்த்தித ஜ்ஞாநம். பகவத் ஸ்வரூப ரூப குண விபூதிகளை கட்டடங்கநுபவித்த "மயர்வற மதிநலம்" என்றபடி. அப்படிப்பட்ட பக்தி ரூபாபந்ந ஜ்ஞாநத்தை யுடையரான ஆழ்வார்களுடைய குழாம் எங்கே யெங்கே யிருக்கிறதோ, அந்தந்தவிடங்கள்தோறும், யோகம் – கூட்டரவு. பரிஷத்தென்றபடி. பக்தரான ஆழ்வார்களனைவரும் அடியிலே மயர்வற மதிநலம் அருளப் பெற்று, பரிபூர்ண ஜ்ஞாநராய், தத்வ த்ரயத்தையும் உள்ளபடி யநுஸந்தித்து, "அப்பொழுதைக்கப்பொழு தென்னாராவமுதம்" என்னும்படி பரமபோக்யனான ஸர்வேச்வரன் பக்கலிலே யீடுபட்டு, "அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன்" என்று பாஹ்ய ஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து, பெண்ணுடையுடுத்தும், தூது விட்டும், மடலெடுத்தும் நிரவதிக ப்ரேம யுக்தராயிருந்தார்களளிறே; ஆகையாலே "உணர்ந்த மெய்ஜ்ஞாநியர்" என்று ஆழ்வார்களைச் சொல்லக் குறையில்லை.

விளக்கம் – (உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந்தொறும்) - பக்தி என்பது என்ன? அது மலர்ந்த ஞானத்தின் வெளிப்பாடு என்பதால், மஹாலக்ஷ்மியின் நாயகனே அனைத்திற்கும் எஜமானன் என்று உணர்ந்து, அனைத்து திருக்கல்யாணகுணங்கள் பொருந்தியவனும், ஆனந்தமயமாக உள்ளவனும், சாந்தோக்ய உபநிஷத் (3-14-2) – ஸர்வகந்த: ஸர்வரஸ: – அனைத்து நறுமணங்களும் உள்ளவன், அனைத்துச் சுவைகளும் உள்ளவன் - என்பதற்கு ஏற்ப அனைத்துவிதத்திலும் இனிமையாக உள்ளவனும் ஆகிய அவனை மட்டுமே சிந்தையில் ஏற்றபடி நிற்பதால் தனக்குள்ளே எல்லையற்ற அன்பின்

வெளிப்பாடாக உள்ளதால் பக்தி என்ற பெயர் கொண்டதாக உள்ளது. இங்கு உணர்வு என்பது, பக்தி என்ற பொருள் தருவதாகும். இப்படிப்பட்ட பக்தி என்பதான உண்மையான ஞானம்; உள்ளதை உள்ளபடி அறிந்துள்ள ஞானம். ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபம், ரூபம், குணங்கள், விபூதி ஆகியவற்றை முற்றிலுமாக அனுபவித்தபடி உள்ள மயர்வற மதிநலம் என்று கருத்து. இப்படியாக பக்தியின் ரூபமாக விளைந்த ஞானத்தை உடையவர்களான ஆழ்வார்களுடைய கூட்டம் எங்கெல்லாம் உள்ளதோ, அந்த இடங்களில் எல்லாம். பக்தர்களாகிய அனைத்து ஆழ்வார்களும், திருவாய்மொழி (1-1-1) – மயர்வற மதிநலம் - என்பதற்கு ஏற்ப தடுமாற்றம் இல்லாத ஞானத்தை அவன் மூலமாக அடைந்ததால் பரிபூர்ணமான ஞானம் கொண்டவர்களாகவும், சித் - அசித் – ஈச்வரன் என்ற மூன்றைக் குறித்து உள்ளது உள்ளபடி எண்ணுபவர்களாகவும், திருவாய்மொழி (2-5-4) – அப்பொழுதைக்கு அப்பொழுது என்ன ஆரா அமுதம் - என்பதற்கு ஏற்ப மிகவும் உயர்ந்த இனிமை உள்ள ஸர்வேச்வரன் விஷயத்தில் ஈடுபட்டவர்களாகவும், திருவாய்மொழி (1-3-10) – அயர்ப்பிலன் அலற்றுவன் தழுவுவன் – என்று கூறுவதற்கு ஏற்ப அவனுடன் வெளிப்படையாகக் கலந்து பழகும்படியான ஆசை மேலோங்க பெண் உடை தரிக்கும் நாயகி பாவத்தில் நின்றவர்களாகவும், தூது விட்டும் மடல் எடுத்தும் செய்தவர்களாகவும் - இப்படியாக எல்லையற்ற அன்புக்கு இருப்பிடமாக இருந்தார்கள். ஆகவே ஆழ்வார்களை “உணர்ந்த மெய்ஞ்ஞானியர்” என்று கூறுவதில் தவறில்லை.

வ்யாக்யானம் – (திருவாய்மொழியின் மணந்தரும் இன்னிசை மன்னுமிடந்தொறும்) ஆழ்வார்கள் பதின்மரிலும் வைத்துக் கொண்டு ப்ரதாநரான நம்மாழ்வாருடைய திருப்பவளத்தாலே அருளிச்செய்யப்பட்ட சப்தராசியான திவ்யப்ரபந்தத்தினுடைய “ஸர்வகந்த:” என்கிற விசேஷத்தை ப்ரதிபாதிக்கையாலே, தானும் பரிமளிதமாய் அநுஸந்தாதாக்களுக்கு அவ்விஷயத்தைக் கொடுக்கக் கடவதாய், “யாழினிசை வேதத்தியல்” என்றும், “தொண்டர்க்கு அமுதம்” என்றும் சொல்லுகிறபடியே போக்ய தமமாயிருக்கிற அநுஸந்தாந காநரூபமான இசையானது, எந்தெந்த ஸ்தலத்திலே நடையாடி ஸுப்ரதிஷ்டிதமா யிருந்ததோ அவ்வவ ஸ்தலங்கள்தோறும்.

விளக்கம் – (திருவாய்மொழியின் மணம் தரும் இன்னிசை மன்னும் இடந்தொறும்) - பதின்மராகிய ஆழ்வார்களில் முதன்மையாக உள்ள நம்மாழ்வாருடைய பவழம் போன்ற திருவாய் கொண்டு அருளிச்செய்யப்பட்டதும், சொல்வரிசையாக உள்ளதும் ஆகிய

திவ்யப்ரபந்தத்தின் "ஸர்வகந்த: – அனைத்தும் நறுமணமும் பொருந்திய" என்னும் சிறப்பை வெளிப்படுத்துவதால் தானும் நறுமணத்துடன் கூடியதாகவும், திருவாய்மொழியை எண்ணியபடி உள்ளவர்களுக்கும் நறுமணத்தை அளிப்பதாகவும், திருவாய்மொழி தனியன் – யாழினிசை வேதத்தியல் – என்றும், திருவாய்மொழி (9-4-9) – தொண்டர்க்கு அமுது – என்றும் கூறுவதற்கு ஏற்ப மிகவும் சுவைக்கத்தக்கதாகவும் உள்ள தன்மைகளுடன் கூடியதாக எண்ணும்படி உள்ள திருவாய்மொழி இசையானது, எந்தெந்த இடங்களில் இசைக்கப்பட்டு, நிலைபெற்று நிற்கிறதோ அந்தந்த இடங்களில் எல்லாம்.

வ்யாக்யானம் – (மாமலராள் புணர்ந்த பொன்மார்வன்) ஸர்வப்ரகார விலக்ஷணமான பத்மத்தைத் தனக்கிருப்பிடமாக வுடையளான பெரியபிராட்டியார் ஸம்ச்லேஷிக்கும்படி ஸ்ப்ருஹணீயமான திருமார்வை யுடையனான ஸர்வேச்வரன். (பொருந்தும் பதிதொறும்) - உகந்தருளி வர்த்திக்கிற திருப்பதிகள்தோறும். பேரருளாளர் வழித்துணையாக வந்து தாமே சேர்த்தருளின பெருமாள்கோயிலிலும், பெரியபெருமாள் நியமநத்தாலே நம்பெருமாள் கோயிலிலும்,காளஹஸ்தியில் நின்றும் சைவர் வந்து க்ஷுத்ரோபத்ரவம் பண்ணினபோது திருப்பதியிலும், வேதபாஹ்யரை நிரஸிக்கைக்காகத் திருநாராயணபுரத்திலும் மற்றும் திருநகரி, திருமாலிருஞ்சோலை தொடக்கமான திவ்ய தேசங்கள்தோறும். (புக்கு நிற்கும்) அவற்றை அனுபவிக்கையி லுண்டான ஆசையாலே அவ்வவ திவ்யதேசங்களிலே பலபடியாக ப்ரவேசித்ததும், அவற்றை யடைவே நிஷ்கண்டகமாக நிர்வஹித்து புநர் விச்லேஷ பீருத்வ ரூபமான பரமபக்தியாலே ஆழங்கால்பட்டும் மங்களாசாஸநம் பண்ணிக்கொண் டெழுந்தருளியிருக்கிற, "உணர்ந்த மெய்ஞ்ஞானியர்" என்கிற விலக்ஷண ப்ரமாதாக்களிலும் ப்ரீதி மிகுதியாயிருக்கையாலே, அம்மூன்றையும் இறையும் அகலகில்லாதே, அவற்றிலேதானே ஆழங்கால்பட்டிருப்ப ரென்றபடி.

விளக்கம் – (மாமலராள் புணர்ந்த பொன்மார்வன்) - அனைத்து விதங்களிலும் வேறுபட்ட தாமரையைத் தனது இருப்பிடமாகக் கொண்ட பெரியபிராட்டியார் எப்போதும் சேர்ந்து நிற்கும்படியான அழகான திருமார்பைக் கொண்ட ஸர்வேச்வரன். (பொருந்தும் பதி தொறும்) – மிகவும் மகிழ்வுடன் வசித்து வரும் திவ்யதேசங்களில், காஞ்சியில் உள்ள பேரருளாளன் தானே எம்பெருமானாருக்கு வழித்துணையாக வந்து அவரைச் சேர்த்தருளிய காஞ்சீபுரத்திலும், பெரியபெருமாள் "நீவிர் திருவரங்கத்தில் ஸுகமாக

இருப்பீராக" என்று உத்தரவிட்ட நம்பெருமாள் அரசாளும் திருவரங்கத்திலும், காளஹஸ்தியிலிருந்து சைவர்கள் வந்து தாழ்ந்த பல தொந்தரவுகள் கொடுத்தபோது திருமலையிலும், வேதத்திற்கு முரணாகப் பொருள் கூறும் மதத்தவர்களைத் தள்ளுவதற்காகத் திருநாராயணபுரத்திலும், மற்றும் ஆழ்வார்திருநகரி, திருமாலிருஞ்சோலை போன்ற பல திவ்யதேசங்களிலும். (புக்கு நிற்கும்) - அந்தந்த திவ்ய தேசத்தை அனுபவிப்பதில் உள்ள ஆசை மேலிட, அந்தந்த திவ்யதேசங்களில் பலமுறை சென்றும், அவற்றை முழுவதுமாக எந்தவிதமான தோஷமும் இன்றி நிர்வாகம் செய்தும், அங்கிருந்து பிரிந்து செல்ல நேரிடுமோ என்று அச்சத்தின் வெளிப்பாடாக உள்ள பரமபக்தியில் திளைத்து நின்றும், அந்தந்த இடங்களைப் புகழ்ந்து பாடியபடி உள்ளவர்களாகிய "உணர்ந்த மெய் ஞானியர்" என்பதற்கு ஏற்ப உள்ள மேன்மையான அறிவு கொண்டவர்களைக் காட்டிலும் ப்ரீதி அதிகமாக உள்ளதால், அந்த மூன்றையும் [உண்மை அறிவு உள்ளவர்கள் கூட்டம், திருவாய்மொழியை இசைக்கும் இடங்கள், ஸர்வேச்வரன் எழுந்தருளும் இடங்கள்] ஒரு நொடியும் விடாமல், அவற்றில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவராக நிற்பார்.

வ்யாக்யானம் – (குணம் திகழ் கொண்டல்) - இப்படிப்பட்ட பக்தியாகிற மஹாகுணம் தன்னிடத்திலே சென்று நிறம் பெற்று ப்ரகாசிக்கவே, "முகச்சோதி வாழி" என்கிறபடியே தம்முடைய ஜ்ஞாந பக்தி வைராக்யங்களையும், அந்த ப்ரமாதாக்களினுடைய ப்ரபாவத்தையும், அந்த ப்ரமாணத்தினுடைய ப்ரபாவத்தையும், "அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா" என்கிற பெரியபிராட்டியாரையும் "மையலேற்றி மயக்கவல்ல" ப்ரேமத்தினுடைய ப்ரபாவத்தையும், ஜல ஸ்தல விபாகமற வர்ஷிக்கும் வர்ஷுகவலாஹகம்போலே, ஸர்வாதிகாரமாக ஸர்வ ஜநங்களுக்கும் ஸர்வதா கொடுத்தும், உபதேசித்தும் உபகரித்தருளும் பரமோதாரரான. (இராமானுசன்) – எம்பெருமானார்.

விளக்கம் – (**குணம் திகழ் கொண்டல்**) - இப்படிப்பட்ட பக்தி என்னும் உயர்ந்த தன்மை எம்பெருமானாராகிய இவரிடம் வந்து நின்று "எனக்கு ஏற்ற இடம் கிட்டியது" என்று மகிழ்ந்து ப்ரகாசிப்பதால், ஆர்த்தி ப்ரபந்தம் (30) – முகச்சோதி வாழி - என்பதற்கு ஏற்ப தனது ஞானம், பக்தி மற்றும் வைராக்யம் ஆகியவற்றையும், ஸர்வேச்வரன் விஷயத்தில்

நிறைந்த அறிவுள்ளவர்கள் வைபவத்தையும், ப்ரமாணங்களின் வைபவத்தையும், இராமாயணம் ஆரண்யகாண்டம் (37-18) – அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா – இராமனின் துணைவியும் ஜனகரின் புத்ரியுமாகிய சீதையின் தேஜஸ் அளவிட இயலாதது – என்பதற்கு ஏற்ப உள்ள பெரியபிராட்டியாரையும், நாச்சியார் திருமொழி (2-4) – மையலேற்றி மயக்கவல்ல - என்பதற்கு ஏற்ப மயக்கவல்லதான ப்ரேமையின் ப்ரபாவத்தையும், நீர் உள்ள இடம் மற்றும் நிலம் என்ற வேறுபாடு ஆராயாமல் தனது நீரைப் பொழிகின்ற மழைமேகம் போன்று, அனைத்து உயிர்களுக்கும் தகுதியானபடி அனைத்து மனிதர்களுக்கும் எப்போதும் உபதேசித்து உதவுகின்ற தாராள குணம் கொண்டவராகிய. (இராமாநுசன்) - எம்பெருமானார்.

வ்யாக்யானம் – (எங்குலக்கொழுந்தே) எங்குலம் – ஸ்ரீவைஷ்ணவகுலம். அதுக்கு, கொழுந்து என்றது வ்ருக்ஷமாய் பலிக்கைக்கும் கொடியாய்ப் படர்ந்து பலிக்கைக்கும் மூலம் கொழுந்தாகையாலே, எங்கள் குலத்துக்கெல்லாம் மூலமானவரென்றபடி. கொழுந்து – தலை. அன்றிக்கே, எங்குலக்கொழுந்தென்றது - எங்கள் குலமடங்கலும் ஒரு வேராய், அதுக்கு எம்பெருமானார் தாம் கொழுந்தாய்க் கொண்டு, வேருக்கு வெக்கை தட்டினால் கொழுந்து முற்பட வாடுமாப்போலே, எங்கள் குலத்துக்கு ஒரு குறை வந்தால் முற்படத் தம்முடைய முகம் வாடியிருக்குமவ ரென்னவுமாம். "குணம் திகழ் கொண்டலாய் - எங்கள் குலக்கொழுந்தான - இராமானுசன் – பதிதோறும் -புக்கு நிற்கும்" என்று இங்ஙனே யோஜிக்கவுமாம்.

விளக்கம் – (எம் குலக்கொழுந்தே) – "எங்குலம்" என்றால் ஸ்ரீவைஷ்ணவ குலம்; அந்தக் குலத்தின் கொழுந்து. அதாவது ஓங்கிய மரமாக வளர்வதற்கும், பெரிய கொடியாகப் படர்வதற்கும் மூலகாரணமாக உள்ளது கொழுந்து என்பதால், ஸ்ரீவைஷ்ணவ குலத்திற்கு மூலகாரணமாக உள்ளவர் என்று கருத்து. அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். எங்கள் குலம் முழுவது ஒரு வேராக நின்று, அதன் மூலம் வெளிப்படுகின்ற கொழுந்தாக எம்பெருமானார் நின்று, வேருக்கு வெப்பம் அதிகரித்தால் கொழுந்து முதலில் வாடுவது போன்று, ஸ்ரீவைஷ்ணவ குலத்திற்கு ஒரு குறை ஏற்பட்டால் முதலில் தனது திருமுகம் வாடும்படியாக உள்ளவர் என்றும் கூறலாம். அல்லது, "**குணம் திகழ் கொண்டலாய்** -

எங்கள் குலக்கொழுந்தான - இராமானுசன் – பதிதோறும் -புக்கு நிற்கும்” என்றும் கொள்ளலாம்.

61. கொழுந்து விட்டு ஓடிப் படரும் வெங்கோள் வினையால் நிரயத்து
அழுந்தி இட்டேனை வந்து ஆட்கொண்ட பின்னும் அருமுனிவர்
தொழும் தவத்தோன் எம் இராமானுசன் தொல்புகழ் சுடர்மிக்கு
எழுந்தது அத்தால் நல் அதிசயங்கண்டது இருநிலமே

விளக்கவுரை – ஸ்ரீமத்பகவத்கீதையில் – ஸ மஹாத்மா ஸு துர்லப – இப்படிப்பட்ட ஞானி கிட்டுவது மிகவும் அபூர்வம் – என்றான். அதன் பின்னர் ஸ்வாமி நம்மாழ்வார் திருஅவதாரம் செய்தபோது, “இவரை நாம் காணமுடியாமல் போனதே”, என்று வாஸுதேவனே வருத்தம் கொண்டதாக ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம் அருளிச் செய்தார். இப்படிப்பட்ட உயர்ந்த நிலையை “அரு” என்னும் பதம் கூறியது. அடுத்துள்ள “முனிவர்” என்னும் பதம் ஸ்வாமி நம்மாழ்வாரைக் கூறியது. “வாஸுதேவஸ் ஸர்வம்”, “உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன்”, என்று அனைத்தும் கண்ணனே என வாழ்ந்தவர் ஸ்வாமி நம்மாழ்வார் ஆவார். இப்படிப்பட்ட நம்மாழ்வாரால், “பொலிக பொலிக” என்று போற்றப்பட்டவரும், “ஆ முதல்வன்” என்று ஆளவந்தாரால் போற்றப்பட்டவரும் எம்பெருமானார் ஆவார். இப்படிப்பட்ட உயர்ந்தவர்கள் போற்றும்படியாக, ப்ரபத்தி என்னும் தவம் கொண்டவராக உள்ளவர் உடையவர் ஆவார். இந்த உலகில் எங்கும் பரவியுள்ளதும், எந்தவகையான ப்ராயச்சித்தம் கொண்டும் தொலைக்க முடியாததும் ஆகிய வினைப்பயன்களால் நான் ஸம்ஸாரம் என்னும் கடலில் சிக்கித் தரை காண இயலாமல் இருந்தேன். இப்படிப்பட்ட என் போன்றவர்களை, எங்கள் அறியாமை கண்டு கைவிடாமல், நாங்கள் உள்ள இடம் தேடி வந்து ஆட்கொண்டதால், எம்பெருமானாரின் திருக்கல்யாண குணங்கள் மேலும் ஓங்கி வளர்ந்தன. இவ்விதம் என் போன்ற பாவம் செய்த பலரைக் காப்பாற்றிய பின்னர், எம்பெருமானாரின் குணங்கள் மேலும் ஓங்கியதைக் கண்ட இந்த உலகம் வியந்து

நின்றது. என் போன்ற வினை உள்ளவர்கள் இன்னமும் இந்த உலகில் அதிகம் பேர் இருக்கக்கூடும் என்ற எண்ணத்தில் ஓங்கி வளர்ந்தது எனலாம்.

அவதாரிகை – "குணந்திகழ் கொண்டல்" என்று இவர் தம்முடைய குணங்களைக் கொண்டாடினீர். அவற்றினுடைய வைபவமிருக்கும்படி யெங்ஙனே யென்று கேட்டவர்களைக் குறித்து, அத்யந்த க்ரூர பாபியாய் ஸம்ஸாரகர்த்தத்திலே யழுந்திக் கிடக்கிறவென்னை அர்த்தித்வ நிரபேக்ஷமாக தம்முடைய பரம க்ருபையாலே தாமே நானிருந்தவிடம் தேடி வந்து என்னைத் தமக்கு சேஷமாம்படி திருத்தி ரக்ஷித்தருளின பின்பும், பராங்குச பரகால நாத யாமுநாதிகளெல்லாம் தம்பக்கலிலே விசேஷ ப்ரதிபத்தி பண்ணும்படி யிருப்பாராய், பெரியபெருமாள் திருவடிகளிலே ஸகல சேதநோஜ்ஜீவந விஷயமாகச் செய்யப்பட்ட சரணாகதியாகிற மஹா தபஸ்ஸையுடையரான எம்பெருமானாருடைய கல்யாண குணங்கள் ஸமஸ்த திக்கிலும் வ்யாப்தங்களாய் அத்யந்த ஒளஜ்வல்ய சாலிகளாய்க் கொண்டு பூமியிலேயெங்குமொக்கக் காணப்படுகின்றன வென்கிறார்.

விளக்கம் – ஒரு சிலர் திருவரங்கத்தமுதனாரிடம், "கடந்த பாசுரத்தில் நீவிர் - குணம் திகழ் கொண்டல் – என்று எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களைக் கொண்டாடினீர். அவற்றின் வைபவம் எத்தகையது?" என்று கேட்டனர். அவர்களிடம், "மிகுந்த கொடுமையான பாபங்கள் பலவற்றுடன் கூடியவனாக, ஸம்ஸாரம் என்ற கடலில் அழுந்திக் கிடக்கும் என்னை, அவரை நான் துதிக்கவேண்டும் என்று எண்ணாமல், தனது உயர்ந்த க்ருபை காரணமாக தானாகவே நான் உள்ள இடம் தேடி வந்தார். என்னைத் தனக்கு அடிமையாக்கி, கைங்கர்யம் செய்யும்படியாகத் திருத்திக் காப்பாற்றினார். மேலும் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், நாதமுனிகள், ஆளவந்தார் என்ற பலரும் தன்னைக் குறித்து முன்பே விசேஷமாக அறியும்படி இருந்தார். பெரியபெருமாள் திருவடிகளில் அனைத்து சேதநர்களும் கரையேறும்விதமாகச் சரணாகதி என்னும் உயர்ந்த தவம் செய்தார். இப்படிப்பட்ட எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்கள் அனைத்து திசைகளிலும் பரவி, எல்லையற்ற தேஜஸ்ஸுடன் பரவி, பூமி எங்கும் ஒரே போன்று காணப்படுகின்றன", என்கிறார்.

வ்யாக்யானம் – (அரு) "ஸ மஹாத்மா ஸுதுர்லப:" என்று கீதாசார்யன், தான் அவதரித்த விபவாவதாரத்திற்கு பிற்காலத்திலே நம்மாழ்வா ரவதரிக்கையாலே அவருடைய காட்சி தனக்கு லபியாதே போந்ததேயென்று விசாரித்துச் சொன்னானென்று பெரியவாச்சான்பிள்ளை இவ்வாக்யத்துக்கு அர்த்தமருளிச் செய்கையாலே, "அரு" என்று துர்லபரான நம்மாழ்வாரைச் சொல்லுகிறது. (முனிவர்) "வாஸுதேவஸ் ஸர்வம்" என்றும், "உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ண னெம்பெருமான்" என்றும் பதினாறு வருஷம் மநநம் பண்ணிக் கொண்டிருந்த அர்த்தத்தையிறே பிற்பாடு அவர் வெளியிட்டு ப்ரபந்தீகரித்தது. இது தன்னையும் பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செய்தாரிறே. இப்படி அத்யந்த துர்லபராய், மநந சீலரான நம்மாழ்வாரும், அவருடைய க்ருபா விஷயபூதரான நாதமுனிகளும், ஆளவந்தாரும் இவருடைய பவிஷ்யதாசார்யா விக்ரஹத்தையும் ஆராதித்துக் கொண்டு இவருடைய திருவவதாரத்தை மநநம் பண்ணிக் கொண்டு, அநேக ப்ரயத்நங்களைப் பண்ணிக் கொண்டு போருகையாலும் அவர்களையும் சேரப்பிடித்து, "முனிவர்" என்கிறார்.

விளக்கம் – (அரு) - "அரு" என்பது கிடைப்பதற்கு அரியவரான நம்மாழ்வாரைக் குறிக்கும். எப்படி? ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை, "கீதையில் (7-19) – ஸ மஹாத்மா துர்லப: - அப்படிப்பட்ட மஹாத்மா கிட்டுவதற்கு அரியவன் – என்று கீதாசார்யன் நெகிழ்ந்து உரைத்தான்; யாரைக் குறித்து என்றால் - க்ருஷ்ணனாகிய தான் அவதரித்த விபவ அவதாரத்தின் பிற்காலத்தில் நம்மாழ்வார் அவதாரம் செய்ததன் காரணமாக, தனக்கு அப்படிப்பட்ட ஒருவர் கிடைக்காமல் போனாரே என்று இவ்விதம் உரைத்தான்", என்று கூறுவதால் ஆகும். (முனிவர்) - கீதை (7-19) – வாஸுதேவஸ் ஸர்வம் – வாஸுதேவனே அனைத்தும் ஆவான் – என்றும், திருவாய்மொழி (6-7-1) – உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் - என்றும் உள்ளபடி, பதினாறு வருடங்கள் அவர் மனனம் செய்தபடி இருந்த விஷயத்தை அல்லவோ திருவாய்மொழி முதலானவையாக இயற்றினார். இதனையே பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்தார் அல்லவோ? இவ்விதம் கிடைப்பதற்கு மிகவும் அரியவரும், மனனசீலரும் ஆகிய நம்மாழ்வார், அவருடைய க்ருபைக்கு இலக்கான நாதமுனிகள், ஸ்வாமி ஆளவந்தார் போன்றவர்கள், எம்பெருமானாருடைய பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை ஆராதித்து வந்தனர். மேலும் இவருடைய திருஅவதாரத்தை எப்போதும் எண்ணியபடி இருந்தனர்.

இப்படியாகப் பல முயற்சிகளை அவர்கள் செய்தபடி இருந்ததால், அவர்களையும் ஒன்றாகச் சேர்த்து "முனிவர்" என்கிறார்.

வ்யாக்யானம் – (தொழும்) "பூர்வே மூர்த்நா யஸ்யாந்வயம் உபகதா தேசிகா முக்திமாபு:" என்கையாலே, அவர்கள் இவரே நமக்கு உத்தாரகரென்று ப்ரதிபத்தி பண்ணும்படி யிருக்குமவராய். (தவத்தோன்) "தஸ்மாந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தமாஹு:" என்று ச்லாகிக்கப்படுகிற பகவத் சரணாகதி நிஷ்டரான. "காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத் க்ஷமைவ ஸா ச த்வயைவ கமலா ரமணே அர்த்திதா யத் க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம்" என்று இவ்வர்த்தத்தை ஜீயரு மருளிச் செய்தாரிறே. (எம்மிராமாநுசன்றன்) எங்களுக்கு வகுத்த சேஷியான எம்பெருமானார் தம்முடைய. (புகழ்) கல்யாண குணங்கள். "இராமானநுசன் தொல் புகழ்" என்று பாடமானபோது, அநாதியாய் ஸ்வாபாவிகங்களான கல்யாணகுணங்களை யென்றபடி. இப்படிப்பட்ட கல்யாணகுணங்கள்.

விளக்கம் – (தொழும்) - பூர்வே மூர்த்நா யஸ்யாந்வயம் உபகதா தேசிகா முக்திமாபு: - எம்பெருமானாருக்கு முற்பட்ட ஆசார்யர்கள் அவருடைய திருமுடி ஸம்பந்தத்தினால் முக்தி அடைந்தார்கள் - என்பதால் அவர்கள் அனைவரும் எம்பெருமானாரே நம்மைக் கரையேற்ற வல்லவர் என்று அறிந்து கொண்டாடும்படி உள்ளவராய். (தவத்தோன்) – தஸ்மாந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தமாஹு: - ஆகவே ந்யாஸம் என்னும் ப்ரபத்தியை அனைத்து தவங்களுக்கும் மேலாகக் கருதுகிறார்கள் - என்று கொண்டாடப்படுகின்ற பகவானிடம் சரணம் புகுந்து அந்த நிஷ்டையில் நிலை நிற்பவராய். யதிராஜ விம்சதி (18) - காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத் க்ஷமைவ ஸா ச த்வயைவ கமலா ரமணே அர்த்திதா யத் க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம் - யதிராஜரே! ஒருவன் தனது மனம், வாக்கு, செயல் ஆகிய மூன்றின் மூலம் எண்ணற்ற பாவங்களைத் தொடர்ந்து செய்தபடி இருக்கலாம். அப்படிப்பட்டவனுக்கு மூன்று காலத்திலும் ஸ்ரீரங்கநாதனால் மட்டுமே அடைக்கலம் அளிக்க இயலும். ஆனால் அவனும் அதனை நேரடியாகச் செய்வதில்லை. அவன், தாமரை மலரில் வீற்றுள்ள ஸ்ரீரங்கநாச்சியாருடன் சேர்ந்து நிற்கும் பங்குனி உத்தர நன்னாளில், நீ அருளிச் செய்த சரணாகதி கத்யங்கள் மட்டுமே என்னைப் போன்றவர்களைக் காக்க வல்லவை ஆகும் – என்று இந்தக் கருத்தை ஸ்வாமி மணவாளமாமுனிகளும் அருளிச்செய்தார் அல்லவோ? (எம் இராமாநுசன்) - எங்களுக்கு இயற்கையாகவே

எஜமானராக உள்ள ஸ்வாமி எம்பெருமானாருடைய. (புகழ்) - திருக்கல்யாணகுணங்கள், இதனை "இராமாநுசன் தொல் புகழ்" என்று கொண்டால் - எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி இயல்பாகவே உள்ள திருக்கல்யாணகுணங்கள் - என்று கருத்து. இப்படிப்பட்ட திருக்கல்யாணகுணங்கள்.

வ்யாக்யானம் – (கொழுந்து விட்டோடிப் பரவும் வெங்கோள் வினையால் நிரயத்தழுந்தி யிட்டேனை) மேன்மேலும் தலைபெற்று சீக்ரகதியாய்க் கொண்டு லோகமெல்லாம் வ்யாபித்து நிற்பதாய், "துராசாரா:" என்கிறபடியே அக்ருத்யகரண க்ருத்யாகரண ரூபமாய் இருக்கையாலே, "க்ஷிபாமி", "ந க்ஷமாமி" என்னும்படியான பகவந் நிக்ரஹத்துக்குடலாய் "யத்ப்ரஹ்மகல்ப நியுதாநுபவே அப்யநாச்யம்" என்கிறபடியே அநுபவ ப்ராயச்சித்தங்களாலும் நசிப்பிக்க வொண்ணாதபடி, ப்ரபலமான துஷ்கர்மத்தாலே, "மற்ற நரகம்" என்னும்படி "வானுயரின்ப"த்துக் கெதிர்த்தட்டாய், அநந்த க்லேச பாஜநமான ஸம்ஸாரமாகிற "விடியா வெந்நரக"த்திலே நிமக்நராய், கரைகாணாதே அழுந்திக் கிடக்கிற வென்னை. வெம்மை – க்ரௌர்யம். கோள் – மிடுக்கு.

விளக்கம் – (கொழுந்து விட்டோடிப் பரவும் வெங்கோள் வினையால் நிரயத்து அழுந்தி யிட்டேனை) - மேன்மேலும் ஓங்கி வளர்ந்து, மிகவும் விரைவாக அனைத்து லோகங்களிலும் பரவி நிற்பதாக உள்ளது. எது இப்படி உள்ளது என்றால், தனது வினைகள் என்று அடுத்து உரைக்கிறார். கீதை (9-30) – துராசார: - இழிந்த செயல்களைக் கொண்டவன் - என்பதற்கு ஏற்ப, செய்யக்கூடாதவற்றைச் செய்தபடியும் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமலும் உள்ளதால், கீதை (16-19) – க்ஷிபாமி – (தாழ்ந்த பிறவிகளில்) வைக்கிறேன் – என்றும், வராஹபுராணம் – ந க்ஷமாமி – மன்னிக்கமாட்டேன் என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் வெறுத்துத் தள்ளுவதற்குக் காரணமாக உள்ளது. ஸ்ரீவைகுண்டஸ்தவம் (61) - யத்ப்ரஹ்மகல்ப நியுதாநுபவே அப்யநாச்யம் - நான்முகனின் காலத்தில் பதினாயிரம் கல்ப காலங்கள் அநுபவித்தாலும் கழியாத - என்பதற்கு ஏற்ப எத்தனை அனுபவித்தாலும், எத்தனை ப்ராயச்சித்தங்கள் செய்தாலும் தீர்க்க முடியாதபடி உள்ளதும் ஆகிய தீவினைகளால், திருவாய்மொழி (8-1-9) – மற்ற நரகம் - என்பதற்கு ஏற்ப, திருவாய்மொழி (8-1-9) – வானுயர் இன்பம் - என்பதற்கு எதிர்த்தட்டாக உள்ளதான, எல்லையற்ற துன்பத்திற்கு விளைநிலமாக உள்ள ஸம்ஸாரம்

என்பதனான, திருவாய்மொழி (2-6-7) – விடியா வெந்நரகத்து - என்னும் நரகத்தில் மூழ்கியபடி கரை காண இயலாதவிதத்தில் அழுந்திக் கிடக்கும் என்னை.

வ்யாக்யானம் – (வந்தாட்கொண்ட பின்னும்) என்னை ரக்ஷிக்கவேணுமென்று நான் விரகறியாத காலத்திலே எம்பெருமானார் தம்முடைய நிர்ஹேதுக க்ருபையாலே "விண்ணின் தலை நின்று" நானிருந்த மண்ணின் தலத்தே என்னைத் தேடிக் கொண்டு வந்து, என்னுடைய அஜ்ஞாநத்தைப் பார்த்துக் கைவிடாதே அடிமை கொண்ட பின்பு. சகாரம் அவதாரணார்த்தமாய், என்னை ஆட்கொண்ட பின்பு தானேயென்றபடி. (சுடர்மிக்கெழுந்தது) அவ்வளவில் பர்யவஸியாதே என்னை அங்கீகரித்து தரிப்பிக்கையாலே வந்த நிரவதிக தேஜஸ்ஸோடே கூட மேன்மேலும் கிளர்ந்தது. இன்னும் இப்படி விஷயீகரிக்கலாவார் ஆரேனு முண்டோவென்று மாத்ருசரைத் தேடிக் கொண்டு கிளர்ந்தது. இவரை ஆச்ரயித்த பின்பு அவர் ஆகாராந்தரத்தை பஜித்தாப்போலே காணும் அவையடங்கலும் இவரை விஷயீகரித்த பின்பு ஆகாராந்தரத்தை பஜித்தபடி. (அத்தால் நல்லதிசயம் கண்டதிருநிலமே) அத்யந்த பாபிஷ்டனான வென்னை விஷயீகரித்த பின்பு அவருடைய கல்யாணகுணங்களுக்குண்டான கிளர்த்தியாலே, "வஸுந்தரா புண்யவதீ" என்கிறபடியே "மேதினி நம் சுமையாறும் எனத் துயர் விட்டு விளங்கத்" தொடங்கிற்றென்கிறார்.

விளக்கம் – (**வந்தாட்கொண்ட பின்னும்**) – என்னைக் காப்பாற்றவேண்டும் என்றும், அதற்கு உபாயம் என்ன என்றும் அறியாமல் நின்றபோது, எம்பெருமானார் எந்தவிதமான காரணமும் இன்றிப் பொங்கும் தனது க்ருபையால், விண்ணின் தலை நின்று - என்பதற்கு ஏற்ப நான் இருந்த இடம் தேடி வந்து, எனது அறியாமையைக் கண்ட பின்னரும் என்னைக் கைவிடாமல், தனது அடிமையாக ஏற்றுக்கொண்ட பின்னர். இங்கு "பின்னும்" என்பதில் உள்ள உம்மைத்தொகை - "என்னை ஆட்கொண்ட பின்பு அல்லவோ" என்று பொருள் தருவதாகும். (சுடர் மிக்கு எழுந்தது) - அத்துடன் நின்று விடாமல், என்னை ஏற்றுக்கொண்டு காப்பாற்றிய காரணத்தால் உண்டான எல்லையற்ற தேஜஸ்ஸானது மேன்மேலும் வளர்ந்தது. இவ்விதம் கரையேற்ற வேண்டியவர்கள் வேறு யாரும் உள்ளனரா என்று தேடியபடி அந்த தேஜஸ் இருந்தது. (அத்தால் நல்லதிசயம் கண்டது இருநிலமே) - எல்லையற்ற பாபங்கள் நிறைந்தவனாகிய என்னை ஏற்றுக் கொண்ட

பின்னர், அவருடைய திருக்கல்யாணகுணங்களுக்கு ஏற்பட்ட கிளர்த்தி காரணமாக, வஸுந்தரா புண்யவதீ – பூமி புண்ணியம் செய்தது - என்பதற்கு ஏற்ப, மேதினி நம் சுமை ஆறும் எனத் துயர்விட்டு விளங்க - என்னும்படி துன்பம் அனைத்தும் நீங்கப் பெற்று விளங்கியது என்கிறார்.

வ்யாக்யானம் – (இருநிலம்) மஹாவிஸ்த்ருதையான பூமி. இருமை – பெருமை. அன்றிக்கே (இருநிலம்) - மஹாவிஸ்த்ருதையான இந்த ப்ருத்வியிலே. (அத்தால் நல்லதிசயங் கண்டது) என் போலே பாபிஷ்ட்டரை ரக்ஷித்த பின்புதானே எம்பெருமானாருடைய கல்யாணகுணங்கள் நிரவதிக ஔஜ்வல்ய யுக்தங்களாய்க் கொண்டு கிளம்புகையாலே, அக்கிளர்த்தியால் அவற்றினுடைய ஸ்வரூபத்துக்கு ஓரதிசயமானது எல்லாராலும் காணப்பட்டதென்று யோஜிக்கவுமாம்.

விளக்கம் – (இருநிலம்) - மிகுந்த பரப்பளவு கொண்ட இந்தப் பூமி. அல்லது இருமை என்றால் பெருமை என்றும் கொள்ளலாம். (அத்தால் நல்லதிசயம் கண்டது) – என்னைப் போன்ற பாபங்கள் செய்தவர்களைக் காப்பாற்றிய பின்னர் அல்லவோ எம்பெருமானாருடைய திருக்கல்யாணகுணங்கள் எல்லையற்ற ப்ரகாசம் பெற்று புறப்பட்டது. அதனால் அல்லவோ அவற்றின் ஸ்வரூபத்திற்கு உள்ள அதிசயமானது அனைவராலும் காணப்பட்டது என்றும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் – "சுடர் மிக்கெழுந்தது - கொழுந்து விட்டோடிப் படரும்" என்று அந்வயித்து – என்னையங்கீகரித்துக் கிளர்ந்த அக்கல்யாணகுணங்கள், என்போல்வா ராரேனும் இன்னும் இந்த லோகத்திலே யிருந்தால், அவர்களையுங் கூட ஒக்க ரக்ஷிக்க வேணுமென்னும் நோயாலே என்னையும் மேல்மேலனக் கொழுந்துவிட்டு அபிவ்ருத்தங்களாய்க் கொண்டு ஸகல திக்குகளிலும் வ்யாபியா நின்ற தென்றும் சொல்லவுமாம். இப்படியாயிற்று எம்பெருமானாருடைய கல்யாணகுண வைபவ மிருக்கும்படி யென்று கருத்து.

விளக்கம் – அல்லது "**சுடர் மிக்கெழுந்தது - கொழுந்து விட்டோடிப் படரும்**" என்று வரிசைப்படுத்தியும் பொருள் கொள்ளலாம். அதாவது என்னை ஏற்றுக்கொண்டு ஓங்கி வளர்ந்த அவருடைய திருக்கல்யாணகுணங்கள், என்னைப் போன்று இந்த லோகத்தில்

வேறு யாரும் இருந்தால், அவர்களையும் என்னைப் போன்றே காப்பாற்றவேண்டும் என்னும் ஆசையாலே மேன்மேலும் கொழுந்துவிட்டு வளர்ந்து கொண்டு, அனைத்து திசைகளிலும் பரவி நின்றது என்றும் கூறலாம். இவ்விதமாக எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களின் வைபவம் உள்ளது.

62. இருந்தேன் இருவினைப் பாசம் கழற்றி இன்று யான் இறையும்
வருந்தேன் இனி எம் இராமானுசன் மன்னு மாமலர்த்தாள்
பொருந்தா நிலையுடைப் புன்மையினோர்க்கு ஒன்றும் நன்மை செய்யாப்
பெருந்தேவரைப் பரவும் பெரியோர் தங்கழல் பிடித்தே

விளக்கவுரை – நமது எஜமானராக உள்ள எம்பெருமானாரின் தாமரைமலர் போன்ற அழகான திருவடிகளை ஒரு சில துர்மனம் கொண்டவர்கள் வந்து அண்டாமல் இருக்கக்கூடும். இப்படிப்பட்ட மனிதர்களுக்கு ப்ரம்மன், சிவனை விடவும் உயர்ந்த நித்யஸூரிகள் எந்தவிதமான நன்மைகளையும் செய்வதில்லை (நித்யஸூரிகளே நன்மை செய்யவில்லை என்றால், பகவான் கண்டிப்பாக ஏதும் செய்யமாட்டான் என்று கருத்து). இப்படிப்பட்ட நித்யஸூரிகளின் திருவடிகளையே எப்போதும் போற்றியபடி உள்ளவர்கள் கூரத்தாழ்வான் போன்ற உயர்ந்தவர்கள் ஆவர் (இங்கு பெருந்தேவர் என்ற பதம் பெரியபெருமாளையும்; பரவும் பெரியோர் என்ற பதம் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் போன்றவர்களையும் கூறுவதாகவும் கொள்ளலாம்). இப்படிப்பட்ட பெரியவர்களின் திருவடிகளை நான் அண்டி நின்ற பின்னர், பாசம் என்னும் விலங்கை கழற்றி விட்டேன். இனி நான் ஒரு நொடிப் பொழுதும் ஸம்ஸார துக்கம் மூலம் வருந்தமாட்டேன்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே ஸமஸ்த கல்யாண குணாத்மகரான எம்பெருமானார் தம்மைப் பெறவேணுமென்று தேடித் திரிந்தபடியையும், அவர் நிர்ஹேதுகமாகத் தம்மை யடிமை கொண்ட பின்பு அவர் தம்முடைய கல்யாணகுணங்கள் நிறம் பெற்றபடியையும் அருளிச் செய்து, இதிலே – "எம்பெருமானார் பர்யந்தமுமல்ல, அவருடைய தாஸ்யத்தைப் பண்ணிக்கொண்டு போருமவர்களுடைய பர்யந்தமுமல்ல, தம்முடைய தாஸ்யம்" என்று துர்மாநிகளாகக் கொண்டு வன்னெஞ்சரான ஆத்மாபஹாரிகளுக்கு வ்யதிரேகமுகேந தாஸ்யத்தைப் பண்ணுமவர்களுடைய ஸம்பந்தத்தாலே தமக்குண்டான கார்த்தார்த்த்யத்தை யருளிச்செய்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், அனைத்துவிதமான திருக்கல்யாணகுணங்களுக்கும் இருப்பிடமாக உள்ள எம்பெருமானார், திருவரங்கத்தமுதனாராகிய தன்னை அடையவேண்டும் என்றும், அனைத்து இடங்களிலும் தேடியபடி இருந்தார் என்றும், பின்னர் எந்தவிதமான காரணமும் இன்றி தன்னை அடிமையாக்கிக் கொண்ட பின்னரே அவருடைய திருக்கல்யாணகுணங்கள் அனைத்தும் ஒளியைப் பெற்றன என்றும் அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில் – ஒரு சிலர் எம்பெருமானார் அருகில் சுற்றி நிற்காமல், அவருடைய கைங்கர்யத்தில் எப்போதும் நிலைநிற்பவர்களைச் சுற்றி நிற்காமல், தங்களுக்குத் தாங்களே அடிமைகள் என்று இருப்பார். இப்படிப்பட்ட கர்வம் கொண்டவர்களும், வலிமையான உள்ளம் கொண்டவர்களும், ஸர்வேச்வரனுக்குச் சொந்தமான ஆத்மாவைத் தங்களுடையது என்று களவு செய்பவர்களும் ஆகிய மனிதர்களுக்கு, அவர்களைக் காட்டிலும் வேறுபட்டவிதத்தில், அவர்களுக்கும் கைங்கர்யம் செய்யும் சிலர் உள்ளனர். அப்படிப்பட்டவர்களுடைய ஸம்பந்தம் காரணமாகத் தனக்கு உண்டான பயன் பெற்ற தன்மையை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (எம்மிராமானுசன்) *"தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி"* என்றும், *"ஸ்ரீமத்குரூணாம் குலமிதம் அகிலம் தஸ்ய நாதஸ்ய சேஷ:"* என்கிறபடியே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாம் சேஷியான எம்பெருமானாருடைய. **(மன்னு மாமலர்த்தாள்) மன்னுகையாவது** ஸ்வாச்ரித ரக்ஷணத்திலே தீக்ஷித்து நிச்சலமாயிருக்கை. "திண் கழல்" என்னுமாபோலே. புஷ்பத்துக்கு மஹத்வமாவது காந்தி ஸௌகுமார்ய ஸௌரப்ய பாவநத்வாதி குண விசிஷ்டதை. இப்படிப்பட்ட பாவநத்வ போக்யத்வங்களையுடைனவாய், புஷ்பஹாஸ ஸுகுமாரமான திருவடிகளை. "சீராருமெதிராசர் திருவடிகள்" என்றும், "அழகாருமெதிராசரடியிணைகள்" என்றும் ச்லாகிக்கப்பட்ட திருவடிகளென்றபடி.

விளக்கம் – (எம் இராமாநுசன்) - *தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி* – *"குரு" என்னும் சொல் இராமாநுசனையே குறிக்கும் – என்றும், ஸ்ரீமத்குரூணாம் குலமிதம் அகிலம் தஸ்ய நாதஸ்ய சேஷ: - குருபரம்பரை முழுவதும் எம்பெருமானாரையே தனது எஜமானராகக் கொள்கிறது – என்றும்* கூறுவதற்கு ஏற்ப ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவருக்கும் எஜமானராக உள்ள எம்பெருமானாருடைய. (மன்னு மாமலர்த்தாள்) - மன்னுதல் என்றால் தன்னை அடைந்தவர்களைக் காப்பாற்றுதல் என்னும் விரதத்தில்

அசையாமல் இருத்தல். திண்கழல் - என்பது போன்று ஆகும். மலர் ஒன்றுக்கு மேன்மை என்பது ப்ரகாசத்துடன் இருத்தல், மென்மையாக இருத்தல், தூய்மையாக இருத்தல் போன்றவை ஆகும். இப்படிப்பட்ட தூய்மை, இனிமை போன்றவற்றுடன் கூடியவையாக, மலரைக்காட்டிலும் மென்மையாக உள்ளதான திருவடிகளை *ஆர்த்தி ப்ரபந்தம்* (30) – *சீராரும் எதிராசர் திருவடிகள் – என்றும், வாழி திருமாமம் – அழகாரும் எதிராசர் அடியிணைகள் - என்றும்* கொண்டாடப்படும் திருவடிகள்.

வ்யாக்யானம் – (பொருந்தாத நிலையுடைப் புன்மையினோர்க்கு) மர்க்கட முஷ்டியைப் போலே மூர்க்கித்து நின்று வந்தாச்ரயியாதபடியான துஸ்பாவத்தையுடைய துர்மாநிகளுக்கு. (ஒன்றும் நன்மை செய்யா) ஸ்வல்பமானாலும் அவர்களுக்கு ஹிதமாயிருப்பதொரு ப்ரயோஜநம் கல்பியாதே யிருக்கிற. (பெருந்தேவரை) (தேவரை) ப்ரஹ்மருத்ராதிகள். (பெருந்தேவர்) "யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா:" என்கிற நித்யஸூரிகள். ததம்சபூதரான திவ்யஸூரிகளென்னவுமாம். (பரவும் பெரியோர்தம்) – "மாத பிதா யுவதய:" என்கிற ச்லோகத்திலும், "பூதம் ஸரச்ச" என்கிற ச்லோகத்திலும் சொல்லுகிறபடியே அவர்களை ஸர்வகாலத்திலும் ஸர்வப்ரகாரத்தாலும் ஸ்தோத்ரம் பண்ணிக்கொண்டு போருமவர்களுடைய. (பெரியோர்) பெருமை ஜ்ஞாநத்தாலே யாகையாலே, ஜ்நாந ப்ரதாநமாயிறே பெருமையிருப்பது. "மொழியைக் கடக்கும் பெரும்புகழனான கூரத்தாழ்வான் முதலான முதலிகளுடைய. (கழல் பிடித்து) திருவடிகளை ஆச்ரயித்து. "நாராயணோபி விக்ருதிம் யாதி குரோ: ப்ரச்யுதஸ்ய துர்புத்தே: ஜலாத பேதம் கமலம் ஸோஷயதி ரவிர்ந போஷயதி" என்கையாலே, "இராமாநுசன் மன்னு மாமலர்த்தாள் பொருந்தா நிலையுடைப் புன்மையினோர்க்கென்றும் நன்மை செய்யப் பெருந்தேவர்" என்று ஸ்ரீய:பதியான பெரியபெருமாளையும், "பரவும் பெரியோர்" என்று பராங்குச பரகாலாதிகளையும் சொல்லவுமாம். அன்றிக்கே, "பெருந்தேவர்" என்றவித்தை எம்பெருமானாரிடத்திலே யொதுக்கி, "பரவும் பெரியோர் தம் கழல் பிடித்து" என்று த்வத் தாஸ தாஸ சரமாவதியான தாஸ்யத்திலே யூன்றியிருக்கிற அத்யாவஸாயத்தைச் சொல்லவுமாம். "புன்மையினோர்க்கென்றும் நன்மை செய்யா" என்று பாடமானபோது, அவர்களுக்கு ஒரு காலத்திலும் ஆநுகூல்யம் பண்ணாத என்று பொருளாகக் கடவது. புன்மையினோர் என்றது புன்மையை உடையோர் என்றபடி. புன்மை – பொல்லாங்கு. "பெருந்தேவனை" என்றும் பாடம் சொல்லுவர்கள். இப்படியான

பின்பு (இருந்தேனிருவினைப் பாசங்கழற்றி) புண்ய பாப ரூபேண இரண்டுவகைப் பட்டிருக்கிற கர்மமாகிற ப்ராப்ய ப்ரதிபந்தகமான பாசத்தைக் கடந்திருந்தேன். பந்த ஹேதுவாகையாலே ப்ராப்தி ப்ரதிபந்தகமென்கிறது. "ஸர்வ பாபேப்யோ மோக்ஷ யிஷ்யாமி" என்று அவன் சொன்னதே நமக்கு ப்ராப்தமாயிருந்ததென்றபடி. (இன்றியானிறையும் வருந்தேனினி) இப்போது நான் க்ஷண மாத்ரமானாலும் ஸம்ஸார துக்கத்தாலே க்லேசப்படக் கடவேனல்லேன். "அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" என்கிறபடியே ஸம்ஸார வெக்காயம் ஒரு க்ஷண மாத்ரமும் தட்டாதே ஸர்வதா ஆநந்த ரஸாநுபவத்தோடே யிருக்கக்கடவே னென்றதாய்த்து.

விளக்கம் – (பொருந்தாத நிலையுடைப் புன்மையினோர்க்கு) - வானரங்களுடைய கைகள் போன்று மடக்கிய விரல்களுடன் கூடியபடி மூர்க்கமாக நின்று அந்தத் திருவடிகளை அண்டாமல் தாழ்ந்த ஸ்வபாவத்தைக் கொண்டவர்களாகிய கர்வம் உடையவர்களுக்கு. (ஒன்றும் நன்மை செய்யா) - மிகவும் சிறிதாக இருந்தாலும் நன்மை ஏதும் செய்யாதபடி இருக்கின்ற. (தேவர்) நான்முகன், ருத்ரன் போன்றவர்கள். அல்லது (பெருந்தேவர்) - யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா: – என்றுள்ள நித்யஸூரிகள், அல்லது அவர்களுடைய அம்சமாகவே உள்ள திவ்யஸூரிகள் என்றபடி. (பரவும் பெரியோர்தம்) - *மாதா பிதா யுவதய:* - *தாய், தந்தை, பெண்கள் ஆகியோர் – என்பதிலும், பூதம் ஸரச்ச* – என்பதிலும் கூறுவதற்கு ஏற்ப அவர்களை எப்போதும், அனைத்துவிதங்களிலும் துதித்தபடி உள்ளவர்களுடைய. (பெரியோர்) - அவர்களுடைய பெருமை என்பது ஞானத்தால் உண்டாவதால், ஞானத்தை முதன்மையாகக் கொண்டு அல்லவோ பெருமை உள்ளது. மொழியைக் கடக்கும் பெரும்புகழான் - என்பதற்கு ஏற்ப உள்ள ஸ்வாமி கூரத்தாழ்வான் முதலானவர்களுடைய. (கழல்) - திருவடிகளை அண்டி நின்று. நாராயணோபி விக்ருதிம் யாதி குரோ: ப்ரச்யுதஸ்ய துர்புத்தே: ஜலாத பேதம் கமலம் ஸோஷயதி ரவிர்ந போஷயதி – தாமரையை மலரவைக்கும் அதே சூரியன், அந்தத் தாமரை நீரை விட்டு அகன்றதும் பொசுக்குவது போன்று, ஆசார்யனை விட்டு அகல்பவர்களுக்கு நாராயணனே துன்பத்தை அளிக்கிறான் - என்று கூறுவதால், இராமாநுசன் மன்னு மாமலர்த்தாள் பொருந்தா நிலையுடைப் புன்மையினோர்க்கென்றும் **நன்மை செய்யப் பெருந்தேவர்** – என்று மஹாலக்ஷ்மியின் நாதனாகிய பெரியபெருமாளையும், "பரவும் பெரியோர்" - என்று நம்மாழ்வார் மற்றும் திருமங்கையாழ்வார் போன்றவர்களையும் கூறலாம். அல்லது

“பெருந்தேவர்” என்பதை எம்பெருமானாருக்கு உரைத்து, “பரவும் பெரியோர்தம் கழல் பிடித்து” என்பதன் மூலம் அவருடைய கைங்கர்யத்தில் ஈடுபட்டு நிற்கும்படி என்றும் கூறலாம். “புன்மையினோர்க்கென்றும் நன்மை செய்யா” என்று கொண்டால், அவர்களுக்கு எந்தக் காலத்திலும் நன்மை செய்யாத என்று பொருள். புன்மை என்றால் தீமை, பொல்லாங்கு. இவ்விதம் ஆன பின்னர். (இருந்தேன் இருவினைப் பாசம் கழற்றி) - புண்ணியம், பாபம் என்பதான இரண்டுவிதமாக உள்ள கர்மம்; அதாவது இலக்கை அடையத் தடையாக உள்ள பந்தங்களைக் கடந்திருந்தேன். பந்தங்களுக்குக் காரணமாக கர்மம் உள்ளதால், அது இலக்கை அடையத் தடையாக உள்ளது என்று கூறப்பட்டது. கீதை (18-66) – ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி - அனைத்து பாபங்களிலிருந்தும் விடுவிக்கிறேன் - என்று அவன் உரைத்தது மட்டுமே நமக்கு இலக்காக உள்ள நிலை. (இன்று யான் இறையும் வருந்தேன் இனி) - இனி நான் ஒரு நொடிக்கூட ஸம்ஸார துக்கத்தால் துன்பம் அடையமாட்டேன். சரணாகதி கத்யம் – அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ - அதுவரை திருவரங்கத்தில் சுகமாக வசித்தபடி - என்பதற்கு ஏற்ப ஸம்ஸாரம் என்னும் உஷ்ணம் ஒரு நொடிக்கூட வருத்தாமல், எப்போதும் ஆனந்த ரஸத்துடன் இருக்கக்கடவேன் என்கிறார்.

63. பிடியைத் தொடரும் களிறன்ன யான் உன் பிறங்கிய சீர்
அடியைத் தொடரும்படி நல்கவேண்டும் அறுசமயச்
செடியைத் தொடரும் மருள் செறிந்தோர் சிதைந்தோட வந்து இப்
படியைத் தொடரும் இராமானுச மிக்க பண்டிதனே

விளக்கவுரை – வேதங்களை மறுக்கும் ஆறு மதங்களைப் பின்பற்றுபவர்கள், அந்த முள் நிறைந்த செடிகளை அண்டி இருப்பவர்கள் கண்டவுடன் பயந்து ஓடும்படியா, இந்தப் பூமியில் பரமபதத்திலிருந்து வந்து திருஅவதாரம் செய்த எம்பெருமானாரே! (ஆறு என்ற பதம் மூலம் – ஆட்டின் தலையை வெட்டிப் பலி கொடுத்தல், முள் நிறைந்த காட்டில் பஞ்ச அக்னி எழுப்பி கோரமான தவம் புரிதல், பாஷாண்டி வேடம் பூண்டபடி இருத்தல் முதலானவற்றையும் கூறுவதாகக் கொள்ளலாம்). உடையவரே! உம்முடைய ஞானம் எத்தகையது! எனக்கு ஒரு விண்ணப்பம் உள்ளது. அது என்னவென்றால் – பெண் யானையைத் தொடரும் ஆண் யானையைப் போன்று, இத்தனை ஆண்டுகளாக நான்

உலகவிஷயங்களின் பின் மட்டுமே சென்றபடி இருந்தேன். இவ்விதம் திரிந்த நான் இனி வரும் காலங்களில், இந்த உலகம் முழுவதும் நிரம்பிய புகழ் கொண்ட உன்னுடைய திருவடிகளை மட்டுமே, ஒருபோதும் நழுவாமல் அண்டி நிற்கவேண்டும். இப்படிப்பட்ட குணத்தை நீவிர் எனக்கு அருள வேண்டும்.

அவதாரிகை – கீழிற்பாட்டிலே "இராமானுசன் மன்னு மாலர்த்தாள்" பொருந்தா மனிசரைக் குறித்து ஹிதலேசமும் செய்யாத பெரியோரை அநுவர்த்திக்கும் மஹாத்மாக்களுடைய திருவடிகளை ஆச்ரயித்து, ப்ராப்தி ப்ரதிபந்தகங்களான புண்யபாப ரூப கர்மங்களை கழற்றிக் கொண்டு, ஸம்ஸார வெக்காயம் தட்டாதபடி யிருந்தேனென்று எம்பெருமானார் திருவடிகளுடைய ஸம்பந்தி ஸம்பந்தி பர்யந்தமாகச் செல்லுகிற ப்ரபாவத்தைக் கொண்டாடினார். இதிலே, அப்படிப்பட்ட திருவடிகளிலே தமக்குண்டான ப்ராவண்யாதிசயம் பிறக்கவேணுமிறே யென்றுகொண்டு, அவைதிக ஸமயத்தோரடங்கலும் பக்நராய் வெருவியோடும்படி அவதரித்து, பூலோகத்திலெங்கும் பாஹ்யரைத் தேடி, அவர்கள் மேல் படையெடுத்து, அவர்களைத் தேடித் திரியும்படியான ஜ்ஞாந பௌஷ்கல்யத்தை யுடையரான **எம்பெருமானாரே! தேவரீர் திருவடிகளிலே அதிமாத்ர ப்ராவண்யத்தை அடியேனுக்குத் தந்தருளவேணுமென்று நேர்கொடு நேரே விண்ணப்பம் செய்கிறார்.**

விளக்கம் - கடந்த பாசுரத்தில் – எம் இராமாநுசன் மன்னுமாமலர்த்தாள் - என்பதற்கு ஏற்ப உள்ளதான எம்பெருமானாருடைய தாமரை போன்ற திருவடிகளில் தங்களுடைய சிந்தனையை வைக்காத மனிதர்களைக் குறித்து சிறிதளவும் நன்மையை விடாமல் உள்ளவர்களைத் தொடர்ந்தபடி உள்ள மஹாத்மாக்களுடைய திருவடிகளை அண்டி நின்று, அடையப்பட வேண்டிய இலக்கிற்கு இடையூறாக உள்ளதான புண்ணிய பாப கர்மங்களை நீக்கியபடி, ஸம்ஸாரத்தின் கொடுமைகள் அண்டாதபடி நின்றேன் என்று எம்பெருமானாருடைய திருவடிகளின் தொடர்பு உள்ளவர்கள், அவர்களின் தொடர்பு உள்ளவர்கள் முடிய உள்ளவர்களுடைய ப்ரபாவத்தைக் கொண்டாடினார். இந்தப் பாசுரத்தில் அப்படிப்பட்ட எம்பெருமானாருடைய திருவடிகளில் தனக்கு ஏற்பட்ட அளவு கடந்த ப்ரீதி நிலைக்கவேண்டும் என்று கொண்டு, "வைதிகம் அல்லாத மதங்கள் அனைத்தும் ஓடும்படியாகக் செய்யும்விதத்தில் அவதரித்து, இந்த உலகில் வேதங்களுக்குப் புறம்பாகப் பேசுபவர்களைத் தேடி, அவர்கள் மேல் படை எடுத்து, அதன் பின்னர்

அவர்கள் எங்கு சென்றார்கள் என்று மற்றவர்கள் தேடித் திரியும்படியாக ஞானத்தைக் கொண்ட எம்பெருமானாரே! நீவிர் உம்முடைய திருவடிகள் குறித்த மிகவும் அதிகமான ப்ரீதியை மட்டும் எனக்கு அளிப்பீராக", என்று நேருக்கு நேராக விண்ணப்பம் செய்கிறார்.

வ்யாக்யானம் – (அறு சமயச் செடியை) தூறு மண்டிக் கிடக்கிற பாஹ்ய ஷட் ஸமயங்களை. **செடி –** தூறு. அன்றிக்கே **அறு** என்று அநுஷ்டாந தசையிலே யற்றிருக்கிற ஸமயங்களென்னுதல்; ஸாதநதசையில் ஆட்டையறுத்துக் கொடுக்கையும், தலையையறுத்துக் கொடுக்கையும், கல்லும் முள்ளுமான காட்டிலே பஞ்சாக்நி மத்யத்திலே தபஸ்ஸு பண்ணுகையும், பஸ்மதாரண மல லேபநாதி துர்வ்யாபாரங்களை பண்ணுகையும், ப்ராப்தி தசையிலும் பாஷாண கல்பமாயிருக்கையும் முதலான துக்கங்களாலே வ்யாப்தங்களாகையாலே வருத்ததோடே பிணைந்திருக்கிற ஸமயங்களென்னுதல். **(தொடரும் மருள் செறிந்தோர்)** இப்படிப்பட்ட துர்மதங்களாகிற கஹநத்திலே த்ருஷ்டி விஷமான பாஷாணங்கட்கெல்லாம் தலைசாய்ந்து, "பஹுசாகா: ஹி அநந்தா: ச புத்தய: அவ்யவஸாயிநாம்" என்கிறபடியே நின்றவா நில்லா நெஞ்சினராய்க் கொண்டு துர்மதங்களை அநுவிதாநம் பண்ணுகைக்குறுப்பான அறிவுகேடு குடி கொண்டவர்கள். **மருள் செறிகையாவது** - அறிவுகேடு திரளுகை. (சிதைந்தோட) ஸிம்ஹத்தை கண்டு ம்ருகங்கள் ஓடுமாப்போலே இவரைக் கண்டு துஷ்ட ஸமயத்தார் பக்ந ஹ்ருதயராய் வெருவி ஓடும்படியாக. (வந்திப்படியைத் தொடரும்) பரமபதத்தில் நின்றும் இவ்வளவாகத் தாமே வந்து, இந்த பூமியிலே அந்த ப்ரதிபக்ஷங்கள் மேலே படை திரட்டி திரியும். படி – பூமி. அன்றிக்கே, "**அவன் பின் படரும் குணன்**" என்கிறபடியே இந்த பூமியிலுள்ளாரை விஷயீகரிக்கைக்காக அவஸரம் பார்த்துத் தொடர்ந்து திரியுமவரென்னவுமாம். **(இராமாநுசா)** எம்பெருமானாரே. **(மிக்க பண்டிதனே)** தேவரீருடைய ஜ்ஞாந பௌஷ்கல்யமிருக்கிறபடி எங்ஙனே! என்று ஆச்சர்யப்பட்டு ஸம்போதிக்கிறார் காணும். காளஹஸ்தியில் நின்றும் சைவர்கள் திருமலை மேலே வந்து தங்களுடைய துர்மத ப்ரவர்த்தநம் பண்ணத் தொடங்க, அவ்விடத்துக்கு இவரெழுந்தருளி அவர்களை ஜயிக்க அவர்கள் பக்நராய் ஓடிப்போனார்களென்றும், திருநாராயணபுரத்துக்கு ஸமீபத்திலே ஜைநர் இவரோடே ப்ரஸங்கித்து பக்நராய்ப் போனார்களென்றும், அதுக்குப் பிற்பாடு திக்விஜயார்த்தமாக ஆஸேது ஹிமாசல பர்யந்தம் ப்ரதிவாதிகளை நாடி பூமிப் பரப்பெல்லாம் ஸஞ்சரித்து தம்முடைய பாண்டித்யத்தாலே ஸரஸ்வதீ பீடத்திலே யிருந்த குத்ருஷ்டிகளை ஜயித்தாரென்றும் ப்ரஸித்தமிறே. இந்த ஸம்போதநத்தால் – எம்பெருமானாரே! எனக்கொரு அபேக்ஷை

யிருக்கிறது. அத்தை விண்ணப்பம் செய்கிறேனென்னுமிடம் இவர்க்கபிப்ராயமாகத் தோற்றுகிறது.

விளக்கம் – (**அறு சமயச் செடியை**) – தூறு மண்டிக் கிடக்கும் வேதங்களுக்குப் புறம்பாக உரைக்கும் ஆறு மதங்களை. அல்லது "அறு" என்பதன் மூலம் அனுஷ்டானங்கள் ஏதும் இன்றி உள்ள மதங்கள் எனலாம். ஆட்டைப் பலிகொடுத்தல், தலையை அறுத்துக் கொடுப்பது, கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் ஐந்துவிதமான அக்னியை வளர்த்து அதன் நடுவில் நின்று தவம் இயற்றுவது, சாம்பலை எடுத்து தீய செயல்களில் ஈடுபடுவது, இலக்கை அடையும் நிலையில் கூட போலியாக இருப்பது போன்ற துக்கங்கள் பலவும் தொடர்ந்தபடி உள்ள செய்கைகளுடன் பின்னிப் பிணைந்துள்ள மதங்களை. (**தொடரும் மருள் செறிந்தோர்**) - இப்படிப்பட்ட துர்மதங்கள் என்பதான புற்றுகளில், பார்வை மூலமே எரிக்கவல்ல நாகங்கள் போன்ற கொள்கைகள் அனைத்திற்கும் தலைசாய்த்து, கீதை (2-41) - பஹுசாகா: ஹி அநந்தா: ச புத்தய: அவ்யவஸாயிநாம் - சாஸ்திரங்கள் கூறும் அனைத்து வகையான கர்மங்களும் இயற்றப்படும்போது, ஒரே சிந்தனையுடன் ஒரே குறிக்கோளுடன் மட்டுமே புத்தி காணப்படுகிறது - என்பதற்கு ஏற்ப ஒரு இடத்தில் மனதை நிலை நிறுத்த இயலாமல், அந்தத் துர்மதங்களைக் கைக்கொண்டு நிற்பதற்குக் காரணமாக உள்ள அறிவுகேடு குடி கொண்டவர்கள். (சிதைந்தோட) – சிங்கத்தைக் கண்ட மற்ற விலங்குகள் அச்சம் கொண்டு ஓடுவது போன்று, எம்பெருமானாரைக் கண்ட தீய மதத்தினர், பற்றி எரியும் இதயங்களுடன் ஓடும்படியாக. (வந்து இப்படியைத் தொடரும்) - பரமபதத்திலிருந்து இங்கு தாமாகவே வந்து, இந்தப் பூமியில் உலவுகின்ற அந்தப் புறம்பான மதங்கள் மீது படை திரட்டியபடி உள்ள. அல்லது இராமானுச நூற்றந்தாதி (36) – அவர் பின் படரும் குணன் - என்பதற்கு ஏற்ப இந்தப் பூமியில் உள்ளவர்கள் அனைவரையும் தனது ஸித்தாந்தத்தில் ஈடுபடுத்த சரியான நேரம் பார்த்து எங்கும் சென்றபடி உள்ளவர். (இராமானுசா) இப்படிப்பட்ட எம்பெருமானாரே! (மிக்க பண்டிதனே) – உம்முடைய ஞானத்தின் முழுமைதான் எத்தகையது! இப்படியாக வியந்து அழைக்கிறார். காளஹஸ்தியிலிருந்து சைவர்கள் திருமலைக்கு வந்து தங்களுடைய துர்மதத்தைப் பரப்ப முயன்றபோது, அங்கு எம்பெருமானார் எழுந்தருளி, அவர்களை வாதத்தில் வென்றார். இதனால் அவர்கள் அச்சம் கொண்டு ஓடினர். திருநாராயணபுரத்தின் அருகே ஜைனர்கள் இதே போன்று இவருடன் வாதம் செய்து தோற்று ஓடினார்கள். அதன் பின்னர், திக்விஜயமாக ஸேதுக்கரை தொடங்கி இமயமலை முடிய உள்ள அனைத்து இடங்களிலும்

தன்னுடன் வாதம் செய்பவர்கள் யாரேனும் உள்ளனரா என்று எதிர்பார்த்து, இந்தப் பாரதம் முழுவதும் சென்று, தனது அறிவால் காஷ்மீரத்தில் உள்ள சாரதாபீடத்தில் இருந்த மதத்தவர்களை வென்றார் என்பது அனைவரும் அறிந்ததே ஆகும். இத்தகைய செய்கைகள் காரணமாக "எம்பெருமானரே! எனக்கு ஒரு விருப்பம் உள்ளது. அதனை நான் விண்ணப்பிக்கிறேன்" என்று கூறுவது போன்று உள்ளது.

வ்யாக்யானம் – அதென்னென்ன, அருளிச்செய்கிறார். **(பிடியைத் தொடரும் களிறென்ன யான்)** பிடியினளவில் வ்யாமோஹாதிசயத்தாலே ஒன்றாலும் நிவர்த்திப்பிக்க வொண்ணாதபடி அத்தையே பின்பற்றித் திரியாநின்றுள்ள களிறு போலே இத்தனை நாளும் விஷயாந்தர ப்ரவணனாய்த் திரிந்த போட்கனான அடியேன். அன்றிக்கே, "யா ப்ரீதிர் அவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ த்வாம் அநுஸ்மரத: ஸ மே ஹ்ருதயாந்மாபஸர்ப்பது" என்கிறபடி இப்படிப்பட்ட ப்ரீதி ப்ரகர்ஷத்தை யுடையேனாம்படி அடியேனை க்ருபை பண்ணியருள வேணுமென்கிறார் என்னவுமாம். பிடியைத் தொடரும் களிறென்ன என்றது **களிறென**ன்று சொல்லலாம்படியென்கை. **பிடி** - பெண் யானை, களிறு - ஆண் யானை, படி – ஸ்வபாவம், நல்கவேண்டும் – கொடுத்தருளவேணும். இத்தனை நாளும் இப்படித் திரியும் நான் இப்போது **(உன் பிறங்கிய சீரடியைத் தொடரும்படி)** கிளர்ந்து லோகமெல்லாம் வ்யாபித்திருக்கிற பாவநத்வாதி குண க்ரிஷ்டமான தேவரீருடைய திருவடிகளில் ப்ராவண்யாதிசயம் பிறந்து ஒருநாளும் இடைவிடாதே யிருக்கும் ஸ்வபாவத்தை, (நல்க வேண்டும்) எனக்குக் கொடுத்தருள வேணும். இப்படிப்பட்டவனாக என்னை அநுக்ரஹிக்கவேணுமென்றபடி. "**பிடியைத் தொடருங் களிறு**" **என்னலாமோவென்னில்**, "மாதா பிதா யுவதய:" என்று ஆளவந்தார் அருளிச்செய்கையாலே இப்படி யருளிச்செய்யத் தட்டில்லையிறே. பெருமாள் காட்டுக்கெழுந்தருளின பின்பு சக்ரவர்த்தி கௌஸல்யையை நினைத்து தன்னுடைய க்லேசத்தாலே "எத்தனை க்லேசப்படுகிறாளோ" என்று தானும் போர நொந்து தன்னை அவள் போஷித்தபடிகளை வர்ணிக்குமிடத்தில் "யதா யதா ஹி கௌஸல்யா தாஸீவச்ச ஸகீவ ச பார்யாவத் பகிநீவச்ச மாத்ருவச்ச உபதிஷ்டதே" என்று சொன்னானிறே. ரிஷியும் ப்ரீத்யதிசயத்தை வெளியிடுகைக்காகச் சொன்னானாகையாலே குறையில்லை.

விளக்கம் – அத்தகைய விண்ணப்பம் என்ன என்று அருளிச்செய்கிறார். (**பிடியைத் தொடரும் களிறென்ன யான்**) – பெண்யானை ஒன்றின் மீது கொண்ட மயக்கம் காரணமாக, வேறு எதனாலும் தடுக்க இயலாதபடி அதனைத் தொடர்ந்து செல்லும் ஆண் யானை போன்று, இத்தனை காலமும் உலகவிஷயங்களின் பின்னே அவற்றால் ஈடுபடுத்தப்பட்டு அடியேன் திரிந்தபடி இருந்தேன். அல்லது, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-20-19) – யா ப்ரீதிர் அவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ த்வாம் அநுஸ்மரத: ஸ மே ஹ்ருதயாந்மாபஸர்ப்பது – (ப்ரஹ்லாதன் வேண்டுவது) நல்லது கெட்டதைப் பிரித்து அறியும் விவேகம் அற்றவர்களுக்கு இந்த உலகவிஷயங்களில் உள்ள பற்றானது, அது போன்று, எனக்கு உன் மீது உண்டாகவேண்டும் - என்பதற்கு ஏற்ப இப்படிப்பட்ட மிகுந்த ப்ரீதி கொண்டவனாக ஆகும்படியாக அடியேனை க்ருபை செய்து ஏற்கவேண்டும் என்கிறார் என்றும் கூறலாம். இத்தனை காலமும் இவ்விதம் விஷயங்களின் பின்னே திரிந்த நான் இப்போது (உன் பிறங்கிய **சீரடியைத் தொடரும்படி**) - ஓங்கி எழுந்து, இந்த உலகம் முழுவதும் பரவியபடி நிற்கின்ற தூய்மை முதலான பல குணங்கள் ஒருங்கே அமையப்பெற்றதான உம்முடைய திருவடிகளில் எனக்கு அளவு கடந்த காதல் ஏற்பட்டு, அவற்றை ஒருநாளும் பிரிய இயலாமல் உள்ள தன்மையை. (நல்கவேண்டும்) - எனக்குக் கொடுத்தருளவேண்டும். அதாவது இப்படிப்பட்டவனாக நான் நிற்கும்படி எனக்கு அனுக்ரஹம் செய்யவேண்டும். ஆனால் "**பிடியைத் தொடரும் களிறு**" என்று கூறுவது சரியா; அதாவது ஒரு பந்தத்தை உண்டாக்கும்விதமாக உள்ளதை உதாரணம் காண்பிக்கலாமா என்று கேட்கலாம். ஸ்வாமி ஆளவந்தார் - மாதா பிதா யுவதய: - என்று இதே போன்று அல்லவோ அருளிச்செய்தார்? இராமன் கானகம் சென்றவுடன் தசரதன் கௌஸலையை எண்ணி, "என்னுடைய துன்பம் காரணமாக இவள் எத்தனை துன்பம் அடைகிறாளோ", என்று நொந்துகொண்டு, தன்னை அவள் பாதுகாத்த விதத்தினை – இராமாயணம் அயோத்யாகாண்டம் (12-68) – யதா யதா ஹி கௌஸல்யா தாஸீவச்ச ஸகீவ ச பார்யாவத் பகிநீவச்ச மாத்ருவச்ச உபதிஷ்டதே – (தசரதன் கூறுவது) கௌஸலை பணிப்பெண்ணாகவும், தோழியாகவும், மனைவியாகவும், சகோதரியாகவும், அன்னையாகவும் – என்று கூறியது காணலாம்; ஆக இப்படி அன்பின் மிகுதியை வெளிப்படுத்த வால்மீகியும் கூறியதான இந்த உதாரணத்தில் தோஷம் இல்லை

64. பண்தரு மாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய்

விண்டிட எங்கள் இராமானுசமுனி வேழம் மெய்ம்மை
கொண்ட நல்வேதக் கொழுந்தண்டம் ஏந்திக் குவலயத்தே
மண்டி வந்து ஏன்றது வாதியர்காள் உங்கள் வாழ்வு அற்றதே

விளக்கவுரை – தன்னை அண்டியவர்களைக் காப்பாற்றும் தன்மை உடையதும், தான் விரும்பியவர்களுக்கு மாலை சூடி அவர்களுக்கு பட்டாபிஷேகம் செய்விக்கும் திறனுள்ளதும் ஆகிய யானை போன்று எங்கள் எம்பெருமானார் உள்ளார். இத்தகைய யானையின் மதநீராக வழிவது எது என்றால் – நம்மாழ்வார் அருளிச்செய்த, அழகான பண்களுடன் கூடிய, தெளிவான தமிழில் உள்ள திருவாய்மொழி ஆகும். இத்தகைய திருவாய்மொழி என்னும் மதநீர் எங்கும் பரவி ஓடும்படி யானையாகிய எம்பெருமானார் வந்தார். இந்த யானையின் தந்தமாக எது உள்ளது என்றால் – (தந்தம் = உடையவர் திருக்கரத்தில் உள்ள த்ரிதண்டம் என்றும் கூறலாம்) ஸத்யமே வடிவமாக உள்ளதும், மிகுந்த பெருமை உள்ளதும் ஆகிய வேதங்கள் ஆகும். அல்லது நம்மாழ்வாரின் தமிழ் வேதமாகிய திருவாய்மொழியைக் கூறியதாகவும் கொள்ளலாம். அல்லது பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதம் என்பதற்கு – ஸ்ரீமந் நாராயணன் என்னும் கடலில் இருந்து, ஆழ்வாராகிய மேகமானது கருணை என்னும் நீரை பருகி எடுத்தது; அதனை பெரியநம்பி என்னும் குன்றில் பெய்விக்க, அங்கிருந்து அந்தக் கருணையானது வழிந்து, மணக்கால்நம்பி – உய்யக்கொண்டார் – ஆளவந்தார் என்னும் ஆறுகளில் பாய்ந்து, எம்பெருமானார் என்னும் குளத்தை அடைந்து, ஸம்ஸாரிகளைக் காத்தது – என்று பொருள் கொள்ளலாம். இப்படிப்பட்ட த்ரிதண்டம் ஏந்திய இவர் செய்வது என்ன? யானையாக வந்து வேதங்களை மறுத்துக் கூறுபவர்களை மிதித்தும், தனது தந்தம் கொண்டு குத்தியும் ஓடச் செய்கிறார் என்று கருத்து. ஸர்வேச்வரன் எப்போதும் தனது திருக்கரங்களில் சங்கும் சக்கரமும் கொண்டது போன்று, எம்பெருமானார் எப்போதும் த்ரிதண்டத்துடன் உள்ளார். இப்படிப்பட்ட யானை இந்த பூமியில் உள்ள ஹிமாசலம், வேங்கடாசலம், சாரதாபீடம் ஆகிய இடங்களுக்கு வந்து, வாதம் செய்தவர்களைத் தள்ளியபடி நின்றது. எம்பெருமானாரின் வாதங்களை எதிர்த்து வாதம் செய்பவர்களே! உங்கள் வாழ்வு இத்துடன் முடிந்தது.

அவதாரிகை – "அறுசமயச் செடியைத் தொடரும் மருள் செறிந்தோர் சிதைந்தோட வந்து" என்று பாஹ்யமத நிரசநார்த்தமாக எம்பெருமானாரெழுந்தருளின ப்ரகாரத்தை அநுஸந்தித்தார் கீழ்; அந்த ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே பாஹ்யகுத்ருஷ்டிகளாகிற வாதிகளைப் பார்த்து, ராமாநுச முனியாகிற யானை, வேதாந்தமாகிற கொழுந்தண்டத்தைக் கையிலேயெடுத்துக் கொண்டு உங்களை நிக்ரஹிக்கைக்காக இந்த பூமியிலே நாடிக் கொண்டு வந்தது, இனி உங்களுடைய வாழ்வு வேரோடேயற்றுப் போயிற்றென்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் "அறுசமயச் செடியைத் தொடரும் மருள் செறிந்தோர் சிதைந்தோட வந்து" என்ற வேதங்களுக்குப் புறம்பாக உள்ள மதங்களைத் தள்ளும் விதமாக எம்பெருமானார் எழுந்தருளிய விதத்தை எண்ணினார். இதன் காரணமாக ஏற்பட்ட அளவு கடந்த மகிழ்ச்சியால் அந்த மதங்களை நோக்கி, "இராமாநுசமுனி என்னும் யானையானது, வேதாந்தம் என்றும் தண்டத்தைத் திருக்கரத்தில் கொண்ட உங்களைத் தகர்க்கும்விதமாக இந்தப் பூமியைத் தேடி வந்தது. இனி உங்களுடைய வாழ்வானது வேருடன் அறுந்துவிடும்", என்கிறார்.

வ்யாக்யானம் – (எங்களிராமாநுச முனி வேழம்) "எங்களிராமாநுசன், "எம்மிராமாநுசன்", "**என்னையாள வந்திப்படியில் பிறந்தது" என்று பாட்டுத்தோறும் இப்படி அருளிச்செய்தது, அவருடைய விக்ரஹ விஷய ப்ரேமாதிசயங் காணும். எங்களுக்காக வவதரித்த எம்பெருமானாராகிற மத்தகஜம், லோகத்தில் ப்ராக்ருத கஜம் போலே** ஜ்ஞாந ஸங்கோசமா யிருக்கை யன்றிக்கே ஸர்வதா அபதே ப்ரவ்ருத்தரான ஹீநரை நிரஸிக்கைக்கும், அவர்களுக்கு உபதேசித்து ஸந்மார்க்கத்திலே நிறுத்துகைக்கும், அநுகூலரை ரக்ஷிக்கைக்கும் மநநம் பண்ணுக்கைக்கு முடலான ஜ்ஞாந விகாஸத்தோடே யிருக்கிற ஆனை. இப்படி அப்ராக்ருதமான ஆனைக்குண்டான ஜ்ஞாநம் அதுக்குத் தக்கதாயிருக்குமிறே. கஜமாக உத்ப்ரேக்ஷிக்கிறது விபக்ஷிகளை சித்ரவதம் பண்ணவும், தாம் பரிக்ரஹித்தவர்களை பட்டாபிஷேக யோக்யராம்படி பண்ணவும் வல்லவ ராகையாலே.

விளக்கம் – (எங்கள் ராமாநுச முனி வேழம்) – "எங்கள் ராமாநுசன்", "எம் இராமாநுசன்", "என்னை ஆள வந்து இப்படியில் பிறந்தது" என்று ஒவ்வொரு பாசுரத்திலும்

அருளிச்செய்வது ஏன் என்றால், எம்பெருமானாருடைய திருமேனியில் மயங்கி ப்ரேமை கொண்டதால் ஆகும். எங்களுக்காக இந்த உலகில் அவதரித்த எம்பெருமானராகிய மதம் கொண்ட யானையானது, இந்த லோகத்தில் உள்ள மற்ற யானைகள் போன்று ஞானம் இன்றி அல்லாமல், அனைத்து விஷயங்களிலும் அபேத வாதத்தைக் கூறுகின்ற தாழ்ந்தவர்களைத் தள்ளுதற்காகவும், அவர்களுக்குச் சரியான கருத்துக்களை உபதேசித்து நல்மார்க்கத்தில் நிலைநிறுத்துவதற்காகவும், பகவத்விஷயத்தில் அநுகூலமாக உள்ளவர்களைக் காப்பதற்காகவும், மநநம் செய்வதற்கு ஏற்றபடியாக ஞானமலர்ச்சியுடன் கூடியதாகவும் உள்ள யானை. இவ்விதம் இந்த உலகில் காணமுடியாத யானைக்கு உள்ள ஞானம், இதற்குத் தக்கபடி இருக்கும் அல்லவோ? எம்பெருமானாரை ஏன் யானையாக உருவகம் செய்யவேண்டும் ? ஸித்தாந்தத்திற்கு முரணாகக் கூறும் வாதிகளை தனது வாதம் மூலம் சித்ரவதை செய்வதற்கும், தன்னால் ஏற்கப்பட்டவர்களுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைக்கவும் வல்லவர் என்பதால் ஆகும்.

வ்யாக்யானம் – (பண்டருமாறன் பசுந்தமிழ்) - எழுத்து அசை சீர் பந்தம் அடி தொடை நிரை நிறை ஓசை தளை இனம் யாப்பு பா துறை பண் இசை தாளம் முதலான செய்சொல்லு மிதுக்குண்டாகையாலே “யாழினிசை வேதத்தியல்” என்று காநோபலக்ஷிதங்களான ஸகல லக்ஷணங்களும் அநுஸந்தாதாக்களுக்குத் தெளிந்து அநுபவிக்கும்படியாயிருக்கிற. அன்றிக்கே, “பண்டு அரு” என்று பதச்சேதமாகில், பண்டு என்கிற பதம் காலபரமேயானாலும் “கங்காயாம் கோஷ:” என்கிறவிடத்தில் கங்காபதம் தீரவாசகமானாப்போலே லக்ஷணையாய் இச்சப்தம் காலீந வஸ்து வாசகமென்று சொல்லலாமிறே; அந்த பக்ஷத்திலே, “நித்யாத்மபூகதா சடகோப ப்ரனேஷ்யதி” என்கிறபடியே ப்ரதித்வாபராந்தத்திலும் வ்யாஸாவதாரம் பண்ணி ஸம்ஸ்க்ருத வேதங்களை ஸர்வேச்வரன் தானே வ்யவஸிக்குமாபோலே, ப்ரதி கலியுகாதியிலும் ஜ்ஞாந யோகியா யவதரித்து த்ரமிட வேதங்களை ஸர்வேச்வரனே வெளியிட்டுப் போகிறானென்று ப்ரஹ்ம பார்க்கவ வ்ருத்த பாத்மாதி புராணங்களிலே ஸுப்ரஸித்தமாகச் சொல்லுகையாலே நித்யமாய் அபௌருஷேயமா யிருந்துள்ள திருவாய்மொழி, பாகவதர்க்கொழிய அந்யருக்கு வாங் மநஸ்ஸுக்களாலே ஸ்பர்சிக்கவுங்கூட வரிதானவென்றபடி. “**மாறன்**” **என்று** நம்மாழ்வாருக்கு ப்ரதமோபாத்தமான திருநாமம்.

விளக்கம் – (பண்டருமாறன் பசுந்தமிழ்) – "எழுத்து அசை சீர் பந்தம் அடி தொடை நிரை நிறை ஓசை தளை இனம் யாப்பு பா துறை பண் இசை தாளம்" - என்பதற்கு ஏற்ப பலவும் திருவாய்மொழிக்கு உள்ளது என்பதால், தனியனில் "யாழினிசை வேதத்தியல்" என்று கூறுவதற்கு ஏற்ப கானத்தின் மூலம் காண்பிக்கப்படும் அனைத்துவிதமான லக்ஷணங்களும் தன்னை எப்போதும் கூறியபடி உள்ளவர்களுக்கு விளங்கும்படியாக உணர்த்தி, அவர்கள் அனுபவிக்கும்படி உள்ளதான. அல்லது "பண்டு + அரு" என்று பிரித்தால், "பண்டு" என்ற பதம் காலத்தைக் கூறுவதாக உள்ளது; "கங்காயாம் கோஷ:" என்பதில் உள்ள "கங்கை" என்ற பதம் லக்ஷணையாகக் கூறப்பட்டது போன்று இங்கு இந்தப் பதமும், "எல்லையற்ற காலம் முழுவதும்" என்ற பொருளில் உள்ளதாகக் கொள்ளலாம். இவ்விதம் கொண்டால் "நித்யாத்மபூகதா சடகோப ப்ரனேஷ்யதி" என்று கூறுவதற்கு ஏற்ப ஒவ்வொரு த்வாபர யுகத்திலும் ஸர்வேச்வரன் தானே வ்யாஸராக அவதரித்து, ஸம்ஸ்க்ருத மொழியில் அமைந்துள்ள வேதங்களை நிலைநாட்டுவது போன்று, ஒவ்வொரு கலியுகத்திலும் ஸர்வேச்வரன் தானே ஞானயோகியாக [நம்மாழ்வாராக] அவதரித்து தமிழ் வேதங்களை வெளியிட்டபடி உள்ளான் என்று கொள்ளவேண்டும். இந்தக் கருத்தானது ப்ரஹ்மபுராணம், பாத்மபுராணம் போன்ற பலவற்றிலும் விரிவாக உரைக்கப்படுவதால், நித்யமாகவும், மனிதர்களால் செய்யப்படாதது என்றுள்ளதும் ஆகிய திருவாய்மொழி. இது பாகவதர்கள் அல்லாதவர்களால் வாக்காலும் மனதாலும் தொடுவதற்கு அரியதாக உள்ளது. "மாறன்" என்பது நம்மாழ்வாருக்கு, அவர் பிறக்கக் காரணமான தந்தையின் திருநாமம்.

வ்யாக்யானம் – (பசுந்தமிழ்) அவராலே கட்டப்பட்டு, அஸங்கலிதமான சுத்த த்ரமிட பாஷையாய் விளங்குகிற திருவாய்மொழி. "மாறன் பணித்த தமிழ்மறை" என்றும், "ஈன்ற முதல் தாய் சடகோபன்" என்றும் சொல்லுகிறபடியே நம்மாழ்வாருடைய ஸம்பந்தியான திருவாய்மொழி யென்றபடி. (ஆநந்தம் பாய் மதமாய்) "லக்ஷ்மீநாதாக்ய ஸிந்தௌ சடரிபு ஜலத: ப்ராப்ய காருண்ய நீரம் | நாதாத்ராவப்யஷிஞ்சத் ததநு ரகுவராம்போஜ சக்ஷுர் ஜராப்யாம் | கத்வா தாம் யாமுநாக்யாம் ஸரிதமத யதீந்த்ராக்ய பத்மா சுரேந்த்ரம் | ஸம்பூர்ய ப்ராணிஸஸ்யே ப்ரவஹதி பஹுதா தேசிகேந்த்ர ப்ரமௌகை:" என்கிறபடியே – ஸ்ரீய:பதியாகிற கடலில் நின்றும், ஆழ்வாராகிற முகில் பெருங்கருணையாகிற நீரை முகந்து பெரியமுதலியாராகிற குன்று தன்னிலே வர்ஷிக்க, அக்கருணையானது,

மணக்கால்நம்பி, உய்யக்கொண்டாராகிற திருவருவியாய் பரமாசார்யரான ஆளவந்தாராகிற ஆற்றிலே சென்று, எம்பெருமானாராகிற பொய்கையைப் பூரித்து, பூர்வாசார்யர்களாகிற மடையாலே தடையறப் பெருகி, ஸம்ஸாரி சேதநராகிற பயிரை நோக்கி ரஷித்ததென்று சொல்லுகையாலே, "கவியமுதம்" என்றும், "தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலை" என்றும் ச்லாகிக்கும்படி ஸர்வர்க்கும் அம்ருதமய மாகையாலே, ஆநந்தாவஹமான திருவாய்மொழியாலே விளைந்த ஆநந்தமானது இவ்வளவாகப் பெருகி வாரா நின்றுள்ள அம்ருதமாய்க் கொண்டு. (விண்டிட) எல்லாக் காலத்திலும் எல்லாவிடத்திலும் தடையில்லாதே விஸ்த்ருதமாயிருக்க. விள்ளுதல் – விரிதலாய், விஸ்த்ருதியைச் சொல்லுகிறது.

விளக்கம் - (பசுந்தமிழ்) - அப்படிபட்ட நம்மாழ்வாரால் தூய்மையான தமிழில் அமைக்கப்பட்ட திருவாய்மொழி. "மாறன் பணித்த தமிழ்மறை" என்றும், "ஈன்ற முதல் தாய் சடகோபன்" என்றும் கூறுவதற்கு, ஏற்ப நம்மாழ்வாருடன் தொடர்புள்ள திருவாய்மொழி. (ஆநந்தம் பாய் மதமாய்) - லக்ஷ்மீநாதாக்ய ஸிந்தௌ சடரிபு ஜலத: ப்ராப்ய காருண்ய நீரம் | நாதாத்ராவப்யஷிஞ்சத் ததநு ரகுவராம்போஜ சக்ஷுர் ஜராப்யாம் | கத்வா தாம் யாமுநாக்யாம் ஸரிதமத யதீந்த்ராக்ய பத்மா சுரேந்த்ரம் | ஸம்பூர்ய ப்ராணிஸஸ்யே ப்ரவஹதி பஹுதா தேசிகேந்த்ர ப்ரமௌகை: - மஹாலக்ஷ்மியின் நாதனாகிய ஸ்ரீமந்நாராயணன் என்னும் ஸமுத்திரத்திலிருந்து பகவானின் கருணையை நம்மாழ்வார் என்னும் மேகம் எடுத்துக் கொண்டு வந்து, நாதமுனிக என்னும் பர்வதத்தின் மீது பொழிந்தது. அங்கிருந்து அந்தக் கருணை வெள்ளமானது, உய்யக்கொண்டார் மற்றும் மணக்கால்நம்பி என்னும் இரண்டு அருவிகளின் வழியே ஓடி வந்து, ஆளவந்தார் என்னும் மிகப் பெரிய நதியாக மாறியது. அந்த நதியிலிருந்து ஐந்து வாய்க்கால்களான பெரியநம்பி உள்ளிட்டோர் (பெரியநம்பி, திருவரங்கப்பெருமாள் அரையர், திருக்கோஷ்டியூர் நம்பி, திருமலைநம்பி, திருமாலை ஆண்டான்) மூலம் யதிராஜர் என்னும் மிகப்பெரிய ஏரியில் விழுந்தது. அங்கிருந்து பல கிளை வாய்க்கால்கள் (74 ஸிம்ஹாஸநாதிபதிகள்) மூலம் எங்கும் பாய்ந்தது - என்பதற்கு ஏற்ப மஹாலக்ஷ்மியின் நாயகன் என்ற ஸமுத்திரத்திலிருந்து, நம்மாழ்வாராகிய மேகமானது, பெரும் கருணை என்னும் நீரை முகர்ந்து கொண்டு, நாதமுனிகள் என்ற மலையில் பொழிந்தது; அந்தக் கருணை வெள்ளமானது மணக்கால்நம்பி, உய்யக்கொண்டார் என்னும் இரண்டு அருவிகளாகப்

பாய்ந்து, உயர்ந்த ஆசார்யராகிய ஆளவந்தார் என்ற நதியில் சென்று கலந்தது. அங்கிருந்து எம்பெருமானார் என்ற பொய்கையை நிரப்பி, பூர்வாசார்யர்கள் என்ற மடையால் தடையில்லாமல் திறக்கப்பட்டு, ஸம்ஸாரி சேதநர்கள் என்ற பயிர்களைக் காக்க ஓடிவந்தது என்று கூறுவர். இதனால் திருவாய்மொழி (8-10-5) – கவியமுதம் – என்றும், திருவாய்மொழி (9-4-9) – தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலை - என்றும் கொண்டாடும்படி அனைவருக்கும் அமிர்தமயமாக உள்ளதால், ஆனந்தம் பொங்கிப் பெருகின்ற திருவாய்மொழியால் உண்டான ஆனந்தம் என்பது இந்த அளவு பெருகுகின்ற அமிர்தமாக. (விண்டிட) - அனைத்து காலங்களிலும், அனைத்து இடங்களிலும் தடையின்றி பரவி நிற்க.

வ்யாக்யானம் – (மெய்ம்மை கொண்ட நல்வேதக் கொழுந்தண்டமேந்தி) மெய்ம்மை – ஸத்யம். அதாவது "வேத நூல் ஓதுகின்றது உண்மை" என்னும்படியான யதாபூதவாதித்வம். இப்படிப்பட்ட மெய்ப்பாட்டை யுடைத்தாய் யிருக்கையாலே ஸகல ப்ரமாண விலக்ஷணமான வேதம். நன்மை – வைலக்ஷண்யம். "ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரம்ம:" என்கிற பரத்வத்தை ப்ரகாசிப்பிக்குமதான வேதமென்றபடி. "*பராவர தத்வாநியதாவத் வேதயதீதி வேத:*" என்றிறே இதுக்கு வுயுத்பத்தி யிருப்பது. "மெய்ம்மை கொண்ட" என்ற விசேஷணத்துக்கு தாத்பர்யம் – "ரஜ்ஜாவயம் ஸர்ப்ப:" என்கிற ப்ரமத்துக்கு "இயம் ரஜ்ஜுரேவ, ந ஸர்ப்ப:" என்கிற ஜ்ஞாநம் நிவர்த்தகமாமாப்போலே அநாத்யஜ்ஞாந மூலங்களாய் ஸ்வகபோல கல்பிதங்களாய் பாஹ்யகுத்ருஷ்டி ஸமயங்களுக்கு யதா பூதார்த்தவாதியான வேதம் நிவர்த்தகமாயிருக்குமென்று. ஆகையாலே ப்ரதிவாதிகளுடைய நிரஸநத்துக் குறுப்பான வேதமாகிற **அழகிய தண்டையு மேந்திக்கொண்டு**. **கொழுமை** – பெருமை. அன்றிக்கே, இங்குச் சொன்னது ஸம்ஸ்க்ருத வேதமானாலும் கீழருளிச் செய்த த்ரமிடவேதத்தோடே கூடின வேதமென்றுமாம். அப்படிப்பட்ட வேதரூபமாய், மஹத்தாய், அழகிதான கதையைக் கையிலே யெடுத்துக் கொண்டென்றபடி. சகாரத்தாலே கையில் தண்டத்தை ஏந்திக்கொண்டு நின்ற மாத்ரமன்றிக்கே அத்தால் பர்யாப்தி பிறவாமல் காலாலே மிதித்தும், **கொம்பாலே குத்தியும் ப்ரதிவாதிகளை சித்ரவதம் பண்ணுகைக்கு வந்தபடியை யருளிச்செய்கிறார்**. "சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையன்" என்கிறபடி ஸர்வேச்வரன் எப்போதும்

திருவாழியையும் திருச்சங்கையும் ஏந்திக் கொண்டிருக்கிறாப்போலே, இவரும் வேத ரூபமான பெருந்தண்டை ஏந்திக் கொண்டிருந்தார் காணும்.

விளக்கம் – (மெய்ம்மை கொண்ட நல்வேதக் கொழுந்தண்டமேந்தி) – திருச்சந்தவிருத்தம் (72) – வேதநூல் ஓதுகின்றது உண்மை – என்பதற்கு ஏற்ப உள்ளதான உண்மையை உள்ளது உள்ளபடி உரைக்கின்ற தன்மை. இவ்விதம் உண்மையுடன் கூடியுள்ளதால் அனைத்துவிதமான ப்ரமாணங்களாக இருக்கவல்ல மேன்மையான வேதம்; தைத்திரீய உபநிஷத் (2-1-1) – ஸத்யம் ஞானம் அநந்தம் ப்ரஹ்ம: - ஸத்யம் ஞானம் ஆனந்தம் என்றுள்ள ப்ரஹ்மம் – என்பதற்கு ஏற்ப உள்ள உயர்ந்த ப்ரஹ்மத்தை வெளிப்படுத்தும் வேதம் என்று கருத்து. பராவர தத்வாநியதாவத் வேதயதீதி வேத: - உயர்ந்த தத்வத்தை உள்ளது உள்ளபடி கூறுவதால் வேதம் எனப்படுகிறது - என்று அல்லவோ இது உணர்த்தும் ஞானம் உள்ளது. “மெய்ம்மை கண்ட” என்று கூறுவதன் கருத்து என்ன? ஒரு கயிற்றைக் கண்டு பாம்பு என்று அச்சம் கொள்ளும்போது, “இது கயிறு ஆகும். பாம்பு அல்ல” என்ற ஞானமானது அந்த மயக்கத்தை விலக்குவது போன்று, எல்லையற்ற அறியாமையை உண்டாக்கவல்லதான, அவரவர்கள் தங்களுக்குத் தோன்றியது போன்ற கருத்துக்கள் உரைத்து நிரப்பப்பட்டதான, வேதமார்க்கத்திற்கு முரணாக உரைக்கும் மதங்களுக்கு உண்மையை உணர்த்துவதன் மூலம் வேதமானது அறியாமையை போக்கவல்லதாக உள்ளது என்று பொருள். ஆகவே மற்றவர்களுடைய வாதங்களைத் தள்ளுவதற்கு உறுப்பாக உள்ள வேதம் என்ற அழகான தண்டத்தையும் ஏந்தியபடி. அல்லது இங்கு உரைக்கப்பட்டது - ஸம்ஸ்ருத வேதம் என்றாலும், கீழே கூறப்பட்ட தமிழ்வேதத்துடன் சேர்ந்த வேதம் - என்றும் கொள்ளலாம். அப்படிப்பட்ட வேதரூபமாகவும், பெருமை மிக்கதாகவும் உள்ள அழகான கதையைத் திருக்கரத்தில் ஏந்தியபடி. அப்படிப்பட்டதான தண்டத்தைக் கையில் எடுத்தபடி நிற்பது மட்டும் அல்லாமல், அதனால் மனநிறைவு கொள்ளாமல், காலால் மிதித்தும் கொம்பால் குத்தியும் அந்த விரோதமான கருத்துக்கள் கொண்ட வாதிகளைச் சித்ரவதை செய்யும்படி வந்த விதத்தை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (குவலயத்தே மண்டி வந்தேன்றது) நீங்கள் தன்னரசு நாடாக எண்ணி நடத்துகிற ஆஸேது ஹிமாசலமாக வேங்கடாசல யாதவாசல சாரதாபீடாதி திவ்ய ஸ்த்தலங்களிலே எதிர்கொண்டு ப்ரத்யவஸ்த்தாநம் பண்ணின வாதிகளைக் கட்டடங்க

நிரஸித்துக் கொண்டு வந்து உங்கள் மேலே எதிர்த்தது. **மண்டுதல்** – தள்ளுதல். **ஏன்றுதல்** – எதிர்த்தல். (வாதியர்காள்) பாஹ்ய குத்ருஷ்டி ஸமய நிஷ்டராய்க் கொண்டு வாதியர்களாயுள்ளீர். **(உங்கள் வாழ்வற்றதே)** சிஷ்யர்களும் ப்ரசிஷ்யர்களுமாய்ப் பணைத்திருந்த உங்களுடைய ஸம்பத்து முடிந்ததே. சிஷ்ய ப்ரசிஷ்ய பர்யந்தமாகக் கொண்டு வர்த்திக்கவேணுமென்று நீங்கள் நினைத்திருந்த உங்களுடைய துர்மதங்களடங்கலும் விநஷ்டமாய்ப் போயினவென்றபடி. "**சங்கர பாஸ்கர யாதவ பாட்ட ப்ராபகரர் தங்கள் மதம் சாய்வுற வாதியர் மாய்குவரென்னச் சதுர்மறை வாழ்ந்திடும் நாள்" என்று இவ்வர்த்தத்தை ஜீயரு மருளிச்செய்தாரிறே**. "கணதா பரிபாடிபி:" என்கிற ச்லோகமும், "காதா தாதா கதாநாம்" என்கிற ச்லோகமும் இவ்வர்த்தத்துக்கு ப்ரமாணமாக அநுஸந்தேயம்.

விளக்கம் - **(குவலயத்தே மண்டி வந்தேன்றது)** – நீங்கள் உங்களுடைய வாதங்களால் வெற்றி கொண்டதால் உங்களுடைய இடங்கள் என்று எண்ணியுள்ளதான ஸேதுகரை தொடங்கி இமயமலை முடிய உள்ள வேங்கடாசலம், திருநாராயணபுரம், காஷ்மீரத்தின் சாரதாபீடம் போன்ற பலவற்றிலும் உங்களை எதிர்கொண்டு, எதிர்வாதம் செய்த வாதிகளை அடியுடன் அழித்து உங்களை எதிர்த்தபடி நின்றார். (வாதியர்காள்) – வேதங்களுக்குப் புறம்பாக உள்ள மதத்தினைப் பின்பற்றியபடி நின்று வாதம் செய்பவர்களே. **(உங்கள் வாழ்வற்றதே)** - சிஷ்யர்கள், அவர்களுடைய சிஷ்யர்கள் என்று பல கிளைகளாகப் பிரிந்து படர்ந்த உங்கள் ஸம்பத்து அனைத்தும் முடிந்தது. அதாவது சிஷ்யர்கள், அவர்களுடைய சிஷ்யர்கள் என்று பலவாக வளரவேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்த உங்கள் மதங்கள் முற்றிலுமாக அடங்கி அழிய உள்ளன. இதனை ஸ்வாமி மணவாளமாமுனிகளும் ஆர்த்தி ப்ரபந்தம் (32) - சங்கர பாற்கர யாதவ பாட்ட ப்ரபாகரர் தங்கள் மதம் சாய்வுற வாதியர் மாய்குவர் என்று சதுமறை வாழ்ந்திடுநாள் - என்று அருளிச்செய்தார். இந்தக் கருத்திற்கு யதிராஜ ஸப்ததி (39) - கணாத பரிபாடிபி: கபில கல்பநா நாடகை: குமாரில குபாஷிதை: குரு நிபந்தந க்ரந்த்திபி: ததாகத கதா சதை: தத் அநுஸாரி ஜல்பை: அபி ப்ரதாரிதம் ஜகத் ப்ரகுணிதம் யதீந்த்ர உக்திபி: - இந்த உலகமானது கணாதர் என்பவர் போதித்த அணுக்கொள்கை மூலமும்; கபிலர் கூறிய ஸாங்க்ய தத்துவம் மூலமும்; குமாரில பட்டர் கூறிய மீமாம்ஸ வாதம் மூலமும், ப்ரபாகரர் போதித்த முடிச்சு போன்ற அவிழ்க்க இயலாத புதிர்களாலும்; பௌத்தர்களின்

பலவிதமான சூன்ய வாதங்களாலும்; பௌத்த மதத்தைப் போன்றே வாதம் செய்த மாயாவாதிகளின் வாதங்களாலும் பெரிதாகக் குழம்பி நின்றது. இந்த நிலையானது யதிராஜரின் நூல்கள் முலம் சீராக்கப்பட்டது – என்றும், யதிராஜ ஸப்ததி (70) - காதா தாதாகதாநாம் களதி கமநிகா காபிலீ க்வாபி லீநா ச்ஷீணா காணாத வாணீ த்ருஹிண ஹர கிர: ஸௌரபம் நாரபந்தே ச்ஷாமா கௌமாரில உக்தி: ஜகதி குருமதம் கௌரவாத் தூரவாந்தம் கா சங்கா சங்கர ஆதே: பஜதி யதி பதௌ பத்ர வேதீம் த்ரிவேதீம் - மூன்று வேதங்கள் மூலம் அமைக்கப்பட்ட ஸிம்ஹாஸனத்தை அடைந்து அதில் யதிராஜர் எழுந்தருளினார். உடனே நிகழ்ந்தது என்ன? பௌத்தர்களின் வாதம் உடனே நழுவியது. கபிலர் உபதேசித்த மார்க்கம் எங்கோ சென்று பதுங்கியது. காணாதரின் உபதேசம் மறைந்தது. நான்முகன், சிவன் ஆகியோரின் மதங்கள் நறுமணம் இழந்தன. குமாரில பட்டரின் வாதம் தோற்றது. பிரபாகரரின் மதம் கற்பனை அதிகமாக உள்ளதென்று விலக்கப்பட்டது. சங்கரர் போன்றோர் வாதமும் கண்டிக்கப்பட்டதைக் கூற வேண்டுமா? – என்றும் உள்ள ச்லோகங்கள் ப்ரமாணங்கள் ஆகின்றன.

65. வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு என்றும் மறையவர்தம்
தாழ்வற்றது தவம் தாரணி பெற்றது தத்துவ நூல்
கூழற்றது குற்றம் எல்லாம் பதித்த குணத்தினர்க்கு அந்
நாழற்றது நம் இராமானுசன் தந்த ஞானத்திலே

விளக்கவுரை – எங்களது எஜமானராக உள்ள எம்பெருமானார், எங்களிடம் எந்தவிதமான கைம்மாறும் எதிர்பார்க்காமல், தனது அளவற்ற கருணை காரணமாக, மிகவும் உயர்ந்த ஞானத்தை எங்களுக்கு அளித்தார். இந்த ஞானம் காரணமாக வேதங்களை அடியுடன் தள்ள முயன்ற பௌத்தர் போன்றவர்களும், வேதவரிகளுக்குத் தவறான பொருள் கற்பிக்க முயன்ற யாதவப்ரகாசர் போன்றவர்களும் தங்கள் வாழ்வை இழந்தனர். இவ்விதம் களைகள் நீக்கப்பட்ட பின்னர், பயிர்கள் தடையின்றி வளர்வது போன்று, நீண்ட காலமாக இருந்து வரும் பரமவைதிகர்கள் தாங்கள் இழந்த வாழ்வை மீண்டும் பெற்று, தங்களது தாழ்வு நீங்கப் பெற்றனர். இதன் மூலம் இந்தப் பூமியானது மிகவும் உயர்ந்த புண்ணியம் பெற்றது. எம்பெருமானாரின் ஸ்ரீபாஷ்யம் போன்ற நூல்கள் மூலமாக

வேதங்களில் கூறப்பட்ட பரம்பொருள் குறித்த ஐயம் அனைத்தும் நீங்கிவிட்டன. தாழ்வான குணங்கள் கொண்டிருந்தவர்களின் பாவங்கள் அனைத்தும் நீங்கப் பெற்றன.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே எம்பெருமானார் திவ்யதேச யாத்ரை யெழுந்தருளினவாறே ப்ரதிவாதிகளுடைய வாழ்வு வேருடனே நசித்துப்போனபடியைச் சொல்லி, இதிலே அவருடைய ஸமீசீந ஜ்ஞாநத்தாலே பாஹ்ய குத்ருஷ்டிகளுக்குண்டான விநாசத்தையும் லோகத்தார்க்கெல்லாம் முண்டான ஸம்ருத்தியையும் பலபடியாக வருளிச்செய்து கொண்டு ப்ரீதராகிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் எம்பெருமானார் திவ்யதேசங்களுக்கு யாத்திரையாக சென்றபோது அங்கிருந்த ப்ரதிவாதிகளுடைய வாழ்வானது வேருடன் அழிந்ததைக் கூறினார். இந்தப் பாசுரத்தில் எம்பெருமானாருடைய சிறந்த ஞானத்தால் வேதங்களுக்குப் புறம்பாக பொருள் உரைத்தவர்களுக்கு ஏற்பட்ட அழிவையும், இந்த உலகில் உள்ளவர்கள் அனைவருக்கும் ஏற்பட்ட வளமான வாழ்வையும் பலவிதமாக உரைத்து மகிழ்கிறார்.

வ்யாக்யானம் – (நம்மிராமானுசன் தந்த ஞாநத்திலே) எங்களுக்கு வகுத்த சேஷியான எம்பெருமானார் தம்முடைய க்ருபா பரதந்த்ரராய்க் கொண்டு நிர்ஹேதுகமாக உபகரித்தருளின ஜ்ஞாநத்தாலே. "த்ருதீயார்த்தே ஸப்தமி" என்கிற ப்ரக்ரியையாலே ஜ்ஞாநத்திலேயென்று நிர்தேசிக்கிறார். இனி அத்தாலே பலிதத்தை யருளிச்செய்கிறார் வாழ்வற்றதென்று தொடங்கி. (வாதியர்க்கு) ப்ரதிவாதிகளான சங்கர பாஸ்கர யாதவ பாட்ட ப்ரபாகர பௌத்த சார்வாதிகளுக்கு. (தொல்லை – வாழ்வற்றது) இவருடைய அவதாரத்துக்கு முற்காலத்திலே ப்ரதிவாதிகளுக்கு வாழ்வு, வேதத்தை அங்கீகரித்திருக்கச் செய்தே, அதினர்த்தத்தை யறியாதே குத்ருஷ்டி கல்பநங்களாகச் சில க்ரந்தங்களைப் பண்ணி, லோகத்தையெல்லாம் மூலையடியே நடத்திக் கொண்டு போருகையும், வேதத்திலே சில தோஷங்களை ஆரோபித்து அது அப்ரமாணம் என்று சொல்லுகையும், அப்படிப்பட்ட வாழ்வு இவரவதரித்து உபகரித்த ஜ்ஞாநத்தாலே அடியற்றுப் போச்சுது. "என்றும்" என்கிற பதம் காகாக்ஷி ந்யாயேந பூர்வோத்தர பதங்களுக்கு விசேஷணமாயிருக்கிறது.

விளக்கம் – (நம் இராமானுசன் தந்த ஞாநத்திலே) - எங்களுக்கு இயல்பாகவே எஜமானராக உள்ள எம்பெருமானார், தனது க்ருபையை மற்றவர்களுக்காக வைத்தபடி, எந்தவிதமான காரணமும் இன்றி அனைவருக்கும் கொடுத்து உதவிய ஞானத்தால். ஏழாம் வேற்றுமை மூலம், "ஞானத்தில்" என்று கூறுகிறார். இனி அதன் மூலம் நிகழ்ந்தவற்றைக் கூறுகிறார். (வாதியர்க்கு) - ப்ரதிவாதிகளான சங்கரர், பாஸ்கரர், யாதவப்ரகாசர், பாட்டர், ப்ரபாகரர், சார்வாகர் என்ற மதத்தினர்க்கு. (தொல்லை – வாழ்வற்றது) - எம்பெருமானாருடைய அவதாரத்திற்கு முன்பு சிறந்த வாழ்க்கை இருந்தது. இவர்களில் சிலர் வேதத்தினை ஏற்றபோதிலும், அவற்றின் ஆழ்பொருளை அறியாமல் தங்களுடைய மனம் போன போக்கில் சில நூல்களை இயற்றி, இந்த லோகத்தில் உள்ள அனைவரையும் மயக்கிக் கொண்டு சென்றார்கள். வேதங்களில் சில தோஷங்கள் உள்ளதாகத் தாங்களே கற்பித்து, ஆகவே அவை ப்ரமாணங்கள் அல்ல என்று சிலர் உரைத்தனர். இப்படியாக இருந்த இவர்களுடைய வாழ்க்கையானது, எம்பெருமானார் அவதரித்த பின்னர் இந்த உலகிற்கு உபதேசித்த ஞானம் மூலம் அடியற்றுப் போயிற்று. இங்கு உள்ள "என்றும்" என்ற பதமானது காகாக்ஷி ந்யாயத்தின்படி "அவர்களுடைய வாழ்வு அதன் பின்னர் அனைத்து காலத்திலும் வீழ்ந்தது" என்பதற்கும், "இந்த உலகில் உள்ளவர்களுக்கு எப்போதும் வளர்ந்தது" என்பதற்கும் பொதுவாகக் கொள்ளும்படி அமைந்துள்ளது [காகாக்ஷி ந்யாயம் – காக்கை தனது முட்டையிலிருந்து வெளிவரும்போது, அதன் கண்களுக்குப் பதிலாக அங்கு இரண்டு துளைகளும், ஒரே ஒரு விழி மட்டுமே இருக்கும். அந்த ஒரு விழியானது, இரண்டு துளைகளுக்கும் சென்று மாறிமாறிப் பார்க்கும் என்று கூறுவர்].

வ்யாக்யானம் – (என்றும் தொல்லை தாழ்வற்றது) "அற்றது" என்றது "ஆசுவிஸ்மரஸி தத்தமர்த்திநே விஸ்மரஸ்ய ப்ரக்ருதிம் பரேணயத் காம விஸ்மரண சீல லீலயா" என்னுமாப்போலே. இத்தால் விரோதிகளானவற்றைப் போக்கடித்த ஆற்றலைச் சொன்னபடி. சதுர்வேதிகளான ப்ராமாணிகருக்கு, இவருடைய அவதாரத்துக்கு முற்காலமெல்லாம் பாஹ்யகுத்ருஷ்டிகள் லோகமெங்கும் வ்யாபித்திருக்கையாலே வைதிக மார்க்கமெல்லாம் தலைசாய்ந்திருக்கையாகிற தாழ்வு என்றுமற்றது. "தொல்லை" என்று இங்கும் அநுஷங்கிக்கக் கடவது. (தொல்லையான தாழ்வு) அநாதிகாலமே தொடங்கி இடைவிடாதே வந்த தாழ்வு. "தொல்லை" என்றது, வாதியர்க்கு விசேஷணமாய்,

பழையதாய்ப் போருகிற வாதங்களையுடைய பாஹ்யகுத்ருஷ்டிகள் என்றுமாம். தாழ்வு – குறைவு.

விளக்கம் – (என்றும் தொல்லை தாழ்வற்றது) - "அற்றது" என்பதன் மூலம் விரோதிகளை விரட்டியடித்த வலிமையைக் கூறினார். நான்கு வேதங்களையே ப்ரமாணம் என்று கொண்டாடியபடி இருந்தவர்களுக்கு, எம்பெருமானாருடைய அவதார காலத்திற்கு முன்பு வேதங்களுக்குப் புறம்பாக பொருள் உரைத்த மதங்கள் பலவும் உலகம் முழுவதும் வ்யாபித்திருந்த காரணத்தால், வைதிக மார்க்கம் தலைசாய்ந்து கிடந்தது என்பதான வாழ்க்கையே இருந்தது; அதாவது அத்தகைய தாழ்வே இருந்தது. (தொல்லையான தாழ்வு) – எல்லையறறற்ற காலம் தொடங்கி இடைவெளி இல்லாமல் இருந்த தாழ்வு. "தொல்லை" என்பதை ப்ரதிவாதிகளுக்குக் கொள்ளவேண்டும்; அதாவது மிகவும் பழைய வாதங்கள் நிறைந்த மதங்கள் என்று பொருள் கூறலாம்.

வ்யாக்யானம் – (தாழ்வு என்றுமற்றது) – இனி மேலுள்ள காலத்தில் ஒரு நாளும் மறுவலிடாதே வாஸனையோடு போயிற்றென்றபடி. லோகத்திலே பயிரையுடையவன் க்ருஷி பண்ணினால், அந்தப் பயிரிலே கட்டடங்கக் களை வ்யாபித்து, அத்தைத் தலையெடுக்கவொட்டாதே யிருந்தவாறே, அந்தக் களையை விரகர் பிடுங்கிப் பொகட்டு அந்தப் பயிரை அபிவ்ருத்தமாம்படி பண்ணுமாப்போலே, ஈச்வரனுடைய க்ருஷிக்கு விஷயபூதரான அநுகூலரடங்கலும் பாஹ்யகுத்ருஷ்டிகளாலே தலை சாய்ந்து போன பின்பு, அவர்களை நிரஸித்து, அந்த சேதநரையெல்லாம் அபிவ்ருத்தராம்படி பண்ணினார் காணும்.

விளக்கம் – (தாழ்வு என்றுமற்றது) - அதன் பிறகு உண்டான நாட்களில் ஒருநாளும் மீண்டும் தலையெடுக்காமல் வாசனையுடன் அழிந்தன. லோகத்தில் உள்ள ஒருவன் விவசாயம் செய்தால், அந்தப் பயிரில் முழுவதுமாகக் களைகள் பரவி நின்று பயிர்கள் ஓங்கி வளராமல் தடுக்கும்போது, அந்தக் களைகளை பிடுங்கி எறிந்து பயிரை வளர்ப்பர். இதே போன்று ஸர்வேச்வரன் செய்யும் முயற்சிக்கு இலக்காக உள்ள அவனுக்கு ப்ரியமானவர்கள் ஓய்ந்து போகும்படியாகக் களையாக உள்ளவர்களும் வேதங்களுக்குப் புறம்பாக பொருள் உரைப்பவர்களும் ஆகியவர்கள் செய்யும்போது, அவர்களை அழித்து அந்த நல்லவர்கள் வளரும்படிச் செய்தார்.

வ்யாக்யானம் – (தவம் தாரணி பெற்றது) பூமியானது பாக்யத்தைப் பெற்றது. தவம் – பாக்யம். "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய சதுஷ்க்ருதாம்" என்ற அநந்தரமிறே, "தர்ம ஸம்ஸ்த்தாபநார்த்தாய" என்றது. ப்ரதிவாதிகள் பராஜிதராய்க் கொண்டு பூமியிலே காணப்படாத பின்பு பாகவதர்கள் தங்களுடைய குறையெல்லாம் தீர்ந்து ப்ரகாசித்தார்களாகையாலே, பூமியிலே தர்மமானது எங்குமொக்க வ்யாபித்தது. "புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்த க்ஷயாயச ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர:" என்னக் கடவதிறே.

விளக்கம் – (தவம் தாரணி பெற்றது) – இந்தப் பூமியானது பாக்கியம் பெற்றது. கீதையில் (4-8) – பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய சதுஷ்க்ருதாம் – நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் என்று கூறிய பின்னர் அல்லவோ, கீதை (4-8) – தர்ம ஸம்ஸ்த்தாபநார்த்தாய – தர்மத்தை நிலைநாட்டவும் – என்று உரைத்தான்? ப்ரதிவாதிகள் இந்தப் பூமியில் வெல்லப்பட்டு, இங்கு எந்த இடத்திலும் காணப்படாத பின்னரே பாகவதர்கள் தங்களுடைய குறைகள் அனைத்தும் நீங்கியவர்களாக ப்ரகாசம் அடைந்தனர் என்பதால், பூமியில் தர்மம் எங்கும் ஒரே போன்று பரவியது. புண்யாம்போஜ விகாஸாய பாபத்வாந்த க்ஷயாயச ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர: - இராமானுஜர் என்னும் சூரியம் உதிக்கும்போது, பாபம் என்னும் இருள் நீங்கி, புண்ணியம் என்னும் தாமரை மலர்கிறது – என்றது காண்க.

வ்யாக்யானம் – (தத்துவ நூல் கூழற்றது) பராவர தத்வ யாதாத்ம்ய ப்ரதிபாதகமா யிருந்துள்ள சாஸ்த்ர ரூபமான வேதமானது குத்ருஷ்டிகளாலே கலக்கப்பட்டு இவ்வளவும் பஹுநாயகமாய் வ்யபிசரித்துப்போய், இப்போது இவர் ஸ்ரீபாஷ்யத்தை யருளிச் செய்கையாலே, "யச்ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமசீசமத்" என்கிறபடியே லோகத்தாரெல்லார்க்கும் ஜ்ஞாந ப்ரதாநத்தையும் வேதங்களுக்கு யதாவர்த்தத்தையும் பண்ணுகையாலே காலுஷ்யம் போய் நிஸ்ஸம்சயமாக தத்வார்த்தங்களை ப்ரகாசிப்பிக்குமதாய்த்து. கூழ்ப்பு - ஸம்சயம். இவருடைய உபதேசத்தாலே ப்ரமாதக்களுக்கு தத்வபரமான சாஸ்த்ரங்களிலே ஸம்சயங்களெல்லாம் போய்த்தின வென்றுமாம். தத்துவம் – தத்வம். நூல் – சாஸ்த்ரம்.

விளக்கம் – (தத்துவ நூல் கூழற்றது) - மிகவும் உயர்ந்த தத்வத்தை உள்ளது உள்ளபடி உரைப்பதாக உள்ள வேதங்கள் அனைத்தும் மற்ற மதங்களால் கலக்கப்பட்டு, இது நாள் முடிய பலரையும் தங்களுடைய எஜமானன் என்று மற்றவர்கள் நினைக்கும்படியாக நின்றன. இப்போது எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தை அருளிச்செய்த காரணத்தால், யச்ச்ருதி ஸ்ம்ருதி ஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமசீசமத் – ச்ருதி, ஸ்ம்ருதி, ஸூத்ரங்களுக்கு அந்தராத்மாவாக உள்ள எம்பெருமானாரை - என்பதற்கு ஏற்ப உலகில் உள்ள அனைவருக்கும் ஞானத்தையும், வேதங்களுக்கு உண்மையான பொருளையும் உரைத்ததால், கலக்கம் நீங்கப்பெற்று, எந்தவிதமான சந்தேகங்களும் இன்றி வேதங்களுடைய ஆழ்பொருள்கள் வெளிப்பட்டன. இதுவரை மயங்கிக் கிடந்தவர்களுக்கு, இவருடைய உபதேசம் காரணமாக, மிகவும் உயர்ந்த தத்வங்கள் அனைத்தும் எந்தவிதமான சந்தேகமும் இன்றி தெளிவாகின என்றும் கூறலாம்.

வ்யாக்யானம் – (குற்றமெல்லாம் பதித்த குணத்தினர்க்கந்நாழற்றது) "யாவச்சயச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்சதத்ததி கஞ்சமமாஸ்தி ஸத்யம்" என்கிறபடியே ஸமஸ்த துரிதங்களும் வ்யாபித்திருக்கிற குணங்களையுடையவர்களுக்கு இவருடைய ஜ்ஞாந ப்ரதாந வைபவத்தாலே அவர்களுடைய பாபமெல்லாம் நசித்தது. "ஷிப்ரம் பவதி தர்மாத்மா சச்வச்சாந்திம் நிகச்சதி" என்கிறபடியே குணத்தினாலுண்டான தோஷங்களெல்லாம் நிவ்ருத்தங்களாய் ஜ்ஞாநாதிகரானார்களென்றபடி. நாழ் – குற்றம். இதொரு வைபவமிருக்கும்படியென் என்று வித்தராகிறார்.

விளக்கம் – (குற்றம் எல்லாம் பதித்த குணத்தினர்க்கந்நாழற்றது) - யாவச்சயச்ச துரிதம் ஸகலஸ்ய ஜந்தோ: தாவச்சதத்ததி கஞ்சமமாஸ்தி ஸத்யம் - என்பதற்கு ஏற்ப பலவிதமான பாபங்களாலும் சூழப்பட்டுள்ள குணங்கள் கொண்டவர்களுக்கு, எம்பெருமானாருடைய ஞானத்தின் மேன்மை காரணமாக, அவர்களுடைய பாபங்கள் அனைத்தும் அழிந்தன. கீதையில் (9-31) - ஷிப்ரம் பவதி தர்மாத்மா சச்வச்சாந்திம் நிகச்சதி – விரைவாக தர்மத்தின் வழி நிற்கிறான், நிலைத்த மனஅமைதியை அடைகிறான் - என்பதற்கு ஏற்ப குணங்கள் மூலம் ஏற்படுகின்ற தோஷங்கள் அனைத்தும் நீங்கப் பெற்று ஞானத்தில் சிறந்தவர்கள் ஆனார்கள் என்று கருத்து. இப்படி ஒரு வைபவம் உள்ளதே என்று மகிழ்கிறான்.

66. ஞானம் கனிந்த நலம் கொண்டு நாள்தொறும் நைபவர்க்கு
வானம் கொடுப்பது மாதவன் வல்வினையேன் மனத்தில்
ஈனம் கடிந்த இராமானுசன் தன்னை எய்தினர்க்கு அத்
தானம் கொடுப்பது தன் தகவு என்னும் சரண் கொடுத்தே

விளக்கவுரை – "அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா", என்று கூறும்படி, பெரியபிராட்டியுடன் இணைந்தே சேதனர்களைக் கைக்கொள்ளும் ஸர்வேச்வரன், தனது உயர்ந்த இடமாகிய பரமபதத்தை யாருக்கு அளிக்கிறான் என்றால் – சிறந்த ஞானம் கொண்டு பக்தி உடையவர்களாகவும், அந்தப் பக்தி காரணமாக நாள் முழுவதும் அவனை எண்ணியபடி கைங்கர்யம் செய்பவர்களுக்கே ஆகும். இப்படி உள்ளபோது உடையவர் செய்தது என்ன? மிகவும் தீய பாவங்கள் பலவும் செய்தபடி உள்ள எனது மனதில் இருந்த பாவங்கள் செய்யும் எண்ணங்களை அடியுடன் நீக்கினார். இதன் மூலம் பரமபதம் கிட்டும்படிச் செய்தார். இதுவே அவரது கருணை மூலமாக, அவர் நமக்குச் செய்யும் உபாயமாகும்.

அவதாரிகை – "**நம்மிராமானுசன் தந்த ஞாநத்திலே**" என்று எம்பெருமானார் உபகரித்தருளின ஜ்ஞாந வைபவத்தைக் கீழ்ப்பாட்டிலே யருளிச்செய்து, இதிலே ஈச்வரன் மோக்ஷத்தைக் கொடுக்கும்போது சேதநர் பக்கலிலே சிலவற்றை யபேக்ஷித்தே அத்தைக் கொடுப்பன்; இவர் அப்படியன்றிக்கே தம்முடைய **க்ருபா பாரதந்த்ரராய்க் கொண்டு காணும் சேதநருக்கு மோக்ஷத்தைக் கொடுப்பது** என்று இவர் தம்முடைய **மோக்ஷ ப்ரதாந வைபவத்தை** யருளிச்செய்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் "நம் இராமானுசன் **தந்த ஞாநத்திலே**" என்று எம்பெருமானார் உபகாரம் செய்ததாகிய "ஞானத்தினை அளித்தல்" என்ற வைபவத்தை அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில் - ஸர்வேச்வரன் மோக்ஷத்தை அளிக்கும்போது சேதநர்களிடம் சில தகுதிகளை எதிர்பார்த்த பின்னரே அதனை அளிப்பான்; ஆனால் எம்பெருமானார் அப்படி அல்லாமல், தனது கருணை என்பதை மற்றவர்களுக்காக

வைத்தவராக, சேதநர்கள் மோக்ஷம் பெற உதவுகிறார் – என்று எம்பெருமானார் மோக்ஷம் அளிக்கும் வைபவத்தை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (மாதவன்) "லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா ரக்ஷக: ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே" என்றும், "அகலகில்லே னிறையுமென்று அலர்மேல்மங்கையுறை மார்பா" என்றும் சொல்லுகிறபடி ஸர்வேச்வரன் சேதநரைக் கைக்கொள்ளும்போது பெரியபிராட்டியாரோடே கூடியிருந்தே கைக்கொள்ளுவது என்று ஸகல வேதாந்த ஸித்தாந்தமாகையாலே, அவளுக்கு வல்லபனான ஸர்வேச்வரன். **(வானம் கொடுப்பது)**. "பரமாகாசம்" என்றும், "நலமந்தமில்லதோர் நாடு" என்றும் பெயர்களையுடைத்தான ஸ்ரீவைகுண்டத்தை ஒரு சேதநனுக்குக் கொடுப்பது.

விளக்கம் – (மாதவன்) - பாஞ்சராத்ரம் - லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா ரக்ஷக: ஸர்வ ஸித்தாந்தே வேதாந்தேஷு ச கீயதே – ஸர்வேச்வரன், கருணையே வடிவான பெரியபிராட்டியுடன் சேர்ந்து நின்று ரக்ஷிக்கிறான் என்று அனைத்து ஸித்தாந்தங்களிலும் வேதாந்தத்திலும் கூறப்பட்டுள்ளது – என்றும், திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல்மங்கை உறை மார்பா - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் சேதனர்களை ஏற்றுக் கொள்ளும்போது, பெரியபிராட்டியாருடன் சேர்ந்து நின்று, அவள் முன்னிலையில் மட்டுமே ஏற்கிறான் என்பதே அனைத்து வேதாந்தங்களின் கருத்தாக உள்ளதால், அவளுடைய நாயகனாகிய ஸர்வேச்வரன். (வானம்) – "பரமாகாசம்" என்றும், திருவாய்மொழி (2-8-4) – நலமந்தமில்லதோர் நாடு - என்றும் பெயர் கொண்டதான ஸ்ரீவைகுண்டத்தை ஒரு சேதநனுக்கு அளித்தல் என்பது …

வ்யாக்யானம் – (ஞாநங் கனிந்த நலம்கொண்டு) ஸ்வஸ்வாமி பாவ ஸம்பந்த ஜ்ஞாநத்தை முதலிலே பெற்று, தைல தாராவதவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தாநரூபமாய், "ஆப்ரயாணாத ஹரஹரநுஷ்டீயமாந" மானகர்ம ஸாத்யமாய்க் கொண்டு பரிபக்வமாய் ப்ரீதி ரூபாபந்நமான பக்தியை யுடையராய். **நலம்** – ஸ்நேஹம். அதாவது பக்தி. **(நாடொறும் நைபவர்க்கு)** "விளம்பேதத் ப்ராப்திர் பஜந ஸுகமேகஸ்ய விபுலம்" என்னும்படி

ரஸானுபவம் பெரிதாயிருந்தாலும் விளம்பமுண்டா யிருக்கையாலே வகுத்த சேஷியை ப்ராபித்தநுபவித்த அநுபவ ஜநித ப்ரீதி காரித கைங்கர்யங்களைச் செய்வதெப்போதோ என்கிற ப்ராப்ய த்வராதிசயத்தாலே, ஒரு பகல் ஆயிரமூழியாய், ப்ராப்தியளவும், "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" என்கிறபடியே நாள்தோறும் சிதிலாவயவரான அதிகாரிகளுக்கு. **நைகை** – சைதில்யம். இது ஸகல சாஸ்த்ர ஸித்தமாயிருக்கை.

விளக்கம் – (ஞானம் கனிந்த நலம் கொண்டு) – தனது ஆசார்யன் குறித்தும், ஸர்வேச்வரன் குறித்தும் தனக்கு உள்ள ஸம்பந்தம் குறித்த ஞானத்தை முதலில் அடைந்து, எண்ணெய் போன்று இடைவெளி இன்றி, அளப்பதற்கு இயலாதபடி வளர்கின்ற ஸந்தாந ரூபமாக, ஆப்ரயாணாத ஹரஹரநுஷ்டீயமாந - என்பதற்கு ஏற்ப முதிர்ந்த ப்ரீதி வடிவமாக உள்ள பக்தியை உடையவர்கள். (நாள்தொறும் நைபவர்க்கு) - விளம்பேதத் ப்ராப்திர் பஜந ஸுகமேகஸ்ய விபுலம் – என்பதற்கு ஏற்ப மிகவும் சுவை நிறைந்ததாக உள்ளபோதிலும் காத்திருக்க வேண்டிய காலதாமதம் உள்ளதன் காரணமாக, இயல்பாகவே எஜமானனாக உள்ள அவனை அடைந்து, அனுபவித்து, அந்த அனுபவம் காரணமாக ஏற்படும் ப்ரீதியின் விளைவாக உண்டாகும் கைங்கர்யங்களைச் செய்வது எந்த நாளிலோ என்று, பேறு கிட்டும் காலம் முடிய, ஒரு பகல் பொழுது என்பது பல ஆயிரம் ஊழிக்காலங்கள் போன்று தோன்றும் நிலை. அந்தப் பேறு கிட்டும் காலம் முடிய பெரியதிருவந்தாதி (24) - காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும் – என்பதற்கு ஏற்ப, ஒவ்வொரு நாளும் உடலும் உள்ளமும் இந்தச் சிந்தனையாகவே இருப்பதால் உருக்குலைந்து நிற்கும் அதிகாரிகளுக்கு. இது அனைத்து சாஸ்த்ரங்களால் கூறப்பட்டதாகும்.

வ்யாக்யானம் – (வல்வினையேன் மனத்திலீனங் கடிந்தவிராமாநுசன்) இப்போது அநுபவ ப்ராயச்சித்தங்களாலும் கழியாதே யிருக்கிற ப்ரபல பாபங்களைப் பண்ணின என்னுடைய நெஞ்சிலே குடி கொண்டிருக்கிற நிஹீநையான அந்த பாபவாஸநையை நிவர்த்திப்பித்த **எம்பெருமானார்**. **(தன்னை யெய்தினர்க்கு)** தம்மை ஆச்ரயித்தவர்களுக்கு. "த்ருணீ க்ருத விரிஞ்சாதி நிரங்குச நிபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" **பிள்ளை உறங்காவில்லிதாஸர்**, **ஊமை**, **வேடுவிச்சி முதலானவர்களுக்கு**. **(அத்தானம் கொடுப்பது)** சிரகால ஸாத்யமாய், ஸாதன ஸப்தகாங்ககமான பக்தி ரூப ஸாதநத்தாலே ஸாதிக்கத்தக்கதான அந்த ஸ்தாநத்தைக் கொடுத்தருளுவது.

விளக்கம் – (வல்வினையேன் மனத்தில் ஈனம் கடிந்த இராமாநுசன்) - எத்தனை அநுபவத்தாலும், எத்தனை ப்ராயச்சித்தங்கள் செய்தாலும் தீர்க்க இயலாதபடி உள்ளதான கொடிய பாபங்களைச் செய்த எனது நெஞ்சத்தில், எப்போதும் நிரந்தரமாக வசித்தபடி உள்ளதான அந்தப் பாபங்களின் வாசனையை அடியுடன் விலக்கிய எம்பெருமானார். (தன்னை எய்தினர்க்கு) - தன்னை அண்டி நிற்பவர்களுக்கு. த்ருணீ க்ருத விரிஞ்சாதி நிரங்குச நிபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: - எம்பெருமானாருடைய தாமரை போன்ற திருவடிகளை அண்டி நிற்பவர்கள், நான்முகன் முதலான பட்டங்களைக் கூட அற்பமாகவே எண்ணுவர் - என்பதற்கு ஏற்ப உள்ளவர்களான பிள்ளைஉறங்காவில்லிதாஸர், ஊமை, வேடுவிச்சி போன்ற பலருக்கும். **(அத்தானம் கொடுப்பது)** – சில காலங்கள் அதிலே ஈடுபட்டபடி இருந்து, ஏழுவிதமான ஸாதந அங்கங்களாக உள்ளதான பக்தி ரூப ஸாதநம் மூலம் மட்டுமே அடையத்தக்கதான அந்த இடத்தை அளித்தருளுதல்.

வ்யாக்யானம் – (தன் தகவென்னும் சரண் கொடுத்தே) தம்முடைய க்ருபையாகிற ஸாதநத்தைக் கைம்முதலாகக் கொடுத்து, அத்தையும் ஆச்ரயிக்கும் சேதநர் ஸாதநமாக நினைக்கவொண்ணாதென்று தாமே பொதுவாக கல்பித்து, பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தை வருத்தமறக் கொடுப்பரென்றபடி. **(எய்தினர்க்கு)** என்று ஸாமாந்யேந அருளிச்செய்கையாலே, ஆச்ரிதருடைய ஜாதி குண வ்ருத்தாதிகளை அபேக்ஷியாதே, ஆநுகூல்யத்தையே பற்றாசாகக் கொண்டு, ஸர்வருக்கும் **அத்தாநத்தைக் கொடுப்பதென்**னுமிடம் தோற்றுகிறது. **தச்சப்தத்தாலே**, விதி சிவ ஸநகாதிகளுக்குங் கூட எட்டாத நிலமென்றும் தோற்றுகிறது. இத்தால் இவருடைய **மோக்ஷ ப்ரதாந வைபவத்தை** யருளிச்செய்தாராய்த்து. "மாமலராள் கோன் மடியில் வைத்து உகக்கும் வாழ்வு நமக்கு எதிராசன் அருளும் வாழ்வே" என்று இத்தை ஜீயருமநுஸந்தித்தாரிறே.

விளக்கம் – (தன் தகவு என்னும் சரண் கொடுத்தே) - தனது க்ருபை என்னும் ஸாதநத்தையே அவர்களுக்குக் கைம்முதலாக அளித்து, அதனைக் கைக்கொள்ளும் சேதநர்கள், இத்தனை எளிதாகக் கிடைக்கிறதே என்று எண்ணி, அதனை ஒரு ஸாதநமாக எண்ணாமல் விடுவார்களோ என்று சிந்தித்து, தானே முன்னின்று உயர்ந்த

புருஷார்த்தமான மோக்ஷத்தை எந்தவிதமான சிரமமும் இன்றி அளிப்பார் என்று கருத்து. (எய்தினர்க்கு) - அடியார்களுடைய குலம், குணம், தொழில் போன்ற எதனையும் எதிர்பாராமல், அவர்களிடம் எந்தவிதமான கைம்முதலும் இல்லாமல் உள்ளதையே கருத்தில் கொண்டு, அனைவருக்கும் அந்தப் பரமபதத்தை அளித்தல் என்பது இங்கு வெளிப்படுகிறது. இதன் மூலம் அந்த இடம் கிட்டாது என்று உள்ளவர்களுக்கும் கூட, அது எளிதாகக் கிட்டும் இடம் என்றாகிறது. இதன் மூலம் எம்பெருமானார் மோக்ஷத்தை அளிக்கும் வைபவத்தை அருளிச்செய்தார். ஆர்த்திப்ரபந்தம் (20) - மாமலராள் கோன் மடியில் வைத்து உகக்கும் வாழ்வு நமக்கு எதிராசன் அருளும் வாழ்வே - மஹாலக்ஷ்மியின் நாயகன் ஆத்மாவை எடுத்து, தனது மடியில் வைத்து, உச்சி முகர்ந்து ஆனந்தம் அடையச் செய்கிறான்; இப்படிப்பட்ட உயர்ந்த பேறு என்பது, நமக்கு எம்பெருமானார் ஒருவரால் மட்டுமே அளிக்கக் கூடியதாகும் என்று இந்தக் கருத்தை ஸ்வாமி மணவாளமாமுனிகளும் அருளிச்செய்தார்.

67. சரணம் அடைந்த தருமனுக்கா பண்டு நூற்றுவரை
மரணம் அடைவித்த மாயவன் தன்னை வணங்க வைத்த
கரணம் இவை உமக்கு அன்று என்று இராமானுசன் உயிர்கட்கு
அரண் அங்கு அமைத்திலனேல் அரணார் மற்று இவ்வாருயிர்க்கே

விளக்கவுரை – பெரியபிராட்டி தானே சீதையாக வந்து இராவணனிடம், “இராமனைச் சரணம் அடைவாய்”, என்று கூறியபோதும் இராவணன் மறுத்துவிட்டான். அது போல அன்றி, கண்ணனை முழுவதுமாகத் தர்மன் சரணம் அடைந்தான். இப்படிப்பட்ட தர்மனுக்காக முன்பு ஒரு காலகட்டத்தில், மஹாபாரதப் போரில், கௌரவர்கள் நூறு பேர்களை ஸர்வேச்வரன் அழித்தான். கண்ணனை ஏன் மாயவன் என்றார் – சக்கரம் கொண்டு சூரியனை மறைத்து பகல் பொழுதை இரவாக்கியும், “ஆயுதம் எடுக்க மாட்டேன்” என்ற சபதத்தை மீறி பீஷ்மருக்கு எதிராக ஆயுதம் எடுக்க முற்பட்டதையும், அர்ஜுனனை முன்னே நிறுத்தி உபதேசம் செய்ததையும், தனது மேன்மைகள் எதனையும் பாராமல் அர்ஜுனனுக்குத் தேர் ஓட்டியதையும், பாண்டவர்களுக்காகத் தூது சென்றதையும் காணும்போது மாயமான செயல்கள் உள்ள கண்ணனை, “மாயவன்” என்றும் கூறலாம் அல்லவா? இப்படிப்பட்ட அந்தச் ஸர்வேச்வரன் தன்னைச் சரணம்

புகவேண்டும் என்ற எண்ணத்துடன் இந்த உடலையும் உறுப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தான்; இந்த உறுப்புகள் உங்களுக்காக (நமக்காக) ஸம்ஸாரத்தில் ஈடுபடுவதற்காக அல்ல, கைங்கர்யம் செய்வதற்கே – என்று எம்பெருமானார் உபதேசித்தார். இவ்விதமாக எம்பெருமானார் இந்த உலகில் உள்ள ஜீவன்களுக்கு பாதுகாப்பான வழியை உபதேசித்தார். ஆகவே எம்பெருமானாரைக் காட்டிலும் நமக்குப் பாதுகாப்பு வேறு யார் உள்ளனர்?

அவதாரிகை - கீழிரண்டு பாட்டிலும் எம்பெருமானாருடைய ஜ்ஞாந ப்ரதாந வைபவத்தையும், மோக்ஷ ப்ரதாந வைபவத்தையும் அருளிச்செய்து, இதிலே இந்த்ரிய கிங்கரராய்ப் போருகிற ஸம்ஸாரிகளைப் பார்த்து அசித விசேஷிதராய், போக மோக்ஷ சூந்யராயிருந்த வுங்களுக்கு புருஷார்த்த யோக்யராய், ஸ்வ சரண கமல ஸமாச்ரயணம் பண்ணுகைக்குடலாக அடியிலே கொடுத்த கர சரணாதிகளைக் கொண்டு வ்யபசரியாதே, ஸர்வேச்வரனை ஆச்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்று எம்பெருமானார் உபதேசித்திலராகில், இந்த சேதநருக்கு வேறு ரக்ஷகராரென்று சொல்லா நின்று கொண்டு, அவ்வழியாலே **எம்பெருமானார் தம்முடைய மஹோபகாரத்வத்தை கொண்டாடி வித்தராகிறார்**.

விளக்கம் – கடந்த இரண்டு பாசுரங்களில் எம்பெருமானாருடைய ஞானத்திற்கு உள்ள மேன்மையையும், அவருடைய மோக்ஷம் அளிக்கும் மேன்மையையும் அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில் இந்த்ரியங்களுக்கு அடிமைகளாக நிற்கின்ற ஸம்ஸாரிகளைப் பார்த்து, “அசித் வஸ்துக்களைக் காட்டிலும் மேலானவர்களும், மோக்ஷம் என்பதைக் குறித்து ஏதும் அறியாதவர்களும் ஆகிய உங்களுக்கு - புருஷார்த்தத்தில் நிலைநிற்கும் தகுதி கொண்டவர்களாகவும், தன்னுடைய தாமரை போன்ற திருவடிகளை அண்டி நிற்பதற்காகவே படைக்கப்பட்ட இந்த்ரியங்களைக் கொண்டு மற்ற விஷயங்களில் ஈடுபடாமல் ஸர்வேச்வரனை அடைந்து கரை ஏறுவீர்களாக - என்று எம்பெருமானார் இவ்விதம் உபதேசம் செய்யவில்லை என்றால் உங்களைக் காப்பாற்றுபவர்கள் வேறு யார் உள்ளனர்?”, என்று கூறுகிறார். இதன் மூலமாக எம்பெருமானார் செய்தருளிய மிகப் பெரிய உபகாரத்தைக் கொண்டாடி மகிழ்கிறார்.

வ்யாக்யானம் – (சரணமடைந்த தருமனுக்கா) "ராகவத்வே அபவத் ஸீதா" என்னும்படியான பெரியபிராட்டியார் தானே, "விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி" என்று நேர்கொடுநேரே உபதேசிக்கிலும் இசையாத ராவணனைப் போலே, "ந நமேயம்" என்றிருக்கையன்றிக்கே, "த்ரௌபத்யா ஸஹிதாஸ் ஸர்வே நமச்சக்ரு: ஜநார்த்தநம்" என்றும், "க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதச்ச பாண்டவா:" என்கிறபடியே சரணாகதரா தர்மபுத்ரன் தொடக்கமான பாண்டவர்களுக்காக.

விளக்கம் – (சரணமடைந்த தருமனுக்கா) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-9-142) – ராகவத்வே அபவத் ஸீதா – இராமனுடன் சீதையாக அவதரித்தாள் - என்பதற்கு ஏற்ப பெரியபிராட்டியார் சீதையாக நின்று, இராமாயணம் ஸுந்தரகாண்டம் (21-20) – விதிதஸ் ஸஹி தர்மஜ்ஞ: சரணாகத வத்ஸல: தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி - இராமன் அனைத்து தர்மங்களையும் அறிந்தவன், தன்னைச் சரணம் புகுந்தவர்களிடம் மிகந்த அன்பு காண்பிப்பவன் என்பதை அனைவரும் அறிவர், ஆகவே நீ உயிருடன் இருக்க விரும்பினால் இராமனிடம் நட்புடன் இருப்பாயாக – என்பதற்கு ஏற்ப நேருக்கு நேராக நின்று உபதேசம் செய்தபோதிலும், அந்த உபதேசங்களை ஒப்புக்கொள்ளாத இராவணன் போன்று, இராமாயணம் யுத்தகாண்டம் (36-11) – ந நமேயம் – யாரையும் வணங்கமாட்டேன் – நான் எனக்கே உரியவன் - என்று இருக்காமல், மஹாபாரதம் ஆரண்யகாண்டம் (192-56) – த்ரௌபத்யா ஸஹிதாஸ் ஸர்வே நமச்சக்ரு: ஜநார்த்தநம் – பாண்டவர்கள் அனைவரும் திரௌபதியுடன் சேர்ந்து நின்று வணங்கினார்கள் - என்றும், க்ருஷ்ண – என்றும், மஹாபாரதம் த்ரோணபர்வம் (183-24) – க்ருஷ்ணாச்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதச்ச பாண்டவா: - பாண்டவர்கள் க்ருஷ்ணனையே அண்டி நிற்பர்வர்கள், க்ருஷ்ணனையே தங்கள் பலமாகக் கொண்டுள்ளவர்கள், க்ருஷ்ணனையே தங்கள் நாதனாகக் கொண்டவர்கள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப சரணம் அடைந்த தர்மபுத்திரன் தொடக்கமாக உள்ள பாண்டவர்களுக்காக.

வ்யாக்யானம் – (பண்டு நூற்றுவரை) அமுதனார், தமக்கு த்வாபராவாஸநா காலம் புராதநமாகையாலே "**பண்டு**" என்கிறார். இப்படிப்பட்ட பூர்வகாலத்திலே,

மஹாபாரதத்திலே "**நூற்றுவர்**" என்று தொகையிட்டுச் சொல்லப்பட்ட துர்யோதநாதிகள் நூற்றுவரையும். **(மரணமடைவித்த)** "மயைவைதே நிஹதா: பூர்வமேவ நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசிந்" என்றும், "காலோஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்த:" என்கிறபடியே மரணத்தை ப்ராபிப்பித்த. ஸம்ஹரிப்பித்தவென்றபடி.

விளக்கம் - **(பண்டு நூற்றுவரை)** – திருவரங்கத்தமுதனாராகிய தனக்கு துவாபர யுகத்தின் இறுதி என்பது மிகவும் புராதானம் என்பதால் "பண்டு" என்கிறார். இப்படியாக உள்ள முற்காலத்தில், மஹாபாரதத்தில் "நூறு பேர்" என்று எண்ணிக்கையுடன் கூறப்பட்ட துரியோதனன் உள்ளிட்ட நூறு பேரையும். (மரணம் அடைவித்த) கீதை (11-33) – மயைவைதே நிஹதா: பூர்வமேவ நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசிந் – இவர்கள் என்னால் முன்பே கொல்லப்பட்டவர்கள் ஆவார்கள், நீ நிமித்தமாத்ரமே ஆவாய் – என்றும், கீதை (11-32) – காலோஸ்மி லோகக்ஷயக்ருத் ப்ரவ்ருத்த: - அனைத்து உலகங்களையும் அழிக்கவல்ல காலனாக நான் உள்ளேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப மரணத்தை அடையும்படிச் செய்த அல்லது ஸம்ஹாரம் செய்த.

வ்யாக்யானம் – (மாயவன்) பகலை இரவாக்கியும், "ஆயுதம் எடேன்" என்ற ப்ரதிஜ்ஞையை யிட்டு ஆயுதத்தை யெடுத்ததும், யுத்தாந் நிவ்ருத்தனான அர்ஜுநனை நிறுத்தி, பஹுமுகமாக உபதேசித்து, "கரிஷ்யே வசநம் தவ" என்னும்படி பண்ணி, தன்னுடைய பெருமை பாராதே ஆச்ரித பரவசனாய் லோகத்துக்கெல்லாம் ஸாக்ஷியாக தூத்ய ஸாரத்யங்களைப் பண்ணின ஆச்சர்ய குண சேஷ்டிதங்களையுடைய க்ருஷ்ணன்.

விளக்கம் – (மாயவன்) - அர்ஜுனனுக்காகப் பகல்பொழுதில் தனது சக்கரம் கொண்டு சூரியனை மறைத்து இரவு போன்று தோன்றச் செய்தும், "ஆயுதம் எடுக்கமாட்டேன்" என்ற சபதத்தையும் மறந்து ஆயுதத்தைத் திருக்கரத்தில் எடுத்தும், அர்ஜுனனை முன்னிறுத்தி பலவிதமாக உபதேசம் செய்தும், கீதை (18-73) – கரிஷ்யே வசநம் தவ – உன்னுடைய ஆணையை நான் நிறைவேற்றுவேன் - என்பதற்கு ஏற்றபடி செய்தும், தனது மேன்மைகள் எதனையும் ஆராயாமல் அடியார்களுக்கு வசப்பட்டவனாக, இந்த உலகில் உள்ள அனைவரும் பார்க்கும்படியாகத் தூது செல்லுதல் மற்றும் தேர் ஓட்டுதல் போன்ற

செயல்களைச் செய்தும் என்று இப்படியாக வியக்கவைக்கும் குணலீலைகள் கொண்ட க்ருஷ்ணன்.

வ்யாக்யானம் – (தன்னை வணங்க வைத்த கரணமிவை) "விசித்ரா தேஹ ஸம்பத்திரீச்வராய நிவேதிதும் பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா" என்றும், "ஜிஹ்வே கீர்த்தய கேசவம் முராரிபும் சேதோ பஜ ஸ்ரீதரம் பாணி த்வந்த்வ ஸமர்ச்சயாச்யுத கதாம் ச்ரோத்ர த்வய த்வம் ச்ருணு க்ருஷ்ணம் லோகய லோசந த்வய ஹரேர் கச்சாங்க்ரியுக்மாலயம் ஜிக்ர க்ராண முகுந்தபாத துளஸீம் மூர்த்தந் நமாதோக்ஷஜம்" என்றும் ஸ்வ சரண கமல பரிசரணார்த்தமாக ஸர்வேச்வரனாலே உண்டாக்கப்பட்ட இந்த்ரியங்கள்.

விளக்கம் – (தன்னை வணங்க வைத்த கரணமிவை) - ஸ்ரீவிஷ்ணுதத்வம் – விசித்ரா தேஹ ஸம்பத்திரீச்வராய நிவேதிதும் பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்தபாதாதி ஸம்யுதா – பகவானை வணங்கும்விதமாக கைகால்களுடன் கூடிய இந்த விசித்ரமான சரீரம் முன்பே நான்முகனால் படைக்கப்பட்டது – என்றும், முகுந்தமாலை (16) - ஜிஹ்வே கீர்த்தய கேசவம் முராரிபும் சேதோ பஜ ஸ்ரீதரம் பாணி த்வந்த்வ ஸமர்ச்சயாச்யுத கதாம் ச்ரோத்ர த்வய த்வம் ச்ருணு க்ருஷ்ணம் லோகய லோசந த்வய ஹரேர் கச்சாங்க்ரியுக்மாலயம் ஜிக்ர க்ராண முகுந்தபாத துளஸீம் மூர்த்தந் நமாதோக்ஷஜம் - நாக்கே, கேசவனைத் துதிப்பாயாக; மனமே, முராரியைப் பஜனை செய்வாயாக; கைகளே, ஸ்ரீதரனை அர்ச்சிக்கவேண்டும்; காதுகளே, அச்சுதனின் சரிதங்களைக் கேட்பீராக; கண்களே, ஸ்ரீஹரியைத் தரிசிப்பீர்களாக; கால்களே, ஸ்ரீஹரியின் திருக்கோவிலுக்குச் செல்லுங்கள்; மூக்கே, முகுந்தனின் திருவடியில் உள்ள துளசியை நுகர்வாயாக; தலையே, பகவானை வணங்குவாயாக – என்றும் கூறுவதற்கு ஏற்ப தன்னுடைய தாமரை போன்ற திருவடிகளைச் சரணம் என்று பற்றுவதற்காக ஸர்வேச்வரனால் அளிக்கப்பட்ட இந்த்ரியங்கள்.

வ்யாக்யானம் – (உமக்கன்றென்று) இப்படி ஸம்ஸார நிஸ்தரணத்துக்கு ஸாதநமாகக் கொடுத்த **கரணங்களைக் கொண்டு**, நதியைக் கடக்கக் கொடுத்த தெப்பத்தைக் கொண்டு அத்தைக் கடவாதே ப்ரவாஹத்துடனே போவாரைப்போலே "**ஆக்கையின் வழி உழன்று**", "யாதானும் பற்றி நீங்கும் வ்ரதத்தை" ஏறிட்டுக் கொண்டு திரியுமவர்களைக் கண்டு,

உமக்கன்றென்று - இந்தக் கரணங்களைக் கொண்டு நீங்கள் ஸம்ஸரிக்கைக்காக வன்றென்று. (**இராமானுசன்**) இந்த எம்பெருமானார். (**உயிர்கட்கு**) அசேதநங்களுக்கு உபதேசிக்கப் போகாதிறே, இந்த ஆத்மா ப்ராணவத்துக்க னாகையாலே, இவர்களுடைய ஸத்தா விநாசங் கண்டு ஸஹியாதே பரமக்ருபையாலே சேதநரைக் குறித்து, கரணங்களை உமக்கு விநியோகித்துக் கொள்ளுகைக்கன்றென்று.

விளக்கம் – (உமக்கு அன்று என்று) - உமக்கு இப்படியாக ஸம்ஸாரத்தை விட்டு வெளியேறுவதற்கு உபாயமாக அளிக்கப்பட்ட இந்த்ரியங்களைக் கொண்டு, நதியைக் கடக்க உதவும் என்று எண்ணி அளிக்கப்பட்ட படகு ஒன்றை நதியைக் கடக்கப் பயன்படுத்தாமல் நதியின் வெள்ளம் போகும் வழியே செல்பவர்கள் போன்று, திருவாய்மொழி (3-2-1) – ஆக்கையின் வழி உழல்வேன் – என்றும், திருவிருத்தம் (95) – யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை - என்றும் கூறுவதற்கு ஏற்ப மற்ற விஷயங்களின் பின்னே செல்லுதல் என்ற விரதத்தைக் கைக்கொண்டு, அதன் பின்னே செல்பவர்களைக் கண்டு, அந்த இந்த்ரியங்களைக் கொண்டு நீங்கள் ஸம்ஸாரத்தில் ஈடுபட்டு நிற்பதற்காக அவை அளிக்கப்படவில்லை என்று. (இராமாநுசன்) - இந்த எம்பெருமானார். (உயிர்கட்கு) - அசேதநங்களுக்கு உபதேசித்து எதுவும் ஆகப்போவதில்லை. இந்த ஆத்மா சரீரத்தில் இருக்கும்போது எப்போதும் துக்கத்துடன் கூடியவன் என்பதால், இவர்களுடைய இருப்பு என்பதற்கு அழிவு ஏற்படுவதைக் கண்டு, பொறுத்துக் கொள்ள இயலாமல், தனது பரமகருணை காரணமாக சேதனர்களிடம், “இந்த இந்த்ரியங்கள் உங்களுக்காகப் பயன்படுத்திக் கொள்வதற்காக அளிக்கப்பட்டவை அல்ல” என்று உபதேசித்து.

வ்யாக்யானம் – (அரணங்கமைத்திலனேல்) அங்கு அஜ்ஞராய் தேஹாத்மா ப்ராந்தரிடத்திலே ரக்ஷையாக அவ்வவ சேதநருடைய ஸ்வபாவத்துக்குத் தகும்படி உபதேசித்தும், பாஷ்யாதிமுகேந க்ரந்தீகரித்தும், அவர்களுக்கு அமரும்படி தம்முடைய ஸம்பந்திகளான பேர்களாலும் அந்வய வ்யதிரேகங்களாலே **போதித்திலராகில்**. (**இவ்வாருயிர்க்கு**) “ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே, ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:” என்கிற ஸம்ஸார ஸாகர நிமக்நரான ஆத்மாக்களுக்கு.

விளக்கம் – (அரண் அங்கி அமைத்திலனேல்) - இந்த விஷயத்தில் அறியாமை உள்ளவர்களாகவும், சரீரமே ஆத்மா என்று எண்ணி மயங்குபவர்களாகவும் உள்ளவர்களிடம் ரக்ஷை போன்று, அந்தச் சேதநர்களுடைய இயல்புக்கு ஏற்ற விதத்தில் உபதேசம் செய்தும், ஸ்ரீபாஷ்யம் மற்றும் கீதா பாஷ்யம் போன்றவை மூலம் இந்த உபதேசங்களை நூல் வடிவமாக அளித்தும் என்று இப்படியாக அவர்களுக்குச் சென்று சேரும் விதத்தில் நேராகவும் மறைமுகமாகவும் எம்பெருமானார் உபதேசம் செய்யவில்லை என்றால், (இவ்வாருயிர்க்கு) - அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை – ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே, ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: - இப்படியாக ஸம்ஸாரம் என்ற சக்கரத்தில் சுற்றியபடி உள்ள - என்பதற்கு ஏற்ப உள்ள ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கியபடி உள்ள ஆத்மாக்களுக்கு.

வ்யாக்யானம் – (**அரணார்**) வேறொரு ரக்ஷகாந்தரமுண்டோ. "க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம்" என்றும், "தத்தே ரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேசகாங்க்ஷீ" என்றும் சொல்லுகிறபடியே தேவரீரே ரக்ஷகரென்றதாய்த்து. "ந சேத் ராமாநுஜேத் யேஷா சதுரா சதுரக்ஷரீ; காமவஸ்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச:" என்னக் கடவதிறே.

விளக்கம் – (அரண் ஆர்) – வேறு ஒரு பாதுகாக்கும் அரண் உள்ளதோ? யதிராஜ விம்சதி (18) – க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம் - நீ அருளிச் செய்த சரணாகதி கத்யங்கள் மட்டுமே என்னைப் போன்றவர்களைக் காக்க வல்லவை ஆகும் – என்றும், ந்யாஸதிலகம் (24) – தத்தே ரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேசகாங்க்ஷீ – ஸ்ரீரங்கநாத ஆசார்யனுடைய கட்டளையை எதிர்பார்ப்பவனாக தனது இடத்தையும் அளிக்கத் தயாராக உள்ளான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப எம்பெருமானாராகிய நீரே ரக்ஷகன் என்றானது. கூரத்தாழ்வான் – ந சேத் ராமாநுஜேத் யேஷா சதுரா சதுரக்ஷரீ; காமவஸ்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச: - "ராமாநுஜா" என்னும் நான்கு எழுத்துள்ள உடையவர் இல்லை என்றால், "நாராயணா" என்னும் நான்கு எழுத்துள்ளவனை நம்மால் அடைய இயலாது போயிருக்கும் – என்று கூறுவது காண்க.

68. ஆரெனக்கின்று நிகர் சொல்லில் மாயன் அன்று ஐவர் தெய்வத்
தேரினில் செப்பிய கீதையின் செம்மை பொருள் தெரியப்
பாரினில் சொன்ன இராமானுசனைப் பணியும் நல்லோர்
சீரினில் சென்று பணிந்தது என் ஆவியும் சிந்தையுமே

விளக்கவுரை – இந்த உயிர்களின் காரணமாக உள்ள கண்ணன் – பூதனை, சகடாசுரன் போன்ற அசுரர்களை வதைத்தும்; பசுக்கள் மற்றும் கோபர்களை ஆதரித்தும்; கோவர்த்தனம் எடுத்து அவர்களைக் காத்தும்; யசோதை, அக்ரூரர், அர்ஜுனன் போன்றவர்களுக்குத் தனது விச்வரூபத்தைக் காண்பித்தும் – இவ்விதமாக பல வியப்பளிக்கும் செயல்களை புரிந்த மாயன் ஆவான். அவன் மஹாபாரத யுத்தத்தின்போது, பஞ்சபாண்டவர்களுக்கு வெற்றியை அளிப்பதற்காக, தனது (கண்ணன்) திருவடிகள் பட்ட புனிதமான தேரில் அமர்ந்து, மோக்ஷ உபாயமான ஸ்ரீமத் பகவத் கீதையை உபதேசம் செய்தான். இப்படிப்பட்ட கீதையின் உண்மையான ஆழ்பொருளை, மற்றவர்கள் போன்று தனது விருப்பப்படி பொருள் கூறாமல், உபனிஷத்துக்கள் மூலமாக ஆராய்ந்து, கீதாபாஷ்யம் மூலமாக, இந்த உலகிற்கு நன்கு விளங்கும்படி செய்தவர் உடையவர் ஆவார். அவருடைய திருவடிகளில் – ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே – என்று பணிந்தவர்கள் கூரத்தாழ்வான் போன்றவர்கள் ஆவர். இவர்களது உயர்ந்த திருக்கல்யாண குணங்களில் சென்று எனது மனமும் ஆத்மாவும் படிந்துவிட்டது. இனி இந்த உலகில் எனக்கு நிகரானவர்கள் யார் உள்ளனர்?

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே, எம்பெருமானாருடைய ஜ்ஞாந ப்ரதாந வைபவத்தையும், மோக்ஷ ப்ரதாந வைபவத்தையும் இந்த்ரிய பரவசரான சேதநரைக் குறித்து அவருடைய யதாவஸ்தித ப்ரகாரத்தைத் தெளிவித்து, மஹாபாரத ஸமரத்திலே திருத்தேர்த் தட்டிலே உபதேசித்த பகவத்கீதைக்கு யதாவஸ்திதார்த்தத்தை அருளிச்செய்த எம்பெருமானாரை ஆச்ரயித்த ஸத்துக்களுடைய கல்யாணகுணங்களிலே என்னுடைய ப்ராணனும் மநஸ்ஸும் த்வரித்துப் போய், அங்கே கால் தாழ்ந்தது; ஆனபின்பு இப்போது வ்யபிதிஷ்டரைக் கணிசித்துச் சொல்லத் தொடங்கி, **எனக்கு ஸத்ருசர் லோகத்தில் ஆருளரென்று தமக்குண்டான அதிசயத்தைச் சொல்லுகிறார்**.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் எம்பெருமானாருடைய ஞானத்திற்கு உள்ள மேன்மை மற்றும் அவர் மோக்ஷத்திற்கான மார்க்கத்தைக் காண்பிக்கும் மேன்மை ஆகியவற்றைக் கூறி, இந்த்ரியங்களுக்கு வசப்பட்டு நிற்கும் இந்த மனிதர்கள் குறிந்து அவருடைய உண்மையான நிலையை உணர்த்தி, மஹாபாரத யுத்தத்தின்போது திருத்தேர்த்தட்டில் நின்று ஸர்வேச்வரன் உபதேசித்த ஸ்ரீமத்பகவத்கீதைக்கு உண்மையான பொருளை

அருளிச்செய்த எம்பெருமானாரை அண்டி நிற்கும் அடியார்களுடைய கல்யாண குணங்களில் ஈடுபட்டு, திருவரங்கத்தமுதனாராகிய தனது ப்ராணனும் மனமும் விரைந்து சென்று அங்கேயே நின்றது என்றார். இவ்விதம் ஆன பின்னர், இப்போது சிறந்தவர்களை விரும்பிக் கூறத் தொடங்கி, தனக்கு நிகரானவர் இந்த உலகத்தில் வேறு யார் உள்ளனர் என்று தனக்கு உண்டான அதிசயத்தை விளக்குகிறார்.

வ்யாக்யானம் – **(மாயன்)** "மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம்", "அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ" என்கிறபடியே ஸர்வ ஜகத் காரணபூதனுமன்றிக்கே, சைசவாவஸ்த்தையிலே யிருந்தும், பூதநா சகட யமளார்ஜுநாதி ஸம்ஹாரங்களும், கோவத்ஸ கோபால ஸ்ருஷ்டியும், கோவர்த்தநோத்தாரணமும், யசோதா அக்ரூர தார்த்தராஷ்ட்ர அர்ஜுந உதங்காதிகளுக்கு விச்வரூப ப்ரதர்சநமும் முதலான ஆச்சர்ய சேஷ்டிதங்களை யுடையவனென்னுதல். இப்படிப்பட்ட ஸ்ரீக்ருஷ்ணனும். (அன்று) "தத்ர தாவத் பாண்டவாநாம் குரூணாம் ச யுத்தே ப்ராரப்தே பகவாந் புருஷோத்தம: ஸர்வேச்வர: ஜகதுபக்ருதிமர்த்ய: பார்த்தம் ரதிநமாத்மாநம் ச ஸாரதிம் ஸர்வலோக ஸாக்ஷிகம் சகார" என்கிற ஸமயத்திலே. **(ஐவர் தெய்வத் தேரினில்)** பஞ்சபாண்டவர்களுக்கு விஜயம் கொடுக்கைக்காக "**தெய்வத்தேர்**" என்கிறது. அர்ஜுநனுக்கு தேவதா ப்ரஸாதத்தாலே வந்த தேரரென்னுதல். அன்றிக்கே தேவதேவனான க்ருஷ்ணனுடைய ஸ்ரீபாத ஸ்பர்சத்தாலே வந்த அதிசயத்தையிட்டுச் சொல்லுதல். இப்படிப்பட்ட திருத்தேர்த் தட்டிலே. **(செப்பிய)** "கார்பண்ய தோஷோபஹத ஸ்வபாவ: ப்ருச்சாமி த்வா தர்ம ஸம்மூட சேதா: | யச்ச்ரேய: ஸ்யாந் நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தே அஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்" என்று **ப்ரபந்நனான அர்ஜுநனைக் குறித்து**, "ந த்வேவாஹம் ஜாது நாசம் ந த்வம் நேமே ஜநாதிபா: | ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம்" என்று **ஜீவேச்வர பேதமும், ஜீவ பரஸ்பர பேதமும் உபக்ரமித்து**, "அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று **அபய ப்ரதாநம் பண்ணின ச்லோகமளவும் மோக்ஷ சாஸ்த்ரமாக** உபதேசித்த.

விளக்கம் – (மாயன்) கீதை (9-10) – மயாத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம் – என்னுடைய நியமனத்தின் அடிப்படையில் ப்ரக்ருதியானது அசையும் பொருள் மற்றும் அசையாப் பொருள்களை உண்டாக்கியபடி உள்ளது – என்றும், கீதை (10-8) – அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ – அனைத்தும் தோன்றுவதற்கு நானே காரணம் – என்றும்

உள்ளதற்கு ஏற்ப, அனைத்து லோகங்களுக்கும் காரணமாக உள்ளவன் என்பது மட்டும் அல்லாமல். பூதனை, சகடாஸுரன், யமளார்ஜுனர்கள் போன்றவர்களை அழித்தல், பசுக்கள் மற்றும் ஆயர்களைக் காப்பாற்றுதல், கோவர்த்தன பர்வதத்தை எடுத்தல், யசோதை – அக்ரூரர் – த்ருதராஷ்ட்ரன் – அர்ஜுனன் – உதங்கர் போன்ற பலருக்கும் விச்வரூப தரிசனம் அளித்தல் போன்ற வியக்கவைக்கும் பல செயல்கள் கொண்டவன். இப்படிப்பட்ட க்ருஷ்ணன். (அன்று) - எம்பெருமானாரின் கீதாபாஷ்ய அவதாரிகை – தத்ர தாவத் பாண்டவாநாம் குரூணாம் ச யுத்தே ப்ராரப்தே பகவாந் புருஷோத்தம: ஸர்வேச்வர: ஜகதுபக்ருதிமர்த்ய: பார்த்தம் ரதிநமாத்மாநம் ச ஸாரதிம் ஸர்வலோக ஸாக்ஷிகம் சகார - பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் போர் தொடங்கியவுடன் கண்ணன் செய்தது என்னவென்றால் புருஷோத்தமனும், அனைத்து ஈச்வரர்களுக்கும் ஈச்வரனும், இந்த உலகைக் கரை ஏற்றி உதவும் பொருட்டு மனிதனாக வடிவம் எடுத்தவனும் ஆகிய பகவான் – தனது அடியவனான அர்ஜுனன் மீது கொண்ட அளவு கடந்த ப்ரியம் காரணமாக அர்ஜுனனைத் தேரில் அமர வைத்து, தான் தேரோட்டுபவனாக அமர்ந்து, தன்னை உலகம் காணும்படிச் செய்தான் - என்பதற்கு ஏற்ப உள்ளதான காலகட்டத்தில். **(ஐவர் தெய்வத் தேரினில்)** - பஞ்சபாண்டவர்களுக்கு வெற்றியை அளிப்பதற்காக "தெய்வத்தேர்" என்னும்படி உள்ள நிலை. அர்ஜுனனுக்குத் தேவர்களால் அளிக்கப்பட்ட தேர் என்று பொருள். அல்லது தேவர்களுக்கும் தேவனாக உள்ள க்ருஷ்ணனுடைய திருவடிகளின் தீண்டுதல் காரணமாக ஏற்பட்ட அதிசயத்தைக் கூறுதல். இப்படிப்பட்ட திருத்தேர்த்தட்டில். (செப்பிய) - கீதை (2-7) - கார்பண்ய தோஷோபஹத ஸ்வபாவ: ப்ருச்சாமி த்வா தர்ம ஸம்மூட சேதா: | யச்ச்ரேய: ஸ்யாந் நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தே அஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் - மன உறுதி குலைதல் என்ற தோஷம் காரணமாகத் தளர்ந்த ஸ்வபாவம் கொண்டவனாக, எது தர்மம் என்று அறியாத மனம் கொண்டவனாக நான் உன்னைக் கேட்கிறேன். எனக்கு எது நன்மை பயக்கும் என்று நீ எண்ணுகிறாயோ அதனை எனக்கு உபதேசிப்பாயாக. உன்னுடைய சிஷ்யனாக உன்னிடம் சரணம் அடைகிறேன்; என்னைக் காப்பாயாக - என்று சரணம் புகுந்த அர்ஜீனனிடம், கீதை (2-12) - ந த்வேவாஹம் ஜாது நாசம் ந த்வம் நேமே ஜநாதிபா: | ந சைவ ந பவிஷ்யாம: ஸர்வே வயமத: பரம் – இப்படியாக நான் எப்போதும் இருந்ததில்லை என்பது இல்லை; நீயும் இருந்ததில்லை என்பது இல்லை; இவர்களும் இருந்ததில்லை என்பது இல்லை; எனியும் நாம் இருக்கப்போவதில்லை என்பதும் இல்லை - என்று

ஜீவாத்மா மற்றும் பரமாத்மாவிற்கு இடையே உள்ள வேறுபாடு, ஒவ்வொரு ஜீவனுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்பது தொடங்கி, கீதை (18-66) – அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – நான் உன்னை அனைத்து பாபங்களிலிருந்தும் விடுவித்து மோக்ஷம் அளிப்பேன் - என்று சரணாகதி குறித்து விளக்கும் சரமச்லோகம் முடிய உள்ளதான மோக்ஷ சாஸ்த்ரமாக உபதேசித்த.

வ்யாக்யானம் – (கீதையின்) பகவத்கீதையினுடைய. **(செம்மை)** செவ்வை, ஆர்ஜவம். ஆதிமத்யாவஸாநங்களிலே கரூபத சங்கர ஸ்ரீதர ஆநந்ததீர்த்தாதிகள் போலே தத்வத்தை உபதேசிக்கவேணுமென்று உபக்ரமித்து, நடுவே தம்முடைய குத்ருஷ்டி பக்ஷத்துக்கு அநுரூபமாகசில அர்த்தங்களை கலந்து, பூர்வோத்தர விருத்தமாகச் சொல்லுகையன்றிக்கே யதாவஸ்த்திதார்த்தாவ போதகமாய், உபநிஷத்துகளோடே ஏக வாக்ய தாபந்நமான. (பொருள்) கீதாபாஷ்யத்தை. **(தெரியப் பாரினிற் சொன்ன)** லோகத்திலே தத்வ விவேக சூந்யரான ஜநங்களுக்கு, தத்வ ஹித புருஷார்த்தங்களை விசதமாகத் தெளியும்படி ஸ்ரீபாஷ்யத்தைப் பண்ணின. **(இராமானுசனை)** எம்பெருமானாரை. **(பணியும் நல்லோர்)** "ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே" என்று ஆச்ரயித்த ஸத்துக்கள்; ஆழ்வான் முதலானவர்கள் என்றபடி. **(சீரினில்)** அவருடைய கல்யாண குணங்களில். **(சென்று பணிந்தது)** "ஒரு பகல் ஆயிரம் ஊழி" என்றும், "க்ஷண மாத்ரம் கல்ப ஸமம் மந்வாநா:" என்னும்படி அவருடைய கல்யாண குணாநு ஸந்தாநமின்றிக்கே யிருக்கமாட்டாத ப்ராவண்யத்தாலே த்வரித்துச் சென்று அந்த கல்யாண குணங்களிலே, "மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்ச முக்குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான்" என்று ஆழங்கால்பட்டது. "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம்" என்று ஜீயருமருளிச் செய்தாரிறே. அதேதென்றால், **(என்னாவியும் சிந்தையுமே)** இவ்வளவாக என்னுடைய ஹிதத்தைத் தெரியாதே ஸம்சரித்துப்போன **என்னுடைய ப்ராணனும் மநஸ்ஸுமே இப்படி ரஸஜ்ஞமாயிருந்தது**.

விளக்கம் – (கீதையின்) – ஸ்ரீமத்பகவத்கீதையின். (செம்மை) - நேர்மை. சங்கரர், ஸ்ரீதரர், ஆநந்ததீர்த்தர் [மத்வர்] ஆகியவர்கள் போன்று கீதையில் கூறப்பட்ட தத்வங்களை உபதேசிக்கவேண்டும் என்று தொடங்கி, நடுவில் தங்களுடைய ஸித்தாந்திற்குச் சேரும்

விதத்தில் சிலவற்றை கலந்து முன்பும் பின்பும் முரணாக உரைக்காமல், உண்மையான ஸித்தாந்தத்தை உள்ளது உள்ளபடி, உபநிஷத்துக்கள் கூறியவற்றுடன் பொருந்தும் விதத்தில். (பொருள்) - கீதாபாஷ்யத்தை. (**தெரியப் பாரினிற் சொன்ன**) - உண்மை எது, பொய் எது என்று பிரிந்து அறியாதபடி உள்ள இந்த உலகினர்களுக்கு, உண்மை மற்றும் நன்மை ஆகியவற்றை அளிக்கின்ற புருஷார்த்தங்களை விளக்கமாகப் புரியும்விதத்தில் ஸ்ரீபாஷ்யத்தைச் செய்தருளிய. (இராமானுசனை) - எம்பெருமானாரை. (பணியும் நல்லோர்) – ஸ்ரீவைகுண்டஸ்தவம் (1) – ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே – என்பதற்கு ஏற்ப அண்டி நிற்கும் நல்லவர்கள்; அதாவது கூரத்தாழ்வான் போன்றவர்கள். (சீரினில்) - அவருடைய உயர்ந்த திருக்கல்யாணகுணங்களில், (சென்று பணிந்தது) – திருவாய்மொழி (10-3-1) – ஒரு பகல் ஆயிரம் ஊழி - என்றும், க்ஷண மாத்ரம் கல்ப ஸமம் மந்வாநா: – ஒருநொடி என்பது ஒரு கல்பகாலமாக - என்றும் கூறுவதற்கு ஏற்ப அவருடைய திருக்கல்யாண குணங்களை எண்ணாமல் இருக்க இயலாமல், அதில் ஏற்பட்ட ஈடுபாடு காரணமாக விரைந்து சென்று, இராமானுச நூற்றந்தாதி (7) – மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்ச முக்குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் – என்பதற்கு ஏற்ப ஈடுபட்டு. யதிராஜ விம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர் – என்று ஸ்வாமி மணவாளமாமுனிகளும் அருளிச்செய்தார் அல்லவோ? (**என்னாவியும் சிந்தையுமே**) – இதுவரை எனக்கு ஏற்ற நன்மை எது என்று அறியாமல் ஸம்ஸாரத்தில் உழன்றபடி இருந்த எனது ப்ராணனும் மனதும் இப்போது இவ்விதம் இந்த விஷயத்தில் பொருந்தி நின்றன.

69. சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து முன் நாள்
அந்தமுற்று ஆழ்ந்தது கண்டு அவை என்றனக்கு அன்று அருளால்
தந்த அரங்கனும் தன் சரண் தந்திலன் தானது தந்து
எந்தை இராமானுசன் வந்து எடுத்தனன் இன்று என்னையே

விளக்கவுரை – ப்ரளயத்தின்போது மனம் மற்றும் அனைத்து இந்த்ரியங்களும் அழிந்து, நாசம் அடைந்து, அசித் பொருள்களுடன் இணைந்தபடி கிடந்தது. அந்தக் காலகட்டத்தில் இப்படிப்பட்ட மனம் மற்றும் இந்த்ரியங்களை எனக்கு அளித்த திருவரங்கன், தனது அபயஹஸ்தத்தை மட்டுமே காண்பித்தபடி இருந்தான்; தனது திருவடிகளில் சரணம் என்று என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை. அந்தச் சூழ்நிலையில் எனது தந்தையான எம்பெருமானார், ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்து, நான் வசித்து வந்த திருவரங்கத்தைத் தேடி வந்தார். என்னை வாரி எடுத்து, என்னிடமிருந்து எதனையும் எதிர்பாராமல், ஸ்ரீரங்கநாதனே அளிக்காமல் இருந்த அவனது திருவடிகளை எனக்கு அளித்தார். இப்படியாகப் பகவானே எடுக்கத் தயங்கிய என்னை, தான் எடுத்துக் கொண்டார்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே எம்பெருமானார் திருவடிகளை ஆச்ரயித்த மஹாத்மாக்களுடைய கல்யாண குணங்களிலே தமக்கு உண்டான ப்ரீதி ப்ரகர்ஷத்தைச் சொல்லி ஹ்ருஷ்டராய் இதிலே ஸர்வ சேதனர்களும் ஸம்ஹார தசையிலே மநஸ்ஸோடே கூட ஸர்வ விஷயங்களையும் இழந்து அசித் கல்பராய்க் கிடக்கிற தசையைக் கண்டு, அப்படிப்பட்ட எனக்கு அபேக்ஷா நிரபேக்ஷமாகத் தம்முடைய **நிர்ஹேதுக பரம க்ருபையாலே கரண களேபர ப்ரதாநம் பண்ணின பெரியபெருமாளும்** ஸ்ருஷ்டித்த மாத்ரமொழிய, அவ்வோபாதி ஸம்சார ஸம்பந்தத்தை விடுத்து தம்முடைய திருவடிகளைத் தந்திலர். இப்படி அதிதுர்லபமானவற்றை நமக்கு பிதாவான எம்பெருமானார், **தம்முடைய திருவடிகளை உபாயோபேயமாக எனக்குத் தந்து இப்போது என்னை ஸம்சாரத்தில் நின்றும் உத்தரித்தாரென்**கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் எம்பெருமானாருடைய திருவடிகளை அண்டி நின்ற மஹாத்மாக்களுடைய திருக்கல்யாண குணங்களில் தனக்கு ஏற்பட்ட மகிழ்வு காரணமாக உண்டான ஈடுபாட்டை உரைத்து மகிழ்ந்தார். இந்தப் பாசுரத்தில் – ப்ரளயம் ஏற்பட்டபோது அனைத்து சேதநர்களும் மனம் மற்றும் அனைத்து இந்த்ரியங்ளையும் இழந்து அசித் பொருள்கள் போன்றே கிடக்கும் நிலையைக் கண்ட பின்னர், அவ்விதமாகக் கிடக்கும் எனக்கு, நான் விரும்பிக் கேட்பதை எதிர் பாராமல், தானாகவே தன்னுடைய எந்தவிதமான காரணமும் இன்றி வருவதான கருணை காரணமாகச் சரீரம் மற்றும் இந்த்ரியங்களை பெரியபெருமாள் அளித்தான். அவற்றை மட்டுமே அளித்தான் அல்லாமல், ஸம்ஸார ஸம்பந்தம் என்பதை விடுவித்து தனது திருவடிகளில் சேர்த்துக் கொள்ளவில்லை. இவ்விதம் கிட்டுவதற்கு மிகவும் அரிதான மோக்ஷத்தை, நம்முடைய

தந்தை போன்ற எம்பெருமானார், தனது திருவடிகளையே உபாயம் மற்றும் உபேபயமாக எனக்கு அளித்து, இப்போது என்னை ஸம்ஸாரத்திலிருந்து உயர்த்தினார் - என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் – (சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து) "மந: ஷஷ்டாநீந்த்ரியாணி" என்கிறபடியே இந்திரியங்களிலே மநஸ்ஸு ப்ரதாநமாகையாலும், அவைகளுக்கு மநஸ் ஸஹாகார மில்லாவிடில் தன் கார்யங்களிலே அகிஞ்சித் கரங்களாய் போகையாலும் மநஸ்ஸை யெடுத்தது தசேந்த்ரியங்களுக்கும் உபலக்ஷணம். இப்படி ஏகாதசேந்த்ரியங்களும் ப்ரளய காலத்திலே சேர்ந்து, "ப்ருதிவ்யப்ஸு லீயதே" என்று தொடங்கி, "தம: பரே தேவ ஏகீ பவதி" என்னுமளவும் சொன்ன க்ரமத்திலே லயித்து ஸூக்ஷ்மாவஸ்தையைப் பெற்று.

விளக்கம் – (சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து) - கீதை (15-7) – மந: ஷஷ்டாநீந்த்ரியாணி – மனம் மற்றும் ஐந்து இந்த்ரியங்கள் - என்பதற்கு ஏற்ப இந்த்ரியங்களில் மிகவும் முதன்மையானது மனம் என்பதாலும், அவைகளுக்கு மனத்தின் உதவி இல்லையென்றால் தங்களுடைய செய்கைகளில் சிறிதும் ஈடுபட இயலாமல் போவதாலும், சிந்தை என்று மனத்தைக் கூறியது அனைத்து இந்த்ரியங்களுக்கும் ஓர் உதாரணம் போன்றாகும். இவ்விதம் பதினோரு இந்த்ரியங்களும் ப்ரளயகாலத்தில் ஒன்றாகச் சேர்ந்து, ஸுபால உபநிஷத் (2) – ப்ருதிவ்யப்ஸு லீயதே – பூமி நீரில் சென்று லயிக்கிறது - என்று தொடங்கி, ஸுபால உபநிஷத் (2) – தம: பரே தேவ ஏகீ பவதி – தமஸ்ஸானது உயர்ந்த தேவனிடம் சென்று ஒன்றாகிறது - என்பது முடிய கூறுவதற்கு ஏற்ப உள்ள வரிகளில் உள்ளது போன்று ஸூக்ஷ்ம நிலையை அடைந்து.

வ்யாக்யானம் – (அந்தமுற்றாழ்ந்தது) ஸர்வமும் உபஸம்ஹ்ருதமாய் அசித விசேஷிதமாய்க் கிடக்கிற தசையிலே. **(முன்னாள்)** ஸ்ருஷ்டே: பூர்வகாலத்தில். **(கண்டு)** "ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி" **என்றும்**, "கரணகளேபரை: கடயிதும் தயமாந மநா:" என்றும் அர்த்தித்வ நிரபேக்ஷமாக நிர்ஹேதுக க்ருபையால் தமக்கு பரிகரமாம்படியையும், "விசித்ரா தேஹ ஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும் பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்த பாதாதி ஸம்யுதா" என்றும் ஸ்வ சரண கமலத்திலே பரிசர்யார்த்தமாக.

விளக்கம் – அனைத்தும் சுருக்கப்பட்டதாக, அசித் பொருள்களுக்கும் இவற்றுக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்னும்படியாகக் கிடக்கும் நிலையில். (முன்னாள்) - ஸ்ருஷ்டிக்கு முன்புள்ள காலத்தில். (கண்டு) - சாந்தோக்ய உபநிஷத் – ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி – அந்த ப்ரஹ்மம் "நான் பகவாகக் கடவேன்" என்று ஸங்கல்பித்து, அனைத்தையும் படைத்தது – என்றும், ஸ்ரீரங்கராஜ ஸ்தவம் (2-41) - கரணகளேபரை: கடயிதும் தயமாந மநா: - சேதனங்களை, அவற்றின் உடல் மற்றும் இந்த்ரியங்களுடன் சேர்க்க நீ திருவுள்ளம் கொண்டாய் – என்றும் கூறுவதற்கு ஏற்ப தன்னை ப்ரார்த்திக்க வேண்டியதை எதிர்பார்க்காமல், எந்தவிதமான காரணமும் இன்றி ஏற்படும் கருணை காரணமாக தனக்குப் பரிகரம் என்றாகும் தன்மையையும், ஸ்ரீவிஷ்ணுதத்வம் - விசித்ரா தேஹ ஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும் பூர்வமேவ க்ருதா ப்ரஹ்மந் ஹஸ்த பாதாதி ஸம்யுதா - நான்முகனே! ஸர்வேச்வரனை வணங்குவதற்காகவே கை கால் முதலிய உறுப்புகளுடன் கூடின விசித்திரமான இந்தச் சரீரம் முற்காலத்தில் உண்டாக்கப்பட்டது - என்பதற்கு ஏற்ப தனது தாமரை போன்ற திருவடிகளில் கைங்கர்யம் செய்வதற்கு ஏற்றபடி.

வ்யாக்யானம் – (**அவை**) என்றது மநஸ்ஸையும் தசேந்திரியங்களையும் கூட்டி. (**அன்று**) ஸ்ருஷ்டி காலத்திலே. (**என்றனக்கு அருளால்**) நிர்ஹேதுகமாக எனக்கு கரண களேபர ப்ரதாநம் பண்ணியருளின. (**அரங்கனும்**) அப்படிப்பட்டவன் தூரஸ்த்தனாய் நின்றால் அடியேன் ஸம்சார துக்கத்தை ஸஹிக்கமாட்டாதே கூப்பிட்ட த்வநி அவனுடைய செவிப்பட வரிது என்று ஆறியிருக்கலாமோ, கார்யாந்தர ஸக்தனாயிருக்கிறானென்று ஆறியிருக்கலாமோ, அவன் அடியேன் ஜநித்த தேசத்திலே நித்ய ஸந்நிஹிதனாயிருந்தான், ஸர்வரையும் ரக்ஷிக்கவேணுமென்று உத்ஸாஹ யுக்தனாய் அபயஹஸ்தத்தைக் காட்டிக் கொண்டிருந்தான்; தாத்ருசனும்.

விளக்கம் – (அவை) - இதன் மூலம் மனம் மற்றும் பத்து இந்த்ரியங்கள் ஆகியவற்றைச் சேர்த்துக் கூறுகிறார். (அன்று) - ஸ்ருஷ்டி காலத்தில். (என்றனக்கு அருளால்) - எந்தவிதமான காரணமும் இன்றி எனக்குச் சரீரம் மற்றும் இந்திரியங்களை அளித்தருளிய. (அரங்கனும்) - அப்படிப்பட்டவன் வெகுதொலையில் இருந்தால் கூட என்னுடைய ஸம்ஸார துக்கத்தை என்னால் பொறுத்துக் கொள்ள இயலாமல் அவனை அழைத்த கூக்குரலானது அவன் திருச்செவிகளுக்குக் கேட்பது கடினம் என்பதாலோ அல்லது மற்ற

செயல்களில் அவன் ஈடுபட்டுள்ளான் என்பதாலோ அவன் ஏதும் செய்யாமல் உள்ளான்? அப்படி அல்லவே; நான் எங்கு பிறந்து வாழ்கிறேனோ அதே திருவரங்கத்தில் மிகவும் அருகில் உள்ளான். அனைவரையும் காக்கவேண்டும் என்று எப்போதும் மலர்த்த திருமுகத்துடனும், அபயஹஸ்தத்தைக் காண்பித்துக் கொண்டும் உள்ளான். இப்படிப்பட்ட திருவரங்கநாதன் கூட.

வ்யாக்யானம் – (தன் சரண்) "ஸர்வே வேதா யத் பதமாமநந்தி", "விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:", "தநம் மதீயம் தவ பாதபங்கஜம்", "கதா புந: சங்க ரதாங்க கல்பக த்வஜ அரவிந்த அங்குச வஜ்ரலாஞ்சநம் த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜ த்வயம் மதீய மூர்த்நாம் அலங்கரிஷ்யதி", "கதாஹம் பகவத் பாதாம்புஜ த்வயம் சிரஸா தாரயிஷ்யாமி", "ஏதத் தேஹாவஸாநே மாம் த்வத் பாதம் ப்ராபய ஸ்வயம்" என்று ஸம்சார துக்க நிவ்ருத்தி பூர்வகமாக பரமபுருஷார்த்தமான தம்முடைய **ஸ்ரீசரணாரவிந்தத்தை**.

விளக்கம் – (தன் சரண்) - ஸர்வே வேதா யத் பதமாமநந்தி – அனைத்து வேதங்களும் யாருடைய ஸ்வரூபத்தைக் கூறுகின்றனவோ – என்றும், ருக் வேதம் (1-154-4) - விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ: - மஹாவிஷ்ணுவின் திருவடிகள் உயர்ந்த தேன் நிரம்பியவை என்று த்யானிக்கத்தக்கவை – என்றும், ஸ்தோத்ரரத்னம் (30) – தநம் மதீயம் தவ பாதபங்கஜம் – எனக்கு உன்னுடைய திருவடித்தாமரைகளே பெருஞ்செல்வமாகும் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (31) – கதா புந: சங்க ரதாங்க கல்பக த்வஜ அரவிந்த அங்குச வஜ்ரலாஞ்சநம் த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜ த்வயம் மதீய மூர்த்நாம் அலங்கரிஷ்யதி – மூன்று லோகங்களை அளந்தவனே! சங்கு, சகரம், கற்பகவிருக்ஷம், கொடி, தாமரை, வஜ்ராயுதம் ஆகிய அடையாளங்களைக் கொண்டதான உனது இரண்டு திருவடிகளும் எனது தலையை எப்போது அலங்கரிக்கப்போகின்றன – என்றும், ஸ்ரீவைகுண்டகத்யம் – கதாஹம் பகவத் பாதாம்புஜ த்வயம் சிரஸா தாரயிஷ்யாமி – பகவானுடைய தாமரை போன்ற இரண்டு திருவடிகளையும் நான் என்னுடைய தலையில் எப்போது தாங்குவேன் – என்றும், ந்யாஸ தசகம் (4) - ஏதத் தேஹாவஸாநே மாம் த்வத் பாதம் ப்ராபய ஸ்வயம் – எனது சரீரம் விழும் நேரத்தில் உன்னுடைய திருவடிகளிடம் என்னை நீயே கொண்டு சேர்த்துக் கொள்ளவேண்டும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸம்ஸாரத் துக்கத்தை நீக்கி, அதன் பின்னர் மிகவும் உயர்ந்த புருஷார்த்தமான தனது திருவடிகளை.

வ்யாக்யானம் – (தந்திலன்) சேர்த்துக் கொண்டதில்லை. என்னுடைய அநாதி கர்ம பாஹுள்யத்தைப் பார்த்து ப்ரதம ஸங்கல்ப ரூபமாய் ஸம்ஸார ப்ரவர்த்தகமான தம்முடைய நிக்ரஹ சக்தியை ப்ரவர்த்திப்பித்தானென்றபடி. "ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி:" என்றும், "ஸம்ஸாரார்ணவ மக்நாநாம் விஷயாக்ராந்த சேதஸாம்" என்றும், "*ஸம்ஸார மருகாந்தாரே துர்வ்யாதி வயாக்ர பீஷணே | விஷய க்ஷுத்ர குல்மாட்யே த்ருஷ்ணாபாதபசாலினி || புத்ர தார க்ருஹ க்ஷேத்ர ம்ருக த்ருஷ்ணாம்பு புஷ்கலே | க்ருத்யா க்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தம் இதஸ் தத: || அஜஸ்ரம் ஜாத த்ருஷ்ணார்த்தம் அவஸந்நாங்கமக்ஷமம் | க்ஷீண சக்தி பலாரோக்யம் கேவலம் க்லேச ஸம்ச்ரயம்*" என்றும், "அவிவேக கந அந்த திங்முகே பஹுதா ஸந்தத துக்க வர்ஷிணி பகவந் பவ துர்த்திநே" என்றும் சொல்லப்பட்ட ஸம்ஸார ஸாகரத்திலே நிமக்நனாயிருக்க.

விளக்கம் – (தந்திலன்) – அளித்து என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை. எனது எல்லையற்ற கர்மங்களின் விதங்களைக் கண்ணுற்று, தனது ஸங்கல்பத்தின் மூலமாகவே ஸம்ஸாரத்தில் ஆழ்த்தவல்லதான "தான் விலக்கிவிடுதல்" என்ற நிலையை வளர்த்தான். அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை – ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: - தன்னுடைய கர்மவினைகள் காரணமாக ஸம்ஸாரம் என்னும் சக்கரத்தில் உழன்றபடி – என்றும், ஸ்ரீவிஷ்ணுதர்மம் (1-59) – ஸம்ஸாரார்ணவ மக்நாநாம் விஷயாக்ராந்த சேதஸாம் – ஸம்ஸாரம் என்னும் ஸமுத்ரத்தில் சிக்குண்டு, மனமும் உடலும் உலகவிஷயங்களால் பீடிக்கப்பட்டு – என்றும், ஸ்ரீதேவராஜ அஷ்டகம் (4, 5, 6) - ஸம்ஸார மருகாந்தாரே துர்வ்யாதி வயாக்ர பீஷணே | விஷய க்ஷுத்ர குல்மாட்யே த்ருஷ்ணாபாதபசாலினி || புத்ர தார க்ருஹ க்ஷேத்ர ம்ருக த்ருஷ்ணாம்பு புஷ்கலே | க்ருத்யா க்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தம் இதஸ் தத: || அஜஸ்ரம் ஜாத த்ருஷ்ணார்த்தம் அவஸந்நாங்கமக்ஷமம் | க்ஷீண சக்தி பலாரோக்யம் கேவலம் க்லேச ஸம்ச்ரயம் - ஸம்ஸாரம் என்பது ஒரு பாலைவனம் ஆகும். அதில் புலிகள் போன்ற பயங்கரமான பிணிகளும், பாலைவனத்தின் முட்புதர்கள் போன்ற அற்ப சுகங்களும் நிறைந்துள்ளன. ஆசை என்னும் மரங்கள், மக்கள், மனைவி, வீடு, நிலம் ஆகியவை கானல்நீர் போன்று நிறைந்துள்ளன. இப்படிப்பட்ட இந்த இடத்தில் செய்யவேண்டியவை, செய்யத்தகாதவை என்ற பகுத்தறிவில்லாத குருடனாகவும், இங்கும் அங்கும் அலைந்து திரிந்து பேராசை

உடையவனும், மெலிந்து வாடிய அவயவங்களுடன் கூடினவனும், திறமையற்றவனும், சரீர பலம் மற்றும் ஆரோக்யம் முதலானவை குறைந்தவனும், துன்பத்துக்கே இருப்பிடம் ஆனவனும் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (49) – அவிவேக கந அந்த திங்முகே பஹுதா ஸந்தத துக்க வர்ஷிணி பகவந் பவ துர்த்திநே – ஆவிவேகம் என்னும் மேகங்களால் இருண்ட திசைகள் கொண்டதும், பலவிதமாக இடைவிடாமல் பெருகும் துக்கங்களை பொழிந்தபடி உள்ளதும் ஆகிய ஸம்ஸாரம் என்னும் துர்தினத்தில் – என்றும் கூறப்பட்ட ஸம்ஸாரம் என்னும் ஸமுத்திரத்தில் மூழ்கியபடி உள்ள எனக்கு.

வ்யாக்யானம் – (எந்தையிராமானுசன்) "ஸ ஹி வித்யாஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்டம் ஜந்ம" என்றும், "அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன்" என்றும், "அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத ஸந்தமேநம் ததோ விது:" என்கிறபடியே அதுதா னேதென்ன "நாராயண சரணௌ" என்றத்தைக் கொடுத்த பிதாவான எம்பெருமானார். **(இன்று வந்து)** இந்த தசையிலே ஸ்ரீபெரும்புதூரிலே அவதரித்து காஞ்சி நகரிலே தேவப்பெருமாளுடைய அநுக்ரஹம் பெற்றிருந்து என்னை உத்தரிக்க வேணுமென்று நானிருந்த தேசத்தைத் தேடி வந்து, பரகத ஸ்வீகாரத்தாலே அநேக க்ருஷிகளைப் பண்ணி என்னை பரிக்ரஹித்து. **(தானது தந்து)** "யச்ச்ரேயஸ் ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ் தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம்" என்று உபஸந்நனாய் அர்த்தியாதே யிருக்கத் தானே நிர்ஹேதுகமாக ஸ்ரீரங்கநாதனுக்கும் கொடுக்க அசக்யமான அந்த நாராயண சரணத்வத்வங்களை உபாயோபேயமாகக் கொடுத்து.

விளக்கம் – (எந்தை இராமானுசன்) - ஆபஸ்தம்ப தர்மஸூத்ரம் - ஸ ஹி வித்யாஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்டம் ஜந்ம – (குருவானவர்) கல்வி மூலம் சிஷ்யனுக்குப் புதிய பிறவியை அளிக்கிறார் – என்றும், திருச்சந்தவிருத்தம் (64) – அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன் – என்றும், தைத்திரீய உபநிஷத் – அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத ஸந்தமேநம் ததோ விது: - ப்ரஹ்மம்மத்தை உண்டு என அறிபவன், தானும் உள்ளவன் ஆகிறான்; அவன் அனைத்தும் அறிந்தவன் என்று கருதப்படுகிறான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப அளித்தது என்னவென்றால், "நாராயண சரணௌ" என்று அதனை அளித்தருளிய எனது தந்தையான எம்பெருமானார். (இன்று) - இந்த நிலையில் ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்து, காஞ்சீபுரத்தில் உள்ள தேவராஜனுடைய அனுக்ரஹத்தைப் பெற்று, என்னை

ஸம்ஸாரத்திலிருந்து உயர்த்தவேண்டும் என்று எண்ணி, நான் உள்ள இடம் தேடி வந்து, பலவிதமான செயல்கள் செய்து, என்னைத் தன்பக்கல் ஈர்த்துக் கொண்டு. (தானது தந்து) - கீதை (2-7) - யச்ச்ரேயஸ் ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ் தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்நம் – எது சிறந்ததோ அதனை எனக்குக் கூறவேண்டும். உன்னுடைய சிஷ்யனாகிய நான் உன்னைச் சரணம் புகுந்து நிற்கிறேன் – என்பது போன்று நான் எந்தவிதமான ப்ரார்த்தனையும் செய்யாமல் இருந்தபோதிலும், எந்தவிதமான காரணமும் இன்றி, ஸ்ரீரங்கநாதனாலும் அளிப்பதற்கு இயலாதபடி இருந்த அத்தகைய நாராயண சரணத்வங்களை உபாயம் மற்றும் உபேயமாக எனக்கு அளித்து.

வ்யாக்யானம் – (என்னையெடுத்தனன்) அமுதனார் திருவுள்ளத்திலே ஓடுகிறது தம்மையே உத்தரித்தாரரென்று காணும். **(என்னையே)** ப்ரபல பாபிஷ்டனான **வென்னையே**. ஸர்வ சக்தி யுக்தனான ஸர்வேச்வரனாலும் எடுக்க அசக்யனான **என்னையே** உத்தரித்தார். ச்ருதாச்ருதமான அர்த்தத்தைக் கொண்டு சொன்னேனோ, இதுக்கு உதாஹரணம் அடியேனே. **ஸம்ஸார ஸாகரத்தில் நின்றும் உத்தரித்தார்**. "மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ர பாணிநா" என்ற அர்த்தத்தை ப்ரத்யக்ஷமாகக் கண்டேன். ஸ்வாநுபவத்தாலே தெளிந்தேனென்றதாய்த்து.

விளக்கம் – (என்னை எடுத்தனன்) - திருவரங்கத்தமுதனாரின் திருவுள்ளத்தில் தன்னை மட்டுமே உயர்த்துவதற்காக எம்பெருமானார் வந்தார் என்ற எண்ணமே உள்ளது காண்க. (என்னையே) - மிகுந்த பாபங்கள் பல செய்தவன் என்று அனைவரும் அறியும்படி உள்ள என்னைக்கூட. அனைத்து சக்திகளையும் கொண்ட ஸர்வேச்வரனால் கூட உயர்த்த முடியாத என்னை உயர்த்தினார். ச்ருதிகள் போன்றவற்றில் கூறப்பட்ட உதாரணம் கொண்டு இந்தக் கருத்தை உரைத்தானோ, அல்ல; எனது வாழ்க்கையே இதற்கு உதாரணம் ஆகும். ஸம்ஸாரம் என்ற ஸமுத்திரத்திலிருந்து மேலே உயர்த்தினார். ஜயாக்ய ஸம்ஹிதை – மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ர பாணிநா – ஸம்ஸாரம் என்னும் ஸமுத்திரத்திலிருந்து சாஸ்த்ரம் என்னும் கைகள் கொண்டு கருணை காரணமாக மேலே உயர்த்தி - என்பதன் மூலம் கூறப்பட்ட கருத்தை நான் நேரடியாகவே கண்டேன். எனது அனுபவம் மூலமே உணர்ந்தேன்.

70. என்னையும் பார்த்து என் இயல்வையும் பார்த்து எண்ணில் பல்குணத்த
உன்னையும் பார்க்கில் அருள் செய்வதே நலம் அன்றி என்பால்
பின்னையும் பார்க்கில் நலம்முளதே உன் பெரும் கருணை
தன்னை என் பார்ப்பர் இராமானுச உன்னைச் சார்ந்தவரே

விளக்கவுரை – எம்பெருமானாரே! மிகுந்த பாவங்களுடன், உலக விஷயங்களில் ஈடுபட்டபடி உள்ள என்னை நீவிர் பார்க்க வேண்டும். இவ்விதம் உலக விஷயங்களில் மட்டுமே ஈடுபட்டபடி உள்ள என்னுடைய குணங்களை நீவிர் காண வேண்டும். எண்ண இயலாத உயர்ந்த திருக்கல்யாண குணங்கள் கொண்டுள்ள உம்மையே நீவிர் ஒருமுறை பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படியாக ஒப்பு நோக்கிய பார்வை மூலம், பரமகாருணிகரான நீவிர், எல்லையற்ற பாவங்கள் நிறைந்த என்னை வாரி எடுத்து, உமது கருணைக்கு இலக்காக்க வேண்டும். இவ்விதம் நீவிர் செய்யாமல், என்னைக் காப்பாற்ற என்னிடம் வேறு ஏதேனும் நன்மை உள்ளதா என்று நீவிர் ஆராய்ந்து பார்த்தால், உமது திருவடிகளை அண்டியுள்ளவர்கள், உம்முடைய உயர்ந்த குணங்களைக் குறித்து ஐயம் கொள்ள மாட்டார்களா?

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே எம்பெருமானார் தமக்கு பண்ணியருளின உபகாரத்தை யநுஸந்தித்து ஹ்ருஷ்டராய், இதிலே என்னையும் என்னுடைய துர்வ்ருத்தத்தையும் தேவரீருடைய அப்ரதிம ப்ரபாவத்தையும் ஆராய்ந்து பார்த்தால், என்னை விஷயீகரித்துக் கைக்கொள்ளுகையே நல்லது, இதுவொழிய நான் தீரக் கழியச் செய்த அபராதங்களைப் பத்தும் பத்தாகக் கணக்கிட்டு, மீளவும் ஆராயுமளவில் என்னிடத்திலே நன்மையென்று பேரிடலாவதொரு தீமையுங் கூடக் கிடையாமையாலே என்னைக் கைவிட வேண்டி வருகையாலே **ஸர்வோத்தரான தேவரீருடைய நிர்ஹேதுக க்ருபையை தேவரீர் திருவடிகளை ஆச்ரயித்தவர்கள் என் சொல்வார்களோவென்று நேர்கொடுநேரே விண்ணப்பஞ்** செய்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் எம்பெருமானார் தனக்குச் செய்தருளிய உபகாரங்களை எண்ணியபடி இருந்து மகிழ்ந்து நின்றார். இந்தப் பாசுரத்தில் - என்னையும், எனது மிகுந்த தாழ்வான செயல்களையும், உம்முடைய விவரிக்க இயலாத ப்ரபாவத்தையும் ஆராய்ந்து

பார்க்கும்போது, என்னை உடனடியாகத் தாங்கள் ஏற்றுக்கொள்ளுவதே எனக்கு நன்மை அளிப்பதாகும். ஏனென்றால் நான் இடைவிடாமல் செய்து வருகின்ற அபராதங்களைப் பலவாகக் கணக்கிட்டு, அதனைத் தொடர்ந்து மேலும் ஆராயும்போது என்னிடம் நன்மை என்று கூறும்படியான எந்த ஒரு செயலும் இல்லை என்பதால், என்னைக் கைவிடவேண்டும் என்றுள்ளதால், மிகவும் உயர்ந்த உம்முடைய காரணம் இல்லாமல் என்னிடம் காண்பிக்கின்ற கருணையை, உமது திருவடிகளை அண்டி நிற்பவர்கள் கண்டால் என்ன கூறுவார்களோ என்று அஞ்சி விண்ணப்பம் செய்கிறார்.

வ்யாக்யானம் – (என்னையும் பார்த்து) ஸர்வஜ்ஞரான தேவரீர் இவ்வளவும் என்னை நிர்ஹேதுகமாக பரிக்ரஹித்து, பஹு ப்ரகாரமாக சிக்ஷித்து, உபதேசித்து, ஸத் பதத்திலே நடப்பித்து உபகரித்தாலும் அவற்றையெல்லாம் அகிஞ்சித்கரமாம்படி பண்ணக் கடவதாய் அநாதி கர்ம ப்ரவர்த்தாநந்த அக்ருத்ய கரணாதி பாப வாஸநா தூஷிதனாகையாலே விபரீத ருசி பூயிஷ்டனா யிருக்கிற **வென்னையும் பார்த்து**. **(என்னியல்வையும் பார்த்து)** "ராமாநுஜார்ய விஷயீ க்ருதமப்ய ஹேமாம் பூய: ப்ரதர்ஷயதி வைஷயிகோ விமோஹ:" என்கிறபடி, தேவரீர் அங்கீகரித்தருளின பின்பும் துர்வாஸநா வசத்தாலே அந்தருச் யநுகுணமாக துர்விஷயங்களிலே மண்டித் திரிகிற **என்னுடைய வ்ருத்தியையும்** பார்த்து. **இயல்வு** – ப்ரவ்ருத்தி.

விளக்கம் – (என்னையும் பார்த்து) - அனைத்தும் அறிந்த நீவிர் இப்படியாக என்னை எந்தவிதமான காரணமும் இன்றி ஏற்றுக்கொண்டு, பலவிதமாக எனக்கு உபதேசங்கள் செய்து நல்ல வழியில் நான் நடக்கும்படியாக உபகாரம் செய்கிறீர்கள். ஆனால் அவை அனைத்தையும் பயனற்றதாக செய்யக்கூடியதாக உள்ள, சரணாகதி கத்யம் – அநாதிகர்ம ப்ரவ்ருத்த அநந்த அக்ருத்யகரணாதி பாபவாஸநா – எல்லையற்ற காலமாக கர்மங்களில் ஈடுபட்டு, செய்யக்கூடாத எண்ணற்ற செயல்கலில் ஈடுபட்டு, பாபவாசனை தொடர்ந்து வரும்படியாக – என்பதற்கு ஏற்ப, தாழ்ந்தவற்றில் ஆசை நிறைந்துள்ள என்னையும் நோக்கி. **(என்னியல்வையும் பார்த்து)** - ராமாநுஜார்ய விஷயீ க்ருதமப்ய ஹேமாம் பூய: ப்ரதர்ஷயதி வைஷயிகோ விமோஹ: - என்பதற்கு ஏற்ப நீவிர் ஏற்றுக்கொண்ட பின்னரும் தாழ்ந்த வாசனை காரணமாக மிகவும் தாழ்வானவற்றில் ஈடுபட்டு நிற்கின்ற எனது செயல்களையும் பார்த்து.

வ்யாக்யானம் – (எண்ணில் பல் குணத்தவுன்னையும் பார்க்கில்) அஸங்க்யேயங்களாய், அநேகங்களாய், கல்யாண தமங்களாய், தோஷங்களையே பச்சையாக அங்கீகரிக்கைக்குடலான ஸௌசீல்ய வாத்ஸல்யாதி குணங்களையுடையராய், "சேஷோ வா ஸைந்யநாதோ வா ஸ்ரீபதிர் வேதி ஸாத்விகை: விதர்க்யாய மஹா ப்ராஜ்ஞை:" என்னும்படியான ப்ரபாவத்தையுடைய தேவரீர் தம்மையும் நன்றாகப் பார்த்தால், "மதி க்ஷயாந் நிவர்த்தந்தே ந கோவிந்த குண க்ஷயாத்" என்கிறபடியே **பகவத் குணங்களுக்குத் தொகையுண்டாகிலும் இவருடைய குணங்களுக்குத் தொகையில்லை** என்று காணும் அமுதனாருடைய திருவுள்ளத்திலோடுகிறது.

விளக்கம் – (எண்ணில் பல் குணத்த உன்னையும் பார்க்கில்) - எண்ண இயலாதபடியும், பலவிதமாயும், திருக்கல்யாண குணங்களை வெளிப்படுத்துவதாயும், தோஷங்களையும் உள்ளது உள்ளபடியே ஏற்கின்றவற்றுக்குக் காரணமாகவும் உள்ள ஸௌசீல்யம், வாத்ஸல்யம் போன்ற குணங்கள் கொண்டவராக. சேஷோ வா ஸைந்யநாதோ வா ஸ்ரீபதிர் வேதி ஸாத்விகை: விதர்க்யாய மஹா ப்ராஜ்ஞை: – என்பதற்கு ஏற்ப உள்ளதான ப்ரபாவத்தைக் கொண்ட உம்மையும் நன்றாக நோக்கினால். மதி க்ஷயாந் நிவர்த்தந்தே ந கோவிந்த குண க்ஷயாத் – கோவிந்தனுடைய குணங்கள் குறித்து உரைக்கும்போது குறைவான அறிவு காரணமாகவே பின்வாங்கப்படுகிறது அல்லாமல் அவனுடைய குணக்குறைவு காரணமாக அல்ல – என்பதற்கு ஏற்ப பகவத்குணங்களை எண்ண முடிந்தால் கூட எம்பெருமானாருடைய குணங்களை எண்ண இயலாது என்பதே திருவரங்கத்தமுதனாரின் திருவுள்ளத்தில் உள்ளது.

வ்யாக்யானம் – (அருள் செய்வதே நலம்) "பரமகாருணிகோ நபவத் பர: பரமசோச்யதமோ ந ஹி மத்பர: இதி விசித்ய ஹ்ருதாமயி கிங்கரேயதுசிதம் ரகுவீர ததா குரு" என்கிறபடியே **தேவரீர் பரம காருணிகர்**, **அடியேன் அத்யந்த பாபிஷ்டன்**. "அஹம் அஸ்மி அபராத சக்ரவர்த்தீ *கருணே த்வம் ச குணேஷு ஸார்வபௌமீ விதுஷீ ஸ்த்திதிம் ஈத்ருசீம் ஸ்வயம் மாம் வ்ருஷ சைலே ஈச்வர பாதஸாத் குரு த்வம்*" என்றும், "த்வயாபி லப்தம் பகவந் இதாநீம் அநுத்தமம் பாத்ரம் இதம் தயாயா" என்கிறபடியே வாத்ஸல்யாதி குணங்களுக்கெல்லாம் உத்தீபகமான தேவரீருடைய க்ருபா குணத்துக்கு பூர்ண விஷயமான வடியேனை வாத்ஸல்ய நிதியான தேவரீர் உபேக்ஷிக்கலாமோ, **தேவரீருக்கு**

அலாப்யலாபமன்றோ அடியேனை அங்கீகரிக்கை. என்னைப் போன்ற பாபிஷ்ட்டனை ரக்ஷிக்கை தேவரீருடைய கல்யாணகுணங்களுக்கு ஒரு பரபாகம் பெறுகையன்றோ. ஆக இதுக்கு முன்பு செய்தவோபாதி மேலுண்டான அம்சத்துக்கும் நிர்ஹேதுகமாக க்ருபை பண்ணி யருளுகையே ச்ரேஷ்டம் நாலூரான் விஷயமாக ஆழ்வான் பணித்த வார்த்தை, தேவரீருடைய விஷயீகார தார்ட்யமன்றோவென்று அபிப்ராயமாய் இப்படி சொல்லுகிறார் காணும் இவர்.

விளக்கம் – (**அருள் செய்வதே நலம்**) - பரமகாருணிகோ நபவத் பர: பரமசோச்யதமோ ந ஹி மத்பர: - என்பதற்கு ஏற்ப நீவிர் மிகுந்த கருணை நிறைந்தவர், நான் எல்லையில்லாத பாபங்கள் நிறைந்தவன். ஸ்ரீதயாசதகம் (30) - அஹம் அஸ்மி அபராத சக்ரவர்த்தீ *கருணே த்வம் ச குணேஷு ஸார்வபௌமீ விதுஷீ ஸ்த்திதிம் ஈத்ருசீம் ஸ்வயம் மாம் வ்ருஷ சைலே ஈச்வர பாதஸாத் குரு த்வம்* தயாதேவியே! நான் குற்றம் செய்பவர்களுக்கும் பாவங்களுக்கும் சக்ரவர்த்தியாக உள்ளேன். நீயோ ஸ்ரீநிவாஸனின் குணங்களுக்கு பேரரசியாக உள்ளாய். இவ்விதம் எனது நிலைமையை அறிந்த நீ, நீயாகவே முன் வந்து என்னை ஸ்ரீநிவாஸனின் திருவடிகளில் நிற்கும்படிச் செய்ய வேண்டும் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (24) – த்வயாபி லப்தம் பகவந் இதாநீம் அநுத்தமம் பாத்ரம் இதம் தயாயா – பகவானே! உன்னாலும் உனது கருணைக்குச் சிறந்த பாத்திரமாகிய நான் இன்றே அடையப்பட்டேன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப வாத்ஸல்யம் முதலான அனைத்து குணங்களுக்கும் இருப்பிடமாக உள்ள உம்முடைய கருணைக்கு முழு இலக்காக உள்ள என்னை, வாத்ஸல்யத்தின் புதையலாகவே உள்ள நீவிர் தள்ளலாமோ? உமக்குக் கிட்ட இயலாத வாய்ப்பு அல்லவோ என்னை ஏற்பதாக அமைந்துள்ளது? என்னைப் போன்று பாபங்கள் நிறைந்த ஒருவனைக் காப்பாற்றுதலே உம்முடைய கல்யாணகுணங்களுக்கு மேன்மை அளிக்கவல்லது அல்லவோ? ஆகவே இதுவரை செய்த பலவற்றுக்கும், இனி ஏற்பட உள்ளவற்றுக்கும் சேர்த்து எந்தவிதமான காரணமும் இன்றி கருணை காண்பிப்பதே உமக்கு உயர்ந்தது அல்லவோ? நாலூரான் விஷயமாகக் கூரத்தாழ்வான் அருளிச்செய்தது உம்முடைய க்ருபையாலேயே ஆகும் அல்லவோ என்று இவர் இங்கு கூறுகிறார்.

வ்யாக்யானம் - (**இராமாநுசா**) எம்பெருமானாரே. (அன்றி) இதொழிய வேறொன்றை ஆராயுமளவில். (**என்பால்**) இப்படிப்பட்ட அடியேன் விஷயமாக. (**பின்னையும் பார்க்கில்**)

இதொழியத் திரும்பியும் ஆராய்ந்து பார்க்குமளவில். (**நலமுளதே**) ஒரு நன்மையுண்டோ. நன்மை கொண்டு ஒரு கார்யம் செய்ய வேண்டுவ தென்னென்னில் (**உன்னைச் சார்ந்தவரே**) தேவரீருடைய திருவடிகளை ஆச்ரயித்து விச்வஸித்திருக்கும் ஜ்ஞாநாதிகரெல்லாரும். (**உன் பெருங்கருணை தன்னை என் பார்ப்பர்**) மஹாப்ரபாவரான தேவரீருடைய நிரதிசய க்ருபை தன்னை என்னாகக் கண்டிருப்பர். இதுவேயோ என்று குறையக்காணார்களோ என்றபடி. "அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ அதிகாரம் இல்லாதார்க்கு அன்றோ எதிராசா நீ இரங்க வேண்டுவது நீயும் அதிகாரிகளுக்கே இரங்கில் என் செய்வோம் யாம்" என்று இவ்வர்த்தத்தை ஜீயருமருளிச் செய்தாரிறே.

விளக்கம் – (இராமாநுசா) – என்பெருமானாரே. (அன்றி) – இதனைத் தவிர வேறு எதனை ஆராய்ந்தாலும், (என்பால்) – இப்படியாக உள்ள எனது விஷயத்தில். (பின்னையும் பார்க்கில்) - இதனைத் தவிர மீண்டும் ஆராய்ந்து பார்த்தாலும். (நலமுளதே) - ஏதேனும் நன்மை உள்ளதோ? இவ்விதம் நீவிர் என்னிடம் உள்ள நன்மையைக் கொண்டு மட்டுமே என்னை ஏற்கவேண்டும் என்று கூறினால். (உன்னைச் சார்ந்தவரே) - உம்முடைய திருவடிகளை எப்போதும் அன்றி நின்று நம்பிக்கையுடன் உள்ள ஞானம் நிறைந்தவர்கள் அனைவரும். (**உன் பெருங்கருணை தன்னை என் பார்ப்பர்**) - மிகுந்த ப்ரபாவம் நிறைந்த உம்முடைய எல்லையற்ற கருணையை எவ்விதம் நோக்குவார்கள், "இவனைக் கைவிடுகிறாரே" என்று குறையாகவே காண்பார்கள் அல்லவோ? ஆர்த்திப்ரபந்தம் (14) - அதிகாரமுண்டேல் அரங்கர் இரங்காரோ அதிகாரம் இல்லாதார்க்கு அன்றோ எதிராசா நீ இரங்க வேண்டுவது நீயும் அதிகாரிகளுக்கே இரங்கில் என் செய்வோம் யாம் - கர்மம், ஞானம், பக்தி போன்றவற்றைக் கொண்டுள்ளவர்களுக்கு மட்டுமே திருவரங்கன் இரக்கம் கொண்டு அருள் செய்கிறான். எம்பெருமானாரே! நீ இவ்விதம் தகுதி இல்லாதவர்களுக்கும் இரங்குபவர் ஆயிற்றே! ஆனால் திருவரங்கன் போன்று, நீயும் தகுதி உள்ளவர்களுக்கு மட்டுமே இரக்கம் காட்டுவது என்று முடிவு செய்துவிட்டால், நாங்கள் எங்கு செல்வோம், என்ன செய்வோம்? – என்று இந்தக் கருத்தை ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச்செய்தார்.

71. சார்ந்தது என் சிந்தை உன் தாளிணைக்கீழ் அன்பு தான் மிகவும்
கூர்ந்தது அத் தாமரைத்தாள்களுக்கு உன்தன் குணங்களுக்கே
தீர்ந்தது என் செய்கை முன் செய்வினை நீ செய்வினை அதனால்
பேர்ந்தது வண்மை இராமாநுச எம்பெருந்தகையே

விளக்கவுரை - வசிஷ்டர் போன்ற உயர்ந்தவர்கள் தொடக்கமாக, வேறு சிலர் முடிய இந்த பூமியில் உள்ள அனைத்து மக்கள், விலங்குகள் போன்றவற்றின் தலைகளில் வாமனன் தனது திருவடிகளை வைத்து அருளினான். இது போன்று உம்மையே சரணம் என்று புகுந்தவர்களின் சிறுமை மற்றும் பெருமை பாராமல், உமது கருணையை அளிக்கவல்ல எம்பெருமானாரே! இத்தனை காலம் ஸம்ஸாரத்தில் உழன்றபடி இருந்தேன். வெய்யிலின் கொடுமை தாங்காமல் உள்ளவன், அருகில் உள்ள மரநிழலில் ஒடுங்குவது போன்று, ஸம்ஸாரத்தின் வேதனை தாங்காமல் நான் உமது திருவடிகளின் நிழலின் கீழ் பொருந்தி நின்றேன். தாமரை மலர் போன்ற அழகான உமது திருவடித்தாள்கள் மீது எனக்கு அன்பு மிகுந்தது. இத்தனை நாட்கள் உலகவிஷயங்களில் ஈடுபட்டிருந்த எனது சிந்தையானது, உமது உயர்ந்த குணங்களுக்கு மட்டுமே வசப்பட்டு நின்றது. இதனை கண்ட நீவிர் உமது கருணையை என் மீது செலுத்தினீர். இந்தச் செய்கையால், எனது பாவ வினைப்பயன்கள் அனைத்தும் என்னை விட்டு அகன்று விட்டது.

அவதாரிகை - இப்படி இவர் நேர்கோடு நேரே விண்ணப்பம் செய்தவாறே எம்பெருமானாரும் “ஒக்கும் ஒக்கும்” என்று இசைந்து தம்முடைய விசேஷ கடாக்ஷத்தாலே இவருடைய கரணங்களெல்லாம் ஸ்வவிஷயத்திலே தானே ஊன்றியிருக்கும்படி பண்ணியருள, அவருடைய திருமுக மண்டலத்தை பார்த்து **பரம குஹ்யமான அர்த்தத்தை பூரிதாநம் பண்ணும்படியான ஔதார்யத்தையுடைய எம்பெருமானாரே**! என்று ஸம்போதித்து, தம்முடைய மநஸ்ஸை அவருடைய திருவடிகளிலே சேர்ந்து அமைந்திருக்கிறபடியையும், **அத்திருவடிகளின் போக்யதையிலே யீடுபட்டு, ப்ரேமமானது** தமக்கு மிக்கபடியையும் தாம் அவருடைய குணங்களிலே அத்யபிநிவிஷ்டராய்க் கொண்டு தத் தாஸ்யத்திலே யுற்றிருந்தபடியையும், தம்முடைய பூர்வ க்ருத கர்மமெல்லாம் அவருடைய விஷயீகாரத்தாலே தம்மை விட்டு “சும்மெனாதே” ஓடிப் போனபடியையும் **ஹ்ருஷ்டராய்க் கொண்டு விண்ணப்பம் செய்கிறார்**.

விளக்கம் – இப்படியாகத் திருவரங்கத்தமுதனார் எம்பெருமானாருக்கு நேருக்கு நேர் நின்று விண்ணப்பம் செய்தபோது எம்பெருமானாரும், “இது ஏற்புடையதே ஆகும்”, என்று ஏற்று, தனது விசேஷமான கடாக்ஷம் மூலமாக திருவரங்கத்தமுதனாருடைய இந்த்ரியங்கள் அனைத்தும் தன்னைக் குறித்து மட்டுமே ஊன்றியிருக்கும்படியாகச்

செய்தருளினார். அப்போது எம்பெருமானாருடைய திருமுகமண்டலத்தை நோக்கி, "மிகவும் உயர்ந்த ரகசியங்களையும் அனைவரும் அறியும்படியாகச் செய்தருளும் தாராள குணம் கொண்ட எம்பெருமானாரே!", என்று உரைத்து, தனது மனமானது அவருடைய திருவடிகளில் எப்போதும் பொருந்தியபடி உள்ளதையும், அந்தத் திருவடிகளின் இனிமையில் ஈடுபட்டு அதன் காரணமாகத் தனக்கு மிகுந்த ப்ரேமை ஏறிட்டதையும், தான் எம்பெருமானாருடைய குணங்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக இருந்து அவருடைய கைங்கர்யத்தில் ஈடுபட்டு நின்றதையும், தான் செய்த கர்மங்கள் அனைத்தும் அவருடைய ஸம்பந்தம் காரணமாகத் தன்னை விட்டு பெரியாழ்வார் திருமொழி – சும்மெனாதே - என்பதற்கு ஏற்ப ஓடியதையும் மிகுந்த மகிழ்வுடன் அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (வண்மையிராமாநுசா) வஸிஷ்ட சண்டாள விபாகமற எல்லார் தலையிலும் தன் திருவடிகளை வைத்த ஸ்ரீவாமநனைப் போலவும், ஜல ஸ்தல விபாகமற வர்ஷிக்கும் வர்ஷுகவலாஹகம் போலவும், அநாலோசித விசேஷ அசேஷ லோக சரண்யராய், கொள்ளுகிறவர்களுடைய சிறுமையையும் கொடுத்தருளுகிற தம்முடைய பெருமையையும் பாராதே, பரம குஹ்ய தமமான அர்த்தத்தை **பூரிதாநமாகக் கொடுக்கும் ஔதார்ய குணமுடைய எம்பெருமானாரே. (எம்பெரும்தகையே)** அந்த ஔதார்யத்தாலே என்னை எழுதிக் கொண்ட பரம சேஷியே.

விளக்கம் - (வண்மை இராமாநுசா) - வஸிஷ்டர் தொடங்கி மற்றவர்கள் முடிய உள்ள அனைவருடைய தலைகளிலும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி தனது திருவடிகளை வைத்த வாமனன் போன்றும், நீர்நிலை மற்றும் நிலம் என்ற வேறுபாடு ஆராயாமல் அனைத்து இடங்களிலும் ஒரே போன்று பெய்யும் மழை போன்றும் யாருடைய தனிப்பட்ட பெருமையையும் ஆராயாமல் அனைத்து உலகங்களும் சரணம் புகும்படியும், ஏற்பவர்கள் சிறுமை மற்றும் அளிக்கின்ற தனது மேன்மை என்பதை ஆராயாமல் மிகவும் உயர்ந்த இரகசியங்களையும் அனைவருக்கும் அளிக்கும்படி தாராள குணத்தைக் கொண்டபடியாகவும் இருக்கின்ற எம்பெருமானாரே. **(எம்பெரும்தகையே)** - அந்தத் தாராள குணம் காரணமாக என்னை உமக்கே ஆளாகும்படி எழுதி வாங்கிக்கொண்ட எஜமானரே!

வ்யாக்யானம் – (சார்ந்ததென் சிந்தை யுன் தாளிணைக் கீழ்) தேவரீரோடே கூட அடியேனும் ஏக தேச வாஸியாயிருந்து வைத்து, ஒருநாளும் தேவரீர் திருவடிகளில் தலை சாய்வு செய்யாதே, "ந நமேயம்" என்றிருக்கிற அடியேனுடைய மநஸ்ஸானது, "சஞ்சலம் ஹி மந:" என்றும், "நின்றவா நில்லா நெஞ்சு" என்றும் சொல்லப்படுகிற நிலை மாண்டு போய், "**த்ருணீ க்ருத விரிஞ்சாதி**" இத்யாதிப்படியே ப்ரஹ்ம ருத்ராதிகளுடைய ஸம்பத்தை ஒரு பொருளாக நினைப்பிடாத மஹாத்மாக்களாலே ஆச்ரயிக்கத்தக்க தேவரீருடைய திருவடிகளின் கீழே. கர்மகாலத்திலே ஆதித்ய கிரணங்களாலே தப்தனாவன் நிழலையும் தட்பத்தையு முடைத்தான செடியின் கீழே புகுமாபோலே, அவற்றினுடைய போக்யதை இரண்டும் கூடியிருக்கையாலே அவற்றின் பௌஷ்கல்யத்திலே ஈடுபட்டு, **முன்பு தாம் பட்ட ஸம்ஸார தாபமெல்லாம் தீரும்படி, "நிழலு மடிதாறும்" போலே அவிநாபூதமாய்ப் புக்குப்** பொருந்திவிட்டது.

விளக்கம் – (சார்ந்தது என் சிந்தை உன் தாளிணைக் கீழ்) - உம்முடன் ஒரே ஊரில் அடியேன் வாழ்ந்து வந்தபோதிலும், உம்முடைய திருவடிகளில் ஒருநாள் கூட அடியேன் தலையைத் தாழ்த்தவில்லை. இராமாயணம் யுத்தகாண்டம் – ந நமேயம் - யாரையும் வணங்கமாட்டேன் - என்பதற்கு ஏற்ப இருந்த அடியேனுடைய மனம், கீதை (6-34) – சஞ்சலம் ஹி மந: - மனம் சஞ்சலமானது – என்றும், பெரிய திருமொழி (1-1-4) – நின்றவா நில்லா நெஞ்சு - என்றும் கூறுவதற்கு ஏற்ப இருந்த நிலை மாறி, த்ருணீ க்ருத விரிஞ்சாதி – நான்முகன் என்னும் பதவியையும் ஒரு புல்லாகவே எண்ணி - என்பதற்கு ஏற்ப நான்முகன் மற்றும் ருத்திரன் போன்றவர்களுடைய ஸம்பத்தைக் கூட ஒரு பொருட்டாக மதிக்காதபடி விளங்கிய மஹாத்மாக்களளால் அண்டி நிற்கப்படுகின்ற உம்முடைய திருவடிகளின் கீழே. கடுமையான வேலையில் ஈடுபட்டபடி உள்ளபோது சூரியனுடைய கதிர்களால் ஏற்படும் வெப்பத்தால் பாதிக்கப்பட்ட ஒருவன், நிழல் மற்றும் குளிர்ச்சியுடன் கூடிய மரத்தின் கீழ் புகுவது போன்று, உம்முடைய திருவடிகளின் இனிமையில் ஈடுபட்டு. முன்பு தான் அடைந்த ஸம்ஸாரத் துன்பம் அனைத்தும் தீரும்விதத்தில், பெரியதிருவந்தாதி (31) – நிழலும் அடிதாறும் - என்பதற்கு ஏற்ப எங்கும் நீக்கமறப் பொருந்தியுள்ளது.

வ்யாக்யானம் – (அன்புதான் மிகவும் கூர்ந்தது அத்தாமரைத் தாள்களுக்கு) தாமரைப் பூப்போலே செவ்வி நாற்றம் குளிர்த்தி முதலான போக்யதையையுடைய அத்திருவடிகள்

விஷயமாக எனக்கு ப்ரீதியானது மேன்மேலெனப் பெருகி மிக்கது. **கூர்தல்** – மிகுதி. (**உன்றன் குணங்களுக்கே தீர்ந்ததென் செய்கை**) இத்தனை நாளும் விஷயாந்தரங்களிலே மண்டி விமுகனாய்ப் போந்த வென்னுடைய க்ருத்யமெல்லாம், வகுத்த சேஷியான தேவரீருடைய குணாநுபவ ஜநித ப்ரீதி, படிம்பிட்டு ப்ரேரிக்கப் பண்ணக் கடவதாகையாலே, ஸர்வ தேச ஸர்வ கால ஸர்வ அவஸ்தைகளிலும் **அக்குணங்களுக்கே யற்றுத் தீர்ந்தது**. "நித்யம் யதீந்திர தவ திவ்ய:" என்கிற ச்லோகத்திலே இவ்வர்த்தத்தை ஜீயரும் ப்ரார்த்தித்தருளினாரிறே.

விளக்கம் – (**அன்புதான் மிகவும் கூர்ந்தது** அத்தாமரைத் தாள்களுக்கு) - தாமரைமலர் போன்று அழகு, குளிர்ச்சி, நறுமணம் முதலான பல இனிமைகளையும் கொண்டதாக உள்ள அந்தத் திருவடிகள் குறித்து எனக்கு ப்ரீதி என்பது மேன்மேலும் பெருகியபடி இருந்தது. (**உன்றன் குணங்களுக்கே தீர்ந்ததென் செய்கை**) – இத்தனை காலங்கள் மற்ற விஷயங்களில் மட்டுமே ஈடுபட்டுத் திரிந்த என்னுடைய செயல்கள் அனைத்தும், எனக்கு இயல்பான எஜமானராக உள்ள உம்முடைய திருக்கல்யாண குணங்களை அனுபவித்த காரணத்தால் ஏற்பட்ட ப்ரீதியால் நேர்வழியில் கொண்டு செல்லப்பட்டன. இதனால் அனைத்து இடங்கள், அனைத்து காலங்கள், அனைத்து நிலைகள் ஆகிய அனைத்திலும் அந்தத் திருக்குணங்களுக்கு மட்டுமே என்றாகி நின்றன. யதிராஜ விம்சதி (4) – நித்யம் யதீந்திர தவ திவ்ய – யதீந்திரரே! உம்முடைய திவ்யமான திருமேனியை அன்றாடம் – என்ற ச்லோகம் மூலம் இதனை ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச்செய்தார் அல்லவோ?

வ்யாக்யானம் – (முன் செய்வினை நீ செய் வினையதனால் பேர்ந்தது) "அநாதிகால ப்ரவ்ருத்த அநந்த அக்ருத்யகரண க்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசார ரூப நாநாவித அநந்த அபசாராந் ஆரப்த கார்யாந் அநாரப்த கார்யாந் க்ருதாந் க்ரியமாணாந் கரிஷ்யமாணாம்ச்ச ஸர்வாந்" எனும்படியான என்னுடைய பாப கர்மமெல்லாம் அதுக்கு எதிர்த்தட்டாக நிவர்த்தகமாயிருந்துள்ள தேவரீருடைய க்ருஷி நிறைவேறி அது தன்னாலே மலை பேர்ந்தாப்போலே ஸவாஸநமாக விட்டு நீங்கிற்று. கர்த்ரு வாசக பத ஸமபி வ்யாஹ்ருதமான "முன் செய்வினையாம்" என்ற வாக்யத்துக்கு, "த்விஷந்த: பாபக்ருத்யாம்" என்கிறபடியே அசல் பிளந்தேறின துரிதங்களும் பொருளாகக் கடவது. "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றவனும் ஹிதோபதேஷ்டாவான

கீதாசார்யனிறே. "நீ செய் வினை" என்றது, இவர் பெரியபெருமாள் திருவடிகளில் பண்ணின ப்ரபத்தியை. "காலத்ரயேபி" என்கிற ச்லோகத்தில் இவ்வர்த்தத்தை ஜீயருமருளிச் செய்தாரிறே. "நீ செய்வனவதனால் பேர்ந்தது" என்ற பாடமானபோது, என்னுடைய பாப கர்மங்களெல்லாம் தேவரீருடைய ப்ரதம கடாக்ஷத்தாலே போயிற்றென்று பொருளாகக் கடவது. இப்படியான பின்பு அடியேனுக்கு ஒரு குறைகளு மில்லையென்றதாய்த்து.

விளக்கம் – சரணாகதிகத்யம் - அநாதிகால ப்ரவ்ருத்த அநந்த அக்ருத்யகரண க்ருத்யாகரண பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசார ரூப நாநாவித அநந்த அபசாராந் ஆரப்த கார்யாந் அநாரப்த கார்யாந் க்ருதாந் க்ரியமாணாந் கரிஷ்யமாணாம்ச்ச ஸர்வாந் – என்னுடைய கர்மங்கள் எல்லையற்ற காலங்களாக நான் செய்தபடி உள்ளவை ஆகும். இவை அளவற்றையாகவும், சாஸ்த்ரங்களில் தடுக்கப்பட்டவையாகவும், சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டவற்றைச் செய்யாதபடியும், பகவத் அபசாரங்களாகவும், பாகவத அபசாரங்களாகவும், காரணம் இன்றி இவர்களுக்குச் செய்யும் அபசாரங்களாகவும் பலவிதங்களாக இருக்கும். இவற்றில் ஒரு பகுதி பலன் அளிக்கத் தொடங்கியவையாகவும், இப்படியாக எல்லையற்றதாக உள்ள பாபங்கள் - என்பதற்கு ஏற்ப உள்ளதான எனது பாபகர்மங்கள் அனைத்தும், அவற்றுக்கு எதிர்த்தட்டாகவும், அவற்றைப் போக்கும்படியாகவும் உள்ளஉம்முடைய முயற்சி நிறைவேறப் பெற்று, அதன் விளைவாக மலை அடியுடன் நகர்வது போன்று வாசனையுடன் விலகின. "முன் செய்வினையாம்" என்ற வாக்கியத்திற்கு, சாட்யாயனசாகை – த்விஷந்த: பாப க்ருத்யாம் – விரோதிகளுக்குப் பாபங்கள் செல்கின்றன - என்பதற்கு ஏற்ப அடியுடன் விலகிய பாபங்கள் என்பது பொருளாகிறது. கீதையில் (18-66) - ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி - என்று கூறியவன் நன்மையை மட்டுமே உபதேசிக்கும் கீதாசார்யன் அல்லவோ? "நீ செய் வினை" என்பதன் மூலம் திருவரங்கத்தமுதனார் விஷயமாக எம்பெருமானார் ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளில் விண்ணப்பித்து, பின்பு செய்தருளிய ப்ரபத்தி கூறப்பட்டது. யதிராஜ விம்சதி (18) – காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத் க்ஷமைவ ஸா ச த்வயைவ கமலா ரமணே அர்த்திதா யத் க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம் - யதிராஜரே! ஒருவன் தனது மனம், வாக்கு, செயல் ஆகிய மூன்றின் மூலம் எண்ணற்ற பாவங்களைத் தொடர்ந்து செய்தபடி இருக்கலாம். அப்படிப்பட்டவனுக்கு மூன்று காலத்திலும் ஸ்ரீரங்கநாதனால் மட்டுமே

அடைக்கலம் அளிக்க இயலும். ஆனால் அவனும் அதனை நேரடியாகச் செய்வதில்லை. அவன், தாமரை மலரில் வீற்றுள்ள ஸ்ரீரங்கநாச்சியாருடன் சேர்ந்து நிற்கும் பங்குனி உத்தர நன்னாளில், நீ அருளிச் செய்த சரணாகதி கத்யங்கள் மட்டுமே என்னைப் போன்றவர்களைக் காக்க வல்லவை ஆகும் - என்று இந்தக் கருத்தை ஸ்வாமி மணவாள மாமுனிகளும் உரைத்தார். "நீ செய்வனவதனால் பேர்ந்தது" என்று சொற்களை அமைத்துக்கொண்டால், எனது பாபகர்மங்கள் அனைத்தும் உம்முடைய முதல் பார்வை மூலமே போயிற்று என்று பொருள். இப்படியாக ஆன பின்னர், அடியேனுக்கு ஒரு குறைகளும் இல்லை என்றானது.

72. கைத்தனன் தீய சமயக் கலகரைக் காசினிக்கே
உய்த்தனன் தூய மறைநெறி தன்னை என்று உன்னி உள்ளம்
நெய்த்து அவ்வன்போடு இருந்து ஏத்தும் நிறை புகழோருடனே
வைத்தனன் என்னை இராமாநுசன் மிக்க வண்மைசெய்தே

விளக்கவுரை - கொடுக்கக் கொடுக்கக் குறையாமல் உள்ளதும், பட்டை தீட்டப் பெற்ற மாணிக்கம் போன்று ஒளிர்வதும் ஆகிய உயர்ந்த குணங்கள் கொண்ட எம்பெருமானார், இந்த உலகம் முழுவதையும் காக்க வேண்டும் என்று எண்ணினார். இதனால் திருநாராயணபுரத்தில் பௌத்தர்கள், திருமலையில் சைவர்கள், சரஸ்வதி பீடத்தில் மாயாவாதிகள் ஆகியவர்களை வாதத்தில் வென்று, இது போன்று பல சமயங்களில் நின்றவர்களை வென்றார். "இருள்தருமாஞாலம்" என்று உள்ள இந்த உலகில் வாழும் ஜீவன்கள் கரை ஏறும்விதமாக, பரமவைதிகமான, தர்ம நெறிகளையும், சரணாகதி மார்க்கத்தையும் நடத்தி வைத்தார். இப்படிப்பட்ட இரண்டு உயர்ந்த வழிகளை ஏற்படுத்தி வைத்தார் – என்று மனப்பூர்வமாக உணர்ந்து, மிகுந்த அன்புடன் இந்தச் செயல்களைக் கொண்டாடும் புகழுள்ள அடியார்களுடன் என்னைச் சேர்த்து வைத்தார்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே எம்பெருமானார் தம்முடைய ஔதார்யத்தாலே இவருடைய அபிமதத்தைக் கொடுத்தருள இவர்தாம் அவர் தம்மாலே லபித்த புருஷார்த்தங்களை யநுஸந்தித்து க்ருதார்தரானார்; இதிலே, எம்பெருமானார் தம்முடைய ஔதார்யாதிசயத்தாலே அதிஹேயங்களான வேதபாஹ்யருடைய ஸமயங்களைப் பற்றி

நின்று கலஹிக்குமவர்களை நிரஸித்தாரென்றும், அத்யந்த பரிசுத்தமான வேத மார்க்கத்தை பூமியிலேயெங்குமொக்க நடத்தியருளினாரென்றும் அநுஸந்தித்துக் கொண்டு ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே ஸ்தோத்ரம் பண்ணா நின்றுள்ள **பெரியோர்களோடே கலந்து பரிமாறும்படி அடியேனை வைத்தருளினாரென்று அநுஸந்தித்து வித்தராகிறார்.**

விளக்கம் – கடந்த பாசுரத்தில், எம்பெருமானார் தனது ஔதார்யத்தால் திருவரங்கத்தமுதனாருக்கு விருப்பமானவற்றை அளித்தருளினார்; திருவரங்கத்தமுதனார் எம்பெருமானாருடைய இந்தக் குணம் மூலம் பெற்ற புருஷார்த்தங்களை எண்ணி பயன் அடைந்தவராக நின்றார். இந்தப் பாசுரத்தில் - எம்பெருமானார் தன்னுடைய ஔதார்யத்தின் மேன்மை காரணமாக மிகவும் தாழ்ந்தவர்களும், வேதங்களுக்குப் புறம்பாக உரைப்பவர்களும் ஆகியவர்களுடைய மதங்களை அண்டி நின்று கலஹம் செய்பவர்களை ஒதுக்கினார் என்றும், மிகுந்த தூய்மையான வேதமார்க்கத்தை இந்தப் பூமியில் முழுவதுமாக நிலைநாட்டினார் என்றும் எண்ணியபடி மகிழ்ச்சியுடன் துதித்தபடி உள்ள உயர்ந்தவர்களுடன், திருவரங்கத்தமுதனாராகிய தன்னையும் கலந்து நிற்கும்படிச் செய்தார் என்று எண்ணி மகிழ்கிறார்.

வ்யாக்யானம் – (இராமாநுசன்) “வசீவதாந்ய:” என்றாப்போலே இவ்வளவும் ஔதார்ய குணத்தையிட்டு ப்ரதிபாதிக்கப்பட்ட எம்பெருமானார். **(மிக்க வண்மை செய்து) “கொள்ளக் குறைவற்றிலங்கிக் கொழுந்து விட்டோங்கிய வுன் வள்ளல்தனத்தினால்”** என்கிறபடியே கொடுக்கக் கொடுக்க ஒரு குறைகளுமின்றிக்கே சாணை பிடித்த மாணிக்கம் போல் மிகவும் ப்ரகாசிக்கிற ஔதார்ய குணத்தாலே லோகத்தை யெல்லா முத்தரிக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றி.

விளக்கம் – (இராமாநுசன்) – வசீவதாந்ய: – என்பதற்கு ஏற்ப அனைத்தையும் தனது ஔதார்யம் மூலம் வெளிப்படுத்தும் எம்பெருமானார். (மிக்க வண்மை செய்து) - **கொள்ளக் குறைவற்றிலங்கிக் கொழுந்து விட்டோங்கிய வுன் வள்ளல்தனத்தினால்** – என்பதற்கு ஏற்ப எத்தனை அள்ளிக்கொடுத்தாலும் எந்தவிதமான குறைவும் ஏற்படாமல், சாணை பிடிக்கப்பட்ட மாணிக்கம் போன்று மிகுந்து ப்ரகாசத்துடன் காணப்படும் ஔதார்ய குணம் மூலமாக இந்த லோகங்கள் அனைத்தையும் உயர்த்தவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டவராக.

வ்யாக்யானம் – (கைத்தனன் தீய சமயக் கலகரை) வேதபாஹ்யங்க ளாகையாலே அதிஹேயங்களான பௌத்த ஜைந மாயாவாதிகளுடைய குத்ருஷ்டி ஸமயங்களிலே நிஷ்ணாதராய்க் கொண்டு, ஜகத்து க்ஷணிகமென்றும், தத்வம் ஞாநமாத்ர மென்றும், ப்ரபஞ்சம் மித்யை யென்றும், ப்ரஹ்மம் சிந்மாத்ர மென்றும் பேதத்தை நிரஸித்தும், வாங் மாத்ரத்தாலே வேதத்தை அங்கீகரித்து வைத்து அதிலே குத்ருஷ்டி கல்பநங்களைப் பண்ணியும், அவஸாநத்திலே வேதத்தை மித்யா கோடியிலேயாக்கியும், இப்படி துஸ்தர்க்கங்களை சொல்லி கலஹிக்குமவர்களை நிரஸித்தருளினார். **கைத்தல்** – கடிதல். இவர்களுடைய ப்ரஸங்கங்களெல்லாம் கலஹங்களை விளைவிக்குமித்தனையொழிய வித்வத் ஸம்மதங்களான ப்ரஸங்கங்களன்று காணும். திருநாராயணபுரத்தருகே பௌத்தரையும், திருமலையில் சைவரையும், ஸரஸ்வதீ பீடத்தில் மாயாவாதிகளையும் நிரஸித்தபடி ஸர்வலோக ப்ரஸித்தமிறே. "காதா தாதா கதாநாம்" என்னக் கடவதிறே.

விளக்கம் - **(கைத்தனன் தீய சமயக் கலகரை)** - வேதங்களுக்குப் புறம்பாகப் பொருள் உரைப்பதன் காரணமாக மிகவும் தாழ்ந்த பௌத்தமதம், ஜைநமதம், மாயாவதிகள் போன்ற பலருடைய மாயை நிறைந்து மதங்களில் ஈடுபாடு நிறைந்தவர்களாக நின்று இந்த ஜகத்தானது நொடிப்பொழுது மட்டுமே உள்ளது என்றும், ஞானம் மட்டுமே உண்மை என்றும் ப்ரபஞ்சம் பொய்யானது என்றும், ப்ரஹ்மம் எந்தத் தன்மைகளும் அற்ற ஞானம் மட்டுமே என்றும், ஜீவாத்மா பரமாத்மா வேறுபாடு இல்லை என்றும், வாக்கு மூலம் மட்டுமே வேதத்தை ஏற்றுக்கொண்டு அதில் தாழ்ந்த கற்பனைகளை ஏற்படுத்தியபடியும், இறுதியாக வேதத்தையும் பொய்யானது என்ற வரிசையில் சேர்த்தபடியும் என்று இப்படியாகப் பல கலகங்களைச் செய்த பலரையும் தள்ளினார். இவர்களுடைய செயல்கள் அனைத்தும் கலகங்களாக மட்டுமே இருக்கும் அல்லாமல், அறிவள்ளவர்ளால் ஏற்கும்படியாக உரைப்பதன்று. திருநாராயணபுரத்தில் பௌத்தரையும், திருமலையில் சைவரையும், ஸரஸ்வதி பீடத்தில் அத்வைதிகளையும் இவர் தள்ளியவிதமானது அனைத்து லோகமும் அறிந்தது ஆகும். ஸ்ரீயதிராஜஸப்ததி (70) – காதா தாதா கதாநாம் – பௌத்தர்களுடைய வாக்கு நழுவியது – என்பது காண்க.

வ்யாக்யானம் – (காசினிக்கே) "அவிவேக கந அந்த திங்முகே பஹுதா" இத்யாதியாலும், "ஸம்ஸார மருகாந்தாரே" இத்யாதியாலும் சொல்லப்படுகிற "இருள் தரு மாஞாலத்திலே"யிருந்து ஸம்ஸாரித்துக் கொண்டு நஷ்டப் ப்ராயராய்ப் போந்த சேதநரை

உத்தரிக்கைக்காகவே. **காசினி** – பூமி. பூமியிலுள்ள சேதநரை என்றபடி. இவர்களுடைய துக்க பரம்பரைகளைக் கண்டு பொறுக்கமாட்டாத பரம க்ருபா பூர்வாக ஔதார்யத்தாலே.

விளக்கம் – (காசினிக்கே) - ஸ்தோத்ரரத்னம் (49) – அவிவேக கந அந்த திங்முகே பஹுதா – அவிவேகம் என்னும் மேகங்களால் அனைத்து திசைகளிலும் சூழப்பட்ட – என்றும், யாதவாப்யுதயம் (1-53) – ஸம்ஸார மருகாந்தரே – ஸம்ஸாரம் என்னும் பாலைவனம் - என்றும் கூறப்படுவதாகிய திருவாய்மொழி (10-6-1) – இருள் தரு மாஞாலம் – என்பதற்கு ஏற்ப உள்ளதாகிய உலகத்தில் இருந்தபடியே ஸம்ஸாரத்தில் உழன்றபடி அனைத்தையும் இழந்து தவிக்கும் சேதநர்களை உயர்ந்துவதற்காகவே. அதாவது பூமியில் உள்ள சேதநர்களை. இவர்களுடைய தொடர்ச்சியாக உள்ள துக்கத்தைக் கண்டு பொறுக்க முடியாதபடி தன்னுடைய உயர்ந்த க்ருபை காரணமாக வெளிப்படும் ஔதார்யத்தால்.

வ்யாக்யானம் - (தூய மறைநெறி தன்னை) ப்ரம ப்ரமாத விப்ரலம்பாதிகளும் புருஷ சேமுஷீ தோஷ மாலிந்யமும், ஸ்வ ப்ராமாணயத்தில் இதராபேக்ஷையுமின்றிக்கே யிருந்ததாகையாலே, “சுடர் மிகு சுருதி” என்னும்படி அத்யந்த பரிசுத்தமான வேதத்தினுடைய மார்க்கத்தை. “ச்ருதி ஸ்ம்ருதி மம ஏவ ஆஜ்ஞா” என்கிறபடியே பகவதாஜ்ஞா ரூபங்களான பரம வைதிக தர்மங்களையென்றபடி. “மறை” என்ற நிருப பதத்தாலே பூர்வோத்தர பாகங்களும், த்ரமிடோபநிஷத்தும் ஸூசிப்பிக்கப்படுகின்றன. ஆக ச்ருதி ஸ்ம்ருதி சோதிதங்களான ஸாமாந்ய விசேஷ தர்மங்களையும், “ந்யாஸஹித்யா” என்றும், “தஸ்மாத் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தமாஹு:”, “ப்ரஹ்மணோத்வா மஹஸ ஓம் இதி ஆத்மாநம் உஜ்ஜீத” என்றும், “ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஸ்ச ப்ரத்யகாத்மந: ப்ராப்தி உபாயம் பலம் ப்ராப்தே: ததாப்ராதிவிரோதிச வதந்தி ஸகலா வேதா: ஸேதிஹாஸ புராணகா: முநயச்ச மஹாத்மாநோ வேதவேதார்த்த வேதிந:” என்றும் சொல்லுகிறபடியே ஸகல வேதங்களினுடைய ஸாரதமார்த்தமான சரணாகதி தர்மத்தையும். (உய்த்தனன்) நடப்பித்தார். உய்த்தல் – நடத்துதல். நெறி – மார்க்கம்.

விளக்கம் – (**தூய மறைநெறி தன்னை**) - எந்தவிதமான ப்ரமையாலும் ஏமாறாமல் இருத்தல், தன்னை நிலைநாட்டுவதில் மற்ற ப்ரமாணங்களின் அவசியம் ஏதும் இன்றி இருத்தல், தோஷங்கள் இன்றி இருத்தல் போன்ற தன்மைகள் கொண்டதால்,

திருவாய்மொழி (1-1-7) – சுடர்மிகு சுருதி – என்பதற்கு ஏற்ப எல்லையற்ற தூய்மை பொருந்திய வேதத்தின் வழியை. ச்ருதி ஸ்ம்ருதி மம ஏவ ஆஜ்ஞா – ச்ருதியும் ஸ்ம்ருதியும் என்னுடைய ஆணைகள் - என்பதற்கு ஏற்ப உள்ளதான ஸர்வேச்வரனுடைய ஆணைகள் மூலம் வேதங்களுடைய பூர்வ உத்தர பாகங்களும், த்ரமிடோபநிஷத்தும் கூறப்படுகின்றன. ஆகவே, ச்ருதி ஸ்ம்ருதி ஆகிவற்றில் கூறப்படுவதான சிறந்த தர்மங்களையும், தஸ்மாத் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தமாஹு: - அனைத்து தவங்களையும் விட ந்யாஸமே (சரணாகதி) உயர்ந்ததாகும் – என்றும்., ப்ரஹ்மணோத்வா மஹஸ ஓம் இதி ஆத்மாநம் உஜ்ஜீத – ஆத்மாவையே ஓம் என்னும் ப்ரணவமாக உபாஸிப்பானாக – என்றும், ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஸ்ச ப்ரத்யகாத்மந: ப்ராப்தி உபாயம் பலம் ப்ராப்தே: ததாப்ராதிவிரோதிச வதந்தி ஸகலா வேதா: ஸேதிஹாஸ புராணகா: முநயச்ச மஹாத்மாநோ வேதவேதார்த்த வேதிந: - அடையத் தகுந்த பரம்பொருளின் ஸ்வரூபத்தையும், அடைகின்ற ஆத்துமாவின் ஸ்வரூபத்தையும், அடையும் உபாயத்தையும், அடைவதற்குப் பலனையும், தடுக்கும் விரோதியையும் இதிஹாச புராணங்களுடன் கூடிய அனைத்து வேதங்களும் கூறுகின்றன; மஹாத்மாக்களும், வேதங்கள் பொருள் அறிந்தவர்களுமான முனிவர்களும் சொல்லுகிறார்கள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ளதான அனைத்து வேதங்களின் ஸாரமாகத் திகழ்கின்ற உயர்ந்த சரணாகதி தர்மத்தையும். (உய்த்தனன்) – எங்கும் நிலவும்படிச் செய்தார்.

வ்யாக்யானம் – (என்றுன்னி) இவையிரண்டையும் செய்தாரென்று த்ருடாத்யவஸாய பூர்வகமாக அநுஸந்தித்து. (**உள்ளம் நெய்த்த வன்போடு**) திருவுள்ளம் ஸ்நிக்த்தமாய் அந்த ஸ்நேஹத்தோடே. "**அவ்வன்போடு**" என்று சொல்ல வேண்டியிருக்க வகர ஒற்று குறைந்து "**அவன்பு**" என்று கிடக்கிறது. அன்றிக்கே, **நெய்த்த வன்பென்றது** உள்ளத்திலே நெய்த்த வன்பென்றபடி. (இருந்தேத்தும்) இப்படிப்பட்ட ஸ்நேஹத்தோடே இருந்துகொண்டு, அந்த ஸ்நேஹமானது ஸந்துஷ்ணம் பண்ணவே, "பாஷண்ட த்ருமஷண்டதாவ தஹந:" இத்யாதிப்படியே அவரை ஸ்தோத்ரம் பண்ணா நின்றுள்ள.

விளக்கம் – (என்று உன்னி) - இந்த இரண்டையும் செய்தருளினார் என்று உறுதியான நிலையுடன் எண்ணியபடி. (உள்ளம் நெய்த்த வன்போடு) திருவுள்ளத்தில் மிகுந்த

அன்புடன். "அவ்வன்பு" என்று கூறுவதற்குப் பதிலாக "வ்" என்பது குறைந்து "அவன்பு" என்று உள்ளது. அல்லது உள்ளத்தில் நிலைநிறுத்தி என்று பொருள். (இருந்து ஏத்தும்) - இப்படிப்பட்ட அன்புடன் இருந்து கொண்டு, அந்த அன்பானது மகிழ்ச்சியை ஏற்படுத்துவதால் தாடீ பஞ்சகம் (1) – பாஷண்ட த்ருமஷண்டதாவ தஹந: - எம்பெருமானார் பாஷண்டர்களை அழித்தார். சார்வாகர், பௌத்தர் முதலிய மலைகளை மிகவும் எளிதாக எம்பெருமானர் சாய்த்தார் - என்று எம்பெருமானாரைப் புகழ்ந்து துதித்தபடி உள்ள.

வ்யாக்யானம் – (நிறை புகழோருடனே) பரிபூர்ண குணரோடே. "அடியார் குழாங்களை உடன்கூடுவதென்று கொலோ" என்று ப்ரார்த்திக்க வேண்டாதபடி இங்கேதானே. **(வைத்தனனென்னை)** - என்னை சேர்த்தருளினார். "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம்", "த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து" என்று இத்தையிறே ஜீயரும் ப்ரார்த்தித்தருளினார்.

விளக்கம் – (நிறை புகழோருடனே) - பரிபூர்ணமான குணம் நிறைந்தவர்களுடன். திருவாய்மொழி (2-3-10) –அடியார் குழாங்களை உடன்கூடுவதென்று கொலோ - என்று விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இன்றி தானாகவே நடக்கும் அல்லவோ? (வைத்தனன் என்னை) - அவர்களுடன் என்னைச் சேர்த்தருளினார். யதிராஜ விம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் – என்றும், யதிராஜ விம்சதி (16) - சப்தாதி போக விஷயா ருசி: அஸ்மதீயா நஷ்டா பவதி இஹ பவத் தயயா யதீந்த்ர த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து - யதிராஜரே! அழியக்கூடிய உலக இன்பங்கள் மீது எனக்கு

ஏற்படும் பற்றுகளை நீக்க நீயே அருளவேண்டும். இத்தகைய இன்பங்கள் பின்வரும் நாட்களில் துன்பமே ஏற்படுத்துவதால், இவற்றை உனது கருணை மூலம் நீக்கவேண்டும். என்னை உனது தொண்டனுக்குத் தொண்டனாகக் கொள்ளவேண்டும். இதன் மூலம் நான் உன்னைச் சரணம் என்று பற்றும்படி செய்யவேண்டும். உனக்கு அர்ப்பணிக்க என்னிடம் ஏதும் இல்லை. ஆகவே என்னிடம் இருந்து எதனையும் எதிர்பாராமல் உள்ள உனது கருணை மட்டுமே கொண்டு என்னை நீ காக்க வேண்டும் – என்றும் இதனையே ஸ்வாமி மணவாளமாமுனிகளும் விண்ணப்பித்தார்.

73. வண்மையினாலும் தன் மா தகவாலும் மதிபுரையும்
தண்மையினாலும் இத் தாரணியோர்கட்குத் தான் சரணாய்
உண்மை நல் ஞானம் உரைத்த இராமாநுசனை உன்னும்
திண்மை அல்லால் எனக்கில்லை மற்றோர் நிலை தேர்ந்திடிலே

விளக்கவுரை - இந்த உலகில் உள்ள மனிதர்களின் உயர்வு தாழ்வைக் காணாமல், அவர்களுக்குத் தகுதி உள்ளதா என்று ஆராயாமல், அனைவரையும் ஸம்ஸாரத்தில் இருந்து கரையேற்றினார்; தனது திருவடிகளையும், ஸ்ரீபாததீர்த்தத்தையும் இந்த உலகம் முழுவதும் வணங்கிப் பருகும்படியும் செய்தார்; ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், போன்றவற்றை அருளிச் செய்து அனைவரும் பிழைக்கும்படிச் செய்தார். இப்படிப்பட்ட உயர்ந்த எண்ணத்தின் காரணம் என்ன? ஸம்ஸார துக்கத்தில் மூழ்கியபடி உள்ள ஸம்ஸாரிகளின் துர்கதியைக் காணப் பொறுக்காத கருணையே ஆகும். தனது சந்திரன் போன்ற குளிர்ந்த க்ரணங்கள் மூலம் இந்த உலகில் உள்ளவர்கள் அடியும் இடமாக விளங்கினார். இவ்விதம் தன்னை அடைந்தவர்களுக்கு உண்மையான ஞானத்தை உள்ளது உள்ளபடி அளித்த எம்பெருமானார் அல்லாமல், என்னைக் காப்பாற்றும் பலம் வேறு ஏதும் இல்லை.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே எம்பெருமானார் தம்முடைய ஔதார்யத்தாலே தம்மை ததீயருடைய சேர்த்தியில் கூட்டியருளினாரென்று அநுஸந்தித்து இவர் வித்தராயிருந்தவாறே, அருகேயிருந்தவர்கள், உமக்கு அவர்கள் பக்கலிலே ஜ்ஞாந

ப்ரேமங்களுண்டாகையாலே அவற்றைக் கொண்டு ஈடேறலாமேயென்ன; வதாந்யதையாலும், அதுக்கு ஹேதுவான பரமக்ருபையாலும், ஸகல ஜநங்களையும் ரக்ஷிக்கும்போது சீறுபாறு செய்யாமைக்குடலாய் ஆஹ்லாதகரனான சந்தரனைப்போலே யிருக்கிற தண்ணளியாலும், இந்த பூலோகத்திலுள்ளவர்களுக்கெல்லாம் கட்டடங்க தாமே ரக்ஷகராய்க் கொண்டு யதா வஸ்த்திதமாய் **விலக்ஷணமான ஜ்ஞாநத்தை உபதேசித்தருளின எம்பெருமானாரே ரக்ஷகரென்று அநுஸந்தித்துக் கொண்டிருக்கையே நான் ஈடேறுகைக்கு உடலாய்விடுமித்தனையொழிய என்னுடைய ஜ்ஞாந ப்ரேமங்கள் அதுக்குடலன்று** என்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், எம்பெருமானார் தன்னுடைய ஔதார்ய குணம் காரணமாக திருவரங்கத்தமுதனாராகிய தன்னை எம்பெருமானாருடைய அடியார்கள் கூட்டத்தில் சேர்த்து அருளிச்செய்தார் என்பதை எண்ணி பக்தியில் திளைத்து நின்றார். அப்போது அங்கிருந்த சிலர் இவரிடம், "உமக்கு அவர்கள் விஷயத்தில் ஞானம், ப்ரேமை போன்ற அனைத்தும் உள்ளது. ஆகவே இவற்றைக் கொண்டே நீவிர் கரையேறலாம் அல்லவோ?", என்றனர். இதற்குத் திருவரங்கத்தமுதனார் அவர்களிடம், "தனது கொடையாலும், அதற்குக் காரணமாக உள்ள பரமக்ருபையாலும், அனைத்து மக்களையும் காப்பற்றும்போது விரோதம் ஏதும் வந்து விடாமல் மகிழ்ச்சியை ஏறப்டுத்துகின்ற சந்த்ரன் போன்றுள்ள குளிர்ச்சியாலும், இந்தப் பூமியில் உள்ள அனைவருக்கும் முழுமையாகத் தானே காப்பாற்ற்றுபவராக உள்ளார். இப்படிப்பட்ட அவர் உண்மையானதும், மேன்மையானதும் ஆகிய ஞானத்தை உபதேசித்தருளினார். இத்தகைய எம்பெருமானாரே எனக்கு ரக்ஷகர் ஆவார் என்று நான் எண்ணியபடி இருத்தலே என்னைக் கரையேற்றி விடும் வழியாகும். இவை அன்றி எனது ஞானமும் ப்ரேமையும் அல்ல", என்கிறார்.

வ்யாக்யானம் – (வண்மையினாலும்) அர்த்த கௌரவத்தையும், அதிகாரி மாந்த்யத்தையும் பாராதே ஸர்வரையும் ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிப்பிக்குமதான ஸ்ரீபாததீர்த்தத்தையும் திருவடிகளையும் லோகமெல்லாம் பருகும்படியாகவும் ஸேவிக்கும்படியாகவும் ஸாளக்ராமத்தில் ப்ரதிஷ்டிப்பிக்கைக்கும் பரமகுஹ்யமான சரம ச்லோகார்த்தத்தை பூரிதாநமாகக் கொடுக்கைக்கும் "தத்வேன யச்சித சிதீச்வர தத் ஸ்வபாவ போகாபவர்க்க ததுபாய கதீருதார: ஸந்தர்சயந் நிரமிமீத புராண ரத்னம்" என்றாப்போலே ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளைப் பண்ணியருளி ஸர்வ விஷயமாக உபகரிக்கைக்கு உடலான ஔதார்யத்தாலும்

விளக்கம் - (**வண்மையினாலும்**) - தான் அளிக்கின்ற பொருளின் மேன்மை, அதனைப் பெறுகின்ற அதிகாரியின் தாழ்வு போன்ற எதனையும் ஆராயாமல், அனைவரையும் ஒரே போன்று இந்த ஸம்ஸாரத்திலிருந்து உயர்ந்தவதான ஸ்ரீபாததீர்த்தத்தையும், திருவடிகளையும் இந்த உலகம் முழுவதும் பருகும் விதமாகவும் வணங்கும் விதமாகவும் செய்தார். மிகுந்த, இரகசியமான சரமச்லோகத்தின் ஆழ்பொருளை அனைவரும் அறியும்படியாக உபதேசித்தார். ஸ்தோத்ரரத்னம் (4) – தத்வேன யச்சித சிதீச்வர தத் ஸ்வபாவ போகாபவர்க்க ததுபாய கதீருதார: ஸந்தர்சயந் நிரமிமீத புராண ரத்னம் – சேதனங்கள், அசேதனங்கள், ஈச்வரன் போன்றவை எவை, அவற்றின் தன்மைகள் என்ன, ஸுகம் என்பது என்ன, மோக்ஷம் என்ன, இவற்றுக்கான உபாயம் என்ன, அவற்றை அனுபவிக்கச் செல்லும் மார்க்கம் என்ன போன்றவற்றை உள்ளது உள்ளபடி விளக்கவல்லதும், புராணங்களில் இரத்தினமாக உள்ளதும் ஆகிய ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை, எத்தகைய வள்ளல் தன்மை கொண்டவராகிய பராசரர் - என்பதற்கு ஏற்ப ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம் போன்றவற்றைச் செய்தருளினார். இப்படியாக அனைவரும் அனைத்து விஷயங்களில் உதவியைப் பெறும்விதமாக தங்களிடம் அமைந்துள்ள தாராள குணத்தாலும்.

வ்யாக்யானம் - இப்படிப்பட்ட ஔதார்யத்துக்கு மூலமேதென்றால், (**தன் மாதகவாலும்**) "ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: ஜீவே துக்கா குலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே" என்றும், "ஸந்தப்தம் விவிதைர் துக்கைர்த் துர்வசைரேவமாதிபி:" என்றும் சொல்லுகிறபடியே ஸம்ஸார கர்த்தத்தில் விழுந்து அழுந்திக் கிடக்கிற ஸம்ஸாரிகளுடைய துர்க்கதியைக் கண்டு பொறுக்கமாட்டாத **பரமக்ருபையாலும்**, (**தன் மாதகவாலும்**) வந்தேறியன்றிக்கே ஸ்வாபாவிகமாய் அத்யந்த விலக்ஷணமாய் பரதுக்கா ஸஹிஷ்ணுத்வம் க்ருபை என்னும்படியான **தம்முடைய சீரருளாலும்**.

விளக்கம் – இப்படிப்பட்ட ஔதார்ய குணத்திற்கு மூலம் எதுவென்றால், (தன் மாதகவாலும்) - அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (14-28) – ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வகர்மபி: ஜீவே துக்கா குலே விஷ்ணோ: க்ருபா காப்யுபஜாயதே – தனது கர்மம் காரணமாக ஸம்ஸாரம் என்னும் சக்கரத்தில் சுழன்று துன்பப்படும் ஜீவன் மீது விஷ்ணுவிற்கு வர்ணிக்க இயலாத அளவு கருணை உண்டாகிறது – என்றும்,

தேவராஜ அஷ்டகம் (7) – ஸந்தப்தம் விவிதைர் துக்கைர்த் துர்வசைரேவமாதிபி: - கூறமுடியாத பலவிதமான துன்பங்களினால் மிகுந்த துக்கம் அடைந்தபடி உள்ள – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸம்ஸார ஸமுத்திரத்தில் அழுந்திக் கிடக்கின்ற ஸம்ஸாரிகளுடைய, தாழ்ந்த கதியைக் கண்டு பொறுத்துக் கொள்ள இயலாமல் உள்ளதான பரமக்ருபையாலும் (தன் மாதகவாலும்) - வந்து சேர்ந்தது அல்லாமல் இயல்பாகவே எல்லையற்ற மேன்மை கொண்டதாலும், மற்றவர்களுடைய துன்பத்தை கண்டு பொறுக்க இயலாத க்ருபை என்பதான தனது அருளாலும்.

வ்யாக்யானம் – (மதி புரியுந் தண்மையினாலும்) ஸர்வ ஜநாஹ்லாதகரனான சந்த்ரனைப் போலே ஸர்வ ஜந ஹர்ஷ ஹேதுவாய்க் கொண்டு மஹத்தான தண்ணளியாலும் . தண்மை – குளிர்த்தி. புரை – பெருமை. "ஹரிர் துக்காநி பக்தேப்யோ ஹித புத்த்யா கரோதிவை ஸஸ்த்ர க்ஷாராக்நி கர்மாணி ஸ்வபுத்ராய யதா பிதா" என்கிறபடியே ஹிதத்தைப் பண்ணிக் கொண்டு போருகையன்றிக்கே பித்த ரோகத்துக்கு மருந்தாகப் பாலைக் குடிப்பாரைப் போலே ஸர்வ ப்ரகாரத்தாலும் ஆஹ்லாதகரமான தண்ணளியை வடிவாகக் கொண்டிருப்பதென்றபடி.

விளக்கம் – (மதி புரியுந் தண்மையினாலும்) - அனைவருக்கும் மகிழ்ச்சியை அளிப்பவனாகிய சந்த்ரன் போன்று அனைத்து மக்களுடைய மகிழ்ச்சியையே காரணமாகக் கொண்டுள்ள கருணையாலும் அல்லது குளிர்ச்சியாலும், ஹரிர் துக்காநி பக்தேப்யோ ஹித புத்த்யா கரோதிவை ஸஸ்த்ர க்ஷாராக்நி கர்மாணி ஸ்வபுத்ராய யதா பிதா – நன்மையை அளிக்கவேண்டும் என்பதாலேயே ஸ்ரீஹரி பக்தர்களுக்குத் துக்கத்தை அளிக்கிறான். தனது பிள்ளையைக் குணப்படுத்த எண்ணும் தந்தை ஒருவன் புண்ணைச் சுடுவது அறுப்பது போன்ற செயல்களைச் செய்வது போன்றே ஆகும் - என்பதற்கு ஏற்ப நன்மையைச் செய்தபடி இருத்தல் மட்டும் அல்லாமல், பித்த நோய் ஏற்படும்போது மருந்தாகப் பாலைப் பருகுவது போன்று, அனைத்துவிதத்திலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் குளிர்ச்சியையே வடிவமாகக் கொண்டுள்ள நிலை.

வ்யாக்யானம் – (இத் தாரணியோர்கட்குத் தான் சரணாய்) – இப்புடைகளாலே "உபாஸ்ம்ருதா" என்றும், "உபாய உபேய பாவேந தமேவ சரணம் வ்ரஜேத்" என்றும் "ஸ்வாபிமாநத்தாலே ஈச்வராபிமாநத்தைத் கொலைத்துக் கொண்ட இவனுக்கு

ஆசார்யாபிமாந மொழிய கதியில்லை" என்று சொல்லுகிற கட்டளையாலே தாம் மோக்ஷகராய். "ஸ ஏவ ஸர்வலோகாநாம் உத்தர்தா ந அத்ர ஸம்சய:", "தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி நாந்யத்ர தஸ்மாத், சிஷ்ட ஸ்ரீமத்குரூணாம் குல மிதமகிலம் தஸ்ய நாதஸ்ய சேஷ:" என்னக்கடவதிறே.

விளக்கம் – (இத் தாரணியோர்கட்குத் தான் சரணாய்) - இவற்றின் காரணமாகவே, "உபாஸ்ம்ருதா" என்றும், உபாய உபேய பாவேந தமேவ சரணம் வ்ரஜேத் – உபாயமாகவும் உபேயமாகவும் குருநாதனுடைய திருவடிகளையே சரணம் அடையவேண்டும் – என்றும் உள்ளதற்கு ஏற்பவும், ஸ்வாமி நம்பிள்ளை, "ஸ்வாபிமாநத்தாலே ஈச்வராபிமாநத்தைத் கொலைத்துக் கொண்ட இவனுக்கு ஆசார்யாபிமாந மொழிய கதியில்லை" என்றும் கூறுவதான கட்டளை மூலமும் தாமே மோக்ஷம் காண்பிப்பவராக . ஸ ஏவ ஸர்வலோகாநாம் உத்தர்தா ந அத்ர ஸம்சய: - அனைத்து லோகங்களையும் உயர்த்துவதற்கு வேறு கதியில்லை என்பதில் ஐயம் இல்லை – என்றும், "தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி ச பதம் பாதி நாந்யத்ர தஸ்மாத், சிஷ்ட ஸ்ரீமத்குரூணாம் குல மிதமகிலம் தஸ்ய நாதஸ்ய சேஷ: - குரு என்ற பதம் இராமாநுசரிடத்தில் நிறைந்த பொருளுடையதாய் விளங்குகிறது. மற்ற யாரிடத்திலும் விளங்குவதில்லை. எனவே இராமாநுசருக்கு முன்பும், பின்பும் உள்ள மற்ற ஆசார்யர்களுடைய பரம்பரை அனைத்தும் இராமாநுசருக்கு அடங்கியதே ஆகும்" என்றும் கூறுவது காண்க.

வ்யாக்யானம் – (உண்மை நன் ஞானமுரைத்த) தத்வ ஹித புருஷார்த்த யாதாம்ய ஹித ரூபமாய் ஸாரதமமாயிருக்கிற ஜ்ஞாநத்தை உபதேசித்த. "பஜேத் ஸாரதமம் சாஸ்த்ர ரத்நாகர இவ அம்ருதம் ஸர்வதஸ் ஸாரம் ஆதத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத:" என்னக் கடவதிறே. **(இராமாநுசனை யுன்னுந் திண்மையல்லால்)** எம்பெருமானாரே ரக்ஷகரென்றத்யவஸித்திருக்கும் பலமொழிய. **திண்மை** – திண்ணிமை, அதாவது மிடுக்கு. **(மற்றோர் நிலை நேர்ந்திடில் எனக்கில்லை)** நன்றாகக் கொண்டு நிரூபித்துப் பார்த்தால் என்னுடைய ஜ்ஞாநமும் ப்ரேமம் தொடக்கமான வேறு சிறிதும் எனக்கில்லை. அகிஞ்சநனாய் அநந்ய கதியா யிருக்கிற அடியேனுக்கு தாரகமாக மாட்டாதென்று **தம்முடைய பாரமைகாந்த்யத்தை யருளிச்செய்தாராய்த்து**.

விளக்கம் – (**உண்மை நன் ஞானமுரைத்த**) – உண்மையானதும், நன்மையை அளிக்கவல்லதும் ஆகிய புருஷார்த்தத்தின் உண்மையான நன்மை வடிவில் உள்ள ஞானத்தை உபதேசித்த. பஜேத் ஸாரதமம் சாஸ்த்ர ரத்நாகர இவ அம்ருதம் ஸர்வதஸ் ஸாரம் ஆதத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத: - தேனீக்கள் மலர்களில் உள்ள தேனை மட்டும் பிரித்து எடுத்துப் பருகுவது போன்று, அனைத்து சாஸ்த்ரங்களிலும் உள்ள சாரத்தை அமிர்தம் போன்று பிரித்து எடுத்து அறியவேண்டும் - என்றது காணக. (**இராமாநுசனை யுன்னுந் திண்மையல்லால்**) - எம்பெருமானரே நமக்கு ரக்ஷகம் என்று எண்ணியபடி உள்ள பலம் அல்லாமல். (**மற்றோர் நிலை நேர்ந்திடில் எனக்கில்லை**) - நன்கு ஆராய்ந்து நோக்கினால் எனது ஞானம் மற்றும் ப்ரேமை முதலான தொடங்கி வேறு எதுவும் எனக்கு இல்லை. கைம்மாறு ஏதும் இல்லாதவனாகவும், வேறு கதி அற்றவனாகவும் உள்ள என்னால் உயிர் தரிக்க இயலாது என்று கருதி, தனது பாரமைகாந்த்யத்தை அருளிச்செய்தார்.

74. தேரார் மறையின் திறமென்று மாயவன் தீயவரைக்
கூராழி கொண்டு குறைப்பது கொண்டல் அனைய வண்மை
ஏரார் குணத்து எம் இராமாநுசன் அவ்வெழில் மறையில்
சேராதவரைச் சிதைப்பது அப்போது ஒரு சிந்தைசெய்தே

விளக்கவுரை - என்றும் உள்ளதும், புகழ் நிறைந்ததும் ஆகிய வேதங்களை, இராவணன் போன்றவர்கள் தெரிந்து வைத்திருந்தும் தீய செயல்களையே செய்தனர். இப்படிப்பட்டவர்களை, தீயவர்களை ஸர்வேச்வரன் என்ன செய்தான்? (இங்கு மாயவன் என்ற பதம் – விலங்கான யானையின் பொருட்டு ஓடி வந்து மோக்ஷம் கொடுத்தது, பறவையான ஜாடாயுவின் கால்களில் பணிந்து நின்றது, வானர சேனையைக் கொண்டது, இதுவரை கண்டிராத நரஸிம்ஹ ரூபம் எடுத்தது போன்ற வியப்பளிக்கும் செயல் செய்பவன் – என்ற பொருளில் வந்தது) இப்படிப்பட்ட ஸர்வேச்வரன், தனது கூர்மையான சக்கராயுதம் கொண்டு அழித்தான். இவன் இவ்விதம் செய்தது போன்று அழிக்க வேண்டிய செயலை எம்பெருமானார் செய்யவில்லை என்றார். அனைத்து உயிர்களும் வாழ அவதாரம் செய்ததால் மேகம் போன்ற வள்ளல் தன்மை கொண்டவராகவும், உயர்ந்த

கல்யாணகுணங்கள் உடையவராகவும், நமக்கு எஜமானராகவும் உள்ள எம்பெருமானார் செய்தது என்ன? மிகுந்த புகழ் உடைய வேதத்தின் மார்க்கத்தில் ஈடுபடாமல், அவற்றைத் தவறாகக் கூறுபவர்களை, தனது வாதத் திறமையால் மட்டுமே அழித்தார். ஆக உயிர்வதம் இல்லாமல் அழித்தார் என்று கருத்து.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே எம்பெருமானார், தம்முடைய பரம க்ருபா கார்யமான ஔதார்யத்தாலே சேதநர் எல்லாரையும் குறித்து யதாவஸ்த்தித ஜ்ஞாந உபதேசம் பண்ணி யருளினாரென்று அருளிச்செய்து, இதிலே – ஸதஸத் விவேக சூந்யராய் ஸ்வாஜ்ஞாநாதி லங்கநம் பண்ணிப் போருகிற துஷ்டரை ஸர்வேச்வரன் அநேகாவதாரங்களையும் அநேக யத்நங்களையும் பண்ணி சக்ர ஹஸ்தனாய்க் கொண்டு வருத்தத்தோடே நிரஸித்த வோபாதியன்றிக்கே, தாம் உபதேசித்த ஜ்ஞாநத்துக்கு விரோதிகளாய் ஜ்ஞாநலவ துர்விதக்தராய்க் கொண்டு திரண்டு கிடக்கிற பாஹ்ய குத்ருஷ்டிகளை தாதாத்விகையான வொரு கக்ஷியாலே நிரஸித்தாரென்று **அவர் தம்முடைய வைபவத்தைக் கொண்டாடுகிறார்**.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், எம்பெருமானார் தன்னுடைய பரமக்ருபையில் விளைவாக ஏற்படும் தாராளகுணத்தால், அனைத்து சேதநர்களுக்கும் உண்மையான ஞானத்தை உபதேசம் செய்தருளினார் என்று கூறினார். இந்தப் பாசுரத்தில் - ஸத் மற்றும் அஸத் குறித்த வேறுபாடு அறியாமல், ஸர்வேச்வரனாகிய தனது ஆணைகளை மீறுகின்ற துஷ்டர்களை ஸர்வேச்வரன் பல அவதாரங்களை எடுத்தும், பலவிதமான முயற்சிகள் செய்தும், சக்கரத்தைக் கையில் எடுத்து தீயவர்களை மிகவும் வருத்தத்துடன் அழித்தது போன்று அல்லாமல், தான் உபதேசித்த ஞானத்திற்கு விரோதிகளாக திரண்டு நிற்பவர்களை, அக்காலத்தில் ஒரு யுக்தி மூலம் வீழ்த்தினார் என்று எம்பெருமானாருடைய வைபவத்தைக்கொண்டாடுகிறார்.

வ்யாக்யானம் – (மறையின் திறம்) "வாசா விரூப நித்யயா" என்கிறபடியே நித்யமாய், "அசேஷ சேமுஷீ தோஷ தூஷித மாலிந்ய விநிர்முக்த வேதாக்யாக்ஷர ராசேரேவ" என்கிறபடியே ப்ரம ப்ரமாதாதி தோஷ துஷ்ட புருஷ ப்ரணிதமன்றிக்கே அபௌருஷேயமாய், அத ஏவ நித்ய நிரவத்யமாய், "தர்மஜ்ஞ ஸமய: ப்ரமாணம் வேதாச்ச" என்கிறபடியே ப்ரமாண தமமாய், அத ஏவ ப்ரத்யக்ஷாதி ஸகல ப்ரமாண விலக்ஷணமாய்,

"சாஸ்திர யோநித்வாத்" என்றும், "ஹர்த்தும் தம: ஸத் அஸத் இதி விவேக்தும் ஈச: மாநம் ப்ரதீபம் இவ காருணிகோ ததாதி" என்றும் சொல்லுகிறபடியே தன்னுடைய சாஸந ரூபமாய், ஸதஸத் விவேசநமாய், "மாதா பித்ரு ஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம்" என்கிறபடியே ஆப்த தமமாய், "ச்ருதி ஸ்ம்ருதி மமைவாஜ்ஞா" என்கிறபடியே தன்னுடைய சாஸநா ரூபமாயிருந்துள்ள வேதத்தினுடைய ப்ரகாரத்தை. த்யாஜ்யோபாதேய விவேசந ரூபமான சிக்ஷையை. "ஸத்யம் வத தர்மம் சர ஸ்வாத்யாயாந்மா ப்ரமதக: ஆசார்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய ப்ரஜாதந்தும் மா வ்யவச்சேத்ஸீ:" என்றும் வேதபுருஷனாலே போதிக்கப்பட்ட ப்ரகாரத்தை யென்றபடி. (**தேரார்** – என்று) நிரூபிக்கிறிலரென்று. "இதம் அஸ்தீதமபி மே பவிஷ்யதி புநர் தநம்", "அஸௌ மயா ஹத: சத்ருர்ஹநிஷ்யே சாபராநபி" என்று ராவணாதிகளைப்போலே, வேதத்தை தெளிந்து வைத்தே தத் விபரீத மார்க்க நிஷ்டராய்ப் போனார்களென்று.

விளக்கம் – (மறையின் திறம்) – வாசா விரூப நித்யயா - என்றும் உள்ள வேதங்களால் போற்றப்படும் அழகுள்ளவனே - என்பதற்கு ஏற்ப எப்போதும் உள்ளதாகவும், அசேஷ சேமுஷீ தோஷ தூஷித மாலிந்ய விநிர்முக்த வேதாக்யாக்ஷர ராசேரேவ - என்பதற்கு ஏற்ப அறிவற்றவர்கள் அறிவுள்ளவர்கள் ஆகியவர்களுடைய புருஷர்களுக்கே உரிய தோஷம் ஏதும் ஏற்படாதவிதத்தில் எந்த ஒரு புருஷனாலும் இயற்றப்படாததாகவும், அதன் காரணமாக எப்போதும் எந்தவிதமான தோஷமும் அற்றதாகவும், ஆபஸ்தம்ப ஸூத்ரம் – தர்மஜ்ஞ ஸமய: ப்ரமாணம் வேதாச்ச – தர்மம் அறிந்தவர்களுடைய அனுஷ்டானங்களும் வேதங்களும் ப்ரமாணம் - என்பதற்கு ஏற்ப தகுந்த ப்ரமாணமாகவும், அவை மட்டுமே ப்ரத்யக்ஷம் முதலான அனைத்துவிதமான ப்ரமாணங்களைக் காட்டிலும் வேறுபட்டதாகவும், ப்ரஹ்மஸூத்ரம் (1-1-3) – சாஸ்த்ர யோநித்வாத் - சாஸ்த்ரங்களால் மட்டுமே ப்ரஹ்மம அறியத்தக்கது – என்றும், ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-1) – ஹர்த்தும் தம: ஸத் அஸத் இதி விவேக்தும் ஈச: மாநம் ப்ரதீபம் இவ காருணிகோ ததாதி – மிகவும் கருணை நிறைந்த ஸர்வேச்வரன் நம்மிடம் உள்ள அறியாமை என்னும் இருளைப் போக்குவதற்காகவும், ஸத் அஸத் ஆகியவற்றைப் பிரித்து அறியும் விவேகம் உண்டாவதற்காகவும் சாஸ்த்ரம் என்பதை விளக்கு போன்று அளித்துள்ளான் – என்றும் கூறுவதற்கு ஏற்ப தனது கட்டளை ரூபமாக ஸத் மற்றும் அஸத் ஆகியவற்றைப் பிரித்து உரைப்பதாகவும், மாதா பித்ரு ஸஹஸ்ரேப்யோ வத்ஸலதரம் சாஸ்த்ரம் – தாய் தந்தை போன்று நம் மீது ஆயிரம் மடங்கு வாத்ஸல்யம் கொண்டவை சாஸ்த்ரங்கள் - என்பதற்கு

ஏற்ப நம்பத்தகுந்த சொற்களை உரைப்பதாகவும், ஸ்ரீவிஷ்ணுதர்மம் (6-31) - ச்ருதி ஸ்ம்ருதி மம ஏவ ஆஜ்ஞா – ச்ருதியும் ஸ்ம்ருதியும் என்னுடைய ஆணைகளே – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனாகிய தன்னுடைய கட்டளை ரூபமாகவே உள்ளதும் ஆகிய வேதத்தின் முறைகளை. எதனைக் கைவிடவேண்டும், எதனை ஏற்கவேண்டும் என்ற விவேகத்தை உணர்த்தும் வடிவில் உள்ள உபதேசத்தை. தைத்திரீய உபநிஷத் (11-1) - ஸத்யம் வத தர்மம் சர ஸ்வாத்யாயாந்மா ப்ரமதக: ஆசார்யாய ப்ரியம் தநமாஹ்ருத்ய ப்ரஜாதந்தும் மா வ்யவச்சேத்ஸீ: - உண்மையைப் பேசுக, தர்மவழியில் செல்க. கல்வியைக் கைவிடாதிருக்க. ஆசாரியனுக்கு விருப்பமான தக்ஷிணையைஅளிக்கவேண்டும். சந்ததிச் சங்கிலியை வெட்டக்கூடாது – என்பதற்கு ஏற்ப வேதபுருஷனால் போதிக்கப்பட்ட முறைகளை. (தேரார்) – கீதை (16-13) – இதம் அஸ்தீதமபி மே பவிஷ்யதி புநர் தநம் – எனக்கு இந்த அளவு செல்வம் உள்ளது, எனக்கு இந்த அளவு தனம் கிட்டப்போகிறது – என்றும், கீதை (16-14) – அஸௌ மயா ஹத: சத்ருர்ஹநிஷ்யே சாபராநபி – இந்தச் சத்ரு என்னால் கொல்லப்பட்டான், நான் மற்றவர்களையும் கொல்வேன் – என்றும் இராவணன் முதலானவர்கள் போன்று வேதங்களை நன்றாக அறிந்தபோதிலும் அதற்கு விபரீதமான பாதையில் சென்றார்கள்.

வ்யாக்யானம் – (மாயவன்) ஸகல ஜகத் காரணபூதனா யிருந்து வைத்தே ராக்ஷஸர்க்கு பக்ஷண போக்யமான மானிட சாதியில் தான் பிறந்தும், ஒரு திர்யக்குக்கு மோக்ஷத்தைக் கொடுத்தும், ஒரு திர்யக்கின் காலில் விழுந்தும், வாநர ஸேநா பரிவ்ருதனாய்க் கொண்டு கடலை யடைத்தும், ஒருக்காலும் ஒருவரும் கண்டும் கேட்டு மறியாத நரசிம்ஹ ரூபேண ஆவிர்ப்பவித்தும், இப்படிப்பட்ட **அநேக ஆச்சர்ய குண சேஷ்டிதங்களை யுடையனான ஸர்வேச்வரன். (தீயவரை)** "ஆஜ்ஞாச் சேதீம் மத்ரோஹீ" என்கிறபடியே ஸ்வாஜ்ஞாதி லங்கநம் பண்ணும் அத்யந்த ரோஹிகளான துஷ்டரை.

விளக்கம் – (மாயவன்) - அனைத்து ஜகத்திற்கும் காரணமாக உள்ளபோதிலும் ராக்ஷஸர்களால் உண்ணும்படியாக உள்ள மனிதப்பிறவியில் வந்து பிறந்தான், ஒரு விலங்குக்கு மோக்ஷம் அளித்தான், ஒரு விலங்கின் காலின் விழுந்தான், வானர சேனைகளைத் துணையாகக் கொண்டு கடலை அடைத்துப் பாலம் அமைத்தான், எப்போதும் யாரும் கண்டும் கேட்டும் அறியாத நரஸிம்ஹ ரூபமாகத் தோன்றினான்.

இப்படியாகப் பலவிதமான வியக்கவைக்கும் லீலைகளைக் கொண்ட ஸர்வேச்வரன். (தீயவரை) - விஷ்ணுதர்மத்தில் (6-31) - ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ – (வேதங்களை மீறி நடப்பவன் யாராக இருப்பினும்) எனது ஆணைகளை மீறுபவன் ஆவான்; அவன் எனக்குத் துரோகம் செய்தவன் ஆவான் – என்பதற்கு ஏற்ப அவனுடைய ஆணைகளாக உள்ளவற்றை மீறுகின்ற எல்லையற்ற துரோகம் நிறைந்த துஷ்டர்களை.

வ்யாக்யானம் – (கூராழி கொண்டு) "வடிவார் சோதி" என்றும், "ஸ்ப்புரத் ஸஹஸ்ரார சிகாதி தீவ்ரம் ஸுதர்சனம் பாஸ்கர கோடி துல்யம்" என்றும் சொல்லுகிறபடியே மிகவும் கூர்மையை யுடைத்தான திருவாழியாலே. **(குறைப்பது)** "ஸுரத் விஷாம் ப்ராண விநாசி விஷ்ணோச் சக்ரம்" என்கிறபடியே ஆச்ரித விரோதிகளை முற்றூட்டாக நிரஸிக்கக் கடவ திருவாழியை தரித்துக் கொண்டு அத்தாலே பகலை இரவாக்கி ஸைந்தனவனைக் கொன்றதும், "**சாமாறவனை நீயெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்**" என்கிறபடியே சீமாலியைக் கொன்றதும். **குறைக்கை** – சேதிக்கை.

விளக்கம் – (கூராழி கொண்டு) - திருப்பல்லாண்டு (1) – வடிவார் சோதி - என்றும், ஸ்ரீபஞ்சாயுத ஸ்தோத்ரம் (1) – ஸ்புரத் ஸஹஸ்ரார சிகாதி தீவ்ரம் ஸுதர்சநம் பாஸ்கர கோடி துல்யம் – ஆயிரக்கணக்கான ஜ்வாலையைக் கொண்டதும், கோடி சூரியன்களின் ப்ரகாசத்தை உடையதும் ஆகிய ஸுதர்சந சக்கரம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப மிகவும் கூர்மையான சக்கராயுதம் கொண்டு. (குறைப்பது) - ஸ்ரீபஞ்சாயுத ஸ்தோத்ரம் (1) – ஸுரத்விஷாம் ப்ராண விநாசி விஷ்ணோச்சக்ரம் – அஸுரர்களுடைய ப்ராணனை அழிக்கக்கூடியதான விஷ்ணுவின் சக்கரம் – என்பதற்கு ஏற்ப தனது அடியார்களுடைய விரோதிகளை முழுமையாக அழிக்கவல்லதான சக்கராயுதத்தை திருக்கரத்தில் தாங்கியபடி, அதன் மூலம் இரவைப் பகலாக்கி ஸைந்தவனை அழித்ததும், பெரியாழ்வார் திருமொழி - **சாமாறவனை நீயெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்** - என்பதற்கு ஏற்ப சீமாலியைக் கொன்றதும்.

வ்யாக்யானம் – "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்றும், "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் தர்ம ஸம்ஸ்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்றும், "மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து" என்று சொல்லுகிறபடியே இஸ்ஸம்சாரிகளைப்

போலே தானும் பல பிறப்பும் பிறந்து திருவாழியாழ்வானைத் திருக்கையிலே பிடித்துக் கொண்டு அவன் தனக்கு நிரூபகமாம்படி யிருப்பது, வேதாந்தோக்த தர்ம ஸம்ஸ்தாப நார்த்தமாக ஸ்வாஜ்ஞாநுவர்த்தநம் பண்ணுகிற சேதநரை ரக்ஷிக்கைக்காகவும், தத் விரோதிகளாய் ஸ்வாஜ்ஞாச்சேதிகளான துஷ்டரைச் சேதிக்கைகாவுமிறே. "பஹிரந்தஸ்ய தமச்சேதி ஜ்யோதிர் வந்தே ஸுதர்சநம் ஏநா வ்யாஹத ஸங்கல்பம் வஸ்து லக்ஷ்மீதரம் விது:" என்னக் கடவதிறே.

விளக்கம் – யஜுர்வேதம் – அஜாயமாநோ பஹுதா விஜயதே – பிறப்பற்றவனாக உள்ளபோதிலும் பலவாக அவதரிக்கிறான் - என்றும், கீதை (4-8) – பரித்ராணாயா ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் தர்ம ஸம்ஸ்த்பாநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே – ஸாதுக்களைக் காப்பாற்றவும், பாபம் செய்பவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் நான் ஒவ்வொரு யுகத்திலும் தோன்றுகிறேன் - என்றும், திருவாய்மொழி - மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து – என்றும் கூறுவதற்கு ஏற்ப இந்த ஸம்ஸாரிகள் போன்று தானும் பலவிதமான அவதாரங்கள் மூலமாகத் தோன்றி, சக்கராயுதத்தைத் திருக்கரத்தில் பிடித்துக்கொண்டு அதன் மூலமாகத் தன்னை அடையாளம் கண்டு கொள்ளும்படியாக உள்ளான். இப்படி உள்ளது எதற்கு என்றால் வேதாந்தங்களில் கூறப்படும் தர்மத்தை நிலைநாட்டும்விதமாக தன்னுடைய கட்டளைகளைப் பின்பற்றும் சேதநர்களைக் காப்பாறுவதற்காகவும், அவர்களுக்கு விரோதிகளாக உள்ளவர்களும் ஸர்வேச்வரனாகிய தனது ஆணைகளை மீறும் தீயவர்களை அழிப்பதற்காகவும் ஆகும். அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை – (சங்கரன் வாக்கு) பஹிரந்தஸ்ய தமச்சேதி ஜ்யோதிர் வந்தே ஸுதர்சநம் ஏநா வ்யாஹத ஸங்கல்பம் வஸ்து லக்ஷ்மீதரம் விது: - வெளிப்புறமும் மனதின் உட்புறமும் உள்ள இருளைப் போக்கவல்ல ஸுதர்சநம் என்னும் ஜோதியை நான் நமஸ்கரிக்கிறேன். ஸ்ரீமஹாலக்ஷ்மியைத் தனது திருமார்பில் கொண்ட மஹாவிஷ்ணுவும் இந்தச் சக்கரத்தாழ்வார் மூலமாகவே தன்னுடைய ஸங்கல்பங்களை நிறைவேற்றுகிறான் – என்பது காண்க.

வ்யாக்யானம் - இப்படி விரோதி நிரசஸநார்த்தமாக **ஸர்வேச்வரனுக்கு இத்தனை யத்நம் பண்ண வேண்டியிருந்தாலும் எம்பெருமானார்க்கு இப்படி யத்நித்திருக்க வேண்டுவதில்லை யென்கிறார் மேல். (கொண்டலனைய வண்மை)** தம்முடைய அநதிகாரம் பாராதே கைக்கொண்டு உபகரித்தவிதுக்கு வித்தராய் **பாட்டுத்தோறும்**

இவருடைய ஔதார்யத்தையே கொண்டாடுகிறார் காணும். ஜல ஸ்தல விபாகமற வர்ஷிக்கும் வர்ஷுகவலாஹகம் போலே இருந்தவிடம் தேடி வந்து உபகரிக்கும்படியான ஔதார்யத்தை யுடையராய். **(ஏரார் குணத்து)** அதிபோக்யங்களான வாத்ஸல்ய ஸௌசீல்யாதி குணங்களை யுடையராய். **(எம்மிராமாநுசன்)** அடியோங்களுக்கு இவ்வதிசயங்க ளெல்லாம் தெரியும்படி உபதேசித்து அத்தாலே வகுத்த சேஷியாயிருக்கிற எம்பெருமானார்.

விளக்கம் – இவ்விதம் விரோதிகளை அழிப்பதற்காக ஸர்வேச்வரன் இத்தனை முயற்சிகளைச் செய்தபடி இருக்கவேண்டியதாயிற்று. ஆனால் எம்பெருமானாருக்கு இத்தனை முயற்சிகள் அவசியம் இல்லாதிருந்தது என்கிறார். **(கொண்டலனைய வண்மை)** - திருவரங்கத்தமுதனாராகிய தன்னுடைய தகுதியற்ற நிலையை ஆராயாமல் கைக்கொண்டு உதவிய காரணத்தால் மிகவும் மகிழ்ந்து ஒவ்வொரு பாசுரம்தோறும் எம்பெருமானாருடைய தாராள மனத்தையே கொண்டாடியபடி உள்ளார். நீர்நிலை, கட்டாந்தரை என்ற வேறுபாடு ஆராயாமல் பொழிகின்ற மழை போன்று, தான் உள்ள இடம் தேடி ஓடி வந்து உதவும்படியான தாராள மனம் கொண்டவராக. (ஏரார் குணத்து) - மிகவும் இனிமையுடன் கூடியதான வாத்ஸல்யம், ஸௌசீல்யம் போன்ற குணங்களைக் கொண்டவராக. (எம் இராமானுசன்) - எங்களுக்கு இந்த மேன்மை முழுவதும் முற்றிலுமாகத் தெரியும்படியாக உபதேசித்து, அதன் மூலம் எங்களுக்கு ஏற்ற எஜமானராக உள்ள எம்பெருமானார்.

வ்யாக்யானம் – (அவ்வெழில் மறையில்) பூர்வோக்தமான நிரவதிக தேஜஸ்ஸை யுடையதாய், "வேத சாஸ்த்ராத் பரம் நாஸ்தி" என்றும், "ந வேதாந்தாச் சாஸ்த்ரம்" என்றும் சொல்லுகிறபடியே நிஸ்ஸமாப்யதிகமான வேதத்திலே. வேதோக்த மார்க்கத்தில் யென்றபடி. **(சேராதவரை)** ஆச்ரயியாதவர்களை. அப்ராமாண்ய புத்தியாலும் அயதார்த்த ப்ரதிபத்தியாலும் அதிலே பொருந்தா நிலையுடையரான பாஹ்ய குத்ருஷ்டிகளை யென்றபடி. **(சிதைப்பது)** பக்நராய் பராஜிதராகப் பண்ணுவது. **சிதைக்கை** – அழிக்கை.

விளக்கம் – (அவ்வெழில் மறையில்) - பூர்வபாகம், உத்தரபாகம் ஆகிய இரண்டிலும் எல்லையற்ற தேஜஸ்ஸைக் கொண்டதாக. வேத சாஸ்த்ராத் பரம் நாஸ்தி – வேதங்களைக் காட்டிலும் உயர்ந்த சாஸ்த்ரம் இல்லை – என்றும், ந வேதாந்தாச் சாஸ்த்ரம் –

வேதங்களைக் காட்டிலும் இறுதியான வேறு சாஸ்த்ரம் இல்லை என்றும் கூறுவதற்கு ஏற்ப, தங்களுக்கு ஏதும் ஒப்பில்லை என்னும்படியாக உள்ள வேதங்களில். வேதங்களால் உபதேசிக்கப்பட்ட மார்க்கத்தில் என்று கருத்து. (சேராதவரை) - அண்டி நிற்காதவர்களை. ப்ரமாணம் என்று ஏற்காத காரணத்தாலும், உண்மையை அறிய வேண்டும் என்ற ஆர்வம் இல்லாத காரணத்தாலும் அந்த வேதமார்க்கத்தில் நிலைநிற்காத தாழ்ந்தவர்களை. (சிதைப்பது) - எரியும்படியாக, தோல்வியுறச் செய்து.

வ்யாக்யானம் – (அப்போதொரு சிந்தை செய்தே) அந்த ப்ரஸங்க காலத்திலே தானே "ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி" என்றும், "ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவத" இத்யாதி வாக்யங்களுக்கு உட்பொருளறியாதே அபார்த்தங்களைச் சொல்லி அபலாபித்தவர்களைக் குறித்து "ப்ரணவோ தநு: சரோ ஹி ஆத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யம் உச்யதே அப்ரமத்தேந வேத்தவ்யம் சரவத் தந்மயோ பவேத்" என்னும் ச்ருதி வாக்யத்துக்கு ததாத்விகையான வொரு யுக்தியாலே அவர்கள் சொன்ன அபார்த்தங்களை கண்டித்தருளி அவர்களை நிர்மூலம் பண்ணினாரென்றபடி. "ஸ்வஸித்தாந்த த்வாந்த ஸ்த்திர குதுக துர்வாநி பரிஷத் திவாபீத ப்ரேக்ஷா திநகர ஸமுத்தாந பருஷா:" என்னும்படியிறே இவர் விஷயமான ஸ்ரீஸூக்தியிருப்பது. **ஆக ஸர்வ சக்தி யுக்தனான ஸர்வேச்வரனிலுங்காட்டில் இவர் அநாயாஸேந விரோதிகளை நிரஸித்தாரென்று இவர் தம்முடைய ப்ரபாவத்தைக் கொண்டாடினாராய்த்து.**

விளக்கம் – (அப்போதொரு சிந்தை செய்தே) - அப்படிப்பட்ட காலத்தில். சாந்தோக்ய உபநிஷத் (5-10-2) – ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி – அவனை ப்ரஹ்மத்திடம் அழைத்துச் செல்கிறான் – என்றும், ப்ரஹ்ம வேத ப்ரஹ்ம ஏவ பவதி – ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மத்தைப் போன்ற ஸ்வரூபத்தை அடைகிறான் – என்றும் உள்ள வாக்கியங்களின் ஆழ்பொருள் அறியாமல், தவறாகப் பொருள் உரைத்து, அவற்றின் உண்மைகளை மறைத்தவர்கள் குறித்து, முண்டக உபநிஷத் (2-2-4) - ப்ரணவோ தநு: சரோ ஹி ஆத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யம் உச்யதே அப்ரமத்தேந வேத்தவ்யம் சரவத் தந்மயோ பவேத் - ப்ரணவமே வில், ஜீவாத்மாவே அம்பு, பரப்ரஹ்மமே இலக்கு. அவனை உபாஸித்து அவனுடன் அம்பு போன்று ஒன்றி கைங்கர்யம் செய்வானாக – என்ற ச்ருதி வாக்கியத்திற்கு ஏற்ற ஒரு விதத்தில் அவர்கள் கூறிய தவறான பொருள்களைக் கண்டித்து அவர்களை வாதத்தில் வென்றார் என்று கருத்து, ஸ்வஸித்தாந்த த்வாந்த ஸ்த்திர குதுக

துர்வாநி பரிஷத் திவாபீத ப்ரேக்ஷா திநகர ஸமுத்தாந பருஷா: - மற்ற மதங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் வாதம் என்ற இருளில் நிலையாக நின்றபடி உள்ளனர். இவ்விதம் தகாத வாதம் செய்யும் ஆந்தைகளுக்கு சூரிய உதயம் போன்று உள்ளன. இவ்விதம் அவைகளுக்கும் கொடியதாக உள்ளன. மேலும் கலங்காத மோக்ஷ விருப்பம் ஏற்படுத்த வல்லவையாகவும் உள்ளன - என்பதற்கு ஏற்ப அல்லவோ எம்பெருமானார் விஷயமாகக் கூறப்பட்டது? ஆகவே அனைத்து சக்திகளையும் கொண்ட ஸர்வேச்வரனைக் காட்டிலும் இவர் மிகவும் எளிதாக விரோதிகளை அழித்தார் என்று கூறி, இவருடைய ப்ரபாவத்தைக் கொண்டாடினார் என்று கருத்து.

75. செய்த்தலைச் சங்கம் செழுமுத்தம் ஈனும் திருவரங்கர்
கைத்தலத்து ஆழியும் சங்கமும் ஏந்தி நங்கண் முகப்பே
மொய்த்தலைத்து உன்னை விடேன் என்று இருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும் வந்து இராமாநுச என்னை முற்று நின்றே

விளக்கவுரை - திருவரங்கத்தில் உள்ள வயல்களில் காவிரியின் நீரில் அடித்து வரப்பட்ட வெண்மையான சங்குகள் உள்ளன. அவற்றின் உள்ளே காணப்படும் வெண்மையான முத்துக்களை தனக்கு ஆடையாகப் பெரியபெருமாள் ஏற்றுக் கொள்கிறான். இந்த அரங்கன் செய்வது என்ன? தனது அழகான திருக்கரங்களுக்கு மேலும் அழகு சேர்க்கும் விதமாக சக்கரத்தையும், பாஞ்சஜன்யம் என்ற சங்கையும், வைத்துள்ளான்; இவ்விதம் தனது அழகு முழுவதையும் எனக்குக் காண்பித்தபடி நின்றுள்ளான்; இதன் மூலம் எனது புத்தியைத் தடுமாறச் செய்கிறான்; என்னை நான் நின்ற இடத்தில் நிலையாக நில்லாதபடி அவனை நோக்கியே ஓடும்படிச் செய்கிறான்; என்னுடன், "உன்னை எனது அழகில் மயங்கி விழும்படிச் செய்யாமல் விடமாட்டேன்", என்று உள்ளான். அவன் அவ்விதம் உள்ளபோது, எம்பெருமானாரே! நான் உள்ள இடம் தேடிவந்து என்னை முழுவதுமாக ஆட்கொண்டு, உமது கல்யாண குணங்கள் அல்லவோ என்னை மொய்த்தபடி உள்ளன? ஆக அரங்கனைக் கண்டாலும் நான் அவன் பக்கம் சாயாமல் உமது பக்கமே உள்ளேன் என்று கருத்து.

அவதாரிகை - இப்படி இவர் தம்முடைய குண சேஷ்டிதங்களை யநுஸந்தித்து வித்தராய்ச் சொன்ன வார்த்தையை எம்பெருமானார் கேட்டருளி, "இப்போது நீர் அத்யவஸாயாதிசயத்தாலே இப்படியெல்லாம் சொன்னீர். ஆகிலும் பகவத்விஷயத்திலே சென்று அங்கேற வைலக்ஷண்யங்களைக் கண்டு அவ்விடத்தில் ரஸமறிந்தீராகில் இந்த ப்ராவண்யம் நிலை நிற்குமோ" என்று திருவுள்ளமாயருள; "ஸர்வேச்வரன் சங்குசக்ராதி திவ்யாயுதாலங்க்ருதனாய்க் கொண்டு அடியேனிருந்தவிடம் தேடி வந்து தன் வைலக்ஷண்யத்தை அடியேனுக்கு முற்றூட்டாகக் காட்டி உன்னை நான் விடுவதில்லையென்று என் முன்னே நிற்கிலும், அவன் வைலக்ஷண்யத்திலே யீடுபடாதே தேவரீர் பக்கலில் தானே ஈடுபடும்படி **தேவரீருடைய கல்யாணகுணங்கள் கட்டடங்க வந்து அடியேனைச் சூழ்ந்துகொண்டு ஆகர்ஷியா நிற்கும்**" என்கிறார்.

விளக்கம் – இப்படியாக திருவரங்கத்தமுதனார் தன்னுடைய குணங்கள் மற்றும் செயல்கள் ஆகியவற்றை எண்ணியபடி மகிழ்ந்து உரைத்த அனைத்தையும் எம்பெருமானார் கேட்டருளினார். அவர் அமுதனாரிடன், "நீவிர் நம்மிடம் கொண்ட ஈடுபாடு காரணமாக இவ்விதம் உரைத்தீர். ஆனால் பகவானை அண்டி நின்று அவனுடைய வேறுபட்ட மேன்மைகள் அனைத்தையும் உணர்ந்து, அவனிடம் உளள சுவையை உணர்ந்தால், இந்த ஈடுபாடு நிலையாக இருக்குமோ?", என்றார். இதற்கு அமுதனார், "ஸர்வேச்வரன் சங்கு சக்கரம் முதலான அனைத்து ஆயுதங்களையும் தரித்தபடி, நான் உள்ள இடம் தேடிவந்து, தனது வேறுபட்ட மேன்மைகளை எனக்கு முற்றிலுமாகக் காண்பித்து, என்னிடம் – உன்னை நான் விடமாட்டேன் - என்று அருகிலேயே நின்றான் என்றாலும், அவனுடைய மேன்மைகளில் ஈடுபடாமல், உம்முடைய திருக்கல்யாண குணங்கள் முழுவதுமாக வந்து என்னைச் சூழ்ந்து கொண்டு, என்னை வசீகரம் செய்யும்", என்றார்.

வ்யாக்யானம் – (செய்த்தலைச் சங்கம்) – "சூழ் புனலரங்கம்" என்றும், "பூகீ கண்ட த்வயஸ ஸரஸ நிக்த நீரோபகண்டாம்" என்றும் சொல்லுகிறபடியே திருக்காவேரியில் ஜல ஸம்ருத்தியாலே கோயில் சுற்றுமிருக்கிற வயல்களுக்கும் திருநந்தவநங்களுக்கும் நீர் பாய்ந்தால் அந்த வயல் தலையிலே ஜலத்தோடே வந்த சங்கங்கள் அங்கே நிற்குமிறே; அப்படிப்பட்ட சங்கங்களானவை. (செழுமுத்த மீனும்) அழகிய முத்துக்களை ப்ரஸவியா நின்றுள்ள ஜல ஸம்ருத்தியையுடைத்தான ப்ரவாஹத்தோடே வந்த சங்கங்களாகையாலே

அவற்றுக்கு அழகிய முத்துக்களை ஈனுகையே ஸ்வபாவமாயிருக்குமிறே. இவர் அந்த வைலக்ஷண்யத்தை ஸதா அநுபவித்துக் கொண்டிருந்தவராகையாலே அத்தையிட்டே அந்நகரத்தை வர்ணிக்கிறார் காணும். (திருவரங்கர்) இப்படிப்பட்ட ரங்க ஸ்தலத்துக்கு நிர்வாஹரான பெரியபெருமாள்.

விளக்கம் – (**செய்த்தலைச் சங்கம்**) திருமாலை (38) – சூழ் புனல் அரங்கம் – என்றும், ஸ்ரீரங்கநாத ஸ்தோத்ரம் (5) – பூகீ கண்ட த்வயஸ ஸரஸ நிக்த நீரோபகண்டாம் – மிகவும் ப்ரியத்துடன் கூடிய நீரோட்டத்துடன் கூடிய – என்றும் கூறுவதற்கு ஏற்ப திருக்காவேரியின் நீர் வளர்ச்சி காரணமாக, திருவரங்கம் பெரியகோவிலைச் சுற்றியுள்ள வயல்களுக்கும் நந்தவனங்களுக்கும் நீர் பாய்ந்தபடி உள்ளது. இதன் காரணமாக அந்த வயல்களின் வரப்புகளில் அந்த நீரால் அடித்து இழுத்துக் கொண்டு வரப்பட்ட சங்குகள் தேங்கி நிற்கின்றன. அப்படிப்பட்ட சங்குகளானவை, (**செழுமுத்த மீனும்**) - அழகான முத்துக்களைத் தங்களுக்குள் கொண்டுள்ளன. நிறைந்த நீருடன் வந்த சங்குகள் என்பதால் அவற்றுக்கு அழகான நல்முத்துக்களை பெற்றெடுப்பது இயல்பு ஆகும். இவர் எப்போதும் அந்த மேன்மையை அனுபவித்தபடி உள்ளவர் என்பதால் அதனைக் கொண்டே திருவரங்கத்தை வர்ணிக்கிறார். (திருவரங்கர்) - இப்படிப்பட்ட ஸ்ரீரங்கக்ஷேத்ரத்திற்கு எஜமானனாக உள்ள பெரியபெருமாள்.

வ்யாக்யானம் – (கைத்தலத்து ஆழியும் சங்கமும் ஏந்தி) – "சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன்" என்றும், "கூராராழி வெண்சங்கமேந்தி" என்றும், "கையினார் சுரி சங்கனலாழியார்" என்றும் சொல்லுகிறபடியே வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படியான அழகிய திருக்கைகளிலே திருவாழியாழ்வானையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் தரித்துக் கொண்டிருந்தால் அந்தச் சேர்த்தியழகு வாக்குக்கு நிலமன்றிறே. திருக்கைகளும் திருவாயுதங்களும் தட்டு மாறி ஒன்றுக்கு ஒன்று பரபாகமாய்க் காணுமிருப்பது. இப்படி அணியாராழியும் சங்கமு மேந்திக் கொண்டு தர்சநீயராய். (என் கண் முகப்பே) என் கண் வட்டத்திலே ஸாக்ஷாத்கரித்து.

விளக்கம் – (**கைத்தலத்து ஆழியும் சங்கமும் ஏந்தி**) – திருப்பாவை (14) – சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் – என்றும், திருவாய்மொழி (6-9-1) – கூராராழி வெண்சங்கேந்தி – என்றும், அமலனாதிபிரான் (7) – கையினார் சுரிசங்கனலாழியர் என்றும் கூறுவதற்கு

ஏற்ப திருக்கரங்களில் ஏதும் வைத்துக் கொள்ளாமல் நின்றாலும் வெளிப்படும் அழகு காரணமாக ஆலத்தி சுற்றவேண்டும்படி இருக்கும்; ஆனால், அத்தகைய அழகான திருக்கரங்களில் திருச்சக்ரத்தாழ்வானையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் தரித்தபடி நிற்கும்போது அத்தகைய அழகு என்பது சொற்களால் விவரிக்க முடியாதது ஆகும். திருக்கரங்களும், அந்தத் திருவாயுதங்களும் ஒன்றுக்கு ஒன்று அழகு சேர்ப்பதாக உள்ளன. இவ்விதம் அழகான சக்கரம் மற்றும் சங்கம் ஆகியவற்றைத் தரித்தபடி காண்பதற்கு அழகாக உள்ளவனை. (**என் கண் முகப்பே**) - எனது கண்களால் நேரில் கண்டு.

வ்யாக்யானம் – (மொய்த்தலைத்து) தம்முடைய ஸௌந்தர்யாதிகளாலே தேவரீர் விஷயமான என்னுடைய அத்யாவஸாயத்தை குலைக்கைக்கீடான புத்தி பேதத்தைப் பிறப்பித்தும், நின்றவிடத்திலே நில்லாதபடி துடிப்பித்தும். "மெய்த்தலத்து" என்று பாடமானபோது, மெய்யான தலத்திலே - மெய் நிலத்திலே – என்றபடி. அதாவது, நின்னை விடேனனென்றிருக்கிறவிருப்பு. ஐந்த்ரஜாலிகம் போலே மெய்போலும் பொய்யன்றிக்கே ஸத்யமேயாயிருக்கை. மொய்த்தல் – திரளுதல். அலைத்தல் - நின்ற இடத்தில் நில்லாதபடி துடிப்பித்தல். (உன்னை விடேனென்றிருக்கிலும்) உன்னை நாம் விடக் கடவோமல்லோமென்று ப்ரதிஜ்ஞை பண்ணிக் கொண்டு ஸ்த்தாவர ப்ரதிஷ்டையாக அடிபேராதேயிருக்கிலும்.

விளக்கம் – (**மொய்த்தலைத்து**) - தனது அழகு காரணமாக எம்பெருமானாராகிய உம்மிடம் எனக்குள்ள ஈடுபாட்டைக் குலைப்பதற்கு ஏற்றபடி எனது புத்தியை அந்த அழகில் தடுமாற வைத்தும், நான் நின்ற இடத்தில் நிற்க இயலாதபடி அவனைக் காணவேண்டும் என்று துடிக்க வைத்தும். "மொய்த்தலைத்து" என்பதற்குப் பதிலாக "மெய்த்தலைத்து" என்று கொண்டால், "மெய்யான இடத்தில்" என்று பொருள்; அதாவது "உன்னை இனி விடமாட்டேன்" என்று நிற்கும் நிலை. இந்தரஜாலம் போன்று பொய்யாக இன்றி, மெய்யாகவே உள்ள நிலை. (உன்னை விடேன் என்று இருக்கிலும்) - உன்னை விட்டு இனி நான் போகமாட்டேன், உன்னையும் விடமாட்டேன் என்று ப்ரதிஜ்ஞை செய்தவனாக, மரம் போன்று நிலையாக நகராமல் நின்றாலும்.

வ்யாக்யானம் – (இராமாநுச) – எம்பெருமானாரே. (நின் புகழே) "ஏய்ந்த பெருங்கீர்த்தி" என்னும்படியான தேவரீருடைய கல்யாணகுணங்களே (வந்து - என்னை முற்றும் நின்று –

மொய்த்தலைக்கும்) அடியேனிருந்தவிடம் தேடி வந்து விஜாதீயர்க்கிடங் கொடாதபடி அடியேனை எங்குமொக்க பரிவேஷ்டித்துக் கொண்டு நின்று, பகவத் வைலக்ஷண்யத்தில் கால்தாழாதபடி அஹமஹமிகயா ஸ்வ வைலக்ஷண்யத்தைக் காட்டி ஆகர்ஷியா நிற்கிறன. ஆகையால் பகவத் வைலக்ஷண்யத்தைக் கண்டாலும் அதிலே தோள் மாறக்கூடாதென்று கருத்து. "கச்சதா மாதுலகுலம் பரதேந மஹாத்மநா சத்ருக்நோ நித்யசத்ருக்நோ நீத: ப்ரீதி புரஸ்க்ருத:", "ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா துர்லபம்ய உபாஸதே ஹஸ்தஸ்த்தமுதகம் த்யக்த்வா கநஸ் தமபி வாஞ்சதி" என்னக் கடவதிறே. "எட்டவிருந்த குருவை யிறையன்றென்று விட்டோர் பரனை விருப்புதல் பொட்டெனத் தன் கண் செம்பளித்திருந்து கைத்துருத்தி நீர் தூவி அம்புதத்தைப் பார்த்திருப்பானற்று" என்று அருளாளப்பெருமாளெம்பெருமானாரும் அருளிச் செய்தாரிறே.

விளக்கம் – (இராமாநுச) – எம்பெருமானாரே. (நின்புகழே) "ஏய்ந்த பெருங்கீர்த்தி" என்பதற்கு ஏற்ப உம்முடைய திருக்கல்யாணகுணங்கள், (வந்து - என்னை முற்றும் நின்று –மொய்த்தலைக்கும்) - நான் உள்ல இடம் தேடி வந்து மற்ற எதற்கும் என்னை ஆளாக்காமல், என்னை அனைத்துப் பக்கங்களிலும் பாதுகாத்தபடி, அந்த பகவத் மேன்மையில் தடுமாறாதபடி உம்முடைய மேன்மையைக் காண்பித்தபடி உள்ளன. ஆகவே பகவத்விஷயத்தைக் காணும்போது அதில் மாறக்கூடாது என்று கருத்து. இராமாயணம் அயோத்யாகாண்டம் (1-1) – கச்சதா மாதுலகுலம் பரதேந மஹாத்மநா சத்ருக்நோ நித்யசத்ருக்நோ நீத: ப்ரீதி புரஸ்க்ருத: – பரதன் தனது மாமன் வீட்டிற்குச் செல்லும்போது, எப்போதும் உடனுள்ள சத்ருக்களாகிய ஐந்து புலன்களை அடக்கிய சத்ருக்நனும் அவனால் ஆசையுடன் அழைத்துச் செல்லப்பட்டான் - என்றும், ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா துர்லபம்ய உபாஸதே ஹஸ்தஸ்த்தமுதகம் த்யக்த்வா கநஸ் தமபி வாஞ்சதி – தனக்கு மிகவும் எளிதாக அண்டக்கூடியபடி உள்ள ஆசார்யனை விடுத்து, அடைவதற்கு மிகவும் கடினமாக உள்ள பகவானை அண்ட எண்ணுதல் என்பது, கைகளில் உள்ள தண்ணீரைக் கண்களை மூடியபடி கீழே தெளித்து ஆகாயத்தில் உள்ள நீரை எதிர்பார்ப்பத்து போன்றதாகும் - என்றும் கூறுவதைக் காண்க. இதே கருத்தை ஞானஸாரத்தில் (33) - எட்டவிருந்த குருவை யிறையன்றென்று விட்டோர் பரனை விருப்புதல் பொட்டெனத் தன் கண் செம்பளித்திருந்து கைத்துருத்தி நீர் தூவி

அம்புதத்தைப் பார்த்திருப்பானற்று – என்று ஸ்வாமி அருளாளப்பெருமா ளெம்பெருமானார் அருளிச்செய்தது காண்க.

76. நின்ற வண்கீர்த்தியும் நீள்புனலும் நிறை வேங்கடப் பொற்
குன்றமும் வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும்
உன்தனக்கு எத்தனை இன்பந் தரும் உன் இணைமலர்த்தாள்
என்தனக்கும் அது இராமாநுச இவை ஈந்தருளே

விளக்கவுரை - மிகவும் அழகியதாகவும், என்றும் பாய்ந்தபடி உள்ள அருவிகள் கொண்டதாகவும், அனைத்திலும் நிறைவு கொண்டதாகவும் உள்ள திருமலை; நித்யஸூரிகளின் இருப்பிடமாக உள்ள ஸ்ரீவைகுண்டம் என்ற பரமபதம்; தேவர்கள் வந்து சூழ்ந்து ஏத்தும்படியாகக் கண்வளரும் திருபாற்கடல் ஆகிய இந்த மூன்றும் உமக்கு (எம்பெருமானார்க்கு) எத்தனை ஆனந்தம் அளிக்கின்றன? இப்படிப்பட்ட உமது அழகான திருவடித்தாமரைகள், உமக்கு இந்த திவ்யதேசங்கள் மூலம் கிட்டும் ஆனந்தத்தை எனக்கு அளிக்கின்றன. எம்பெருமானாரே! உமக்குப் புருஷார்த்தம் இந்த மூன்று திவ்யதேசம் என்பது போன்று, எனக்கு உனது திருவடிகள் உள்ளன. ஆகவே அவற்றை எனக்கு அருளவேண்டும்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டில் பும்ஸா சித்த அபஹாரியான ஸர்வேச்வரன் ஸமஸ்த திவ்ய பூஷணங்களாலும் ஸமஸ்த திவ்யாயுதங்களாலும் ஒப்புவித்துக் கொண்டு வந்து என் முன்னே நின்று, "உன்னை நான் விடுகிறிலேன்" என்று பலாத்காரம் பண்ணினானாகிலும், "குணைர் தாஸ்யம் உபாகத:" என்றாப்போலே தேவரீருடைய கல்யாணகுணங்களிலே ஈடுபட்ட அடியேனை அக்குணங்கள் தானே தேவரீருக்கு அநந்யார்ஹனாம்படி பண்ணிற்றனவென்று விண்ணப்பம் செய்யக் கேட்டருளி, "இவருடைய பாவபந்த மெங்ஙனே" என்று மிகவுமுகந்து, "இவருக்கு நாம் எத்தைச் செய்வோம்" மென்னுமிடம் தோற்ற, அவரெழுந்தருளியிருக்கிறபடியைக் கடாக்ஷித்து, "தேவரீருக்கு அபிமதங்களாய் இருந்துள்ள 'தண்ணார் வேங்கடமும்', 'வைகுந்த மாநகரும்', திருப்பாற்கடலும் யாதொரு ஆநந்தத்தை விளைக்குமோ அப்படியே, தேவரீருடைய பரமபோக்யமான திருவடிகளும் அடியேனுக்கு அவ்வளவாநந்தத்தை யுண்டாக்கும். ஆகையாலே **அவற்றைத் தந்தருள வேணும்" என்று அபேக்ஷித்தருளுகிறார்** இப்பாட்டில்.

விளக்கம் – ஆண்களுடைய கண்களையும் உள்ளத்தையும் கூடக் கவருபவனாக உள்ள ஸர்வேச்வரன், அனைத்துவிதமான திவ்ய ஆபரணங்கள் மற்றும் அனைத்துவிதமான திவ்ய ஆயுதங்கள் ஆகியவற்றைத் தரித்தபடி என் முன்பு வந்து நின்று, "உன்னை நான் விடமாட்டேன்" என்று உரைத்தாலும், இராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் – குணைர் தாஸ்யம் உபாகத: - (லக்ஷ்மணன் கூறுவது) இராமனுடைய குணங்களுக்கு நான் அடிமை - என்பதற்கு ஏற்ப உம்முடைய திருக்கல்யாணகுணங்களில் ஈடுபட்ட என்னை, அந்தக் குணங்கள் தாங்களாகவே என்னிடம் வந்து, உமக்கு அல்லாமல் வேறு யாருக்கும் நான் அடிமை அல்லன் என்று கூறும்படியாகக் செய்தன என்று கடந்த பாசுரத்தில் அருளிச்செய்தார். இப்படியாகத் திருவரங்கத்தமுதனார் விண்ணப்பம் செய்ததைக் கேட்டருளிய எம்பெருமானார், "இவருடைய ஈடுபாடுதான் என்னே! இவருக்கு நான் எதனைச் செய்வது" என்று மகிழ்ந்து தனது திருவுள்ளத்தில் சிந்தித்ததைக் கூறினார். இப்படியாகத் தான் உள்ள இடத்திற்கு வந்து தன்னைக் கடாக்ஷித்த எம்பெருமானாரிடம் அமுதனார், "உமக்கு மிகவும் விருப்பமான திருவாய்மொழி (1-8-3) – தண்ணார் வேங்கடம் - என்றும், திருவாய்மொழி (4-10-11) – வைகுந்த மாநகர் – என்றும், திருப்பாற்கடல் போன்றும் உள்ளவை, எத்தகைய ஆனந்தத்தை ஏற்படுத்துமோ அது போன்று, உம்முடைய எல்லையற்ற இனிமையான திருவடிகளும் எனக்கு அத்தகைய ஆனந்தத்தை ஏற்படுத்தும். ஆகவே அவற்றை எனக்கு அளித்தருளவேண்டும்", என்று வேண்டி நிற்கிறார்.

வ்யாக்யானம் – (நின்ற வண் கீர்த்தியும்) "ஒழிவில் காலம் எல்லாம் உடனே மன்னி" என்கிறபடியே காதாசித்கமன்றிக்கே கால த்ரய வர்த்தியாய் அழகியதாய் "தெழிகுரலருவித் திருவேங்கடம்" என்றும், "பரன் சென்று சேர் திருவேங்கடமாமலை" என்றும், "வேங்கடமே வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு" என்றும், "வில்லார்மலி வேங்கடமாமலை" என்றும் ஆழ்வார்கள் ஈடுபடுகைக்குடலான குணவத்தா ப்ரதையையும். (நீள் புனலும்) "வார் புனலந்தணருவி வடதிருவேங்கடம்" என்றும், "குளிரருவி வேங்கடம்" என்றும், "செங்கயல் திளைக்குஞ்சுனைத் திருவேங்கடம்" என்றும் சொல்லுகிறபடி அநவரதம் பாயா நின்றுள்ள நீண்ட திருவருவிகளும். (நிறைவேங்கடப் பொற்குன்றமும்) இவையிரண்டாலும் நிறைந்திருப்பதாய், "தெள்ளியார் வணங்கும் மலை திருவேங்கடம்"

என்கிறபடியே திருவேங்கடம் என்னும் திருநாமத்தையுடைத்தாய், "எம்பெருமான் பொன்மலை" என்கிறபடியே அத்யந்த ஸ்ப்ருஹணீயமாய், "பரன் சென்று சேர் திருவேங்கடம்" என்கிறபடியே வகுத்த சேஷியான ஸர்வேச்வரன் உகந்தருளின நிலமான திருமலையும்.

விளக்கம் – (நின்ற வண் கீர்த்தியும்) - திருவாய்மொழி (3-3-1) – ஒழிவில் காலம் எல்லாம் உடனாய் மன்னி – என்பதற்கு ஏற்ப ஏதோ ஒரு நேரத்தில் மட்டும் அல்லாமல் மூன்று காலங்களிலும் இருக்கின்ற அழகுள்ளதும், திருவாய்மொழி (3-3-1) – தெழிகுரலருவித் திருவேங்கடம் – என்றும், திருவாய்மொழி (3-3-8) – பரன் சென்றுசேர் திருவேங்கடமாமலை – என்றும், நான்முகன் திருவந்தாதி (45) – வேங்கடமே வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு – என்றும், திருவாய்மொழி (1-10-10) – வில்லார்மலி வேங்கடமாமலை - என்றும் ஆழ்வார்கள் ஈடுபடுவதற்கு காரணமாக உள்ளதான திருக்குணங்களுடைய புகழைக் கொண்டதும், (நீள்புனலும்) - திருவாய்மொழி (3-5-8) – வார்புனல் அந்தணருவி வடதிருவேங்கடம் – என்றும், நாச்சியார் திருமொழி (8-3) – குளிரருவி வேங்கடம் – என்றும், பெரிய திருமொழி (1-8-1) – செங்கயல் திளைக்கும் சுனைத் திருவேங்கடம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப எப்போதும் பாய்ந்தபடி உள்ள நீண்ட நெடிய அருவிகளும். (நிறைவேங்கடப் பொற்குன்றமும்) - இவை இரண்டாலும் நிறைந்துள்ளதாக, பெரிய திருமொழி (1-8-2) – தெள்ளியார் வணங்கும் மலை திருவேங்கடம் – என்பதற்கு ஏற்ப திருவேங்கடம் என்ற திருநாமம் கொண்டதாக, பெருமாள் திருமொழி (4-10) – எம்பெருமான் பொன்மலை - என்பதற்கு ஏற்ப எல்லையின்றி விரும்பப்படுவதாக, திருவாய்மொழி (3-3-8) – பரன் சென்று சேர் திருவேங்கடம் - என்பதற்கு ஏற்ப நமக்கு இயல்பாகவே எஜமானனாக உள்ள ஸர்வேச்வரன் மிகவும் விருப்பத்துடன் எழுந்தருளியுள்ளதான திருமலை.

வ்யாக்யானம் – (வைகுந்த நாடும்) "யத்ர பூர்வே ஸாத்த்யாஸ் ஸந்தி தேவா:" என்றும், "விஷ்ணோர் யத் பரமம் பதம்" என்றும், "தேவாநாம் பூரயோத்வா" என்றும், "அத்யர்க்காநல தீப்தம் தத் ஸ்த்தானம் விஷ்ணோர் மஹாத்மந:" என்றும், "வைகுண்டேது பரே லோகே ஸ்ரீயா ஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹா" என்றும் சொல்லுகிறபடியே அந்தமில் பேரின்பத்தடியாரான

நித்யஸூரிகளுக்கு இருப்பிடமாய், ஸர்வேச்வரனுக்கு போக விபூதியான "நலமந்த மில்லாதோர் நாடா"ய், ஸ்ரீவைகுண்டமென்னும் பேரையுடைத்தான பரமபதமும். (**குலவிய பாற்கடலும்**) "பாற்கடலில் பையத் துயின்ற பரமனடி பாடி" என்கிறபடி ஆச்ரிதரான தேவர்களுடைய கூப்பீடு கேட்பதாக ஸர்வேச்வரன் வந்து கண் வளர்ந்தருளுகிற விடமென்று விசேஷஞ்ஜ ரெல்லாரும் கொண்டாடும்படியா யிருந்துள்ள திருப்பாற்கடலும். **குலவுதல்** – கொண்டாட்டம். இப்படிப்பட்ட உகந்தருளின நிலங்கள்.

விளக்கம் – (**வைகுந்த நாடும்**) புருஷ ஸூக்தம் – யத்ர பூர்வே ஸாத்த்யாஸ் ஸந்தி தேவா: - எங்கு பழையவர்களாகிய நித்யஸூரிகள் வசிக்கிறார்களோ – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-4-38) – விஷ்ணோர் யத் பரமம் பதம் – என்றும், தேவாநாம்பூ: அயோத்யா – என்றும், மஹாபாரதம் ஆரண்யபர்வம் - அத்யர்க்காநல தீப்தம் தத் ஸ்தாநம் விஷ்ணோர் மஹாத்மந: - சூரியன், அக்னி முதலான ஒளிவீசும் பொருள்களைக் காட்டிலும் அதிகமான ப்ரகாசம் கொண்டது விஷ்ணுவின் பரமபதம் – என்றும், லைங்க புராணம் – வைகுண்டேது பரேலோகே ஸ்ரீயாஸார்தம் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ்ஸஹ – ஸ்ரீவைகுண்டத்தில் உள்ளவனும், மஹாலக்ஷ்மியுடன் சேர்ந்துள்ளவனும், அனைத்து ஜகத்திற்கும் அதிபதியும் ஆகிய விஷ்ணு அந்த உயர்ந்த லோகத்தில் பாகவதர்களால் சூழப்பட்டு உள்ளான் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அந்தமில் பேரின்பத்து அடியார்களான நித்யஸூரிகளுக்கு இருப்பிடமாகவும், ஸர்வேச்வரனுக்கு இன்பம் அளிக்கும் இடமான திருவாய்மொழி (2-8-4) – நலம் அந்தமில்லாதோர் நாடு – என்னும்படி உள்ளதும், ஸ்ரீவைகுண்டம் என்ற திருநாமம் கொண்டதும் ஆகிய பரமபதம். (குலவிய பாற்கடலும்) - திருப்பாவை (2) – பாற்கடலுள் பையத்துயின்ற பரமனடி பாடி – என்பதற்கு ஏற்ப தன்னை அண்டி நிற்கும் தேவர்களுடைய அபயக்குரல் கேட்கும்விதமாக ஸர்வேச்வரன் வந்து திருக்கண்கள் வளர்ந்தருளும் இடம் என்று சிறந்த ஞானம் கொண்ட அனைவரும் கொண்டாடும்படி உள்ள திருப்பாற்கடல். இப்படியாக ஸர்வேச்வரனால் விரும்பப்படும் இடங்கள்.

வ்யாக்யானம் – (**உன்றனக்கெத்தனை இன்பம் தரும்**) "ஆநந்தநிலயே சேஷ தல்பே வேங்கட பூதரே"இத்யாதிகளிலும், "ஏஷ நாராயணஸ் ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந நாக பர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம்புரிம" இத்யாதிகளிலும், கௌஷீதகீ

ப்ராஹ்மணத்தில் பர்யங்க வித்தையிலும் சொல்லுகிறபடியே திருவேங்கட முடையானுக்கும், திருப்பாற்கடல்நாதனுக்கும், "வான் இளவரசு வைகுந்தக்குட்டனுக்கும்" பர்யங்கமாயிருக்கிற தேவரீருக்கு எவ்வளவாநந்தத்தை கொடுக்கும். இப்படி அவ்வவ ஸ்தலங்கள்தோறும் ஸ்ரீயபதியினுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தாலே வந்த ஆநந்தத்தைமறியுமவர் இவரொருவருமேயிறே. "ரமமணாவ நேத்ராய:" என்று இவர் தம்முடைய அவதாரத்துக்கு பூர்வாவதாரமான இளையபெருமாளுக்கு அந்த திவ்ய தம்பதிகளுக்குண்டான ஆநந்தத்தோடொத்த ஆநந்தமுண்டாய்த்தென்று சொன்னானிறே ரிஷியும்.

விளக்கம் – (உன்தனக்கு எத்தனை இன்பம் தரும்) - ஆநந்தநிலயே சேஷ தல்பே வேங்கட பூதரே - என்பவற்றிலும், ஸ்ரீஹரிவம்சம் – ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: நாகபர்யங்கம் உத்ஸ்ருஜ்ய ஹி ஆகதோ மதுராம்புரீம் – திருப்பாற்கடலில் ஆதிசேஷன் என்னும் படுக்கையை விட்டு எழுந்த நாராயணன், மதுராவில் அவதரித்தான் – என்றும், கௌஷீதகீ ப்ராஹ்மணத்தில் உள்ள பர்யங்க வித்யையிலும் கூறுவதற்கு ஏற்ப திருவேங்கடமுடையானுக்கும், திருப்பாற்கடல்நாதனுக்கும், பெரியாழ்வார் திருமொழி (3-6-3) – வானிளவரசு வைகுந்தக்குட்டன் - என்பதான ஸ்ரீவைகுண்டத்தில் உள்ளவனுக்கும் படுக்கையாக ஆதிசேஷனாகிய உமக்கு எத்தகைய ஆனந்தத்தை அளிக்கும். இவ்விதம் அந்தத் திவ்யதேசங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள மஹாலக்ஷ்மியின் நாதனாகிய திவ்யமான திருமேனி கொண்டவனுடைய ஆனந்தத்தை அறிபவர் இவர் மட்டுமே ஆவார். இராமாயணம் பாலகாண்டம் (1-1-31) – ரமமாணா வநே த்ரய: - அந்த மூவரும் வனத்தில் மகிழ்ந்தபடி இருந்தனர் - என்று இவருடைய முந்தைய அவதாரமாகிய லக்ஷ்மணனுக்கு, அந்தத் திவ்யதம்பதிகளுக்கு ஏற்பட்ட ஆனந்தத்திற்கு ஈடான ஆனந்தம் ஏற்பட்டது என்று வால்மிகீயும் உரைத்தது காண்க.

வ்யாக்யானம் – (உன்னிணை மலர்த்தாள்) "அநந்தம் ப்ரதமம் ரூபம்" இத்யாதிகளிற்படியே "சுடர் ஒளியாய் நின்ற தன்னுடைய சோதி"யிலே, "வான் இளவரசு வைகுந்தக்குட்டன்" விஷயமாக "நிவாஸ சய்யாஸன பாதுகாம் சுக உபதாந வர்ஷா தபவாரணாதிபி: சரீரபேதை: தவசேஷ தாங்கதை: யதோசிதம் சேஷ இதீரிதே ஜநை:" என்கிறபடியே **அநேக சேஷ வ்ருத்திகளிலும் அந்வயித்து, சேஷன் என்னும் திருநாமத்தையுடையராய்**, "பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:" என்கிறபடியே அவதார தசையிலும் பால்யம் தொடங்கி

பெருமாள் திருத்தொட்டிலோடு இணைத் தொட்டிலிடாதபோது பள்ளி கொண்டருளாதே, அவர் பக்கலிலே அதிவ்யாமுக்தராய், "முஹூர்த்தம் அபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யா விவோத்த்ருதெள" என்று பிரியில் தரியாமையை விண்ணப்பம் செய்து, மஹாரண்யமான தண்டகாரண்யத்திலே சென்று "**அஹம் ஸர்வம் கரிஷ்யாமி**" என்று ப்ரார்த்தநா பூர்வகமாக வழுவிலாவடிமைகள் செய்து, நம்பி மூத்தபிரானய் அவதரித்த தசையிலும் அவனை அநுவர்த்தித்துக் கொண்டு போந்து, அங்குத்தைக்கு அந்தரங்கராயிருந்துள்ள தேவரீருடைய பாவநத்வ போக்யத்வங்களுக்கு ஒன்றுக்கொன்று போலியாய்ச் சேர்த்தியழகையுமுடைத்தாய் புஷ்பஹாஸ ஸுகுமாரமாய் **பரமபோக்யமாயிருந்துள்ள திருவடிகள்**.

விளக்கம் - (உன் இணை மலர்த்தாள்) – யாதவாசல மாஹாத்ம்யம் – அநந்த: ப்ரதமம் ரூபம் – முதலில் ஆதிசேஷனாக இருந்த ரூபம் – என்பதற்கு ஏற்ப, திருவாய்மொழி (3-10-5) – சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியில் – என்னும்படி, பெரியாழ்வார் திருமொழி (3-6-3) – வானிளவரசு வைகுந்தக்குட்டன் - என்னும்படியான ஸ்ரீவைகுண்டநாதன் விஷயமாக, நிவாஸ சய்யாஸன பாதுகாம் சுக உபதாந வர்ஷா தபவாரணாதிபி: சரீரபேதை: தவசேஷ தாங்கதை: யதோசிதம் சேஷ இதீரிதே ஜநை: - ஸர்வேச்வரனாகிய நீ எங்கு சென்றாலும் சூரியனின் வெப்பமும், மழையும் மேலே விழாமல் தடுக்கும் குடையாகவும்; நீ நிற்கும்போதும், நடக்கும்போதும் பாதுகைகளாகவும்; கணவளரும்போது படுக்கையாகவும்; இப்படியாகச் சூழ்நிலைக்குத் தக்கவாறு தனது திருமேனியை மாற்றிக் கொண்டு பணி செய்யும் இயல்புடைய ஆதிசேஷன் - என்பதற்கு ஏற்ப அனைத்துவிதமான கைங்கர்யங்களில் நிலைநின்று "சேஷன்" என்ற திருநாமத்தை அடைந்தவராகவும். இராமாயணம் பாலகாண்டம் – பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த: - சிறுவயது தொடங்கியே இராமனிடம் லக்ஷ்மணன் மிகவும் ப்ரியத்துடன் இருந்தான் – என்பதற்கு ஏற்ப லக்ஷ்மணனாக அவதரித்தபோது பால்யம் தொடங்கியே இராமனுடைய திருத்தொட்டிலை விடாமல் அருகிலேயே திருத்தொட்டில் உள்ளபோதிலும் அதில் கிடக்காமல், இராமன் அருகிலேயே நின்றவரும். இராமாயணம் அயோத்யாகாண்டம் (53-31) – முஹூர்த்தம் அபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யா விவோத் த்ருதெள – (லக்ஷ்மணன் இராமனிடம்கூறுவது) உன்னைப் பிரிந்தால் நானும் சீதையும் நீரிலிருந்து வெளியே வந்த மீனைப் போன்று ஒரு முகூர்த்தம் கூட உயிருடன் இருக்கமாட்டோம் - என்று "பிரிந்தால் உயிர் வாழ இயலாது" என்று விண்ணப்பம் செய்து தண்டகாரண்யம் என்ற பெரிய

கானகத்தில் இராமனுடன் சென்று, இராமாயணம் ஆரண்யகாண்டம் – அஹம் ஸர்வம் கரிஷ்யாமி – (லக்ஷ்மணன் கூறுவது) நான் அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்வேன் - என்று ப்ரார்த்தனை செய்து, எந்தவிதமான தோஷமும் காண இயலாதபடியான கைங்கர்யங்கள் செய்து, ஸர்வேச்வரன் மூத்தவனாக அவதரித்த அந்த நிலையிலும், அவனை விடாமல் தொடர்ந்து சென்று அந்தரங்கமாக இருந்தவரும் ஆகிய உம்முடைய பாபங்கள் போக்கும் புனிதத்தன்மை மற்றும் இனிமை ஆகியவற்றினை வெளிப்படுத்தும் புஷ்பம் போன்றும் மென்மையான இனிமை பொருந்திய திருவடிகள்.

வ்யாக்யானம் – (என்றனக்கும் அது) கீழ்ச்சொன்னபடியே அந்தரங்கராய் ஸர்வஜ்ஞராயிருக்கிற தேவரீருக்கு அவ்வவ விஷயங்களிலே எத்தனை ப்ரீதியுண்டு அப்படியே, இவ்வளவும் விமுகனாய் அஜ்ஞநாய்ப் போந்த அடியேனுக்கு ஸ்வ விஷயமாயிருந்துள்ள அவ்வளவாநந்தத்தை யுண்டாக்கும். எம்பெருமானாருடைய ஆநந்தம் ப்ரதம பர்வ விஷயமாகையாலே அரையாறுபட்டு, அமுதனாருடைய ஆநந்தம் சரம பர்வ விஷயமாகையாலே கரை புரண்டு காணுமிருப்பது. **(இராமாநுசா)** எம்பெருமானாரே **(இவையீந்தருளே)** எனக்கு புருஷார்த்தம் தேவரீருடைய திருவடிகளேயாய்விட்டபின்பு அவற்றை தேவரீர் தாமே பரகத ஸ்வீகாரமாகக் கொடுத்தருள வேணும். **ஈதல் –** கொடுத்தல். "எம்மா வீட்டுத் திறமும் செப்பம் நின் செம்மா பாதபற்புத் தலைசேர்த்து ஒல்லைக் கைம்மா துன்பம் கடிந்த பிரானே அம்மா வடியேன் வேண்டுவதீதே" என்று ப்ரதம பர்வத்தில் நம்மாழ்வாரும் இப்படியே அபேக்ஷித்து அருளினாரிறே.

விளக்கம் – (என்றனக்கும் அது) – இதுவரை உரைத்தபடி அந்தரங்கமான அடிமையாகவும், அனைத்தும் அறிந்தவராகவும் உள்ள உமக்கு அந்த ஸர்வேச்வரன் விஷயங்களில் எத்தனை ப்ரீதி உள்ளதோ அதே போன்று, ஏதும் அறியாதபடி உள்ள எனக்கும் அந்தத் திருவடிகள் விஷயத்தில் அதே அளவு ஆனந்தம் ஏற்படும். எம்பெருமானார் ஆனந்தம் அடைவது என்பது முதல் நிலையான பகவத் விஷயத்தில் என்பதால் அளவுபட்டு இருக்கும், ஆனால் அமுதனாருடைய ஆனந்தம் என்பது இறுதி நிலையைக் குறித்து என்பதால் கடைபுரண்டு ஓடும்படி உள்ளது. (இராமாநுசா) - எம்பெருமானாரே. (இவை ஈந்து அருளே) - எனக்கு ஏற்ற புருஷார்த்தம் என்பது உம்முடைய திருவடிகளே என்று உணர்ந்த பின்னர் அவற்றை நீரே எனக்கு அளித்தருள

வேண்டும். திருவாய்மொழி (2-9-1) - எம்மா வீட்டுத் திறமும் செப்பம் நின் செம்மா பாதபற்புத் தலைசேர்த்து ஒல்லைக் கைம்மா துன்பம் கடிந்த பிரானே அம்மா வடியேன் வேண்டுவதீதே - எப்படிப்பட்ட உயர்ந்த மோக்ஷம் குறித்தும் நாங்கள் உரைக்கமாட்டோம். உன்னுடைய சிவந்த, மேன்மையுடன் கூடிய திருவடித்தாமரைகளை எங்கள் தலைகளில் விரைவாக நீ சேர்ப்பாயாக. நீண்ட துதிக்கை கொண்டதான யானையின் துக்கத்தை நீக்கி உதவி செய்தவனாக, அந்தச் செயல் மூலமே என்னை அடிமை ஆக்கியவனே! அடியேனாகிய நான் எனது ஆத்மஸ்வரூபத்துக்கு ஏற்ற பலனாக வேண்டுவது இது மட்டுமே ஆகும் - என்று முதல் நிலையான பகவத் விஷயம் குறித்து நம்மாழ்வாரும் இப்படியே ப்ரார்த்தித்தது காண்க.

77. ஈந்தனன் ஈயாத இன்னருள் எண்ணில் மறைக்குறும்பைப்
பாய்ந்தனன் அம்மறைப் பல்பொருளால் இப் படியனைத்தும்
ஏய்ந்தனன் கீர்த்தியினால் என் வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன் வண்மை இராமாநுசற்கு என் கருத்தினியே

விளக்கவுரை - இதற்கு முன்பு யாருக்கும் கிட்டாத தனது கருணையை எனக்கு அளித்தார். கடந்த பாசுரத்தில் திருவடிகளை வேண்ட, அதனை எம்பெருமானார் அளித்தவுடன், அதனையே "இன்னருள்" என்று கொண்டாடுகிறார். தனது அருள் மட்டுமே அன்றி ஸர்வேச்வரனின் அருளையும் சேர்த்து அளித்தார். தவறான பொருள்களை வேதங்களுக்கு உணர்த்தி மக்களைத் திசை திருப்பிய பல்வேறு மதங்களை, அந்த வேதத்தில் உள்ள ஆழ்ந்த பொருள் கொண்டு வாதாடி வென்றார். அந்த மதங்களை பாதாள லோகத்தில் தள்ளி விட்டார். இப்படிப்பட்ட சாமர்த்தியம் அவரது தொடர்பு உள்ளவர்களுக்கும் உண்டு என்று கூறும்போது அவரிடம் இந்த திறன் உள்ளதாகவும் கூறவேண்டுமோ? இதன் மூலம் இந்த பூமி முழுவதும் தனது பெரும் புகழைப் பரவச் செய்தார். எல்லையற்ற ஆண்டுகளாக இருந்து வந்த எனது தீயகர்மங்கள் அனைத்தையும் வேருடன் அழித்தார். இத்தனையும் எனக்குச் செய்த எம்பெருமானார், தனது மனத்தில் வேறு என்ன நன்மையைச் சிந்தித்தபடி உள்ளாரோ? (நான் அறிய மாட்டேன்).

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே எம்பெருமானாரைக் குறித்து தேவரீருடைய திருவடிகளை ஸர்வதா அனுபவித்துக்கொண்டு இருக்கும்படி எனக்குத் தந்தருள வேணுமென்ன; அவரும் உகந்தருளி தாம் அபேக்ஷித்தபடியே விலக்ஷணையான க்ருபையைப் பண்ணித் திருவடிகளைக் கொடுக்க க்ருதார்த்தராய், வேதப்ரதாரகரான குத்ருஷ்டிகளை ப்ரமாண தமமான அந்த வேதார்த்தங்களைக் கொண்டே நிரஸித்தும், பூமிப்பரப்பெல்லாம் தம்முடைய கீர்த்தியை எங்குமொக்க வ்யாபிப்பித்தும், என்னுடைய ப்ராப்தி ப்ரதிபந்தக கர்மங்களை வாஸனையோடே ஓட்டியும், **இப்படி பரமோதாரரான எம்பெருமானார், எனக்கு இன்னமும் எத்தை உபகரித்தருள வேணுமென்று நினைத்திருக்கிறாரோ வென்கிறார்**.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் எம்பெருமானாரிடம், "உம்முடைய திருவடிகளை அடியேன் எப்போதும் அனுபவித்துக்கொண்டு இருக்கும்படிச் செய்தருள வேண்டும்", என்று விண்ணப்பித்தார். எம்பெருமானாரும் அதனைக் கேட்டு மகிழ்ந்து, இவர் விரும்பியபடியே மேன்மையான கருணையைப் பொழிந்து, தனது திருவடிகளை அளித்தார். இதன் மூலம் செய்யவேண்டியதைச் செய்தவராக, "வேதங்களுக்கு முரணாகப் பொருள் உரைக்கின்ற அனைத்து மதங்களையும், ப்ரமணமாகத் திகழும் அந்த வேதங்களைக் கொண்டே தள்ளி, இந்தப் பூமி முழுவதும் தனது கீர்த்தியை ஒரே போன்று நிலைநாட்டியும், நான் எனது இலக்கை அடைவதற்குத் தடையாக உள்ள கர்மங்கள் அனைத்தையும் அவற்றின் வாசனையுடன் விலக்கியும், இப்படியாகப் பல உபகாரங்களை எனக்கு எம்பெருமானார் செய்தார். எனக்கு மேலும் எதனை அளித்து உதவ எண்ணியிருக்கிறாரோ?", என்கிறார்.

வ்யாக்யானம் – (ஈயாத) – "மந்த்ரம் யத்நேந கோபயேத்" என்றாப்போலே "அஹங்கார யுக்தாச்சைமே" என்று சொல்லப்படுகிற ஹர விரிஞ்சாதிகளுக்கும் கூடக் கொடுக்க வொண்ணாதபடி பேணிக் கொண்டு போந்த. (**இன்னருள்**) விலக்ஷணையான தம்முடைய க்ருபையை. நிர்ஹேதுக பரமக்ருபையை என்றபடி. (**ஈந்தனன்**) கொடுத்தார். கீழ்ப்பாட்டில் இவர், தேவரீர் திருவடிகளைக் கொடுத்தருள வேணுமென்று ப்ரார்த்தித்தபடியே அவர் கொடுக்கையாலே அதுக்கு மூலம் அவருடைய க்ருபா குணமென்று அனுஸந்தித்து, "**இன்னருள்**" என்று அத்தைக் கொண்டாடுகிறார் காணும். **ஈந்தனன்** – ஈன்றனன். (**இன்னருள்**) ஸர்வேச்வரனுடைய அருளையும் இவருடைய அருளையும் சேரப்பிடித்துப் பார்க்குமளவில் இவருடைய அருளுக்குண்டான தன்னேற்றம் வடிவிலே தொடை

கொள்ளலாம்படி காணும் இதினுடைய போக்யதையிருப்பது. ஆச்ரயத்துக்குத் தகுதியாயிறே அதினுடைய குணங்களுமிருப்பது.

விளக்கம் – (ஈந்தனன்) – மந்த்ரம் யத்நேந கோபயேத் – இந்த மந்த்ரத்தை யாருக்கும் வெளியிடலாகாது - என்பதற்கு ஏற்ப, அஹங்கார யுக்தாச்சைமே - என்று கூறப்படுகின்ற சிவன், நான்முகன் போன்றவர்களுக்குக் கூட அளிக்காமல் பாதுகாப்பாக வைத்துள்ள. (இன்னருள்) - மிகவும் மேன்மையாக தனது க்ருபையை. எந்தவிதமான காரணமும் இன்றி வெளிப்படும் க்ருபை. (ஈந்தனன்) - அளித்தார். கடந்த பாசுரத்தில், "உம்முடைய திருவடிகளை எனக்கு அளித்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார். அதனை ஏற்றுக்கொண்டு எம்பெருமானாரும் அளித்தார். ஆக இவ்விதம் அளித்ததற்குக் காரணம் அவருடைய உயர்ந்த க்ருபையே ஆகும் என்று எண்ணியபடி அதனை "இன்னருள்" என்று கொண்டாடுகிறார். (இன்னருள்) - ஸர்வேச்வரனுடைய அருள் மற்றும் எம்பெருமானாருடைய அருள் ஆகிய இரண்டையும் அளவிட்டுக் காணும்போது, எம்பெருமானாருடைய அருளுக்கு உரியதான ஏற்றம் என்பது, அதன் ரூபத்தில் வெளிப்படும்படி அதன் இனிமை உள்ளது. அதனை அண்டி நிற்பதற்கு ஏற்றபடியே அதன் குணங்களும் உள்ளன.

வ்யாக்யானம் – (எண்ணில் மறைக்குறும்பை பாய்ந்தனன் அம்மறைப் பல்பொருளால்) எண்ணிறைந்த மறைக்குறும்புண்டு; வேதத்தை மூலையடியே நடத்தக் கடவ குத்ருஷ்டி மதங்கள். தொகையிட்டுச் சொல்லவொண்ணாதபடி அஸங்க்யேயராய் வேதப்ரதாரகராய் ப்ரமித ப்ரமாண ப்ரமேய ப்ரமாத்ரு ஸ்வரூபராயிருந்துள்ள குத்ருஷ்டி மத நிஷ்டராயென்றபடி. "அநந்தாவை வேதா:" என்கையாலே **எண்ணிறந்த மறை**யென்று யோஜிக்கவுமாம்.

விளக்கம் – (எண்ணில் மறைக்குறும்பை பாய்ந்தனன் அம்மறைப் பல்பொருளால்) - வேதத்தை இந்த உலகிலிருந்து மறைத்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் செயலாற்றும் பல மதங்கள் உள்ளன. அதாவது எண்ணிக்கையிட்டு உரைக்க இயலாதபடி எண்ணற்றவையாக, வேதங்களுக்குப் புறம்பாகப் பொருள் உரைப்பவையாக, மயக்கத்தில் உள்ள "ப்ரமாணம் – ப்ரமேயம் - அறிபவன்" என்பதையே தங்கள் ஸ்வரூபமாகக்

கொண்டவையாக உள்ள மற்ற மதங்கள். அநந்தாவை வேதா: - எண்ணற்ற வேதங்கள் - என்பதற்கு ஏற்ப எண்ணற்ற வேதங்கள் என்றும் பொருள் கூறலாம்.

வ்யாக்யானம் – (அம்மறைப் பொருளால்) "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்மம்", "ஏகம் ஏவ அத்விதீயம்", "யத்ர த்வஸ்ய ஸர்வாத்ம ஏவ ஆபூத் தத் கேந கம் பச்யேத்", "ந ஹ நாநாஸ்தி கிஞ்சந", "தத் கேந கம் விஜாநீயாத்", "தத் த்வம் அஸி", "ப்ரஹ்ம வேத ப்ரஹ்ம ஏவ பவதி", "ச ஏதாந் ப்ரஹ்ம கமயதி" இத்யாதி ச்ருதிகளுக்கு சுத்தாபேத ப்ரதிபாதநமே பொருளென்று குறும்பு சொல்லுகிற அந்த குத்ருஷ்டி மத நிஷ்டரை யடங்கலும், அகிஞ்சித்ஜ்ஞனாய் கர்மவச்யனான சேதநனுக்கும், ஸர்வஜ்ஞனாய் அகர்மவச்யனான ஈச்வரனுக்கும் ஸ்வரூபைக்ய ப்ரதிபாதநத்திலே அவற்றுக்கு தாத்பர்யம் சொல்லவொண்ணாமையாலே விசிஷ்டைக்யமே அவற்றினுடைய தாத்பர்ய விஷயீ பூதார்த்தமென்று ஸ்வரூபைக்ய ப்ரதிபாதநத்துக்கு அத்யந்த ப்ரதிகூலங்களாயும், விசிஷ்டைக்ய ப்ரதிபாதாநத்துக்கு அத்யந்தாநுகூலங்களாயு மிருந்துள்ள, "போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா", "த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாய ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே தயோரந்ய: பிப்பலம் ஸ்வாது அத்தி அநச்நந் அந்யோ அபிசாகசீதி", "இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரன் ஏதத் ஸாமகாயந்நாஸ்தே", "யஸ்யாத்மா சரீரம் யஸ்ய ப்ருத்வீ சரீரம்" இத்யாதியான பேத ச்ருதிகளையும், கடக ச்ருதிகளையும் உபந்யஸித்தும் பஹுமுகமாக ப்ரஸங்கித்தும் அந்த ச்ருதிகளுடைய தாத்பர்யங்களைக் கொண்டு **தானே (பாய்ந்தனன்)** அந்த ஸ்தலத்தில் நின்றும் பலாயநம் பண்ணுவித்தார். **பாய்தல்** – உதைத்தல். "ததந்ய மத துர்மத ஜ்வலித சேதஸாம் வாதிநாம் சிரஸ்ஸு நிஹிதம் மயா பதம் அதக்ஷிணம் லக்ஷ்யதாம்" என்கிறபடியே அச்செயல்களெல்லாம் அவருடைய ஸம்பந்திகளுக்குங்கூட வுண்டாகக் கடவனவாகையாலே அவருக்குண்டாகச் சொல்ல வேண்டாவிறே.

விளக்கம் – (அம்மறைப் பொருளால்) - ஸர்வம் கல்விதம் ப்ரஹ்மம் – இவை அனைத்தும் ப்ரஹ்மமே – என்றும், ஏகம் ஏவ அத்விதீயம் – இரண்டாவது இன்றி இருக்கின்ற ஒன்று – என்றும், ப்ருஹத் உபநிஷத் - யத்ர த்வஸ்ய ஸர்வாத்ம ஏவ ஆபூத் தத் கேந கம் பச்யேத் – எப்போது அனைத்தும் ஆத்மா என்றாகிவிட்டதோ அதன் பின்னர் யார் எதன் மூலம் யாரைக் காண்பான் – என்றும், ந ஹ நாநாஸ்தி கிஞ்சந – இந்தப் ப்ரஹ்மத்திடம் பேதம் இல்லை – என்றும், ப்ருஹத் உபநிஷத் - தத் கேந க விஜாநீயாத் – அதனை எதைக்

கொண்டு அறிவது – என்றும், சாந்தோக்ய உபநிஷத் - தத் த்வம் அஸி – நீயே அதுவாகிறாய் – என்றும், ப்ரஹ்ம வேத ப்ரஹ்ம ஏவ பவதி – ப்ரஹ்மத்தை அறிந்தவன் ப்ரஹ்மத்திடமே செல்கிறான் – என்றும் , ச ஏதாந் ப்ரஹ்ம கமயதி – அவன் ப்ரஹ்மத்திடம் செல்கிறான் – என்றும் உள்ள ச்ருதி வரிகளுக்கு "ஜீவாத்மா – பரமாத்மா என்னும் வேறுபாடு இல்லை என்பதே பொருள்" என்று தாழ்ந்த பொருளை உரைக்கின்ற மதங்களில் ஈடுபட்டு நிற்பவர்கள் அனைவரும், எந்தவிதமான கைம்முதலும் இன்றி கர்மத்தின் வசப்பட்டுள்ள சேதநன் மற்றும் கர்மங்களின் வசப்படாமல் உள்ள ஈச்வரன் ஆகிய இருவருக்கும் ஸ்வரூப ஐக்யத்தை உரைத்தபடி உள்ளனர். ஆனால் அதற்கான காரணத்தையும், ப்ரமாணத்தையும் அவர்களால் சரிவர நிரூபிக்க இயலவில்லை. இப்படி உள்ளபோது, சேதநன் மற்றும் ஈச்வரன் ஆகியவர்களுடைய ஐக்யம் என்பது "சரீரம் – சரீரி" என்பது போன்ற வேறுபட்ட ஐக்யம் என்று உரைத்து, இப்படிப்பட்ட வேறுபட்ட ஐக்யத்தை உணர்த்தவல்லவையும், இந்த வேறுபட்ட ஐக்யத்தை மறுக்கும்விதமாக உள்ளவையும் ஆகிய பேதச்ருதிகள் மற்றும் அபேதச்ருதிகளை ச்வேதாஸ்வதர உபநிஷத் (1-12) – போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா – அனுபவிப்பவன், அனுபவிக்கப்படும் பொருள், அனுபவிக்கும்படிச் செய்பவன் – என்றும், முண்டக உபநிஷத் – த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாய ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே தயோரந்ய: பிப்பலம் ஸ்வாது அத்தி அநச்நந் அந்யோ அபிசாகசீதி – ஒரு மரத்தில் (சரீரத்தில்) இரண்டு பறவைகள் உள்ளன. அவற்றில் ஒன்று அத்திப்பழங்களை (கர்மபலன்கள்) உண்கிறது, மற்றொன்று அதனைப் பார்த்தபடி உள்ளது – என்றும், தைத்திரீயம் (2-10-5) – இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரன் ஏதத் ஸாமகாயந்நாஸ்தே – ப்ரஹ்மத்தை அடைந்து தனது விருப்பதிற்கு ஏற்ப ரூபங்களை எடுத்தபடி அனைத்து இடத்திலும் ஸஞ்சரிக்கிறான் – என்றும், யஸ்ய ஆத்மா சரீரம் யஸ்ய ப்ருதிவீ சரீரம் – யாருக்கு இந்த ஆத்மா சரீரமோ, யாருக்கு இந்த ப்ருதிவி சரீரமோ - என்றும் விளக்கியருளினார். மேலும் அவற்றைப் பலவிதமாக வெளிப்படுத்தி, அந்த ச்ருதிகளின் தாத்பர்யம் மூலம் தானாகவே, (பாய்ந்தனன்) - அந்த மதங்கள் அனைத்தையும் வேதங்களின் இடத்தில் நின்று தள்ளினார். யதிராஜ ஸப்ததி (41) - யதீச்வர ஸரஸ்வதீ ஸுரபித ஆசயாநாம் ஸதாம் வஹாமி சரணாம்புஜம் ப்ரணதி சாலிநா மௌளிநா ததந்ய மத துர்மத ஜ்வலித சேதஸாம் வாதிநாம் சிரஸ்ஸு நிஹிதம் மயா பதம் அதக்ஷிணம் லக்ஷ்யதாம் - இராமாநுஜரின் உயர்ந்த நூல்களை எப்போதும் படித்தபடி உள்ளவர்களின் மனம் என்பது நறுமணம் வீசியபடியே இருக்கும். அப்படிப்பட்ட பெரியவர்களின் திருவடித் தாமரைகளில் நான் எப்போதும்

எனது தலையை வணங்கியபடியே வைத்துள்ளேன். ஆனால் அவருடைய சிந்தனைகளுக்கு மாறாக உள்ளவர்களும், மற்ற மதத்தின் மூலம் வந்த தீயகர்வம் காரணமாக எரியும் மனம் உடையவர்களும் ஆகியவர்களின் தலைகளில் எனது இடது கால் வைக்கப்படுவதைக் காணலாம் – என்பதற்கு ஏற்ப அந்தச் செயல்கள் அனைத்தும் அவருடைய ஸம்பந்தம் பெற்றவர்களுக்குக் கூட ஏற்படும்போது, அவருக்கு இருப்பதைக் கூறவும் வேண்டுமோ?

வ்யாக்யானம் – (இப்படியனைத்து மே**ய்ந்தனன் கீர்த்தியினால்**) இந்தப் பூமிப் பரப்பெல்லாம் கட்டடங்க தம்முடைய குணவத்தா ப்ரதையாலே ஆக்ரமித்தார். **ஏய்தல்** – பொருந்துதல். தம்முடைய நியமனத்தை சிரஸா வஹிக்கும்படி வ்யாபித்தாரென்றபடி. (**என் வினைகளை வேர் பறியக் காய்ந்தனன்**) அநாதிகாலமே தொடங்கி எம்பெருமானாருடைய விஷயீகார பாத்ரபூதனாமளவும் நான் தீரக் கழியச் செய்த அக்ருத்ய கரணாதிகளை ஸமூலோந்மூலநம் பண்ணி நிவர்த்திப்பித்தார். **காய்தல்** – கடிதல். வேர் கிடந்தால் திரியட்டும் அங்குரிக்குமென்னும் அதிசங்கையால் அத்தோடே கூட அவற்றைப் பிடுங்கிப் போட்டாரென்றபடி. இவற்றிலே இந்தச் செடி சிலநாளிருந்து போய்த்தென்று தெரியாதபடி பண்ணினாரென்று வித்தராகிறார் காணும். "சும்மனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே" என்றும், "வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ கானோவொருங்கிற்று கண்டிலமால்" என்றுஞ் சொல்லுகிறபடியே பண்ணியருளினாரென்றபடி. "இப்படியனைத்தும் **மேய்ந்த வண் கீர்த்தியினார்**" என்ற பாடமானபோது, பூமியிலே எங்குமொக்க வ்யாபித்து நிற்பதாய் ஸகல புருஷார்த்த ப்ரதத்வ ரூப ஔதார்யத்தையுடைத்தான கீர்த்தியாலே என்னுடைய துஷ்கர்மங்களை வாஸனையோடே யோட்டினாரென்று பொருளாகக் கடவது. அதாவது, இவரோடு அந்வயமுடையானொருவனன்றோ இவன் என்று, துஷ்கர்மங்களெல்லாம் தன்னடையே விட்டுப் போகை.

விளக்கம் – (இப்படியனைத்து மே**ய்ந்தனன் கீர்த்தியினால்**) - இந்தப் பூமி முழுவதும் தனது குணங்கள் மூலம் ஆக்கிரமித்தார். அதாவது தன்னுடைய கட்டளைகளை அனைவரும் தங்கள் தலையில் ஏற்கும்படிச் செய்தார். (**என் வினைகளை வேர் பறியக் காய்ந்தனன்**) - எல்லையற்ற காலமாகத் தொடங்கி, எம்பெருமானாருடைய அருளுக்குப் பாத்திரமான இன்றுவரை நான் செய்து வந்ததான செய்யக்கூடாத செயல்கள் அனைத்தையும்

அடியுடன் அழித்தார். வேருடன் இருந்தால் மீண்டும் துளிர்க்கக்கூடும் என்று எண்ணியவராக, அவற்றை வேருடன் பிடுங்கி எறிந்தார். இங்கு இந்தச் செடி இருந்தது என்று உணராதவிதத்தில் செய்தார் என்று மகிழ்கிறார். பெரியாழ்வார் திருமொழி (5-4-3) – சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே – என்றும், பெரிய திருவந்தாதி (54) – வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ கானோ ஒருங்கிற்றும் கண்டிலமால் – என்றும் கூறுவதற்கு ஏற்பச் செய்தருளினார். "இப்படியனைத்தும் **மேய்ந்த வண் கீர்த்தியினார்**" என்று கொண்டால், இந்தப் பூமி முழுவதும் ஒரே போன்று பரவி நிற்பதாகவும், அனைத்து புருஷார்த்தங்களையும் அளிக்கின்ற தாராளத்தைக் கொண்டதாகவும் உள்ள தனது கீர்த்தி மூலம், எனது தீயகர்மங்கள் அனைத்தையும் வாசனையுடன் விலக்கினார் என்று பொருள். அதாவது இவர் எம்பெருமானாருடன் ஸம்பந்தம் கொண்டவர் என்பதால், தீயகர்மங்கள் அனைத்தும் தாமாகவே போய் விடுகின்றன.

வ்யாக்யானம் – (வண்மையிராமானுசற்கென் கருத்தினியே) இப்படிப்பட்ட பரமோதாரரான எம்பெருமானாருக்கு இன்னம் தந்திருவுள்ளத்தில் லோடுகிறதேதோ, அடியேனுக்கு இன்னம் எந்த விசேஷார்த்தத்தைக் கொடுப்பதாக நினைப்பிட்டிருக்கிறாரோ, அவரைப் பார்த்தால் இன்னம் சில எனக்குக் கொடுக்கவேணும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாப்போலே யிருக்கிறது காணும் என்று வித்தராகிறார். "**உன் மனத்தாலென் நினைந்திருந்தாய்" என்னும்படியாய்த்து**.

விளக்கம் – (வண்மையிராமானுசற்கென் கருத்தினியே) – இவ்விதமாக மிகவும் தாராளமான குணங்கள் கொண்ட எம்பெருமானார் மேலும் தனது திருவுள்ளத்தில் என்ன சிந்திக்கிறாரோ, அடியேனுக்கு மேலும் எவற்றைச் சிறப்பாக அளிப்பதற்கு எண்ணியபடி உள்ளாரோ; அதாவது அவரை நோக்கும்போது எனக்கு மேலும் பலவற்றை அளிப்பதற்கு எண்ணியபடி உள்ளதாகவே தோன்றுகிறது என்று எண்ணி மகிழ்கிறார்.

78. கருத்தில் புகுந்து உள்ளில் கள்ளம் கழற்றி கருதரிய
வருத்தத்தினால் மிக வஞ்சித்து நீயிந்த மண்ணகத்தே
திருத்தித் திருமகள் கேள்வனுக்கு ஆக்கிய பின் என் நெஞ்சில்

பொருத்தப்படாது எம் இராமானுச மற்றோர் பொய்ப்பொருளே

விளக்கவுரை - "இவனது (எனது) உள்ளத்தைத் திருத்தி, அரங்கனின் பணியில் இவனை ஈடுபடுத்தவேண்டும்", என்று நீவிர் (எம்பெருமானார்) உமது மனதில் எண்ணி, எனது மனதில் புகுந்தீர். வீட்டில் குடி புகுந்த பின்னர், அங்குள்ள செடிகள் போன்றவற்றை நீக்குவது போன்று, அஜ்ஞானம் காரணமாக ஏற்பட்ட விபரீதமான எண்ணங்கள் முழுவதையும் நீவிர் அகற்றினீர். ஆத்மா என்னுடையது என்று எண்ணிய எனது கள்ளத்தன்மையை போக்கினீர். வேறு யாரும் என்னைக் குறித்து நெஞ்சத்தாலும் நினைக்கதபோது நீவீர் உமது உள்ளத்தில், "இவன் இப்படி அழிகிறானே" என்று வருந்தி, எனது விருப்பத்தின்படி நடப்பது போன்று நடித்து, நான் அறியாமலேயே என்னைத் திருத்திவிட்டீர். "இருள்தருமாஞாலம்" என்று உள்ள இந்த மண்ணில், ஸம்ஸாரியாக உலக விஷயங்களில் கிடந்த என்னைத் திருத்தினீர். அதன் பின்னர் எனக்கு எஜமானன் திருவரங்கனே ஆவான் என்று உணர்த்தி, எனக்கு ஞானம் அளித்த அவனுக்கு எனது உயிரையே எழுதிக் கொடுக்கும்படிச் செய்துவிட்டீர். எம்பெருமானாரே! இவ்விதம் படாதபாடு பட்டு நீவீர் திருத்திய எனது மனமானது, நீவிர் அறிவித்த மெய்யான தத்துவமான திருவரங்கனை விடுத்து, மற்றொரு பொய்யான பொருளில் என்றும் நாடாது. ஒளி உள்ள இடத்தில் இருள் புகாது போன்று, ஞானம் ஏற்பட்ட பின்னர் அஜ்ஞானம் எப்போதும் தலைகாட்டாது அல்லவோ?

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே லோகத்தையெல்லாம் ப்ரமித்தழித்த குத்ருஷ்டிகளை ப்ரபல ப்ரமாணங்களாலே நிரஸித்து தம்முடைய பாபங்களையெல்லாம் போக்கி, இன்னும் அதுக்கு மேலே சிறிது கொடுக்கவேணுமென்று நினைத்திருந்தாரென்று எம்பெருமானார் செய்த உபகார பரம்பரையை அடைவே அநுஸந்தித்து, இதிலே - தரிசு கிடந்த தரையைச் செய்காலாம்படி திருத்தும் விரகரைப்போலே **இவ்வளவும் விஷயாந்தர ப்ரவணனாய்ப் போந்த வென்னைத் திருத்துகைக்காக படாதனபட்டு அரியன செய்து திருத்தி, தேவரீருக்கு வகுத்த விஷயமான ஸ்ரீய:பதிக் காளாம்படி பண்ணியருளின பின்பு வேறே சில அயதார்த்தங்கள் என்னுடைய மநஸ்ஸிலே வலியப் பொருத்திலும் பொருந்தாதே யிருப்பன வென்கிறார்.**

விளக்கம் – கடந்த பாசுரத்தில், இந்த லோகங்கள் அனைத்தையும் மயக்கத்தில் ஆழ்த்தி அவர்களை அழித்தவர்களாகிய வேதத்திற்கும் புறம்பான பொருள் உரைக்கும் மற்ற மதத்தினரை, சரியான ப்ரமாணங்கள் மூலம் தள்ளினார் என்றும், திருவரங்கத்தமுதனராகிய தனது பாபங்கள் அனைத்தையும் போக்கினார் என்றும், அதற்கும் மேலே சிலவற்றை அளிக்கவேண்டும் என்று எண்ணியபடி இருந்தார் என்றும், இப்படியாக எம்பெருமானார் செய்தருளிய பல்வேறு உபகாரங்களை முழுவதுமாக எண்ணியபடி இருந்தார். இந்தப் பாசுரத்தில், "தரிசாகக் கிடந்த நிலத்தைப் பயிர் செய்வதற்கு ஏற்றபடி மாற்றுபவர் போன்று, இந்தனை காலமாக உலகவிஷயங்களின் பின்னே சென்ற என்னைத் திருத்துவதற்காக, பலவிதமான கடினமான முயற்சிகளைச் செய்து என்னைத் திருத்தி, உமக்கு இயல்பாகவே எஜமானனாக உள்ளவனும் மஹாலக்ஷ்மியின் நாயகனும் ஆகிய ஸர்வேச்வரனுக்கு மட்டுமே நான் அடிமை என்று என்னை மாற்றினீர். இதன் விளைவாக எனது மனதில் மற்ற விஷயங்கள் ஏதும் வந்து நிலைக்காது", என்கிறார்.

வ்யாக்யானம் – (கருத்தில் புகுந்துள்ளில் கள்ளங் கழற்றி) "தேஷாமேவ அநுகம்பார்தம் அஹம் அஜ்ஞாநஜம் தம: நாசயாம்யாத்ம பாவஸ்தோ ஜ்ஞாந தீபேந பாஸ்வதா" என்றும், "என்னைத் தீ மனங்கெடுத்தாய்" என்றும் சொல்லுகிறபடியே நெடுங்கை நீட்டாகவிருக்கில் இவன் நெஞ்சைத் திருத்தப் பணிப்படுமென்று கொண்டு, நெஞ்சு தன்னிலே தானே வந்து புகுந்து, குடியிருக்கிறவர்கள் அங்கிருக்கிற செடிகளை யறுக்குமாப்போலே, உள்ளிலுண்டான அஜ்ஞாநாந்யதாஜ்ஞாந விபரீத ஜ்ஞாந ரூபமான தோஷங்களையெல்லாம் வாஸனையோடே துடைத்து, "கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேண ஆத்ம அபஹாரிணா" என்னும்படியான ஆத்மாபஹாராதி தோஷங்களைக் கட்டடங்கப் போக்கி யென்றபடி. "கருத்து" என்று மநோ வ்ருத்தி வாசியான **சப்தத்தாலே, ப்ரகரணாநுகுண்யத்துக்காக மநஸ்ஸைச் சொல்லுகிறது. "சிந்தை" என்னுமாப்போலே.**

விளக்கம் – (கருத்தில் புகுந்து உள்ளில் கள்ளங் கழற்றி) கீதை (10-11) – தேஷாமேவ அநுகம்பார்தம் அஹம் அஜ்ஞாநஜம் தம: நாசயாம்யாத்ம பாவஸ்தோ ஜ்ஞாந தீபேந பாஸ்வதா – அவர்களுக்கு க்ருபை செய்வதற்காக, அவர்களுடைய உள்ளத்தில் நான் நிலையாக நின்று, அஜ்ஞானத்தால் உண்டான இருளை, சரியான ஞானம் என்னும்

விளக்கு கொண்டு நான் அழிக்கிறேன் – என்றும், திருவாய்மொழி (2-7-8) – என்னைத் தீமனம் கெடுத்தாய் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, "நாம் இவனைத் திருத்துவதற்காக மிகவும் அரிய முயற்சிகள் எடுக்கவில்லையென்றால், இவனுடைய மனதை எளிதாகத் திருத்த இயலாது", என்று எண்ணியவராக, எனது மனதில் வந்து புகுந்தார். ஒரு புதிய இடத்தில் குடியேறுபவர்கள் அங்குள்ள செடிகள் போன்றவற்றை அகற்றுவது போன்று, எனது மனதில் ஏற்பட்டுள்ள அறியாமை, ஒன்றை மற்றொன்றாக அறிதல், தவறாக அறிதல் போன்ற தோஷங்கள் அனைத்தும் அவற்றின் வாசனையுடன் விலகும்படிச் செய்தார். மஹாபாரதம் ஆதிபர்வம் – கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேண ஆத்ம அபஹாரிணா – ஆத்மாவைத் திருடும் இது போன்றவனால் எந்தப் பாவம் தான் செய்யப்படவில்லை – என்பதற்கு ஏற்ப, பகவானுக்குச் சொந்தமான ஆத்மாவை நம்முடையது என்று அபகரிக்கும் தோஷங்கள் அனைத்தையும் விலக்கினார். "கருத்து" என்று சொல் மூலம் மனம் கூறப்பட்டது.

வ்யாக்யானம் – (கருதரிய வருத்தத்தினால்) வேறு சிலர்க்கு நெஞ்சால் நினைக்கவுங்கூட அரிதாயிருந்துள்ள வருத்தத்தாலே. **வருத்தம்** – ப்ரயாஸம். (மிக வஞ்சித்து) நான் அறியில் செய்த க்ருஷி தன்னையும் அழித்துக் கொள்வனென்று, இராமட மூட்டுவாரைப்போலே, எனக்கு ஒன்றுந் தெரியாதபடி மிகவும் மறைத்து. (**நீ இந்த மண்ணகத்தே திருத்தி**) தேவரீர் தாம் அறிந்ததாக யத்நித்து, இவ்வளவும் நித்ய ஸம்ஸாரியாய் விஷயாந்தரங்களிலே மண்டி விமுகனாய்க் கொண்டு, "இருள் தருமா ஞால"த்திலே ஸ்வைரமாக அபத ப்ரவ்ருத்தனாய்ப் போந்தேனாகையாலே கருந்தரையான என்னை, "**செயல் நன்றாகத் திருத்தி**". "தேஷாம் ஸதத யுக்தாநாம் பஜதாம் ப்ரீதி பூர்வகம் ததாமி புத்தியோகம் தம் யேந மாம் உபயாந்தி தே" என்கிறபடியே ஒரு அதிகாரத்தைப் பார்த்து திருத்துகையன்றிக்கே, நிர்ஹேதுகமாகத் திருத்தினாயென்றபடி. **திருத்துகையாவது** - இவ்வாத்ம வஸ்து, சேஷியான ஸ்ரீய:பதிக்கு சேஷமென்னும் இவ்வர்த்தத்தை நெஞ்சிலே படும்படி உபதேசிக்கை.

விளக்கம் – (கருதரிய வருத்தத்தினால்) - மற்றவர்களால் மனதில் எண்ணுவதற்குக் கூட இயலாதபடி உள்ளதான கடினமான முயற்சிகள் மூலம். வருத்தம் என்றால் இங்கு பெருமுயற்சி என்று பொருள். (மிக வஞ்சித்து) - நான் அறிந்து கொண்டே செய்த பாபங்களைக்கூட, ஓடிப்போன மகன் ஒருவனுக்கு யாரும் அறியாமல் இரவு நேரத்தில்

சத்திரம் ஒன்றில் வைத்து உணவு அளிக்கும் தாய் போன்று, நான் அறியாதவிதத்தில் மறைத்து. (நீ இந்த மண்ணகத்தே திருத்தி) - இந்தனை காலமாக நித்யஸம்ஸாரியாக இருந்தபடி, மற்ற விஷயங்களில் எப்போதும் ஈடுபட்டு, அதில் மட்டுமே ஆசை கொண்டாவனாக, திருவாய்மொழி (10-6-1) – இருள் தரு மா ஞாலம் – என்பதற்கு ஏற்ப உள்ள இந்த உலகில், எனது விருப்பத்தின்படி, தகாத செயல்களில் ஈடுபட்டுத் திரிந்தபடி இருந்தேன். இதனால் தாழ்ந்த நிலமாக இருந்த என்னை கண்ணிநுண்சிறுத்தாம்பு - செயல் நன்றாகத் திருத்தி – என்பதற்கு ஏற்ப திருத்தினார். கீதை (10-10) – தேஷாம் ஸதத யுக்தாநாம் பஜதாம் ப்ரீதி பூர்வகம் ததாமி புத்தியோகம் தம் யேந மாம் உபயாந்தி தே – த்யானம் போன்றவற்றால் எப்போதும் என்னிடம் ஈடுபட்டு, என்னை அன்புடன் வணங்குபவர்களுக்கு, எத்தகைய புத்தியோகத்தால் எவர்கள் என்னை அடைகிறார்களோ அந்தப் புத்தியோகத்தை நான் அளிக்கிறேன் - என்பதற்கு ஏற்ப என்னிடம் ஏதேனும் தகுதி உள்ளதா என்று ஆராயாமல், எந்தவிதமான காரணமும் இன்றி என்னைத் திருத்தினார். திருத்துதல் என்றால் "இந்த ஆத்மாவானது எஜமானனாக உள்ளவனும், மஹாலக்ஷ்மியின் நாயகனும் ஆகிய ஸர்வேசரனுக்கே அடிமை" என்ற கருத்தானது, மனதில் நிலை நிற்கும்படிச் செய்தல் ஆகும்.

வ்யாக்யானம் – (திருமகள் கேள்வனுக்காக்கிய பின்) "நலமந்தமில்லதோர் நாடு" புகுந்த பின்பு வரக் கடவதான இந்த சேஷத்வ ஜ்ஞாநத்தை, இந்த மண்ணகத்தே எனக்கு உபகரித்து, தத் பலமாகக் கொண்டு, "பூமகளார் தனிக்கேள்வன்" என்கிறபடியே ஸ்ரீதேவியாகிற பெரியபிராட்டியாருக்கு வல்லபனான ஸர்வேச்வரனுக்கு அந்தப்புர விநியோகத்துக்கு ஆளாம்படி பண்ணின பின்பு. எனக்கு ஜ்ஞாநத்தைப் பிறப்பித்தவனுக்கு என்னுயிரை அறவிலை செய்து எழுதிக் கொடுத்த பின்பு. "மருவித் தொழும் மனமே தந்தாய்" என்கிறபடியே ஜ்ஞாநத்தை எனக்கு உபகரித்தருளி, என்னை பகவதந்யார்ஹ சேஷபூதனாம்படி கடாக்ஷித்தருளின பின்பென்றபடி. **(என்னெஞ்சில் பொருத்தப்படாது)** இப்படி தேவரீர் படாதன பட்டு திருத்தத் திருந்தின வென் மநஸ்ஸிலே இசையாது.

விளக்கம் – (திருமகள் கேள்வனுக்காக்கிய பின்) - திருவாய்மொழி (2-8-4) – நலம் அந்தமில்லதோர் நாடு - என்பதற்கு ஏற்ப உள்ளதான பரமபதம் சென்றடைந்த பின்னரே வரக்கூடியதான இத்தகைய அடிமை என்ற ஞானத்தை, இந்தப் பூமியில் உள்ளபோதே

எனக்கு ஏற்படுத்தினார். அதனையே பலமாகக் கொண்டு, திருவாய்மொழி (1-9-3) – பூமகளார் தனிக்கேள்வன் - என்பதற்கு ஏற்ப அவனுடைய அந்தரங்கமான கைங்கர்யங்கள் உட்பட அனைத்தையும் நான் செய்யலாம்படிச் செய்தார். இப்படியாக, எனக்கு ஞானம் அளித்தவனுக்கு எனது உயிரை எழுதிக் கொடுக்கும்படிச் செய்த பின்னர். அதாவது, திருவாய்மொழி (2-7-7) – மருவித் தொழும் மனமே தந்தாய் - என்பதற்கு ஏற்ப ஞானத்தை அளித்து, எனக்கு உதவி செய்து, என்னை மற்ற யாருக்கும் வசப்படாமல் பகவானுக்கு மட்டுமே வசப்பட்டு அடிமையாகும்படிக் கடாக்ஷித்த பின்னர். **(என்னெஞ்சில் பொருத்தப்படாது)** - இவ்விதம் மிகவும் சிரமப்பட்டு உம்மால் திருத்தப்பட்ட பின்னர் திருந்திய எனது மனம் வேறு எதிலும் ஈடுபடாது.

வ்யாக்யானம் – (எம்மிராமாநுசா) "அஸ்மத் குரோர்" என்கிறபடியே எனக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணி உபகரித்தருளின எம்பெருமானாரே. **(மற்றோர் பொய்ப்பொருள்)** தேவரீர் அறிவித்த யதார்த்த ஜ்ஞாநமொழிய அதுக்குப் புறம்பாயிருப்பதொரு அயதார்த்தமான அர்த்தத்தையும். **(பொருத்தப்படாது)** வலியப் பொருத்திலும் பொருந்தாது. **பொருத்துதல்** – இசைத்தல். "**இந்த மண்ணகத்தே திருத்தி**" என்று "இருள் தருமா ஞால"த்தில் திருத்துகையிலுண்டான **அருமையைச்** சொல்லிற்றாகவுமாம். **தீபம் வ்யாபித்தவிடத்தில் திமிர வ்யாப்திக்கு வழியில்லாதாப் போலே, ஜ்ஞாநம் புக்கவிடத்தில் அஜ்ஞாநம் புகுர வழியில்லை** யென்றதாய்த்து. "ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதேர்ஜுந" என்னக் கடவதிறே.

விளக்கம் – (எம் இராமாநுசா) – அஸ்மத் குரோர் - என்பதற்கு ஏற்ப எனக்கு ஏற்பட்டிருந்த அறியாமை அனைத்தையும் விலக்கிய எம்பெருமானாரே! (மற்றோர் பொய்ப்பொருளே) - நீவிர் எனக்கு ஏற்படுத்திய உண்மையான ஞானம் அல்லாமல் வேறு எந்த ஒரு கருத்தும். (பொருத்தப்படாது) – வலிய முறையில் எனது நெஞ்சத்தில் புகுத்தப்பட்டாலும், அதில் பொருந்தாது. "இந்த மண்ணகத்தே திருத்தி" என்பதன் மூலம், அறியாமை என்ற இருளை ஏற்படுத்தவல்ல இந்த லோகத்தில் உள்ளவர்களைத் திருத்தும் செயலில் உள்ள கடினத்தை உரைத்தார் என்று கூறலாம். தீபத்தின் ஒளியானது பரவிய இடத்தில் கண்களுக்கு அறியாமை ஏற்படாது என்பது போன்று, ஞானம் புகுந்த இடத்தில் அஜ்ஞானம் ஏற்பட வழியில்லை. கீதை (4-37) – ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே ததா –

ஞானம் என்னும் அக்னியானது அனைத்து கர்மங்களையும் எரித்து சாம்பலாக்குகிறது - என்றது காண்க.

79. பொய்யைச் சுரக்கும் பொருளைத் துறந்து இந்தப் பூதலத்தே
மெய்யைப் புரக்கும் இராமாநுசன் நிற்க வேறு நம்மை
உய்யக் கொள்ளவல்ல தெய்வம் இங்கு யாதென்று உலர்ந்து அவமே
ஐயப்படா நிற்பர் வையத்து உள்ளோர் நல்லறிவு இழந்தே

விளக்கவுரை - வேதங்களில் கூறியவற்றுக்கு மாறாக பொருள் உரைக்கும் அனைத்து மதங்களையும் தள்ளி, இந்த உலகத்தில் உண்மையான பொருளை உணர்த்தி, வேதமார்கத்தை நிலைநிறுத்தியவர் எம்பெருமானார் ஆவார். இப்படிப்பட்ட எம்பெருமானாரைத் தவிர நம்மைக் காக்கவல்லவர் வேறு யார் உள்ளனர்? இந்த உண்மையை அறியாமல் உள்ளவர்கள், இந்தப் பூமியில் வேறு ஏதோ ஒரு தேவதை தங்களைக் காப்பாற்றும் என்று தவறான எண்ணம் கொண்டு, அந்தத் தேவதையைத் தேடி அலைந்து, உடல் நொந்து நிற்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் தூய்மையான தங்கள் ஞானம் இழந்து, அந்தத் தேவதையும் கிடைக்கப் பெறாமல், எம்பெருமானாரின் உபதேசமும் வாய்க்கப் பெறாமல் சந்தேகத்துடன் உழல்கின்றனர்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டில் எம்பெருமானார் என்னுடைய மநோதோஷத்தைப் போக்கி, அது தன்னைத் திருத்தி, ஸம்யஜ்ஞானத்தை பிறப்பித்து, ஸ்ரீய:பதிக்கு சேஷமாக்கின பின்பு என்னுடைய மநஸ்ஸு வேறொருவரைத் தேடிப்போமோவென்று தம்முடைய அத்யாவஸாய தார்ட்யத்தை யருளிச்செய்து, இதிலே அந்தப்படியே ஸம்ஸாரி சேதநருக்கும் அத்யவஸிக்க ப்ராப்தமாயிருக்க அது செய்யாதே, ஆத்மாவினுடைய தேஹ பரிமாணத்வம், க்ஷணிகத்வம் தொடக்கமான வேதாந்த விருத்தார்த்தங்களை வாய் வந்தபடி ப்ரலாபிக்கிற பாஹ்ய குத்ருஷ்டிகளுடைய மத ப்ரமேயத்தை வாஸனையோடே ஓட்டிவிட்டு, முன்பு அந்த மறைக்குறும்பாலே வ்யாப்தமான பூலோகத்திலே ஸத்யமான அர்த்தத்தை, எம்பெருமானா ரிருக்கச் செய்தேயும் ஸஜாதீய புத்தியாலே அவரை விட்டகன்று வேறொரு தேவதை நம்மை ரஷிக்கக் கடவதுண்டோவென்னும் உள்வெதுப்பாலே சுஷ்கித்துப்போய் வ்யர்த்தமே ஸம்சயாத்மாக்களாய் நசித்துப் போகிறவர்கள் படியைக் கண்டு இன்னாதாகிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "எம்பெருமானார் எனது மனதில் உள்ள பல தோஷங்களையும் போக்கி, மனதைத் திருத்தி, தெளிந்த அறிவை ஏற்படுத்தி, மஹாலக்ஷ்மியின் நாதனுக்கு அடிமையாக்கிய பின்னர், எனது மனம் வேறு யாரையும் தேடிச் செல்லுமோ என்று சந்தேகம் கொண்டவராக, தனது உள்ளத்தில் உள்ள உறுதியை அருளிச்செய்தார்", என்று கூறினார். இந்தப் பாசுரத்தில், "இப்படிப்பட்ட நிலையானது அனைத்து ஸம்ஸாரிகளுக்கும் கைக்கொள்ள தகுதியானதாக உள்ளபோதிலும், அதனை அவர்கள் செய்யவில்லை; மாறாக இவர்கள் செய்வது என்ன? ஆத்மாவானது சரீரத்தின் அளவு கொண்டது, அது நொடிக்கு நொடி அழிந்து அழிந்து உண்டாகிறது என்பது தொடங்கி, பலவிதமாகவும் வேதாந்தங்களுக்கு முரணாக, தங்களுடைய வாய்க்கு வந்தபடி உளறுகின்ற மற்ற மதங்களுடைய கருத்துக்களைக் கேட்கின்றனர். இப்படிப்பட்டவற்றை அவற்றின் வாசனையுடன் துறக்காமலும், அத்தகைய தாழ்ந்த கருத்துக்கள் பலவும் எங்கும் பரவி நிற்பதான இந்த பூலோகத்தில், எம்பெருமானர் உள்ளபோதிலும் அவரை விடுத்து, வேறு ஏதோ ஒரு தெய்வம் நம்மைக் காப்பாற்ற உள்ளதோ என்று தேடியபடியும் உள்ளனர். இப்படியாக உண்மையான ஞானம் பெறாமல் , சந்தேகத்தை மட்டுமே மனதில் எப்போதும் கொண்டவர்களாக, தங்களுடைய வாழ்க்கையை வீணாக்கியபடி உள்ளனரே", என்று இவர்களைக் குறித்து வருந்துகிறார்.

வ்யாக்யானம் – (பொய்யைச் சுரக்கும் பொருளைத் துரந்து) பொய் என்று அஸத்யம். (சுரக்கும் பொருளை) இத்தையே மேன்மேலும் உபபாதியா நிற்கிற பாஹ்ய குத்ருஷ்டிகளுடைய மத ப்ரக்ரியையை, "அஸந்நேவ ஸ பவதி, அஸத் ப்ரஹ்மேதி வேதசேத்" என்கிறபடியே அஜ்ஞாநாந்யதாஜ்ஞாந விபரீத ஜ்ஞாந விஷயங்களை யென்றபடி. அவையாவன ஆத்மாவினுடைய தேஹ பரிமாணத்வ க்ஷணிகத்வ விஞ்ஞாந ரூபத்வ ஜடத்வாதிகளும், ப்ரஹ்மத்தினுடைய மாயாசபளி தத்வ உபாதி மிச்ரத்வ விகாராதிவாதிகளும், ஜகத்தினுடைய மித்யாத்வ அவித்யா கார்யத்வாதிகளும், இப்படி அஸத்யங்களாய் வேத விருத்தங்களான அர்த்தங்களை என்றபடி.

விளக்கம் - (பொய்யைச் சுரக்கும் பொருளைத் துரந்து) - பொய் என்றால் அஸத்யம். (சுரக்கும் பொருளை) - இதனையே மேன்மேலும் உரைத்தபடி நிற்கிற மற்ற தாழ்ந்த

மதங்களுடைய பொய்யான ப்ரச்சாரங்களையும் செய்கைகளையும், தைத்திரீயம் – அஸந்நேவ ஸ பவதி அஸத் ப்ரஹ்ம இதி வேதசேத – ப்ரஹ்மம் இல்லை என்று எண்ணுபவன், இல்லாதவன் ஆகிறான் - என்பதற்கு ஏற்ப அறியாமை, ஒன்றை மற்றதாக அறிதல், தவறாக அறிதல் என்பதற்கு ஏதுவாக உள்ள விஷயங்களை என்று கருத்து. அவை எவையென்றால் - ஆத்மாவானது சரீரத்தின் அளவு கொண்டது, ஆத்மா நொடிக்கு நொடி அழியக்கூடியது, ஆத்மா ஞானமயம் மட்டுமே ஆகும், ஆத்மா ஜடத்வம் கொண்டது என்று பலவிதமாகக் கூறுபவர்கள்; ப்ரஹ்மமானது மாயை கொண்டது என்றும், உபாதி காரணமாகவே அது ஜீவாத்மாக உள்ளது என்றும், மாற்றம் கொண்டது என்றும் கூறுபவர்கள்; இந்த ஜகத்தானது மித்யை என்றும், அவித்யை காரணமாக இவ்விதம் தோன்றுகிறது என்றும் கூறுபவர்கள்; இப்படியாக வேதங்களுக்கு விரோதமாகப் பொருள் கூறுகின்ற பல கருத்துக்களை.

வ்யாக்யானம் – அன்றிக்கே, (பொய்யைச் சுரக்கும் பொருளை) “நாஸதோ வித்யதே பாவ:” என்கிறபடியே உத்பத்தி விநாசாதி யோகத்தாலே அஸத் சப்த வாச்யமான தேஹத்தை, ஜந்ம பரம்பரையாலே மேன்மேலுமுண்டாக்கும் தேஹாத்மாபிமாநம் ஸ்வஸ்வாதந்த்ர்யம் தொடக்கமான அர்த்தங்களை யென்றுமாம். (பொருளைத் துரந்து) இப்படிப்பட்ட அஸத்யமான அர்த்தங்களைத் திருநாராயணபுரத்திலும், ஸரஸ்வதீ பண்டாரத்திலும் “கோ வா சக்ஷு: உதஞ்சயேத் அபி புர: ஸாடோப தர்க்க சடா சஸ்த்ரா ஸசஸ்த்ரி விஹார ஸம்ப்ருத ரணா ஆஸ்வாதேக்ஷு வாதேக்ஷு ந:” என்கிறபடியே கரை கட்டாக் காவேரி போலே தடையறப் பெருகி வருகிற ஸத் தர்க்கங்களாலே பாஹ்ய குத்ருஷ்டிகளுக்குக் கண் விழிக்கவொண்ணாதபடி அவர்களோடே பஹுமுகமாக ப்ரஸங்கித்து, சரீரமே ஆத்மாவாகில் ம்ருத சரீரத்திலும் சைதந்யமுண்டாக வேண்டி வரும் என்றும், ஆத்மா க்ஷணிகமாகில் பூர்வக்ஷணாது பூதங்களான ஸுகதுக்கங்களுக்கு உத்தர க்ஷணத்தில் ப்ரதிஸந்தாநம் வாராமல் போக வேண்டி வரும் என்றும், ஜ்ஞாநமே ஆத்மாவாகில் நானறிவென்றிருக்க வேண்டுமித்தனையொழிய நானறிந்தேனென்று ஜ்ஞாத்ருத்வேந ப்ரதிஸந்தாநங் கூடாதென்றும்.

விளக்கம் – அல்லது, (பொய்யைச் சுரக்கும் பொருளை) என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். கீதை (2-16) – நாஸதோ வித்யதேபாவ: - இல்லாத ஒன்றுக்கு இருப்பு உண்டாகாது - என்பதற்கு ஏற்ப உற்பத்தி, அழிவு ஆகிய இரண்டும் சேர்ந்துள்ளதால்

அஸத் என்று கூறப்படும் சரீரத்தை, மேன்மேலும் பிறவிகள் ஏற்பட்டபடி உள்ளதால் ஒவ்வொன்றிலும் அந்தச் சரீரமே ஆத்மா என்று எண்ணியும், இது சுதந்திரமானது என்று எண்ணியும் உள்ள நிலை; இப்படிப்பட்ட கருத்துக்களை. (பொருளைத் துரந்து) - இவ்விதம் அஸத்யமான கருத்துக்கள் பலவற்றையும் திருநாராயணபுரம், காஷ்மீரில் உள்ள ஸரஸ்வதி பண்டாரம் போன்ற இடங்களில், யதிராஜ ஸப்ததி (68) - ஆஸதாம் நாம யதீந்த்ர பத்ததி ஜுஷாம் ஆஜாந சுத்தா மதி: தத் அவ்யாஜ விதத்த முக்த மதுரம் ஸாரஸ்வதம் சாஸ்வதம் கோ வா சக்ஷு: உதஞ்சயேத் அபி புர: ஸாடோப தர்க்க சடா சஸ்த்ரா ஸசஸ்த்ரி விஹார ஸம்ப்ருத ரணா ஆஸ்வாதேஷு வாதேஷு ந: - யதிராஜரின் உயர்ந்த மார்க்கத்தை அடைந்தவர்கள் தாங்கள் பிறந்தது முதலே சரியான ஞானம் கொண்டவர்களாகவே உள்ளனர். அவர்களிடம் கம்பீரம், அழகு, இனிமை ஆகியவற்றுடன் கூடிய நிலையான கல்வி இயற்கையாகவே அமைந்துள்ளது. மிகுந்த தம்பட்டம் கொண்டு எதிர்வாதம் செய்தபடி மற்ற மதத்தினர் வாதப்போருக்கு வரக்கூடும். அவர்கள் முன்பு நாம் சுவையான யதிராஜரின் நூலகள் உதவியுடன் வாதம் செய்ய நின்றால், நமக்கு முன்பாகக் கண்ணைத் திறந்து பார்த்தபடியே யார் நிற்பார்கள் – என்பதற்கு ஏற்ப கரையில் அடங்காத காவேரி போன்று தடையில்லாமல் பெருகி வருகின்ற உண்மையான வாதங்கள் மூலம், இவ்விதம் தவறாகப் பொருள் கூறும் மற்ற மதங்கள் அனைத்தும் கண்விழிக்கக்கூட இயலாதபடி அவர்களுடன் பலவிதங்களில் வாதம் செய்து; சரீரமே ஆத்மா என்று கொண்டால் மரணம் அடைந்த நிலையில் உள்ள சரீரத்திலும் சைதந்யம் ஏற்படவேண்டும் என்றாகிவிடும் என்றும், ஆத்மா நொடிக்கு நொடி அழிந்து தோன்றுகிறது என்றால் முந்தைய நொடியில் ஏற்பட்ட சுகதுக்கங்கள் குறித்து அடுத்த நொடியில் நினைவு வராமல் போய்விடும் என்றும், ஆத்மாவானது ஞானம் மட்டுமே என்றால் “நானே அறிவு” என்ற எண்ணம் தோன்ற வேண்டும் அல்லாமல் “நான் அறிந்தேன்” என்று அறிபவனாக உள்ள நிலை ஏற்படாது என்றும்,

வ்யாக்யானம் - ஆத்மா ஜடமென்றால் “ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ: இதி தத்வித:” என்கிறபடியே “பாதே மே வேதநா, சிரஸி மே ஸுகம்” என்றும், “விஜ்ஞாநகந:” என்று ஜ்ஞாந ஸ்வரூபமாகச் சொல்லக் கூடாது என்றும்; ப்ரஹ்மம் மாயாசபளிதமானாலும், “நிஷ்களம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம்” என்கிறபடியே நிர்மலாநந்தைக ஸ்வரூபமாகையாலே நான் ஜீவனென்றும் ஈச்வரனென்றும் ப்ரமிக்கக் கூடாதென்றும்; அப்படி ப்ரமித்தால், “ஏகோ தேவஸ் ஸர்வ பூதேஷு கூட:” என்கிறபடியே அத்விதீயனானவனுக்கு ப்ரம நிவர்த்தகரில்லாமையாலே ஸர்வதா ப்ரமித்தே போகவேண்டி வரும் என்றும்; ப்ரஹ்மம் விகாரியென்றால்

நிர்விகாரியென்கிற ச்ருதியோடே விரோதம் ப்ரஸங்கிக்குமென்றும் அவர்களைக் குறித்து பஹுமுகமாக ப்ரதிகூல அர்த்தங்களைச் சொல்லி, அவர்களை சிக்ஷித்து பராஜிதராக்கி, இந்த மஹா ப்ருத்வியிலே யிருக்கக் கூடாமல், கடலிலே புகும்படி ஓட்டிவிட்டு. துரத்தல் – ஓட்டுதல்.

விளக்கம் - ஆத்மா ஜடப்பொருள் என்றால், கீதை (13-1) – ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ: இதி தத்வித: - இதனை அறிந்தவனை க்ஷேத்ரஜ்ஞன் என்று உண்மையை அறிந்தவர்கள் கூறுகிறார்கள் – என்பதற்கு ஏற்ப "எனது கால்கள் வலிக்கிறது, தலைவலி இன்றி சுகமாக உள்ளேன்" என்றும், விஜ்ஞாநகந: - என்றும் ஞானஸ்வரூபமாக ஆத்மாவை உரைக்க இயலாது என்றும்; ச்வேதாஸ்வதர உபநிஷத் (6-19) - நிஷ்களம் நிஷ்க்ரியம் சாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம் – களங்கம் அற்றது, செயல்கள் அற்றது, சாந்தமானது, தூய்மையானது, தோஷம் அற்றது - என்பதற்கு ஏற்ப தோஷம் ஏதும் இன்றி உள்ள ஆனந்தத்தை மட்டுமே தனது இயல்பாகக் கொண்டதால் "நான் ஜீவன், இச்ச்வரன்" என்று மயங்கி நிற்கக்கூடாது என்றும், அவ்விதம் மயங்கி நின்றால், ச்வேதாஸ்வதர உபநிஷத் - ஏகோ தேவஸ் ஸர்வபூதேஷு கூட: - ஒரே தேவன் அனைத்து பூதங்களிலும் உள்ளான் – என்பதற்கு ஏற்ப தன்னைப் போன்று இரண்டாவது எதும் இல்லை என்பதால், ப்ரஹ்மத்திற்கு ஏற்பட்ட அந்த மயக்கத்தை விலக்குவதற்கு யாரும் இல்லை என்பதால், எப்போதும் மயக்கத்திலேயே இருக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றும்; ப்ரஹ்மம் மாறுபாடு அடைகிறது என்றால், ப்ரஹ்மத்தை மாறுபாடு அற்றது என்று கூறும் கருத்துக்களுடன் முரண்பாடு ஏற்படும் என்றும், இப்படியாக அவர்களைக் குறித்து பலவிதமான அவர்களுக்கு விருப்பம் அற்ற வாதங்களை உரைத்து, அவர்களைத் திருத்தி, அவர்கள் தோற்கும்படிச் செய்து, இந்தப் பெரிய உலகத்தில் அவர்கள் இருக்கமுடியாமல் கடலில் புகும்படி விரட்டி.

வ்யாக்யானம் – (இந்தப் பூதலத்தே மெய்யைப் புரக்கும்) யதாஜ்ஞாநத்தை இந்த பூதலத்திலே பரிபாலித்தருளும் சுஷ்க தர்க்கவாதிகளை ஓட்டிவிட்டு. "ப்ரமாணம் வேதாச்ச" என்றும், "ஆதௌ வேதா: ப்ரமாணம்" என்றும் சொல்லுகிறபடியே ஸகல ப்ரமாணமான வேதத்திலே வைத்துக் கொண்டு, "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்கையாலே ஸர்வேச்வரன் ஸ்வரூப விகாரத்வ ஜடத்வ த்ரிவித பரிச்சேத ரஹிதனென்றும், "கப்யாஸம்

புண்டரீகமேவமக்ஷிணீ" என்றும், "விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:" என்கையாலே சுபாச்ரய திவ்ய ரூபனென்றும்; "பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியா ச" என்கையாலே ஸமஸ்த கல்யாண குணாத்மகன் என்றும்; "பாதோஸ்ய விச்வாபூதானி த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்கையாலே உபயவிபூதி நாதனென்றும்; "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்கையாலே திவ்யமஹிஷீ வல்லபனென்றும்; "யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:" என்றும், "யத்ர ருஷய: ப்ரதமஜாயே புராணா:" என்றும், "ஏதத் ஸாமகாயாந் நாஸ்தே" என்கையாலே ஸூரிப்ருந்த பரிசார்யமாணனென்றும்.

விளக்கம் - (இந்தப் பூதலத்தே மெய்யைப் புரக்கும்) - உண்மையான ஞானத்தின் இந்த உலகத்தில் பாதுகாத்து. விரோதமான தர்க்கங்களைச் செய்பவர்களை விரட்டி. ஆபஸ்தம்ப ஸூத்ரம் - ப்ரமாணம் வேதாச்ச – வேதங்களே ப்ரமாணங்கள் – என்றும், ஆதௌ வேதா: ப்ரமாணம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்துவிதமான ப்ரமாணமாகவும் உள்ள வேதத்தின் மூலம், ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்மம் – என்று கூறுவதால், ஸர்வேச்வரன் தனது ஸ்வரூபத்தில் மாற்றம் அடையாதவன் என்றும், ஜடப்பொருள் அல்லன் என்றும், இடம் காலம் தேசம் என்று மூன்றுவிதமான அளவும் அற்றவன் என்றும்; சாந்தோக்ய உபநிஷத் - கப்யாஸம் புண்டரீகமேவ அக்ஷிணீ – அன்றலர்ந்த தாமரைமலர் போன்ற திருக்கண்கள் – என்பதற்கு ஏற்பவும், ஸ்ரீவிஷ்ணு ஸூக்தம் - விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ: - மஹாவிஷ்ணுவின் திருவடிகள் அம்ருதம் என்னும் மது பொருந்தியவை – என்பதற்கு ஏற்பவும் மங்களங்கள் அனைத்தும் அண்டி நிற்கின்ற திவ்யரூபன் என்றும்; ச்வேதாஸ்வதர உபநிஷத் (6-8) - பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாந பல க்ரியா ச – பலவிதமான சக்திகள் உள்ளும்புறமும் இயங்கியபடி உள்ளன. இயல்பாகவே ஞானம், பலம் போன்றவை கொண்டு – என்பதற்கு ஏற்ப அனைத்துவிதமான திருக்கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாக உள்ளவன் என்றும்; புருஷஸூக்தம் - பாதோஸ்ய விச்வா பூதாநி த்ரிபாதஸ்யாம்ருதம்திவி – அவனுடைய திருவடிகளில் கால்பாகம் லீலாவிபூதியிலும், முக்கால் பாகம் நித்யவிபூதியிலும் உள்ளன – என்பதால் இரண்டு விபூதிகளுக்கும் நாதன் என்றும்; புருஷஸூக்தம் - ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ – ஸ்ரீஹரியாகிய உன்னுடைய பத்தினி மஹாலக்ஷ்மி ஆவாள் - என்பதால் திவ்யமான பத்னியாகிய மஹாலக்ஷ்மியின் கணவன் என்றும்; புருஷஸூக்தம் - யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா: - எங்கு

ஸாத்யர்கள் எனப்படும் புராணமானவர்கள் உள்ளனரோ - என்றும், தைத்திரீய உபநிஷத் - ஏதத் ஸாம காயந்நாஸ்தே – முக்தர்கள் ஸாமகானம் பாடியபடி - என்றும் கூறுவதால் நித்யஸூரிகளால் எப்போதும் கைங்கர்யம் செய்யப்பட்டபடி உள்ளவன் என்றும்;

வ்யாக்யானம் – "ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி", "தத் ஸ்ருஷ்ட்வா தத் ஏவ அநுப்ராவிசத் தத் அநுப்ரவிச்ய ஸச்சத்யச்ச அபவத்" என்கையாலே ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டனாய்க் கொண்டு ஜகத்காரண பூதனென்றும்; "ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ ஏகோ நாராயண:" என்கையாலே ஸர்வாந்தர்யாமி யென்றும்; "அம்பஸ்ய பாரே புவநஸ்ய மத்யே நாகஸ்ய ப்ருஷ்டே மஹதோ மஹீயாந்" என்கையாலே வ்யூஹ ரூபேண வஸ்த்திதனென்றும்; "ப்ரஹ்மண்யோ தேவகீ புத்ரோ ப்ரஹ்மண்யோ மதுஸூதநோம்", "அஜாயமாநோ பஹுதா விஜாயதே" என்கையாலே அநந்தாவதார கந்தனென்றும்; "ஸயச்யாயம் புருஷே யச்சாஸாவாதித்யே", "ய ஏஷோ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷ:" என்கையாலே ஸமஸ்த திவ்யதேச நிலையனென்றும்; "நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத்" என்கையாலே விஷ்ணு நாராயண வாஸுதேவாதி சப்த வாச்யனென்றும்; "பராத்பரம் புருஷமுபைதி திவ்யம்" என்கையாலே ஸர்வஸ்மாத் பரனென்றும்;

விளக்கம் - சாந்தோக்ய உபநிஷத் - ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி – "நான் பலவாகக் கடவேன்" என்று ஸங்கல்பம் செய்தது – என்றும், சாந்தோக்ய உபநிஷத் - தத் ஸ்ருஷ்ட்வா தத் ஏவ அநுப்ராவிசத் தத் அநுப்ரவிச்ய ஸச்சத்யச்ச அபவத் – அனைத்தையும் ஸ்ருஷ்டித்து, அனைத்தின் உள்ளிலும் புகுந்து, ஸத் மற்றும் த்யத் எனப்பட்டதுஎன்பதால் ஸூக்ஷ்மமாக உள்ள சித் மற்றும் அசித் ரூபமாக இருந்து ஜகத் காரணமக உள்லான் என்றும்; ஏஷ - என்றும் கூறுவதால் அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ளான் என்றும்; ஸுபால உபநிஷத் - ஏஷ ஸர்வபூதாந்தராத்மா அபஹதபாப்மா திவ்யோ ஏகோ நாராயண: - அனைத்து ஜீவாத்மாக்களின் உள்ளிலும் அந்தர்யாமியாக உள்ளவனும், பாபங்கள் அற்றவனும், தேவனும் ஆகிய ஒருவன் நாராயணனே ஆவான் – என்பதால் அனைத்திற்கும் அந்தர்யாமியாக உள்ளான் என்றும்; மஹாநாராயண உபநிஷத் - அம்பஸ்ய பாரே புவநஸ்ய மத்யே நாகஸ்ய ப்ருஷ்டே மஹதோ மஹீயாந் – அவன் ஸமுத்திரத்திலும், புவனத்தின் நடுவிலும், மேல் லோகத்திலும் அளவற்ற மகிமையுடன்

உள்ளான் – என்பதால் அவன் வ்யூஹரூபங்களில் நிலைநிற்பவன் என்றும்; ப்ரஹ்மண்யோ தேவகீ புத்ரோ ப்ரஹ்மண்யோ மதுஸூதநோம் – தேவகியின் புத்திரனே ப்ரஹ்மம், மதுஸூதனனே ப்ரஹ்மம் – என்றும், புருஷஸூக்தம் - அஜாயமாநோ பஹுதா விஜாயதே – பிறப்பற்ற அவன் பல பிறவிகளில் அவதரிக்கிறான் – என்றும் கூறுவதால் அவன் பல அவதாரங்களை எடுத்தபடி உள்ளவன் என்றும்; தைத்திரீயம் - ஸயச்சாயம் புருஷே யச்சாஸாவாதித்யே – ஆதித்யமண்டலத்தில் எந்தப் புருஷன் உள்ளானோ அவனே ஆனந்தமயன் – என்றும், தைத்திரீயம் - ய ஏஷோ அந்தராதித்யே ஹிரண்மய: புருஷ: - ஸ்வர்ணமயமான எந்தப் புருஷன் ஆதித்யனின் நடுவில் உள்ளானோ - என்றும் கூறுவதால் அனைத்து திவ்யதேசங்களிலும் உள்ளவன் என்றும்; நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி தந்நோ விஷ்ணு: ப்ரசோதயாத் – நாராயணனை உபாஸிப்போம், அனைத்திலும் நிறைந்துள்ள வாஸுதேவனாகிய அவனை வணங்குவோம், அந்த விஷ்ணு நம்மை ஒளிரச் செய்வானாக – என்பதால் விஷ்ணு, நாராயணன், வாஸுதேவன் போன்ற பல திருநாமங்களால் கூறப்படுபவன் என்றும்; பராத் பரம் புருஷம் உபைதி திவ்யம் – மிகவும் உயர்ந்த புருஷனும் திவ்யமானவனும் ஆகிய அவனை அடைந்து – என்பதால் அனைத்திற்கும் ஆத்மாவாக உள்ளவன் என்றும்;

வ்யாக்யானம் – "ஏஷோணுராத்மா புருஷமபைதி திவ்யம்", "ஆராக்ரமாத்ரோ ஹ்யவரோபி த்ருஷ்ட:" என்கையாலே ப்ரத்யகாத்மா அணுவாயிருப்பானென்றும்; "நித்யாநாம் சேதநாநாம்" என்கையாலே நித்யனாயிருப்பானென்றும்; "போக்தா போக்யம் ப்ரேரிதாராம் ச மத்வா" என்கையாலே போக்தாவென்றும்; "ப்ருதகாத்மாநாம் ப்ரேரிராதம் ச மத்வ" என்கையாலே ஸர்வேச்வரனில் வேறுபட்டிருப்பானென்றும்; "தயோரந்யம் பிப்பலம் ஸ்வாத்வத்தி" என்கையாலே கர்ம பல போக்தாவென்றும்; "ப்ரஹ்மணேத்வாமஹஸ ஓம் இதி ஆத்மாநம் யுஞ்ஜீத" என்கையாலே பகவதநந்யார்ஹ சேஷபூதனென்றும்; "தமேவ வித்வாநம்ருத இஹ பவதி" என்கையாலே தாத்ருச ஜ்ஞாநத்தைக் கொண்டு பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தைப் பெறக் கடவனென்றும்; "ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வ ஜாதே" என்கையாலே அசித்து ஈச்வரனுக்கு க்ரீடா பரிகரமாயிருக்குமென்றும்; "ஆகாசாத் வாயு: வாயோரக்நி: அக்நோராப: அத்ப்ய: ப்ருதிவீ" என்கையாலே சதுர்விம்சதி தத்வாத்மகமாய் பரிணமிக்குமென்றும், "ம்ருத்திகேத்யேவ ஸத்யம்" என்கையாலே துச்ச வ்யாவருத்தமா யிருக்குமென்றும்; இப்படி தத்வ

த்ரயத்தினுடையவும் ஸ்வரூப ஸ்வபாவாதிகளை இந்த அஜ்ஞாந வர்த்தகமான பூலோகத்திலே யதாவாக உபதேசித்து உபகரித்தவென்றபடி. புரத்தல் – காத்தல். அன்றிக்கே, இரண்டாம் யோஜனைக்கு அநுகுணமாக, "பொருளைத் துரத்திந்தப் பூதலத்தே மெய்யைப் புரக்கும்" என்றதுக்கு ஸ்வ ஸ்வாதந்த்ர்யாதிகளை ஸ்வ உபதேசத்தாலே ஓட்டிவிட்டு, இந்த பூதலத்தில் ஸதைகரூபனாய் ஸத்ய சப்த வாச்யனான ஆத்மாவை ரக்ஷித்தருளினாரென்று பொருளாகக் கடவது.

விளக்கம் - ஏஷோணுராத்மா புருஷம் உபைதி திவ்ய: - அணுவிலும் ஆத்மாவாக உள்ள உயர்ந்த புருஷனும் திவ்யமானவனும் ஆகிய அவனை அடைந்து – என்றும், ஆராக்ரமாத்ரோ ஹ்யவரோபி த்ருஷ்ட: - என்றும் கூறுவதால் சரீரத்தினுள் இருக்கின்ற ஆத்மா அணு அளவாகவே உள்ளவன் ஆவான் என்றும்; நித்யாநாம் சேதநாநாம் – நித்யர்களாக உள்ள சேதநர்களின் நடுவில் உள்ள நித்யமான சேதநன் – என்பதால் எப்போதும் உள்ளவன் என்றும்; ச்வேதாஸ்வதர உபநிஷத் - போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா – அனுபவிப்பவன், அனுபவிக்கப்படும் பொருள், இவர்களை நியமிப்பவன் - என்பதால் அனுபவிப்பவன் என்றும்; ச்வேதாஸ்வதர உபநிஷத் (1-6) - ப்ருதக் ஆத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா – ஒவ்வொரு ஆத்மாவிலும் இருந்தபடி நியமித்து - என்பதால் ஸர்வேச்வரனைக் காட்டிலும் வேறுபட்டவன் என்றும்; முண்டக உபநிஷத் – தயோரந்ய: பிப்பலம் ஸ்வாது அத்தி – அந்த மரத்தில் இருந்தபடி அத்திப்பழம் என்னும் பலனை உண்டபடி - என்பதால் கர்மபலனை அனுபவிப்பவன் என்றும்; ந்யாஸ வித்யை - ப்ரஹ்மணேத்வாமஹஸ ஓம் இதி ஆத்மாநம் யுஞ்ஜீத – ஓம் என்னும் ஆத்மாவில் இன்புற்றபடி - என்பதால் பகவானைத் தவிர்த்து வேறு யாருக்கும் அடிமை அல்லன் என்றும்; புருஷஸூக்தம் – தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி – இங்கேயே மோக்ஷ ஆனந்தத்தை அனுபவிக்கிறான் - என்பதால் உண்மையான ஞானத்தைப் பெற்று, உயர்ந்த புருஷார்த்தமாக உள்ள மோக்ஷத்தை அடைவான் என்றும்; ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வ ஜாதே – அந்த மரத்தில் இரண்டு பறவைகள் – என்பதால் அசித் வஸ்துக்கள் அனைத்தும் ஈச்வரனுடைய லீலைக்கு ஏற்றதாக இருக்கும் என்றும்; ஆகாசாத் வாயு: வாயோரக்நி: அக்நோராப: அத்ப்ய: ப்ருதிவீ – ஆகாசத்திலிருந்து வாயு, வாயுவிலிருந்து அக்னி, அக்னினியிலிருந்து நீர், நீரிலிருந்து பூமி - என்பதால் இருபத்து நான்கு தத்வங்களாக அசித் வஸ்துக்கள் வெளிப்படும் என்றும்; ம்ருத்திகேத் ஏவ ஸத்யம் – மண் உண்மையானது -

என்பதால் சூந்யம் என்பதற்கு விரோதமாக இருக்கும் என்றும்; இப்படியாக சித், அசித் மற்றும் ஈச்வரன் ஆகிய மூன்று தத்துவங்களின் ஸ்வரூபம் மற்றும் ஸ்வபாவம் ஆகியவை குறித்து, அறியாமையில் மூழ்கியபடி உள்ள இந்த உலகத்தில், உள்ளது உள்ளபடி உபதேசித்து உதவினார் என்று கருத்து. அல்லது இப்படியாக இரண்டாவது விதமாகக் கூறப்பட்ட பொருளுக்கு ஏற்றபடி "பொருளைத் துரத்திந்தப் பூதலத்தே மெய்யைப் புரக்கும்", என்பதற்கு தாங்கள் சுதந்திரமானவர்கள் என்றிருந்தவர்களை தனது உபதேசங்கள் மூலம் விரட்டிய பின்னர், இந்த உலகத்தில் ஸத் என்பதாக உள்ளதும், ஸத்யம் என்று கூறப்படுவதும் ஆகிய ஆத்மாவைக் காப்பாற்றினார் என்று பொருள் கூறலாம்.

வ்யாக்யானம் – (இராமானுசன் நிற்க) எம்பெருமானார் வேத மார்க்க ப்ரதிஷ்டாபநாச்சார்யராய் உபயவேதாந்தாசார்யராய், திருத்துக்கைக்கு ஆராகிலும் ஆளுண்டோவென்று "எதிர் சூழல் புக்கு" வழி பார்த்து நிற்கச் செய்தே, (வேறு நம்மையுய்யக் கொள்ள தெய்வம்) அநாதி பாப வாஸனா தூஷிதாசேஷ சேமுஷீகராய் அவர் பக்கல் ஸஜாதீய புத்தியைப் பண்ணி, அவருபதேசத்துக்கு இசையாதே எங்களை உஜ்ஜீவிப்பிக்கைக்கு ஸமர்த்தமான வேறொரு தைவம். (இங்கியாதென் றுலர்ந்து) இந்த பூமியிலே ஏதோவென்று தேடித்தேடித் தடுமாறி, அப்படிப்பட்ட தைவத்தை லபியாதே மிகவும் உடம்புலர்ந்து க்லேசித்து, (அவமே ஐயப்படா நிற்பர்) இவ்விஷயம் எனக்கு உத்தேச்யமென்று பற்றி உஜ்ஜீவித்துப் போகைக்குறுப்பான யதா ஜ்ஞாநத்தை லபிக்கப் பெறாதே உங்களுக்கு உஜ்ஜீவநகரமில்லையென்று சொன்னாலும், வ்யர்த்தமே இனி நமக்கு ரக்ஷகராவா ரொருவருமில்லையென்று ஸம்சயப்படா நின்றார்கள். ஐயம் – ஸம்சயம். (வையத்துள்ளார் நல்லறிவிழந்தே) பூலோகத்திலே யிருக்கிற சேதநர்கள் நல்ல பரிசுத்த ஜ்ஞாநத்தை யிழந்து போனார்களே, அத்தாலே நம்முடைய உபதேசமும் வெறிதே தலைக்கட்டிற்று. "ஸம்சயாத்மா விநச்யதி" என்று இவர்கள் நசித்துப் போனார்களே, ஐயோ!" என்று ஸர்வ பூத ஸுஹ்ருதராகையாலே அவர்களுக்காக அழுதனார் அவஸாதப்படுகிறார் காணும்.

விளக்கம் - (இராமாநுசன் நிற்க) - இப்படியாக வேதமார்க்கத்தினை நிலையாக நிறுத்தி, ஆசார்யனாக இருந்து, உபயவேதாந்தங்களை உபதேசிப்பதற்கு எம்பெருமானார்,

“நம்மால் திருத்தப்படவேண்டியவர்கள் யாரேனும் இந்த உலகில் உள்ளனரா” என்று திருவாய்மொழி எதிர்பார்த்தபடி நிற்கிறார். இப்படி இவர் உள்ளபோது, (வேறு நம்மையுய்யக் கொள்ள தெய்வம்) – எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள பாபவாஸனை காரணமாகத் தாழ்ந்த பலவற்றையும் எஜமானர்கள் என்று கொண்டு, அவர்களிடம் தங்கள் புத்தியை நிலைநிறுத்தி, எம்பெருமானாருடைய உபதேசத்திற்கு அடிபணியாமல், தங்களைக் காப்பாற்றுவதற்கான சாமர்த்தியம் நிறைந்த வேறு ஒரு தெய்வம். (இங்கியாதென் றுலர்ந்து) - இந்தப் பூமியில் ஏதேனும் உண்டோ என்று தேடியபடி, அது கிடைக்காமல், சரீரம் தளர்ந்து, துன்பம் அடைந்து. (அவமே ஐயப்படா நிற்பர்) – எம்பெருமானார் என்னும் இந்த விஷயமே நமக்கு ஏற்றது என்று அவரிடம் அடிபணிந்து, கரையேறுவதற்குக் காரணமாக உள்ள உண்மையான ஞானத்தைப் பெறாத உங்களுக்கு, இனி பிழைக்க இடம் இல்லை என்று உபதேசிப்பதும் வீணே ஆகும். இனி நம்மைக் காப்பாற்றுபவர்கள் யாரும் இல்லை என்று சந்தேகம் கொண்டபடியே இவர்கள் இருப்பார்கள் என்பதால் வீணே ஆகும் என்று கருத்து. (வையத்துள்ளார் நல்லறிவிழந்தே) – இப்படியாக இந்த உலகில் உள்ளவர்கள் சிறந்ததும், தூய்மையானதும் ஆகிய ஞானத்தை இழந்து நிற்கிறார்களே, இதன் காரணமாக நம்முடைய உபதேசமும் வீணாகவே முடிந்தது. கீதை (4-40) - ஸம்சயாத்மா விநச்யதி – சந்தேகம் கொண்டவன் அழிவான் – என்பதற்கு ஏற்ப இவர்கள் அழிந்தார்கள். அனைத்து உயிர்களின் நன்மையைக் கருத்தில் கொள்ளும் என்ணம் கொண்டவர் என்பதால் அமுதனார் அவர்களுக்காகத் தவிக்கிறார்.

80. நல்லார் பரவும் இராமாநுசன் திருநாமம் நம்ப
வல்லார் திறத்தை மறவாதவர்கள் எவர் அவர்க்கே
எல்லாவிடத்திலும் என்றும் எப்போதிலும் எத்தொழும்பும்
சொல்லால் மனத்தால் கருமத்தினால் செய்வன் சோர்வின்றியே

விளக்கவுரை - “கலியும் கெடும் கண்டு கொண்மின்”, என்று நம்மாழ்வார்; “மேவினேன் அவன் பொன்னடி மேன்மை”, என்று மதுரகவியாழ்வார்; “ஆம் முதல்வன்”, என்று ஆளவந்தார் ஆகிய பலரும் எம்பெருமானாரின் திருஅவதாரத்திற்கு முன்பே, அவரைப் போற்றியபடி இருந்தனர். இப்படியாக உள்ள எம்பெருமானாரின் திருநாமத்தை மட்டுமே

நெஞ்சில் கொண்டு, அதனை மட்டுமே தங்கள் பாதுகாப்பு என்று கூரத்தாழ்வான், எம்பார் போன்றவர்கள் இருந்தனர். இவர்கள் இவ்விதம் இருந்த விதத்தை பற்றியும், இவர்களைப் பற்றியே பேசியபடியும், இவர்களைப் பற்றிக் கூறினாலே முகம் மலரும்படியும் ஒரு சிலர் இருக்கக்கூடும். இப்படிப்பட்ட உயர்ந்தவர்களுக்கு எங்கும், எப்போதும், எந்த நிலையிலும் – நான் எனது வாக்கலும், மனதாலும், உடலாலும் எந்தவிதமான தளர்வும் இன்றி கைங்கர்யம் செய்தபடி இருக்கக்கடவேன்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே எம்பெருமானார் துர்மத நிரஸநம் பண்ணியும் ப்ரமாணிகமாக வேதமார்க்க ப்ரதிஷ்டாபநம் பண்ணியுமிருக்கச் செய்தே, அஜ்ஞாந ப்ரசுரமான இந்த பூலோகத்திலே யிருந்துள்ள சேதநர் அவரை ஆச்ரயிக்க இசையாதே, வேறொரு ரக்ஷகாந்தரமுண்டோவென்று தேடித் தடுமாறித் திரிந்து அவஸந்நராய் விட்டார்களென்று அவர்கள் படியைச் சொல்லி, இதிலே அவர்களைப் போலன்றிக்கே அவர்களிற்காட்டில் **அத்யந்த விலக்ஷணராய் எம்பெருமானார் திருநாமத்தையே விச்வஸித்திருக்கும் மஹாத்மாக்களிடத்திலே பக்த ஸ்நேஹராய் ஒருகாலமும் அவர்களை விஸ்மரியாதே யிருக்குமவர்கள் யாவர் சிலர் அந்த ததீயர்க்கே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யங்களையும் ஸர்வகரணங்களாலும் ஸர்வருமறியும்படி பண்ணக்கடவேனென்று தம்முடைய நிஷ்டையைச் சொல்லுகிறார்.**

விளக்கம் – கடந்த பாசுரத்தில், எம்பெருமானார் வேதங்களுக்குப் புறம்பாக உரைத்த மதங்களைத் தள்ளியும், வேதமார்க்கமே மிகவும் உயர்ந்த ப்ரமாணம் என்று நிலைநாட்டியும் செய்தபோதிலும், அறியாமையின் பிறப்பிடமாக உள்ள இந்தப் பூலோகத்தில் உள்ள சேதநர்கள் பலரும் அவரை ஏற்பதற்கு ஒப்புக்கொள்ளாமல், தங்களைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற தேவதை வேறு ஏதேனும் உண்டோ என்று தேடித் திரிந்து, இறுதியில் ஓய்ந்துவிட்டனர் என்று அவர்களுடைய நிலையை உரைத்தார். இந்தப் பாசுரத்தில் - அவர்களைப் போன்று அல்லாமல், அவர்களைக் காட்டிலும் மிகவும் வேறுபட்ட மேன்மை கொண்டவர்களாகவும், எம்பெருமானாருடைய திருநாமத்தை மட்டுமே எப்போதும் ஆழ்ந்து நம்பியவர்களாகவும் உள்ள மஹாத்மாக்களிடம் ஈடுபட்டு, நட்புடன் அவர்களை எப்போதும் மறக்காமல் ஒரு சிலர் உள்ளனர்; அப்படிப்பட்ட அடியவர்களுக்கு மட்டுமே அனைத்து இடங்கள், அனைத்து காலங்கள், அனைத்து நிலைகள் ஆகியவற்றில் அனைத்துவிதமான கைங்கர்யங்களை, அனைத்து உடல்

உறுப்புக்களாலும், அனைவரும் அறியும்படியாகச் செய்தபடி இருப்பேன் என்று தனது ஈடுபாட்டை உரைக்கிறார்.

வ்யாக்யானம் – (நல்லார் பரவுமிராமானுசன்) "நல்லார் நவில் குருகூர் நகரான்" என்று திருநகரியிலே வர்த்திக்கும் ஸத்துக்களாலே விரும்பப்படும் **நம்மாழ்வாரைப்போலே**, "கலியும் கெடும் கண்டு கொண்மின்" என்று **அவர் தம்மாலும்**, "மேவினேன் அவன் பொன்னடி" என்று அவர்க்கு அந்தரங்கரான **ஸ்ரீமதுரகவிகளாலும்**, அவர் தம்முடைய ப்ரஸாதத்தாலே பவிஷ்யதாசார்யா விக்ரஹத்தைப் பெற்று ததாராதந முகேந **ஸ்ரீமந்நாதமுநிகளாலும்**, "ஆ முதல்வன்" என்று தத் வம்ச்யரான **ஆளவந்தாராலும்** விரும்பப்பட்ட **எம்பெருமானாருடைய**. இவர்களெல்லாரும் இப்புடைகளாலே எம்பெருமானாருடைய வைபவத்தை முந்துற முன்னம், "இந்நானிலத்தே வந்து நாட்டினான்" என்று வெளியிட்ட பின்பு, அத்தைக் கண்டு தெளிந்திறே **ஆழ்வான் ஆண்டான்** தொடக்கமானார் அவர் தம்மைப் பரவத் தொடங்கினது. "அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து தத: பரம் பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ ராமாநுஜஸ் ஸ்ம்ருத:" என்று நாரத புராணோக்த வசநத்தை ஸத்துக்கள் வாசித்துக் கொண்டு போருவர்களிறே. "அர்வாஞ்சோ யத் பத ஸரஸிஜ த்வந்த்வம் ஆச்ரித்ய பூர்வே மூர்த்நாயஸ்யாந்வயம் உபகதா தேசிகா முக்திமாபு: ஸோயம் ராமாநுஜ முநிர் அபி" என்கிறபடியே ஸத்துக்களடங்கலும், இருந்தவிடங்களிலே ப்ரேம பரவசராய்க் கொண்டு ஏத்தும்படியான எம்பெருமானாருடைய.

விளக்கம் - **(நல்லார் பரவும் இராமானுசன்)** - திருவிருத்தம் (100) – நல்லார் நவில் குருகூர் நகரான் - என்பதற்கு ஏற்ப ஆழ்வார் திருநகரியில் உள்ள ஸாதுக்களால் விரும்பப்படும் நம்மாழ்வார் போன்று, திருவாய்மொழி (5-2-1) – கலியுங்கெடும் கண்டு கொண்மின் - என்று நம்மாழ்வாராலும், கண்ணிநுண்சிறுத்தாம்பு (2) – மேவினேன் அவன் பொன்னடி - என்று நம்மாழ்வாருடைய அந்தரங்க சிஷ்யராகிய மதுரகவியாழ்வாராலும், அவர் மூலமாக பவிஷ்யத் ஆசார்ய விக்ரஹத்தைப் பெற்று அதனை ஆராதிப்பதன் மூலம் நாதமுனிகளாலும், திருவாய்மொழி (7-9-3) – ஆமுதல்வன் - என்று நாதமுனிகளின் பரம்பரையில் வந்தவராகிய ஆளவந்தாராலும் பெரிதும் விரும்பப்பட்ட எம்பெருமானாரை. இவர்கள் அனைவரும் இவ்விதமாக எம்பெருமானாருடைய

வைபவத்தை முதலிலேயே இராமானுச நூற்றந்தாதி (53) – இந்நானிலத்தே வந்து நாட்டினன் - என்பதற்கு ஏற்ப வெளியிட்டார்கள். அதனைக் கண்டு, மனம் தெளியப் பெற்ற பின்னர் கூரத்தாழ்வான், ஆண்டான் போன்றவர்கள் எம்பெருமானாரை அண்டி நின்றனர். நாரதபுராணம் - அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்து தத: பரம் பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ ராமானுஜஸ் ஸ்ம்ருத: - ஆதிசேஷன் தனது முதல் அவதாரமாக லக்ஷ்மண ரூபத்திலும், அடுத்து பலராம ரூபத்திலும், மூன்றாவதாகக் கலியுகத்தில் இராமானுஜராகவும் அவதாரம் செய்தான் - என்பதான நாரதபுராணத்தில் உள்ள வசனத்தை ஸாதுக்கள் எப்போதும் கூறியபடியே இருப்பார்கள். அர்வாஞ்சோ யத் பத ஸரஸிஜ த்வந்த்வம் ஆச்ரித்ய பூர்வே மூர்த்நாயஸ்யாந்வயம் உபகதா தேசிகா முக்திமாபு: ஸோயம் ராமானுஜ முநிர் அபி - எம்பெருமானாருக்குப் பின்பு வந்த ஆசார்யர்கள் அனைவரும் அவருடைய திருவடித் தொடர்பு மூலமே முக்தி பெற்றனர். எம்பெருமானாருக்குப் முன்பு இருந்த ஆசார்யர்கள் அனைவரும் அவருடைய திருமுடித் தொடர்பு மூலமே முக்தி பெற்றனர் - என்பதற்கு ஏற்ப அனைத்து ஸாதுக்களாலும், தாங்கள் இருந்த இடத்திலேயே இருந்தபடி ப்ரேமையால் பரவசம் அடைந்து புகழும்படியாக உள்ள எம்பெருமானாருடைய.

வ்யாக்யானம் – (திருநாமம் நம்பவல்லார் திறத்தை) – "ந சேத் ராமானுஜேத் யேஷா சதுரா சதுரக்ஷரீ காமவஸ்த்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச:" என்றும், "**ராமானுஜ திவாகர**:" என்றும், "**ராமானுஜ பதாம்போஜ** ஸமாச்ரயண சாலிந:" என்றும், "**ராமானுஜ பதச்சாயா**" என்றும், "தஸ்மை ராமானுஜார்யாய நம: பரம யோகிநே" என்றும், "ராமானுஜார்யம் நமதேத்யவாதீத்" என்றும், "தஸ்மிந் ராமானுஜார்யே" என்றும், "ராமானுஜச்ச சரணமஸ்து" என்றும், "ராமானுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்த்நா" என்றும் **சதுரக்ஷரியான "ராமானுஜா" என்கிற திருநாமத்தினுடைய** வ்யதிரேகத்தில் தரியாமையை ஏறிட்டுக்கொண்டு, அத்தையே தங்களுக்குத் தஞ்சமாக விச்வஸித்து த்ருடாத்யவஸாய யுக்தராயிருக்கும் **ஆழ்வான்**, **ஆண்டான்**, **எம்பார் முதலான முதலிகளுடைய ப்ரகாரத்தை**. **நம்புதல்** – விச்வஸித்தல். **திறம்** – ப்ரகாரம்.

விளக்கம் – (திருநாமம் நம்பவல்லார் திறத்தை) - ந சேத் ராமானுஜேத் யேஷா சதுரா சதுரக்ஷரீ காமவஸ்த்தாம் ப்ரபத்யந்தே ஜந்தவோ ஹந்த மாத்ருச: - "ராமானுஜ" என்னும்

நான்கு எழுத்துகள் கொண்ட மந்த்ரம் இல்லை என்றால், புழு போன்ற அற்பனாகிய என் போன்றவர்களுடைய கதி என்னவாயிருக்கும் – என்றும், ராமாநுஜ திவாகர: - இராமானுஜர் என்னும் சூரியன் – என்றும், ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: - இராமானுஜரின் திருவடித்தாமரைகளை அண்டி நின்று – என்றும், ராமாநுஜ பதச்சாயா – இராமானுஜருடைய திருவடிகளின் நிழல் – என்றும், தஸ்மை ராமாநுஜார்ய நம: பரமயோகிநே – மிகவும் உயர்ந்த யோகியான இராமானுஜருக்கு எனது நமஸ்காரங்கள் – என்றும், நடாதூர் அம்மாள் - ராமாநுஜார்யம் நமத இதி அவாதி – எம்பெருமானாரையே அண்டி நின்று – என்றும், தஸ்மிந் ராமாநுஜார்யே – என்றும், ராமாநுஜச் சரணமஸ்து – என்றும், ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்நா – என்றும் கூறுவதற்கு ஏற்ப நான்கு எழுத்து மந்திரமான "ராமாநுஜ" என்பதான திருநாமத்தைப் பிரிய நேர்ந்தால் தாங்க இயலாது என்ற நிலை ஏற்பட, அதனையே தங்களுடைய தஞ்சம் என்று விச்வாஸம் கொண்டவர்களாக, உறுதியான நம்பிக்கையுடன் நின்ற கூரத்தாழ்வான், திருமாலையாண்டான், எம்பார் போன்ற ஆசார்யங்களுடைய ப்ரபாவத்தை.

வ்யாக்யானம் – "யதாதே தேஷு வர்த்தேரந் ததா தேஷு வர்த்தேதா:", "யாந்யஸ்மாகம் ஸுசரிதாநி தாநி த்வயோபாஸ்யாநி", "யத்யார்யா க்ரியமாணம் ப்ரசம்ஸந்தி ஸ தர்மோ யத்தர்ஹந்தே ஸ அதர்ம:", "வேத சாஸ்திர ரதா ரூடா ஞான கட்கதரா த்விஜா க்ரீடார்த்த மபியத் ப்ரூயு சதர்ம பரமோ மத", "ஏவ தாவந்தி சாஸ்த்ராந்", "ஸமய நியதயா *ஸாது வ்ருத்யா* ஸமேதம்", "பரிக்ராஹ்யம் பூர்வாசார்யர்களுடைய வசநமும் அநுஷ்டாநமும்" என்று இப்படி ப்ரமாண ஸஹஸ்ரத்தாலே ப்ரதிபாதிக்கப்பட்ட சிஷ்டருடைய ஜ்ஞாநாநுஷ்டாந ப்ரகாரத்தையென்றபடி.

விளக்கம் – தைத்திரீய உபநிஷத் (1-11-4) – யதாதே தேஷு வர்த்தேரந் ததா தேஷு வர்த்தேதா: - ஆசார்யர்கள் எவற்றை விட்டு விலகுவார்களோ அவற்றி விட்டு நீயும் விலகவேண்டும் – என்றும், தைத்திரீய உபநிஷத் (1-11-2) – யாந்யஸ்மாகம் ஸுசரிதாநி தாநி த்வயோபாஸ்யாநி – நம்முடைய ஆசார்யர்களுடைய பழக்கவழக்கங்களும் சரிதங்களும் எவை உள்ளதோ அதனையே பின்பற்றவேண்டும் – என்றும், ஆபஸ்தம்ப தர்மஸூத்ரம் - யத்யார்யா க்ரியமாணம் ப்ரசம்ஸந்தி ஸ தர்மோ யத்தர்ஹந்தே ஸ அதர்ம: - நம்முடைய ஆசார்யர்கள் எதனைத் தர்மம் என்று கூறினரோ அதுவே தர்மம், எதனை

அதர்மம் என்று கூறினரோ அதுவே அதர்மம் – என்றும், வேத சாஸ்திர ரதா ரூடா ஞான கட்கதரா த்விஜா க்ரீடார்த்த மபியத் ப்ரூயு சதர்ம பரமோ மத – வேதசாஸ்த்ரம் என்னும் தேரில், ஞானம் என்னும் கத்தியை வைத்தபடி ஏறும் ஆசார்யர்கள் கூறுவதே உயர்ந்த தர்மம் – என்றும், ஏவ தாவந்தி சாஸ்த்ராந் – அவையே சாஸ்த்ரங்கள் – என்றும், ஸமய நியதயா ஸாது வ்ருத்யா ஸமேதம் – ஸாதுக்களால் கூறப்படுவதே கடைப்பிடிக்க வேண்டியதாகும் – என்றும், ஸ்ரீவசனபூஷணம் (274) – பரிக்ராஹ்யம் பூர்வாசார்யர்களுடைய வசநமும் அநுஷ்டாநமும் - நாதமுனிகள் தொடக்கமாக உள்ள பூர்வாசார்யர்களின், அறியப்படவேண்டிய பொருள்களை நன்கு விளக்குகின்ற திவ்யமான சொற்கள் மற்றும் அந்தச் சொற்களைப் பின்பற்றி உள்ளதான நேர்மையான நடத்தை – என்றும் உள்ள இவ்விதமான ஆயிரக்கணக்கான ப்ரமாண வாக்கியங்களால் வெளிப்படுத்தப்பட்ட சிஷ்யர்களுடைய ஞானம் மற்றும் கர்மங்களைக் கடைப்பிடித்தல் போன்ற தன்மைகளை.

வ்யாக்யானம் – (மறவாதவர்கள் யவர்) – "ஸ்வாத்யாயாந்மா ப்ரமத: ஆசார்யாய ப்ரியம் தநம் ஆஹ்ருத்ய ப்ரஜா தந்தும் மாவ்யவச்சேத்ஸீ", "ஸத்யாந் ந ப்ரமதிதவ்யம் தர்மாந் ந ப்ரமதிதவ்யம்" என்கிறபடியே விச்வாஸ மாந்த்யத்தாலே அத்தை மறந்து போகையன்றிகே அநவரதம் அநுஸந்தித்துக் கொண்டிருக்கிறவர்கள் யாவர் சிலர். **எம்பெருமானாருடைய திரு நாமத்தை "நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே"** என்கிறபடியே முதலடியிலே தாம் அநுஸந்தித்தும், **"இராமாநுசனென்று சொல்லுமினோ"** என்கிறபடியே லோகத்தாரெல்லார்க்கும் உபதேசித்தும், **"சயந்தரு கீர்த்தி யிராமாநுச முனி தாளிணை மேலுயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமுதோங்கு மன்பா லியம்புங் கலித்துறையந்தாதி யோத"** என்கிறபடியே ப்ரபந்நர்களுக்கெல்லாம் நித்யாபி ஜப்யமாம்படி க்ரந்தீகரித்தும் போருகைக்குறுப்பான இவ்வதிகார முண்டாம்படி **கருந்தறையான வென்னைத் திருத்தி யருளின ஆழ்வான் போல்வரென்றபடி**. **"நம்பவல்லார் திறத்தை மதியாதவர்கள்"** என்று பாடமானபோது, **மதித்தல்** – விடுதலாய், அவர்கள் படியை பரிச்சேதியாதவர்களென்று பொருளாகக் கடவது.

விளக்கம் - (மறவாதவர்கள் யவர்) - தைத்திரீய உபநிஷத் (1-11-1) – ஸ்வாத்யாயாந்மா ப்ரமத: ஆசார்யாய ப்ரியம் தநம் ஆஹ்ருத்ய ப்ரஜா தந்தும் மாவ்யவச்சேத்ஸீ – வேதம் ஓதுவதைக் கைவிடாதீர்கள். ஆசார்யனுக்கு விருப்பமான செல்வத்தைக் கொடுத்து

அவரை மனநிறைவு பெறச் செய்யுங்கள்; சந்ததிச் சங்கிலியை வெட்டாதீர்கள் – என்றும், தைத்திரீய உபநிஷத் (1-11-2) – ஸத்யாந் ந ப்ரமதிதவ்யம் தர்மாந் ந ப்ரமதிதவ்யம் - உண்மையிலிருந்து விலகாதீர்கள். தர்மத்திலிருந்து விலகாதீர்கள் – என்றும் கூறுவதற்கு ஏற்ப விச்வாஸக் குறைவு காரணமாக மறந்து போய்விடாமல், எப்போதும் இடைவிடாமல் எண்ணியபடி உள்ளவர்கள். எம்பெருமானாருடைய திருநாமத்தை இராமாநுச நூற்றந்தாதி (1) - **நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே** – என்பதற்கு ஏற்ப முதல் அடியில் திருவரங்கத்தமுதனாராகிய தான் எண்ணியும், **இராமாநுசனென்று சொல்லுமினோ** - என்று கூறுவதற்கு ஏற்ப உலகில் உள்ளவர்களுக்கு உபதேசித்தும், **சயந்தரு கீர்த்தி இராமாநுச முனி தாளிணை மேல் உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமுதோங்கும் அன்பால் இயம்பும் கலித்துறை அந்தாதி ஓத** - என்பதற்கு ஏற்ப அனைத்து ப்ரபந்நர்களுக்கும் அன்றாடம் ஜபிக்கும்படியாக நூல்களில் விளக்கியும் செய்வதற்கு ஏற்றபடியான தகுதி உண்டாகும்படி, ஏதும் விளையாத நிலமாக இருந்த என்னைத் திருத்திய கூரத்தாழ்வான் போன்றவர்கள். "நம்பவல்லார் திறத்தை மதியாதவர்கள்" என்று இங்கு படித்தால், அவர்களுடைய தன்மைகளை அளவிட்டு அறியாதவர்கள் என்று கருத்து.

வ்யாக்யானம் – (அவர்க்கே) அவர்களுக்கு முகமலர்த்தியுண்டென்றும், எனக்கு உஜ்ஜீவநமுண்டென்றும் இருவர்க்குங்கூடப் பொதுவாக பண்ணுகை தவிர்ந்து, "தனக்கேயாக வெனைக் கொள்ளுமீதே" என்கிறபடியே, **அவர்களுடைய முகமலர்த்தியே புருஷார்த்தமென்று அத்யவஸித்து நின்று**. "**அவர்க்கே**" என்ற அவதாரணத்தாலே இவ்வர்த்தம் தோற்றுகிறதிறே. (எல்லாவிடத்திலுமென்று மெப்போதிலும்) "ஸர்வேஷு தேச காலேஷு ஸர்வாவஸ்த்தாஸு சாச்யுத கிங்கரோஸ்மி" என்றும், "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி" என்றும், "காலம் ஸகலம் அபி ஸர்வத்ர ஸகல அவஸ்த்தாஸ்வி: ஸ்யு: மம" என்றுஞ் சொல்லுகிறபடியே ப்ரதம நிஷ்டர் விஷயத்திலே ஈடுபட்டாப்போலே, "தஸ்மாத் மத் பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத:" என்றும், "தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதாஹ்யஹம்" என்றும் அவன்றானே அருளிச் செய்தானாகையாலே, ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும். (எல்லாவிடத்திலும்) ஸர்வதேசங்களிலும். இடம் – தேசம். (என்றும்) காலோபலக்ஷிதமாயிருந்துள்ள ஸகலாவஸ்தைகளிலுமென்றபடி. (எப்போதிலும்) ஸர்வகாலங்களிலும்.

விளக்கம் - (அவர்க்கே) - இந்தச் செயல்கள் மூலம் அவர்களுக்கு முகமலர்ச்சி ஏற்படுகிறது மற்றும் எனக்குக் கரையேறும் வாய்ப்பு ஏற்படுகிறது என்பதாக இருவருக்கும் பொதுவான நன்மைகள் உண்டு என்று எண்ணுவதைத் தவிர்த்து, திருவாய்மொழி (2-9-4) – தனக்கேயாக எனைக்கொள்ளும் - என்பது போன்று, அவர்களுடைய முகமலர்ச்சி என்பதே பெரிய பலன் என்று உறுதியாக நின்று. இதனை "அவர்க்கே" என்பதில் உள்ள ஏவகாரம் மூலம் உணரலாம். (எல்லா இடத்திலும் என்றும் எப்போதிலும்) - ஸர்வேஷு தேச காலேஷு ஸர்வாவஸ்த்தாஸு சாச்யுத கிங்கரோஸ்மி – அனைத்து இடங்களிலும், காலங்களிலும், நிலைகளிலும் அச்யுதனுக்கு நான் கைங்கர்யம் செய்தபடியே இருப்பேன் – என்றும், திருவாய்மொழி (3-3-1) – ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி – என்றும், அஷ்டச்லோகி (3) – காலம் ஸகலம் அபி ஸர்வத்ர ஸகல அவஸ்த்தாஸ்வி: ஸ்யு: மம – அனைத்து காலங்களிலும் அனைத்துவிதமான நிலைகளிலும் உனது கைங்கர்யத்தை நான் – என்றும் கூறுவதற்கு ஏற்ப முதல் நிலையாக உள்ள பகவத் விஷயத்தில் ஈடுபடுவது போன்று, மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (116-23) - மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத் தஸ்மாத் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத: - எனது அடியார்கள் மீது பக்தியுள்ளவர்களிடம் எனக்கு அதிகமான ப்ரேமை உள்ளது. ஆகவே அவர்களை நன்கு ஆராதிக்க வேண்டும் – என்றும், கருடபுராணம் – பத்தி ரஷ்டவிதாஹ் யேஷா யஸ்மிந் ம்லேச்சேபி வர்த்ததே, தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதாஹ்யஹம் - எட்டுவிதமான பக்தியானது மிகவும் தாழ்ந்த குலத்தில் பிறந்த ஒருவனுக்கு உள்ளது என்றால், அவனுக்கு அனைத்து சாஸ்த்ரங்களையும் உபதேசம் செய்யலாம்; நான் எவ்விதம் வணங்கத் தக்கவனோ அதே போன்று அவனும் வணங்கத்தக்கவன் – என்றும் பகவானே அருளிச்செய்த காரணத்தினால் அனைத்து இடங்களிலும், அனைத்து காலங்களிலும், அனைத்து நிலைகளிலும். (எல்லா இடத்திலும்) - அனைத்து தேசங்களிலும், (என்றும்) - காலத்தின் மூலம் உணர்த்தப்படுவதான அனைத்து நிலைகளிலும், (எப்போதிலும்) – அனைத்து காலங்களிலும்.

வ்யாக்யானம் – (சொல்லால் மனத்தால் கருமத்தினால்) இம்மூன்றிலும். மநோ வாக் காயங்கள் மூன்றிலும். "சொல்லால் கருமத்தினால்" என்கிற இவற்றால் தத் தத் காரணங்களான வாக் காயங்களை லக்ஷிக்கிறது. (எத்தொழும்பும்) ஸர்வப்ரகார தாஸ்யமும். தொழும்பு – அடிமை. எப்பேர்ப்பட்டவென்றபடி. (சோர்வின்றியே) "வழுவிலா

வடிமை செய்ய வேண்டும் நாம்" என்று ப்ரார்த்தித்தபடியே அவிச்சிந்நமாக. **சோர்வு** – பிரிவு, செய்வன் – செய்யக்கடவன். அம்மூன்றிலும் வைத்துக் கொண்டு ஒவ்வொன்றிலே தானே ஸர்வகரணங்களாலும் ஸர்வவித கைங்கர்யங்களையும் பண்ணக் கடவே னென்கிறார். "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம்" என்று ஜீயரும் ப்ரார்த்தித்தருளினாரிறே. "நன்றும் திருவுடையோம் நானிலத்தில் எவ்வுயிர்க்கும் ஒன்றும் குறையில்லை ஓதினோம் குன்றமெடுத்தான் அடிசேர் இராமானுசன் தாள் பிடித்தார் பிடித்தாரை பற்றி" **என்னும்படியான ஸ்வாத்யவஸாயத்தை வெளியிட்டருளினாராய்த்து**.

விளக்கம் - (**சொல்லால் மனத்தால் கருமத்தினால்**) - இந்த மூன்றிலும். அதாவது மனம், வாக்கு, உடல் ஆகிய மூன்றிலும். "சொல்லால் கருமத்தினால்" என்பதன் மூலம் அந்தந்த செயல்களுக்கு உரிய உறுப்புக்களாகிய வாய் மற்றும் சரீரம் கூறப்படுகிறது. (எத்தொழும்பும்) - அனைத்துவிதமான கைங்கர்யங்களையும். எப்படிப்பட்ட அடிமைச் செயலாக இருந்தாலும். (சோர்வின்றி) - திருவாய்மொழி (3-3-1) – வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம் – என்று நம்மாழ்வார் ப்ரார்த்தித்தபடி அளவுபடாதவிதத்தில். (செய்வன்) - செய்யக்கடவன். அதாவது அந்த மூன்றிலும் ஒவ்வொன்றாலும் தானே அனைத்து உறுப்புகள் மூலம், அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்வேன் என்கிறார். யதிராஜ விம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் – என்று இதனை ஸ்வாமி மணவாள மாமுனிகளும் ப்ரார்த்தித்தார் அல்லவோ? பிள்ளைஉறங்காவில்லிதாசர் - நன்றும் திருவுடையோம் நானிலத்தில் எவ்வுயிர்க்கும் ஒன்றும் குறையில்லை ஓதினோம் குன்றமெடுத்தான் அடிசேர் இராமானுசன் தாள் பிடித்தார் பிடித்தாரை பற்றி – என்பதற்கு ஏற்ப தனது உறுதியை வெளியிட்டார் என்று கருத்து.

81. சோர்வின்றி உன்தன் துணையடிக் கீழ் தொண்டுபட்டவர்பால்
சார்வின்றி நின்ற எனக்கு அரங்கன் செய்ய தாளிணைகள்
பேர்வின்றி இன்று பெறுத்தும் இராமாநுச இனி உன்
சீர் ஒன்றிய கருணைக்கு இல்லை மாறு தெரிவுறிலே

விளக்கவுரை - மற்ற எந்த விஷயங்களிலும் மனதைத் திருப்பாமல், எம்பெருமானாரின் திருவடி நிழலில் மட்டுமே அடைக்கலம் என்று புகுந்த அவரது அடியார்களிடம் மட்டுமே நான் நீண்ட காலம் அண்டி நின்று, பகவத் விஷயமாகக் கூட ஏதும் செய்யாது இருந்தேன். அப்போது, திருவரங்கத்தில் கண்வளரும் அழகியமணவாளனின் திருமேனி நிறத்துக்கு ஏற்ப உள்ள அவனுடைய சிறந்த அழகான திருவடிகளை எனக்கு எம்பெருமானார் காட்டிக் கொடுத்தார். மேலும் அவனது திருவடிகளைப் பிரியாமல், எப்போதும் அவனுக்கு அடிமைத் தொண்டு செய்தபடி நான் இருக்கும் விதமாகவும் எம்பெருமானார் செய்தார். எம்பெருமானரே! இத்தனை கருணை பொழிந்த உம்முடைய கருணைக்கு ஒப்பு எனக் கூற ஏதும் இல்லை.

அவதாரிகை - கீழ்ப்பாட்டில் ஸர்வோத்தமரான எம்பெருமானாருடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வகரணங்களாலும் ஸர்வவித கைங்கர்யங்களும் செய்யக்கடவேனென்று அவர்கள் பக்கலிலே தமக்குண்டான ஊற்றத்தைச் சொல்லி, இதிலே – **எம்பெருமானார் திருமுகமண்டலத்தைப் பார்த்து இவ்வளவும் தேவரீர்க்கு சேஷபூதராயிருக்கிறவர்கள் திறத்திலே அடிமைத் தொழில் செய்ய இசையாத வென்னை, தாம் உகந்தாரைத் தமக்கு அந்தபுர பரிகரமாக்குகிறவர்கள் விஷயத்தில் அடிமைப்படுத்துகைக்கு உத்தேசிக்கலாய், தன்னடியார்க்கடிமைப்படாதே யிருக்கிறவர்களுக்கு அந்தத் திருவடிகளை கொடுக்க இசையாதேயிருக்கிற பெரியபெருமாளுடைய திருவடிகளிலே சேர்த்தருளின தேவரீருடைய பரமக்ருபைக்கு ஒப்பில்லை என்கிறார்.**

விளக்கம் – கடந்த பாசுரத்தில், "அனைத்துவிதங்களிலும் உயர்ந்தவராகிய எம்பெருமானாருடைய ஸம்பந்தம் பெற்றவர்களுடன் ஸம்பந்தம் பெற்றவர்களுக்கு அனைத்து இடங்களிலும், அனைத்து காலங்களிலும், அனைத்து நிலைகளிலும், அனைத்து உடல் உறுப்புக்களாலும், அனைத்துவிதமான கைங்கர்யங்களும் செய்யக் கடவேன்", என்று அவர்களிடம் தமக்கு உள்ள ஆழ்ந்த ஈடுபட்டை உணர்த்தினார். இந்தப் பாசுரத்தில் எம்பெருமானாருடைய திருமுகத்தை நோக்கியபடி, "உமக்கு அடிமையாக நின்று கைங்கர்யம் செய்தபடி இருப்பவர்களுக்கு இதுவரை நான் எந்தவிதமான அடிமைத் தொழிலும் செய்யாமல் இருந்தேன். ஆனால் நீவிர் யாரை விரும்புகிறீரோ அவர்களை உம்முடைய அந்தரங்க கைங்கர்யம் செய்யும்படியாகச் செய்து, அவர்கள் விஷயத்தில் என்னை அடிமைப்படுத்தவேண்டும் என்று நீவிர் விரும்பினீர். ஆகவே தனது அடியார்களுக்கு அடிமைப்படாமல் உள்ளவர்களுக்குத் தனது திருவடிகளை அளிக்க விருப்பம் இன்றி உள்ளவனாகிய பெரியபெருமாளுடைய திருவடிகளில் என்னைச் சேர்த்து வைத்தீர். உம்முடைய இந்தக் கருணைக்கு வேறு ஈடு இல்லை", என்கிறார்.

வ்யாக்யானம் – (சோர்வின்றியுன்றன் துணையடிக்கீழ்) "மயி ச அநந்ய யோகேந பக்தி: அவ்யபிசாரிணீ" என்று கீதாசார்யனருளிச் செய்தபடியே, வேறொரு விஷயத்திலும் மநஸ்ஸு பிரிந்து போகையன்றிக்கே, "க்ருத்வா மர்த்யமயீம் தநும் மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ர பாணிநா" என்று ஸர்வோத்தாரகரான தேவரீருடைய சேர்த்தியழகையுடைத்தான திருவடிகளின் கீழே. **(தொண்டுபட்டவர்பால்)** "நிழலும் அடிதாறும் போலே" சேஷமாயிருக்குமவர் பக்கல், "யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம்" என்று சொல்லப்பட்ட மஹத்துக்கள் விஷயத்திலேயென்றபடி.

விளக்கம் – **(சோர்வின்றி உன்தன் துணையடிக்கீழ்)** - கீதை (8-10) – மயி ச அநந்ய யோகேந பக்தி: அவ்யபிசாரிணீ – என்னிடம் வேறு எதனையும் குறித்து எண்ணாத பக்தி கொண்டபடி - என்று ஸ்ரீமத் பகவத்கீதையில் ஸர்வேச்வரன் அருளிச்செய்தபடியே, வேறு எந்த ஒரு விஷயத்திலும் மனம் நிலைதடுமாறிச் சொல்லாமல், ஜயாக்ய ஸம்ஹிதை – ஸாக்ஷாத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ர பாணிநா – ஸ்ரீமந்நாராயணன் தனது கருணையால் தூண்டப்பட்டு, மனித உருவம் எடுத்து, ஸம்ஸாரம் என்னும் ஸமுத்திரத்தில் குதித்து, ஜீவாத்மாக்களை

சாஸ்த்ரம் என்னும் தனது திருக்கரங்களால் உயர்த்துகிறான் - என்பதற்கு ஏற்ப அனைவரையும் மேலே உயர்த்துபவராகிய உம்முடைய சேர்த்தி அழகை அனுபவிக்கும்படியாக உம்முடைய திருவடிகளின் கீழே. (தொண்டுபட்டவர்பால்) - பெரிய திருவந்தாதி (31) – நிழலும் அடிதாறும் - என்பது இருப்பது போன்று, அவர்களிடம் அடிமையாக உள்ளவர்களிடம். யதிராஜ விம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் - என்று கூறப்பட்ட கூரத்தாழ்வார் முதலானவர்கள் விஷயத்தில் என்றபடி.

வ்யாக்யானம் - (சார்வின்றி நின்ற) சேருதலின்றிக்கேயிருக்கிற. (எனக்கு) அநாதிகாலமே தொடங்கி, எம்பெருமானாரை ஆச்ரயிக்குமளவும், "தஸ்மாத் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத: "என்கிறவர்த்தத்தை யறியாதே, "ந நமேயம்" என்று **ப்ரதிகூலனாய்ப் போந்த அடியேனுக்கு**. (அரங்கன் செய்ய தாளிணைகள்) ஜீவந ஹேதுவாய் போக்யமுமாயிருக்கிற சோற்றிலே ரோகோல்பணத்தாலே அருசி பிறந்தவனுக்கு விரகனான வைத்தியன் கையிலே காட்டிக் கொடுக்கும் **மாதாவைப் போலே** "மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத்" என்றும், "அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்" என்றும், "உன் அடியார்க்கு ஆட்படுத்தாய்" என்றும் சொல்லுகிறபடியே ஸ்வாச்ரிதர் பக்கலிலே அதிவ்யாமுக்த்தராய், தாம் உகந்தாரைத் தம்மடியார்க்கு "**ஏழாள்கால்**" **அடிமைப்படுத்தும் பரிமாற்றமறியும் விரகராய்**, "**செடியார் வினைகள் தீர் மருந்தே**" என்றும், "**மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கு**" என்றும் சொல்லுகிறபடியே பகவத்சேஷத்வத்துக்கும் பாகவத சேஷத்வத்துக்கும் இசையாதொழிகையாகிற **துஷ்கர்மங்களடங்கலும் நசிக்கும்படி கடாக்ஷித்தருளும் பெரியபெருமாளுடைய** திருமேனி நிறத்துக்கு பரபாகமாய், சிவப்பையும் சேர்த்தியழகையுமுடைய திருவடிகளை. காட்டிக் கொடுத்தவற்றை.

விளக்கம் – (**சார்வின்றி நின்ற**) - சேருதல் என்பது இல்லாமல் உள்ள. (எனக்கு) - எல்லையற்ற காலமாகத் தொடங்கி, எம்பெருமானாரை அண்டி நின்ற காலம் முடிய, மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (116-23) - தஸ்மாத் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத: -எனது அடியார்களை ஆகவே நன்கு ஆராதிக்க வேண்டும் - என்பதன் பொருள் அறியாமல், இராமாயணம் யுத்தகாண்டம் – ந நமேயம் – யாரையும் வணங்கமாட்டேன் – என்பது போன்று எதிராகவே நின்ற எனக்கு. (அரங்கன் செய்ய தாளிணைகள்) – உயிர் வாழ அவசியமாகவும், இன்பமாகவும் உள்ள உணவின் மீது, அஜீர்ணம் காரணமாக பிடித்தம் இன்மை ஏற்படும் ஒருவனுக்கு, மருந்து அளித்து அதனை நீக்குவதற்கு ஏற்றவனாகிய வைத்தியன் ஒருவனிடம் அழைத்துச் செல்லும் தாயைப் போன்று, மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (116-23) - மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத் - எனது அடியார்கள் மீது பக்தியுள்ளவர்களிடம் எனக்கு அதிகமான ப்ரேமை உள்ளது – என்றும், அமலனாதிபிரான் (1) – அடியார்க்கென்னை ஆட்படுத்த விமலன் – என்றும், திருப்பள்ளியெழுச்சி (10) – உன்னடியார்க்கு ஆட்படுத்தாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப தன்னுடைய அடியார்களிடம் மிகுந்த அன்பு கொண்டவனாகவும்; தம்மால் விரும்பப்படும் அடியார்களுக்கு அடியார்களாக உள்ளவர்களுக்கு ஏழு தலைமுறை முடிய அடிமைத்தனம் செய்தபடி உள்ளவிதத்தில் மாற்றவல்ல வழி அறிந்தவனாகவும்; திருவாய்மொழி (6-10-7) – செடியார் வினைகள் தீர்மருந்தே – என்றும், திருவாய்மொழி (9-3-4) – மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கு - என்றும் கூறுவதற்கு ஏற்ப பகவத் அடிமைத்தனம் மற்றும் பாகவத அடிமைத்தனம் ஆகிய எதற்கும் சம்மதிக்காமல் இருப்பதற்குக் காரணமாக உள்ள தீயகர்மங்கள் அனைத்தையும் அடியுடன் அழித்து, கடாக்ஷிப்பவனும் ஆகிய பெரியபெருமாளுடைய திருமேனி நிறத்திற்குச் சேரும்விதத்தில், சிகப்பு மற்றும் சேர்த்தி அழகு கொண்ட உம்முடைய திருவடிகளை எனக்குக் காண்பித்துக் கொடுத்தருளிய.

வ்யாக்யானம் – (**பேர்வின்றி**) ஒருகாலமும் விட்டு நீங்காதபடியாக. **பேருதல்** – நீங்குதல். (இன்று பெறுத்தும்) இப்போது நிழலும் அடிதாறும் போலே சேஷபூதனாயிருக்கிற இந்த மஹாபலத்தைப் **பெறுவித்த**. பலிப்பித்தருளின. (**இராமாநுசா**) எம்பெருமானாரே. (**இனியுன் சீரொன்றிய கருணைக்கு**) "உபாயேநது யச்சக்யம் ந தச்சக்யம் பராக்ரமை:" என்னும்படி விரகாலே "த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து" என்று அத்யந்த ப்ரார்த்தநீயமான சரம பர்வ நிஷ்டர்க்கு ஊற்றுவாயான ப்ரதம பர்வத்திலே நிற்கும்படி திருத்தியருளிய பின்பு. இப்படி க்ருஷி

பண்ணியருளின தேவரீருடைய மஹாப்ரபாபவதியாயிருக்கிற க்ருபைக்கு. **சீர்** – அழகும், மஹத்வமும். ஒன்றுதல் – **கூடுதல்**. தெரிவுறில் -ஆராய்ந்து பார்க்குமளவில். **தெரிதல்** – ஆராய்தல். (மாறு இல்லை) ஒப்பில்லை. "ஸித்திர்பவதி வா நேதி ஸம்சய: அச்யுத ஸேவிநாம்" என்கையாலே, தென்னரங்கர் சீரருளும் இது தனக்கு ஒப்பாகமாட்டாதென்று காணும் இவருடைய திருவுள்ளத்திலோடுகிறது. "ந ஸம்சய: அத்ர தத்பக்த பரிசர்யா ரதாத்மநாம்" என்று சொல்லுகையாலே இவ்வர்த்தம் ஸம்ப்ரதிபந்நமிறே. **மாறு** – ஒப்பு.

விளக்கம் - (பேர்வின்றி) - எப்போதும் நீங்காதபடி. (இன்று பெறுத்தும்) - நிழலும் அடிதாறும் என்பதற்கு ஏற்ப அடிமையாக உள்ள இந்த உயர்ந்த பலனை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த. (இராமாநுசா) - எம்பெருமானாரே. (**இனியுன் சீரொன்றிய கருணைக்கு**) - உபாயேநது யச்சக்யம் ந தச்சக்யம் பராக்ரமை: – என்பதற்கு ஏற்ப தகுந்த வழி மூலம், யதிராஜ ஸப்ததி (16) - சப்தாதி போக விஷயா ருசி: அஸ்மதீயா நஷ்டா பவதி இஹ பவத் தயயா யதீந்த்ர த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து - யதிராஜரே! அழியக்கூடிய உலக இன்பங்கள் மீது எனக்கு ஏற்படும் பற்றுகளை நீக்க நீயே அருளவேண்டும். இத்தகைய இன்பங்கள் பின்வரும் நாட்களில் துன்பமே ஏற்படுத்துவதால், இவற்றை உனது கருணை மூலம் நீக்கவேண்டும். என்னை உனது தொண்டனுக்குத் தொண்டனாகக் கொள்ளவேண்டும். இதன் மூலம் நான் உன்னைச் சரணம் என்று பற்றும்படி செய்யவேண்டும். உனக்கு அர்ப்பணிக்க என்னிடம் ஏதும் இல்லை. ஆகவே என்னிடம் இருந்து எதனையும் எதிர்பாராமல் உள்ள உனது கருணை மட்டுமே கொண்டு என்னை நீ காக்க வேண்டும் – என்று கூறுவதற்கு ஏற்ப எல்லையில்லாத, வேண்டக்கூடியதான பக்தியின் இறுதி நிலையான பாகவத பக்திக்கு முதல் நிலையாக உள்ள பகவத் பக்தியில் நிலைநிற்கும்படியாக என்னைத் திருத்திய பின்னர், இவ்விதம் செய்தருளிய உம்முடைய மிகவும் உயர்ந்த கருணைக்கு, நன்கு ஆராய்ந்து பார்த்தாலும், (மாறு இல்லை) – ஒப்பு இல்லை. சாண்டில்யஸ்ம்ருதி (1-95) - ஸித்திர்பவதி வா நேதி ஸம்சய: அச்யுத ஸேவிநாம் – எம்பெருமானை அடைந்தவர்களுக்கு பலன் கிட்டுமா என்ற ஐயம் உண்டாகலாம் – என்பதால், "தென்னரங்கன் சீர் அருளும் இவருடைய கருணைக்கு ஒப்பாகாது" என்பதற்கு ஏற்ப உள்ள அரங்கனின் கருணையும் கூட இவருடைய கருணைக்கு ஒப்பாகாது என்று அமுதனார் எண்ணுகிறார். சாண்டில்யஸ்ம்ருதி (1-95) - ந ஸம்சய: அத்ர தத்பக்த பரிசர்யா ரதாத்மநாம் –அவன் அடியார்களுக்குத் தொண்டு செய்வதில் விருப்பம் உள்ளவர்களுக்கு பலன் கிட்டுமா என்ற

ஐயமே அவசியம் இல்லை – என்பதன் மூலம் இந்தக் கருத்து தானாகவே வெளிப்படும் அல்லவோ?

வ்யாக்யானம் – அன்றிக்கே "**அரங்கன் செய்ய தாளிணைகள் - பேர்வின்றி – சோர்வின்றி யுன்றன் துணையடிக் கீழ் தொண்டுபட்டவர்பால் சார்வின்றி நின்றவெனக்கு - இன்று பெறுத்தும் இராமானுச - உன் சீரொன்றிய கருணைக்கு – தெரிவுறில்** - மாறு இல்லை" என்று அந்வயித்து, பகவத் சேஷத்வத்துக் கிசைகையாலே, பெரியபெருமாளுடைய திருவடிகளிலே ஸக்தனாய் அந்த **கர்வத்தாலே ததீயருடைய ப்ரபாபவத்தை அறியப் பெறா**தே தேவரீர் திருவடிகளுக்கு சேஷமாயிருப்பார் பக்கல் சேராதொழிந்த வெனக்கு அத்தை இன்று லபித்ததருளின தேவரீருடைய அப்ரதிம ப்ரபாவதியான க்ருபைக்கு, **ஆராய்ந்து பார்க்கில் ஒருவரும் ஸத்ருசரில்லையென்று பொருள் சொல்லவுமாம்**.

விளக்கம் – அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். இந்தப் பாசுரத்தை, "**அரங்கன் செய்ய தாளிணைகள் - பேர்வின்றி – சோர்வின்றி யுன்றன் துணையடிக் கீழ் தொண்டுபட்டவர்பால் சார்வின்றி நின்றவெனக்கு - இன்று பெறுத்தும் இராமானுச - உன் சீரொன்றிய கருணைக்கு – தெரிவுறில்** - மாறு இல்லை" என்று வரிசைப்படுத்தி, பகவத் அடிமைத்தனத்திற்கு ஏற்ப உள்ளதால், பெரியபெருமாளுடைய திருவடிகளில் ஈடுபட்டு நின்று, அந்தக் கர்வத்தால் அவனுடைய அடியார்களின் ப்ரபாவத்தை அறியாமல் இருந்தேன். இதனால் உம்முடைய திருவடிகளில் கைங்கர்யம் செய்தபடி உள்ளவர்களுடைய ப்ரபாவத்தையும் அறியாமல், அவர்களிடம் நான் சேராமல் இருந்தேன். இப்படிப்பட்ட எனக்கு அவற்றை அளித்த உதவிய உம்முடைய ஈடில்லாத கருணைக்கு வேறு யாரும் நிகர் இல்லை என்றும் பொருள் கூறலாம்.

82. தெரிவுற்ற ஞாலம் செறியப் பெறாது வெந்தீவினையால்
உருவற்ற ஞானத்து உழல்கின்ற என்னை ஒரு பொழுதில்
பொருவற்ற கேள்வியன் ஆக்கி நின்றான் என்ன புண்ணியனோ
தெரிவுற்ற கீர்த்தி இராமாநுசன் என்னும் சீர் முகிலே

விளக்கவுரை - ஆத்மா எது, ஆத்மா அல்லாதது எது என்று பிரித்து அறியும் ஞானம் எனக்குக் கைகூடவில்லை. எனது பழைய கர்மவினைகள் காரணமாக, நன்மை என்பதே இல்லாத இந்த உலகத்தில் பல பிறவிகளிலும் பிறந்து, இறந்து உழன்றபடியே, இருந்து வந்தேன் (குறிப்பு: "உருவற்ற ஞாலத்து" என்று பதத்தால் இப்போது கூறிய பொருள் கொள்ளலாம். அல்லது "உருவற்ற ஞானத்து" என்று படித்தால் பக்தி பரபக்தி போன்ற ஞானம் ஏற்படாமல் திரிந்த என்று பொருள் கொள்ளலாம்). அப்போது எம்பெருமானார் செய்தது என்ன? என்னை ஒரு நொடிப்பொழுதில் தனது கருணை கொண்டு கடாக்ஷித்தார். மிகவும் உயர்ந்த சரணாகதி பற்றிய உபதேசம் செய்து, என்னைப் ப்ரபன்னன் என்று ஆக்கினார். இவ்விதம் தனது ஆட்சியை இந்தப் பூமியில் செலுத்தியபடி இருந்தார். இவ்விதம் என்னைக் கண்டவர்கள் அனைவரும், "இவன் (திருவரங்கத்தமுதனார்) என்ன புண்ணியம் செய்தானோ?", என்று வியக்கும்படி, மிகுந்த புகழை உடையவரும், மேகம் போன்று ஏற்றத்தாழ்வு காணாமல் கருணை மழை பொழிபவரும் ஆகிய எம்பெருமானார் செய்தார்.

அவதாரிகை – "அரங்கன் செய்ய தாளிணைகள் பேர்வின்றி யின்று பெறுத்து மிராமானுச" என்று கீழ் ப்ரஸ்துதமான பரமபுருஷார்த்தத்துக் குறுப்பாக ஸாம்ஸாரிக ப்ரவ்ருத்திகளிலே மண்டியிருந்து ஸம்யஜ்ஞானத்தைப் பெறமாட்டாதே அதிக்ரூரமான துஷ்கர்மத்தாலே தேஹாத்மாபிமானியாய்க் கொண்டு ஒன்றிலும் ஒரு நிலையின்றிக்கே தட்டித் திரிகிற வென்னை, "ஆண்டுகள் நாள் திங்கள்" என்றாப்போலே சிரகாலம் கூடியன்றின்றிக்கே ஒரு க்ஷணமாத்ரத்திலே தானே நிஸ்ஸம்சயமாக தத்வஹித புருஷார்த்தங்களை தத்யாதாம்யத்தளவு முபதேசித்து, உபமாந ரஹிதமான ச்ருதத்தையுடையேனாம்படி பண்ணி, ஸர்வ விஷயமாக வர்ஷிக்கும் வர்ஷுகவலாஹக மென்னலாம்படி பரமோதாரரான எம்பெருமானார் என்ன தார்மிகரோவென்று அநுஸந்தித்து வித்தாராகிறார்.

விளக்கம் – "அரங்கன் செய்ய தாளிணைகள் பேர்வின்றி இன்று பெறுத்தும் இராமானுச" என்று கடந்த பாசுரத்தில் வெளிப்பட்டதான மிகவும் உயர்ந்த புருஷார்த்தத்திற்கு ஏற்றபடியாக, ஸம்ஸாரத்தின் செயல்களில் எப்போது முழ்கியபடி உள்ளதால் உண்மையான ஞானத்தை அடையாமல், மிகவும் தீயவையான கர்மங்கள் காரணமாக சரீரத்தையே ஆத்மா என்று எண்ணியபடி, எந்த ஒன்றிலும் நிலை நிற்காத என்னை,

இராமானுச நூற்றந்தாதி (31) – ஆண்டுகள் நாள் திங்கள் – என்பதற்கு ஏற்ற சில காலம் என்பது அல்லாமல், ஒரு நொடிப்பொழுது நேரத்தில், எம்பெருமானார் தானாகவே வந்து நின்று எந்தவிதமான ஐயமும் ஏற்படாதவிதத்தில் தத்வஹித புருஷார்த்தங்களை உண்மையான ஞானம் உள்ளது உள்ளபடி ஏற்படும்வரை உபதேசித்தார்; இவ்விதம் எந்தவிதமான உபமானத்திற்கும் சேராதவிதத்தில் கற்றலை உடையவனாக என்னைச் செய்தார். இவ்விதம் அனைவருக்கும் பொதுவாக மழையைப் பொழிகிற மழைமேகம் என்று கூறலாம்படியாக, மிகவும் உயர்ந்த தாராள குணம் கொண்ட எம்பெருமானார் எத்தகைய தர்மம் நிறைந்தவரோ? என்று இந்தப் பாசுரத்தில் எண்ணி மகிழ்கிறார்.

வ்யாக்யானம் – (தெரிவுற்ற ஞாநம் செறியப் பெறாது) தெரிவு – விவேகம். அதாவது ஆத்மா அநாத்மா விஷயமா யிருந்துள்ள புத்தி விசேஷம். ஆத்மவஸ்து உபாதேயமென்றும், அநாத்மாவான அசித்வஸ்து த்யாஜ்யமென்றும் விவேகிக்கை யென்றபடி. (உற்ற ஞானம்) அதிலே ஊற்றத்தையுடைத்தா யிருக்கும் ஜ்ஞாநம். உறுதல் – ஊற்றம். “அஸ்தி ப்ரஹ்மேதி சேத்வேத” என்று ச்ருதியும் சொல்லிற்றிறே. “அமாநித்வம் அதம்பித்வம் அஹிம்ஸா க்ஷாந்தி: ஆர்ஜவம் ஆசார்ய உபாஸநம் சௌசம் ஸ்தைர்யம் ஆத்மவிநிக்ரஹ:”, “இந்த்ரிய அர்த்தேஷு வைராக்யம் அநஹங்கார ஏவ ச ஜந்ம ம்ருத்யு ஜரா வ்யாதி துக்க தோஷ அநுதர்சநம்”, “அஸக்தி: அநபிஷ்வங்க: புத்ர தார க்ருஹாதிஷு நித்யம் ச ஸமசித்ததவம் இஷ்ட அநிஷ்ட உபபத்திஷு”, “மயி ச அநந்ய யோகேந பக்தி: அவ்யபிசாரிணீ”, “அத்யாத்ம ஜ்ஞாந நித்யதவம் தத்வ ஜ்ஞாந அர்த்த சிந்தநம் ஏதத் ஜ்ஞாநம் இதி ப்ரோக்தம் அஜ்ஞானம் யத் அத: அந்யதா”, “ஸா வித்யா யா விமுக்தயே” என்கிறபடியே ஸதஸத் விவேசந விஷயக பரிபூர்ண ஜ்ஞாநமென்றபடி. அன்றிக்கே, “தெரிவுற்ற ஞானம்” என்றது, ப்ரகாசோப யுக்த ஜ்ஞாநமென்றதாய் தத் வஸ்த்தியை யதா தர்சநம் பண்ணுக்கைக்குறுப்பான ஜ்ஞாநமென்னவுமாம். தெரிவு – ப்ரகாசம். உறுதல் – பொருந்துதல். (செறியப் பெறாது) ப்ராபிக்கப் பெறாதே.

விளக்கம் – (தெரிவுற்ற ஞாநம் செறியப் பெறாது) - தெரிவு என்றால் விவேகம். அதாவது ஆத்மா எது, ஆத்மா அல்லாதது எது என்று அறியவல்ல புத்தி. ஆத்மாவானது கைக்கொள்ளத்தக்கது என்றும், ஆத்மா அல்லாததாகிய அசித் வஸ்துக்களான சரீரம்

போன்றவை கைவிடத்தக்கவை என்றும் பிரித்து அறிதல். (உற்ற ஞானம்) - அத்தகைய பிரித்து அறிதலில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட ஞானம். தைத்திரீய உபநிஷத் (2-6-1) – அஸ்தி ப்ரஹ்ம இதி சேத் – ப்ரஹ்மத்தை உள்ளதாக அறிந்தால் – என்று ச்ருதியும் கூறியது காண்க. கீதை (13-7) – அமாநித்வம் அதம்பித்வம் அஹிம்ஸா க்ஷாந்தி: ஆர்ஜவம் ஆசார்ய உபாஸநம் சௌசம் ஸ்தைர்யம் ஆத்மவிநிக்ரஹ: - உயர்ந்தவர்களை அவமதிக்காமல் இருத்தல், வீணான பகட்டு இல்லாமை, பிறரை வருத்தாமை, பொறுமையுடன் இருத்தல், ஒரே தன்மையுடன் இருத்தல், ஆசார்யனுக்குப் பணிவிடை செய்தல், சுத்தமாக இருத்தல், உறுதியாக இருத்தல், மனதை அடக்குதல் ... - என்றும், கீதை (13-8) – இந்த்ரிய அர்த்தேஷு வைராக்யம் அநஹங்கார ஏவ ச ஜந்ம ம்ருத்யு ஜரா வ்யாதி துக்க தோஷ அநுதர்சநம் – இந்த்ரியங்களால் அறியப்படும் உலகவிஷயங்களில் பற்று நீங்கி இருத்தல், சரீரம் மற்றும் ஆத்மா மீது அபிமானம் இன்றி இருந்தல், பிறப்பு இறப்பு வயோதிகம் நோய் துக்கம் ஆகியவற்றில் உள்ள தோஷத்தை அறிதல் ... - என்றும், கீதை (13-9) – அஸக்தி: அநபிஷ்வங்க: புத்ர தார க்ருஹாதிஷு நித்யம் ச ஸமசித்தத்வம் இஷ்ட அநிஷ்ட உபபத்திஷு – உலக விஷயங்களில் பற்றில்லாமல் இருத்தல், புத்திரன் மனைவி வீடு போன்றவற்றில் விருப்பத்தைத் தவிர்த்தல், விரும்பிய பொருள் வரும்போது இன்பமும் விரும்பாதவை வந்தால் துக்கமும் அடையாமல் சமமாக இருத்தல் ... - என்றும், கீதை (13-10) – மயி ச அநந்ய யோகேந பக்தி: அவ்யபிசாரிணீ – என்னிடம் மட்டுமே, வேறு எதனிடமும் ஈடுபடாத பக்தியுடன் இருத்தல் ... - என்றும், கீதை (13-11) – அத்யாத்ம ஜ்ஞாந நித்யதவம் தத்வ ஜ்ஞாந அர்த்த சிந்தநம் ஏதத் ஜ்ஞாநம் இதி ப்ரோக்தம் அஜ்ஞானம் யத் அத: அந்யதா – ஆத்மாவைக் குறித்த ஞானத்தில் ஒருபோதும் தளராமல் ஈடுபடுதல், உண்மையான அறிவு ஏற்பட ஏதுவான சரியான சிந்தனை போன்ற பலவும் ஆத்மஞானம் உண்டாகும் வழிகளாகும். இவற்றைத் தவிர உள்ள மற்ற அனைத்தும் அஜ்ஞானமே ஆகும் – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் – ஸா வித்யா யா விமுக்தயே – மோக்ஷத்திற்கு இட்டுச் செல்வது எதுவோ அதுவே வித்யை ஆகும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப ஸத் மற்றும் அஸத் ஆகியவற்றை ஆராய்ந்து அறியத்தக்கதான பரிபூர்ணமான ஞானம் என்று பொருள். அல்லது "தெரிவுற்ற ஞானம்" என்றால், இத்தகைய விவரங்களை உணர்த்தத் தேவையான ஞானம் எனறு கொண்டு, அத்தகைய விவரங்களை உள்ளது உள்ளபடி அறிவதற்கு ஏற்ற ஞானம் என்றும் கூறலாம். (செறியப் பெறாது) – அடையப் பெறாமல்.

வ்யாக்யானம் – (வெந்தீவினையால்) அநாதிகாலமே பிடித்து இவ்வளவாக நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்த நான் தீரக் கழியச் செய்த அக்ருத்ய கரணாதிகளாலே. "வெம், தீ" என்கிற மீமிசையாலே அதினுடைய அதிக்ரௌர்யம் தோற்றுகிறது. (உருவற்ற ஞானத்து) உருமாய்ந்து கிடக்கிற ஜ்ஞாநத்தோடே. ஜ்ஞாநத்தினுடைய ஸத்தையெல்லாம் போய்த்தென்றபடி. "அஞ்ஞாநமதோந்யதுக்தம்" என்கையாலே இவ்விஷயங்களை அவகாஹிக்கிற ஜ்ஞாநமெல்லாம் உருவற்ற ஜ்ஞாநமித்தனையிறே. உரு – வடிவாகையாலும், "அர்த்தேநைவ விசேஷோ ஹி நிராகார தயாதியாம்" என்கையாலே அதுக்கு வடிவு விஷயமே யாகையாலும், "ஸந்தம்" என்கையாலே அவ்விஷயாந்தரமும் ஸ்ரீய:பதியாகையாலே தததிரிக்த விஷயங்களை அவகாஹிக்கிற ஜ்ஞாநமெல்லாம் "உருவற்ற ஞானம்" என்னக் குறையில்லையிறே. (உழல்கின்றவென்னை) பக்தி ப்ரபத்தி முதலான ஹிதங்களிலே யூன்றியிலேனாகிலும் ஒரு நிஷ்டையின்றிக்கே கொண்டிப்பசு போலே ஸ்வைரஸம்ஸாரியாய் தட்டித் திரிகிற அடியேனை. "உருவற்ற ஞாலத்து" என்ற பாடமானபோது, "உரு" என்று அழகாய், அதாவது நன்மையாய், அறுகையாவது - இன்றிக்கே யொழிகையாய். நன்மையென்பதொன்றறில்லாத ஜகத்திலே, "ஈண்டு பல் யோநிகள் தோறுழல்வோம்" என்றபடியே நாநாவித யோநிகளில் ஜநிப்பது மரிப்பதாய்த் தட்டித் திரிகிற வென்னை என்று பொருளாகக் கடவது.

விளக்கம் – (வெந்தீவினையால்) - எல்லையற்ற காலமாகத் தொடங்கி இதுநாள் முடிய நித்யஸம்ஸாரியாகவே உள்ள நான் செய்யும் செயல்கள் அனைத்துமே செய்யக்கூடாத செயல்களாகவே உள்ளன. "வெம், தீ" என்று இரண்டுமுறை ஒரே கருத்தைக் கூறுவதால், அத்தகைய செயல்களின் க்ரூரம் தெரிவிக்கப்படுகிறது. (உருவற்ற ஞானத்து) - மாறிப் போய் உள்ள ஞானத்துடன். ஞானமானது தனது இருப்பை இழந்து நிற்கிறது. ஸ்ரீவிஷ்ணுபுராணம் – அஜ்ஞாநம் அத: அந்யத் உக்தம் – அதனைத் தவிர உள்ள மற்ற அனைத்தும் அஜ்ஞானம் – என்பதால், இத்தகைய தாழ்ந்த விஷயங்களை மட்டுமே அறிந்தபடி உள்ள ஞானம் என்பது அனைத்தும் உண்மையான உருவம் இல்லாத ஞானமே ஆகும். வடிவம் என்பதாலும், அர்த்தேநைவ விசேஷோ ஹி நிராகார தயாதியாம் - என்பதாலும் இதற்கு வடிவம் என்பது விஷயமே ஆகும் என்பதாலும், ஸந்தம் – என்பதால் அத்தகைய மற்ற விஷயங்கள் என்பதும் மஹாலக்ஷ்மியின் நாயகனே ஆவான் என்பதாலும், அதனைத் தவிர்த்து உள்ள மற்ற விஷயங்களில் ஈடுபடும் ஞானம்

அனைத்தும் “உருவற்ற ஞானம்” என்று கூறப்படுவதில் தவறில்லை. (உழலின்ற) – பக்தி, ப்ரபத்தி முதலான நன்மைகளில் ஈடுபடாமல் இருந்தாலும், எந்த ஒரு கட்டுப்பாடும் இன்றி கொண்டிப்பசு போன்று அனைத்து சுவைகளிலும் ஈடுபட்டு நிற்கும் ஸம்ஸாரியாகத் திரிந்தபடி இருந்த என்னை. “உருவற்ற ஞாலத்து” என்று படித்தால், “உரு” என்பது அழகு என்றும், அதாவது நன்மை என்றும்; “அறுகை” என்பது அது இல்லாமல், அதாவது நன்மையின்றி உள்ள ஜகத்தில், இராமானுச நூற்றந்தாதி (31) – ஈண்டு பல் யோநிகள்தோறும் உழல்வோம் - என்பதற்கு ஏற்ப பலவிதமான பிறவிகளில் பிறந்து இறந்து என்றபடி திரியும் என்னை.

வ்யாக்யானம் – (ஒரு பொழுதில்) “ஸமித்பாணிச் ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் தஸ்மை ஸ வித்வாந் உபஸந்நாய ஸம்யக் ப்ரசாந்தசித்தாய யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம்” என்றும், “ஸத்புத்தி: ஸாது ஸேவீ ஸமுசித சரிதஸ் தத்வ போதாபிலாஷீ சுஷ்ருஷுஸ் த்யக்தமாந: ப்ரணிபதந பர: ப்ரச்ந கால ப்ரதீக்ஷ: சாந்தோதாந்தோ அநஸூயச் சரணம் உபகதச் சாஸ்த்ர விச்வாஸசாலீ சிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவித் அபிமதம் தத்வதச் சிக்ஷணீய:” என்றும், “தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்த்வதர்சிந:” என்றும், “ஸம்வத்ஸரம் ததர்த்தம் வா மாச த்ரயமதாபி வா பரீக்ஷ்ய விவித உபாயை: க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத்” என்றும், “ஸத்புத்தி: ஸாது ஸேவீ ஸமுசித சரிதஸ் தத்வ போதாபிலாஷீ சுஷ்ருஷுஸ் த்யக்தமாந: ப்ரணிபதந பர: ப்ரச்ந கால ப்ரதீக்ஷ: சாந்தோதாந்தோ அநஸூயச் சரணம் உபகதச் சாஸ்த்ர விச்வாஸசாலீ சிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவித் அபிமதம் தத்வதச் சிக்ஷணீய:” என்றும் பஹுப்ரகாரமாக சிஷ்யனுடைய மநஸ்ஸை பரீக்ஷித்தே உபதேசிக்கவேணுமென்று சாஸ்த்ரஞ் சொல்லா நிற்கச்செய்தேயும், உபதேசத்துக்காகத் தான் திருக்கோட்டியூர்நம்பி ஸந்நதிக்கு பதினெட்டு தரமமெழுந்தருளி நிற்கச்செய்தேயும், அவற்றையெல்லாம் தம்முடைய ஔதார்யத்தாலே காற்கடைக் கொண்டு, என்னைக் கடாக்ஷித்த அந்த க்ஷணத்திலேதானே.

விளக்கம் – (ஒரு பொழுதில்) முண்டக உபநிஷத் (1-2-12,13) – ஸமித்பாணிச் ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் தஸ்மை ஸ வித்வாந் உபஸந்நாய ஸம்யக் ப்ரசாந்தசித்தாய யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம் – அந்தச் சிஷ்ய தனது

கையில் ஸமித்தைக் கொண்டவனாக, வேதாந்தத்தை அறிந்தவரும் ப்ரஹ்மநிஷ்டையில் நிலைநிற்பவரும் ஆகிய ஆசார்யனை, அண்டவேண்டும். அந்த ஆசார்யன், தன்னை அண்டியவனும், சாந்தமான மனம் கொண்டவனும், அனைத்து இந்திர்யங்களையும் தன்வசப்படுத்தியவனும் ஆகிய அந்த சிஷ்யனுக்கு, அழிவற்ற ப்ரஹ்மத்தைக் குறித்து உபதேசிப்பானாக – என்றும், கீதை (4-34) – தத் வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ் தத்த்வதர்சிந: - அந்த ஞானத்தை உண்மையை உள்ளது உள்ளபடி காணும் ஞானிகளிடம் அறிவாயாக. அவர்களைச் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குவதாலும், அவர்களுக்குக் கைங்கர்யங்கள் செய்வதாலும், வஞ்சனை இன்றி கேள்விகள் கேட்பதாலும், அவர்கள் உனக்கு அந்த ஞானத்தை உபதேசிப்பார்கள் – என்றும், ஸம்வத்ஸரம் ததர்த்தம் வா மாச த்ரயமதாபி வா பரீக்ஷ்ய விவித உபாயை: க்ருபயா நிஸ்ப்ருஹோ வதேத் - ஒரு வருடமாவது, ஆறு மாதமாவது, மூன்று மாதமாவது பலவிதமான உபாயங்களால் சோதித்து, ஞானத்தை உபதேசிக்கவேண்டும் – என்றும், ந்யாஸ விம்சதி (3) – ஸத்புத்தி: ஸாது ஸேவீ ஸமுசித சரிதஸ் தத்வ போதாபிலாஷீ சுஷ்ருஷுஸ் த்யக்தமாந: ப்ரணிபதந பர: ப்ரச்ந கால ப்ரதீக்ஷ: சாந்தோதாந்தோ அநஸூயச் சரணம் உபகதச் சாஸ்த்ர விச்வாஸசாலீ சிஷ்ய: ப்ராப்த: பரீக்ஷாம் க்ருதவித் அபிமதம் தத்வதச் சிக்ஷணீய: - நல்ல புத்தியைக் கொண்டவனாக, ஸாதுக்களுடன் பழகுபவனாக, நேர்மையான ஒழுக்கம் கொண்டவனாக, தத்துவங்களை அறிவதில் ஆர்வம் கொண்டவனாக, ஆசார்யனுக்கு ஏற்ற பணிவிடைகளைச் செய்பவனாக, அஹங்காரத்தை கைவிட்டவனாக, ஆசார்யனை வணங்கிபவனாக, ஆசார்யனிடம் தனது ஐயங்களை நீக்கிக் கொள்ளும் காலத்தை எதிர்நோக்கியவனாக, புற இந்த்ரியங்களை அடக்கியனவாக, மனத்தை அடக்கியவனாக, பொறாமை அற்றவனாக, சரணம் அடைந்தவனாக, சாஸ்த்ரங்களில் நம்பிக்கை கொண்டவனாக, அனைத்துவிதங்களிலும் சோதிக்கப்பட்டவனாக, செய்ந்நன்றி மறவாதவனாக உள்ள சிஷ்யனே உண்மையான விஷயங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு ஏற்றவன் ஆவான் - என்றும் பலவிதமாக சிஷ்யனுடைய மனதை நன்றாக ஆராய்ந்து பார்த்த பின்னரே அவனுக்கு உபதேசம் செய்யவேண்டும் என்று சாஸ்த்ரங்கள் கூறினாலும், உபதேசம் பெறுவதற்காக எம்பெருமானாராகிய தாம் திருக்கோட்டியூர் நம்பியிடம் பதினெட்டுமுறை எழுந்தருளினாலும், அவை அனைத்தையும் தனது தாராள குணம் காரணமாக ஒதுக்கித் தள்ளி, என்னைக் கடாக்ஷித்த அந்த நொடியில்.

வ்யாக்யானம் – (பொருவற்ற கேள்வியனாக்கி) “ஸ ஏஷ தேச: கால:” என்கிற சாஸ்த்ரார்த்தத்தை உட்கொண்டு உபமாந ரஹிதமான ச்ருதத்தையுடையனாம்படி பண்ணியருளி. பொரு – உபமாநம். “தஸ்மாந் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அத்ரிக்தம் ஆஹு:” என்றும், “ஸத்கர்ம நிரதா: சுத்தா: ஸாங்க்ய யோக விதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி” என்றும், “தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸேநைவ மஹாமுநே” என்றுஞ் சொல்லுகிறபடியே, ஸர்வோத்தமையான ப்ரபத்தியை உபதேசித்து ப்ரபந்நனாம்படி பண்ணியருளி யென்றபடி. (நின்றான்) “அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் க்ருத க்ருத்யஸ்ய ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோதஹ” என்றாப்போலே க்ருதக்ருத்யராய் இந்த பூமியிலே தனிக்கோல் செலுத்திக் கொண்டு எழுந்தருளியிருந்தார். அவ்வளவும், “நாதி ஸ்வஸ்த மநா:” என்னும்படியிருந்தார் காணும்.

விளக்கம் – (பொருவற்ற கேள்வியனாக்கி) - இராமாயணம் யுத்தகாண்டம் (17-57) - ஸ ஏஷ தேச: கால: - இந்த இடம், காலம் என்பதைச் சரியாக அறிந்து - என்ற சாஸ்த்ரத்தைக் கைக்கொண்டு வேறு உபமானம் கூற இயலாதபடி என்னைச் செய்தருளி, தஸ்மாந் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அத்ரிக்தம் ஆஹு: - சரணாகதியே அனைத்து தவங்களைக் காட்டிலும் மேலானது ஆகும் – என்றும், லக்ஷ்மீ தந்த்ரம் (16-62) - ஸத்கர்ம நிரதா: சுத்தா: ஸாங்க்ய யோக விதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி – ஞான யோகத்தைக் கைக்கொண்டவர்கள், பக்தி யோகத்தைக் கைக்கொண்டவர்கள், ஆத்மாத் தூய்மைப்படுத்தவல்ல கர்மங்களை செய்பவர்கள் ஆகிய பலரும் ப்ரபத்தி செய்தவன் பெறுவதில் கோடியில் ஒரு பங்கைக் கூடப் பெறத் தகுதியானவர்கள் அல்லர் – என்றும், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37, 25 – 27) - யத்யேந காமகாமேந ந ஸாத்யம் ஸாதநாந்தரை: முமுக்ஷுணா யத் ஸாங்க்யேந யோகேந ந ச பக்தி: ப்ராப்யதே பரமம் தாம யதோ நாவர்த்ததே யதி: தேந தேநாப்யதே தத்தத் ந்யாஸேநைவ மஹாமுநே பரமாத்மா ச தேநைவ ஸாத்யதே புருஷோத்தம: - பயனில் விருப்பம் கொண்ட பலராலும், எந்தெந்த பலன்கள் மற்ற உபாயங்களால் அடைய இயலாதோ, முமுக்ஷுவால் மோக்ஷம் என்னும் பலன் கர்மயோகம், ஞானயோகம் மற்றும் பக்தியோகம் ஆகியவற்றால் அடைய இயலாதோ அப்படிப்பட்ட பலவிதமான பலன்களும் ப்ரபத்தியால் அடையப்படுகின்றன. அப்படிப்பட்ட ப்ரபத்தி மூலமே புருஷோத்தமனாகிய பரமாத்மாவும் அடையப்படுகிறான். எங்கு சென்றால் மீண்டும் திரும்புவது என்பது இல்லையோ, அந்த இடமே முமுக்ஷுக்களால் விரும்பப்படும் இடமாகும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப மிகவும் உயர்ந்த ப்ரபத்தியை உபதேசித்தருளி என்னை ப்ரபந்நன் ஆக்கினார் என்று கருத்து. ஸங்க்ஷேப

இராமாயணம் (85) - அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் க்ருத க்ருத்யஸ்ய ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோதஹ – இலங்கையில் உள்ள ராக்ஷஸர்களின் அரசனாக விபீஷணனை முடிசூட்டிய பின்னர், இராமன் தான் செய்யவேண்டியதைச் செய்து, தனது கவலையைத் துறந்தான் – என்பதற்கு ஏற்ப செய்யவேண்டிய அனைத்தையும் செய்தவராக இந்தப் பூமியில் வேதமார்க்கத்தை நிலைநிறுத்தியபடி இருந்தார். ஆனாலும், ந அதி ஸ்வஸ்த்த மநா: - மனதில் நிறைவு இன்றி – என்பதற்கு ஏற்ப இருந்தார்.

வ்யாக்யானம் – (தெரிவுற்ற கீர்த்தி யிராமானுசனென்னும் சீர்முகிலே) "திக்குற்ற கீர்த்தி" என்கிறபடியே விசேஷஜ்ஞர் அவிசேஷஜ்ஞர் என்னும் விபாகமற எல்லார்க்கும் ப்ரகாசியா நின்றுள்ள குணவத்தா ப்ரதையையுடையவராய், "குணம் திகழ்கொண்டல்" என்கிறபடியே என்றுமொக்க பரமோதாரரான எம்பெருமானார். (தெரிவுற்ற கீர்த்தி) ப்ரகாசயுக்தையான கீர்த்தி. சீர்முகில் - சீரிய முகில், முகிலுக்குச் சீர்மையாவது ஜலஸ்தல விபாகமற வர்ஷிக்கை. (என்ன புண்ணியனோ) என்ன தார்மிகரோ. "யத் த்வத் ப்ரியம் ததிஹ புண்யம்" என்கிறபடி ஸர்வேச்வரனுடைய முகமலர்த்திக்காக அவரை இப்படி திருத்தி அங்குத்தைக்காளாம்படி பண்ணியருளினாரென்றதாய்த்து.

விளக்கம் – (தெரிவுற்ற கீர்த்தி இராமானுசன் என்னும் சீர்முகிலே) – "திக்குற்ற கீர்த்தி" என்பதற்கு ஏற்ப ஞானம் உள்ளவர்கள், அஜ்ஞானம் நிறைந்தவர்கள் என்ற வேறுபாடு ஆராயாமல், அனைவருக்கும் ஒரே போன்று வெளிப்படுகின்ற குணங்களைக் கொண்டவராகவும், இராமாநுச நூற்றந்தாதி (60) – குணந்திகழ் கொண்டல் – என்பதற்கு ஏற்ப அனைவருக்கும் ஒரே போன்று தாராளமாக இருப்பவராகவும் உள்ள எம்பெருமானார். (தெரிவுற்ற கீர்த்தி) - தானாகவே அனைவருக்கும் புலப்படுகின்ற கீர்த்தி. சீர்முகில் என்றால் சீரியமுகில்; மேகத்திற்குச் சீர்மை என்பது நீர்நிலை, கட்டாந்தரை என்று ஆராயாமல் ஒரே போன்று மழையைப் பொழிவதாகும். (என்ன புண்ணியனோ) - எத்தகைய தார்மிகரோ. அதிமாநுஷ்யஸ்தவம் – யத் த்வத்ப்ரியம் ததிஹ புண்யம புண்ய மந்யத் - எது உனக்கு விருப்பமோ அதுவே புண்ணியம், எது விருப்பம் அல்லனவோ அதுவே பாவம் – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனுடைய திருமுகம் மலரவேண்டும்

என்பற்காக, அமுதனாரை இவ்விதம் திருத்தி, ஸர்வேச்வரனுக்கு ஏற்றபடி அவரை மாற்றினார் என்று கருத்து.

83. சீர்கொண்டு பேரறம் செய்து நல்வீடு செறிதும் என்னும்
பார்கொண்ட மேன்மையர் கூட்டனல்லேன் உன் பதயுகமாம்
ஏர்கொண்ட வீட்டை எளிதினில் எய்துவன் உன்னுடைய
கார்கொண்ட வண்மை இராமாநுச இது கண்டுகொள்ளே

விளக்கவுரை - "என்னிடம் எந்த கதியும் இலை", என்ற சிந்தனை; பகவத் பக்தியில் ஏற்படும் ருசி; "அவன் நம்மை எப்போதும் காப்பான்", என்ற மகாவிச்வாசம் ஆகியவற்றை உள்ளடக்கிய சரணாகதி என்ற ப்ரபத்தியைச் செய்து; ஆத்ம அனுபவமாகிய கைவல்யம் போல் இல்லாமல் மிக உயர்ந்த மோக்ஷம் என்னும் புருஷார்த்தத்தை வேண்டி நின்று; பரந்த இந்தப் பூமியில் மேன்மையுடன் விளங்கும் ப்ரபன்னர்களின் கோஷ்டியில் சேர எனக்குத் தகுதி இல்லை. ஆனால் எம்பெருமானாரே! உம்முடைய திருவடிகள் என்ற உயர்ந்த மோக்ஷத்தை நான் அடைந்துவிட்டேன். இந்தப் பேறும் எனது முயற்சியால் வந்தது அன்று, உம்முடைய மேகம் போன்று கருணை மூலமாகவே வந்தது. எம்பெருமானாரே! இவற்றை நான் கூறவும் வேண்டுமோ? நீவிர் பார்த்தவுடனே அறிந்து கொள்ள இயலுமே!

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே இவர் தம்முடைய ஹர்ஷத்துக்குப் போக்குவீடாக, "**பொருவற்ற கேள்வியனாக்கி நின்றான்**" என்று சொன்னவாறே, அத்தைக் கேட்டருளி, **உபமாந ரஹிதமான ச்ருதத்தை**யுடையேனாம்படி பண்ணியருளினாரென்று நீர் நம்மை ச்லாகித்தீர், உம்மை யொருவரையே நாம் அப்படி பண்ணினது, **ஒரு நாடாக அப்படி பண்ணி பரமபதத்தில் கொண்டு போகைக்கு பக்தகங்கணராயன்றோ நாம் அவதரித்தது**, ஆகையாலே உமக்கும் உம்மை யொழிந்தார்க்கும் தன்னிலே வ்யாவ்ருத்தி யேதென்று **எம்பெருமானார்க்குத் திருவுள்ளமாக**; இவர் அவர் திருமுகமண்டலத்தைப் பார்த்து, நான் **என்னை யொழிந்தாரெல்லாரையும்போலே பகவத்சரணாகதியைப் பண்ணி பரமபதத்தை ப்ராப்பிப்போமென்றிருந்தேன் னல்லேன் காணும், தேவரீர் திருவடிகளாகிற மோக்ஷத்தை தேவரீர் ஔதார்யத்தாலே க்ருபை பண்ணப் பெறக்கடவேனென்று நேரே விண்ணப்பம் செய்கிறார்**.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் திருவரங்கதமுதனார் தனது அளவு கடந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்விதமாக, "பொருவற்ற கேள்வியனாக்கி நின்றான்" என்று உரைத்தார். இதனைக் கேட்ட எம்பெருமானார் அவரிடம், "எந்தவிதமான உபமானமும் இல்லாத விதத்தில் உயர்த்தியை உடையவனாக உம்மை நான் செய்தேன் என்று என்னைக் கொண்டாடினீர். உமக்கு இவ்விதம் செய்ய மட்டுமோ நான் வந்தது? அனைவருக்கும் இவ்விதம் செய்து, அனைவரும் பரமபதத்திற்குச் செல்லும்விதமாகச் செய்வதற்காகவே நான் வந்தேன். எனவே உமக்கும், உம்மைத் தவிர்த்துள்ள மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன?", என்று கேட்டார். இதற்கு அமுதனார் எம்பெருமானாருடைய திருமுகத்தை நோக்கி, "நான் மற்றவர்கள் போன்று பகவத் சரணாகதியைச் செய்து பரமபதத்தை அடைந்துவிடுவோம் என்று இருந்ததில்லை. உம்முடைய திருவடிகள் என்னும் மோக்ஷத்தை, உம்முடைய தாராளமான கருணை குணம் மூலம் பெற்று நிற்பேன்", என்கிறார்.

வ்யாக்யானம் – (சீர் கொண்டு) "சாந்தோதாந்த:" இத்யாதிகளாலே சொல்லப்படுகிற சம தமாதிகளென்றும், "களைவாய் துன்பம் களையாதொழிவாய் களை கண் மற்றிலேன்" என்றும், "என் நான் செய்கேன் யாரே களை கண் என்னையென் செய்கின்றாய்" என்றும் சொல்லப்படுகிற **ஆகிஞ்சந்யாநந்ய கதித்வங்களென்ன**, ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம்" என்றும், "ரக்ஷிஷ்ய தீதி விச்வாஸ:" என்றும் சொல்லப்படுகிற **ருசி விச்வாஸங்களென்ன** இது தொடக்கமான **அதிகாரி விசேஷ ஸ்வபாவங்களை** யுடையவராய். **கொள்கை** – உடைத்தாகை. **(பேரறம் செய்து)** "ந்யாஸமேஷாம் தபஸா மதிரிக்த மாஹு:" என்றும், "ஸர்வ குஹ்ய தமம் பய:" என்றும் சொல்லுகிறபடியே **பரம குஹ்ய தமமாய்** பரமதர்மமாய் ஸ்வரூப அநுரூபமான ப்ரபத்தியை பண்ணி. அதாகிறது "ந்யஸ்ய த்வத் பாத பத்மே வரத நிஜபரம் நிர்ப்பரோ நிரபயோஸ்மி" என்கிறபடியே **ஆத்மாத்மீயங்களினுடைய ரக்ஷண பரத்தை அவன் பக்கலிலே பொகட்டு, ஸ்தநந்தய ப்ரஜையோபாதி நிர்ப்பரராயிருக்கை**. "பலத்துக்கு ஆத்மஞானமும் அப்ரதிஷேதமும் வேண்டுவது" என்று பிள்ளையுமருளிச் செய்தாரிறே. **பேர்** – பெருமை. **அறம்** – தர்மம்.

விளக்கம் - (சீர் கொண்டு) – ந்யாஸ விம்சதி (3) – சாந்தோதாந்த: - புற இந்த்ரியங்களை அடக்கியனவாக, மனத்தை அடக்கியவனாக – என்பது போன்றவற்றில் கூறப்படும் அமைதியாக இருந்தல் போன்றவையும்; திருவாய்மொழி (5-8-8) – களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் – என்றும், திருவாய்மொழி (5-8-3) – என் நான் செய்கேன் யாரே களைகண் என்னையென் செய்கின்றாய் – என்றும் கூறப்படுகின்ற கைம்மாறு இல்லாத நிலை மற்றும் வேறு கதி இல்லாத நிலை போன்றவையும்; கீதை (7-17) – ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம் அஹம் – என்னை உள்ளது உள்ளபடி அறியும் ஞானிக்கு நான் ப்ரியமானவன் ஆவேன் – என்று, அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை (37-28) - ரக்ஷிஷ்யதீதி விச்வாஸோ கோப்த்ருத்வ வரணம் ததா | ஆத்மநிக்ஷேப கார்ப்பண்யே – அவனுக்கு ஏற்ற முறையில் உள்ளேன் என்னும் எண்ணம், அவனுக்கு விருப்பம் அல்லாதவற்றை விடுதல், அவன் ரக்ஷிப்பான் என்னும் நம்பிக்கை, அவன் நம்மைக் காக்கவேண்டும் என்னும் ப்ரார்த்தனை, தனது ஆத்மஸ்வரூபத்தைச் சமர்ப்பணம் செய்தல், கார்ப்பண்யம் - என்றும் கூறப்படுகின்ற ஆழ்ந்த ஈடுபாடு மற்றும் மஹாவிச்வாசம் போன்றவையும் நிறைந்த அதிகாரிகளுக்கே உரிய தன்மைகளைக் கொண்டவர்களாக. (பேர் அறம் செய்து) - ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்கம் ஆஹு: - அனைத்து தவங்களைக் காட்டிலும் உயர்ந்தது சரணாகதியே ஆகும் – என்றும், கீதை (18-64) – ஸர்வ குஹ்யதமம் பூய: - இரகசியங்களிலும் உயர்ந்த இரகசியம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப மிகவும் இரகசியமானதும், மிகவும் உயர்ந்ததும், ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றதும் ஆகிய ப்ரபத்தியைச் செய்து. இது என்னவென்றால் ந்யாஸ தசகம் (10) – ந்யஸ்ய த்வத் பாதபத்மே வரத நிஜபரம் நிர்ப்பரோ நிர்ப்பயோஸ்மி – என்பதற்கு ஏற்ப ஆத்மாவின் ரக்ஷணத்திற்கு அவனே பொறுப்பு என்று அனைத்து பாரங்களையும் அவனிடம் ஒப்படைத்து, தாய்ப்பால் பருகும் குழந்தை போன்று எந்தவிதமான பாரமும் இல்லாமல் இருத்தல் ஆகும். ஸ்ரீவசனபூஷணம் (60) – பலத்துக்கு ஆத்மஜ்ஞாநமும் அப்ரதிஷேதமுமே வேண்டுவது - என்று ஸ்வாமி பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்தது காண்க.

வ்யாக்யானம் – (நல்வீடு செறிதுமென்னும்) வீடு – மோக்ஷம். ப்ராப்யஸ்தாநம். அதாவது "ஸ்வாத்மாநுபூதிரிதியாகில முக்திருக்தா" என்கிறபடியே கைவல்யமும் மோக்ஷமாகையாலே, தத் வ்யாவ்ருத்யர்த்தமாக "**நல்வீடு**" என்று அத்தை விசேஷிக்கிறார். வீட்டுக்கு நன்மையாவது, ஸ்வாத்மாநுபவ மாத்ரமான கைவல்யம்போலே அல்பமாயும்,

ஸ்வார்த்தமாயு மிருக்கையன்றிக்கே, "நலம் அந்தமில்லதோர் நாடு" என்கிறபடியே அபரிமிதாநந்த ரூபமாய், "**தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே**" **என்கிறபடியே பகவத்தேக போகமாயிருக்கை**. (செறிதுமென்னும்) இப்படிப்பட்ட பரமபுருஷார்த்த லக்ஷணமான மோக்ஷத்தை ப்ராபிப்போமென்னும். "**நல் வீடு பெறுதும்**" என்றும் பாடம் சொல்லுவார்கள்; ஆகிலும் அர்த்தபேதமில்லை. "யோகிநாம் அமிர்தம் ஸ்தாநம்" என்றும் "யத்வை பச்யந்தி ஸூரய:" என்றும் ஸ்வாத்மாநுபவ ரூப கைவல்ய மோக்ஷத்தையும், பகவத் ப்ராப்தி ரூப பரம புருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தையும், ஸ்தாந பரம சப்தங்களாலே விபஜித்து கீதாசார்யனுமருளிச் செய்தானிறே. (**பார் கொண்ட மேன்மையர்**) பூமியெங்குமொக்க வ்யாப்தமான ப்ரபாவத்தையுடையவரென்னுதல்; விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியற பூமியிலுள்ளாரெல்லாராலும் கைக்கொள்ளப்பட்ட வுத்கர்ஷத்தை யுடையவரென்னுதல். **கொள்கை** – வ்யாபிக்கையும், ஸ்வீகரிக்கையும். (**கூட்டனல்லேன்**) இப்படிப்பட்ட பகவத் ப்ரபந்நருடைய கோஷ்டியிலே யுள்பட்டவர்களிலே யொருவனாயிருக்கிற வனல்லன்.

விளக்கம் - (**நல்வீடு செறிதுமென்னும்**) - வீடு என்றால் மோக்ஷம். அடையப்படவேண்டிய இடம். ஸ்வ ஆத்ம அநுபூதிரிதி யாகில முக்திருக்தா – தனது ஆத்மாவை அனுபவித்தல் என்பதான எந்த ஒரு முக்தி நிலை கூறப்பட்டதோ – என்பதற்கு ஏற்ப கைவல்யத்தையும் மோக்ஷம் என்றே கூறுவதால், அதனை வேறுபடுத்தும்விதமாக "நல்வீடு" என்று சிறப்பித்துக் கூறுகிறார். பரமபதத்தின் நன்மை என்பது தனது ஆத்மாவை அனுபவித்தல் என்னும் கைவல்யம் போன்று அற்பமாகவும், தான் மட்டுமே அனுபவித்தல் என்பதாகவும் இல்லாமல், திருவாய்மொழி (2-8-4) – நலமந்தமில்லதோர் நாடு – என்பதற்கு ஏற்ப எல்லையற்ற ஆனந்தத்தை ஏற்படுத்துவதாகவும், திருவாய்மொழி (2-9-4) – தனக்கேயாக எனைக்கொள்ளும் - என்று கூறுவதற்கு ஏற்ப பகவானால் அனுபவிக்கப்படுதல் என்ற இனிமை கொண்டதாகவும் இருத்தல். (செறிதும் என்னும்) - இப்படிப்பட்ட மிகவும் உயர்ந்ததான மோக்ஷத்தை அடைவோம். "நல்வீடு பெறுதும்" என்றும் சிலர் படிப்பார்கள்; இரண்டிற்கும் பொருள் வேறுபாடு இல்லை. யோகிநாம் அம்ருதம் ஸ்த்தாநம் – யோகிகள் பரமபதம் என்னும் இடத்தை அடைகிறார்கள் – என்றும், ஸதா பச்யந்தி ஸூரய: - நித்யஸூரிகள் எப்போதும் அவனைப் பார்த்தபடியே உள்ளனர் – என்ற ச்லோகங்களில் தனது ஆத்மாவை அனுபவித்தல் என்ற வடிவத்தில் உள்ள கைவல்ய மோக்ஷத்தையும்,

பகவானைச் சென்று அடைதல் என்பதான மிகவும் உயர்ந்த புருஷார்த்தமான மோக்ஷத்தையும், "இடம்" மற்றும் "உயர்த்தி" என்ற சொற்கள் கொண்டு கீதையில் பகவான் வேறுபடுத்தினான். (பார் கொண்ட மேன்மையர்) – இந்தப் பூமி முழுவதும் ஒரே போன்று பரவி நிற்கும் ப்ரபாவத்தைக் கொண்டவர்கள். அறிவுள்ளவர்கள், அறிவற்றவர்கள் என்ற வேறுபாடு இன்றி, இந்தப் பூமியில் உள்ள அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மகிழ்வைக் கொண்டவர்கள். (கூட்டன் அல்லேன்) - இப்படிப்பட்ட பகவத் ப்ரபந்நர்களுடைய கோஷ்டியைச் சேர்ந்தவர்களில் ஒருவனாக நான் இல்லை.

வ்யாக்யானம் - ஆகில் உம்முடையபடி எங்ஙனேயென்னச் சொல்லுகிறார் (**உன் பதயுகமாமேர் கொண்ட வீட்டை**) தேவரீர் திருவடிகளிரண்டுமாகிற விலக்ஷண மோக்ஷத்தை. "குருரேவ பராயணம்", "குருரேவ பராகதி", "பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம்", "நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வ ப்ரகார விலக்ஷணமான மோக்ஷத்தை. **ஏர் – அழகு**. (எளிதினிலெய்துவன்) வருத்தமற ப்ராபிப்பேன். "**உன்பத யுகமாமேர் கொண்ட வீட்டில்**" என்று பாடமானபோது, தேவரீர் திருவடிகளிரண்டுமாகிற விலக்ஷண மோக்ஷத்திலே யென்றபடி. இவர் இப்பெறாப்பேறு பெற்ற பின்பு பகவல்லாபத்தையும் ஒரு பொருளாக நினைக்கமாட்டார் காணும். திருவடிகளை மோக்ஷமாகச் சொன்னது ஆநந்தாவஹத்வத்தாலே.

விளக்கம் – "அப்படியென்றால் உம்முடைய நிலை என்ன?", என்பதற்கு விடை அருளிச் செய்கிறார். (உன் பதயுகமாம் ஏர் கொண்ட வீட்டை) – உம்முடைய பொருந்திய திருவடிகள் இரண்டும் என்பதான உயர்ந்த வேறுபட்ட மோக்ஷத்தை. குருரேவ பராயணம் – ஆசார்யனே உயர்ந்த பயன் – என்றும், குருரேவ பராகதி: - ஆசார்யனே உயர்ந்த கதி – என்றும், இராமாயணம் ஆரண்யகாண்டம் (74-12) - பாதமூலம் கமிஷ்யாமி யாநஹம் பர்யசாரிஷம் – (சபரி இராமனிடம் கூறுவது) உன்னுடைய திருவடிகள் மூலமாக நான் மோக்ஷம் பெறுவேன் – என்றும், ஸ்தோத்ரரத்நம் (2) - நித்யம் யதீய சரணௌ சரணமதீயம் – எப்போதும் எந்த நாதமுனிகளின் திருவடிகள் எனக்குப் புகலிடமாக இருக்குமோ - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்துவிதங்களிலும் வேறுபட்ட மோக்ஷத்தை. (எளிதினில் எய்துவன்) - எந்தவிதமான பெரும் முயற்சிகளும் இன்றி நான்

அடைவேன். இப்படிப்பட்ட ஒரு பேற்றை அடைந்த பின்னர், பகவானை அடைய நேர்ந்தாலும், அதனையும் ஒரு பொருட்டாக எண்ணமாட்டார்.

வ்யாக்யானம் - இப்படிச் சொன்னால் உமக்கு இந்த ப்ராப்ய லாபம் எத்தாலே? அத்தைச் சொல்லிக் காணீரென்ன **(உன்னுடைய கார் கொண்ட வண்மை)** "அதுவுமவனதின்னருளே" என்கிறபடியே தேவரீரௌதார்யமே அதுக்கு ஸாதனமென்கிறார். "**கார் கொண்ட**" **என்கிற** விசேஷணத்தாலே மேகத்தில் நின்றும் க்ருபைக்குண்டான வ்யாவ்ருத்தி சொல்லுகிறார். மேகமானது **நாலுமாஸம் வர்ஷிக்கக் கடவதாய்**, அப்போதும் **அபேக்ஷித்தவிடங்களிலே வர்ஷியாதே** ஸமுத்ரத்திலும் பர்வதாக்ரத்திலும் அரண்ய ப்ரதேசத்திலும் வர்ஷிக்கும்; இவருடைய ஔதார்யம் அப்படியன்றிக்கே, "**கொள்ளக்குறைவற்றிலங்கிக் கொழுந்து** விட்டோங்கி" யிருப்பதாகையாலே **ஸர்வகாலத்திலும் ஸர்வர்க்கும் ஸர்வபலங்களையும் கொடுத்துக் கொண்டிருந்து**, மஹாவ்ருக்ஷம் போலேயிருக்கிற மஹா மேகத்தை பராஜிதமாக்கி, என்னை ஸ்வாதீநமாக எழுதிக் கொண்டதென்றபடி. இப்படிப்பட்ட தேவரீருடைய பரம க்ருபாபூர்வகமாக இந்த ஔதார்யமொன்றுமே அந்த பலத்துக்கு ப்ராபகமென்றபடி. **(இராமானுச)** எம்பெருமானாரே. **(இது கண்டு கொள்ளே)** இதுதான் சொல்ல வேணுமோ, **கையிலங்கு நெல்லிக்கனி போலேயி**ருக்கிற இவ்வர்த்தத்தை தேவரீர் கண்டு கொள்ளமாட்டீரோ, அடியேன் சொல்லக் கேட்டருள வேணுமென்னு மொரு நிர்ப்பந்தமுண்டோ. "ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா துர்லபம் ய உபாஸதே, லப்தம் த்யக்த்வா தநம் மூடோ குப்த மந்வேஷதி க்ஷிதௌ" என்னக் கடவதிறே.

விளக்கம் - " இவ்விதம் நீவிர் உரைத்தால் உமக்கு இந்த அடைதல் எப்படிக் கிட்டும்?", என்பதற்கு விடை அளிக்கிறார். (உன்னுடைய கார் கொண்ட வண்மை) திருவாய்மொழி (8-8-3) – அதுவும் அவனது இன்னருளே - என்பதற்கு ஏற்ப உம்முடைய தாராளமே அதற்கான உபாயம் என்கிறார். "கார் கொண்ட" என்று சிறப்பித்து, மேகத்தைக் காட்டிலும் எம்பெருமானாருடைய கருணைக்கு உள்ள வேறுபாட்டை உணர்த்துகிறார். மேகமானது நான்கு மாதம் மட்டுமே மழையைப் பொழியும், அப்போதும் கூட வேண்டிய இடத்தில் பொழியாமல் மலைகலிலும் கடலிலும் காட்டிலும் பொழியும். ஆனால் எம்பெருமானாருடைய கருணை அப்படி அல்லாமல், இராமாநுச நூற்றந்தாதி (27) -

கொள்ளக் குறைவற்று இலங்கிக் கொழுந்து விட்டோங்கி - என்பதற்கு ஏற்ப உள்ளதால், அனைத்து காலங்களிலும், அனைவருக்கும், அனைத்து பலன்களையும் அளித்தபடி இருந்து, மிகவும் உயர்ந்த மரம் போன்றுள்ள மேகத்தையும் வென்று, என்னைத் தனக்கே அடிமை என்று எழுதி எடுத்துக்கொண்டது. இவ்விதமாக உள்ள உம்முடைய கருணையை முன்னிட்டுக் கொண்டு வெளிப்படும் தாராள குணமே, நான் அடைய உள்ள அந்தப் பலனை அளிப்பதாகும். (இராமாநுசா) - எம்பெருமானாரே. (இது கண்டு கொள்ளே) - இதனை நான் கூறவும் வேண்டுமோ? உள்ளங்கை நெல்லிக்கனி போன்றுள்ள இந்தக் கருத்தை நீவீர் உணரமாட்டீரோ? நான் உரைத்து, நீவிர் கேட்க வேண்டும் என்று கட்டாயம் உள்ளதோ? ஸுலபம் ஸ்வகுரும் த்யக்த்வா துர்லபம் ய உபாஸதே, லப்தம் த்யக்த்வா தநம் மூடோ குப்த மந்வேஷதி க்ஷிதௌ - கிடைப்பதற்கு எளிய ஆசார்யனைக் கைவிட்டு யார் ஒருவன் கிடைப்பதற்கு அரிய பகவானை வணங்குகிறானோ அவன், கையில் உள்ள பொருளை விட்டு பூமியில் புதைத்து வைக்கப்பட்ட பொருளைத் தேடும் மூடன் ஆவான் - என்றது காண்க.

84. கண்டுகொண்டேன் எம் இராமாநுசன் தன்னைக் காண்டலுமே
தொண்டு கொண்டேன் அவன் தொண்டர் பொற்றாளில்
என் தொல்லை வெம்நோய்
விண்டு கொண்டேன் அவன் சீர் வெள்ள வாரியை வாய்மடுத்து இன்று
உண்டு கொண்டேன் இன்னம் உற்றன ஓதில் உலப்பில்லையே

விளக்கவுரை - மிகவும் வேண்டி நின்று கிட்டப் பெறும் எம்பெருமானாரின் வடிவழகை நான் மிகவும் எளிதாகக் கிட்டப்பெற்றேன் – என் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தேன். யாருடைய அழகை – நம்மைப் போன்ற மனிதர் அல்லர், நம்மை இந்த ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்ற பரமபதத்தில் இருந்து நாம் உள்ள இடம் தேடி வந்த நமது ஸ்வாமியான எம்பெருமானாரின் அழகை நான் கண்டுகொண்டேன். இவ்விதம் அவரைக் கண்டவுடன், அவர் மீது கொண்ட அன்பு மேன்மேலும் பெருக, அவருடைய அடியார்கள் சூழ்ந்து நிற்கும் அவரது திருவடிகளில் அனைத்துவிதமான தொண்டுகளும் செய்து வாழ்வது என்று அடிமைப்பட்டேன். இதன் மூலம் க்ரூரமாக இருந்து வந்த என்னுடைய கர்மவினைகள் முற்றிலுமாக நீங்க, எனது துன்பம் அனைத்தையும்

விடுவித்துக் கொண்டேன். எம்பெருமானாரின் திருக்கல்யாணகுணங்கள் என்ற அமிர்த ஸமுத்திரத்தை நான் பருகினேன். சூரியனின் கதிர்களால் தாக்கப்பட்டு, துன்பத்தில் ஓடிவரும் ஒருவன் குளத்தில் புகுந்து தனது துன்பம் நீக்கிக் கொள்வது போல், இவரது திருக்கல்யாணகுணங்கள் என்ற கடல் மூலம் ஸம்ஸாரம் காரணமாக நான் பெற்ற துன்பங்கள் நீங்கப் பெற்றேன். இவ்விதமாக நான் எம்பெருமானார் மூலமாக அடைந்தவற்றைக் கூறத் தொடங்கினால் முடிவே இருக்காது.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே, "ப்ரதம பர்வ நிஷ்டர் கோஷ்டியிலே அந்வயியாதேயிருக்கிற வென்னை சரம பர்வமான எம்பெருமானார் திருவடிகளை பரம ப்ராப்யமாக இவனத்யவஸித்திருக்கிறானென்று லோகத்தாரெல்லாரு மறியும்படி பண்ணியருளினா" ரென்று சொல்லி, இதிலே, "எனக்கு வகுத்த சேஷியான எம்பெருமானாரை கண்ணாரக்கண்டு அந்தக் காட்சி கொழுந்து விட்டோடிப் படர்ந்து **ததீய பர்யந்தமாக வளருகையாலே** அவர்களுடைய திருவடிகளிலே அடிமைப்பட்டு அதிக்ரூரமான துஷ்கர்மங்களைக் கட்டடங்க விடுத்துக் கொண்டு **அவருடைய கல்யாண குணாம்ருதத்தை வாயார அள்ளிக்கொண்டு பருகா நின்ற நான்**, இன்னமும் பெற்றவற்றை சொல்லப்புக்கால், **மேல் பெற வேண்டுமவற்றுக்கு ஒரு தொகையின்றிக்கே யிருக்கச் செய்தே, இவை தன்னை ஒரு வாசகமிட்டு என்னால் சொல்லித் தலைக்கட்டப் போகா" தென்கிறார்**.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், "பக்தியின் முதல் நிலையான பகவத் விஷயத்தில் ஈடுபட்டபடி உள்ளவர்கள் கோஷ்டியில் நான் சேராமல் இருந்தேன். இப்படியாக இருந்த என்னை, 'பக்தியின் எல்லை நிலமாக உள்ள எம்பெருமானாருடைய திருவடிகளை மிகவும் உயர்ந்த அடையத்தக்க இடமாகக் கொண்டு இவன் அதிலேயே நிலைத்து நிற்கிறான்' என்று உலகில் உள்ளவர்கள் அனைவரும் அறியும்படியாகச் செய்தார்", என்று உரைத்தார். இந்தப் பாசுரத்தில், "எனக்கு இயல்பாகவே எஜமானராகிய எம்பெருமானாரை, நான் எனது கண்ணாரக் கண்டு, அந்தக் காட்சியானது என்னில் கொழுந்துவிட்டு படர்ந்து, அவருடைய அடியார்கள்வரை வளர்ந்து நிற்கிறது. ஆகவே அந்த அடியார்களுடைய திருவடிகளில் அடிமையாக நின்று, மிகவும் கொடூரமான தீய கர்மங்கள் அனைத்தையும் அடியுடன் கைவிட்டு, அவருடைய திருக்கல்யாணகுணங்கள் என்ற அமிர்தத்தை எனது வாயாரப் பருகியபடி உள்ளேன். இவற்றையும் கடந்து நான்

அடைந்தவற்றை மேலும் கூறவேண்டும் என்றால், இனி அடைய உள்ளவற்றை ஒரு எண்ணிக்கையில் எவ்விதம் அடக்கிக் கூற இயலாதோ அது போன்று, இவற்றையும் சொற்கள் கொண்டு உரைக்கமுடியாது", என்கிறார்.

வ்யாக்யானம் – (கண்டு கொண்டேன்) "காஷாய சோபி கமநீய சிகா நிவேசம் தண்ட்த்ரய உஜ்ஜ்வல கரம் விமல உபவீதம் உத்யத் திநேச நிபம் உல்லஸத் ஊர்த்வ புண்ட்ரம் ரூபம் தவாஸ்து யதிராஜ த்ருசோர் மமாக்ரே" என்று ப்ரார்த்தித்துப் பெற வேண்டின வடிவழகை ஆகஸ்மிகமாகக் கண்ணாரக் கண்டுகொண்டேன். "**கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்**", "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும் அருக்கனணி நிறமும் கண்டேன்" இத்யாதிப்படியே, **மயர்வற மதிநலமருளப் பெற்றவர்கள் ததீயரைக் கண்டாப்போலே ஸாக்ஷாத்கரித்தே**ன்றபடி. நீர்தாம் கண்ட ப்ரகாரமேதென்னில், **(எம்மிராமாநுசன்றன்னை)** "கலௌ ராமாநுஜஸ் ஸ்ம்ருத" என்றும், "சேஷா வா ஸைந்யநாதோ வா ஸ்ரீபதிர்வோதி ஸாத்விகை: விதர்க்யா மஹாப்ராஜ்ஞை: யதிராஜாய" என்று சொல்லுகையாலே, இவர் நம்முடைய கோடியிலே யொருவரல்லர், **எங்களை ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிக்கைக்காக பரமபதத்தினின்றும் நானிருந்தவிடந்தேடி வந்தவர் என்றத்யவஸித்துக் கொண்டு அஸ்மத் ஸ்வாமியான எம்பெருமானாருடைய உள்ளபடி கண்டேனென்ற**படி.

விளக்கம் - **(கண்டு கொண்டேன்)** - காஷாய சோபி கமநீய சிகா நிவேசம் தண்ட்த்ரய உஜ்ஜ்வல கரம் விமல உபவீதம் உத்யத் திநேச நிபம் உல்லஸத் ஊர்த்வ புண்ட்ரம் ரூபம் தவாஸ்து யதிராஜ த்ருசோர் மமாக்ரே - (கூரத்தாழ்வான் கூறுவது) நன்றாக கட்டப்பட்ட காவி ஆடை என்ன, அழகான சிகை என்ன, த்ரிதண்டம் கொண்டு ப்ரகாசமாக உள்ள திருக்கரம் என்ன, அழகான யஜ்ஞோபவீதம் என்ன, உதிக்கும் சூரியன் போன்ற தேஜஸ் என்ன, எழிலான பன்னிரண்டு திருநாமங்கள் என்ன – இப்படியாக அல்லவோ எனது எம்பெருமானாரின் அழகிய திருமேனி எனது மனதில் பதிந்துள்ளது - என்று விண்ணப்பம் செய்து தரிசிக்கவேண்டிய எம்பெருமானாருடைய வடிவழகை நான் எதிர்பாராமல் கிடைக்கப்பெற்று, எனது கண்ணாரக்கண்டேன். திருவாய்மொழி (5-2-2) – கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம் – என்றும், மூன்றாம் திருவந்தாதி (1) – திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும் அருக்கன் அணி நிறமும் கண்டேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஆழ்வார்கள் பகவத் அடியார்களைக் கண்டது போன்று கண்டேன். "நீவிர் எவ்விதமாக கண்டீர்?", என்று கேட்க, அமுதனார் விடை அளிக்கிறார்.

(எம் இராமாநுசன் தன்னை) - கலௌ ராமாநுஜஸ் ஸ்ம்ருத: - ஆதிசேஷன் மூன்றாவதாக கலியுகத்தில் இராமாநுசனாக – என்றும், சேஷா வா ஸைந்யநாதோ வா ஸ்ரீபதிர்வோதி ஸாத்விகை: விதர்க்யா மஹாப்ராஜ்ஞை: யதிராஜாய - உயர்ந்தவர்களால் ஆதிசேஷனின் அவதாரம் என்றும், விஷ்வக்ஸேநரின் அவதாரம் என்றும், எம்பெருமானின் அவதாரம் என்றும் கொண்டாடப்படுபவரே! யதிகளின் தலைவரே – என்று கூறுவதற்கு ஏற்ப, "எம்பெருமானார் நம்முடைய பிரிவைச் சேர்ந்தவர் அல்லர். நம்மை இந்த ஸம்ஸாரத்திலிருந்து மேலே எழுப்புவதற்காக பரமபதத்திலிருந்து நான் உள்ள இடம் தேடி வந்தவர் ஆவார்", என்று எண்ணியபடியே, எனது ஸ்வாமியான எம்பெருமானாருடைய மேன்மையை உள்ளதுஉள்ளபடி கண்டேன்.

வ்யாக்யானம் – (காண்டலுமே தொண்டு கொண்டேன் அவன் தொண்டர் பொற்றாளில்) இப்படி தர்சித்தவளவிலே அந்த ப்ரீதியானது மேன்மேலும் பெருகி வந்து தம்மளவிலே சுவறிப் போகாதே அவருக்கு அநந்யார்ஹரான ததீயரைத் தொடர்ந்து அவர்களுடைய ஸ்ப்ருஹணீயமான திருவடிகளிலே எல்லாவடிமைகளும் செய்வதாக அடிமைப்பட்டேன். "**காண்டலுமே" என்றது**, "**கண்டவளவிலே" யென்றபடி**. "**தொண்டு கொண்டேன்**" என்றது, "**தொண்டு பட்டேன்" னென்று ஒரு முழுச் சொல்லு; அடிமையைக் கொண்டேனென்னுதல்**. "த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து" என்று ஜீயருமபேக்ஷித்தருளினாரிறே. **(என் தொல்லை வெந்நோய் விண்டு கொண்டேன்)** இப்படி தாஸ்யத்திலே அந்வயிக்கவே அநாதி காலார்ஜிதங்களாய் ஸர்வேச்வரனுடைய "க்ஷிபாமி, ந க்ஷமாமி"க்குடலாய் அதிக்ரூரங்களான கர்மங்களினுடைய பலமான என்னுடைய ஆத்யாத்மிகாதி துக்கங்களையெல்லாம் கட்டடங்க விடுவித்துக் கொண்டேன். **விள்ளுதல் – நீங்குதல்**.

விளக்கம் – (காண்டலுமே தொண்டு கொண்டேன் அவன் தொண்டர் பொற்றாளில்) - இவ்விதம் அவரைத் தரிசித்த உடனேயே, அந்த மகிழ்ச்சியானது மேன்மேலும் பெருகியபடியாக வந்து, அவருடன் மட்டுமே நின்று விடாமல், அவரைத் தவிர்த்து வேறு யாரையும் அண்டாமல் உள்ள அவருடைய அடியார்களைத் தொடர்ந்து, அவர்களுடைய அழகாகப் பொருந்திய திருவடிகளில் அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்யும் விதத்தில் அடிமையாக நின்றேன். யதிராஜ விம்சதி (16) - சப்தாதி போக விஷயா ருசி: அஸ்மதீயா நஷ்டா பவதி இஹ பவத் தயயா யதீந்த்ர த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து - யதிராஜரே! அழியக்கூடிய

உலக இன்பங்கள் மீது எனக்கு ஏற்படும் பற்றுகளை நீக்க நீயே அருளவேண்டும். இத்தகைய இன்பங்கள் பின்வரும் நாட்களில் துன்பமே ஏற்படுத்துவதால், இவற்றை உனது கருணை மூலம் நீக்கவேண்டும். என்னை உனது தொண்டனுக்குத் தொண்டனாகக் கொள்ளவேண்டும். இதன் மூலம் நான் உன்னைச் சரணம் என்று பற்றும்படி செய்யவேண்டும். உனக்கு அர்ப்பணிக்க என்னிடம் ஏதும் இல்லை. ஆகவே என்னிடம் இருந்து எதனையும் எதிர்பாராமல் உள்ள உனது கருணை மட்டுமே கொண்டு என்னை நீ காக்க வேண்டும் - என்று ஸ்வாமி மணவாளமாமுனிகளும் இதனையே அருளிச்செய்தார். **(என் தொல்லை வெந்நோய் விண்டு கொண்டேன்)** - இவ்விதம் அடியார்களிடம் அடிமைத்தொழிலில் ஈடுபட்டு நிற்பதன் காரணமாக, எல்லையற்ற காலங்களாகத் தொடர்ந்தபடி உள்ளதும், ஸர்வேச்வரனுடைய "க்ஷிபாமி – தள்ளுகிறேன், ந க்ஷமாமி – பொறுக்கமாட்டேன்" என்பது போன்ற சீற்றங்களுக்குக் காரணமாக உள்ளவையும், மிகவும் கொடியவையும் ஆகிய கர்மங்களுடைய பலனாக உள்ள ஆத்யாத்மிகம் போன்ற துக்கங்கள் அனைத்தையும் அடியுடன் நீக்கிக்கொண்டேன்.

வ்யாக்யானம் – (அவன் சீர் வெள்ள வாரியை) அந்த எம்பெருமானாருடைய கல்யாண குணங்களாகிற மஹாஸமுத்ரத்தை; ப்ரவஹியா நிற்கிற ஸமுத்ரத்தை யென்றபடி. அவருடைய கல்யாண குணங்கள் அஸங்க்யேயங்களாகையாலே, அவற்றுக்கு நிச்சலமாய்க் கொண்டு பரித்ருசயமாநமான **ஸமுத்ரத்தை போலியாகச் சொல்லவொண்ணாதென்று, கரை புரண்டு ப்ரவஹியா நிற்கிற ஸமுத்ரத்தை போலியாகச் சொல்லுகிறார்**. விஷயம் அநுபூதமா யிருக்கிறாப்போலே இதுவும் அநுபூதமாய்க் காணுமிருப்பது. அன்றிக்கே அவருடைய கல்யாண குண பூரமாகிற ஸமுத்ரத்தை யென்னுதல். **வாரி** – ஸமுத்ரம். **(வாய் மடுத்தின்றுண்டு கொண்டேன்)** ஆதித்ய கிரணங்களாலே தப்தனாய் த்ருஷார்த்தனானவன் மடுவிலே புக்கு வாய் மடுத்து அந்நீரைப் பருகுமாப்போலே, அமுதனாரும் இவருடைய விஷயீகாரத்தைப் பெறுமளவும் ஸம்ஸாரிக துக்க தாப தப்தராகையால் அந்த விடாயெல்லாந் தீரும்படி, இவருடைய விஷயீகாரத்தைப் பெற்று, இவர்தம்மருகே சென்று, அந்தக் கல்யாண குணாம்ருத்தத்தை பெரிய அபிநிவேசத்தோடே வாய் மடுத்து அநுபவித்துக் களித்தேனென்கிறார். க்ஷீராதி ரஸ்ய பதார்த்தங்கள் நமக்கு ரஸித்திருக்கிறாப்போலே காணும், "பாலேய் போல் சீர்" என்னும்படியான அவருடைய கல்யாண குணங்கள் இவருக்கு ரஸிக்கிறபடி. **வாய்**

மடுத்துண்கையாவது, வாயைத் திறந்து அவற்றுக்கு வாசகமான சப்த ராசியையிட்டு அவை தன்னையே ஸ்துதிக்கை.

விளக்கம் – (**அவன் சீர் வெள்ள வாரியை**) - எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்கள் என்ற பெரிய ஸமுத்திரத்தை. அவருடைய கல்யாணகுணங்கள் எண்ணற்றவை என்பதால், அவற்றுக்கு அசையாமலும் அளவிட இயலாமலும் உள்ள ஸமுத்திரத்தைக் கூட உதாரணம் காண்பிக்கமுடியாது என்று எண்ணியவராக, கரைபுரண்டு வெளியே வருகின்ற ஸமுத்திரத்தைக் கூறுகிறார். அல்லது அவருடைய திருக்கல்யாண குணத்தால் முழுமையடைந்த ஸமுத்திரத்தை. (**வாய் மடுத்தின்றுண்டு கொண்டேன்**) - சூரிய வெப்பத்தால் பாதிக்கப்பட்ட ஒருவன், ஒரு குளத்தைக் கண்டவுடன் அதில் புகுந்து வாயால் அந்த நீரைப் பருகுவது போன்று, அமுதனாரும் எம்பெருமானாரை அடைவது வரை ஸம்ஸாரத்தில் ஏற்படுகின்ற துக்கங்களால் தவித்தபடி உள்ளவர் என்பதால், அந்தத் துன்பம் அனைத்தும் நீங்குபடியாக, எம்பெருமானாரை அடைந்து, அவருடைய திருக்கல்யாண குணங்கள் என்ற அமிர்த்தத்தை மிகவும் ஈடுபாட்டுடன் தனது வாயால் பருகி, அனுபவித்துக் களித்தார். பால் முதலானவை நமக்கு இன்பமாக உள்ளது போன்று இவருக்கு, பெரியதிருவந்தாதி (58) – பாலேபோல் சீர் – என்பதற்கு ஏற்ப எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்கள் மிகவும் இனிமையாக உள்ளன. “வாய் மடுத்து உண்ணுகை” என்றால், வாயைத் திறந்து அந்தத் திருக்கல்யாண குணங்களை எப்போதும் துதித்தபடி இருத்தல்.

வ்யாக்யானம் – (**இன்னமுற்றன**) இவ்வளவும் சொல்லிப் போந்த இவையன்றிக்கே இன்னமும் அவர் தம்மாலே நான் பெற்ற பேற்றை. (ஓதில்) **சொல்லப் புக்கால்**. (**உலப்பில்லை**) **முடிவில்லை**. நான் பெற்றவற்றுக்கு ஒரு தொகையில்லாமையாலே கணக்கிட்டுச் சொல்ல மாட்டிற்றிலேனென்கிறார். **உலப்பு** – முடிவு.

விளக்கம் – (இன்னமுற்றன) - இந்த அளவு கூறியபடி உள்ள இவற்றை மட்டும் அல்லாமல், எம்பெருமானாரால் நான் அடைந்த மேலும் பல பேறுகளை. (ஓதில்) - கூற முயற்சித்தால். (உலப்பில்லை) - முடிவில்லை. நான் அடைந்தவற்றுக்கு ஒரு எண்ணிக்கை இல்லை என்பதால், கணக்கிட்டு உரைக்கமுடியாது என்கிறார்.

85. ஓதிய வேதத்தின் உட்பொருளாய் அதன் உச்சிமிக்க
சோதியை நாதன் என அறியாது உழல்கின்ற தொண்டர்
பேதைமை தீர்த்த இராமாநுசனைத் தொழும் பெரியோர்
பாதமல்லால் என்தன் ஆர் உயிர்க்கு யாதொன்றும் பற்றில்லையே

விளக்கவுரை - எல்லையற்ற காலங்களாக ஓதப்பட்டு வரும் வேதங்களில் அந்தர்யாமியாக, அவற்றில் கூறப்படும் பொருளாக, அந்த வேதங்களின் தலைப்பகுதி என்று கூறப்படும் உபநிஷத்துக்களில் ப்ரகாசிக்கும் ஸ்ரீரங்கநாதனை நமக்கு நாயகன் என்று நாம் அறிவதில்லை. இவ்விதம் அவனே நமக்கு எஜமானன் என்று அறியாமல், இந்த உலக விஷயங்கள் பலவற்றுக்கும் தொண்டு செய்தபடி பலரும் உள்ளனர். இவர்களது இத்தகைய அறியாமை என்ற இருளை எம்பெருமானார் நீக்கி அருளினார். இப்படிப்பட்ட எம்பெருமானாரின் மிகவும் உயர்ந்த திருவடிகளை எப்போதும் கொண்டாடியபடி இருந்தவர்கள் கூரத்தாழ்வான், எம்பார் போன்றவர்கள் ஆவர். இவர்களைப் போன்ற உயர்ந்தவர்களின் திருவடிகளைக் கொண்டாடி நிற்பதைத் தவிர எனது ஆத்மாவிற்கு வேறு ஏதும் பற்றில்லை.

அவதாரிகை – "இராமானுசன்றன்னை கண்டு கொண்டேன்" என்றும், "அவர் தொண்டர் பொற்றாளில் தொண்டு கொண்டேன்" என்றும் தத் விஷயத்திலும் ததீய விஷயத்திலும் இப்படி ஈடுபடா நின்றீர்; ஆனால் இவ்விரண்டிலும் வைத்துக் கொண்டு உமக்கு எந்த விஷயத்தில் ஊற்றமதிசயித்திருக்குமென்ன; அருகேயிருந்து கேட்டவர்களைக் குறித்து தாம் அதிகரித்துப் போந்த வேதத்தினுடைய பொருளாய்க் கொண்டு, அந்த வேத சிரஸ்ஸுக்களான வேதாந்தங்களிலே ப்ரதிபாத்யனான அவனே நமக்கு வகுத்த சேஷியென்று அறியப்பெறாதே அப்ராப்த விஷயங்களிலே தொண்டுபட்டும் கதாகதங்களாலே இடர்பட்டும் போருகிற ஸம்ஸாரிப்ராயருடைய **அறிவுகேட்டை விடுவித்த எம்பெருமானார்க்கு அநந்யார்ஹரானவர்களுடைய திருவடிகளையொழிய என்னாத்மாவுக்கு வேறொரு அபாச்ரயமில்லையென்கிறார்**.

விளக்கம் – "இராமானுசன்றன்னை கண்டு கொண்டேன்" என்றும், "அவர் தொண்டர் பொற்றாளில் தொண்டு கொண்டேன்" என்றும் எம்பெருமானார் விஷயத்திலும்,

அவருடைய அடியார்கள் விஷயத்திலும் இவ்விதமாக ஈடுபட்டு நின்றீர்கள். ஆனால் இந்த இரண்டு விஷயங்களில் எந்த விஷயம் குறித்து உமக்கு அதிகமான ஈர்ப்பும் ஈடுபாடும் இருக்கும்?" என்று சிலர் அமுதனாரிடம் கேட்டனர். இதற்கு அமுதனார் அவர்களிடம், "எம்பெருமானார் எப்போதும் ஈடுபட்டபடி நின்ற வேதத்தினுடைய ஆழ்பொருள்களை உள்ளடக்கியதாகவும், அந்த வேதத்தின் தலைப்பாகமாகவும் உள்ள வேதாந்தங்கள் மூலம் வெளிப்பட்டபடி உள்ள ஸர்வேச்வரனே நமக்கு இயல்பான எஜமானன் என்று அறியாமல், தாழ்ந்த உலக விஷயங்களில் ஈடுபட்டபடியும், அவற்றுக்கே ஆட்பட்டு நிற்பதால் மிகுந்த துன்பம் அடைந்தபடியும் உள்ள ஸம்ஸாரிகளுடைய அறிவு வீழ்ச்சியை எம்பெருமானார் நீக்கினார். இப்படிப்பட்ட எம்பெருமானார் அல்லாமல் வேறு யாருக்கும் தாங்கள் அடிமை இல்லை என்று உள்ளவர்களுடைய திருவடிகள் தவிர்த்து எனது ஆத்மா அண்டி நிற்பதற்கு வேறு இடம் இல்லை", என்கிறார்.

வ்யாக்யானம் – (ஓதிய வேதத்தினுட் பொருளாய்) "அஷ்ட வர்ஷம் ப்ராஹ்மண முபநயீத, தம் அத்யாபயேத்", "ஸ்வாத்யாயோத்யதவ்ய:", "வேதமநூச்யாசார்யோந் தேவாஸிநம நுசாஸ்தி", "ஸ்வாத்யாயாந்மா ப்ரமத:" என்கிறபடியே அத்யயந விதி பரதந்த்ரராய் கொண்டு தாம் அதிகரித்த வேதத்தினுடைய அவாந்தர ப்ரமேயமாய், "பஜேத் ஸார தமம் சாஸ்த்ரம்" என்றும், "ஸர்வதஸ் ஸாரமாதத்யாத்" என்றும் சொல்லுகிறபடி ஸாரதமமாய்.

விளக்கம் – (ஓதிய வேதத்தினுட் பொருளாய்) - அஷ்டவர்ஷம் ப்ராஹ்மணம் உபநயீத தம் அத்யாபயேத் – எட்டு வயதில் அந்தணனுக்கு உபநயனம் நடத்தி, தொடர்ந்து வேத அத்யயனம் செய்வித்தல் வேண்டும் – என்றும், ஸ்வாத்யாயோத்யேதவ்ய: - தன்னுடைய சாகையை அத்யயனம் செய்யவேண்டும் – என்றும், தைத்திரீய உபநிஷத் சிக்ஷாவல்லீ - வேதம் அநூச்ய ஆச்சார்யோ அந்தேவாஸிநம் அநுசாஸ்தி – கற்பித்தல் முடிந்ததும் ஆச்சார்யர் மாணவனிடம் கூறுகிறார் – என்றும், தைத்திரீய உபநிஷத் சிக்ஷாவல்லீ – ஸ்வாத்யாயந் மா ப்ரமத: - ஆராய்ந்து கற்பதை விடக்கூடாது – என்றும் கூறுவதற்கு ஏற்ப அத்யயந விதிமுறைகளைப் பின்பற்றி அவற்றுக்கே அடிபணிந்து, தான் கற்றுத் தேர்ந்த வேதத்தின் எல்லையான அடையப்படவேண்டிய பொருளாகவும், பஜேத் ஸாரதமம் சாஸ்த்ர ரத்நாகர இவ அம்ருதம் ஸர்வதஸ் ஸாரம் ஆதத்யாத் புஷ்பேப்ய இவ ஷட்பத: - தேனீக்கள் மலர்களில் உள்ள தேனை மட்டும் பிரித்து எடுத்துப் பருகுவது போன்று,

அனைத்து சாஸ்த்ரங்களிலும் உள்ள சாரத்தை அமிர்தம் போன்று பிரித்து எடுத்து அறியவேண்டும் - என்பதற்கு ஏற்ப அவற்றின் சாரமாகவும்.

வ்யாக்யானம் – (அதனுச்சி மிக்க சோதியை நாதனெனவறியாது) "வேதைச்ச ஸர்வை ரஹ மேவ வேத்ய:" என்றும், "வேத வேத்யே பரே பும்ஸி" என்றும், "வேதே ராமாயணே புண்யே" என்றும், "ஆதௌ மத்யே ததாந்தேச விஷ்ணுஸ் ஸர்வத்ர கீயதே" என்றும், "உளன் சுடர் மிகு சுருதியுள்" என்றும், "ச்ருதி சிரஸி விதீப்தே" என்றும் சொல்லுகிறபடியே வேத சிரஸ்ஸுக்களாலே கட்டடங்க ப்ரதிபாத்யனாய், "ஜ்யோதிஷாம் ஜ்யோதி:", "தேஜஸாம் ராசிமூர்ஜிதம்" என்கிறபடியே நிரவதிகமாக ப்ரகாசிக்கிற ஸர்வேச்வரனை, "பதிம் விச்வச்ய" என்கிறபடியே நமக்கு ப்ராப்த சேஷியென்றறிய மாட்டாதே. **(உழல்கின்ற தொண்டர்)** "கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வ ஸ்ரஷ்டாரமச்யுதம் நார்ச்ச யிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா" என்றும், "நமாம் துஷ்க்ருதிநோ மூடா ப்ரபத்யந்தே நராதமா காமைஸ்தைஸ்தைர் ஹ்ருத ஜ்ஞாநா: ப்ரபத்யந்தே ந்யதேவதா:" என்றும், "நாதேந: புருஷோத்தமே த்ரிஜகதாமேகாதிபே சேதஸா ஸேவ்யே ஸ்வஸ்யபதஸ்ய தாதரிஸ்ரே நாராயணே திஷ்டதி யம் கஞ்சித் புருஷாதமம் கதிபயக்ராமேசமல்பார்த்ததம் ஸேவாயை ம்ருகயா மஹோநர மஹோ மூகாவராகாவயம்" என்றும் சொல்லுகிறபடியே **அநாதி பாப வாஸனையாலே க்ஷுத்ர தேவதைகளுக்கும் க்ஷுத்ர மநுஷ்யருக்கும் தங்களுக்கும் என்றும் ஒக்க சேஷ பூதராய்**, அந்த சேஷ வ்ருத்தி தன்னாலே, "அதச்சோர்த்வஞ்ச ப்ரஸ்ருதா: தஸ்ய சாகா குண ப்ரவ்ருத்தா விஷயே ப்ரவணா:" என்றும், "கதா கதம் காம காமாலபந்தே" என்றும் சொல்லுகிறபடியே கர்ப்ப ஜந்ம யாம்ய தூமாதி மார்க்கங்களிலே ஸஞ்சரித்து, **பஞ்சாக்நி வித்தையில் சொல்லுகிறபடியே தேவாதி யோநிகள்தோறும் "மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து" திரியா நிற்கிற சபலருடைய**.

விளக்கம் – (அதன் உச்சி மிக்க சோதியை நாதன் என அறியாது) கீதை (15-15) – வேதைச்ச ஸர்வைர் அஹம் ஏவ வேத்ய: - அனைத்து வேதங்களாலும் நானே அறியப்படுகிறேன் – என்றும், வேத வேத்யே பரே பும்ஸி – வேதத்தினால் அறியப்படவேண்டிய உயர்ந்தவன் அவனே – என்றும், வேதே ராமாயணே புண்யே – என்றும், ஆதௌ மத்யே ததாந்தே ச விஷ்ணுஸ் ஸர்வத்ர கீயதே – வேதங்களின் தொடக்கத்திலும், நடுவிலும், முடிவிலும் என்று அனைத்து இடங்களிலும் விஷ்ணுவே

கூறப்படுகிறான் – என்றும், திருவாய்மொழி (1-1-7) – உளன் சுடர்மிகு சுருதியுள் – என்றும், ஸ்ரீபாஷ்யம் மங்கள ச்லோகம் – ச்ருதி சிரஸி விதீப்தே – வேதங்களின் தலைப்பாகமான உபநிஷத்துக்களில் ஒளிர்ந்தபடி உள்ளவன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப வேதங்களுடைய தலைப்பாகமாக உள்ள உபநிஷத்துக்களால் முழுமையாக வெளிப்படுத்தப்படுபவனும். கீதை (13-18) - ஜ்யோதிஷாம் ஜ்யோதி: - ப்ரகாசிக்கின்ற அனைத்திலும் அந்த ஜ்யோதி மூலம் – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் - தேஜஸாம் ராசிமூர்ஜிதம் - ஒளிக்கூட்டம் போன்றவன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, எல்லையற்ற ப்ரகாசத்துடன் கூடியவனும் ஆகிய ஸர்வேச்வரனை, பதிம் விச்வஸ்ய – இந்த விச்வத்தின் பதியாக உள்ளவன் – என்பதற்கு ஏற்ப நம்மால் அடையப்படவேண்டிய எஜமானன் என்று அறியாமல், (உழல்கின்ற தொண்டர்) - ஸ்ரீவிஷ்ணுபுராணம் (6-1-41) – கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரம் அச்யுதம் ந அர்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்ட உபஹதா ஜநா: - கலிகாலத்தில் வெளிவேஷம் கொண்டவர்களால் கெடுக்கப்பட்ட மனம் கொண்டவர்கள், இந்த ஜகத்தின் பதியாகிய விஷ்ணுவை ஆராதிப்பதில்லை – என்றும், கீதை (7-15) – ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: - எப்போதும் பாபம் நிறைந்த செயல்களையே செய்தபடி உள்ளவர்கள் என்னை வந்தடைவதில்லை – என்றும், கீதை (7-20) – காமஸ்தைஸ்தைர் ஹ்ருத ஜ்ஞாநா: ப்ரபத்யந்தே அந்ய தேவதா: - இன்பமான பொருள்களால் தங்கள் இதயம் அபகரிக்கப்பட்டு அந்தந்த மற்ற தேவதைகளையே நாடுகிறார்கள் – என்றும், முகுந்தமாலை (28) - நாதே ந: புருஷோத்தமே த்ரிஜகதாம் ஏகாதிபே சேதஸா ஸேவ்யே ஸ்வஸ்ய பதஸ்ய தாதரி ஸுரே நாராயணே திஷ்டதி யம் கஞ்சித் புருஷாதமம் கதி பய க்ராமேசம் அல்பார்த்ததம் ஸேவாயை ம்ருகயாமஹே நரம் அஹோ மூடா: வராகா வயம் – மூன்று லோகங்களுக்கும் ஒரே தலைவனாக உள்ளவனும், மனதால் நினைத்து வணங்கும்படி உள்ளவனும், தன்னுடைய இருப்பிடத்தையே அளிப்பவனும், புருஷோத்தமனும் ஆகிய நாராயணன் நமக்கு நாதனாக உள்ளபோது, சில கிராமங்களுக்கு மட்டுமே தலைவனாக உள்ளவனும், அற்பமான பணத்தை அளிப்பவனும், தரக் குறைவான யாரோ ஒரு மனிதனிடம், “எனக்கு வேலை கொடுங்கள்” என்று கெஞ்சி அலைகிறோமே. நாம் எவ்வளவு மூடர்களும் அற்பர்களும் ஆகிறோம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள பாபங்களின் வாஸனை காரணமாகத் தாழ்ந்த தேவதைகளுக்கும், தாழ்ந்த மனிதர்களுக்கும், தங்களுக்கும் தாங்கள் அடிமைகள் என்று எண்ணியபடி நின்று, அத்தகைய அடிமைத்தனத்தின் வளர்ச்சி காரணமாக, கீதை (15-2) –

அதச்ச ஊர்த்த்வம் ச ப்ரஸ்ருதா: தஸ்ய சாகா: குண ப்ரவ்ருத்தா விஷயே ப்ரவணா: - அந்த மரத்தின் கிளைகள், ஜடமான முக்குணங்களால் வளப்படுத்தப்பட்டு, மேல்நோக்கியும் கீழ்நோக்கியும் விரிந்துள்ளன. அதன் உபகிளைகளாக புலல் இன்ப விஷயங்கள் உள்ளன – என்றும், கீதை (9-21) – கதாகதம் காம காமா லபந்தே – புலன் இன்பங்களின் விளைவாக பிறப்பு மற்றும் இறப்பு என்பதையே அடைகிறார்கள் - என்றும் கூறுவதற்கு ஏற்ப கர்ப்பம், பிறப்பு, மரணம், தூமாதி மார்க்கமாகச் செல்லுதல் என்பதை அடைந்து, பஞ்சாக்னி வித்யையில் கூறுவதற்கு ஏற்ப தேவர்கள் போன்ற பல பிறவிகளில் திருவாய்மொழி (2-6-8) – மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து – என்று மீண்டும் பிறந்தபடி உள்ள ஸம்ஸாரிகளுடைய.

வ்யாக்யானம் – (பேதைமை தீர்த்த) "தேஷாமேவ அநுகம்பார்தம் அஹம் அஜ்ஞாநஜம் தம: நாசயாமி" என்கிற கீதாசார்யனைப் போலே, "பாபத்வாந்த க்ஷயாயச ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர:" என்றும் **அஞ்ஞாநத்வாந்தகார நிவாகரரா**கையாலே அப்ராப்த விஷய பஜநத்துக்கடியான அஞ்ஞாநத்தை வாஸனையோடே போக்கியருளினா ரென்கிறார். **(இராமானுசைத் தொழும் பெரியோர் பாதமல்லால்)** இப்படி ஸர்வோத்தரரான எம்பெருமானாரைத் தந்தாமுகந்து ரக்ஷகராக அத்யவஸித்திருக்கும் மஹாத்மாக்களுடைய ப்ராப்யமான திருவடிகளையொழிய. **பெரியோர் – ஆழ்வான், ஆண்டான், பிள்ளான் தொடக்கமானாரென்றபடி. (தொழும் பெரியோர்)** "அடியைத் தொடர்ந்தெழுமைவர்கள்" என்று சொல்லவேண்டும்படி அவனை ஆச்ரயித்திருந்த பாண்டவர்கள், "சிறியார்" என்கிறபடியே உருவற்ற ஜ்ஞாநராய்ப் போந்தார்கள்; இவரை ஆச்ரயித்தவர்களுக்கு அப்படிப்பட்ட குறைகளொன்றுமின்றிக்கே, அத்தாலே இப்படிப்பட்ட பெருமையொன்றுமே காணும் முற்படவுண்டாவது. **(என்றனாருயிர்க்கு)** "**அவன் தொண்டர் பொற்றாளில் தொண்டு கொண்டேன்**" என்னும்படியான அத்யாவஸத்தோடே போந்திருக்கிறவென்னுடைய விலக்ஷணமான ஆத்மாவுக்கு. **(யாதொன்றும் பற்றில்லையே)** வேறொரு அபாச்ரயமில்லை. "**வாசா யதீந்த்ர**" என்கிற ச்லோகத்தாலே இவ்வர்த்தத்தை ஜீயருமருளிச் செய்தாரிறே.

விளக்கம் – (பேதைமை தீர்த்த) - கீதை (10-11) – தேஷாமேவ அநுகம்பார்தம் அஹம் அஜ்ஞாநஜம் தம: நாசயாமி – அவர்களுக்கு கருணை புரிவதற்காக, அவர்களுடைய

அறியாமை என்னும் இருளை, ஞானம் என்னும் ஒளியால் நான் அழிக்கிறேன் – என்று உரைத்த கீதாசார்யன் போன்று, பாபத்வாந்த க்ஷயாயச ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர: - இராமானுஜன் என்னும் சூரியன் இந்தப் பூமியில் உதித்தவுடன், பாபங்கள் என்னும் இருள் நீங்கியது - என்று கூறுவதற்கு எற்ப அறியாமை என்னும் இருளைப் போக்கவல்லவர் என்பதால், தாழ்ந்த உலக விஷயங்களுக்கு அடிபணிந்து கிடப்பதற்குக் காரணமாக உள்ள அறியாமையையும், அதன் வாஸனையையும் நீக்கியருளினார். (**இராமானுசைத் தொழும் பெரியோர் பாதமல்லால்**) - இவ்விதம் அனைவரையும் கரையேற்றுபவராகிய எம்பெருமானாரை மிகவும் மகிழ்வுடன், தங்களைக் காப்பாற்றுபவராக ஏற்றுக் கொண்டபடி உள்ள மஹாத்மாக்களுடைய உயர்ந்த திருவடிகள் அல்லாமல். இங்கு பெரியோர் என்பது கூரத்தாழ்வான், முதலியாண்டான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் தொடக்கமாக உள்ளவர்களைக் குறிக்கும். (**தொழும் பெரியோர்**) - இராமானுச நூற்றந்தாதி (51) – அடியைத் தொடர்ந்தெழும் ஐவர்கள் - என்று கூறுவதற்கு ஏற்ப க்ருஷ்ணனை மட்டுமே அடிபணிந்து நின்ற பாண்டவர்கள், “சிறியார்” என்பதற்கு ஏற்ப உருவம் அற்ற ஞானம் கொண்டவர்களாக ஆயினர்; ஆனால் எம்பெருமானாருடைய திருவடிகளை எப்போதும் அண்டி நிற்பவர்கள், அது போன்ற குறை ஏதும் இல்லாமல், பெருமையை மட்டுமே அடைந்தபடி உள்ளனர். (என்றன் ஆருயிர்க்கு) – கண்ணிநுண்சிறுத்தாம்பு – அவன் தொண்டர் பொற்றாளில் தொண்டு கொண்டேன் – என்பதற்கு ஏற்ப எல்லையற்ற ஈடுபாட்டுடன் அடிபணிந்து நின்ற என் ஆத்மாவிற்கு. (**யாதொன்றும் பற்றில்லையே**) - வேறு எந்த ஒன்றும் அண்டத் தகுந்த இடம் இல்லை. யதிராஜ விம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் - என்ற ச்லோகத்தில், இந்தக் கருத்தையே ஸ்வாமி மணவாளமாமுனிகளும் அருளிச்செய்தார் அல்லவோ?

86. பற்றா மனிசரைப் பற்றி அப்பற்று விடாதவரே

உற்றார் என உழன்று ஓடி நையேன் இனி ஒள்ளியநூல்
கற்றார் பரவும் இராமானுசனை கருதும் உள்ளம்
பெற்றார் எவர் அவர் எம்மை நின்றாளும் பெரியவரே

விளக்கவுரை - உலக விஷயங்களை மட்டுமே நாடி நிற்கும் தாழ்வான மனிதர்களை அடைந்து, அத்தகைய அவர்களது தொடர்பு கொண்டவர்கள் மட்டுமே எனக்கு உற்றவர்கள் என்று ஓடியபடி இருந்தேன். தாழ்வான விஷயங்களுக்கு உறவினர்களாக இருக்கும் அவர்களே அனைத்து உறவினர்கள் என்றும், என்னைக் காக்க வல்லவர்கள் என்றும் எண்ணினேன். அவர்கள் பின்னேயே சென்று, அவர்களை வெகுதூரத்தில் கண்டாலும் இருந்த இடத்தில் நிற்காமல், அவர்கள் உள்ள இடம் தேடி ஓடினேன். அவர்களால் எனக்கு எந்தப் பயனும் இல்லை என்று அறியாமல், அவர்களால் பலன் உண்டு என்று எண்ணி அவர்கள் வீடு தேடி நின்றேன். எம்பெருமானாரின் தொடர்பு கிட்டிய நான் இனி இவ்விதம் செய்யமாட்டேன். "அவர்கள் பக்கம் ஒரு நமஸ்காரம்" என்றார். இவ்விதம் தெளிவு பெற்ற நான் இனி யாருக்கு அடிமைத்தனம் செய்யப்போகிறேன் என்றால் – தொடர்ந்து கூறுகிறார். அனைத்து வேதங்களின் சாரமாக உள்ளதும், உயர்ந்த புருஷார்த்தமாகிய மோக்ஷத்தை அளிக்கவல்லதும், தத்துவங்களை உள்ளது உள்ளபடி ப்ரகாசிக்க வைப்பதும் ஆகிய ரஹஸ்யத்ரயங்களை (திருஅஷ்டாக்ஷரம், த்வயம், சரமச்லோகம்) எம்பெருமானாரின் கருணை மூலம் கிட்டப் பெற்றவர்கள், தாங்கள் பெற்ற ஞானத்தின் பயன் என்பது "எம்பெருமானாரிடம் ப்ரேமையுடன் இருப்பதே", என்று உள்ளனர். இவ்விதம் அவர்கள் எம்பெருமானாரை அண்டியே நின்று – ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே, சரணமேமி ராமாநுஜம், இராமநுசமுனிவன் வாய்த்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன், இதத்தாய் இராமாநுசன் – என்று போற்றியபடி உள்ள நெஞ்சத்துடன் வாழ்கின்றனர். இப்படிப்பட்டவர்களே எனக்கு இனி எஜமானர்கள் ஆவர்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே "இராமானுசனைத் தொழும் பெரியோர் பாதமல்லாலென் றனாருயிர்க்கி யாதொன்றும் பற்றில்லையே" என்று தம்முடைய நிஷ்டையைச் சொன்னார். இப்பாட்டிலே – **முற்காலமெல்லாம் அப்ராப்த விஷயங்களைத் தங்களுக்கு அபாச்ரயமாகப் பற்றிக் கொண்டு போந்து அவர்களை பந்துக்களாக நினைத்து,**

அவர்களளவிலே, "தாயே தந்தையென்னுந் தாரமே கிளை மக்களென்றும்" என்கிறபடியே தாம் அதிமாத்ரா ப்ரவணராய்ப் போந்த படிகளை யநுஸந்தித்து பீதபீதராய், அப்படி செய்யக் கடவேனல்லேன், தத்வ ஹித புருஷார்த்தங்களை உள்ளபடி யறியக் கடவரான பெரியோர்களாலே ஸ்துதிக்கப்படுகிற எம்பெருமானாரைச் சிந்திக்கும் மநஸ்ஸை, நிதி பெற்றாப்போலே லபித்தவர்கள் ஆரேனுமாகிலும் அவர்களே என்னை ஆளவுரியவர்களென்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், "இராமானுசனைத் தொழும் பெரியோர் பாதம் அல்லால் எந்தன் ஆருயிர்க்கு யாதொன்றும் பற்று இல்லையே" என்று தன்னுடைய ஆழ்ந்த ஈடுபாட்டை உரைத்தார். இந்தப் பாசுரத்தில், இதுவரை இந்த உலகத்தில் உள்ளவற்றையே தனக்கு அபயம் அளிக்கவல்லவை என்று எண்ணியபடி இருந்து, அவற்றையே பற்றியபடி, அவற்றையே உறவாக எண்ணி, அவர்கள் விஷயத்தில் பெரியதிருமொழி (1-9-1) – தாயே தந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும் - என்பதற்கு ஏற்ப அவர்களிடம் மட்டுமே மிகவும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்ததை எண்ணியவராக, அதன் விளைவாக மிகுந்த அச்சம் கொண்டவராக இருந்தேன்; இனி அவ்விதம் செய்யமாட்டேன்; உண்மையையும் நன்மையையும் அளிக்கவல்ல புருஷார்த்தங்களை, உள்ளது உள்ளபடி உணர்ந்த பெரியவர்களால் எப்போதும் துதிக்கப் படுபவராகிய எம்பெருமானாரை மட்டுமே சிந்திக்கும் மனம் கொண்டவர்களாக, அத்தகைய மனம் கொண்டிருப்பதையே பெரிய புதையல் போன்று கொண்டாடியபடி உள்ளவர்களாக யாரேனும் இருந்தால், அவர்களே என்னை இனி, கட்டளை இடக் கூடியவர்கள் ஆவார்கள் என்கிறார்.

வ்யாக்யானம் – (பற்றா மனிசரைப் பற்றி) "பெரியேனாயினபின் பிறர்க்கே யுழைத்தேழையானேன்" என்றும், "பாந்தவ ஆபாஸ லோல:" என்றும் சொல்லுகிறபடியே, **ஸம்பதி ஸர்வஸ்வாபஹாரிகளாய், ஆபதி அரக்ஷகராயு மிருக்கையாலே**, ஒன்றுக்கும் பற்றாத க்ஷுத்ர மநுஷ்யரை ஸ்வரூப நாசகரமான அடிமைத் தொழில் செய்வதாக ஆச்ரயித்து. **(அப்பற்று விடாதவரே)** அந்த ஆச்ரயணத்தை விடமாட்டாதவரே. (உற்றார்ரெனவுழன்று) இப்படி ஆபாஸ பந்துக்களானவர்களை மாத்ரு பித்ரு பௌத்ராதியான ஸர்வவித பந்துக்களென்றும், நிர்வாஹகரென்றும், ரக்ஷகரென்றும்

ப்ரமித்து, அவர்கள் பின்னே திரிந்து, அவர்களைப் பார்க்குமளவும் நின்றவிடத்தில் நிற்கவொட்டாத அதிமாத்ர ப்ராவண்யத்தாலே அவர்களிருந்தவிடம் தேடிக் கொண்டு ஓடி. அவர்கள் தன்னிலும் தண்ணியரென்று அறியமாட்டாதே அவர்களாலே என்றனக்கு ஒரு புருஷார்த்த ஸித்தியுண்டென்று அவர்கள் க்ருஹங்களுக்குப் பலபடியாலுமோடி. **ஓடி** – ஓடிப்போயென்றபடி. **(நையேனினி)** எம்பெருமானாருடைய விஷயீகாரத்தைப் பெற்ற பின்பு இப்படி செய்து சிதிலனாகேன். அவர்களுடைய ஸம்ச்லேஷ விச்லேஷங்களிலுண்டான ஹர்ஷ சோகங்களாலே சிதிலனாகேனென்றபடி. அன்றிக்கே, **(பற்றா மனிசர்) இத்யாதிக்கு** – க்ஷுத்ரமநுஷ்யரை யாச்ரயித்து, அந்த ஆச்ரயணம் விடாதே அவர்களையே உற்றாராக அநுஸந்தித்து **உழன்று ஓடி நையேனென்**று பொருளாகவுமாம். "துரீச்வர த்வார பஹிர்விதர்த்திதா திராஸிகாயை ரசிதோயம் அஞ்ஞலி:" என்கிறாப்போலே அவர்களுக்கு ஒரு நமஸ்காரமென்கிறார் காணும்.

விளக்கம் - **(பற்றா மனிசரைப் பற்றி)** - பெரியதிருமொழி (1-9-7) – பெரியேனாயினபின் பிறர்க்கே யுழைத்தேழையானேன் – என்றும், அஷ்டச்லோகி (4) – பாந்தவ ஆபாஸ லோல: - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்தையும் தங்களுடையது என்று எண்ணி அபகரிப்பவர்களாக, ஆபத்து காலத்தில் தங்களையும் தங்களைச் சார்ந்தவர்களையும் காக்க இயலாதவர்களாக இருப்பதால் எதற்கும் உதவாதபடி உள்ள தாழ்ந்த மனிதர்களை, தங்களுடைய ஸ்வரூபத்தைத் தாங்களே அழித்துக் கொள்கின்ற அடிமைத்தொழில் செய்வதாக அறிந்து கொண்ட பின்னரும், அவர்களை அண்டி நின்று. **(அப்பற்று விடாதவரே)** - அத்தகைய பற்றுதலை விடாமல் உள்ளவர்கள். (உற்றார் என உழன்று ஓடி) – இவ்விதம் தகாதவற்றை ஏற்றுக்கொண்டவர்களை உறவினர்கள் என்று கொண்டாடி, அவர்களையே தாய், தந்தை, பௌத்ரன் என்று அனைத்துவிதமான உறவினர்கள் என்றும், நம்மைக் கட்டளை இட வல்லவர்கள் அவர்களே ஆவர் என்றும், நம்மைக் காக்கவல்லவர்கள் அவர்களே ஆவர் என்றும் மயங்கி, அவர்கள் பின்னே எப்போதும் நின்று, அவர்களைப் பார்த்தவுடன் நின்ற இடத்தில் நிற்க இயலாமல் மிகுந்த அன்பு காரணமாக அவர்கள் உள்ள இடத்திற்கு ஓடிச் சென்று. அவர்கள் நம்மைக் காட்டிலும் தாழ்ந்தவர்களாக உள்ளபோதிலும், அவர்களால் எனக்குப் பயன் உள்ளது என்று எண்ணி, அவர்களுடைய வீடுகளுக்குப் பலமுறை ஓடிச்சென்று. (நையேன் இனி) - எம்பெருமானாருடைய உயர்த்தியை அறிந்த பின்னர், இனி இவ்விதம் செய்து என்னை

நானே அழித்துக்கொள்ளமாட்டேன். அவர்களுடைய சேர்த்தியால் இன்பமும், பிரிவால் துன்பமும் இனி அடையமாட்டேன். அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். (**பற்றா மனிசரைப் பற்றி**) - தாழ்ந்த மனிதர்களை அண்டி நின்று, அத்தகைய பற்றுதல்களை விடாமல், அவர்களையே உறவினர்களாக எண்ணியபடி, அவர்களிடம் உழன்று, அவர்கள் உள்ள இடம் தேடி ஓடி இனி அழியமாட்டேன் என்று கொள்ளலாம். வைராக்ய பஞ்சகம் (3) – துரீச்வர த்வார பஹிர்விதர்த்திதா திராஸிகாயை ரசிதோயம் அஞ்ஞலி: - சிறிதும் இரக்கம் இல்லாத செல்வந்தர்களுடைய வீட்டு வாயிலில் காத்து நிற்கின்ற நிலைக்கு ஒரு கும்பிடு இடுகிறேன் - என்று கூறுவது போன்று, அவர்கள் அனைவருக்கும் ஒரு நமஸ்காரம் என்கிறார்.

வ்யாக்யானம் – (ஒள்ளிய நூல் கற்றார் பரவும்) "ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச ஸர்வமஷ்டாக்ஷர அந்தஸ்ஸ்தம் யச்சாந் யதபி வாங்மயம்" என்றும், ஸ்வஜ்ஞாநம் ப்ராபக ஜ்ஞாநம் ப்ராப்ய ஜ்ஞாநம் முமுக்ஷுபி: ஜ்ஞாந த்ரயம் உபாதேயம் ஏதத் அந்யம் ந கிஞ்சந" என்றும், "சுடர்மிகு சுருதி" என்றும் சொல்லுகிறபடியே, ஸகல வேத ஸங்க்ரஹமாய், தத்வ ஹித புருஷார்த்தங்களை உள்ளபடி ப்ரகாசிப்பிக்குமதான ரஹஸ்ய த்ரயத்தை ஸ்வாசார்யரான எம்பெருமானாருடைய ப்ரஸாதத்தாலே பெற்று, அதுக்கு ஆந்தர ப்ரமேயமாய், தத் யாதாம்ய ரூபமாய், ஸாரதமமாயிருந்துள்ள அர்த்தம், "ஆசார்ய தேவோ பவ", "தேவமிவ ஆசார்யாமுபாஸீத" என்றும், "யஸ்ய தேவே பராபக்திர் யதே தேவே ததா குரௌ" என்றும், "தேவவத்ஸ்யாதுபாஸ்ய:" என்றும், "தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி சபதம்பாதி நாந்யத்ர" என்கையாலே, எம்பெருமானாரேயென்று தெளிந்து நிலை பெற்றிருக்குமவர்கள் தந்தாமுடைய கல்விக்கு ப்ரயோஜன மிதுவேயென்று ப்ரேமத்தால் அடைவுகெட ஸ்தோத்ரம் பண்ணா நின்றுள்ள.

விளக்கம் - (ஒள்ளிய நூல் கற்றார் பரவும்) - ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச ஸர்வமஷ்டாக்ஷர அந்தஸ்ஸ்தம் யச்சாந் யதபி வாங்மயம் – ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் மற்றும் ஒளி மற்றும் ஒலி உருவமாக உள்ள அனைத்தும் எட்டு எழுத்துக்கள் கொண்ட திருமந்திரத்தில் அடக்கம் – என்றும், ஸ்வஜ்ஞாநம் ப்ராபக ஜ்ஞாநம் ப்ராப்ய ஜ்ஞாநம் முமுக்ஷுபி: ஜ்ஞாந த்ரயம் உபாதேயம் ஏதத் அந்யம் ந கிஞ்சந – ஆத்மாவைக் குறித்த ஞானம், உபாயத்தைக் குறித்த ஞானம், உபாயத்தால் அடையவேண்டிய இலக்கு குறித்த ஞானம் ஆகிய மூன்றுவிதமான ஞானங்களே முமுக்ஷு

ஒருவனுக்கு அவசியமானவை ஆகும் அல்லாமல் வேறு எதுவும் அல்ல – என்றும், திருவாய்மொழி (1-1-7) –சுடர்மிகு சுருதி – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்து வேதங்களிலும் கூறப்பட்ட விஷயங்களின் சுருக்கமாகவும், உண்மை மற்றும் நன்மை என்பதை உள்ளடக்கிய பயன்களை உள்ளதுஉள்ளபடி வெளிப்படுத்துவதாகவும் உள்ள மூன்று ரஹஸ்யங்களை தங்களுடைய ஆசார்யராகிய எம்பெருமானாருடைய கருணை மூலம் பெற்று, இத்தகைய நிலையை தாங்கள் அடைந்ததன் பயன், ஆசார்ய தேவோ பவ – ஆசார்யனே தேவன் ஆவான் – என்றும், தேவமிவ ஆசார்யம் உபாஸீத – தேவர்களைப் போன்றே ஆசார்யனை உபாஸிக்கவேண்டும் – என்றும், யஸ்யதேவே பராபக்திர் யதா தேவே ததா குரௌ – தேவர்களிடம் எந்த அளவு உயர்ந்த பக்தியைக் காண்பிக்கிறோமோ அதே அளவு பக்தியை ஆசார்யனிடமும் கொள்ளவேண்டும் – என்றும், தேவவத் ஸ்யாத் உபாஸ்ய: - தேவர்களுக்கு நிகராக ஆசார்யனை உபாஸிக்கவேண்டும் – என்றும், தஸ்மிந் ராமாநுஜார்யே குருரிதி சபதம்பாதி நாந்யத்ர – ராமானுஜரே ஆசார்யன் அல்லாமல் வேறு கதி இல்லை – என்றும் கூறுவதற்கு ஏற்ப, “எம்பெருமானாரே ஆவார்” என்று தெளிவாக அறிவை அடைந்து, அதிலேயே நிலைத்து நிற்பவர்கள், தாங்கள் பெற்ற கல்வியின் பயன் இதுவே ஆகும் என்று மிகுந்த ப்ரேமத்தால் எப்போதும் துதித்தபடி உள்ள.

வ்யாக்யானம் – (இராமானுசனை) எம்பெருமானாரை. (கருதுமுள்ளம் பெற்றவர் யவர்) “ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே” என்றும், “சரணமேமி ராமாநுஜம்” என்றும், “ராமாநுசமுனிவன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்” என்றும், “இதத்தாய் இராமாநுசன்” என்றும் சொல்லுகிறபடியே **அநுஸந்திக்கையே யாத்ரையாயிருக்கும் திருவுள்ளத்தையுடையார்**, “எக்குற்றவாளர் எது பிறப்பேதியல்வாக நின்றோர்” **என்கிறபடியே, உருவற்ற ஞானத்தையும் தண்ணிய ஜந்மத்தையும் நிஷித்த வ்யாபாரத்தையுமுடையாராகிலும்**.

விளக்கம் - (இராமானுசனை) – எம்பெருமானாரை. (கருதும் உள்ளம் பெற்றவர் யவர்) - “ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே” என்றும், “சரணமேமி ராமாநுஜம்” என்றும், “ராமாநுசமுனிவன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்” என்றும், “இதத்தாய் இராமாநுசன்” என்றும் கூறுவதற்கு ஏற்ப, எம்பெருமானாரை எண்ணியபடி இருத்தல் என்பதே தங்களுடைய வாழ்க்கையாகும் என்ற நிலையில் உள்ளவர்கள், இராமாநுச

நூற்றந்தாதி (26) - எக்குற்றவாளர் எது பிறப்பேதியல்வாக நின்றோர் - என்பதற்கு ஏற்ப ஞானம் அற்றவர்களாக இருந்தாலும், தாழ்ந்த பிறவி கொண்டிருந்தாலும், தாழ்ந்த செய்கைகள் கொண்டிருந்தாலும்.

வ்யாக்யானம் – (அவர் எம்மை நின்றாளும் பெரியவரே) அப்படிப்பட்ட குற்றத்தையும் பிறப்பையும் இயல்வையுமுடையவர்களே நமக்கு சேஷிகளாய், நம்மை யாவதாத்மபாவியாக அடி பேராதே ஒருப்படி நின்று யதேஷ்ட விநியோகார்ஹராம்படி **ஆளா நின்றுள்ள மஹாத்மாக்கள்**. "**யவரேலும் அவர் கண்டீர்**", "**அவர் நின்றாளும் பெரியவரே**" என்று நம்மாழ்வாரும் அருளிச் செய்தாரிறே. "ச்வபசோபி மஹீபால விஷ்ணு பக்தோ த்விஜாதிக: விஷ்ணுபக்தி விஹீநஸ்து யதிச்ச ச்வபசாதம:", "ந சூத்ரா பகவத் பக்தா விப்ரா பாகவதாஸ் ஸம்ருதா:, ஸர்வ வர்ணேஷு தே சூத்ரா யேஷ்ய பக்தா ஜநார்தநே", "பக்திரஷ்டவிதா ஹி ஏஷா யஸ்மிந் ம்லேச்சே அபி வர்த்ததே ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டித: தஸ்மை தேயம் க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹி அஹம்", "ச்வபசோபி ஹரேர் நாம யஸ்ய வாசி", "ஸ க்ருதப்ய வசாத் விநிக்கதச்சேத் குலதைவவம் மம தஸ்ய பாத தூளி:", "அநுவ்ரஜாம்யஹம் நித்யம் பூயயேத்யங்க்ரி ரேணுபி:", "தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம்" என்னக் கடவதிறே.

விளக்கம் - (அவர் எம்மை நின்றாளும் பெரியவரே) - இவ்விதமான தோற்றத்தையும், பிறப்பையும், இயல்பையும் கொண்டவர்களே நமக்கு எஜமானர்கள் ஆவர். நம்மை உண்மையாகவே தாழ்ந்தவர்கள் என்று எண்ணாமல், நம்மிடம் ஒரே போன்று பழகி நம்முடைய விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொடுப்பவராக உள்ள அந்த மஹாத்மாக்கள். திருவாய்மொழி (3-7-1) - யவரேலும் அவர் கண்டீர் - என்று இவர்களை நம்மாழ்வாரும் அருளிச்செய்தார். ச்ரீமத்பாகவதம் – ச்வபசோபி மஹீபால விஷ்ணு பக்தோ த்விஜாதிக: விஷ்ணுபக்தி விஹீநஸ்து யதிச்ச ச்வபசாதம: - அரசே! மஹாவிஷ்ணுவிடம் பக்தி கொண்ட ஒருவன் நாய் இறைச்சி உண்பவன் என்றாலும், அவன் அந்தணனைக் காட்டிலும் சிறந்தவன்; மஹாவிஷ்ணுவிடம் பக்தி இல்லாத ஒருவன் அந்தண ஸந்யாஸியாக இருந்தாலும் மேலே கூறப்பட்டவனைக் காட்டிலும் தாழ்ந்தவன் – என்றும், ந சூத்ரா பகவத் பக்தா விப்ரா பாகவதாஸ் ஸம்ருதா:, ஸர்வ வர்ணேஷு தே சூத்ரா யேஷ்ய பக்தா ஜநார்தநே - ஸர்வேச்வரனின் அடியார்கள் பிறப்பிலேயே சூத்திரர்கள் என்றபோதிலும், அவர்கள் சூத்திரர்கள் அல்லர், அவர்கள் அந்தணர்களை

ஒத்தவர்கள் என்று எண்ணப்படவேண்டும். ஆனால் ஜநார்த்தனனிடம் பக்தி அற்ற ஒருவன் எந்தப் பிறவியில் பிறந்துள்ளபோதிலும் அவன் சூத்திரனே ஆவன் – என்றும், கருட புராணம் (219-6, 7, 8, 9) - மத்பக்தஜந வாத்ஸல்யம் பூஜாயாம் சாநுமோதநம் மத்கதா ச்ரவணே பக்தி: ஸ்வர நேத்ராங்கவிக்ரியா ஸ்வயமாராதநே யத்நோ மமார்த்தே டம்பவர்ஜநம் மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி பக்திரஷ்டவிதா ஹி ஏஷா யஸ்மிந் ம்லேச்சே அபி வர்த்ததே ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டித: தஸ்மை தேயம் க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹி அஹம் – என்னிடம் உள்ள பக்தி என்பது எட்டு வகைப்படும். அவையாவன – என் பக்தர்களிடம் உள்ள குறைகளைப் பொருட்படுத்தாமை; எனக்குச் செய்யும் பூஜையைக் கண்டு மகிழ்தல்; எனது சரிதங்களைக் கேட்பதில் ஆவல்; அவற்றைக் கேட்கும்போது குரல் தழுதழுத்து, மயிர்க்கூச்சல் எடுத்து, கண்ணீர் பெருகுதல்; தானும் ஆராதனை செய்தல்; எனது விஷயத்தில் ஆடம்பரம், டம்பம் இல்லாத தன்மை; எப்போது என்னை நினைத்தபடி இருத்தல்; என்னிடம் என்னைத் தவிர வேறு பலன் கேட்காமல் இருத்தல் – என்பதாகும். இவை யாரிடம் உள்ளனவோ அவன் மிலேச்சனாக இருந்தாலும் அவனை ஞானம் மற்றும் பக்தி கொண்ட அந்தணன் என்றும், ஸந்ந்யாஸி என்றும், பண்டிதன் என்றும் எண்ணப்படவேண்டும். அவனுக்கு ஞான உபதேசம் செய்யலாம். அவனிடமிருந்து ஞானத்தைப் பெறலாம். என்னைப் போன்றே அவன் பூஜிக்கப்பட வேண்டியவன் – என்றும், ச்வபசோபி ஹரேர் நாம யஸ்ய வாசி – என்றும், ஸ க்ருதப்ய வசாத் விநிக்கதச்சேத் குலதைவவம் மம தஸ்ய பாத தூளி: - என்றும், ஸ்ரீமத்பாகவதம் (11-14-16) - அநுவ்ரஜாம்யஹம் நித்யம் பூயயேத்யங்க்ரி ரேணுபி: - நான் ஸாதுக்களுடைய பாத துளிகளை எப்போதும் பின் தொடர்ந்தபடி உள்ளேன் – என்றும், யா க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யு: ஏகாந்தகதவுத்திபி: தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ரதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம் – தன்னிடம் மட்டுமே மிகுந்த பக்தி கொண்டுள்ள அடியார்கள் செய்யும் ஆராதனைகள் அனைத்தையும் தனது தலையைத் தாழ்த்தி பகவான் ஏற்கிறான் - என்றும் கூறியது காண்க.

87. பெரியவர் பேசிலும் பேதையர் பேசிலும் தன் குணங்கட்கு

உரியசொல் என்றும் உடையவன் என்றென்று உணர்வில் மிக்கோர்
தெரியும் வண்கீர்த்தி இராமாநுசன் மறை தேர்ந்துலகில்
புரியும் நல்ஞானம் பொருந்தாதவரைப் பொரும் கலியே

விளக்கவுரை - மிகுந்த ஞானம் உள்ளவர்கள் துதித்தாலும், துதிக்கும் ஞானம் அற்றவர்கள் துதிக்க முற்பட்டாலும் அவர்களுக்கு ஏற்றபடி தன்னையும், தனது ஸ்வரூபம் மற்றும் குணங்களை எம்பெருமானார் எப்போதும் வைத்தபடி உள்ளார். இவ்விதமே சிறந்த ஞானம் உள்ளவர்கள் எம்பெருமானாரைத் தெளிந்து அறிகின்றனர். இத்தகைய பரவிய புகழை உடைய எம்பெருமானார், தனது ஆழ்பொருள் வெளியே தெரியாமல் தன்னுள்ளே மறைத்து வைத்துள்ள வேதத்தை ஆதாரமாக வைத்துக் கொண்டு வேதார்த்த ஸங்க்ரஹம், கீதாபாஷ்யம் போன்றவற்றை அருளிச்செய்து, சிறந்த ஞானத்தை உலகிற்கு அளித்தார். ஆயினும் இத்தகைய ஞானத்தில் பொருந்தாமல் சிலர் இருக்கக்கூடும். அவர்களை கலியின் தோஷங்கள் ஆக்ரமித்துக் கொள்ளும்.

அவதாரிகை – "அவரெம்மை நின்றாளும் பெரியவரே" என்று ததீயர் விஷயமாக உமக்குண்டான ப்ராவண்யத்தைச் சொன்னீர். ஆனால் சேதநருடைய ஜ்ஞாந வ்யவஸாய ப்ரேமங்கள் கலங்கும்படி ஆக்ரமியா நின்றுள்ள இந்த கலிகாலத்திலே உமக்கு இப்படிப்பட்ட வ்யவஸாயம் என்றுமொக்க ஒருபடிப்பட்டிருக்கக் கூடுமோ என்று அருகேயிருப்பார் சிலர் கேட்க; **பரத்வ ஸௌலப்யாதி குண பரிபூர்ணராகையாலே, அளவுடையாராயும் அறிவிலிகளாயுமிருக்கிற அதிகாரிகள் ஸ்தோத்ரம் பண்ணப் புக்கால் அவரவர்களுடைய அதிகாரத்துக்குத் தகுதியான பேச்சுக்களாலே பேசுகைக்கீடான ஸ்வரூப ரூப குண விபூதிகளையுடையரான எம்பெருமானாராலே உபகரிக்கப்பட்ட விலக்ஷண ஜ்ஞாநத்தைப் பெறாதேயிருந்தவர்களை அந்த கலிகாலம் ஆக்ரமித்து ஜ்ஞாந ப்ரம்சதத்தைப் பண்ணுமித்தனையொழிய, அந்த ஜ்ஞாநத்தைப் பெற்றவென்னை ஆக்ரமிக்க மாட்டாது, ஆகையாலே எனக்கு இந்த வ்யவஸாயம் யாதாத்மா பாவியாக நடக்கத் தட்டில்லையென்று திருவுள்ளமாக அருளிச்செய்கிறார்**.

விளக்கம் - அமுதனாரிடம் ஒரு சிலர், "கடந்த பாசுரத்தில் – அவர் எம்மை நின்றாளும் பெரியவரே - என்று எம்பெருமானாருடைய அடியார்கள் விஷயத்தில் உமக்கு ஏற்பட்ட மிகுந்த ஈடுபாட்டை உரைத்தீர். ஆனால் இந்தக் கலிகாலத்தில், சேதநர்களுடைய

உறுதியான அறிவு, உறுதியான ப்ரேமை போன்ற பலவும் கலங்கியபடியே உள்ளன. இவ்விதம் உள்ளபோது, இப்படிப்பட்ட உறுதியான நிலையானது உமக்கு எப்போதும் ஒரே போன்று இருக்குமோ?", என்று கேட்டனார். இதற்கு அமுதனார், "மிகுந்த உயர்வு, ஸௌலப்யம், குணங்கள் போன்ற அனைத்தாலும் பரிபூர்ணமாக உள்ளதால், அளவுடன் கூடிய அறிவு மற்றும் அறிவே இல்லாத தன்மை ஆகியவை கொண்ட அதிகாரிகள் தன்னைத் துதிக்க முற்படும்போது, அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ப உரைக்கின்ற சொற்களுக்கு ஈடான ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதிகளைக் கொண்டவராக உள்ள எம்பெருமானாரால் உதவி செய்யும்விதமாக உள்ளதான மேன்மையான ஞானத்தைப் பெறாதவர்களை மட்டுமே கலிகாலம் ஆக்கிரமித்து, அவர்களுடைய ஞானத்தை மயக்குகிறது. ஆனால் அப்படிப்பட்ட ஞானத்தைப் பெற்ற என்னை, கலிகாலம் ஆக்கிரமிக்காது. எனவே எனக்கு இந்தச் சரீரம் உள்ளவரை, இத்தகைய உறுதி குலைதல் என்பது நிகழ வாய்ப்பில்லை", என்கிறார்.

வ்யாக்யானம் – (பெரியவர் பேசிலும்) ஸ்தோத்ரம் பண்ணுகைக்கீடான ஜ்ஞாந சக்திகளை யுடையராயிருக்கும் பேரளவுடையார் ஸ்தோத்ரம் பண்ணினாலும். **(பேதையர் பேசிலும்)** ஸ்தோத்ரம் பண்ணாதே கை வாங்கியிருக்கைக்கீடான அஜ்ஞாநாசக்திகளுக்கீடா யிருக்கும் அறிவிலிகள் ஸ்தோத்ரம் பண்ணிலும். ஜ்ஞாநாதிகரானவர்கள் தந்தாமுடைய ஜ்ஞாந சக்த்யாதிகளாலே எல்லை காணவொண்ணாத வைபவத்தையுடையவரென்று ஸ்தோத்ரத்தில் நின்று மீள வேண்டும்படியும், அஜ்ஞரானவர்கள் தந்தாமுடைய அஜ்ஞாநாசக்திகளை யநுஸந்தித்துக் கொண்டு அவருடைய வைபவமெங்கே, அஜ்ஞரான நாங்களெங்கே?, அவர் வைபவத்தை நாம் ஸ்துதிக்கை வசிஷ்டனைச் சண்டாளன் ஸ்தோத்ரம் பண்ணப்போனபடியாமென்று ஸ்தோத்ரத்தில் நின்றும் மீள வேண்டியிராதபடி. (தன் குணங்கட்குரிய சொல்லென்றுமுடையவன்) அவ்விருவருடைய ஜ்ஞாந சக்த்யாதிகளுக்கும், அஜ்ஞாநாசக்த்யாதிகளுக்கும் தகும்படி தம்மை யமைத்து வைத்து, **அவற்றுக்குத் தகுதியாக அவ்விருவரும் ஸ்துதிக்கலாம்படியிருக்கிற தம்முடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளுக்கு தனித்தனியே வாசகமான சப்தங்களை ஸர்வகாலமு முடையவர்**. ஸஹஸ்ர முகமாக ஸர்வ வித்யைகளையும் சிக்ஷித்துக் கொண்டு போந்த மாஹாத்ம்யத்தை யுடையவராகையாலே, எத்தனையேனும் ஜ்ஞாந சக்த்யாதிகளை யுடையாரும் அவருடைய வைபவத்துக்குத் தகுதியாகப் பாசுரமிட்டுச் சொல்லமாட்டார்கள். இப்படியான பின்பு அஜ்ஞாநாசக்திகளை யுடையவர்க்குச் சொல்ல

வேண்டாவிறே. ஆனாலும் அவர்கள் தந்தாமுடைய பக்தி பலாத்காரத்தாலே ஸ்துதிக்கப் புக்கால், **அவர்களுடைய ஸ்துதிக்குத் தகுதியாம்படி தம்மையமைத்து விஷயமாக்கின ஸௌசீல்ய குண நிதியென்றபடி. "என்ற"** என்றது, இப்படிச் சொல்லவென்றபடி.

விளக்கம் - (பெரியவர் பேசிலும்) - துதிப்பதற்கு ஈடான ஞானம் மற்றும் சக்தி போன்றவைகளைக் கொண்டவர்களாக உள்ளவர்கள் அவரைத் துதித்தாலும். (பேதையர் பேசிலும்) - துதிக்க இயலாமல் நிற்பதற்கு ஏற்றபடி அஜ்ஞானம் மற்றும் சக்தியற்ற நிலை போன்றவைகளைக் கொண்டவர்களாக உள்ளவர்கள் துதித்தாலும். ஞானம் போன்றவற்றைக் கொண்டவர்கள், "தங்களுடைய ஞானம் மற்றும் சக்தி போன்றவை மூலமாக எல்லை காண இயலாதபடி உள்ள வைபவத்தைக் கொண்டவர்", என்று துதிப்பதை நிறுத்த இயலாமல் உள்ளனர். அறிவற்றவர்கள், தங்களுடைய அறிவின்மை மற்றும் சக்தியின்மை காரணமாக, "அவருடைய வைபவம் எங்கு, நாம் எங்கு", என்று அவருடைய வைபவத்தைத் துதித்தல் என்பது வசிஷ்டனை மற்றவர்கள் துதிப்பது போன்றதாகும் என்று சிந்தித்து துதிப்பதை நிறுத்த முயல்கிறார்கள். இவர்கள் இது போன்று செய்யவேண்டாதபடியாக. (தன் குணங்கட்குரிய சொல்லென்றுமுடையவன்) - இப்படியாக இந்த இருவருடைய ஞானம் மற்றும் சக்தி போன்றவைகள், அஜ்ஞானம் மற்றும் சக்தியின்மை போன்றவைகள் ஆகியவற்றுக்கு ஏற்றபடி தன்னை அமைத்துக் கொண்டு, அந்தந்த தகுதிகளுக்கு ஏற்றபடி அவர்கள் தன்னைத் துதிப்பதற்கு தகுந்தபடி உள்ள தனது ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி ஆகியற்றைத் தனித்தனியே எப்போதும் கூறலாம்படியாக உள்ளவர். ஆயிரம் திருமுகங்கள் கொண்டு அனைத்து வித்யைகளையும் அறிந்து, அப்படிப்பட்ட மஹாத்ம்யம் கொண்டவராக உள்ளதால், ஞானம் மற்றும் சக்தி போண்றவை எத்தகைய நிரம்பியவர்களாக இருந்தாலும் அவருடைய வைபவத்திற்கு ஏற்றபடியான துதிகளை உரைக்க இயலாமல் இருப்பார்கள். இவ்விதம் கூறிய பின்னர், அஜ்ஞானம் மற்றும் சக்தியற்றவர்கள் குறித்து உரைக்கவும் வேண்டுமோ? ஆனாலும், அபப்டிப்பட்டவர்களும் தங்களுடைய பக்தியானது தங்களை வற்புறுத்துவதன் காரணமாக துதிக்க முனைந்தால், அத்தகைய துதிக்கு ஏற்றபடி தன்னை அமைத்துக் கொண்டு நிற்கின்ற ஸௌசீல்யம் என்ற குணத்தின் புதையலாக உள்ளார்.

வ்யாக்யானம் – "தம் குணங்கட்கு" என்று பாடமானது, தந்தாமுடைய ஜ்ஞாந சக்திகளுக்கும், அஜ்ஞாநாசக்திகளுமாகிற குணங்களுக்கீடாகப் பேசும் சப்தமித்தனை மிகையென்றாதல், இது பொறாதென்றாதல், சேராச்சேர்த்தியாயிராதே அபரிசேத்ய மஹிமாவாலும் அளவிறந்த ஸௌசீல்யத்தாலும் சேரும்படியிருக்கும் ஸ்வாமியென்று பொருளாகக் கடவது. **ஒன்றுதல் – கூடுதலாய்**; சேர்த்திக்கு வாசகமாகிறது. இதுவே யதார்த்தம், விஸத்ருசமாகச் சொன்னார்களல்லர் என்று அவர்கள் பண்ணும் ஸ்தோத்ரங்களினுடைய ஸமீசீந்யதையை ஸ்தாபிக்கையென்றபடி. **உரிய**வென்றது – தக்கவென்றபடி. **உடையவரென்**றது ஸ்வாமியென்றபடி. "**தம்குணங்கட்கு**" என்றும் பாடஞ் சொல்லுவர்கள்; அப்போது - பெரியவர் பேசிலுமாம், பேதையர் பேசிலுமாம், அவர்கள் **தந்தாமுடைய அளவுகளுக்கீடாகப் பேசலாம்படி தம்முடைய குணங்களுக்கு ப்ராப்தமான சொல்லையென்று முடையவரா யிருக்குமவரென்று பொருளாகக் கடவது**.

விளக்கம் - "தன்குணங்கட்கு" என்பதை "தம்குணங்கட்கு" என்று படித்தால், அவரவர்களுடைய ஞானம மற்றும் சக்தி போன்றவை, அஜ்ஞானம் மற்றும் சக்தியின்மை போன்றவை என்பவற்றுக்கு ஈடாக உரைக்கின்ற அனைத்தும் அதிகமாக உள்ளன என்றும், போதாது என்றும் கூறுவதற்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்பவர். அதாவது எல்லையற்ற மஹிமை மற்றும் அளவற்ற ஸௌசீல்யம் போன்றவற்றால், "ஸ்வாமி" என்று பொருள் தரும்படியாக உள்ள நிலை. அதாவது, "இதுவே உண்மை, அவர்கள் தகுதியில்லாதவர்களாக இருந்து உரைக்கவில்லை", என்று அவர்கள் செய்யும் துதிகளுக்குப் பொருத்தமாக தன்மையை நிலைநிறுத்தல்.

வ்யாக்யானம் - (உணர்வில் மிக்கோர்) ஜ்ஞாந சக்திகளில் வந்தால் "இவர்களே ஸர்வஜ்ஞர்கள், இவர்களே ஸர்வாதிதர்கள்" என்னும்படி மயர்வற மதி நலம் அருளப் பெற்றவர்கள். **(தெரியும் வண் கீர்த்தி)** தெளிந்து கொண்டு, "கலியும் கெடுங் கண்டு கொண்மின்" என்னும்படி பவிஷ்யதாசார்யா விக்ரஹத்தைக் கொடுக்கும்படியாயிருக்கிற அழகிய கீர்த்தியையுடையரான. **தெரிதல்** – விவேகித்தல். **வண்மை** – அழகு. **(இராமானுசன்)** எம்பெருமானார். **(மறை தேர்ந்துலகில்)** "கம்பீராணாம் அக்ருதகிராம்" என்கிறபடி தன்னுடைய உட்பொருளை தெரியப் புக்கார்க்குத் தான் அதிகஹநமா யிருக்கையாலே வேதத்துக்கு "மறை" என்று பேராய்த்து. இப்படிப்பட்ட வேதத்தை, "இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயதே" என்கிறபடியே,

உபப்ரஹ்மணத்தைக் கொண்டு அர்த்த விரோதாதிகளொன்றும் வாராதபடி பராமர்சித்து, வேதார்த்த ஸங்க்ரஹ கீதா பாஷ்யாதிகளைப் பண்ணியருளியென்றபடி. **தேர்தல்** – ஆராய்தல்.

விளக்கம் - (**உணர்வில் மிக்கோர்**) - ஞானம் மற்றும் சக்திகள் போன்றவற்றை மட்டுமே எடுத்துக்கொண்டால், "இவர்களே அனைத்தும் அறிந்தவர்கள், இவர்களே அனைத்தையும் வசப்படுத்துபவர்கள்", என்று உரைக்கலாம்படியாக, மயர்வற மதி நலம் அருளப் பெற்றவர்கள். (**தெரியும் வண் கீர்த்தி**) - தெளிந்து கொண்டு. திருவாய்மொழி (5-2-1) – கலியுங் கெடுங் கண்டுகொண்மின் - என்பதற்கு ஏற்ப, எதிர்காலத்தில் வரவுள்ள ஆசார்யருடைய விக்ரஹத்தை, முன்பே அளிக்கும்படியாக அழகான கீர்த்தி கொண்டவரான. (இராமாநுசன்) – எம்பெருமானார். (**மறை தேர்ந்துலகில்**) - ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் (அதிகாரம்-3) – கம்பீராணாம் அக்ருதகிராம் – ஆழமானதும் யாராலும் செய்யப்படாததும் ஆகிய வேதங்கள் - என்பதற்கு ஏற்றபடி தனது ஆழ் விஷயத்தை நன்றாக அறிந்தவர்களுக்கு மட்டுமே தான் தெளிந்தபடி உள்ளதால் வேதத்திற்கு "மறை" என்று பெயர். இப்படிப்பட்ட வேதத்தை, மஹாபாரதம் ஆதிபர்வம் (1-2-73) – இதிஹாஸ புராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயதே - வேதங்களை இதிகாசம் மற்றும் புராணம் மூலமே நன்றாக அறிந்து கொள்ள இயலும் - என்பதற்கு ஏற்ப, தகுந்த விளக்க நூல்கள் கொண்டு, அவற்றில் கூறப்பட்ட விஷயங்களுக்கு எந்தவிதமான முரண்பாடும் ஏற்படாதபடி, சரியான விதத்தில் அறிந்து கொண்டு, வேதார்த்த ஸங்க்ரஹம், கீதா பாஷ்யம் போன்றவற்றை அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் – (உலகில் புரியும் நன்ஞானம்) இந்த அஜ்ஞாந ப்ரசுரமான லோகத்திலே அவற்றை வ்யாக்யாநம் பண்ணி, ஆஸேது ஹிமாசலமாக எல்லார்க்கும் உபகரித்த விலக்ஷணமான ஜ்ஞாநத்திலே. **புரிதல்** – கொடுத்தல். (**பொருந்தாதவரை**) இப்படி ஸர்வருக்கும் உபதேசித்துப் போந்தாலும், உய்யக்கொண்டாரைப்போலே விச்வாஸ மாந்த்தையாலும் கர்ப்ப நிர்ப்பாக்யதையாலும் அந்வயியாதவர்களை. உபதேசத்துக்குட்படாதவர்களை யென்றபடி. **பொருந்துதல்** – சேருதல். (**பொருங்கலியே**) கலி தோஷம் வந்து ஆக்ரமிக்கும். கலி வந்து மேலிட்டு நலியத் தொடங்குமென்றபடி. ஆகையாலே எம்பெருமானாருடைய விஷயீகாரத்தாலே அந்த விலக்ஷண ஜ்ஞாநத்தைப்

பெற்றிருக்குமவர்கள் எவர்களேயாகிலும் அவர்களை கலி நலியமாட்டா தென்றதாய்த்து. “காவலில் புலனை வைத்துக் கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து நாவலிட்டுழி தருகின்றோம் நமன்றமர் தலைகள் மீதே” என்றிவ்வர்த்தத்தைத் தொண்டரடிப்பொடியாழ்வாரும் அருளிச் செய்தாரிறே. “ந கலு பாகவதாயம் விஷயம் கச்சந்தி” என்று ச்ருதியும், “பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந் ப்ரபுர் அஹம் அந்ய நிருணாம் ந வைஷ்ணவாநாம்” என்றும், “த்யஜ பட தூரதரேண தாநபாபாந்” என்றும் நமனும் தன் தூதுவரைக் குறித்துச் சொன்னானிறே.

விளக்கம் – (உலகில் புரியும் நன்ஞானம்) - இவ்விதம் அஜ்ஞானம் தழைத்தபடி உள்ள இந்தப் பூமியில் கீதாபாஷ்யம் போன்றவற்றை அருளிச்செய்து, ஸேது தொடங்கி இமயமலை முடிய உள்ள அனைவருக்கு உபகாரம் செய்த மேன்மையான ஞானத்தில். (பொருந்தாதவரை) – இப்படியாக அனைவருக்கும் உபதேசித்தபடி இருந்தாலும், உய்யக்கொண்டார் போன்று விச்வாஸம் குறைவாக உள்ளதாலும், கர்ப்பத்திலேயே பாக்கியம் அற்றவர்களாக உள்ளதாலும், அந்த ஞானத்தில் ஈடுபடாதவர்களை. அதாவது உபதேசங்களை ஏற்காதவர்களை. (பொருங்கலியே) - கலிகாலத்தின் தோஷம் வந்து சூழ்ந்து கொள்ளும்; அதாவது கலி நலிந்து துன்புறுத்தும் என்று கருத்து. ஆகவே எம்பெருமானாருடைய கருணை மிகுந்த பார்வையால் யார் அந்த மேன்மையான ஞானத்தைப் பெற்றுள்ளார்களோ அவர்களைக் கலிகாலம் துன்புறுத்தாது என்று கருத்து. திருமாலையில் (1) - காவலில் புலனை வைத்துக் கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து நாவலிட்டு உழி தருகின்றோம் நமன்றமர் தலைகள் மீதே - என்று இந்தக் கருத்தையே தொண்டரடிப்பொடியாழ்வாரும் அருளிச்செய்தார் அல்லவோ? ந கலு பாகவதாயம் விஷயம் கச்சந்தி – (யமன் கூறுவது) கலிகாலத்தில் பாகவதர்கள் விஷயத்தில் நான் செல்லமாட்டேன் - என்று ச்ருதியும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-7-14) – பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந் ப்ரபுர் அஹம் அந்ய நிருணாம் ந வைஷ்ணவாநாம் – யமன் தன் கிங்கரனைப் பார்த்து, “மதுஸூதநனிடம் புகுந்தவர்களை விடுவாயாக. விஷ்ணுவின் பக்தர்கள் அல்லாதவர்களுக்கு மட்டுமே நான் எஜமானன்”, என்றான் – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-7-33) - கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்கசக்ரபாணே பவ சரணமிதீரயந்தி யே வை த்யஜ பட தூரதரேண தாநபாபாந் – யமன் தனது கிங்கரனிடம், “தாமரை போன்ற கண்கள் கொண்டவனே! வாஸுதேவா! விஷ்ணுவே! அடியார்களை நழுவவிடாதவனே! சங்கு மற்றும் சக்கரங்களைத் திருக்கரங்களில் கொண்டவனே! நீயே எனக்கு அடைக்கலம் – இவ்விதமாகக் கூறுபவர்கள் எந்தவிதமான பாவங்களும் அற்றவர்கள் ஆவர். அவர்களை நீ அணுகாமல்,

அவர்களை விட்டு விலகிச் செல்வாயாக", என்றான் – என்றும் யமனும் தனது தூதுவர்களிடம் உரைத்தான் அல்லவோ?

88. கலிமிக்க செந்நெல் கழனிக் குறையல் கலைப்பெருமான்
ஒலிமிக்க பாடலை உண்டு தன்னுள்ளம் தடித்து அதனால்
வலிமிக்க சீயம் இராமாநுசன் மறைவாதியராம்
புலிமிக்கது என்று இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே

விளக்கவுரை - உழுவது, நடுவது மற்றும் அறுப்பது ஆகிய செயல்கள் எப்போதும் ஆரவாரத்துடன் நெல் வயல்களில் நடந்து கொண்டே இருக்கும்படி உள்ள வயல்களால் சூழப்பட்டது திருக்குறையலூர் ஆகும். இவ்வூரில் அவதரித்த திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் போன்ற தமிழ் மறைகளை எப்போதும் மனதில் வைப்பதால் உள்ளம் பூரித்தபடியே எம்பெருமானார் உள்ளார். இத்தகைய ஞானம் காரணமாகவே மிகுந்த வலிமை கொண்ட சிங்கம் போன்று உள்ளார். இந்த உலகில் பௌத்தர்கள் போன்று வேதங்களே இல்லை என்று மறுக்காமல், வேதங்கள் உண்மை என்று ஏற்றுக் கொண்ட போதிலும், அவற்றுக்குத் தவறான பொருளைக் கற்பித்தபடி உள்ளவர்கள் புலிகள் போன்று திரிந்து கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் அவர்களை வலிமை குன்றச் செய்யும் வகையில் சிங்கம் போன்று எம்பெருமானார் இந்த உலகில் அவதாரம் செய்தார். இதனை நான் எப்போதும் புகழ்ந்து போற்றியபடி இருப்பேன்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டில் எம்பெருமானார் உபதேசித்த ஜ்ஞாநத்தில் அந்வயமில்லாதவரை கலி ப்ரயுக்தமான தோஷம் ஆக்கிரமித்து நலியுமென்று சொல்லி, இதிலே அந்த ஜ்ஞாநத்தை லோகத்தாரெல்லா முபதேசிக்கைக்காக **அவர் "விண்ணின் தலை நின்றும் மண்ணின் தலத்து உதித்த"படியநுஸந்தித்து**, செந்நெல் விளையா நின்றுள்ள வயல்களையுடைய திருக்குறையலூர்க்கு ஸ்வாமியான திருமங்கை யாழ்வாருடைய திவ்ய ப்ரபந்தமாகிற **பெரிய திருமொழியை அநுபவித்துக் களித்து**, ப்ரதிபக்ஷிகளுடைய கந்தத்தையும் ஸஹிக்கமாட்டாதே, **ப்ரபலமான ஸிம்ஹம் போலேயிருக்கிற எம்பெருமானார்**, வேதபாஹ்யரைப் போலன்றிக்கே வேதத்தை ப்ரமாணமாக இசைந்து அதுக்கு விபரீதார்த்தங்களைச் சொல்லி, **லோகத்தை நசிப்பித்த**

குத்ருஷ்டிகளாகிற புலிகள் தன்னரசு நாடாகக் கொண்டு, தடையற நடமாடா நின்ற அவர்களுடைய மதங்களை நிரஸிக்கைக்காக அவர்கள் நடையாடுகிற இந்த பூமியிலே வந்தவதரித்த ப்ரகாரத்தை ஸ்துதிக்கக்கடவே னென்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், "எம்பெருமானார் உபதேசித்த ஞானத்தில் எந்தவிதமான ஈடுபாடும் இன்றி உள்ளவர்களை, கலி காலத்தில் உண்டாகும் தோஷமானது முற்றிலுமாகச் சூழ்ந்து, அவர்களை நலியும்", என்று அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில், அத்தகைய ஞானத்தை உலகில் உள்ள அனைவருக்கும் உபதேசம் செய்வதற்காக எம்பெருமானார், இராமானுச நூற்றந்தாதி (95) – விண்ணின் தலை நின்றும் - என்பதற்கு ஏற்ப அங்கிருந்து புறப்பட்டு, இராமானுச நூற்றந்தாதி (95) – மண்ணின் தலத்துதித்த – என்பதற்கு ஏற்ப, இங்கு வந்து அவதரித்ததை எண்ணுகிறார். செந்நெற்கதிர்கள் நன்றாகத் தழைத்தோங்கும்படியாக உள்ள வயல்கள் கொண்ட திருக்குறையலூரின் எஜமானராகிய திருமங்கையாழ்வாருடைய திவ்யப்ரபந்தமான பெரியதிருமொழியை எப்போதும் அனுபவித்தபடி இருந்து, அதனால் மகிழ்ந்து, மற்ற மதங்களுடைய ஸித்தாந்த வாசனையைக் கூடப் பொறுக்க இயலாத சிங்கம் போன்று எம்பெருமானார் உள்ளார்; வேதங்களை முற்றிலுமாகப் புறந்தள்ளாமல், அவற்றையே ப்ரமாணமாக ஏற்றுக்கொண்டு, ஆனால் அந்த வேதங்களுக்கு விபரீதமான பொருள்களை உரைத்து, இந்த உலகத்தை அறியாமையை ஏற்படுத்தி அழித்த மற்ற மதங்கள் என்ற புலிகள் பலவும், இதனைத் தங்களுடைய நாடாகவே கொண்டு, எந்தவிதமான தடையும் இன்றி நடமாடியபடி இருந்த இந்தப் பூமியில் எம்பெருமானார் வந்து அவதரித்த விதத்தைத் துதித்தபடி இருப்பேன்", என்கிறார்.

வ்யாக்யானம் – (கலி மிக்க செந்நெல் கழனி) உழுவது நடுவது அறுப்பதாய் கொண்டு ஸர்வ காலத்திலும் செல்லுகிற ஆரவாரத்தாலே மிக்க செந்நெல்லை உடைத்தான கழனிகளுடைய. **கலி – ஆரவாரம்**. அன்றிக்கே "**கலி**" என்று **மிடுக்காய்**, ஸாரவத்தான பூமியிலே விளைந்த செந்நெலென்னுதல். தத் தத் காலங்களிலே விதைத்து விளைந்த பயிராகையாலே ஸாரமாக விளையாநிற்கிற பயிரென்னுதல். **கழனி** – வயல். (குறையல் கலை பெருமான்) இப்படிப்பட்ட செந்நெல்களோடு கூடின வயல்களையுடைத் தாகையாலே, "**மன்னிய சீர் தேங்கும் குறையலூர்**" என்கிறபடியே ஸகல ஸம்பத்துக்களையு முடைத்தான திருக்குறையலூருக்கு நிர்வாஹகராய், "**இருந் தமிழ் நூல்**

புலவன்" என்கிறபடியே சாஸ்த்ர ரூபங்களான திவ்ய ப்ரபந்தங்களைச் செய்தருளி உபகரித்த மஹோபகாரரான திருமங்கையாழ்வாருடைய. "**குறையல் பிரானடிக் கீழ்**" என்று இப் ப்ரபந்தத்திலேயும் இவருடைய உபகாரத்தை அநுஸந்தித்தாரிறே. செய்தவம்சத்தில் க்ருதஜ்ஞராய்ப் போருகிறவர் இவரும் அவருமே காணும்.

விளக்கம் - வயல்களை உழுதல், நாற்று நடுதல், வயல்களில் விளைந்தவற்றை அறுவடை செய்தல் போன்றவற்றை எப்போதும் செய்தபடி உள்ளதால், அந்த உழவர்களுடைய ஆரவாரமும், மிகுந்த செந்நெல்லையும் கொண்டதான வயல்களைக் கொண்ட. கலி என்றால் ஆரவாரம் என்று பொருள் கொண்டு இவ்விதம் உரைத்தார். அல்லது கலி என்பதற்கு மிடுக்கு என்று பொருள் கொண்டு, மிகுந்த செழிப்பான பூமியில் விளைந்த செந்நெல் எனலாம். அந்தந்த காலங்களில் தகுந்தபடி விதைக்கப்பட்டு, விளைந்து நிற்பதால், அந்தப் பயிர்கள் நன்று விளைந்தபடி இருந்தன. (குறையல் கலை பெருமான்) - இப்படிப்பட்ட செந்நெல்களுடன் கூடிய வயல்கள் கொண்டதால், உபதேசரத்தினமாலை (30) – மண்ணியில் நீர் தேங்கும் குறையலூர் - என்பதற்கு ஏற்ப, அனைத்துவிதமான ஸம்பத்துக்களையும் கொண்ட திருக்குறையலூரின் எஜமானராகிய, பெரியதிருமொழி (1-7-10) – இருந்தமிழ் நூற்புலவன் - என்பதற்கு ஏற்ப சாஸ்த்ர வடிவமாகவே உள்ள திவ்யப்ரபந்தங்களை அருளிச்செய்து மிகுந்த உதவிகள் செய்த வள்ளலாகிய திருமங்கையாழ்வாருடைய. இராமானுச நூற்றந்தாதி (2) – குறையல் பிரானடிக்கீழ் - என்ற பாசுரத்திலும் இது போன்றே ஆழ்வாரின் உதவியை எண்ணினார். செய்ந்நன்றி மறவாமல் உள்ள நிலையில் ஆழ்வாரும் இவரும் ஒன்றே என்கிறார்.

வ்யாக்யானம் – (ஒலி மிக்க பாடலை) இம்மஹோபகாரத்தாலே அருளிச் செய்யப்பட்ட **திருமொழி**, **திருக்குறுந்தாண்டகம்**, **திருநெடுந்தாண்டகம் தொடக்கமான திவ்ய ப்ரபந்தங்களை**, "இன்பப் பாடல்" என்கிறபடியே அநுஸந்திக்கப் புக்கவர்களுக்கு அர்த்த ரசத்தாலும் போக்யதையாலும் ஆநந்தம் மிகுதியாய்க் கரைபுரண்டிருக்கையாலே திமிர்த்து, "**கலியனதொலி மாலை**" என்கிறபடியே பெரு மிடறு செய்து அநுஸந்திக்க வேண்டுகையாலே **மிக்க த்வநியையுடைத்தான திவ்ய ப்ரபந்தங்கள்**. "மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கங் கூறுவதாக" பண்ணியருளின திவ்ய

ப்ரபந்தங்களென்றபடி. **ஒலி – த்வநி. அந்த ப்ரபந்தங்களை தாரகமாகவும் போஷகமாகவும் போக்யமாகவும் நினைத்துக்கொண்டு முற்றூட்டாக வநுபவித்து.**

விளக்கம் - (**ஒலி மிக்க பாடலை**) - இத்தகைய உயர்ந்த உபகாரத்தால் வெளிப்பட்டதான பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் தொடக்கமாக உள்ள திவ்ய ப்ரபந்தங்களை, பெரியதிருமொழி (2-5-10) – இன்பப்பாடல் - என்பதற்கு ஏற்ப எண்ணியபடியே உள்ளவர்களுக்கு, அந்தப் பாசுரங்களில் உள்ள ஆழ்ந்த பொருள்களின் சுவை காரணமாகவும், இனிமையாலும், ஆனந்தம் கரைபுரண்டு ஓடியபடி உள்ளது. இதனால் மிடுக்கு கொண்டு, பெரியதிருமொழி (1-2-10) – கலியனதொலிமாலை - என்பதற்கு ஏற்ப மிகுந்த ஒலியை எழுப்பியபடி, எப்போதும் எண்ணியபடியே இருக்கவேண்டும் என்பதால், மிகுந்த ஒலியைக்கொண்ட ப்ரபந்தங்கள். உபதேசரத்தினமாலை (9) – மாறன் பணித்த தமிழ் மறைக்கு மங்கையர்கோன் ஆறங்கம் கூற - என்பதற்கு ஏற்ப அருளிச்செய்யப்பட்ட திவ்யப்ரபந்தங்கள். அப்படிப்பட்ட ப்ரபந்தங்களையே தன்னுடைய உயிர் தரித்தபடி இருப்பதற்கு வேண்டியதாகவும், போஷகமாகவும், இனிமையாகவும் எண்ணியபடி இருந்து, முழுமையாக அனுபவித்து.

வ்யாக்யானம் - (தன்னுள்ளந்தடித்து) அவ்வநுபவ ஜநித ப்ரீதியாலே தம்முடைய திருவுள்ளம் பூரித்து. இவ் வநுபவத்தாலே காணும் ப்ரதிபக்ஷ நிரஸநத்துக்குத் தகுதியான மிடுக்கு அவருக்குண்டானது. **தடித்தல்** – பூரிக்கை. (அதனால் **வலி மிக்க சீயம்**) அந்த பரி பூர்ண ஜ்ஞாநமாகிற மிக்க பலத்தையுடையராய் ஸிம்ஹம் போலேயிருக்கிற. (**இராமாநுசன்**) எம்பெருமானார். ப்ரதிபக்ஷ தர்சநத்தை ஸஹியாதே அவர்களை பக்நராய்ப் பண்ணுமவராகையாலே, "**வலி மிக்க சீயம்**" என்கிறார். **வலி – பலம். சீயம் – ஸிம்ஹம்**. (**மறைவாதியராம்**) வேத அப்ராமாண்ய வாதிகளான பௌத்தாதிகளைப் போலன்றிக்கே, வேதத்தை ப்ரமாணமாக அங்கீகரித்து வைத்து அதுக்கு அபார்த்தங்களைச் சொல்லி, இவற்றைக் கொண்டு துர்வாதம் பண்ணி, லோகத்தாரெல்லாரையும் ப்ரமிப்பித்து நசிப்பித்துக் கொண்டு போருகிற குத்ருஷ்டிகளாகிற. (புலி மிக்கதென்று) புலிகள் மிக்கதென்று. நிவாரகரில்லாமையாலே அவை தனிக்கோல் செலுத்தா நின்றனவென்று. (**இப்புவநத்தில் வந்தமை**) ஸாது ம்ருகங்களை நலியா நின்றுள்ள துஷ்ட ம்ருகமான புலி மிக்க காட்டிலே, அவை தன்னை

நிரஸிக்கவற்றானதொரு ஸிம்ஹம் வந்து தலைப்படுமாப்போலே, ஸந்மத தூஷகரான குத்ருஷ்டிகள் வர்த்தித்து தனிக்கோல் செலுத்துகிற இந்த பூமியிலே தநமத தூஷகராய்க் கொண்டு, "**விண்ணின் தலை நின்று**" வந்து அவதரித்த ப்ரகாரத்தை. (போற்றுவனே) ஸ்துதிக்கக் கடவேன். **போற்றுதல்** – புகழ்தல். "குரும் ப்ரகாசயேத் தீமாந்" என்கிறபடியே அவர் தம்முடைய குண**சேஷ்டிதங்களைப் புகழக்கடவே னென்றருளிச் செய்தாராய்த்து**.

விளக்கம் - (தன்னுள்ளந்தடித்து) - அத்தகைய அனுபவத்தால் பிறந்த மகிழ்வு காரணமாகத் தன்னுடைய உள்ளம் புரித்து. அத்தகைய அனுபவத்தால், மற்ற மதங்களின் பொருத்தமற்ற வாதங்களைத் தள்ளியதால் ஏற்பட்ட மிடுக்கு அவருக்கு உண்டானது. (அதனால் **வலி மிக்க சீயம்**) - அத்தகைய பரிபூர்ணமான ஞானம் என்ற பலம் கொண்ட சிங்கம் போன்று உள்ளவராகிய. (இராமானுசன்) - எம்பெருமானார். மற்ற மதங்களின் தவறான வாத்ங்களைக் கேட்பதற்கும் காண்பதற்கும் பொறுமை இன்றி, அவர்களை வாதத்தில் தோற்கடிப்பவர் என்பதால் "வலிமிக்க சீயம்" என்கிறார். (**மறைவாதியராம்**) – வேதங்களை ப்ரமாணமாக ஏற்றுக்கொள்ளாத பௌத்தர்கள் போன்று அல்லாமல், வேதத்தையே ப்ரமாணமாக ஏற்றுக்கொண்டு, அதற்குத் தவறான பொருள்களை உரைத்து, அவற்றைக் கொண்டு தவறான வாதங்கள் செய்து, இந்த உலகில் உள்ள அனைவரையும் மயக்கத்தில் ஆழ்த்தியபடி உள்ள தவறான பார்வை கொண்ட. (புலி மிக்கதென்று) - தடுத்து நிறுத்த இயலாதபடி உள்ளதால் அவைகள் தனியாக ஆட்சி செலுத்தியபடி இருந்தன. (**இப்புவநத்தில் வந்தமை**) - மிகவும் சாதுவான விலங்குகளை அழித்தபடி உள்ள தீய விலங்குகள் என்பதான புலிகள், காட்டில் தங்களை அழிப்பதற்கு ஏற்றதொரு சிங்கம் வந்தவுடன் அடங்கி நிற்பது போன்று, ஸாதுக்களின் மதங்களை அழித்தபடி உள்ள தவறான பார்வை கொண்ட மற்ற மதங்கள் நிலைத்தபடி ஆட்சி செய்த இந்தப் பூமியில் அந்த மதங்களை விரட்டும்விதமாக, இராமானுச நூற்றந்தாதி (95) – விண்ணின் தலை நின்றும் - என்பதற்கு ஏற்ப இங்கு வந்த அவதரித்த விதத்தை. (போற்றுவனே) – துதித்தபடி இருப்பேன். குரும் ப்ரகாசயேத் தீமாந் – குருவை எப்போதும் ப்ரகாசப்படுத்தவேண்டும் - என்பதற்கு ஏற்ப, எம்பெருமானாருடைய குணங்கள் மற்றும் செயல்களைப் புகழ்ந்தபடியே இருப்பேன்.

89. போற்றரும் சீலத்து இராமானுச நின் புகழ் தெரிந்து

சாற்றுவனேல் அது தாழ்வு அது தீரில் உன் சீர்தனக்கோர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலும் என்மனம் ஏத்தியன்றி
ஆற்றகில்லாது இதற்கு என்னினைவாய் என்றிட்டு அஞ்சுவனே

விளக்கவுரை - எத்தனை ஞானம் உள்ளவர்கள் ஆனாலும், அவர்களால் துதித்துக் கூற மிகவும் அரிதாக உள்ள உயர்ந்த திருக்கல்யாண குணங்கள் கொண்ட எம்பெருமானாரே! ஸர்வேச்வரனின் குணங்களை கூற முடிந்தாலும் உமது குணங்களைக் கூறுவது அரிதாகவே உள்ளது. இதனையும் மீறி நான் உமது உயர்ந்த குணங்களைக் கூட முற்பட்டால், வசிஷ்டரின் குணங்களை மற்றவர்கள் வர்ணித்தால் தாழ்வு போன்று, உமக்கும் தாழ்வு உண்டாகிவிடும். இவ்விதம் நான் உமது குணங்களைப் போற்றிக் கூறாமல் விட்டால் உமது புகழுக்கு ஏற்றம் என்று நான் எண்ணுகிறேன். இவ்விதம் நான் எனக்குள் கூறிய போதிலும், எனது மனம், "இவ்வாறு நாம் எம்பெருமானாரைப் போற்ற எண்ணுவதே அபசாரம்", என்று அறிந்துகொள்ளாமல் போற்றியபடி உள்ளது. இதனால் நீவிர் என்னைப் பற்றி தாழ்வான எண்ணம் கொண்டு, என்னைத் தவறாக நினைத்து விடுவீரோ என்று அச்சத்துடன் உள்ளேன்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே வேத ப்ரதாரகராய், லோகத்தாரெல்லாரையும் விபரீத ஜ்ஞாநராக ப்ரமிப்பித்து நசித்துப் போந்த குத்ருஷ்டிகளாகிற புலிகளை பக்நராக்குக்கைக்கு அவதரித்த வலி மிக்க சீயமான எம்பெருமானாரை ஸ்துதிக்கிறேனென்று ஸ்வாத்யாவஸாயத்தை ஆவிஷ்கரித்து; இதிலே **தம்முடைய பூர்வ வ்ருத்தத்தை அநுஸந்தித்துக் கொண்டு, புகழ்ந்து தலைகட்டவரிதான சீல குணத்தையுடையரான எம்பெருமானாருடைய திருமுக மண்டலத்தைப் பார்த்து, மஹா ப்ரபாவமுடையரான தேவரீரை அத்யந்தாதமனான நான் ஸ்துதிக்கை தேவரீர்க்கு அவத்யமாய் தலைக்கட்டக் கடவதாகையாலே ஸ்துதியாதே யொழிகையே தேவரீர்க்கு அதிசயமிறே. ஆனாலும் ஸ்தோத்ரம் பண்ணாதொழியில் என் மநஸ்ஸி ஆறியிராது. இப்படியான பின்பு, "மூர்க்குப் பேசுகின்றானிவன்" என்று தேவரீர் திருவுள்ளத்தில் என்னவோடுகிறதோ என்று நான் அத்தை நினைத்து, எப்போதும் பீதனாகா நின்றேனென்று விண்ணப்பம் செய்கிறார்.**

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "வேதங்களுக்கு விபரீதமான பொருளகளை உரைத்து, லோகத்தில் உள்ள அனைவரையும் அத்தகைய விபரீத ஞானத்தை பரப்பியபடி இருந்து மயக்கத்தில் ஆழ்த்தி, அனைவரையும் தாழ்ந்த நிலைக்குக் கொண்டு சென்ற குத்ருஷ்டிகள்

என்ற புலிகளை அழிப்பதற்காக அவதாரம் செய்த வலிமை மிக்க சிங்கமாகிய எம்பெருமானாரைத் துதிக்கக் கடவேன்", என்று தனது அன்றாட நிகழ்வை வெளிப்படுத்தினார். இந்தப் பாசுரத்தில், தான் முன்பு இருந்த நிலைகள் மற்றும் செய்கைகள் ஆகியவற்றை எண்ணிப் பார்த்தவராக, புகழ்ந்து முடிப்பதற்கு மிகவும் அரியதான சீல குணத்தைக் கொண்டவராகிய எம்பெருமானாருடைய திருமுகத்தை நோக்கி, "மிகுந்த ப்ரபாவம் நிறைந்தவராகிய உம்மை, மிகவும் தாழ்ந்தவனாகிய நான் துதித்தல் என்பது உமக்கு ஒரு தாழ்வையே ஏற்படுத்தும் என்பதால், நான் துதிக்காமல் இருத்தல் என்பது உமக்கு நன்மையே ஆகும். ஆனால் எனது மனம் உம்மைத் துதிக்காமல் பொறுத்திராது. இவ்விதம் உள்ளபோது, பெரியாழ்வார் திருமொழி (5-1-1) – மூர்க்குப் பேசுகின்றான் இவன் - என்று நீவீர் உமது திருவுள்ளத்தில் எண்ணுகிறீரோ என்று நான் அதனை எண்ணி, எப்போதும் அச்சத்துடனேயே உள்ளேன்", என்று விண்ணப்பிக்கிறார்.

வ்யாக்யானம் – (போற்றருஞ் சீலத்திராமாநுசா) எத்தனையேலும் தரமுடையார்க்கும் ஸ்துதுதித்துத் தலைக்கட்ட வரிதான சீல குணத்தையுடைய வெம்பெருமானாரே. **இவருடைய சௌசீல்யம் பிள்ளையுறங்காவில்லிதாஸர், ஊமை முதலானோரிடத்திலே காணப்பட்டதிறே**. "நாளும் என் புகழ் கோ உன சீலமே" என்றும், "சீல ஏஷ:" என்றும் சொல்லப்படுகிற ஸர்வேச்வரனுடைய சீல குணத்தை புகழ்ந்து தலைக்கட்டிலும், இவருடைய சீல குணத்தை புகழ்ந்து தலைக்கட்டவரிதா யிருக்குமென்று காணும் இவர் தம்முடைய திருவுள்ளத்தி லோடுகிறது.

விளக்கம் - (போற்றருஞ் சீலத்து இராமாநுசா) - எத்தகைய உயர்ந்தவர்களாக இருந்தாலும் முழுமையாகத் துதித்து முடிக்க இயலாதபடியான சீல குணத்தைக் கொண்டுள்ள எம்பெருமானாரே! எம்பெருமானாருடைய ஸௌசீல்யம் என்பது பிள்ளை உறங்காவில்லி தாஸர், ஊமை முதலானவர்கள் விஷயத்தில் வெளிப்பட்டது அல்லவோ? திருவாய்மொழி (9-3-10) – நாளும் என் புகழ் கோ உன சீலமே – என்றும், அதிமாநுஷஸ்தவம் (10) – சீல ஏஷ: - இந்த ஸௌசீல்யம் - என்றும் கூறப்படுகிற ஸர்வேச்வனுடைய சீல குணத்தைப் புகழ்ந்து கூறி முடிக்க முடிந்தாலும், எம்பெருமானாருடைய சீல குணத்தைப் புகழ்ந்து கூறி முடிப்பது இயலாது என்றே எண்ணியபடி உள்ளார்.

வ்யாக்யானம் – (நின் புகழ் தெரிந்து சாற்றுவனேல்) "தத்வேந யஸ்ய மஹிமார்ணவ சீகர அணு: சக்யேந மாதும் அபி சர்வ பிதாமஹ ஆத்யை:" என்றும், "யஸ்யாஸ்தே மஹிமாநமாத்மந இவ த்வத் வல்லபோபி ப்ரபு: நாலம் மாதுமியத்தயா" என்றும் சொல்லப்படுகிற தம்பதங்களைப் போலே, "சேஷோ வா ஸைந்யநாதோ வா ஸ்ரீபதிர் வேதி ஸாத்விகை: விதர்க்யாய" என்கிறபடியே **அநந்தாவதாரராகையாலே பெரு மதிப்பையுடையராய்**, "நம பிரணவ சோபிதம் நவகஷாய கண்டம் பரம் த்ரிதண்ட பரிமண்டிதம் த்ரிவித தத்வ நிர்வாஹகம் தயாஞ்சித த்ரு கஞ்சலம் தளிதவாதி வாக் வைபவம் சமாதி குண சாகரம் சரணமேமி ராமானுஜம்" என்கிறபடியே **ஸர்வோத்தாரகரான தேவரீருடைய சௌசீல்ய ஸௌலப்யாதி கல்யாண குணங்களை நன்றாகத் தெளிந்து அவற்றை எல்லாருமறியும்படி ப்ரகாசமாக ஸ்துதிப்பேனா**கில். **தேர்தல்** –ஆராய்தல். **சாற்றுதல்** - ப்ரகாசமாக சொல்லுதல்.

விளக்கம் - **(நின் புகழ் தெரிந்து சாற்றுவனேல்)** - ஸ்தோத்ரரத்னம் (7) – தத்வேந யஸ்ய மஹிமார்ணவ சீகர அணு: சக்யேந மாதும் அபி சர்வ பிதாமஹ ஆத்யை: - எந்த பகவானுடைய மஹிமை என்னும் கடலில் உள்ள ஒரு சிறிய துளி அளவைக் கூட நான்முகன் உள்ளிட்டவர்களால் உள்ளது உள்ளபடி அளவிட்டு அறிய இயலாதோ – என்றும், சதுச்ச்லோகி (2) – யஸ்யாஸ்தே மஹிமாநமாத்மந இவ த்வத் வல்லபோபி ப்ரபு: நாலம் மாதுமியத்தயா – (பிராட்டியிடம் கூறுவது) எந்த உன்னுடைய பெருமையை அனைத்திற்கும் ஈச்வரனாகிய உனது நாயகன் கூட, தன்னுடைய பெருமையைப் போன்று "இவ்வளவு" என்று அளவிட்டு அறியமாட்டானோ – என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள நிலையைப் போன்று, சேஷோ வா ஸைந்யநாதோ வா ஸ்ரீபதிர் வேதி ஸாத்விகை: விதர்க்யாய - என்று கூறுவதற்கு ஏற்ப பல அவதாரங்களை எடுத்தவர் என்பதால் மிகுந்த மதிப்பு நிறைந்தவர். நம பிரணவ சோபிதம் நவகஷாய கண்டம் பரம் த்ரிதண்ட பரிமண்டிதம் த்ரிவித தத்வ நிர்வாஹகம் தயாஞ்சித த்ரு கஞ்சலம் தளிதவாதி வாக் வைபவம் சமாதி குண சாகரம் சரணமேமி ராமானுஜம் - என்பதற்கு ஏற்ப, அனைவரையும் மேலே உயர்த்தி அவர்களுக்குத் தாரகமாக உள்ள உம்முடைய ஸௌசீல்யம், ஸௌலப்யம் போன்ற திருக்கல்யாண குணங்களை நன்றாக உணர்ந்து, அவற்றை எல்லாரும் அறிந்து கொள்ளும்படி நான் வெளிப்படுத்தித் துதிப்பேன் என்றால் …

வ்யாக்யானம் – (அது தாழ்வு) வசிஷ்ட குணங்களைச் சண்டாளன் வர்ணித்துப் பேசினால் அது அவனுக்கு அவத்யமாய் தலைக்கட்டுமாப்போலே, நான் பண்ண வொருப்பட்ட அந்த ஸ்துதி தேவரீர்க்கு அவத்யமாய்த் தலைக்கட்டும். "நினைந்து நைந்துள் கரைந்துருகி, இமையோர் பலரும் முனிவரும் புனைந்த கண்ணி நீர்சாந்தம் புகையோடு ஏந்தி வணங்கினால் ... உன் பெருமை மாசூணாதோ" என்று ப்ரதம பர்வத்தில் ஆழ்வாரும் இப்படியே யருளிச்செய்தாரிறே. "ஹந்த த்வத் அக்ர கமநஸ்ய யதீந்த்ர ந அர்ஹ:" என்று ஜீயரும் வ்யதிரேக முகேந இவ்வர்த்தத்தை யருளிச்செய்தாரிறே. **(அது தீரில்)** உமக்கு அவத்யாவஹமான அந்த ஸ்துதியை நான் பண்ணாதொழியில். **தீருகை** – தவிருகை.

விளக்கம் - **(அது தாழ்வு)** - உயர்ந்த குணங்களைத் தாழ்ந்த குணங்கள் ஒருவன் வர்ணித்தால் அது தாழ்வையே உண்டாக்குவது போன்று, நான் பண்ண முயன்ற அந்தத் துதிகள் அனைத்தும் உமக்குத் தாழ்வையே ஏற்படுத்தும். திருவாய்மொழி (1-5-2) - நினைந்து நைந்துள் கரைந்துருகி, இமையோர் பலரும் முனிவரும் புனைந்த கண்ணி நீர்சாந்தம் புகையோடு ஏந்தி வணங்கினால் ... உன் பெருமை மாசூணாதோ - என்று இந்த கருத்தை நம்மாழ்வாரும் தொடக்கத்தில் அருளிச்செய்தார் அல்லவோ? யதிராஜ விம்சதி (12) – ஹந்த த்வத் அக்ர கமநஸ்ய யதீந்த்ர ந அர்ஹ: - யதீத்ரரே! உமக்கு முன்பாக நிற்பதற்குக் கூட எனக்குத் தகுதி இல்லை - என்று இந்தக் கருத்தை வேறுவிதமாக ஸ்வாமி மணவாளமுனிகளும் அருளிச்செய்தார். (அது தீரில்) – உமக்குத் தாழ்வை ஏற்படுத்தவல்ல அத்தகைய துதிகளை நான் செய்யாமல் விடுத்தால்.

வ்யாக்யானம் – (உன் சீர் தனக்கு ஓரேற்றமென்றே கொண்டிருக்கிலும்) "த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" என்கிறபடி ஸ்வாச்ரிதரான சேதநரை, "ததிரராணி த்ருணாயமேநே" என்னும்படியான தேவரீர் தம்முடைய ஸாம்யத்தைக் கொடுக்கக் கடவ மஹா ப்ரபாவத்தை யுடைத்தான தேவரீருடைய கல்யாண குணங்களுக்கு ஓரதிசயமா யிருக்குமென்று இவ்வர்த்தத்திலே வ்யவஸிதனா யிருந்தேனாகிலும். **(என் மனமேத்தி யன்றி யாற்றகில்லாது)** "சஞ்சலம் ஹி மந:" என்றும், "நின்றவா நில்லா நெஞ்சு" என்றும் சொல்லுகிறபடியே அதி சஞ்சலமாய் அதி சபலமாய், தேவரீருடைய ப்ரபாவத்தை உள்ளபடி அறியமாட்டாத வென்னுடைய மநஸ்ஸானது, நாம் இவ்விஷயத்தைப் புகழுகை உபசாராபதேசேனப் பண்ணும்

அபசாரமென்று அறியமாட்டாதே, தேவரீருடைய குணங்களை அடைவு கெட ஸ்தோத்ரம் பண்ணியொழியத் தரிக்க மாட்டுகிறதில்லை.

விளக்கம் - **(உன் சீர் தனக்கு ஓரேற்றமென்றே கொண்டிருக்கிலும்)** - த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: - எம்பெருமானாருடைய திருவடிகளை அண்டியவர்கள், நான்முகன் பதவியைக் கூட ஒரு புல்லாகவே கருதுவர் - என்பதற்கு ஏற்ப உம்மையே அண்டி நிற்கின்ற சேதனர்களை, ததிதராணி த்ருணாயமேநே - என்பதற்கு ஏற்ப உள்ள நீவிர், உமக்கு நிகரான தன்மைகளை அளிக்கக்கூடிய ப்ரபாவத்தைக் கொண்டவராக உள்ளீர்; அந்தக் கல்யாண குணங்களுக்கு ஓர் அதிசயமாக இருக்கும் என்று இதனைச் செய்யாமல் நின்றேன் என்றாலும். **(என் மனமேத்தி யன்றி யாற்றகில்லாது)** - கீதை (6-34) – சஞ்சலம் ஹி மந: - மனம் சஞ்சலமானது – என்றும், பெரியதிருமொழி (1-1-4) – நின்றவா நில்லா நெஞ்சு - என்றும் கூறுவதற்கு ஏற்ப, மிகுந்த சஞ்சலம் மற்றும் மிகுந்த சபலம் கொண்டதாக உள்ளதும், உம்முடைய ப்ரபாவத்தை உள்ளது உள்ளபடி அறியாமல் உள்ளதும் ஆகிய எனது மனமானது, "நாம் இவ்விதம் புகழ்தல் என்பது, உபசாரம் போன்றுள்ள தாழ்வே ஆகும்", என்று அறியாமல், உம்முடைய குணங்களை முற்றிலுமாகத் துதித்தபடி இருக்கிறது அல்லாமல் நிற்பதில்லை.

வ்யாக்யானம் – (இதற்கென் நினைவாய் என்று இட்டு) இப்படிப்பட்ட என்னுடைய ஸாஹாஸோத்யோகத்துக்கு தேவரீர் திருவுள்ளத்திலே என்னாக நினைப்பிடுகிறதோ வென்று கருத்து. **(அஞ்சுவனே)** தேவரீருடைய மேன்மையையும், என்னுடைய தண்மையையும் அடைவே பார்த்து அஞ்சா நின்றேன். "மூர்க்குப் பேசுகின்றான் இவன் என்று முனிவாயேலும் என் நாவினுக்காற்றேன்" என்னுமாப்போலே யிராநின்றது என்னுடைய தசை. இதுக்கு தேவரீர் ஏது திருவுள்ளம் பற்றுகிறதோவென்று பீதனாக நின்றே நென்றதாய்த்து.

விளக்கம் - **(இதற்கென் நினைவாய் என்று இட்டு)** - இப்படிப்பட்டதான என்னால் முடியாத ஒரு செயலில் நான் ஈடுபடுவது கண்டு நீவிர் உமது திருவுள்ளத்தில் என்ன எண்ணுகிரீரோ என்று எண்ணி, (அஞ்சுவனே) - உம்முடைய மேன்மை, எனது தாழ்ந்த

தன்மை ஆகியவற்றை முற்றிலுமாக நோக்கியவனாக, அச்சத்துடன் உள்ளேன். பெரியாழ்வார் திருமொழி (5-1-1) – மூர்க்குப் பேசுகின்றான் இவன் என்று முனிவாயேலும் என் நாவினுக்காற்றேன் - என்பதற்கு ஏற்ப எனது நிலை உள்ளது. இதற்கு உம்முடைய திருவுள்ளம் என்று எண்ணுகிறதோ என்று எண்ணியபடி உள்ள அச்சம்.

90. நினையார் பிறவியை நீக்கும் பிரானை இந்நீணிலத்தே
எனையாள வந்த இராமாநுசனை இருங் கவிகள்
புனையார் புனையும் பெரியவர் தாள்களில் பூந்தொடையல்
வனையார் பிறப்பில் வருந்துவர் மாந்தர் மருள் சுரந்தே.

விளக்கவுரை - ஒருமுறை எம்பெருமானாரை நினைத்து விட்டால் போதுமானது. அந்த ஒரு சிந்தனையை, நூறு சிந்தனை என்று கொண்டு, அவனுக்குப் பிறப்பு காரணமாக ஏற்பட்ட துயரம் அனைத்தும் அவன் பக்கம் செல்லாமல் எம்பெருமானார் தடுத்து விடுவார். இருள் தருமாஞாலம் என்ற இந்தப் பரந்த பூமியில் நான் உள்ள இடம் தேடி எம்பெருமானார் வந்தார். இப்படிப்பட்ட எம்பெருமானாரைப் பலரும் நினைக்காமல் உள்ளனர். இவரது கருணைக்குப் பாத்திரமான பின்னரும் ஒரு சிலர் அவரைப் பற்றித் துதித்துக் கூறாமல் உள்ளனர். இவர்கள் தாங்களாகவே போற்றிப் பாடாவிட்டாலும், எம்பெருமானார் திருவடிகள் மீது கவி பாடிய ஆழ்வான், எம்பார் போன்றவர்களின் திருவடிகளில் கூட மலர்களைத் தொடுத்து மாலையாக இடத் தயாராக இல்லை. இத்தனை நல்ல செயல்கள் செய்ய ஏற்றதாக உள்ள மனிதப் பிறவி பெற்ற பின்பும், இதனை அறியாமல், அறிவு கெட்டு, துன்பத்தில் உழல்கின்றனர். இவர்கள் பிறப்பு இவ்விதம் அமைந்து விட்டதே!

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே எம்பெருமானாருடைய மதிப்பையும், அவரை ஸ்தோத்ரம் பண்ணாமைக்குத் தமக்குண்டான அயோக்யதையையும் அநுஸந்தித்து, இவ்விஷயத்திலே நான் ஸ்துதிப்பதாக போர ஸாஹாஸ கார்யத்துக்கு உத்யோகித்தேன் என்று அணாவாய்த்து இவர் அஞ்சினவாறே, எம்பெருமானார் **இவருடைய அச்சமெல்லாம் தீரும்படி குளிர கடாக்ஷிக்க, அத்தாலே நிர்பரராய் ஸ்தோத்ரம் பண்ணவொருப்பட்டு, இதில் லௌகிகர்படியைக் கடாக்ஷித்து எம்பெருமானார் யோக்யாயோக்ய விபாகமற ஸர்வரையும் கடாக்ஷிக்கைக்காக வந்து அவதரிக்கச் செய்தே, இந்த லௌகிகர் தம்மை**

ஒருக்கால் ப்ராசுரிகமாக நினைத்தவர்களுடைய சோஷியாத பவக்கடலை சோஷிப்பிக்கு மவரான இவரை நினைக்கிறார்களில்லை; என்னை ரக்ஷிக்கைக்காக நானிருந்தவிடம் தேடி வந்த விவரை, "ஈன் கவிகளால் ஸ்துதிக்கிறார்களில்லை; அப்படி ஸ்துதிக்கைக்கு அதிகாரமில்லையாகிலும் ஸ்துதிக்குமவர்களுடைய திருவடிகளை ஆராதிக்கிறார்க ளில்லை; ஐயோ! இவற்றுக்கெல்லா முறுப்பான ஜந்மத்தைப் பெற்றிருந்தும், அறிவு கேட்டாலே ஜந்ம பரம்பரைக்கு அது தன்னையீடாக்கி, க்லேசப்பட்டுப் போனார்களேயென்று இன்னாதாகிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், எம்பெருமானாருடைய மேன்மை மற்றும் அவரைத் துதித்து கவி பாடாமல் உள்ளதற்குத் தனக்கு இருக்கின்ற தகுதியற்ற நிலை ஆகியவற்றை எண்ணியவராக, "இப்படிப்பட்ட உயர்ந்த விஷயத்தைக் குறித்து நான் துதிப்பதாக, என்னால் இயலாத ஒரு செயலைச் செய்ய முயன்றேனே", என்று சந்தேகம் கொண்டு, அச்சத்துடன் நின்றார். அப்போது எம்பெருமானார் இவருடைய அச்சம் அனைத்தும் விலகும்விதமாக இவரைக் கடாக்ஷித்தார். இதன் விளைவாகத் தனது அச்சத்தை விட்டவராக, எம்பெருமானாரைத் துதிக்க முற்பட்டார். இந்தப் பாசுரத்தில், "ஸம்ஸாரத்தில் உள்ளவர்களுடைய நிலையைக் கண்ட எம்பெருமானார், தகுதி உள்ளவர் மற்றும் தகுதி அற்றவர் என்ற வேறுபாடு ஆராயாமல் அனைவரையும் கடாக்ஷிக்கும் பொருட்டு இங்கு வந்து நின்றார். ஆனால் இவர்களோ, வற்றாத தங்களுடைய பாபக் கடலையும் கூட வற்றும்படியாகச் செய்யவல்ல இவரை எண்ணுவதில்லை. என்னைக் காப்பாற்றுவதற்காகவே நான் உள்ள இடம் தேடி வந்த இவரை இராமாநுச நூற்றந்தாதி (6) – ஈன் கவிகள் – என்பதற்கு ஏற்ப துதிப்பதில்லை. அவ்விதம் துதிப்பதற்குத் தகுதி இல்லை என்று எண்ணினால் கூட, அவரைத் துதிப்பவர்களுடைய திருவடிகளையும் கூடப் பற்றுவதில்லை. இவ்விதம் பல உயர்ந்த செயல்களைச் செய்யவல்ல பிறவியை இவர்கள் அடைந்துள்ளபோதிலும், தங்களுடைய அறிவு தடுமாற்றத்தால், தங்களுடைய ஜன்மம் முழுமைக்கும் இத்தகைய அறிவின்மையைக் கொண்டவர்களாக, துன்பத்தில் ஆழ்ந்தபடி உள்ளனரே", என்று வியந்தபடி உள்ளனர்.

வ்யாக்யானம் – (நினையார் பிறவி நீக்கும் பிரானை) நம்மை ஒருக்கால் நினைக்கையாகிற ஆபிமுக்யத்தைப் பண்ணினார்களாகில், "அண்வப்யுபஹ்ருதம் பக்தை: ப்ரேம்ணா பூர்யேவ மே பவேத்" என்று சொல்லப்படுகிறவனைப்போலே, அத்தை **ஒன்று நூறாக்கி**,

"பாபாத்வாந்த க்ஷயாய ச" என்கிறபடியே அவர்களுடைய ஜந்ம மரணாதி துக்கங்களை அவர்களருகே செல்லாதபடி நீக்குமுபகாரகரான விவரை அறிந்து நினைக்கிறார்க ளில்லை. "காமாதி தோஷ ஹரம் ஆத்ம பாதச்ரிதாநாம்" என்று அருளிச் செய்தாரிறே ஜீயரும்.

விளக்கம் – (நினையார் பிறவி நீக்கும் பிரானை) – "நம்மை ஒருமுறை அண்டி நின்று நம்மை நினைத்தல் என்பதான நமக்கு அநுகூலமான செயலைச் செய்தார்கள் என்றால், ஸ்ரீமத்பாகவதம் (10-81-3) - அண்வப்யுபஹ்ருதம் பக்தை: ப்ரேம்ணா பூர்யேவ மே பவேத் – அடியார்கள் எனக்கு ஏதேனும் அணு அளவே கொண்டு வந்தாலும் அவர்களிடம் உள்ள ப்ரேமை காரணமாக அது எனக்கு மிகவும் பெரியதாகவே தோன்றும்", என்று இருக்கும் பகவானைப் போன்று. தன்னை அண்டியவர்கள் செய்த ஒரு செயலையே நூறு மடங்காகக் கொண்டு, பாபத்வாந்த க்ஷயாய ச – பாபம் என்னும் இருள் தேய்ந்து - என்பதற்கு ஏற்ப அவர்களுடைய பிறப்பு மற்றும் இறப்பு என்பதான துன்பங்களை, அவர்கள் அருகில் மீண்டும் அவை செல்லாதபடிச் செய்யவல்லவராக உள்ள எம்பெருமானாரை உள்ளபடி அறிந்துகொண்டு, அவரை எண்ணுவதில்லை. யதிராஜ விம்சதி (1) - காமாதி தோஷ ஹரம் ஆத்ம பாதச்ரிதாநாம் - தனது திருவடிகளில் பணிந்தவர்களுடைய காமம், தோஷம், க்ரோதம் போன்ற அனைத்தையும் நீக்கவல்லவர் - என்று ஸ்வாமி மணவாளமாமுனிகளும் அருளிச்செய்தார்.

வ்யாக்யானம் – (இந் நீணிலத்தே எனையாள வந்த இராமாநுசனை) "நிகரின்றி நின்ற நீசதை"யையுடைய வடியேனை அபிமாநித்து, தம்முடைய **குணங்களுக்கு தேசிகனாய் வாசகமிட்டு குணாநுகுணமாக ஸ்தோத்ரம் பண்ணி**, அது தன்னை ப்ரபந்தீகரிக்கும்படி யமைத்துக்கொண்டு, அப்படி என்னை யாளுகைக்கே ஸர்வேச்வரன் வந்தவதரித்தாலும் அவனையுங் கூட மோஹிப்பிக்குமதாய் விஸ்த்ருதமான "இருள் தரும் மா ஞாலத்திலே", ஏக லக்ஷ்யமாக அடியேனை யொருவனையுமே ரக்ஷிக்க வேணுமென்று க்ருத தீக்ஷிதராய், இந்த பூமிப் பரப்பெல்லாம் கிடக்கச் செய்தே, **அடியேனிருந்தவிடம் தேடி வந்து, கோயிலிலே** அடியேனை யகப்படுத்திக் கொண்ட எம்பெருமானாரை. **(இரும் கவிகள் புனையார்)** இவருடைய விஷயீகாரத்தைப் பெற்ற பின்பு ஸ்தோத்ர நிர்மாணத்தில் தங்களுக்கதிகாரமுண்டா யிருக்கச் செய்தேயும், "செஞ்சொல் கவிகாள்" என்கிறபடியே அதி போக்யங்களாய் தத் குணங்களைச் சுருக்கமொழிய ப்ரதிபாதிக்குமவையான கவிகளைத்

தொடுக்கிறார்களில்லை. அவருடைய கல்யாண குணங்களை விஸ்தரித்து ஸ்தோத்ரம் பண்ணுகையாகிற வாசா கைங்கர்யத்தையும் பண்ண மாட்டிற்றில ரென்றபடி. **புனைதல்** – தொடுத்தல்.

விளக்கம் - (**இந் நீணிலத்தே எனையாள வந்த இராமாநுசனை**) - இராமாநுச நூற்றந்தாதி (48) – நிகரின்றி நின்ற நீசதை – என்பதற்கு ஏற்ப எனது தாழ்வுக்கு நிகரானவர்கள் வேறு யாரும் இல்லை என்று நின்ற என்னை ஏற்றுக்கொண்டு, தன்னுடைய குணங்களை நான் முற்றிலும் அறியும்படியாகச் செய்து, அவற்றை எனது சொற்கள் கொண்டு உரைக்கும்விதமாக அந்தக் குணங்களுக்கு ஏற்றபடி நான் துதித்து, அந்தத் துதிகள் அனைத்தையும் ஒரே ப்ரபந்தமாகத் தொகுத்து தானே அமைத்துக்கொண்டு, இவ்விதம் என்னை ஆள்வதற்காக அந்த ஸர்வேச்வரனே இங்கு வந்து அவதரிக்கிறான் என்று வைத்துக் கொள்வோம்; இப்படிப்பட்ட அவனையும் கூட மயக்கத்தில் ஆழ்த்துவதாக, எங்கு பரவி நிற்கின்ற திருவாய்மொழி (10-6-1) – இருள் தருமா ஞாலம் - என்பதற்கு ஏற்ப உள்ளதான அறியாமை சூழ்ந்ததாக இந்த உலகம் உள்ளது. இதில், என் ஒருவனைக் காக்க வேண்டும் என்பதை மட்டுமே தனது ஒரே குறிக்கோளாகக் கொண்டு, இந்தப் பூமி பரந்து விரிந்து உள்ளபோதிலும், நான் உள்ள இடம் தேடி வந்து, திருவரங்கத்தில் என்னைத் தன்னிடம் அகப்படுத்திக்கொண்ட எம்பெருமானாரை. (**இரும் கவிகள் புனையார்**) - இப்படியாக இவரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரும், அவரைக் குறித்துத் துதித்தபடி இருப்பதற்கான தகுதியைப் பெற்ற பின்னரும், திருவாய்மொழி (10-7-1) – செஞ்சொல் கவிகாள் - என்பதற்கு ஏற்ப, மிகவும் இனிமையான அவருடைய குணங்களை, சுருக்கம் இல்லாமல், விரிவாக எடுத்துரைக்கும்படியான கவிகளை இயற்றுவதில்லை. அல்லது அவரைத் தொழுகின்றவர்களுடைய கல்யாணகுணங்களை விரிவாகத் துதித்தபடி இருத்தல் என்பதான சொற்கள் கொண்டு செய்யப்படும் கைங்கர்யத்தையும் இவர்கள் செய்வதில்லை.

வ்யாக்யானம் - (புனையும் பெரியவர் தாள்களில் பூந்தொடையல்வனையார்) தாங்கள் கவி புனைய மாட்டிற்றிலர்களாகிலும், "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர:" என்கிறபடியே கரண த்ரயத்தாலும் அவர் பக்கலிலே அதி ப்ரவணராய்க் கொண்டு, "நசேத்

ராமாநுஜேத்யேஷா" என்றும், "புண்யாம்போஜ விகாஸாய" என்றும், "நம ப்ரணவ மண்டநம்" என்றும், "யதிராஜோ ஜகத்குரு:" என்றும் இத்யாதிகளான கவிகளைத் தொடுக்கும் மஹாப்ரபாவத்தை யுடையவர்களான **ஆழ்வான்**, **ஆண்டான்**, **எம்பார் ஆச்சான் முதலானவர்களுடைய திருவடிகளிலே** பரிமள ப்ரசுரமான புஷ்பங்களைக் கொண்டு வந்து மாலிகையாகத் தொடுத்து ஸமர்ப்பிக்கிறார்க ளில்லை. **புனைதல்** – செய்தல்; இத்தால் ஸமர்ப்பிக்கையைச் சொன்னபடி. "கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம்", "யதீச்வர ஸரஸ்வதீ ஸுரபித ஆசயாநாம் ஸதாம் வஹாமி சரணாம்புஜம் ப்ரணதி சாலிநா மௌளிநா" என்னக் கடவதிறே.

விளக்கம் - (**புனையும் பெரியவர் தாள்களில் பூந்தொடையல்வனையார்**) - தாங்கள் அவ்விதம் துதித்தபடி இல்லையென்றாலும், யதிராஜ விம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் - என்பதற்கு ஏற்ப மூன்று கரணங்களாலும் அவரிடம் மிகுந்த அன்பு கொண்டு, நசேத் ராமாநுஜேத்யேஷா - என்றும், புண்ய அம்போஜ விகாஸாய – புண்ணியம் என்னும் தாமரை மலர்ந்து - என்றும், நம ப்ரவண மண்டநம் - என்றும், யதிராஜோ ஜகத்குரு: - என்றும் உள்ளதான பல கவிதைகளை இயற்றியபடி உள்ள உயர்ந்த ப்ரபாவங்களைக் கொண்டவர்களாகிய கூரத்தாழ்வான், திருமாலையாண்டான், எம்பார், ஆச்சான் போன்றவர்களுடைய திருவடிகளின் பரிமளத்துடன் கூடிய மலர்களை மாலையாகத் தொடுத்துக் கொண்டு வந்து சமர்ப்பிப்பதும் இல்லை. யதிராஜ விம்சதி (3) - கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர் – என்றும், யதிராஜ ஸப்ததி (41) - யதீச்வர ஸரஸ்வதீ ஸுரபித ஆசயாநாம் ஸதாம் வஹாமி சரணாம்புஜம் ப்ரணதி சாலிநா மௌளிநா - இராமாநுஜரின் உயர்ந்த நூல்களை எப்போதும் படித்தபடி உள்ளவர்களின் மனம் என்பது நறுமணம் வீசியபடியே இருக்கும். அப்படிப்பட்ட பெரியவர்களின்

திருவடித் தாமரைகளில் நான் எப்போதும் எனது தலையை வணங்கியபடியே வைத்துள்ளேன் - என்றும் கூறுவது காண்க.

வ்யாக்யானம் – (பிறப்பில் வருந்துவர் மாந்தர் மருள் சுரந்தே) அஜ்ஞாநத்தாலே ஆவ்ருத்தராய்க் கொண்டு த்யாஜ்யோபாதேய விவேகமில்லாதே ஜந்மாதிகளிலே அநாதியாக க்லேசப்படா நின்றார்கள். **வருந்துதல்** – துக்கித்தல். "அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ:" என்னக் கடவதிறே. ஐயோ! இத்தனையும் பண்ணுகைக்கு யோக்யமான ஜந்மத்தைப் பெற்றிருந்தும், இதெல்லாம் தெளியமாட்டாதே அறிவு கேடு மிக்கு ஜந்ம மக்நராய் துக்கப்படா நின்றார்கள். இவர்களுடைய கர்ப்ப நிர்பாக்யதை இருந்தபடி யெங்ஙனே ! என்று இன்னாதாகிறார் காணும். "துர்லபோ மாநுஷோ தேஹோ தேஹிதாம் க்ஷணபங்குர: தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்ட ப்ரியதர்சநம்", "ந்ருதேஹ மாத்யம் ஸுலபம் ஸுதுர்லபம் ப்லவம் ஸுகல்பம் குருகர்ணதாரம் மயாநுகூலேந நபஸ்வதேரிதம் புமாந் பவாப்திம் ந தரேத் ஸ ஆத்மஹா" என்னக் கடவதிறே. "**மாயவன் தன்னை வணங்க வைத்த கரணமிவை**" என்று இவர் தாமே அருளிச் செய்தாரிறே.

விளக்கம் - **(பிறப்பில் வருந்துவர் மாந்தர் மருள் சுரந்தே)** - அறியாமையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களாக, கைவிடவேண்டியது மற்றும் கைக்கொள்ளவேண்டியது குறித்த பகுத்தறிவு இன்றி, எண்ணற்ற பிறவிகள் எடுத்தபடி, எல்லையற்ற காலம் துன்பத்திலேயே உள்ளனர். கீதை (5-15) – அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ: - அறியாமையால் ஞானம் மூடப்பட்டுள்ளது. ஆகவே அறியாமை நிறைந்த அனைத்து மனிதர்களும் மோகம் அடைகிறார்கள் - என்பது காண்க. "எம்பெருமானாரைத் துதித்தல், அவருடைய அடியார்களைத் துதித்தல் போன்ற பலவற்றையும் செய்வதற்கான தகுதி கொண்ட மனிதப்பிறவியைப் பெற்றுள்ளபோதிலும், அவற்றைச் செய்யாமல், அறிவிழந்து, பிறவிகளில் நாட்டம் கொண்டு, துக்கத்திலேயே உள்ளனர். இவர்கள் தங்கள் கர்ப்பத்திலேயே இவ்விதம் பாக்கியம் அற்றவர்களாக உள்ள நிலைதான் என்னே!", என்று எண்ணி வருந்துகிறார். ஸ்ரீமத்பாகவதம் – துர்லபோ மாநுஷோ தேஹோ தேஹிதாம் க்ஷணபங்குர: தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்ட ப்ரியதர்சநம் – மனித சரீரம் கிடைப்பது மிகவும் அரிது; அப்படியே கிடைத்தாலும், அது உடனே அழிந்துவிடும் தன்மை கொண்டது; சில காலம் அழியாமல் இருந்தாலும், அந்தக் காலத்தில்

ஸ்ரீவைகுண்டநாதனே நமக்கு ஏற்றவன் என்ற ஞானம் பிறப்பது அரிது – என்றும், ஸ்ரீமத் பாகவதம் (11-20-17) - நிருதேஹ மாத்யம் ஸுலபம் ஸுதுர்லபம் ப்லவம் ஸுகல்பம் குருகர்ணதாரம் மயானுகூலேந நபஸ்வதேரிதம் புமாந் பவாப்திம் ந தரேத் ஸ ஆத்மஹா - மனிதச் சரீரமானது கிடைப்பது அரிதாகும். இப்போது கிட்டிய இது, வலிமையான படகு போன்றது. இது ஸம்ஸாரம் என்னும் கடலைத் தாண்டுவதற்கு ஏற்றதாக இருக்கிறது. இதை நடத்திச் செல்வதற்கான ஆசார்யர்களும் உள்ளனர். நான் அநுகூலமான காற்றாக வந்து அந்தப் படகை கொண்டு செல்கிறேன். ஆனாலும், ஸம்ஸாரக் கடலைக் கடக்காத ஒருவன் தனது ஆத்மாவையே கொன்றவன் ஆகிறான் – என்றும் கூறுவது காண்க. இராமானுச நூற்றந்தாதி (67) – மாயவன் தன்னை வணங்க வைத்த கரணமிவை – என்று அமுதனார், தானே அருளிச்செய்தமையும் காண்க.

91. மருள்சுரந்து ஆகம வாதியர் கூறும் அவப் பொருளாம்
இருள்சுரந்து எய்த்த உலகிருள் நீங்கத் தன் ஈண்டியசீர்
அருள்சுரந்து எல்லா உயிர்கட்கும் நாதன் அரங்கனென்னும்
பொருள் சுரந்தான் எம் இராமாநுசன் மிக்க புண்ணியனே

விளக்கவுரை - நாராயணன், க்ருஷ்ணன், வாசுதேவன், கேசவன், ரிஷீகேசன், அச்யுதன், அனந்தன் போன்ற பல திருநாமங்களை கொண்ட எம்பெருமானே உயர்ந்த பரம்பொருள் என்று அறியாமல் பலரும் உள்ளனர். இவர்களுக்குப் பூர்வ கர்மம் மூலம் விளைந்த பாவம் முழுவதும் திரண்டு, அஜ்ஞானம் எனச் சூழ்ந்து நின்றது போலும். ஆகவே இவர்கள் சைவ ஆகமத்தை உயர்வாகப் போற்றி கூறியபடி உள்ளனர். இதனால் இந்த உலகம் எங்கும் அஜ்ஞானம் என்ற இருள் சூழ்ந்து நின்றது. இத்தகைய இருள் நீங்கும்படியாக, சூரியனின் கதிர்கள் அனைத்தும் ஒருசேர விழுந்தது போன்று, தனது கருணை மூலம் இந்த உலகில் சூழ்ந்த இருள் நீங்குபடி எம்பெருமானார் செய்தார். இதனை எவ்விதம் செய்தார்? இந்த உலகில் உள்ள அணைத்து உயிர்களுக்கும் எஜமானன் என்பவன் நாம் உள்ள இடத்தில் (திருவரங்கத்தில்) வந்து கண் துயிலும் பெரியபெருமாளாகிய அழகியமணவாளனே என்று உபதேசித்தது மூலம் செய்தார். இப்படிப்பட்ட எம்பெருமானார் அனைவருக்கும் புண்ணியம் அளித்த புண்ணியர் ஆனார்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே நித்யஸம்ஸாரிகளா யிருக்கிறவர்களையும் அல்பாநுகூல முடையாரையும் ஒக்க உத்தரித்த ஸர்வோத்தமரான எம்பெருமானாரை அநுவர்த்தியாதே, கர்ப்ப நிர்ப்பாக்யராய்ப் போந்தார்களென்று அவர்கள்படியை அடைவே சொல்லி, இதிலே தமோ குணமுஷித சேமுஷீகராய், ருத்ர ப்ரோக்தமான ஆகமத்தை உத்தம்பகமாகக் கொண்டு, பௌத்தாத்யாத்த ஸாரங்களாய் ருத்ர பஷுபாதிகளான பாசுபதர் சொல்லுகிற துஸ்தர்க்கங்களாகிற அந்தகாரத்தை பூலோகத்தில் நின்றும் அகன்று போம்படி பண்ணியருளின எம்பெருமானார் தம்முடைய நிர்ஹேதுக பரமக்ருபையை, ஒரு பாட்டம் மழை பொழிந்தாற்போல் லோகத்திலே எங்குமொக்க ப்ரவஹிப்பித்து, **ஸகலாத்மாக்களுக்கும் ஸுலபனாய்க் கண்ணுக்கிலக்காயிருக்கிற பெரியபெருமாளே வகுத்த சேஷியென்னு மர்த்தத்தை நமக்கெல்லாம் பூரிதாநம் பண்ணினார், இவர் எத்தனை தார்மிகரோ**வென்று அவருபகரித்த உபகாரத்தை யநுஸந்தித்து அவர் தம்மைக் கொண்டாடுகிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "எப்போதும் ஸம்ஸாரத்தில் உழன்றபடி உள்ளவர்களையும், மிகவும் குறைந்த அளவிலேயே நன்மைகள் கொண்டவர்களையும் ஒரே போன்று மேலே உயர்ந்தியவராகிய, அனைவரிலும் சிறந்த எம்பெருமானாரை எப்போதும் எண்ணியபடி இருக்காமல், கர்ப்பத்திலேயே பாக்கியம் அற்றவர்களாக உள்ளனரே", என்று அவர்களுடைய நிலையை முழுவதுமாக அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில், தமோகுணத்தை வளர்த்தபடி, அதிலேயே திளைத்தபடி, ருத்ரனைக் கொண்டாடும் ஆகமங்களையே தங்களுக்குக் கொழுகொம்பாகக் கொண்டு, பௌத்தம் முதலான நாஸ்திக மதங்களையே தங்கள் ஸாரமாகக் கொண்டு, ருத்ரனைக் கொண்டாடும் பாசுபதர்கள் உரைத்தபடி உள்ள தவறான கருத்துக்கள் என்னும் இருளானது இந்தப் பூமியை விட்டு அகலும்படி எம்பெருமானார் செய்தார். இப்படிப்பட்ட விதத்தில் தனது காரணம் இன்றிப் பொங்கிப் பெருகும் கருணையை ஒருமுறை நல்ல மழை பொழிவது போன்று, இந்த உலகம் முழுவதும் ஒரே போன்று பரவும்படிச் செய்தார். அனைத்து ஆத்மாக்களும் எளிதாக அண்டத்தக்கவிதமாகச் சுலபனாகவும், கண்களால் எளிதாகக் காணலாம்படி உள்ளவனும் ஆகிய பெரியபெருமாளே அனைத்திற்கும் இயல்பான எஜமானன் என்னும் கருத்தை நம் அனைவருக்கும் அருளிச்செய்தார். இப்படிப்பட்ட இவருடைய கொடைத்தன்மை எத்தகையதோ என்று எப்பெருமானார் செய்த உபகாரங்களை எண்ணியபடி, அவரைக் கொண்டாடுகிறார்.

வ்யாக்யானம் – (மருள் சுரந்தாகம வாதியர் கூறும்) நாராயண க்ருஷ்ண வாஸுதேவ கேசவ ஹ்ருஷிகேச அச்யுத அநந்தாதி திவ்யநாமங்களுக்கு வாச்யனாகையாலே, **த்ரிவித சேதநாசேதந வர்க்கத்துக்கும் தாரகத்வ வ்யாபகத்வ நியந்த்ருத்வ த்ரிவித பரிச்சேத ரஹித்வ அவ்யயத்வாதி தர்மங்களோடு கூடியிருந்தவனே ஸர்வஸ்மாத் பரனென்றறிய மாட்டாதே**, பூர்வ பாப ஸங்காதமெல்லாம் படிந்து கடலிலே ஒரு காளகூடமுண்டானாற்போலே, அஜ்ஞாநமெல்லாம் ஒருமுகமாகத் திரண்டு அத்தாலே வ்யாப்தராய், **ஸர்வ லோக ஸாக்ஷிகமான ப்ரஹ்லாத கஜேந்த்ர ரக்ஷண கதைகளையும்**, "யதச்சைதச் சராசரம்" என்கிற மைத்ரேயருடைய **ஸாமாந்ய ப்ரச்நத்துக்கு**, "விஷ்ணோஸ் ஸகாசாதுத்பூதம்" இத்யாதியான பராசர பகவானுடைய **விசேஷோத்தரம்** முதலான அர்த்தங்களையும் அநாதரித்து, "தமஸ்த்வஜ்ஞாநஜம் வித்தி மோஹநம் ஸர்வே தேஹிநாம் ப்ரமாதாலஸ்ய நித்ராபிஸ் தந்நிபத்நாதி பாரத" என்கிறபடியே பந்த ஹேதுவான அஜ்ஞாநத்தையெல்லாம் தன்னிடத்திலே கண் வைத்த மாத்ரத்திலே கொடுக்கக் கடவ "**சிவயோக சாஸ்த்ரம்**" முதலான துராகமங்களிலே நிஷ்டராய், அத்தை ப்ரமாணமாக அவலம்பித்துக் கொண்டு நின்று துர்வாதங்களைப் பண்ணா நின்றுள்ள பாசுபதாதிகளை சொல்லுகிற.

விளக்கம் – (மருள் சுரந்து ஆகம வாதியர் கூறும்) - நாராயணன், க்ருஷ்ணன், வாஸுதேவன், கேசவன், ஹ்ருஷீகேசன், அச்சுதன், அநந்தன் போன்ற எண்ணற்ற திவ்யமான திருநாமங்களால் கூறப்படுபவன்; இந்தக் காரணத்தால் பத்தர், முக்தர், நித்யர் என்பதான மூன்றுவிதமான சேதநர்கள் மற்றும் ப்ரக்ருதி, காலம், சுத்தஸத்வம் என்பதான மூன்றுவிதமான அசேதநங்கள் ஆகியவற்றின் இறப்பு, அவற்றின் நிறைந்த தன்மை மற்றும் அவற்றை நியமித்தல் ஆகியவற்றுக்குக் காரணமாக உள்ளவன்; இடம், காலம், பொருள் என்பதான மூன்றாலும் அளவுபடாமல் உள்ளவன்; அவ்யயம் முதலான தர்மங்களுடன் கூடியுள்ளவன்; இப்படிப்பட்ட ஸர்வேச்வரனே அனைத்தைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று அறியாமல், முன்பு செய்த பாபங்கள் அனைத்தும் ஒரு கூட்டமாகச் சேர்ந்து கொண்டு, ஒரு கடலில் ஒரு விஷமாகச் சேர்ந்து நின்று, ஒன்றாகத் திரண்டது போன்று, அனைத்து அஜ்ஞானங்களும் ஒன்றாகக் கூடியதால் எங்கு பரவி நின்றனர். இப்படியாக நின்ற அவர்கள் செய்தது என்ன? இந்த லோகம் முழுவதும் நேரடியாகவே கண்ட சாட்சிகளாகிய ப்ரஹ்லாதன், கஜேந்த்ரன் ஆகியோரைப் பகவான் காப்பாற்றிய

நிகழ்வுகளையும், யதச்ச ஏதத் சராசரம் - என்று மைத்ரேயர் எழுப்பிய பொதுவான கேள்விக்கு, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-1-41) – விஷ்ணோஸ் ஸகாசாத் உத்பூதம் – இந்த லோகங்கள் எந்த விஷ்ணுவிடமிருந்து உண்டானதோ – என்பது போன்றதான பராசர பகவானுடைய சிறப்பு மிகுந்து பதில்கள் முதலானவற்றையும் தள்ளினார்கள். மேலும், கீதை (14-8) – தமஸ்த்வஜ்ஞாநஜம் வித்தி மோஹநம் ஸர்வே தேஹிநாம் ப்ரமாதாலஸ்ய நித்ராபிஸ் தந்நிபத்நாதி பாரத – அர்ஜுனா! சரீரத்தின் மீது பற்றுதல் வைத்துள்ள அனைவரையும் மயக்கவல்ல தமஸ் குணமானது அஜ்ஞானத்திலிருந்து வந்தது என்று அறிவாயாக. இது அவசியமற்ற செயல்கள், சோம்பல், உறக்கம் ஆகியவற்றை உண்டாக்கும் - என்பதற்கு ஏற்ப பந்தங்கள் அனைத்திற்கு காரணமாக உள்ள அஜ்ஞானம் அனைத்தையும் தன்னிடம் ஈடுபட்ட உடனேயே அளிக்கக்கடவதான சிவயோகஸாரம் போன்ற தாழ்ந்த ஆகமங்களில் நிலை நின்றனர். அவற்றையே ப்ரமாணங்களாகப் பற்றி நின்று, தாழ்ந்த வாதங்களைச் செய்தபடி உள்ள பாசுபதம் முதலானவற்றைக் கூறியபடி உள்ளனர்.

வ்யாக்யானம் – (அவப்பொருளாமிருள் சுரந்து) ஜடா கலாப பச்ம ருத்ராக்ஷ லிங்க தாரணம் தொடக்கமான நிஷித்தார்த்தங்களாகிற அந்தகாரமானது வ்யாபித்து. **அவப்பொருள்** - பொல்லாத பொருள். "**ஆகம வாதியர் கூறும் மறைப்பொருள்**" என்று பாடமாம்போது, ருத்ர ஹர த்ரயம்பக ஸ்த்தாணு விருபாக்ஷாதி சப்தங்களாலே நிஷித்த தர்ம ப்ரவர்த்தகனான ருத்ரனுடைய வ்யாப்யத்வத்தைத் தெரியமாட்டாதே வேதத்திலே, "ஸ ப்ரஹ்மா ஸ சிவ:" இத்யாதியாலே ஸாமாநாதிகரண்யேந உக்த வாக்யங்களினுடைய தாத்பர்யத்தையும், உபக்ரமோப ஸம்ஹாரத்தையும் பராமர்சியாதே, ப்ரசம்ஸாபரங்களாயும் அப்ரஸித்தார்த்தங்களா யுமிருந்துள்ள ஸுதஸம்ஹிதாதிகளுக்கு அநுகூலமாக, அதுக்குச் சொன்ன **அவப்பொருளாகிற அந்தகாரத்தை** யென்னவுமாம். அன்றிக்கே, "**கூறும் அறைப் பொருள்**" **என்று பதச்சேதமாய்**, அவர்கள் சொல்லுகிற காதுகமான அர்த்தவத்தையென்கை. காதுகமென்கிறது - ஆத்மா நாசகமாகையாலே. அங்ஙனுமன்றிக்கே **அறை என்று த்வநியாய்**, **கடலோசையோபாதியான** பொருளென்னவுமாம்.

விளக்கம் - **(அவப்பொருளாம் இருள் சுரந்து)** - ஜடாமுடி, கலாபம், சாம்பல், ருத்ராக்ஷம் மற்றும் லிங்கம் ஆகியவற்றை எப்போதும் கொண்டிருத்தல் என்பது தொடக்கமாக தாழ்ந்த கருத்துக்களாகிய இருளானது எங்கும் பரவி நின்று. இதனை "ஆகம வாதியர் கூறும்

மறைப்பொருள்" என்று படித்தால், "ருத்ரன், ஹரன், த்ரயம்பகன், ஸ்த்தாணு, விரூபாக்ஷன்" போன்ற சொற்கள் கொண்டு தாழ்ந்த தர்மங்களில் ஈடுபட்டபடி உள்ள ருத்ரனுடைய எங்கும் பரவிய தன்மையை அறியாமல், வேதங்களில் மஹாநாராயண உபநிஷத் – ஸ ப்ரஹ்மா ஸ சிவ: - என்பது போன்ற வாக்கியங்களில் கூறப்பட்ட ஸாமாநாதிகரண்யத்தில் உள்ள வாக்கியக்களின் பொருளையும், தொடக்கம் மற்றும் முடிவில் உள்ள கருத்துக்களையும் அறியாமல், மயக்கத்தை ஏற்படுத்துபவையாகவும், யாருக்கும் அறியாதபடி உள்ளதும் ஆகிய ஸுதஸம்ஹிதை போன்றவற்றுக்கு ஏற்றபடி அவற்றுக்கு உரைக்கின்ற தாழ்ந்து கருத்து என்ற இருள் என்றும் கூறலாம். அல்லது "கூறும் அறைப்பொருள்" என்று பிரித்தால், அவர்கள் உரைக்கிற பொருத்தம் இல்லாத கருத்துக்கல் என்று பொருள். அல்லது "அறை" என்பதை ஓசை என்று கொண்டால், கடலில் ஓசை போன்று அவர்கள் உரைக்கும் கருத்துக்களும் பொருள் அற்றவை எனலாம்.

வ்யாக்யானம் – (எய்த்த வுலகிருள் நீங்க) "தமஸ்த்வஜ்ஞாநஜம் வித்தி" என்னும்படியான அந்த அஜ்ஞானமாகிற அந்தகாரத்திலே ஸதஸத் விவேகமற்று அவிவேகராய்ப் போந்த சேதநருடைய அந்தகாரமானது நீங்கிப்போம்படியாக. **எய்த்தல்** – இளைத்தல். **(தன்னீண்டிய சீர் அருள் சுரந்து)** அந்தகாரத்தைப் போக்கும் ஆதித்யன் அநேகமாயிரம் கிரணங்களை ஒருக்காலே லோகத்திலெல்லாம் ப்ரஸரிப்பிக்குமாப்போலே, தம்முடை ஆச்ரித பாரதந்த்ர்யாதிகளால் திரண்ட வைலக்ஷண்யத்தையுடைய க்ருபையை லோகமெல்லாம் வ்யாபிப்பித்து. **ஈண்டுதல்** – திரளுதல், **சீர்** – அழகு. "தத்ர ஸத்வம் நிர்மலத்வாத் ப்ரகாசகமநாமயம் ஸுக ஸங்கேந பத்நாதி ஜ்ஞாந ஸங்கேந சாதக" என்கிறபடியே **இவர் தம்முடைய விஷயீகாரத்தாலுண்டான ஸத்வோத்ரேகத்தாலும்**, "அஜ்ஞாந திமிராந்தஸ்ய ஜ்ஞாந அஜ்ஞாநசலாகயா சக்ஷுர் உந்மீலிதம்யேந தஸ்மை ஸத் குரவே நம:" என்கிறபடியே **இவர் தம்முடைய உபதேசத்தாலும்** அநாதி காலமே பிடித்துத் தொடர்ந்த அஜ்ஞாநாந்தகாரமெல்லாம் வாசனையோடே முடிந்து போமிறே.

விளக்கம் - (எய்த்த வுலகிருள் நீங்க) – கீதை (14-8) – தமஸ்த்வஜ்ஞாநஜம் வித்தி - தமஸ் குணமானது அஜ்ஞானத்திலிருந்து - என்பதற்கு ஏற்ப அப்படிப்பட்ட அஜ்ஞானம் என்ற இருள் காரணமாக "ஸத் எது, அஸத் எது" என்று பிரித்து அறிய இயலாமல், விவேகம் அற்றவராக உள்ள சேதநகர்களுடைய இருளானது விலகும்படியாக. **(தன்னீண்டிய சீர்**

அருள் சுரந்து) – இருளைப் போக்கும் சூரியன் பல ஆயிரம் கதிர்களை ஒரே நேரத்தில் இந்த லோகத்தில் பரவுவது போன்று, தனது "அடியார்களிடம் வசப்பட்டு இருத்தல்" என்பதான மேன்மை மிகவும் க்ருபையை இந்த லோகம் முழுவதும் பரப்பியபடி. கீதை (14-6) – தத்ர ஸத்வம் நிர்மலத்வாத் ப்ரகாசகமநாமயம் ஸுக ஸங்கேந பத்நாதி ஜ்ஞாந ஸங்கேந சாதக – பாபங்கள் அற்றவனே! மூன்று குணங்களில், ஸத்வகுணமானது தூய்மையாக உள்ளதால், ஒளியை அளிக்கவல்லதாகும். மேலும் அது மாற்றம் அடையாதது ஆகும். ஆனால் அது இன்பம் மற்றும் ஞானம் ஆகியவற்றுடன் உள்ள ஸம்பந்தம் காரணமாகக் கட்டுகிறது - என்பதற்கு ஏற்ப இவரை ஏற்றுக்கொண்ட காரணத்தால் அனைவரையும் கரை ஏற்றும் தன்மையைக் கொண்டபடியும். அஜ்ஞாந திமிராந்தஸ்ய ஜ்ஞாந அஜ்ஞாநசலாகயா சக்ஷுர் உந்மீலிதம்யேந தஸ்மை ஸத் குரவே நம: - அஜ்ஞானம் என்ற இருட்டினால் மூடப்பட்டிருக்கும் கண்களை ஞானம் என்ற மைதீட்டும் குச்சியால் திறக்கும் குருவிற்கு நமஸ்காரம் - என்பதற்கு ஏற்ப இவருடைய உபதேசம் காரணமாக எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள அஜ்ஞானம் என்ற இருளானது அதன் வாசனையுடன் ஓடும்படியாக.

வ்யாக்யானம் – (எல்லாவுயிர்கட்கும் நாதனரங்க னென்னும் பொருள் சுரந்தான்) "பதிம் விச்வச்ய", "உதாம்ருதத்வஸ்யேசாந:", என்றும், "லோகநாத: புரா பூத்வா" என்றும், "முழுவேழுலகுக்கும் நாதன்" என்றும் சொல்லுகிறபடியே ஸகலாத்மாக்களுக்கும் வகுத்த சேஷி, நமக்கு எட்டாத நிலத்திலன்றிக்கே நாமிருந்த கோயிலிலே கண் வளர்ந்தருளுகிற பெரியபெருமாள் என்கிற விசேஷஷார்த்தத்தை லோகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி உபதேசித்தார். **(எம்மிராமாநுசன்**) அஸ்மத் ஸ்வாமியான எம்பெருமானார். **(மிக்க புண்ணியனே**) பரம தார்மிகர் கிடீர். "**ராமாநுசனென்னும் புண்ணியன்**" என்றும் பாடம் சொல்லுவர்கள். இப்படி உபகரிக்கையாலே ஆசந்த்ரார்கமாக தார்மிகர் கிடீரென்றபடி. "**மிக்க புண்ணியனான எம்மிராமானுசன் - பொருள் சுரந்தான்**" என்று அங்கு அந்வயிக்கவுமாம்.

விளக்கம் - (எல்லாவுயிர்கட்கும் நாதன் அரங்கன் என்னும் பொருள் சுரந்தான்) - பதிம் விச்வஸ்ய – இந்த விச்வத்தின் நாயகன் – என்றும், உதாம்ருதத்வஸ்யேசாந: - மோக்ஷத்தின் ஈசனாக உள்ளவன் – என்றும், இராமாயணம் கிஷ்கிந்தா காண்டம் (4-18) -

லோகநாத: புரா பூத்வா – (லக்ஷ்மணம் கூறுவது) முன்பு லோகத்தின் நாயகனாக – என்றும், திருவாய்மொழி (2-7-2) - முழுவேழுலகுக்கும் நாதன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து ஆத்மாக்களுக்கும் இயல்பான எஜமானனாக உள்ள ஸர்வேச்வரன், நமக்கு எட்டாத இடத்தில் இல்லாதபடி, நாம் உள்ள இடத்தில் இருக்கின்ற திருவரங்கத்தில் வந்து கண்வளர்ந்தருளுகின்ற பெரியபெருமாள் என்பதான விஷயத்தை இந்த லோகத்தில் உள்ளவர்கள் அனைவரும் பிழைக்கும்படியாக உபதேசித்தார். (எம் இராமாநுசன்) - இப்படிப்பட்ட எனது ஸ்வாமியான எம்பெருமானார். (மிக்க புண்ணியனே) - மிகவும் உயர்ந்த தர்மங்களுடன் கூடியவர். இதனை "ராமாநுசன் என்னும் புண்ணியன்" என்றும் கூறுவர். இவ்விதம் உபகாரம் செய்வதால், மிகவும் உயர்ந்த தார்மிகர் என்று கருத்து; இவ்விதம் கொண்டால், "**மிக்க புண்ணியனான எம்மிராமானுசன் -பொருள் சுரந்தான்**" என்று படிக்கவேண்டும்.

92. புண்ணிய நோன்பு புரிந்துமிலேன் அடி போற்றி செய்யும்
நுண்ணருங் கேள்வி நுவன்றுமிலேன் செம்மை நூற்புலவர்க்கு
எண்ணருங் கீர்த்தி இராமாநுச இன்று நீ புகுந்து என்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்ற இக்காரணம் கட்டுரையே

விளக்கவுரை - சாஸ்த்ரங்களைப் பின்பற்றி இயற்றப்படும் வர்ணாச்ரம கர்மங்களை நான் செய்து வருபவன் அல்லேன்; புண்ணியம் என்பது பகவானைக் குறித்துக் கூறுவதாகக் கொண்டால், பகவானுக்கு ஆராதனை ரூபமாகச் செய்யப்படும் கர்மங்களையும் நான் செய்யவில்லை – எனலாம். உமது திருவடிகளை அடைய உறுப்பாக உள்ளதும், பரம இரகசியமாகத் தகுதி உள்ளவர்களுக்கு மட்டுமே உபதேசிக்கப்படும் மந்திரத்தையும் நான் அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் காட்டவில்லை. நீவிர் திருக்கோட்டியூர் நம்பியிடம் பதினெட்டு முறை சென்று அறிந்த சரச்லோகத்தின் பொருளை, உம்மிடம் இருந்து யாசித்துப் பெற வேண்டும் என்று முயற்சி மேற்கொள்ளவில்லை. எந்தவிதமான பயனும் எதிர்பாராமல், சாஸ்திர பூர்வமாக உள்ள கவிதைகளைப் புனையவல்ல அறிஞர்களுக்குக் கூட முழுமையாகக் கூறி முடிக்க இயலாத புகழை உடைய எம்பெருமானாரே! இத்தனை நாள்கள் நீவிர் என்னைக் காணாமல், இன்று என் கண்கள் நிறைந்து, நெஞ்சம் முழுவதுமாகப் பரவி நின்றதன் காரணம் என்ன என்று கூறவேண்டும்.

அவதாரிகை – “எம்பெருமானாரை ஆச்ரயியாத கர்ப்ப நிர்பாக்யரை நிந்தித்தும் ஸம்யஜ்ஞாந ஹீநராய் நிஷித்த மார்க்க நிஷ்டரானவர்களுடைய துரூபதேசத்தாலே அவஸந்நராய்ப் போந்த சேதநருடைய அஜ்ஞாநத்தை மாற்றி ஸர்வருக்கும் ச்ரிய:பதியே சேஷியென்று உபதேசித்த பரம தார்மிகர் எம்பெருமானார்”, என்று சொல்லிப் போந்தார் கீழிரண்டு பாட்டாலே; இதிலே **எம்பெருமானாருடைய திருமுகமண்டலத்தைப் பார்த்து**, “**அடியேன் இவ்வளவும் நானறிந்ததாக ஒரு ஸத் கர்மத்தைப் பண்ணினேனல்லேன்; அப்படியே உத்தாரகமாயிருப்பதொரு ஸூக்ஷ்மமான விசேஷார்த்தத்தைக் கேட்பதாக ப்ரஸங்கிப்பதும் செய்திலேன்; இது என் ரீதியாயிருக்க, ஸச்சாஸ்த்ர ப்ரவர்த்தகரானவர்களுக்கும் தொகையிட்டுச் சொல்லவரிதான குணவத்தா ப்ரதையை யுடையரான தேவரீர் இவ்வளவும் வெறுமனேயிருந்து இன்று என்னுடைய ஸமீபத்திலே ப்ரவேசித்து உட்கண்ணுக்கும் கட்கண்ணுக்கும் விஷயமாய் நின்றீர், இதுக்கு ஹேது தேவரீரே சொல்ல வேணும்”, என்று விண்ணப்பம் செய்கிறார்.**

விளக்கம் - கடந்த இரண்டு பாசுரங்களில், கர்ப்பத்திலேயே பாக்கியம் இல்லாத காரணத்தால் எம்பெருமானாரை அண்டி நிற்காத மனிதர்களை நிந்தித்தார்; அவர்கள் சரியான ஞானத்தை இழந்தவர்களாகவும், தாழ்ந்த மார்க்கத்திலேயே எப்போதும் உழன்றபடி உள்ளவர்களுடைய தவறான உபதேசங்கள் காரணமாகத் துன்பம் அடைந்தவர்களாகவும் இருந்தனர்; இப்படிப்பட்ட சேதநர்களுடைய அஜ்ஞானத்தை விலக்கி, அனைவருக்கும் எஜமானனாக உள்ளவன் மஹாலக்ஷ்மியின் நாதனே ஆவான் என்பதை அவர்களுக்கு உபதேசித்த உயர்ந்த தர்மாத்மா என்று எம்பெருமானாரைக் கொண்டாடி மகிழ்ந்தார். இந்தப் பாசுரத்தில் எம்பெருமானாருடைய திருமுகமண்டலத்தை நோக்கியபடி அவரிடம், “இதுவரை நான் எந்தவிதமான நல்ல கர்மத்தையும் செய்தது கிடையாது. மேலும் இத்தகைய தாழ்ந்த நிலையிலிருந்து என்னை மேலே உயர்த்தவல்ல நுட்பமான எந்த ஒரு விஷயத்தையும் கேட்பதற்குக்கு நான் முயன்றது கிடையாது. இப்படியாக எனது நிலை உள்ளபோது, நல்லதான தர்மமார்க்கத்தில் எப்போதும் நிலைத்தபடி உள்ளவர்களுக்கும் கூட எண்ணிக்கை கொண்டு உரைப்பதற்கு அரிதாக உள்ள குணங்கள் கொண்டவர் என்ற மேன்மை பெற்ற நீவிர், இதுவரை வெறுமனே இருந்து, இன்று எனக்கு அருகில் வந்து நின்று, எனது கண்களுக்கும் மனதிற்கும் இலக்காக நின்றீர். இதற்கான காரணத்தை நீரே எனக்கு உரைக்க வேண்டும்”, என்கிறார்.

வ்யாக்யானம் – (புண்ணிய நோன்பு புரிந்துமிலேன்) புண்ணியமாவது ஐஹிகாமுஷ்மிக ஸுக துக்க ஹேதுவாய் **சாஸ்த்ரீயமான வர்ணாச்ரம நியதமான கர்ம விசேஷம்**. இப்படிப்பட்ட வ்ருத்தத்தைப் பண்ணினேனல்லேன். **புரிதல்** – செய்தல். "நோற்ற நோன்பிலேன்", "ந தர்ம நிஷ்டோஸ்மி" என்னக் கடவதிறே. "புண்யாநாமபி புண்யா அஸௌ" என்கையாலே, புண்ய சப்தம் பகவத் வாசகமாய் அந்த பகவானை உத்தேசித்து ததாராதந ரூபமாகப் பண்ணப்படும் **ஸத் கர்மத்தை யென்னுதல்**; "யத் த்வத் ப்ரியம் ததிஹ புண்யம்" என்கிறபடியே ஸர்வேச்வரனுக்கு ப்ரிய தமமாய், "மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத் தஸ்மாத் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத:" என்று **அவன் தன்னாலே நியமிக்கப்பட்ட ததீய விஷயமான கிஞ்சித்காரத்தை யென்னுதல்**. அடியேனிடத்திலே இப்படிப்பட்ட நோன்பு ஒன்றுமில்லை யென்றபடி.

விளக்கம் - **(புண்ணிய நோன்பு புரிந்துமிலேன்)** - புண்ணியம் என்றால் இம்மையிலும் மறுமையிலும் இன்பத்திற்குக் காரணமாக உள்ளதான சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட வர்ணாச்ரம கர்மங்கள் ஆகும். இவற்றில் எதனையும் நான் செய்தது கிடையாது. திருவாய்மொழி (5-7-1) – நோற்ற நோன்பிலேன் - என்பது காண்க. இது போன்றே, ஸ்தோத்ரரத்னம் (22) – ந தர்ம நிஷ்டோஸ்மி – நான் கர்மயோகத்தைக் கைக்கொள்ளவில்லை – என்று கூறியது காண்க. அல்லது, புண்யாநாமபி புண்யா அஸௌ – கோவிந்தனே புண்ணியங்களுக்குப் புண்ணியமாகவும் – என்று கூறுவதால், "புண்ணியம்" என்ற சொல்லானது பகவானைக் குறிப்பதாகக் கொண்டு, அப்படிப்பட்ட பகவானை ஆராதித்தல் என்ற ரூபமாக உள்ள ஸத் கர்மங்கள் என்று கருத்து. அதிமாநுஷ்யஸ்தவம் – யத் த்வத்ப்ரியம் ததிஹ புண்யம் - எது உனக்கு விருப்பமோ அதுவே புண்ணியம் - என்பதற்கு ஏற்றபடி ஸர்வேச்வரனுக்கு பிடித்த செயல்கள். மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (116-23) - மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத் தஸ்மாத் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத: - எனது அடியார்கள் மீது பக்தியுள்ளவர்களிடம் எனக்கு அதிகமான ப்ரேமை உள்ளது. ஆகவே அவர்களை நன்கு ஆராதிக்க வேண்டும் – என்பதற்கு ஏற்ப அவனால் விதிக்கப்பட்ட, அவனுடைய அடியார்கள் விஷயத்தில் செய்யப்படும் கைங்கர்யங்கள். என்னிடம் இப்படிப்பட்டதான செயல்கள் ஏதும் இல்லை.

வ்யாக்யானம் – (**அடி போற்றி செய்யும் நுண்ணரும் கேள்வி நுவன்றுமிலேன்**) தேவரீருடைய திருவடிகளை ஆச்ரயிக்கைக்குறுப்பாய், ஸூக்ஷ்மமென்றும், "ஸர்வம் குஹ்ய தமம்" என்றும், "பூய: ப்ரவக்ஷ்யாமி" என்றும், "ந ச அசுச்ரூஷவே வாச்யம்" என்றும் சொல்லுகிறபடியே ஸூஸூக்ஷ்மமாய் பரம ரஹஸ்யமாய் அநாதிகாரிகளுக்கு உபதேசிக்க வரிதான மந்த்ரத்தை ச்ரவிக்கையன்றிக்கே ச்ரவிக்கவேணும் என்று ப்ரஸங்கிப்பதும் செய்திலே னென்னுதல்; தேவரீர் பதினெட்டுத் தரம் திருக்கோஷ்டியூர் நம்பி பக்கலிலே சென்று ஸாரதமமாக சரம ச்லோகார்த்தத்தை யாசித்தாப்போலே அடியேன் யாசித்தேனல்லே னென்னுதல். **நுவலுதல்** – அபேக்ஷித்தல். "நுண்ணறிவிலேன்", "ந சாத்மவேதீ" என்னக் கடவதிறே.

விளக்கம் - (**அடி போற்றி செய்யும் நுண்ணரும் கேள்வி நுவன்றுமிலேன்**) - உம்முடைய திருவடிகளை அண்டி நிற்பதற்கு ஏற்ற காரணமாக உள்ளதும், மிகவும் நுட்பமானது என்றும், கீதை (18-64) – ஸர்வம் குஹ்ய தமம் – அனைத்தைக் காட்டிலும் இரகசியமாக - என்றும், கீதை (18-67) – ந ச அசுச்ரூஷவே வாச்யம் – எனக்குப் பணிவிடை செய்யாதவனுக்குக் கூறவேண்டியது ஏதும் இல்லை – என்றும் கூறுவதற்கு ஏற்ப மிகுந்த நுட்பமானதாக, மிகவும் இரகசியமானதாக, தகுதி அற்றவர்களுக்கு உபதேசிக்கத் தகாததாக உள்ளதும் ஆகிய மந்த்ரத்தை, நான் அறியவேண்டும் என்று முயற்சி செய்ததும் கிடையாது. நீவீர் பதினெட்டுமுறை திருக்கோஷ்டியூர்நம்பியிடம் சென்று அனைத்திற்கும் ஸாரமாக உள்ள சரம ச்லோகத்தின் ஆழ்பொருளை அவரிடமிருந்து யாசித்துப் பெற்றது போன்று நான் யாசித்து நிற்கவில்லை. திருவாய்மொழி (5-7-1) – நுண்ணறிவிலேன் – என்றும், ஸ்தோத்ரரத்னம் – ந ச ஆத்மவேதி – நான் எனது ஆத்மாவைக் குறித்து அறிந்தவன் அல்லன் – என்றும் கூறியது காண்க.

வ்யாக்யானம் – (செம்மை நூல் புலவர்க்கெண்ணரும் கீர்த்தி) ப்ரதம பர்வமென்றால், சிலர் ஸணமென்றும் சிலர் நிர்க்குணனென்றும், சிலர் ஹரியென்றும் சிலர் ஹரனென்றும், இப்படி அவரவர் புத்திக்கநுரூபமாகச் சொல்லுகைக்குறுப்பாயிருக்கும்; இது சரம பர்வமாகையாலே அந்த தோஷங்களொன்று மின்றிக்கே யிருந்ததென்று அநந்ய ப்ரயோஜநராய்க் கொண்டு அநேக ப்ரகாரமாக சாஸ்த்ராநுரூபமான கவிகளை சொல்லவல்ல வித்வாந்களுக்கு, இவ்வளவு ஏவம் விதமென்று பரிச்சேதித்துச் சொல்லித் தலைக்கட்டவரிதான கீர்த்தியையுடையரான. (**இராமாநுச**) எம்பெருமானாரே. **செம்மை** –

செவ்வை. இத்தால் அநந்ய ப்ரயோஜநதையைச் சொன்னபடி. **நூல்** – சாஸ்த்ரம். புலவர் – வித்வாந்கள். **(இன்று நீ புகுந்து)** இத்தனை நாளும் காணாக் கண்ணிட்டிருந்து இப்போதாக தேவரீர் அடியேனுடைய ஸமீபத்திலே ப்ரவேசித்து.

விளக்கம் – – (செம்மை நூல் புலவர்க்கெண்ணரும் கீர்த்தி) - முதல் நிலையான பகவத் விஷயம் என்றால் ஒரு சிலர் ஸகுண ப்ரஹ்மம் என்றும், சிலர் நிர்குணம் என்றும்; சிலர் ஹரி என்றும், சிலர் ஹரன் என்றும் அவரவர்களுடைய புத்திக்கு எட்டியபடி கூறுவதாக அமைந்துவிடும். ஆனால் எல்லை நிலையான அடியார்கள் விஷயமாக உள்ளபோது அத்தகைய தோஷங்கள் ஏதும் இன்றி உள்ளது என்று, வேறு எந்தவிதமான பயனையும் எதிர்பாராமல், பலவிதங்களிலும் சாஸ்த்ரங்களுக்கு ஏற்றவிதத்தில் கவிகள் கூறவல்ல வித்வான்களாலும் "இவருடைய குணங்கள் இத்தனை ஆகும். இவை இத்தகைய தன்மைகள் கொண்டவை", என்று அளவுபடுத்திக் கூறமுடியாதபடி கீர்த்தியைக் கொண்டவராகிய. (இராமாநுசா) - எம்பெருமானாரே. (இன்று நீ புகுந்து) - இத்தனை நாட்களும் என்னைக் காணாமல் இருந்து, இன்று நீவிர் என்னுடைய அருகில் வந்து புகுந்து.

வ்யாக்யானம் – (என் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்ற விக்காரணம் கட்டுரையே) "நித்ரா ப்ரமாத கலுஷீக்ருத மாநஸஸ்ய தத்ராபி சக்திரிஹமேந" என்கிறபடியே இவ்வளவும் தேவரீர் கண் வட்டத்திலே யிருந்தும், ஆநுகூல்யம் இல்லாத தோஷத்தாலே வணங்காமுடியாய்ப் போந்த வடியேனுடைய பாஹ்ய கரணங்களுக்கும் அந்தகரணத்துக்கும் இலக்காய், இந்த வீட்டில் இருப்புக்கு ஒரு ஹேதுவை தேவரீரே விசாரித்தருளிச் செய்யவேணும். **கண்ணுள்ளுமென்**றது வாகாதிகளுக்கும் உபலக்ஷணம். **கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நிற்கையாவது**, கண்ணுக்கும் நெஞ்சுக்கும் விஷயமாகை. **கட்டுரை**யென்றது -சொல்ல வேணுமென்றபடி. **கட்டுரை** என்று ஒரு முழுச் சொல்லு.

விளக்கம் - (என் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நின்ற விக்காரணம் கட்டுரையே) - நித்ரா ப்ரமாத கலுஷீக்ருத மாநஸஸ்ய தத்ராபி சக்திரிஹமேந - என்பதற்கு ஏற்ப இத்தனை நாட்களும் நீவிர் என்னுடைய கண்களுக்கு எட்டிய தூரத்திலேயே இருந்தபோதிலும், உமக்கு ஏற்றபடி செயல் புரிதல் இல்லாமை என்ற தோஷத்தால் உம்மை வணங்காமல்

நான் இருந்தேன். இப்படிப்பட்ட என்னுடைய அக புற இந்த்ரியங்களுக்கு இலக்காக நீவிர் இப்போது வந்து நீற்கிறீர். இத்தகைய உம்முடைய இருப்புக்கான காரணத்தை நீரே அருளிச்செய்யவேண்டும். "கண் உள்ளும்" என்பது அனைத்து இந்த்ரியங்களையும் கூறுவதற்கான ஒரு உதாரணம் மட்டுமே ஆகும். கண்ணுக்கும் நெஞ்சுக்கும் இலக்காக நின்றார். கட்டுரை என்றால் "கூறவேண்டும்" என்று பொருள்.

93. கட்டப்பொருளை மறைப்பொருள் என்று கயவர் சொல்லும்
பெட்டைக் கெடுக்கும் பிரான் அல்லனே என் பெருவினையைக்
கிட்டிக் கிழங்கொடு தன்னருள் என்னும் ஒள்வாளுருவி
வெட்டிக் களைந்த இராமாநுசன் என்னும் மெய்த்தவனே

விளக்கவுரை - என்னால் எனக்கு உண்டாக்கப்பட்டிருந்ததும், ப்ராயச்சித்தம் எத்தனை செய்தாலும் நீங்காமல் இருந்ததும் ஆகிய எனது வினைப்பயன்களை எம்பெருமானார் நீக்க எண்ணினார். இதற்கு வேறு யார் மூலமும் தூது அனுப்பாமல், தானாகவே என் அருகில் வந்தார். தனது அருள் என்ற வாளை உருவினார். எனது வினைகள் அனைத்தையும் அவற்றின் வாஸனையுடன் வெட்டினார். செடியை வேருடன் வெட்டிவிட்டால், அதனைக் காண்பவர்கள் இந்தச் செடி முன்பு இருந்தது போலும் என்று நினைப்பது போன்று, எனது தீவினைகள் முன்பு இருந்தன என்று கூறும்படிச் செய்தார். மிகுந்த தவம் உடைய எம்பெருமானார் மேலும் செய்வது என்ன? தவறானவற்றை வேதங்களின் பொருள் என்றும், ப்ரஹ்மம் குணங்களுடன் கூடியது அல்ல என்றும், அவன் மஹாலக்ஷ்மியுடன் கூடியவன் அல்லன் என்றும் தவறாக உபதேசம் செய்த வாதங்கள் அனைத்தையும் தள்ளினார். இத்தனை உபகாரம் செய்பவர் எம்பெருமானாரே ஆவார்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே எம்பெருமானாருடைய திருமுகமண்டலத்தைப் பார்த்து, "இத்தனை நாளும் என்னை அங்கீகரிக்கையில் கால்கண்டிட்டுக் கொண்டிருந்த தேவரீர், இப்போது அடியேன்பக்கல் ஒரு கைம்முதலின்றிக்கே யிருக்க இப்படி அங்கீகரிக்கைக்கு ஹேதுவேது, அத்தைச் சொல்லிக் காணீர்", என்று இவர் மடியைப் பிடித்தாலும் அவர் அதுக்கு ஒரு மறுவுத்தரஞ் சொல்லாதே கவிழ்ந்து தலையிட்டிருந்தவாறே இப்படி நிர்ஹேதுகமாகக் கண்டிடுமோ என்று நினைத்து; இதிலே, "என்னுடைய ப்ரபல பாதகங்களை வாஸனையோடேகூட தம்முடைய க்ருபையாகிற கட்கத்தை

ஸங்கல்பமாகிற வுறையில் நின்றும் உருவி அத்தாலே சேதித்துப் பொகட்டு, ப்ரபந்ந குலத்துக்கெல்லாம் ஒக்க உத்தாரகரான வெம்பெருமானார் ஸ்வாஜ்ஞாந விஜ்ரும்பிதமான அபார்த்தங்களையெல்லாம் வேதார்த்தங்களென்று பரமமூடரான குத்ருஷ்டிகள் சொல்லுகிற ப்ராமக வாக்யங்களை நிவர்த்திப்பித்த பரமோபகாரக ராகையாலே, அவர் செய்யுமதெல்லாம் நிர்ஹேதுகமாயன்றோவிருப்பது", என்று தெளிந்து, தம்மிலே தாமே ஸமாஹிதராய்ச் சொல்லுகிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில் எம்பெருமானாருடைய திருமுகத்தை நோக்கி, "இத்தனை நாட்கள் அடியேனை அங்கீகரிக்காமல் இருந்தீர். ஆனால் இப்போது என்னிடம் எந்தவிதமான கைம்முதலும் இல்லாதபோதிலும் இவ்விதம் நீவிர் அங்கீகரிப்பதற்கான காரணம் என்ன? அதனை நீவிர் கூறவேண்டும்", என்று கேட்டார். இவ்விதம் எம்பெருமானாரிடம் கேட்ட பின்னரும் அவர் பதில் ஏதும் உரைக்காமல் இருந்தார். இதனைக் கண்ட அமுதனார் இவ்விதம் எந்தவிதமான காரணமும் இன்றி பார்த்தபடி இருப்பாரோ என்று வியந்தார். இந்தப் பாசுரத்தில், "எம்பெருமானார் தனது க்ருபை என்ற கத்தியை, தனது ஸங்கல்பம் என்ற உறையிலிருந்து உருவி, அதனைக் கொண்டு எனது அனைத்து பாபங்களையும் வெட்டி வீழ்த்தினார். ப்ரபந்நர்கள் அனைவருக்கும் ஒரே போன்று கரையேற்றுபவராகத் திகழ்கின்ற எம்பெருமானார், தங்களுடைய அஜ்ஞானம் காரணமாக ஓங்கி வளர்ந்ததான தவறான கருத்துக்களையே வேதங்களில் கூறப்பட்ட கருத்துக்கள் என்று பரமமூடராக உள்ள பலரும் உரைத்த பலவற்றையும் விலக்கினார். மிகுந்த உபகாரம் நிறைந்தவராக உள்ளதால், எம்பெருமானார் செய்வது அனைத்தும் எந்தவிதமான காரணத்தின் அடிப்படையிலும் அமைந்தது அல்ல", என்று தெளிவடைந்து, தனக்குத்தானே சமாதானம் கூறிக் கொள்கிறார்.

வ்யாக்யானம் – (என் பெய்வினையைக் கிட்டி) இவ்வளவும் விமுகனாய்ப் போந்த என்னால் உண்டாக்கப்பட்டதாய், அநுபவ ப்ராயச்சித்தங்களாலும் நிவர்த்திப்பிக்க வரிதாய், சாகோபசாகமாய்ப் பணைத்துப் போருகிற துஷ்கர்ம ரூப விஷ வ்ருக்ஷத்தை, இண்டைத் தூறு போலே ஒருவருக்கும் அண்டவொண்ணாதபடி யிருந்ததே யாகிலும், கௌரவ ஸேனையை, "காலோஸ்மி லோக க்ஷய க்ருத் ப்ரவ்ருத்த:" என்று சொல்லா நின்ற க்ருஷ்ணன் சென்று கிட்டினால் போலே, தாமே சென்று கிட்டி. "அவித்யா தரு" என்னக் கடவதிறே. "வினையைக் கிட்டி" என்றது, "வினையேனைக் கிட்டி" என்றபடியாய்.

ஆளையிட்டுக் காரியங் கொள்ளுகை யன்றிக்கே, நேர்கொடுநேரே தாமே வந்து கிட்டினார் காணுமென்கிறார். (கிழங்கொடு) மீளவும் கிளருகைக் குறுப்பாயிருக்கிற துர்வாஸனையாகிற கிழங்கோடே கூட. (தன்னருளென்னும்) "ஸித்திர்பவதி வா நேதி ஸம்சய: அச்யுத ஸேவிநாம்" என்றவனருளன்றிக்கே, "ந ஸம்சய: அத்ர தத்பக்த பரிசர்யா ரதாத்மநாம்" என்று சொல்லப்படுகிற தம்முடைய அருளாகிற.

விளக்கம் – (என் பெய்வினையைக் கிட்டி) - நல்ல விஷயங்களுக்கு முகம் கொடுக்காமல் உள்ள என்னால் உண்டாக்கப்பட்டதும், எத்தனை அனுபவித்துக் கழித்தாலும் அல்லது ப்ராயச்சித்தம் செய்தாலும் நீங்குவதற்கு அரிதாக உள்ளதும், பல பல கிளைகளாகத் தழைத்து நிற்பதும் ஆகிய தீயகர்மங்களின் ரூபமாக உள்ள தீய மரமானது, இண்டை என்ற மலருடைய புதர் போன்று யாராலும் அண்ட இயலாதபடி இருந்தது. கௌரவர்களின் படையை, கீதை (11-32) – காலோஸ்மி லோக க்ஷய க்ருத் ப்ரவ்ருத்த: - இந்த லோகங்களை அழிக்கும் காலனாக நானே உள்ளேன் - என்பதற்கு ஏற்ப க்ருஷ்ணன் தானே சென்று அடைந்தது போன்று, இத்தகைய மரத்தை எம்பெருமானார் தானே வந்து அடைந்தார். ஆனால் இங்கு மரம் என்று உரைப்பது சரியா என்றால் ஸ்ரீவிஷ்ணுபுராணம் – அவித்யா தரு – அவித்யை என்னும் மரம் – என்ற ப்ரமாணம் உள்ளது காணலாம். "வினையைக் கிட்டி" என்றால் "தீயவினைகள் நிறைந்த என்னை வந்தடைந்து" என்று பொருள். வேறு ஒருவரை தன் சார்பாக அனுப்பி அவர்கள் மூலமாகச் செய்யாமல், தானே நேருக்கு நேராக வந்து நின்றார். (கிழங்கொடு) - மீண்டும் வளர்வதற்குக் காரணமாக உள்ளதான தீயவாசனை என்னும் அடிக்கிழங்குடன். (தன் அருள் என்னும்) - சாண்டில்யஸ்ம்ருதி (1-95) - ஸித்திர்பவதி வா நேதி ஸம்சய: அச்யுத ஸேவிநாம் – எம்பெருமானை அடைந்தவர்களுக்கு பலன் கிட்டுமா என்ற ஐயம் உண்டாகலாம் - என்பது போன்றதான அவனுடைய க்ருபை போன்று அல்லாமல், சாண்டில்யஸ்ம்ருதி (1-95) - ந ஸம்சய: அத்ர தத்பக்த பரிசர்யா ரதாத்மநாம் –அவன் அடியார்களுக்குத் தொண்டு செய்வதில் விருப்பம் உள்ளவர்களுக்கு பலன் கிட்டுமா என்ற ஐயமே அவசியம் இல்லை – என்பதற்கு ஏற்ப உள்ள தனது க்ருபை என்பதான.

வ்யாக்யானம் – (ஒள் வாளுருவி) அழகியதான வாளாயுதத்தைத் தம்முடைய ஸங்கல்பமாகிற உறையில் நின்றும் பிடுங்கி. ஒள் – அழகு. ஒள்வாள் – ஒளியையுடைத்தான வாளென்னுதல், கூரிய வாளென்னுதல். (வெட்டிக் களைந்த) எடுத்துப்

பொகட்ட. செடியை வெட்டி வேரைக் களைந்துவிட்டால், இந்நிலத்திலே இச்செடி முற்காலத்தில் யிருந்ததோவென்று தோற்றுமாப்போலே, இவனிடத்திலே இப்பாபங்கள் இருந்ததோவென்று தோற்றும்படியாகக் காணும் இவர் வேரைக் களைந்துவிட்டபடி. (மெய்த்தவன்) ஸத்யமான தபஸ்ஸையுடையவர். ஆத்ம யாதாம்ய ஜ்ஞாந ரூபமாய், சரணாகதி ரூபமான தபஸ்ஸையுடையவர். "தஸ்மாத் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தம் ஆஹு:" என்கிறபடியே ஸர்வேஷாம் தபஸாம் உத்க்ருஷ்டையான ப்ரபத்தியிலே நிஷ்ட்டரென்றபடி. இந்நிஷ்டையாலே காணும் இவர் ப்ரபந்ந குலோத்தேச்யரானதும், ப்ரபந்ந ஜந கூடஸ்தரானதும். (இராமாநுசன்) இப்படிப்பட்ட வெம்பெருமானார்.

விளக்கம் – (ஒள் வாளுருவி) - அழகாக உள்ள க்ருபை என்ற வாளை, தனது ஸங்கல்பம் என்றுள்ள உறையிலிருந்து உருவி. "ஒள் வாள்" என்றால் ஒளி வீசும் வாள் அல்லது கூர்மையான வாள். (வெட்டிக் களைந்த) - எடுத்து அறுத்து. ஒரு செடியை முற்றிலுமாக வெட்டி, அதன் வேரையும் நீக்கினால், இப்படி ஒரு செடி முன்பு இருந்ததோ என்று பிற்காலத்தில் ஐயம் கொள்வது போன்று, அமுதனாரிடம் இப்படிப்பட்ட பாபங்கள் இருந்தனவோ என்று ஐயம் கொள்ளும்படி வீழ்த்தினார். (மெய்த்தவன்) - உண்மையான தவத்தைக் கொண்டவர். ஆத்மாவைக் குறித்து உண்மையான ஞான வடிவில் உள்ளதும், சரணாகதி வடிவில் உள்ளதும் ஆகிய தவத்தைக் கொண்டவர். தைத்திரீயம் – தஸ்மாத் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தம் ஆஹு: - தவங்களில் சிறந்ததாக ப்ரபத்தியே கூறப்படுகிறது - என்பதற்கு ஏற்ப, அனைத்து தவங்களிலும் உயர்ந்த தவமாக உள்ளதான ப்ரபத்தியில் எப்போதும் நிலைத்து நிற்பவர் என்று கருத்து. இத்தகையே நிஷ்டை காரணமாகவே இவர் ப்ரபந்நர்களுக்கு மிகவும் வேண்டப்பட்டவராக உள்ளதும், அவர்களுடைய தலைவராக உள்ளதும் ஆகிய நிலை ஏற்பட்டது. (இராமாநுசன்) - இப்படிப்பட்ட எம்பெருமானார்.

வ்யாக்யானம் – (கட்டப்பொருளை மறைப்பொருளென்று) "பரம் ப்ரஹ்ம ஏவாஜ்ஞும் ப்ரம பரிகதம் ஸம்ஸரதி தத் பரோபாத்யாலீடம்" இத்யாதிப்படியே உபப்ரஹ்மண விருத்தங்களாயும், ஸூத்ர விருத்தங்களாயு ப்ரத்யக்ஷ விருத்தங்களாயு மிருக்கையாலே, நிஹீந தர்மமான அர்த்தங்களை வேதார்த்தர்த்தங்களென்று. கட்டம் – கட்டு. (கயவர்

சொல்லும்) "மாயாவாதம் ஸச்சாஸ்த்ரம் ப்ரச்சந்நம் பௌத்தம் உச்யதே மயா சக்திதம் தேவி கலௌ ப்ராஹ்மண ரூபிணா" என்கிறபடியே ஜகத் ப்ரதாரகராய்க் கொண்டு சுபாச்ரயமான விக்ரஹமில்லையென்றும், ஸ்வாபாவிகமான கல்யாணகுணங்க ளில்லை யென்றும், "பாதோச்ய விச்வா பூதாநி, த்ரிபாதஸ்யாம்ருதம் திவி" என்கிற விபூதி இல்லையென்றும், "ஹ்ரீச்சதே லக்ஷ்மீச்ச பத்நியௌ" என்கிற ஸ்ரீய:பதித்வம் இல்லை யென்றும், இப்படிப்பட்ட வ்ருத்தார்த்தங்களையெல்லாம் வேதாந்த வாக்யங்களுக்கும் வேதாந்த ஸூத்ரங்களுக்கும் தாத்பர்யார்த்தமாகச் சொல்லுகிற சங்கராதி குத்ருஷ்டிகளைப் பரக்கச் சொல்லா நின்றுள்ள. கயவர் – துர்மார்க்கர்.

விளக்கம் – (கட்டப்பொருளை மறைப்பொருளென்று) - வேதார்த்த ஸங்க்ரஹம் – "பரம் ப்ரஹ்ம ஏவாஜ்ஞும் ப்ரம பரிகதம் ஸம்ஸரதி தத் பரோபாத்யாலீடம் – பரப்ரஹ்மமே அவித்யையால் மறைக்கப்பட்டதாகவும், பலவிதமான பேதங்களைக் கண்டு மயக்கம் கொண்டதாகவும் இருந்து, பிறப்பு முதலானவற்றால் துன்பம் அடைகிறது" என்கிறார்கள் - என்பதற்கு ஏற்ப இதிஹாஸம் மற்றும் புராணங்கள் ஆகியவற்றுக்கு முரண்பாடாகவும், ப்ரஹ்மஸூத்ரத்திற்கு முரணாகவும், நேரடியாகக் காண்பதற்கும் முரணாகவும் கூறுவதால், தாழ்ந்த தர்மங்கள் என்று கருதப்படுகின்ற அர்த்தங்களே வேதங்களில் கூறப்பட்டவை என்று. (கயவர் சொல்லும்) பாத்மபுராணம் - மாயாவாதம் அஸச்சாஸ்த்ரம் ப்ரச்சந்நம் பௌத்தம் உச்யதே மயா சக்திதம் தேவி கலௌ ப்ராஹ்மண ரூபிணா – (சிவன் பார்வதியிடம் கூறுவது) தேவி! சாஸ்த்ரத்திற்கு விரோதமாக உள்ள மாயாவாதமானது, மறைமுகமான பௌத்த வடிவில், கலி காலத்தில் என்னால் ஓர் அந்தண வடிவம் எடுத்து போதிக்கப்படும் – என்பதற்கு ஏற்ப, இந்த ஜகத்தை மட்டுமே நம்பியுள்ளவராக, அண்டி நிற்கின்ற ஸர்வேச்வரனுக்குத் திருமேனி இல்லையென்றும், அவனுக்கு இயல்பான குணங்கள் ஏதும் இல்லை என்றும், புருஷ ஸூக்தம் - பாதோச்ய விச்வா பூதாநி, த்ரிபாதஸ்யாம்ருதம் திவி – பரமபுருஷனுக்கு இவை அனைத்தும் கால் பாகம், மீதம் உள்ள முக்கால் பாகம் பரமபதம் - என்பதற்கு ஏற்ப கூறப்படும் விபூதிகள் இல்லை என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-18-17) - ஹ்ரீச்சதே லக்ஷ்மீம் ச பத்நியை – மஹாவிஷ்ணுவே! உனக்குப் பூமாதேவியும் மஹாலக்ஷ்மியும் பத்தினிகள் - என்பதற்கு ஏற்ப கூறப்படும் மஹாலக்ஷ்மியின் நாயகனாக உள்ள தன்மை இல்லை என்றும் இப்படியாகப் பல முரண்பட்ட அர்த்தங்கள் பலவற்றையும் வேதாந்த வாக்கியங்கள் மற்றும் வேதாந்த

ஸூத்ரங்களுக்குத் தாத்பர்யமாக உரைத்தபடி உள்ள சங்கரர் முதலான அத்வைதிகள் உரைக்கின்ற சொற்கள்.

வ்யாக்யானம் – (பெட்டைக் கெடுக்கும் பிரானல்லனே) ப்ராமக வாக்யங்களை நிவர்த்திப்பித்த உபகாரகரன்றோ. பெட்டு - ப்ராமக வாக்யம். பெட்டைக் கெடுக்கையாவது, "பங்காந்தரித குஞ்ஜேந சங்கரோத்யர்த்த பல்யதா" என்னும்படி அதிநீஹீநங்களாய், துஸ்தர்க்க ஜடிலங்களாய்க் கொண்டு அவர்கள் ப்ரபந்தீகரித்த துஷ் ப்ரபந்தங்களை. "யதீந்திர மத ஸூக்த்யர்த்த ஸ்வச்சந்த கதிரத்நவத்" என்று கொண்டாடப் படுமவையாய், "சிரந்தந ஸரஸ்வதீ சிகுரபந்த ஸைரந்த்ரிகா" என்று வேதாந்தங்களினுடைய சிடுக்கை அவிழ்க்கக் கடவனாயிருக்கிற ஸத் தர்க்க ஜடிலங்களான ஸ்ரீபாஷ்யாதி ஸத் ப்ரபந்தங்களாலே நிரஸித்தாரென்றபடி. இது ஒருவர் அர்த்திக்கச் செய்ததல்லாமையாலே இவர் செய்ததெல்லாம் நிர்ஹேதுகமாக விருப்பதென்றன்றோவென்று ஸமாஹிதரானாராய்த்து.

விளக்கம் – (பெட்டைக் கெடுக்கும் பிரானல்லனே) - அப்படிப்பட்ட மயக்க வைக்கும் வாக்கியங்களை விலக்கி பெரும் உபகாரம் செய்தவர். "பெட்டைக் கெடுக்கை" என்றால், பங்காந்தரித குஞ்ஜேந சங்கரோத்யர்த்த பல்யதா - என்பதற்கு ஏற்ப மிகவும் தாழ்ந்தவையாக, தாழ்ந்த தர்க்க வாதங்களாக இருப்பதான அவர்கள் செய்த தீய க்ரந்தங்கள் பலவற்றையும். யதீந்திர மத ஸூக்த்யர்த்த ஸ்வச்சந்த கதிரத்நவத் - என்று கொண்டாடப்படுபவையும், யதிராஜ ஸப்ததி (36) - இதம் ப்ரதம ஸம்பவத் குமதி ஜால கூலங்கஷா: ம்ருஷா மத விஷாநல ஜ்வலித ஜீவ ஜீவாதவ: க்ஷரந்தி அம்ருதம் அக்ஷரம் யதி புரந்தரஸ்ய உக்தய: சிரந்தந ஸரஸ்வதீ சிகுர பந்த ஸைரந்த்ரிகா: - இந்தக் கலிகாலத்தில் புதிதுபுதிதாகப் பல மதங்கள் தலை எடுத்து, விபரீதமான புத்தி கொண்டவையாக உள்ளன. அந்தக் கூட்டங்கள் அனைத்தையும் வேருடன் அறுக்க வல்லது; பொய் என்பதை மட்டுமே தங்கள் குறிக்கோளாகக் கொண்டு, அந்தத் தீ மூலம் ஜீவன்களை விஷம் போல் அழிக்கும் மதங்களில் இருந்து ஜீவன்களைக் காப்பாற்றுவது; வேதம் என்ற அரசியின், உபநிஷத் என்ற கூந்தலை அழகாகச் சீவி அலங்கரிக்கும் பணிப்பெண்கள் போன்றது – இவை எது என்றால் யதிராஜரின் நூல்களே ஆகும். அவை அழிவற்ற மோக்ஷத்தை நம் மீது பொழிகின்றன - என்பதற்கு ஏற்ப வேதாந்தங்களின் ஆழ்பொருளில் உள்ள முடிச்சுக்களை அவிழ்க்க ஏற்பதாக உள்ளவையும், சரியான வாதங்கள் நிறைந்ததும் ஆகிய ஸ்ரீபாஷ்யம் முதலான ஸத் க்ரந்தங்களைக் கொண்டு

தள்ளினார். இத்தகைய செயல்களை, “நீங்கள் தயவு செய்து இவற்றைச் செய்யவேண்டும்” என்று வேண்டி நின்றால் மட்டுமே ஒருவர் செய்வார்; ஆனால் இது போன்று விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இன்றி இவர் செய்தது என்பது, எந்தக் காரணமும் பற்றி நின்று அல்ல என்று உணர்ந்து சமாதானம் ஆனார்.

94. தவம் தரும் செல்வம் தகவும் தரும் சலியாப் பிறவிப்
பவம் தரும் தீவினை பாற்றித் தரும் பரந்தாமம் என்னும்
திவம் தரும் தீதில் இராமாநுசன் தன்னைச் சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன் அவன் சீரன்றி யானென்றும் உள்மகிழ்ந்தே

விளக்கவுரை - தன்னை அண்டியவர்களின் குற்றம் என்ன, அவர்களிடம் உள்ள குணம் என்ன என்று ஆராயாமல் உள்ள தன்மை கொண்டதால், எந்தத் தோஷமும் இல்லாதவராகவே எம்பெருமானார் உள்ளார். தன்னை அண்டியவர்களுக்குச் சரணாகதி என்ற தவத்தை அருளுகிறார். அதன் பின்னர் அவர்களுக்கு “பகவானுக்குத் தொண்டு புரியும் கைங்கர்யம்” என்ற செல்வம் கிட்டும்படிச் செய்கிறார். இந்தக் கைங்கர்யம் என்ற செல்வம் கிட்டும் தகுதியையும் ஏற்படுத்துகிறார். பலப்பல பிறவிகள் எடுத்துக் கழிக்க முயற்சித்தாலும், எத்தனை ப்ராயச்சித்தம் செய்தாலும் தீராமல் உள்ளதும், ஸம்ஸார துயரத்தை மேன்மேலும் கொழுந்துவிட்டு எரியும்படிச் செய்வதும் ஆகிய தீயவினைகள் அனைத்தையும் தூளாகும்படிச் செய்துவிடுகிறார். பாற்றுதல் என்றால் பொடியாக்குதல்; ஆக, காற்றில் பறக்கும் துகள்களாக இந்த வினைகளைச் செய்து விடுகிறார். பரந்தாமம் என்றும், ஸ்ரீவைகுண்டம் என்றும் கூறப்படுவதைக் கிட்டச்செய்கிறார். இவ்விதம் பலவற்றையும் அவர் அளிக்கவல்லவராக உள்ளபோதிலும் நான் அவருடைய குணங்கள் தவிர வேறு எதனையும் எனது மனதாரப் பருக மாட்டேன். அவர் அளிக்கத் தயாராக உள்ள கைங்கர்யம், பரமபதம் போன்றவற்றை விட எம்பெருமானாரின் குணங்கள் இவருக்கு (திருவரங்கத்தமுதனாருக்கு) உயர்வாக இருந்தது காண்க.

அவதாரிகை - தம்மை நிர்ஹேதுகமாக அங்கீகரித்து, அநாதியான பாபங்கள் மறுவலிடாதபடி தம்முடைய க்ருபையாகிற கட்கத்தாலே சேதித்து, அத்தாலே ப்ரபந்ந ஜந கூடஸ்தரான எம்பெருமானார் லோகத்திலே அபஸித்தாந்தங்களை வேதார்த்தங்களாக ப்ரமிப்பிக்கும் குத்ருஷ்டிகளை நிரஸித்த வுபாகாரகரென்று கொண்டாடினார் கீழ்ப்

பாட்டில். இப்பாட்டில், அந்த எம்பெருமானார், தம்மை ஆச்ரயித்தவர்களுக்கு ஸர்வோத்தாரக ஹேதுவான ப்ரபத்தி உபாயத்தையும், தத் உத்தர கால க்ருத்யமான கைங்கர்ய ரூப ஸம்பத்தையும், சரீராநுரூப ஸம்பந்தத்தை யறுத்து பொகட்டு பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷத்தையும் அடைவே கொடுத்தருளுவரேயாகிலும், அடியேன் அவருடைய கல்யாண குணங்களையொழிய வேறொன்றை ஆதரித்து புஜியேனென்று ஸ்வாத்யவஸாயத்தை யருளிச்செய்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், அமுதனாராகிய தன்னை எந்தவிதமான காரணமும் இன்றி ஏற்றுக்கொண்டு, எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள பல பாபங்கள் மேலும் தொடராதபடி எம்பெருமானார் தனது க்ருபை என்னும் வாளால் வெட்டினார்; இதன் மூலமாக இந்த உலகில் உள்ள அனைத்து ப்ரபந்நர்களும் ஒன்றாகச் சேர்ந்து நின்று கொண்டாடும்படியாக உள்ள எம்பெருமானார், இந்த லோகத்தில் தாழ்வான ஸித்தாந்தங்களையே வேதங்களுடைய ஆழ்பொருள் என்று மயக்கியபடி உள்ள மற்ற மதங்களை விலக்கி உபகாரம் செய்தார் என்று கொண்டாடினார். இந்தப் பாசுரத்தில், "அப்படிப்பட்ட எம்பெருமானார் தன்னை அண்டி நிற்பவர்களுக்கு அனைத்துவிதமான உயர்த்திகளுக்கும் காரணமாக உள்ள ப்ரபத்தி என்ற உபாயத்தையும், ப்ரபத்திக்குப் பின்னர் உள்ள காலங்களில் செய்தபடி இருக்கவேண்டியதான கைங்கர்ய ரூபமாக உள்ள ஸம்பத்தை அளித்து, சரீரம் வருகின்ற தாழ்ந்த ஸம்பத்துக்களை விலக்கி, பரம புருஷார்த்தமாக உள்ள மோக்ஷத்தை அளித்தபடி உள்ளார் எனறாலும், அவருடைய திருக்கல்யாண குணங்கள் அல்லாமல் வேறு எதனையும் நான் ஏற்று நிற்கமாட்டேன்", என்று தனது உறுதியை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் – (தீதிலிராமாநுசனை) ஆச்ரயேணோந்முகராய் வந்த சேதநரைக் கடாக்ஷித்து, "ப்ரசாந்த சித்தாயசமாந்விதாய" இத்யாதி சாஸ்த்ர மர்யாதையை யுட்கொண்டு, இவர்களுக்கு ஆச்ரயண விரோதிகளான பாபங்கள் நசித்துப் போந்ததுமில்லை, ததுபயோகிகளான கரணங்கள் உதித்ததுமில்லை என்று தோஷ குண ஹாநிகளைக் கணிசித்து அங்கீகரியாதே யிருந்தாரென்கிற குற்றமில்லாத எம்பெருமானார். "பரீக்ஷ்ய விவிதோபாயை" என்னும் விசேஷ வாக்யமிருக்க, இது குற்றமாய்த் தலைக்கட்டுமோவெனில், "இரண்டும் குலைய வேணுமென்றிருக்கில் இரண்டுக்கும் இரண்டுமுண்டாய்த்தாம்" என்று ஸ்ரீவசநபூஷணத்திலே சொல்லுகையாலே,

தோஷ குண ஹாநிகளைக் கணிசிக்கிறது ப்ரபத்தவ்யனுக்குக் குற்றமாய்த் தலைக்கட்டுமிறே. "த்யஜ்யதேயதி தோஷேண குணேந பரிக்ருஹ்யதே ஏதத் ஸாதாரண: பந்தா: ஆச்ரிதஸ்ய குத: பலம்" என்னக் கடவதிறே. தீதாவது, தம்மை ஆச்ரயித்தவர்களை, அநிஷ்ட நிவ்ருத்தி இஷ்ட ப்ராப்திக ளிரண்டினுடையவும் அலாபத்தாலே துக்கப்பட விட்டிருக்கையாகிற குற்றம்; அதில்லாதவரை யென்றபடி.

விளக்கம் - (தீதில் இராமாநுசனை) - தன்னை அண்டி நிற்பதற்காக வந்து நிற்கும் சேதநர்களை நோக்கி, முண்டக உபநிஷத் (1-2-12) – தஸ்மை ஸ வித்வாநுபஸந்தாய ஸம்யக் ப்ரசாந்த சித்தாய சமாந்விதாய யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்வதோ ப்ரஹ்மவித்யாம் - அருகில் வந்து, தூய்மையான மனம் கொண்டவனாக, அகம் மற்றும் புறம் ஆகிய அனைத்து உறுப்புகளையும் அடக்கியவனாக நிற்கின்ற சிஷ்யனுக்கு, எந்த ஒன்றின் மூலம் ஸத்யமாகவும் அழிவற்றதாகவும் உள்ள ப்ரஹ்மத்தை ஆசார்யன் அறிந்தானோ, அந்த ப்ரஹ்மவித்யையை உள்ளது உள்ளபடி உபதேசிக்கக் கடவன் - என்பதான சாஸ்த்ரங்களில் உள்ளவற்றை நோக்கியவராக, "இவர்கள் பகவானை அண்டுவதற்குத் தடையாக உள்ள இவர்களுடைய பாபங்கள் அகலாமல் உள்ளன. இதற்குத் துணையாக நிற்கவல்ல கரணங்கள் ஞானத்தைப் பெறவும் இல்லை", என்று அவர்களுடைய குற்றங்களையும் குணங்களையும் நோக்கி, அவற்றில் உள்ள தாழ்வுகளைக் கண்டு, அவர்களை ஏற்காமல் இருந்தார் என்ற குற்றம் இல்லாத எம்பெருமானார். ஆனால், ஸம்வத்ஸரம் ததர்த்தம் வா மாஸத்ரயமதாபி வா பரீக்ஷ்ய விவிதோபாயை: க்ருபயா நி:ஸ்ப்ருஹோ வதேத் - ஒரு வருடமோ அல்லது அதில் பாதியோ அல்லது மூன்று மாதமோ, பலவிதமான உபாயங்களால், சிஷ்யனைப் பரீட்சை செய்து, எந்தவிதமான கைம்மாறையும் நோக்காமல் க்ருபையாலே மட்டுமே அவனுக்கு உபதேசிக்கவேண்டும் - என்பதான வாக்கியம் தெளிவாக உள்ளபோது, இவரது இந்தச் செயலானது, சாஸ்த்ரங்களை மறுக்கிறார் என்ற குற்றத்தை எம்பெருமானாருக்கு ஏற்படுத்தாதோ என்று கேட்கலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார். ஸ்ரீவசனபூஷணம் (16) – இரண்டும் குலையவேணுமென்றிருக்கில் இரண்டுக்கும் இரண்டுமுண்டாய்த்ததாம் - என்று கூறுவதற்கு ஏற்ப, குற்றங்களையும் குணங்களையும் தாழ்வு உள்ளனவா என்று ஆராய்தல் என்னும் செயலானது, சரணம் அடையத்தக்கவனுக்கு குற்றமாகிவிடும் என்று கூறுவது காண்க. த்யஜ்யதேயதி தோஷேண குணேந பரிக்ருஹ்யதே ஏதத் ஸாதாரண: பந்தா: ஆச்ரிதஸ்ய குத: பலம் - என்றதும் காணலாம். "தீது" என்றால், தன்னை அண்டி நிற்பவர்களை, அவர்களுடைய விருப்பம் இன்மையை விலக்குதல் மற்றும்

விருப்பமானவற்றை அளித்தல் ஆகியவற்றைச் செய்யாமல், துக்கம் அடையும்படியாக விடுதல் என்ற குற்றம் ஆகும். அப்படிப்பட்ட குற்றம் இல்லாத எம்பெருமானார்.

வ்யாக்யானம் – (தன்னைச் சார்ந்தவர்கட்கு) இப்படிப்பட்ட வைபவைத்தையுடையரான தம்மை, உபாயோபேய பாவேந அத்யவஸித்து ஆச்ரயித்தவர்களுக்கு. முந்துற முன்னம் (தவம் தரும்) "ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தம் ஆஹு:" என்கிறபடியே ஸர்வோபாய விலஷணமாய், ஸ்வரூபாநுரூபமாய், த்வயத்திலே பூர்வ வாக்ய ப்ரதிபாதிதமான கைங்கர்யத்துக்கு, போஜநத்துக்கு க்ஷுத்துப்போலே பூர்வபாவியா யிருந்துள்ள ருசி ரூப பக்தியாகிற ஸம்பத்தை ப்ராப்யாநுரூபமாகக் கொடுத்தருளுவர். தகவு – தகுதி. அன்றிக்கே (செல்வும் தரும்) "ஸது நாகவரச் ஸ்ரீமாந்", "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" என்னும்படியான கைங்கர்ய ஸம்பத்தையும் கொடுத்தருளுவர்.

விளக்கம் - (தன்னைச் சார்ந்தவர்கட்கு) - இப்படிப்பட்ட வைபவம் நிறைந்தவராக உள்ள தன்னை, உபாயம் மற்றும் உபேயம் என்று உறுதியாக நம்பி அண்டி நிற்பவர்களுக்கு. (தவம் தரும்) - தைத்திரீயம் – தஸ்மாத் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தம் ஆஹு: - தவங்களில் சிறந்ததாக ப்ரபத்தியே கூறப்படுகிறது - என்பதற்கு ஏற்ப அனைத்து உபாயங்களைக் காட்டிலும் மேன்மையானதாலும், ஆத்ம ஸ்வரூபத்திற்கு ஏற்றதாகவும், உணவு உண்பதற்குத் தேவையாக பசி உள்ளது போன்று த்வய மந்திரத்தில் உள்ள முதல் வாக்கியத்தின் மூலம் வெளிப்படுவதான கைங்கர்யத்திற்கு அவசியமானதாக உள்ள ருசி ரூபமாக உள்ள பக்தி என்ற ஸம்பத்தை அடையத்தக்க இலக்குக்கு ஏற்றபடி அளிப்பவர். அல்லது (செல்வும் தரும்) - ஸ து நாகவர: ஸ்ரீமாந் – கஜேந்த்ரன் மிகுந்த செல்வம் கொண்டவனாக இருந்தான் – என்றும், லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந: - லக்ஷ்மணன் கைங்கர்யச்செல்வம் கொண்டவனாக இருந்தான் - என்றும் கூறுவதற்கு ஏற்றபடியாக உள்ள கைங்கர்ய செல்வத்தை அளிப்பவர்.

வ்யாக்யானம் – (தகவும் தரும்) அந்த கைங்கர்யத்தைப் பெறுவதெப்போதோ வென்கிற ப்ராப்ய த்வரையையும் கொடுத்தருளுவர். அங்ஙனுமன்றிக்கே, (செல்வும் தகவும் தரும்) உத்தர வாக்யத்தில் சொல்லுகிற கைங்கர்யம் சரம பர்வ பர்யந்தமாயிருப்பதாகையாலும்,

அது பரம தர்மமாகையாலும், பரம தர்மமான சரம பர்வ பர்யந்தமா யிருந்துள்ள கைங்கர்ய லக்ஷ்மியைக் கொடுத்தருளுவரென்றுமாம். இந்த யோஜநையிலே, தகவாவது தர்மம்.

விளக்கம் - **(தகவும் தரும்)** - "அப்படிப்பட்ட கைங்கர்யச் செல்வத்தை நான் எப்போது பெறுவேனோ?" என்று தவிக்கும்படியான வேகத்தையும் அளிப்பார். இவ்விதம் பொருள் கொள்ளாமல், வேறுவிதமாகவும் உரைக்கலாம். த்வய மந்திரத்தில் கூறப்பட்ட கைங்கர்யம் என்பது இறுதி நிலை முடிய உள்ளதாலும், அதுவே மிகவும் உயர்ந்த தர்மம் என்பதாலும், மிகவும் உயர்ந்த தர்மமும் உறுதிவரை உள்ளதும் ஆகிய கைங்கர்ய லக்ஷ்மியை அளிப்பார் என்றும் கூறலாம். இந்தப் பொருளில் "தகவு" என்ற சொல்லிற்கு, "தர்மம்" என்று பொருள் கொள்ளவேண்டும்.

வ்யாக்யானம் – (சரியாப் பிறவிபவந் தரும் தீவினை பாற்றித் தரும்) அநந்தரம், "**சார்ந்த இரு வல்வினைகளையும் சரித்து**" என்கிறபடியே ஒரு ஸர்வ சக்தி கழிக்கிலொழிய, அநுபவத்தாலும் ப்ராயச்சித்தத்தாலும் சரியாததாய், பல யோநிகள்தோறும் பலபடியாலும் பிறக்கையாகிற ஸம்சாரத்தை மேன்மேலும் கொழுந்துவிடும்படி பண்ணக்கடவனவான க்ரூர கர்மங்களை. "**பண்டை வல்வினை பாற்றியருளினான்**" என்கிறபடியே க்ஷுத்ர தூளியாகும்படி பண்ணிக் கொடுப்பர். காற்றடித்தவாறே தூள் பறக்குமாப்போலே பறந்து போகும்படி பண்ணிக் கொடுப்பார் என்றபடி. **பவம்** - ஸம்ஸாரம் என்றபடி. **பாறு** – பொடி. பாற்றுகை – பொடியாக்குகை. "ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்றானிறே கீதாசார்யனும்.

விளக்கம் - (சரியாப் பிறவிபவந் தரும் தீவினை பாற்றித் தரும்) - அதனைத் தொடர்ந்து, திருவாய்மொழி (1-5-10) - **சார்ந்த இரு வல்வினைகளையும் சரித்து** - என்பதற்கு ஏற்ப உயர்ந்த ஒரு சக்தியானது விலக்கினால் அல்லாமல், எத்தனை அனுபவித்தாலும் எத்தனை ப்ராயச்சித்தங்கள் செய்தாலும் தீராமல் உள்ளதாகவும், பல பிறப்புகளிலும் பலவிதமாகப் பிறத்தல் என்பதான ஸம்ஸாரத்தை மேன்மேலும் கொழுந்துவிட்டு ஓங்கும்படிச் செய்வதான தீய கர்மங்களை, **பண்டை வல்வினை பாற்றியருளினான்** - என்பதற்கு ஏற்ப, தாழ்ந்த துகள்கள் போன்று செய்வார். அதாவது காற்று வீசும்போது சிறு தூசிகள் பறந்து செல்வது போன்று, இவையும் பறந்து போகும்படியாகச் செய்வார். கீதை (18-66) –

ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி – அனைத்து பாபங்களிலிருந்தும் மோக்ஷம் அளிப்பேன் – என்று கீதாசார்யனும் கூறினான் அல்லவோ?

வ்யாக்யானம் – (பரந்தாமமென்னுந் திவந் தரும்) அநந்தரம், "பரந்தாம அக்ஷர பரப்ரஹ்ம வ்யோமாதி சப்திதே" என்று கத்ய த்ரயத்தில் அருளிச்செய்தபடி, **பரந்தாமமென்று** சொல்லப்படுகிற, **திவம் –** பரமாகாசம். ஸ்ரீவைகுண்டமென்றபடி. அத்தைக் கொடுத்தருளுவர். இப்படி **ப்ரபத்தி நிஷ்டை தொடங்கி, பரமபதத்தளவுங் கொடுத்தருளுவரே** யாகிலும். "**அவன் சீரன்றி யான்**" என்று கீழ்ச் சொன்னபடியே, ஸர்வப்ரகாரத்தாலும் உத்தாரகரான எம்பெருமானாருடைய கல்யாண குணங்களையொழிய நான் மற்றொரு விஷயத்தை, (**உள் மகிழ்ந்து உவந்தருந்தேன்**) மநஸ் ஸந்தோஷத்துடனே ஆதரித்தநுபவிக்கக் கடவேனல்லேன். **அருந்துதல்** – உண்டல். "சுழி பட்டோடும் சுடர்ச்சோதி வெள்ளம்" என்னும்படியான பரமபதத்தையும் கூட, ஐச்வர்ய கைவல்யங்களைப் போலே காற்கடை கொள்ளவேண்டும்படி அமுதனார்க்கு இருந்தது காணும், **எம்பெருமானாருடைய "பாலே போல் சீர்**" என்னும்படியான கல்யாண குணங்களினுடைய போக்யதை. இத்தால், ப்ரீதமநஸ்கராய் அவருடைய கல்யாண குணங்களையே விரும்பி புஜிப்பேனென்கிறார். "**மகிழ்ந்து**" என்று ப்ரீதி வாசக சப்தமுண்டாகையாலே, "**உவந்து**" என்கிறவிது விருப்பமாய் ஆதரவாசியாகிறது. "**சலியாப் பிறவி" என்று பாடமானபோது, சலிக்கையாவது** நிலை பெயர்க்கையாய், நிலை பேர்க்கவரிதாய், ஸம்ஸார ஹேதுவான துஷ்கர்மங்களென்றபடி. "**நித்யம் யதீந்திர" இத்யாதி** ச்லோகத்திலே ஜீயரும் அத்தையே ப்ரார்த்தித்தருளினாரிறே.

விளக்கம் - (பரந்தாமமென்னுந் திவந் தரும்) - அதனைத் தொடர்ந்து, "பரந்தாம அக்ஷர பரப்ரஹ்ம வ்யோமாதி சப்திதே" என்று கத்ய த்ரயத்தில் அருளிச்செய்தபடி "பரம் தாமம்" என்று கூறப்படுகின்ற ஸ்ரீவைகுண்டத்தை அளிப்பார். இவ்விதமாக எம்பெருமானார், ப்ரபத்தி தொடக்கமாக பரமபதம் முடிய உள்ள அனைத்தையும் அளிப்பார்; ஆனாலும், "**அவன் சீரன்றி யான்**" என்று கீழே உரைத்ததற்கு ஏற்ப, அனைத்துவிதங்களிலும் உயர்த்தி விடுபவராகிய எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்கள் அல்லாமல் வேறு எந்த ஒரு விஷயத்தையும் நான், (**உள் மகிழ்ந்து உவந்தருந்தேன்**) - மனமகிழ்வுடன் ஏற்றுக் கொண்டு அனுபவிக்கமாட்டேன். திருவாய்மொழி (8-10-5) – சுழி பட்டோடும் சுடர்ச்சோதி

வெள்ளம் – என்பதற்கு ஏற்ப ஐச்வர்யம் மற்றும் கைவல்யம் ஆகியவற்றைப்போல், பரமபதத்தையும் தள்ளவேண்டிய ஒன்றாகவே அமுதனாருக்குத் தோன்றியது; இதன் காரணம், பெரிய திருவந்தாதி (58) – பாலே போல் சீர் – என்பது போன்று எம்பெருமானாருடைய திருக்கல்யாண குணங்களின் இனிமை இருந்தது. "இப்படியாகவே எம்பெருமானாருடைய திருக்கல்யாணங்கள் அல்லாமல் வேறு எந்த ஒரு விஷயத்தையும் நான், ஏற்றுக்கொண்டு அனுபவிக்கமாட்டேன்", என்கிறார். "மகிழ்ந்து" என்ற சொல் மூலம் ப்ரீதி என்பது கூறப்பட்டது என்பதால், "உவந்து" என்னும் சொல்லானது விருப்பம் என்ற பொருளில் நின்றது. "சரியாப் பிறவி" என்பதை "சலியாப்பிறவி" என்று கொண்டால், நிலையுடன் பெயர்த்து எடுப்பதற்கு மிகவும் கடினமாக உள்ளதும், ஸம்ஸாரத்திற்குக் காரணமாக உள்ளதும் ஆகிய தீய கர்மங்கள் என்று பொருள். யதிராஜ விம்சதி (4) - நித்யம் யதீந்த்ர தவ திவ்ய வபு: ஸம்ருதௌ மே ஸக்தம் மநோ பவது வாக்குண கீர்த்தநேஸௌ க்ருத்யம் ச தாஸ்ய கரணம் து கரத்வயஸ்ய வ்ருத்த்யந்தரேஸ்து விமுகம் கரணத்ரயம் ச - யதிகளின் தலைவனே! உன்னுடைய எழிலான திருமேனியை எப்போதும் த்யானித்து இருக்கிம்படி நீ எனது மனதிற்கு அருள வேண்டும். உனது திருக்கல்யாண குணங்களைப் பற்றி மட்டுமே எனது நாக்கு பேசியபடி இருத்தல் வேண்டும். உனக்கு அடிமையாகத் தொண்டு புரிவதற்கு மட்டுமே எனது இரண்டு கைகளும் பயன்பட வேண்டும். மற்ற உலக நாட்டங்களில் இருந்து எனது மூன்று கரணங்களும் (வாக்கு, மனம், செயல்) முற்றிலுமாக விடுபட வேண்டும் - என்ற ச்லோகத்தில் இதனையே ஸ்வாமி மணவாளமாமுனிகளும் விண்ணப்பித்தார் அல்லவோ?

95. உண்ணின்று உயிர்களுக்கு உற்றனவே செய்து அவர்க்கு உயவே
பண்ணும் பரனும் பரிவிலனாம்படி பல்லுயிர்க்கும்
விண்ணின் தலைநின்று வீடளிப்பான் எம் இராமாநுசன்
மண்ணின் தலத்து உதித்து உய்மறை நாலும் வளர்த்தனனே

விளக்கவுரை - அஜ்ஞனத்தால் மூடப்பட்டதால் ஞானசூன்யமாக உள்ள மனிதர்களுக்கு, உயர்ந்த ஞானத்தை உபதேசிக்க நேரடியாக ஸர்வேச்வரனே வந்து நின்றாலும், "உன்னை விட நாங்கள் உயர்ந்தவர்கள்", என்று தள்ளி விடுவார்களோ என அஞ்சி, அனைவருக்கும் அந்தர்யாமியாகவே ஸர்வேச்வரன் நிற்கிறான். இந்த மக்கள் அவரவர்கள் வாழும்படியான உபாயங்களை அளிக்கிறான். இவ்விதமாக இவர்கள் பிழைக்கும்படிச் செய்யும்

ஸர்வேச்வரன் தனது மனதில், "நாம் எத்தனை செய்தாலும் எம்பெருமானார் இந்த மக்களிடம் கொண்ட அன்பிற்கு ஈடாகாது", என்று நினைத்தபடி உள்ளான். அவனை விட இவர் சுலபமாக அடையக்கூடியவராக, குணம் குற்றம் முதலானவற்றை ஆராயாமல் உள்ளவராக இருப்பதால் உயர்ந்தவர் என்று கருத்து. ஆகவே ஸர்வேச்வரன் செய்தது என்ன? அனைத்து உயிர்களுக்கும் பரமபதம் அளிக்கும் எண்ணத்துடன், ஸ்ரீவைகுண்டத்தில் இருந்து எங்களுக்கு ஸ்வாமியாக உள்ள எம்பெருமானார் இந்தப் பூமியில் அவதரித்தார். இவ்விதம் அவதாரம் செய்து ஸ்ரீபாஷ்யம் போன்ற உயர்ந்த க்ரந்தங்கள் மூலமாக நான்கு வேதங்களும் பூமியில் பரவும்படிச் செய்தார்.

அவதாரிகை - எம்பெருமானார் தம்மை ஆச்ரயித்தவர்களுக்கு உத்தாரண ஹேதுவான உபாய விசேஷத்தையும், அத்தாலே உண்டாகக் கடவ பகவத் ப்ரீதி ரூப ஸம்பத்தையும், ப்ராப்தி ப்ரதிபந்தகமான பாப விமோசனத்தையும், ததநந்தரபாவியான பரமபத ப்ராப்தியையும் பண்ணிக் கொடுப்பாரேயாகிலும், நான் அவருடைய கல்யாண குணங்களையொழிய வேறொன்றை விரும்பி அநுபவியேனென் றருளிச்செய்தார் கீழ்ப் பாட்டிலே. இப்பாட்டிலே, ஸகல ஆத்மாக்களுக்கும் அந்தர்யாமியாய், அவர்களுடைய ஸகல ப்ரவர்த்தி நிவ்ருத்திகளையும் பண்ணிக் கொடுக்கிற **ஸர்வேச்வரனும், இவரைப் போலே ஆச்ரித வ்யாமுக்தனல்ல னென்னும்படியாயும்**, ஜ்ஞாந வைராக்யாதிகளாலே ஸம்ஸாரிகளைக் காட்டில் அத்யந்த வ்யாவ்ருத்த ரென்னும்படியாயும் இவர்தா னிருக்கையாலே, **பரமபதத்தினின்றும் அந்த பரம ப்ராப்யத்தை எல்லார்க்குங் கொடுப்பதாக அஸ்பருஷ்ட ஸம்ஸாரகந்தரிலே ஒருவர் பரார்த்தமாக இந்த லோகத்திலே எம்பெருமானாராய் அவதரித்து, ஸர்வ காலமும் வேதார்த்தத்தை ப்ரவர்த்திப்பித்தாரென் றருளிச்செய்கிறார்.**

விளக்கம் – கடந்த பாசுரத்தில், "எம்பெருமானார் தன்னை அண்டி நிற்பவர்களுக்கு, அவர்கள் கரையேறக் காரணமாக உள்ளதான சரணாகதி குறித்தும், அதன் மூலம் ஏற்படக் கூடியதான பகவத் ப்ரீதி என்னும் வடிவத்தில் உள்ள செல்வத்தையும், அடையக்கூடிய இலக்கைத் தடுக்கவல்லதான பாபங்களிலிருந்து விடுதலையையும், அதனை அடுத்து கிட்டவல்லதான பரமபதத்தையும் அளிப்பார். ஆனாலும் நான் அவருடைய திருக்கல்யாண குணங்கள் அல்லாமல் வேறு எதனையும் விரும்பி அனுபவிக்கமாட்டேன்",

என்றார். இந்தப் பாசுரத்தில், "அனைத்து ஆத்மாக்களின் அந்தர்யாமியாக உள்ள ஸர்வேச்வரன் ஜீவாத்மாக்களுடைய விருப்பங்களை நிறைவேற்றுதல், விருப்பம் அல்லாதவற்றை விலக்குதல் போன்றவற்றைச் செய்தபடி உள்ளான். ஆனால் அவன் எம்பெருமானாரைப் போன்று தனது அடியார்களிடம் மயங்கி நிற்பவன் அல்லன் என்னும் நிலையும், ஞானம் மற்றும் வைராக்யம் ஆகியவை காரணமாக இவர் ஸம்ஸாரிகளைக் காட்டிலும் முற்றிலுமாக வேறுபட்டவராக உள்ளார் என்னும் நிலையும் உள்ளது. இதன் காரணமாக, பரமபதத்திலிருந்து, அந்தப் பரமபதத்தை அனைவருக்கும் அளிக்கும் பொருட்டு இந்த லோகத்தில் எம்பெருமானார் அவதரித்தார். இப்படியாக அவதரித்து, எப்போதும் வேதங்களுடைய ஆழ்பொருளை வெளிப்படுத்தியபடி உள்ளார்", என்கிறார்.

வ்யாக்யானம் – (உள் நின்று) "அந்த: ப்ரவிஷ்டச் சாஸ்த்தா ஜநாநாம் ஸர்வாத்மா" என்றும், "அந்த: ப்ரவிஷ்டம் கர்த்தாரமேதம்" என்றும், "அந்தர்ப்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்திதத:" என்றும், "ய ஆத்மநி திஷ்டந் ய ஆத்மாநமந்தரோ யமயதி" என்றும், "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:" என்றும், "உடல் மிசை உயிர் எனக் கரந்து எங்கும் பரந்து உளன்" என்றும், "பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்து உளன்" என்றும் சொல்லுகிறபடியே **அந்தர்யாமியாய் ஸத்தா நிர்வாஹனாய் கொண்டிருந்து**, "அநாதி மாயயா ஸுப்தோயதா" என்கிறபடியே அநாதி அசித் ஸம்பந்த நிபந்தநமான அஞ்ஞாநாந்தகாரத்திலே தத்வ ஹித புருஷார்த்த ஜ்ஞாந சூந்யரான சேதநருக்கு அத்தை அறிவிக்கைக்காக அருகே வந்து கண் காண நிற்கில், "ஜ்ஞாநைகாகாரத்தாலே உன்னோடு நானும் துல்யன்" என்று ஆணையிட்டுத் தள்ளிவிடுவர்களென்று, **அதிசங்கை பண்ணி**, **இராமடமூட்டுவாரைப் போலே** அவர்களுக்குத் தெரியாதபடி ஸத்தையை நோக்குவதாக **உள்ளே புகுந்து நின்றென்றபடி**.

விளக்கம் – (உள் நின்று) - தைத்திரீய ஆரண்யகம் (3-11-21) – அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா … அந்த: ப்ரவிஷ்டம் கர்த்தாரமேதம் – அனைத்திற்கும் உள்ளே நுழைந்து அவற்றை நியமிப்பதால், அவனே ஸர்வாத்மாவாக உள்ளான் … உள்ளே புகுந்து அவர்கள் செய்யும் செயலைச் செய்ய வைப்பவனாக – என்றும், அந்தர்ப்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்தித: - உள்ளும் புறமும் உள்ள அனைத்திலும் நாராயணனே நிறைந்து நிற்கிறான் – என்றும், ப்ருஹத் உபநிஷத் (3-7-22) – ய ஆத்மநி

திஷ்டந் ஆத்மநோந்தரோ யமாத்மா ந வேத யஸ்யாத்மா சரீரம் ய ஆத்மநமந்தரோ யமயதி ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத: – யார் ஒருவன் ஆத்மாவின் வெளியிலும் உள்புறத்திலும் உள்ளானோ, யாரை ஆத்மா அறியாமல் உள்ளதோ, யாருக்கு ஆத்மா உடலாக உள்ளதோ, ஆத்மாவை யார் ஒருவன் நியமிக்கிறானோ அவன் அந்தர்யாமியாக அழிவற்று உள்ளான் – என்றும், கீதை (15-15) – ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட: – அனைத்து உயிர்களின் உள்ளே நான் ஆத்மாவாக உள்ளேன் – என்றும், திருவாய்மொழி (1-1-7) – உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் – என்றும், திருவாய்மொழி (1-1-10) – பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அந்தர்யாமியாக நின்று, இருப்பு என்பதை நியமிப்பவனாக இருந்தபடி, அநாதி மாயயா ஸுப்தோ யதா – எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள மாயையில் உறங்கியபடி உள்ள ஜீவன் - என்பதற்கு ஏற்ப எல்லையற்ற காலமாக அசித் வஸ்துவான சரீரத்துடன் ஸம்பந்தம் கொள்வதற்குக் காரணமாக உள்ள அஜ்ஞானம் என்ற இருளில் மூழ்கிக் கிடப்பதால், உண்மையானதும் நன்மையானதும் ஆகிய புருஷார்த்தம் குறித்த ஞானம் இல்லாதபடி உள்ள சேதநர்களுக்கு அந்த ஞானத்தை ஏற்படுத்துவதற்காக, அவர்கள் அருகில் வந்து, அவர்கள் தங்களுடைய கண்களால் காண இயலும்படி நிற்க எண்ணினான். ஆனால் அவர்கள், "நாங்களும் நீயும் ஞானஸ்வரூபம் என்பதால், நாம் இருவரும் சமமே ஆவோம்", என்ற கூறித் தன்னைத் தள்ளிவிடுவார்களோ என்ற சந்தேகம் கொண்டான். ஆகவே சத்திரத்தில் தங்கியுள்ள தனது மகனுக்கு யாரும் அறியாமல் உணவு அளிக்கும் தாய் போன்று, அவர்கள் அறியாமலேயே, அவர்களுக்கு இருப்பு என்பது நிலைத்து நிற்கவேண்டும் என்பதற்காக அவர்கள் உள்ளே புகுந்து.

வ்யாக்யானம் – (உயிர்கட்குற்றனவே செய்து) ஸ்வேதர ஸமஸ்த ப்ராணிகளுக்கும், "அவரவர் விதி வழியடைய நின்றனரே" என்கிறபடியே, தத் தத் பூர்வ கர்மாநுகுணமாக ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைப் பண்ணிக் கொடுத்து. அன்றிக்கே, ஸ்வரூபமானவற்றை க்ரம க்ரமேண விரகாலே ஏறிட்டு ததநுரூபமாயிருந்துள்ள ப்ரவ்ருத்திகளிலே மூட்டுவித்தென்னுதல்; இவ்வாத்மாக்கள் யாதொரு வழியாலே உஜ்ஜீவிப்பார்களோ அதற்கு ஈடான க்ருஷிகளைப் பண்ணி என்னுதல். "**உற்றனவே செய்து**" என்றது, "தக்கனவே செய்து" என்றபடி. "பவந்தி பாவா பூதாநாம் மத்த ஏவ ப்ருதக் விதா:" என்றானிறே.

விளக்கம் – (உயிர்கட்கு உற்றனவே செய்து) - அனைத்துவிதமான உயிர்களுக்கும், திருவாய்மொழி (1-1-5) – அவரவர் விதிவழி அடைய நின்றனர் – என்பதற்கு ஏற்ப, அவரவர்களுடைய கர்மங்களுக்கு ஏற்றபடி விருப்பமானதை உண்டாக்கியும், விருப்பம் அல்லாதவற்றை விலக்கியும். அல்லது அவர்களுடைய ஸ்வரூபத்திற்கு ஏற்றவற்றை வரிசையாகத் தகுந்த வழியில் நோக்கி, அதற்கு ஏற்றபடி விருப்பங்களை நிறைவேற்றி. அதாவது அந்த ஆத்மாக்கள் எந்த வழியால் கரையேறுவார்களோ அதற்கு ஈடான செயல்களைச் செய்து. "உற்றனவே செய்து" என்றால், "சரியானவற்றைத் தகுந்த விதத்தில் செய்து" என்று பொருள். கீதை (10-5) – பவந்தி பாவா பூதாநாம் மத்த ஏவ ப்ருதக் விதா: - உயிர்களுடைய தனித்தனியான இயல்புகள் என்னிடமிருந்தே தோன்றுகின்றன - என்று அவனே உரைத்தான்.

வ்யாக்யானம் – (அவர்க்கு உய்யவே பண்ணும் பரனும்) "த்ரிபாதூர்த்த்வ உதைத் புருஷ:" என்றும், "தமஸ: பரஸ்தாத்" என்றும் சொல்லுகிறபடியே, ஸர்வோத்தமான பரம புருஷார்த்தத்தை ப்ராபிக்கையாகிற உச்ச்ராயத்தைப் பண்ணா நின்றுள்ள ஸர்வேச்வரனும், "பதிம் விச்வச்ய" என்றும், "யஸ்மாத் பரந்நாபரமஸ்தி கிஞ்சித்" என்றும், "அத யதத: பர:" என்கிறபடியே ஸ்வாதீந த்ரிவித சேதநாசேதந ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி பேதகனாய், ஸர்வஸ்மாத் பரனான **ஸர்வேச்வரனும். (பரிவிலனாம்படி) சேதந ஸம்ரக்ஷணம் பண்ணுமளவில், இவ்வெம்பெருமானாரோபாதி ஸ்நேஹத்தை யுடையவ னல்லனென்னும்படியாக. பரிவு** – ஸ்நேஹம், பக்ஷபாதம் என்னுதல்; இலன் – இல்லாதவன். "துர்லபம் உபாஸதே" என்றும், "க்ஷிபாமி", "ந க்ஷமாமி" என்றும், "ஸித்திர்பவதி வா நேதி ஸம்சய: அச்யுத ஸேவிநாம்" என்றும் சொல்லுகிறபடியே, ஸர்வேச்வரன் துர்லபனாய், நிக்ரஹாநுக்ரஹங்கள் இரண்டுக்கும் பொதுவானவனாய், பலம் ஸித்திக்குமோ ஸித்தியாதொழியுமோவென்று ஸந்தேஹிக்க வேண்டும்படி யிருக்கையாலும், இவர் "ஸுலபம் ஸ்வ குரும்" என்றும், "ந ஸம்சய: அத்ர தத்பக்த பரிசர்யா ரதாத்மநாம்" என்றும் சொல்லுகிறபடியே, **ஸுலபராய் அநுக்ரஹசீலராய் நிஸ்ஸம்சயைக பல ப்ரதராய் இருக்கையாலும்**, இருவரையும் பார்க்குமளவில் இவரே அவனைக் காட்டில் சேதநர் பக்கலில் அதி ஸ்நேஹி என்னுமிடம் தோற்றுகிறதிறே.

விளக்கம் – (**அவர்க்கு உய்யவே பண்ணும் பரனும்**) - த்ரிபாத் ஊர்த்வ உதைத் புருஷ: - உயர்ந்த பரமபதத்தில் நிற்கும் புருஷன் – என்றும், தம: பரஸ்தாத் – இருளுக்கும் அப்பால் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்தைக் காட்டிலும் மேம்பட்ட உயர்ந்த புருஷார்த்தத்தை அடைய வைக்கின்ற செயல்களைச் செய்தபடி உள்ள ஸர்வேச்வரன். அதாவது பதிம் விச்வஸ்ய – இந்த விச்வத்தின் பதி – என்றும், தைத்திரீயம் - யஸ்மாத் பரந் நாபரமஸ்தி கிஞ்சித் – இதனைக் காட்டிலும் உயர்ந்ததும் இல்லை, உயர்ந்தது சிறிதும் இல்லை – என்றும், சாந்தோக்ய உபநிஷத் (3-3-17) – அத யதத: பர: - உயர்ந்த இடங்களில் இருந்தபடி – என்றும் கூறுவதற்கு ஏற்ப, தனக்கு அடிமைகளான மூன்று விதமான சேதந அசேதங்களின் ஸ்வரூபம், இருப்பு மற்றும் செயல்கள் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்டவனும், அனைத்தையும் விட உயர்ந்தவனும் ஆகிய ஸர்வேச்வரன். (**பரிவிலனாம்படி**) - அனைத்து சேதநர்களையும் காக்கும் முயற்சியில் ஈடுபடும்போது, எம்பெருமானார் அளவிற்கு ப்ரீதி கொண்டபடி செய்வதில்லை என்று கூறலாம்படியாக உள்ளான் எனலாம். ஏன்? காரணம் இவன், துர்லபம் ய உபாஸதே – யார் ஒருவன் அரியவனாக உள்ள அவனை உபாஸிக்கிறானோ – என்றும், கீதை (16-19) – க்ஷிபாமி – தாழ்ந்த நிலைக்குத் தள்ளுகிறேன் – என்றும், ந க்ஷமாமி – பொறுத்துக் கொள்ளமாட்டேன் – என்றும், சாண்டில்யஸ்ம்ருதி (1-95) - ஸித்திர்பவதி வா நேதி ஸம்சய: அச்யுத ஸேவிநாம் – அச்யுதனை அடைந்தவர்களுக்கு பலன் கிட்டுமா என்ற ஐயம் உண்டாகலாம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அடைவதற்கு மிகவும் அரியவனாகவும், அனுக்ரஹம் செய்பவன் மற்றும் அனுக்ரஹம் செய்யாமல் இருப்பவன் என்ற இரண்டு தன்மைகளும் கொண்டவனாகவும், இவனைப் பெறுதல் என்ற பலன் கிட்டுமோ கிட்டாதோ என்று சந்தேகம் கொள்ளலாம்படியாகவும் உள்ளதால் ஆகும். ஆனால் எம்பெருமானாரோ, ஸுலபம் ஸ்வகுரும் – எளிதாக அடையவல்ல தனது ஆசார்யன் – என்றும், சாண்டில்யஸ்ம்ருதி (1-95) - ந ஸம்சய: அத்ர தத்பக்த பரிசர்யா ரதாத்மநாம் – அவன் அடியார்களுக்குத் தொண்டு செய்வதில் விருப்பம் உள்ளவர்களுக்கு பலன் கிட்டுமா என்ற ஐயமே அவசியம் இல்லை - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அடைவதற்கு மிகவும் எளியவராகவும், அனுக்ரஹத்தை மட்டுமே செய்பவராகவும், எந்தவிதமான ஐயமும் கொள்ளவேண்டாதபடி பலனை மட்டுமே அளிப்பவராகவும் இருக்கிறார். ஆகவே ஸர்வேச்வரன் மற்றும் எம்பெருமானார் ஆகிய இருவரையும் ஒப்பு நோக்கும்போது, ஸர்வேச்வரனைக் காட்டிலும் எம்பெருமானாரே சேதநர்களிடம் மிகவும் ப்ரீதி கொண்டவர் என்பது வெளிப்படுகிறது.

வ்யாக்யானம் – **(விண்ணில் தலை நின்று)** "நாகஸ்ய ப்ருஷ்டே" என்கிறபடியே ஸ்வர்க்காதி லோகங்களுக்கெல்லாம் மேலாய், பரமாகாச சப்த வாச்யமான ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும். **(பல்லுயிர்க்கும் வீடளிப்பான்)** "ஸ்ரீவிஷ்ணுலோக மணி மண்டப மார்க்க தாயீ ராமாநுஜோ விஜயதே யதிராஜ ராஜ:" என்கிறபடியே ஸகல ஆத்மாக்களுக்கும், அந்தமில் பேரின்பமாகையாலே பரமபுருஷார்த்த லக்ஷணமான மோக்ஷத்தைக் கொடுத்தருளுவதாக. **"புல்லுயிர்க்கு"** என்ற பாடமானபோது, **புல்லுயிரென்**றது க்ஷுத்ரரென்றபடி. **(எம்மிராமாநுசன்)** எங்களுக்கு ஸ்வாமியான எம்பெருமானார். **(மண்ணின் தலத்துதித்து)** "ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி" என்றாப்போலே அவதரிப்பது பூமியிலேயாகிலும், தத்கத தோஷைக ரஸம் அஸ்ப்ருஷ்டராய், அஜஹத் ஸ்வபாவராய்க் கொண்டு அவதரித்தார் காணும்.

விளக்கம் - **(விண்ணில் தலை நின்று)** - தைத்திரீயம் – நாகஸ்ய ப்ருஷ்டே – பரமபதத்தின் மேல் உள்ளான் – என்பதற்கு ஏற்ப, ஸ்வர்கம் போன்ற அனைத்து லோகங்களையும் கடந்துள்ளதும், "பரமாகாசம்" என்று கூறப்படுவதும் ஆகிய ஸ்ரீவைகுண்டத்திலிருந்து. **(பல்லுயிர்க்கும் வீடளிப்பான்)** - தாடீ பஞ்சகம் (5) - பாஷண்ட ஸாகர மஹாபடபாமுகாக்நி: ஸ்ரீரங்கராஜ சரணாம்புஜ மூல தாஸ: ஸ்ரீவிஷ்ணுலோக மணி மண்டப மார்க்க தாயீ ராமாநுஜோ விஜயதே யதிராஜராஜ: - படபா என்பது ஒரு பெண் குதிரையின் பெயராகும். அது கடலுக்கு அடியில் தனது முகத்தில் எப்போதும் நெருப்புடன் உள்ளதாகும். ப்ரளய காலத்தின்போது கடலிலிருந்து வெளி வந்து உலகை அழிக்கும் என்பது புராணங்கள் கூறுவதாகும். பாஷண்டர்கள் என்ற கடலுக்கு இப்படிப்பட்ட படபா அக்னி போன்று எம்பெருமானார் உள்ளார். ஸ்ரீரங்கநாதனின் திருவடிகளைத் தனது தலையில் வைத்தபடி நின்று நீச மதங்களை அழித்தார். ஸ்ரீமந்நாராயணன் அமர்ந்துள்ள பரமபதம் செல்லும் வழியைக் காட்டினார். இப்படிப்பட்ட எம்பெருமானாருக்குப் பல்லாண்டு, யதிகளின் தலைவருக்குப் பல்லாண்டு - என்பதற்கு ஏற்ப, அனைத்து ஆத்மாக்களுக்கும், திருவாய்மொழி – அந்தமில் பேரின்பம் - என்பதற்கு ஏற்ப உள்ளதால், மிகவும் உயர்ந்த புருஷார்த்தம் என்ற லக்ஷணம் பொருந்திய மோக்ஷத்தை அளிப்பதற்காக. "பல்லுயிர்க்கும்" என்பதை "புல்லுயிர்க்கும்" என்று படித்தால், "மிகவும் தாழ்ந்த உயிர்கள் அனைத்திற்கும்" என்று பொருள். (எம் இராமாநுசன்) - எங்களுடைய

எஜமானராகிய எம்பெருமானார். (மண்ணின் தலத்து உதித்து) - கீதை (4-6) – ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாமி – எனது ப்ரக்ருதியை என் வசப்படுத்தி, நான் வெளிப்படுகிறேன் - என்பதற்கு ஏற்ப, அவதரிப்பது இந்தப் பூமி என்றாலும், இந்தப் பூமியில் உள்ள தோஷங்களின் வாசனையால் தீண்டப்படாதவராகவும், இந்த ஜகத்தின் தன்மைகள் ஏதும் அற்றவராகவும் அவதரித்தார்.

வ்யாக்யானம் – (மண்ணின் தலத்துதித்து) "இருள் தரும் மா ஞால"மான இந்த பூமியிலே இதினுடைய தோஷமொன்றும் தட்டாதபடி திருவவதரித்து. (**மறை நாலும் வளர்த்தனனே**) "ரிசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச" என்கிறபடியே, ரிகாதி பேதேந நாலு வகைப்பட்டிருக்கிற வேதத்தையும் லோகமெல்லாம் வ்யாபித்து அஸங்குசிதமாக நடத்தியருளினார். "சிரந்தந ஸரஸ்வதீ சிகுர பந்துஸைரந்த்ரிகா" என்னும்படியான ஸ்ரீஸூக்திகளாலே நிர்மித்தருளின **ஸ்ரீபாஷ்யாதி க்ரந்த வ்யாக்யானம்** பண்ணிக் கொண்டே இந்த வேத சதுஷ்டத்தையும் தடையற நடப்பித்தருளினாரென்றபடி. இத்தால், **ஸ்ரீமத் வேத மார்க்க ப்ரதிஷ்டாபநாச்சார்யோபய வேதாந்தாசார்யரென்றதாய்த்து**.

விளக்கம் - (மண்ணின் தலத்துதித்து) திருவாய்மொழி (10-6-1) – இருள் தருமா ஞாலம் – என்பதற்கு ஏற்ப உள்ள இந்தப் பூமியில், இதன் தோஷங்கள் எதுவும் தன்னிடம் வந்து சேராதவிதத்தில் திருஅவதாரம் செய்து. (மறை நாலும் வளர்த்தனனே) - நாரதீயம் (1-9) - ருசோ யஜும்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி – ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் - என்பதற்கு ஏற்ப, ரிக்வேதம் என்பது போன்று நான்குவகையாக உள்ள வேதங்களை இந்த உலகம் முழுவதும் பரவும்படிச் செய்து, எந்தவிதமான சுருக்கமும் அவற்றுக்கு ஏற்படாதபடிச் செய்தார். யதிராஜ ஸப்ததி (36) - இதம் ப்ரதம ஸம்பவத் குமதி ஜால கூலங்கஷா: ம்ருஷா மத விஷாநல ஜ்வலித ஜீவ ஜீவாதவ: க்ஷரந்தி அம்ருதம் அக்ஷரம் யதி புரந்தரஸ்ய உக்தய: சிரந்தந ஸரஸ்வதீ சிகுர பந்த ஸைரந்த்ரிகா: - இந்தக் கலிகாலத்தில் புதிதுபுதிதாகப் பல மதங்கள் தலை எடுத்து, விபரீதமான புத்தி கொண்டவையாக உள்ளன. அந்தக் கூட்டங்கள் அனைத்தையும் வேருடன் அறுக்க வல்லது; பொய் என்பதை மட்டுமே தங்கள் குறிக்கோளாகக் கொண்டு, அந்தத் தீ மூலம் ஜீவன்களை விஷம் போல் அழிக்கும் மதங்களில் இருந்து ஜீவன்களைக் காப்பாற்றுவது; வேதம் என்ற அரசியின், உபநிஷத் என்ற கூந்தலை அழகாகச் சீவி அலங்கரிக்கும் பணிப்பெண்கள் போன்றது – இவை எது என்றால் யதிராஜரின் நூல்களே ஆகும். அவை அழிவற்ற மோக்ஷத்தை நம் மீது பொழிகின்றன – என்பதற்கு ஏற்ப, தகுந்த ப்ரமாணங்கள்

கொண்டு உண்டாக்கிய ஸ்ரீபாஷ்யம் முதலான பலவற்றையும் செய்தபடியும், இந்த நான்கு வேதங்களையும் எந்தவிதமான தடையும் இன்றி உலவும்படியும் செய்தார். இதன் மூலம், "ஸ்ரீமத் வேத மார்க்கத்தை நிலைநாட்டிய ஆசார்யர், உபய வேதாந்த ஆசார்யர்", என்பதைக் கூறினார்.

96. வளரும் பிணிகொண்ட வல்வினையால் மிக்க நல்வினையின்
கிளரும் துணிவு கிடைத்தறியாது முடைத்தலையூன்
தளரும் அளவும் தரித்தும் விழுந்தும் தனிதிரிவேற்கு
உளர் எம் இறைவர்* இராமாநுசன் தன்னை உற்றவரே.

விளக்கவுரை - மேன்மேலும் பெருகி வரும்படியும், எப்போதும் துக்கத்தை மட்டுமே ஏற்படுத்துவதும், எத்தனை ப்ராயச்சித்தம் செய்தாலும் கழியாமல் உள்ளதும் ஆகிய எனது வினைகள் செய்வது என்னவென்றால் – மிகவும் உயர்ந்த சரணாகதியின் இன்றியமையாத அங்கமான மஹாவிச்வாசம் என்பது எனக்குக் கிட்டாமல் உள்ளது. துர்நாற்றம் கொண்ட மாமிசத்தால் ஆகிய இந்த உடல் உயிரற்று தரையில் விழும் வரையில் ஸம்ஸாரத்தில் உழன்றபடியும், மிகவும் கொடுமையான குழியான உலக விஷயங்கள் என்பதில் விழுந்தபடியும், எவ்விதமான துணையும் இல்லாதபடியும் நாம் உள்ளோம். இப்படிப்பட்ட ஸம்ஸாரம் என்ற படுகுழியில் நாம் விழாதபடி நம்மைக் காப்பாற்றுபவர்கள் யார் என்றால் – எம்பெருமானாரை அல்லது வேறு யாரையும் அறியாமல் உள்ள கூரத்தாழ்வான் போன்றோர் ஆவர். இவர்களே நம்மை காப்பாற்றும் எஜமானர்களாக உள்ளனர்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே நிக்ரஹாநுக்ரஹங்களிரண்டுக்கும் பொதுவாய் தண்டதரனான ஸர்வஸ்மாத்பரனிலும் அஞ்ஞாந நிக்ரஹராய் பரமபதத்தில் நின்றும் ரக்ஷணைக தீக்ஷிதராய் வந்து அவதரித்த எம்பெருமானார், **நிர்ஹேதுக க்ருபையை** யுடையவ ராகையாலே, சேதந ஸம்ரக்ஷணார்த்தமாக வேதவேதாந்த ப்ரவர்த்தநம் பண்ணியருளினாரென்று இவர் அருளிச்செய்யக் கேட்டு அருகில் இருப்பார், "அந்த வேதாந்தந்களிலே முமுக்ஷுர்வை சரணமஹம் ப்ரபத்யே என்று மோக்ஷாதிகாரிகளுக்குச் சொன்ன சரணாகதியிலே நிஷ்டராயிருந்தீரோ", என்ன; "சரணாகதியைப் பெருகைக்கு ப்ரதிபந்தங்களான ப்ரபல கர்மங்களாலே அது தன்னிலும் மஹாவிச்வாசம் கிடையாதே,

துர்கந்த ப்ரசுரமாய், மாம்ஸா ஸ்ருகாதிமயமான சரீரம் கட்டுக் குலைந்து போமளவும் ஸுக துக்காநுபவம் பண்ணிக் கொண்டு ஸஹாயமின்றிக்கே யிருக்கிறவெனக்கு, **அந்த சரமோபாயமான எம்பெருமானாரிலும் ஸுலப தமராய் சேஷிகளாய் எனக்கு ஸ்வாமியானவவர் தம்மையே 'தந்தை நல் தாய் தாரம்' இத்யாதிப்படியே ஸர்வவித பந்துவாய் அத்யவஸித்து, 'தேவு மற்றறியேன்' என்றிருக்கும் மஹாத்மாக்களே வழித் துணையாய் ரக்ஷகராயிருப்பார் என்று அத்யவஸித்தேன். ஆகையால் நான் ததீயாபிமாந நிஷ்டன்**" என்று அருளிச்செய்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், "தண்டித்தல் மற்றும் அனுக்ரஹம் செய்தல் ஆகிய இரண்டிற்கும் பொதுவாக உள்ளவனும், அனைத்து ஆத்மாக்களைக் காட்டிலும் உயர்ந்தவனும் ஆகிய ஸர்வேச்வரனைக் காட்டிலும், அஜ்ஞானத்தை அழிப்பவராகவும் அனைத்தையும் காப்பாற்றுதல் என்ற ஒரே நோக்கத்திற்காகப் பரமபதத்திலிருந்து இங்கு வந்து அவதரித்தவரும் ஆகிய எம்பெருமானார், எந்தவிதமான காரணமும் இன்றி வருகின்ற கருணை நிறைந்தவர் என்பதால், அனைத்து சேதநங்களையும் காப்பாற்றுவதற்காகவே, வேதங்களையும் வேதாந்தங்களையும் எங்கும் பரப்பியபடி உள்ளார்", என்று இவர் அருளிச்செய்தார். இதனைக் கேட்ட ஒரு சிலர் அமுதனாரிடம், "அத்தகைய வேதாந்தங்களில், ச்வேதாஸ்வதர உபநிஷத் - முமுக்ஷுர்வை சரணம் அஹம் ப்ரபத்யே – முமுக்ஷுவாகிய நான் சரணம் அடைகிறேன் - என்று மோக்ஷத்திற்கான அதிகாரிகளுக்கு உரைக்கப்பட்ட சரணாகதியில் நீவிர் ஈடுபட்டபடி இருந்தீரோ?", எனேய் கேட்டனர். இதற்கு விடையாக அமுதனார், "சரணாகதியைச் செய்யவேண்டும் என்றால் அதனை அடைவதற்குத் தடையாக உள்ள பாப கர்மங்களின் விளைவாக, சரணாகதியில் எனக்கு மஹாவிச்வாசம் ஏற்படாமல் இருந்தது. தாழ்ந்த வாசனைகளின் விளைவாக ஏற்பபட்டதான மாமிசம் மற்றும் இரத்தம் ஆகியவற்றால் ஆகிய இந்தச் சரீரமானது தனது இருப்பை இழக்கும்படியாக சுகம் மற்றும் துக்கம் ஆகியவற்றை அனுபவித்தபடி, எந்தவிதமான உதவியும் இன்றி நான் நின்றேன். அப்போது, உபாயத்தின் எல்லையாகிய எம்பெருமானாரைக் காட்டிலும் அடைவதற்கு மிகவும் சுலபமாக உள்ளவர்களும், எனக்கு எஜமானர்களும், எனக்கு ஸ்வாமியாக உள்ள எம்பெருமானாரையே ஆர்த்திப்ரபந்தம்(3) - தந்தை நல்தாய் தாரம் – என்பதற்கு ஏற்ப அனைத்துவிதமான உறவாகவும் எண்ணியபடியும், கண்ணிநுண்சிறுத்தாம்பு – தேவு மற்றறியேன் - என்பதற்கு ஏற்பவும்

உள்ள மஹாத்மாக்களும் ஆகியவர்களே, எனக்கு ஏற்ற துணையாக, என்னைக் காப்பவர்களாக இருப்பார்கள் என்று உறுதியாக எண்ணினேன். ஆகவே நான் எம்பெருமானாருடைய அடியவர்களை அண்டி நிற்பவன் ஆவேன்", என்று கூறுகிறார்.

வ்யாக்யானம் – (வளரும் பிணி கொண்ட வல்வினையால்) "அதத்த தோஷேண பவேத் தரித்ரீ தரித்ர தோஷேண கரோதி பாபம் பாபாத் அவச்யம் நகரம் வ்ரஜந்தி புநர் தரித்ர: புந: ஏவ பாபீ" என்றும், "த்யாயதோ விஷயாந் பும்ஸ: ஸங்கஸ்தேஷூப ஜாயதே ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோத: அபி ஜாயதே" என்றும், "க்ரோதாத் பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம: ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்தி நாசோ புத்தி நாசாத் ப்ரணச்யதி" என்றும் சொல்லுகிறபடியே, மேன்மேலும் பெருகி வருகிற பிணி உண்டு, வ்யாதி, தந் மூல துக்கமென்றபடி. **(கொண்ட வல்வினையால்)** அந்த துக்கத்தையே ஸர்வகாலத்திலும் விளைக்கக் கடவதாய், அநுபவ ப்ராயச்சித்தங்களாலே நசியாதபடி அதிப்ரபலமான துஷ்கர்மத்தாலே,

விளக்கம் - **(வளரும் பிணி கொண்ட வல்வினையால்)** - அதத்த தோஷேண பவேத் தரித்ரீ தரித்ர தோஷேண கரோதி பாபம் பாபாத் அவச்யம் நகரம் வ்ரஜந்தி புநர் தரித்ர: புந: ஏவ பாபீ – குறிப்பிட்ட தோஷங்களை அடைவதன் மூலம் பாபங்கள் செய்கிறான்; பாபங்கள் செய்வதால் நரகம் புகுகிறான்; நரகத்திலிருந்து வந்த பின்னர் மீண்டும் தோஷங்களை ஏற்று பாபியாகிறான் – என்றும், கீதை (2-62) – த்யாயதோ விஷயாந் பும்ஸ: ஸங்கஸ்தேஷூப ஜாயதே ஸங்காத் ஸஞ்ஜாயதே காம: காமாத் க்ரோத: அபி ஜாயதே – இந்த்ரியங்களின் விஷயங்களையே சிந்தித்தபடி உள்ளவனுக்கு, அவற்றில் பற்றுதல் உண்டாகிறது; பற்றுதலிலிருந்து ஆசை உண்டாகிறது; ஆசையிலிருந்து (ஆசைக்குத் தடை உண்டானால்) கோபம் ஏற்படுகிறது – என்றும், கீதை (2-63) – க்ரோதாத் பவதி ஸம்மோஹ: ஸம்மோஹாத் ஸ்ம்ருதி விப்ரம: ஸ்ம்ருதி ப்ரம்சாத் புத்தி நாசோ புத்தி நாசாத் ப்ரணச்யதி – கோபத்தினால் அறிவின்மை என்னும் மயக்கம் உண்டாகிறது; இந்த மயக்கத்தால் நினைவு தடுமாறுகிறது; நினைவு தடுமாறுவதால் புத்தி அழிகிறது; புத்தி அழிவதால் கீழே விழுகிறான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, மேன்மேலும் பெருகியபடி உள்ள பிணி அதாவது வ்யாதிகள் மற்றும் அதன் மூலம் ஏற்படும் துக்கங்கள். (கொண்ட வல்வினையால்) - அப்படிப்பட்ட துக்கத்தையே அனைத்து காலங்களிலும் உண்டாக்க

வல்லதாகவும், எத்தனை அனுபவித்தாலும் எத்தனை ப்ராயச்சித்தங்கள் செய்தாலும் கழியாதபடி உள்ளதாகவும் இருக்கின்ற தீவினைகள் மூலம்.

வ்யாக்யானம் – (மிக்க நல்வினையில் கிளரும் துணிவு கிடைத்தறியாது) "தஸ்மாத் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தம் ஆஹு:" என்றும், "ஸத்கர்மநிரதா: சுத்தா: ஸாங்க்யயோகவிதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி" என்றும் சொல்லுகிறபடியே, ஸர்வோபாயோத்க்ருஷ்டமாய் **உபாயாந்தரங்களைப் போலே ஸ்வரூப விருத்தமாயிருக்கையன்றிக்கே ஸ்வரூபாநுரூபமாய் யிருக்கையாகிற நன்மையையுடைத்தான அஞ்சலி ரூப க்ரியையிலே**, "மஹாவிச்வாஸ பூர்வகம் ததேகோபாயதா யாச்சா" என்றும், "விச்வாஸ ப்ரார்த்தநா பூர்வம் ஆத்ம ரக்ஷா பரம்" என்றும் சொல்லுகிறபடியே, பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தி பர்யந்தமாக பெருகி வருகிற **ப்ராப்ய த்வரைக்குறுப்பான மஹாவிச்வாஸமெ**ன்பதொன்றும் நேராக லபியாதபடி ஜ்ஞாந விதுரனாயிருந்து வைத்து. **நல்வினை** – ஸுக்ருதம்; அதாவது ப்ரபத்தி. **கிளரும் துணிவு** - மிக்க துணிவு; **கிளர்த்தி** – மிகுதி. "**மிக்க நல்வினையின் கிளரும் துணிவு**" என்று பாடமானபோது, பரம தர்மமான சரணாகதிக்கு அபேக்ஷிதமான மஹாவிச்வாஸம் என்கை.

விளக்கம் - **(மிக்க நல்வினையில் கிளரும் துணிவு கிடைத்தறியாது)** - தைத்திரீயம் – தஸ்மாத் ந்யாஸம் ஏஷாம் தபஸாம் அதிரிக்தம் ஆஹு: - தவங்களில் சிறந்ததாக ப்ரபத்தியே கூறப்படுகிறது –என்றும், லக்ஷ்மீ தந்த்ரம் (17-62) - ஸத்கர்மநிரதா: சுத்தா: ஸாங்க்யயோகவிதஸ்ததா நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி – கர்மயோகத்தைக் கைக்கொண்டு, ஞானயோக பக்தி யோகங்களைச் செய்பவர்கள் ப்ரபத்தி செய்தவனுடைய கோடியில் ஒரு பாகத்தைக் கூடப் பெறத் தகுதியானவர்கள் அல்லர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்துவிதமான உபாயங்களைக் காட்டிலும் உயர்ந்ததாகவும், மற்ற உபாயங்கள் போன்று ஆத்மஸ்வரூபத்திற்கு விரோதமாக இல்லாததாகவும், ஆத்மஸ்வருபத்திற்கு ஏற்றபடி உள்ளதால் நன்மை அளிப்பதாகவும் உள்ள அஞ்ஜலி வடிவத்தில் உள்ள செயலில். அநந்ய ஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாஸ பூர்வகம் ததேகோபாயதா யாச்சா ப்ரபத்தி: சரணாகதி: - தனக்குத் தேவையான பலனை வேறு யாராலும் நிறைவேற்றிக் கொடுக்க இயலாது என்னும்போது, மஹாவிச்வாஸத்தை முன்னிட்டுக் கொண்டு சாமர்த்யமாக உள்ள ஒருவனை அண்டி

நின்று "நீயே எனக்கு உபாயமாக இருப்பாயாக" என்று விண்ணப்பிப்பதே சரணாகதி ஆகும் – என்றும், ந்யாஸ தசகம் (2) - நியஸ்யாம்யகிஞ்சிந: ஸ்ரீமந்நநுகூலோந்யவர்ஜித: விச்வாஸ ப்ரார்த்தநா பூர்வம் ஆத்ம ரக்ஷா பரம் த்வயி - உனக்கு அநுகூலனாகவும், உனக்குப் ப்ரதிகூலனாக இல்லாமலும், உன்னிடம் மிகுந்த நம்பிக்கையுடன் உள்ள என்னை ஏற்றுக் கொள்ளும்படியான உன்னைப் ப்ரார்த்தித்து, என்னைக் காக்கும் பொறுப்பை உன்னிடமே ஒப்படைக்கிறேன் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, பரபக்தி பரஜ்ஞான பரமபக்தி வரை பெருகி வருவதான வேகத்திற்கு அடிப்படையாக உள்ள மஹாவிச்வாசம் என்பது ஏற்படாத விதத்தில் ஞானம் அற்றவனாக இருந்தபடி. நல்வினை என்றால் புண்ணியம், அதாவது ப்ரபத்தி. "மிக்க நல்வினையில்" என்பதை "மிக்க நல்வினையின்" என்று படிக்கும்போது, மிகவும் உயர்ந்த தர்மமாகிய சரணாகதிக்கு அங்கமாக உள்ள மஹாவிச்வாசம் என்று பொருள்.

வ்யாக்யானம் – (முடைத்தலையூன் தளருமளவும்) "அமேத்ய பூர்ணம் க்ருமிஜால ஸங்குலம் ஸ்வபாவ துர்கந்தம் அசௌசமத்ருவம் களேபரம் மூத்ர புரீஷ பாஜநம்" என்கிறபடியே ஸ்வபாவ துர்கந்த ஸ்த்தாநமாய், "மாம்ஸாஸ்ருக் பூயவிண் மூத்ர ஸ்நாயு மஜ்ஜாஸ்தி ஸம்ஹத ரூபமான சரீரம் தளர்ந்து போகுமளவும். **முடை** – துர்கந்தம்; முடை என்றும், ஊன் என்றும் – மாம்ஸமாய், தத் ப்ரசுரமான சரீரத்தைச் சொன்னபடி. "ஊனவுடல் சிறை" என்னக் கடவதிறே. **(தரித்தும் விழுந்தும்)** இப்படியான தசையிலே "ஸம்ஸார விஷவ்ருக்ஷஸ்ய த்வே பலே ஹி அம்ருதோபமே கதாசித் கேசவே பக்தி: தத்பக்தைர்வா ஸமாகம:" என்றும், "கூடியழுங்கிக் குழியில் வீழ்ந்து வழுக்காதே" என்றும், "**மாயவன் சேற்றள்ளல் பொய்ந்நிலம்**" என்றும் சொல்லுகிறபடியே, அள்ளலும் வழுக்கலுமான ஸம்ஸார விபூதியிலே யாத்ருச்சிகமாக ஸஞ்சரித்துக் கொண்டு போருகிற சில தார்மிகர், ஸம்ஸார கர்த்தத்திலே அழுந்திக் கிடந்த நான் உத்தரிக்கும்படி உபகரித்தும், **த்யாஜ்யோபாதேய விவேகமாகிற ஊன்று கோலை உத்தம்பகமாகப் பிடித்துக் கொண்டு**, அத்தாலே அல்ப துக்க சாந்தி பிறந்து ஆச்வஸித்தும், பின்னையும் துர்வாஸநாமூலமான அநவதாநத்தாலே "கொடு வன்குழி"யான சப்தாதி விஷயங்களிலே விழுந்தும்.

விளக்கம் - **(முடைத்தலையூன் தளருமளவும்)** - அமேத்ய பூர்ணம் க்ருமிஜால ஸங்குலம் ஸ்வபாவ துர்கந்தம் அசௌசமத்ருவம் களேபரம் மூத்ர புரீஷ பாஜநம் – மலங்களாலும்

புழுக்களாலும் நிறைந்ததும், இயல்பாகவே தீண்டத்தகாததாகவும், அருவருக்கும்படியான துர்நாற்றம் கொண்டதும், மூத்திரம் இரத்தம் மற்றும் சீழ் ஆகியவை கொண்டதும் ஆகிய இந்தச் சரீரம் - என்பதற்கு ஏற்ப இயற்கையாகவே தாழ்ந்த வாசனைக்கு இடமாக உள்ளதும், மாம்ஸாஸ்ருக் பூயவிண் மூத்ர ஸ்நாயு மஜ்ஜாஸ்தி – மாமிசம், இரத்தம், சீ, மலம், மூத்திரம், நரம்பு, மஜ்ஜை - என்பதற்கு ஏற்ப உள்ளதும் ஆகிய சரீரம் தளர்ந்து போகும்வரை. முடை என்றால் தாழ்ந்த நாற்றம், அதற்கு இடமாக உள்ள சரீரம். ஞானஸாரம் (1) – ஊனவுடல் சிறை - என்பது காண்க. (தரித்தும் விழுந்தும்) இப்படிப்பட்ட நிலையில், ஸம்ஸார விஷவ்ருக்ஷஸ்ய த்வே பலே ஹி அம்ருதோபமே கதாசித் கேசவே பக்தி: தத்பக்தைர்வா ஸமாகம: - ஸம்ஸாரம் என்னும் விஷமரத்தில் அமிர்தம் போன்று இரண்டு பழங்கள் உண்டு; அவையாவன கேசவனிடம் உண்டாகும் பக்தி, பாகவதர்களின் சேர்க்கை – என்றும், பெரியாழ்வார் திருமொழி (4-6-6) – கூடியழுங்கிக் குழியில் வீழ்ந்து வழுக்காதே – என்றும், திருவிருத்தம் (100) – மாயவன் சேற்றள்ளல் பொய்ந்நிலம் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, எத்தனை விலக்கினாலும் வழுக்குவதான ஸம்ஸார ஸமுத்ரத்தில். இப்படிப்பட்ட ஸம்ஸார ஸமுத்ரத்தில் அழுந்திக் கிடக்கின்ற என்னை, அவ்வழியே தற்செயலாக வந்த சில தர்மாத்மாக்கள், நான் உயரும்படியாக உபகாரம் செய்தனர். அவர்கள் உபதேசித்தபடி, "விலக்கவேண்டியது எது மற்றும் ஏற்கவேண்டியது எது" என்ற விவேகம் என்னும் ஊன்றுகோலை, பிடித்து எழுவதற்கு உதவுகின்ற தடியாகப் பிடித்தபடி எழுந்து, அதன் மூலம் துக்கத்திலிருந்து சிறிதளவு விடுதலை கிட்டியது என்று நின்றேன். அதன் பின்னர் மீண்டும் தாழ்ந்த வாசனை காரணமாக, திருவாய்மொழி (7-1-9) – கொடு வன்குழி – என்பதான இந்த்ரிய விஷயங்களில் விழுந்தேன்.

வ்யாக்யானம் - (தனி திரிவேற்கு) "ஜீர்ணாதரிஸ்ஸரிததீவகபீர நீரா பாலாவயம் ஸகலம் இத்தம் அநர்த்த ஹேது:" என்றும், "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்றும், "ந தர்ம நிஷ்டோஸ்மி" என்றும், "பவ துர்த்திநே பத ஸ்கலிதம்" என்றும் சொல்லுகிறபடியே, சேதந ரூபமாயாதல் அசேதந ரூபமாயாதல் ஒரு ஸஹாயாந்தரமின்றிக்கே யிருக்கிற நமக்கு. **(இராமானுசன் தன்னையுற்றவர்)** "ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே", "ராமாநுஜார்ய வசக: பரிவர்த்திஷீய", "ந சேத் ராமாநுஜேத் ஏஷா" இத்யாதிப்படியே **எம்பெருமானாரை அத்யவஸித்திருப்பார்.**

விளக்கம் – (தனி திரிவேற்கு) - ஜீர்ணாதரிஸ்ஸரிததீவகபீர நீரா பாலாவயம் ஸகலம் இத்தம் அநர்த்த ஹேது: - என்றும், திருவாய்மொழி (5-7-1) – நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (22) – ந தர்ம நிஷ்டோஸ்மி – நான் கர்மயோகத்தில் நிற்பவன் அல்லன் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (49) – பவ துர்த்திநே பத ஸ்கலிதம் – ஸம்ஸாரம் என்னும் இருளில், நல்ல வழியிலிருந்து தப்பி நின்று – என்றும் கூறுவதற்கு ஏற்ப, சேதந ரூபமாகவோ அல்லது அசேதந ரூபமாகவோ என எந்தவிதத்திலும் ஒரு உதவி கிட்டாதபடி உள்ள நமக்கு. (இராமாநுசன் தன்னை உற்றவர்) - ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே – என்றும், ராமாநுஜார்யவசக: பரிவர்த்திஷீய – இராமானுஜரின் திருவடிகளில் எப்போதும் சேர்ந்து வாழும்படியாக – என்றும், ந சேத் ராமாநுஜேத்யேஷா - என்றும் கூறுவதற்கு ஏற்ப எம்பெருமானாரை மட்டுமே உறுதியுடன் எண்ணியபடி உள்ளவர்கள்.

வ்யாக்யானம் – (எம்மிறைவர் உளர்) நம்முடைய தனிமை தீர நமக்குத் துணையாய் ஸம்ஸாரமாகிற படு குழியிலே விழாதபடி, தாங்களாயே பிடித்து நடத்தி உத்தரிக்கும் அஸ்மத் ஸ்வாமிகளாவர்கள். **“எம்மிறைவர்” என்றது கூரத்தாழ்வானை. “வஞ்ச முக்குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான்” என்று கீழேயும் அருளிச்செய்தாரிறே. அன்றிக்கே, “எம்மிறைவர் இராமாநுசன்” என்று எம்பெருமானார்க்கு விசேஷணமாகவுமாம். “எம்மிறையவன் இராமாநுசன் தன்னை யுற்றவரே” என்று பாடமானபோது, எம்பெருமானாரையல்லது அறியோமென்று அற்றிருப்பார் நமக்கு சேஷிகள் என்று யோஜிப்பது.** “கர்மேதி கேசிதபரே மதிமித்யதாந்யே பக்திம் பரே ப்ரபதநம் ப்ரவதந்தி உபாயம் ஆம்நாய ஸார ரஸிகாஸ்த்வமிதாநுபாவாஸ் த்வாமேவ யாந்தி சரணம் சடஜிந் முநீந்த்ர” **என்றும் சரம பர்வதத்தைப் பற்றினவர்களே பெரியோர்கள் என்று அபியுக்தரும் அருளிச்செய்தாரிறே.** “த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து” என்று **ததீய சேஷத்வத்தை ஜீயரும் ப்ரார்த்தித்தருளினாரிறே.**

விளக்கம் - (எம் இறைவர் உளர்) - தனியாக உள்ள நம்முடையய தனிமை என்பது விலகும்படியாக நமக்கு ஏற்ற துணையாகவும், ஸம்ஸாரம் என்ற ஆழமான குழியில் நாம்

விழாதபடி தாங்களாகவே முன் வந்து நம்மை உயர்த்தி விடுபவர்களாகவும் உள்ள எனது ஸ்வாமிகள். "எம் இறைவர்" என்பதன் மூலம் கூரத்தாழ்வானை உரைக்கிறார். இராமானுச நூற்றந்தாதி (7) – வஞ்ச முக்குறும்பாம் குழியைக் கடக்கும் நம் கூரத்தாழ்வான் – என்று முன்பே அருளிச்செய்தார். அல்லது "எம் இறைவர் இராமானுசன்" என்று "எம் இறைவர்" என்பதை எம்பெருமானாருக்கு அடைமொழியாக உரைத்ததாகவும் கொள்ளலாம், "**எம்மிறையவன் இராமானுசன் தன்னை யுற்றவரே**" என்று படிக்கும்போது "எம்பெருமானரை அல்லாமல் வேறு எதனையும் அறியமாட்டோம் என்று உள்ளவர்களே நமக்கு எஜமனார்கள்" என்று பொருள். பராங்குச பஞ்ச விம்சதியில் - கர்மேதி கேசிதபரே மதிமித்யதாந்யே பக்திம் பரே ப்ரபதநம் ப்ரவதந்தி உபாயம் ஆம்நாய ஸார ரஸிகாஸ்த்வமிதாநுபாவாஸ் த்வாமேவ யாந்தி சரணம் சடஜிந் முநீந்த்ர – என்று எல்லை நிலமான அடியார்களுக்கு அடிமையாக இருப்பவர்களே உயர்ந்தவர்கள் என அறிந்தவர்கள் கூறியுள்ளனர். யதிராஜ விம்சதி (16) - சப்தாதி போக விஷயா ருசி: அஸ்மதீயா நஷ்டா பவதி இஹ பவத் தயயா யதீந்த்ர த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து - யதிராஜரே! அழியக்கூடிய உலக இன்பங்கள் மீது எனக்கு ஏற்படும் பற்றுகளை நீக்க நீயே அருளவேண்டும். இத்தகைய இன்பங்கள் பின்வரும் நாட்களில் துன்பமே ஏற்படுத்துவதால், இவற்றை உனது கருணை மூலம் நீக்கவேண்டும். என்னை உனது தொண்டனுக்குத் தொண்டனாகக் கொள்ளவேண்டும். இதன் மூலம் நான் உன்னைச் சரணம் என்று பற்றும்படி செய்யவேண்டும். உனக்கு அர்ப்பணிக்க என்னிடம் ஏதும் இல்லை. ஆகவே என்னிடம் இருந்து எதனையும் எதிர்பாராமல் உள்ள உனது கருணை மட்டுமே கொண்டு என்னை நீ காக்க வேண்டும் - என்று அடியார்களுக்குக் கைங்கர்யம் செய்தலையே ஸ்வாமி மணவாள மாமுனிகளும் ப்ரார்த்தித்தார் அல்லவோ?

97. தன்னை உற்றாட்செய்யும் தன்மையினோர் மன்னு தாமரைத்தாள்
தன்னை உற்றாட்செய்ய என்னை உற்றான் இன்று தன் தகவால்
தன்னை உற்றார் அன்றி தன்மை உற்றாரில்லை என்றறிந்து
தன்னை உற்றாரை இராமாநுசன் குணம் சாற்றிடுமே

விளக்கவுரை - எம்பெருமானாரை மட்டுமே பற்றியுள்ளவர்கள் பலர் உண்டு. இவ்விதம் தன்னைப் பற்றியுள்ளவர்களுக்கு "என்ன உயர்ந்த குணம் உள்ளது, அவர்கள் உயர்ந்த ஸ்வபாவங்கள் என்ன" என்று பலரும் போற்ற வேண்டும் என்பது எம்பெருமானாரின் எண்ணமாகும் (தம் அடியார் தமக்கு அடியார் அடியார் தம் அடியார் அடியோங்களே – என்பது போன்று). ஆனால் இவ்விதம் தன்னை அண்டியவர்களின் பெருமையைப் போற்றக் கூடியவர்கள் யாரும் இல்லை என்று சற்றே மனம் வருந்தினர் போலும். அதனால் எம்பெருமானார் செய்தது என்ன? தனது கருணை காரணமாக, தன்னைத் தவிர (எம்பெருமானாரைத் தவிர) வேறு எதனையும் அறியாதவர்களும், தனக்குக் கைங்கர்யம் செய்வதை மட்டுமே குறிக்கோளாக உடையவர்களும் ஆகிய கூரத்தாழ்வான் போன்றவர்களின் அழகாகப் பொருந்திய தாமரைமலர் போன்ற திருவடிகளுக்குத் தொண்டு புரியும்படி என்னைப் பணித்தார்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே "**எம்மிறைவர் இராமாநுன்றன்னை உற்றவரே**" என்று "ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்" என்றாப்போலே, எம்பெருமானாரை "தேவு மற்றறியேன்" என்று பற்றியிருப்பாரே "**தமக்குறு துணை**" என்று இவர் சொன்னவாறே, "உமக்கு அவர்தம் மளவிலன்றிக்கே அங்குத்தைக்கு நிழலும் அடிதாறும்போலே அநந்யார்ஹராயிருப்பாருங்கூட உத்தேச்யரென்றிருக்கைக்கீடான **இந்த ருசி வந்த வழிதான் ஏது**" **என்ன**; "திக்குற்ற கீர்த்தி" என்னும்படியான தம்முடைய வைபவத்தைக் கண்களாற் கண்டும் செவிகளாற் கேட்டும் தம் பக்கலிலே அடிமைப்படுவாருமித்தனை யொழித் தமக்கு அநந்யார்ஹராயிருப்பார், பிறர்க்கடிமைப்படுவார் கிடக்கத் தக்காரென்று திருவுள்ளமாய், **முந்துறமுன்னம் தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகள் பக்கலிலே என்னை அடிமைப்படுத்தினாராகையாலே, இந்த ருசி அடியேனுக்கு அவர் தம்முடைய க்ருபையாலே வந்தது**" **என்கிறார்**.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் அமுதனார், "எம் இறைவர் இராமாநுசன் தன்னை உற்றவரே என்று, ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் - அனைத்தும், முறையாக எந்தத் திருவடிகளாகவே உள்ளனவோ – என்று கூறுவது போன்று, தேவு மற்றறியேன் – என்பதாகப் பற்றியபடி உள்ளவர்களே தமக்கு உறுதுணையாக இருப்பவர்கள் ஆவர்" என்று உரைத்தார். அப்போது சிலர் அமுதனாரிடம், "உமக்கு அவர்கள் வரை மட்டும் அல்லாமல், அவர்களுடைய பெரியதிருவந்தாதி (31) – நிழலும் அடிதாறும் – என்பது

போன்று மற்ற கதி இன்றி உள்ளவர்கள் கூட ஏற்கத்தக்கவர்கள் ஆவர் என்பதாக நீவிர் உரைக்கிறீர். இந்தப் பிடிப்பு ஏற்பட்ட வழிதான் என்ன?", என்றனர். இதற்கு அமுதனார், "திக்குற்ற கீர்த்தி என்றுள்ளதான தனது வைபவத்தைக் கண்களால் கண்டும், காதுகளால் கேட்டும், அதன் விளைவாகத் தனக்கு மட்டுமே வசப்பட்டு நிற்பவர்களைக் கண்ட எம்பெருமானார், இவ்விதம் உள்ளவர்கள் மற்றவர்களுக்கு வசப்பட்டு நிற்பதற்கு ஏற்றவர்கள் அல்லர் என்று திருவுள்ளம் கொண்டார். ஆகவே தன்னுடைய ஸம்பந்தம் கொண்டவர்களுடன் ஸம்பந்தம் கொண்டவர்களிடம், என்னை வசப்படுத்தினார். எனவே இந்த ஈடுபாடு எனக்கு எம்பெருமானாருடைய க்ருபையால் வந்தாகும்", என்கிறார்.

வ்யாக்யானம் – (தன்னை உற்றாரன்றி) "கலௌ கச்சித் பவிஷ்யதி" என்று **நாரத பகவான்** சொல்லுகையாலும், **பாகவத புத்ரனான ஊமை** இவர் தம்முடைய ப்ரபாவத்தைக் கட்டடங்க வெளியிட்டு அங்ஙனே திரோஹிதனாகையாலும், யாதவப்ரகாசன் இவரை வஞ்சிப்பதாக மணிகர்ணிகைக்கு அழைத்துக் கொண்டு போகிறபோது கோவிந்தப் பெருமாள் அச்செய்தியைக் கேட்டு விந்த்யாடவியிலே அறிவித்தவாறே, அங்கே இவர் தனிமைப்பட்டிருக்க அவ்வளவிலே **பெருமாள் தாமே இவருக்கு வழி துணையாய் வந்து** ஒரு ராத்ரியிலேதானே இவர் தம்மை, "ஒளி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி"த் திருப்பதியிலே சேர்த்தாரென்று சொல்லுகையாலும், இவருக்கு **திருக்கச்சிநம்பி முகமாக ஸமஸ்த தத்வார்த்தங்களையும் பேரருளாளர்** வெளியிட்டா ரென்கையாலும், திக் விஜயார்த்தமாக தத் தேசங்களிலே சென்று சைவ மாயாவாத ஜைந பௌத்தாதிகளோடே ஸஹஸ்ர முகமாக ப்ரஸங்கித்து அவர்களை பக்நராக்கினார் என்கையாலும், **வேங்கடாசல யாதவாசலங்களை நிர்வஹித்தார்** என்கையாலும், இச்செய்திகளை அடைவே கண்டும் கேட்டும் லோகத்தாரெல்லாம் வித்தராய், "அவசா: ப்ரதிபேதிரே" என்றாப்போலே **தம்மை ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் அத்யவஸித்து ஆச்ரயித்திருப்பாருண்டு இத்தனை ஒழிய**.

விளக்கம் - (தன்னை உற்றாரன்றி) - அநந்த: ப்ரதமம் ரூபம் லக்ஷ்மணம் ச தத: பர: பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌ கச்சித் பவிஷ்யதி - ஸ்ரீவைகுண்டத்தில் ஆதிசேஷனே முதல் ரூபம்; இராமவதாரத்தின்போது லக்ஷ்மணனாக அவதரித்தது இரண்டாவது ரூபம்; க்ருஷ்ணாவதாரத்தில் பலராமனாக அவதரித்தது மூன்றாவது ரூபம்; நான்காவதாக உள்ள கலிகாலத்தில் ஒரு பெரிய மகானாக ஆதிசேஷனே அவதரிப்பார் – என்று நாரதமஹரிஷி

கூறுவதாலும்; பாகவதரின் புத்திரனாகிய ஊமை ஒருவன் எம்பெருமானாருடைய ப்ரபாவத்தை முழுவதுமாக வெளியிட்டதாலும்; யாதவப்ரகாசன் எம்பெருமானாரைக் கொல்வதற்காகக் காசியில் உள்ள மணிகர்ணிகை என்ற இடத்திற்கு அழைத்துச் சென்றபோது அந்த விவரத்தை விந்த்யமலையின் சாரலில் இவரிடம் கோவிந்தப் பெருமாள் உரைத்தார். அப்போது அங்கிருந்து புறப்பட்டுத் தனியாக எம்பெருமானார் நின்றார். அந்த நேரத்தில் ஸர்வேச்வரன் தானே இவருக்கு வழித்துணையாக வந்து, ஒரே இரவில் எம்பெருமானாரை பெரியதிருமொழி - ஒளி மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி - என்பதற்கு ஏற்ப உள்ளதான காஞ்சீபுரத்தில் சேர்த்தான் என்பதாலும்; எம்பெருமானாருக்குத் திருக்கச்சிநம்பிகள் மூலம் அனைத்து தத்துவங்களின் ஆழ்பொருள்களைப் பேரருளாளன் வெளியிட்டான் என்பதாலும்; திக்விஜயமாகப் பல இடங்களுக்கும் சென்று சைவர்கள், மாயாவாதிகள், ஜைனர்கள், பௌத்தர்கள் என்று பலருடனும் ஆயிரம் முகங்கள் கொண்டு வாதம் செய்து அவர்களை நிலைகுலையும்படிச் செய்தார் என்பதாலும்; திருவேங்கடம் மற்றும் திருநாராயாணபுரம் போன்ற இடங்களை நிர்வாஹம் செய்தார் என்பதாலும்; இவை அனைத்தையும் முழுவதுமாகக் கண்டும் கேட்டும் உலகில் உள்ளவர்கல் அனைவரும் வியந்து, மஹாபாரதம் – அவசா: ப்ரதிபேதிரே – பரவசம் அடைந்து நமஸ்காரம் போன்றவற்றைச் செய்தனர் - என்பதற்கு ஏற்ப எம்பெருமானாராகிய தன்னையே அடையும் இலக்காகவும் அடையவைக்கும் வழியாகவும் எண்ணியுள்ளனர் என்று திருவுள்ளம் பற்றி, இதனை அல்லாமல்.

வ்யாக்யானம் – (தன்னை உற்றார்) தம்முடைய ஸ்வரூபாநுரூப குண விபவங்களை உள்ளபடி தெளிந்திருக்குமவர்கள். அன்றிக்கே, **ஸம்பந்தி ஸம்பந்திக ளளவிலே க்ருபை அதிசயித்திருக்கையாகிற தம்முடைய ஸ்வபாவத்தை** உள்ளபடி தெளியப்பெற்றவர்கள் என்னுதல். அமுதனார் தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகள் விஷயத்தில் க்ருபை பண்ண விரும்புவதும், அந்த ஸ்வபாவத்தை உள்ளபடி அறிகைக்கு உத்தேச்யரென்றிறே. எம்பெருமானாருடைய ஸ்வபாவம், **தம்மை ஆச்ரயித்து இருக்குமவர்களில்காட்டில் ஸ்வஸம்பந்த ஸம்பந்திகள் விஷயத்தில் க்ருபை அதிசயித்துச் செல்லவேண்டும்படியா யிருக்கும்**. ஆகையாலிறே, "த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து" **என்று ஜீயரும் ப்ரார்த்தித்தருளினாரிறே**. இப்படிப்பட்ட ஸ்வபாவத்தை அறிந்து ஆச்ரயித்தாருடைய.

விளக்கம் – (தன்னை உற்றார்) - தனது ஸ்வரூபம், ரூபம், குணம், வைபவம் போன்ற பலவற்றையும் உள்ளதுஉள்ளபடி அறிந்தவர்கள். அல்லது தன்னுடன் ஸம்பந்தம் கொண்டவர்களிடம் ஸம்பந்தம் கொண்டவர்கள் வரை தனது க்ருபை நீள்வதற்குக் காரணமாக உள்ள தனது இயல்பை உள்ளதுஉள்ளபடி அறிந்தவர்கள் எனலாம். எம்பெருமானாருடைய இயல்பானது, தன்னை அண்டி நிற்பவர்களைக் காட்டிலும் அவர்களுடன் ஸம்பந்தம் கொண்டுள்ளவர்கள் முடிய தனது க்ருபை நீண்டிருக்கவேண்டும் என்று திருவுள்ளம் பற்றுவதாகும்; இது ஏன் என்றால் அமுதனார், எம்பெருமானாராகிய தனது அடியார்களுடன் ஸம்பந்தம் கொண்டுள்ளவர்களுக்கு வசப்பட்ட நிற்க விரும்புவதும், தனது அத்தகைய இயல்பை உள்ளதுஉள்ளபடி அறிவதற்கான தகுதி கொண்டவர் என்பதாலும் ஆகும். இதனையே ஸ்வாமி மணவாளமாமுனிகள் - யதிராஜ விம்சதி (16) - சப்தாதி போக விஷயா ருசி: அஸ்மதீயா நஷ்டா பவதி இஹ பவத் தயயா யதீந்த்ர த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து - யதிராஜரே! அழியக்கூடிய உலக இன்பங்கள் மீது எனக்கு ஏற்படும் பற்றுகளை நீக்க நீயே அருளவேண்டும். இத்தகைய இன்பங்கள் பின்வரும் நாட்களில் துன்பமே ஏற்படுத்துவதால், இவற்றை உனது கருணை மூலம் நீக்கவேண்டும். என்னை உனது தொண்டனுக்குத் தொண்டனாகக் கொள்ளவேண்டும். இதன் மூலம் நான் உன்னைச் சரணம் என்று பற்றும்படி செய்யவேண்டும். உனக்கு அர்ப்பணிக்க என்னிடம் ஏதும் இல்லை. ஆகவே என்னிடம் இருந்து எதனையும் எதிர்பாராமல் உள்ள உனது கருணை மட்டுமே கொண்டு என்னை நீ காக்க வேண்டும் – என்று ப்ரார்த்தனை செய்தார். இபப்டியாக உள்ள எம்பெருமானாருடைய இயல்பை அறிந்து அண்டி நிற்பவர்களுடைய.

வ்யாக்யானம் – (குணம் சாற்றிடும் தன்மையுற்றார்) “எம்மை நின்றாளும் பரமரே”, “நம்மை அளிக்கும் பிராக்களே”, “தம்மடியார் அடியார் தமக்கடியார் அடியார் தம்மடியார் அடியோங்களே”, “சிறு மாமனிசராய் என்னை ஆண்டார் இங்கே திரியவே”, “தொண்டர் சேவடி செழும் சேறு என் சென்னிக்கு அணிவனே”, “கடல்மல்லைத் தல சயநம் ஆர் எண்ணு நெஞ்சுடையார் அவர் எம்மை ஆள்வாரே”, “தண்சேறை எம்பெருமான் தாள் தொழுவார் காணுமென் தலை மேலாரே” **என்று ப்ரதம பர்வ நிஷ்டரான ஆழ்வார்கள் ததீய விஷயத்திலே அருளிச்செய்த குணாதிக்யத்தை யிட்டு ஸ்தோத்ரம் பண்ணுகையாகிற ஸ்வபாவத்தை யுடையராயிருப்பார். தன்மை** – ஸ்வபாவம், **சாற்றுதல்** - ப்ரகாசமாகச் சொல்லுதல்.

விளக்கம் - (**குணம் சாற்றிடும் தன்மையுற்றார்**) - திருவாய்மொழி (3-7-1) – எம்மை ஆளும் பரமரே – என்றும், திருவாய்மொழி (3-7-5) – நம்மை அளிக்கும் பிராக்களே – என்றும், திருவாய்மொழி (3-7-10) – தம்மடியார் அடியார் தமக்கடியார் அடியார் தம்மடியார் அடியோங்களே – என்றும், திருவாய்மொழி (8-10-3) – அவனடியார் சிறுமாமனிசரா யென்னை யாண்டார் இங்கே திரியவே – என்றும், பெருமாள் திருமொழி (2-3) – தொண்டர் சேவடிச் செழுஞ்சேறு என் சென்னிக்கணிவனே – என்றும், பெரியதிருமொழி (2-6-2) – கடல்மல்லைத் தலசயனம் ஆரெண்ணும் நெஞ்சுடையார் அவர் எம்மை ஆள்வாரே – என்றும், பெரியதிருமொழி (7-4-1) – தண்சேறை யெம்பெருமான் தாள் தொழுவார் காண்மின் என் தலை மேலாரே - என்றும் கூறுவதற்கு ஏற்ப, பக்தியின் முதல் நிலையில் நிற்பவர்களாகிய ஆழ்வார்கள், அவனுடைய அடியார்கள் விஷயத்தில் அருளிச்செய்த "குணத்தின் மேன்மை" என்பதை, எம்பெருமானாருடைய அடியார்கள் விஷயத்திலும் கூறித் துதித்தல் என்ற இயல்பைக் கொண்டவர்களாக இருப்பவர்கள்.

வ்யாக்யானம் – (இல்லை என்றறிந்து) "தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்ட ப்ரிய தர்ஸநம்" என்னுமாப்போலே **இதுதான் துர்லபம்**, "விஷயப்ரவணனுக்கு அத்தைவிட்டு, பகவத்விஷயத்திலே வருகைக்குள்ள அருமை போலன்றிறே, ப்ரதம பர்வத்தைவிட்டு சரமபர்வத்திலே வருகைக்குள்ள வருமை" என்றும் சொல்லுகிறபடியே **மேட்டுமடையான இவ்வத்யாவஸாயத்தை யுடையவர் ஒருவருமில்லை யென்றறிந்து. இல்லை என்று திருவுள்ளம் பற்றி என்றப**டி. இந்த ஸூஷ்மார்த்தத்தைத் தெளிந்திருக்குமவர் இவர் ஒருவருமே யென்றிருக்கிறார் காணும் அமுதனார். (**இராமாநுசன்**) **எம்பெருமானார். தம்முடைய பூர்வாவதாரத்தில் வெளியிடமாட்டாத வர்த்தத்தைக் காணும் இப்போது வெளியிடத் தொடங்கினார்**.

விளக்கம் – (இல்லை என்றறிந்து) - ஸ்ரீமத்பாகவதம் (11-2-29) - துர்லபோ மாநுஷோ தேஹோ தேஹிநாம் க்ஷணபங்குர: தத்ராபி துர்லபம் மந்யே வைகுண்ட ப்ரிய தர்ஸநம் - உயிர்களுக்கு, க்ஷணநேரத்தில் அழியக்கூடிய மனித சரீரம் கிட்டுவது அரிதாகும்; அது, கிடைத்தபோதிலும் ஸ்ரீவைகுண்டநாதனுடைய ப்ரியத்திற்கு இலக்கானவர்களைக் காண்பது மிகவும் அரிதாகும் – என்பது போன்று, இத்தகைய நிலை கிட்டுவதே அரிதாகும்; ஸ்ரீவசனபூஷணம் (415) - விஷயப்ரவணனுக்கு அத்தைவிட்டு,

பகவத்விஷயத்திலே வருகைக்குள்ள அருமை போலன்றிறே, ப்ரதம பர்வத்தைவிட்டு சரமபர்வத்திலே வருகைக்குள்ள வருமை – என்று கூறுவதற்கு ஏற்ப தன்மையைக் கொண்டவர்கள் யாரும் இல்லை என்று அறிந்து கொண்டு. அதாவது இத்தகைய நுட்பமான உண்மையை அறிந்துள்ளவர் இவர் ஒருவர் மட்டுமே என்று அமுதனார் சிந்தித்தபடி உள்ளார். (இராமாநுசன்) - எம்பெருமானார். தனது முந்தைய அவதாரங்களில் வெளியிடாத ஆழ்பொருளையே இங்கு வெளியிடத் தொடங்கினார்.

வ்யாக்யானம் – (தன் தகவால்) "ஸவீத்ரீ முக்தாநாம் ஸகல ஜகதேந: ப்ரசமநீ கரீயோபி: தீர்த்தை: உபசித ரஸா யாமுந முகை: நிருச்சேதா நிம்ந இதரம் அபி ஸமாப்லாவயதி மாம் யத்ருச்சா விக்ஷேபாத் யதிபதி தயா திவ்ய தடிநீ" என்கிறபடியே **கரை கட்டாக்காவேரி** போலே பெருகி வருகிற **தம்முடைய பரம க்ருபையாலே**. இக் க்ருபை பூர்வாவதாரத்திலே **ராம ஸௌந்தர்யத்தாலே** அமுக்குண்டு நிற்கையாலே, இவ்வர்த்தத்தை வெளியிட மாட்டாதே யிருந்தார் என்றபடி.

விளக்கம் – (தன் தகவால்) - யதிராஜஸப்ததி (60) - ஸவீத்ரீ முக்தாநாம் ஸகல ஜகதேந: ப்ரசமநீ கரீயோபி: தீர்த்தை: உபசித ரஸா யாமுந முகை: நிருச்சேதா நிம்ந இதரம் அபி ஸமாப்லாவயதி மாம் யத்ருச்சா விக்ஷேபாத் யதிபதி தயா திவ்ய தடிநீ - முக்தி பெறத் தகுதியான சேதனர்களை உருவாக்கியபடி உள்ளது; இந்த உலகில் உள்ள பாவங்கள் அனைத்தையும் நீக்கியபடி உள்ளது; மிகவும் உயர்ந்த ஆசார்யர்களான ஆளவந்தார் போன்றவர்களால் பெருமைப்படுத்தப்பட்டது - இவை என்ன என்றால், வற்றாமல் ஓடும் கங்கை போன்ற யதிராஜரின் கருணை வெள்ளம் ஆகும். அந்த வெள்ளமானது யாருக்கும் தாழாமல் நான் இருந்தாலும், தனது கொந்தளிப்பு மூலம் என் மீது பாய்ந்து, என்னை அவரது திருவடிகளில் மூழ்க வைக்கிறது - என்பதற்கு ஏற்ப கரையில் அடங்காமல் பொங்கும் காவேரி போன்று பெருகி வருகின்ற தனது உயர்ந்த க்ருபை மூலமாக. இத்தகைய க்ருபையானது தனது முந்தைய அவதாரமான லக்ஷ்மண அவதாரத்தில், இராமனுடைய அழகு காரணமாக வெளிவராமல் நின்றது; ஆகவே அப்போது இந்தக் கருத்தை வெளிப்படுத்தாமல் இருந்தார்.

வ்யாக்யானம் – (தன்னையுற்று ஆள் செய்யும் தன்மையினோர்) "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குரூணாம்" என்றும், "நித்யம் யதீந்த்ர தவ திவ்ய வபு: ஸம்ருதௌ மே ஸக்தம் மநோ பவது வாக்குண கீர்த்தநேஸௌ க்ருத்யம் ச

தாஸ்ய கரணம் து கரத்வயஸ்ய வ்ருத்த்யந்தரேஸ்து விமுகம் கரணத்ரயம் ச" என்றும், "ஸ்ரீமந் யதீந்த்ர தவ திவ்ய பதாப்ஜ ஸேவாம்" என்றும் சொல்லுகிறபடியே, தம்மையொழிய வேறு ஒரு விஷயாந்தரம் அறியாதபடி ஆச்ரயித்து **கரண த்ரயத்தாலும் தமக்கு ஸகலவித கைங்கர்யங்களும் பண்ணவேணுமென்னும் ஸ்வபாவத்தை யுடையரா யிருக்குமவர்கள். தன்மையினோர் – ஸ்வபாவமுடையார்**.

விளக்கம் – (தன்னையுற்று ஆள் செய்யும் தன்மையினோர்) - யதிராஜவிம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குரூணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் – என்றும், யதிராஜவிம்சதி (4) - நித்யம் யதீந்த்ர தவ திவ்ய வபு: ஸம்ருதௌ மே ஸக்தம் மநோ பவது வாக்குண கீர்த்தநேஸௌ க்ருத்யம் ச தாஸ்ய கரணம் து கரத்வயஸ்ய வ்ருத்த்யந்தரேஸ்து விமுகம் கரணத்ரயம் ச - யதிகளின் தலைவனே! உன்னுடைய எழிலான திருமேனியை எப்போதும் த்யானித்து இருக்கிம்படி நீ எனது மனதிற்கு அருள வேண்டும். உனது திருக்கல்யாண குணங்களைப் பற்றி மட்டுமே எனது நாக்கு பேசியபடி இருத்தல் வேண்டும். உனக்கு அடிமையாகத் தொண்டு புரிவதற்கு மட்டுமே எனது இரண்டு கைகளும் பயன்பட வேண்டும். மற்ற உலக நாட்டங்களில் இருந்து எனது மூன்று கரணங்களும் (வாக்கு, மனம், செயல்) முற்றிலுமாக விடுபட வேண்டும் – என்றும், யதிராஜவிம்சதி (19) - ஸ்ரீமந் யதீந்த்ர தவ திவ்ய பதாப்ஜ ஸேவாம் ஸ்ரீசைலநாத கருணா பரிணாம் தத்தாம் தாம் அந்வஹம் மம விவர்த்தய நாத தஸ்யா: காமம் விருத்தம் அகிலம் ச நிவர்த்தய த்வம் – யதிராஜரே! உனது தாமரை போன்ற திருவடிகளை நான் அன்றாடம் பணிந்து நிற்க எனக்கு அருள் புரியவேண்டும். இத்தகைய ஒரு பணியை எனக்கு முதன் முதலில், எனது ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளை (ஸ்ரீசைலநாதர்) என் மீது தான் கொண்ட கருணை காரணமாக அளித்தார். இத்தகைய உனது திருவடிகளை நான் பற்றுவதற்கு ஏற்படும் தடைகளை நீயே நீக்கவேண்டும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, தன்னை அல்லாமல் வேறு எதனையும் அறியாதபடியாக, தன்னை மட்டுமே அண்டி நின்று, மனம் வாக்கு மற்றும் சரீரம் ஆகிய மூன்றாலும் தனக்கு அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்யவேண்டும் என்ற இயல்பு கொண்டபடி உள்ளவர்கள்.

வ்யாக்யானம் – (மன்னு தாமரைத்தாள் தன்னை உற்றாள் செய்ய என்னை உற்றான் இன்று) "த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" என்றும், "ராமாநுஜார்ய சரண த்வந்த்வ கைங்கர்ய வ்ருத்தய: ஸர்வாவஸ்தாஸு ஸர்வாஸு தாரகா: போஷகாச்ச மே" என்றும் சொல்லுகிறபடியே இப்படி **ஸர்வ ப்ரகாரத்தாலும் ச்லாகநீயரா யிருக்குமவர்களை**, "உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்" என்று ஆழ்வார் அத்யவஸித்தாப் போலே, தமக்கு **தாரகாதிகளாக அத்யவஸித்து**, கம்பீராம்பஸ் ஸமுத்பூதமாய் செவ்வி பெற்றிருக்கிற செந்தாமாரை மலர் போலே யதிஸுகுமாரங்களாய் ஒன்றுக்கொன்று போலியாய் பொலிந்து, என்றும் **அத்யந்த போக்யங்களாயிருக்கிற அவர்களுடைய திருவடிகளை** "தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து" என்கிறபடியே "வழுவிலா வடிமை செய்யவேணு"மென்னும் மநோரதத்தையும், "மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத் தஸ்மாத் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத:" என்று அவனுடைய ஊற்றத்தைப் போன்ற ஊற்றத்தையு முடையராய்க் கொண்டு, **மற்றொரு பேறும் மதியாதபடி பற்றினார், மநோரதித்தபடியே அவர்களுக்கு வழுவிலாவடிமை செய்ய வேண்டும்படியாக அடியேனை இன்று திருத்தி அங்கீகரித்தருளினார். மன்னுதல் – பொருந்துதல். இவ்வங்கீகாரம் முன்பு உண்டாயிருந்த தொன்றல்ல. (இன்று உற்றான்)** "அத்யமே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதா ச மே நிசா" என்கிறபடியே "விடியா வெந்நரகம்" அற்றுப்போய் இன்று நல்வீடு உண்டாகத் தொடங்கிற்று என்கிறார்.

விளக்கம் - (மன்னு தாமரைத்தாள் தன்னை உற்றாள் செய்ய என்னை உற்றான் இன்று) - த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: - இராமானுஜருடைய தாமரை போன்ற திருவடிகளை அண்டியிருப்பவர்கள் நான்முகன் பதவியைக்கூட ஒரு புல்லாகவே கருதுவர் – என்றும், ராமாநுஜார்ய சரண த்வந்த்வ கைங்கர்ய வ்ருத்தய: ஸர்வாவஸ்தாஸு ஸர்வாஸு தாரகா: போஷகாச்ச மே - என்றும் கூறுவதற்கு ஏற்ப, திருவாய்மொழி (6-7-1) – உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் - என்று நம்மாழ்வார் ஈடுபட்டு நின்றது போன்று, தனக்கு உயிர் வாழ்வதற்கு ஏற்றவர்களாக எண்ணியபடி நின்று. மிகுந்த அழகுடன் கூடிய செந்தாமரை மலர்கள் போன்று மென்மையாகவும், ஒன்றுக்கொன்று பொருந்தியபடியும், எப்போது இன்பம் அளிக்கும்படியும் உள்ள அவர்களுடைய

திருவடிகளை. யதிராஜவிம்சதி (16) - சப்தாதி போக விஷயா ருசி: அஸ்மதீயா நஷ்டா பவதி இஹ பவத் தயயா யதீந்த்ர த்வத் தாஸ தாஸ கணாநா சரம அவதௌ யஸ் தத் தாஸதைக ரஸதா அவிரதா மம அஸ்து - யதிராஜரே! அழியக்கூடிய உலக இன்பங்கள் மீது எனக்கு ஏற்படும் பற்றுகளை நீக்க நீயே அருளவேண்டும். இத்தகைய இன்பங்கள் பின்வரும் நாட்களில் துன்பமே ஏற்படுத்துவதால், இவற்றை உனது கருணை மூலம் நீக்கவேண்டும். என்னை உனது தொண்டனுக்குத் தொண்டனாகக் கொள்ளவேண்டும். இதன் மூலம் நான் உன்னைச் சரணம் என்று பற்றும்படி செய்யவேண்டும். உனக்கு அர்ப்பணிக்க என்னிடம் ஏதும் இல்லை. ஆகவே என்னிடம் இருந்து எதனையும் எதிர்பாராமல் உள்ள உனது கருணை மட்டுமே கொண்டு என்னை நீ காக்க வேண்டும் – என்பதற்கு ஏற்ப, ஒரு குறையும் இன்றி அடிமை செய்தபடி இருக்கவேண்டும் என்ற விருப்பத்தையும், மஹாபாரதம் ஆச்வமேதிகபர்வம் (116-23) - மம மத்பக்தபக்தேஷு ப்ரீதிரப்யதிகா பவேத் தஸ்மாத் மத்பக்தபக்தாச்ச பூஜநீயா விசேஷத: - எனது அடியார்கள் மீது பக்தியுள்ளவர்களிடம் எனக்கு அதிகமான ப்ரேமை உள்ளது. ஆகவே அவர்களை நன்கு ஆராதிக்க வேண்டும் - என்று ஸர்வேச்வரனுடைய விருப்பம் போன்று தானும் எல்லையற்ற நாட்டமும் கொண்டு, **மற்றொரு பேறும் மதியாதபடி பற்றினார்** - என்பதற்கு ஏற்ப அவர்களுக்குத் தடையற்ற கைங்கர்யம் செய்ய வேண்டும்படியாக என்னைத் திருத்தி ஏற்றுக்கொண்டார். இத்தகைய அங்கீகரம் என்பது முன்பு ஏற்பட்ட ஒன்றல்ல. (**இன்று உற்றான்**) - அத்யமே ஸபலம் ஜந்ம ஸுப்ரபாதா ச மே நிசா – இன்று என் ஜன்மம் சாபல்யம் அடைந்தத்ய், நன்றாக விடிந்தது - என்பதற்கு ஏற்ப, திருவாய்மொழி (2-6-7) – விடியா வெந்நரகம் – என்பது விலகிப்போய், இன்று நல்வீடு உண்டாகத் தொடங்கியது என்கிறார்.

98. இடுமே இனிய சுவர்க்கத்தில் இன்னும் நரகிலிட்டுச்
சுடுமே அவற்றைத் தொடர்தரு தொல்லை சுழல்பிறப்பில்
நடுமே இனி நம் இராமாநுசன் நம்மை நம்வசத்தே
விடுமே சரணமென்றால் மனமே நையல் மேவுதற்கே

விளக்கவுரை - எனது மனமே! நமது முன்வினை, பின்வினை ஆகியவற்றை அழித்து, ஸம்ஸாரத்திலிருந்து விடுவிக்கவேண்டும் என்று உறுதி கொண்டு இந்த உலகில் எம்பெருமானார் திருஅவதாரம் செய்தார். அவரிடம் நாம் சென்று – ராமானுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே, சரணமேமி ராமாநுஜம், இராமாநுசன் சரணே கதி –

என்னும்படி "தேவரீரே சரணம்" என்று சரணம் புகுந்து விடுவோம். அதன் பின்னர் நம்மை இன்பம் அளிக்கவல்ல ஸ்வர்க்கத்தில் சேர்க்க எம்பெருமானார் விரும்புவாரோ? தனது திருவடிகளியே உபாயம் என்று அடைந்து விட்ட நம்மை, கேட்டவுடன் அச்சம் அளிக்கவல்லதான நரகங்களில் விழவைத்து அழித்து விடுவாரோ? "எண்ணிறந்த துன்பம் தருநிரயம் பல" என்று கூறும்படியாக உள்ள நரகங்களில் புகுந்து, நாம் துன்பப்படும்படி நம்மை உதாஸீனப்படுத்துவாரோ? இத்தகைய ஸ்வர்க்கம், நரகம் ஆகியவற்றில் புகும்படிச் செய்யும் புண்ணியபாவ கர்மங்களுக்கு விலை நிலமாக உள்ள உடலுடன், மாறி மாறிப் பிறந்து இருக்கும்படி, சக்கரம் போன்ற ஜன்மங்களில் நம்மை நிறுத்துவாரோ? இதுநாள் வரை நாம் எம்பெருமானார் திருவடிகளில் புகுந்து, அவரது திருவடியைத் தவிர வேறு ஏதும் அறியாமல் இருந்து விட்டோம்; இனிவரும் நாட்களில் நம்மை சுதந்திரமானவர்களாக மாற்றி, ஸம்ஸாரத்தில் உழலும்படிச் செய்வாரோ? (மாட்டார்) ஆகவே மனமே! நீ தளர்வு கொள்ளாதே.

அவதாரிகை - இப்படி எம்பெருமானார், தம்முடைய ஸர்வோத்க்ருஷ்டமான அதிகாரத்திலே மூட்டின உபகாரத்தை அநுஸந்தித்து ஹ்ருஷ்டரானவாறே இவருடைய திருவுள்ளமானது, "நீர் இப்படி சொன்னீரேயாகிலும் ஸர்வ நியந்தாவான ஸர்வேச்வரன் அநாதிகாலந் தொடங்கி தத் தத் கர்மாநுகுணமாக பலத்தைக் கொடுப்பதாக ஸங்கல்பித்துக் கொண்டிருக்கிறா னொருவனாகையாலே இவ்வளவும் ஸ்வர்க்க நரக கர்ப்பங்களிலே இடைவிடாதே அடைவே தட்டித் திரியவிட்டிருந்தது நம்முடைய கர்மத்தைக் கடாஷித்தன்றோ. அக்கர்மங்களை உண்டாக்கக் கடவதான ப்ரக்ருதி ஸம்பந்தம் நமக்கு இன்னும் கிடக்கையாலே, துர்வாஸனை மேலிட்டு திரும்பவும் நிக்ரஹத்துக்கு உடலான துஷ்கர்மங்களிலே அந்வயிக்கவும் யோக்யதையுண்டே. ப்ராப்தி பர்யந்தமானாலிறே நீர் இப்படி நிர்ப்பரராய்ச் சொல்லக் கூடுவது", என்று தளரா நிற்க; "**எம்பெருமானார் தம்மை சரணமென்றால் அப்படி ஸ்வர்க்க நரகாதிகள் ஒன்றிலும் விட்டுக் கொடுக்கும் ஸ்வபாவரல்லராகையாலே இனி ப்ராப்தி நிமித்தமாக நீ க்லேசிக்க வேண்டா**", **என்கிறார்**.

விளக்கம் – இவ்விதமாக எம்பெருமானார் தன்னை மிகவும் உயர்ந்த தகுதி அடையும்படியாகச் செய்த உபகாரத்தை எண்ணி மகிழ்ந்தபடி இருந்தார். அப்போது அமுதனாருடைய திருவுள்ளம் அவரிடம், "நீவிர் இவ்விதம் உரைத்தீர் என்றாலும்,

அனைத்தையும் நியமிப்பவனாகிய ஸர்வேச்வரன், எல்லையற்ற காலமாகவே அவரவர்கள் செய்த கர்மங்களுக்கான பலன்களை அளிப்பேன் என்று ஸங்கல்பித்து நிற்பவன் ஆவான். ஆகவே இதுநாள் முடிய ஸ்வர்கம், நரகம், கர்ப்பவாசம் போன்ற சுழற்சியில் சிறிதும் இடைவெளி இன்றி நம்மைச் சுழல் வைப்பது நம்முடைய கர்மங்கள் காரணமாக அல்லவோ? அத்தகைய கர்மங்களை மேலும் உண்டாக்குவதற்கான காரணமாக உள்ள இந்த உலக ஸம்பந்தம் என்பது நமக்கு இப்போதும் உள்ளது. ஆகவே தாழ்ந்த எண்ணங்கள் நமக்குத் தலைத்தூக்கி, அவனுடைய வெறுப்புக்குக் காரணமாக உள்ள தாழ்ந்த கர்மங்களில் ஈடுபடுவதற்கான தகுதி நமக்கு ஏற்படும் அல்லவோ? இவ்விதம் உள்ளபோது, அவனை அடையும் காலம் வந்தால் அல்லவோ நீவிர் கூறுவது போன்று எந்தப் பாரமும் இல்லை என உரைக்கமுடியும்?", என்று உரைத்துத் தளர்ந்து நின்றது. அப்போது அமுதனார் தனது நெஞ்சத்திடம், "எம்பெருமானார், தன்னைச் சரணம் புகுந்தவர்களை ஸ்வர்கத்திலும் நரகத்திலும் புகவிடும் இயல்பு கொண்டவர் அல்லர். ஆகவே நீ எந்தத் துக்கமும் அடையவேண்டாம்", என்கிறார்.

வ்யாக்யானம் – (**மனமே**) இப்படி அதிசங்கை பண்ணா நிற்கிற நெஞ்சே! (**எம் இராமாநுசன்**) "ஸாக்ஷாந் நாராயண தேவ: க்ருத்வாமர்த்யமயீம் தநும் மக்நாநுத்தர தே லோகாந் காருண்யாச் சாஸ்த்ர பாணிநா" என்றும், "பாபாத்வாந்த க்ஷயாயச ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர:" என்றுஞ் சொல்லுகிறபடியே **எங்களுடைய** "**முன்னைவினை பின்னைவினை யாரத்த**"**மென்று மூன்று வகைப்பட்டிருக்கிற வினைத்தொகை** யனைத்தும் நசிப்பித்து ஸம்ஸார கர்த்தத்தில் நின்றும் உத்தரிப்பிக்க வேணுமென்று **தீக்ஷித்துக் கொண்டு** இக்கொடு உலகத்திலே திருவவதரித்த எம்பெருமானார்.

விளக்கம் – (மனமே) - இவ்விதம் மிகுந்த சந்தேகம் கொண்டு நிற்கிற மனமே! (எம் இராமாநுசன்) - ஸாக்ஷாந் நாராயண தேவ: க்ருத்வாமர்த்யமயீம் தநும் மக்நாநுத்தர தே லோகாந் காருண்யாச் சாஸ்த்ர பாணிநா - நாராயணன் தனது அளவற்ற கருணை காரணமாக இந்த லோகத்தில் ஆசார்யனாக அவதரித்து, சாஸ்த்ரம் என்னும் திருக்கரங்கள் கொண்டு நம்மை ஸம்ஸாரத்திலிருந்து உயர்த்துகிறான் – என்றும், பாபாத்வாந்த க்ஷயாயச ஸ்ரீமாந் ஆவிரபூத் பூமௌ ராமாநுஜ திவாகர: - இராமானுஜன் என்னும் சூரியன் இந்த உலகில் உதித்தபோது, பாபம் என்னும் இருளானது விலகியது - என்றும்

கூறுவதற்கு ஏற்ப எங்களுடைய, ஆர்த்திப்ரபந்தம் (34) – முன்னைவினை பின்னைவினை ஆரத்தம் என்னும் - என்பதான மூன்றுவிதமான வினைக்கூட்டங்கள் அனைத்தையும் அழித்து, ஸம்ஸார குழியிலிருந்து மேலே உயர்த்தவேண்டும் என்று உறுதி பூண்டு, இந்த உலகத்தில் அவதரித்த எம்பெருமானார்.

வ்யாக்யானம் – (சரணம் என்றால்) "ராமானுஜஸ்ய சரணம் சரணம் ப்ரபத்யே" என்றும், "சரணமேமி ராமாநுஜம்" என்றும், "இராமாநுசன் சரணே கதி" என்றும், "மூலே நிவிச்ய மஹதாம் நிகம த்ருமாணாம் முஷ்ணந் ப்ரதாரக பயம் த்ருத நைகதண்ட: ரங்கேச பக்தஜந மாநஸ ராஜஹம்ஸ: ராமாநுஜ: சரணமஸ்து முநி: ஸ்வயம் ந:" என்றும், "ராமாநுஜாய முநயே நம உக்திமாத்ரம் காமாதுரோபி குமதி: கலயந் ந பீக்ஷணம் யாமாமநந்தியமிநாம் பகவத் ஜநாநாம் தாமேவ விந்ததி கதிம் தமஸ: பரஸ்தாத்" என்கிறபடியே, "**தேவரீரே சரணம்" என்கிற ஒரு உக்தி மாத்ரத்தைப் பண்ணினால்**.

விளக்கம் – (சரணம் என்றால்) - ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே – என்றும், சரணமேமி ராமாநுஜம் – என்றும், இராமாநுச நூற்றந்தாதி (13) – இராமாநுசன் சரணே கதி – என்றும், யதிராஜ சப்ததி (22) - மூலே நிவிச்ய மஹதாம் நிகம த்ருமாணாம் முஷ்ணந் ப்ரதாரக பயம் த்ருத நைகதண்ட: ரங்கேச பக்தஜந மாநஸ ராஜஹம்ஸ: ராமாநுஜ: சரணமஸ்து முநி: ஸ்வயம் ந: - ஆழ்ந்த வேர்கள் கொண்ட பரந்த வேதம் என்னும் மரத்தின் கீழ் எப்போதும் அமர்ந்துள்ளவர்; வேதங்களை வஞ்சகம் மூலம் வீழ்த்த வல்லவர்களிடம் இருந்து அதனைக் காப்பாற்றி, அதன் அச்சம் போக்குபவர்; கைகளில் த்ரிதண்டம் ஏந்தியர்; ஸ்ரீரங்கநாதனின் அடியார்களின் மனம் என்னும் குளத்தில் எப்போதும் வாழும் அன்னப்பறவை போன்றவர்; இப்படிப்பட்ட இராமாநுசர் தாமாகவே முன் வந்து என்னைக் காப்பாராக – என்றும், ராமாநுஜாய முநயே நம உக்திமாத்ரம் காமாதுரோபி குமதி: கலயந் ந பீக்ஷணம் யாமாமநந்தியமிநாம் பகவத் ஜநாநாம் தாமேவ விந்ததி கதிம் தமஸ: பரஸ்தாத்- என்று கூறுவதற்கு ஏற்ப "நீயே சரணம்" என்ற ஒரு செயலை மட்டும் செய்தால்.

வ்யாக்யானம் – **(இனிய சுவர்க்கத்தில்)** ப்ரக்ருதி வச்யராயிருப்பார்க்கு சப்தாதி போக விஷயங்களாலே அத்யந்தம் போக்யமாய்த் தோற்றுகிற ஸ்வர்க்கத்திலே. இனிமை – போக்யதை. ஸ்வர்க்கமாவது, "*த்ரைவித்யா மாம் ஸோமபா: பூத பாபா யக்ஞைர் இஷ்ட்வா*

ஸ்வர்கதிம் ப்ரார்தயந்தே தே புண்யம் ஆஸாத்ய ஸுரேந்தர லோகம் அச்நந்தி திவ்யாந் திவி தேவ போகாந்", "*தே தம் புக்த்வா ஸ்வர்கலோகம் விலாசம் க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி*' என்கிறபடியே, நச்வரமாய் ஸோபாதிகமா யிருப்பதொரு ஸுக விசேஷமிறே. இப்படிப்பட்ட ஸ்வர்க்கத்திலே.

விளக்கம் - (**இனிய சுவர்க்கத்தில்**) - இந்த உலகத்தின் பிடியில் வசப்பட்டு நிற்பவர்களுக்கு இந்த உலகியல் விஷயங்கள் மூலமாக எல்லையற்ற இன்பம் ஏற்படுவதாக தோன்றும் ஸ்வர்கத்தில். ஸ்வர்கம் என்பது *கீதை* (9-20) - *த்ரைவித்யா மாம் ஸோமபா: பூத பாபா யக்ஞைர் இஷ்ட்வா ஸ்வர்கதிம் ப்ரார்தயந்தே தே புண்யம் ஆஸாத்ய ஸுரேந்தர லோகம் அச்நந்தி திவ்யாந் திவி தேவ போகாந் – மூன்று வேதங்களில் கூறப்பட்டுள்ள முறைகளின்படி நற்பயனை அளிக்கவல்ல கர்மங்களைச் செய்து, யாகத்தில் ஸோம ரஸத்தைப் பருகி, பாபங்கள் அனைத்தும் நீங்கப் பெற்று என்னை யாகங்களால் உபாஸித்து ஸ்வர்கம் அடைவதை ப்ரார்த்திக்கிறார்கள். அவர்கள் புண்ணிய பயனின் வடிவாக உள்ள தேவலோகத்தை அடைந்து, தேவதைகள் அனுபவிக்கும் இன்பங்களை அனுபவிக்கிறார்கள் – என்றும், கீதை* (9-21) – *தே தம் புக்த்வா ஸ்வர்கலோகம் விலாசம் க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி – அவர்கள் பரந்து விரிந்துள்ள ஸ்வர்கலோகத்தை அனுபவித்த பின்னர், அந்தப் புண்ணிய பலன்கள் தீர்ந்தவுடன், இந்தப் பூமியை மீண்டும் அடைகிறார்கள்* – என்றும் கூறுவதற்கு ஏற்ப தாழ்ந்ததாகவும், பயனுடன் கூடியதாகவும் உள்ள இடம் அல்லவோ? அப்படிப்பட்ட ஸ்வர்கத்தில்.

வ்யாக்யானம் – (இடுமே) இட்டு வைப்பாரோ. "*தந்நது: கேந ஸம்பிந்நம்*" இத்யாதிப்படியே அதுக்கு இதோபி விலக்ஷணமாயிருந்ததேயாகிலும், முமுக்ஷுவுக்கு நரக கல்பமாயும் ப்ரதிகூலமாயுமிறே யிருப்பது. "தேவேந்த்ராதிகம் பதம் ஏதே வை நிரயா: தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந:", "க்ஷேத்ராணி மித்ராணி தநாநி நாத புத்ராச்ச தாரா: பசவோ க்ருஹாணி, த்வத் பாதபத்ம ப்ரவணாத்ம வ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூல ரூபா:" என்னக் கடவதிறே. "பல நீ காட்டிப் படுப்பாயோ", "இன்னம் கெடுப்பாயோ", "போர வைத்தாய் புறமே", "நெறி காட்டி நீக்குதியோ", "அற்ப சாரங்கள் அவை சுவைத்து அகன்று ஒழிந்தேன்", "கூவிக் கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ" என்றும் **ப்ராக்ருத ஸுகத்தைக் கட்டடங்க ப்ரதிகூலமாகவும் ஸ்வரூப நாசகமாகவும் நம்மாழ்வார் அநுஸந்தித்தருளினாரி**றே.

விளக்கம் – (இடுமே) - சேர்ப்பாரோ? அதாவது இராமாநுசர், இப்படிப்பட்ட ஸ்வர்கத்தில் நம்மைக் கொண்டு சேர்ப்பாரோ? *தந்நது: கேந ஸம்பிந்நம்* - என்பதற்கு ஏற்ப ஸ்வர்கமாவது இந்த உலகத்தை விட்டு மேம்பட்டதாக உள்ளபோதிலும், மோக்ஷத்தில் விருப்பம் கொண்ட ஒருவனுக்கு அது நரகத்தைப் போன்றே விரும்பத்தகாத ஒன்றாகவே அல்லவோ உள்ளது? மஹாபாரதம் சாந்திபர்வம் (பீஷ்மர் யுதிஷ்டிரனிடம் கூறுவது) – தேவேந்த்ராதிகம் பதம் ஏதே வை நிரயா: தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந: - பரமாத்மாவின் ஸ்ரீவைகுண்டத்தை ஒப்பிடும்போது, ஸ்வர்க்கம் உள்ளிட்ட பலவும் தாழ்வான நரகம் போன்றவையே – என்றும், ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் – க்ஷேத்ராணி மித்ராணி தநாநி நாத புத்ராச்ச தாரா: பசவோ க்ருஹாணி, த்வத் பாதபத்ம ப்ரவணாத்ம வ்ருத்தேர் பவந்தி ஸர்வே ப்ரதிகூல ரூபா: – எனது எஜமானனே! நிலங்கள், நண்பர்கள், செல்வம், புத்திரர்கள் மனைவி, பசுக்கள், வீடுகள் போன்ற அனைத்தும் உன்னுடைய தாமரை போன்ற திருவடிகளில் ஈடுபட்டு நிற்பவர்களுக்கு விரோதிகளாக உள்ளன – என்றும் கூறுவது காண்க. திருவாய்மொழி (6-9-9) – பல நீ காட்டிப் படுப்பாயோ – என்றும், திருவாய்மொழி (6-9-8) - இன்னம் கெடுப்பாயோ – என்றும், திருவாய்மொழி (5-1-5) – போர வைத்தாய் புறமே – என்றும், பெரியதிருவந்தாதி (6) – நெறி காட்டி நீக்குதியோ – என்றும், திருவாய்மொழி (3-2-6) – அற்ப சாரங்கள் அவை சுவைத்து அகன்று ஒழிந்தேன் – என்றும், திருவாய்மொழி (6-9-9) – கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ – என்றும் பலவிதங்களில், இங்கு அனுபவிக்கின்ற இன்பத்தை முற்றிலுமாக விருப்பத் தகாததாகவும், ஆத்மஸ்வரூபத்திற்கு அழிவு ஏற்படுத்த வல்லதாகவும் நம்மாழ்வார் அருளிச்செய்தார் அல்லவோ?

வ்யாக்யானம் – (இன்னும் நரகில் இட்டுச் சுடுமே) "உபாயோபேய பாவேந தத்வதஸ் ஸர்வ தேசிகை: ஸுநிச்சிதாங்க்ரி பத்மாய" என்கிறபடியே, **தன் திருவடிகளையே உபாயமென்றும் உபேயமென்றும் அத்யவஸித்து, அநந்யார்ஹராய்ப் போன பின்பு,** கேட்டபோதே அஞ்சவேண்டும்படி, அதி துஸ்ஸங்களான ரௌவராதி நரகங்களிலே விழ விட்டு தஹிப்பிப்பாரோ. "க்ருச்ச்ரேண தேஹாந் நிஷ்க்ராந்திம் யாம்ய கிங்கர தர்சநம்; யாதநா தேஹ ஸம்பந்தம் யாம்ய பாசைச்ச கர்ஷணம், உக்ர மார்க்க கத க்லேசம் யமஸ்ய புரத ஸ்த்திதிம்; தந்நியோக வசாயா தயா தநாச்ச ஸஹஸ்ரச:, ச்ருத்வா ஸ்ம்ர்த்வாச

தூயேஹம் தத் ப்ரவேச பயாகுல:" என்றும், "கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால் படுவதோர் கெடுமிறைக்கஞ்சி" என்றும், "**எண்ணிறந்த துன்பம் தரு நிரயம் பல**" என்றும் சொல்லப்பட்ட நரகங்களிலே சென்று, துக்கப்படும்படி உதாஸீநராயிருப்பாரோ என்றபடி.

விளக்கம் - (**இன்னும் நரகில் இட்டுச் சுடுமே**) - உபாயோபேய பாவேந தத்வதஸ் ஸர்வ தேசிகை: ஸுநிச்சிதாங்க்ரி பத்மாய - என்பதற்கு ஏற்ப, தனது திருவடிகளையே உபாயம் மற்றும் உபேயம் என்றும் எண்ணியபடி நின்று, வேறு யாரிடமும் அடிமையாக நிற்காத நிலையை அடைந்த பின்னர், காதுகளால் கேட்கும்போதே நடுங்கவேண்டும்படியாக உள்ள மிகவும் க்ரூரமான ரௌரவம் முதலான நரகங்களில் நம்மை எரியவிடுவாரோ? க்ருச்ச்ரேண தேஹாந் நிஷ்க்ராந்திம் யாம்ய கிங்கர தர்சநம்; யாதநா தேஹ ஸம்பந்தம் யாம்ய பாசைச்ச கர்ஷணம், உக்ர மார்க்க கத க்லேசம் யமஸ்ய புரத ஸ்த்திதிம்; தந்நியோக வசாயா தயா தநாச்ச ஸஹஸ்ரச:, ச்ருத்வா ஸ்ம்ர்த்வாச தூயேஹம் தத் ப்ரவேச பயாகுல: - என்றும், பெரியதிருமொழி (1-6-5) – கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால் படுவதோர் கெடுமிறைக்கஞ்சி – என்றும், இராமாநுச நூற்றந்தாதி (30) – எண்ணிறந்த துன்பம் தரு நிரயம் பல - என்றும் கூறப்படும் நரகங்களில் சென்று நாம் துக்கம் அடையும்போது, அதனைக் கண்டும் காணாமல் இருப்பாரோ என்று கருத்து.

வ்யாக்யானம் – (அவற்றைத் **தொடர் தரு தொல்லை சுழல் பிறப்பில் நடுமே**) "கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி" என்கிறபடியே அந்த ஸ்வர்க நரகாதிகளுக்கீடான புண்ய பாப ரூப கர்மார்ஜநத்துக்கு ப்ரஹ்ம சப்த வாச்யமான சரீரம், ஹேதுவாயிருக்கையாலே அத்தை அநுஸரித்துக் கொண்டிருப்பதாய், "**தொன் மாயப் பல் பிறவி**" என்கிறபடி **அநாதியாய்**, "ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வ கர்மபி:" என்றும், "மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து" என்றும் சொல்லுகிறபடியே **சக்ரம்போலே சுழன்று** வாரா நின்றுள்ள ஜந்ம பரம்பரைகளிலே நிறுத்துவாரோ. அவற்றில் அந்வயிக்கும்படி ப்ரவர்த்திப்பிப்பாரோ என்றபடி. **நடுதல்** – ஸ்தாபித்தல்.

விளக்கம் – (அவற்றைத் **தொடர் தரு தொல்லை சுழல் பிறப்பில் நடுமே**) - கீதை (3-15) – கர்ம ப்ரஹ்மோத்பவம் வித்தி – கர்மங்கள் வேதங்களிலிருந்து உண்டாகின்றன - என்பதற்கு ஏற்ப இத்தகைய ஸ்வர்கம் மற்றும் நரகம் ஆகியவை ஏற்படுவதற்குக்

காரணமாக உள்ள புண்ணியம் மற்றும் பாபங்கள் நிறைந்துள்ள கர்மங்கள் தோன்றுவதற்கு, ப்ரஹ்ம சப்தம் மூலம் குறிக்கப்படும் சரீரம் காரணமாக உள்ளதால், அதனை எண்ணியபடி இருப்பதாய், திருவாய்மொழி (3-2-2) – பன்மா மாயப் பல்பிறவி - என்பதற்கு ஏற்ப எல்லையற்ற காலமாக உள்ளதாய், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை - ஏவம் ஸம்ஸ்ருதி சக்ரஸ்தே ப்ராம்யமாணே ஸ்வ கர்மபி: – இப்படியாக ஸம்ஸாரம் என்ற சக்கரத்தில் தனது கர்மம் காரணமாகச் சுழன்றபடி – என்றும், திருவாய்மொழி (2-6-8) – மாறிமாறிப் பல பிறப்பும் பிறந்து – என்றும் கூறுவதற்கு ஏற்ப, சக்கரம் போன்று சுழன்றபடி வருகிற பிறவி என்னும் தொடர்ச்சியில் நாம் நிற்கும்படி எம்பெருமானார் செய்வாரோ? அதாவது அவற்றில் நாம் தொடர்ந்தபடி இருக்கும்விதமான செயல்களில் நம்மை ஈடுபடுத்துவாரோ?

வ்யாக்யானம் – (இனி நம்மை நம் வசத்தே விடுமே) எம்பெருமானார் திருவடிகளுக்கு "நிழலும் அடிதாறும் போலே" அத்யந்த பரதந்த்ரராய்ப் போந்த நம்மை, மேலுள்ள காலமெல்லாம் ஸ்வதந்த்ரராக்கி, நம்முடைய ருசி அநுகுணமாக ஸ்வைர ஸம்ஸாரிகளாய்ப் போகும்படி விட்டுவிடுவாரோ. **எம்பெருமானார் திருவடிகளை ஆச்ரயித்து, "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே" என்னும்படியான நிஷ்கர்ஷத்தைப் பெற்ற அடியோங்களை, அப்ராப்தமானவை ஒன்றும் தட்டாதபடி பண்ணியருளுவர் என்று கருத்து.** "த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந:" என்றும், "மதந கதநை: ந க்லிச்யந்தே யதீச்வர ஸம்ச்ரயா:" என்னக் கடவதிறே. (மேவுதற்கு) "அடியார் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ" என்றும், "ராமாநுஜஸ்ய வசக: பரிவர்த்திஷீய" என்றும் சொல்லுகிறபடியே **நம்மால் ப்ரதிபாதிக்கப்படுகிற ப்ராப்தி நிமித்தமாக. (நையல்)** சிதிலமாகாதே கொள். **மேவுதல்** – பொருந்துதல், அதாவது ப்ராபித்தல். சோற்றுக்கு கரையாதே கொள் என்றால், சோறு நிமித்தமாகக் கரையாதே கொள் என்னுமாப்போலே, **மேவுதற்கு நையேல்** என்றது மேவுதல் நிமித்தமாக நையல் வேண்டா என்றபடி. "அவச்ய மநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம் நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி சதைரபி" என்கிற சாஸ்த்ரத்தை உட்கொண்டு ஸர்வேச்வரன் ஸம்ஸாரத்தில் மூட்டும் ஸ்வபாவனாய் விட்டாப்போலே, எம்பெருமானாரும் தம் சாஸ்த்ர மர்யாதையை உட்கொண்டு உதாஸீநராயிருப்பாரோ என்று அதிசங்கை பண்ணின நெஞ்சைக் குறித்து, "**எம்பெருமானாரை ஆச்ரயித்த பின்பு**

ப்ரபந்நராய் சரமபர்வ நிஷ்டரா யிருக்கும் நம்மை, உபாஸகரைப்போலே ப்ராப்யாவஸாந பர்யந்தம் ஸம்ஸார வெக்காயம் தட்டும்படி காட்டிக் கொடார்", என்றதாய்த்து.

விளக்கம் - (**இனி நம்மை நம் வசத்தே விடுமே**) - எம்பெருமானாருடைய திருவடிகளுக்கு பெரியதிருவந்தாதி (31) – நிழலும் அடிதாறும் - என்பதற்கு ஏற்ப, வேறு எதற்கும் வசப்படாமல், இதற்கு மட்டுமே வசப்பட்டு நிற்கும் நம்மை, இனி வர உள்ள காலங்களில் சுதந்திரமாக விட்டு, நம்முடைய ருசிகளுக்கு ஏற்றபடியான ஸம்ஸாரிகளாகச் செல்லவிடுவாரோ? எம்பெருமானாருடைய திருவடிகளை அண்டி நின்று, திருவாய்மொழி - தனக்காக எனக்கோளும் ஈதே – என்பது போன்ற உறுதியை அடைந்துள்ள எங்களை, இந்த உலக விஷயங்கள் ஏதும் தீண்டாமல் இருக்கும்படிச் செய்வார் என்று கருத்து. த்ருணீக்ருத விரிஞ்சாதி நிரங்குச விபூதய: ராமாநுஜ பதாம்போஜ ஸமாச்ரயண சாலிந: - இராமானுஜருடைய தாமரை போன்ற திருவடிகளை அண்டியிருப்பவர்கள் நான்முகன் பதவியைக்கூட ஒரு புல்லாகவே கருதுவர் – என்றும், யதிராஜ ஸப்ததி (45) - மதந கதநை: ந க்லிச்யந்தே யதீச்வர ஸம்ச்ரயா: - யதிராஜரை அடைந்தவர்கள் காமத் துன்பங்களில் சிக்கிக் கொள்வதில்லை - என்றும் கூறுவது காண்க. (மேவுதற்கு) - திருவாய்மொழி (2-3-10) – அடியார்கள் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ – என்றும், ஸுந்தரபாஹு ஸ்தவம் (129) – ராமாநுஜார்யவசக: பரிவர்த்திஷீய – எம்பெருமானாருடைய திருவடிகளில் எப்போதும் இருந்தபடி கைங்கர்யம் செய்யவேண்டும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப, நம்மால் விண்ணப்பிக்கப்படுவதான இலக்கு காரணமாக. (நையல்) – தகர்ந்துபோகாதபடியாக ஏற்று. "சோற்றுக்கு கரையாதே கொள்" என்றால், "சோறு கிட்டுமோ என்னும் ஐயத்தால் தளராமல் இரு" என்பது போன்று, "**மேவுதற்கு நையேல்**" என்றால் "பொருந்துதல் விஷயமாக தளரவேண்டாம்" என்று பொருள். அவச்ய மநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம சுபாசுபம் நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடி சதைரபி - முன்பு செய்யப்பட்ட பாவ புண்ணியங்கள் என்ற கர்மங்களின் பலன்களை அனுபவித்தே தீரவேண்டும்; நூறு கோடி கல்ப காலங்கள் ஆனாலும் கர்மங்கள் அனுபவிக்காமல் கழியாது - என்றுள்ள சாஸ்த்ரத்தைக் கைக்கொள்ளும் ஸர்வேச்வரன் நம்மை ஸம்ஸாரத்தில் ஆழ்ந்துகின்ற இயல்பு கொண்டவனாக உள்ளது போன்று, எம்பெருமானாரும் தகுந்த சாஸ்த்ரங்களை மதித்தவராக நம்மைக் கைவிடுவரோ என்று சந்தேகம் கொண்ட தனது நெஞ்சத்தைப் பார்த்து, "எம்பெருமானாரை அண்டி

நின்ற பின்னர் ப்ரபன்னராக, பாகவதர்களுக்கு அடிமை செய்தல் என்ற நிலையை அடைந்த நம்மை, பகவத் உபாஸகர் போன்று அவனை அடையும் காலம் முடிய ஸ்மஸாரத் துன்பங்கள் பீடிக்கும்படியாகச் செய்யவிட மாட்டார்", என்கிறார்.

வ்யாக்யானம் – "மனமே நையல் மேவுதற்கே" என்று சேதந ஸமாதியாலே அருளிச் செய்கிறார். அசித்தைக்கூட திருத்தும்படி காணும் இவருடைய உபதேசமிருப்பது. "ந கலு பாகவதாயமவிஷயம் கச்சந்தி", "பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந் ப்ரபுரஹமந்ய நிருணாம் வைஷ்ணவாநாம்", "த்யஜபட தூரதரேண தாநபாபாந்" என்னக் கடவதிறே. "**எத்தினால் இடர்க்கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே" என்று இவ்வர்த்தத்தை ப்ரதம பர்வத்திலே திருமழிசைப்பிரானும் அருளிச்செய்தாரிறே.**

விளக்கம் - (**மனமே நையல் மேவுதற்கே**) - சேதந ஸமாதியால் அருளிச்செய்தார். அசித்தையும் திருத்தும்விதமாக இவருடைய உபதேசம் உள்ளது. ந கலு பாகவதா யமவிஷயம் கச்சந்தி - பாகவதர்களுக்கு யமனுக்கும் எந்தவிதமான பொதுவான விஷயமும் இல்லை (தொடர்பு இல்லை) – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் – பரிஹர மதுஸூதந ப்ரபந்நாந் ப்ரபுரஹமந்ய நிருணாம் ந வைஷ்ணவாநாம் – (யமன் கூறுவது) மதுஸூதனனை அண்டியவர்கள் அல்லாமல் மற்றவர்களுக்கே நான் எஜமானன் – என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் (3-7-33) - கமலநயந வாஸுதேவ விஷ்ணோ தரணிதராச்யுத சங்கசக்ரபாணே பவ சரணமிதீரயந்தி யே வை த்யஜ பட தூரதரேண தாநபாபாந் – யமன் தனது கிங்கரனிடம், "தாமரை போன்ற கண்கள் கொண்டவனே! வாஸுதேவா! விஷ்ணுவே! அடியார்களை நழுவவிடாதவனே! சங்கு மற்றும் சக்கரங்களைத் திருக்கரங்களில் கொண்டவனே! நீயே எனக்கு அடைக்கலம் – இவ்விதமாகக் கூறுபவர்கள் எந்தவிதமான பாவங்களும் அற்றவர்கள் ஆவர். அவர்களை நீ அணுகாமல், அவர்களை விட்டு விலகிச் செல்வாயாக", என்றான் – என்றும் உள்ளது காண்க. திருச்சந்தவிருத்தம் (115) – எத்தினால் இடர்க்கடல் கிடத்தி ஏழை நெஞ்சமே – என்று இந்தக் கருத்தையே பகவத் விஷயம் குறித்து திருமழிசையாழ்வாரும் அருளிச்செய்தார் அல்லவோ?

99. தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனிய வாதரும் நான்மறையும்

நிற்கக் குறும்புசெய் நீசரும் மாண்டனர் நீள் நிலத்தே
பொற்கற்பகம் எம் இராமானுச முனி போந்த பின்னே

விளக்கவுரை – வீணான வறட்டு வாதங்கள் கொண்டு சமணர்கள்; பேய் போன்று நம்மை எது பற்றியுள்ளது என்று அறியாமல் உள்ள பௌத்தர்கள்; தன்னை ஸர்வேச்வரன் என்று வியந்து இந்த உலகம் ஆராதனை செய்யவேண்டும் என்று எண்ணம் கொண்டும், அதற்குத் தகுதியாக ஜடாமுடியைத் தரித்துள்ள ருத்ரனின் உபதேசங்களின் வழி நிற்கும் பாசுபதர்கள்; ப்ரமாணம் போன்ற ஏதும் இல்லை என்றும், அனைத்தும் சூன்யமே என்றும் வாதம் செய்யும் மாத்யமிகர்கள்; மேலே கூறியவர்கள் போன்று அல்லாமல், வேதங்கள் உண்மையான ப்ரமாணமே என்று ஏற்றபோதிலும் அவற்றுக்குத் தவறான விளக்கம் உரைக்கும் பாஸ்கர, யாதவப்ரகாச மதத்தினர்கள்; இந்த ப்ரக்ருதி மண்டலம் மட்டுமே கர்மம் செய்தபடி உள்ளது, ப்ரக்ருதி தவிர வேறு ஈச்வரன் இல்லை, ப்ரக்ருதி – புருஷன் குறித்த விவேகம் ஏற்படுவதே மோக்ஷம், ஆத்ம ப்ரபத்தி என்பதே மோக்ஷம் என்று பலவிதமாகப் புலம்புபவர்கள் – இப்படிப்பட்ட அனைவருடைய கதியும் நீண்ட பரப்புள்ள இந்தப் பூமியில் என்ன ஆயிற்று என்றால் – இந்த உலகில் உள்ளவர்களுக்கு மட்டும் அல்லாமல் தேவர்களுக்கும் கற்பக மரம் போன்றவரும், இந்த உலகில் பலரும் இருக்க இந்த உலகில் ஒரு சிறு பொருளாக உள்ள என்னைக் காப்பாற்ற வந்தவரும் ஆகிய எம்பெருமானார் அவதரித்தவுடன் – தங்களுடைய தத்துவங்கள் அனைத்தும் ஓய்ந்து மாண்டனர்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே எம்பெருமானாரை ஆச்ரயித்த பின்பு, “நம்மை நம் வசத்தே விடுமே” என்று இவர் மஹாவிச்வாஸத்தோடே சொன்னவாறே; “அது ஸத்யம். ஆனாலும் ஸம்யக் ஜ்ஞாநமும், ததநுரூபமான அநுஷ்டாநமும் இவ்விரண்டையும் அடைவே அறிவிப்பிக்க கடவதான வேதம் நடையாடாதபடி அத்தை மூலையடியே நடப்பித்துக் கொண்டு உபத்ரவ காரிகளான பாஹ்ய குத்ருஷ்டிகள் தனிக்கோல் செலுத்தும் தேசமென்பது” என்ன; ஸமஸ்த புருஷார்த்த ப்ரதத்வத்தாலே “கற்பகம்” என்று சொல்லப்படுகிற எம்பெருமானார் இந்த மஹாப்ருதிவியிலே அவதரித்த பின்பு அப்படிப்பட்ட நீச ஸமய நிஷ்டரெல்லாரும் ஸமூலகமாக நஷ்டமாய்ப் போனார்க ளென்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் இவர், "எம்பெருமானாரை அண்டி நின்ற பின்னர் நம்மை நம்முடைய மனதிற்கு ஏற்றபடி நடக்க எம்பெருமானார் விட்டுவிருவாரோ?", என்று மஹாவிச்வாஸத்துடன் உரைத்தார். இதனைக் கேட்ட ஒரு சிலர் அமுதனாரிடம், "அது ஸத்யமே ஆகும். ஆனால் சரியான ஞானம் மற்றும் அதற்கு ஏற்றபடியான செய்கைகள் போன்ற இரண்டையும் முழுவதுமாக அறிவிப்பது வேதமே ஆகும்; அத்தகைய வேதமானது இந்த உலகில் பரவாதபடி அதனை ஒருபுறம் தள்ளி விட்டு, இதன் மூலம் நல்லவர்களுக்கு உபத்ரவம் செய்கின்ற தாழ்ந்த மதங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கொள்கைகளைப் பரப்பியபடி உள்ள இடமாக அல்லவோ இந்தப் பூமி உள்ளது?", என்றனர். இதற்கு அமுதனார் அவர்களிடம், "அனைத்துவிதமான புருஷார்த்தங்களையும் வெளியிடுவதன் காரணமாக 'கற்பகம்' என்று கொண்டாடப்படும் எம்பெருமானர், இந்தப் பரந்த பூமியில் அவதரித்த பின்னர், அப்படிப்பட்ட தாழ்ந்த மதங்கள் அனைத்தும் அடியுடன் அழிந்தன", என்று உரைக்கிறார்.

வ்யாக்யானம் – (தற்கச் சமணரும்) "தருக்கினால் சமண் செய்து" என்கிறபடியே, ப்ரமாணாநுகுணங்களா யிருந்துள்ள தர்க்கங்களாலன்றிக்கே, ஸ்வாபிநிவசாநு குணங்களான தர்க்கங்களாலே ஒரு மதத்தைக் கற்பித்து, அத்தைப் பரிபாலித்துக் கொண்டு போருகிற ஆர்ஹதரும். அன்றிகே (தற்கச் சமணரும்) பரமாணுகாரண வாதிகளாய், "பாஷாண கல்பா முக்தி:" என்றும் சொல்லுகிற நையாயிக வைசேஷிகர்களும் வேத வைதிக ப்ரத்வேஷிகளான ஜைநரும் என்னவுமாம். சமணரும் என்றது க்ஷபணகர் என்றபடி. நையாயிகரும் வைசேஷிகரும் தர்க்க ப்ரதநவாதிகளாகையாலே, தற்கர் என்று அவர்களை நிர்தேசிக்கத் தட்டில்லை.

விளக்கம் - (தற்கச் சமணரும்) - தருக்கினால் சமண் செய்து - என்பதற்கு ஏற்ப தகுந்த ப்ரமாணங்களின் அடிப்படையில் உள்ள தார்க்கங்கள் மூலமாக அல்லாமல், தாங்களாகவே உண்டாக்குகின்ற தர்க்கங்கள் மூலமாக ஒரு மதத்தை ஏற்படுத்தி, அதனை வழி நடத்திக் கொண்டு போகின்ற ஆர்ஹதர். அல்லது வேறுவிதமாகவும் பொருள் உரைக்கலாம். (தற்கச் சமணரும்) - பரமாணுக்களே அனைத்திற்கும் காரணம் என்று உரைத்து, பாஷாண கல்பா முக்தி: - என்று கூறுகின்ற நையாயிக வைசேஷிகர்கள் மற்றும் வேதத்திற்குப் புறம்பாக நிற்கின்ற ஜைனர்கள் எனலாம். சமணர் என்றால் க்ஷபணகர்

என்று பொருள். நையாயிகர்களும் வைசேஷிகர்களும் தர்க்கத்தையே முதன்மையாகக் கொண்டவர்கள் என்பதால் அவர்களை "தற்கர்" என்று கூறுவதில் தவறில்லை.

வ்யாக்யானம் – (சாக்கியப் பேய்களும்) வேத பாஹ்யரை என்னும்போது, இரண்டாம் விரலுக்கு விஷயமாம்படி ஆர்ஹதரோடு தோள்தீண்டியாய், த்யாஜ்ய உபாதேய விவேக க்லேசமமின்றிக்கே, க்ரஹீத க்ராஹிகளான பௌத்தரும். சாக்கியர் என்றது சாக்யர் என்றபடி. ஜைனநாகிறார்கள், "அங்கீக்ருத்ய து ஸப்த பங்கி குஸ்ருதிம் ஸ்யாத் அஸ்தி நாஸ்தி ஆத்மிகாம் விச்வம் த்வத் விபவம் ஜகத் ஜிநமதே நைகாந்தம் ஆசக்ஷதே பிந்நாபிந்நம் இதம் ததா ஜகதுஷே வந்த்யா மம அம்பா இதிவத் நூத்ந ப்ரஹ்மவிதே ரஹ: பரம் இதம் ரங்கேந்த்ர தே சக்ஷதாம்" என்கிறபடி கார்ய காரண ரூபேண ஜகத்து பிந்நாபிந்நமாயும், நித்யாநித்யமாயும், ஸத்யாஸத்யமாயுமிருக்கும் என்றும், "ஸ்வதேஹமாநாஹ்யாத் மாநோ மோஹாத் தேஹாபிமாந: க்ருமிகீடாதி தேஹபஞ்ஜர வர்த்திந:" என்கிறபடியே ஆத்மாக்கள் ஸ்வ ஸ்வ கர்மாநுகுணமான சரீரங்களுடைய பரிணாமத்தையே தங்களுக்கு பரிணாமாகக் கொண்டிப்பார்கள் என்றும், "ப்ராணி ஜாத மஹிம் ஸந்த: மநோ வாக்காய கர்மபி: திகம்பராச் சரந்த்யேவ யோகிநோ ப்ரஹ்மசாரிணா: மயூரபிஞ்ச ஹஸ்தாஸ்தே க்ருதவீராஸ நாதிகா: பாணிபாத்ரேஷு புஞ்ஜாநா: லூநகேநாச்ச மௌநிந: ஸதா க்ஷபணகாசர்யா க்ருதமந்த்ரா துராஸதா: குருபதிஷ்ட மார்கேண ஜ்ஞாந கர்ம ஸமுச்சயாத் மோக்ஷோ பந்த விரக்தஸ்ய ஜாயதே புவி கஸ்யசித்" என்கிறபடியே, மல தாரண ஹிம்ஸாதிகளாலும் ஆத்மாஜ்ஞாநத்தினாலும் ப்ரக்ருதி விநிர்முக்தராய் ஊர்த்த்வ கதியை ப்ராபியா நிற்கை மோக்ஷம் என்றும் வேதாந்த விருத்தார்த்தங்களை வாய் வந்தபடி பரக்கச் சொல்லுமவர்கள்.

விளக்கம் - (சாக்கியப் பேய்களும்) - "வேதங்களுக்குப் புறம்பாகப் பொருள் கூறுபவர்கள்" என்று உரைக்கும்போது இரண்டாவது விரலால் சுட்டிக் காண்பிப்பதற்கு ஏற்றபடியாக, ஆர்ஹதர்களோடு உறவாகின்றவர்களும், "எதனை ஏற்கவேண்டும், எதனைக் கைவிட வேண்டும்" என்று அறியாமல் உள்ளோம் எனத் துன்பம் அடையாதபடி கைக்கொள்ளத் தகாதவற்றைக் கைக்கொள்கின்றவர்களும் ஆகிய பௌத்தர்கள். சாக்கியர் என்றால் சாக்யர் என்பதாகும். ஜைனர்கள் யார்? ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-12) - அங்கீக்ருத்ய து ஸப்த பங்கி குஸ்ருதிம் ஸ்யாத் அஸ்தி நாஸ்தி ஆத்மிகாம் விச்வம் த்வத் விபவம் ஜகத் ஜிநமதே நைகாந்தம் ஆசக்ஷதே பிந்நாபிந்நம் இதம் ததா ஜகதுஷே வந்த்யா மம அம்பா

இதிவத் நூத்ந ப்ரஹ்மவிதே ரஹ: பரம் இதம் ரங்கேந்த்ர தே சக்ஷதாம் - ஸ்ரீரங்கநாதா! இருக்கும், இல்லாமல் இருக்கும், இருக்கவும் இருக்கும் இல்லாமலும் இருக்கும் என்பது போன்ற ஏழு விதமான வாதங்களை முன்னே வைத்து ஜைனர்கள் செய்வது என்ன – உன்னுடைய விபூதியாக உள்ள அனைத்து உலகங்களையும் தங்கள் தவறான வாதங்களுக்கு இலக்காக்கி விடுகின்றனர். மேலும் சிலர் இந்த உலகங்களை ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டது என்றும், இந்த உண்மை புரிந்துவிட்டால் ப்ரஹ்மத்திற்கும் உலகத்திற்கும் வேறுபாடு இல்லை என்றும் ஏதேதோ கூறுகின்றனர். இவர்களின் சொற்கள் எப்படி உள்ளது என்றால் – எனது தாய் மலடி – என்று அவர்களே கூறுவது போன்று உள்ளது. இப்படிப்பட்டவர்களுக்கு ஜைனர்கள் தங்களது மிகவும் உயர்ந்த ரஹஸ்ய உபதேசங்களைச் செய்யட்டும் - என்பதற்கு ஏற்ப கார்யகாரண ரூபமாக உள்ள இந்த ஜகத்தானது பிரிந்தும் பிரியாமலும், நித்யமாகவும் அநித்யமாகவும், ஸத்யமாகவும் அஸத்யமாகவும் இருக்கும் என்றும், ஸ்வதேஹமாநாஹ்யாத் மாநோ மோஹாத் தேஹாபிமாந: க்ருமிகீடாதி தேஹபஞ்ஜர வர்த்திந: - என்பதற்கு ஏற்ப ஆத்மாக்கள் தங்களுக்கு உரிய கர்மங்களுக்கு ஏற்றபடியாக உள்ள சரீரங்களுடைய அளவையே கொண்டிருப்பர் என்றும், ப்ராணி ஜாத மஹிம் ஸந்த: மநோ வாக்காய கர்மபி: திகம்பராச் சரந்த்யேவ யோகிநோ ப்ரஹ்மசாரிணா: மயூரபிஞ்ச ஹஸ்தாஸ்தே க்ருதவீராஸ நாதிகா: பாணிபாத்ரேஷு புஞ்ஜாநா: லூநகேநாச்ச மௌநிந: ஸதா க்ஷபணகாசர்யா க்ருதமந்த்ரா துராஸதா: குருபதிஷ்ட மார்கேண ஜ்ஞாந கர்ம ஸமுச்சயாத் மோக்ஷோ பந்த விரக்தஸ்ய ஜாயதே புவி கஸ்யசித் - என்பதற்கு ஏற்ப அஹிம்ஸை போன்றவற்றாலும் ஆத்மஞானத்தாலும் இந்த ப்ரக்ருதியிலிருந்து விடுபட்டு மேலே செல்வதே மோக்ஷம் என்றும், இப்படியாக வேதாந்தங்களுக்கு முரணாகத் தங்கள் வாய்க்கு வந்தவற்றை உரைப்பவர்கள் ஆவர்.

வ்யாக்யானம் - சமணர் என்றது சார்வாகரையும் கூட்டி. ஈட்டிலே இவரையும் சேரப் பிடித்திறே எடுத்தது. அவர்கள் ஆகிறார்கள் “ப்ரதிவ்யாபஸ் தேஜோவர்யுரிவிதி தத்வாநி” என்கிறபடியே ப்ருதிவ்யாதி பூத சதுஷ்டயமே தத்வம், ஆகாசாதி பூதாந்தரமில்லை என்றும், “தேப்யச் சைதந்ய கிண்வாதிப்யோமத சக்திவத்” என்றும், “க்ரமுகபல தாம்பூல தளாவயவாதிஷு ப்ரத்யேக வித்யமாநஸ்யாபி ராகஸ்யோவாவயவிநி ஸம்யோக விசேஷாத் தேஹாரம்பக பரமாணு ஸம்ச்லேஷ விசேஷா தேவ தேஹ சைதந்ய ஆவிர்ப்பாவோ நாநுபந்த:” என்றும் சொல்லுகிறபடியே ஸுரா பூரித சர்மபஸ்த்ரிகையை ஆதபத்திலே வைத்தால் சலநாதி விகாரங்கள் தன்னடையே தோற்றுமா போலேயும், வெற்றிலையும் பாக்கையும் சுண்ணாம்பையும் சேரப் பிடித்து மெல்லுமளவில் ஒரு

விசேஷம் பிறக்குமாபோலவும் அந்த ப்ருதி வ்யாதி பூதங்களுடைய கூட்டரவிலே சைதந்யம் என்று ஒரு தர்மம் பிறக்கும் என்றும், "ப்ரத்யக்ஷகம் யமேவாதி நாஸ்த்ய த்ருஷ்டத: அத்ருஷ்டவாதி பிச்சாபி நாத்ருஷ்டம் த்ருஷ்டமுச்யதே க்வாபி த்ருஷ்டம் அத்ருஷ்டஞ்சே தத்ருஷ்டம் ப்ருவதேகதம் நித்யாத்ருஷ்டம் கதம் ஸத்ஸ்யாத் சசச்ருங்காதி ஸந்நிபம் ந கல்பயௌ ஸுகீ துக்காப்யாம் தர்மா தர்மௌபரைரிஹ ஸ்வபாவேந ஸுகீ துக்கீ பவேந்நாயத்திகாரணம் சிகிநச்சக்ரயேத் கோவாகோகிலாங்க: ப்ரகூஜயேத் ஸ்வபாவ வ்யதிரேகேண வித்யதே நாஸ்ய காரணம் "இஹலோகாத்பரோ நாந்ய ஸ்வர்கோஸ்தி நரகோநவா" என்கிறபடியே ப்ரத்யஷ த்ருஷ்டமான அர்த்தமே உள்ளது, வேறொன்றுமில்லை, அந்த சைதந்யத்துக்குண்டான ஸுகதுக்கங்களே ஸ்வர்க்க நரகங்கள், வேறு சில புண்ய பாபங்களும் அவற்றாலுண்டான தர்மாதர்மங்களுமில்லை என்றும், "மோக்ஷஸ்து மரண மப்ராண ஸம்ஜ்ஞவாயு நிவர்த்தநம் அதஸ்ததர்த்தந்நாயாஸம் கர்த்துர் மஹதி பண்டித:" என்கிறபடியே அதினுடைய புரிவாகிற மரணமே மோக்ஷம், அவ்வருகொன்றுமில்லை என்று ச்ருதி வ்ருத்த ப்ரக்ரியையை ஆக்ரமித்துச் சொல்லுமவர்கள்.

விளக்கம் - "சமணர்" என்று கூறப்பட்டவர்கள் சார்வாகர்களும் சேர்த்தே ஆவர். இதன் காரணம் ஈட்டில் இவர்களையும் சேர்த்தே கூறப்பட்டது என்பதால் ஆகும். அவர்கள் யார் என்றால் ப்ரதிவ்யாபஸ் தேஜோவர்யுரிவிதி தத்வாநி - என்பதற்கு ஏற்ப ப்ருதிவி போன்ற நான்கு பூதங்கள் மட்டுமே தத்வம் என்றும், ஆகாசம் போன்ற பூதங்கள் தத்வங்கள் அல்ல என்றும்; தேப்யச் சைதந்ய கிண்வாதிப்யோமத சக்திவத் - என்றும், க்ரமுகபல தாம்பூல தளாவயவாதிஷு ப்ரத்யேக வித்யமாநஸ்யாபி ராகஸ்யோவாவயவிநி ஸம்யோக விசேஷாத் தேஹாரம்பக பரமாணு ஸம்ச்லேஷ விசேஷா தேவ தேஹ சைதந்ய ஆவிர்ப்பாவோ நாநுபந்ந: - என்றும் கூறுவதற்கு ஏற்ப வெற்றிலை பாக்கு மற்றும் சுணாம்பை ஒன்றாகச் சேர்த்து மென்றால் சிவந்த நிறம் தோன்றுவது போன்று, ப்ருதிவி முதலான பூதங்கள் ஒன்றாகச் சேரும்போது ஒரு சைதந்யம் என்னும் ஒரு தன்மை ஏற்படும் என்றும்; ப்ரத்யக்ஷகம் யமேவாதி நாஸ்த்ய த்ருஷ்டத: அத்ருஷ்டவாதி பிச்சாபி நாத்ருஷ்டம் த்ருஷ்டமுச்யதே க்வாபி த்ருஷ்டம் அத்ருஷ்டஞ்சே தத்ருஷ்டம் ப்ருவதேகதம் நித்யாத்ருஷ்டம் கதம் ஸத்ஸ்யாத் சசச்ருங்காதி ஸந்நிபம் ந கல்பயௌ ஸுகீ துக்காப்யாம் தர்மா தர்மௌபரைரிஹ ஸ்வபாவேந ஸுகீ துக்கீ பவேந்நாயத்திகாரணம் சிகிநச்சக்ரயேத் கோவாகோகிலாங்க: ப்ரகூஜயேத் ஸ்வபாவ வ்யதிரேகேண வித்யதே

நாஸ்ய காரணம் "இஹலோகாத்பரோ நாந்ய ஸ்வர்கோஸ்தி நரகோநவா - என்பதற்கு ஏற்ப ப்ரத்யக்ஷம் மூலம் காணக்கூடிய பொருள்கள் மட்டுமே உள்ளன, அவற்றைத் தவிர வேறு ஏதும் இல்லை, அந்தச் சைதந்யத்திற்கு ஏற்படுகின்ற இன்பம் மற்றும் துன்பங்களே ஸ்வர்கம் மற்றும் நரகம் ஆகும் என்றும், இவை அல்லாமல் புண்ணிய பாபங்கள் என்றும் அவற்றால் ஏற்படும் தர்ம அதர்மங்கள் அல்ல என்றும்; மோக்ஷஸ்து மரண மப்ராண ஸம்ஜ்ஞவாயு நிவர்த்தநம் அதஸ்ததர்த்தந்நாயாஸம் கர்த்துர் மஹதி பண்டித: – என்பதற்கு ஏற்ப இவற்றை அறிந்து கொண்டு மரணம் அடைதலே மோக்ஷம், இதனைக் காட்டிலும் மோக்ஷத்திற்கு வேறு வழி இல்லை என்றும் இப்படியாகப் பலவிதங்களிலும் ச்ருதிகளுக்கு விரோதமாக உள்ள பலவற்றையும் கூறுபவர்கள்.

வ்யாக்யானம் - நையாயிக வைசேஷிகராகிறார் "ப்ரத்யக்ஷாநுமாநோபமாந சப்தா: ப்ரமாணாநி" என்றும், "த்ரிதா ப்ரமாணம் ப்ரத்யக்ஷ அநுமாந ஆகமாதிதி, த்ரிப்ரேதை: ப்ரமாணைஸ்து ஜகத் கர்த்தாவகம்யதே தஸ்மாத் ததுக்த கர்மாணி குர்யாத் தஸ்யைவ த்ருப்தயே, பக்த்யைவசார்ச்சநீயோஸௌ பகவாந் பரமேச்வர: தத் ப்ரஸாதந மோக்ஷஸ் ஸ்யாத் கரணோ பரமாத்மந: கரணோ பரமேத்யாத்மா பாஷாணவதவஸ்த்தித:" என்றும் சொல்லுகிறபடியே ப்ரத்யக்ஷாதிகள் நாலும் கூட ப்ரமாணமென்றும், சப்தம் அநுமாந வித்யா ப்ரமாணமாகையாலே ப்ரத்யக்ஷாதிகள் மூன்றே ப்ரமாணமென்றும், ஜகத்துக்கு உபாதாநகாரணம் பரமாணுக்கள், ஆநுமாநிகேச்வரன் நிமித்தகாரணமென்றும், ஸம்ஸாரம் அநாதி, ஈச்வரோபாஸ்தியாலே ஸுகதுக்க ஜ்ஞாநங்கள் நசித்து பாஷாண கல்பனாயிருக்கை மோக்ஷம் என்றும் உத்ப்ரேக்ஷுக்குமவர்கள்.

விளக்கம் - "நையாயிக வைசேஷிகர்" என்பவர்கள் யாரென்றால், ப்ரத்யக்ஷாநுமாநோபமாந சப்தா: ப்ரமாணாநி - ப்ரத்யக்ஷம், அனுமானம், உபமானம், சப்தம் ஆகிய நான்கும் ப்ரமாணங்கள் – என்றும், த்ரிதா ப்ரமாணம் ப்ரத்யக்ஷ அநுமாந ஆகமாதிதி, த்ரிப்ரேதை: ப்ரமாணைஸ்து ஜகத் கர்த்தாவகம்யதே தஸ்மாத் ததுக்த கர்மாணி குர்யாத் தஸ்யைவ த்ருப்தயே, பக்த்யைவசார்ச்சநீயோஸௌ பகவாந் பரமேச்வர: தத் ப்ரஸாதந மோக்ஷஸ் ஸ்யாத் கரணோ பரமாத்மந: கரணோ பரமேத்யாத்மா பாஷாணவதவஸ்த்தித: - என்று கூறுவதற்கு ஏற்ப ப்ரத்யக்ஷம் போன்ற நான்கும் ப்ரமாணங்கள் என்றும், சப்தம் என்பது அனுமான வித்யை என்பதால்

ப்ரத்யக்ஷம் போன்ற மூன்று மட்டுமே ப்ரமாணம் என்றும், ஜகத்தின் உபாதானக் காரணம் ப்ரமாணுக்கள் என்றும், அனுமானத்தால் கூறப்படும் ஈச்வரன் நிமித்தகாரணம் என்றும், ஸம்ஸாரம் எல்லையற்ற காலமாக உள்ளது என்றும், ஈச்வரன் உபாயத்தால் இன்பதுன்ப ஞானங்கள் அழிந்து பாஷாண கல்பனாக இருத்தலே மோக்ஷம் என்றும் கூறுபவர்கள் ஆவர்.

வ்யாக்யானம் – (தாழ்சடையோன் சொல் கற்ற சோம்பரும்) தன்னை ஈச்வரன் என்று ப்ரமித்து லோகமெல்லாம் ஆராதிக்கவேணுமென்று அதற்குத் தகுதியாக தீர்க்க ஜடையைத் தரித்துக் கொண்டு ஸாதக வேஷத்தோடேயிருந்து "மோஹ சாஸ்த்ராணிகாராய" என்கிறபடியே பகவதநுமதியாலே மோஹ சாஸ்த்ரத்த ப்ரவர்த்திப்பித்த ருத்ரனுடைய வசநமான ஆகமத்தை அதிகரித்துப் போந்து அதி தாமஸராயிருக்கிற பாசுபதரும். பௌத்தரையெடுத்தவுடனே பாசுபதரை யெடுத்தது, அவர்களோபாதி இவர்களும், வேதபாஹ்யரென்னுமிடம் தோற்றுக்கைக்காக. "ப்ரதாந காரணத்வாப்யுகம ஸாம்யாத் ஸாம்க்ய நிராஸாநந்தர பாவித்வே பாசுபத நிராஸஸ்ய ப்ராப்தேபி ஸௌகதா ஆர்ஹதம நிராஸாநந்தரம் தத் ப்ரதிக்ஷேப: தஸ்யாத்யந்த வேதபாஹ்யத்வ ஜ்ஞாபநாயக்ருதா:" என்று ச்ருதப்ரகாசிகாசார்யரும் "பத்யுர ஸாமஞ்ஜ ஸ்யாத்" என்கிற அதிகரணத்துக்கு ஸங்கதி சொல்லும்போது அருளிச்செய்தாரிறே. அவர்களாகிறார் ப்ரதாநம் ஜகதுபாதாந காரணம் என்றும், ஆகம ஸித்தேச்வரன் நிமித்த காரணம் என்றும், "முத்ரிகாஷட்க தத்வஜ்ஞ: பரமுத்ரா விசாரத: பாகாஸநஸ்த மாத்மாநம் த்யாத்வா நிர்வாணம்ருச்சதி கண்டிகாருசிகஞ்சசைவ குண்டலஞ்ச சிகாமணி: பஸ்ம யஞ்ஜோபவீதஞ்ச முத்ராஷட்கம் ப்ரசக்ஷ்தே ஆபிர்முத்ரித தேஹஸ்து ந பூய இஹ ஜாயதே ருத்ராக்ஷ கங்கணம் ஹஸ்தே ஜடா சைகாசமஸ்தகே காபாலம் பஸ்மநா ஸ்நாநம் த்யாநம் ப்ரணவ பூர்வகம் தீக்ஷா ப்ரவேச மாத்ரேண ப்ராஹ்மாணோ பவதி தத் க்ஷணாத் காபாலம் வ்ரதமாஸ்த்தாய யதிர்பவதி மாநவ:" என்றும் ஸர்வஜ்ஞ ருத்ர ப்ரோக்தாக்ஷர ராசியான ஆகமத்திலே சொல்லுகிறபடியே முத்ரிகாஷட்க தாரண பகாஸநஸ்தாத்ம த்யாந ஸ்ர கும்பஸ்த்தாபஸஸ்த்த தேவதார்ச்சநா மூடாசார ஸ்மசாந பஸ்ம ஸ்நாந ப்ரணவ பூர்வக த்யாநாதி கர்மாநுஷ்டாநத்தாலே பசுபதி ஸாரூப்யத்தைப் பெறுகை மோக்ஷமாகிறது என்றும், ச்ருத்யத்யந்த வ்ருத்தார்த்தங்களை அத்யந்தம் ஆதரித்துச் சொல்லுமவர்கள்.

விளக்கம் – (தாழ்சடையோன் சொல் கற்ற சோம்பரும்) - தன்னை ஈச்வரன் என்று மயங்கி நின்று இந்த லோகம் முழுவதும் ஆராதனை செய்யவேண்டும் என எண்ணி, அதற்குத் தகுதியாக நீண்ட ஜடையைத் தரித்தபடி ஸாதகன் என்னும்படியான வேஷத்துடன் நின்று,

மோஹ சாஸ்த்ராணிகாராய – மயக்கம் அளிக்கவல்ல சாஸ்த்ரத்தை உண்டாக்கி - என்பதற்கு ஏற்ப பகவானுடைய அனுமதியின் அடிப்படையில், அனைவரையும் மயக்கவல்ல பல சாஸ்த்ரங்களை வெளிப்படுத்திய ருத்ரன். இந்த ருத்ரனுடைய வசனமாக உள்ள ஆகமத்தைப் பின்பற்றி, மிகவும் தாமஸம் நிறைந்தவராக உள்ள பாசுபத மதத்தினரும். பௌத்தர்களை உரைத்தவுடனேயே பாசுபதரைக் கூறியது ஏன் என்றால், அவர்களைப் போன்றே இவர்களும் வேதங்களுக்குப் புறம்பாக உரைப்பவர்கள் என்பதால் ஆகும். ப்ரதாந காரணத்வாப்யுகம ஸாம்யாத் ஸாம்க்ய நிராஸாநந்தர பாவித்வே பாசுபத நிராஸஸ்ய ப்ராப்தேபி ஸௌகதா ஆர்ஹதம நிராஸாநந்தரம் தத் ப்ரதிக்ஷேப: தஸ்யாத்யந்த வேதபாஹ்யத்வ ஜ்ஞாபநாயக்ருதா: - என்று ச்ருத ப்ராகாசிகையில் கூறியது காணலாம்; இதனை இவர் “பத்யுர ஸாமஞ்ஜ ஸ்யாத்” என்ற ப்ரஹ்மஸூத்ர அதிகரணத்திற்கான கருத்தை உரைக்கும்போது அருளிச்செய்தார். இவர்கள் கூறுவது என்னவென்றால் ப்ரதானமே ஜகத்தின் உபாதான காரணம் என்பதும், தங்களுடைய ஆகமத்தின் மூலம் உணர்த்தப்படும் ஈச்வரனே நிமித்த காரணம் என்பதும் ஆகும். [குறிப்பு – இங்கு பாசுபத மதத்தைக் குறித்து வ்யாக்யானம் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் பெரும்பாலும் ஸ்ரீபாஷ்யத்தில் காணப்படும் விஷயங்களே உள்ளதால், இந்தப் பகுதிக்கான ஸ்ரீபாஷ்யம் தரப்பட்டுள்ளது] மோக்ஷம் அடைவதற்கான உபாயங்களாக ஆறு அடையாளங்களை (முத்ரிகா தாரணம்) அணிதல் வேண்டும் என்கிறார்கள். காபாலர்கள் கூறுவது – ஆறு அடையாளங்களை நன்றாக அறிந்தவர்கள், உயர்ந்த அடையாளத்தை நன்கு அறிந்தவர்கள் ஆவர். பெண்ணின் யோநியில் ஆத்மா உள்ளதாக த்யானம் செய்பவர்கள் மோக்ஷம் அடைவார்கள். கண்டிகை (கழுத்தில் ருத்ராக்ஷ மாலை), ருசகம் (தலையில் ஸ்வஸ்திக் ஆபரணம்), குண்டலம் (காதணி), சிகாமணி (தலை ஆபரணம்), பஸ்மம் (சாம்பலைப் பூசிக்கொள்ளுதல்) மற்றும் யஜ்ஞோபவீதம் (பூணூல்) ஆகியவை ஆறு அடையாளங்கள் ஆகும். இந்த அடையாளத்துடன் கூடிய சரீரம் கொண்டவர்கள் மீண்டும் இங்கு பிறப்பதில்லை - என்று கூறுகிறார்கள். காலாமுகர்கள் கூறுவது - கபால பாத்ரத்தில் (மண்டை ஓடு) உணவு உண்ணவேண்டும், பிணத்தின் சாம்பலைக் கொண்டு உடலில் பூசிக்கொள்ளவேண்டும், அந்தப் பிணத்தின் சதையை உண்ணவேண்டும், கையில் சிறிய தடியை வைத்திருக்கவேண்டும், கள் நிறைந்த குடத்தை வைத்து அதில் தேவதையை ஆவாஹனம் செய்து பூஜிக்கவேண்டும். இவ்விதம் செய்தால் இந்தச் செய்கைகள் இம்மை மற்றும் மறுமைக்கான பலன்களை அளிக்கும்

உபாயங்களாகிறது – என்கிறார்கள். சைவர்கள் கூறுவது - ருத்ராக்ஷ மாலை கொண்டு கையின் மணிக்கட்டுகளில் கட்டிக்கொள்ளுதல், தலையில் ஜடை தரித்தல், கபாலத்தைக் கையில் ஏந்துதல், சாம்பலால் ஸ்நானம் செய்தல் - என்பதாகும். மேலும் இவர்கள் கூறுவது என்னவென்றால் - சிலவிதமான சடங்குகள் மூலம் மற்ற வர்ணத்தினரும் அந்தணர்களாகவும், ஸந்யாஸிகளாகவும் ஆகிறார்கள்; "தீக்ஷை மூலம் அந்தணர்கள் ஆகிறார்கள், கபால வ்ரதம் மூலம் ஸந்யாஸி ஆகிறார்கள்" - என்று பலவற்றையும் கூறுகிறார்கள். மேலும் அனைத்தும் அறிந்த ருத்ரனால் வெளிப்படுத்தப்பட்ட எழுத்துக்களின் கூட்டமாக உள்ள ஆகமத்தில் கூறுவதற்கு ஏற்ப உள்ள கர்மங்கள் மூலமாகப் பசுபதியைப் போன்ற நிலையை அடைதல் என்பதே மோக்ஷம் ஆகும் என்பர். மேலும் ச்ருதியில் கூறப்பட்ட நிகழ்வுகளை வேறுவிதமாக உரைப்பர்.

வ்யாக்யானம் – (சூனிய வாதரும்) சூந்யமே தத்வம் என்று சொல்லுகிற மாத்யமிகரும் சாக்ய வர்க்கத்திலேயாய் இருக்க, பிரித்து எடுத்தது தந் மத க்ரௌர்யத்தைப் பற்ற. பௌத்த மத ப்ரவர்த்தகர் வைபாஷிகன் என்றும், ஸௌத்ராந்திகன் என்றும், யோகாசாரன் என்றும், மாத்யமிகன் என்றும் நாலுவகைப்பட்டிருப்பரிறே. இவர்களில் முதலில் சொன்ன மூவர்க்கும், ஸ்வாப்யுபகதமாய் விஜ்ஞாந ரூபமாயிருக்கிற வஸ்துவினுடைய க்ஷணிகத்வம் ஸமாநமாயிருக்கும். பூத பௌதிகங்களும் சித்த சைதந்யங்களுமொழிய, வேறு சில ஆகமாதிகளை ஸ்வரூபேண அவர்கள் அங்கீகரித்ததில்லை.

விளக்கம் – (சூனிய வாதரும்) – "சூந்யமே உண்மை" என்று கூறுகின்ற மாத்யமிகர். இவர்கள் பௌதர்களில் ஒருவராக உள்ளபோதிலும், தனியாகப் பிரித்து உரைத்ததன் காரணம், இந்த மதத்தில் உள்ள கொடுமையான கருத்துக்களைக் கருத்தில் கொண்டே ஆகும். பௌத்த மதத்தில் வைபாஷிகர், ஸௌத்ராந்திகர், யோகாசாரர் மற்றும் மாத்யமிகர் ஆகிய நான்கு வகை உண்டு. இவர்களில் முதல் மூன்று பிரிவினர்களுக்கு ஞானமே ரூபமாக உள்ள வஸ்துவின் க்ஷணிகத்தன்மை என்பது ஒன்றாகவே உள்ளதாகும். இவர்கள் பூத பௌதிகம் மற்றும் சித்த சைதந்யம் ஆகியவற்றைத் தவிர வேறு எதனையும் ஏற்பதில்லை.

வ்யாக்யானம் - இவர்களிலே வைபாஷிகனாவான் பரமாணு ஸங்காதாத்மகமாய் ப்ரத்யக்ஷ ஸித்தமாய்க் கொண்டிருக்கும் ஜகத்து என்றும், தத் விஷய ஜ்ஞாநம் க்ஷணிகம் என்றும், ஜ்ஞாந விஷயமான பாஹ்யார்த்தங்களெல்லாம் உத்பத்தி விநாசங்களோடே கூடியிருக்கும் என்றும், க்ஷணிக விஜ்ஞாந ஸந்தாநமே ஆத்மா என்றும், இதில் ஸ்த்திரத்வ புத்தி ஸம்ஸாரம் அஸ்த்திரத்வ புத்தி மோக்ஷம் என்றும் சொல்லுமவன். ஸௌத்ராந்திகனாகிறான் ஜ்ஞாநத்திலே ஸ்வாகாரத்தை ஸமர்ப்பித்து நஷ்டமாய்ப் போந்த வர்த்தங்களெல்லாம் ஜ்ஞாநகதமான நீலாத்யாகாரத்தாலே அநுமேயங்களா யிருக்குமென்றும், அர்த்த வைசித்ர்ய க்ருதம் ஜ்ஞாந வைசித்ர்யம் என்றும், அநுமாந ஸித்தம் ஜகத், தத் விஷய ஜ்ஞாநம் க்ஷணிகம், அந்த க்ஷணிக விஜ்ஞாநம் தானுமே ஆத்மா, இதில் ஸ்த்திரத்வ புத்தி ஸம்சாரம், அஸ்த்திரத்வ புத்தி மோக்ஷம் என்றும் சொல்லுமவன்.

விளக்கம் – இவர்களில் வைபாஷிகர் என்பவர் பரமாணுக்களின் கூட்டமாகவும் ப்ரத்யக்ஷத்தால் காணத்தக்கதாகவும் உள்ளது ஜகத் என்றும், அத்தகைய விஷய ஞானம் சூந்யம் என்றும், இத்தகைய ஞானத்தின் விஷயமாக உள்ள அனைத்துமே உற்பத்தி மற்றும் அழிவுடன் காணப்படும் என்றும், க்ஷணிக புத்தியை எப்போதும் எண்ணியபடி உள்ளதே ஆத்மா என்றும், இதில் நிலையான தன்மையை அறிதலே ஸம்ஸாரம் என்றும், நிலையற்ற தன்மையை அறிதலே மோக்ஷம் என்றும் கூறுகிறார்கள். ஸௌத்ராந்திகர்கள் ஞானத்தில் தனது ஆகாரத்தை சமர்ப்பித்து இழந்து போன அனைத்தும் அந்த ஞானத்தினை உள்ளடக்கியதாக அநுமேயங்களாக இருக்கும் என்றும், அர்த்த வைசித்ர்ய க்ருதம் மற்றும் ஞான வைசித்ர்யம் என்றும், இந்த ஜகத் அனுமானத்தால் அறியப்படுகிறது என்றும், அதனைக் குறித்த ஞானம் க்ஷணிகம் என்றும், அத்தகைய க்ஷணிக விஜ்ஞானமே ஆத்மா என்றும், இது ஸ்திரமான உள்ளது என்னும் எண்ணமே ஸம்ஸாரம் என்றும், அஸ்திரமாக உள்ளன என்பது மோக்ஷம் என்றும் கூறுகிறார்கள்.

வ்யாக்யானம் – யோகாசாரனாகிறான் அர்த்தங்களைப் போலே ஸாகாரங்களா யிருந்துள்ள ஜ்ஞாநங்களும் ஸ்வயமே விசித்ரங்களா யிருக்கையாலே அர்த்த வைசித்யர்த்தத்தாலே ஜ்ஞாந வைசித்ர்யம் சொல்லவொண்ணாது என்றும், ஜ்ஞாநமே யுள்ளது பாஹ்யார்த்தங்க ளொன்றுமில்லை என்றும், அந்த ஜ்ஞாநம் க்ஷணிகமென் றறிகை மோக்ஷம் என்றும் சொல்லுமவன். "யோகாசார: ஜகத் அபலபதி அத்ர

ஸௌத்ராந்திக: தத் தீவைசித்ர்யாத் அநுமிதி பதம் வக்தி வைபாஷிகஸ்து ப்ரத்யக்ஷம் தத் க்ஷணிகயதி தே ரங்கநாத த்ரய: அபி ஜ்ஞாந ஆத்மத்வ க்ஷண பிதுரதே சக்ஷதே தாந் க்ஷிபாம:" என்று ஸங்க்ரஹேண இம்மூவருடைய மதங்களையும் உபந்யஸித்தருளினாரே பட்டரும்.

விளக்கம் - யோகசாரர் என்பவர்கள் பொருள்கள் போன்றுள்ள ஞானங்களும் தாங்கள் விசித்திரங்களாக உள்ளதால் அர்த்த வைசித்யர்த்தத்தாலே ஜ்ஞாந வைசித்ர்யம் கூற முடியாது என்றும், ஞானமே உள்ளது என்றும், வேறு எந்தப் பொருள்களும் இல்லை என்றும், அத்தகைய ஞானமும் க்ஷணிகம் என்று அறிவதே மோக்ஷம் என்றும் கூறுகிறார்கள். ஸ்ரீரங்கராஜஸ்தவம் (2-8) – யோகாசார: ஜகத் அபலபதி அத்ர ஸௌத்ராந்திக: தத் தீவைசித்ர்யாத் அநுமிதி பதம் வக்தி வைபாஷிகஸ்து ப்ரத்யக்ஷம் தத் க்ஷணிகயதி தே ரங்கநாத த்ரய: அபி ஜ்ஞாந ஆத்மத்வ க்ஷண பிதுரதே சக்ஷதே தாந் க்ஷிபாம: - அழகிய மணவாளனே! பௌத்த மதத்தைச் சார்ந்த யோகசாரன் கூறுவதைக் கேட்டாயா? அவன் இந்த உலகத்தையே இல்லை என்று கூறுகிறான். இவர்களில் உள்ள ஸௌத்ராந்திகன் என்பவன் இந்த உலகமானது பலவகையான அனுமானங்கள் உண்டாகக் காரணமாக உள்ள, அனுமான ஹேது என்கிறான். வைபாஷிகன் என்பவன் நாம் கண்களால் ப்ரத்யக்ஷமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் உலகத்தை, நொடிக்கு நொடி அழியக்கூடியது என்று கூறுகிறான். ஆக மேலே கூறப்பட்ட மூவரும் ஞானம் என்பதே ஆத்மா என்றும், ஞானத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மா இல்லை என்றும், இந்த உலகம் க்ஷணநேரத்தில் மாறுகிறது என்றும் முரணாகக் கூறுகின்றனர். இவர்களை நாம் கண்டிக்கிறோம் - என்று இந்த மூவருடைய மதங்களை ஸ்வாமி பராசரபட்டர் சுருக்கமாக அருளிச்செய்தார் அல்லவோ?

வ்யாக்யானம் - மாத்யாமிகனாகிறான் ப்ரமாணமும் ப்ரமேயமும் ப்ரமாதாவுமிவை யுண்டென்றறிவது ப்ரமம், சூந்ய வாதமொன்றுமே ஸுகத்துக்கு பராகாஷ்டை என்றும், கீழ்ச் சொன்ன மூவரும் சித்த சைதந்யங்கள் உண்டு என்றும், க்ஷணிக விஜ்ஞாநம் உண்டு என்றும், சிஷ்யனுடைய ப்ரதிபத்தி ஸௌகர்யார்த்தமாகச் சொன்னார்களித்தனை என்றும், "ந ஸந்நாஸந் நஸதஸத் நசாப்யநுபயாத்மகம் சதுஷ்கோடி விநிர்முக்தம் தத்வம் மாத்யமிகோவிது:" என்கிறபடியே ஸத்துமன்றிக்கே, அஸத்துமன்றிக்கே,

ஸதஸத்துமன்றிக்கே, ஸதஸத் விலக்ஷணமுமன்றிகே, இந்நாலு கோடியிலும் உத்தீர்ணமாயிருப்பதொன்றே தத்வம் என்றும், சூந்யத்திலே சூந்யமென்றறிகையே மோக்ஷமென்றும் உத்ப்ரேக்ஷிக்குமவன்.

விளக்கம் - மாத்யமிகர் என்பவர்கள் ப்ரமாணம், ப்ரமேயம், அறிபவன் ஆகியவை உண்டு என்று அறிவது ப்ரமம் என்றும், சூந்யவாதம் மட்டுமே இன்பத்திற்கு இருப்பிடம் என்றும், இதுவரை கூறப்பட்ட பௌத்தமதத்தைச் சார்ந்த மற்ற மூவரும் சித்த சைதந்யங்கள் உண்டு என்றும், க்ஷணிக விஜ்ஞானம் உண்டு என்றும் கூறினார்கள் என்றும், ந ஸந்நாஸந் நஸதஸத் நசாப்யநுபயாத்மகம் சதுஷ்கோடி விநிர்முக்தம் தத்வம் மாத்யமிகோவிது:- என்பதற்கு ஏற்ப ஸத்தும் அல்ல, அஸத்தும் அல்ல, ஸத் அஸத் அல்ல, ஸத் அஸத் ஆகியவற்றைக் காட்டிலும் மாறுபட்டதும் அல்ல என்பதுடன் மட்டுமே அல்லாமல் இந்த நான்கு தத்வங்களுக்கும் அப்பாற்பட்டு உள்ள ஒன்றே தத்வம் என்றும், சூந்யத்தில் சூந்யம் என்றும் அறிதலே மோக்ஷம் என்றும் கூறுபவர்கள் ஆவர்.

வ்யாக்யானம் – (நான்மறையும் நிற்க குறும்பு செய் நீசரும்) அந்த பௌத்தாதிகளைப் போலன்றிக்கே, ரிகாதி பேதேந நாலு வகைப்பட்டிருந்துள்ள வேதங்களை ப்ரமாணமாக அங்கீகரித்து வைத்தும், அவற்றுக்கு உபப்ரும்ஹண உபப்ரும்ஹிதங்களான தாத்பர்ய விஷய பூதார்த்தங்களைச் சொல்லாதே, "ஸர்வார்த்தாந் விபரீதாந்ச்ச புத்திஸ்ஸா பார்த்ததாமஸீ" என்கிற தாமச புத்தியாலே விபரீதார்த்தங்களை கற்பித்து, அவற்றை மூலையடியே நடப்பித்து, லோகத்தாரை தந்தாமுடைய துஸ்தர்க்கத்தாலே மோஹிப்பித்து, "பிபேத்யல்ப ச்ருதாத் வேதோமாமயம் ப்ரதரிஷ்யதி" என்கிறபடியே வேத ப்ரதாரகராகையாலே யதி ப்ரஹ்மீணரான மாயாவாதிகளும். "குறும்பு செய் நீசர்" என்றது சங்கர பாஸ்கர யாதவர்கள் மூவரையும் சேரப்பிடித்து. அம்மூவர்க்கும் ப்ரமாணம் ப்ரமேயம் ஒன்றாயிருக்குமிறே.

விளக்கம் – (நான்மறையும் நிற்க குறும்பு செய் நீசரும்) - பௌத்தர்கள் முதலானவர்கள் போன்று அல்லாமல், ருக் வேதங்களை ப்ரமாணமாக ஏற்றுக் கொண்டபோதிலும், அவற்றுக்கு விளக்கங்களாக உள்ளவற்றின் மூலமாக அறிந்து கொண்ட உண்மையான ஆழ்பொருளைக் கூறாமல், ஸர்வார்த்தாந் விபரீதாந்ச்ச புத்திஸ்ஸா பார்த்ததாமஸீ - என்பதற்கு ஏற்ப தாமஸபுத்தியின் காரணமாகத் தவறான பொருள்களை அவற்றுக்குக்

கற்பித்துக் கொண்டு, அந்த வேதங்களை மூலையடியே செல்லும்படி வைத்து, இந்த லோகத்தில் உள்ள அனைவரையும் தங்களுடைய தாழ்ந்த வாதங்கள் மூலம் மயக்கத்தில் ஆழ்த்தி, பிபேத்யல்ப ச்ருதாத் வேதோமாமயம் ப்ரதரிஷ்யதி – என்பதற்கு ஏற்ப வேத ப்ரதாரகர் என்பதால் யதிப்ரஹ்மீணரான மாயாவாதிகளும். "குறும்பு செய் நீசர்" என்பதன் மூலம் சங்கரர், பாஸ்கரர், யாதவப்ரகாசர் ஆகிய மூவரையும் கூறுகிறார். அவர்கள் மூவருக்கும் ப்ரமாணமும், அதனால் அறியப்படும் பொருளும் ஒன்றாக உள்ளதால் ஆகும்.

வ்யாக்யானம் – சங்கரனாகிறான் "ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் ஏகம் ஏவ அத்விதீயம்" என்கையாலே நிர்விசேஷ சிந்மாத்ரமே ப்ரஹ்மம் என்றும், "ஏவம் ஜாக்ருத் ப்ரபந்சோயம் மயிமாயா விஜ்ரும்பித:" என்கையாலே இந்த பரித்ருச்யமாநமா யிருந்துள்ள ஜகத்து மாயா கல்பிதமாய் மித்யா பூதமாயிருக்கும் என்றும், "இந்த்ரோ மாயா: புரு ரூப ஈதியதே" என்கையாலே அந்த ப்ரஹ்மம் தானே மாயா சபளிதமாய்க் கொண்டு ப்ரமிக்கை ஸம்ஸாரம் என்றும், இத்தைக் கட்டி கொள்ளவும் சொல்லுகையாலே தத்வம்பதசேதி வஸ்துக்களுடைய ஐக்ய பாவனையாலே அந்த ப்ரமம் போகை மோக்ஷம் என்றும் சொல்லுமவன். பாஸ்கரனாகிறான் "அவித்யோபப்ரஹ்மிதம் ப்ரஹ்ம ஜீவ இத்யபிதீயதே" என்கையாலே அந்த ப்ரஹ்மந்தானே புத்தீந்த்ரியாதி ரூபமாய் ஸத்யமாயிருந்துள்ள உபாதியோட்டை ஸம்ஸர்க்கத்தாலே ஜீவபாவத்தை பஜித்து ப்ரமித்துக் கொண்டு போருகை ஸம்ஸாரம் ஜகத்து ஸத்யம் என்றும், ஸத்யமான பந்தத்துக்கு ஜ்ஞாந மாத்ர நிவர்த்தயம் கூடாமையாலே, "வித்யாஞ்சாவித்யாஞ்சாயஸ் தத்வேதோபயம்ஸஹ வித்யயாம்ருத்யும் தீர்த்வா வித்யயாம்ருதமச்நுதே" என்கையாலே ஸ்வ வர்ணாச்ரம தர்மோ பேதமாய் வேதமாய், "தத்வமஸி" இத்யாதி வாக்ய ஜந்ய ஜ்ஞாந பூர்வகமாயிருந்துள்ள உபாஸநாத்மக ஜ்ஞாநத்தாலே அந்த உபாதி நசித்தவாறே, "கடத்வம்ஸே கடாகாசோ ந பிந்நோ நபஸாயதா" என்று கடாத்யுபாதி நாசாநந்தரம் தத்வச்சிந்நமான ஆகாசத்துக்கு மஹாகாசத்தோடே ஏகீபாவம் உண்டாகிறாப்போலே உபஹிதாம்சமான ஆத்மாவுக்கு அநுபஹிதாம்சமான ப்ரஹ்மத்தோடு ஏகீபாவம் மோக்ஷம் ஆகிறது என்றும் சொல்லுமவன். யாதவனாகிறான் அந்த ப்ரஹ்மந்தானே ஸத்யமாய் பாரமார்த்திகமாய் ஸ்வஸ்மாதபிந்நமான சிதசித் விச்வகாத்மாக ப்ரபஞ்சமானது ஸ்வஸ்மாத்பிந்நம் என்று ப்ரமிக்கை ஸம்ஸாரம், "வித்யாஞ்சாவித்யாஞ்சா" என்றும், "உபாப்யாமேவபக்ஷாப்யாம் யதாகே பக்ஷ்ணாம் கதி: ததைவஜ்ஞாந கர்மப்யாம் ப்ராப்யதே ப்ரஹ்ம சாச்வதம்" என்றும் சொல்லுகையாலே ஜ்ஞாந கர்ம ஸமுச்யத்தாலே

அந்த பேத ஜ்ஞாநம் நசித்துப் போகை மோக்ஷம் என்றும் சொல்லுமவன். இந்த மதங்களெல்லாம் ஸ்வஜ்ஞாதிலங்கநம் பண்ணிப் போருகிற அஸுர ராக்ஷஸர்களை மோஹிப்பிக்கைக்காக, தானாயும் ருத்ரனைக் கொண்டும் ஸர்வேச்வரன் ப்ரவர்த்திப்பித்தவையிறே.

விளக்கம் – சங்கர மதத்தினார் கூறுவது, ஸத் ஏவ ஸோம்ய இதம் அக்ர ஆஸீத் ஏகம் ஏவ அத்விதீயம் – தொடக்கத்தில் இந்த ஸத் மட்டுமே இருந்தது, இரண்டாவது ஏதும் இன்றி இருந்தது- என்று கூறுவதால் நிர்விசேஷ சிந்மாத்ரமே ப்ரஹ்மம் என்றும், ஏவம் ஜாக்ருத் ப்ரபந்சோயம் மயிமாயா விஜ்ரும்பித: - என்று கூறுவதால் கண்களால் காணத்தக்க இந்த ஜகத்தானது மாயை மூலம் கற்பனை செய்யப்பட்ட மித்யை என்றும், இந்த்ரோ மாயா: புரு ரூப ஈதியதே - என்று கூறுவதால் ப்ரஹ்மம் தானே மாயையிடம் ஆழ்த்தியபடி மயங்குதல் என்பதே ஸம்ஸாரம் என்றும் கூறுவர்; இத்தகைய மயக்கம் நீங்குதலே மோக்ஷம் என்றும் கூறுவர். பாஸ்கர மதத்தினர் கூறுவது: அவித்யோபப்ரஹ்மிதம் ப்ரஹ்ம ஜீவ இத்யபிதீயதே – என்று கூறுவதால் ப்ரஹ்மமானது புத்தி மற்றும் இந்த்ரிய ரூபமாக ஸத்யமாக உள்ளபோதிலும் உபாதியுடன் கூடிய ஸம்பந்தம் காரணமாக ஜீவபாவத்தை ஏற்றுக் கொண்டு மயங்கி நிற்பதே ஸம்ஸாரம் என்றும், ஜகத்தானது ஸத்யம் என்றும், ஸத்யமான இந்த பந்தம் நீங்குவதற்கு ஞானம் மட்டுமே காரணமாக இருக்கமுடியாது என்பதால், வித்யாஞ்சாவித்யாஞ்சாயஸ் தத்வேதோபயம்ஸஹ வித்யயாம்ருத்யும் தீர்த்வா வித்யயாம்ருதமச்நுதே – என்று கூறுவதால் தங்கள் தங்கள் வர்ணம் மற்றும் ஆச்ரமம் ஆகியவற்றால் பேதமாயும், தத்வமஸி - நீயே அதுவாகிறாய் - என்பது போன்ற வாக்கியங்கள் மூலம் ஏற்படும் ஞானத்தை முன்னிட்டுக் கொண்டு வருவதான உபாஸனத்தை உள்ளடக்கியதான ஞானத்தால் அந்த உபாதி அழிகிறது; அப்போது கடத்வம்ஸே கடாகாசோ ந பிந்நோ நபஸாயதா - என்று கடம் என்பதான உபாதி நீங்கியவுடன் கடத்தினுள் இருந்த ஆகாசத்திற்குப் பொதுவான ஆகாசத்துடன் ஒன்றாதல் என்பது நிகழ்வது போன்று ஆத்மாவிற்கு ப்ரஹ்மத்துடன் ஒன்றாதல் ஏற்படுகிறது; இதுவே மோக்ஷம் என்கிறார்கள். யாதவப்ரகாசர் கூறுவது: ப்ரஹ்மம் ஸத்யமானதாக உள்ளது; சித் மற்றும் அசித் ஆகியவற்றைக் கொண்ட ப்ரபஞ்சமானது பிரிந்து நிற்பதாகும் என்று மயங்குவதே ஸம்ஸாரம்; வித்யாஞ்சாவித்யாஞ்சா – என்றும், உபாப்யாமேவபக்ஷாப்யாம் யதாகே பக்ஷ்ணாம் கதி: ததைவஜ்ஞாந கர்மப்யாம் ப்ராப்யதே ப்ரஹ்ம சாச்வதம் - என்றும் கூறுவதால் ஞானம் மற்றும் கர்மம் ஆகியவற்றின்

சேர்க்கையால் அத்தகைய பேத ஞானம் விலகி அதன் மூலம் மோக்ஷம் எற்படுகிறது என்றும் கூறுவர். இவை அனைத்தும் அஸுரர்கள் மற்றும் ராக்ஷஸர்கள் ஆகியவர்களை மயக்கும்விதமாக, தானாகவும் ருத்ரனைக் கொண்டும் ஸர்வேச்வரனால் வெளிப்படுத்தப்பட்டவை ஆகும் .

வ்யாக்யானம் – இவ்வர்த்தம் "புத்தோ நாம முநிர்ப்பூத்வா மோக்ஷயிஷ்யாமி மாநவாந் தத: பச்சாத் பவிஷ்யந்தி முண்டா: காஷாய வாஸஸ: தேஷாமல்பதரோ தர்ம: இஹ லோகே பரத்ரச தேஷாம் தத்தஞ்ச புக்தஞ்ச பஸ்மீ பவந்தி காஷ்டவத் விப்ராச் ச்ராத்தேஷ்வதாஸ்யந்திமயிபுத் தத்வமாகத அல்பதோயாஸ்ததோமேகா: அல்பஸஸ்யா வஸுந்தரா அல்பக்ஷீராஸ்ததோகாவ: அல்ப வித்யாச்ச ப்ராஹ்மணா: நிவர்த்தயஞ்ச ஸ்வாத்யாய பிண்டோதக விவர்ஜிதா: அநந்யாயேஷ்வதீயந்தே ப்ராஹ்மணாச்சௌ ச வர்ஜிதா: அக்நிஹோத்ராச்ச நச்யந்தி குரு பூஜா: ப்ரணச்யதி ப்ராஹ்மணாஸ் ஸர்வ யஜ்ஞேஷு ப்ரசாந்தி ஸ தக்ஷிணா: தத் ப்ரஜா: ப்ரளயம் யாந்தி காலகதர்மேண சோதிதா: ந ச்ருண்வந்திபிது: புத்ரா: நஸ்நுஷா ந ஸஹோதரா: ந ப்ருத்யா ந களத்ரபாணி பவிஷ்யத் யதயோத்தரம்" என்று மஹாபாரதத்திலே மோக்ஷ தர்மத்திலும் ஸர்வேச்வரன் தானே சொன்னானிறே.

விளக்கம் - இந்தக் கருத்தானது மஹாபாரதம் – புத்தோ நாம முநிர்ப்பூத்வா மோக்ஷயிஷ்யாமி மாநவாந் தத: பச்சாத் பவிஷ்யந்தி முண்டா: காஷாய வாஸஸ: தேஷாமல்பதரோ தர்ம: இஹ லோகே பரத்ரச தேஷாம் தத்தஞ்ச புக்தஞ்ச பஸ்மீ பவந்தி காஷ்டவத் விப்ராச் ச்ராத்தேஷ்வதாஸ்யந்திமயிபுத் தத்வமாகத அல்பதோயாஸ்ததோமேகா: அல்பஸஸ்யா வஸுந்தரா அல்பக்ஷீராஸ்ததோகாவ: அல்ப வித்யாச்ச ப்ராஹ்மணா: நிவர்த்தயஞ்ச ஸ்வாத்யாய பிண்டோதக விவர்ஜிதா: அநந்யாயேஷ்வதீயந்தே ப்ராஹ்மணாச்சௌ ச வர்ஜிதா: அக்நிஹோத்ராச்ச நச்யந்தி குரு பூஜா: ப்ரணச்யதி ப்ராஹ்மணாஸ் ஸர்வ யஜ்ஞேஷு ப்ரசாந்தி ஸ தக்ஷிணா: தத் ப்ரஜா: ப்ரளயம் யாந்தி காலகதர்மேண சோதிதா: ந ச்ருண்வந்திபிது: புத்ரா: நஸ்நுஷா ந ஸஹோதரா: ந ப்ருத்யா ந களத்ரபாணி பவிஷ்யத் யதயோத்தரம் - என்பதில் ஸர்வேச்வரனால் வெளிப்பட்டதாகும்.

வ்யாக்யானம் - ருத்ரன் ஏகாதசி மாஹாத்ம்யத்தைப் பரக்கச் சொல்லிக் கொண்டு போந்து, அத்திவஸத்திலே பாஷாண்டிகளுடனே ஸல்லாப ஸஹவாசாதிகள் பண்ணவொண்ணாதென்று ப்ரஸங்காத் சொல்லக் கேட்ட பார்வதியானவள், "ஆகில் நீர் அவர்களுடைய இந்த நிஷித்த சிஹ்நங்களை தரித்துக் கொண்டிருப்பானென்", என்று கேட்க; "நமுசாத்யா மஹாதைத்யா: புரா ஸ்வயாம்புவேந்த்ரே" என்று தொடங்கி அந்த ராக்ஷஸர்கள் விஷ்ணு பக்தராயிருந்து வைத்தே, தத் பக்தரான இந்த்ராதிகளை பாதித்து அவர்களுடைய ஸ்தாநங்களை ஆக்ரமித்தவாறே, அவர்களுடைய ஸர்வேச்வரனான ஸ்ரீமந்நாராயணன் பக்கலிலே சென்று சரணம் புகுந்து தங்களுக்கு வந்த ஆபத்தை விண்ணப்பம் செய்யக் கேட்டு, "அந்த ராக்ஷஸர்கள், ஸ்வபக்தராய் ஸ்வாஜ்ஞாதிலங்கநம் பண்ணினாராகையாலே அவர்களுக்குத் தன்னளவிலே விப்ரபத்தியைப் பிறப்பித்து பின்பு அவர்களை ஸம்ஹரிக்கக் கடவோம்" என்று நினைப்பிட்டு, "இத்யா கர்ணயா ஹரேர் வாக்யம் தேவா நாம பயார்த்திநாம் தாந்ச்வ வ்ருத்தாந் விதி த்வாதமாமாஹ புருஷோத்தம:"; ஸ்ரீபகவாநுவாச "த்வஞ்ச ருத்ர மஹாபாஹோ மோஹநார்த்தம் ஸுரத்விஷாம் பாஷண்ட சரணம் தர்மம் குருஷ்வ ஸுர ஸத்தம தாமஸாநி புராணாநி ரசயஸ் வசதாந் ப்ரதி மோஹநாநிச சாஸ்த்ராணி த்வம் குருஷ்வ மஹாமாதே" என்று சொல்லிக் கொண்டு போந்து, "வம்சதாம்ச்ச மஹாமுநி: தவ சக்த்யா ஸமாவிச்ய குருஷ்வ ஜகதோ ஹிதம் கதயந் ஸேவதே விப்ரா: தாமஸநி ஜகத்ரயே புராணாநி ச சாஸ்த்ராணி த்வத் பரேணோப ப்ரமஹித: ததா பாசுபதம் சாஸ்த்ரம் த்வமேவ குரு ஸுவ்ரத கங்காளஞ்சைவ பாஷண்ட மஹாசைவாதி பேதித: அவலம்ப்ய மதம் ஸம்யக் வேதபாஹ்யா த்விஜோத்தமா: பஸ்மாதி தாரணாஸ் ஸர்வே பபூவுஸ்தே ந ஸம்சய: த்வாம் பரத்வேந சம்ஸந்தி ஸர்வ சாஸ்த்ரேஷு தாமஸா: அஹமப்யவதாரேஷு த்வாஞ்ச ருத்ர மஹாபல தாமஸாநாம் மோஹநார்த்தம் பூஜயாமி யுகே யுகே மதமேததவஷ்டப்ய ரதந்த்யேவ ந ஸம்சய:" என்று இப்படி நியமித்து, "அவர்கள் விச்வஸிக்கைக்காக நீ அந்த சிஹ்நங்களை தரித்துக் கொண்டிருக்கவேணும்" என்று சொன்னவாறே, நான் தரித்துக் கொண்டு இப்படியேயிரா நின்றேன் என்று அவளுக்கு ப்ரத்யுத்தரம் சொல்லி.

விளக்கம் – ருத்ரன் ஏகாதசி நாளின் மேன்மையை விரிவாகப் புகழ்ந்தபடி இருந்தபோது, அந்த நாளில் பாஷாண்டிகளுடன் ஸம்பந்தம் கொள்ளக்கூடாது என்று உரைத்தான். இதனைக் கேட்ட பார்வதி ருத்ரனிடம், "அப்படியானால் நீவிர் அவர்களுடைய இத்தகைய தாழ்வான அடையாளங்களை ஏன் தரித்து நிற்கவேண்டும்?", என்று கேட்டாள். அப்போது

ருத்ரன் பார்வதியிடம் உரைக்கத் தொடங்கினான். நமுசாத்யா மஹாதைத்யா: புரா ஸ்வயாம்புவேந்த்ரே - என்று தொடங்கி ராக்ஷஸர்கள் மஹாவிஷ்ணுவின் பக்தர்களாக இருந்தாலும், விஷ்ணுவின் பக்தர்களாக உள்ள இந்த்ரன் போன்ற பலரையும் தாக்கி, அவர்களுடைய இடங்களை ஆக்கிரமித்தனர். அப்போது அவர்கள் ஸர்வேச்வரனாகிய ஸ்ரீமந்நாராயணனிடம் சென்று சரணம் புகுந்து, தங்களுக்கு ஏற்பட்ட ஆபத்தை விளக்கி, தங்களைக் காக்குமாறு விண்ணப்பம் செய்தனர். இதனைக் கேட்ட ஸ்ரீமந்நாராயணன் அவர்களிடம், "அந்த ராக்ஷஸர்கள் நம்முடைய பக்தர்களாக இருந்தாலும், இப்போது தங்களுக்குள்ளேயே அஞ்ஞானத்தை வளர்த்தபடி உள்ளனர். ஆகவே அவர்களுக்கு மதி மயக்கத்தை உண்டாக்கி, அதன் பின்னர் அவர்களை நாம் அழிப்போம்", என்றான். மேலும் ஸ்ரீமந்நாராயணன், "இத்யா கர்ணயா ஹரேர் வாக்யம் தேவா நாம பயார்த்திநாம் தாந்ச்வ வ்ருத்தாந் விதி த்வாதமாமாஹ புருஷோத்தம:" என்று உரைத்தான். தொடர்ந்து, "த்வஞ்ச ருத்ர மஹாபாஹோ மோஹநார்த்தம் ஸுரத்விஷாம் பாஷண்ட சரணம் தர்மம் குருஷ்வ ஸுர ஸத்தம தாமஸாநி புராணாநி ரசயஸ் வசதாந் ப்ரதி மோஹநாநிச சாஸ்த்ராணி த்வம் குருஷ்வ மஹாமாதே", என்று தொடங்கி, "வம்சதாம்ச்ச மஹாமுநி: தவ சக்த்யா ஸமாவிச்ய குருஷ்வ ஜகதோ ஹிதம் கதயந் ஸேவதே விப்ரா: தாமஸநி ஜகத்ரயே புராணாநி ச சாஸ்த்ராணி த்வத் பரேணோப ப்ரமஹித: ததா பாசுபதம் சாஸ்த்ரம் த்வமேவ குரு ஸுவ்ரத கங்காளஞ்சைவ பாஷண்ட மஹாசைவாதி பேதித: அவலம்ப்ய மதம் ஸம்யக் வேதபாஹ்யா த்விஜோத்தமா: பஸ்மாதி தாரணாஸ் ஸர்வே பபூவுஸ்தே ந ஸம்சய: த்வாம் பரத்வேந சம்ஸந்தி ஸர்வ சாஸ்த்ரேஷு தாமஸா: அஹமப்யவதாரேஷு த்வாஞ்ச ருத்ர மஹாபல தாமஸாநாம் மோஹநார்த்தம் பூஜயாமி யுகே யுகே மதமேததவஷ்டப்ய ரதந்த்யேவ ந ஸம்சய:" என்று உரைத்து, "அவர்கள் நம்புவதற்காக நீ அந்த அடையாளங்களைத் தரித்தபடி இருக்கவேண்டும்", என்று என்னிடம் கூறினான். இதனால்தான் நான் அவற்றை அணிந்தபடி இவ்விதம் உள்ளேன் என்று பார்வதிக்குப் பதில் உரைத்தான்.

வ்யாக்யானம் – "ப்ரதமம் ஹிமையைவோக்தம் சைவம் பாசுபதாதிகம் மத் சக்த்யாவேசிதைர் விப்ரை: ஸம்ப்ரோக்த்தாநி தத: பரம் மாயாவாதமசச் சாஸ்த்ரம் ப்ரச்சந்நம் பௌத்யமுச்ச்யதே மயைவகதிதம் தேவி கலை ப்ராஹ்மண ரூபிணா அபார்த்தம் ச்ருதி வாக்யாநாம் தர்சிதம் லோக கர்ஹிதம் கர்ம ஸ்வரூபவ த்யாஜ்யம்யத் அத்ரைவ

ப்ரதிபாத்யதே ஸர்வ கர்ம பரிப்ரஷ்டம் விகர்மஸ்த்தம் ததுச்யதே பரேச ஜீவயோரைக்யம் மயாத் ப்ரதிபாத்யே ப்ரஹ்மணோப்ய பரம்ரூபம் நைர்குண்யம் வக்ஷ்யதே மயா ஸர்வஸ்ய ஜகதோ பார்த்த மோஹநார்த்தம் கலௌ யுகே வேதார்த்தவந் மஹா சாஸ்த்ரம் மாயாவாதமவைதிகம் மயைவ வக்ஷ்யதே தேவி அஸ்தாம் நாச காரணாத்" என்ற பின்பு ருத்ரன்தானே சொன்னான் என்று பாத்மோத்தர கண்டத்திலே உமா மஹேச்வர ஸம்வாதத்திலும் பரக்கச் சொல்லப்பட்டதிறே. இப்படி பாஹ்ய ஸமயங்களையும் குத்ருஷ்டி ஸமயங்களையும் எடுத்தது ஸாங்க்யர், யோகிகள், பாட்டர், ப்ரபாகரர், ஏகாயனர் என்கிற ஐவருக்கும் உபலக்ஷணம். ஈட்டுக்காரர் இவ்வைந்து மதங்களையும் எடுத்தாரிறே அவர்களோடொக்க.

விளக்கம் - ப்ரதமம் ஹிமையைவோக்தம் சைவம் பாசுபதாதிகம் மத் சக்த்யாவேசிதைர் விப்ரை: ஸம்ப்ரோக்த்தாநி தத: பரம் மாயாவாதமசச் சாஸ்த்ரம் ப்ரச்சந்நம் பௌத்யமுச்ச்யதே மயைவகதிதம் தேவி கலை ப்ராஹ்மண ரூபிணா அபார்த்தம் ச்ருதி வாக்யாநாம் தர்சிதம் லோக கர்ஹிதம் கர்ம ஸ்வரூபவ த்யாஜ்யம்யத் அத்ரைவ ப்ரதிபாத்யதே ஸர்வ கர்ம பரிப்ரஷ்டம் விகர்மஸ்த்தம் ததுச்யதே பரேச ஜீவயோரைக்யம் மயாத் ப்ரதிபாத்யே ப்ரஹ்மணோப்ய பரம்ரூபம் நைர்குண்யம் வக்ஷ்யதே மயா ஸர்வஸ்ய ஜகதோ பார்த்த மோஹநார்த்தம் கலௌ யுகே வேதார்த்தவந் மஹா சாஸ்த்ரம் மாயாவாதமவைதிகம் மயைவ வக்ஷ்யதே தேவி அஸ்தாம் நாச காரணாத் - என்று தொடர்ந்து ருத்ரன் தானே உரைத்தான் என பாத்மோத்தர கண்டத்தில் உமா மஹேச்வர உரையாடலில் விரிவாக உரைக்கப்பட்டதும் காணலாம். இவ்விதம் வேதங்களுக்குப் புறம்பாக உரைக்கும் தாழ்ந்த மதங்களை ஏன் எடுக்கவேண்டும் என்றால் ஸாங்க்யர், யோகிகள், பாட்டர், ப்ரபாகரர் மற்றும் ஏகாயநர் ஆகிய மற்ற ஐந்து மதங்களுக்கும் உபலக்ஷணமாகவே ஆகும். ஈட்டிலும் இந்த ஐந்து மதங்கள் கூறப்பட்டது காணலாம்.

வ்யாக்யானம் - ஸாங்க்ய யோகிகளாகிறார் "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" என்றும், "ஸத்வம் ரஜஸ் தம இதி குணா: ப்ரக்ருதி ஸம்பவா:" என்றும் சொல்லுகையாலே, ஸத்வ ரஜஸ் தமோமயமாய் ஸச் சப்த வாச்யமான ப்ரதாநமே ஜகத்காரணம் என்கிறது என்றும், "அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே" என்கையாலே ஆத்மாவுக்கு கர்த்ருத்வம் ப்ரக்ருதி ஸம்ஸர்க்காயத்தமித்தனையொழிய ஸ்வாபாவிகமன்று என்றும், "ப்ரக்ருதே: க்ரியமாணாநி" என்கையாலே அந்த ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வம் உள்ளது என்றும், ப்ரக்ருதி

புருஷ விலக்ஷணாய்க் கொண்டு வேறொரு ஈச்வரனில்லை என்றும், அந்த ப்ரக்ருதியோடு ஆத்மாவுக்குண்டான அநாதி ஸம்பந்தம் ஸம்ஸாரம் என்றும், ப்ரக்ருதி புருஷ விவேகமே மோக்ஷம் என்றும் சொல்லுமவர்கள்.

விளக்கம் – ஸாங்க்ய யோகிகள் என்பவர்கள், ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் - தொடக்கத்தில் இந்த ஸத் மட்டுமே இருந்தது – என்றும், ஸத்வம் ரஜஸ் தம இதி குணா: ப்ரக்ருதி ஸம்பவா: - ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகிய குணங்கள் ப்ரக்ருதியில் வெளிப்பட்டன - என்றும் கூறுவதால் ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் ஆகியவையாகவும், "ஸத்" என்பதால் கூறப்படுவதாகவும் உள்ள ப்ரக்ருதியே இந்த ஜகத்தின் காரணம் என்றும், அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே – என்பதன் மூலம் ஆத்மாவுக்கு உள்ள கர்த்ருத்வம் என்பது, ப்ரக்ருதியுடன் ஆத்மாவுக்கு உள்ள தொடர்பு காரணமாகவே ஆகும்; அது ஆத்மாவுக்கு இயல்பு அல்ல என்றும்; "ப்ரக்ருதே: க்ரியமாணாநி - ப்ரக்ருதியே செயலாற்றுகிறது" என்பதால், ப்ரக்ருதிக்கே கர்த்ருத்வம் உள்ளது என்றும், ப்ரக்ருதி மற்றும் புருஷன் ஆகியவற்றைக் காட்டிலும் வேறுபட்ட ஈச்வரன் என யாரும் இல்லை என்றும், ப்ரக்ருதியுடன் ஆத்மாவுக்கு உள்ளதான எல்லையற்ற காலமாக இருந்து வரும் ஸம்பந்தமே ஸம்ஸாரம் என்றும், ப்ரக்ருதி மற்றும் புருஷன் ஆகியவற்றைப் பிரித்து அறிதலே மோக்ஷம் என்றும் கூறுகிறார்கள் .

வ்யாக்யானம் - பாட்ட ப்ராபகராகிறார்கள் "ஆத்மாநோ பஹவ: ப்ரோக்தா: நித்யாஸ் ஸர்வகதாஸ் ததா அந்யைர் மதி மதாம் ச்ரேஷ்ட தத்வா லோகநதத்பரை:" என்றும், "புத்தீந்த்ரிய சரீரேப்யோ பிந்ந ஆத்மா விபுர்த்ருவ: நாநா பூத ப்ரதி க்ஷேத்ரமர்த்த ஜ்ஞாநேஷுபாஸதே" என்றும் சொல்லுகையாலே, ஆத்மாக்கள் நித்யராய் அநேகராய் ஸர்வகதராய் சரீராதி விலக்ஷணராயிருப்பர் என்றும், "பத்யதே ஸஹிலோகஸ்து: காம்ய ப்ரதிஷித்த க்ருத் காம்ய கர்மாணி குர்வாணைரகாம்ய கர்மாநுரூபத: ஜநித்வைவோப போக்தவ்யம் புந: காம்ய பலம் நரை: க்ருமிகீடாதி ரூபேண ஜநித்வாது நிஷித்த க்ருத் நிஷித்த பல போகிஸ்யாததோயோ நரகம் வ்ரஜேத்" என்கையாலே, காம்ய நிஷித்த ரூபமான அநாதி கர்மத்தை அநுஷ்டித்து ஸம்ஸரிக்கிறார்கள் என்றும், "யதாத்ய ஜகதோ புத்தி ததா காலாந்தரேஷ்வபி ப்ரவாஹோ நித்ய ஏவைஷ: க: கர்த்தேதி சகேசந ச" என்கையாலே ஜகத்து ப்ரவாஹா ரூபேண நித்யம் என்றும், "ந தேவதா சதுர்த்யந்த

விநியோத்ருதே பரா" என்கையாலே சதுர்த்த்யந்த விநியோகாதிரிக்தமாய்க் கொண்டு வேறொரு தேவதா விசேஷமில்லை என்றும், "வேதைக விஹிதம் கர்ம மோக்ஷதம் நா பரந்தத:" என்கையாலே வேதைக விஹிதமாய் பலாபிஸந்தி விதுரங்களாய்க் கொண்டு அநுஷ்டிக்கப்பட்ட யஜ்ஞாதிகளாலே ஆத்மாவினிடத்திலே ஒரு அபூர்வம் பிறந்து அத்தாலே உண்டான கர்ம பந்த நிவ்ருத்தி பூர்வக கேவல ஆத்மா ப்ராப்தியே மோக்ஷமாவது என்றும் சொல்லுமவர்கள்.

விளக்கம் - பாட்டப்ரபாகரர்கள் என்பவர்கள், ஆத்மாநோ பஹவ: ப்ரோக்தா: நிந்யாஸ் ஸர்வகதாஸ் ததா அந்யைர் மதி மதாம் ச்ரேஷ்ட தத்வா லோகநதத்பரை: - என்றும், புத்தீந்த்ரிய சரீரேப்யோ பிந்ந ஆத்மா விபுர்த்ருவ: நாநா பூத ப்ரதி க்ஷேத்ரமர்த்த ஜ்ஞாநேஷுபாஸதே - என்றும் கூறுவதால் ஆத்மாக்கள் நித்யராகவும், பலராகவும், சரீரம் போன்றவற்றால் வேறுபட்டவராகவும் உள்ளனர் என்றும்; பத்த்யதே ஸஹிலோகஸ்து: காம்ய ப்ரதிஷித்த க்ருத் காம்ய கர்மாணி குர்வாணைரகாம்ய கர்மாநுரூபத: ஜநித்வைவோப போக்தவ்யம் புந: காம்ய பலம் நரை: க்ருமிகீடாதி ரூபேண ஜநித்வாது நிஷித்த க்ருத் நிஷித்த பல போகிஸ்யாததோயோ நரகம் வ்ரஜேத் - என்று கூறுவதால் தள்ளப்பட்டதான காம்ய கர்மங்களை எல்லையற்ற காலமாக இயற்றுவதால் ஸம்ஸாரத்தில் அனைவரும் உள்ளனர் என்றும்; யதாத்ய ஜகதோ புத்தி ததா காலாந்தரேஷ்வபி ப்ரவாஹோ நித்ய ஏவைஷ: க: கர்த்தேதி சகேசந ச - என்பதன் மூலம் இந்த ஜகத்தானது தொடர்ந்து ஸ்ருஷ்டி போன்றவற்றை ஒரு ப்ரவாஹமாகக் கொண்டுள்ளதால் நித்யம் என்றும்; ந தேவதா சதுர்த்யந்த விநியோத்ருதே பரா - என்பதால் வேறு ஒரு தேவதை என்பது இல்லை என்றும்; வேதைக விஹிதம் கர்ம மோக்ஷதம் நா பரந்தத: - என்பதன் மூலம் வேதங்களால் விதிக்கப்பட்ட கர்மங்கள் மூலம் பலன் போன்றவை ஏற்படவேண்டும் என்ற எண்ணத்துடன் இயற்றப்படும் யஜ்ஞங்கள் போன்றவை மூலம் ஆத்மாவிடம் அபூர்வம் என்னும் ஒரு சக்தி ஏற்பட்டு, அதன் மூலம் ஏற்பட்ட கர்மங்களின் விலகுதல் என்பதை முன்னிறுத்தி ஏற்படுகின்ற ஆத்ம அனுபவத்தை அடைதல் என்பதே மோக்ஷம் என்கிறார்கள்.

வ்யாக்யானம் – ஏகாநயராகிறார், "த்வத் ப்ரியம் லோகநாதம்" என்கிறபடி மிதுந சேஷத்வத்தை அங்கீகரியாதே, நிஜீக ப்ரஹ்ம சேஷத்வத்தை அங்கீகரித்துக் கொண்டு, "சக்திபிஸ் ஸேவிதா நித்யம் ஸ்ருஷ்டி ஸ்தித்யாதி ப்ரபா: த்வாத்ரிம்சத் சதஸாஹஸ்ர

ஸ்ருஷ்டி சக்திபிராவ்ருதாம் வ்ருதாதத் விகுணாச்ச திவ்யாபி ஸ்திதி சக்திபி: நதஸ் தத் விகுணாபிச்ச யுக்தா ஸஸம்ஹ்ருத சக்திபி: நாயிகா ஸர்வ சக்தீநாம் ஸர்வ சக்தி மஹேச்வரீ ஏகம் தத் பரமம் பஹ்ம ஷாட்குண்யஸ்திமிதம் மஹ: பாவாபாவமதீதஸ்ய சக்திரேஷா நபாயிநீ தத் தர்மதர்மதீதி வ்யாக்ஜ்ஜோத்ஸ்நேவ ஹி மதீதிதே: நைவ சக்த்யாவிநாகச் சித் பக்தி மாநாஸ்தி காரணம்" என்றும் லக்ஷ்மீதந்த்ரத்தில் சொல்லுகையாலே, சக்தி விலக்ஷணமாயிருக்கிற லக்ஷ்மி இல்லை என்றும், ஸ்ருஷ்டி ஸ்தித்யாதி பரிமித சக்தி பரிவேஷ்டிதையான ஸ்ரீ என்கிற ப்ரதான சக்தியோடேயும் மற்றும் அபூர்ணங்களான சக்தியோடேயும் அந்த ப்ரஹ்மம் விசிஷ்டமாயிருக்கும் என்றும் சொல்லுமவன்.

விளக்கம் - ஏகாயநர்கள் என்பவர்கள், த்வத் ப்ரியம் லோகநாதம் – என்பதற்கு ஏற்ப பெரியபிராட்டியும் ஸர்வேச்வரனும் என்றுள்ள ஜோடியே எஜமானர்கள் என்பதை ஏற்காமல், பெரியபிராட்டியைத் தவிர்த்துள்ள ப்ரஹ்மமே எஜமானன் என்று கொண்டு; சக்திபிஸ் ஸேவிதா நித்யம் ஸ்ருஷ்டி ஸ்தித்யாதி ப்ரபா: த்வாத்ரிம்சத் சதஸாஹஸ்ர ஸ்ருஷ்டி சக்திபிராவ்ருதாம் வ்ருதாதத் விகுணாச்ச திவ்யாபி ஸ்திதி சக்திபி: நதஸ் தத் விகுணாபிச்ச யுக்தா ஸஸம்ஹ்ருத சக்திபி: நாயிகா ஸர்வ சக்தீநாம் ஸர்வ சக்தி மஹேச்வரீ ஏகம் தத் பரமம் பஹ்ம ஷாட்குண்யஸ்திமிதம் மஹ: பாவாபாவமதீதஸ்ய சக்திரேஷா நபாயிநீ தத் தர்மதர்மதீதி வ்யாக்ஜ்ஜோத்ஸ்நேவ ஹி மதீதிதே: நைவ சக்த்யாவிநாகச் சித் பக்தி மாநாஸ்தி காரணம் - என்று லக்ஷ்மீதந்த்ரத்தில் கூறப்படுவதால், சக்தியைக் காட்டிலும் வேறுபட்ட லக்ஷ்மி என்று யாரும் இல்லை என்றும்; ஸ்ருஷ்டி ஸ்திதி போன்றதான அளவுபடுத்த இயலாத சக்தி, "ஸ்ரீ" என்னும் ப்ரதான சக்தியுடனும், அபூர்ணமாக உள்ள சக்தியுடனும் ஒப்பு நோக்கும்போது ப்ரஹ்மம் வேறுபட்டதாக இருக்கும் என்கிறார்கள்.

வ்யாக்யானம் – (நீணிலத்தே) இப்படி பலவகைப்பட்டிருந்துள்ளது வேத பாஹ்யருக்கும் குத்ருஷ்டிகளுக்கும் நடையாடுக்கைக்கும் ஈடான பரப்பையுடைத்தான மஹா ப்ருத்வியிலே. நீட்சி – பரப்பு. (பொற் கற்பகம்) ஸ்ப்ருஹணீயமான கற்பகம் போலே பரமோதாரராய், "பொற் கற்பகம்" என்று விசேஷிக்கையாலே ப்ராக்ருதமாய் ஜடமாய் அர்த்த காம பரர்க்கு மாத்ரமே ஸ்ப்ருஹணீயமாயிருக்கிற கல்பகம் போலன்றிக்கே, அப்ராக்ருதமாய் ஸ்வப்ரகாசமாய் ஸர்வர்க்கும் ஸ்ம்ருஹணீயமாய் அபேக்ஷா நிரபேக்ஷமாக உஜ்ஜீவநார்த்தங்களை ஸ்ரீபாஷ்யாதி முகேந

ஆசந்த்ரார்த்தமாகக் கொடுத்து உபகரிக்கையாகிற மஹெளதார்யத்தையுடைத்தான விலக்ஷண கல்பகமென்றபடி. இக் கல்பகம் கொடுக்கிற பல பரம்பரை விலக்ஷணமாய் இருக்கிறாப்போலே காணும் இதுவும் விலக்ஷணமாயிருக்கிறபடி. (எம் இராமாநுச முனி) லோகமெல்லாம் ஒரு தலையாயும் அதி ப்ரதிகூலனான நான் ஒரு தலையாயு மிருக்கச் செய்தே, என்னை ஒருவனையே உஜ்ஜீவிப்பிக்கைக்காக மநநம் பண்ணிக் கொண்டிருக்கிற எம்பெருமானார். (போந்த பின்னே) எழுந்தருளின பின்பு.

விளக்கம் - (நீணிலத்தே) - இவ்விதம் பலவிதமான உள்ளவர்களான வேதங்களை ஏற்காதவர்கள், வேதங்களுக்கு விபரீதமாகப் பொருள் உரைப்பவர்கள் ஆகியோர் நடமாடுகின்ற பரந்த இந்தப் பூமியில், (பொற் கற்பகம்) - காண்பதற்கு இனிமையாக, உள்ள கற்பகம் போன்று தாராள மனம் கொண்டவராகவும். "பொற்கற்பகம்" என்று சிறப்பித்துக் கூறுவதால், இந்த உலகில் மட்டும் காணப்படுவதாக, ஜடப்பொருளாக, பொருள்களில் விருப்பம் போன்றவற்றை கொண்டவர்களுக்கு மட்டுமே அழகானதாக உள்ள கற்பகம் போன்று அல்லாமல்; இந்த உலகில் காணப்படாததாகவும், தானாகவே ப்ரகாசிப்பதாகவும், அனைவருக்கும் அழகானதாகவும்; "வேண்டி நிற்கவேண்டும்" என்ற நிலை இன்றி அனைத்து ஆழ்பொருள்களையும் தன்னுள் அடக்கிய ஸ்ரீபாஷ்யம் முதலானவற்றைக் கொடுத்த உதவுவதால், மிகுந்த தாராளம் கொண்ட வேறுபட்ட கற்பகம் என்று கருத்து. இந்தக் கற்பகம் அளிக்கின்ற பலன்கள் வேறுபட்டதாக உள்ளது போன்றே, இந்த கற்பகமும் வேறுபட்டதாக உள்ளது. (எம் இராமாநுசமுனி) - அனைத்து லோகங்களும் அவருக்கு ஏற்புடைய தன்மை கொண்டவையாகவும், நான் மட்டும் அவருக்கு விருப்பம் அற்ற செயல்கள் செய்தபடி உள்ளவனாகவும் இருந்தேன். இப்போது என் ஒருவனைக் கரையேற்றவேண்டும் என்று தீர்மானித்த எம்பெருமானார். (போந்த) - இங்கு திருஅவதாரம் செய்த பின்னர்.

வ்யாக்யானம் – (மாண்டனர்) துர்மத நிஷ்டரேல்லாரும் முடிந்து போனார்கள். ஸ்ரீபாஷ்ய முகேந தத் தத் மதங்களை பங்கித்து அஸத் கல்பமாக்குகையாலே அவர்கள் நஷ்டரானார்களென்றபடி. "சாறுவாக மதநீறு செய்து சமணச்செடிக்கனல் கொளுத்திய சாக்கியக் கடலை வற்றுவித்து மிகுசாங்கியக்கிரி முறித்திட மாறு செய்திடு கணாதவாதியர்கள் வாய் தகர்த்து அறமிகுத்து மேல் வந்த பாசுபதர் சிந்தியோடும் வகை வாது செய்த எதிராசனார் கூறும் மா குருமதத்தோடு குமாரிலன் மதம் அவற்றின் மேல்

கொடிய தர்க்க சரம் விட்டபின் குறுகிய மாயவாதியரை வென்றிட மீறி வாதில் வரும் பார்க்கரன் மதவிலக்கடிக் கொடியெறிந்து போய் மிக்க யாதவ மதத்தை மாய்த்த பெருவீரர் நாளும் மிக வாழியே" என்று, இந்த பர பக்ஷ ப்ரதிக்ஷேபண ப்ரகாரத்தை அநுஸந்தித்து அத்தால் வந்த வீரஶ்ரீக்கு மங்களாசாஸநம் பண்ணியருளினாரிறே நம்முடைய ஜீயரும். "காதா தாதாகதாநாம் களதி கமநிகா காபிலீ க்வாபி லீநா க்ஷீணா காணாத வாணீ த்ருஹிண ஹர கிர: ஸௌரபம் நாரபந்தே க்ஷாமா கௌமாரில உக்தி: ஜகதி குருமதம் கௌரவாத் தூரவாந்தம் கா சங்கா சங்கர ஆதே: பஜதி யதி பதௌ பத்ர வேதீம் த்ரிவேதீம்" என்று இவ்வர்த்தத்தை அபியுக்தரும் அநுஸந்தித்தாரிறே.

விளக்கம் - (மாண்டனர்) - தாழ்வானதும் தீமையானதும் ஆகிய கருத்துக்களைக் கொண்ட மற்ற மதத்தினர் அனைவரும் முடிந்து போயினர். ஸ்ரீபாஷ்யம் மூலம் அந்த மதங்களின் கருத்துக்களைத் தகர்த்து, அவர்களை "இல்லை" என்று கூறும்படியாகவே ஆக்கியதால், அவர்கள் முடிந்தனர். ஆர்த்தி ப்ரபந்தத்தில் (29) - சாறுவாக மதநீறு செய்து சமணச்செடிக்கனல் கொளுத்திய சாக்கியக் கடலை வற்றுவித்து மிகுசாங்கியக்கிரி முறித்திட மாறு செய்திடு கணாதவாதியர்கள் வாய் தகர்த்து அறமிகுத்து மேல் வந்த பாசுபதர் சிந்தியோடும் வகை வாது செய்த எதிராசனார் கூறும் மா குருமதத்தோடு குமாரிலன் மதம் அவற்றின் மேல் கொடிய தர்க்க சரம் விட்டபின் குறுகிய மாயவாதியரை வென்றிட மீறி வாதில் வரும் பார்க்கரன் மதவிலக்கடிக் கொடியெறிந்து போய் மிக்க யாதவ மதத்தை மாய்த்த பெருவீரர் நாளும் மிக வாழியே - "ப்ரத்யக்ஷமாகக் காண்பது மட்டுமே மெய்" என்று கூறிய சார்வாக மதத்தை தனது ஸ்ரீபாஷ்யம் போன்ற க்ரந்தங்கள் மூலம் பஸ்மம் ஆக்கினார். சமணர்கள் என்ற செடியை அடியுடன் கொளுத்தினார். சாக்கியர்கள் என்ற பெரும் கடலை வற்றும்படிச் செய்தார். மிகவும் உயரமாக உள்ள சாங்கிய மதம் என்னும் மலையை, வஜ்ராயுதம் கொண்டு தாக்குவது போல் அழித்தார். தொடர்ந்து வாதம் செய்தபடி இருந்த காணாதர்களின் வாதம் அனைத்தையும் தனது வாதம் மூலம் தகர்த்தார். இவ்விதம் மேன்மேலும் வந்த பலரையும் பாணாசுர யுத்தத்தில் ருத்ரன் தனது பரிவாரங்களுடன் ஓடியது போன்று, தனது வாதம் மூலம் வென்று, அவர்களை ஓடச்செய்தார். மேலும் தவறான வாதங்களுடன் கூடிய பிரபாகர மதத்தை விட உயர்ந்த குமாரிலபட்டரின் மதத்தின் மீது தனது வாதம் என்ற பாணங்கள் விட்டு அழித்தார். அதன் பின்னர் மாயாவாதிகளை வென்றார். மிகவும் கர்வம் கொண்டபடி இருந்த பாஸ்கர மதத்தை வேருடன் அழித்தார். அதனையும் தொடர்ந்து நின்ற யாதவப்ரகாசரின் மதத்தையும் மாய்த்தார். இவ்விதம் பல பராக்ரமங்கள் கொண்ட எம்பெருமானார் என்றும் வாழ வேண்டும் - என்று இப்படியாக மற்ற வாதங்கள் அனைத்தையும் தள்ளிய இந்த விதத்தை எண்ணியபடி, அதன் மூலம் ஏற்பட்ட

வெற்றிக்கான புகழ்ச்சியை ஸ்வாமி மணவாளமாமுனிகளும் உரைத்தார் அல்லவோ? யதிராஜ ஸப்ததியில் (70) - மூன்று வேதங்கள் மூலம் அமைக்கப்பட்ட ஸிம்ஹாஸனத்தை அடைந்து அதில் யதிராஜர் எழுந்தருளினார். உடனே நிகழ்ந்தது என்ன? பௌத்தர்களின் வாதம் உடனே நழுவியது. கபிலர் உபதேசித்த மார்க்கம் எங்கோ சென்று பதுங்கியது. காணாதரின் உபதேசம் மறைந்தது. நான்முகன், சிவன் ஆகியோரின் மதங்கள் நறுமணம் இழந்தன. குமாரிலபட்டரின் வாதம் தோற்றது. பிரபாகரரின் மதம் கற்பனை அதிகமாக உள்ளதென்று விலக்கப்பட்டது. சங்கரர் போன்றோர் வாதமும் கண்டிக்கப்பட்டதைக் கூற வேண்டுமா - என்று இந்தக் கருத்தை ஸ்வாமி வேதாந்ததேசிகரும் அருளிச்செய்தார்.

100. போந்ததென் நெஞ்சென்னும் பொன்வண்டு உனதடிப் போதில் ஒண்
சீராந்தெளி தேன் உண்டு அமர்ந்திட வேண்டி நின் பாலதுவே
ஈந்திட வேண்டும் இராமாநுச இது அன்றியொன்றும்
மாந்தகில்லாது இனி மற்றொன்று காட்டி மயக்கிடலே

விளக்கவுரை – எம்பெருமானாரே! அனைத்து உயிர்களும் உய்யும் வண்ணம் திருவரங்கச்செல்வனாரின் மலர்ந்த திருவடிகளில், ஸ்ரீரங்கநாச்சியாரின் முன்னிலையில் சரணாகதி செய்தீர். இப்படிப்பட்ட உமது திருவடிகள் தேன் சொரியும் தாமரை மலர் போன்று உள்ளது. இந்த மகரந்தத்தைப் பருக வேண்டும் என்ற எண்ணம் கொண்டு, எப்போதும் நீவிர் எனக்குச் செய்த நன்மைகளை எண்ணியபடி உள்ள எனது மனம் துடித்தது. ஆகவே இந்த மனமானது உமது உயர்ந்த குணங்கள் என்ற மது ஒழுகும் உமது திருவடிகளில், அந்த மதுவைப் பருகியபடி நித்தியவாசம் செய்வதற்காக வண்டு போல் மாறி உமது பக்கம் வந்தது. இத்தகைய எனது மனதிற்கு வேறு எந்தச் சிந்தனையும் ஏற்பட்டு விடாமல், அந்த மனம் விரும்பும் உமது குணங்களை மட்டுமே நீவிர் கொடுத்தருள வேண்டும். நீவிர் வேறு எதனை அளித்தாலும் என் மனம் ஏற்றுக்கொள்ளாது. ஆகவே நீவிர் வேறு எதனையும் அளிக்க முயற்சி செய்ய வேண்டாம்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டில் ப்ராப்தி நிமித்தமாக தளரா நின்ற தம்முடைய நெஞ்சினாரைக் குறித்து, “நாம் சரம பர்வமானவரை ஒருக்கால் தொழுதோமாகில் நம்மை நம் வசத்தே காட்டிக் கொடார்”, என்று உபதேசித்துத் தேற்றி, பூலோகத்திலே பாஹ்ய குத்ருஷ்டிகள் வ்யாபித்து லோகத்தாரையெல்லாம் அழிக்கப் புக்கவாறே, வேதமார்க்க

ப்ரதிஷ்டாபந முகேந அவர்களை யெல்லாரையும் ஜயித்து தமக்கு கல்பக ஸ்த்தாநீயரா யிருந்தபடியை சொன்னவாறே, ஸ்ரீருக்மிணிப்பிராட்டியார் க்ருஷ்ணனுடைய வைபவத்தைக் கேட்டு அவனை வரிக்கவேணும் என்று துடித்தாப்போலே இவருடைய திருவுள்ளமானது எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளிலேயிருக்கிற மகரந்தத்தை வாய்மடுத்துப் பருகுவதாக பர்யங்காயமாநமா யிருக்கிறபடியை கடாக்ஷித்த எம்பெருமானாரோடே அதினுடைய தசையை விண்ணப்பம் செய்து, "இனி வேறொரு விஷயத்தைக் காட்டி என்னை தேவரீர் மயக்காதொழிய வேணும்", என்கிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், தான் அடைய விரும்பும் இலக்கை அறிந்த காரணத்தால், அது கிடைக்கத் தாமதமாகுமோ என்று தளர்ந்தபடி நின்ற தனது நெஞ்சத்திடம் அமுதனார், "நாம் கைங்கர்யம் செய்வதற்கு எல்லை நிலமாக யுள்ளவரை ஒருமுறை தொழுதாலே போதுமானது. அவர் நம்மை நம் வசப்படும்படியாகச் செய்யவிடமாட்டார்", என்று உபதேசித்துத் தேற்றினார். இந்த உலகத்தில் உள்ளவர்களும், வேதங்களுக்குப் புறம்பாக பொருள் கூறுபவர்களும் ஆகிய மற்ற மதத்தினர்கள் எங்கும் வ்யாபித்து நின்று, இங்குள்ள அனைவரையும் தவறான உபதேசங்கள் மூலம் மயக்கி அழித்தபடி இருந்தனர். அப்போது, வேதமார்க்கங்களைச் சரியானபடி எடுத்துரைத்து, அவற்றை வெளிப்படுத்தி, அவற்றின் மூலமாகவே அவர்கள் அனைவரையும் வென்று, திருவரங்கத்தமுதனாராகிய தனக்கு ஒரு கற்பகமரத்தின் இடத்தில் நின்று அனைத்தையும் செய்ததை உரைத்தார். அந்த நேரத்தில், க்ருஷ்ணனுடைய வைபவங்கள் அனைத்தையும் கேள்விப்பட்ட ஸ்ரீருக்மிணிப்பிராட்டி அவனை உடனே அடையவேண்டும் என்று துடித்தது போன்று, அமுதனாருடைய திருவுள்ளமானது, எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளில் உள்ள மகரந்தத்தை அள்ளிப் பருகவேண்டும் என்ற துடிப்புடன் உள்ளதைக் கண்ட எம்பெருமானார், அமுதனாரைக் கடாக்ஷித்தார். எம்பெருமானாருடைய அந்த நிலையை விண்ணப்பம் செய்து, "இனி வேறு எந்த ஒரு விஷயத்தையும் காண்பித்து என்னை நீவிர் மயக்காமல் இருப்பீராக", என்று இந்தப் பாசுரத்தில் உரைக்கிறார்.

வ்யாக்யானம் – (போந்ததென் நெஞ்சு என்று தொடங்கி) (இராமாநுசா) எம்பெருமானாரே. (என் நெஞ்சு என்னும் பொன்வண்டு) தேவரீர் செய்தருளின மஹோபகாரங்களை அநுஸந்தித்துக் கொண்டிருக்கிற அடியேனுடைய மநஸ்ஸாகிற ஷட்பதம். "பொன்வண்டு" என்றது, தாம் மந்த்ரரத்நத்தை அநுஸந்தித்துக் கொண்டிருக்குமவ

ராகையாலே. “ஸகலம் காலம் த்வயேந சக்ஷிபந்” என்றும், “மந்த்ரரத்ந அநுஸந்தாந ஸந்தத ஸ்ப்புரித உதரம்” என்றும் சொல்லுகிறபடியே, ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் அநுஸந்திக்கப்படுமதாகையாலே, “லக்ஷ்மீ சக்ஷுர த்யாந தத் ஸாரூப்யாம் உபேயுஷே நமோஸ்துமீநவபுஷே” என்று அபியுக்தரும் அருளிச்செய்தபடியே, தத்க்ரது ந்யாயத்தாலே ஷட்பதமான மந்த்ரரத்னத்தை அநவரதம் அநுஸந்தித்துக் கொண்டு போருகிற தம்முடைய மநஸ்ஸுக்கும் ஷட்பதத்வம் உண்டாக ப்ராப்தமாகையாலே ஸர்வ விலக்ஷணமான வண்டு என்றபடி. இவர் எப்போதும் ஷட்பதத்தையே காணும் கொண்டாடுவது.

விளக்கம் - (இராமாநுசா) - எம்பெருமானாரே. (என் நெஞ்சு என்னும் பொன்வண்டு) - நீவிர் செய்த பேருதவிகனை எண்ணியபடி உள்ள எனது மனமானது ஆறு கால்கள் கொண்ட ஒரு வண்டு போன்று உள்ளது. “பொன்வண்டு” என்று ஏன் கூறினார் என்றால், எப்போதும் மந்தர இரத்தினமாகிய த்வயத்தை மட்டுமே எண்ணியபடி உள்ளதால் ஆகும். அஷ்டச்லோகீ (9) – ஸகலம் காலம் த்வயேந சக்ஷிபந் – அனைத்து காலங்களிலும் த்வயத்தை எண்ணியபடி – என்றும், பூர்வ திநசர்யை (9) - மந்த்ரரத்ந அநுஸந்தாந ஸந்தத ஸ்ப்புரித உதரம் – மந்த்ர இரத்தினத்தை உச்சரிப்பதால் சற்றே துடித்தபடியான உதடுகளை உடைய – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்து இடங்களிலும், அனைத்து காலங்களிலும், அனைத்து நிலைகளிலும் எண்ணப்படுவதாகையால், லக்ஷ்மீ சக்ஷுர த்யாந தத் ஸாரூப்யாம் உபேயுஷே நமோஸ்துமீநவபுஷே - என்று அருளிச்செய்தபடியே, தத்க்ரது ந்யாயம் காரணமாக இவரும், ஆறு பதங்கள் கொண்ட த்வயத்தை எப்போதும் எண்ணியபடி உள்ள தனது மனதிற்கும் ஆறு கால்கள் ஏற்படக்கூடும் என்பதால், அனைத்திலும் மாறுபட்ட வண்டு என்று உரைப்பதாகக் கருத்து. இவர் எப்போதும் ஆறு பதங்களையே கொண்டாடியபடி உள்ளார்.

வ்யாக்யானம் – (உனதடிப்போதிலொண் சீராம் தெளிதேனுண்டு அமர்ந்திட வேண்டி நின்பால்) “பாபக்ரியஸ்ய சரணம் பகவத் க்ஷமைவ ஸா ச த்வயைவ கமலா ரமணே அர்த்திதா யத் க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம்” என்கிறபடியே, ஸமஸ்த சேதநரையும் உத்தரிப்பிக்கைக்காகத் திருவரங்கச்செல்வனாருடைய திருப்பொலிந்த திருவடிகளிலே, ஸ்ரீரங்கநாச்சியார் முன்னிலையாக, சரணாகதி

பண்ணியருளின தேவரீருடைய திருவடித் தாமரைப்பூவிலே சைத்ய மார்த்த்வ ஸௌகந்தியாதிகளாகிற நிர்மலமான மகரந்தத்தைப் பாநம் பண்ணி, "உன்னடிக் கீழமர்ந்து புகுந்தேனே" என்னுமாப்போலே, "நிழலுமடி தாறும்" போலேயிருக்கக் கோலி, தேவரீர் ஸகாசத்திலே. (போந்தது) ப்ராபித்தது. "குரு பதாம்புஜம் த்யாயேத்" என்கிறபடியே தேவரீர் திருவடிகளை த்யாநம் பண்ணி நின்றது என்றபடி. ஒண் சீர் – அழகிய சீர். நின் பால் என்றது - தேவரீர் திருவடிகளில் என்றபடி. பால் – இடம்.

விளக்கம் - (உனதடிப்போதிலொண் சீராம் தெளிதேனுண்டு அமர்ந்திட வேண்டி நின்பால்) - யதிராஜ விம்சதி (18) - காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத் க்ஷமைவ ஸா ச த்வயைவ கமலா ரமணே அர்த்திதா யத் க்ஷேமஸ்ஸ ஏவ ஹி யதீந்த்ர பவச்ரிதாநாம் - யதிராஜரே! ஒருவன் தனது மனம், வாக்கு, செயல் ஆகிய மூன்றின் மூலம் எண்ணற்ற பாவங்களைத் தொடர்ந்து செய்தபடி இருக்கலாம். அப்படிப்பட்டவனுக்கு மூன்று காலத்திலும் ஸ்ரீரங்கநாதனால் மட்டுமே அடைக்கலம் அளிக்க இயலும். ஆனால் அவனும் அதனை நேரடியாகச் செய்வதில்லை. அவன், தாமரை மலரில் வீற்றுள்ள ஸ்ரீரங்கநாச்சியாருடன் சேர்ந்து நிற்கும் பங்குனி உத்தர நன்னாளில், நீ அருளிச் செய்த சரணாகதி கத்யங்கள் மட்டுமே என்னைப் போன்றவர்களைக் காக்க வல்லவை ஆகும் - என்பதற்கு ஏற்ப, அனைத்து சேதநர்களையும் கரையேற்றுவதற்காகத் திருவரங்கச் செல்வனாருடைய திருப்பொலிந்த திருவடிகளில், ஸ்ரீரங்கநாச்சியாரை முன்னிறுத்தி, சரணாகதியை அருளிச்செய்த உம்முடைய திருவடித்தாமரைகளில் உள்ளதான தூய்மையான மகரந்தத்தைப் பருகி, திருவாய்மொழி (6-10-10) – உன்னடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே - என்பது போன்று, பெரியதிருவந்தாதி (31) – நிழலும் அடிதாறும் - என்பதற்கு ஏற்ப இருக்கவேண்டும் என்று விண்ணப்பம் செய்து, உம்முடைய அரவணைப்பில். (போந்தது) - அடைந்து நின்றது. குரு பதாம்புஜ த்யாயேத் – ஆசார்யனுடைய தாமரை போன்ற திருவடிகளை த்யானித்தபடி - என்பதற்கு ஏற்ப உம்முடைய திருவடிகளை எப்போதும் த்யானித்து நின்றது.

வ்யாக்யானம் – (அதுவே ஈந்திட வேண்டும்) சஞ்சலமான என்னுடைய மநஸ்ஸை இச்சித்து நின்றவற்றையொழிய, மற்றொன்றைக் காட்டாதே அத்தையே கொடுத்தருள வேணும். தேவரீருடைய சரணாரவிந்த மகரந்தாநுபவத்தையே ப்ராஸாதித்தருள வேணுமென்று அபேக்ஷித்துக் காணும் இப்படி விண்ணப்பம் செய்கிறார். "விஷ்ணு: பதே பரமே மத்வ

உத்ஸ:”, “ரஸம் ஹி ஏவாயம் லப்த்வாநந்தீ பவதி”, “ஸர்வகந்த: ஸர்வ ரஸ:”, “உன் தேனே மலரும் திருப்பாதம்” என்றும், “தவ அம்ருதஸ்யந்திநி பாத பங்கஜே” என்றும் சொல்லுகிறபடியே இது ஒழிய பரம போக்யமாயிருப்பதொரு மது வேறேயுண்டு, அத்தைக் கொடுக்கிறோம் என்னில், (இது அன்றியொன்றும் மாந்தகில்லாது) “ஈதேயின்னம் வேண்டுவதெந்தாய்” என்கிறபடியே எங்களுக்கு ரஸிப்பது தேவரீருடைய திருவடிகளில் மகரந்தமேயாகையாலே, அத்தையொழிய வேறொன்றைக் கொடுத்தருளிற்றாகில், அம்ருதாசிக்கு புல்லையிட்டால் மிடற்றுக்கு கீழ் இழியாதாப்போலே, “என் நெஞ்சென்னும் பொன்வண்டு” அத்தை புஜிக்கமாட்டாது. ஆகையாலே, “அதுவே ஈந்திடவேண்டும்” என்கிறார். “அன்பாலதுவே ஈந்திடவேண்டும்” என்று பாடமானபோது, ஸ்நேஹ பூர்வகமாக அத்தையே கொடுத்தருள வேணுமென்றபடி. அன்பு – ஸ்நேஹம். மாந்தல் – உண்டல்.

விளக்கம் - (அதுவே ஈந்திட வேண்டும்) - சஞ்சலம் நிறைந்த எனது மனமானது மிகவும் விருப்பி நிற்கின்ற இதனைத் தவிர்த்து வேறு எதனையும் காண்பிக்காமல் அவற்றை மட்டுமே அளித்தருளவேண்டும்; உம்முடைய திருவடிகளில் பெருகும் மகரந்தத்தின் அனுபவத்தை மட்டுமே எனக்கு அளித்தருள வேண்டும் என்றே விண்ணப்பிக்கிறார். விஷ்ணு: பதே பரமே மத்வ உத்ஸ: - என்றும், தைத்திரீயம் (2-7) - ரஸம் ஹி ஏவாயம் லப்த்வாநந்தீ பவதி – ரஸமாகவே உள்ள ப்ரஹ்மத்தை அடையும் ஜீவன் ஆனந்தம் அடைகிறான் – என்றும், ஸர்வகந்த: ஸர்வரஸ: - அனைத்து மணமாகவும், அனைத்து சுவையாகவும் – என்றும், திருவாய்மொழி (1-5-5) – உன் தேனே மலரும் திருப்பாதம், ஸ்தோத்ரரத்னம் (27) - தவ அம்ருதஸ்யந்திநி பாத பங்கஜே – அமிர்தம் பெருகுகின்ற உனது திருவடித்தாமரைகளில் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, “இதனை காட்டிலும் உயர்ந்த இனிமையான வஸ்து வேறு ஒன்று உள்ளது. அதனை அளிக்கிறேன்”, என்று நீவிர் கூறக் கூடும். ஆனால், (இது அன்றியொன்றும் மாந்தகில்லாது) – திருவாய்மொழி (10-8-10) – ஈதேயின்னம் வேண்டுவதெந்தாய் - என்பதற்கு ஏற்ப எங்களுக்கு ரசிக்கும்படியாக உள்ளது உம்முடைய திருவடிகளின் மகரந்தம் மட்டுமே என்பதால், அதனைத் தவிர வேறு ஒன்றை நீவிர் எங்களுக்கு அளித்தீர் என்றால், அமிர்த்தத்தை உண்ணும் ஒருவனுக்குப் புல்லை அளித்தால் அது அவனுடைய கழுத்தின் கீழ் இறங்காது என்பது போன்று, எனது மனம் என்ற பொன்வண்டு அதனை ஏற்காது. ஆகவே “அதுவே ஈந்திடவேண்டும்” என்கிறார்.

இங்கு "அன்பால் அதுவே ஈந்திடவேண்டும்" என்று படித்தால், சிநேஹத்தை முன்னிறுத்தி அந்தத் திருவடிகளின் மகரந்தத்தையே அளிக்கவேண்டும் என்று விண்ணப்பிப்பதாகக் கருத்து.

வ்யாக்யானம் – (இனி மற்றொன்று காட்டி மயக்கிடலே) இப்படியான பின்பு, வேறொரு விஷயத்தைக் காட்டி மோஹிப்பிக்க வேண்டா. மயக்கம் – மோஹம். "பகவத் விஷயத்தை" என்று சொல்ல அருவருத்து, "மற்றொன்று காட்டி" என்று சொல்லுகிறார் காணும். (மாந்தகில்லாது) தேவரீர் நினைத்தால் அதுவும் செய்விக்கலாமிறே. ஆகிலும் என் மநஸ்ஸு அந்த ப்ரஸங்கத்துக்கு இசையாது. ஆபிமுக்யத்தைக் கொண்டிறே தேவரீர் கார்யம் செய்ய ஒருப்படுவது. "ஸ்திதேரவிந்தே மகரந்த நிர்ப்பரே மது வ்ரத: ந இக்ஷுரகம் ஹி வீக்ஷதே" என்று இவ்வர்த்தத்தை தேவரீர் திருவுள்ளம் பற்றிற்றில்லையோ. "த்வ அம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே நிவேசிதாத்மா கதமந்ய திச்சதி" என்று இவ்வர்த்தத்தை ப்ரதம பர்வத்தில் பரமாச்சார்யாரும் அநுஸந்தித்தாரிறே. (இனி மற்றொன்று காட்டி மயக்கிடலே) மற்றொரு விஷயத்தை ப்ரஸங்கிப்பதும் செய்யவேண்டா வென்கிறார். "பல நீ காட்டிப் படுப்பாயோ", "இன்னம் கெடுப்பாயோ", "நெறி காட்டி நீக்குதியோ" என்று நம்மாழ்வாரும் இவ்வர்த்தத்தை ப்ரதம பர்வத்தில் அநுஸந்தித்தருளினாரிறே.

விளக்கம் - (இனி மற்றொன்று காட்டி மயக்கிடலே) - இவ்விதம் உள்ளபோது, என்னை வேறு ஒரு விஷயத்தைக் காண்பித்து மயக்கவேண்டாம்; அதாவது "பகவத் விஷயத்தைக் காண்பித்து மயக்கவேண்டாம்" என்று உரைக்க அருவருப்பு கொண்டு "மற்றொன்று காட்டி" என்கிறார். (மாந்தகில்லாது) - நீவிர் நினைத்தால் அதனையும் செய்யலாம். ஆனால் எனது மனமானது அத்தகைய உபதேசத்திற்கு இணங்காது. அநுகூலமாக இருத்தல் என்பதைக் காரணம் காண்பித்து அல்லவோ நீவிர் கார்யம் செய்ய முனைகிறீர். ஸ்தோத்ரரத்னம் (27) - ஸ்திதேரவிந்தே மகரந்த நிர்ப்பரே மது வ்ரத: ந இக்ஷுரகம் ஹி வீக்ஷதே – தேன் நிறைந்த தாமரை உள்ளபோது வண்டுகள் முள்ளிப்பூவை நோக்காது அல்லவோ – என்னும் கருத்தை உம்முடைய திருவுள்ளத்தில் நீவிர் கொள்ளவில்லையோ? ஸ்தோத்ரரத்னம் (27) - த்வ அம்ருதஸ்யந்திநி பாதபங்கஜே நிவேசிதாத்மா கதமந்ய திச்சதி - அமிர்தம் பெருகுகின்ற உனது திருவடித்தாமரைகளில் வைக்கப்பட்ட மனமானது வேறு ஒன்றை எவ்விதம் விரும்பும் - என்று இந்தக் கருத்தை பகவத்விஷயம் குறித்து, உயர்ந்த

ஆசார்யராகிற ஆளவந்தாரும் அருளிச்செய்தார் அல்லவோ? (இனி மற்றொன்று காட்டி மயக்கிடலே) - மற்றொரு விஷயத்தைக்குறித்து என்னிடம் உரைக்கவும் வேண்டாம் என்கிறார். திருவாய்மொழி (6-9-9) – பல நீ காட்டிப் படுப்பாயோ – என்றும், திருவாய்மொழி (6-9-8) – இன்னம் கெடுப்பாயோ – என்றும், பெரியதிருவந்தாதி (6) – நெறி காட்டி நீக்குதியோ - என்றும் நம்மாழ்வார் கூட இந்தக் கருத்தை பகவத்விஷயம் குறித்து அருளிச்செய்தார் அல்லவோ?

101. மயக்கும் இருவினை வல்லியில் பூண்டு மதி மயங்கித்
துயக்கும் பிறவியில் தோன்றிய என்னைத் துயரகற்றி
உயக்கொண்டு நல்கும் இராமாநுச என்றது உன்னையுன்னி
நயக்கும் அவர்க்கு இது இழுக்கென்பர் நல்லவர் என்றும் நைந்தே

விளக்கவுரை - புண்ணியம், பாபம் ஆகிய இரண்டையும் உண்டாக்கவல்ல கர்மங்கள் எனது அறிவைக் கெடுத்தபடி உள்ளன. இத்தகைய இவை இரண்டும் என்னைக் கட்டி வைத்து, எனது அறிவைக் கலக்கியபடி உள்ளன. இதனால் நான் துக்கம் ஏற்படுத்தவல்லதான இந்தப் பிறவியில் வந்து பிறந்தேன். இப்படிப்பட்ட எனக்கு எம்பெருமானார் செய்தது என்ன? ஜன்மம் போன்ற துன்பங்களை வேருடன் அழித்தார்; ஆத்மா எது, ஆத்மா அல்லாதது எது என்று உணர வைத்தார்; அடைய வேண்டிய இலக்கு எது என்று உபதேசித்து என்னைப் பிழைக்க வைத்தார். “இவ்விதமாக எனக்கு எம்பெருமானார் செய்தார்” என்று நான் கூறும் இவைகள் அனைத்தும், எம்பெருமானாரையே எப்போதும் நினைத்து, உள்ளம் உருகியபடி உள்ளவர்களுக்குச் சரியான கருத்தாகத் தோன்றாது – ஏன்? காரணம், எம்பெருமானாரின் கருணை என்பது ஸம்ஸார துன்பம் போக்குவது, ஆத்ம விவேகம் ஏற்படுத்துவது போன்ற செயல்களுக்கும் அப்பாற்பட்டது என்று கருத்து.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே எம்பெருமானாருடைய போக்யதையிலே “அருவினையேன் வன்நெஞ்சு” என்னும்படியான தம்முடைய திருவுள்ளமானது ஈடுபட்டபடியைச் சொல்லி, இப்பாட்டுக்குக் கீழ் பல இடங்களிலும் “தீதில் இராமாநுசன்” என்றும், “தூயவன்” என்றும், “எங்களிராமாநுசன்” என்றும் தாம் அநுஸந்தித்த பாவநத்வத்தை ஸ்மரித்து, இந்த போக்யதைக்கும் அந்த பாவநத்வத்துக்கும் நெடுவாசி உண்டாகையாலும், இப்படி

இருந்துள்ள இவ்விஷயத்துக்கு அது அவத்யமாய் தலைக்கட்டுவதாகையாலும், "அப்போது அத்தைத் தப்பைச் சொன்னோம். அத்தாலே அவர்க்கு என் பக்கல் ப்ரீதி மட்டாய்ப் போகிறதோ" என்று திருவுள்ளம் புண்பட்டு, இதிலே "பந்தாயா விஷயா ஸங்கி என்னும்படியான மநஸ்ஸையுடையனாய் தீரக் கழியச் செய்த துஷ்கர்மத்தாலே ஜந்ம பரம்பரைகளிலே தட்டித் திரியா நிற்கிற என்னை, அந்த துஷ்கர்ம பலமான ஜந்ம பரம்பரையாகிற துக்கத்தைப் போக்கி உஜ்ஜீவிக்கும்படிக் கைக்கொண்டு க்ருபை பண்ணியருளின எம்பெருமானாரே" என்று, "தேவரீருடைய பாவநத்வத்தை கீழ்ப்பலவிடங்களிலும் நான் சொன்ன இது, தேவரீரை அநுஸந்தித்து நீர்ப்பண்டம் போலே சிதிலராய்ப் போமவர்களுக்கு அவத்யமாயிருக்குமென்று ஜ்ஞாநாதிகரானவர்கள் ஸர்வகாலமும் சொல்லுவார்கள்" என்று எம்பெருமானாரைப் பார்த்து விண்ணப்பம் செய்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் எம்பெருமானாருடைய இனிமையில், "அருவினையேன் வன்நெஞ்சு" என்பதற்கு ஏற்ப உள்ள தனது திருவுள்ளமானது ஈடுபட்ட விதத்தை உரைத்தார். கடந்த பல பாசுரங்களில் தீதில் இராமாநுசன் – என்றும், தூயவன் – என்றும், எங்கள் இராமாநுசன் – என்றும் தான் எண்ணியதான "எம்பெருமானாருடைய தூய்மை" என்பதை நினைத்துப் பார்த்து, "இத்தகைய இவருடைய இனிமைக்கும், அத்தகைய தூய்மைக்கும் பெரிய வேறுபாடு உள்ளது என்றாலும், இவ்விதமாக உள்ள இந்த விஷயத்திற்கு அது குறைவாக உள்ளது போன்று தோன்றுவதாலும், அப்போது அதனைத் தவறாக உரைத்துவிட்டேன் என்றே எண்ணுகிறேன். இதன் விளைவாக எம்பெருமானார் என்னிடம் குறைந்த அன்பு காண்பிப்பாரோ", என்று தனது திருவுள்ளம் புண்பட்டார். இந்தப் பாசுரத்தில் "பந்தாய விஷயாஸங்கி – பந்தம் மற்றும் மோக்ஷம் ஆகியவற்றுக்குக் காரணம் மனமே ஆகும்" என்பதாக உள்ள மனதைக் கொண்டவனாக, முற்றிலுமாகத் தாழ்ந்த செயல்களையே செய்தபடி உள்ளதால் பல பிறவிகளில் பலவிதமான பிறப்பு எடுத்துத் திரிந்தபடி உள்ள என்னை, அத்தகைய தீய கர்மங்களின் பலனாக உள்ள ஜன்மங்களின் வரிசை என்பதான துக்கத்தை நீக்கி, கரையேறும்படியாகக் கைக்கொண்டு க்ருபை செய்தருளிய எம்பெருமானாரே! உம்முடைய தூய்மை குறித்து நான் இதுவரை உள்ள பல பாசுரங்களில் உரைத்த அனைத்தும், உம்மையே எண்ணி நீர்ப்பண்டம் போன்று உருக்குலைந்து போகின்றவர்களுக்குத் தாழ்வாகவே தோன்றும் என்று அறிவுள்ளவர்கள் எப்போதும் கூறியபடி இருப்பார்கள்", என்று எம்பெருமானரை நோக்கி விண்ணப்பம் செய்கிறார்.

வ்யாக்யானம் - (மயக்குமிருவினை வல்லியில் பூண்டு) தத்வ ஹித புருஷார்த்த தத் யாதாத்ம்ய ஜ்ஞாந விரோதிகளாய், வைஷயிக வ்யாமோஹத்தை யுண்டாக்கக் கடவதாய், பொன்விலங்கு போலவும் இரும்புவிலங்கு போலவும் ப்ராப்தி ப்ரதிபந்தங்களாய்க் கொண்டு புண்யபாப ரூபத்தாலே இருவகைப்பட்டிருக்கிற கர்மமாகிற பாசத்தாலே கட்டுண்டு. கழுத்திலே புக்க வாயோடுபோலே கழிக்கவொண்ணாதபடி காணும் ஆத்மாவை இக்கர்மமானது ஆவரித்துக் கொண்டிருக்கும்படி. மயக்குகையாவது - மதி மயங்கப் பண்ணுகை. "இருவினை வல்லியைப் பூண்டு" என்கிற பாடமானபோது, "இருவகைப்பட்ட கர்மமாகிற பாசத்தை ஸ்வார்ஜநத்தாலே ஏறிட்டுக் கொண்டு" என்று பொருளாகக் கடவது. (மதி மயங்கித் துயக்கும் பிறவியில் தோன்றிய என்னை) "அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ:" என்கிறபடியே அத்தாலே "மதியெல்லாம் உள் கலங்கி" மனந்திரிவாகிற ஸம்சயத்தைப் பிறப்பிக்குமதான ஜந்ம பரம்பரைகளிலே தோள் மாறிப் பிறந்து ஸர்வலோக ஸாக்ஷிகமாக ஸம்ஸரித்துப் போந்தவென்னை. துயக்கு – மனந்திரிவு; அதாவது ஸம்சயம். மயங்குகை – கலங்குகை.

விளக்கம் - (மயக்குமிருவினை வல்லியில் பூண்டு) - உண்மை மற்றும் நன்மை ஆகியவற்றுடன் கூடிய புருஷார்த்தங்கள் குறித்து உள்ளது உள்ளபடி அடைவதற்குத் தகுதியாக உள்ளவையும், மற்ற விஷயங்களில் ஈடுபடுத்தி மயக்கத்தை உண்டாக்குபவையாகவும், பொன் விலங்கு மற்றும் இரும்பு விலங்கு போன்று அடைய வேண்டிய இலக்கிற்குத் தடையாக உள்ளதால் புண்ணியம் மற்றும் பாபம் என்னும் இரண்டுவகையாக உள்ளவையும் ஆகிய கர்மங்கள் என்ற கயிற்றால் கட்டப்பட்டு. எத்தனை அனுபவித்தாலும் கழுத்துடன் அகப்பட்ட பானை போன்று அல்லவோ இந்தக் கர்மங்கள் ஆத்மாவைச் சுற்றி வளைத்தபடி உள்ளன? மயக்குகை என்றால் அறிவில் தடுமாற்றம் உண்டாக்குதல். இங்கு "இரு வினைவில்லியில் பூண்டு" என்பதை "இருவினை வல்லியைப் பூண்டு" என்று படித்தால், "இரண்டு வகைப்பட்ட கர்மங்கள் என்ற கயிற்றைத் தனது முயற்சியால் தன் மேலே தானே ஏற்றிக்கொண்டு" என்று பொருள். (மதி மயங்கித் துயக்கும் பிறவியில் தோன்றிய என்னை) - கீதை (5-15) – அஜ்ஞாநேநாவ்ருதம் ஜ்ஞாநம் தேந முஹ்யந்தி ஜந்தவ: - அஞ்ஞானத்தால் ஞானம் மூடப்பட்டுள்ளது. ஆகவே அனைத்து மனிதர்களும் மோஹம் அடைகிறார்கள் – என்பதற்கு ஏற்ப, அதன் விளைவாக, திருவாய்மொழி (1-4-3) – மதியெல்லாம் உள்கலங்கி – என்று கூறுவது போன்று மனக் கலக்கம் என்னும் சந்தேகங்களை எழுப்புவதான பல்வேறு பிறவிகளில் மாறிமாறிப் பிறந்து, அனைத்து லோகத்தில் உள்ளவர்களும் காணும்படியாகத் திரிந்து கடந்த என்னை.

வ்யாக்யானம் – (துயரகற்றி உய்யக்கொண்டு நல்கும்) "கர்ப்ப ஜந்மாதி அவஸ்தாஸு துக்கம் அத்யந்ததுஸ்ஸஹம்" என்கிறபடியே கேட்டபோதே நடுங்கும்படியான கர்ப்ப ஜந்மாதி துக்கத்தை வாஸனையோடேயோட்டி, ஆத்மாநாத்மா விவேகத்தையும், த்யாஜ்யோபாதேய விவேகத்தையும், ஸ்வ பர ஸம்பந்த விவேகத்தையும் அடைவே யுண்டாக்கி உஜ்ஜீவிக்கும்படி கைக்கொண்டு என்னளவிலே அநிதர ஸாதாரணமான ஸ்நேஹத்தைப் பண்ணியருளின. "இராமாநுசா" என்றது, "எம்பெருமானாரே" என்று பரம பாவநராக நான் சொன்ன இது, (உன்னையுன்னி நயக்குமவர்க்கு) "குருரேவ பரம்ப்ரஹ்ம குருரேவபரந்தநம் குருரேவ பர:காம குருரேவ பராயணம் த்யாயேத் ஜபேந் நமேத்பக்த்யா பஜேதப்யர்ச்சயேத்முதா", "உபாயோபேயபாவேந தமேவ சரணம் வ்ரஜேத்", "யஸ்ய தேவே பராபக்திர் யதா தேவே ததா குரௌ" என்கிறபடியே, கரண த்ரயத்தாலும் தேவரீர் பக்கலிலே த்ருடாத்யாவஸாயத்தைப் பெற்று தேவரீரை அநுஸந்தித்து அதிப்ரீதராய் இருக்குமவர்களுக்கு. நயக்குகை – விரும்புகை.

விளக்கம் – (துயரகற்றி உய்யக்கொண்டு நல்கும்) – கர்ப்ப ஜந்மாதி அவஸ்தாஸு துக்கம் அத்யந்ததுஸ்ஸஹம் – கர்ப்பம், பிறப்பு முதலான நிலைகளை உண்டாக்குகின்றதும் துக்கம் நிறைந்ததும் - என்பதற்கு ஏற்ப, கேட்டவுடன் நடுங்கும்படி உள்ளதான கர்ப்பவாசம், பிறப்பு என்னும் துக்கங்கள் அனைத்தையும் அவற்றின் வாசனையுடன் விலக்கி, ஆத்மா மற்றும் ஆத்மா அல்லாதது என்பது குறித்த அறிவையும், விலக்க வேண்டியது மற்றும் ஏற்கவேண்டியது குறித்த அறிவையும், தனக்கும் மற்றவற்றுக்கும் உள்ள ஸம்பந்தம் குறித்த அறிவையும், தனக்கும் மற்றவற்றுக்கும் உள்ள ஸம்பந்தம் குறித்த அறிவையும் முற்றிலுமாக உண்டாக்கி, பிழைத்துக் கரையேறும்படியாக என்னைக் கைக்கொண்டு, என்னிடம் மற்றவர்கள் விஷயத்தில் காண்பிக்காத அன்பைப் பொழிந்த. "இராமாநுச" என்றது "எம்பெருமானாரே" என்று அனைத்து பாபங்களையும் போக்கவல்லவராக நான் உரைத்த இது. (உன்னையுன்னி நயக்குமவர்க்கு) - குருரேவ பரம்ப்ரஹ்ம குருரேவபரந்தநம் குருரேவ பர:காம குருரேவ பராயணம் த்யாயேத் ஜபேந் நமேத்பக்த்யா பஜேதப்யர்ச்சயேத்முதா – குருவே பரப்ரஹ்மம், குருவே உயர்ந்த செல்வம், குருவே உயர்ந்த விரும்பப்படும் பொருள், குருவே உயர்ந்த கதி, குருவை எப்போதும் த்யானித்தபடியும், அவருடைய திருநாமத்தை ஜபித்தபடியும், அவரை வணங்கியபடியும் பக்தி செலுத்தி, அவரைப் பஜித்து அர்ச்சித்து – என்றும், உபாயோபேயபாவேந தமேவ சரணம் வ்ரஜேத் – தனக்கு உபாயமாகவும் உபேயமாகவும் குருவையே சரணம் அடைந்து – என்றும், யஸ்ய தேவே பராபக்திர் யதா தேவே ததா குரௌ – தெய்வத்திடம் எவ்விதம்

பக்தி செலுத்துகிறோமோ, அதே போன்று குருவிடமும் பக்தி செலுத்தவேண்டும் – என்றும் கூறுவதற்கு ஏற்ப மனம், வாக்கு மற்றும் சரீரம் ஆகிய மூன்றாலும் உன்னிடம் உறுதியான நிலையை அடைந்து, உன்னை மட்டுமே எப்போதும் எண்ணியபடி இருந்து, மிகவும் அன்பு கொண்டபடி உள்ளவர்களுக்கு.

வ்யாக்யானம் – (இதிழுக்கு) - "நாற்றோளமுதே", "ஆராவமுதே" என்னுமாப்போலே, "இராமாநுசன் எனக்கு ஆராமுதே", "அடியேற்கின்று தித்திக்கும்" என்னும்படியான நிரவதிக அதிசய ரஸத்தை யாவதாத்மபாவியாக அநுபவித்து ப்ரீதனாயிருக்க வேண்டியிருக்க, அப்படிச் செய்யாதே ஸம்ஸார நிவர்த்தகத்வ மாத்ரோபகாரத்தைச் சொன்ன இது அவத்யம் என்று. (நல்லவர் என்றும் நைந்தே) "வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம்" என்கிறபடியே தேவரீருடைய போக்யதையை ஸர்வகாலமும் அநுபவித்துக் கொண்டு போந்து நீர்ப்பண்டம்போலே சிதிலராயிருந்த ஆழ்வான், பிள்ளான் முதலான முதலிகள், (என்பர்) சொல்லுவார்கள்.

விளக்கம் – (இது இழுக்கு) – திருவாய்மொழி (6-10-9) – நாற்றோளமுதே – என்றும், திருவாய்மொழி (5-8-1) – ஆராவமுதே – என்றும் கூறுவது போன்று, இராமாநுச நூற்றந்தாதி (19) - இராமாநுசன் எனக்கு ஆரமுதே – என்றும், கண்ணிநுண்சிறுத்தாம்பு – அடியேற்கின்று தித்திக்கும் – என்றும் எல்லையற்ற இனிமை பொருந்திய சுவையை உள்ளது உள்ளபடி அனுபவித்தபடி நின்று மகிழ வேண்டியதாக உள்ளபோது, "ஸம்ஸாரத்திலிருந்து விடுபடும்படிச் செய்யும் உபகாரம் கொண்டவர்" என்று மட்டுமே உரைத்தால் தாழ்ந்தது அல்லவோ என்று. (நல்லவர் என்றும் நைந்தே) – யதிராஜ விம்சதி (3) - வாசா யதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் பஜதாம் குருணாம் கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் பாதாநு சிந்தந பர: ஸததம் பவேயம் - யதிகளின் அரசரே! என்னுடைய மனம் எப்போதும் உம்மால் நியமிக்கப்பட்ட குருபரம்பரையில் தொடர்கின்ற ஆசார்யர்களின் தாமரை போன்ற திருவடிகளையே எண்ணியபடி இருத்தல் வேண்டும். கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்றவர்கள் தங்கள் வாக்கு, மனம், செயல் ஆகிய மூன்றாலும் உனது திருவடிகளிலேயே நிலைத்து நின்றனர். இவர்களது திருவடிகள் எனது எண்ணத்தில் எப்போதும் நிலைக்கவேண்டும் - என்பதற்கு ஏற்ப உன்னுடைய இனிமையை எப்போதும் அனுபவித்தபடி இருப்பதால் நீர்ப்பண்டம் போன்று உருக்குலையும் ஸ்வாமி கூரத்தாழ்வான், திருக்குருகைப்பிரான்பிள்ளான் போன்ற ஆசார்யர்கள், (என்பர்) - கூறுவார்கள்.

வ்யாக்யானம் – அன்றிக்கே, "உன்னை யுன்னி நைந்து என்றும் நயக்குமவர்க்கு இதிழுக்கென்பர் நல்லவர்" என்று அந்வயிக்கவுமாம். அப்போது தேவரீரை அநுஸந்தித்து சிதிலராய் ஸர்வகாலமும் விருப்பத்தை பண்ணுமவர்களுக்குத் தண்மை என்றும் சொல்லுவர்கள் ஸத்துக்களானவர்கள் என்றபடி. நல்லவர் என்றது தேவரீருக்கு ஸ்நேஹியானவர் என்றுமாம். தேவரீருடைய போக்யதையை அநுஸந்தித்து, "மாதா பிதா யுவதய: தநயா விபூதி: ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்" என்றும், "அத்ர பரத்ரசாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம்" என்றும், "ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே" என்றும் சொல்லுகிறபடியே தேவரீரை ஸர்வபந்துவாக அநுஸந்தித்து இருக்குமவர்களுக்கு, கநிஷ்டன் ஜ்யேஷ்டாநுவர்த்தநம் பண்ணாதொழிந்தால் அவன்றனக்கு அது குற்றமாய் தலைக்கட்டுமாப்போலே அவர்களைப் பின் சென்று கொண்டு இப்படி சொன்னேனாகையாலே அவத்யமாய்த் தலைக்கட்டும் என்றாய்த்து.

விளக்கம் - அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். இங்கு "உன்னை உன்னி நைந்து என்றும் நயக்குமவர்க்கு இதிழுக்கென்பர் நல்லவர்" என்றும் வரிசைப்படுத்தலாம். இவ்விதம் கொண்டால், "உம்மை எண்ணியபடி உருக்குலைந்து அனைத்து காலங்களிலும் உம்மிடம் தங்களுடைய விருப்பத்தைக் காண்பித்தபடி உள்ளவர்களுக்குத் தாழ்வு என்று ஸாதுக்கள் கூறுவார்கள்" என்று பொருளாகிறது. "நல்லவர்" என்றால், "உமக்கு அன்பானவர்கள்" என்று பொருள். உம்முடைய இனிமையை எண்ணியபடி, ஸ்தோத்ரரத்னம் (4) – மாதா பிதா யுவதய: தநயா விபூதி: ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் – என்னையும் என்னைச் சேர்ந்தவர்களுக்கும் எந்த ஒரு நம்மாழ்வாரின் திருவடிகளே தாய், தந்தை, செல்வம் போன்ற அனைத்துமாக உள்ளனவோ – என்றும், ஸ்தோத்ரரத்னம் (2) - அத்ர பரத்ரசாபி நித்யம் யதீய சரணௌ சரணம் மதீயம் – இங்கும் அங்கும் எந்த ஒரு நாதமுனிகளுடைய திருவடிகளே புகலிடமோ – என்றும், ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே - என்றும் கூறுவதற்கு ஏற்ப, உம்மையே அனைத்துவிதமான உறவினராக எண்ணியபடி உள்ளவர்களுக்கு. இளையவர்கள் மூத்தவர்களை எண்ணாமல் இருந்தால் அது அவர்களுக்குத் தோஷமாகவே முடியும் என்பது போன்று, அவர்களைப் பின் தொடர்ந்து இவ்விதம் உரைத்தேன் என்பதால் தாழ்ந்ததாகவே முடியும் என்று கருத்து.

102. நையும் மனம் உன் குணங்களை உன்னி என் நா இருந்து எம்

ஐயன் இராமாநுசன் என்று அழைக்கும் அருவினையேன்
கையும் தொழும் கண் கருதிடுங் காணக் கடல்புடைசூழ்
வையம் இதனில் உன் வண்மை என்பால் என் வளர்ந்ததுவே

விளக்கவுரை - ஸர்வேச்வரனின் குணங்கள் அனைத்தும் அவனை அண்டியவர்களுக்கு உதவ வேண்டும் என்றபடியே காணப்படும். ஆனால் இந்த உலகில் உள்ள அனைவரும் காக்கப்படவேண்டும் என்று எண்ணி அவதாரம் செய்த உமது உயர்ந்த கல்யாண குணங்களை என் மனம் எப்போதும் சிந்தித்தபடி உருகி நின்றது, எண்ணற்ற காலம் உலக விஷயங்களில் நான் சுற்றித் திரிந்தேன். இவ்விதம் கிடந்த என்னை, பலரும் மதிக்கும்படியான ஒரு பொருளாக மாற்றிய உமது உபகாரத்தை நான் கண்டேன்; ஆகவே கஜேந்த்ரன் அழைத்தது போன்று ஒருமுறை மட்டுமே அல்லாமல் எப்போதும் எனது நாக்கு, "என் தந்தை எம்பெருமானார்", என்று அழைத்தபடியே உள்ளது. உலக விஷயங்களில் ஈடுபட்டபடி, பலவிதமான பாவ கர்மங்களுக்குத் துணை போன எனது கைகள், உமது கல்யாண குணங்கள் கண்டு, உமக்கு அஞ்ஜலி செய்தபடி இருந்தது. உலக விஷயங்களை மட்டுமே கண்டு மயங்கிக் கிடந்த என் கண்கள், கல்யாண குணங்களால் பிரகாசத்துடன் காணப்படும் உமது அழகான திருமேனி எழிலில் மயங்கி நின்றது. கடலால் சூழப்பட்ட இந்த உலகில், அணைத்து சேதனர்களையும் உய்விக்கும்படியாக வந்த உமது உயர்ந்த குணமானது, என்னை மட்டுமே இவ்விதம் உம்மிடம் ஈடுபடும்படி வந்தது ஏனோ? இதன் காரணம் என்ன? இதனை நான் அறியமாட்டேன்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே, "எம்பெருமானாருடைய போக்யதையில் ஈடுபட வேண்டியிருக்க அப்படியிராதே அவருடைய பாவநத்தைக் கொண்டாடினது அவரை யநுஸந்தித்து சிதிலராயிருக்குமவர்களுக்கு அஸஹ்யமாயிருக்கு"மென்று சொல்லி; இதிலே **அவர்கள் விஷயத்தால் குற்றம் தீரும்படி அந்த:கரணத்தோடு, பாஹ்ய கரணங்களோடு வாசியற எல்லாம் எம்பெருமானார் பக்கலிலே அதிமாத்ர ப்ராவண்யத்தாலே ஸக்தங்களாய் ஆழங்கால்பட்டனவென்று சொல்லா நின்று கொண்டு, இந்த பூலோகத்திலேயிருக்கிற எல்லா சேதநருமிருக்கச் செய்தே தேவரீருடைய திவ்யௌதார்யம் என்னொருவன் பக்கலிலும் கிளர்ந்து வருகைக்கு ஹேதுவென் என்று அவர் தம்மையே கேட்கிறார்.**

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "எம்பெருமானாருடைய இனிமையான தன்மையில் மட்டும் ஈடுபட்டபடி இல்லாமல், அவருடைய தூய்மையாக்கும் தன்மையை எண்ணியபடி இருந்து கொண்டாடிய தனது செயலாவது, எம்பெருமானாரை மட்டுமே எப்போதும் எண்ணியபடி இருந்து உருக்குலைந்து நிற்பவர்களுக்குத் தாழ்வாகத் தோன்றும்", என்று உரைத்தார். இந்தப் பாசுரத்தில், "அவர்களுடைய ஸம்பந்தம் காரணமாக அனைத்து தோஷங்களும் விலகும்படியாக அந்தகரணத்துடன் வெளி இந்திரியங்களும் எந்தவிதமான வேறுபாடும் இன்றி சேர்ந்து நின்று, எம்பெருமானாரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டதன் விளைவாக அசையாமல் ஆழ்ந்து நின்றன", என்கிறார். மேலும் எம்பெருமானாரிடம், "இந்த உலகில் பல சேதநர்கள் உள்ளனர். ஆனாலும் உம்முடைய திவ்யமான தாராளகுணம் என்பது என் ஒருவன் விஷயத்தில் மட்டும் மேன்மேலும் வளர்ந்தபடி இருப்பதற்கான காரணம் என்ன?" என்று கேட்கிறார்.

வ்யாக்யானம் – (நையும்மனமுன் குணங்களை யுன்னி) "ஏபிச்ச ஸசிவைஸ்ஸார்த்தம்" என்கிறபடியே மநோரதித்துக் கொண்டு வந்த ஸ்ரீபரதாழ்வானுடைய மநோரதம் விபலமாய்ப் போகைக்கு உறுப்பாகையாலும், "அநந்யாராகவேணாஹம்" என்ற பெரியபிராட்டியாரைக் காட்டிலே விடுகைக்கு உறுப்பாகையாலும், "குணைர்த்தாஸ்யமுபாகத:" என்ற இளையபெருமாளை த்யஜிக்கைக்கு ஹேதுவாகையாலும், ஸர்வேச்வரனுடைய கல்யாண குணங்கள் கட்டடங்க ஆச்ரிதர்களுக்கு அவிஸ்ரம்ப ஜநகங்களாயிருக்கும்; அப்படியன்றிக்கே, ப்ராதிகூல்யத்திலே முறுகி லீலாவிபூதியிலே கிடக்கிற சேதநரையெல்லாம் உத்தரிப்பிக்கவேணுமென்று தீக்ஷித்துக் கொண்டு அவதரித்தருளின தேவரீருடைய ஸௌசீல்ய ஸௌலப்ய வாத்ஸல்யாதி கல்யாணகுணங்களை என் மநஸ்ஸானது அநுஸந்தித்து அத்யந்தாபி நிவிஷ்டமாய்த் தன்னிலே கிடந்து சிதிலமாகா நின்றது. "ஆஹ்லாத சீத நேத்ராம்பு புளக க்ருத காத்ரவாந் ஸதா பரகுணாவிஷ்ட:" என்று சேதநனாயிருக்குமவன் படும்பாட்டைப் படா நின்றதென்கிறார். அசேதநமான மநஸ்ஸுங்கூட உருகும்படி காணும் இவர் கல்யாண குணங்களினுடைய போக்யதையிருப்பது.

விளக்கம் - (நையும் மனம் உன் குணங்களை உன்னி) - இராமாயணம் அயோத்யாகாண்டம் (104-12) - ஏபிச்ச ஸசிவைஸ்ஸார்த்தம் – இந்த மந்த்ரிகளுடன்

சேர்ந்து யாசித்தபடி - என்பதற்கு ஏற்ப மிகுந்த விருப்பத்துடன் சென்ற பரதனுடைய விருப்பமானது நிறைவேறாமல் சென்றதற்குக் காரணமாக உள்ளதாலும், அநந்ய ராகவேண அஹம் – இராமனை விட்டுப் பிரிந்து என்னால் இருக்க இயலாது – என்று கூறிய பெரியபிராட்டியாரைக் கானகத்தில் விடுவதற்குக் காரணமாக உள்ளதாலும், குணைர் தாஸ்யம் உபாகத: - இராமனுடைய கல்யாணகுணங்களுக்கு நான் அடிமை - என்று கூறிய லக்ஷ்மணனைத் துறப்பதற்குக் காரணமாக உள்ளதாலும் ஸர்வேச்வரனுடைய திருக்கல்யாணகுணங்கள் அனைத்தும் அவனுடைய அடியார்களுக்கு "நம்பகத்தன்மை அற்றது" என்று நிலையை உண்டு பண்ணுவதாகவே இருக்கும். ஆனால் இவ்விதம் அல்லாமல், அவனுடைய கட்டளைகளை மீறுவதில் மட்டுமே ஆர்வம் கொண்ட இந்த உலகில் உள்ள அனைத்து சேதனர்களையும் கரையேற்றவேண்டும் என்று உறுதி பூண்டு அவதரித்தருளிய உம்முடைய ஸௌசீல்யம், ஸௌலப்யம், வாத்ஸல்யம் போன்ற அனைத்து திருக்கல்யாண குணங்களையும் எனது மனமானது எப்போதும் எண்ணியபடி, அவற்றில் புகுந்து உருக்குலைந்து நின்றது. . ஆஹ்லாத சீத நேத்ராம்பு புளக க்ருத காத்ரவாந் ஸதா பரகுணாவிஷ்ட: - எப்போதும் கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகியபடி, குரல் தழுதழுக்க பகவானுடைய உயர்ந்த குணங்களை உச்சரித்தபடி - என்று சேதனநனாக உள்ளவன் படும்பாட்டை அடைந்தபடி நின்றது என்கிறார். அசேதநமாக உள்ள மனம் கூட உருகும்படியாக எம்பெருமானாருடைய கல்யாணகுணங்களின் இனிமை உள்ளது.

வ்யாக்யானம் – "என் நா இருந்து எம்மையன் இராமாநுசன் என்றழைக்கும் அருவினையேன்" என்றத்தை காகாக்ஷி ந்யாயத்தாலே பூர்வோத்தர பதங்களோடே அந்வயித்துக்கொள்வது. (என் நா) என்னுடைய ஜிஹ்வையானது, அநாதிகாலமே பிடித்து இவ்வளவாக விஷயாந்தரங்களிலே ஸக்தையாய்க் கொண்டு போந்து, "அஸத் கீர்த்தந காந்தார பரிவர்த்தந பாம்ஸுலை"யான என்னுடைய ஜிஹ்வையானது, (இருந்து) தேவரீருடைய கல்யாணகுணங்களை அநுபவித்து அவற்றிலே அத்யபி நிவிஷ்டையாய் ஒருபடிப்பட இருந்தது. இவ்வாகாரத்தைப் பிறப்பித்த தேவரீர்க்குங் கூட அசைக்கப் போகாதபடி நீர்வஞ்சி போலே ஏகரகாரமாய்க் கொண்டிருந் தென்னுதல். (எம்மையன்) "அஸந்நேவ ஸபவதி" என்கிறபடியே அஸத் கல்பனாய்க் கிடந்த அடியேனை, "ஸந்தமேநம் ததோ விது:" என்கிறபடியே ஒரு வஸ்துவாம்படி கடாக்ஷித்த உபகாரத்தை அநுஸந்தித்து, "ஸ ஹி வித்யாதஸ்தம் ஜநயதி" என்றும், "குரூர் மாதா குரு: பிதா" என்றும்,

"அன்று நான் மறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்" என்றும், "மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ் ஸர்வம்" என்றும், "தந்தை நல்தாய் தாரம்" என்றும் ப்ரமாண ஸஹஸ்ரத்தாலே சொல்லப்பட்ட பந்தவிசேஷத்தை உட்கொண்டு நமக்கு நிருபாதிக பந்துபூதரானவர் என்று, தேவரீருடைய பாந்தவத்தையும்.

விளக்கம் – "என் நா இருந்து எம்மையன் இராமாநுசன் என்றழைக்கும் அருவினையேன்" என்பதை "காகத்தின் கண்கள் வெவ்வேறு காட்சியைக் காணும் தன்மை கொண்டவை" என்னும் ந்யாயத்தின்படி, முன்பு உள்ள சொற்கள் மற்றும் பின் உள்ள சொற்கள் ஆகியவற்றுடன் சேர்த்து வரிசைப்படுத்தலாம். (என் நா) – என்னுடைய நாக்கானது எல்லையற்ற காலம் தொடங்கி, இந்நாள்வரை மற்ற உலக விஷயங்களில் மட்டுமே நிலைநின்றபடி இருந்து, அஸத் கீர்த்தந காந்தார பரிவர்த்தந பாம்ஸூலாம் – தகாத விஷயங்களைக் குறித்து உரைத்ததால் தூய்மை செய்யப்படவேண்டிய நாக்கு - என்பதாக உள்ள எனது நாக்கானது, (இருந்து) - உம்முடைய திருக்கல்யாண குணங்களை அனுபவித்து அவற்றில் புகுந்து அசையாமல் நின்றது. இப்படிப்பட்ட நிலையை எனக்கு ஏற்படுத்திய உம்மாலும் கூட இனி அசைக்க இயலாதபடி நீர்க்கொடி போன்று ஒரே இலக்காக நின்றது. (எம் ஐயன்) – அஸந்நேவ ஸ பவதி – இல்லை என்பதாகவே ஆகிறான் - என்பதற்கு ஏற்ப "இல்லாத ஒரு பொருள்" என்று கிடந்த என்னை, ஸந்நமேநம் ததோவிது: - இருக்கின்ற பொருளாகிறான் – என்றும், ஆபஸ்தம்பம் - ஸ ஹி வித்யாதஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்ட்டம் ஜந்ம - ஆசார்யன் கல்வி மூலம் அளிக்கும் சரீரமே சிறந்தது – என்றும், குருர்மாதா குரு: பிதா – குருவே தாய் குருவே தந்தை – என்றும், திருச்சந்தவிருத்தம் (64) – அன்று நான் பிறந்திலேன் பிறந்த பின் மறந்திலேன் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (5) – மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதிஸ் ஸர்வம் – தாய் தந்தை மாதர் புத்திரர் செல்வம் ஆகிய அனைத்தும்- என்றும், ஆர்த்தி ப்ரபந்தம் (3) – தந்தை நல்தாய் தாரம் - என்றும் உள்ள பல ஆயிரக்கணக்காண ப்ரமாணங்களால் கூறப்பட்ட பந்தத்தின் சிறப்பு போன்று, "நமக்கு எந்தவிதமான காரணமும் இன்றி, அனைத்துவிதமான உறவினராகவும் உள்ளவர்" என்று உம்முடைய பந்துவாக உள்ள தன்மையையும்.

வ்யாக்யானம் - (இராமாநுசன்) சக்ரவர்த்தித்திருமகனுக்கு அநுஜராய் அவதரித்தபோது, "ந ச ஸீதா த்வயா ஹீநா தசாஹமபி ராகவ, முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யா

விவோத்த்ருதெள" என்றும், பிராட்டியைப்போலே அநந்யார்ஹராயிருக்கையும், பாகவத ப்ரத்வேஷியான மேகநாதனை நிரஸிக்கையும் முதலான கல்யாண குணங்களிலே ஈடுபட்டு அவற்றுக்கு ப்ரகாசகமான இத்திருநாமத்தையும். (என்று அழைக்கும்) மடுவின் கரையிலே ஸ்ரீகஜேந்த்ராழ்வான் பெருமிடறு செய்து ஓலமிட்டாப்போலே, சொல்லிக் கூப்பிடாநின்றது. அழைத்தல் - கூப்பிடுதல். "தஸ்யுபிர் முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும் ப்ருசம்" என்று பகவத் விஷயத்திலே அத்திருநாமம் மறந்தபோதாய்த்துக் கூப்பிடவடுப்பது. இங்கு அப்படியன்றிக்கே அநுஸந்தித்துக் கொண்டிருந்தே காணும் கூப்பிடவேண்டுகிறது. "புணரா நின்ற மரமேழ் அன்றெய்த வொருவில் வலவாவோ புணரேய் நின்ற மரமிரண்டின் நடுவே போன முதல்வாவோ" என்று அதீத காலங்களிலே பண்ணின அபதாநங்களை அநுஸந்தித்துப் பெருமிடறு செய்து கூப்பிட்டாரிறே ஆழ்வாரும். தேவரீருடைய குணாநுபவ ஜநிதையான ப்ரீதி தலைமண்டையிட்டு அடவுகெட கீர்த்தநம் பண்ணா நின்றதென்றபடி.

விளக்கம் – (இராமாநுசன்) - சக்கரவர்த்தித்திருமகனாக இராமனுக்கு இளையவராக அவதரித்துபோது, இராமாயணம் அயோத்யாகாண்டம் (53-31) - ந ச ஸீதா த்வயா ஹீநா தசாஹமபி ராகவ, முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யா விவோத்த்ருதெள – லக்ஷ்மணன், "இராகவா! நானும் சீதையும் உன்னைப் பிரிந்து உயிர் வாழ்வோம் என்றால், நீரில் இருந்து எடுக்கப்பட்ட மீன் போன்று மிகவும் அற்பமான காலம் மட்டுமே வாழ்வோம்" என்றான் – என்றும், பெரியபிராட்டி போன்று வேறு யார் வசப்பட்டவராகவும் இன்றி நிற்பவராகவும், உயர்ந்த பாகவதனாகிய அனுமனை வெறுத்த மேகநாதனைத் தண்டித்தவராகவும் நின்றபடி இருந்தபோது வெளிப்பட்ட குணங்களில் ஈடுபட்டு, அந்தக் குணங்களை நினைவுபடுத்தக்கூடிய இந்தத் திருநாமத்தையும். (என்று அழைக்கும்) - மடுவின் கரையில் நின்று கஜேந்த்ரன் மிகுந்த துன்பத்துடன் கூக்குரல் எழுப்பியது போன்று அழைத்தபடி எனது நாக்கு நின்றது. ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே தஸ்யுபிர் முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும் ப்ருசம் - எம்பெருமானுடைய சிந்தனையில்லாமல் ஒரு க்ஷணகாலம் கழிந்து போனாலும், ஸர்வஸ்வத்தையும் கள்வர் கவர்ந்தால் எப்படி அழுவர்களோ, அது போன்று அழவேண்டும் - என்று கூறுவதற்கு ஏற்ப பகவத் விஷயத்தை மறந்து போகும் நேரத்தில் அதனைக் கூப்பிடுதல் என்பது பொருந்துகிறது; ஆனால் எம்பெருமானர் விஷயத்தில் அவரை எண்ணியபடி உள்ளபோதிலும் அழைத்தபடி உள்ளது. திருவாய்மொழி (6-10-5) -

புணரா நின்ற மரமேழ் அன்றெய்த வொருவில் வலவாவோ புணரேய் நின்ற மரமிரண்டின் நடுவே போன முதல்வாவோ - என்பதற்கு ஏற்ப முற்காலங்களில் செய்யப்பட்ட வியக்கத்தக்க நிகழ்வுளை எண்ணியபடி நம்மாழ்வார் அழைத்தார்; உம்முடைய குணங்களை அனுபவித்தபடி உள்ளதால் பிறக்கும் மகிழ்வானது அதிகமாகி ஒருமுறை என்றில்லாமல் எப்போதும் கீர்த்தனம் செய்தபடி எனது நாக்கு உள்ளது.

வ்யாக்யானம் - (அருவினையேன் கையுந்தொ ழும்) "நானே நாநாவித நரகம் புகும் பாவம் செய்தேன்", "பாவமே செய்து பாவியானேன்" என்றும், "ந நிந்திதம் கர்ம ததஸ் லோகே ஸஹஸ்ரசோயம் நமயா வ்யதாயி" என்றும், "யாவச்சயச்சதுரிதம் ஸகலஸ்ய ஜந்தோஸ் தாவச்சதத் தததிகஞ்ச மமாஸ்தி ஸத்யம்" என்றும் சொல்லுகிறபடியே அநாதிகாலமே பிடித்து தேவரீர்க்குரித்தான இக்கரணங்களைக் கொண்டு அப்ராப்த விஷயங்களுக்கு உரித்தாக்கி அத்தாலே அத்யந்த க்ரூர பாபங்களைப் பண்ணின என்னுடைய கையும் இப்போது தேவரீருடைய கல்யாணகுணங்களிலே ஸக்தமாய் தேவரீரைக் குறித்து அஞ்சலி பந்தத்தைப் பண்ணா நின்றது. "பத்தாஞ்சலி புடா ஹ்ருஷ்டா: நம இத்யேவ வாதிந" என்னும்படியான ச்வேத த்வீபவாசிகளோடே தோள் தீண்டியனார் காணும் இவரும்.

விளக்கம் – பெரியதிருமொழி (1-9-2) – நானே நாநாவித நரகம் புகும் பாவம் செய்தேன் – என்றும், பெரியதிருமொழி (1-9-9) – பாவமே செய்து பாவியானேன் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (23) – ந நிந்திதம் கர்ம ததஸ் லோகே ஸஹஸ்ரசோயம் நமயா வ்யதாயி – எந்த ஒரு நிந்திக்கப்பட்ட பாப கர்மங்கள் என்னால் பல்லாயிரம் முறைகள் செய்யப்படவில்லையோ, அப்படிப்பட்ட செயல்கள் உலகிலேயே இல்லை – என்றும், யாவச்சயச்சதுரிதம் ஸகலஸ்ய ஜந்தோஸ் தாவச்சதத் தததிகஞ்ச மமாஸ்தி ஸத்யம் – என்றும் கூறுவதற்கு ஏற்ப எல்லையற்ற காலமாக, உமக்கு மட்டுமே உரியதான எனது உடல் உறுப்புக்கள் கொண்டு செய்யக்கூடாத விஷயங்கள் பலவற்றையும் செய்து, அதன் விளைவாக மிகவும் கொடிய பாபங்கள் பலவற்றையும் செய்த எனது கையும் இப்போது உம்முடைய திருக்கல்யாணகுணங்களில் ஈடுபட்டு நின்று, உம்மையே அஞ்சலி செய்தபடி உள்ளது. பத்தாஞ்சலிபுடா ஹ்ருஷ்டா: நம இத்யேவ வாதிந: - பசியில் உள்ளபோது உணவு கிடைப்பது போன்று "நம" என்னும்போது உள்ளது – என்பதற்கு ஏற்ப ச்வேதத்வீபத்தில் உள்ளவர்களுடன் இணைந்தது போன்று இவர் நிற்கிறார்.

வ்யாக்யானம் - (கண் கருதிடுங்காண) இவ்வளவும் விஷயாந்தரத்தைக் காணக் கருதின என்னுடைய கண்ணானது, "உன்றன் மெய்யில் பிறங்கிய சீர்" என்கிறபடியே அநுபாவ்யங்களான கல்யாணகுணங்களாலே ப்ரகாசியா நிற்கிற தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹத்தைப் பார்க்கவேணும் என்று மநோரதியாநின்றது. "கதாத் ரக்ஷ்யா மஹேராஜந் ஜகத: க்லேச நாசநம்" என்றும், "காணுமாறருளாய்" என்றும், "காணவாராய்" என்றும், "கதாநு ஸாக்ஷாத் கரவாணி சக்ஷுஷா" என்றும், "கதாநு ஸாக்ஷாத் கரவாணி சக்ஷுஷா" என்றும், "நேத்ரஸாத்குரு கரீச ஸதா" என்றும் பகவத் விஷயத்திலே, ஸ்ரீபரதாழ்வானும் ஆழ்வாரும் ஆசார்யர்களும் அருளிச் செய்தாப்போலே இவரும் அருளிச் செய்கிறார். "ரூபம் தவாஸ்து யதிராஜ த்ருசோர் மமாக்ரே" என்னக் கடவதிறே. அசேதநமான கண்ணை "கருதிடும்" என்னக்கூடுமோவென்னில், "காமார்த்தாஹி ப்ரதி க்ருபணா சேதநா சேதநேஷு" என்று சொன்னாப்போலே ப்ரேம பாரவச்யத்தாலே சேதந ஸமாதியாகச் சொல்லத் தட்டில்லையிறே.

விளக்கம் - (கண் கருதிடுங்காண) - இதுவரை மற்ற விஷயங்களைக் காண்பதில் மட்டுமே ஈடுபாட்டுடன் இருந்த எனது கண்கள், இராமானுச நூற்றந்தாதி (104) - உன்றன் மெய்யில் பிறங்கிய சீர் - என்பதற்கு ஏற்ப அனுபவிக்கத்தக்க கல்யாண குணங்கள் காரணமாக மிகுந்த ப்ரகாசத்துடன் உள்ள உம்முடைய திருமேனியை மட்டுமே பார்க்கவேண்டும் என்று விரும்புகிறது. கதாத் ரக்ஷ்யா மஹேராஜந் ஜகத: க்லேச நாசநம் – என்றும், திருவாய்மொழி (8-1-1) – காணுமாறு அருளாய் – என்றும், திருவாய்மொழி (6-9-4) – காணவாராய் – என்றும், ஸ்தோத்ரரத்னம் (30) – கதாநு ஸாக்ஷாத் கரவாணி சக்ஷுஷா – எப்போது கண்களால் காணப்போகிறேன் – என்றும், கதாஹம் பகவந்தம் நாராயணம் மம நாதம் ஸாக்ஷாத் கரோமி சக்ஷுஷா – பகவானாகிய நாராயணனும், எனது குலத்தில் நாதனும் ஆகிய அவனை எனது கண்களால் நான் எப்போது காண்பேன் – என்றும், வரதராஜ ஸ்தவம் - நேத்ரஸாத்குரு கரீச ஸதா – எனது கண்களால் வரதனை எப்போதும் - என்றும் பகவத்விஷயம் குறித்து பரதாழ்வானும், ஆழ்வார்களும், ஆசார்யர்களும் அருளிச்செய்தது போன்று, இவர் எம்பெருமானார் விஷயத்தில் அருளிச்செய்கிறார். ரூபம் தவாஸ்து யதிராஜ த்ருசோர் மமாக்ரே - என்பது காண்க. ஆனால் அசேதனமாக உள்ள கண்களை "விரும்புகிறது" என்று கூறலாமோ என்றால், காமார்த்தாஹி ப்ரதி க்ருபணா

சேதநா சேதநேஷு – என்று கூறுவதற்கு ஏற்ப ப்ரேமையின் காரணமாக உண்டான ஈடுபாட்டின் விளைவாக சேதநப்பொருள் போன்று நின்றது என்று உரைப்பதில் தவறில்லை.

வ்யாக்யானம் - (கடல்புடைசூழ் வையமிதனில்) கடல்களுடைய புடைகளாலே சூழப்பட்ட இந்த பூமிப்பரப்பெல்லாம் வ்யாபித்திருக்கிற ஸமஸ்த சேதநரு முண்டாயிருக்க, (உன் வண்மை) ஸமஸ்த சேதநரையும் உத்தரிப்பிக்கைக்காக தீக்ஷிதராய் வந்து அவதரித்த தேவரீருடைய ஔதார்யம். என்னை மாத்ரம் இப்படி ஈடுபடும்படி பண்ணின தேவரீருடைய ஔதார்யமென்றபடி. (என் பாலென் வளர்ந்ததுவே) அடியேன் ஒருவனிடத்திலும் மேன்மேலெனக் கிளர்ந்து அபிவ்ருத்தமாய்ச் செல்லா நின்றது; இதற்கு ஹேது என்ன; நான் அஜ்ஞனாகையாலே அறியமாட்டேன்; அறிகைக்கு ஏதேனும் நான் ஆர்ஜித்த கைம்முதல் உண்டோ, அது இல்லாமை அறிந்தன்றோ அடியேன் தேவரீரைக் கேட்பது, தேவரீர் ஸர்வஜ்ஞர், தேவரீரறிந்தது ஏதேனுமுண்டாகில் அத்தை அருளிச்செய்ய வேணுமென்ன; இதற்கு, எம்பெருமானார் ஒரு மறுமாற்றம் சொல்லக் காணாமையாலே நிர்ஹேதுகமாக இப்படி ஔதார்யத்தைப் பண்ணினார் என்று வித்தாராகிறார். இந்தத் திருவரங்கத்தமுதனார் பாட்டுத்தோறும் எம்பெருமானாருடைய வண்மையைக் கொண்டாடுகிறது, போஜந ரஸமறிந்த ஸுகுமாரன் பிடிதோறும் நெய்யை அபேக்ஷிக்கிறாப்போலே காணும்.

விளக்கம் - (கடல்புடைசூழ் வையமிதனில்) - கடல்களால் சூழப்பட்ட இந்த உலகம் முழுவதிலும் நிறைந்துள்ள அனைத்து சேதநர்களும் உள்ளபோது. (உன் வண்மை) - அனைத்து சேதநர்களையும் கரையேற்றுவதற்காக வந்து அவதரித்த உம்முடைய தாராள குணம் என்னை மட்டுமே இவ்விதம் செய்வது மட்டுமே அல்லாமல், எனது ஒவ்வொரு உடல்உறுப்புக்களும் உம்மிடம் ஈடுபடும்படிச் செய்தருளிய உம்முடைய தாராளகுணம். (என் பாலென் வளர்ந்ததுவே) - என் ஒருவனிடத்தில் மட்டுமே மேன்மேலும் வளர்ந்து நின்றது. இதற்கான காரணம் என்ன என்பதை எனது அறியாமையால் நான் அறியமாட்டேன். ஆனால், இவ்விதம் அறிந்து கொள்ள ஏதேனும் கைம்மாறு என்னிடம் உண்டோ என்றால், அதுவும் இல்லாத காரணத்தால்தான் உம்மிடம் கேட்கிறேன். நீவீர் அனைத்தும் அறிந்தவர் ஆவீர். ஆகவே நீவிர் இது விஷயமாக அறிந்ததைக் கூறுவீராக. இவ்விதம் கேட்டபோது எம்பெருமானார் எந்தவிதமான பதிலும் அளிக்காமல்

இருந்ததால், "எந்தக் காரணமும் இன்றி இவ்விதம் தாரளத்தன்மையை என்னிடம் காண்பித்தாரே!", என்று வியந்தார். திருவரங்கத்தமுதனார் ஒவ்வொரு பாசுரத்திலும் எம்பெருமானருடைய தாராளத் தன்மையைக் கொண்டாடுதல் என்பது, இனிமையின் தன்மையை அறிந்த அரசகுமாரன் ஒவ்வொரு பிடி உணவு உண்ணும்போதும் நெய்யைச் சேர்த்துக் கொண்டு உண்பது போன்று உள்ளது.

103. வளர்ந்த வெங்கோப மடங்கல் ஒன்றாய் அன்று வாளவுணன்
கிளர்ந்த பொன்னாகம் கிழித்தவன் கீர்த்திப் பயிரெழுந்து
விளைந்திடும் சிந்தை இராமாநுசன் என்தன் மெய்வினைநோய்
களைந்து நல் ஞானம் அளித்தனன் கையில் கனியென்னவே

விளக்கவுரை - மனிதர்கள் மட்டுமன்றி தேவர்களும் கண்டு நடுங்கும்படி பயங்கரமாகவும், உக்கிரமாகவும், சீற்றத்துடனும், நெருப்பு உமிழ்கின்ற மூன்று கண்களுடனும், உதட்டிற்கு மேலே எழுந்த நாக்குடனும், மேலே சிங்கமாகவும், கீழே மனிதனாகவும், ஆகிய நரஸிம்ஹமாக வந்தான். எப்போது என்றால், ஹிரண்யன் தூணைத் தனது காலால் உதைத்தபோது இவ்விதம் வந்தான். தன்னை எதிர்த்த ஹிரண்யனுடைய ஸ்வர்ணம் போன்ற உடலைக் கூறிய தனது நகங்களால், ஆட்டின் குடலைப் போன்று மிகவும் எளிதாகக் கிழித்து எறிந்தான். இப்படிப்பட்ட எம்பெருமானின் புகழ் என்ற பயிர் ஓங்கி வளரவேண்டும் என்னும் சிந்தையுள்ளவர் எம்பெருமானார் ஆவார். இப்படிப்பட்ட எம்பெருமானார் எனது உடல் காரணமாக ஏற்படுகின்ற கர்ம துன்பங்களை நீக்கி, மிக உயர்ந்த ஞானத்தை எளிதாக உபதேசித்து அருளினார்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே தம்முடைய, ஸர்வகரணங்களையும் எம்பெருமானார் தம் விஷயத்திலே அதிப்ரவணமாகும்படி பண்ணி அநிதர ஸாதாரணமாகத் தம்முடைய ஔதார்யத்தைத் தம்மளவிலே வர்த்திப்பித்தருளினார் என்று சொல்லி வித்தரானவாறே, " ஆகில் இப்படி ஸர்வகரணங்களும் தம் விஷயத்திலே யதிப்ரவணமாகும்படி ஈடுபடுகைக்குடலாக அவருடைய ஔதார்யத்தாலே இன்னமும் உமக்கு உபகரித்தமை யேதாகிலுமுண்டோ"வென்ன; இதிலே, "அத்யந்தகோபாவிஷ்டமாய் அத்விதீயமான நரஸிம்ஹாவதாரத்தைக் கொண்டாடி, ஸ்வாச்ரிதரான தேவதைகளுடைய ஸ்த்தாநங்களை ஆக்ரமித்து லோகத்தாரையெல்லாம் பாதிக்கைக்காக கட்க ஹஸ்தனாய்த் தனிக்கோல் செலுத்திக் கொண்டு திரிகிற ஹிரண்யாஸுரனுடைய ஸ்வரூபமான சரீரத்தைத்

துரும்பைக் கிழிக்குமாப்போலே அநாயாஸேநக் கிழித்துப் பொகட்ட ஸர்வேச்வரனுடைய திவ்யகீர்த்தியை தம்முடைய திருவுள்ளத்திலே யிருத்திக் கொண்ட எம்பெருமானார் என்னுடைய ஆத்யாத்மிகாதி துக்கங்களை வாஸனையோடே ஓட்டிவிட்டு, கரதலாமலகமாக தத்வஹித புருஷார்த்த தத்யாதாத்ம்ய ஜ்ஞாநத்தைக் கொடுத்தருளினார்" என்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில், "என்னுடைய அனைத்து இந்த்ரியங்களையும் எம்பெருமானார் தனது விஷயத்தில் மிகவும் ஈடுபட்டபடி நிற்குமாறு செய்து, அனைவருக்கும் பொதுவாக உள்ள தனது தாராளகுணத்தை என்னிடம் மட்டுமே மேன்மேலும் வளர்த்தார்", என்று கூறி மகிழ்ந்தார். இவரிடம் ஒரு சிலர், "ஆனால் இவ்விதம் உம்முடைய அனைத்து இந்த்ரியங்களும் தன் விஷயத்தில் ஈடுபடும்படியாகச் செய்வதற்குக் காரணமாகக் காரணமாக உள்ள எம்பெருமானாருடைய தாராளகுணத்தால் மேலும் உனக்கு உதவிகள் செய்வது ஏதேனும் உள்ளதோ?", என்றனர். இதற்கு அமுதனார், "எல்லையற்ற சீற்றம் வெளிப்படும்படியாக, இதனைப் போன்று மற்றொன்று இல்லை என்னும்படியாக வந்த நரஸிம்ஹமூர்த்தியைக் கொண்டாடி, தனது அடியார்களான தேவர்களுடைய இடங்கள் அனைத்தையும் ஆக்கிரமித்து இந்த லோகத்தில் உள்ள அனைவரையும் பாதிக்கும்விதத்தில் வாளைக் கையில் கொண்டவனாக ஆட்சி செலுத்தியபடித் திரிகிற இரண்யனுடைய சரீரத்தை ஒரு சிறு துரும்பைக் கிழிப்பது போன்று மிகவும் எளிதாகக் கிழித்துப் போட்ட ஸர்வேச்வரனுடைய திவ்யமான கீர்த்தியைத் தனது திருவுள்ளத்தில் எம்பெருமானார் எப்போதும் நிலைநிறுத்தியபடி இருந்தார். இப்படிப்பட்டவர் என்னுடைய ஆத்யாத்மிகம் போன்ற துன்பங்கள் அனைத்தையும், அவற்றின் வாசனையுடன் அகற்றினார். பின்னர் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று உண்மையானதும் நன்மையானதும் ஆகிய புருஷார்த்தங்களைக் குறித்த ஞானத்தை எனக்கு உள்ளது உள்ளபடி அளித்தார்", என்கிறார்.

வ்யாக்யானம் – (வளர்ந்த வெம் கோபம் மடங்கலொன் றாய்) "அஸ்மிந்க்ஷணே மஹா சப்த ஸ்தம்பேஸ் ஸம்ச்ருயதேப்ருசம் - ஸம்வர்த்தாச நிஸங்காதரவவத் ஸ்புடிதாந்தரம் – தேநசப்தேந மஹதாதைத்ய ச்ரோத்ரவிகாதிநா, ஸர்வே நிபாதிதா பூமௌ சிந்நமூலா இவத்ருமா: - பிப்யந்தி ஸகலாதேவா: மேநிரேவைஜகத்க்ஷயம், தாம் ஸ்தூணாம் சததாபித்வாவி நிஷ்க்ராந்தோ மஹாஹரி: - சகாரஸ்ஂ மஹாநாதம் லயாசநிபயஸ்வநம் -

தேந நதேந மஹதா தாரகா: பதிதாபுவி, ந்ருஸிம்ஹவ புராஸ்தாய தத்ரைவாவிரபூத்தரி: - அநேக கோடி ஸூர்யாக்நி தேஜஸாம ஹதாவ்ருத: - முகே பஞ்சாந ப்ரக்ய: சரீரே மாநுஷாக்ருதி:, தம்ஷ்ட்ரா கராள வதந: ஸ்த்ர்யயக்ஷஸ்த்ரிஸடோத்ருத:" என்றும், "அங்கண் ஞாலம் அஞ்ச அங்கோராள் அரியாய்", "முளைத்த சீற்றம் விண் சுடப்போய் மூவுலகும் பிறவுமனத்து" மஞ்சவாளரியாய் "எரிந்த பைங்கணிலங்கு பேழ்வாய்" என்றும் சொல்லுகிறபடியே, மநுஷ்யர்களோடு தேவர்களோடு வாசியற அனைவரும் வெருவி பரிதபிக்கும்படி அத்யந்தாபி வ்ருத்தமாய், அத்யந்த பயங்கரமாய், அத்யந்த க்ரூரமாய், அத்யந்தாஸஹ்யமாயிருந்துள்ள சீற்றத்தையுடையதாய் அத்விதீயமான அனல் உமிழா நிற்கிற மூன்று கணங்களையும் மோறாந்த முகத்தையும் நாலு திக்கு மேலிட்ட வுதட்டையும் மேல் ஒரு வடிவையு கீழொரு வடிவையுமுடைத்தான நரஸிம்ஹமாய். மடங்கல் – ஸிம்ஹம்.

விளக்கம் – (வளர்ந்த வெம் கோபம் மடங்கலொன்றாய்) - அஸ்மிந்க்ஷணே மஹா சப்த ஸ்தம்பேஸ் ஸம்ச்ருயதேப்ருசம் ஸம்வர்த்தாச நிஸங்காதரவவத் ஸ்புடிதாந்தரம் தேநசப்தேந மஹதாதைத்ய ச்ரோத்ரவிகாதிநா, ஸர்வே நிபாதிதா பூமௌ சிந்நமூலா இவத்ருமா: பிப்யந்தி ஸகலாதேவா: மேநிரேவைஜகத்க்ஷயம், தாம் ஸ்தூணாம் சததாபித்வாவி நிஷ்க்ராந்தோ மஹாஹரி: சகாரஸு மஹாநாதம் லயாசநிபயஸ்வநம் தேந நதேந மஹதா தாரகா: பதிதாபுவி, ந்ருஸிம்ஹவ புராஸ்தாய தத்ரைவாவிரபூத்தரி: அநேக கோடி ஸூர்யாக்நி தேஜஸாம ஹதாவ்ருத: முகே பஞ்சாந ப்ரக்ய: சரீரே மாநுஷாக்ருதி:, தம்ஷ்ட்ரா கராள வதந: ஸ்த்ர்யயக்ஷஸ்த்ரிஸடோத்ருத: -ஹிரண்யன் அந்தத் தூணின் அருகில் சென்று அதனை அடித்த அந்த நொடியிலேயே மிகுந்த ஓசையுன் அந்தத் தூண் பிளந்தது. அதுலிருந்து வெளிப்பட்ட அந்த ரூபம் ஓங்கி வளர்ந்தது. அந்த ஓசையைக் கேட்ட அசுரர்கள் அச்சத்தில் நடுங்கினர். திதியின் புத்திரர்கள் மரம் போன்று விழுந்தனர். லோகங்கள் அனைத்தும் அழிந்தனவோ என்று அச்சம் கொண்டு அனைத்து தேவர்களும் நடுங்கினர். உடைந்த அந்தத் தூணிலிருந்து வெளிப்பட்ட ஸ்ரீஹரி அனைவரும் நடுங்கும்படியாக மிகுந்த ஓசையை எழுப்பினான். அந்த ஓசையால் விண்ணிலிருந்து நக்ஷத்ரங்களும் பூமியில் உதிர்ந்தன. நரஸிம்ஹமாக, பல கோடி சூரியன்களும் அக்னிகளும் ஒன்றாகத் திரண்டது போன்ற தேஜஸ்ஸுடன், மனித உடல் மற்றும் ஸிம்ஹ முகத்துடன் வந்தான். நீண்ட பற்களுடனும், அடர்ந்த ரோமங்களுடனும், மூன்று கண்களுடனும் வெளிப்பட்ட அந்த திவ்யமான ரூபத்தை கண்ட அனைத்தும் நடுங்கின –

என்றும், பெரியதிருமொழி (1-7-1) – அங்கண் ஞாலம் அஞ்ச அங்கோள் அரியாய் – என்றும், பெரியதிருமொழி (1-7-7) – முனைத்த சீற்றம் விண் சுடப்போய் மூவுலகும் பிறவுமனைத்தும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, அனைத்தும் நடுங்கும்விதத்தில் உள்ள சிங்கமாய், பெரியதிருமொழி (1-7-6) – எரிந்த பைங்கண் இலங்கு பேழ் வாய் – என்று கூறுவதற்கு ஏற்ப மனிதர்களுடன் சேர்ந்து தேவர்களும் எந்தவிதமாக வேறுபாடும் இன்றி அச்சம் கொண்டு நடுங்கும்படியாக, எல்லையற்று வளர்ந்து, எல்லையற்ற பயங்கரமாகவும், எல்லையற்ற க்ரூரமாகவும், பொறுமை இழந்தும், மிகவும் சீற்றத்துடனும், எல்லையற்ற வெப்பத்தை வெளிப்படுத்தியபடி உள்ள மூன்று கணங்களையும், திருமுகத்தையும், நான்கு திசையிலும் ஏறி நிற்கின்ற உதட்டையும், மேலே சிம்ம ரூபமாகவும் கீழே மனித ரூபமாகவும் நின்ற நரஸிம்ஹ மூர்த்தியாக.

வ்யாக்யானம் – (அன்று) “தேவதிர்யங் மநுஷ்யேஷு ஸ்தாவரேஷ்வபிஜந்துஷு – வ்யாப்ய திஷ்டட்டதி ஸர்வத்ரபூதேஷ்வபி மஹத்ஸு ச இதி ப்ரஹ்லாத வசநம் ச்ருத்வாதைத்ய பதிஸ்ததா, உவாச ரோஷதாம் ராக்ஷ: பர்த்ஸயந் ஸ்வஸ்தம் முஹு: அஸௌ ஸர்வகதோ விஷ்ணுரபிசேத் பரம: புமாந், ப்ரத்யக்ஷம் தர்சய ஸ்வாத்ய பஹுபி: கிம் ப்ரலாபிதை: இத்யுக்த்வா ஸஹஸாதைத்ய: ப்ரஸாதாத் ஸ்தம்பமாத்மந: தாடயாமாஸ ஹஸ்தேந ப்ரஹ்லாத இதமப்ரவீத் அஸ்மிந் தர்சயமே விஷ்ணும் யதி ஸர்வகதோபவேத் அந்யதாத்வாவம் வதிஷ்யாமி மித்யாவாக்ய ப்ரலாபிநம்” என்றும், “எங்குமுளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்து இங்கில்லை யாலென் றிரணியன் தூண் புடைப்ப” என்றும் சொல்லுகிறபடியே, தன் படிகளையடைய வெளியிட்ட சிறுக்கன் மேலே அவன் முறுகி தூணைத் தன் காலாலே உதைத்தவன்று.

விளக்கம் – (அன்று) – தேவதிர்யங் மநுஷ்யேஷு ஸ்தாவரேஷ்வபிஜந்துஷு வ்யாப்ய திஷ்டட்டதி ஸர்வத்ரபூதேஷ்வபி மஹத்ஸு ச இதி ப்ரஹ்லாத வசநம் ச்ருத்வாதைத்யபதிஸ்ததா, உவாச ரோஷதாம் ராக்ஷ: பர்த்ஸயந் ஸ்வஸ்தம் முஹு: அஸௌ ஸர்வகதோ விஷ்ணுரபிசேத் பரம: புமாந், ப்ரத்யக்ஷம் தர்சய ஸ்வாத்ய பஹுபி: கிம் ப்ரலாபிதை: இத்யுக்த்வா ஸஹஸாதைத்ய: ப்ரஸாதாத் ஸ்தம்பமாத்மந: தாடயாமாஸ ஹஸ்தேந ப்ரஹ்லாத இதமப்ரவீத் அஸ்மிந் தர்சயமே விஷ்ணும் யதி ஸர்வகதோபவேத் அந்யதாத்வாவம் வதிஷ்யாமி மித்யாவாக்ய ப்ரலாபிநம் – ப்ரஹ்லாதன், “தேவர்கள், விலங்குகள், மனிதர்கள், தாவரங்கள் என்றுள்ள அனைத்து உயிரினங்களிலும் அவனே

வ்யாபித்துள்ளான்" என்று உரைத்தான். அந்தச் சொற்களைக் கேட்டு கோபத்தால் சிவந்த கண்கள் கொண்ட அஸுரர்களின் தலைவன், "எனது மகனைக் கொல்லுங்கள்" என்றான். அதே நேரத்தில் எங்கும் நிறைந்த விஷ்ணு அங்கிருந்த அனைத்து தூண்களிலும் நின்றான். ப்ரஹ்லாதன், "மீண்டும் மீண்டும் ஏன் கேட்கவேண்டும்? அவன் தூணிலும் உள்ளான்", என்றான். அப்போது ஹிரண்யன், "இந்தத் தூணில் உள்ளானா" என்று கேட்டபடி ஒரு தூணை அடித்தான். ப்ரஹ்லாதனிடம், "ப்ரஹ்லாதா! இந்தத் தூணில் உள்ளானா? நீ கூறியது உண்மையானால் அவன் இதிலிருந்து வெளிப்படட்டும். இல்லையெனில் நீ உரைத்த பொய்யின் காரணமாக உன்னை நான் துன்புறுத்துவேன்" என்றான் – என்றும், திருவாய்மொழி (2-8-9) – எங்குமுளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்து இங்கில்லையாலென் றிரணியன் தூண்புடைப்ப - என்றும் கூறுவதற்கு ஏற்ப, தனது மகனாகிய ப்ரஹ்லாதன் மீது மிகுந்த சீற்றம் கொண்டு, அந்தத் தூணைத் தனது கால்களால் உதைத்த அன்று.

வ்யாக்யானம் - (வாளவுணன் கிளர்ந்த பொன்னாகம் கிழித்தவன்) "இத்யுக்த்வா ஸஹஸா கட்க மாதாயதிதிஜேச்வர:" என்றும், "வயிறழல வாளுருவி வந்தானை" என்றும் சொல்லுகிறபடியே கட்கஹஸ்தனாய்க் கொண்டு எதிர்த்த ஹிரண்யாஸுரனுடைய, இந்திரனுள்ளிட்ட தேவர் குழாத்தையெல்லாம் பாதித்து அவர்களுடைய ஸ்த்தாநங்களை யடங்கலும் ஆக்கிரமித்து அவர்களுடைய ஹவிர்ப்பாகங்களை பலாத்காரேண பறித்துக்கொண்டு பக்ஷிக்கையாலே மிடியற வளர்ந்து நிறம் பெற்று ஸ்வர்ணம் போலேயிருக்கிற சரீரத்தை, "எவ்வும்வெவ்வேல் பொன்பெயரோனே தலனின்னுயிரை வவ்வி ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்தவம்மானதிடம்" என்றும், "அவுணன் உடல்" என்றும், "இடந்திட்டிரணியன் நெஞ்சையிரு பிளவாக முன் கீண்டாய்" என்றும் சொல்லுகிறபடியே கூரிய நகங்களாலே, அநாயாஸேந ஆட்டின் குடலைக் கிழித்தாப்போலே இரு பிளவாகக் கிழித்துப் பொகட்டவனுடைய. "கிளர்ந்த பொன்னாகம்" என்றது, "மாற்றெழும்பின பொன் போன்ற சரீரம்" என்னவுமாம்.

விளக்கம் – (வாளவுணன் கிளர்ந்த பொன்னாகம் கிழித்தவன்) - இத்யுக்த்வா ஸஹஸா கட்கமாதாய திதிஜேச்வர: - இப்படியாக உரைத்தபடி திதியின் புத்திரனாகிய ஹிரண்யன் உருவிய வாளுடன் வந்தான் – என்றும், முதல் திருவந்தாதி (95) – வயிறழல வாள் உருவி

வந்தானை - என்றும் கூறுவதற்கு ஏற்ப, வாளைக் கையில் கொண்டு எதிர்த்து நின்ற இரண்யாசுரனுடைய, "இந்த்ரன் போன்ற பலரையும் பாதித்து அவர்களுடைய அனைத்து இடங்களையும் முழுவதுமாக ஆக்கிரமித்து, அவர்களுக்குச் சேரவேண்டிய அவிர்பாகத்தை பலவந்தமாகப் பறித்துக் கொண்டு உண்பதால் நன்கு வளர்ந்து நிறம் பெற்ற ஸ்வர்ணம் போன்றுள்ள சரீரத்தை. பெரியதிருமொழி (1-7-4) – எவ்வும் வெவ்வெல் பொன்பெயரோன் ஏதலன் இன்னுயிரை வவ்வி ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்த அம்மானதிடம் – என்றும், அமலனாதிபிரான் (8) – அவுணன் உடல் – என்றும், பெரியாழ்வார் திருமொழி (2-7-7) – இடந்திட்டிரணியன் நெஞ்சையிரு பிளவாக முன் கீண்டாய் - என்றும் கூறுவதற்கு ஏற்ப தனது கூறிய நகங்களால் மிகவும் எளிதாக ஆட்டின் குடலைக் கிழிப்பது போன்று, இரண்டு துண்டுகளாகக் கிழித்துப் போட்டவனுடைய.

வ்யாக்யானம் - (கீர்த்தி) திவ்யகீர்த்தியாகிற. "ஸஹஸ்ர சீர்ஷா புருஷ:, ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத், ஸபூமம் விச்வதோவ்ருத்வா, அத்யதிஷ்ட்டத் தசாங்குலம், புருஷ ஏவேதம் ஸர்வம், யத்பூதம்யச்ச பவ்யம், உதாம்ருதத்வஸ்யேசாந:, யதஹ்நேநாதிரோஹதி, ஏதாவாந் அஸ்யமஹிமா", "யச்ச கிஞ்சிஜ்ஜத்யஸ்மிந் த்ருச்யதே ச்ரூயதேபி வா அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:", "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம், ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத், தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி, நாந்ய: பந்தா அயநாய வித்யதே" என்றும்; வேதபுருஷனாலே ப்ரதிபாதிக்கப்பட்ட அப்ரதிம ப்ரபாவமென்றபடி. (பயிரெழுந்து விளைந்திடும் சிந்தை) ஸ்ரீஷேத்ரத்திலே விரை விரைத்தால் ஓங்கி வளர்ந்து ஸம்ருத்தியாய் பலபர்யந்தமாக விளையுமாப்போலே அழகியசிங்கருடைய கீர்த்தியாகிற பயிர் நித்யாபிவ்ருத்தமாய் லோகமெல்லாம் வ்யாபித்து பலபர்யந்தமாகும்படிக்கீடான வீரத்தையுடைத்தான திருவுள்ளத்தையுடைய. (இராமாநுசன்) எம்பெருமானார். இவர்க்கு அழகியசிங்கர் திருவாராதநமாகையாலே இப்படியருளிச்செய்கிறார்.

விளக்கம் – (கீர்த்தி) – திவ்யமான புகழாகிய. புருஷஸூக்தம் - ஸஹஸ்ர சீர்ஷா புருஷ:, ஸஹஸ்ராக்ஷஸ் ஸஹஸ்ரபாத், ஸபூமம் விச்வதோவ்ருத்வா, அத்யதிஷ்ட்டத் தசாங்குலம், புருஷ ஏவேதம் ஸர்வம், யத்பூதம்யச்ச பவ்யம், உதாம்ருதத்வஸ்யேசாந:, யதஹ்நேநாதிரோஹதி, ஏதாவாந் அஸ்யமஹிமா – அந்தப் புருஷன் ஆயிரக்கணக்கான தலைகள், ஆயிரக்கணக்கான கண்கள், ஆயிரக்கணக்கான கால்கள் கொண்டவனாக

உள்ளான்; அவன் இந்த லோகங்கள் முழுவதையும் வ்யாபித்தவனாக உள்ளான்; அவனே அனைத்தும்; அவன் வளர்ந்தபடியும், தனக்குத்தானே எஜமானனாகவும் உள்ளான்; இவையே அவனுடைய மஹிமையாக உள்ளன – என்றும், நாராயணஸூக்தம் (5) - யச்ச கிஞ்சிஜ்ஜத்யஸ்மிந் த்ருச்யதே ச்ரூயதேபி வா அந்தர்பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித: - நாம் காணும் அனைத்திலும், கேட்கும் அனைத்திலும், உள்ளும் புறமும் நாராயணனே வ்யாபித்துள்ளான் – என்றும், வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம், ஆதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத், தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி, நாந்ய: பந்தா அயநாய வித்யதே – வேதங்களின் வடிவமாக உள்ளவன், ஆதித்யன் போன்று ஒளிர்ந்தபடி உள்ளவன், இருளுக்கு அப்பால் உள்ளவன்; இப்படிப்பட்ட அவனை அறிந்தால் மட்டுமே அவனை அடைய இயலும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப வேதபுருஷனால் வெளிப்படுகின்ற ப்ரபாவம். (பயிரெழுந்து விளைந்திடும் சிந்தை) - நல்ல இடத்தில் விதைக்கப்பட்ட விதையானது ஓங்கி வளர்ந்து, செழிப்புடன் நின்று பலன் கொடுக்கும் நாள் முடிய விளைவது போன்று, அழகியசிங்கருடைய கீர்த்தி என்னும் பயிர் ஒவ்வொரு நாளும் ஓங்கி வளர்ந்தபடி அனைத்து லோகங்களிலும் பரவி நின்று, பலனை அளித்தல் என்பதற்கு நிகரான வீரத்தைக் கொண்ட திருவுள்ளத்தை உடைய. (இராமாநுசன்) - எம்பெருமானார். இவர் அன்றாடம் நரஸிம்ஹமூர்த்தியை ஆராதித்தார் என்பதால் இவ்விதம் கூறுகிறார்.

வ்யாக்யானம் - (என்றன் மெய்வினை நோய் களைத்து) “கர்ம ப்ரஹ்ம பரம் வித்தி” என்றும், “ப்ரக்ருதே: க்ரியமாணாநிகுணை: கர்மாணிஸர்வச:” என்றும் சொல்லுகிறபடியே அநாத்யவித்யா கர்ம வாஸநா ருசி ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலே பத்தும் பத்தாகப் பண்ணப்பட்ட துஷ்கர்ம பலமான துக்கங்களை நிவர்த்திப்பித்து, (கையில் கனியன்னவே - நல்ஞாநமளித்த) “ஸர்வகுஹ்யதமம்பூய: ச்ருணு மே பரமம் வச: இஷ்டோஸி மே த்ருட இதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம்” என்கிறபடியே, கீழ்ச்சொன்ன ப்ராவண்யத்துக்குடலான தத்வ ஹித புருஷார்த்த யாதாத்ம்ய ஜ்ஞாநத்தைக் கையில் கனி போலே ஸுலபமாய் ஸுவ்யக்தமாயிருக்கும்படி உபதேசித்தருளினாரென்றதாய்த்து.

விளக்கம் - (என்றன் மெய்வினை நோய் களைத்து) - கர்ம ப்ரஹ்ம பரம் வித்தி - கர்மங்களையும் ப்ரஹ்மத்தையும் குறித்து அறிவாயாக – என்றும், ப்ரக்ருதே: க்ரியமாணாநிகுணை: கர்மாணிஸர்வச: - ப்ரக்ருதியே அனைத்தையும் செய்கிறது;

அனைத்து கர்மங்களையும் குணங்களே செய்கின்றன – என்றும் கூறுவதற்கு ஏற்ப எல்லையற்ற காலமாகத் தொடர்ந்தபடி உள்ள அவித்யையால் விளைந்த கர்மங்கள் காரணமாக ஏற்பட்ட ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் பலவாகச் செய்யப்பட்ட தீய கர்மங்களுடைய பலனாக உள்ள அனைத்து துக்கங்களையும் விலக்கி. (கையில் கனியன்னவே நல்ஞாநமளித்த) - கீதை (18-64) - ஸர்வகுஹ்யதமம்பூய: ச்ருணு மே பரமம் வச: இஷ்டோஸி மே த்ருட இதி ததோ வக்ஷ்யாமி தே ஹிதம் – அனைத்து இரகசியங்களிலும் மேலான் இரகசியத்தைக் கேட்பாயாக; எனக்கு நீ மிகவும் ப்ரியமானவன் ஆவாய்; ஆகவே உனக்கு நன்மையை ஏற்படுத்தும்விதமாக இதனை உனக்கு உரைக்கக் கேட்பாயாக - என்பதற்கு ஏற்ப கீழே கூறப்பட்ட ஈடுபாட்டிற்குக் காரணமாக உள்ள உண்மையும் நன்மையும் நிறைந்த புருஷார்த்தம் குறித்த உண்மையான ஞானத்தை உள்ளது உள்ளபடி, உள்ளங்கை நெல்லிக்கனி போன்று மிகவும் எளிதாகவும் தெளிவாகவும் உபதேசித்தருளினார்.

104. கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித் தரிலும் உன் தன்
மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான் நிரயத்
தொய்யில் கிடக்கிலும் சோதி விண் சேரிலும் இவ்வருள் நீ
செய்யில் தரிப்பன் இராமாநுச என் செழுங் கொண்டலே

விளக்கவுரை - உயர்ந்த ஞானம் கிட்டப் பெறாமல், பிழைக்க வழியின்றி முகம் வாடி நாங்கள் நின்றோம். அப்போது, மழை பொழிந்தது போன்று எங்கள் வாட்டம் நீக்கி உமது திருவடிகளின் தொடர்பை அளிக்கவல்ல ஞானத்தை உபதேசித்த எம்பெருமானாரே! உள்ளங்கையில் வைத்த நெல்லிக்கனி போன்று கண்ணனை நீவிர் காண்பித்துத் தந்தாலும், உமது திருமேனியினுடைய ஒளியால் ப்ரகாசிக்கும் குணங்களைத் தவிர வேறு எதனையும் நான் காணமாட்டேன். இதன் காரணம் – கண்ணன் தேரில் நின்று உபதேசித்த பின்னரும் பலருக்கும் மோக்ஷ விருப்பம் ஏற்படவில்லை. ஆனால் உமது தொடர்பு ஏற்பட்ட உடனேயே ஊமை ஒருவனுக்கு மோக்ஷ விருப்பம் ஏற்பட்டது. மேலும் ஸர்வேச்வரன் எனது கர்மத்திற்கு ஏற்ப எனக்குத் தண்டனையும் அளிப்பான். ஆனால் நீரோ கருணையை மட்டுமே என் மீது பொழிவீர். நான் இவ்விதம் கண்ணனையே வெறுத்து கூறினாலும் நீவிர் என் மீது சீற்றம் கொண்டு என்னை ஸம்ஸாரம் என்ற நரகத்தில் விழும்படிச் செய்தாலும் அல்லது “இவன் நம்மைச் சேர்ந்தவன்” என்று இரக்கம்

கொண்டு பரமபதத்திலே சேர்த்தாலும் உமது கல்யாண குணங்களை அனுபவித்தபடி நான் இருப்பேன்.

அவதாரிகை - கீழ்ப்பாட்டிலே தத்வஹித புருஷார்த்த தத்யாதாத்ம்ய ஜ்ஞாநத்தை ஸுவ்யக்தமாம்படி உபதேசித்தார் என்று இவர் இனியராயிருந்தவாறே, அத்தைக் கண்டு, "உபதேசமாத்ரத்துக்கே இப்படி இனியராய்க் கொண்டு ரஸித்திருந்தீர். பகவத் விஷயத்தை ஸாக்ஷாத்கரிக்கும்படி பண்ணிக் கொடுத்தோமாகில் எப்படி ரஸித்து இனியராயிருக்கக் கடவீரோ?", என்று எம்பெருமானார்க்குக் கருத்தாக நினைத்து, "தேவரீர் ஸகல ஜந்மநோஹாரி திவ்ய சேஷ்டிதங்களைப் பண்ணிக் கொண்டு போந்த க்ருஷ்ணனை, கரதலாமலகமாகக் காட்டித்தரிலும், தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹத்திலே ப்ரகாசியா நின்றுள்ள கல்யாணகுணங்களை யொழிய, அடியேன் வேறொரு விஷயத்தை வேண்டேன்" என்ன; "இவன் இப்படி மூர்க்குப் பேசலாமோ" என்று சீறுபாறு செய்து அடியேனை ஸம்ஸாரமாகிற நரகத்திலே விழப்பண்ணினாலும், "நம்மையேப் பற்றியிருக்கிறானிறே" என்று, க்ருபையாலே நிரவதிக தேஜோரூபமான பரமபதத்திலே கொண்டுபோய்ச் சேர்த்திடிலும், வர்ஷுகவலாஹகம்போலே பரமோதாரரான எம்பெருமானாரே, தேவரீருடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை அநுபவிக்கைக்குடலான நிர்ஹேதுக பரமக்ருபையாலே தேவரீர் செய்தருளின விபூதித்வயத்திலும் வைத்துக் கொண்டு, ஏதேனுமோரிடத்தில் கால்பாவி நின்று தரிப்பன்; இல்லையாகில் தரிக்கமாட்டேனென் று ஸ்வப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்தருளுகிறார்.

விளக்கம் – கடந்த பாசுரத்தில், "உண்மையானதும் நன்மையானதும் ஆகிய புருஷார்த்தத்தை உள்ளது உள்ளபடி தெளிவாக உபதேசம் செய்தார்", என்று மகிழ்ந்தார். இதனைக் கண்ட எம்பெருமானார், "உமக்கு பகவத்விஷயம் குறித்து உபதேசம் செய்த நிலையிலேயே இவ்விதம் இன்பம் அடைந்து ரஸித்தபடி உள்ளீர். பகவத்விஷயத்தை நேரில் கண்டு அனுபவிக்கும்படிச் செய்தால் நீவிர் எவ்விதம் இன்பம் அடைந்து ரசிப்பீரோ?", என்று அமுதனாரிடம் கேட்டார். இதற்கு அமுதனார் எம்பெருமானாரிடம், "அனைத்து உயிர்களுடைய மனதையும் அபகரிக்கும்படியான திவ்யமான லீலைகளைச் செய்தபடி உள்ள க்ருஷ்ணனை நீவிர் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று காண்பித்துக் கொடுக்கலாம். ஆனாலும் உம்முடைய திவ்யமங்கள திருமேனியில் வெளிப்பட்டபடி உள்ள உம்முடைய திருக்கல்யாண குணங்களை அல்லாமல் நான் வேறு எந்த

விஷயத்தையும் வேண்டமாட்டேன். இதனைக் கேட்ட நீவிர் - இவன் இவ்விதம் தகாதபடி உரைக்கிறான் – என்று எண்ணியபடி என் மீது சீற்றம் கொண்டு, ஸம்ஸாரம் என்ற நரகத்தில் விழச்செய்தாலும் அல்லது உம்முடைய மனத்தில் – இவன் நம்மை மட்டுமே பற்றி நிற்கிறானே - என்று என் மீது கருணை கொண்டு எல்லையற்ற தேஜஸ் நிறைந்த பரமபதத்தில் என்னைக் கொண்டு சேர்த்தாலும், அனைத்து உயிர்களும் வாழவேண்டும் என்று ஒரே போன்று மழையைப் பொழிகின்ற மேகம் போன்ற தாராளகுணம் கொண்ட எம்பெருமானாரே! உம்முடைய திவ்யமங்கள திருமேனியை எப்போதும் நான் அனுபவிக்கக் காரணமாக உள்ளதான உம்முடைய உயர்ந்த கருணையின் விளைவாக தேவரீருக்கு உடைமையாக உள்ள இரண்டு விபூதிகளில் ஏதேனும் ஒரு இடத்தில் நான் நிற்பேனாக. அவ்விதம் இல்லையென்றால் நான் தரிக்கமாட்டேன்", என்று தான் அடைந்த பேற்றை உறுதியாக்குகிறார்.

வ்யாக்யானம் - (எம்செழுங்கொண்டல்) ஒரு பாட்டம் மழை குறைச்சலாயிருந்தால் முகம் வாடிக்கிடக்கும் பயிர் போலே, "வித்யாந்யாசில்பநைபுணம்" என்கிறபடியே, செருப்புக் குத்தக் கற்றனவோபாதியான சாஸ்த்ராந்தரங்களையே அப்யஸித்துக் கொண்டு போந்து, "ஸாவித்யாயா விமுக்தயே" என்கிற தத்வஜ்ஞாநத்தை ப்ராபிக்கப் பெறாதே "வாடினேன் வாடி" என்கிறபடியே உஜ்ஜீவந ஹேதுவன்றிக்கே முகம் வாடிக் கிடக்கிற எங்களுக்கு ஒரு பாட்டம் மழை பொழிந்தாப்போலே விலக்ஷணமான தம் திருவடிகளில் ஸம்பந்தத்தை உண்டாக்கி ஜ்ஞாநோபதேசம் பண்ணி ஜீவநத்தைக் கொடுத்து ஸத்தையை உண்டாக்கினவராகையாலே "செழுங்கொண்டல்" என்கிறார். "தூம ஜ்யோ திஸ் ஸலில மருதாம்" ஸந்நிபாதத்தாலேயுண்டானதாய் ப்ராக்ருதமாய் அபேக்ஷித்தவர்களுக்கு வர்ஷியாதே, அபேக்ஷியாத ஸமுத்ராதிகளிலே வர்ஷித்துக் கொண்டு போருகிற மேகம் போலன்றிக்கே, தத் வ்யாதாத்ம்ய ஜ்ஞாநங்களிலே தலைவராய் அபேக்ஷாநிரபேக்ஷமாகவே லோகத்தாரையெல்லாம் உஜ்ஜீவிப்பிக்கக் கடவோம் என் று தீக்ஷித்துக்கொண்டு அவதரித்த கல்யாணகுண வைலக்ஷண்யத்தை யுடையராகையாலே "செழும்கொண்டல்" என்கிறார். (இராமாநுசா) இப்படிப்பட்ட எம்பெருமானாரே.

விளக்கம் - (எம்செழுங்கொண்டல்) - ஒரு பாட்டம் மழை குறைந்தால் கூட வாடியபடி உள்ள பயிர் போன்று, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-19-41) - வித்யாந்யா சில்பநைபுணம் - மற்ற கல்வி அனைத்தும் செருப்புத் தைக்கக் கற்ற கல்வி போன்றது - என்பதற்கு ஏற்ப

செருப்புக்குச் சமமான மற்ற சாஸ்த்ரங்களைக் கற்றபடி, ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1-19-41) - ஸா வித்யா யா விமுக்தயே - எந்த ஒரு கல்வி மோக்ஷத்திற்குப் பயன்படுமோ அதுவே உயர்ந்த கல்வி - என்பதாக உள்ள உண்மையான ஞானத்தை அடையாமல், பெரியதிருமொழி (1-1-1) – வாடினேன் வாடி - என்பது போன்று, பிழைக்க வழியின்றி முகம் வாடி நாங்கள் உள்ளோம். இப்படிப்பட்ட எங்களுக்கு ஒரு பாட்டம் மழை பொழிந்தது போன்று சிறந்ததாக உள்ள தனது திருவடிகளின் ஸம்பந்தத்தை ஏற்படுத்தி, உண்மை ஞானத்தை உபதேசித்து, எங்கள் வாழ்வையும் இருப்பையும் அளித்து, எங்களை நிலையாக நிற்கும்படிச் செய்தவர் என்பதால் "செழுங்கொண்டல்" என்கிறார். மேகசந்தேசம் – தூம ஜ்யோதிஸ் ஸலில மருதாம் ஸந்நிபாத – புகை, ஒளி, தண்ணீர், காற்று ஆகியவற்றின் கூட்டமாக உள்ள மேகம் - என்பதற்கு ஏற்ப தகாதவிதத்தில் ஏற்பட்டதாக, "அவசியமாக வேண்டும்" என்று விண்ணப்பித்தவர்களுக்குப் பெய்யாமல், "வேண்டாத ஸமுத்ரம்" முதலானவற்றில் பெய்வதான மேகம் போன்று அல்லாமல், உண்மையான ஞானத்தை அளிக்கக்கூடியவராக, வேண்டுபவர் வேண்டாதவர் என்று ஆராயாமல் "அனைவரையும் கரையேற்றுவோம்", என்று உறுதி பூண்டு அவதரித்த திருக்கல்யாண குணங்களைக் கொண்டவர் என்பதால் "செழுங்கொண்டல்" என்கிறார். (இராமாநுசா) - இப்படிப்பட்ட எம்பெருமானாரே.

வ்யாக்யானம் - (கையில் கனியன்ன கண்ணனைக் காட்டித் தரிலும்) "பத்துடை யடியவர்க் கெளியவன்" என்கிறபடியே ஆச்ரித பரதந்த்ரனாய்க் கொண்டு, தூத்ய ஸாரத்யங்களைப் பண்ணுகையும், "கண்ணிக் குறும் கயிற்றால் கட்டுண்டான் காணேடி" என்கிறபடியே ஒரு அறுதல் கயிற்றாலே கட்டுண்டும் அடிஉண்டுமிருக்கையும், "கொற்றக்குடையாக ஏந்தி நின்ற கோவர்த்தநத்தென்னை யுய்த்திடுமின்" என்கிறபடி கோவர்த்தநோத்தரணம் பண்ணுகையும், "திண்ணன் வீடு முதல் முழுதுமாய்" என்கிறபடியே ஸர்வஸ்மாத்பரனுமாகிற ஆச்சர்ய குண சேஷ்டிதங்களை யுடையனான க்ருஷ்ணனை உள்ளங்கை நெல்லிக்கனி போலே ஸாக்ஷாத்கரிப்பித்துத் தரிலும். (உன்றன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்) "பதிம் விச்வஸ்ய" என்றும், "தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யம் அதிதைவம்" என்றும், "உலகுக்கோர் முந்தைத் தாய் தந்தை" என்றும் சொல்லுகிறபடியே எல்லார்க்கும் பொதுவானவன் விஷயத்திலே ஸக்தனானேனோ? அநந்யார்ஹ நிஷ்டர்க்கே ஸ்வாமியான தேவரீர் பக்கலிலேயன்றோ

நான் ஸக்தனானது? எப்போதும் ப்ரீதி விஷயமான வஸ்துவிலேயன்றோ ருசி பிறப்பது? ஆகையாலே என்னுடைய ப்ரீதி விஷயமான தேவரீர் திவ்யமங்கள விக்ரஹத்திலே ப்ரகாசிக்கிற ஸௌந்தர்ய லாவண்யாதி குணங்களை யொழிய வேறொன்றை நான் அபேக்ஷியேன்; அத்தை ப்ரஸங்கிப்பதும் செய்யேன். பிறங்குதல் - ப்ரகாசித்தல். "அதுவென்? ஸர்வ ஸமாச்ரயணீயனான ஸர்வேச்வரன் ப்ராப்யன் என்றும், சேதநரான நீர் ப்ராப்தா என்றும், 'ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம்' இத்யாதி சாஸ்த்ரங்களிலே சொல்லா நிற்கச்செய்தே, நீர் இங்ஙனே சொல்லக்கூடுமோ?" என்னில்; ப்ராப்யனான ஸர்சேச்வரன் நித்யனாய், எனக்கு அந்தராத்மாவா இருக்கச்செய்தே அநாதிகாலமே பிடித்து இவ்வளவும் நான் ஸம்ஸாரத்தினுடைய கரைகண்டு கொண்டேனல்லேன்; நான் இன்று தேவரீரை லபித்த பின்பு கரை மரம் சேரப்பெற்றேன்; ஆகையாலே தேவரீரே எனக்கு ப்ராப்யம் என்று கருத்து.

விளக்கம் - (கையில் கனியன்ன கண்ணனைக் காட்டித் தரிலும்) - திருவாய்மொழி (1-3-1) – பத்துடை அடியவர்க்கு எளியவன் - என்பதற்கு ஏற்ப அடியார்களுக்கு வசப்பட்டவனாக இருத்தல், தூது செல்லுதல் மற்றும் தேர் ஓட்டுதல் போன்ற செயல்களைச் செய்தபடியும்; பெரியதிருமொழி (11-5-5) – கண்ணிக்குறும் கயிற்றால் கட்டுண்டான் காணேடி - என்பதற்கு ஏற்ப ஒரு நைந்து போன கயிற்றால் கட்டப்பட்டும் அடிவாங்கியும்; நாச்சியார் திருமொழி (12-8) – கொற்றக்குடையாக ஏந்தி நின்ற கோவர்த்தநத்தென்னை உய்த்திடுமின் - என்பதற்கு ஏற்ப கோவர்த்தனத்தை கையில் பிடித்தபடியும்; திருவாய்மொழி (2-2-1) – திண்ணன்வீடு முதல் முழுதுமாய் - என்பதற்கு ஏற்ப அனைத்து பொருள்களைக் காட்டிலும் உயர்ந்தவனும் ஆகிய வியக்க வைக்கும் லீலைகள் செய்தபடி உள்ள க்ருஷ்ணனை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காண்பித்துக் கொடுத்தாலும். (உன்றன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்) – பதிம் விச்வஸ்ய – இந்த விச்வத்தின் நாதன் – என்றும், தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யம் அதிதைவம் – தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் என அனைவருக்கும் பொதுவான உயர்ந்த தெய்வம் – என்றும், திருவாய்மொழி (5-7-7) – உலகுக்கோர் முந்தைத் தாய்தந்தை – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைவருக்கும் பொதுவாக உள்ள அவன் விஷயத்தில் நான் ஈடுபாடு கொண்டு நிற்கிறேனோ? வேறு கதி இல்லை என்று உம்மை நாடி வந்தவர்களுக்கு ஸ்வாமியாக உள்ள உம்மிடம் மட்டுமே அல்லவோ நான் ஈடுபட்டு நிற்கிறேன்? நமக்கு விருப்பமான விஷயத்தின் மீது அல்லலோ நமக்கு எப்போதும் ஆசை ஏற்படும்? ஆகவே

எனக்கு விரும்பமாக உள்ளதான உம்முடைய திவ்யமங்கள திருமேனியில் வெளிப்படுகின்ற ஸௌந்தர்யம், லாவண்யம் போன்ற குணங்கள் அல்லாமல் வேறு எதனையும் நான் வேண்டவில்லை; வேறு எதனையும் நான் முயலவும் மாட்டேன். "அது எப்படி? அனைவருக்கும் அண்டத்தக்கவனாக உள்ள ஸர்வேச்வரனே அடையத்தக்கவன் என்றும், சேதநராக உள்ள நீவிர் அடையவேண்டியவர் என்றும் ஹாரித ஸ்ம்ருதி (8-141) - ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் – ப்ரஹ்மமே அடையத்தக்க பேறாகும் - என்பதாக சாஸ்த்ரங்களில் கூறப்பட்டபோது, நீவிர் இவ்விதம் உரைப்பது சரியா?", என்று எம்பெருமானார் அமுதனாரிடம் கேட்டார். இதற்கு அமுதனார், "அடையத்தக்க பேறாக உள்ள ஸர்வேச்வரன் எப்போதும் உள்ளவனாகவும், எனது அந்தர்யாமியாக உள்ளபோதிலும், நான் எல்லையற்ற காலம் தொடங்கி இன்று முடிய இந்த ஸம்ஸாரத்தின் கரையைக் காண இயலவில்லை. ஆனால் இன்று உம்மை வந்தடைந்த உடனேயே கரையைக் கண்டேன். ஆகவே நீரே எனக்கு பேறாவீர்", என்றார்.

வ்யாக்யானம் - அன்றிக்கே, "க்ருஷ்ணன் தூத்ய ஸாரத்த்யங்களைப் பண்ணுந் தசையில், தன்னுடைய விச்வரூபத்தை அநுகூல ப்ரதிகூல விபாகமற தர்சிப்பித்தவளவிலும், திருத்தேர்த்தட்டிலேயிருந்து தத்வஹித புருஷார்த்தங்களை உபதேசித்தவளவிலும் ஒருவர்க்காகிலும் முமுக்ஷை ஜநித்ததில்லை; தேவரீரை ஸேவித்த மாத்ரத்தாலே ஊமைக்கு முமுக்ஷை பிறந்தவாறே, தேவரீருடைய விக்ரஹ வைலக்ஷண்யத்தை ஸாக்ஷாத்கரிப்பித்தருளி அவன்றனக்கு வீட்டை அப்போதே கொடுத்தருளிற்று", என்னும் இச்செய்தியை ஆழ்வான் கேட்டருளி, "இனி நமக்குப் பேறு கிடையாதாகாதே", என்று தம்மை வெறுத்துக் கொண்டார் என்றும் ப்ரஸித்தமிறே. இப்புடைகளாலே பகவத் விஷயத்துக்கும் தேவரீர்க்கும் நெடுவாசியுண்டாகையாலே இப்படி அத்யவஸித்தேன் என்கிறார் என்னவுமாம்.

விளக்கம் - (கையில் கனியன்ன கண்ணனைக் காட்டித் தரிலும்) - அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். "க்ருஷ்ணன் தூது செல்லுதல் மற்றும் தேர் ஓட்டுதல் போன்ற செயல்களைச் செய்தபோது, தனது விச்வரூபத்தை வேண்டுபவர் வேண்டாதவர் என்ற பாகுபாடு இன்றி அனைவருக்கும் காண்பித்தபோதிலும், திருத்தேரில் நின்று உண்மையானதும் நன்மையானதும் ஆகிய புருஷார்த்தங்கள் குறித்து உபதேசம் செய்தபோதிலும், ஒரு மனிதனுக்கும் கூட மோக்ஷத்தில் ஆசை ஏற்படவில்லை. ஆனால்

உம்மை வணங்கியவுடனேயே, வாய் பேச இயலாமல் உள்ள ஒருவனுக்கு மோக்ஷத்தில் ஆசை ஏற்பட்டது. உம்முடைய திவ்யமான திருமேனியை அவன் தரிசித்தான். அந்த நொடியிலேயே பகவானால் அவனுக்கு மோக்ஷம் அளிக்கப்பட்டது", என்பதான இந்தச் செய்தியை ஸ்வாமி கூரத்தாழ்வான் கேட்டார். உடனே அவர் தனது திருவுள்ளத்தில், "அவனுக்கு உடனே மோக்ஷம் கிட்டியது. நமக்கு இதுவரை கிட்டவில்லையென்றால், இனிமேல் கிட்டாதோ" என்று தன்னை வெறுத்துக்கொண்டார். "இது போன்ற நிகழ்வுகள் காரணமாக, பகவத்விஷயம் மற்றும் உம்முடைய விஷயம் ஆகியவற்றுக்கு இடையே நீண்ட வேறுபாடு உள்ளது என்பதால் இவ்விதம் உம்மை மட்டுமே பற்றினேன்", என்று கூறுவதாகவும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் - அங்ஙனுமன்றிக்கே, ஸுலபனான ஸர்வேச்வனைக் காட்டித்தரிலும் அவன் தண்டதரனாகையாலே, என் தண்மையைப் பார்த்து விபரீதனாயிருப்பன். ஆகையாலே தேவரீர் அபிமாநமே உத்தாரகமென்று அத்யவஸித்திருந்தேன். "நாராயணோபி விக்ருதிம் குரோ: ப்ரச்யுதஸ்ய துர்புத்தே: கமலம் ஜலாத பேதம் சோஷயதி ரவிர் ந போஷயதி" என்னக் கடவதிறே.

விளக்கம் - (கையில் கனியன்ன கண்ணனைக் காட்டித் தரிலும்) - அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். "அனைவருக்கும் மிகவும் எளியவனாக உள்ள ஸர்வேச்வரனை நீவிர் எனக்குக் காண்பித்துக் கொடுத்தீர். ஆனால் அவன், அவரவர்கள் செயத செயல்களுக்கு ஏற்ப தண்டனைகளையும் வழங்குபவனாக உள்ளான். இதன் காரணமாக எனது தாழ்வான செயல்களைக் கண்ட பின்னர் என்னிடம் அவன் விபரீதமாகவே இருப்பான். ஆகவே உம்முடைய விஷயமே எனக்குக் கரை சேர வல்லதாகும் என்று எப்போதும் எண்ணியபடி உள்ளேன்", என்று கூறுவதாகவும் கொள்ளலாம். நாராயணோபி விக்ருதிம் குரோ: ப்ரச்யுதஸ்ய துர்புத்தே: கமலம் ஜலாத பேதம் சோஷயதி ரவிர் ந போஷயதி – நீரில் உள்ள தாமரையை மலரச் செய்கின்ற சூரியன், அதே தாமரையானது நீரை விட்டு வெளியில் இருந்தால் பொசுக்குகிறான்; இது போன்றே அனைவருக்கும் உதவும் நாராயணன், குருவை விட்டு அகல்பவர்களை தாழ்ந்த கதிக்கு இட்டுச் செல்கிறான் – என்பது காண்க.

வ்யாக்யானம் - அன்றிக்கே, "ப்ராப்யன் அவனேயாகிலும் அவனை யநுபவிக்கும்போது, 'பகவத் வந்தநம் ஸ்வாத்யம் குருவந்தந பூர்வகம் க்ஷீரம் சர்க்கரயா யுக்தம் ஸ்வத தேஹி விசேஷத:' என்கையாலே, ரஸிகரான நமக்கு ஆசார்ய விக்ரஹத்தை முன்னிட்டுக் கொண்டிறே யிருக்க வடுப்பது. அப்படியே அடியேனும் தேவரீருடைய விஷயீகாரத்தாலே இந்த வாசியறிந்தேன். ஆகையாலே தேவரீர் திவ்ய விக்ரஹத்தோடே கூடி யநுபவிக்குமதொழிய தனித்து அவனை அநுபவிக்க இசைந்தேனல்லேன்" என்கிறார் என்னவுமாம்.

விளக்கம் - (கையில் கனியன்ன கண்ணனைக் காட்டித் தரிலும்) - அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். "அடையவேண்டிய பேறு அவனாகவே இருந்தாலும், அவனை அனுபவிக்கும்போது, பகவத் வந்தநம் ஸ்வாத்யம் குருவந்தந பூர்வகம் க்ஷீரம் சர்க்கரயா யுக்தம் ஸ்வத தேஹி விசேஷத: - குருவை வணங்கிய பின்னர் பகவானை வணங்குதல் மிகவும் அற்புதமான அனுபவமாகும்; இது, பாலில் சர்க்கரையை இட்டுப் பருகுவது போன்றதாகும் – என்று கூறப்படுவதால், ரசித்தபடி உள்ள நமக்கு ஆசார்யனுடைய திருமேனியை முன்னிறுத்தியே அடையவேண்டும் என்பதே சரியானதாகும். இதன் காரணமாகவே, அடியேனும் உம்முடைய ஸம்பந்தம் பெற்றதால், இந்த வேறுபாட்டை அறிந்தேன்; ஆகவே உம்முடைய திருமேனியுடன் சேர்ந்து நின்று அவனை அனுபவிக்க முயன்றேன் அல்லாமல், தனியே நின்று அனுபவிக்க முயலவில்லை", என்று கூறுவதாகவும் கொள்ளலாம்.

வ்யாக்யானம் – "இவன் இப்படி ஸ்வரூபாநுரூபமாக ஸ்வாதந்த்ர்யத்தை ஏறிட்டுக் கொண்டான்" என்று தேவரீர் சீறியருளி என்னை, (நிரயத் தொய்யில் கிடக்கிலும்) விடியா வெந்நரகான ஸம்ஸார கர்த்தமத்திலே அழுந்திக் கிடக்கும்படி பண்ணவுமாம். தொய்யில் - சேறு. நிரயமென்று துக்ககரத்வத்தாலே ஸம்ஸாரத்தைச் சொல்லுகிறது. அன்றிக்கே, "நம்முடையவனன்றோ" என்று தேவரீர் க்ருபை செய்தருளி என்னை (சோதி விண் சேரிலும்) சுத்தஸத்வமயமாகையாலே நிரவதிக தேஜோரூபமான பரமபதத்திலே கொண்டு போய்ச் சேர்க்கவுமாம். "நிரயத் தொய்யில் கிடக்கிலென், சோதி விண் சேரிலென்" என் று பாடமானபோது, "ஸம்ஸாரத்ய்திலே யிருக்கிலென், பரமபதத்திலே போய்ச் சேரிலென், அவையிரண்டையும் கொண்டு எனக்குக் கார்யமில்லை" யென்று பொருளாகக் கடவது.

“நிரயத் தொய்யில்” இத்யாதிகளுக்கு, “நான் ஸம்ஸார கர்த்தமத்திலே மூழ்கிக் கிடக்கவுமாம், சுத்தஸத்வமயமாகையாலே நிரவதிக தேஜோரூபமான பரமபதத்தை ப்ராபிக்கவுமாம்” என்றும் பொருளாகவுமாம்.

விளக்கம் – ஆனால் நீவிர் உம்முடைய திருவுள்ளத்தில், “இவன் இவ்விதம் தனது ஸ்வரூபத்திற்கு ஏற்ற விஷயத்தைக் கைக்கொள்ள, தானாகவே முயன்றானே”, என்று சீற்றம் அடைந்து, என்னை (நிரயத் தொய்யில் கிடக்கிலும்) – “விடியா வெந்நரகம்” என்பதற்கு ஏற்ப உள்ள ஸம்ஸாரம் என்ற நரகத்தில் அழுந்திக் கிடக்கும்படிச் செய்யக்கூடும். “நிரயம்” என்பதன் மூலம் “துக்கம் நிறைந்த ஸம்ஸாரம்” கூறப்பட்டது. அல்லது, “இவன் நம்மைச் சேர்ந்தவன் அல்லவோ”, என்று உம்முடைய திருவுள்ளத்தில் கருணை கொண்டு என்னை (சோதி விண் சேரிலும்) - சுத்தஸத்வமாக உள்ளதால் எல்லையற்ற ஒளி பொருந்திய பரமபதத்தில் கொண்டு சேர்க்கக்கூடும். இங்கு “நிரயத் தொய்யில் கிடக்கிலென், சோதி விண் சேரிலென்” என்று படித்தால், “ஸம்ஸாரத்தில் இருந்தால் என்ன, பரமபதத்திற்குச் சென்றால் என்ன, அவை இரண்டின் மூலமும் எனக்குச் செய்யவேண்டியது ஏதும் இல்லை” என்று கூறுவதாகக் கொள்ளலாம். “நிரயத் தொய்யில்” முதலானவற்றுக்கு, “நான் ஸம்ஸார ஸமுத்ரத்தில் மூழ்கிக் கிடக்கலாம் அல்லது சுத்த ஸத்வமாக உள்ளதால் எல்லையற்ற பரமபதத்தினை அடையலாம்”, என்றும் பொருள் கூறலாம்.

வ்யாக்யானம் - (இவ்வருள் நீ செய்யில் தரிப்பன்) தேவரீருடைய திவ்யவிக்ரஹ குணங்களான ஸௌந்தர்யாதிகளை முற்றூட்டாக அநுபவித்துக் கொண்டிருக்கைக் குடலான நிர்ஹேதுக க்ருபையைப் பொட்டெனச் செய்தளில் தரிப்பன். “இவ்வநுபவத்தை தேவரீர் தரில், ஸம்ஸாரத்திலும் தரிப்பன்; இல்லையாகில் பரமபதத்திலும் தரியேன்” என்கிறார் காணும். “தரியேன் இனி உன் சரணந்தந்தென் சன்மம் களையாயே”, “களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்”, “ந தேஹம் ந ப்ராணாந் ந ச ஸுகம் அசேஷ அபிலஷிதம் | ந ச ஆத்மாநம் ந அந்யத் கிமபி தவ சேஷத்வ விபவாத் | பஹிர்ப்பூதம் நாத க்ஷணமபி ஸஹே யாது சததா | விநாசம் தத் ஸத்யம் மதுஸூதந விஜ்ஞாபம் இதம்”, “நரகும் சுவர்க்கமும் நாண்மலராள்கோனைப் பிரிவும் பிரியாமையும்” என்று ப்ரதம பர்வத்திலே ஆழ்வாரும் ஆளவந்தாரும் அருளாளப் பெருமா

ளெம்பெருமானாரும் அநுஸந்தித்தாப்போலே, அமுதனாரும் சரமபர்வத்திலே அநுஸந்தித்தாராய்த்து.

விளக்கம் - (இவ்வருள் நீ செய்யில் தரிப்பன்) - உம்முடைய திவ்யமான திருமேனியில் வெளிப்படும் குணங்களாக உள்ள ஸௌந்தர்யம் போன்றவற்றை நான் முற்றிலுமாக அனுபவிக்கப்பதற்கு, நீவிர் எந்தவிதமான காரணமும் இன்றி வெளிப்படும் உமது கருணையைக் காண்பித்தால், நான் பிழைப்பேன். "இப்படிப்பட்ட அனுபவத்தை நீவிர் அளித்தால், நான் இந்த ஸம்ஸாரத்திலும் பிழைத்திருப்பேன். ஆனால் நீவிர் இதனை அளிக்கவில்லை என்றால், பரமபதத்தில் கூட பிழைக்கமாட்டேன்", என்கிறார். திருவாய்மொழி (5-8-7) - தரியேன் இனி உன் சரணந்தந்தென் சன்மம் களையாயே – என்றும், திருவாய்மொழி (5-8-8) – களைவாய் துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன் – என்றும், ஸ்தோதரத்னம் (57) - ந தேஹம் ந ப்ராணாந் ந ச ஸுகம் அசேஷ அபிலஷிதம் | ந ச ஆத்மாநம் ந அந்யத் கிமபி தவ சேஷத்வ விபவாத் | பஹிர்ப்பூதம் நாத க்ஷணமபி ஸஹே யாது சததா | விநாசம் தத் ஸத்யம் மதுஸூதந விஜ்ஞாபம் இதம் – உனக்கு அடிமை என்னும் செல்வத்திற்குப் புறம்பாக உள்ள சரீரத்தை நான் ஒரு நொடிக்கூடப் பொறுக்கமாட்டேன். அவ்விதமாக உள்ள ப்ராணனையும் பொறுக்கமாட்டேன். அனைவரும் விரும்பும் சுகத்தையும் பொறுக்கமாட்டேன். ஆத்மாவையும் ஸஹிக்கமாட்டேன். உனக்கு அடிமை அல்லாத எதனையும் பொறுக்கமாட்டேன். உனக்கு அடிமையாக இல்லாத இவை அனைத்தும் அழியட்டும். மது என்னும் அசுரனை அழித்தவனே! இந்த விண்ணப்பம் ஸத்யமே ஆகும் – என்றும், ஞானஸாரம் (2) – நரகும் சுவர்க்கமும் நாண்மலராள்கோனைப் பிரிவும் பிரியாமையும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஸர்வேச்வரன் விஷயத்தில் ஆழ்வாரும் ஆளவந்தாரும் அருளாளப்பெருமாள் எம்பெருமானாரும் எண்ணியது போன்று இங்கு அமுதனார் ஆசார்ய விஷயத்தில் எண்ணுகிறார்.

105. செழுந்திரைப் பாற்கடல் கண்துயில் மாயன் திருவடிக்கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில் மேவு நல்ஞானி நல்வேதியர்கள்
தொழும் திருப்பாதன் இராமாநுசனைத் தொழும் பெரியோர்
எழுந்திரைத்து ஆடும் இடம் அடியேனுக்கு இருப்பிடமே

விளக்கவுரை - அழகான அலைகளை உடைய திருப்பாற்கடலில் உறங்குவது போன்று யோகநித்திரை செய்யும் ஸர்வேச்வரனின் திருவடிகளில் என்றும் பிரியாமல், அவனது குணத்தில் ஈடுபட்டு, "ஜிதந்தே" என்று கூறியபடி சிலர் இருப்பர். இப்படிப்பட்ட ஞானிகளின் மனதில் எப்போதும் கொண்டாடப்படுபவர்; வேதம் ஓதுபவர்கள், என்றும் போற்றும்படி உள்ள திருவடிகளைக் கொண்டவர் எம்பெருமானார் ஆவார். இப்படிப்பட்ட எம்பெருமானாரை எப்போதும் வணங்கியபடி, அவரது புகழைப் போற்றியபடி, கடல் ஓசை போன்று ஆரவாரம் செய்தபடி ஆடும் அடியவர்கள் உள்ள இடமே எனக்கு உயர்ந்த இடங்களாகும்.

அவதாரிகை - கீழே எம்பெருமானார் தமக்குப் பண்ணியருளின உபகாரத்தை அநுஸந்தித்து "மஹோதாரரான எம்பெருமானாரே!" என்று அவரை ஸம்போதித்து, "தேவரீர், ஸுலபனான க்ருஷ்ணனை கரதலாமலகமாகப் பண்ணிக் கொடுத்தாலும், அவன் நித்யவாஸம் பண்ணுகிற பரமபதத்தைக் கொடுத்தாலும், அவனுக்கு க்ரீடாகந்துக ஸ்தாநீயமான இந்த லீலா விபூதியைக் கொடுத்தாலும், தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹாநுபவமொழிய அவற்றில் ஒன்றும் எனக்கு வேண்டுவதில்லை. ஆகையாலே இவ்வநுபவம் எனக்கு எப்போதும் நடக்கும்படி க்ருபை பண்ணில் தரிப்பன். இல்லையாகில், ஜலாதுத்த்ருத மத்ஸ்யம் போலே தரிக்கமாட்டேன்" என்ன; அத்தைக் கேட்டவர்கள், "ஜநி ம்ருதி துரித நிதெள மே ஜகதி ஜிஹாஸாந்த்ர ஜ்ரும்பிதா பவதா பவது ச ந பஸி பரஸ்மிந் நிரவதிக ஆநந்த நிர்ப்பரேலிப்ஸா - என்கிறபடியே லோகத்தார் எல்லாரும் ஸம்ஸார த்யாஜ்யம் என்றும், பரமபதம் உபாதேயம் என்றும் அறுதியிட்டு அங்கே போக ஆசைப்பட்டா நிற்க, நீர் இவ்விரண்டையும் ஸஹபடித்துச்சொன்னீர். இனி உமக்கு வஸ்தவ்ய தேசமாக அறிதியிட்டிருப்பது என்"னென்று கேட்க; "திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளின ஸர்வேச்வரனுடைய குணங்களிலே ஈடுபட்டு, கலக்கமில்லா நல் தவ முனிவராலே விரும்பப்பட்ட விலக்ஷண ஜ்ஞாநத்தையுடையரான பரமவைதிகராலே 'தொழுது முப்போதும்' என்கிறபடியே அநவரதம் ஸேவிக்கப்படா நின்றுள்ள திருவடிகளையுடைய எம்பெருமானாரை, 'தேவுமற்றறியேன்' என்று ஸதாநுபவம் பண்ணிக் கொண்டிருக்குமவர்கள் எழுந்தருளியிருக்குமிடம், அவர்களடியேனான வெனக்கு வஸ்தவ்ய தேசம்" என்று கீழே தாம் சொன்ன ப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்தருளுகிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் எம்பெருமானார், அமுதனராகிய தனக்குச் செய்த உபகாரத்தை எண்ணியபடி இருந்து, "மிகவும் தாராளமான குணம் கொண்ட எம்பெருமானாரே!" என்று அவரை அழைத்து, "நீவிர் மிகவும் எளியவனாக உள்ள க்ருஷ்ணனை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் காண்பித்துக் கொடுத்தாலும், அவன் எப்போதும் இருக்கின்ற பரமபதத்தை அளித்தாலும், அவனுடைய லீலைகளுக்கு ஏற்ற இடமாக உள்ள இந்தப் பூமியை அளித்தாலும், உம்முடைய திவ்யமங்கள திருமேனி அனுபவம் அல்லாமல் அவற்றில் எதனையும் நான் வேண்டமாட்டேன். ஆகவே இந்த அனுபவம் எனக்கு எப்போதும் கிடைக்கும்படி நீவிர் செய்தால் நான் உயிர் தாங்குவேன். இல்லையென்றால் நீரை விட்டு அகன்ற மீன் போன்று ஆவேன்", என்று கூறினார். இதனைக் கேட்டவர்கள் அமுதனாரிடம், "ஜநி ம்ருதி துரித நிதௌ மே ஜகதி ஜிஹாஸாந்த்ர ஜ்ரும்பிதா பவதா பவது ச ந பஸி பரஸ்மிந் நிரவதிக ஆநந்த நிர்ப்பரேலிப்ஸா – பிறப்பு மற்றும் மரணம் என்னும் சுழற்சி கொண்டதான இந்த ஜகத்தை குறித்து எனக்கு வெறுப்பே உண்டாகிறது; எல்லையற்ற ஆனந்தம் கொண்டதான பரமபதத்தில் எனக்கு விருப்பம் உள்ளது - என்பதற்கு ஏற்ப லோகத்தில் உள்ள அனைவரும் ஸம்சாரம் என்பது கைவிடத்தக்கது என்றும், பரமபதமே கைக்கொள்ளத் தக்கது என்றும் கூறுகிறார்கள். ஆனால் நீவிர் இந்த இரண்டையும் ஒரே போன்று உரைக்கிறீர். இனி உமக்கு வசிக்கத்தக்க இடமாக நீவிர் உறுதி பூண்டிருப்பது எது?", என்று கேட்டனர். இதற்கு அமுதனார், "திருப்பாற்கடலில் கண்வளர்ந்தபடி உள்ள ஸர்வேச்வரனுடைய திருக்கல்யாண குணங்களில் எப்போதும் ஈடுபட்டு, திருவாய்மொழி (8-3-10) – கலக்கமில்லா நல் தவ முனிவர் – என்னும்படி உள்ளவரால் விரும்பப்பட்ட மேன்மையான உயர்ந்த ஞானத்தைக்கொண்ட பரமவைதிகர்களால், நாச்சியார் திருமொழி (1-9) – தொழுது முப்போதும் - என்பதற்கு ஏற்ப எப்போதும் வணங்கப்பட்டபடி உள்ள திருவடிகளைக் கொண்ட எம்பெருமானாரை, கண்ணிநுண்சிறுத்தாம் (2) – தேவு மற்றறியேன் – என்பதற்கு ஏற்ப எப்போதும் அனுபவித்தபடி உள்ளவர்கள் எழுந்தருளியுள்ள இடமே, அவர்களுடைய அடியவனாகிய எனக்கு, ஏற்றதோடு வசிக்கக்கூடிய இடம் ஆகும்", என்று தான் முன்பு உரைத்த இலக்கை உறுதியாக உரைக்கிறார்.

வ்யாக்யானம் - (செழும் திரைப்பாற்கடல் கண் துயில் மாயன்) செழுமென்றது திரைக்கு விசேஷணமாகவுமாம், கடலுக்கு விசேஷணமாகவும்; திரைக்கு விசேஷணமானபோது, செழுமை - அழகாய், பால்கிளருமாப்போலே ஒன்று மேல் ஒன்றாகத் திரண்டு வருகிற இவற்றினுடைய ஸமுதாய சோபையைச் சொன்னபடி. கடலுக்கு விசேஷணமானபோது, செழுமை - பெருமையாய், "நளிநீர்க்கடலைப் படைத்துத் தன் தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பல பரப்பி" என்கிறபடியே ஸர்வேச்வரனுக்கு இடங்கை வலங்கைக் கொண்டு, கண்வளருகைக்கீடான பரப்பையுடைய கடல் என்றபடி. அன்றிக்கே, செழுமை மாயனுக்கு விசேஷணமாகவுமாம். இப்படிப்பட்ட திருப்பாற்கடலிலே, "கடலோதம் கால் அலைப்பக் கண்வளரும்" என்கிறபடியே துடை குத்த உறங்குவாரைப்போலே, திரைகளானவை திருவடிகளை அநுகூலமாக அலைக்க ஊஞ்சலிலே கண்வளருமவனைப்போலே கண் வளரா நிற்பானாய், "உறங்குவான் போல் யோகுசெய்"கிற ஆச்சர்யத்தை யுடையனான ஸர்வேச்வரன். "ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:" என்றும், "வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை" என்றும் சொல்லுகிறபடியே அநந்தாவதார கந்தமாய்க் கொண்டு, திருப்பாற்கடலிலே கண் வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரன் என்றபடி. "செழுந்திரைப்பாற்கடல் பள்ளிகொள் மாயன்" என்றும் பாடம் சொல்லுவர்கள்.

விளக்கம் - (செழும் திரைப்பாற்கடல் கண் துயில் மாயன்) – "செழும்" என்பது அலைகளுக்கு அடையாளம் என்றும், கடலுக்கு அடையாளம் என்றும் கூறலாம். அலைகளுக்கு அடையாளம் என்னும்போது அழகாகவும், பால் பொங்கி வருவது போன்று ஒன்றன் மீது ஒன்றாகத் திரண்டு வருகிற அவற்றுடைய கூட்டத்தின் அழகு உரைக்கப்பட்டதாகிறது. கடலுக்கு அடையாளம் என்னும்போது, "செழுமை" என்பது பெருமையைக் கூறுகிறது; திருவாய்மொழி (8-10-8) – நளிநீர்க்கடலைப் படைத்துத் தன் தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பல பரப்பி - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் தன்னுடைய இடக்கை மற்றும் வலக்கை ஆகியவற்றை நன்றாக வைத்தபடி கண்வளர்வதற்கு ஈடாக பரந்த இடம் கொண்ட கடல் என்று கருத்து. அல்லது "செழுமை" என்பது மாயனுக்கு அடையாளமாகக் கூறப்பட்டதாகவும் கொள்ளலாம். அப்படிப்பட்ட திருப்பாற்கடலில், முதல் திருவந்தாதி (16) – கடல் ஓதம் கால் அலைப்பக் கண்வளரும் - என்பதற்கு ஏற்ப தாலாட்டு கேட்டபடி உறங்குபவர் போன்று, கடல் அலைகள் திருவடிகளை மென்மையாக வருட, ஊஞ்சலில் கண்வளர்பவன் போன்று

கண்வளர்ந்தபடி உள்ளவனாக, திருவாய்மொழி (5-4-1) – உறங்குவான் போல் யோகு செய் - என்பதற்கு ஏற்ப வியப்பைக் கொண்ட ஸர்வேச்வரன். ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந: - ஸ்ரீமந்நாராயணன் தனது இருப்பிடத்தை விட்டு திருப்பாற்கடலிற்கு வந்து சயனித்தபடி – என்றும், திருப்பாவை (6) – வெள்ளத்தரவில் துயில் அமர்ந்த வித்தினை - என்றும் கூறுவதற்கு ஏற்ப எல்லையற்ற அவதாரங்கள் எடுப்பதற்கு ஏற்றபடி திருப்பாற்கடலில் வந்து கண் வளர்கின்ற ஸர்வேச்வரன்.

வ்யாக்யானம் - (திருவடிக்கீழ் விழுந்திருப்பார்) "பாற்கடலான் பாதம் வழுவா வகை நினைந்து" என்கிறபடியே அப்படிப்பட்ட ஸர்வேச்வரனுடைய கல்யாணகுணங்களை அநுபவித்து அவற்றிலே ஈடுபட்டு, "உன்னடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்கிறபடியே அவனுடைய திருவடிகளின் கீழே "நிழலுமடிதாறும்" போலே பிரியாதே விழுந்திருக்குமவர்களான "கலக்கமில்லா நல்தவ முனிவரா"லே. (நெஞ்சில் மேவும் நல்ஞானி) "இது ஒரு ஜ்ஞாந வைபவமே" என்று இத்தையே பலகாலும் அவர்கள் சிலாகித்துக் கொண்டு போருகையாலே, அவர்கள் நெஞ்சிலே வைக்கப்பட்ட ஜ்ஞாந வைலக்ஷண்யத்தையுடையராய். மேவுதல் - விரும்புதல்.

விளக்கம் - (திருவடிக்கீழ் விழுந்திருப்பார்) - நான்முகன் திருவந்தாதி (89) – பாற்கடலான் பாதம் வழுவா வகை நினைந்து – என்பதற்கு ஏற்ப அப்படிப்பட்ட ஸர்வேச்வரனுடைய திருக்கல்யாணகுணங்களை எப்போதும் அனுபவித்து அதில் ஈடுபட்டபடி, திருவாய்மொழி (6-10-10) – உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே – என்பதற்கு ஏற்ப அவனுடைய திருவடிகளின் கீழே, பெரியதிருவந்தாதி (31) – நிழலும் அடிதாறும் - என்பது போன்று எப்போதும் விழுந்து கிடப்பவர்களாகிய, திருவாய்மொழி (8-3-10) – கலக்கமில்லா நல் தவ முனிவர் – என்பதற்கு ஏற்ப உள்ளவரால், (நெஞ்சில் மேவும் நல்ஞானி) – "இது மிகவும் சிறந்த ஒரு ஞான அனுபவம்" என்று இதனையே எப்போதும் அவர்கள் கொண்டாடியபடி உள்ளதால், அவர்களுடைய மனதில் வைக்கப்பட்ட ஞான மேன்மை கொண்டவர்களாக.

வ்யாக்யானம் – (நல் வேதியர்கள்) பரமவைதிகரானவர்கள். (தொழுந்திருப்பாதன்) "லக்ஷ்மணாய முநயே தஸ்மை நமஸ்குர்மஹே" என்றும், "தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே" என்றும், "ப்ரணாமம் லக்ஷ்மண முநி: ப்ரதிக்ருஹ்ணாது மாமகம்" என்றும்,

"ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்நா" என்றும் சொல்லுகிறபடியே ப்ரணாமாத் யநுவர்த்தநங்களைப் பண்ணாநின்றுள்ள திருவடிகளையுடையனான. (இராமாநுசனை) எம்பெருமானாரை. (தொழும் பெரியோர்) "நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா:" என்றும், "புணர்த்த கையனராய்" என்றும், "கைகள் கூப்பிச் சொல்லீர்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வகாலமும் ஸேவித்துக் கொண்டிரா நின்றுள்ள பெருமையையுடையவர்கள்.

விளக்கம் - (நல் வேதியர்கள்) - பரமவைதிகர்கள். (தொழும் திருப்பாதன்) - லக்ஷ்மணாய முநயே தஸ்மை நமஸ்குர்மஹே – லக்ஷ்மணமுநியாகிய உமக்கு நமஸ்காரம் – என்றும், தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே – என்றும், ப்ரணாமம் லக்ஷ்மண முநி: ப்ரதிக்ருஹ்ணாது மாமகம் – எம்பெருமானாருக்கு எனது நமஸ்காரங்கள், அதனை அவர் ஏற்கிறார் – என்றும், ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்நா – யதிகளின் தலைவராகிய இராமாநுசரின் திருவடிகளில் பணிந்து – என்றும் கூறுவதற்கு ஏற்ப நமஸ்கரித்தல் முதலான பலவிதமான தொண்டுகளையும் செய்தபடி உள்ளதான திருவடிகளைக் கொண்டவராகிய. (இராமாநுசனை) – எம்பெருமானாரை. (தொழும் பெரியோர்) - நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா: - எப்போதும் தொழுதபடி – என்றும், திருவாய்மொழி (6-1-5) - புணர்த்த கையினராய் – என்றும், திருவாய்மொழி (6-1-1) - கைகள் கூப்பிச் சொல்லீர் - என்றும் கூறுவதற்கு ஏற்ப எப்போதும் வணங்கியபடி உள்ள பெருமையைக் கொண்டவர்கள்.

வ்யாக்யானம் - (எழுந்திரைத்தாடுமிடம்) அவ்வநுபவ ஜநிதமான ஹர்ஷம் உந்மஸ்தகமாய் அத்தாலே உடம்பு இருந்தவிடத்திலிராதே கிளர்ந்து, கடல் இரைத்தாப்போலே இரைத்துக் கொண்டு ஸஸம்ப்ரம வ்யாபாரங்களைப் பண்ணுமிடம். (அடியேனுக்கு இருப்பிடமே) "தன்னை உற்றாட்செய்யுந் தன்மையினோர் மன்னு தாமரைத்தாள் தன்னை உற்றாட்செய்ய என்னை உற்றான்" என்கிறபடியே அவர்களுக்கு சரமாவதி தாஸனான அடியேனுக்கு வஸ்தவ்ய தேசம் "சிரீதரன் தொல்புகழ் பாடி கும்பிடு நட்டமிட்டாடிக் கோகு கட்டுண்டு உழல்"கிற ப்ரதம பர்வநிஷ்ட்டரைப் போலே இச்சரம பர்வத்திலும், எழுந்து இரைத்து ஆடுமவர்கள் இருக்குமிடம் அடியேனுக்கு இருப்பிடம் என்கிறார். "யா வைகுண்ட கதா ஸுதா ரஸபுஜாம் ரோசேத நோசேதஸே", "வாஸஸ்த்தாநம் ததிஹ க்ருதிநாபாதி வைகுண்ட கல்பம்", "வஸ்தவ்யம் ஆசார்ய ஸந்நிதியும்" என்னக் கடவதிறே.

விளக்கம் - (எழுந்து இரைத்து ஆடுமிடம்) - அப்படிப்பட்ட அனுபவத்தில் முலம் பிறந்ததாகிய மகிழ்ச்சியானது அளவில்லாததாக, அதன் விளைவாக சரீரமானது இருந்த இடத்தில் நிற்காமல் கிளர்ந்து, கடலானது ஓசை எழுப்பியபடி உள்ளது போன்று ஓசை எழுப்பியபடி, பரபரப்புடன் உள்ள செயல்களைச் செய்யும் இடம். (அடியேனுக்கு இருப்பிடமே) – இராமானுச நூற்றந்தாதி (97) – தன்னை உற்றாட்செய்யுந் தன்மையினோர் மன்னு தாமரைத்தாள் தன்னை உற்றாட்செய்ய என்னை உற்றான் – என்பதற்கு ஏற்ப அவர்களுடைய அடியவனாகிய எனக்கு எப்போதும் வசிக்கத்தக்க இடம் ஆகும். திருவாய்மொழி (3-5-4) – சிரீதரன் தொல்புகழ் பாடி கும்பிடு நட்டமிட்டாடிக் கோகு கட்டுண்டு உழல் - என்பதற்கு ஏற்ப பக்தியின் முதல் நிலையான ஸர்வேச்வரன் விஷயத்தில் கட்டுண்டு ஆடியபடி உள்ளவர்கள் போன்று, இந்த இறுதி நிலையான பாகவதர்கள் விஷயத்திலும் ஆடியபடி உள்ளவர்கள் இருக்கும் இடமே எனக்கு ஏற்ற இருப்பிடம் என்கிறார். யா வைகுண்ட கதா ஸுதா ரஸபுஜாம் ரோசேத நோசேதஸே – ஸ்ரீவைகுண்டம் மற்றும் அதன் எஜமானன் ஆகிய சுவைகளைச் சுவைத்த பின்னர் எல்லையற்ற ஆனந்தம் கொண்டு – என்றும், வாஸஸ்த்தாநம் ததிஹ க்ருதிநாபாதி வைகுண்ட கல்பம் – மிகுந்த நன்மை செய்தவர்களுடைய இடமான ஸ்ரீவைகுண்டம் – என்றும், ஸ்ரீவசனபூஷணம் (275) – வஸ்தவ்யம் ஆசார்ய ஸந்நிதியும் - என்றும் கூறுவது காண்க.

106. இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ் சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக்கு என்பர் நல்லோர் அவை தன்னொடு வந்து
இருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து இன்று அவன் வந்து
இருப்பிடம் என்றன் இதயத்துள்ளே தனக்கு இன்புறவே

விளக்கவுரை - வியக்க வைக்கும் குணங்கள் மற்றும் ஸ்வரூபம் கொண்ட ஸர்வேச்வரன் மிகவும் விரும்பி வாசம் செய்யும் இடங்கள் – ஸ்ரீவைகுண்டம், திருமலை மற்றும் திருமாலிருஞ்சோலை ஆகும். இப்படிப்பட்ட இடங்களில் அவன் வாசம் செய்வதாக, அவனையே எப்போதும் அண்டி நிற்பவர்கள் கூறுவார்கள். ஆனால் அந்த ஸர்வேச்வரன் அதிக விருப்பத்துடன் எழுந்தருளியுள்ள இடம் எம்பெருமானாரின் இதயத்தில் ஆகும். இப்படிப்பட்ட எம்பெருமானார் மிகவும் மனம் மகிழ்ந்து, இன்பத்துடன் வீற்றிருப்பது என்னுடைய இதயத்தில் ஆகும்.

அவதாரிகை – "எம்பெருமானார் திருவடிகளை ஆச்ரயித்த மஹாத்மாக்கள், அவர் தம்முடைய குணாநுபவ ஜநித ஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே களித்து ஸஸம்ப்ரம ந்ருத்தம் பண்ணுமிடம் தமக்கு வாஸஸ்த்தாநம்", என்று கீழ்ப்பாட்டிலேயருளிச்செய்து, இப்பாட்டிலே, "வேததத்துபப்ரஹ்மணாதிகளாலே பரிசீலநத்தைப் பண்ணியிருக்குமவர்கள் ஸர்வேச்வரனுக்கு உகந்தருளின நிலங்களாகச் சொல்லுகிற ஸ்ரீவைகுண்டம், வடதிருமலை, தென்திருமலை தொடக்கமான திவ்யஸ்த்தலங்களோடேகூட எம்பெருமானாருடைய திருவுள்ளத்திலே அவன் மிகவும் விரும்பி வர்த்திக்குமாப்போலே, இப்போது அத்திவ்யதேசங்களோடும் அந்த திவ்யதேசங்களுக்கு நிர்வாஹகனான ஸர்வேச்வரனோடும் கூட வந்து எம்பெருமானார் தாமும் நிரதிசய ஸுகமாக எழுந்தருளியிருக்கிற ஸ்த்தலம், தம்முடைய திருவுள்ளம்" என்று அநுஸந்தித்து, ப்ரீதராகிறார்.

விளக்கம் – "எம்பெருமானாருடைய திருவடிகளை எப்போதும் அண்டியபடி நிற்கின்ற மஹாத்மாக்கள், எம்பெருமானாருசைய திருக்கல்யாணகுணங்களை அனுபவித்த காரணத்தால் பிறந்த மகிழ்ச்சியின் விளைவாகக் களித்து, பரபரப்புடன் உள்ள இடமே தனக்கு இருப்பிடம்", என்று கடந்த பாசுரத்தில் அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில் வேதங்கள் மற்றும் அவற்றின் உபப்ருஹ்மணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தபடி உள்ளவர்கள், ஸர்வேச்வரனுக்கு விருப்பமான இருப்பிடமாகக் கூறுவதான ஸ்ரீவைகுண்டம், வடதிருவேங்கடமலை, தென்திருமலையாகிய அழகர்கோயில் ஆகியவை தொடக்கமாக உள்ள திவ்யதேசங்களுடன் சேர்ந்து எம்பெருமானாருடைய திருவுள்ளத்திலும் விரும்பி வசிக்கிறான். அதே போன்று அந்தத் திவ்யதேசங்கள், அந்தந்த திவ்யதேசங்களுக்கு நிர்வாஹகனாக உள்ள ஸர்வேச்வரன் ஆகியவற்றுடன் சேர்ந்து எம்பெருமானாரும் வந்து, எல்லையற்ற இன்பத்துடன் எழுந்தருளியிருப்பது தன்னுடைய திருவுள்ளம் ஆகும் என்று எண்ணி மகிழ்கிறார்.

வ்யாக்யானம் - (வைகுந்தம்) "அவ்யாஹத ஸங்கல்பம் வஸ்து லக்ஷ்மீதரம் விது:" என்கிறபடியே ஸமஸ்த ஸங்கல்பங்களும் மாறாதே செல்லுகைக்குடலான தேசமாய், "நலமந்தமில்லதோர் நாடு" என்று சிலாகிக்கப்படுமதான ஸ்ரீவைகுண்டமும். அன்றிக்கே, தர்மபூத ஜ்ஞாநத்துக்கு திரோதாநமில்லாத தேசமென்னுதல். (வேங்கடம்) "கண்ணாவா

னென்றும் மண்ணோர் விண்ணோர்க்குத் தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பு" என்றும், "பரன் சென்று சேர் திருவேங்கடமாமலை" என் றும் சொல்லுகிறபடியே, இரண்டு ப்ரஜையைப் பெற்ற மாதாவானவள் இருவர்க்கும் முலை கொடுக்கப் பாங்காக நடுவே கிடக்குமாப்போலே நித்யஸூரிகளுக்கும் நித்யஸம்ஸாரிகளுக்கும் ஒக்க முகம் கொடுக்கைக்காக அவன் நின்றருளின திருமலையும். (மாலிருஞ்சோலை யென்னும் பொருப்பிடம்) "புயல்மழை வண்ணர் புரிந்துறை கோயில்" என்றும், "வலம் செய்யும் வானோர் மாலிருஞ்சோலை" என்றும், "கிளரொளி சேர் கீழுரைத்த பேறு கிடைக்க வளரொளி மால் சோலைமலை" என்றும் சொல்லுகிறபடியே, திருமாலிருஞ்சோலை என்னும் பெயரையுடைத்தாய் ஆழ்வார் ப்ரார்த்தித்தருளினபடியே உகந்து வர்த்திக்கைக்கு ஏகாந்த ஸ்த்தலம் என்று அவன் விருப்பத்தோடே வர்த்திக்கிற தென்திருமலையாகிற ஸ்த்தலமும். பொருப்பு - பர்வதம். இருப்பிடம் - ஆவாஸஸ்த்தாநம்.

விளக்கம் - (வைகுந்தம்) - அவ்யாஹத ஸங்கல்பம் வஸ்து லக்ஷ்மீதரம் விது: - எந்த இடத்தில் தடையற்ற ஸங்கல்பம் உள்ளதோ அங்கு அவன் மஹாலக்ஷ்மியுடன் உள்ளான் - என்பதற்கு ஏற்ப அனைத்துவிதமான ஸங்கல்பங்களும் நிறைவேறும்படியாக இருப்பதற்கு ஏற்ற இடமாகவும், திருவாய்மொழி (2-8-4) – நலம் அந்தமில்லதோர் நாடு – என்று கொண்டாடப்படுவதும் ஆகிய ஸ்ரீவைகுண்டமும். அல்லது தர்மபூத ஞானத்திற்கு எந்தவிதமான மறைவும் ஏற்படாதபடி உள்ள இடம் என்றும் கொள்ளலாம். (வேங்கடம்) - க திருவாய்மொழி (1-8-3) – கண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்குத் தண்ணார் வேங்கட விண்ணோர் வெற்பு – என்றும், திருவாய்மொழி (3-3-8) – பரன் சென்று சேர் திருவேங்கடமாமலை - என்றும் கூறுவதற்கு ஏற்ப, இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்து தாய் ஒருவள், அந்த இரண்டு குழந்தைகளும் தாய்ப்பால் பருகுவதற்கு ஏற்றபடி நடுவில் கிடப்பது போன்று நித்யஸூரிகளுக்கும் நித்யஸம்ஸாரிகளுக்கும் ஒரே போன்று தனது திருமுகத்தை வெளிப்படுத்துவதற்காக நின்றருளும் திருவேங்கடத் திருமலையும். (மாலிருஞ்சோலை என்னும் பொருப்பிடம்) - திருவாய்மொழி (2-10-3) – புயல்மழைவண்ணர் புரிந்துறை கோயில் – என்றும், திருவாய்மொழி (2-10-8) – வலம் செய்யும் வானோர் மாலிருஞ்சோலை – என்றும், திருவாய்மொழி நூற்றந்தாதி (20) – கிளரொளிசேர் கீழுரைத்த பேறு கிடைக்க வளரொளி மால்சோலைமலை – என்றும் கூறுவதற்கு ஏற்ப "திருமாலிருஞ்சோலை" என்ற பெயர் கொண்டதாகவும், ஆழ்வார்

ப்ரார்த்தித்தற்கு ஏற்ப விருப்பத்துடன் வசிப்பதற்கு எற்ற இடமாகவும் உள்ளதான, அவன் விருப்பத்துடன் வசிக்கின்ற தென்திருமலை திவ்யதேசமும்.

வ்யாக்யானம் - (மாயனுக்கு), "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்றும், "ந மே விதுஸ் ஸுரகணா:" என்றும், "ப்ரபவந் ந மஹர்ஷய:" என்றும், "யவர்க்கும் சிந்தைக்கும் கோசரமல்லன்" என்றும் சொல்லுகிறபடியே அசிந்த்ய ஸ்வபாவனாய், "தத் ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேதி" என்றும், "தானோருருவே தனி வித்தாய்" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வ காரணபூதனாய் ஸ்வரூப ரூப குண விபூதிகளால் ஆச்சர்யபூதனான ஸர்வேச்வரனுக்கு. (நல்லோர்) "மஹாத்மாநஸ்து மாம் பார்த்த தைவீம் ப்ரக்ருதிம் ஆச்ரிதா: பஜந்த்யநந்ய மநஸோ ஜ்ஞாத்வா பூதாதிமவ்யயம்" என்கிறபடியே பராவர தத்வ யாதாத்ம்ய விதக்ரேஸரரான மஹர்ஷிகள். (என்பர்) சொல்லுவர்கள். "வைகுண்டேது பரேலோகே ஸ்ரீயாஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதஸ்ஸஹ" இத்யாதியாலே ப்ரதிபாதிப்பர் என்றபடி. அன்றிக்கே, (நல்லோர்) மயர்வற மதிநலமருளப் பெற்ற ஆழ்வார்கள் அருளிச்செய்வர்களென்றுமாம். "அயர்வறு மமரர்களதிபதி" என்றும், "திருமால் வைகுந்தம்" என்றும், "தெண்ணலருவி மணி பொன் முத்தலைக்கும் திருவேங்கடத்தான்" என்றும், "வளரொளி மாயோன் மருவிய கோயில், வளரிளம் பொழில் சூழ் மாலிருஞ்சோலை" என்றும், "விண்டோய் சிகரத் திருவேங்கடம்" என்றும், "சீராருமாலிருஞ்சோலை" என்றும், "வேங்கடத்து மாயோன்" என்றும், "விரை திரை நீர் வேங்கடம்" என்றும், "மங்குல் தோய் சென்னி வட வேங்கடத்தான்" என்றும், "வெற்பென்றிருஞ்சோலை வேங்கடம்" என்றும் இத்யாதிகளிலே அருளிச்செய்வர்கள் என்றபடி.

விளக்கம் – (மாயனுக்கு) தைத்திரீயம் – யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ – அவனுடைய ஆனந்தத்தை அளவிட இயலாமல் வாக்கும் மனமும் திரும்பின – என்றும், ந மே விதுஸ் ஸுரகணா: - அவன் எங்குள்ளான் என்பதை நானும் தேவர்களும் அறியவில்லை – என்றும், ப்ரபவந் ந மஹர்ஷய: - அவன் எங்குள்ளான் என்பதை மஹரிஷிகளும் அறியவில்லை – என்றும், திருவாய்மொழி (1-9-6) – யவர்க்கும் சிந்தைக்கும் கோசரமல்லன் – என்றும் கூறுவதற்கு ஏற்ப சிந்தனைக்கும் எட்டாத இயல்பைக் கொண்டவனாகவும்; சாந்தோக்யம் (6-2-3) - தத் ஐக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேதி – "நான் பலவாவேன்" என்று ஸங்கல்பித்து, படைத்தது – என்றும்,

திருவாய்மொழி (1-5-4) – தான் ஒரு ஒருவே தனி வித்தாய் – என்றும் கூறுவதற்கு ஏற்ப அனைத்திற்கும் காரணமாக உள்ளவனாகவும், ஸ்வரூபம் ரூபம் குணங்கள் மற்றும் விபூதிகளால் வியக்க வைப்பவனாகவும் உள்ள ஸர்வேச்வரனுக்கு. (நல்லோர்) – கீதை (9-13) – மஹாத்மாநஸ்து மாம் பார்த்த தைவீம் ப்ரக்ருதிம் ஆச்ரிதா: பஜந்த்யநந்ய மநஸோ ஜ்ஞாத்வா பூதாதிமவ்யயம் – அர்ஜுனா! தெய்வீகமான தன்மையைக் கொண்டவர்கள் என்னையே அனைத்து உயிர்களுக்கும் எப்போதும் உள்ள நிலையான காரணம் என்றும், அழிவற்றவன் என்றும் அறிந்து, மற்ற எதிலும் நாட்டம் கொள்ளாத மனத்துடன் இடைவிடாமல் வழிபடுகிறார்கள் - என்பதற்கு ஏற்ப உயர்ந்த ப்ரஹ்மத்தை உள்ளது உள்ளபடி அறிந்தவர்களகிய மஹரிஷிகள். (என்பர்) – உரைப்பர். அதாவது, லைங்கபுராணம் – வைகுண்டேது பரேலோகே ஸ்ரீயாஸார்த்தம் ஜகத்பதி: ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதஸ்ஸஹ – ஸ்ரீவைகுண்டம் என்னும் உயர்ந்த இடத்தில் மஹாவிஷ்ணு, மஹாலக்ஷ்மியுடனும் தனது பக்தர்களுடனும் சேர்ந்து உள்ளான் – என்பது போன்று வாக்கியங்களால் வெளிப்படுத்துவார்கள் என்று கருத்து. (நல்லோர்) – அல்லது, "மயர்வறமதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள்" என்றும் கூறலாம். திருவாய்மொழி (1-1-1) – அயர்வறும் அமரர்கள் அதிபதி – என்றும், திருவாய்மொழி (10-7-8) – திருமால் வைகுந்தம் – என்றும், திருவாய்மொழி (6-10-3) – தெண்ணல் அருவி மணி பொன் முத்தலைக்கும் திருவேங்கடத்தான் – என்றும், திருவாய்மொழி (2-10-1) – வளரொளி மாயோன் மருவிய கோயில் வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ்சோலை – என்றும், திருவாய்மொழி (1-10-4) – விண்டோய்சிகரத் திருவேங்கடம் – என்றும், சிறியதிருமடல் – சீராரு மாலிருஞ்சோலை – என்றும், பெருமாள் திருமொழி (4-4) – மாயோன் வேங்கடத்து – என்றும், மூன்றாம் திருவந்தாதி (62) – விரை திரை நீர் வேங்கடம் – என்றும், நான்முகன் திருவந்தாதி (43) – மங்குல்தோய் சென்னி வடவேங்கடத்தான் – என்றும், இரண்டாம் திருவந்தாதி (54) – வெற்பென்றிஞ்சோலை வேங்கடம் - என்றும் உள்ள பல பாசுரங்கள் மூலம் அருளிச்செய்வர் என்று கருத்து.

வ்யாக்யானம் - (அவை தன்னொடும்) அந்த வைகுண்டம், வேங்கடம், மாலிருஞ்சோலை தொடக்கமான திவ்யதேசங்களோடேகூட. (வந்து) "அழகிய பாற்கடலோடும்" என்கிறபடியே அந்த திவ்யதேசங்களில் அவரைப் பெறுகைக்கும் ஜகத்ரக்ஷணம் பண்ணுகைக்கு முறுப்பாகையாலே அந்த க்ருதஜ்ஞதையாலும் தனக்கு ப்ராப்யரான

இவர்தம்முடைய ப்ரீதி விஷயங்களாகையாலும் அவற்றைப் பிரியமாட்டாதே, அத்திவ்யதேசங்களோடே கூடத் தானே வந்து. (மாயன்) "ஸுவயன்" என்னும்படி நிரதிசய போக்யனான ஸர்வேச்வரனுக்கு, "ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்" என்று அவன்றானே சொல்லும்படி தாரகமாயிருக்குமவர். அன்றிக்கே, "எந்நின்ற யோநியுமாய்ப் பிறந்தாய்" என்கிறபடியே ஸர்வேச்வரன் தானே வந்து உபகரித்து "படாதன பட்டு" உபதேசித்தாலும் திருந்தாத ப்ராக்ருத ஜகங்களையெல்லாம் அநாயாஸேந திருத்திப் பணி கொண்ட ஆச்சர்ய பூதர் என்னுதல். (இராமாநுசன்) இப்படிப்பட்ட எம்பெருமானாருடைய. (மனத்து) திருவுள்ளத்திலே வாஸஸ்த்தாநமாக எழுந்தருளியிருந்தார் என்றபடி. (இன்று) அடியேனை அந்தரங்கனாகக் கைக்கொண்ட இப்போது.

விளக்கம் – (அவை தன்னொடும்) - அந்த ஸ்ரீவைகுண்டம், திருவேங்கடம், திருமாலிருஞ்சோலை தொடக்கமாக உள்ள திவ்யதேசங்களுடன் சேர்ந்து. (வந்து) - பெரியாழ்வார் திருமொழி (5-2-10) – அழகிய பாற்கடலோடும் - என்பதற்கு ஏற்ப அந்தத் திவ்யதேசங்களில் எம்பெருமானாரை அடைவதற்காகவும், ஜகத்ரக்ஷணம் செய்வதற்கு ஏற்றபடி உள்ளதான க்ருபையாலும், தனக்கு அடையத்தக்கவராக உள்ள எம்பெருமானாருக்கு மிகவும் விருப்பமான விஷயங்களாக உள்ளதாலும், அவற்றை விட்டுப் பிரிய மனம் இன்றி, அந்தத் திவ்யதேசங்களுடன் சேர்ந்து தானே வந்து, (மாயன்) - திருவாய்மொழி (1-9-1) – ஸுவயன் - என்பதற்கு ஏற்ப எல்லையற்ற இனிமை கொண்ட ஸர்வேச்வரனுக்கு, கீதை (7-18) – ஜ்ஞாநீ து ஆத்ம ஏவ மே மதம் – அந்த ஞானி எனது ஆத்மாவாகவே உள்ளான் - என்று அவனே உரைப்பது போன்று அவனுக்கும் பிழைக்க வழியாக உள்ளவர். அல்லது திருவிருத்தம் (1) - எந்நின்ற யோநியுமாய்ப் பிறந்தாய் – என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் வந்து உபகாரம் செய்து, திருவாய்மொழி (7-5-2) – படாதன பட்டு – என்பதற்கு ஏற்ப உபதேசம் செய்தாலும் திருந்தாத இந்த உலகில் உள்ள மனிதர்கள் அனைவரையும் மிகவும் எளிதாகத் திருத்தி வியக்கவைப்பராகிய எம்பெருமானாருடைய. (மனத்து) - திருவுள்ளத்தில் தனக்கு இருப்பிடமாகக் கொண்டு எழுந்தருளியிருந்தார். (இன்று) - அடியேனைத் தனது அந்தரங்க சிஷ்யனாக ஏற்ற இன்று.

வ்யாக்யானம் - (என்றனிதயத்துள்ளே) தம்முடைய திருவுள்ளம்போலே பக்தி ரஸ ஸந்துக்ஷிதமாய், நிச்சலமாய், விஷய விரக்தமாயிருக்கை யன்றிக்கே, கஷ்கமாய்

சஞ்சலமாய் விஷய ஸங்கியான என்னுடைய ஹ்ருதயத்திலே. (தனக்கு இன்புறவே) அந்த எம்பெரு மானார் தமக்கு, "யமைவைஷ வ்ருணு தேந லப்ய:" என்னும்படியான நிரவதிக ப்ரீதியோடே எழுந்தருளியிருக்குமிடம். காமிநி உடம்பிலழுக்கை காமுகன் உகக்குமாப்போலே, என் பக்கல் வ்யாமோஹத்தாலே என் ஹ்ருதயத்தை விட்டு மற்றொன்றை விரும்பார் என்றபடி. "உச்சியுள்ளே நிற்கும்" என்னும்படி ஸர்வேச்வரன் ஆழ்வார் திருமுடிக்கவ்வருகு போக்கில்லையென்று அங்கே தானே நின்றாப்போலே எம்பெருமானாரும் இவர் திருவுள்ளத்துக்கவ்வருகே போக்கொன்றில்லை என்று திருவுள்ளமாய், அங்கே தானே ஸ்த்தாவர ப்ரதிஷ்ட்டையாக வெழுந்தருளியிருந்தார் காணும்.

விளக்கம் - (என் தன் இதயத்துள்ளே) - தனது திருவுள்ளம் போன்று பக்திரஸம் மேன்மேலும் பொங்கியபடியும், அசையாதபடியும், உலகவிஷயங்களில் விரக்தி கொண்டபடியும் இல்லாதபடி, களங்கம் கொண்டதும் சஞ்சலத்துடன் கூடியதும் உலகவிஷயங்களில் ஈடுபட்டபடி உள்ளதும் ஆகிய எனது இதயத்தில். (தனக்கு இன்புறவே) - அந்த எம்பெருமானாருக்கு. யம் ஏவ ஏஷ வ்ருணுதே தேந லப்ய: - அவன் யாரைத் தேர்ந்தெடுக்கிறானோ அவனாலேயே அடையப்படுகிறான் – என்பதற்கு ஏற்ப எல்லையற்ற மகிழ்வுடன் எழுந்தருளி இருக்கக்கூடிய இடம். தனது விருப்பமான பெண்ணின் உடல் வியர்வையைக்கூட விரும்பும் காதலன் போன்று, என்னிடம் உள்ள மயக்கம் காரணமாக எனது இதயத்தை விட்டு மற்ற எதனையும் விரும்பமாட்டார் என்று கருத்து. திருவாய்மொழி (1-9-11) – உச்சியுள்ளே நிற்கும் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரன் ஆழ்வார் திருமுடியை விட்டு அகல்வதற்கு வேறு இடம் இல்லை என்று நின்றது போன்று எம்பெருமானாரும் அமுதனாருடைய திருவுள்ளத்தை விட்டு அகல்வதற்கு வேறு இடம் இல்லை என்று நிற்பதாக இவர் எண்ணுகிறார்; அங்கு தாவரம் போன்று அசையாமல் இருந்தார் என்று இருக்கிறார்.

107. இன்புற்ற சீலத்து இராமானுச என்றும் எவ்விடத்தும்
என்புற்ற நோய் உடல் தோறும் பிறந்து இறந்து எண்ணரிய
துன்புற்று வீயினும் சொல்லுவது ஒன்றுண்டு உன் தொண்டர்கட்கே
அன்புற்று இருக்கும்படி என்னை ஆக்கி அங்கு ஆட்படுத்தே

விளக்கவுரை - எந்தன் இதயத்தில் வாசம் செய்வதையே பெரும் பேறு என்று எண்ணி எப்போதும் இருந்து வரும் எம்பெருமானாரே! மிகவும் உயர்ந்த குணங்கள் கொண்டவரே! உம்மிடம் நான் செய்யும் விண்ணப்பம் ஒன்று உள்ளது. இந்த உடல் கொண்ட காரணத்தால், பலவிதமான பிறவிகள் எடுத்து, பிறப்பதும் இறப்பதுமாக அடியேன் உள்ளேன். இதன் காரணமாகப் பலவிதமான துன்பங்களை அனுபவித்தும் வருகிறேன். இந்த துன்பங்கள் இருப்பினும், எப்போதும் எங்கும் உமது திருவடிகளில் மாறாத அன்பு கொண்ட உமது அடியார்களின் தொண்டனாக, அவர்களின் திருவடிகளுக்குக் கைங்கர்யம் செய்து வரும்படி என்னை நீவிர் செய்ய வேண்டும்.

அவதாரிகை – கீழ்ப்பாட்டிலே, எம்பெருமானார் தம்முடைய திருவுள்ளத்திலே புகுந்து நிரதிசய ப்ரீதியோடேகூட நித்யவாஸம் பண்ணா நின்னார் என்று தம்மளவிலே அவர் பண்ணின விஷயீகாரத்தை அநுஸந்தித்து, இதிலே அப்படிப்பட்ட வ்யாமோஹத்தையும் நிரவதிக ஸௌசீல்யத்தையும் உடையவரே என்று அவரை ஸம்போதித்து, அஸ்திகதமாய் நின்று நலியக் கடவ வ்யாதிகளுக்கு பாஜநமான சரீரங்கள் தோறும் ஜநிப்பது மரிப்பதாய்க் கொண்டு அஸங்க்யேயமான துக்கங்களை அநுபவித்து உருமாய்ந்து முடியிலும், ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் தேவரீர்க்கு அநந்யார்ஹராயிருக்குமவர்கள் பக்கலிலே அதிவ்யாமுக்தனாய், அவர்களுக்கு க்ரய விக்ரயார்ஹனாய்க் கொண்டு அடிமைப்படும்படியாக அடியேனைப் பண்ணியருள வேணுமென்று தம்முடைய அபேக்ஷிதத்தை விண்ணப்பம் செய்கிறார்.

விளக்கம் - கடந்த பாசுரத்தில் எம்பெருமானார் அமுதனாராகிய தனது திருவுள்ளத்தில் புகுந்து எல்லையற்ற ப்ரீதியுடன் எப்போதும் வாசம் செய்தபடி உள்ளார் என்று தனது விஷயத்தில் எம்பெருமானார் காண்பித்த பெரிய கருணையை எண்ணியபடி இருந்தார். இந்தப் பாசுரத்தில், “அப்படிப்பட்ட மயக்கத்தையும், எல்லையற்ற ஸௌசீல்யத்தையும் கொண்டவரே!”, என்று அவரை அழைத்து, “எலும்புவரை ஊடுருவி நின்று துன்புறுத்தக் கூடிய நோய்களுக்கு இருப்பிடமாக உள்ள பல சரீரங்களில் பிறத்தல் மற்றும் இறத்தல் என்பதன் மூலம் எண்ணற்ற துக்கங்களை அனுபவித்து உருவத்தை இழந்து மடிந்தாலும், “அனைத்து இடங்கள், அனைத்து காலங்கள், அனைத்து நிலைகள்” ஆகியவற்றில் உமக்கு மட்டுமே வசப்பட்டு நிற்பவர்களிடம் நான் அதிகமான ப்ரியம் கொண்டவனாக இருந்து,

அவர்களுக்கு மட்டுமே அடிமைப்பட்டவனாக இருக்கும்படி அடியேனைச் செய்தருள வேண்டும்", என்று தான் விண்ணப்பம் செய்வதை அருளிச்செய்கிறார்.

வ்யாக்யானம் - (இன்புற்றசீலத்திராமாநுசா) திருவேங்கடமுடையானுக்கும், திருக்குறுங்குடி நம்பிக்கும் திருவிலச்சினையையும் ஸ்ரீபாஷ்யத்தையும் ப்ரஸாதித்த ஆசார்யராயும், செல்வப்பிள்ளைக்கு பிதாவாயுமிருக்கிற தேவரீருடைய மதிப்பையும் அத்யந்த பாபிஷ்ட்டனான என்னுடைய தண்மையையும் பாராதே, என்னை தேவரீர்க்கு அவ்வருகாகவெண்ணி என்னுடைய ஹ்ருதயத்திலே வந்து புகுந்து அது தன்னையே பெறாப் பேறாக நினைத்து ஆநந்த நிர்ப்பரரா யெழுந்தருளியிருக்கிற ஸௌசீல்யத்தையுடையரான எம்பெருமானாரே. இன்பு - ஸுகம். சீலமாவது - பெரியவன் தண்ணியரோடே புரையாறப் பரிமாறும் ஸ்வபாவம். இப்போதாகக் காணும் இவருடைய சீலம் அமுதனார்க்கு வெளியாகத் தொடங்கிற்று. (சொல்லுவது ஒன்றுண்டு) ஸர்வஜ்ஞரான தேவரீர்க்கு விண்ணப்பம் செய்யவேண்டுவது ஒன்றுண்டு. "ந த்வேவாஹம்" என்று தொடங்கி, கர்ம ஜ்ஞாந பக்திகளைப் பரக்க உபதேசித்துக் கொண்டு போந்து, "ஸர்வ குஹ்ய தமம் பூய: ச்ருணு மே பரமம் வச:" என்று உபதேசிக்கும்போது கீதாசார்யன் அருளிச்செய்தாப்போலே, இவரும் "இராமாநுசா இது என் விண்ணப்பம்" என்கிறபடியே இவ்வளவும் தம்முடைய அபிநிவேசமெல்லாம் விண்ணப்பம் செய்து, இப்பாட்டிலே தம்முடைய அபேக்ஷிதத்தை நிஷ்கர்ஷித்து அருளிச்செய்கிறார். அங்கு சேஷியுடைய உக்தி; இங்கு சேஷபூதனுடைய அபேக்ஷிதம்.

விளக்கம் - (இன்புற்ற சீலத்து இராமாநுசா) - திருவேங்கடமுடையானுக்கும், திருக்குறுங்குடிநம்பிக்கும் முறையே சங்குசக்கரம் மற்றும் ஸ்ரீபாஷ்யம் ஆகியவற்றை அளித்தருளிய ஆசார்யராகவும், செல்லப்பிள்ளைக்குத் தந்தையாகவும் உள்ள உம்முடைய மதிப்பையும், எல்லையற்ற பாபங்கள் நிறைந்தவனாகிய எனது தாழ்வையும் சற்றும் ஆராயாமல், என்னைத் தேவரீருக்கு ஏற்றவனாக எண்ணி, எனது இதயத்தில் வந்து புகுந்து, அதனைக் கிடைத்தற்கு அரிய பேறாக எண்ணி, அங்கு ஆநந்தத்துடன் எழுந்தருளியுள்ள ஸௌசீல்யம் நிறைந்த எம்பெருமானாரே! சீலம் என்றால் உயர்ந்த குணங்கள் கொண்ட ஒருவன், தாழ்ந்த தன்மை கொண்டவர்களுடன் வேறுபாடு இன்றி பழகும் இயல்பு. இப்போதுதான் எம்பெருமானாருடைய சீலம் திருவரங்கத்தமுதனாருக்குப் புலப்படத் தொடங்கியது. (சொல்லுவது ஒன்றுண்டு) - அனைத்தும் அறிந்தவராகிய

உம்மிடம் செய்ய வேண்டிய விண்ணப்பம் ஒன்று உள்ளது. கீதை (2-12) – ந த்வேவாஹம் – நான் இல்லை என்பது இல்லை – என்பது தொடங்கி, கர்ம ஞான பக்தி ஆகியவற்றைக் குறித்து விரிவாக உபதேசித்து, இறுதியாக ஸர்வ குஹ்ய தமம் பூய: ச்ருணு மே பரமம் வச: - மிகவும் உயர்ந்த இரகசியமான இதனை என்னுடைய உயர்ந்த வாக்கினால் கேட்பாயாக - என்று கீதாசார்யன் அருளிச்செய்தான்; அதே போன்று இவரும் "இராமாநுசா இது என் விண்ணப்பம்" என்பதற்கு ஏற்ப, இதுவரை தனது விருப்பங்கள் அனைத்தையும் விண்ணப்பித்து, இந்தப் பாசுரத்தில் தனது விருப்பத்தை உறுதி செய்து அருளிச்செய்கிறார். கீதையில் எஜமானனுடைய வாக்குகள் உள்ளன, இங்கு அடிமையின் விருப்பங்கள் உள்ளன.

வ்யாக்யானம் – "ஒரு ப்ரயோஜநமுண்டு என்றீர், அது என்ன" என்ன; (என்புற்று நோயுடல்தோறும் பிறந்திறந்து எண்ணரிய துன்புற்று) நோய் - வ்யாதி. அதாகிறது ஆத்யாத்மிகாதி துக்கங்கள். அந்த நோயானது, அந்தர்ப்பஹிரிந்த்ரிய வ்யாபார ரூப ஸ்வக்ருத கர்ம பலமாகையாலே தோற்புரையே போமதன்றிக்கே அஸ்திகதமாய்க் கொண்டிருக்கையாலும், ஆத்ம நாசகமாகையாலும் "என்புற்ற" என்று விசேஷிக்கிறார். என்பு - எலும்பு. உறுகை – அத்தைப் பற்றி நிற்கை. (உடல் தோறும்) அப்படி அஸ்தி கதங்களாய்க் கொண்டு நலியக் கடவ வ்யாதிகளுக்கு பாஜநமான சரீரந்தோறும். "துர்வார துரித மூலம் துஸ்தார துக்காநாம் பந்த நீராந்த்ரம் வபு:" என்னக்கடவதிறே. அன்றிக்கே, "நோயெலாம் பெய்ததோராக்கை" என்கிறபடியே, அந்த வ்யாதி தானே உருவு கொண்டிருக்கிற தேவ திர்யங் மநுஷ்ய ஸ்தாவர ரூபமான சரீரங்களென்னுதல்; ஜந்ம பரம்பரைகள்தோறும் என்றபடி. "பிறந்து இறந்து" என்ற இது மற்ற அவஸ்த்தாந்தரங்களுக்கும் உபலக்ஷணம். இறப்பு - நாசம். (பிறந்து இறந்து எண்ணரிய துன்புற்று வீயினும்) - அவ்வவ சரீரங்களிலே ஜநிப்பது, மரிப்பது தொடக்கமான அவஸ்த்தா ஸப்தகத்திலும் விரலை மடக்கி ஒன்று இரண்டு மூன்று என்று எண்ணப்புக்கால் அது காலதத்வம் உள்ளதனையு மெண்ணினாலும் எண்ணித் தலைக்கட்ட வரிதான துக்கங்களை, ஒன்றும் பிரிகதிர்படாதபடி அநுபவித்து முடியிலும், "போற்றருஞ்சீலத்திராமாநுசா" என்கிறபடியே தேவரீருடைய சீல குணத்தை அளவிட்டுச் சொல்லிலும் இச்சரீராநுபந்தியான துக்கத்தை அளவிட்டுச் சொல்ல வொண்ணா தென்கிறார் காணும். துன்பு - துக்கம். (என்றும்) எல்லாக் காலத்திலும். (எவ்விடத்தும்) எல்லாவிடத்திலும். (உன் தொண்டர்கட்கே) பந்தமோக்ஷங்களிரண்டுக்கும்

பொதுவாயிராதே மோக்ஷ ப்ரதாநதீக்ஷிதராயன்றோ இவ்வளவாகத் திருத்தி என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்து நித்யவாஸம் பண்ணா நிற்கிற தேவரீர்க்கு அநந்யார்ஹ சேஷமாயிருக்குமவர்களுக்கே. அவதாரணத்தாலே அந்யயோக வ்யவச்சேதம் பண்ணுகிறார். "உனக்கே நாம் ஆட்சி செய்வோம்", "தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே", "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" என்றும், "தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே" என்றும் ப்ரதம பர்வத்தி லே சொல்லுகிறபடியே, "குருரேவ பரம்ப்ரஹ்ம", "உபாயோபேய பாவேந தமேவ சரணம் வ்ரஜேத்" என்றும், "தேவுமற்றறியேன்" என்றும், "தீதில் சரணாகதி தந்த தன்னிறைவன்றாளே அரணாக மன்னுமது" என்றும் சரம பர்வத்திலேயும் சொல்லுகிறபடியே சொல்லுவித்தாரிறே. (அன்புற்றிருக்கும்படி) நிரவதிக ப்ரேம யுக்தனாயிருக்கும்படி. அன்பு - ஸ்நேஹம். (என்னை ஆக்கி) தேவரீர்க்கு க்ருபா விஷய பூதனாம்படி என்னைப் பண்ணி. (அங்கு ஆள்படுத்தே) பவதீயர் திருவடிகள் விஷயமான எல்லா அடிமைகளிலும் அந்வயித்து க்ருதார்த்தனாம்படி பண்ணியருள வேணுமென்கிறார். "ஐயார் கண்டமடைக்கிலும் செல் நின் கழலெய்யாதேத்த வருள் செய்யெனக்கே" என்று ஆழ்வாரும் இப்படியே அருளிச்செய்தாரிறே.

விளக்கம் - (என்புற்ற) நோய் என்றால் வ்யாதி; அதாவது ஆத்யாத்மிகம் போன்ற துயரங்கள். அத்தகைய நோயானது இந்த்ரியங்களின் செயல்கள் மூலம் ஏற்பட்டதான தங்களுடைய கர்ம பலன்கள் என்பதால், தோல் அளவில் பாதிப்பை ஏற்படுத்திச் செல்வது அல்லாமல், எலும்பு முடிய புகுந்து நிற்கிறது. மேலும் அது ஆத்மாவின் ஸ்வரூபத்தையும் அழிக்கிறது. "என்பு" என்றால் எலும்பு; உறுகை என்றால் அதனைப் பற்றி நிற்றல். (உடல்தோறும்) - அவ்விதம் எலும்பு முடிய புகுந்து துன்புறுத்தக் கடவதான நோய்களுக்கு இருப்பிடமாக உள்ள ஒவ்வொரு பிறவியில் எடுக்கும் சரீரத்திலும். துர்வார துரித மூலம் துஸ்தார துக்காநாம் பந்த நீராந்த்ரம் வபு: - துக்கத்தின் மூலத்தை விலக்க இயலாது; துக்கத்தின் இருப்பிடமாக உள்ள இந்தச் சரீர ஸம்பந்தத்தை விட இயலாது – என்பது காண்க. அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். பெரிய திருமொழி (9-7-7) – நோயெலாம் பெய்ததோராக்கை – என்பதற்கு ஏற்ப அந்த வ்யாதியே ஒரு உருவம் கொண்டது போன்றுள்ளதான தேவ, மனித, விலங்கு மற்றும் தாவர சரீரங்கள் எனலாம். அதாவது ஒவ்வொரு பிறவியிலும் என்று கருத்து. "பிறந்து இறந்து" என்பது அனைத்து நிலை மாறுதல்களையும் கூறுவதாகும். (பிறந்து இறந்து எண்ணரிய துன்புற்று வீயினும்) - அந்தந்த சரீரங்களில் பிறப்பது மற்றும் இறப்பது என்பது தொடக்கமாக உள்ள

நிலைமாறுதல்களை விரலை மடக்கி “ஒன்று, இரண்டு, மூன்று” என்று எண்ணினாலும், இது போன்று காலம் என்பது உள்ளவரை எண்ணினாலும், எண்ணி முடிக்க இயலாதபடி உள்ளதான துக்கங்களை, ஒன்றும் விடாதபடி அனுபவித்து முடித்தாலும். இராமாநுச நூற்றந்தாதி (89) – போற்றரும் சீலத்து இராமாநுசா - என்பதற்கு ஏற்ப உம்முடைய சீல குணத்தை அளவிட்டுக் கூற முடிந்தாலும், இந்தச் சரீரத்தைத் தொடந்து வருவதான துக்கங்களை அளவிட இயலாது என்கிறார். “துன்பு” என்றால் துக்கம். (என்றும்) - அனைத்து காலங்களிலும். (எவ்விடத்தும்) - அனைத்து இடங்களிலும். (உன் தொண்டர்கட்கே) - பந்தம் மற்றும் மோக்ஷம் ஆகிய இரண்டிற்கும் ஸர்வேச்வரன் பொதுவாக உள்ளது போன்று இல்லாமல், “மோக்ஷம் மட்டும் அளிப்பார்” என்பதாக உள்ளவர் அல்லவோ? இப்படிப்பட்ட நீவிர் எனது இதயத்தில் புகுந்து எப்போது வாசம் செய்தபடி உள்ளீர். இப்படியாக உள்ள உமக்கு மட்டுமே வசப்பட்டு, உமக்கு மட்டுமே அடியார்களாக உள்ளவர்களுக்கு மட்டுமே. இங்குள்ள “தொண்டர்கட்கே” என்பதில் உள்ள “மட்டுமே” என்பதன் மூலம் மற்றவர்களுக்கு அடிமையாக உள்ளதைத் தள்ளுகிறார். திருப்பாவை (29) – உனக்கே நாம் ஆட்செய்வோம் – என்றும், திருவாய்மொழி (2-9-4) – தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே – என்றும், திருவாய்மொழி (5-7-10) – ஆறெனக்கு நின் பாதமே சரணாகததந்தொழிந்தாய் – என்றும், தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே – முதல் புருஷனிடமே சரணம் புகவேண்டும் – என்றும் முதல் நிலையான ஸர்வேச்வரன் விஷயத்தில் கூறுவது போன்று, குருரேவ பரம் ப்ரஹ்ம – குருவே பரப்ரஹ்மம் – என்றும், உபாய உபேய பாவேந தமேவ சரணம் வ்ரஜேத் – உபாயமாகவும் உபேயமாகவும் உள்ள குருவிடமே சரணம் புகவேண்டும் – என்றும், கண்ணிநுண்சிறுத்தாம்பு (2) – தேவு மற்றறியேன் – என்றும், ஞானஸாரம் (31) – தீது இல் சரணாகதி தந்த தன்னிறைவன் தாளே அரணாக மன்னும் அது – என்றும் கூறுவதற்கு எற்ப இறுதி நிலையான பாகவதர்கள் விஷயத்திலும் கூறுவதாக உரைக்கிறார். (அன்புற்று இருக்கும்படி) – எல்லையற்ற ப்ரேமையுடன் இருக்கும்படியாக. (என்னை ஆக்கி) - உம்முடைய கருணைக்கு நான் இலக்காகும்படி என்னைச் செய்து. (அங்கு ஆள்படுத்தே) - உம்முடைய அடியார்களுக்கு ஏற்ற அனைத்து தொண்டுகளையும் நான் செய்து, “செய்யவேண்டிய அனைத்தையும் செய்தவன்” என்ற நிலைக்கு என்னை மாற்றவேண்டும். திருவாய்மொழி (2-9-3) – ஐயார் கண்டம் அடைக்கிலும் நின் கழல் எய்யாது ஏத்த அருள் செய் எனக்கே – என்று ஆழ்வாரும் இது போன்றே அருளிச்செய்தார் அல்லவோ?

108. அங்கயல்பாய் வயல் தென் அரங்கன் அணி ஆகமன்னும்
பங்கய மாமலர் பாவையைப் போற்றுதும் பத்தியெல்லாம்
தங்கியது தென்னத் தழைத்து நெஞ்சே நம் தலைமிசையே
பொங்கிய கீர்த்தி இராமாநுசன் அடிப் பூமன்னவே

விளக்கவுரை - எனது நெஞ்சே! உயர்ந்த பக்தி என்பது எப்போதும் எனது மனதில் நீங்காமல் இருந்து வரவேண்டும். எங்கும் பரந்த புகழ் கொண்டவராகிய எம்பெருமானாரின் தாமரை மலர் போன்ற அழகான திருவடிகள் எப்போதும் எனது தலை மீது நித்யமாக வாசம் செய்தபடி இருக்க வேண்டும். இதனை நிறைவேற்றும்படியாக நாம் இவ்விதம் வேண்டுவோம் – அழகான மீன்கள் திரியும் வயல்கள் சூழ்ந்த திருவரங்கத்தில் கண்வளரும் அழகியமணவாளனின், பரந்த அழகான திருமார்பில், "அகலகில்லேன் இரையும்" என்று பெரியபிராட்டியான ஸ்ரீரங்கநாச்சியார் நித்யவாஸம் செய்தபடி உள்ளாள். தாமரை மலரைத் தனது பிறப்பிடமாகக் கொண்ட அந்த ஸ்ரீரங்கநாச்சியார் நமது எண்ணங்களை (மேலே கூறியவை) நிறைவேற்றி வைக்கவேண்டும் என்று அவளை அண்டி நிற்போம்.

அவதாரிகை – நிகமத்தில், கீழ் இரண்டு பாட்டாலும் எம்பெருமானார் தம்மை நிர்ஹேதுகமாக அபிமாநித்துத் தம்முடைய திருவுள்ளத்திலேயே எழுந்தருளியிருந்து நித்யவாஸம் பண்ணுகிறபடியையும், அநந்தரம் தமக்குத் ததீய பர்யந்தமாக ப்ரேமம் பிறந்து அவர்கள் விஷயத்திலே அசேசேஷ வர்த்திகளும் பண்ணிக்கொண்டு போரும்படி என்னைக் கடாக்ஷித்தருள வேணுமென்று தம்முடைய அபிமதத்தை அருளிச்செய்து, இப்பாட்டிலே எம்பெருமானார் தம்முடைய திருவடிகளாகிற செவ்விப்பூவை நம்முடைய தலை மேலே கலம்பகன் மாலை அலங்கரிப்பாரைப்போலே அலங்கரித்து ஸ்த்தாவர ப்ரதிஷ்ட்டையாக நிறுத்தியருளினாராகையாலே அந்த பரிக்ரஹாதிசயத்தைக் கொண்டு திவ்யதம்பதிகளான ஸ்ரீ, ஸ்ரீய:பதிகளை மங்களாசாஸநம் பண்ணுவோமென்று பக்தி தத்வமெல்லாம் தன்னளவிலே குடிகொண்டது என்னும்படி அத்யபி வர்த்தமான தம்முடைய திருவுள்ளத்தோடே கூடி, பலத்தைச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

விளக்கம் – கடந்த இரண்டு பாசுரங்கள் மூலம் எம்பெருமானார், அமுதனாராகிய தன்னை எந்தவிதமான காரணமும் இன்றி ஏற்றுக்கொண்டு, தன்னுடைய திருவுள்ளத்திலே எப்போதும் எழுந்தருளியிருந்தார் என்றும்; அதனைத் தொடர்ந்து தனக்கு அவருடைய அடியார்கள் முடிய உள்ளவர்கள் குறித்து ப்ரேமை ஏற்பட்டு, அவர்கள் விஷயத்தில் அனைத்துவிதமான கைங்கர்யங்களையும் செய்தருளவேண்டும் என்று தனது விருப்பத்தை அருளிச்செய்தார். இந்தப் பாசுரத்தில், "எம்பெருமானார் தன்னுடைய திருவடிகள் என்பதான அழகான மலர்களை நம்முடைய தலைக்கு மேல் கலம்பகமாலை கொண்டு அலங்கரிப்பது போன்று அலங்காரம் செய்து, அந்தத் திருவடிகளைத் தாவரம் போன்று அசையாமல் அங்கேயே நிற்கும்படிச் செய்தருளினார். அதன் காரணமாக, திருவரங்கத் திவ்யதம்பதிளான மஹாலக்ஷ்மி மற்றும் அவளுடைய நாயகன் ஆகிய இருவரையும் நாம் மங்களாசாஸனம் செய்வோம் என்பதான பக்தி தத்வமானது என்னில் குடிகொண்டது", என்று தனது திருவுள்ளத்தில் மேன்மேலும் வளர்ந்தபடி உள்ள பக்தியை உரைத்து இந்த ப்ரபந்தத்தை நிறைவு செய்கிறார்.

வ்யாக்யானம் - (நெஞ்சே) இப்ரபந்தாதியிலே தமக்கு உசாத்துணையாகத் தம்முடைய மநஸ்ஸைக் கூட்டிக் கொண்டு "எம்பெருமானாருடைய திருநாமத்தைச் சொல்லுவோம் வா" என்று உத்யோகித்தபடியே செய்து அத்தாலே தமக்கு பலித்த அம்சத்தை, இருவர் கூடி ஒரு கார்யத்தைப் பண்ண ஒருப்பட்டு அது தலைக்கட்டினவாறே அவர்களிலே ஒருவன் தனக்குத் தோழனான இரண்டாவனோடு அச்செய்தியைச் சொல்லுமாப்போலே இவரும் தமக்கு ஸகாவான தம் திருவுள்ளத்தை ஸம்போதித்துச் சொல்லுகிறார். அடியிலே நெஞ்சு என்னும் தம் திருஉள்ளத்தைக் கூட்டிக் கொண்டு உபக்ரமித்தாராகையாலே இங்கே நெஞ்சே என்று தம் திருவுள்ளத்தோடே கூடி அநுபவித்துத் தலைக்கட்டுகிறார். (பத்தி எல்லாம் தங்கியதென்னத் தழைத்து நெஞ்சே) பக்தி சப்த வாச்யமெல்லாம் ஏகரூபமாய்க் கொண்டு உன்னளவிலே, சேர்ந்து குடிகொண்டிருந்தது என்னும்படி ஸம்ருத்தமாயிருக்கிற நெஞ்சே. "போந்ததென் நெஞ்சென்னும் பொன்வண்டு, உனதடிப்போதில் ஒண்சீராந் தெளி தேனுண்டமர்ந்திட வேண்டி நின்பால்" என்று இவர் தாமே தம்முடைய திருவுள்ளம் பக்தபரிதம் என்னுமிடத்தைக் கீழே அருளிச்செய்தாரிறே. அன்றிக்கே, "பத்தி எல்லாம் தங்கியதென்னத் தழைத்து" என்றவித்தை எம்பெருமானார் திருவடிகளுக்கு விசேஷணமாக்கவுமாம். (பத்தி எல்லாம் தங்கியதென்னத்தழைத்து) ஸஹ்யத்தில் ஜலம் எல்லாம் கீழே குதித்து ஒரு மடுவாகத் தங்கினாப்போலே, என்னுடைய பக்தி ரஸமெல்லாம் பரமபக்தி ரூபமாய்க் கொண்டு பரிபக்வமாய்ப் படிந்து

எம்பெருமானார் திருவடிகளிலே தங்கிற்று என்னும்படி தழைத்திருக்கிற. (பொங்கிய கீர்த்தி) "ஏய்ந்த பெருங்கீர்த்தி" என்கிறபடியே பரமபதத்தளவும் வளர்ந்து கொண்டு ஓங்கியிருக்கிற கீர்த்தியையுடையரான. (இராமாநுசன்) எம்பெருமானாருடைய. உபக்ரமத்திலே "பல்கலையோர் தாம் மன்ன வந்த இராமாநுசன்" என்றாராகையாலே, இங்கு "பொங்கிய கீர்த்தி இராமாநுசன்" என்கிறார். (அடிப்பூ) கீழ்ச் சொன்ன தழைப்பதோடே கூடியிருக்கிற எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகள். அடியிலே, "சரணாரவிந்தம்" என்றாராகையாலே, இங்கே "அடிப்பூ" என்கிறார். (மன்னவே) யாவதாத்மபாவி ஸுப்ரதிஷ்டிதமாயிருக்கையாலே.

விளக்கம் - (நெஞ்சே) – இந்தப் ப்ரபந்தத்தின் தொடக்கத்தில், தனக்கு வழித்துணையாக தனது மனதைத் தன்னுடன் சேர்த்துக்கெண்டு, "எம்பெருமானாருடைய திருநாமத்தை எப்போதும் உரைப்போம் வருவாயாக", என்றார். அவ்விதமே செய்யும்போது, அதன் மூலம் தனக்கு ஏற்பட்ட பலனை, இருவர் சேர்ந்து நின்று ஒரு செயலைச் செய்தபோது அது நிறைவேறிய பின்னர் அவர்களில் ஒருவன் தன்னுடைய நண்பனாகிய இரண்டாமவனுக்கு உரைப்பது போன்று, இவரும் தன்னுடைய நண்பனாகிய தன் திருவுள்ளத்தை அழைத்து உரைக்கிறார். முதல் பாசுரத்தில் "நெஞ்சே" என்று தனது திருவுள்ளத்தை அழைத்து தொடங்கிய காரணத்தால் இங்கும் "நெஞ்சே" என்று தனது திருவுள்ளத்துடன் சேர்ந்து நின்று அனுபவித்து முடிக்கிறார். (பத்தி எல்லாம் தங்கியது என்னத் தழைத்து நெஞ்சே) – பக்தியைக் குறிக்கின்ற அனைத்து சொற்களும் ஒரே சொல்லாக நின்றது போன்று சேர்ந்து கொண்டு, உன்னிடம் வந்து நிலைத்தது என்னும்படியாக வளர்ந்தபடி உள்ள நெஞ்சமே. இராமாநுச நூற்றந்தாதி (100) – போந்தது என் நெஞ்சென்னும் பொன்வண்டு உனதடிப்போதில் ஒண்சீராந்தெளிதேன் உண்டு அமர்ந்திட வேண்டி நின்பால் - என்று இவர் தன்னுடைய நெஞ்சத்தைக் குறித்து உரைத்தார் அல்லவோ? அல்லது, "பத்தி எல்லாம் தங்கியது என்னத் தழைத்து" என்பதை எம்பெருமானாருடைய திருவடிகளுக்கு அடையாளமாகக் கூறுவதாகவும் கொள்ளலாம். (பத்தி எல்லாம் தங்கியது என்னத் தழைத்து நெஞ்சே) - மலைமுகட்டிலிருந்து நீர் முழுவதும் கீழே குதித்து ஒரு மடுவாகத் தங்குவது போன்று, எனது பக்தி ரசம் முழுவதும் பரமபக்தி வடிவம் எடுத்து, சரியாகப் படிந்து, எம்பெருமானாருடைய திருவடிகளில் சென்று தங்கியது என்று கூறும்படியாக தழைத்து நிற்கின்ற. (பொங்கிய கீர்த்தி) "ஏய்ந்த பெருங்கீர்த்தி" என்பதற்கு ஏற்ப பரமபதம்

முடிய ஓங்கி நிற்கும் கீர்த்தி கொண்டவராகிய. (இராமாநுசன்) – எம்பெருமானாருடைய. இந்த ப்ரபந்தத்தின் தொடக்கத்தில், "பல்கலையோர் தாம் மன்ன வந்த இராமாநுசன் என்று கூறியதால், இங்கு "பொங்கிய கீர்த்தி இராமாநுசன்" என்கிறார். (அடிப்பூ) - மேலே கூறியதான தழைப்பத்துடன் கூடியுள்ள எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகள். முதல் பாசுரத்தில் "சரணாரவிந்தம்" என்றதால் இங்கு "அடிப்பூ" என்று உரைக்கிறார். (மன்னவே) - இந்தச் சரீரம் உள்ளவரை நிலையாக நிற்பதால்.

வ்யாக்யானம் - (அங்கயல்பாய் வயல் தென்னரங்கனணியாக மன்னும்) "செங்கயல்பாய் நீர்த் திருவரங்கத்தாய்" என்கிறபடியே உபயகாவேரிகளினுடையவும் ஜல ஸம்ருத்தியாலே வளர்ந்த மத்ஸ்யங்களாகையாலே அழகு மிக்கிருக்குமிறே; அப்படிப்பட்ட மத்ஸ்யங்கள் உகளா நின்றுள்ள கேதாரங்களாலே சூழப்பட்டு அத்யந்த தர்சநீயமான அரங்கத்துக்கு நிர்வாஹகனாய் அத்தையே நிரூபகமாகவுடையரான பெரியபெருமாளையும்; அவர் தம்முடைய அழகிய திருமார்பிலே அலங்கார பூதையாய் "இறையுமகலகில்லேன்" என்றும், "அப்ரமேயம் ஹி தத் தேஜோயஸ்யஸா ஜநகாத்மஜா" என்கிறபடியே ப்ரபையும் ப்ரபாவானையும் போலே, அப்ருதக் ஸித்தையாய் ஸ்வரூப நிரூபகையாய்க் கொண்டு நித்யவாஸம் பண்ணுமவளாய். உபக்ரமத்திலே "பொருந்திய மார்பன்" என்றாராகையாலே, இங்கே "மன்னும்" என்கிறார். அம் - அழகு. கயல் - மத்ஸ்யம். பாய்தல் - சலித்தல். வயல் - கழனி. அணி - அலங்காரம். ஆகம் - மார்பு. மன்னுதல், - பொருந்துதல். (பங்கயமாமலர்ப் பாவையை) தாமரைமலரிலே பெரியபிராட்டியார் அவதரிக்கையாலே, அத்தைக் கடாக்ஷித்து அதற்கு ஒரு மஹத்வத்தைச் சொல்லுகிறார். அப்படிப்பட்ட தாமரைப்பூவைப் பிறப்பிடமாகவும் நிரூபகமாகவுமுடையளாய், பால்ய யௌவந மத்யஸ்த்தையான ஸ்ரீரங்கநாயகியாரையும். "அலர்மேல்மங்கை" என்னக் கடவதிறே. பாவை - ஸ்த்ரீ. அடியிலே, "பூமன்னு மாது" என்றாராகையாலே, இங்கு "பங்கய மாமலர் பாவை" என்கிறார். (போற்றுதும்) இப்படியிருந்துள்ள திவ்யதம்பதிகளை மங்களாசாஸநம் பண்ணுவோம். போற்றுதல் - புகழ்தல். ஆசார்யன் சிஷ்யனைத் திருத்துவது "சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டு" என்கிறபடியே பகவத்விஷயத்திலே யாவதாத்மபாவியாக மங்களாசாஸநம் பண்ணிக் கொண்டு போருகைக்கேயிறே. "உகந்தருளின நிலங்களில் ஆதராதிசயமும் மங்களாசாஸநமும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக் கொண்டு போரக்கடவன்" என்று

ஸ்ரீவசநபூஷணத்திலே பிள்ளையும் அருளிச்செய்தாரிறே. ஆக இத்தாலே எம்பெருமானார் தம்முடைய நிர்ஹேதுக பரமக்ருபையாலே பரகத ஸ்வீகாரபாத்ரனான பின்பு, அதற்கு பலமாக இப்படி மங்களாசாஸந பரராயிருந்தோமென்று தாம் பெற்ற பேற்றை, தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்து இப்ரபந்தத்தைத் தலைக்கட்டியருளினாராய்த்து.

விளக்கம் - (அங்கயல்பாய் வயல் தென்னரங்கன் அணியாக மன்னும்) - திருவாய்மொழி (7-2-1) – செங்கயல்பாய் நீர்த் திருவரங்கத்தாய் - என்பதற்கு ஏற்ப வடகாவிரி மற்றும் தென்காவிரி என்னும் இரண்டு காவிரிகளுடைய நீரின் அதிகரிப்பு காரணமாக வளர்ந்த மீன்கள் என்பதல் அழகு மிகுதியாக இருக்கும் அல்லவோ? அழகின் எல்லையாகவே உள்ள திருவரங்கத்தின் எஜமானனாய், திருவரங்கத்தைக் கொண்டே தன்னை அடையாளம் காண்பிக்கும்படி உள்ளவளாய் இருக்கின்ற பெரியபெருமாளையும்; அவனுடைய திருமார்பை அலங்கரிப்பவளாகவும், திருவாய்மொழி (6-10-10) – அகலகில்லேன் இறையும் – என்றும், இராமாயணம் – அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா – மாரீசன் இராவணனிடம், “இராமன் மற்றும் ஜனகனின் புத்ரியாகிய சீதை ஆகிய இருவருடைய தேஜஸ்ஸை அளவிட இயலாது”, என்றான் - என்றும் கூறுவதற்கு ஏற்ப எப்போதும் அவனுடன் வசிப்பவளாக உள்ளவளையும். முதல் பாசுரத்தில் “பொருந்திய மார்பன்” என்றதால் இங்கு “மன்னும்” என்கிறார். (பங்கய மாமலர்ப் பாவையை) - பெரியபிராட்டியார் தாமரைமலரில் அவதரித்தவள் என்பதால் அதனைக் கருத்தில் கொண்டு, அந்தத் தாமரைமலருக்கு ஒரு மேன்மையைக் கூறுகிறார். அப்படிப்பட்ட தாமரைமலரைத் தனது பிறப்பிடமாகவும் அடையாளமாகவும் கொண்டவளும், பால்யம் மற்றும் யௌவநம் ஆகிய இரண்டு வயது நிலைகளுக்கு நடுவில் உள்ளவளும் ஆகிய ஸ்ரீரங்கநாச்சியாரையும். திருவாய்மொழி (6-10-10) – அலர்மேல் மங்கை - என்பது காண்க. முதல் பாசுரத்தில் “பூமன்னு மாது” என்றதால் இங்கு “பங்கய மாமலர்ப் பாவை” என்கிறார். (போற்றுதும்) - இப்படியாக உள்ள திருவரங்கத் திவ்யதம்பதிகளை நாம் மங்களாசாஸநம் செய்வோமாக. ஆசார்யன் தனது சிஷ்யனைத் திருத்துதல் என்பது, திருப்பல்லாண்டு (12) – சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டு - என்பதற்கு ஏற்ப, உயிர் உள்ளவரை பகவத் விஷயத்தில் ஈடுபட்டு அவனைப் புகழ்ந்த படி இருப்பதற்காக அல்லவோ? ஸ்ரீவசனபூஷணம் (243, 244) – உகந்தருளின நிலங்களில் ஆதராதிசயமும் மங்களாசாஸநமும் ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி

பண்ணிக்கொண்டு போரக்கடவன் - என்பது காண்க. ஆக இதன் மூலம், “எம்பெருமானாருடைய பரமகருணை காரணமாக அவருடைய திருவடிகளில் அடிமையாக நிற்கப் பெற்ற பின்னர், அதன் பலனாக இவ்விதம் ஸ்ரீரங்கநாதனையும் அவனுடைய நாயகியையும் எப்போதும் புகழ்ந்தபடி உள்ள நிலையை அடைந்தோம்”, என்று தான் அடைந்த பேறு குறித்து தனது திருவுள்ளத்திடம் அருளிச்செய்து இந்த ப்ரபந்தத்தை நிறைவு செய்கிறார்.

பூ மன்னு மாது பொருந்திய மார்பன் புகழ் மலிந்த
பா மன்னு மாறன் அடி பணிந்து உய்ந்தவன் பல்கலையோர்
தாம் மன்ன வந்த இராமானுசன் சரணாரவிந்தம்
நாம் மன்னி வாழ நெஞ்சே! சொல்லுவோம் அவன் நாமங்களே

இராமானுச நூற்றந்தாதி வ்யாக்யானம் ஸம்பூர்ணம்
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாதன் திருவடிகளே சரணம்
தஞ்சமடைந்த நம் இராமானுசன் திருவடிகளே தஞ்சம்
திருவரங்கதமுதனார் திருவடிகளே சரணம்